Thiru R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Chief Minister whether any posts have been kept vacant by this Government?

The Hon. Thiru C. N. ANNADURAI : I do not have details about that. The main question is about the number of I.A.S. officers and how they are recruited.

## பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு

*4 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

புறம்போக்கில் வெட்டப்பட்ட கிணறுகளுக்கு மின்சார பம்பு இணைக்க அனுமதி அளிக்கும் திட்டம் அரசினரின் ஆய்வில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசு இந்தக் கருத்தை ஆய்வு செய்து பின்பற்ற வேண்டியதில்லை என்று தீர்மானித்துள்ளது.

[1968 ஆகஸ்ட் 16

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, செஞ்சி வட்டம் விவசாயப் பகுதியாக இருப்பதால் ஏராளமான கிராமங்களில் புறம்போக்கு நிலத்தில் வெட்டப்பட்ட கிணறுகள் உள்ளன. புறம்போக்கு நிலங்களில் வெட்டப்பட்டுள்ள கிணறுகளுக்கு மின்சார இணைப்பு வழங்க மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உத்தரவு வாங்கி வருமாறு மின்சாரத் துறையினர் கூறுகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்று அனுமதி வாங்குவதில் காலதாமதம் ஏற்படும். ஆகவே, வட்ட ஆட்சித் தலைவரே மின்சார பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு தர அனுமதி வழங்கலாம் என்று உத்தரவிட வேண்டியதுபற்றி இந்த அரசு பரிசீலித்ததா? அதற்கான உத்தரவை கூடிய சீக்கிரம் அரசு வட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்புமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களில் வெட்டப்பட்டுள்ள கிணறுகளுக்கு வருவாய்த் துறையின் அனுமதியின்றி மின்சார இணைப்பு வழங்குவது முறைகேடானது என்றும், புறம்போக்கு நிலங்களில் அனுமதியின்றி கிணறுகள் வெட்டுவது, நீர்ப்பாசனம் செய்வது, முறைகேடானது என்றும் வருவாய்த் துறையினர் கருதுகின்றனர். பட்டா நிலமாக ஆகாதவரையில் கிணறுகள் வெட்டுவதும், விசையேற்றத்திற்கு மின் இணைப்பு தருவதும் தவறு என்று வருவாய்த்துறை சுட்டிக்காட்டுவதை இந்த அரசு ஏற்றுக் கொண்டது. அதன் காரணமாகவே புறம்போக்கு நிலங்களில் வெட்டப்பட்ட கிணறுகளுக்கு மின் இணைப்பு தருவதற்கு வழி ஏற்படவில்லை.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, கடற்கரையோரப் பகுதிகளில் பத்துப் பதினைந்து ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் உப்பளங்களைப் போட்டு பிழைக்கிறார்கள். ரெவின்யூ டிபார்ட்மெண்டார் அவற்றிற்கு தீர்வையும் வசூலித்து வருகிறார்கள். உப்பளங்களில் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு வசதி கிடைக்கிறது. ஆகவே, உப்பளங்களில் உள்ள பம்ப் செட்டுகளுக்காவது மின் இணைப்பு அமைத்துக் கொடுக்க தமிழக அரசு முன்வருமா? அரசு இதுபற்றி தக்க வழிவகைகளை ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மின்சாரம் வழங்குவதைப்பற்றி மின்சார வாரியம் ஆயத்தமாக இருக்கிறது. இது பற்றி வருவாய்த் துறையையும் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும். வருவாய்த் துறை தக்க வழிவகைகளை ஆராய்ந்து முடிவெடுத்தால் மின்சார இணைப்பு செய்துதரப்படும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களில் வெட்டப்பட்டுள்ள கிணறுகளுக்கு மின்சார இணைப்பு வழங்குவது சாத்தியமாகாது என்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏற்கெனவே கிணறுகளைத் தோண்டிவிட்ட



1968 ஆகஸ்ட் 16]

பிறகு, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகவேனும் கிணறுகள் தோண்டப்பட்ட புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து கொடுத்து, மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? வருவாய்த் துறை அமைச்சரும் பக்கத்திலேதான் இருக்கிறார். அவரையும் கலந்தாலோசித்து புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுத்து, மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அங்கத்தினர் கூறுவது போன்று, வருவாய்த் துறை அமைச்சருக்கும் இதுபற்றி விண்ணப்பித்தாலும், அவர் பரிசீலனை செய்து, அதன் மேல் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களில் கிணறு வெட்டுவது என்பது தண்ணீர் கிடைப்பதைப் பொறுத்துத்தான். தண்ணீர் இருப்பதாலேதான் அந்த இடங்களில் கிணறுகளை வெட்டுகிறார்கள். இதற்கு வருவாய்த்துறை அப்ஜெக்‌ஷன் செய்கிறது. ஆகவே, தண்ணீர் கிடைக்கக்கூடிய இடங்களில் வெட்டப்படும் கிணறுகள் உள்ள புறம்போக்கு நிலத்தை பட்டா செய்துகொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முதலிலே நான் எடுத்துச் சொன்னபடி, இந்த விஷயம் வருவாய்த் துறையிலே தீர்க்கப்பட வேண்டியது. அதன் பின்னர்தான் மின்சார வாரியம் மின்இணைப்புத் தர ஏற்பாடு செய்யும்.

*Co-operative Sugar Factory in Satangulam*

* 5 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start a Co-operative Sugar Factory in Satangulam in Tirunelveli district?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப்பிறகு, நெல்லை மாவட்டத்தில் பாரி கம்பெனிக்குச் சொந்தமான ஆலை ஒன்று பதனீரிலிருந்து சர்க்கரை செய்யக் கூடிய முறையில் இயங்கி வந்தது. அந்தப் பகுதியில் கச்சாப் பொருளான பதனீர் ஏராளமான அளவில் கிடைக்கிறது. ஆகவே, இலங்கையிலிருந்து வரக்கூடிய மக்களுக்கு வேலை கொடுத்து, மறுவாழ்வு அளித்து உதவ வேண்டிய நிலை தமிழக அரசுக்கு இருப்பதால் நெல்லை மாவட்டத்தில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டத்தைப் புனராலோசனை செய்யவேண்டும். நெல்லை மாவட்டத்தில் குலசேகரன்பட்டினம் அல்லது வேறு எந்த இடத்திலாவது சர்க்கரை ஆலையை நிறுவ அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சாத்தான்குளத்தில் சர்க்கரை ஆலையை நிறுவும் திட்டம் இருக்கிறதா என்பது முதல் கேள்வி. கனம் உறுப்பினர் குறிப்பிடுகிற இடங்களில் ஆலைகளை அமைப்பதற்கான குறிப்பு ஒன்றும் இல்லை. 1963-ல் முன்னாள் அரசு நெல்லை மாவட்டத்திலுள்ள மேலக்களத்தூரில் கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ வேண்டுமென்று இந்தியப் பேரரசைக் கேட்டுக்கொண்டபோது அதற்கு இந்தியப் பேரரசு அனுமதி வழங்கவில்லை. போதிய கரும்பு விளைச்சல் இல்லையென்று காரணம் காட்டப்பட்டது. மீண்டும் அதைப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, திரு. பி. முராரி என்பவர்களைக்கொண்ட ஒரு வல்லுனர் குழு அமைக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோயில் தாலுக்கா கரும்பு விளைச்சலுள்ள பகுதியாக இருப்பதால், அதை ஸ்ரீவில்லிபுத்தூரில் ஏற்படுத்தவிருக்கும் சர்க்கரை ஆலையுடன் இணைத்துவிடலாம் என்று வல்லுநர் குழுவினர் தெரிவித்தனர். கரும்பு விளைச்சல், தண்ணீர் வசதி, பாதை வசதிகளை ஆராய்ந்து மூன்று சர்க்கரை ஆலைகளை நிறுவ வேண்டுமென்று இந்த அரசு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டு ஆலைகளையும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு ஆலையையும் பொதுத்துறையில் நிறுவ இந்த அரசு கருதியது. 1966-ம் ஆண்டில் திரு. பி. ராமசந்திர ஆதித்தன் அவர்கள், நெல்லை மாவட்டத்தில், ஸ்ரீவைகுண்டம் தாலுக்காவில் நாளொன்றுக்கு ஆயிரம் டன் கரும்பு அரைக்கக்கூடிய அளவில் சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவ அனுமதி கோரியதை இந்த அரசு இந்திய அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறது. இந்திய அரசாங்கத்திடமிருந்து அதுபற்றி இன்னும் பதில் வரவில்லை.

**திரு. மு. ச. சிவசாமி :** நெல்லை மாவட்டம், சாத்தான்குளம் உடன்குடி பகுதி மணல் பிரதேசமாக இருக்கிறது. அங்கு கரும்பே உற்பத்தியாகாது. பதனீரில் இருந்து சர்க்கரை உற்பத்தி செய்வது குறித்து ஏற்கெனவே அங்கே பாரி கம்பெனியார் பரிசீலனை நடத்தி, அப்படி அங்கே உற்பத்தி செய்வதும் கட்டுப்படியாகாது என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவித்த பிறகும் இப்போது சர்க்கரை ஆலையை அங்கே ஏற்படுத்த நினைப்பது தவறான கொள்கை என்பதை தமிழக அரசு ஏற்றுக்கொள்கிறதா ?

முற்பகல்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை ஒன்றைத் தொடங்குவது பற்றியது கேள்வி. பதனீரில் இருந்து சர்க்கரை தயாரிப்பது பற்றியதானால் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** புதிய சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதிலே நமது ராஜ்யக் கோட்டாவை விட்டுவிடக்கூடாது என்பதனால் சென்னை சர்க்கார் அதில் தீவிரமாக இருக்கிறதா ? அல்லது இந்த நாட்டில் சர்க்கரை பற்றாக்குறை இருக்கிறது,





அதைப் போக்க வேண்டும் என்ற முறையில் சர்க்கார் தீவிரமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது இருக்கிற சூழ்நிலையில் தமிழகத்தில் மூன்று சர்க்கரை ஆலைகளைத் துவக்க வாய்ப்பு இருக்கிறது. இவை துவக்கப்பட்டால் நம்முடைய மாநிலத் தேவையும் பூர்த்தியாகும், பிற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்கிற வசதி ஏற்படக்கூடும் என்ற காரணத்தினால் இந்திய அரசுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. அவர்களது ஒப்புதல் வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

*Departmental works*

*6 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether construction of new buildings was carried out departmentally on experimental basis; and

(b) if so, whether any saving was effected thereby?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) இல்லை. எனினும், ஒப்புந்தப்புள்ளிகளை ஒப்பந்தக்காரர்கள் கொடுக்க முன்வராத நேர்வுகளில் அல்லது ஒப்பந்தக்காரர்கள் அதிகத் தொகைகளைக் கேட்ட நேர்வுகளில், சம்பந்தப்பட்ட பணிகளை துறை மேற்கொண்டு நிறைவேற்றியது.

(இ) துறை நிறைவேற்றிய சில பணிகளில் செலவு மிச்சமும் ஏற்பட்டது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மலிவு விலையில் கட்டடம் கட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் சிலபல கட்டடங்களையாவது துறையினர் தாங்களே எடுத்து நடத்தி—பில்டிங் மெட்டீரியல்ஸ் சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சி செய்வதற்கு திட்டம் ஏற்படுத்த முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதற்கு இப்போது இடம் இல்லை. பி.டபிளியூ.டி. விதிகள் மாற்றப்படவேண்டும். அதுபற்றி அரசு யோசிக்கும்.

**திரு. கே. விநாயகம் :** பொதுக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்றால் காண்டிராக்டர்களிடம் விட்டு கட்டவேண்டும் என்று இருக்கிறது. காண்டிராக்டர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள ரேட்டு பழங்காலத்தில் நிர்ணயிக்கப்பட்டது, அது இப்போது எடுத்துக் கட்டுகிற கட்டடங்களுக்குக் கட்டுபடியாகவில்லை. அதனால்தான் எந்தப் புதுக் கட்டடங்களையும் காண்டிராக்ட்டில் எடுத்து வேலை செய்ய காண்டிராக்டர்கள் வருவதில்லை. ஆகவே இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு பழைய ரேட்டுகளை மாற்றி உயர்த்திக் கொடுக்க ஆராய்ச்சி நடத்தப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இப்போதுள்ள ரேட்டை போதிய அளவு உயர்த்திக் கொடுக்க சர்க்கார் முன்வருவார்களா ?

[1968 ஆகஸ்ட் 16

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கனம் உறுப்பினரிடம் எந்தக் காண்டிராக்டர் வந்து குறைபட்டுக்கொண்டார் என்று தெரியவில்லை. கட்டுபடியாகவில்லை என்று சொல்லி எடுத்த வேலையை விட்டுவிட்டுப் போன காண்டிராக்டர்கள் வேலைகளை துறையினரே ஏற்று நடத்தியிருக்கிறார்கள். இப்படி ஏற்று நடத்தியிருப்பதில் அவர்களுக்கு நிர்ணயித்த ரேட்டிலேயே அதிக மிச்சம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** பொதுவாக பழைய ரேட்டுகள் தான் இருக்கின்றன. அதன் காரணமாக பஞ்சாயத்து யூனியன் வேலைகள் தடைபடுகின்றன. ஆகவே இன்றுள்ள விலைவாசிக்கேற்ப அந்த ரேட்டுகளை உயர்த்திக்கொடுக்க அரசு யோசனை செய்யுமா? குறிப்பாக, கண்மாய்கள் வெட்டுவது என்றால் மைலுக்கு 18 ரூபாய் கொடுக்கிறார்கள். இப்போது குழி வெட்ட 18 ரூபாய் கேட்கிறார்கள். இதனால் கண்மாய் வேலைகள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, பழைய ரேட்டுகளை எல்லாம் மாற்றி, இன்றுள்ள சூழ்நிலைக்கேற்றவாறு உயர்த்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எந்த, எந்த வேலைகள் தடைபட்டிருக்கின்றன என்பதை ஆராய்ந்து அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. எஸ். முருகையன் :** பி.டபிளியூ.டி. ஷெட்யூலில் போட்ட ரேட்டு ஒவ்வோர் ஆண்டும் மாற்றப்படுகிறதா ? பழைய ரேட்டே இருந்து கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது பழைய தொகை தான் இருந்துகொண்டிருக்கிறது.

**திரு. கே. வினாயகம் :** அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லும்போது என்னிடம் எந்த காண்டிராக்டர் வந்து குறைபட்டுக்கொண்டார் என்று கேட்டார்கள். அதற்குச் சொல்கிறேன், விடை. திருத்தணியில் அரசாங்க ஆஸ்பத்திரிக் கட்டடம் கட்ட வேண்டுமென்று தீர்மானித்து— இப்போது அந்தக் கட்டடம் கட்டுவதற்கு பழைய ரேட் கட்டுபடியாகவில்லை என்று எந்தக் காண்டிராக்டரும் முன் வராதிருக்கிற காரணத்தினால் அந்த வேலை 7 ஆண்டுகளாகத் தடைப்பட்டிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? தெரியாது என்றால் சுகாதார அமைச்சரவர்களைக் கேட்டாகிலும் பதில் சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கனம் உறுப்பினர் விருப்பம் போல சுகாதார அமைச்சரைக் கேட்டு பதில் சொல்கிறேன்.



1968 ஆகஸ்ட் 16]

## மதுரை நகரில் ஓடும் டி.வி.எஸ். பஸ்கள்

* 7 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1957-62-வது ஆண்டு காலத்தில் மதுரை நகரில் ஓடும் V. S. T.-க்கு சொந்தமான டவுன் பஸ்கள் விஷயமாக பரிசீலனை செய்ய விசேஷ அதிகாரி நியமிக்கப்பட்டாரா ?

(இ) பரிசீலனை ரிப்போர்ட்டின் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** 1957-62-ஆம் ஆண்டுக் காலத்தில் கனம் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட சபையில் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். அப்போது நியமிக்கப்பட்ட ஸ்பெஷல் ஆபீசர் 60 பஸ்கள் ஓடிக்கொண்டிருப்பது போதாது. 120 பஸ்களாவது விட வேண்டும், அப்போதுதான் அந்த நகரத்தின் நெருக்கடியைச் சமாளிக்க முடியும் என்று அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதை காங்கிரஸ் சர்க்கார் அமலுக்குக் கொண்டுவர மறுத்துவிட்டார்கள். இந்தச் சர்க்காருக்காவது அதை அமல் படுத்த உத்தேசம் உண்டா ? அமல்படுத்தப்படுகிறது என்றால் எந்த அளவுக்கு அமல்படுத்தப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விசேஷ அதிகாரி நியமிக்கப் படவில்லை என்று சொன்னேன். மதுரையில் மக்கள் பெருக்கமும், தொழில் பெருக்கமும் அதிகமாகிவிட்டிருக்கிற காரணத்தினால் அதிகமான பஸ்கள் விடப்படவேண்டுமென்று பஸ் போக்குவரத்து ஆலோசனைக் குழுவில் தீர்மானம் போடப்பட்டது. போக்கு வரத்துத்துறை ஆணையாளர் தனி பஸ்கள் விடுமளவிற்கு எப்போதும் போக்குவரத்து அவசியமிருப்பதால், இந்த வழித் தடத்தில் கூடுதலான பஸ்களை விடுவதற்கு நியாயமான காரணங் கள் உள்ளனவென்று 21—6—1965-இல் தெரிவித்தார். ஆனால் அப்போதிருந்த அரசு அதனைக் கைவிட்டது. இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் இதுபற்றி விரிவான முறையில் பரிசீலனை செய்ய உத்தரவிடப்பட்டது. வட்டாரப் போக்குவரத்து அதிகாரி சமீபத்தில்தான் தம்முடைய அறிக்கையை அனுப்பினார். அது அமைச்சரின் ஆணைப்படி, மதுரை நகரில் 12 புது நகரப் போக்குவரத்து வழித்தடங்களுக்கானச் செயற்குறிப்புக்களை மீண்டும் புதுப்பித்து அரசினருக்கு அனுப்புமாறு மதுரை நகரப் போக்குவரத்து அதிகாரி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். இதில் ஐந்தாறு வழித்தடங்கள் பற்றிய செயற்குறிப்புகள் வந்துவிட்டன. மற்றவற்றையும் உள்ளிட்டு இந்த மொத்த வழித்தடங்கள் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1968 ஆகஸ்ட் 16

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மதுரை நகரில் ஓடிக் கொண்டிருக்கிற டவுன் பஸ்கள் தமிழக அரசு போக்குவரத்து பஸ்களாக மாற்றப்படுமா? இல்லையென்றால் புதிதாகத் தொடங்கப்படுகிற வழித்தடங்களையாவது தமிழக அரசுப் போக்கு வரத்து எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** புதிதாக எடுத்துக்கொள்ளப் படுகிற 12 வழித்தடங்களில் தமிழக அரசு பஸ்களை விடுவது என்பது சாத்தியமான காரியம் அல்ல.

**திரு. கே. என். குமாரசாமி :** அந்த 12 வழித் தடங்களில் ரூட் கொடுப்பது ஏற்கனவே பஸ்கள் வைத்துக்கொண்டிருக்கிறவர் களுக்கா அல்லது புதியவர்களுக்கா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 12 வழித்திட்டங்கள் திறக்கப் பட இருக்கின்றன. அவற்றிற்காக அப்ளிகேஷன்கள் கோரப்பட இருக்கின்றன. அவற்றில் யார் யாருக்கு தகுதி இருக்கிறதோ அவர்களுக்குத்தான் கொடுக்கப்படுமே தவிர, பழையவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்ற நியதி இல்லை.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** சென்னை நகரத்தில் ஓடும் பஸ் சர்வீஸ்கள் அரசாங்கத்தால் நடத்தப்படுவதைப்போன்று மதுரை, கோவை போன்ற நகரங்களிலும் பஸ் சர்வீஸ்கள் நடத்த அரசாங் கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முதலில் சென்னை நகரத்தில் ஏற்படுகிற நஷ்டத்தை ஈடுகட்டிக்கொண்டு மற்ற இடங்களைக் கவனிக்கலாம் என்று அரசு கருதுகிறது.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether the State Transport Department also will put in an application for grant of permits for those routes?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் அதைத்தான் சொன் னேன். சென்னை நகரத்தை முன்வைத்து வேறு நகரங்களிலும் பஸ் சர்வீஸ்கள் சர்க்காரே நடத்தலாமா என்று யோசிப்பது பற்றி தயக்கம் காட்டுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கனம் அமைச்சர் அவர்கள் விசேஷ அதிகாரி நியமிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அது சரியல்ல. பி. ஆர். சுப்பிரமணியம் என்ற அதிகாரி நியமிக்கப்பட்டு இருக்கிறார். இதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும். அந்த ரிப்போர்டில் என்ன சொல்லியிருக்கிறது என்பதை இப்பொழுது இல்லாவிட்டால் நாளைக்காவது அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்ட அதிகாரி, சுப்பிரமணியம் என்பவர், ஆர்.டி.ஓ. என்று கருதுகிறேன். 7—7—1958-ம் தேதியன்று நடந்த அரசுப் போக்கு வரத்து பரிசீலனைக் குழுவின் தீர்மானத்தின்படி மதுரை



1968 ஆகஸ்ட் 16]

மாநகரிலே புதிய வழித்தடங்கள் வேண்டுமா என்பதுபற்றி தீர்மானிக்க ஆர். டி. ஓ. விடம் அறிக்கை கேட்கப்பட்டது. அந்த அறிக்கையை ஆர்.டி.ஓ. கொடுத்தார். முன்பு இருந்த அரசினரால் அது கைவிடப்பட்டது என்று முன்பே சொன்னேன்.

**திரு. சொ. கோவிந்தராசன் :** மதுரை டி.வி.எஸ். ஸ்தாபனத் தார் பீக் ஹவர் பஸ்களையெல்லாம் நிறுத்திவிடப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று தெரிகிறது, அதுபற்றி மாற்று யோசனை செய்ய அரசு கருதுகிறதா? மதுரையிலே 5 வழித் தடங்களுக்கு டெம்பரரி ரூட் கொடுப்பதைத் தள்ளிவைத்திருக் கிறார்கள், அதையும் உடனடியாகச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வழித் தடங்கள் கொடுப்பது ஆர்.டி.ஏ.-யின் பொறுப்பு. அதிலே அரசு தலையிட விரும்பவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** மதுரை, கோவை போன்ற நகரங் களிலே நடத்துவதுபற்றி சென்னை நகரத்திலே லாபத்திலே நடத்த ஆரம்பித்ததற்குப் பிறகு செய்யலாம் என்று சொன்னார்கள். லாப நஷ்டத்தைக் கணக்கிலே கொண்டு தேசியமயமாக்க நினைத்தால் அது தேசியமயமாக்கும் கொள்கையையே முறியடிக்கும். ஆகவே, அப்படி நினைக்காமல் மக்களின் சௌகரியத்தைக் கருதியும் கொள்கையின் வெற்றியைக் கருதியும் கோவை, மதுரை போன்ற நகரங்களிலேயும் நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிச் சொன்ன காரணத் தினாலே நகரங்களிலே தேசியமயமாக்கும் கொள்கை வராது என்று அர்த்தம் இல்லை. படிப்படியாக ஆக்கப்படும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தனியாரால் நடத்தப்படும் பஸ் கள் லாபகரமாக ஓடும்பொழுது அரசாங்கத்தால் நடத்தப்படும் பஸ்கள் ஏன் நஷ்டத்தில் ஓடுகின்றன என்று விளக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்தக் கேள்வியில் இந்தக் கேள்வி எழவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** பஸ்களை தேசியமயமாக்கும்பொழுது மாஜி இராணுவத்தினர் கூட்டுறவு முறையில் நடத்துகிறவர் களுடைய ரூட்டை எடுத்துவிட்டு அவர்களுக்கு வேறு ரூட்டுகள் கொடுக்கவில்லை என்று புகார்கள் கொடுக்கிறார்கள். அவர்கள் நடத்துவது கூட்டுறவு ஸ்தாபனம் என்பதால் விசேஷ சலுகை அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தேசியமயமாக்கும் கொள் கையில் விசேஷச் சலுகை கொடுப்பதற்கு இடம் இல்லை.

[1968 ஆகஸ்ட் 16

## கற்கண்டு உற்பத்தி ஆலைகள்

*8 வினா.—**திரு. ரா. ரா முனுசாமி :** மாண்புமிகு உணவு —வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம், செஞ்சி ஆகிய வட்டங்களில் சர்க்கரை கோட்டாவைக் கொண்டு கற்கண்டு உற்பத்தி செய்யும் ஆலைகள் எத்தனை இருக்கின்றன ?

(இ) அவைகளுக்கு வழங்கப்படும் சர்க்கரை, கற்கண்டு உற்பத்திக்கு பயன்படுத்தப்படாமல் கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுவதாக அரசாங்கத்துக்கு புகார்கள் ஏதேனும் வந்துள்ளனவா ?

(உ) ஆமெனில், இதனைத் தடுக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :**

(அ) திண்டிவனம் நகரம்—7 (ஏழு).
செஞ்சி நகரம்—1 (ஒன்று).

(இ) இதுவரை எந்தப் புகாரும் வரவில்லை.

(உ) கேள்வி எழவில்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் செஞ்சி வட்டம், திண்டிவனம் இந்தப் பகுதிகளில் கற்கண்டு செய்வதற்காக கோட்டா கொடுக்கும்பொழுது அதில் கற்கண்டு செய்யாமல் கள்ளமார்க்கட்டில் அதை விற்பதாக பொதுமக்கள் கூறுகிறார்கள். அப்படி கோட்டா வழங்கினால் இனி மேலாவது அவர்கள் அதைச் செய்வதற்காகப் பயன்படுத்துகிறார்களா என்று பார்த்து வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முன்பு நடந்ததை கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஏப்ரல் மாதம் கற்கண்டு உற்பத்தியாளர்களுக்கு சர்க்கரைக் கோட்டா கொடுக்கப்பட்டது. 1967-ஆம் வருடம் மே மாதம் 5 சதவீதம் என்ற அளவுக்குக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு 2 மாதங்களுக்கு 100 மூட்டை என்றால் அதில் 20 மூட்டை அதற்குக் கொடுக்கலாம் என்று இருந்தது. இப்பொழுது அதுவும் நிறுத்தப்பட்டு விட்டது. இது சம்பந்தமான புகார் இப்பொழுது எங்குமே இல்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது ஓப்பன் மார்க்கட்டில் சர்க்கரையின் விலை குறைந்து வருகிறது. அதேபோல் ரேஷன் மூலம் தரப்படுகின்ற சர்க்கரை விலையையும் குறைக்க—மற்ற விலைவாசிகளும் குறைந்திருப்பதையொட்டி—அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1968 ஆகஸ்ட் 16]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொது மார்க்கட்டிலே சர்க்கரை விலை குறைந்திருக்கிறது. அதனாலே ரேஷனிலே கொடுக்கிற சர்க்கரை விலையையும் குறைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்று கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பொது மார்க்கட்டில் விலை குறைந்திருக்கிறது என்ற அடிப்படையில் ரேஷனில் போடுகின்ற சர்க்கரை விலையையும் குறைக்க அரசு யோசிக்கிறது.

(உறுப்பினர் திரு. கதிரவன் பேரவையினுள் நுழைந்தார்—பலத்த ஆரவாரம்)

இது சர்க்கரையான கேள்வி என்று சொல்கிறார்கள்—சர்க்கரையான பதில்கூட—அதோடு திரு. கதிரவன் வந்ததற்காக அதற்கும் சேர்த்து கைதட்டினார்கள். வருகிற 23-ஆம் தேதியிலிருந்து கிலோ ரூபாய் 1.75 ஆக இருப்பதை ரூபாய் 1.69 க்குக் கொடுக்கலாம் என்று முடிவெடுத்து அதற்கு முதலமைச்சர் அவர்களின் ஆணை கோரப்பட்டு இருக்கிறது. அது கிடைத்து விடும். வருகிற மாதம் 23-ஆம் தேதியிலிருந்து ரூபாய் 1.75 விலைக்குக் கிடைக்கிற சர்க்கரை ரேஷன் கடைகளில் ரூபாய் 1.69-க்குக் கிடைக்கும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கற்கண்டு செய்வதற்காக கொடுக்கப்படுகிற சர்க்கரை குறைந்த விலை சர்க்கரையா அல்லது அதிக விலை சர்க்கரையா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த அரசு வந்ததற்குப் பிறகு ஒரு மாதம் கொடுக்கப்பட்டது, அதற்குப் பிறகு அடுத்த மாதம் 5 சத வீதம் என்ற முறையில் கொடுக்கப்பட்டது, அதற்குப் பிறகு 20 சத வீதம் கொடுக்கப்பட்டது. இப்பொழுது ஓப்பன் மார்க்கட்டில் கிடைப்பதால் யாருமே கற்கண்டிற்காகக் கேட்பதில்லை, இப்பொழுது கொடுக்கப்படுவதில்லை. கற்கண்டு செய்வதற்காகக் கொடுக்கப்பட்டது குறைந்தபட்சம்தான். அது படிப்படியாகக் குறைக்கப்பட்டு இப்பொழுது அந்த நிலைமையும் இல்லை.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது கற்கண்டு உற்பத்தியாளர்கள் திண்டிவனத்தில் ஏழும், செஞ்சியில் ஒன்றும் என்று எண்ணிக்கையைச் சொன்னார்கள். அந்த நபர்கள் யார் யார் என்று அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தமாதிரி ஒவ்வொரு கேள்விக்கும் நபர்களைப் படித்துக்கொண்டிருந்தால் சட்டசபையில் ஒரு புதிய சம்பிரதாயம் ஏற்பட்டு விடும். திண்டிவனத்தில் ஏழும், செஞ்சியில் ஒன்றும் என்ற எண்ணிக்கைதான் கூறலாம், முழு அட்டவணையுமே படிப்பது புதிய சம்பிரதாயத்தைத் தோற்றுவித்துவிடும்.

**திரு. கே. என். குமாரசாமி :** இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கற்கண்டுக்காக ஒதுக்கப்பட்ட சர்க்கரை பிளாக் மார்க்கெட்டில் விற்கப்பட்டு அது சம்பந்தமாக இந்த அரசு அவ்வாறு விற்றவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் எத்தனை?

[1968 ஆகஸ்ட் 16

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்*** : அதைத்தான் நான் முன்பே சொன்னேன். கற்கண்டுக்காக சர்க்கரை ஒதுக்குகிற காரியமே ஒரு மாதந்தான் நடைபெற்றது. அதற்குப் பிறகு அந்த முறையில் முறைகேடான காரியங்கள் நடைபெறுவதற்கு வழி இல்லை. கற்கண்டு மருந்து போன்றவற்றுக்கு அவசியமான பொருள் என்ற காரணத்தால் 100 மூட்டை கொடுக்கின்ற இடத்தில் ஐந்து மூட்டைதான் கொடுக்கப்பட்டது. அதுவும் பின்னர் அடியோடு நிறுத்தப்பட்டது. ஆகவே, இதுசம்பந்தமான வழக்குகள் எதுவும் வரவில்லை. வருவதற்கு வழியும் இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, sugar is being distributed to the consumers in two ways. Sugar is distributed under the family card system at a reduced rate. Then if a special permit is required by the consumers for some special purpose, the Civil Supplies Department insists that the sugar should be purchased in the open market . . .

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்*** : கற்கண்டு உற்பத்திக்குக் கொடுக்கப்படுகிற சர்க்கரை சரியான முறையில் பயன் படுத்தப்படுகிறதா என்பதைப் பற்றிய கேள்வி இது. இதிலே . . .

***திரு. கே. விநயகம்*** : அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலிருந்து நான் கூறுகிறேன்.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்*** : அமைச்சர் அவர்கள் இப்பொழுது அளித்த விடையிலிருந்து கேட்க முடியாது.

THIRU K. VINAYAKAM : What a strange thing! Arising out of the answer given by the Hon. Minister, I can put a question.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்*** : முதல் கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Certainly. Whereas the consumer is made to pay a higher price for the special quota of sugar and whereas it causes great inconvenience to the consumer, will the Government think of revising their decision and supplying sugar at the reduced rate?

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member knows that consumers do not make any profit out of the sugar purchased by them. The higher price is for the people who purchase sugar to manufacture something out of it and get something out of that, and therefore that price is high.

***திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்*** : சர்க்கரை விலையை நிர்ணயிக்கும்போது சர்க்கரை ஆலைகள் சரியான லாபத்தைத் தங்களுக்கு வைத்துக் கொள்ளும்போது கரும்புக்கும் அந்த முறையில் விலை நிர்ணயிக்கப்படுமா ?

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்*** : தற்போது கரும்பு விவசாயிகள் அதிகமான விலையைப் பெறுகிறார்கள் என்பது கனம் உறுப்பினர் அவர்களுக்கே தெரியும்.



1968 ஆகஸ்ட் 16]

## உர விநியோகம்

*9 விை—***திரு. வி. கே. கோதண்டராமன்*** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விைக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் எந்தெந்த மாவட்டங்களில் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக உரம் விநியோகம் செய்யப் படுகிறது ?

(இ) எந்தெந்த மாவட்டங்களில் தனி நபர்களாலும் கூட்டுறவு சங்கங்களாலும் விநியோகம் செய்யப்படுகிறது ?

***மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி*** : (அ) இம் மாநிலத்திலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உரம் வழங்கப்படுகிறது.

(இ) தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், செங்கற்பட்டு மாவட்டங்களில் கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாக மட்டுமன்றி, தனிப்பட்ட வணிகர்கள் மூலமாகவும் உரம் வழங்கப்படுகிறது.

***திரு. வி. கே. கோதண்டராமன்*** : கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டும், கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக இன்றைக்கு நல்ல முறையில் மக்களுக்கு இது போன்ற பொருள்களையெல்லாம் விநியோகம் செய்ய முடியும் என்பதிலே நம்பிக்கை வைத்திருக்கக் கூடிய சர்க்கார், தனியார் துறை மூலமாக உரத்தை விநியோகம் செய்து வருவதை நிறுத்தி எல்லாவற்றையும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவே விநியோகம் செய்வதற்கு ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது ?

***மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி*** : கூட்டுறவு இயக்கத்தை ஊக்கப்படுத்த வேண்டும், அதன் மூலமாக உரத்தை வழங்க வேண்டும் என்பதுதான் சர்க்காரின் கொள்கை. அதே நேரத்தில் விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உரம் தேவையோ அவ்வளவையும் எடுத்துக் கொள்வதற்கு கூட்டுறவுச் சங்கங்களிலே போதிய பண வசதி இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே (விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் உரம் வழங்க வேண்டுமென்ற காரணத்தால் தனிப்பட்ட வணிகர்கள் மூலம் வழங்கும் திட்டத்தையும் அமல் படுத்தி வருகிறோம்.) சில இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக இயங்கவில்லை என்றுகூட உறுப்பினர்களிடமிருந்தும், விவசாயிகளிடமிருந்தும் தகவல்கள் வருகின்றன. அப்படிப்பட்ட இடங்களைப் பற்றியெல்லாம் சர்க்கார் பரிசீலனை செய்து தனியார் துறை மூலமாகவோ அல்லது பஞ்சாயத்து யூனியன் மூலமாகவோ உரத்தை வழங்குவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, the Government have now got experience with regard to the distribution of fertilisers both through co-operatives and private agencies. Besides that, we are in the fortunate position of having surplus fertilisers. In spite of that, whenever we go to villages—in fact I went the other day to Singaperumalkoil in the Chingleput district—we hear the chronic

complaint that the fertilisers do not reach the small farmers and that they do not get even half a bag or two or three measures of fertilisers. So, will the Government find out what exactly is the difficulty in the distribution system and see that all the loopholes in the distribution system are plugged so that there would not be any bad name for the distribution system itself?

***மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:*** கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பதுதான் எனக்குப் புதுமையாக இருக்கிறது. உரம் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்ற கஷ்டம் தமிழகத்தில் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இல்லை. செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் அப்படிப்பட்ட நிலை இருக்குமானால் அதைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் மாவட்ட கலெக்டர் நிச்சயமாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார். தற்போது உரத் தட்டுப்பாடு என்ற நிலை கிடையாது.

*திரு. முனு. ஆதி:* செங்கற்பட்டு மாவட்டத்தில் உர விநியோகம் பஞ்சாயத்து யூனியன் மூலம் நடைபெறுவதில் எந்தவிதமான புகாரும் இல்லாமல் நல்லபடியாக உரம் கிடைக்கும் நிலை இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறுவது ஒருவேளை நமக்கு 5,000 மூட்டைகள் ஒதுக்குகிறார்கள் என்றால் அதைப் பகிர்ந்து கொடுக்கும்போது அது போதாது என்ற கருத்தில் இருக்கலாம். ஆனால் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் கொடுக்கப்படும் போது நல்ல முறையில் கொடுக்கப்படுவதால் மற்ற மாவட்டங்களிலும் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் விநியோகிக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா?

***மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:*** இதைப் பற்றி முன் கேள்விக்கே பதில் சொல்லியிருக்கிறேன். கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக நடைபெறுகிற விநியோக முறை எங்கு சரியில்லையோ அங்கெல்லாம் அதைப் பற்றி மாவட்ட கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அந்தப் பகுதியில் மட்டும் உர விநியோகப் பொறுப்பைப் பஞ்சாயத்து யூனியனுக்கு அளிக்க அரசு அனுமதியளிக்கும்.

## Farm Jails

* 10 *Q*.—Thiru T. MARTIN:
Thiru V. SWAMINATHAN:
Thiru P. MALAICHAMY:
Thiru K. VINAYAKAM:
Thiru N. S. V. CHITHAN:
} Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal pending before the Government to establish farm jails in this State: and

(*b*) if so, the details thereof?





***மாண்புமிகு திரு. செ. மாதவன்:*** (அ) இத்தகைய ஒரு செயற்குறிப்பு அரசினர் பரிசீலனையில் உள்ளது.

(இ) விவரங்கள் இன்னும் முடிவாக்கப்படவில்லை.

Thiru T. MARTIN: Sir, may I request the Hon. Minister to state whether the State Government have sent any official to other States where the farm jails are in existence to study about it and submit a report to the Government before launching upon this scheme?

***மாண்புமிகு திரு. செ. மாதவன்:*** இந்த இலாகாவைச் சேர்ந்த சில அதிகாரிகள் வடக்கே உள்ள மாநிலங்களுக்குச் சென்று இது பற்றி ஆராய்ந்து வந்திருக்கிறார்கள்.

Thiru K. VINAYAKAM: Sir, what are the new features of this kind of farm jails and what are the advantages derived by the prisoners in these jails and when it would be put into operation?

***மாண்புமிகு திரு. செ. மாதவன்:*** சிறைச்சாலை சுவர்களுக்கு இடையிலே இருப்பது மட்டுமல்லாமல் விவசாயப் பண்ணையில் இருப்பது போல் வீடுகள் அமைத்து அந்த வீடுகளில் வாழ்ந்து கொண்டு விவசாயம் செய்து கொண்டிருக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் திட்டம் உருவாக்கப் பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், இந்தத் திட்டத்தை ஒவ்வொரு சிறைச்சாலையிலும் அமலுக்குக் கொண்டு வர வேண்டும், அதன் காரணமாகச் சிறைச்சாலைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அதன்மூலமே பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற முறையில் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

*திரு. க. ர. நல்லசிவன்:* தற்போதுள்ள சிறைகள் மனிதர்கள் வாழ கொஞ்சம் கூட லாயக்கற்ற நிலையில் உள்ளன. அப்படிப்பட்ட சிறைகளில் ஜன்ம தண்டனைக் கைதிகள் கணிசமான அளவில் இருக்கின்றனர். அப்படிப்பட்ட ஜன்ம தண்டனைக் கைதிகள் பத்தாண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்து விட்டால் அப்படிப் பட்டவர்களைப் பண்ணைக் கைதிகளாக மாற்றும் வகையில் துரிதமாக இந்தத் திட்டம் அமலுக்குக் கொண்டு வரப்படுமா?

***மாண்புமிகு திரு. செ. மாதவன்:*** அந்த முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

*திரு. கே. பி. எஸ். மணி:* இந்தப் பண்ணைச் சிறைச்சாலைகளில் ரொம்ப சவுகரியம் செய்து கொடுத்து கைதிகளை அங்கு கொண்டு போய் வைத்தால் வெளியில் இருந்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற பலர் ஏதோ சிறு குற்றங்களைச் செய்து விட்டு பண்ணைச் சிறைக்குச் சென்று விடலாம் என்ற முறையில் ஜனங்களுக்கு எண்ணம் ஏற்பட்டு அதன் காரணமாக குற்றவாளிகள் அதிகமான அளவுக்குப் பெருகிவிடுவார்கள் என்பதைப் பற்றி அரசாங்கம் யோசித்ததா?

[1968 ஆகஸ்ட் 16

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது சென்ற நூற்றாண்டின் கருத்து. இந்த நூற்றாண்டில் சிறைச்சாலையிலும் அவர்களுக்கு எந்தவிதமான தீமையும் ஏற்படுத்தாமல், அவர்களுக்கு வெளியுலகத்தில் தொடர்பு இல்லாமல் இருக்க வேண்டுமென்ற அதே நேரத்திலே உற்பத்திப் பெருக்கத்தில் அவர்கள் ஈடுபட வேண்டுமென்ற அந்த நோக்கத்தில் பண்ணைச் சிறைச்சாலைகளுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. சில மாநிலங்களில் இது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

### 3. அறிவிப்புகள்

### ( i ) பேரவைத் தலைவர் ராஜிநாமா

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர்
மு.ப. 11-00 அறிவிப்பு. அரசியலமைப்பின் 179-வது விதியின் (b) பகுதியின் கீழ், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் பதவியை திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள், 1968-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12-ம் நாள் பிற்பகல் முதல் ராஜிநாமா செய்துள்ளார் என்பதை நான் இப்பேரவைக்குத் தெரிவிக்கின்றேன்.

அரசியலமைப்பின் 180-வது விதியின் (1) வது பகுதியின்கீழ், பேரவைத் தலைவர் பதவி காலியாக இருக்கையில், அப்பதவி குறித்த பணிகள் பேரவைத் துணைத் தலைவரால் மேற்கொள்ளப்படும்.

தமிழக சட்டப் பேரவையின் கண்ணியத்தையும் பெருமையையும் உயர்த்துகின்ற வகையில், தமக்கு ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் தமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்போது தாங்கள் ஒரு அறிவிப்பு கொடுத்ததன் மீது . . .

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஸார். தங்களுடைய அறிவிப்பின் மீது எந்தவிதமான வாதங்களோ அல்லது அது குறித்த விவாதங்களோ இருக்கக் கூடாது என்பது சட்டமன்றத்தின் விதி. அதை நான் தங்களுக்கு கவனமூட்ட விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தங்கள் அறிவிப்பின் மீது விவாதத்தைத் தொடங்குகிற காரணத்தினால் அது ஒழுங்கு முறையா என்று அறிய விரும்புகிறேன்.



1968 ஆகஸ்ட் 16]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் அப்படி விவாதத்தைத் தொடங்கவில்லை. எதிர்கட்சித் தலைவர் என்ற முறையில், சில விஷயங்களை சட்டசபை முன்னால் வைக்கவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். விவாதத்தைத் தொடங்குகிறேன் என்ற முறையில் சொல்லவில்லை. இப்போது சபாநாயகர் அவர்கள் தமது ராஜிநாமாவைச் சமர்ப்பித்ததோடு மட்டுமல்லாமல் அவர்கள் ஒரு அறிக்கையையும் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் காரணங்களையும் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னர் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பதாகவும், அதை வைத்துத்தான் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த சபையில் வருகின்ற அறிக்கை மீதுதான் சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்துக்கள் தெரிவிக்கலாமே தவிர, வெளியே யார் எந்தவிதமான கருத்துகள் தெரிவித்தாலும் அந்தக் கருத்துக்களையொட்டி இங்கு விவாதம் நடைபெறுவது முறையாகாது. அவர்களின் அறிக்கை மீது விவாதம் தொடங்குவது முறையாகாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் திடீரென்று ராஜிநாமா செய்ததால் அதற்கு என்ன காரணம் என்று கேட்கக் கூடாதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்காக இதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

Certain matters cannot be debated upon save upon a substantive motion which admits of a distinct vote of the House. Among these are the conduct of the Sovereign, the heir to the Throne or other members of the Royal Family, the Governors-in-General of Independent Territories, the Lord Chancellor, the Speaker.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதேமாதிரித்தான் மேஸ் பார்லிமென்டரி ப்ராக்டீஸின்படி சபாநாயகர் அவர்கள் ராஜிநாமா செய்தால் கூடவே பார்லிமென்ட் தொகுதியையும், எம்.பி. தொகுதியையும் அவர்கள் இழந்து விடுகிறார்கள். இப்போது அப்படி அதை . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மேஸ் பார்லிமென்டரி ப்ராக்டீஸ் படி, ஸ்பீக்கர் ஸ்தானத்தை இழந்துவிட்டால் உடனே மெம்பர் ஸ்தானத்தையும் இழந்துவிடவேண்டும் என்பது விதி அல்ல. கடைசி வரியை எடுத்துக் கொண்டு,

He will relinquish his office

என்பதை மட்டும் கவனத்தில் வைத்துக் கொள்கிறீர்கள். அதற்கு முன் வரி,

He will be made a Peer of the House of Lords and he will be given an annuity.

என்றிருக்கிறது. அந்த நிலையில் அவர் அவருடைய அங்கத்தினர் பதவியை ராஜிநாமா செய்கிறார். எனவே ஒரு சம்பிரதாயத்தை

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 ஆகஸ்ட் 16

ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால் சம்பிரதாயத்தை முழு அளவிற்கும் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர உங்களுக்கு விருப்பப்படியான ஒரு பகுதியை மட்டும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்பது என்றால் அது சரியான சம்பிரதாயம் அல்ல.

(திரு. கே. விநாயகம் எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** என்ன சொல்லப் போகிறீர்கள் ?

**திரு. கே. விநாயகம் :** அதை எப்படி ஜோசியம் சொல்ல முடியும் ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சபாநாயகர் நிற்கிற போது உறுப்பினர்கள் எழுந்து நிற்கக் கூடாது . . .

**திரு. கே. விநாயகம் :** நான் எழுந்து நிற்கும்போது நீங்களும் எழுந்து நின்று விட்டால் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். இந்த அறிவிப்பின் மீது எந்தவிதமான விவாதமும் கூடாது என்பது முடிவான செய்தியாகும். அதன்மீது தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பது சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதற்கு மாறானதொரு நிகழ்ச்சியாகிவிடும். உறுப்பினர்கள் இந்த சபையின் கண்ணியத்தைக் காக்கும் வகையில் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** நான் சொல்வதை நீங்கள் ஒருவேளை புரிந்து கொண்டிருந்தால் இப்படி ஒரு தீர்ப்பு கொடுப்பதற்கு நியாயம் இல்லை. நான் என்ன சொல்லப் போகிறேன் என்று கேட்காமலேயே. . .

without even listening to me—

ஸ்பீக்கர் அவர்கள் வெறுமனே ராஜிநாமா செய்திருந்தால் இதைப் பற்றி சர்ச்சை செய்யவேண்டியதில்லை. அது அவர் இஷ்டம், அவர் போக்கு என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு இழுக்கைத் தேடிவிட்டு . . . .

When he has said that the Hon. Chief Minister does not agree with the Speaker as regards the role of a Speaker and when he has told the Press that he was answering as a politician, when he has imputed motives to the Hon. Chief Minister, I say all these things amount to throwing mud—mud slinging—on the face of the Hon. Chief Minister. I am very much pained and distressed to know that the Speaker should throw mud on the face of the Hon. Chief Minister. Will the Hon. Chief Minister clear his face and make a fresh statement?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am really glad that the hon. Member is trying to soap me. But it is quite unnecessary because there is no mud-clinging to me. I was in no



1968 ஆகஸ்ட் 16] [Thiru C. N. Annadurai]

way affected by the statement given by the Speaker. If my friend has got plenty of soap, he can try it somewhere else and not on me.

DR. H. V. HANDE : On a point of Order, Sir. The Hon. Chief Minister has quoted from May's Parliamentary Practice; but the statement of Thiru S. B. Adityan is a statement given after he ceased to be a Speaker. There are so many points which he has brought in his statement. One refers to the area which he has to nurse and where he has to contest again. He has quoted that in England there has been a convention not to contest for the Speaker's seat. But there has been no such practice and I can cite instances wherein other political parties have set up their candidates against the Speaker. I am not going into all the points raised by Thiru S. B. Adityan. But I think the House should be given an opportunity to discuss certain matters pinpointed by him and which he has placed before the Press after he ceased to be Speaker. As long as he was Speaker, we had no right to talk anything about the Speaker. But when he had ceased to be Speaker and issued a statement that he was going to be only an M.L.A. are we not entitled to have a discussion on the points he has raised in his statement issued after he ceased to be a Speaker? That is the point on which I want clarification from the Chair.

THE HON. THIRU C. N. ANNADURAI : With regard to the point of view expressed by the Speaker, after he ceased to be the Speaker, we may agree or disagree. Since he has given a statement like that the hon. Member is at liberty to give his point of view to the Press. Why should there be a discussion in the House about that?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் ஏற்கனவே சொல்லி விட்டேன். இந்தப் பேரவையில் இல்லாமல் வெளியே யாராவது ஏதாவது கூறுவார்களேயானால் அதைப் பற்றி இங்கு பேசுவது முறையாகாது. ஆகவே, அதைப் பற்றி இங்கு மீண்டும், மீண்டும் பேசவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## 4. தகவல் கோரல்.

### கூடுதல் வினாக்களுக்கு விடைகள் அளித்தல்

**திரு. கே. விநாயகம் :** ஸார், அங்கத்தினர்கள் பல கேள்விகள் அனுப்பியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் ஆயிரம் கேள்விகள் இருக்கின்றன. அவைகளுக்கு பதில்கள் வந்ததாகக் கூட நான் கேள்விப்படுகிறேன். ஆனால் அவைகளையெல்லாம் சபையில் கொண்டு வருவதில்லை. சபை ஒரு ஆண்டிற்கு ஆறு மாதங்கள் தொடர்ந்து நடந்தால் கூட, இதேமாதிரி ஆமை போல் மெல்ல-மெல்லப் போனாலும் பரவாயில்லை. எப்போதாவது ஒரு நேரம் நாம் கூடுகிறோம். மூன்று நான்கு மாதங்களுக்கு ஒரு முறை, மொத்தம் 60 நாட்களுக்கு மேல் சபை கூடுவதில்லை. அப்படியிருக்கும்போது நாங்கள் கேள்விகள் அனுப்பி அவற்றிற்குப் பதில்

கள் வந்தும் கூட அவைகள் எல்லாம் உங்கள் அறையில்—இப்போது உங்கள் அறையில், முன்பு யார் அறையில் என்று தெரியாது—வீணாகப் போடப்பட்டிருந்தால் யாருக்கு லாபம் ? இப்போது பத்து கேள்விகள் அனுமதிக்கிறீர்கள். உங்களுக்கு முன் எவ்வளவோ ஸ்பீக்கர்கள் இருந்தார்கள். அவர்கள் காலத்திலெல்லாம் நாள் ஒன்றுக்கு 40, 50, 60 கேள்விகள் கூட வந்திருக்கின்றன. திரு. சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் ஸ்பீக்கராக இருந்தபோது நான் அங்கத்தினராக இருந்திருக்கிறேன். நானும், கருத்திருமன் அவர்களும் மட்டுந்தான் அப்போது இருந்தோம். இப்போது இருக்கிறவர்கள் புதிதாக வந்தவர்கள். (மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களைச் சுட்டிக்காட்டி) அவர்களும் இருந்திருக்கிறார்கள். இந்த கேள்வி நேரத்தை நாம் நல்ல பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளவேண்டும். பல கேள்விகள் வரவேண்டும். அதற்கு விளக்கங்களும் வரவேண்டும். சட்டசபையில் என்னதான் செய்கிறார்கள் என்று பொது மக்களும் புரிந்து கொள்ளவேண்டும். ஏன் கொஞ்சம் அதிகமாகக் கேள்விகளைக் கொண்டு வரக்கூடாது ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு மணி நேரத்தில் 60 கேள்விகள் தான் போட முடியும். இன்று சுமார் 65 கேள்விகள் போடப்பட்டிருக்கின்றன. திரு. வினாயகம் அவர்கள் எத்தனை துணைக் கேள்விகள் போட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால் தெரியவரும். உங்களுடைய துணை வினாக்களைக் குறைத்துக்கொண்டால் இன்னும் நிறையக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க முடியும். ஒரு கேள்விக்கு விடையளிக்கின்ற நேரத்தில் ஒரு அளவோடு அந்தக் கேள்வியை முடித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் துணை வினாக்கள் அதிகமாக வந்துகொண்டேயிருந்தால் இந்தச் சபாநாயகரால் மட்டுமல்ல, வேறு எந்தச் சபாநாயகராலும், சபையை நடத்திச் செல்ல முடியாது. நிறைய கேள்விகளுக்கு விடைகள் தாமதமாக வருவதாகச் சொல்லப்படுகிறது. அது சம்பந்தமாக ஆராய்ந்து உடனடியாக விடைகளையளிக்க வழி செய்கிறேன் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், பேரவைத் தலைவரவர்களே, சென்ற முறை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் ஒரு மாதம் நடந்தும் கூட எந்தக் குறுகிய கால வினாவும் அனுமதிக்கப் படவில்லை. குறுகிய காலக் கேள்விகள் அனுமதிக்கப்படுமா ? அல்லது அந்த முறையே விட்டுவிடப் பட்டதா ?

THIRU S. BALASUBRAMANIAN : Another point of order . .

THIRU K. VINAYAKAM : What is the ruling on this point of order?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள், நான் சொல்லுகிறேன். குறுகிய கால வினாக்களுக்கு விடைகள் அளிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். குறுகிய கால





வினாக்கள் எந்தெந்த வகையில், யார் யாரால் கொடுக்கப்பட்டன, அவை இந்த அவையில் ஏன் வரவில்லை என்று தெரிந்து நான் இந்த அவைக்கு அறிவிக்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** நான்கு தினங்கள் செயலாளரிடம் இருக்கலாம், 15 தினங்கள் அரசாங்கத்தினிடம் இருக்கலாம். பிறகு பதில் வர வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால், கேள்விகள் கேட்டு 4 மாதங்கள் ஆகியும் அவை அனுமதிக்கப் பட்டனவா அல்லது அனுமதிக்கப்படவில்லையா என்ற விவரம் அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. என்னுடைய கேள்விகள் அதுபோல் இருக்கின்றன. இது விதிமுறைகளுக்கு நேர்விரோதமானதாக இருக்கிறது. இந்தக் குறைபாடுகள் எப்பொழுது போக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் முதலிலேயே கூறியபடி கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டியதுபற்றி வழிமுறை வகுத்து, அந்தக் கேள்விகள் மிக விரைவில் வருவதற்கு வழிமுறை செய்கிறேன் என்று நான் கூறும் இந்த உறுதிமொழியை ஏற்றுக்கொள்ளுமாறு அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## 5. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

### (i) உடையார்பாளையத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, திரு. கருத்திருமன் அவர்கள் உடையார்பாளையத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு பற்றி இங்கே ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபொருள் பற்றி திரு. கே. வினாயகம் அவர்களும், திரு. கே. இராமமூர்த்தி அவர்களும், திரு. ஆர். கருப்பையா அவர்களும் தீர்மானங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒற்றிவைப்புத் தீர்மானம் பற்றி, துணைச் சபாநாயகராயிருந்து கூறுகின்ற நேரத்தில் பல கருத்துக்களைக் கூறியிருக்கிறேன். ஒற்றிவைப்புத் தீர்மானங்களை எந்தெந்த காரியங்களுக்காகக் கொண்டு வருவது, ஒற்றிவைப்புத் தீர்மானங்களை எந்தெந்தக் காரியங்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று இந்தப் பீடத்திலே அமர்ந்திருந்த பெரியவர்கள் தீர்ப்புகள் அளித்திருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு, வேலை நிறுத்தம், கதவடைப்பு, தீ விபத்து இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அரசாங்கத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்கு உட்பட்டவைகளாகவிருப்பதால் இதற்கெல்லாம் ஒற்றி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இந்தப் பேரவையின் காலத்தை வீணாக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும், அவர்கள் கொடுத்திருக்கும் காரியம் பற்றி நீதிபதி ஒருவரை நியமித்து விசாரணைக்கு ஏற்பாடு செய்திருப்பதாலும், இது அன்றாட நடவடிக்கைகளுக்கு உட்பட்டதாக இருப்பதாலும் இதற்கு என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

[பேரவைத் துணைத் தலைவர்] [1968 ஆகஸ்ட் 16

அதைப்போலவே, சென்னையில் 1—8—1968 அன்று நடந்த போலீஸ் லத்தி சார்ஜ் பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. விநாயகம் அவர்களும் . . .

THIRU K. VINAYAKAM : Sir, I am suggesting a method, a method by which you can smoothen the work. Why should we not decide this issue first and go to the other issue later on?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எதை முன்னால் வைத்துக் கொள்ள வேண்டுமென்று சபாநாயகருக்குத் தெரியும். ஆகவே, நான் இதைத்தான் முதலில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முறை வகுத்துக் கொடுப்பது உறுப்பினரின் கடமையாகாது.

**திரு. கே. விநாயகம் :** முதலில் அதனுடைய முடிவைத் தெரிவித்து விட்டு அதற்குப்பிறகு இரண்டாவதுக்குப் போக வேண்டுமென்று கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தீர்ப்பு அதற்கு வழங்கி விட்டேன். அனுமதி அளிக்க மறுக்கிறேன் என்று சொல்லி விட்டேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகரவர்களே, தங்களை அறையில் சந்தித்து ஒன்றிவைப்புத் தீர்மானங்களைப் பற்றிப் பேசிய சமயத்தில் அந்தத் தீர்மானத்தில் என்ன வாசகம் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதைப் படிப்பதாகச் சொன்னீர்கள். அதிலுள்ள வாசகம் மற்றவர்களுக்குத் தெரியாது. அந்தத் தீர்மானம் பற்றி நீங்கள் எந்தத் தீர்ப்புச் சொன்னாலும் அதற்குக் கட்டுப்படுகிறோம், அதற்கு ஆட்சேபம் கிடையாது. அதை தங்கள் அறையிலேயே தள்ளி விட வேண்டுமென்றாலும் தள்ளி விடலாம். என்ன தீர்மானம் என்பதைப் படித்து அதற்கான விளக்கம் கொடுக்க சந்தர்ப்பம் கொடுத்தாலும் கொடுக்கலாம், அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம். ஆகவே, உதவி சபாநாயகரவர்கள் என்னிடத்தில் சொன்னபடி அதைப்படித்துக் காண்பிப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். துப்பாக்கிச் சூடுபற்றி நீதிபதி விசாரணை செய்யவிருப்பதால் இதுபற்றி விவாதிக்க வேண்டாமென்பதுதான். ஆனால் அதற்குமேலே,

" and the subsequent unrest in that area "

என்று கொடுத்திருக்கிறேன். எனவே, அது என்ன தீர்மானம் என்பதைப் படித்து, ஏன் அவர்கள் அதை எடுத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள சந்தர்ப்பம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது கனம் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கொடுத்த அந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தில் என்ன கருத்து இருக்கிறது என்று கூறிவிட்டேன். அந்த வாக்கியத்தை படிக்க வேண்டுமென்று சொன்னால் ஆட்சேபணை இல்லை.



1968 ஆகஸ்ட் 16] [பேரவைத் துணைத் தலைவர்]

I hereby give notice of the following adjournment motion—

" That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance namely the shooting resorted to by the police at Udayarpalayam on 7th August 1968 which resulted in the death of four persons inclusive of two students and the subsequent unrest in that area."

என்றிருக்கிறது. இதுதான் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதைப்போலவே ஒவ்வொரு உறுப்பினர் கொடுத்ததையும் படிக்க வேண்டுமென்றால் காலம் வீணாகப் போகும்.

THE HON. THIRU C. N. ANNADURAI : I may add that myself and this Government very acutely regret the incident that has taken place in Udayarpalayam and all my sympathies and condolences go to the bereaved family. A judicial enquiry has been instituted and I am hopeful and confident that all the facts leading to that unfortunate incident will be available through the enquiry. While the Deputy Speaker has said that the adjournment motion is not to be allowed and the Leader of the Opposition has concurred, I may add my own regret for the incident that has taken place and I offer condolences to the bereaved family.

DR. H. V. HANDE : On a point of order, Sir. We are very grateful to the Chief Minister for having given this assurance. May we also request the Chief Minister to give us another assurance? Whenever a report is submitted after a judicial enquiry, it takes inordinate time. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ஹாண்டே அவர்கள் உட்காருங்கள். நான் ஏற்கெனவே இந்த 'பாயிண்ட் ஆஃப் ஆர்டரைப்' பற்றிச் சொல்லியிருக்கிறேன். ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் அதற்கு 'பாயிண்ட் ஆஃப் ஆர்டர்' என்று எழுப்புவது கூடாது. அதற்கு வேறு வகையில் வழிகள் இருக்கின்றன. 'பாயிண்ட் ஆஃப் ஆர்டர்' என்று சொல்லி விட்டு, அதில் தங்கள் கருத்துக்களைச் சொல்லுவது, அல்லது வேறு வினாக்கள் கேட்பது கூடாது என்பதைக் கனம் உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : Is it in order on the part of the Chief Minister to give us this sort of assurance and prevent us from bringing before this House such matters as are creating a lot of unrest outside? Every time there is unrest a judicial enquiry is set up and we are not allowed to say what we have a right to say. I demand on the floor of this House : Is it in order? With regard to the report about the students-busmen clash, four months have elapsed. Is he not completely scuttling democracy by this method? I want a ruling.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லும்பொழுது, சட்டசபை விதிமுறைகளுக்கு மாறாக இருந்தால் அதைப்பற்றி ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம்.

அதைவிட்டு, முதலமைச்சர் என்ன பேசுகிறார், அது முறைதானா என்பது போன்றவை குறித்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பு வதற்கு இடமில்லை.

THE HON. THIRU C. N. ANNADURAI : I would like to offer this explanation to my honoured Friend Dr. Hande. We are not afraid of any discussion on any subject, since we are posted with facts and we can refute any allegation brought up by any member of the House. We are not afraid of any discussion and there is no question of scuttling democracy. Whenever there is an unfortunate incident, there is a demand from the public that a judicial enquiry should be constituted and this Government thinks that it is its duty to constitute a judicial enquiry. It is not with a view to stifle discussion or scuttle democracy and I may add that I am a person least affected by even the vituperative remarks paraded by any member of the House. Dr. Hande says that reports are delayed. If there are delayed reports, it depends upon the enquiry time and the Government has nothing to do with that. Any discussion can take place at any time. But if Dr. Hande feels that he should strike when the iron is hot, I would tell him that he should heat the iron and once again make it hot.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது முதலமைச்சர் அவர்கள் இந்தத் துப்பாக்கிச் சூட்டைப் பற்றியும், நீதி விசாரணை பற்றியும் குறிப்பிட்டார்கள். அதற்கு நன்றி. சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு அவர் அனுதா பத்தையும் தெரிவித்தார்கள். எங்கள் சார்பாக நானும் நன்றி தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன், எங்கள் கட்சியும் தெரிவிக்கத் தயாராக இருக்கிறது. வேறு எந்தவிதமான பிரச்சினைக்கும் இடம் இல்லை. அதற்குப் பின்னாலே, 7-ஆம் தேதிக்குப் பின்னாலே 8, 9-ஆம் தேதிகளில் பொதுமக்கள் மிகவும் பயத்தோடு அந்த ஊரிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததோடு, போலீஸ் போய் அதற்கு மேல் . . . (மணி அடிக்கப்பட்டது) அவர்கள் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கும்படியான நிலையிலே தகவல் வந்து கொண்டிருக்கிறது. அங்கு இருக்கும்படியான மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட வேண்டும். அத்துடன் போலீஸ் காரர்களால் உடையார்பாளையத்திலே இருக்கும் மக்கள் துன்பு றுத்தப் பட்டிருக்கிறார்கள். மாணவர்கள் கஷ்டப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். மாணவர்கள் ஊர்வலம் எல்லாம் கூட நடத் தப்பட்டிருக்கிறது. நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால் சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தி மக்கள் எந்தப் பகுதிக்கும் போகக்கூடிய ஏற்பாடுகளை செய்வார்களா என்பதுதான்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உடையார்பாளையத்தில் இன்னமும் அமைதிக் குறைவான நிலைமை இருப்பதாகக் குறிப்பிட்டார்கள்: துப்பாக்கிச் சூடு நடைபெற்ற மறுநாள், அல்லது 2 நாட்களுக்கு அந்த நிலைமை உடையார்பாளையத்தில் இருந்திருக்கலாம். எங்களுடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உடையார்பாளையத் திற்குச் சென்று இந்த சம்பவங்களைப் பற்றி யெல்லாம் அங்கே உள்ளவர்களிடம் பேசினார்கள். மக்கள் எந்த விதமான பீதிக்கும் இடம் கொடுக்காமல் அவர்கள் நீதிவிசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இப்பொழுது அங்கே அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருப்பது மட்டும் அல்லாமல் கைது செய்யப்பட்டவர்கள் எல்லாம் கூட ஜாமீனிலே விடுதலை செய்யப் பட்டிருக்கிறார்கள் என்றும் உடையார்பாளையத்தில் இன்றைய தினம் நல்ல அமைதியான சூழ்நிலை இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உடையார்பாளையத் திலிருந்து கூட பல பேர்கள் சென்னைக்கு வந்து என்னிடத்திலே அதைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். துப்பாக்கிச் சூடு நடந்தபோது பீதி இருந்ததாக அவர்கள் குறிப்பிட்டு இன்றைய தினம் அந்த பீதி வெகுவாகக் குறைந்திருக்கிறது என்று சொன் னார்கள். அந்த பீதியற்ற நிலைமையையும், அமைதியான நிலைமை யையும் உடையார்பாளையத்தில் ஏற்படுத்துவதற்கு என்னோடு சேர்ந்து, அரசோடு சேர்ந்து ஒத்துழைக்கும்படி அந்தப் பகுதி யிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர், காங்கிரஸ்காரர்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.





**திரு. கே. விநாயகம் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், நாம் அனைவரும் சேர்ந்து வருந்துகிறோம்—அந்த நிகழ்ச்சிக்காக ; நாம் அனைவரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் ; நாட்டிலே ஒரு நிலைமை சுமுகமாக ஏற் படுவதற்கு, தொல்லையில்லாமல் இருப்பதற்கு . . .

**திரு. கே. பி. எஸ். மணி :** பாயின்ட் ஆஃப் ஆர்டர்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்பதற்கு என்ன விளக்கம் இருக்கிறது என்பதை சொல்லி விடுகிறேன். நம்முடைய சட்டப்பேரவை நடைமுறை விதிகளில் 83—உட் பிரிவு 3 :

'A point of order shall relate to the interpretation or enforcement of rules or such Articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker.'

இதை கவனத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்து, உட் பிரிவு 7-ல்

'A member shall not raise a point of order—

(a) to ask for information; or

(b) to explain his position; . . .' என்று இருக்கிறது.

இதை மனதிலே வைத்துக் கொண்டு பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** சபைத் தலைவர் அவர்களே, நாங்கள், இந்த துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக விவாதிக்கக் கூடாது என்று ஒரு முடிவு செய்து விட்டபிறகு, இந்தச் சபைக்குத் தெரிவித்து

[திரு. கே. பி. எஸ்: மணி] [1968 ஆகஸ்ட் 16

விட்ட பிறகு, மறுபடியும் மேற்கொண்டு ஒருவருக்கொருவர் மாற்றி பேசிக் கொண்டே இருந்தால் சபாநாயகருடைய தீர்ப்பு என்ன ஆயிற்று, இந்த சபையினுடைய ஒழுங்கு என்ன ஆயிற்று என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. கே. விநாயகம் :** சார், அமைச்சர் சொன்னதைப் போல ஒத்துழைப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அதே நேரத்தில், பாதுகாப்பு இருக்குமென்று பேசினாரே அவர்கள், பிரிவாலே வாடும் அந்த 4 பேர்கள் குடும்பத்திற்கும் ஏதாவது 'மானிட்டரி கன்சிடரேஷன்' உடனடியாக ஏற்பாடு செய்வதற்கு முன்வருவார்களா ? பிறகு, நீதி விசாரணை எப்படி அமைகிறதோ அது வேறு விஷயம். ஆயினும், இப்பொழுது உடனடியாக இதைச் செய்வோமானால், அங்கே நாம் நல்ல எண்ணத்தை காட்டுகிறோம் என்ற முறையில் அதற்கு ஏதாவது உதவ முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த நல்ல கருத்தை நான் வரவேற்கிறேன். ஆனால், இந்த நல்ல கருத்து எங்களுடைய அரசு ஏற்பட்ட பிறகு கனம் உறுப்பினர் அவர்கள் இவ்வளவு உறுதியோடு சொல்லுவதைப் போல முன்னாலே இருந்த அரசிடமும் சொல்லி ஒரு நல்ல சம்பிரதாயத்தை ஏற்படுத்தி இருப்பாரானால் அது மிகவும் பாராட்டக்கூடியதாக இருக்கும். ஒரு சமயம் சொல்லக் கூடிய இடத்திலேதான் சொல்ல வேண்டும் ; மற்ற இடத்திலே சொல்லி என்ன பிரயோஜனம் என்றிருக்கலாம். அந்த விஷயத்தில் எனக்கு முழு உருக்கமான அனுதாபமும் உண்டு என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் ஒன்றும் இல்லை. இப்பொழுது அமைச்சர்கூட ஸ்டேட்மெண்ட் . . .

**திரு. க. இராமமூர்த்தி :** பாயிண்ட் ஆஃப் க்ளாரிஃபிகேஷன். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** க்ளாரிஃபிகேஷன் இல்லை. பேசிய பேச்சில் க்ளாரிஃபிகேஷனுக்கு ஒன்றும் இடம் இல்லை.

**திரு. க. ர. நல்லசிவன் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் தாங்கள் கொடுத்த தீர்ப்பின் போது துப்பாக்கிச் சூடு, தீ வைப்பது போன்ற சம்பவங்கள் எல்லாம் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையின் கீழே கொண்டு வருவதற்கு லாயக்கில்லை என்று முன்பு குறிப்பிட்டிருப்பதாகத் தாங்கள் கூறினீர்கள். அவை போன்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்ததை விதி 42-ன் கீழ் கொண்டு வராமல் வேறு எதன் கீழ் கொண்டு வருவது? அதைவிட அவசரமானது வேறு எது இருக்க முடியும்? விதி 42-ல்



1968 ஆகஸ்ட் 16] [திரு. க. ர. நல்ல சிவன்]

'உடனடிப் பொது முக்கியமுள்ள குறிப்பிட்ட ஒரு காரியத்தைப்பற்றி விவாதிக்க வேண்டி, பேரவையின் அலுவலை ஒற்றி வைப்பதற்கான தீர்மானத்தை, இந்த அதிகாரத்திற்கானும் விதிகளுக்கிணங்க, உறுப்பினர் எவரும் கொண்டு வரலாம்.'

என்று இருக்கிறது. ஆனால், அதற்கு முன்னால் கொடுக்கப்பட்ட தீர்ப்புகள் ஏறத்தாழ நடைமுறைக்கு வரவில்லை. சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு கொடுத்து விடுவதற்கு முன்னாலே அவைகள் மீது பேசுவதற்கான சந்தர்ப்பம் இருக்கும். ஆகவே, அதே நிலை நீடிக்க வேண்டுமென்ற கருத்தினைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏதாவது கருத்துக்கள் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னால் கவன ஈர்ப்புத் தீர்மானம் இருக்கிறது. அதிலே, அவர்கள் தங்கள் கருத்தை தெரிவிப்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது. ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி நம்முடைய விதிமுறைகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழே வராது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தான் நான் சொன்னேன். ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரவேண்டாமென்று நான் சொல்லவில்லை. இதுபோன்ற விஷயங்களைக் கொண்டுவர வேண்டாமென்றுதான் சொன்னேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு தீர்மானம் மேலே தற்போது தீர்ப்புக் கூறினீர்கள். சென்ற முறை கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் பல கொடுத்தும் கூட அவைகள் எல்லாம் வராமல் போகவே, அவைகளை எல்லாம் 42-வது விதியின் கீழ் கொண்டு வர நாங்கள் முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. இனியாவது 41-வது விதியின்கீழ் விரைவாக கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த துப்பாக்கிச் சூட்டைப் பொறுத்தவரையிலும் உடனடியாக போலீஸ் அதிகாரியை வேலையிலிருந்து, தற்காலிகமாக நீக்கப்போகிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தச் சட்டமன்ற நிகழ்ச்சியிலே ஏதாவது தவறு ஏற்பட்டால், அதைப்பற்றிதான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டுமென்றிருக்கிறது. வெளியிலே நடக்கின்ற நடவடிக்கைகளைப் பற்றி, அதிகாரிகளைப்பற்றி இங்கே ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது முறையாகாது. இந்த பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்கு நான் அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்பதற்கு விளக்கம் இங்கே திட்டவட்டமாக விதிகளில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமன்ற விதிகள் மறுக்கப்படுமானால், புறக்கணிக்கப்படுமானால், அந்த நிலை ஏற்படும்போதுதான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டும்.

[பேரவைத் துணைத் தலைவர்] [1968 ஆகஸ்ட் 16

பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிக்கொண்டு தங்கள் மனதிலே என்ன கருத்து இருக்கிறதோ அதைக் கூறுவதற்கோ, அமைச்சர்கள் செய்திகள் தெரிவிக்க வேண்டுமென்று கேள்விகள் எழுப்புவது முறையாகாது என்று நம்முடைய விதிகள் கூறு கின்றன. அந்த விதிகளில் கொடுக்கப் பட்டிருக்கிறதை நோக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அந்த துப்பாக்கிச் சூட்டைப்பற்றி விசாரணை என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, நீதி விசாரணையைப் பொறுத்தவரையிலும் முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவு என்ன? நீதி விசாரணை மட்டும் எப்படி . . . (மணி அடிக்கப்பட்டது)

### (ii) இளைஞர் காங்கிரஸ் ஊர்வலத்தின் மீது தடியடிப் பிரயோகம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்த நிகழ்ச்சி. இப்பொழுது திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள், திரு. கே. விநாயகம் அவர்கள், திரு. க. இராமமூர்த்தி அவர்கள், திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள், 1—8—1968 அன்று சென்னையிலே இளைஞர் காங்கிரஸ் ஊர்வலத்தின் மீது போலீஸ் தடியடிப் பிரயோகம் நடத்தியதைப் பற்றி ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்துள்ளார்கள். இதுவும் அரசின் அன்றாட நிகழ்ச்சி களுக்கு உட்பட்ட நிகழ்ச்சியாகும். ஆகவே, இதற்கும் நான் அனுமதி தர மறுக்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** மிஸ்டர் ஸ்பீக்கர், சார், போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அமைதியாகப் போகிற தொண்டர்கள் மீது தடியடி நடத்தியதால் குறைந்தது 600 பேர் காயமுற்றார்கள். அடுத்து, 300 பேருக்கு மேற்பட்டவருக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது நான்—(திரு. கே. விநாயகம் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்) விநாயகம் அவர்கள் உட்காருங்கள்—ஒரு தீர்ப்பளித்து விட்டேன். அந்த தீர்ப்புக்குப் பணிந்து இந்த சபையினுடைய கண்ணியத் தைக் காப்பாற்ற நினைக்கிறீர்களா? அல்லது சபாநாயகர் தீர்ப் பளித்த பிறகும் அந்த தீர்ப்புக்கு எதிர் வாதம் பேச வேண்டு மென்ற முறையை இந்த மன்றத்திலே கொண்டு வர விரும்பு கிறீர்களா என்று கேட்கிறேன்.

மு ப்கல் 21-30 **திரு. கே. விநாயகம் :** பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். தயவு செய்து கேளுங்கள். முன்பு கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி விவரிப்பதற்கும், கருத்துச் சொல்வதற்கும் நீங்கள் இடம் தந்த பிறகு, அதே முறை தான் இதற்கும் ஒக்கும் என்பதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன். ஆதலாலே, இந்தத் தீர்மானத்தைப்பற்றி பேசுவதற்கு எங்களுக்கு இப்பொழுது வாய்ப்பு இல்லை, ஒருவேளை எங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்திருந்து, பிறகு அனுமதி தரு வதற்கு சாத்தியமில்லை என்று தள்ளியிருந்தால் ஒழுங்காக இருந்



1968 ஆகஸ்ட் 16] [திரு. கே. விநாயகம்]

திருக்கும். அப்படியில்லாமல் அந்தத் தீர்மானத்தைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, தள்ளிவிடுகிறேன், அனுமதி மறுக்கிறேன் என்று சொல்வது முன்பு நடந்ததற்கும், இப்பொழுது நடப் பதற்கும் மாறுபட்டதாக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு தவறு இன்னொரு தவறுக்கு உதவியாக இருக்க முடியாது. நான் முன்பே ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப்பற்றி ஒரு முறை வருத்துக்கொண்ட பிறகு, அதற்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர் களும் சொன்னதால், அவர்கள் கொஞ்சம் பேசுவதற்கு, கருத்துத் தெரிவிப்பதற்கு இடம் கொடுத்தேன். அதனால் இதற்கும் அம் மாதிரி இடம் கொடுக்கக் கூடாதா என்று கேட்பது முறையாக இருக்க முடியாது.

'Lathi charge and arrest of students of the Annamalai University-Ruled out of order on the ground that the subject matter of the motion did not involve more than the ordinary administration of law.'

இது போன்ற விதிமுறைகள் 1958-ஆம் ஆண்டிலேயே அந்த மன்றத்தினால் ஏற்படுத்தப்பட்டு, ஒத்திவைப்புத் தீர்மானங்களின் மீது பல தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தீர்ப்பு களுக்கு மன்றத்து உறுப்பினர்கள் கட்டுப்பட்டு நடந்து கொண்டி ருக்கின்றார்கள். புதியதாக நான் ஒருமுறையும் வருத்துக் கொள்ள வில்லை. இந்த மன்றத்தில் வழி வழியாக வந்திருக்கிற மரபுகளுக்கு இந்த மன்ற உறுப்பினர்கள் பணிந்து இடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் கொடுத்த தீர்ப்புக்குக் கட்டுப்பட நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இது நடை முறையில் இல்லாத ஒரு அசாதாரணமான காரியம். சரியாக எச்சரிக்கை கொடுக்காமல் போலீஸார் தடியடி பிரயோகம் செய் திருக்கிறார்கள். அதனால் 500, 600 பேர்கள் அடிபட்டிருக்கிறார் கள் இதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் தருவார்களா? . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தடியடிப்பிரயோகம் மட்டும் தான் இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தடியடிப்பிர யோகம் எப்படி வந்தது, அதன் பின்விளைவு என்ன என்ப தெல்லாம் இதில் வரவில்லை. தடியடிப்பிரயோகம் பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டுவருவது முறையாகாது. அதன் விளைவு என்ன, அதன் பெருமை என்ன, அது எப்படி வந்தது, எத்தனை பேர்கள் அடிபட்டார்கள், என்பதெல்லாம் இதில் இல்லை. இந்த சட்டமன்றத்தில் முன்பு தீர்ப்புகள் கொடுத்திருக்கிற வகையிலே தடியடிப்பிரயோகம்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவருவது முறையாகாது.

[1968 ஆகஸ்ட் 16

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தடியடிப்பிரயோகம் அநாகரிகமான முறையில் செய்யப்பட்டதால், பல பேர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். 500, 600 பேர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், கை ஒடிந்தவர்கள் இருக்கிறார்கள், கால் ஒடிந்தவர்கள் இருக்கிறார்கள். அதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தடியடிப் பிரயோகம் என்ற வார்த்தைகள் தான் இதிலே இருக்கின்றன. அதைத் தொடர்ந்து எத்தனை பேர்கள் அடிபட்டார்கள், எப்படி தடியடிப் பிரயோகம் செய்தார்கள், அதன் விளைவு என்ன என்பதைப்பற்றியெல்லாம் இதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. தடியடிப்பிரயோகம் பற்றி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவருவது முறையாகாது. அதுதான் விதிமுறை. அதுதான் இந்த மன்றத்தில் வழி வழியாக பின்பற்றப்பட்டு வந்திருக்கிற விதிமுறை. அதற்கு இந்த மன்றத்து உறுப்பினர்கள் பணிந்து, மன்றத்தின் பெருமையைக் காக்க வேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** இந்த விஷயத்தில் அரசாங்கம் என்னதான் சொல்ல இருக்கிறது.

What is the decision taken by this Government with regard to the holding of the judicial enquiry?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் அனுமதி தந்த பிறகு தானே அரசாங்கத் தரப்பில் ஏதாவது சொல்லவேண்டுமென்றால் சொல்லவேண்டும் ? நான் தான் அனுமதி தரவில்லையே. வேண்டுமானால் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தால், முதல் அமைச்சர் அவர்கள் விளக்கமான அறிக்கை கொடுப்பார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் தருவாரா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் ஏற்கனவே சொன்னேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தால், முதல் அமைச்சர் அவர்கள் விரிவான அறிக்கை கொடுப்பார்கள்.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, without meaning any disrespect to the Chair, we will withdraw from the House.

(Then the hon. Members belonging to the Congress Party staged a walk-out).

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ii) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, இப்பேரவையின் 6-வது விதிக்கிணங்க கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்



1968 ஆகஸ்ட் 16] [பேரவைத் துணைத் தலைவர்]

பேரவையின் நான்காம் கூட்டத் தொடரில் மாற்றுத் தலைவர்களாக (பானெல் ஆஃப் சேர்மன்) நான் நியமிக்கிறேன் :

1. திரு. வி. எஸ். கோவிந்தராசன்.
2. திரு. பெ. மலைச்சாமி.
3. திரு. ந. தருமலிங்கம்.
4. திரு. எஸ். முருகையன்.
5. திரு. வை. சுவாமிநாதன்.
6. திரு. வி. கே. கோதண்டராமன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** நான் இரண்டு ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருந்தேன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களைப் பற்றிய முடிவை நான் நாளை தெரிவிக்கிறேன்.

### 6. 1968-69-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968-69-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விரிவான உரை [a] அச்சடிக்கப்பட்டு மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. முழு உரையையும் நான் படிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். அதிலே இருக்கிற ஒரு சில குறிப்புகளை மட்டும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதன் மூலம், இந்த உரை முழுவதும் படிக்கப்பட்டதாகக் கொண்டு, அதன்மீது விவாதத்தைத் துவக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களை தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். இதிலே தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968-69-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும், 1967-68-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் விளக்கப்பட்டு உள்ளது.

கடந்த ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது சட்டமன்றத்தில் கூறப்பட்ட கருத்துக்களையொட்டி மின்சார வாரியம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை விவரத்து அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முன்னரே வழங்கப்பட்டுள்ளது. அதையொட்டி சில பல முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அப்படி எடுக்கப்பட்ட முடிவுகளில் ஒரு முக்கியமான முடிவு, இந்த மாநிலத்திலுள் பற்றாக்குறையை நீக்குவதற்காக மைசூர் மாநிலத்திலிருந்து நாம் ஏற்கனவே மின்சாரம் பெற்றுவந்தோம். ஏற்கனவே யூனிட் ஒன்றுக்கு 9 காசு என்ற அளவில் மின்சாரம் பெற்றுவந்தோம். அதற்குப் பிறகு இந்த ஆண்டு செய்துகொண்ட

---

[a] 100-118-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 ஆகஸ்ட் 16

முடிவின்படி, சுமார் 30 கோடி யூனிட் பெறுவதற்கு பேச்சு வார்த்தை நடைபெற்றது. யூனிட் ஒன்றுக்கு 9 காசிலிருந்து சராசரி ஏறத்தாழ 4.66 காசாகக் குறைக்க மைசூர் மாநிலத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மின்சார வாரியத்தின் சென்ற நிதிநிலை அறிக்கையின்போது விவாதம் நடந்ததற்குப் பிறகு, இப்படிப்பட்ட ஒரு மிக முக்கியமான முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. நமது தட்டுப்பாட்டை நீக்குவதற்குப் பயன்படும் வகையிலே மைசூரிலிருந்து கிடைக்கிற மின்சாரம் நமக்குப் பயன்பட்டு வருகிறது.

அடுத்தபடியாக, மற்றொரு முக்கியமான முடிவு, நெய்வேலி கார்பரேஷனைப் பொறுத்தவரையிலே மின்சாரம் பெறுவதிலே கட்டணத்தை நிர்ணயிப்பது குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. 1964-வது ஆண்டில் ஒரு யூனிட்டுக்கு 5.2 காசு என்ற வீதம் ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதன் காரணமாகவும், உற்பத்தி செலவு அதிகமாக வளர்ந்துவிட்டதன் காரணமாகவும், இப்படி பல்வேறு காரணங்களைச் சொல்லி மின்சாரக் கட்டணத்தின் அளவை உயர்த்த வேண்டும் என்று நெய்வேலி கார்பரேஷன் வற்புறுத்தி வந்தது. 6.78 காசு அளவுக்கு உயர்த்தித் தரவேண்டும். அப்படி உயர்த்தித் தந்நால் தான் நெய்வேலி கார்பரேஷன் முறைப்படி செயலாற்ற முடியும் என்று எடுத்துச் சொன்னார்கள். அதைப்பற்றி இந்திய அமைச்சரோடு, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், நானும் மற்றைய அதிகாரிகளும், மத்திய அரசினுடைய அதிகாரிகளும், நெய்வேலி கார்பரேஷனைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்து பேசியதன் விளைவாக ஒரு யூனிட்டுக்கு 5.9 காசு என்ற அளவில் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படவேண்டும் என்ற முடிவு ஏற்பட்டது. இந்த வீதம் 4 ஆண்டுக் காலம் செயலிலிருக்கலாம் என்ற அளவுக்கு நாங்கள் ஒப்புதல் தந்துள்ளோம்.

மற்றொன்று, பணியாளர்களுடைய நிலைமை பற்றிய சிக்கல்கள் பல ஆண்டுகாலமாக தீர்க்கப்படாமல் இருந்து, இப்பொழுது தீர்க்கப்பட்டு, ஓரளவுக்கு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாகும். கட்டணப் பட்டியல் தயாரிக்கும் பணியாளர்கள், பட்டியல் கட்டணம் வசூலிக்கும் பணியாளர்கள், பண்டகசாலைப் பணியாளர்கள் ஆகியோருக்கு இடைக்கால உதவித் தொகை, நகர ஈட்டுப்படி, பணிச்சுமை அளவுகள் ஆகிய சிக்கல்கள் பல நாட்களாகத் தீராமல் இருந்தன. மின்சார வாரியத்தின் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் பிரதிநிதிகள், அந்தப் பணியாளர்களுடைய பிரதிநிதிகள் ஆகியோர்களிடையே நல்ல உறவு முறையில், நட்பு முறையில் பேச்சு வார்த்தை நடந்தது. அதன் பயனாக இந்த சிக்கல்களுக்கு தீர்வு காண முடிந்தது. இரு தரப்பினர்களுக்கும் திருப்தி அளிக்கக்கூடிய முறையில் தீர்வு காணப்பட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. இந்தத் துறையிலே கூட இன்னும் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்னைகள் இருக்கின்றன என்பதையும்



1968 ஆகஸ்ட் 16] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

நாங்கள் கவனத்தில் கொண்டிருக்கிறோம். மற்ற பிரச்சினைகளைத் தீர்த்ததுபோலவே, இன்னும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளையும், இரு தரப்பு பிரதிநிதிகளும் உட்கார்ந்து பேசி, சுமுகமான முறையிலே தீர்த்துக் கொண்டுவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நட்பு முறையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் ஓரளவுக்கு நல்ல பயனை அளித்திருக்கின்றன. மேலும் சுமுகமான சூழ்நிலையில் பேச்சு வார்த்தைகள் மூலம் நல்ல பலன் கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

மின் சக்தியின் நன்மைகளைப் பண்ணைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும், வீடுகளுக்கும், தெருக்களுக்கும் இயன்ற பெருமளவில் வகை செய்து தருவதே நமது கடமை ஆயினும், வரி செலுத்துவோருக்குச் சுமை ஏற்படுத்தாமல் இவற்றையெல்லாம் செய்ய வேண்டும். இந்த இரு குறிக்கோள்களையும் ஓரே சமயத்தில் நிறைவேற்றுவது எளிதல்ல என்றாலும்கூட, இவற்றை நல்ல வகையில் நிறைவேற்றியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மின் உற்பத்தி செய்தல், மின்சாரம் அனுப்புதல், பங்கிட்டு அளித்தல் ஆகியவற்றில் வியத்தகு முன்னேற்றத்தை நாம் அடைந்திருக்கிறோம். 1967-68-ம் ஆண்டில் 3,210 கிராமங்களுக்கு மின்சார வசதி புதியதாக அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் இதுவரை 9,354 கிராமங்களுக்கும், 18,877 சிற்றூர்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 51,746 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதைச் சேர்த்து இதுவரை 3.42 லட்சம் மின்விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, சென்ற ஆண்டு ரூ. 4 கோடியே போதும் என்ற அளவில்தான் வாய்ப்பு இருக்கும் என்று ஒதுக்கினோம். ஆனால், பின்னால், உணவு உற்பத்திக்கு ஏற்ற வகையிலும், இன்னும் பல்வேறு வகைகளிலும் நிதிகள் ஒதுக்கியும், இறுதியாக மக்களுக்கு நல்ல பல வாய்ப்புக்களைக் கொடுக்க வேண்டும் என்று ரூ. 9 கோடியே 7 லட்சம் அளவில் ஒதுக்கீட்டைப் பெருக்கி, 51,000 சில்லரை விசையேற்றங்களுக்கு இணைப்புக் கொடுத்திருக்கிறோம். மக்களுடைய தேவைகளை நிறைவேற்றும் அளவிற்கு செய்யப்பட்டிருக்கிறது. ஆக, இந்த ஆண்டில் 51,746 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்போது இதைச் சேர்த்து இதுவரை 3.42 லட்சம் மின்விசையேற்றங்களுக்கு இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்போது புதிதாக 443 அரிசனக் குடியேற்றங்களுக்கு மின்வசதி செய்து கொடுத்துள்ளதால், மார்ச்சுத் திங்கள் முடிய மின்விசை பெற்ற அரிசனக் குடியேற்றங்களின் எண்ணிக்கை 2,800 ஆக உயர்ந்து இருக்கிறது. இந்த ஆண்டில் மொத்தம் 2,722 கிலோ மீட்டர் மிக உயர் அழுத்த மின் கம்பிகளும், 9,842 கிலோ மீட்டர் குறைந்த அழுத்த மின் கம்பிகளும் போடப்பட்டன. ஆயிரத்து எண்ணூற்று முப்பது பங்கீட்டு மின் அழுத்த மாற்றிகள் அமைக்கப்பட்டன. இவ்வாண்டில், புதிதாக மொத்தம் 1.41 லட்சம் பேருக்கு மின் வசதி அளிக்கப்பட்டது. 1967-68-ல்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 ஆகஸ்ட் 16

396.6 கோடி யூனிட் மின்சாரம் விற்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 17 சதவிகிதம் கூடுதலாகும்.

இன்னொரு மிக முக்கியமான விஷயம் மின்சாரத்தில் வெட்டு இல்லாமல் சமாளித்திருக்கிறோம் என்பது. வெட்டு விழாமல் இருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் மின்சார வெட்டு ஏற்படக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டு வந்தன. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக மின்சார வெட்டு ஏற்படவில்லை என்பதை அறிந்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அடுத்து வரும் ஆண்டுகளிலும் மின்சார வெட்டு எதுவும் இராத வாறு பார்த்துக் கொள்ள ஆவன செய்து வருகிறோம். முன்பு எல்லாம் மின்சார வெட்டு ஏற்படும் நேரங்களில், 6, 7 நாட்கள் பணிபுரிவது, 5, 6 நாட்கள் என்றும், மூன்று ஷிஃப்டுகள் என்பதை இரண்டு என்றும் குறைத்துக் கொள்ள வேண்டிய நிலைமைகள் இருந்தன. சென்ற ஆண்டு எந்த விதமான மின்சார வெட்டும் இல்லாமல் சமாளித்தோம். இந்த ஆண்டும், நம்முடைய தேவை களை நிறைவேற்றும் அளவிற்கு பணிகள் செய்ததோடு, அண்டை மாநிலமாகிய மைசூரோடு ஒப்பந்தம் செய்து கொண்டதும் மிக்க உதவிகரமாக இருந்தது. தமிழ் நாட்டில் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் மின்சாரத்தின் பேரளவுத் தொகை 110 மெகவாட்டாக இருந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இது 172 மெகவாட்டாக உயர்ந்தது. இரண்டாவது திட்ட இறுதிக்குள் இது இருமடங்குக்கு மேல், அதாவது 381 மெக வாட்டாக பெருகியது. மூன்றாவது திட்டக் காலத்தில் மின்சார வெட்டும் கடுமையான கட்டுப்பாடுகளும் இருந்தபோதிலும், பேரளவுத் தேவை மூன்றாவது திட்ட முடிவில் 717 மெகவாட்டாக உயர்ந்தது. 1968 மார்ச்சுத் திங்களுக்குள் இந்தப் பேரளவுத் தேவை 964 மெகவாட்டாக அதிகரித்துவிட்டது. இன்னும் இந்த அளவு அதிகரிக்கக்கூடிய நிலைமைகள் தான் இருக்கின்றன.

மேலும், நம் மாநிலத்தின் தேவைக்கு வேண்டிய அளவில் மின்சாரத்தைப் பெற பல்வேறு முயற்சிகளில் நாம் ஈடுபட்டிருக் கிறோம். எதிர் காலத்தில் நாம் இன்னும் மேற்கொண்டு செய்ய வேண்டிய புதுத் திட்டங்கள் பல இருக்கின்றன. அவற்றிற்கு இந்திய அரசின் அனுமதியைப் பெற்று, அவை தொடங்க வேண்டி யவைகளாக இருக்கின்றன. அவற்றின் மூலம் மேலும் அதிகமான மின்சாரம் நமக்குக் கிடைக்கும். அப்படி நாம் மத்திய அரசின் அனுமதி கோரியிருக்கும், திட்டங்கள், நீலகிரியில் பாண்டியாறு —புன்னப்புழா புனல் மின்சாரத் திட்டம், 100 மெ.வா. கொண்டதும் ஆனைமலையில் கடம்பாறை புனல் மின்சாரத் திட்டம், 35 மெ. வா. கொண்டதும், எண்ணூர் அனல் மின்சாரத் திட்டத்தை விரிவு படுத்துதல், 110 மெ.வா. கொண்டதும், சோளத்திபுழா புனல் மின்சாரத் திட்டம் 60 மெ.வா. கொண்டதும், நடுவட்டம் புனல் மின்சாரத் திட்டமும் ஆகும். இவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மத்திய சர்க்காரை நாம் வற்புறுத்தியிருக் கிறோம். நம் மாநிலத்தில் உள்ள பெரிய பெரிய புனல் மின்சாரத் திட்டம் எல்லாம் எடுத்து நிறைவேற்றப் பட்டுவிட்டன. இனி



1968 ஆகஸ்ட் 16] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இருப்பதெல்லாம் சிறு சிறு புனல் மின்சாரத் திட்டங்கள் தான். எதிர் காலத்தில் நாம் அனல் மின்சாரம், அணு மின்சாரம் இவற்றைப் பெருக்கவும் முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் தான், கல்பாக்கம் அணு மின்சாரத் திட்டம், மத்திய அரசினால் தொடங்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் எதிர்காலத்தில் நம்முடைய மின்சாரத் தேவைகளை நிறைவு செய்ய அது பெருமளவிற்கு உதவும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. 400 மெகாவாட் உற்பத்தித் திறன் உள்ள இத்திட்டம் குறித்து வேலைகள் நிறைவேறி வருகின்றன. அப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் எந்தெந்த நிலையில் இருக்கின்றன. மேற் கொண்டு என்னென்ன செய்ய இருக்கிறோம் என்கின்ற தகவல்கள் எல்லாம் அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை யெல்லாம் நான் படித்துக் காட்ட வேண்டிய தேவையில்லை என்று நினைக்கிறேன். நான்காவது திட்டத்தில் நம் மின்சாரத் தேவை எந்தெந்த வகைகளில் நிறைவேற்றப்படும் என்கிற விவரங்களும், அதற்கான வழிமுறைகள் பற்றிய விவரங்களும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மக்கள் எடுத்து வைக்கும் குறைகளை நிறை வேற்ற என்னென்ன வழிமுறைகள் என்பதையும் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. குறைகள் அதிகம், தேவைகள் அதிகம். அவற்றை நிறைவேற்றுவதற்கான நம் முடைய நிதி வசதி குறைவு. மின்சார வாரியத்தின் அலுவலர்கள் வசதிக் குறைவு இருந்தும், முதலிலே நான்கு கோடி ஒதுக்கி யிருந்தும்கூட, மக்களுடைய பல்வேறு குறைபாடுகளைத் தீர்க்க வேண்டும் என்கின்ற எண்ணத்தால், நிறைவு பெறாத வேறு பல திட்டங்களுடைய தொகைகளைக் கொண்டும், கடன்கள் பெற்றும், இன்றைக்கு 51,000-க்கும் அதிகமான விசையேற்றங்களை மக்க ளுக்கு தந்திருக்கிறோம் என்றால், அதன் மூலம் ஓரளவுக்கு வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் நம் மக்களுக்கு உதவியளித் திருக்கிறோம் என்றுதான் பொருள். அந்த அளவிற்கு நம்முடைய அரசு அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது; மின்சார வாரியம் பெரும் அளவிற்கு ஒத்துழைத்திருக்கிறார்கள்.

இன்றைய நிலையில், வாரியத்தின் மின் இணைப்புப் பளுவிலிருந்து சுமார் 40 சத வீத மின்சாரம் வேளாண்மைப் பணிகளுக்காக வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்க தாகும். மேலும், உணவு உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில் விரைவுத் திட்டம் குறித்து வாரியம் சிறப்பான நாட்டம் செலுத்தி வருகிறது. அத் திட்டங்களிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாய் மிகக் குறைவாகத்தான் இருக்கும். இருந்தாலும், 1968 ஜூன் திங்கள் இறுதிவரையில், 680 வடிமுனைக் குழாய்களும், 294 விசையேற்றங்களும் இணைக்கப்பட்டுள்ளன. 1968-69-ல் மேலும் 1,500 விசையேற்றங்களைப் பொருத்தத் திட்டம் இருக்கிறது.

நான் தொடக்கத்தில் குறிப்பிட்டபடி, இந்த அரசாங்கமும், மின்சார வாரியமும், மக்களுக்கு ஆற்றவேண்டிய பெரும் கடமையை எப்போதும் நினைவில் வைத்திருக்கிறது. பொது வரி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 ஆகஸ்ட் 16

செலுத்துவோரின் மீது சுமை அதிகப்படாவண்ணம் ஏழை எளிய மக்களுக்கும் மின்சாரத்தின் பயன் துய்க்கும் வகையில் அரசும் மின்சார வாரியமும் செயலாற்ற முனைந்திருக்கிறார்கள். இந்த இரண்டு குறிக்கோள்களையும் எய்தியுள்ள நமது நாட்டிலுள்ள மிகச் சில மின்சார வாரியங்களில் தமிழ்நாடு மின்சார வாரியமும் ஒன்றாகும். பெருமை மிக்க இந்த மரபை இவ்வாரியமும் அதன் தொழிலாளர்களும் தொடர்ந்து பேணி வருவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. இனி நடக்க வேண்டியவைகள் பற்றி பேரவையின் உறுப்பினர்கள் சீரிய கருத்துக்களைக் கொடுத்து மேலும் மேலும் எனக்கு உதவியளிக்கும் வகையில் கருத்துக்களைத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். செய்யப்படவேண்டியவைகள் பற்றியும், நீக்கப்படவேண்டிய குறைபாடுகள் பற்றியும், நிறைவேற்றப்பட வேண்டிய நிறைபாடுகள் பற்றியும் பேரவை உறுப்பினர்கள் கொடுக்கும் சீரான கருத்துக்களைச் செம்மையான முறையில் கொடுத்து, எந்த எந்த வகைகளில் அவற்றையெல்லாம் செய்யலாம் என்பதற்கான கருத்துக்களை எடுத்து வழங்கினால், அரசுக்கும், வாரியத்திற்கும் அவை பயன்படும். அந்த வகையில் உறுப்பினர் கூறும் சீரிய யோசனைகள் எதிர்காலத்தில் நிரம்பப் பயன்படும் என்று கருதுகிறேன். அந்த வகையில் இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் அத்தகைய கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்றும் கருதுகிறேன்.

சென்ற ஆண்டு உறுப்பினர்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்ட கருத்துக்களின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் தனியே குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் உறுப்பினர்கள் கூறும் குறைபாடுகள், கருத்துக்கள் பேரில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றியும் விவரங்கள் கொடுக்கப்படும்.

பேரவையில் உறுப்பினர்கள் கூறும் கருத்துக்கள் எனக்கும், அரசுக்கும், வாரியத்திற்கும் பயன்படும் என்கிற காரணத்தாலும், உறுப்பினர்களுக்கு வேண்டிய பல்வேறு விவரங்களும் இந்த விளக்க உரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற காரணத்தாலும், மன்ற உறுப்பினர்கள் கூறும் கருத்துக்கள் பேரில் நடவடிக்கைகள் எடுத்து, அதற்கான குறிப்பும் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்கிற காரணத்தாலும், இந்த விவாதம் பயன் உள்ளதாக அமையும் என்கிற நம்பிக்கையோடு இந்த விவாதத்தைத் தொடங்கி வைக்கிறேன். உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய கருத்துக்களையும், அறிவுரைகளையும் வழங்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

Dr. H. V. HANDE : The Hon. Mr. Deputy Speaker, Sir, at the very outset I have to congratulate the Electricity Board for smartly giving us this time a complete list of the grievances which we had placed before this House during our last discussion and also proper answers for those grievances and the questions we had raised.



1968 ஆகஸ்ட் 16] [Dr. H. V. Hande]

I would like to offer my views briefly on a few points which the Hon. Minister has touched. Our Electricity Board has a peculiar habit of not giving us an exact idea, clear picture of the amount of electricity which we ought to get for our installed capacity. That has not been given in these figures. We know from the figures furnished that the installed capacity is quite high, that we have nearly 1,000 MW of installed capacity and so on; but I have found in most of the places (in places wherein I had gone to have a discussion on the working of power houses) that where the installed capacity of a power house is 30 MW the actual output was only 14 MW or 16 MW so much so we find that the installed capacity is not fully exploited or to the extent possible. I know in some cases it is not possible to exploit the installed capacity fully because of the load required and other things. Whatever may be the technical reasons that may be advanced, we cannot appreciate the disparity between installed and working capacity. The disparity must be reduced.

With regard to the policy question of implementation of Hogenekal Project with co-operation of Mysore Government, I must say that Mysore Government does not bother much about Hogenekal Project for the simple reason that they have got the Sharavathy Project which they have not fully exploited. They have used the capacity of Sharavathy Project only to the tune of 30 to 40 per cent. If we are to base our conclusions in the hope of getting extra power from Hogenekal Project, if we are thinking of the possibility of coming into agreement with Mysore regarding this, I think we are completely on the wrong track. It will never be possible because they do not bother about it. They have the Sharavathy Project, a mighty project, which they have not exploited fully. Therefore it is the duty of Madras Government to take proper steps in consultation with the Central Water and Power Commission instead of knocking at the doors of Mysore Government. Let us know what exactly the Central Water and Power Commission has to say on this project. Our needs are greater than Mysore because we have no rivers to be exploited and we have exploited every drop of water falling from our hills. We should press our case for Hogenekal Project with the Central Water and Power Commission.

I now come to Neyveli. Are we taking enough power from Neyveli? It is said that the Neyveli Corporation is losing and that is their problem. But we have to see, as Neyveli is situated in our State, whether Neyveli power is being exploited to the full. If its power is taken fully, the losses could be reduced. Let us remember that Neyveli is in the heart of Tamilnad and transmission losses will be less. The question now is whether Neyveli power is being exploited fully? The answer is ' No. ' We are not taking adequate power from Neyveli. Neyveli power is not fully exploited. It is a national loss, Neyveli may not be under our

control but under the control of the Centre. But that is a secondary matter. Let the Hon. the Minister for Electricity find out whether we have taken adequate power from Neyveli and let him find out ways and means of reducing its losses.

Next is the question of absence of power-cut since the last two years. The Hon. Minister was happy that there had been no power-cuts. What are the reasons for absence of power-cut ? If we examine figures with regard to consumption of power, we find that consumption of power has not increased to the extent of availability of power. In other words there is something wrong with our industrial position or with industrial lay-out. Are all industries getting enough power they need? If there is power surplus, it cannot be gloated over. It is not a matter on which we can be very much happy. If our installed capacity is not exploited fully, if we are having surplus power, if some of our power-houses are working only to 50 per cent of installed capacity, if we have surplus power, it means our industries have not made enough progress. If the required power had been developed equal to our installed capacity and if our industries had used the power fully, there could have been more absorption of employment potential in the industries. Let us presume that enough power is being taken by industries and there is even then surplus. Are we giving the extra power to the agriculturist? There also I find we have a long way to go. No doubt when considered to neighbouring States, we are going at a rapid rate in the matter of power development. We are marching forward than our neighbouring States. But we want an efficient man to be more efficient. We must do something better for the agriculturists. I can cite so many cases in which power connection had not been given to pumpsets, several months after payment of the required advance. Of course the usual answer given by officers is that if specific instances were brought to their notice, they would be looked into. I have tried that also and I have found that nothing had been done by officers in several cases. The usual cry in the villages and that is a laughing matter in the villages, is that there are corrupt officers and something would be done only on their getting some extra remuneration. I hope the Hon. Minister will find out a solution to this. I know several instances in which connections for pumpsets have not been given even though the agriculturists have paid the deposits six months earlier. There has been no speedy disposal.

In the Annual Financial Statement for 1967–68 placed on the table of the House last year it was said under the heading " Sholayar Plant I—(d) Power Station ". " The power station building has been completed and erection of turbines and generators is in progress. The two units of 35 M.W. capacity each are expected to be commissioned in August 1967. In the Annual Financial Statement for 1968–69, it is said under the same heading " The erection of turbines and generators is in progress. The two





units of 35 M.W. capacity each are expected to be commissioned in 1968–69 ". I can read about a similar position in respect of another power station also. There has been a delay of one year between the statement given last year and the statement given this year. I do not know on what basis they calculate. I want the Hon. Minister to examine why there has been this inordinate delay of one year.

The main problem is the immediate reduction in the inordinate delay between the giving of electric connection and the installation of pumpsets. Why there should be delay in giving power connection after the installation of the pumpset and the payment of the amount is a matter which should be investigated. We should be convinced that this delay in power connection is a thing of the past.

The most important thing is with regard to labour. It is well known that 59,000 to 60,000 members are working in the Board. I am told that there is an association known as the Tamilnad Electricity Supervisors Sangam. They have submitted a memorandum to the Minister for Industries with regard to their grievences. It is a very important memorandum and I request the Hon. Minister to examine it properly. About 600 members holding the L.C.E. or L.E.E. diplomas thought that service in the Electricity Board was as dependable as service in the Public Works Department or any other department of the Government for which selection was made through the Madras Public Service Commission. Many of them have put in a service of more than six years and they are age-barred. Let us imagine what one's feeling will be if he is told that from tomorrow he will lose his job. I request the Hon. Minister to examine the position. They have given a memorandum and the Hon. Minister has promised to go into it. They have suggested a solution to the problem. The solution is that first of all they want to establish certain places for maintenance. There are certain maintenance points. Unless the dams are properly looked after, there is no possibility of seeing whether they are safe in a number of cases there may be cracks. As the medical adage goes, prevention is better than cure. We can employ these people as maintenance staff to see that they prevent the erosion of and damage to the dams. The Chief Engineer for Electricity has clearly stated and communicated to the Secretary of the Electricity Supervisors Sangam that this staff can be employed as maintenance staff. I want the Hon. Minister to consider the request of not only the supervisory staff but also the suggestion made by the ex-Chief Engineer. Their number will be about 500 or 550. They were regularly selected through the Madras Public Service Commission. Recruitment made by the Board must be given the same status as the recruitment made to the Highways Department or the Public Works Department. I worked out the amount of expenditure which the Board may have to incur, because I know we cannot ask for retention and at the same time shout that the Board is incurring loss. We can

point out that the Board is incurring loss for different reasons. Time and again we have been saying that the poles required by the department should be manufactured by the department itself. The crux of the matter is that substandard poles are manufacturred by the contractors. I may be excused for saying this plainly. I do not know for what reasons the substandard quality of the poles is condoned. What extra reasons are there for condoning it is a matter on which I, the Hon. Minister for Industries and the House will have to guess. Some extra reasons must be there. Each pole costs 85 to 90 rupees. The peculiarity of it is that substandard poles are manufactured. For manufacturing them, the supervisors give them materials, facilities, building, etc. Instead of that, these engineers who know the work can very well manufacture the poles. These engineers will be manufacturing and supplying poles at Rs. 75 each. The total expenditure on poles is Rs. 175 lakhs. With a 10 per cent reduction in cost, there will be saving of Rs. 17.5 lakhs. The amount that will be spent on the staff will be Rs. 10 lakhs. We will also be infusing a sense of confidence in the 55,000 odd employees. This is a point which I want the Hon. Minister to examine.

There is the Madras State Electricity Board Engineers Association. The Engineers have got a number of problems. They have talked about the bonus. The bonus issue was thrashed out in the previous budget meeting. We recommended that Justice Srinivasan's bonus recommendation should be given effect to. The point that they want to stress is this. The Madras State Electricity Board's expenditure on Engineers is approximately Rs. 87 lakhs. The percentage of expenditure on the Engineers compared with the total money spent is 1.73 only. In the Maharashtra the amount spent on Engineers is 2.84 per cent of the total expenditure and in the Andhra Pradesh it is 4.13 per cent. In spite of their grievances, they are not agitating. Just because they are not agitating, we should not be without looking into their grievances.

In the Ennore Thermal Scheme we have got several categories of workers, work-charged, temporary, etc. Workers employed as casual labourers are in great distress for the simple reason that they do not know when they will lose their job. It is pathetic to see that the shadow of loss of job hovers around them. Most of them have become experienced and they can be elevated to the work-charged rank. I request the Minister to recruit them to the work-charged establishment and relieve their distress instead of taking in people from the temporary staff. This will give a lot of incentive and also confidence that the training that they have had will be useful to them in their work as work-charged establishment.

So, whenever persons are taken to the work-charged establishment, these casual workers should be taken as far as possible unless a very highly specialised work requires skilled workers who may not be more than one per cent of the total workers. If these



casual workers are taken and absorbed there, we can avoid a lot of irritation among them. At the same time, the workers under the work-charged establishment can be made permanent. We want all of them to be happy. This sort of incentive for the workers from the bottommost level to the topmost level will not only increase their efficiency to turn out better quality of work but also give satisfaction to them. There are a number of grievances which the casual workers have represented to the Chairman of the Madras State Electricity Board and I am quite sure the Hon. Minister for Electricity will properly look into them. After all, these grievances are small grievances which would not involve much financial commitment or loss but they would give psychological satisfaction to the poor people. I request the Hon. Minister to consider their demands sympathetically.

Once again I request the Hon. Minister to see that agricultural pumpsets are given electric connections immediately because that is a great source of irritation to the people and if there is no delay in giving connection, it would also prevent corruption. Every year we put questions on that matter but still the connection are not given quickly even though we have got surplus electricity. I request the Hon. Minister to find out what exactly is the reason for it. With these words, I wind up my speech.

* திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களைச் சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

(திரு. வி. எஸ். கோவிந்தராசன் தலைமை.)

மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே அளித்திருக்கிற அறிக்கையைப் பார்க்குங்கால் ஐந்து முக்கிய மான காரணங்களுக்காக இந்த அரசை நாம் பாராட்டித் தீர வேண்டியவர்களாக இருக்கிறோம். முதற் காரணம், கடந்த இரண்டாண்டுகளாகத்தான் வெட்டு என்பது இல்லாமல் மின்சாரம் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு எல்லாம் கோடைக் காலங்களில் தொழிலகங்களில் வெட்டு ஏற்பட்டு, குத்தும் வெட்டும் நடந்து கொண்டிருந்த நிலைமை மாறி புதிய கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான் வெட்டு இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்காக இந்த அரசை பாராட்டித் தீரவேண்டும்.

இரண்டாவது காரணம், மின்சார வாரியம் கடந்த ஆண்டு களில் தாம் வாங்கியுள்ள கடனுக்குரிய முழு வட்டியைக் கூடத் தர முடியாத நிலைமையில் இருந்தது. இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும்போது இந்த ஆண்டு செலுத்த வேண்டிய வட்டித் தொகையான ரூ. 10:41 கோடி முழுவதை

யும் செலுத்தியது மட்டுமின்றி பழைய வட்டிப் பாக்கித் தொகையில் ஒரு பகுதியையும் செலுத்தியுள்ளது என்பதைப் பார்க்கிறபோது பூரிப்பு அடைகிறோம்.

மூன்றாவது காரணம் வாரியத்திற்கும், வாரியத்தில் பணி ஆற்றுகிற எல்லாத் தரப்பு தொழிலாளர்களுக்கு மிடையே நல்ல உறவு முறையை ஏற்படுத்தி, நடைமுறை விதிகளை எளிதாக்கி, அதன் காரணமாக, சிக்கன, சீரிய நிர்வாகத்தை ஏற்படுத்தப் பாடுபட்டிருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

நான்காவது முக்கிய காரணம் ஏறத்தாழ 33 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுப்பது என்கிற திட்ட இலக்கை வைத்துக் கொண்டு உள்ள நிலையில் 51 ஆயிரத்திற்கும் அதிகமாக இவ்வாண்டு பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது வரலாற்றில் இல்லாத மிகப் பெரிய சாதனையாக அமைந்திருக்கிறது.

ஐந்தாவதாக மிக முக்கியமாகப் பாராட்ட வேண்டிய விஷயம் —மைசூர் மாநிலத்தில் இருந்து நாம் வாங்கிக் கொண்டிருக்கிற மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு விலை முன்பு 9 காசாக இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் அந்த அரசாங்கத்துடன் நடத்திய பேச்சு வார்த்தைகளில் வெற்றி பெற்று—இப்போது யூனிட் ஒன்று 4.66 காசாக விலையை நிர்ணயித்துக் கொள்ள ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளதாகும். நாம் ஏறத்தாழ 30 கோடி யூனிட் வாங்குகிறோம். இந்த ஒப்பந்தத்தின் மூலம் நமது வாரியம் கணிசமான அளவு லாபம் பெறுகிறது என்று இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆக இத்தகைய காரணங்களினால் தமிழ்நாடு மின்சார வாரியம் பேரொளியுடன் புகழொளியுடன் விளங்குகிறது.

பொதுவாக மின்சார வாரியம் உற்பத்தித் துறையில் அதிக கவனம் செலுத்துவதாக நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். புனல் மின்சாரத் துறையில் நமக்குள்ள இயற்கைச் சாதனங்களை வேண்டிய அளவு பயன்படுத்திவிட்டோம். இனி அனல் மின்சார உற்பத்தித் துறையில்தான் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். புனல் மின்சார திட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் ஐந்தாறு திட்டங்களுக்கு நாம் சிபார்சு செய்து, அது மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாகவும், அவற்றுக்கு உரிய ஒப்புதல் வழங்கப்படவில்லை என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அதுவும் வருமானால் போதிய அளவு மின்சார உற்பத்தியைப் பெருக்க அது ஒரு வழியாக அமையும். அனல் மின்சாரத்தைப் பொறுத்தவரையில் மாநில அரசின் உதவியோடு நமது வாரியம் எண்ணூரில் எடுத்துக் கொள்கிற நடவடிக்கையைக் கண்டு நாம் பூரிப்பு அடைபவர்களாக இருக்கிறோம். அதே நேரத்தில் சென்னை நகருக்கு அருகாமையிலேயேயுள்ள கல்பாக்கத்தில் வேலை அவ்வளவு தீவிரமாக நடைபெறுவதாகத்





தெரியவில்லை. மத்திய அரசின் உதவியுடன் இது நிறுவப்படுவதால் சரியான வகையில் செயல்படவில்லை. இதுவும் நல்லமுறையில் செயல்படத் தக்க கவனம் எடுத்துக் கொண்டாக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஏனென்றால் பக்கத்தில் உள்ள மாநிலங்களில் இருந்தே அதிக அளவுக்கு நாம் மின்சாரம் வாங்கிக் கொண்டிருக்க முடியாது. நாளுக்கு நாள் நம்முடைய தேவைகளும் பெருகிக் கொண்டு வருகிற காரணத்தினால் கல்பாக்கம் மின்சாரத் திட்டத்தையும் வெகு விரைவில் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்பதை நான் இந்த இடத்தில் அழுத்தந் திருத்தமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்னொன்றையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். போன ஆண்டு இதே மாமன்றத்தில் பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவற்றுக்குரிய விடைகள் இங்கே எழுத்து மூலமாகத் தரப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்களுடைய கருத்துக்களுக்குச் சமாதானம் சொல்கிற வழக்கமான முறையில் அமையாமல்—அவற்றின் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால் அதற்கான காரணம், அல்லது இருக்கக்கூடிய மாற்றுத் திட்டம் இவற்றைக் கொடுத்திருப்பது பூரிப்பையும், மகிழ்ச்சியையும் அளிப்பதாக அமைந்திருக்கிறது. பொதுவாக இன்னொன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். பம்பு செட்டுகளுக்கு இன்னும் கொஞ்சம் தாராளமான முறையில் கனெக்ஷன் கொடுக்கப்பட வேண்டும் என்பதாக திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாக நாம் வைத்துக் கொண்டிருக்கிற இலக்கைக் காட்டிலும் இப்போது அதிகமான பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிற நேரத்தில்—நம்முடைய மின்சார திட்டத்தில் கனடா நாடும், மற்ற வெளிநாடுகளும் எடுத்துக் கொள்கிற அக்கறைகூட மத்திய அரசு எடுத்துக்கொள்வதில்லை என்பதை உணரவேண்டியிருக்கிறது. நாம் வேளாண்மைத் துறையில் பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுக்க 5 கோடி கேட்டிருக்கிறோம். அதையாவது கொடுத்தால் வேளாண்மைத் துறையை விருத்தி செய்ய முடியும் என்று அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். அதையும் இந்த மாமன்றத்தில் நானும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். அந்தப் பணம் வழங்கப்பட்டால் ஏராளமான பம்புசெட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுத்து வேளாண்மைத் துறையை விருத்தி செய்ய முடியும். இயற்கைத் தாய் பூமிக்கு அடியில் வைத்திருக்கிற தண்ணீரை மேலே கொண்டுவந்து பயிர்களுக்குப் பாய்ச்சி வேளாண்மையை அதிகப்படுத்த முடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் இங்கே நான் குறிப்பிட விரும்புவது எல்லாம் பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்த வரையிலும் அதிகமான அளவு மின்சாரம் வழங்கப்பட வேண்டும். தெருவிளக்குகள் போடுவதற்கும், ஊருக்கு எல்லாம் ஒளியூட்டு

வதற்கும் மின்சாரம் வழங்கப்பட வேண்டும். இத் துறையில் அதிகமான கவனம் செலுத்தப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். போன ஆண்டுகூட இதே அவையில் கம்பங்கள் இருக்கின்றன, பல்புகள் இருக்கின்றன, ஆனால் விளக்குகள் எரியவில்லை என்று சொன்னோம். இதுபற்றியும் தீவிர கவனம் செலுத்தப்பட்டிருப்பது பாராட்டுவதற்குரியதாகும். நாங்களும் எங்கள் தொகுதியில் பார்க்கிறோம். விளக்குகள் எரியவில்லை என்ற குறைபாடு களையப்பட்டிருப்பதற்கு மின்சார வாரிய அதிகாரிகளுக்குப் பாராட்டுதல் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சூழ்நிலை நல்லமுறையில் கவனிக்கப்பட்டு வர வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமன்றி சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் யோசனைகளையெடுத்துச் சொல்வதற்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் வாய்ப்பு இருக்கிறது. அந்தக் கூட்டங்களுக்கு மின்சார வாரிய—மேற்பார்வைப் பொறியாளரும், வாரிய அதிகாரிகளும் கலந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். அவர்கள் வந்து கலந்துகொள்வதோடு—உறுப்பினர்கள் சொல்கிற யோசனைகளைக் குறிப்பெடுத்து அவற்றின் மீது எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து எழுத்து மூலமாகவே அடுத்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கொடுக்க வேண்டும் என்று உருப்படியான ஆலோசனையைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்லாமல் இங்கே வழங்கப்பட்டிருக்கின்ற அறிக்கையைப் பார்க்கின்றபொழுது ஏறத்தாழ எத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. கும்மிடிப்பூண்டி தொகுதியைப் பொறுத்தவரையில் சராசரியாக எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. சில இடங்களில் மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்று போன ஆண்டே நான் குறிப்பிட்டிருக்கிறேன், இந்த ஆண்டு ஓரளவுக்கு முன்னேறியிருக்கிறது என்றாலும் இன்னும் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன். மின்சாரம் வழங்கும்பொழுது, ரெம்யூனரேடிவ் அன்-ரெம்யூனரேடிவ் என்று பார்க்காமல், அது பலன் தருகிறதா என்று பார்க்காமல் தாராள சிந்தையோடும் தாராளமான உள்ளத்தோடும் பிற்பட்ட பகுதிகளைப் பொறுத்தவரையில் நடந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மின்சார வாரியத்தின் அறிக்கையை முழுமையாகப் பார்த்தால் மிகவும் ஒளியோடு மின்சார வாரியம் செயல்படுகிறது என்பது மட்டுமல்ல, தமிழ் நாட்டின் எல்லையைத் தாண்டிப் பார்த்தால் அங்கேயுள்ள மக்கள் எல்லாம் தமிழ் நாட்டின் மின்சார வாரியம் அழகாகச் செயல்படுகிறது, எங்களுடைய மாநிலத்தில் அப்படி இல்லையே என்று பேசிக் கொள்கிறார்கள், பக்கத்து மாநிலங்களிலே உள்ளவர்கள் பாராட்டுகிறார்கள். அந்தப் பாராட்டை நினைவு கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.





**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவரவர்களே தமிழ்நாட்டு மின்சார வாரியத்தின் 1968-69-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாகவும், சிறப்பாகவும் நம்முடைய தமிழ்நாட்டு மின்சார வாரியம் தமிழ்நாட்டில் செய்திருக்கின்ற பணிகள் நிச்சயமாகப் பாராட்ட வேண்டிய பணிகள் ஆகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற அறிக்கையைப் பார்த்தால் கடந்த ஆண்டு மின்சாரத்திலே இருக்கிற வேகம் இந்த ஆண்டு அதிகமாகியிருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். 1967-68-ஆம் ஆண்டில் ஏறக்குறைய 3,210 கிராமங்களில் மின்சாரம் அதிகரிக்கப்பட்டு மொத்தமாக 9,354 கிராமங்களுக்கு இன்றைய தினம் மின்சார வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. 18,877 சிற்றூர்களும் மின்சாரம் பெற்று இருக்கின்றன. இதிலே மிகச் சிறப்பானது இந்த ஆண்டு விவசாயிகளுக்கு 51,746 புதிய இணைப்புக்கள் வழங்கப்பட்டு அது மொத்தம் 3.42 லட்சம் இணைப்புக்களாக அதிகரித்து இருப்பதைப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே நாம் எல்லாம் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோல் தாழ்த்தப்பட்ட பகுதிகளுக்கும், அரிசன பகுதிகளுக்கும் 443 இடங்களில் மின்சார இணைப்பு கொடுத்திருப்பதைப் பார்க்கும்பொழுது இந்த வாரியத்தினர் பாராட்டுதலுக்கு உரியவர்களாக இருக்கிறார்கள். ஊராட்சி மன்றங்களுக்கு பல்புகள் வழங்கும்பொழுது ஸ்க்ரு பல்புகளாக வழங்க வேண்டும் என்றும் அந்த ஸ்க்ரு பல்புகள் கிடைப்பதில் சங்கடங்கள் இருக்கின்றன என்றும் கூறப்பட்டதால் இப்பொழுது சொருகு பல்புகள் வேண்டுமென்று கேட்கப்பட்டு அந்த அடிப்படையில் அவர்கள் மாற்றித் தந்திருக்கிறார்கள். 1968-69-ஆம் ஆண்டு 396.6 கோடி யூனிட்டுகள் விற்கப்பட்டு அதன் மூலம் 44 கோடியே 36 லட்சம் ரூபாய் வருமானம் பெற்றிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் சொல்லுகின்றபொழுது நாங்கள் எங்களுடைய தொகுதிகளிலுள்ள குறைகளையும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறோம். கடந்த ஆண்டே நான் சொன்னேன். நான் இருக்கின்ற கிராமம், அதனைச் சுற்றியுள்ள 10, 15 கிராமங்களிலுள்ள விவசாயிகள் தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நானும் அதற்காக ஆறு ஆண்டுக் காலம் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். இனி மேலாவது கிடைக்குமா என்ற ஐயப்பாடு கிளப்பப்பட்டுக் கொண்டே வந்து இப்பொழுது இன்னும் ஐயப்பாடாகவே இருக்கிறது.

விவசாயிகளுக்குப் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகக் கடன் கொடுக்கிறார்கள். மின்சார இலாகாவிலிருந்து சான்றிதழ்கள் பெற்றுக் கொடுத்து விட்டால் கடன் கிடைத்துவிடும். ஆனால் சான்றிதழ்கள் வாங்கிக் கொடுத்த பிறகும், வாங்கிக் கொடுத்து 1 ஆண்டு 2 ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் மோட்டார்கள் பொருத்தப்படவில்லை. ஆனால் கடன் வழங்கியதற்கு வட்டி கொடுக்க வேண்டுமென்று பஞ்சாயத்து யூனியன் வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே ஏறக்குறைய

[திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்] [1968 ஆகஸ்ட் 16

வேண்டுகோளையும், பெறவேண்டிய வசதிகளையும் பற்றி மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டும், கேட்டுக் கொண்டுந்தான் இருக்க வேண்டி வருகிறது.

புனல் மின்சார நிலையங்களைப் பொறுத்தவரை ஏறக்குறைய நம் நாட்டிலுள்ள அத்தனை ஆறுகளும் பயன்படுத்தப்பட்டு விட்டன என்று சொல்லலாம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, பாண்டியாறு-புன்னப்புழா புனல் மின்சாரத் திட்டத்தை முதலாவதாகக் கொண்டு நடுவட்டம் புனல் மின்சாரத் திட்டம் வரையிலும் ஆக ஐந்து திட்டங்களை எடுத்துக் கொள்வதிலே, எண்ணூர் அனல் மின் திட்டத்தை விரிவுபடுத்துவதும் ஒன்று. அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரை பெரிய அளவிலே, பெருஞ் செலவு செய்து கல்பாக்கம் போன்ற இடத்திலே மத்திய அரசாலோ அல்லது அதைச் சார்ந்த குழுவினாலோ செய்வதாக இருந்தாலும்கூட, இந்த மாநில அரசும் அனல் மின்சாரத் திட்டங்களை ஓரளவு எடுத்து நடத்துவதற்கு முன்வர வேண்டும். புனல் மின்சாரத் திட்டங்களைப் பொறுத்தவரை ஆற்றிலே தண்ணீர் இல்லையென்றால் அந்த அளவுக்கு மின்சார வெட்டு வந்து விடுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக மின்சார வெட்டு இல்லாமல் மைசூரிலிருந்தும், கேரளாவில் இருந்தும் மின்சாரத்தைக் கடனாகப் பெற்று சமாளிக்க முடிந்தது. என்றாலும் இந்த நிலைமை எப்போதும் இருந்து கொண்டிருக்கக் கூடாது. கூடுமான வரையில் நம்முடைய சுயதேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் புனல் மின்சாரத் திட்டத்தின் மூலமாகவோ, அனல் மின்சாரத் திட்டத்தின் மூலமாகவோ அதிகரிக்க வேண்டியது மிக முக்கியம். அந்த வகையிலே நாம் எந்த அளவுக்கு முயற்சி செய்தாலும் அது வீண் போகப் போவதில்லை. ஆகவே, இதனை மனத்திலே கொண்டு நம்முடைய மாநில அரசு மின்சார உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். அதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார விஸ்தரிப்பு இவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்திருந்தாலும்கூட, கிராமங்களில் கிணறுகளுக்கு வேண்டிய மின்சார பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் முழு அளவு கிடைப்பதில்லை. பத்து பேர் மின்சார இணைப்பு வேண்டுமென்று கேட்டால் இரண்டு மூன்று பேருக்குக் கூடக் கிடைப்பதில்லை. நூற்றுக்குப் பத்து பேர் அல்லது இருபது பேர்தான் மின்சார இணைப்பைப் பெறுகிறார்களே தவிர, பெரும்பகுதியினர் மின்சார இணைப்புப் பெமுடியாமல் அவதிப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் கூறியது மாதிரி 'டிரான்ஸ்பார்மர் லோடு இல்லை, கம்பங்கள் இல்லை, உபகரணங்கள் இல்லை' என்ற ஏதோ ஒரு காரணத்தால் உடனடியாக இணைப்புக் கொடுக்காது இருக்கிறார்கள். மின்சார வாரியத்திலே வேலை பார்க்கின்ற ஊழியர்கள் நீண்ட நாட்களாக இருந்து வரக்கூடிய காரணத்தால் சில ஊழல்கள் ஏற்பட்டு விண்ணப்பம் செய்து



1968 ஆகஸ்ட் 16] [திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்]

நீண்ட நாட்கள் ஆனவர்களுக்கு இணைப்புக் கிடைக்காமல், பின்னால் விண்ணப்பம் செய்கிறவர்களுக்கு உடனடியாகக் கிடைக்கக்கூடிய நிலையும் இருக்கிறது. விண்ணப்பம் செய்த தேதி, அது பரிசீலிக்கப்பட்டு அதன்மீது இன்ன முடிவு என்று எடுத்துக் கொள்ளக்கூடிய நிலை இல்லாத காரணத்தால் பின்னால் விண்ணப்பம் செய்து கொண்டவர்கள் முன்னால் இணைப்புப் பெறும் நிலை இருக்கிறது. மின்சார வாரிய ஊழியர்களுக்குச் சலுகைகள் கொடுத்தோ, வேறு வகையிலே திருப்தி செய்வதாலோ, அப்படிப்பட்டவர்களுக்கு முன்னால் இணைப்புக் கொடுத்துவிடுகிறார்கள். இந்த நிலையில் விண்ணப்பித்து நீண்ட காலமாகியும், ஒரு ஆண்டுக்கு மேலாகியும் இணைப்பு கிடைக்காமல் காத்துக்கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதிலே வழிமுறைகளைக் கண்டு, வரிசைப்படுத்தி, 'பிரையாரிடி' என்ற முறையில் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்வது மிக முக்கியம்.

தெரு விளக்குகளைப் பொறுத்தவரை இப்போது நிறைய விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொன்னால், 'எக்ஸாக்ட் ஃபிகர்' என்ற முறையில் சொன்னால் கிராமங்களில் தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு என்ற முறையில் 9,354 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் அநேக தெருவிளக்குகள் பிரகாசம் இன்றியோ, சரிவர எரியாமலோ இருந்து கொண்டிருக்கின்றன என்பது அனைவருக்கும் தெரியும். சென்னை மாநகராட்சி போன்ற இடங்கள் தவிர மற்ற இடங்களில், நகரப் பஞ்சாயத்துக்கள், கிராமப் பஞ்சாயத்துக்கள், முனிசிபாலிடிகளில்கூட. மின்சார வாரியமே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே சாதாரணமாக போடப்படுகின்ற பல்புகள் எரியாமல் இருப்பது அல்லது பல்புகள் இல்லாமல் இருப்பது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. தெரு விளக்குகளுக்காக திருகு பல்புகள் கிடைக்காத நிலைமையில், அதற்கு வேண்டிய சாமான்களை வெளிநாட்டிலிருந்து பெற முடியாத நிலையில், தற்போது சொருகு பல்புகளையே போடுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். வெளிநாட்டுச் சாமானை வாங்கியோ அல்லது உள்நாட்டில் கிடைக்கக்கூடிய சாமான்களைக் கொண்டோ தேவையான பல்புகளைப் பெற்று தெரு விளக்குகள் நன்றாக எரிவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத் துறையிலே உள்ள திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடிந்துவிட்டபடியால், அதிலிருந்த ஊழியர்கள் எல்லாம், சூப்பர்வைசர் போன்றவர்கள் எல்லாம் வெளியே அனுப்பப்படக்கூடிய நிலை இருக்கிறது. தமிழ்நாட்டில் சூப்பர்வைசர்கள் சங்கம் என்று அவர்கள் சேர்ந்து மனுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிலே 100 பேருக்கு மேல் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். வருகிற செப்டம்பர் மாதத்திலே மேலும் 100 பேர் வேலை வாய்ப்பை

20 பம்புசெட்டுகள் இதேமாதிரி 1½ ஆண்டுக் காலத்திற்கு முன்பே வழங்கப்பட்டும் கூட இன்னும் கனெக்ஷன் கொடுக்கப்படாத நிலைமை இருக்கிறது. விவசாயிகள் நிறைந்திருக்கிற பகுதிகளிலே கிணறுகள் எடுத்தால் மின்சாரம் கிடைப்பதில்லை. காரணம் கம்பங்கள் கிடைக்கவில்லை, மற்றப் பொருள்கள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். சில இடங்களில் மின்சாரம் இருக்கிறது என்றாலும் டிரான்ஸ்பார்மரில் லோடு இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். லோடை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு கிராமத்திலே பத்து இடங்களிலே மின்சாரம் கொடுக்கப்பட்டு, டிரான்ஸ்பார்மரில் லோடு இல்லையென்ற காரணத்தால் அங்கேயுள்ள விவசாயிகள்-மின்சாரம் பயன்படுத்த மறுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் இதுபோன்ற கவலைகளை வைத்துக் கொண்டு விவசாயம் செய்தால் போதுமான கட்டுபடி இருக்காது. செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர், மதுராந்தகம் போன்ற இடங்களில் லோடு இல்லை என்ற காரணத்திற்காக மின் இணைப்பு இல்லை என்று மறுக்கப்படுகிறது. அப்படிச் செய்யாமல் உடனடியாக மின் இணைப்புக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இருக்கின்ற முன்னேற்றங்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம், இருந்தாலும் தேவைகள் அதிகரிக்கும்பொழுது அந்தத் தேவைகளைச் சொல்லித் தீர வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இன்னும் மின்சாரம் பல கிராமங்களுக்கு வழங்கப்பட்டால்தான் விவசாய உற்பத்தி அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலதிபர்களுக்கு இருக்கிற சலுகை விவசாயிகளுக்கு இல்லை. தொழிலதிபர்களுக்கு இருக்கிற சலுகையை விவசாயிகளுக்கும் தர வேண்டும். அவர்களைவிட மோசமான நிலையில் இருப்பவர்கள் விவசாயிகள். விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைத்துத்தான் தீரவேண்டும். அதற்குத் தகுந்த முறையில் மின்சார வாரியத்தினர் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமப்புற மின் இணைப்புக்காக ரூ. 5 கோடி கூடுதலாக ஒதுக்குமாறு மத்திய அரசை வற்புறுத்தியிருப்பதாக இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த 5 கோடியைப் பெறுகின்ற அளவுக்கு சர்க்கார் தீவிர கவனம் செலுத்தவேண்டும். எதிர்வரிசையிலே உள்ளவர்கள் அதற்கு துணை நிற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலை செய்கிறவர்களை எடுத்துக் கொண்டால், டெய்லி லேபர் அதாவது கேஷுவல் லேபர்களாக இருந்தாலும் சரி, அல்லது பொறியாளர்களாக இருந்தாலும் சரி, அவர்களிடத்திலே ஒரு ஐயம், அச்சம் பயங்கரமாக இருந்து கொண்டிருக்கிறது. சிவில் சூபர்வைசர்களாக இருக்கிறவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்களோ என்ற ஐயம் அவர்களுக்கு இருக்கிறது. ஐந்தாண்டுக் காலம், எட்டாண்டுக் காலம் பணியாற்றிவிட்டு வேலையிழந்து விட்டால் அவர்கள் இப்பொழுது வேறு எந்த நிறுவனத்திற்கும்





சென்று வேலையில் சேருவதற்கு வழியில்லை. அதற்கு நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். மெயின்டனன்ஸ் டிவிஷன் என்று ஏற்படுத்தி, அதன் மூலம் கம்பங்கள் செய்வது, இன்னும் மற்ற மற்ற சாமான்கள் செய்வது, இவற்றிற்காக சிவில் எஞ்ஜினியர்களை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். அவை செய்வதற்காக கான்ட்ராக்டரிடத்திலே கொடுத்து அதிகப் பணத்தைச் செலவழிக்காமல், நாமே இப்படியொன்று ஏற்படுத்தி செய்துகொள்ளலாம். வேலையில்லாமல் வெளியேற்றப்படாமல் இருக்க நம்முடைய ஸ்தாபனத்திலே அவர்களுக்கு வேலை கொடுக்கச் செய்யலாம்.

புறம்போக்கு நிலங்கள் ஜாரி செய்யப்பட்டு அவற்றில் கிணறுகள் எடுத்திருக்கிறார்கள். புறம்போக்கு நிலங்கள் ஏழைகளுக்குத்தான் ஜாரி செய்யப்படும். அவர்கள் பணம் செலவு செய்துவிட்ட பிறகுகூட அவர்களுக்கு எல்லாம் மின்சார இணைப்புக் கிடைப்பதில் சிக்கல்கள் இருக்கின்றன. அதை உடனடியாகத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடன் வழங்குவதற்கு முன்னால் மனுப்போட்டால், சான்றிதழ்கள் கொடுக்கும்பொழுதே, மின்சாரம் கொடுக்க முடியுமானால், சான்றிதழ்கள் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும். ஏற்கனவே பொருத்தப்பட்டுவிட்ட மின்சார பம்பு செட்டுகளுக்கு உடனடியாகக் கனெக்ஷன் கொடுக்க வேண்டும். டிரான்ஸ்பார்மரில் லோடு அதிகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். நான் இருக்கின்ற பகுதி தாழ்த்தப்பட்ட பகுதி, புயலால் பாதிக்கப்பட்ட பகுதி. அங்கே மின்சாரம் வருமா, வாராதா என்ற அச்சம் இருக்கிறது. அவர்களுக்கும் மின்சாரம் விரைவில் கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்புத் தந்தமைக்காக நான் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்:** தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையையும் சென்ற ஆண்டு துணை அறிக்கையையும் சமர்ப்பித்து நமது கல்வி தொழில் அமைச்சர் அவர்கள் தொடக்க உரை ஆற்றி, நமக்கு விளக்கம் தந்ததற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, மின்சார வாரியம் இதுவரை செய்துள்ள சாதனைகளுக்காகப் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அளவுக்குச் சாதனைகளைச் செய்திருந்தாலும் கூட, வளருகின்ற ஒரு துறையிலே நிறையத் தேவைகள் இருந்து கொண்டேதான் இருக்கும். இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பது போல் 50,000 பம்ப் செட்டுகளுக்கு மின்சார இணைப்பும், பத்தாயிரம் கிராமங்களுக்கு வெளிச்சமும் கொடுத்திருந்தாலும்கூட, நம்முடைய தேவை நாளுக்குநாள் மிக மிக அதிகமாகிக் கொண்டேதான் வந்து கொண்டிருக்கிறது. பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில், ஓயாத

[திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்] [1968 ஆகஸ்ட் 16

இழப்பார்கள் என்ற நிலை இருக்கிறது. நீண்ட அனுபவம் பெற்றவர்கள், அதிக நாட்களாக வேலையில் இருந்தவர்கள், குடும்பஸ்தர்கள் என்ற முறையிலே அவர்களை வேலையிலிருந்து நீக்காது, மெயின்டனன்ஸ் பிரிவு என்று ஏதாவது வைத்து அவர்களை வேலையிலே வைத்துக் கொள்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். அவர்களை மின்சார வாரியத்திலேயே வைத்துக் கொண்டாலும் சரி அல்லது பொதுப்பணித் துறை போன்ற மற்றத் துறைகளிலே வைத்துக் கொண்டாலும் சரி, அரசாங்க உத்தியோகஸ்தர்கள் என்ற முறையில் ஒருமுறை வேலை கிடைத்துவிட்டால் நிரந்தரமாக இருக்கக்கூடிய முறையில், அவர்கள் வேலையை இழக்கக்கூடாத நிலையை உருவாக்கும் வகையில் அவர்களை வேறு துறைகளுக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய நிலையை உருவாக்கவேண்டும். குறிப்பாக, ரூப்பர்வைசர்களை வேலையிலிருந்து நீக்கிவிடாது வேறு துறைகளிலே எடுத்துக் கொள்வதிலே நமது கல்வி-தொழில் அமைச்சர் அவர்களும், மாநில அமைச்சரவையும் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நமது மாநில மின்சார வாரியம் செய்த சிறந்த சாதனைகளுக்காக அவர்களைப் பாராட்டி, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

*** புலவர் பொ. பொன்னம்பலம்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களால் இங்குத் தரப்பட்டிருக்கும் மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டி என்னுடைய ஒரு சில கருத்துக்களை இந்த அவையில் வைப்பதற்கு விழைகிறேன். பொதுவாக இன்றைய நிலையில் எல்லா விளக்கும் விளக்கல்ல, மக்கட்கு மின்சார விளக்கே விளக்கு என்று கருதக்கூடிய அளவிற்கு மின்துறையின் பயனை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் காலம் இது. இந்தக் காலத்தில் நாமும் நம்முடைய தேவைகளை மின்துறையின் பயனால் நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய வாய்ப்பிருக்கிறது. நம் மாநில மின்சார வாரியம் நல்ல பணிகளைச் சுறுசுறுப்போடு ஆற்றிவருகிற தென்றாலும் இன்னும் அந்தப் பணிகளில் விரைவு தேவை என்று கருதக்கூடிய அளவிற்கு நம் தேவைகள் நிறைந்து வருகின்றன. வரம்பை மீறிய வட்டித் தொகையைச் செலுத்தியும்கூட இன்றைய தினம் மின்சார வாரியம் தக்க பணியை ஆற்றி வந்திருக்கிறது என்ற நிலையை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும். வருமுன்னர் காக்கும் வகையில் கூட்டு மின் உற்பத்தி நிலையினை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் கூட்டு மின் உற்பத்தித் திறனை நாம் உருவாக்கினால் நம் தேவைகளை நாம் நிறைவேற்றிக் கொள்ளலாம். வருமுன் காக்கும் முறையில் மின்சார வாரியத்தின் நிர்வாகம் எந்தளவில் செம்மையாகச் செயல்படுகிறது என்பதற்கு அது ஒரு சான்றாக அமைகிறது.

கிட்டத்தட்ட 9,000 கிராமங்களுக்கு மேல் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் 19,000 சிற்றூர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் இந்த அறிக்கையி



1968 ஆகஸ்ட் 16] [புலவர் பொ. பொன்னம்பலம்]

லிருந்து தெரிந்து கொள்கிறோம் என்றாலும் இன்னும் விரைவாகச் செயல்பட வேண்டிய சூழல் உருவாகி வருகிறது. ஒன்றை மட்டும் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக இன்றைக்கு இருக்கக்கூடிய சூழலில் பல்வேறு அமைப்புகள் இந்த மின்சார வாரியத் துறையில் அமைகின்றன. அந்தப் பல்வேறு அமைப்புகளை நாம் பார்க்கும்போது மாவட்டத்திற்குள் உள்ள சில அமைப்புகளாக இணைந்து அதற்கு மேல் கோட்ட அமைப்பு என்றிருக்கிறது. அதற்கு மேல் மாநில அமைப்பு என்ற வகையில் இந்த அமைப்புகள் விரிந்து வருகின்றன. மாவட்ட அளவிற்குள்ளே இருக்கக்கூடிய அமைப்பிற்குச் சென்ற பிறகு உரிய தாள் மேல் அலுவலகத்திற்குப் போகிறது. ஆகவே அங்குச் சென்று பார்க்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி நாம் பார்க்கிற நேரத்தில் சாதாரண நிலையிலுள்ள வேளாண்குடியினர் சென்று மாவட்ட அலுவலகங்களோடு தொடர்பு கொள்கிறார்கள். அதற்கு மேல் செல்லவேண்டுமென்றால் அவர்களுக்கு முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கு மேல் சென்று பார்ப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களை நாடுகிறார்கள் அவர்கள். அப்படிச் சட்டமன்ற உறுப்பினர் இரண்டொரு தடவைகள் சென்று சொல்லிவிட்டு வந்தாலும் அந்தத் தாள் வருவதற்குக் காலதாமத மாகும் சூழல் இருக்கிறது. ஆகவே மாவட்ட அமைப்பைச் சிறிது விரிவுபடுத்தி பின்னர் மாநில அமைப்பு என்று மட்டும் இருந்தால், மாவட்ட அமைப்பு மாநில அமைப்போடு தொடர்பு கொள்ளும் சூழல் இருந்தால் இன்னும் தீவிரமாக நாம் செயலாற்ற முடியும் என்று கூற விழைகிறேன்.

அடுத்து, திருகு மின்குமிழ்கள் கிடைக்காததால் சொருகு மின் குமிழ்கள் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பது பாராட்டத் தக்கது. அதுவும் விரைவாக செயல்படவேண்டும். என் தொகுதியை எடுத்துக் கொண்டால் ஆற்றுப் பகுதி அங்கில்லை. வறண்ட ஒருசில ஆறுகள்தாம் அங்கு ஓடுகின்றன என்பதால் அந்த ஆறுகளினால் எந்தப் பயனும் இல்லை. எனது திருமயம் தொகுதி வானத்து மழையை மட்டும்தான் நம்பிக் கொண்டிருக்கிறது, வயல்களில் இருக்கக்கூடிய கேணி ஊற்றுக் களைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறது. இதைப்பற்றி நான் முன்னாலேயே கூறியிருக்கிறேன். அந்த வகையில் என் தொகுதிக்கு மின் துறையினால் மிகுந்த பயன் தேவை. அங்கு வயல்களில் உள்ள கேணிகளுக்கு மின் இணைப்பு கொடுத்து அதனால் நிறைந்த விளைவை உருவாக்க வேண்டிய சூழல் இருக்கிறது. ஆகவே அதில் சிறிது விரைவு தேவை.

என் தொகுதியைப் பொறுத்தமட்டில், மின்சார வாரியம் மிகச் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டு வந்தாலும், இப்போதுள்ள அமைப்புகளினால் சிறிது தாமதம் ஏற்படுகிறது. தாள்கள் ஆங்காங்கு சென்று வரக் காலதாமதம் ஆவதால், அவர்களது முயற்சிகளில் தோல்வி காண்பது போன்ற ஒரு சூழல் ஏற்படுகிறது. ஆகவே என் தொகுதியைப் பொறுத்த

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1968 ஆகஸ்ட் 16

ஒரு சூழ்நிலை இருந்தால் அது குழப்பத்திலே கொண்டு போய் விட்டு, தொழிலாளர்கள் போராட்டத்திலே இறங்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திவிடும் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியே இதைச் சொல்கிறேன்.

அதே நேரத்தில் இன்று மின்சார உற்பத்தி அதிகப்படியாகப் பெருகவேண்டும். அதற்கான ஆக்கபூர்வமான காரியத்திலே மேலும் மேலும் நாம் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே யிருக்கும் நீர் வளங்கள் எங்கெல்லாம் இருக்கிறதோ அத்தனை யிடங்களிலும் எந்த அளவுக்கு மின்சார உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறதோ, அவ்வளவையும் நாம் கணக்கில் எடுக்க வேண்டும். அதைப்போல அனல் மின்சாரம் எங்கெல்லாம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் ஏற்படுத்த வேண்டும், அவற்றி லெல்லாம் கவனம் செலுத்தப்படவேண்டும். குறிப்பாக சேர்வ ராயன் மலையிலும், நாகப்பட்டினத்திலும் இன்னும் புதிய இடங்களிலும் உற்பத்தி செய்ய கவனம் செலுத்த வேண்டும். ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதை மிகவும் துரிதப்படுத்து வதிலேகூட நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அதே நேரத்தில், மேட்டூர் மின்சார உற்பத்தி இன்று இருக்கி றதே அதற்குக்கூட ஒருவேளை ஆபத்து வருமோ என்ற அளவுக்கு அஞ்ச வேண்டிய நிலைமை இருக்கிறது. இன்று மைசூரில் 16 கோடி ரூபாய் அளவில் ஹேமாவதி திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்னும் நேரத்தில் இவ்வாறு எண்ண வேண்டியிருக்கிறது. மின் சாரத்திற்கும் தண்ணீர் அதிகப்படி தேவை. தொழிற்சாலைகள் அதை நம்பி நடைபெற்று வருகின்றன. அந்தத் தொழிற்சாலைகள் பாதிக்கப்படக் கூடுமோ என்று அஞ்சக்கூடிய நிலை இருக்கிறது. மேலும் உணவு உற்பத்தி பாதிக்கக்கூடிய நிலையும் இருக்கிறது. எனவே, இதிலும் நாம் நல்ல முறையிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

இன்று மின்சார இலாக்காவிலே விவசாயத்திற்காக வேண்டி ஐம்பதாயிரம் பம்பு செட்டுகள் இணைப்பு கொடுத்தோம், இன்னும் லட்சம், இரண்டு லட்சம் கொடுத்தோம் என்று சொல்லலாம். இன்றுள்ள நிலையிலே உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்து உணவு உற்பத்தியிலே இருப்பது வட ஆர்க்காடு மாவட்டம் என்பார்கள். எதற்காக நான் சொல்லு கிறேன் என்று சொன்னால், தமிழகத்திலே கால் பாகம் கொடுத் திருக்கிறோம் என்று அமைச்சர் சுலபமாகச் சொல்லலாம். நான் சொல்லுகிறேன், அங்குள்ளவர்களின் திறமை, உழைப்பு இவை களுக்காகத்தான் கொடுத்தார்கள் என்று. அந்த அளவிற்கு உழைக்கும் நேரத்தில் இன்று ஆயிரக்கணக்கான பம்பு செட்டுகளை அவர்கள் வாங்கிவைத்துக்கொண்டு, இன்று இருநூறுக்கும் மேற் கொண்ட திட்டங்கள் வருஷக்கணக்கிலே தூங்கக்கூடிய நிலைமை யிருக்கிறது. காரணம் கேட்டால் டிரான்ஸ்ஃபார்மர்ஸ் மீட்டர்,



1968 ஆகஸ்ட் 16] [திரு. வி. கே. கோதண்டராமன்]

மீட்டர் பாக்ஸ் கிடையாது, பல்பு கிடையாது என்பதுதான். இவைகளுக்குப் பணத்திற்கு எங்கே போவது என்று கேட்கலாம். பணத்திற்கு என்ன வழி என்றால், இந்த ஆடிட் ரிப்போர்ட்டிலேயே அதில் வரக்கூடிய பணத்தை எந்தெந்த விதத்திலே ரிசர்வ் பண்டில் போடவேண்டும், எந்தெந்த விதத்திலே டெபாசிட் பண்ட் செய்ய வேண்டுமென்று எத்தனையோ தலைப்புக்கொடுத்து கன்னா பின்னாவென்று எழுதி வைத்திருக்கிறது. இதையெல்லாம் கண்டிப்பாக மாற்றித் திருத்தி ஏன் அமைக்கப்படவில்லை, ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்லியாக வேண்டும்.

உதாரணமாக, தேய்மான நிதி என்று ஒதுக்கப்படுகிறது. பைகாராவிற்கு 1928-ஆம் வருஷம் முதல் 40 வருஷ காலமாக தேய்மானத்திற்கு ஒதுக்கப்படுகிறது, இன்னுமா தேய்மானம்? அதேபோல உழைக்கக் கூடிய தொழிலாளி தேய்ந்து போகிறான் என்று சொல்லி சம்பள உயர்வு வேண்டுமென்று கேட்டால் 'வேஜ் போர்ட்' அமைக்கவிருக்கிறது, அது வரட்டும் என்று சொல்லப் படுகிறது. அது இத்தனை தினத்திற்குள் வரவேண்டும் என்றிருக்க வேண்டும். அந்த நிலை கிடையாது. அதேபோல் மின் வாரியத்தை ஏற்படுத்தக் கூடிய நேரத்தில், 1—7—1957-இலே சரியான முறையில் கணக்கிடாமல் அதிகப்படியாக மதிப்பீட்டைப்போட்டு, அதற் கான வட்டியையும் அதிகமாகப்போட்டு இன்றையத்தினம் தேய்மான நிதியையும் ஒதுக்கிக்கொண்டே போகக் கூடிய அளவுக்கு இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

'கோல்' கண்ட்ரோலின்பொழுது, அதாவது நிலக்கரி கண்ட் ரோலின் பொழுது, இரயிலில் கொண்டு வராமல், கப்பலில் கொண்டு வருவதால் ஏற்பட்ட நஷ்ட ஈட்டுப்பணம்கூட வேறு ஏதோ கணக்கில் போடப்பட்டிருக்கிறது. காரணம், வருமானம் அதிகம் என்றால் தொழிலாளர்களுக்கு போனஸ் அதிகமாகக் கொடுக்க வேண்டி நேரிடுமோ என்பதால்தான். இந்த ஆடிட் ரிப்போர்ட் டைப் பார்த்தாலே கோடிக்கணக்கான ரூபாய் இதிலே வருவாய் என்னும் பெயராலே இருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளும் அளவுக்குப் புரிந்துகொள்ள முடியும்.

அதேபோல் இன்று மின்சார வாரியத்திலே எடுத்துக்கொண் டால், தொழிலாளர்களைத் திடீர் திடீரென்று குறைப்பது என்பது மட்டும் அல்ல, வேலைப்பளுவையும் அதிகப்படுத்தும் சூழ்நிலை இருக் கிறது. அதன் காரணமாக இன்று வேலை செய்ய முடியாத அளவுக்குப் போய், லஞ்சமும் பெருகக்கூடிய அளவுக்கு நிலைமை பி.ப. 1-00
இருக்கிறது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இன்று ஒரு அதிகாரி, இதே போர்டிலே "பர்சனல் ஆபீசர் டு தி சீஃப் எஞ்சினியர்" என்பவர், எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர், அவருக்கு சம்பளம் 850 ரூபாய் பெர்சனல் அசிஸ்டெண்ட் (அட்மினிஸ்ட் ரேஷன்) என்ற அதிகாரிக்கு சம்பளம் ரூ. 375-20-475. இதே ஒரு அதிகாரிக்கு பி.டபிளியூ.டி.யில் வேலை பார்ப்பவருக்கு

[புலவர் பொ. பொன்னம்பலம்] [1968 ஆகஸ்ட் 16

மட்டில் விரைவில் மின் இணைப்பு கொடுத்து என் தொகுதியை வளப்படுத்த ஆவன செய்யவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வேளாண்துறைக்கு என்று 40 சத விகிதம் மின்சாரம் பயன்படும் நிலை இருக்கின்றது என்றாலும், அந்த 40 சத விகிதத்தில் 25 சத விகிதம்தான் பயன்படக்கூடிய நிலையில் அமைகிறது. அந்த 40 சத விகிதம் முழுவதும் வேளாண்துறைக்குப் பயன்படும் வகையில் வேளாண்மையை வளப்படுத்துவதற்கான இன்றியமையாமை நமக்கிருக்கிறது என்று எடுத்துச் சொல்வதோடு, அதற்கான முயற்சியை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த மின்சார வாரியத்திலுள்ள பணியாளர்களுக்கிடையில் இருந்த சிக்கல்களை மிக அழகாகத் தீர்த்து, அவர்களது குறைகளைப் போக்கி வேண்டிய நிறைகள் செய்யப்பட்டிருக்கிறது என்ற கருத்து இதில் கூறப்பட்டுள்ளது. பணியாளர்களுக்கு இடையேயுள்ள சிக்கல்களைத் தீர்த்து அவர்களது குறைகளைப் போக்கியிருக்கும் நிலையினைப் பார்க்கிறபோது தேனை எடுக்கச் சென்ற நிலையில் கையும் நோகாமல் அந்தத் தேன்கூடும் சிதையாமல் தேன் எடுப்பது போன்று அந்தச் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணினால், மின்சார வாரியமும், தொழில் அமைச்சகமும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அது அமைகிறது.

மின்சார வாரியம் சுறுசுறுப்பாகச் செயலாற்றினாலும் இன்னும் விரைவு தேவை. இப்போதுள்ள அமைப்பிலே ஒரு மாற்றம் தேவை. என் தொகுதியாகிய திருமயம் போன்ற தொகுதிகளுக்கு, ஆறுகள் ஓடாத பகுதிகளுக்கு, ஆறுகளைப் பயன்படுத்த முடியாத பகுதிகளுக்கு, பயன் அளிக்கக் கூடிய வகையில், மின்சாரத்தின் மூலம் நல்ல விளைவை உருவாக்கலாம் என்ற ஊக்கத்தையும், உணர்ச்சியையும் வேளாண்குடி மக்களின் உள்ளங்களில் ஏற்படுத்தும் வகையில் இப்போது பணியாற்றும் சுறுசுறுப்போடு இன்னும் சுறுசுறுப்பாக மின்சார வாரியம் பணியாற்ற வேண்டும் என்று கூறிக்கொண்டு இந்த அளவில் என் உரையை முடித்து அமைகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், நம் தமிழகத்தில் தொழில் வளம் பெருக வேண்டுமென்றால், விவசாய அபிவிருத்தி ஏற்படவேண்டுமென்றால் அவற்றிற்கு மிக அத்தியாவசியமாகத் தேவைப்படுவது மின்சாரம். அப்படி நாம் மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டிய நேரத்தில், அந்த இலாகாவில் பணிபுரியக்கூடிய அதிகாரிகள் உட்பட, கீழ்மட்டத்தில் இருக்கக்கூடிய ஊழியர்கள் வரை அவர்களை நாம் எப்படி நடத்தி வருகிறோம், நிலை எப்படியிருக்கிறது என்பதையும் நாம் கவனித்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். குறிப்பாக சொல்ல வேண்டுமானால், அங்குள்ள ஊழியர்களைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் சிக்கல்கள் இருந்தாலும்



1968 ஆகஸ்ட் 16] [திரு. வி. கே. கோதண்டராமன்]

அவற்றை நல்ல முறையில் தீர்த்து வைத்துக் கொண்டு வருகிறோம் என்று ரிப்போர்ட்டில் அழகாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நடைபெற்று வரக்கூடிய ஆளியாறு-பரம்பிக்குளம் திட்டத்தில் ஈடுபட்டு வேலை செய்து கொண்டு இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களை வீட்டிற்கு அனுப்பக்கூடிய நிலைமை. அதன் காரணமாக 14-ஆம் தேதியிலே 100 பேர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது. இதைச் சொல்லக்கூடிய நேரத்தில் அமைச்சர்கள் கேட்கலாம், வேலை முடிந்த பிறகு அவர்களுக்கு எப்படி வேலை கொடுக்க முடியும்? இதைச் சொல்ல முடியுமா? என்று. நான் சொல்கிறேன்; இதே ஸ்டேட்மெண்டில் தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது, பாண்டியாறு-புன்னப்புழா அனல் மின் திட்டம் பற்றியும், ஹோகேனக்கல் திட்டம் பற்றியும். இந்தத் திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்கவில்லையென்று சொன்னால், அல்லது அதிலே ஒன்றை உடனடியாக ஆரம்பிக்கவில்லையென்று சொன்னால், இந்த ராஜ்யத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் தோன்றி, அதனால் குழப்பமான நிலைமை ஏற்படும். ஆகவே, விரைவில் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் கூறி, அவர்களிடம் சண்டையிட்டு அந்த ஒரு திட்டமாவது ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். அதில் கவனம் செலுத்துவது மிக மிகக் குறைவு என்று இந்த சர்க்காரை நான் குற்றஞ்சாட்டுகிறேன். ஆகவே, கைது செய்திருக்கிறார்கள் என்பதற்கு சுலபமாக ஒரு பதிலைச் சொல்லி விட்டுச் சென்றால் போதாது. அதற்கு உடனடியாகப் பரிகாரம் காணவேண்டும்.

அதைப்போலவே தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினை. வேலை நிலைமை இன்றைய தினம் எப்படியிருக்கிறது என்றால், இன்று ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் தலைமையிலே இருக்கக்கூடிய சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு மாதிரியாயும், மற்ற கட்சியினர் தலைமையில் இருக்கக்கூடிய சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு மாதிரியாயும், இப்படி பாகுபடக்கூடிய அளவுக்கு இருக்கிறது. குறிப்பாக, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சென்ற 8 வருஷ காலமாக எம்.இ.எஸ்.-யில் வேலை பார்க்கும் ஜானகிராமன், மாதவன் ஆகிய இருவருக்கும் இதுவரை புரமோஷன் கிடையாது. காரணம், அவர்கள் இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைமையில் இருக்கக்கூடிய சங்கத்தைச் சார்ந்தவர்கள் என்பதுதான். இப்படிச் சொல்ல வேண்டுமென்றால் எத்தனையோ இருக்கிறது. ஆகவே, அவ்வாறு பாகுபடுத்தக் கூடாது என்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று, தொழிற்சங்கங்களை அங்கீகாரம் செய்வது ஏற்கனவே ஒரு தொழிற்சங்கத்தை அங்கீகாரம் செய்திருந்தாலும், மீண்டும் ஒரு தொழிற்சங்கத்தை அங்கீகாரம் செய்ய கணக்காயர் ஆலோசனையில் இருந்து வருவதாகக் கூடத் தெரிய வருகிறது. எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால், இதுபோன்ற

ரூ. 375-25-800. இப்படிப் பல பேருக்குச் சம்பளத்தில் பாகுபடுத்தக்கூடிய தன்மையிலே இருக்கிறது. இதையெல்லாம்கூட மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்படி பாகுபாடு படுத்தக் கூடிய அளவுக்கு இருக்கிற காரணத்தினால் இன்றைக்கு அவர்களுக்குள்ளே ஒரு சிறந்த முறையிலே வேலை செய்ய முடியாத அளவுக்கு ஒரு நிலைமை ஏற்பட முடியும் என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, கமெர்ஷியல் பாலன்ஸ் ஷீட். இந்த கமெர்ஷியல் பாலன்ஸ் ஷீட்டை அளிப்பதே கிடையாது. இதை ஏன் அளிப்பது கிடையாது என்பதே நமக்குப் புரியவில்லை. உண்மையான இலாப நஷ்டம் வெளியிலே தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக வெளியிடப்படுவது கிடையாதோ என்னவோ தெரியாது. ஆகையால், தயவு செய்து கனம் அமைச்சர் அவர்கள், ஏழைகளுக்காக வேண்டி, பொது மக்களுக்காக வேண்டி பாடுபடக் கூடியவர், ஏற்கனவே இதே அமைச்சர் தீவிரமாகப் பல பிரச்சினைகளுக்காக வேண்டி தீர்வு காண முயன்றவர், இன்றைக்கு இந்தப் பிரச்னையையும் ஈவு, இரக்கம் காட்டாத முறையிலே அதைத் தீர்த்து, மாற்றி அமைக்கக் கூடிய அளவுக்கு கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) எல்லோரும் 15, 20 நிமிஷம் பேசினார்கள். நீங்கள் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) 10 நிமிஷம் தான் என்கிறீர்கள்.

சார், ஹரிஜன குடியிருப்புக் காலனியிலே பல இடங்களிலே லைட் வசதிகள் நிரம்பக் குறைவு. அதைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, இன்றைக்குத் திட்டங்கள் நிறைவேறிய பிறகு அங்கங்கே 'ராக் டிரில்லிங் மெஷின்ஸ்' 'ராக் ப்ளாஸ்டிங் மெஷின்ஸ்' போன்றவைகளை விவசாயிகள் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் துறை உரிமைதாரர்கள் இருக்கிறார்கள். சாகுபடி செய்த நிலத்திற்காக வேண்டி எந்த எந்த மாதிரி நடத்த வேண்டாமோ அந்த மாதிரிதான் நடக்கிறார்கள். அதுவும், அவர்கள், அரசாங்கம் என்றைக்காவது எடுத்துக்கொள்ளும் என்று ஏனோ தானோ என்று இருக்கிறார்கள். ஆகையால், எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணினால் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி இல்லை என்றால் ஏதாவது ஒரு உத்திரவு பிறப்பித்து இதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, குடியாத்தம் சுற்று வட்டாரத்திலே 20,000 பம்ப் செட்கள் இருக்கின்றன. அங்கே ரெவின்யூ யுனிட்டே கிடையாது. இதிலே பாதி இருக்கும் தாலுகாவிலே ரெவின்யு யூனிட் இருக்கும். நிரம்ப பெரிய தாலுகா—4 இலட்சம் மக்களைக் கொண்ட திருப்பத்தூர், வேலூருக்குப் போக வேண்டுமானால் 60 மைல், 30 மைல் போக வேண்டியிருக்கிறது. விவசாயிகள் எந்த அளவுக்குக் கஷ்டப்படுவார்கள் ? ஆகவே, அங்கு உடனடியாக ஒரு ரெவினியூ யுனிட்டை ஆரம்பிக்க வேண்டுமென்ற அளவுக்கு நிலைமை இருக்க வேண்டும். அதே போல் இன்றுள்ள திட்டங்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரே ஒரு வார்த்தை.

எஸ்.ஈ.-க்களும், சீ.ஈ.-க்களும் ஏதாவது மெட்டீரியல்ஸ் வாங்குவதற்காக ரூ. 5,000, ரூ. 10,000 அளவுக்கு உரிமை இருந்தது. நாம் சொல்லுகிறோம், மத்திய சர்க்காரிலே அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன; அவை பரவலாக இருக்க வேண்டுமென்று. ஏற்கனவே இருந்த போர்டு சேர்மன், போர்டு சூப்பரின்டெண்டிங் என்ஜினியருக்கு இருந்த அதிகாரத்தை வாங்கிக் கொண்டார். ஆகையால், மறுபடியும் பழையபடி அவர்கள் வாங்குவதற்கு அதிகாரம் இருக்க வேண்டும். அதிகாரம் என்பது மாத்திரம் அல்ல; அன்றைக்கு இருந்த விலைவாசிகளைவிட இன்றைக்கு அதிகமாக உள்ளது; ஆகையால் அன்றக்கு ரூ. 5,000 இருந்தால், இன்றைக்கு ரூ. 15,000 ஆக்கப்பட வேண்டும். (மணி அடிக்கப்பட்டது.)

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, 1968-69-ஆம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல முன்வந்துள்ளேன். இந்த பட்ஜெட்டிலே மின்சாரத்தைப்பற்றி வெகு அழகாக குறிக்கப்பட்டுள்ளது. இது மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால், நடைமுறையிலே பார்க்கும்போது இந்த மின்சாரத்தினால் விவசாய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்களுடைய குறைகளை கேட்கும்போது நாமே மனம் வருந்தி மிகவும் கஷ்டத்திற்குள்ளாக நேரிடுகிறது. என்னுடைய தொகுதியிலே சுமார் நூற்றுக் கணக்கான பம்புகளுக்கு 1965-ஆம் ஆண்டிலே அங்கீகாரம் அளிக்கப்பட்டு, அக்ரீமெண்டு செய்யப்பட்டு, அவர்களிடத்திலே சர்டிஃபிகேட் வாங்கி மின்சார பம்ப் செட்களை வாங்கி 3 ஆண்டுகளாக பல முயற்சிகளைச் செய்தும் நாளதுவரை மின்சார இணைப்புக் கொடுக்கப்படவில்லை. ஏழை விவசாயிகள் சர்க்காரிடத்திலே கடன் வாங்கி பம்ப் செட்டை அமைத்து, 3 ஆண்டுகளாக மின்சார இணைப்புப் பெறாமல் வாங்கிய கடனை ரூ. 2,000-க்கு வட்டி கொடுத்துக் கொண்டிருந்தால் அந்த ஏழை விவசாயிகளுடைய நிலை என்ன ஆகும் என்பதை அரசு தெரிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1967-ஆம் ஆண்டில் சூப்பரின்டெண்டிங் என்ஜினியர்

களை நேரடியாகச் சென்று பார்த்து வாய் மூலமாகச் சொல்வதோடு மட்டும் அல்லாமல், எழுத்து மூலமாகவும் எழுதிக் கொடுத்தோம். மின்சார அமைச்சர் அவர்களிடத்திலே அவர்கள் அனுப்பிய மகஜரை வைத்து நாம் ஒரு ரிப்போர்ட் எழுதி அவர்களிடம் சமர்ப்பித்தோம். எங்களுடைய கட்சிக் கொறடா அவர்களுடன் நானும் சேர்ந்து இருவரும் சேர்ந்து கொடுத்தும், 2 ஆண்டுகளாக முயற்சி செய்தும் அந்த பம்ப் செட்களுக்கு மின்சாரக் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. இதைவிட வேறு என்ன செய்ய முடியும்?

தண்டராம்பட்டு வட்டாரத்திலே அதற்குக் கொடுக்கவேண்டிய டிரான்ஸ்ஃபார்மரிலே மொத்தமான லோட் இருந்தும் எந்தக் காரணத்தைக் கொண்டோ அந்தப் பகுதி புறக்கணிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு கஷ்டம் அனுபவிப்பதோடு கடன்காரர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அவைகளில் எல்லாம் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1965, 1966, 1967, 1968-ல் என்ன என்ன மனுக்களுக்கெல்லாம் அக்ரிமெண்டு செய்யப்பட்டுள்ளதோ அவைகளுக்கெல்லாம் உடனடியாக கனெக்ஷன் கொடுக்கப்பட வேண்டும். அங்குள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் உடனடியாக முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார பம்ப் செட்டுக்காக இப்பொழுது ஒவ்வொரு ஆண்டிலேயும் விவசாயிகளிடமிருந்து 'செக்யூரிட்டி டிபாசிட்' வசூலிக்கப்படுகிறது. அப்படி வருஷந்தோறும் செக்யூரிடி டெபாஸிட் வாங்கப்படுவது வருந்தத்தக்கது. முதல் தரம் செக்யூரிட்டி டிபாசிட் கட்டி விட்டால் திரும்பவும் டிபாசிட் வாங்காத முறையில் அரசு பரிசீலனை செய்து விவசாயிகளுடைய கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருமுறை வசூலிப்பதோடு நிறுத்திவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார பம்ப் செட்கள் யூனியன் மூலமாக வழங்கப்பட்டன. ஒரு வருஷத்திலே பல மனுக்கள் வந்தாலும் கூடுமான வரையில் ஓரிரு மாதத்திலே பம்ப் செட்டுகள் வழங்கப்பட்டன. ஆனால், தற்பொழுது நில அடமான பாங்கு மூலம் வழங்கப்படுகிறது. அதன் காரணமாக 4 மாதங்கள் ஆகியும் இப்பொழுது மின்சாரக் கடனுக்கு ஒரு பம்ப் செட் கூட வழங்கப்படவில்லை. இப்படி 4 மாதம், 6 மாதம் ஆகியும் அவர்களுக்குத் தரப்படவில்லையென்றால் அவர்களுடைய நிலை என்ன ஆகும் என்பதை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நில அடமான பாங்கின் மூலமாக கடன் வழங்குவதில் மின்சார பம்ப் செட்டுகளுக்கு மாத்திரம் சில சட்டங்களை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வம்சாவழிப் பட்டியல், யாருடையசொத்து, அவருடைய கையெழுத்து, இப்படிப்பட்ட பல சட்டங்களையெல்லாம் நீக்கிவிட வேண்டும். அவர்கள் மீது நம்பிக்கை வைத்து மேலும் அதிகமாக பரிசீலனை செய்யாமல் அவர்களுக்கு மின்சார பம்ப் செட் கடனை



வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அந்தச் சட்டங்களை எல்லாம் நீக்காவிட்டால் 3 மாதம், 6 மாதம், ஒரு வருடம் கூட ஆகும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறைந்தது 30 தினங்களுக்குள் விவசாய மக்களுக்கு பம்ப் செட்கள் வழங்குவதற்கு இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிகாரிகளை அணுகி கேட்போமானால் எங்களுக்கு கம்பம் இல்லை, கம்பிகள் இல்லை, பல சாமான்கள் இல்லை, இதனால் தடைப்படுகிறது என்று சொல்லிக் கொண்டே போகிறார்கள். ஓர் ஆண்டுக்கு வேண்டிய கம்பிகள், ஓர் ஆண்டுக்கு வேண்டிய மின்சார சாதனங்கள் இவைகளையெல்லாம் சர்க்கார் முதலிலே நல்ல முறையில் பரிசீலனை செய்து, வருஷம் பிறப்பதற்கு முன்னதாகவே அவர்களுக்கு வேண்டியவைகளைக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய மக்கள் பாதிக்கப்படாமல் காப்பாற்றப்பட வேண்டிய வழிகளில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய கஷ்டங்களையெல்லாம் உணர்ந்து அவர்களுக்கு நல்ல ஆதரவு கொடுக்க வேண்டும். இந்த ஆண்டிலே சர்வே செய்து அவர்களுக்குக் குறைந்தது 30 தினங்களுக்குள் பம்ப் செட் கனெக்ஷன் கொடுத்து, மேற்கொண்டு புதிய வேலைகளை ஆரம்பிப்பதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஏ. அ. சுப்பராஜா:** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது ஒருசில வார்த்தைகள் பேசலாம் என்று நினைக்கிறேன். பொதுவாக, மாநிலத்திலே இந்தத் துறை நல்ல விதத்திலே செயல்படுவது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இருந்தபோதிலும்கூட கீழே இருக்கக்கூடிய அடித்தளத்திலே என்ன குறை என்பதை மேலே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்குச் சொல்லவேண்டிய கடமையில் நாங்கள் எல்லாம் இருக்கிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது ராஜபாளையம் நகரத்தைப் பொறுத்த மட்டிலும் அங்கே சாதாரண மின்விளக்குகள் எல்லாம் டியூப்-லைட்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 1,500 டியூப் லைட்கள் அங்கே மாற்றப்பட்டு, வருடத்திற்கு சுமார் இலட்சம் ரூபாய் வரை வருமானம் இந்தத் துறைக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நகரசபையிலே இன்றைக்கு மாகாண ரீதியிலே, டியூப் லைட்கள் ரொம்பத் தரக்குறைவான, 'க்வாலிட்டி' ரொம்ப மோசமான நிலையிலே இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் இந்தக் குறைகளை காண்கிறோம். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், கிராம்ப்டன், பிலிப்ஸ் போன்ற பெரிய கம்பெனிகளிடமிருந்து வாங்குவதில் என்ன கஷ்டம் என்பது எங்களுக்குப் புரியவில்லை. லைட் ஹவுஸ் என்ற கம்பெனியிடமிருந்து ட்யூப் லைட்களை வாங்குகிறார்கள். அது லைட் ஹவுஸ் எப்படி எரிகிறதோ அதே

போலத்தான் எரிந்துக்கொண்டிருக்கிறது. ஒரே ஒரு சமாதானம் அதிகாரிகள் சொல்வது என்னவென்றால், 'நாங்கள் என்ன செய்வது, கொடேஷன் கால் ஃபார் பண்ணுகிறோம். குறைந்த விலை எதுவாக இருக்கிறதோ அதை அப்படியே அப்ரூவ் செய்கிறோம்" என்பதுதான். டெக்னிகல், அட்மினிஸ்டிரேடிவ் சைடுகளில் எம்மாதிரி செய்யவேண்டும் என்ற முறைகள் இருந்தாலும் கூட, அதற்குப் பின்னால் விளையக்கூடிய விளைவுகள் என்னவென்பதை நாம் கண்டிப்பாக யோசித்துப்பார்க்கவேண்டும். ஒரு முறை ட்யூப் லைட் போட்ட பிறகு, அது ஃப்யுஸ் ஆகிவிட்டால், அதை மாற்றும் செலவை நகரசபை ஏற்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. இப்படி மோசமான ட்யூப் லைட்களை போட்டால் அடுத்த நாளே அது பழுதடைந்துவிடுகிறது. அதை மாற்றுவதற்கான செலவை நகரசபையும் ஏற்கப்போவதில்லை. சர்க்கார் துறையிலும் ஏற்கப்போவதில்லை, கொடுத்த அத்தனை பணமும் நஷ்டமாகக் கூடிய நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அதிகாரிகள் நல்ல விதத்தில் யோசித்து இதில் செயலாற்ற வேண்டும். முக்கியமாகச் செய்யவேண்டியது என்னவென்று சொன்னால், 'கொடேஷன் கால் ஃபார் பண்ணினேன், குறைந்த விலை எதுவோ அதை அப்படியே அப்ரூவ் செய்தேன்' என்று ஏனோதானோ என்ற முறையில் நடந்துகொள்ளாமல், நல்ல கம்பெனிகளிடமிருந்து கொடேஷன் வாங்கவேண்டும், குவாலிடி நன்றாக இருக்க வேண்டும், விலையைப் பற்றி கவலையில்லை என்ற முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல கன்ஸ்ட்ரக்ஷன் டிபார்ட்மெண்டை எடுத்துக் கொண்டால், சாமான்கள் வரவில்லை என்று அதிகாரிகள் குறை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். டிரான்ஸ்பார்மர் வரவில்லை, சாதாரணமாக போடக்கூடிய ஒரு போல்ட் கூட இல்லை, வேண்டிய இம்பிளிமெண்ட்ஸ் சரியாக இல்லை, அங்கிருந்து வரவில்லை, கூடிய சீக்கிரம் வந்துவிடும், வந்தவுடன் செய்துவிடலாம் என்ற போக்கில்தான் அதிகாரிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். இதனால் பல வேலைகள் தடைபடுகின்றன. இந்த நிலையை மாற்ற அதிகாரிகள் தக்க கவனம் செலுத்தவேண்டும் என்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, ரெக்டிபிகேஷன் ரிபோர்ட்டு, கடந்த ஆண்டில் ஆங்காங்கு கமிட்டிகளை அமைத்து, கமிட்டிகள் மூலம் என்ன குறைகள் இருக்கின்றன என்பதை அதிகாரிகள் கண்டறிய வேண்டும் என்று ஒரு ஸஜ்ஜெஷன் கொடுக்கப்பட்டதற்கு அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். டி. டி. ஸி. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடுகிறது என்று சொல்லுகிறார்கள். டி. டி. ஸி.-யில் எலெக்ட்ரிசிடி டிபார்ட்மெண்ட் பற்றிய அலுவல் மட்டும் கவனிப்பதில்லை. அது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடுகிறது. அதில் எத்தனையோ பல இலாகாக்களுடைய அலுவல்கள் பரிசீலிக்



கப்படவேண்டியிருக்கிறது. எல்லா அதிகாரிகளும் அந்தக் கூட்டங்களுக்கு வருவார்கள் என்று சொல்வதற்கில்லை. எத்தனையோ அலுவல்களுக்கிடையே மின்சாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதைப்பற்றி விவாதிக்க அதிக வாய்ப்புகள் இருக்க முடியும் என்று சொல்ல முடியாது. கீழ் மட்டத்திலே இருக்கக் கூடிய அதிகாரிகளுக்கு பிராக்டிகல் டிபிகல்டீஸ் என்ன என்று தெரியவேண்டும். சேர்மனிலிருந்து போர்ட் மெம்பர்கள் வரையிலும் குறைகள் தெரிய வேண்டுமென்று சொன்னால், மாவட்டரீதியாக சுற்றுப்பிரயாணம் வந்து, அந்தக் கமிட்டிகள் மூலம் தெரிவிக்கப்படுகின்ற குறைகளைத் தெரிந்துகொண்டு, அதை சீக்கிரம் நிவர்த்திப்பதற்கு ஏதாவது வழிவகைகள் செய்ய வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேல்டேஜ். நமக்கு எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அடுத்த மாநிலங்கள் அல்லது அடுத்த நாடுகளைவிட இங்கு இருக்கக்கூடிய கரெண்டு வேல்டேஜ் அதிகமாக இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது இந்த வேல்டேஜை நாம் எப்படி சரிக்கட்டவேண்டும் என்பதற்கு இதுவரைக்கும் மின்சார போர்டார் ஒரு திட்டவட்டமான செய்கையில் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதை அறிய நாங்கள் ஆவலுள்ளவர்களாய் இருக்கிறோம். ரெம்யூனெரேடிவ் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ரெம்யூனரேஷன் நல்ல விதத்தில் வந்தால்தான் நாம் வசூலிக்கும் கட்டணம் குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டுமென்றால், இதற்கு ஒரு கமிட்டி போட்டு எந்த விதத்தில் வேல்டேஜைக் குறைக்க முடியும், தவிர்க்க முடியும், என்ன செய்தால் வேல்டேஜ் குறையும் என்று பரிசீலனை செய்யவேண்டும். இதைப்பற்றி நம்மிடம் ஏதேனும் குறிப்பு இருக்கிறதா என்று அமைச்சரவர்கள் தெரிவிக்கவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், என்ஜினியர்களுக்கு மேலுள்ளவர்கள் லெவலில் பேசிக் பேயை கூட்டியே ஆகவேண்டும். அது மிகவும் அவசியம். அவர்கள் குடும்பச் செலவை சரிக்கட்டுவதற்கு வேண்டிய அளவில் அவர்கள் ஊதியம் பெற்றால்தான், லஞ்சம், ஆப்லிகேஷன்ஸ் போன்ற விவகாரங்களில் அவர்கள் ஈடுபடாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எத்தனையோ காலமாக அவர்களுடைய பேசிக்பே உயர்த்தப்படாமல் இருக்கிறது. மற்ற ஊழியர்களுக்குக் கூட பேசிக் பே கூட்டிக் கொடுத்திருக்கிறார்கள். என்ஜியர்களுக்கு மேலே இருக்கக்கூடிய காடரில் இருக்கக்கூடியவர்களுக்கு இன்னும் பேசிக் பே கூட்டிக்கொடுப்பது பற்றி பரிசீலனையில் இருப்பதாக கேள்விப்படுகிறேன். அதில் கவனம் செலுத்தி தயவு செய்து சீக்கிரம் அதைப்பற்றி நல்ல முடிவு எடுத்தால் அவர்களுடைய குறையைப் போக்குவதற்கு நலமாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

மேலும், பாலிசியைப் பொறுத்த மட்டில் பார்த்தால், மைசூர், கேரளம் ஆகிய அண்டை மாநிலங்களிலிருந்து கிடைக்கக்கூடிய மின்சாரத்தை வைத்து நாம் ஓரளவுக்கு நமது தேவையை சரிக்கட்டிக்கொண்டு போகிறோம். இஃதென்று அந்த இரண்டு மாநிலங்களும் ‘ தங்களுக்கு மின்சாரத் தேவை இருக்கிறது, ஆகவே உங்களுக்கு மின்சாரம் இல்லை’ என்று சொல்லிவிட்டால், நம்முடைய நிலைமை என்ன ஆகும்? இதை கொள்கை ரீதியில் யோசித்து, ஒரு திட்டவட்டமான கொள்கையை நாம் இப்பொழுதிலிருந்தே தயாரிக்கவேண்டும் என்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக நான் சொல்வது என்னவென்றால், என்ஜினியர்கள், சேர்மன், போர்டு மெம்பர்கள் ஆங்காங்கு வந்து, எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து கிடைக்கக்கூடிய குறைகளைக் கேட்டறிந்து, அப்போதைக்கப்போது ஸ்பாட் டிஸ்போசல் கொடுக்க வேண்டும். அங்கு இருக்கக்கூடிய என்ஜினியர்கள், அதிகாரிகளிடம் சொல்லி, பின்னால் பார்த்துக்கொள்ளலாம், ஆண்டிசிபேஷனில் செய்யுங்கள் என்ற அளவில் உடனுக்குடன் முடிவு எடுத்து வேலைகளைத் துரிதமாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பி. வேலுசாமி: அவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தைப் பொறுத்தமட்டில், மின்சாரம் சம்பந்தப்பட்ட வரையில் கொள்கை ரீதியில் ஒரு மாற்றம் வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உதாரணமாக, பெரிய பாக்டரிகள் லட்சக்கணக்கான யூனிட்டுகள் செலவு செய்கிற பாக்டரிகளுக்கு மிகக் குறைந்த அளவு கட்டணமும், சாதாரணமாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கும், சிறு தொழில்கள் செய்கிறவர்களுக்கும் அதிக கட்டணம் வசூலிப்பது என்பது ஒரு முறையாக இருக்கிறது. உதாரணமாக மேட்டூரில் இருக்கிற அலுமினிய பாக்டரி, சிமெண்ட் பாக்டரி போன்றவைகளுக்கு ஒரு பைசா, ஒன்றரை பைசா, இரண்டு பைசா என்ற அளவில் வசூலிக்கப்படுகிறது. சாதாரணமாக குடிசையில் வாழ்கிற ஒரு சிறு விவசாயி ஒரு எலக்டிரிக் பல்பு போட்டுக்கொண்டால், அவனிடமிருந்து ஒரு யூனிட்டுக்கு 33 பைசா என்ற அளவில் வசூல் செய்யப்படுகிறது. குறைவாக மின்சாரம் உபயோகப்படுத்துகிறவர்களுக்கு அதிகக் கட்டணமும், மிக அதிகமாக மின்சாரம் உபயோகப்படுத்துகிறவர்களுக்கு மிகக் குறைவான கட்டணமும் என்ற முறையில் கட்டணம் அமைந்திருக்கிறது. அந்தக் கொள்கையார்த்தமான முறைகளை கொஞ்சம் மாற்றி, மனிதாபிமானத்தோடு ஒருவன் குடும்பத்தில் வாழ்வதற்கு மின்சாரம் எந்த அளவிற்குத் தேவையோ, அந்தத் தேவையை மையமாக வைத்து, அந்த மின்சாரத்தில்தான் அந்த வாழ்க்கை பின்னப்பட்டிருப்பதால், அப்படிப் பின்னப்பட்டிருக்கக்கூடிய வாழ்க்கைக்கு ஒரு குடும்பத்துக்கு உபயோகிக்கக்கூடிய





மின்சாரத்திற்கு குறைந்த கட்டணம் விதிக்க வேண்டும் லட்சக்கணக்கான ரூபாய்கள் லாபம் வரக்கூடிய பாக்டரிகளுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுப்பதால், அந்த லாபமானது அவர்களுக்குப் போகிறது. அப்படிப் போவதைத் தடுத்து, அவர்களுக்கு அதிகக் கட்டணம் விதிக்கக்கூடிய வாய்ப்புகளை உண்டாக்கவேண்டும். அப்படிப்பட்ட கொள்கை யார்த்தமான முறைகளை மாற்றுவதற்கு இந்தச் சர்க்கார் ஏதாகிலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டால் நலமாக இருக்கும். பழைய காலத்தில் இருக்கிற முறையை மாற்றி, இப்பொழுது மக்கள் பிரதிநிதிகள் கொண்ட இந்தச் சர்க்காரில் இந்த மாற்றம் செய்வதற்கான வழிவகைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம் மாநிலத்தில் மின்சாரத்திற்கு போதிய வாய்ப்பு அளிக்கிறோம், வருங்காலத்து மின்சாரத் தேவைக்கேற்ப நாம் அதிகமாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். மின்சாரத்தை நாம் அதிகமாக உற்பத்தி செய்கிறோம் என்று சொன்னால், மின்சாரத்தை உபயோகிப்பதற்கான பொருள்களையும் நாம் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். அதாவது, ரோடில் நிறுத்தப்படுகிற கார்டர்கள், வையர், இது போன்ற சாதனங்களை நாம் அதிகமாக உற்பத்தி செய்யவில்லை. நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்தாலும், இது போன்ற மின்சாரத்தை உபயோகிப்பதற்கு வேண்டிய மற்ற சாதனங்கள் கிடைக்காத காரணத்தினால், ஆங்காங்கு வேலைகள் நடைபெறாமல் நின்றுபோய்விட்டன என்று மதிப்பிற்குரிய பல அங்கத்தினர்கள் இந்தச் சபையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, மின்சாரத்தை உபயோகப்படுத்துவதற்குத் தேவையான பொருள்களையும் உற்பத்தி செய்வதிலே நமது சர்க்கார் அதிக கவனம் செலுத்தினால், அது மிகச் சிறப்பாக இருக்கும். ஆகவே, அதிகமான மின்சாரத்தை உபயோகிக்கும்போது, உபயோகப் பொருள்களை எங்கிருந்தோ எவர்களிடமிருந்தோ பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த நிலைமை நம்முடைய திட்டத்திற்கும், வேலைக்கும் குந்தகமாக, பாதகமாக இருக்கும். ஆகவே, மின்சார உபயோகப் பொருள்களை, மீட்டர்கள், பல்புகள், வொயர்கள், தூண்கள் போன்ற உபகரணங்களையும் சர்க்காரே உண்டாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

குடிசையிலே வாழும் ஏழை மகனுக்கு ஒரு யூனிட்டுக்கு 33 நயாபைசா. ஆனால் அதே நேரத்திலே, ‘All purpose consumption’ என்ற வகையிலே மிக வசதி படைத்த, பெரிய பங்களாக்களிலே வாழ்கின்றவர்களுக்கு, எலெக்ட்ரிக் ஹீட்டர், ஃப்ரிஜிடேர், ஃபான்கள், கிணறுகளில் மோட்டார்கள், இவைகளுக்கெல்லாமாக குறைந்த பட்சமாக 14 நயாபைசா ஒரு யூனிட்டுக்கு என்று போட்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஏழைக் குடிமகனுக்கு 33 பைசா ஆனால், வசதி பெற்றவர்களுக்கு குறைவான கட்டணம் என்று இருப்பது மனித சமுதாயத்தில் மிகக் குறையாக இருக்கிறது.

[திரு. பி. வேலுசாமி] [1968 ஆகஸ்ட் 16

ஆகவே, அந்த கொள்கையை மாற்ற வேண்டியது மிக மிக அவசியமும் அவசரமும் வாய்ந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பல்லடம் தாலூகாவில், காமநாயக்கன்பாளையம் பிர்க்காவில் உள்ள சித்தநாயக்கன் பாளையம், இடையபாளையம் என்ற இடங்களுக்கு மின்சாரம் வேண்டும் என்று விண்ணப்பம் போட்டு 1½ வருஷங்கள் ஆகின்றன. அதற்கு இதுவரையில் எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. மின்சாரம் வரும் என்ற நம்பிக்கையில், கடன் வாங்கி கிணறு வெட்டியாகிவிட்டது. மின்சாரம் வந்தால் விவசாயத்தில் ஈடுபடலாம் என்று செய்துவிட்டார்கள். ஆனால் மின்சாரம் கொடுக்கப்படவில்லை. இந்த நிலையில் உணவு உற்பத்தியில் வெகுவேகமாக முன்னேறும் நிலை எப்படி ஏற்படும்? இது சம்பந்தமாக எஞ்ஜினியர் அவர்களைக் கண்டு கேட்டதற்கு, அவர் ட்ரான்ஸ்ஃபார்மர் கிடையாது, வேறு உபகரணங்கள் இல்லை, இன்டென்ட் போட்டிருக்கிறோம், ஆறு மாதம் ஆகிறது என்று சொல்கிறார்கள். இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்றால், கேந்திரமாகவுள்ள உபகரணங்களை நாமே உற்பத்தி செய்யும் முயற்சியில் ஈடுபட்டாகவேண்டும். அதற்கான ஃபாக்டரியை உண்டாக்கியாக வேண்டும்.

ஆகவே, அதிகம் உபயோகிக்கிறவர்களுக்கு குறைந்த கட்டணம், குறைவாக உபயோகிக்கும் ஏழை எளியவர்களுக்கு அதிகமான கட்டணம் என்று இருக்கும் நிலையில் கொள்கை மாற்றம் ஏற்பட வேண்டும் என்றும், யாருடைய வாழ்க்கை மின்சாரத்தோடு பின்னிப் போயிருக்கிறதோ, அவர்களுக்குக் குறைந்த கட்டணம் கொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இதை மனிதாபிமானத்தோடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்.—தொடர்ச்சி.

(iii) பேரவை அலுவல்.

MR. DEPUTY SPEAKER : The following is the programme of business of the Assembly as decided by the Business Advisory Committee.

Saturday, 17th August 1968—

(1) Presentation of First Supplementary Statement of Expenditure for 1968-69.

(2) Resolution in regard to the Parliamentary Bill entitled "The Madras (Alteration of Name) Bill, 1968".

(3) Discussion on the Annual Financial Statement of Madras State Electricity Board for 1968-69 (continued).

Sunday, 18th August 1968—

Holiday.



1968 ஆகஸ்ட் 16] [Mr. Deputy Speaker]

Monday, 19th August 1968—

(1) Discussion and Voting on Demands for First Supplementary Statement of Expenditure for 1968-69.

(2) Introduction of Appropriation Bill.

Tuesday, 20th August 1968—

Discussion and passing of Appropriation Bill and other Official Bills.

Wednesday, 21st August 1968—

Official Bills and Resolutions.

Thursday, 22nd August 1968—

Non-Official Business.

Friday, 23rd August 1968—

Discussion on the Annual Financial Statement of Madras State Electricity Board for 1968-69 (continued).

Saturday, 24th August 1968—

Discussion on the Annual Financial Statement of Madras State Electricity Board for 1968-69 (continued and concluded).

As usual, the Assembly will sit from 9 a.m. to 1.30 p.m.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. 17—8—1968 சனிக்கிழமை காலை 9 மணியளவில் இந்தப் பேரவையின் கூட்டம் மீண்டும் நடைபெறும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

**A. Statutory Rules and Orders.**

* 1. Notification issued with G.O. Ms. No. 1412, Revenue, dated the 14th August 1967, for the settlement of certain estates in the merged territory of Pudukottai in Tiruchirappalli district, taken over under Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1956 (Madras Act 26 of 1963). [Laid on the Table of the House under section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1963 (Madras Act 26 of 1963).] [illegible] பகல 1-26

* 2. Notification issued with Memorandum No. 50447/B, VI/67-9, Agriculture, dated the 28th November 1967, in regard to certain amendments to the Agriculture Department Notification II-1 No. 4005 of 1966, dated the 1st September 1966, published at pages 1639-40 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 5th October 1966. [Laid on the Table of the House under section 44 (3) of the Madras Land Improvement Schemes Act, 1959 (Madras Act 31 of 1959).]

* 3. Notification issued with G.O. Ms. No. 2759, Agriculture, dated the 20th September 1967, in regard to nomination of members to the Ramanathapuram Market Committee. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]

* 4. Notification issued with G.O. Ms. No. 2775, Agriculture, dated the 20th September 1967, in regard to the constitution of the Madurai Market Committee and nomination of the members of the Committee. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]

* 5. Notification issued with G.O. Ms No. 3059, Home, dated the 9th November 1967, in regard to an amendment to the Madras Cinemas (Regulation) Rules, 1957, published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957, as subsequently amended for the adoption of metric system of weights and measures. [Laid on the Table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955).]

* 6. Notification issued with G.O. Ms. No. 2149, Revenue, dated the 13th December 1967, in regard to the ryotwari settlement of Kasi Agraharam inam estate in Hosur taluk of Dharmapuri district. [Laid on the Table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

* 7 Notification issued with G.O. Ms. No. 1274, Agriculture, dated the 6th July 1967, in regard to extension of term of office of certain members and appointment of certain persons for the Kanyakumari Market Committee. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]

* 8. Notification issued with G.O. Ms. No. 2626, Agriculture, dated the 8th September 1967 in regard to nomination of certain members to the Coimbatore Market Committee. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]

* 9 Notification issued with G.O. P. No. 2188, Revenue, dated the 19th December 1967, in regard to exemption from liability to tax payable under the Madras General Sales Tax Act, 1959, on the sales of raw rubber to the Schieffelin Leprosy Research Sanatorium, Karigiri, North Arcot district. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]

* 10. Notification issued with Rc. PD. 2 No. 58257/67, dated the 24th November 1967 in regard to removal of Thiru P. Paramasiva Udayar, from the Office of the President of Melmudiyanur Panchayat in Chengam taluk of North Arcot district. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

$ 137. Notification issued with G.O. Ms. No. 184, Rural Development and Local Administration, dated the 6th February 1968, in regard to certain amendments to the rules published with the late Local Self Government Department Notification No. 731, dated the 23rd June 1933 published at pages 251-253 of Part I-A of the *Fort St. George Gazette*, dated the 11th July 1933 under the Madras Places of Public Resort Act, 1888. [Laid on the Table of the House under section 14 (2) of the Madras Places of Public Resort Act, 1888 (Madras Act II of 1888).]

$ 138. Notification issued with G.O. Ms. No. 873, Local Administration, dated the 27th April 1968, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 343 of 1965, dated the 29th September 1965, published at page 1 of Part II–section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 1st October 1965, as subsequently amended. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

$ 139. Notification issued with G.O. Ms. No. 1021, Agriculture, dated the 23rd March 1968, in regard to establishment of regulated markets at Kinathukadavu, Thondamuthur and Kunnathur in Coimbatore district. [Laid on thhe Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]

$ 140. Notification issued with G.O. Ms. No. 3206, Home, dated the 24th November 1967, in regard to exemption from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, to the UNICEF vehicles registration No. MDA 3518 and MDA 3527 assigned to the District Health Officer, Madurai. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

$ 141. Notification issued with G.O. Ms. No. 1833, Home, dated the 7th July 1967, in regard to cancellation of the Home Department Notification No. 801, dated the 28th June 1938, published at page 948 of Part I of the *Fort St. George Gazette*, dated the 28th June 1938 and the Home Department Notification II-1 No. 2739 (*a*) of 1964, dated the 20th June 1964, published at page 1131 of Part II-section 1 of the *Fort St. George Gazette*, dated the 24th June 1964, as subsequently amended. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

$ 142. Notification issued with G.O. No. 1128, Revenue, dated the 31st May 1968, in regard to exemption from the payment of General Sales Tax and the Central Sales tax in respect of cotton yarn manufactured by the mills in the State of Madras for export out of India. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]

143. The Delimitation of Parliamentary and Assembly Constituencies Order, 1966. [Laid on the Table of the House under sub-section (2) of section 8 of the Representation of the People Act, 1950).]

144. Eighteenth Annual Report and Statement of Account for the year ending with 30th June 1967 and Review of the Madras Industrial Investment Corporation Limited. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

145. Annual Report of the Madras State Khadi and Village Industries Board for the year 1966-67 (Tamil). [Laid on the Table of the House under section 24 (3) of the Madras Khadi and Village Industries Board Act, 1959 (Madras Act 18 of 1959).]

§ 146. Notification issued with G.O. Ms. No. 3013, Agriculture, dated the 25th October 1967, in regard to the market area and notified market areas to the market at Tirunelveli in Tirunelveli district in respect of chillies, cotton and groundnut. [Laid on the Tabe of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]

§ 147. Notification issued with Pdl. 11/67-F2, dated the 27th March 1968, in regard to the alteration of classification of certain village panchayats into town panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

§ 148. Notification issued with Roc. No. 183124/66-F5, Rural Development, dated the 27th December 1967 in regard to the extension of certain provisions relating to Building Regulations to the Avadi Township of Chingleput district. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

§ 149. Order issued with Memo. No. 45382 CT. III-1/68-2, Revenue, dated the 7th May 1968, in regard to the exemption from liability to entertainments tax and the waiver of show tax to the film shows held at Odeon theatre, Madras, at 10 p.m. on 21st April 1968 and at 12-45 p.m. on 23rd, 24th and 25th April 1968 in connection with the Czechoslovak Film Festival. [Laid on the Table of the House under section 16 (4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939).]

§ 150. Notification issued with G.O. Ms. No. 2202, Revenue, dated the 21st December 1967, in regard to the settlement of minor inams in the territories transferred from the Andhra Pradesh to Madras State under the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 and included in the Chingleput and North Arcot districts. [Laid on the Table of the House under section 48 (5) of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963).]



§ 151. Notification issued with G.O. Ms. No. 1071, Revenue, dated the 23rd May 1968, in regard to an amendment to the First schedule of the Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. [Laid on the Table of the House under section of the Madras Leaseholds Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 27 of 1963).]

§ 152. Notification issued with Pdl. Roc. No. 83-A/66-F2, dated the 29th March 1967, in regard to the alteration of classification of certain village panchayats into town panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

§ 153. Notification issued with G.O. Ms. 224, Revenue, dated the 6th February 1968, in regard to the ryotwari settlement of Modivambedu under tenure estate in Sriperumbudur taluk of Chingleput district. [Laid on the Table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

§ 154. Notification issued with G.O. Ms. No. 2087, L.A., dated the 16th November 1967, in regard to the extension of certain provisions of the Madras District Municipalities Act, 1920, relating to the building regulations to Manimuthar Township. [Laid on the Table of the House under section 175 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

§ 155. Notification issued with G.O. Ms. No. 492, Home, dated the 24th February 1968, in regard to certain amendments to the Home Department's Notification II-1 No. 4671 of 1967, published at page 1982 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 22nd November 1967. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

156. Notification issued with G.O. Ms. No. 958, Home, dated the 2nd April 1968, in regard to the exemption from payment of tax under the Madras Motor Vehicles Taxation Act, 1931 to the vehicle belonging to the United Nations International Children's Emergency Fund and to the District Medical Officer, Chingleput at Kancheepuram. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

157. Notification issued with G.O. Ms. No. 2283, Home, dated the 16th August 1967, in regard to the fixation of tax payable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, to the buses plying on inter-State routes. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

158. Notification issued with G.O. Ms. No. 28, Home, dated the 8th January 1968, in regard to the exemption from payment of tax leviable under the Madras Motor Vehicles Act, 1931 to certain vehicles belonging to the United Nations Development

Programme, Ground water Investigation Project, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

159. Notification issued with G.O. Ms. No. 1255, Home, dated the 26th April 1968, in regard to the exemption from the payment of tax payable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, to certain vehicles belonging to United Nations International Children's Emergency Fund and assigned to the District Health Officer, Madurai. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

### B. Reports, Notification and other papers.

*1. Notification issued with G.O. Ms. No. 2071, Revenue, dated the 25th November 1967, remitting the duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in repect of the deed of endowment of property executed in favour of Chinnaiah Rajah Memorial High School, Rajapalayam, Ramanathapuram District.

* 2. Notification issued with G.O. Ms. No. 122, Revenue, dated the 24th January 1968, exempting from the payment of stamp duty under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) on the partnership deeds executed by the displaced goldsmiths in favour of whom the loans have been granted by the Government under Rehabilitation Schemes for displaced goldsmiths.

* 3. Notification issued with G.O. Ms. No. 2130, Revenue, dated the 6th December 1967, exempting from payment of stamp duty for authorisation of trade union officials to represent the cases of workmen in the Labour Courts and Industrial Tribunals in Madras State under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

@ 4. Notification issued with G.O. Ms. No. 2170, Revenue, dated the 16th December 1967, exempting from the levy of stamp duty under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the instruments relating to the transfer of lands acquired under the Land Acquisition Act, 1894 to the Madras State Electricity Board.

%5. Notification issued with G.O. Ms. No. 464, Revenue, dated the 26th February 1968, exempting from the levy of stamp duty in respect of the memorandum for the deposit of the title deed to be executed by the Andhra Mahila Sabha Nursing Home, Adayar, Madras, under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

%6. Notification issued with G.O. Ms. No. 379, Revenue, dated the 19th February 1968, exempting under the Indian stamp Act, 1899, the levy of stamp duty relating to the purchase of premises No. 36, Veerappan street, Madras by Thiru S. S. Educational Society, Madras for Rs. 27,500.



£ 7. Notification issued with G.O. No. 2610, Industries, Labour and Housing (Labour), dated the 16th August 1967, making the Madras Maternity Benefit Rules, 1967 (Central Act 53 of 1961).

£ 8. Notification issued with G.O. Ms. No. 3464, Home, dated the 22nd December 1967, in regard to an amendment to the Madras Restriction of Habitual Offenders Rules, 1949, published at pages 338-362 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 22nd November 1949, as subsequently amended.

& 9. Notification issued with G.O. Ms. No. 454, Revenue, dated the 26th February 1968, regarding remission of stamp duty and registration fees in respect of instruments for transfer to State Government of assets of Alagappa Chettiar College of Engineering and Technology and Alagappa Polytechnic, Karaikudi under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) and the Indian Registration Act, 1908 (Central Act XVI of 1908).

& 10. Notification issued with G.O. Ms. No. 755, R.D. & L.A., dated the 10th April 1968, appointing the 11th day of April 1968 as the date on which the Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Act, 1968, shall come into force.

** 11. The Motor Vehicles (Madras Amendment) Ordinance, 1968 (Madras Ordinance No. 1 of 1968).

@@12. The Madras Cultivating Tenants (Special Provisions) Ordinance, 1968 (Madras Ordinance No. 2 of 1968).

%%13. The Madras Inams (Assessment) (Amendment) Ordinance, 1968 (Madras Ordinance 3 of 1968).

&14. The Madras Co-operative Land Mortgage Banks (Amendment) Ordinance, 1968 (Madras Ordinance 4 of 1968).

@@ 15. Resume of Work transacted by the Madras Legislative Assembly on 23rd January 1968.

%%16. Resume of Work transacted by the Madras Legislative Assembly from 12th to 20th February 1968.

%%17. Resume of Work transacted by the Madras Legislative Assembly from 28th February to 30th March 1968.

&18. Resume of Work transacted by the Madras Legislative Council during the period from 10th February to 1st April 1968.

xx 19. Resolution adopted by the Conference of Presiding Officers on 7th April 1968 and Address by Dr. N. Sanjiva Reddy at the emergent conference of Presiding Officers held at New Delhi on the 6th April 1968.

$ 20. Notification issued with Memo. No. 9224, E-III/68-2, Agriculture, dated the 16th March 1968, in regard to the provincialization of Manakudy lake under the Travancore-Cochin Fisheries Act, 1950.

$ 21. Notification issued with Government Memo. No. 7388 T1/68-1, Revenue, dated the 19th February 1968 in regard to the issue of addenda to the Revenue Department Notification II-1 No. 412 of 1967, dated the 12th December 1966, published at pages 205–214 of the *Fort St. George Gazette*, Part II—Section 1, dated the 8th February 1967.

$ 22. Notification issued with G.O. Ms. No. 153, Revenue, dated the 29th January 1968 in regard to the exemption from the stamp duty in respect of indemnity bonds executed by de facto guardians of minor or minors for receiving payment of Death-*cum*-Retirement gratuity to a minor or minors under the Madras Liberalised Pension Rules, 1960.

$ 23. Notification issued with G.O. Ms. No. 798, Revenue, dated the 10th April 1968 in regard to the exemption from the stamp duty in respect of conveyance deed bearing registration No. 2430 of 1967, dated the 28th August 1967, relating to the purchase of premises Nos. 4 and 4 P-A, Atkinson Road, Vepery, Madras by Shree Mahavees Jain Kalyan Singh, Madras.

$ 24. Notification issued with G.O. Ms. No. 815, Revenue, dated the 15th April 1968 in regard to exemption from stamp duty in respect of sales deed to be executed in favour of the Social Education and Research Society by the Guild of Service Central (Seva Samajam), Madras.

$ 25. Notification issued with G.O. Ms. No. 608, Revenue, dated the 13th March 1968 in regard to exemption from the stamp duty in respect of gift deed to be executed in favour of Sringeri Jagadguru Sanatana Dharma Vidya Samithi, Madras.

§ 26. Notification issued with Memo. No. 10398 T1/68-1, Revenue, dated the 21st February 1968, in regard to an amendment and errata to the Revenue Department Notification II-1 No. 4102 of 1967, dated the 25th July 1967, published at pages 1694-1701 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 27th September 1967.

§ 27. Notification issued with G.O. Ms. No. 860, Revenue, dated the 20th April 1968, in regard to the exemption from the payment of stamp duty in respect of the sale deed to be executed in favour of the Pioneer Kumaraswamy College, Nagercoil.

§ 28. Notification issued with Government Memo. No. 101655-VI/66-9, Revenue, dated the 25th April 1968, making an amendment to rule 8 of the Indian Stamp Rules, 1925, issued with the notification of the Government of India, Finance Department (Central Revenues), Simla No. C.63 Stamps/25, dated the 5th May 1925, under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).



§29. The Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Amendment Bill, 1968.

30. Notification issued with G.O. P. No. 1026, Revenue, dated the 16th May 1968, in regard to reduction in the Central Sales Tax by any dealer in respect of the sales of scientific equipment and instruments to All-India Institute of Medical Sciences, New Delhi.

61446

---

* Despatched to Members on 25—4—1968.
@ Despatched to Members on 15—5—1968.
% Despatched to Members on 30—5—1968.
£ Despatched to Members on 15—6—1968.
& Despatched to Members on 10—7—1968.
† Despatched to Members on 20—7—1968.
$ Despatched to Members on 25—7—1968.
§ Despatched to Members on 9—8—1968.
** Despatched to Members on 10—4—1968.
@@ Despatched to Members on 3—5—1968.
%% Despatched to Members on 20—6—1968.
xx Despatched to Members on 1—7—1968.

பட்டுள்ளது. இந்த ஆண்டில் 51,746 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதைச் சேர்த்து இதுவரை 3.42 லட்சம் மின்விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இப்போது புதிதாக 443 அரிசனக் குடியேற்றங்களுக்கு மின்வசதி செய்து கொடுத்துள்ளதால் 31—3—1968 தேதி வரை மின் வசதி பெற்ற அரிசன குடியேற்றங்களின் எண்ணிக்கை 2,800 ஆக உயர்ந்தது. இந்த ஆண்டில் மொத்தம் 2,722 கிலோ மீட்டர் மிக உயர் அழுத்த மின் கம்பிகளும், உயர் அழுத்த மின் கம்பிகளும் 9,842 கிலோ மீட்டர் குறைந்த அழுத்த மின்கம்பிகளும் போடப்பட்டன. ஆயிரத்து எண்ணூற்று முப்பது பங்கீட்டு மின் அழுத்த மாற்றிகள் (Distribution Transformers) அமைக்கப்பட்டன. இவ்வாண்டில் புதிதாக மொத்தம் 1.41 லட்சம் பேருக்கு மின்வசதி அளிக்கப்பட்டது. 1967-68-ல் 396.6 கோடி யூனிட் மின்சாரம் விற்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 17 சத விகிதம் கூடுதலாகும். மின்சார வாரியம் 1967-68-ல் மொத்தம் 44 கோடியே 36 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியது. பேணுதல் இயக்கச் செலவுகள், தேய்மானச் செலவுகள், நிறுவனங்கள் பொது மக்களிடம் பெற்ற கடன்களுக்குரிய வட்டி, பொது சேமநிதிக்குத் தொகை ஒதுக்கீடு ஆகியவைபோக மின்சார வாரியம் அரசாங்கத்திடமிருந்து வாங்கிய மூலதனக்கடன்களுக்கு இந்த ஆண்டு செலுத்த வேண்டிய வட்டித் தொகையான ரூ. 10.41 கோடி முழுவதையும் செலுத்தியது மட்டுமின்றி பழைய வட்டிப்பாக்கித் தொகையில் ஒரு பகுதியையும் செலுத்தியுள்ளது. மின்சார வாரியம் விற்பனை செய்யும் மின்சாரத்தில் கால் பகுதிக்கு மேல் குடியானவர்களுக்கு குறைந்த மின் அழுத்த நிலையில் ஏறத்தாழ பாதி விலைக்கே விற்கப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, இது மகிழ்வூட்டும் அரியசாதனை என்பதில் ஐயமேதுமில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மின்சார வெட்டு ஏற்படவில்லையென்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். அடுத்து வரும் ஆண்டுகளிலும் மின்சார வெட்டு எதுவும் இராதவாறு பார்த்துக்கொள்ள ஆவன செய்து வருகிறோம். தற்பொழுது நமது அண்டை மாநிலங்கள் சிலவற்றின் மின் உற்பத்தித் திறன் நாம் பயன்படுத்திக்கொள்ளும் அளவிற்கு அதிகமாக இருக்கிறது. ஆனால், இந்த நிலை எப்போதும் நீடித்திராது. எனவே, நமது மாநிலத்திற்குள் இருக்கிற மின்சார வளங்களை மேலும் மேம்படுத்துகிற வேகத்தினைக் குறைப்பதற்கில்லை. தமிழ்நாட்டில் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் மின்சாரத்தின் பேரளவுத் தேவை 110 மெகவாட்டாக இருந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இது 172 மெகவாட்டாக உயர்ந்தது. இரண்டாவது திட்ட இறுதிக்குள் இது இரு மடங்குக்கு மேல், அதாவது 381 மெகவாட்டாகப் பெருகியது. மூன்றாவது திட்டக் காலத்தில் மின்சார வெட்டும் கடுமையான கட்டுப்பாடுகளும் இருந்த போதிலும்,





பேரளவுத் தேவை மூன்றாவது திட்ட முடிவில் 717 மெகாவாட்டாக உயர்ந்தது. 1968, மார்ச் திங்களுக்குள் இந்தப் பேரளவுத் தேவை 964 மெகாவாட்டாக அதிகரித்துவிட்டது. நான்காவது திட்ட முடிவுக்குள் (1973-74) பெருகிவரும் இந்த மின்சாரத்தேவை மேலும் உச்ச நிலையை எய்தக்கூடும்.

தேவை இவ்வாறு இருக்க, சென்னை இணைப்பு 1973-74 முடிவுக்குள் 1,346 மெகவாட் மின்சாரம் மட்டுமே உறுதியாக வழங்க முடியுமென எதிர் பார்க்கப்படுகிறது. இப்போது உறுதியாக வழங்கக்கூடிய மின்சார அளவையும், பேசின் பிரிட்ஜ் மின் நிலையம், எண்ணூர் அனல் மின் நிலையம், பரம்பிக்குளம் புனல் மின் நிலையம், கோதையாறு புனல் மின் நிலையம், நெய்வேலி அனல் மின்நிலையம் ஆகியவற்றில் இப்போது அமைக்கப் பட்டுவரும் மின் நிலையங்களின் கூடுதல் உற்பத்தித் திறனையும் சேர்த்தே இவ்வாறு கணக்கிடப் பட்டுள்ளது. திட்டமிட்டவாறு கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதல்பிரிவு அதற்குள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டாலும் கூட மின்சாரப் பற்றாக்குறை இருக்கவே செய்யும். நமது அண்டை மாநிலங்களிலுள்ள புனல் மின்சார நிலையங்களும் தென்மேற்குப் பருவமழையின் மாறுபாடுகளுக்கு உட்பட்டவைகளே யாதலால் அந்த மாநிலங்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்த பின்னர், நமது மாநிலத் தேவைகளை எப்போதும் போல் ஈடு செய்வதற்கு அவற்றின் மின் உற்பத்தி கூடுதலாக இருக்குமென எதிர்பார்ப்பது பயனற்றது. நாட்டுப்பகுதிகள் அடிப்படையில் மின்சக்தி உற்பத்திக்குத் திட்டமிடுவது கவர்ச்சிமிக்க கொள்கையென்றாலும், ஒவ்வொரு மாநிலத்திலும் தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் மின் சக்தித் தேவை பெருகி வருவதை உரிய அளவில் கணக்கில் கொள்ள வேண்டும். எந்த மாநிலத்திலாவது தற்போது மின் உற்பத்தித் திறன் தேவைக்கு மிக்கதாக இருக்குமென்றாலும், அது அம்மாநிலத்தின் பெருகி வரும் தேவையில் கரைந்துவிடும். இந்த நோக்கில் எந்த மாநிலமும் தனது மின் உற்பத்தி உபரியை வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்வதாக தன்னைக் கட்டுப் படுத்திக்கொள்ள முடியாது. இதை நாம் இலட்சியக் கொள்கையாக கொள்ளலாமென்றாலும், ஒவ்வொரு மாநிலத்திலும் பெருகிவரும் மின்சாரத் தேவையையும் உற்பத்தித் திறனளவையும் ஏற்ற வகையில் ஒருமுகப்படுத்துவதன்மூலம், நாட்டுப் பகுதிகளிடையே கூட்டு மின் உற்பத்திக்கு வேண்டிய நிலைமைகளை உருவாக்க வேண்டும்.

இம்மாநிலத்தில் இன்னும் கிடைக்கக்கூடிய இயல்பான மின்சார வளங்களை மேம்படுத்துவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்வது அவசியமாகும். மின்சாரத் திட்டங்களை வடிவமைத்துக் கட்டுவதற்கு பல்லாண்டுகள் ஆகுமாதலால், முக்கியமான முடிவுகளை விரைவிலேயே எடுக்க வேண்டும். திட்ட ஆணைக் குழுவின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ள கீழ்க்கண்ட திட்டங்களை நாம் விரைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும் என அரசு வலியுறுத்தி வருகிறது.

## இணைப்பு

[41-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக்காண்க.]

**தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968-69-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும் 1967-68-ம் ஆண்டு துணைநிதிநிலை அறிக்கை குறித்தும் தமிழ்நாட்டுச் சட்ட மன்றத்தில் விவாதத்தைத் தொடங்கிவைத்து, மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.**

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968--69-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையும், 1967--68-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையும் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் வேண்டுகின்றேன்.

1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார ஆலோசனை மன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுக்கொண்டபின், தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த பிப்ரவரித் திங்களில் இந்த நிதி நிலை அறிக்கைகளை அரசாங்கத்துக்குப் பணிந்தனுப்பியது. ஆண்டு நிதி நிலை அறிக்கையும், துணை நிதி நிலை அறிக்கையும் சட்ட மன்றத்திலும் விவாதிக்கப்படலாம்; ஆனால், அவை வாக்களிப்பதற்கு உட்பட்டவை அல்ல. இந்த நிதி நிலை அறிக்கைகள் குறித்து மாநிலச் சட்டமன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் ஊன்றி ஆய்ந்து ஆவன செய்யுமென்பதில் ஐயமேதுமில்லை. கடந்த ஆண்டு மின்சார வாரியத்தின் ஆண்டு நிதி நிலை அறிக்கை விவாதத்தின்போது சட்ட மன்றத்தில் கூறப்பட்ட கருத்துக்களை ஒட்டி மின்சார வாரியம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை விவரித்து அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முன்னரே அனுப்பப்பட்டுள்ளது. ஆண்டு நிதி நிலை அறிக்கையின் முகவுரைக் குறிப்பு அதன் முக்கியமான கூறுகளை விளக்கிக் கூறுகின்றது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்ட பின்னர், முக்கியமான பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. நான் அவற்றை இங்கே சுருங்கக் குறிப்பிடுகிறேன். மைசூர் மாநிலத்திலிருந்து பெறுகின்ற மின்சாரத்தை ஆண்டொன்றுக்கு சுமார் 30 கோடி யூனிட் மின்சாரம் உபயோகிப்பதற்காக அதன் விலையை யூனிட் ஒன்றுக்கு 9 காசிலிருந்து சராசரி ஏறக்குறைய 4.66 காசாகக் குறைக்க மைசூர் மாநிலத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மின்சார வாரியம் திங்கள்தோறும் நெய்வேலியிலிருந்து விலைக்கு வாங்குகிற மின்சார யூனிட் அளவு குறித்தும் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பரேஷனுடன் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. அமைச்சர்கள் நிலையில் நடத்திய உரையாடல்களின் விளைவாக மற்றோர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் நெய்வேலி மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு 5.2 காசிலிருந்து 5.9 காசாக



உயர்த்தப்பட்டுள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு 52 காசாக இருப்பது 6.78 காசாக உயர்த்தப்பட வேண்டுமெனக் கோரியது. யூனிட் ஒன்றுக்கு 5.2 காசு என்ற விதம் 1964-ம் ஆண்டில் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றும், அதன் பின்னர், குறிப்பாக ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதிலிருந்து, உற்பத்திச் செலவு கூடி விட்டது என்றும் விலை உயர்வுக்கு அது காரணம் காட்டியது. கழக அதிகாரிகள், இந்திய அரசு, மாநில அரசாங்கம் ஆகியவர்களிடையே இது குறித்து முழு அளவில் விவாதம் நடைபெற்றது. அமைச்சர்களிடையே விவாதம் நடைபெற்றபோது, முதலமைச்சரும் நானும் அதில் பங்கு கொண்டோம். இந்திய அரசின் உருக்கு—சுரங்கம்—உலோகப் பொருள் அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் நாம் விளக்கிய நிலையை நன்கு உணர்ந்து நெய்வேலி மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 5.9 காசு என்ற விதத்தில் விலை வைத்துக் கொள்ளலாமென்றும் இந்த விதம் 4 ஆண்டுக்காலம் செயலிலிருக்கலாமென்றும் அவர் ஒப்புக் கொண்டார். கட்டணப்பட்டியல் தயாரிக்கும் பணியாளர்கள், பட்டியல் கட்டணம் வசூலிக்கும் பணியாளர்கள், பண்டகசாலைப் பணியாளர்கள் ஆகியோருக்கு இடைக்கால உதவித்தொகை, நகர ஈட்டுப்படி, பணிச்சுமை அளவுகள் ஆகிய சிக்கல்கள் பல நாட்களாகத்தீராமல் இருந்தன. இவை குறித்து மின்சார வாரியம் தனது பணியாளர்களுடன் நான்கு உடன்படிக்கைகளைச் செய்துள்ளது. இந்த உடன்படிக்கைகளின் உட்கூறுகளை நான் பின்னர் விளக்குவேன். மின்சார வாரியப் பிரதிநிதிகளும், பணியாளர் பிரதிநிதிகளும் பொறுமையுடனும் நட்புறவு முறையிலும் உரையாடல்கள் நடத்தியதன் பயனாக இந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு காண முடிந்தது நல்ல அறிகுறியாகும். இதன் விளைவாக மனக்கசப்பும் மனநிறைவுக் குறைவும் மறைந்து போய் நல்லெண்ணமும், கூட்டுறவும் ஒருவரையொருவர் நம்பும் சூழ்நிலையும் உருவாகியுள்ளன. மின்சாரவாரிய அதிகாரிகளும் பணியாளர்களும் மீண்டும் தத்தம் பணிகளில் மன நிறைவுடன் முனைந்து நாட்டம் செலுத்த முடிந்துள்ளது.

மின் சக்தியின் நன்மைகளை பண்ணைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும், வீடுகளுக்கும் தெருக்களுக்கும் இயன்ற பெருமளவில் வகை செய்து தருவதே நமது கடமை ஆயினும் வரி செலுத்துவோருக்குச் சுமை ஏற்படுத்தாமல் இவற்றையெல்லாம் செய்யவேண்டும். இந்த இரு குறிக்கோள்களையும் ஒரே சமயத்தில் நிறைவேற்றுவது எளிதல்ல என்றாலும்கூட, இவற்றை நல்ல வகையில் நிறைவேற்றியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துடன் இணைத்துள்ள விவர அறிக்கைகளும் விளக்கப் படங்களும், மின் உற்பத்தி செய்தல், மின்சாரம் அனுப்புதல், பங்கிட்டு அளித்தல் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள வியத்தகு முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும். 1967-68-ம் ஆண்டில் 3,210 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் இதுவரை 9,354 கிராமங்களுக்கும், 18,877 சிற்றூர்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்

(1) நீலகிரியில் பாண்டியாறு—புன்னப்புழா புனல் மின்சாரத் திட்டம் (100 மெ. வா.)

(2) ஆனைமலையில் கடம்பாறை புனல் மின்சாரத் திட்டம் (35 மெ. வா.).

(3) எண்ணூர் அனல் மின் திட்டத்தை விரிவுபடுத்துதல் (110 மெ. வா.).

(4) சோளாத்திபுழா புனல் மின்சாரத் திட்டம் (60 மெ. வா.).

(5) நடுவட்டம் புனல் மின்சாரத் திட்டம்.

தமிழ்நாடு மின்சார வாரியம் மின் நிலையம் கட்டும் முதல்தர பணியாளர் அமைப்பு ஒன்றை பல ஆண்டுகளில் உருவாக்கியுள்ளது என்பதை நான் ஈண்டுக் குறிப்பிட விழைகின்றேன். இப்போதுள்ள திட்டங்கள் கட்டி முடிக்கப்படுவதற்கு முன்பாகவே புதிய திட்டங்களைத் தொடங்கக்கூடுமானால், அனுபவ முதிர்ச்சி பெற்ற பொறியாளர்களையும், தேர்ச்சியுள்ள பணியாளர்களையும், இதர பணியாளர்களையும் அவற்றில் பயன்படுத்திக் கொள்ளலாம். திட்ட ஆணைக் குழுவின் ஒப்புதலை பெறவும் புதிய திட்டங்களை விரைந்து மேற்கொள்ளவும் நாம் முயற்சி செய்து வருகிறோம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கம் 1969 ஏப்ரல் முதல் நாளிற்கு ஒத்திப்போடப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். அதுவரை ஆண்டுத் திட்டங்களே வகுக்கப்படுகின்றன. நிறைவேற்றப்பட்டுவருகிற திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதும், முக்கியமான இடையீடுகளை நிறைவு செய்வதுமே இந்த ஆண்டுத் திட்டங்களின் முக்கியக் குறிக்கோளாகும். திட்ட ஆணைக் குழு ஏற்பளித்துள்ள 1967-68-க்குரிய ஆண்டுத் திட்டம் மின்சாரத்தின்கீழ் ரூ. 30.60 கோடி செலவிட வகை செய்துள்ளது. ஆனால், நடைமுறையில் இதைவிட அதிகமாகச் செலவு செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் 1967-68-ல் செய்த செலவு 35.04 கோடி ஆகும். எண்ணூர் அனல் மின்சாரத் திட்டத்தின் தேவைகள் காரணமாகவும், விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கும் திட்டத்தை விரைந்து நிறைவேற்றியதன் காரணமாகவும் திட்டச் செலவு பெருகியுள்ளது.

எண்ணூர் அனல் மின்சாரத் திட்டத்தைப் பொறுத்தவரை, பெரும்பாலான யந்திரங்கள் உரிய காலத்தில் வந்து சேர்ந்தன. ஒப்பந்தப் பொறுப்பின்படி, இவற்றிற்கு உடனடியாகத் தொகை செலுத்தவேண்டி வந்தது. இம் மாநிலத்தில் உணவு உற்பத்தி நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக, கிராமப்புற மின் இணைப்புக் குறிக்கோள் அளவை உயர்த்த வேண்டியது அவசியமாயிற்று. முதலில் ஒதுக்கிய 4 கோடி ரூபாயைக்கொண்டு 16,000 விசையேற்றங்களுக்குமட்டுமே மின் இணைப்பு கொடுக்க முடியும். இது பின்னர் ரூ. 6 கோடியாகவும், அதன் பின் ரூ. 7.5 கோடியாகவும் உயர்த்தப்பட்டது. மின்சாரத்தை அனுப்புதல்,



பங்கிடுதல் என்பதன்கீழ் சாட்டப்பட்ட உயர் அழுத்த மின் கம்பிச் செலவு நீங்கலாக, கிராமப்புற மின் இணைப்புச் செலவு ரூ. 9.07 கோடியாக இருந்தது. இந்த ஆண்டில் 33,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதெனக் குறிக்கோள் அளவு முடிவு செய்யப்பட்டது. ஆனால், 51,746 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் அதிக அளவில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து நீடிக்குமென்றாலும், குறிக்கோள் அளவைவிட சாதனை விஞ்சியிருப்பது கண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வுறுவார்கள்.

விசையேற்றங்களுக்கு வசதியளிக்கும் இந்த வேலைத் திட்டத்தின் முக்கியத்துவத்தை அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது. கிராமப்புறங்களுக்கு மின் இணைப்பு வழங்கும் இந்த முக்கிய வேலைத் திட்டம் நிறைவேற்றப்படும் வேகம் தணியாமல் பார்த்துக் கொள்ளவும் போதுமான அளவு நிதி வசதி தேட எல்லா முயற்சியும் மேற்கொள்ளப்படும் என்று நான் இம் மன்றத்திற்கு உறுதி கூறுகிறேன். கிராமப்புற மின் இணைப்புக்காக ரூ. 5 கோடி கூடுதலாக ஒதுக்குமாறு மத்திய வேளாண்மை அமைச்சருக்கு எழுதியுள்ளோம். இந்திய அரசு இவ் வேலைத் திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கூடுதல் நிதியை ஒதுக்கிக் கொடுக்குமென நம்புகின்றோம்.

கிராமப்புறங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கும் நோக்கத்துடன்தான் மாயூரம்—மன்னார்குடி—திருவாரூர் உரிம நிறுவனம் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டு, 1968 மே 15-ம் நாளன்று மின்சாரவாரியத்திற்கு மாற்றப்பட்டது. இப்பகுதிகளில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கும் பணி விரைந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. கும்பகோணம், நாகப்பட்டினம், செங்கோட்டை உரிம நிறுவனங்களைக் கையகப்படுத்துவதைப் பொறுத்தவரை, அவற்றை அரசு கையகப்படுத்தப் போவதாக அறிவித்துவிட்டது என்றாலும், இந்த நிறுவனங்கள் 'ரிட்' மனு கொடுத்து, மேல் நடவடிக்கைகளைத் தடை செய்துவிட்டதால் இந்த நிறுவனங்களை அரசு மேற்கொள்ள இயலவில்லை. கும்பகோணம், நாகப்பட்டினம், மின்சார நிறுவனங்களின் மனுக்களை அண்மையில் உயர் நீதி மன்றம் தள்ளிவிட்டது. செங்கோட்டை மின்சார நிறுவன வழக்கில் இன்னும் தீர்ப்பு அளிக்கப்படவில்லை.

தெரு விளக்குகள் பற்றிய நிலைமையை நான் இங்கு எடுத்துக் கூற விழைகிறேன். சென்னை மாநகராட்சி போன்ற சில உள்ளாட்சி மன்றங்கள் தெரு விளக்குகளைப் பேணி வரும் பொறுப்பினை மேற்கொண்டுள்ள போதிலும், பெரும்பாலான உள்ளாட்சிகளில் மின்சார வாரியமே தெரு விளக்குகளைப் பேணி வருகின்றது. திருகுமூடி மின் குமிழ்களை வீடுகளில் பயன்படுத்த முடியாது; ஆதலால் அத்தகைய மின் குமிழ்களையே தெரு விளக்குகளுக்குப் பயன்படுத்துவது பழக்கமாக இருந்து வரு

கிறது. இதனால் இம் மின் குமிழ்கள் திருட்டுப்போவது குறைகிறது. இத்தகைய மின் குமிழ்களைத் தயாரிப்பதற்கு வெளிநாட்டிலிருந்து பித்தளை இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால், இத்தகைய மின் குமிழ்கள் போதிய அளவில் கிடைப்பதில்லை. பழுதடைந்த தெரு மின் விளக்குகளுக்குப் பதிலாக, புதிய மின் குமிழ்களைப் பெறுவதில் மின்சார வாரியம் இடர்ப்படுகின்றது. ஆகவே திருகுமூடி மின் குமிழ்களுக்குப் பதிலாக (Bayonet Cop) சொருகுமூடி மின் குமிழ்களை வாங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இவை திருட்டுபோவதற்கு வாய்ப்பிருப்பினும் அவசியத்தைப் பொறுத்து இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது. மூன்று லட்சம் தெரு விளக்குகளுக்கு இவ்வகை சொருகு மின் குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவை தாராளமாகக் கிடைப்பதால் இந்த மின் குமிழ்கள் பழுதடைந்து போனாலும் அவற்றிற்குப் பதிலாக, புதிய மின் குமிழ்களைப் பொருத்த முடியும். எஞ்சிய தெரு விளக்குகளுக்கும் இவ்வகையான மின் குமிழ்களைப் படிப்படியாக பொருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1968-69-க்கான ஆண்டுத் திட்டத்தில், மின்சாரத் திட்டங்களுக்கென ரூ. 3,217 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஏற்றுள்ள பொறுப்புகளின் அடிப்படையிலும், சென்ற ஆண்டைப் போலவே கிராம மின் வசதி திட்டத்தை தொடர்ந்து விரைவாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தைக் கருதியும், 1968-69-ம் ஆண்டில் மின்சார திட்டங்களுக்கான இறுதிச் செலவும் ஆண்டுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளதைக் காட்டிலும் அதிகமாயிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தேவையான கூடுதல் நிதி வசதிகளைப் பெறவும் கிடைக்கிற நிதி வசதிகளுக்குள் செலவைக் கட்டுப்படுத்தவும் வாரியமும் அரசாங்கமும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

தற்போது பேரவை முன் வைக்கப்படுகிற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ஐந்து முக்கிய விவர அறிக்கைகள் அடங்கியுள்ளன. மூலதன வருவாய், மூலதனச் செலவு, ரெவின்யூ வருவாய்கள், ரெவின்யூச் செலவு, கடன்களும் வைப்புத் தொகைகளும் ஆகியவற்றைக் குறித்த விவர அறிக்கைகளே அவை. 1967-68 திட்ட மதிப்பீட்டில் கண்டுள்ள தொகைகளுக்கு மேற்பட்டு, மின்சாரத் திட்டங்களின் மூலதனச் செலவிற்காகவும், வாரியப் பணியாளர்களுக்கு வழங்கும் கடன்களுக்காகவும் முன் பணங்களுக்காகவும் தேவைப்படுகிற தொகைகளை 1967-68 துணை நிதி நிலை அறிக்கை காட்டுகின்றது. ஆண்டு நிதி நிலை அறிக்கையின் முகவுரைக் குறிப்பு நிதி நிலைமை முழுவதையும் சுருக்கமாக விளக்குகின்றது.

மூலதன வரவினங்களையும் மூலதனச் செலவினங்களையும் பொறுத்தவரையில், நிலைமை கீழ்க்கண்டவாறு உள்ளது.



ஆண்டு நிதிநிலை அறிக்கையின் A-I விவர அறிக்கையில் காட்டியுள்ளபடி, இந்த ஆண்டில் வாரியத்தின் மூலதன வருவாய் ரூ. 34.57 கோடியாகும். இதில் ரூ. 15.25 கோடி அரசாங்கக் கடன்களிலிருந்து கிடைக்கும். இதற்குக் கூடுதலாக, பிற வாயில்களிலிருந்து ரூ. 6 கோடி கடன்கள் கிடைக்கும். மேலும் வாரியத்தின் உள் வருவாய் வாயில்களான தேய்மானச் சேம நிதி, பிற சேம நிதிகள் போன்றவற்றிலிருந்து ரூ. 9.71 கோடி கிடைக்கும். வைப்புத் தொகைகளின் அதிகரிப்பின் மூலம் ரூ. 3.25 கோடி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1968-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அவ்வமயம் கிடைக்குமெனத் தோன்றிய நிதிவாயில்களின் அடிப்படையில் இந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. வாரியம் பெரியதொரு திட்டத்தை நிறைவேற்ற இயலும் பொருட்டு, முன்பு திட்டமிட்டதைக்காட்டிலும் இன்னும் அதிகமாக நிறுவனக் கடன்களைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆண்டு நிதி நிலை அறிக்கையின் A-II விவர அறிக்கையானது, (1967-68 திருத்த மதிப்பீட்டுடன்) 1968-69-ல் பல்வேறு திட்டங்களுக்கென எதிர்பார்க்கப்படுகிற மூலதனச் செலவினைக் காட்டுகின்றது. சென்ற ஆண்டில், திருத்த மதிப்பீட்டில் 34.99 கோடி ரூபாய் மொத்த மூலதனச் செலவு காட்டப்பட்டுள்ளது. ஆனால், செலவாகிய தொகையோ ரூ. 35.04 கோடியாகும். இந்த ஆண்டில் மூலதனச் செலவுக்கென ரூ. 32.07 கோடி மட்டுமே திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. 1967-68-க்கான திருத்த மதிப்பீட்டினைக் காட்டிலும் அத் தொகை குறைவாகும். கிராம மின்சாரத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட 6 கோடி ரூபாய் இதில் அடங்குகிறது. 25,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்க மட்டுமே அத் தொகை போதுமானதாக இருக்கும். ஆயினும், வாரியம் தனது நிதி வசதிகளை அதிகரிப்பதைப் பொறுத்தும், அதற்கு நிறுவன நிதி உதவி அதிகமாகக் கிடைப்பதைப் பொறுத்தும், அரசாங்கம் வாரியத்துக்கு இந்த ஆண்டில் போதிய நிதிகள் வழங்கும் வாய்ப்பிற்கு உட்பட்டும், 50,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வாரியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் மூலதனச் செலவில் மிகப்பெரிய பங்கு எண்ணூர் அனல் மின்சாரத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 340 மெகாவாட் திறனுள்ள இந்த திட்டத்திற்கென ரூ. 20 கோடிக்குமேல் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டு விரைவிலேயே செயல்படத் தொடங்கவேண்டுமாயின், ரூ. 15 கோடி நிதி தேவைப்படும். தற்போது கட்டிட வேலைகள் நிறைவேறி வருகின்றன. 60 மெகாவாட் திறனுள்ள முதலாவது, இரண்டாவது யூனிட்டுகளுக்கான கொதிகலன்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இந்த இரண்டு யூனிட்டுகளும் 1969-70-ல் முடிக்கப்படும் என்று எதிர்

பார்க்கப்படுகிறது. எஞ்சியுள்ள 110 மெகவாட் திறன் உள்ள இரு யூனிட்டுகள் 1970-71-ல் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு புனல் மின்சாரத் திட்டம் 1969-70-ல் நிறைவேற்றி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டு மின்சார நிலையங்களை நிறுவி, 100 மெகாவாட் உற்பத்தித் திறனைப் பெறுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1968-69 திட்ட மதிப்பீட்டில் இத் திட்டத்திற்காக ரூ. 300 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம்–ஆழியாறு புனல் மின்சாரத் திட்டத்தின்கீழ், 30 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் சர்க்கார்பதி மின்சார நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. 1967-68-ல் 5 கோடி யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. ஆழியாறு மின்சார நிலையத்தின் சுழல் தட்டு யந்திரம் (டர்பைன்) (60 மெகாவாட்) தற்போது நிறுவப்பட்டு வருகிறது. 1969-ம் ஆண்டு முற்பகுதியில் அவ்வேலை முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சோலையாறு I-வது மின்சார நிலையம் (35 மெகாவாட்) சம்பந்தமாக சுழல் தட்டு இயந்திரத்தையும் மின்சார உற்பத்தி இயந்திரங்களையும் நிறுவும் வேலையும் மின்சார நிலையக் கட்டிட வேலையும் முடிவுறும் தறுவாயில் உள்ளன. 1968-ம் ஆண்டின் பிற்பகுதியில் அது செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சோலையாறு IIவது மின்சார நிலையத்திலும் (25 மெகாவாட்) வேலை நிறைவேறி வருகிறது. 1969-70-ல் அது உற்பத்திக்குத் தயாராகிவிடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. 1968-69 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத் திட்டத்திற்காக ரூ. 220 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

குந்தா மூன்றுவது நிலைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மொத்தம் 425 மெகாவாட் திறனுள்ள ஐந்து மின்சார நிலையங்கள் அனைத்தும் செயல்பட்டு வருகின்றன. 1967-68-ல் இந்த ஐந்து மின்சார நிலையங்களிலும் சேர்ந்து 125.4 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. 1968-69-ல் இத் திட்டத்திற்காக ரூ. 11 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கு வராகபள்ளத்திலிருந்து கிழக்கு வராகபள்ளத்துக்கும் அவலாஞ்சுக்கும் எஞ்சியுள்ள சுரங்கப் பாதை வேலைகளை நிறைவேற்றவே முக்கியமாக அந்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

நெய்வேலி மின்சார உற்பத்தித் திட்டத்தின் தற்போதைய திறனாகிய 400 மெகாவாட்டை 1969-70-க்குள் 600 மெகாவாட்டாக உயர்த்த நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது என்பதையும் இங்கு நான் கூற விழைகின்றேன். தமிழக மின் இணைப்பிற்கு மிக அதிக அளவுக்கு மின்சாரம் வழங்குகிற தனியொரு நிறுவனம் நெய்வேலி



பழுப்பு நிலக்கரிக் கழகந்தான். அது கூடுதலாக உற்பத்தி செய்கிற மின்சாரம் முழுவதையும் வாங்க தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்புக்கொண்டுள்ளது.

கல்பாக்கம் அணுமின்சாரத் திட்டம் மத்திய அரசின் மற்றொரு திட்டமாகும். எதிர்காலத்தில் நமது மின்சாரத் தேவைகளை நிறைவு செய்ய அது பெருமளவுக்கு உதவும். 400 மெகாவாட் உற்பத்தித் திறன் உள்ள இத் திட்டம் குறித்த வேலைகள் நிறைவேறி வருகின்றன. அன்னியச் செலாவணி வசதிகளைப் பெறுதல் உள்ளிட்ட தேவையான எல்லா ஏற்பாடுகளும் எதிர்பார்க்கிறபடி முடிந்துவிடுமாயின், 1973-ம் ஆண்டிற்குள் இத் திட்டம் செயல்படத் தொடங்கக்கூடும் என்று தோன்றுகிறது.

வாரியத்தின் ரெவின்யூ வரவினங்கள், ரெவின்யு செலவினங்கள் குறித்து இங்கு நான் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆண்டு நிதி நிலை அறிக்கையின் **A-III** விவர அறிக்கை ரெவின்யூ வரவினங்கள் சம்பந்தப்பட்டதாகும். 1968—69-ல் ரூ. 50.34 கோடி மொத்த வருவாய் கிடைக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. முந்திய ஆண்டின் திருத்த மதிப்பீடு ரூ. 44.20 கோடியாகும்.

**A-IV** விவர அறிக்கை ரெவின்யூச் செலவினங்களைக் குறிப்பிடுகிறது. மதிப்பிடப்படுகிற வருவாயாகிய ரூ. 50.34 கோடியில் எரிபொருள் உட்பட, மின்சார உற்பத்திச் செலவுகள் ரூ. 5.51 கோடியாகும் என்று மதிப்பிடப்படுகிறது. நெய்வேலி, மைசூர் ஆகிய இடங்களிலிருந்து, சுமார் 190 கோடி யூனிட் மின்சாரத்தை வாங்குவதற்கு ரூ. 10.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தேய்மானச் சேம நிதி, பிற சேம நிதிகளுக்குத் தொகைகளை வழக்கமாக ஒதுக்கிய பிறகும், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் வாங்கிய கடன்கள் மீதான வட்டிக்கும் ஏனைய செலவுகளுக்கும் முடிவு செய்யப்பட்ட முறைவைப்பினை யொட்டி தொகை ஒதுக்கிய பிறகும், அரசாங்கத்துக்கு வட்டி செலுத்துவதற்கென சுமார் ரூ 13.04 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அரசாங்க ரெவின்யூ வருவாய்க்கு வாரியத்தின் மூலம் ரூ. 13.04 கோடி கிடைக்கும்.

1962-63 வரையில், வாரியம் தனது வருவாய்களிலிருந்தே வட்டிச் செலவுகளை முற்றிலும் கொடுத்து வந்தது. 1963-64-ல் அதனால் அவ்வாறு செய்ய இயலவில்லை. நெய்வேலியிலிருந்து மின்சாரத்தை வாங்க அதிகச்செலவானதாலும், வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின்சாரம் வழங்கிய வகையில் விரயம் ஏற்பட்டதாலும் வாரியம் அவ்வாறு தனது வரவினங்களிலிருந்தே வட்டிச் செலவுகளை ஏற்க இயலவில்லை. இப் பற்றுக்குறை

காரணமாக, 1963 நவம்பர் 1-ம் தேதி முதற்கொண்டு ஒரு மேல்வரி விதிக்கப்பட்டது. பின்னர் 1964 டிசம்பர் 1-ல் மின்சாரக் கட்டணத்துடன் மேல் வரியை இணைத்து மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. அதன் விளைவாக, வட்டிச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கு மட்டுமல்லாமல் வட்டி நிலுவைகளின் ஒரு பகுதியைக் கொடுத்துத் தீர்ப்பதற்கும் போதுமான வருவாயை வாரியம் 1964-65-ல் ஈட்டியது. ஆயினும், 1965-66, 1966-67 ஆண்டுகளில் பருவமழை பொய்த்து விட்டதாலும், மைசூரிலிருந்து மின்சாரத்தை அதிக விலை கொடுத்து வாங்கியதாலும் வாரியத்தின் நிதி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. அந்த ஆண்டுகளில் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய முழு வட்டிச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்குப் போதுமான வருவாய் வாரியத்துக்கு இல்லாமற் போய்விட்டது.

1967-68-ல், நல்ல பருவமழை பெய்ததாலும், மின்சார உற்பத்தி செய்வதிலும் மின்சாரம் வாங்குவதிலும் பயனுள்ள முறைகளைக் கைப்பிடித்தலாலும், வாரியத்துக்கு அரசாங்கம் வழங்கிய மூலதனக் கடன்கள்மீது 1967-68-ல் சேர்ந்து வந்த வட்டித் தொகையான ரூ. 10.41 கோடிக்குச் சற்று கூடுதலாக நிகர வருவாய்க் கணக்கில் நிதி ஒதுக்குவது வாரியத்துக்கு இயன்றது. ஆண்டுக் கணக்குகளின் தணிக்கை இன்னும் முடியவில்லை என்பதால், மேற்குறிப்பிட்ட ரூ. 10.41 கோடிக்கு மேற்பட்டு, வட்டித் தொகை நிலுவைகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கென நிகர வருவாய்க் கணக்கில் ரூ. 87 லட்சத்துக்குமேல் கிடைக்குமெனத் தோன்றுகிறது என்றுதான் இப்போது என்னால் கூற முடியும். வட்டித் தொகை நிலுவைகளுக்கென முந்திய ஆண்டுக் கணக்குகளில் எந்த நிதி ஒதுக்கமும் செய்ய இயலவில்லை. இவ் வட்டித்தொகை நிலுவைகள் 1966--67 முடிவில் ரூ. 1.95 கோடியாக இருந்தது. அது இப்பொழுது ரூ. 1.08 கோடியாக குறைந்துள்ளது. இதை நடப்பு ஆண்டிலும் அடுத்துவரும் ஆண்டுகளிலும் தீர்த்துவிடக்கூடுமென வாரியம் நம்புகிறது.

1968-69 ஆண்டின் நிதி வாய்ப்புகளைப் பொறுத்த வரையில், தற்போது வாரியம் எந்தெந்த இனங்கள் குறித்து தவிர்க்க இயலாத கூடுதலான செலவுகளைச் செய்ய வேண்டியுள்ளது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். அவையாவன; (1) அகவிலைப்படி வீதங்கள் உயர்த்தப்பட்டன; நகர ஈட்டுப்படி வழங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டது; (2) நெய்வேலியிலிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலை அதிகரித்தது; (3) நிலக்கரி விலைகளும் ரயில் கட்டண வீதங்களும் உயர்ந்தன. மைசூரிலிருந்து வாங்கப்படும் மின்சாரத்தின் விலை பாதியாகக் குறைக்கப்பட்டது. ஆனால், நிகரச் செலவிற்கும் விற்பனை வீதத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டினைக் குறைக்கத்தான் இது



உதவுகிறது. வாரியம் தனது செலவுகளையும் நிர்வாகச் செலவுகளையும் குறைக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. பணியாளர் குறித்த செலவு, பயணப் படிகள் செலவு, அலுவலகச் செலவுகள் முதலியவற்றைக் குறைப்பதற்கு வாரியம் சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்குவது குறித்த அடிப்படைச் சிக்கல்களைத் தீர்க்க வாரியம் மும்முர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மின்பளுவிற்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய மிகச் சிக்கனமான ஆதாரங்களைத் தெரிந்தெடுக்கவும், பழையனவும், திறன் குறைந்தவையுமான அனல் மின்சார நிலையங்களை எந்தக் குறைந்த அளவுக்குப் பயன்படுத்த இயலுமோ அந்த அளவிற்குப் பயன்படுத்தவும் வாரியம் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. பணித் திட்டங்கள், தற்போதைய இருப்புகள் இவற்றையொட்டி, சாதனங்களை வாங்குவதற்கான செயற்குறிப்புகள் கவனமாக ஆய்வு செய்யப்படுகின்றன. இறுதியாக, மின்சாரப் பங்கீட்டில் ஏற்படுகிற மின்சார இழப்பைக் குறைக்க சிறப்பான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாரியத்தின் மின் இணைப்புப் பளுவிலிருந்து சுமார் 40 சதவீத மின்சாரம் வேளாண்மைப் பணிகளுக்காக வழங்கப்படுகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இப்பணிகளுக்காக மின்சாரம் வழங்கும்போது பரவலாக மின் இணைப்பு கொடுக்க வேண்டியிருப்பதால், மின்சார விரயம் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. மேலும், வேளாண்மைக்காக வழங்கப்படும் மின்சாரம் ஆண்டில் சில திங்கள்களுக்குப் பயன்படுத்தப்படாமலேயே இருக்கின்றது. அந்தக் கால அளவில் வட்டி, தேய்மானம் போன்ற செலவுகள் தொடர்ந்து ஏற்கப்படுகிறது. எனவே, "சில்லறையில்" மின்சாரம் வழங்குவதற்கான யூனிட் செலவுகள் அதிகமாகிவிடுகின்றன. வேளாண்மை மின் இணைப்புக் காரியங்களுக்காக சுமார் 40 சதவீத மின்சாரம் வழங்கப்பட்டாலும், சுமார் 25 சதவீத மின்சாரம்தான் உண்மையில் பயன்படுத்தப் படுகிறது எனலாம். வேளாண்மை மின் இணைப்புக்கானத் தேவை அதிகமாகி வருவதால், செலவு குறைவதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பது இயற்கையே.

வாரியத்தின் கிராம மின்சார வசதித் திட்டங்களில் பெரும்பாலானவை மூலம் சுமார் 10 சதவீத மொத்த ஆதாயம்தான் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத் தொகையைக் கொண்டு வட்டியையும் தேய்மானச் செலவையும் தீர்த்துவிட இயலாது. அத்துடன் இயக்க, பேணுதல் செலவுகளையும் செய்ய வேண்டியுள்ளது. மேலும், உணவு உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் விரைவுத் திட்டம் குறித்து வாரியம் சிறப்பான நாட்டம் செலுத்தி வருகின்றது. அத் திட்டங்களிலிருந்து கிடைக்கக்கூடிய மொத்த வருவாய் மிக்க

குறைவாக இருக்கும் என்பதையும் வாரியம் பொருட்படுத்தவில்லை. 1968, ஜூன் இறுதிவரையில், 680 வடிமுனைக் குழாய்களும், 294 விசையேற்றங்களும் இணைக்கப்பட்டுள்ளன. 1968-69-ல் மேலும் 1,500 விசையேற்றங்களைப் பொருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 75 லட்சம்; இப்பகுதிக்கு இத்தொகையை ஏற்கெனவே, அரசாங்கம் அனுமதித்துள்ளது. இப்பகுதியில் மின் இணைப்புக் கொடுக்கும் பணிகள் முடிவுறாமல் நிற்பதை முடிக்க மேலும் 38 லட்சம் ரூபாய்க்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இப்பகுதிக்கு மொத்தம் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 113 லட்சம் ஆகும். இப்பகுதியின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்புகளை கருத்திற்கொண்டு இத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வாரியத்தை முன்னேக்கியுள்ள பெரும் செயல்களையும் அவற்றை எய்துவதற்குத் தேவைப்படும் நிதி வசதிகளையும் பற்றிக் குறிப்பிட்டேன். இப்பெரும் சாதனையை அடைய இந்த வாரியத் தொழிலாளர்களின் சிறந்த முயற்சிகள் நன்கு பயன்படுத்தப்படவேண்டும். ஏறத்தாழ 65,000 தொழிலாளர்களில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களும் இதர தொழிலாளர்களுமாக பலதிறப்பட்டவர்கள் இம்மாநிலத்தின் வெகு தொலைவிலுள்ள கிராமங்களில் பரந்து பணியாற்றி வருகின்றனர். அவர்களிடையேயும் அவர்களுக்கு வாரியத்திடமும் நெருங்கிய தோழமை உணர்வு இருப்பது இன்றியமையாததாகும். இம்மாநிலத்து மக்களுக்கு வாரியம் ஆற்றும் கடமைகளில் அதன். தேவைகளுக்கு அவர்கள் பொறுப்பாக இருந்து பணியாற்ற வேண்டும்; அதே போன்று வாரியமும் தொழிலாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன் வரவேண்டும்.

மின்சார வாரிய வரவு-செலவுத் திட்டத்தின்மீது சென்ற ஆண்டு விவாதம் நடந்தபோது, கட்டண ரசீது எழுதும் பணியாளர், கட்டணம் வசூலிக்கும் பணியாளர், பண்டகசாலைப் பணியாளர் ஆகியோரின் வேலைச் சுமை நிலைமையின் தீர்க்கப்படாத சிக்கல் குறித்து உருவாகியிருந்த நிலை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கவலை தெரிவித்துப் பேசினர். குறைகளை நீக்குவதற்கு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து நான் குறிப்பிட்டுள்ளேன்; பணியாளர்களிடையே இணக்கமான நல்லுணர்வும் பொறுப்புணர்ச்சியும் நிலைக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது. பெரும் சிக்கல்கள் இப்போது நல்லமுறையில் தீர்க்கப்பட்டுள்ளன என்பதையும் வாரியமும் தொழிலாளர் பிரதிநிதிகளும் பல சிக்கல்களில் ஒப்பந்தம் கண்டுள்ளனர் என்பதையும் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அவைகள் எவ்வாறு ஏற்பட்டன, தீர்க்கப்பட்டனவென்பதைச் சுருக்கமாக விளக்குகிறேன். 1966-ல் சிக்கனக் குழு, சிக்கன நடவடிக்கைகள் பலவற்றைத் தெரிவித்தது; இந்திய பாகிஸ்தான்



தகராறு ஏற்பட்டதையொட்டி நிர்வாகச் செலவில் சிக்கனம் ஏற்பட வேண்டிய அவசரத் தேவையின் காரணமாகவே இவ்வாறு மேற்படி குழு கருத்தறிவித்தது. அவற்றில் வேலைச்சுமை அளவுகோல் ஓரளவு மாற்றியமைப்பதும் அடங்கும். 1966 ஏப்ரல் 1-ம் தேதி முதற்கொண்டு, கட்டணம் வசூலிப்போர், ரசீது எழுதுவோர், பண்டகசாலைப் பணியாளர் உட்பட அதற்கேற்ப வாரியம் வேலைச்சுமை அளவுகோலினை மாற்றியமைத்தது. இவ்வாறு திருத்தியமைக்கப்பட்டதனால் தங்கள் வேலைச்சுமை அதிகரித்ததென்றும் பதவி உயர்வு வாய்ப்புகளைக் குறைத்துவிட்டதென்றும் தொழிலாளர்கள் தொடர்ந்து முறையிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் குறைகளில் ஓரளவு நியாயம் இருப்பதாக வாரியம் உணர்ந்து, 1967, ஜூலையில் ரசீது எழுதுவோர், கட்டணம் வசூலிப்போர், பண்டகசாலைப் பணியாளர் ஆகியோருக்கு பழைய வேலை அளவே திருத்தியமைக்க முடிவு செய்தது. ஆனால் இந்த நடவடிக்கை, பணியாளர் செலவில் மிகப் பெருமளவு கூடுதலை ஏற்படுத்தியிருக்கும்; அத்தகைய நடவடிக்கைகள் மூலம் பணியின் மொத்த அளவைக் குறைப்பது, இரண்டு திங்களுக்கொரு முறை ரசீது தயாரிப்பதில் முடியும். இம்முறை தொழிலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; இறுதியாக, அரசாங்கம், மின்சார வாரியம், தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய முத்தரப்பினர் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு தெளிவுறுத்தப்பட்டது :—(1) இரண்டு திங்களுக்கொருமுறை ரசீது தயாரிக்கும் திட்டத்தின் நோக்கம் சிக்கனம் எய்துவதே; இந்த நோக்கத்தை எய்தும் மற்ற வழிகளும் ஆலோசிக்கப்படவேண்டும், (2) பெருமளவில் கூடுதலாகப் பணியாளர்களை நியமிக்கவேண்டிவரும் தேவையைத் தவிர்க்கும் வகையில் வேலை அளவில் தகுந்த அதிகரிப்புக் காட்டத் தொழிலாளர் பிரதிநிதிகள் ஒப்புக்கொண்டால், நியாயமான பதவி உயர்வு வாய்ப்புகள் ஏற்பட மேற்பார்வைப் பதவி வீதங்களில் ஏற்ற மாறுதலைக்காண வாரியம் ஆலோசிக்கும்.

இதற்கேற்ப, (1) ரசீது எழுதும் பணியாளர், (2) கட்டணம் வசூலிக்கும் பணியாளர், (3) பண்டகசாலைப் பணியாளர் சம்பந்தமாக அவர்களின் வேலை அளவையும் மேற்பார்வை வீதாச்சாரத்தையும் இணைத்து இச்சிக்கலை முழுவதும் ஆராய தொழிலாளர் பிரதிநிதிகளும், வாரியத்தின் பிரதிநிதிகளும் அடங்கிய மூன்று கூட்டுக்குழுக்கள் அமைக்கப்பட்டன. குழுக்கள் பயனுள்ள பணியை ஆற்றின. தொழிலாளர் பிரதிநிதிகளும் வாரியத்தின் பிரதிநிதிகளும், பணி நடைமுறை விதிகளை எளிதாக்க இப் பணியை விரைந்துசெய்வதற்கு அல்லது வேலை அளவு நிலைகளைச் சிறப்பாக வகுப்பதற்குப் பல வழிகளைக் காணும் முயற்சியில் நன்முறையில் பணியாற்றினர்.

ஓரளவு இதன் விளைவாகத் தொழிலாளர் பிரதிநிதிகள், வேலை அளவில் குறிப்பிட்ட அதிகரிப்பிற்கு இணங்கினர். மின்சாரம் பயன்படுத்துவோர் தொகையில் ஆண்டுதோறும் புதிதாக ஏற்பட்டு வரும் அதிகரிப்பின் அடிப்படையில் கூடுதலாகப் பெருமளவு பணியாளர்களை நியமிக்கும் அவசியத்தை உடனடியாக மேற்படி ஏற்பாடு தவிர்த்ததெனலாம். இதன் மூலம் கீழ்நிலைப்பணியாளர்களுக்கு மேற்பார்வைப் பணியாளர் வீதத்தை அதிகரிக்க வாரியத்திற்கு ஏதுவாக அமைந்தது. செலவு குறைந்து போதுமான அளவு வேலை நடைபெறவேண்டுமென்னும் வாரியத்தின் நோக்கமும் போதுமான அளவிற்குப் பதவி உயர்வு வாய்ப்புகள் ஏற்படவேண்டுமென்னும் தொழிலாளர் கோரிக்கையும் இந்த வகையில் எய்தப்பெற்றன. மேற்படி குழுவின் பரிந்துரைகளை முழுவதுமாக வாரியம் ஏற்றுக் கொண்டது ; மூன்று ஒப்பந்தங்கள் முடிவுற்றன. தமிழகத்தின் பெருமைக்கேற்ற வகையில் தொழிலாளர் பிரதிநிதிகளும் வாரியத்தின் பிரதிநிதிகளும் பொறுப்பாகவும் செயல் முறையில் தீர்வுகாணும் நிலையிலும் பணியாற்றியதற்கு அவர்களைப் பாராட்டுகின்றேன்.

இந்த ஒப்பந்தங்களினால் பயன்பெற இயலாத இவ் வாரியத்தின் பிற தொழிலாளர்கள் இருப்பதும் அவர்களுக்குக் குறைகள் இருப்பதும் எனக்குத் தெரியும். இரண்டு பக்கமும் பொறுமையுடனும் ஒத்துப்போகும் தன்மையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் செயல்பட்டால் இச் சிக்கல்களைப் படிப்படியாகத் தீர்க்க முடியுமென்று நம்புகிறேன். அதே நேரத்தில், தொடக்கத்தில் நான் கூறியதைத் திருப்பிக் கூறுகிறேன், அரசாங்கமும் மின்சார வாரியமும், இந்த மாநில மக்களுக்கு ஆற்றவேண்டிய பெரும் கடமையை எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும் ; பொது வரி செலுத்துவோரின்மீது சுமை அதிகப்படுத்தாவண்ணம் ஏழை எளிய மக்களும் மின்சாரத்தின் பயனைத் துய்க்கும் வகையில் அரசும் மின்சார வாரியமும் செயலாற்ற முனையவேண்டும். இந்த இரண்டு குறிக்கோள்களையும் எய்தியுள்ள நமது நாட்டிலுள்ள மிகச் சில மின்சார வாரியங்களில் தமிழ்நாடு மின்சார வாரியமும் ஒன்றாகும் ; பெருமைமிக்க இந்த மரபை இவ் வாரியமும் அதன் தொழிலாளர்களும் தொடர்ந்து பேணிவருவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

மின்சார வாரியம் அண்மையில் திருத்தியமைக்கப்பட்டதென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இந்த வாரியத்தின் நிர்வாகத் துறையிலும், பொறியியல் நடைமுறைத் துறையிலும், கணக்கு நிதி, வசதித் துறையிலும், தங்கள் முழு நாட்டத்தையும் செலுத்திப் பணியாற்றும் மூன்று முழு நேர உறுப்பினர்கள் இப்போது இவ்வாரியத்தில் இடம் பெற்றுள்ளனர். மேலும், பரந்த அனுபவமும், தொழில், விவசாயத்



துறைகளில் நிபுணத்துவமும் வாய்ந்த பகுதி நேர உறுப்பினர்கள் நால்வர் உள்ளனர். அவர்கள் முன்னுள்ள செயல்கள் தற்போது ஆர்வத்துடனும் தெளிவுடனும் கருத்திற்கொண்டு, குறிக்கோள்கள், விளைவுகள், செலவுகள் இவற்றை எப்போதும் கண்ணோட்டத்தில் கொண்டு அவை நிறைவேற்றப்படும் என்றும் நான் உறுதியாய் நம்புகின்றேன்.

இவை கூறி, தங்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஐந்தாண்டு திட்டங்களின் கீழ்த் தமிழ்நாட்டின் மின்சார உற்பத்தி.

| எண், இனமும், யூனிட்டும். (1) | முதலாவது திட்ட தொடக்கத்தில் 1951-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி. (2) | முதலாவது திட்ட இறுதியில் 1956-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி. (3) | இரண்டாவது திட்ட இறுதியில் 1961-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி. (4) | மூன்றுவது திட்ட இறுதியில் 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி. (5) | 1968 மார்ச் 31-ம் தேதி முடிய. (6) |
|---|---|---|---|---|---|
| **A. உற்பத்தி—** | | | | | |
| 1 நிறுவப்பட்ட திறன் அளவு மெகா வாட்டில்.* | 156 | 256 | 560 | 1,070<br>300<br>(நெய்வேலி) | 1,070<br>+400<br>(நெய்வேலி) |
| 2 மின்சக்தி பெரும் தேவை மெகா வாட்டில். | 110 | 172 | 381 | 717 | 964 |
| 3 உற்பத்தி செய்த மின்சாரமும், வாங்கப் பட்ட மின்சாரமும் பத்து லட்ச கிலோவாட்-மணிகளில். | 630 | 1,053 | 2,214 | 4,041 | 4,856 |
| **B. அனுப்புதலும், வழங்குதலும்—** | | | | | |
| 1 உயர் அழுத்த கம்பிகளின் நீளம் கிலோ மீட்டர்களில். | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 45,204 |
| 2 குறைந்த அழுத்த கம்பிகளின் நீளம் கிலோ மீட்டர்களில். | 5,728 | 13,005 | 35,352 | 73,198 | 89,632 |
| 3 மின்சக்தி பயன்படுத்துவோர் எண் ணிக்கை லட்சக் கணக்கில். | 2·5 | 4·26 | 7·7 | 13·59 | 16·23 |
| 4 இ. உயர் அழுத்த துணை நிலையங் களின் எண்ணிக்கை. | 31 | 48 | 70 | 98 | 115 |
| 5 உயர் அழுத்த துணை நிலையங்களின் எண்ணிக்கை. | 25 | 41 | 73 | 103 | 118 |
| 6 பங்கிட்டு அளிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை. | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 20,330 |
| **C. கிராமங்களுக்கு மின்சார வசதி—** | | | | | |
| 1 மின்சார வசதி அளிக்கப்பட்ட கிராமங் கள், குக்கிராமங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை. | 1,813 | 3,543 | 10,760 | 22,137 | 28,269 |
| 2 வேளாண்மை பம்பு செட்டுகளின் எண்ணிக்கை. | 14,373 | 32,440 | 1,17,697 | 2,56,594 | 3,41,649 |
| **D. செலவும் வருவாயும்—** | | | | | |
| 1 மூலதனச் செலவு (ரூபாய் கோடிக் கணக்கில்). | 23·82 | 54·01 | 1,33·21 | 2,53·28 | 3,15·46 |
| 2 மொத்த வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்). | 3·18 | 5·94 | 15·29 | 34·67 | 44·36 |
| 3 ஒருவருக்குப் பயன்படும் மின்சக்தி (யூனிட்டுகளில்). | 12 | 21 | 60 | 92 | 105 |

* மெகாவாட்—1000 கிலோவாட்.

**ஆண்டுத் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள மின்சாரத் திட்டங்களுக்கான செலவு.**

(ரூபாய் லட்சத்தில்.)

| திட்டத்தின் பெயர். (1) | 1966-67-ல் ஏற்பட்ட செலவு. (2) | 1967-68-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1967-68-ம் ஆண்டுக்கான திருத்தியமைத்த மதிப்பீடு. (4) | 1967-68-ல் ஏற்பட்ட செலவு. (5) | 1968-69-ம் ஆண்டுக்கு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (6) |
|---|---|---|---|---|---|
| **தொடர்ந்துவரும் திட்டங்கள்—** | | | | | |
| 1 பெரியாறு நீர் மின்சாரத் திட்டம் II-ம் நிலை. | 3·60 | .. | (—) 1·42 | (—) 1·59 | 0·23 |
| 2 குந்தா நீர் மின்சாரத் திட்டம் III-ம் நிலை *. | 2,15·41 | 1,04·00 | 68·36 | 57·03 | 11·00 |
| 3 மேட்டூர் சுரங்கப்பாதைத் திட்டம்*. | (—) 16·85 | .. | (—) 11·00 | (—) 7·86 | .. |
| 4 பரம்பிக்குளம்-ஆளியாறு புனல் மின்சாரத் திட்டம். | 3,42·80 | 3,10·00 | 2,69·71 | 3,27·05 | 2,20·00 |
| 5 கோதையாறு புனல் மின்சாரத் திட்டம்*. | 2,08·04 | 3,81·00 | 3,50·00 | 3,55·54 | 3,00·00 |
| 6 சென்னை மின்சார நிலையம் விரிவு படுத்தல் IV-ம் நிலை. | 67·88 | 1,75·00 | 2,25·00 | 2,49·94 | 1,75·00 |
| 7 எண்ணூரிலுள்ள அனல் மின் நிலையம்*. | 5,38·52 | 9,80·00 | 11,80·00 | 11,25·80 | 15,00·00 |
| 8 எண்ணூர் அனல் மின் நிலையத்தை விரிவு படுத்தல். | .. | .. | 10·00 | .. | 1·00 |
| **புதிய திட்டங்கள்—** | | | | | |
| 9 தூத்துக்குடியில் அனல் மின் நிலையம் ஏற்படுத்துதல். | .. | 10·00 | .. | .. | .. |
| 10 பாண்டியாறு-புன்னப்புழா அனல் மின் திட்டம். | .. | .. | .. | .. | .. |
| 11 குந்தா புனல் மின் திட்டம் IV-ம் நிலை. | .. | .. | .. | .. | .. |
| 12 நடுவட்டம் மாற்றுத் திட்டம். .. | .. | .. | .. | .. | .. |
| 13 ஹோகேனக்கல் புனல் மின் திட்டம். | .. | .. | .. | .. | .. |
| 14 கடம்பாறை புனல் மின் திட்டம். .. | .. | .. | .. | .. | .. |
| 15 மேல் தாமிரவருணி புனல் மின் திட்டம். | .. | .. | .. | .. | .. |
| 16 மேல் மணிமுத்தாறு புனல் மின் திட்டம். | .. | .. | .. | .. | .. |
| 17 பரலையாறு புனல் மின் திட்டம் .. | .. | .. | .. | .. | .. |
| 18 சுருளியாறு புனல் மின் திட்டம் .. | .. | .. | .. | .. | .. |
| 19 சோளாத்திப்புழா புனல் மின் திட்டம். | .. | .. | .. | .. | .. |
| 20 மின்சக்தி அனுப்புதல்—பங்கிட்டு வழங்குதல் திட்டம். | 6,08·77 | 4,90·25 | 5,18·29 | 3,51·12 | 4,00·00 |
| 21 கிராம மின்சார விஸ்தரிப்பு .. | 8,26·25 | 4,00·00 | 7,50·00 | 9,06·88 | 6,00·00 |
| 22 புதுத்திட்டங்கள் பற்றிய ஆய்வு .. | 6·12 | 9·75 | 7·25 | 5·67 | 9·50 |
| 23 மின்சக்தி ஆராய்ச்சிகள் .. | .. | .. | .. | .. | .. |
| 24 மின்சார நிறுவனங்கள் கையகப் படுத்துதல். | .. | .. | .. | .. | .. |
| | 28,00·54 | 28,60·00 | 33,66·19 | 33,69·58 | 32,16·73 |

* மின்சக்தி அனுப்பும் வேலைகள் 20-வது இனத்தில் (அதாவது மின்சக்தி அனுப்புதல்—பங்கிட்டு வழங்குதல் திட்டத்தில்) சேர்க்கப்பட்டுள்ளன.

தளர்த்தி இருக்கிற காரணத்தாலே அவரவர்கள் அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைத் துவக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, பொதுத் துறையில் அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைத் துவக்க அரசு முன்வரவில்லை.

*St. Xavier's High School Building, Palayamkottai*

* 15 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the St. Xavier's High School, Palayamkottai, Tirunelveli district has requested the Director of Secondary Education for permission to utilise its General Fund for the extension of the school building; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இயக்குனர் தேவையான சம்மதம் அளித்துள்ளனர்.

THIRU T. MARTIN : Sir, in view of the fact that under articles 26 and 30 of the Constitution of India which guarantee fundamental rights to establish institutions by various religious minorities in any State in India, will not the requirement under a rule, viz., to get permission from the Director to utilise the funds belonging to that institution for development of educational activities of that institution, amount to an infringement of the fundamental rights guaranteed to those institutions under these articles of the Constitution?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, அந்தந்தக் கல்வி நிறுவனங்கள், அவர்களிடத்திலே வைத்திருக்கிற உபரி நிதியை, கட்டடங்கள் கட்டுவதற்கும், பள்ளிக்கூடங்களில் தேவைப்படுகின்ற வசதிகளைச் செய்து கொள்ளுவதற்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால், இயக்குநர் அவர்களுடைய அனுமதி பெற்றதின் பேரில்தான் செய்ய வேண்டியிருக்கிறது. நிதி வைப்புக் குறைவாக இருக்குமானால், அனுமதி தரப்படுவதில்லை. கல்வி நிலையங்கள் சரியாக நடைபெற்று, அந்தக் கல்வி நிலையத்திலே உபரி வைத்திருந்து அதற்குக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று கேட்பார்களானால், அதற்கு இயக்குநர் அவர்வகளின் அனுமதி வேண்டியிருக்கிறது. அதில் எந்த விதமான தவறும் இல்லை.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டையிலுள்ள கிருஸ்துவ மிஷனரியினர் மிகச் சிறப்பாகத் தூய சேவியர் உயர்நிலைப் பள்ளியை நல்ல முறையில் நடத்தி வருகின்றனர். அங்கே ஏறக்குறைய இரண்டாயிரம் மாணவர்கள் படித்துக் கொண்டு வருகிறார்கள். அதற்கு ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்று கூறி அந்தப் பள்ளியின் உபரி நிதியிலிருந்தே அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுள்ளனர். அதைக் கொடுப்பதற்கு அரசு யோசிக்குமா?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அனுமதி கேட்டார்கள். அனுமதி தரப்பட்டிருக்கிறது, இயக்குநர் அவர்களால். வரைப் படங்கள், திட்டங்கள் இவற்றைத் தயாரித்து அனுப்பி, இயக்குநர் அவர்கள் அதைத் தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பி, அதிலே சில குறைபாடுகள் இருந்ததால் மறுபடியும் அது கல்வி நிர்வாகிகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. இப்பொழுது உபரி நிதியிலிருந்தே கட்டடங்கள் கட்டிக் கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. அரசு, தனியார் நடத்துகிற பள்ளிகளுக்குப் பாதித் தொகை மானியமாகவும் அதிகபட்சம் முப்பத்தையாயிரம் ரூபாய் என்ற அளவிற்கு உதவி செய்யலாம் என்றிருக்கிறது. கட்டடங்கள் கட்ட வேண்டுமென்றால் அரசின் உதவி தேவையில்லாமல் இருந்து, அங்கேயே உபரி நிதி இருந்தால், அதை எடுத்துக் கொள்ளுவதற்கு வசதி இருக்கிறது. அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்ற பிறகுதான் நடத்த வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, normally whenever an extension for an institution of this type is required, they have to show a certain amount of liquid cash against the cost of the building or cost of extension of the building that they propose. In this particular case, what is the amount of liquid cash that they have shown, what is the cost of the building that they have proposed? May I know whether there are any special problems in regard to this case? What are the exact reasons as to why permission was withheld in this particular context?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நிதி இருப்புப்பற்றி விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால், அனுமதி அளிக்கப்படுகிறது. உபரி நிதியிலிருந்தே கட்டடங்கள் கட்டிக் கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** பாளையங்கோட்டையிலுள்ள ஜேவியர் பள்ளியிலே அவர்கள் தங்களுடைய உபரி நிதியிலிருந்தே கட்டடங்கள் கட்டிக் கொள்ளுகிறோம் என்ற அளவில் கட்டடங்கள் கட்டிக் கொண்டால், இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் கிராண்ட் வாங்கிக்கொள்ளலாம் என்றிருந்தால், அதற்கு டோக்கன் கிராண்ட் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே சொன்னேன், பாதித் தொகையை அதிகபட்சம் முப்பத்தையாயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்று.

**திரு. கே. விநயகம் :** இன்றைக்கு அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற ஜீவாதார உரிமை பாதிக்கப்படுகிறதே என்றும், பள்ளிகளில் அவர்கள் நிதியிலிருந்தே எடுத்து கட்டடங்கள் கட்டிக்கொள்வதற்கு அரசாங்கத்தினுடைய உத்தரவு வேண்டுமென்று இருப்பது ஜீவாதார உரிமையை பாதிக்கிறது என்றும் திரு. மார்டின் அவர்கள் கேட்டார்களே, அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள்?

---

**சனிக்கிழமை, 1968 ஆகஸ்ட் 17.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு **பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### * வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*Soap factory for Udangudi*

* 14 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start a soap factory in the Public sector in Udangudi in Tirunelveli district?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இல்லை.

**திரு. டி. மார்டின்** : வருவாயைப் பெருக்க வரிகளைப் போடுவது அரசாங்கத்தின் பழைய காலக் கொள்கையாக இருக்கலாம். புதிய தொழிற்சாலைகளை ஆரம்பித்து அதன்மூலம் வருவாயைப் பெருக்கிக் கொள்ள பல இடங்களில் இப்படிப்பட்ட புதிய தொழிற்சாலைகளை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : சோப் தொழிற்சாலை பொதுத் துறையிலே உருவாக்குவதுபற்றிய கேள்வி. அதுபற்றி அரசுக்கு எண்ணம் இல்லை என்று கூறினேன். ரெமி பர்ஃப்யூமர்ஸ் பிரைவேட் லிமிடட், ஈஸ்ட் ஏஷியாடிக் பிரைவேட் லிமிடெட் போன்ற தனியார் நிறுவனங்கள் சோப் தயாரித்துக் கொண்டு வருகின்றன. அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் துவங்குவதற்கு லைசன்ஸ்கள் வழங்கப்படுகின்றன. இப்பொழுது இருக்கின்ற தொழிற்சாலைகள் தேவையான அளவிற்கு உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். தேவைப்படுகின்ற மூலப் பொருள்கள் கிடைப்பதால், அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு தேவையான அளவிற்குத் தயாரிப்பதாலும், தேவையை நிறைவேற்றக் கூடிய அளவிற்கு அவை இருக்கிற காரணத்தினாலும் பொதுத் துறையிலே அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைத் துவக்கவேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. பொது மக்களுக்குத் தேவைப்படுகின்ற பொருளாக அது இருந்து, வேறு எந்தத் தொழிற்சாலையிலும் அப்படிப்பட்ட பொருள்கள் தயாராகாமல் இருந்தால், அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அரசு எடுத்து நடத்தலாம். லைசென்ஸ் வாங்கித்தான் அந்தத் தொழிற்சாலை நடத்த வேண்டுமென்றிருந்தது. இப்பொழுது லைசென்ஸ் வாங்காமலேயே அந்தத் தொழிலைச் செய்யலாம் என்று இந்திய அரசு விதியைத்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. வினாயகம் அவர்கள் தங்களுடைய கேள்வியைத்தான் கேட்க வேண்டும்.

THIRU K. VINAYAKAM : In his supplementary question, hon. Member Thiru Martin has asked 'whether it does not infringe the fundamental rights guaranteed under the Constitution?'

MR. DEPUTY SPEAKER : But, that is not the main question.

THE HON. THIRU C. N. ANNADURAI : Instead of the hon. Member Thiru Vinayakam interpreting the question put by the hon. Member Thiru Martin, it would be better if the hon. Member Thiru Martin himself explains this question.

THIRU K. VINAYAKAM : If the Hon. Deputy Speaker assures that he would be given a second chance to put his supplementary, then it would be all right. But, who knows? The Speaker's eye is elusive and he may not look at him.

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member Thiru Martin is big enough and he can himself catch the Speaker's eye.

THIRU K. VINAYAKAM : What is the answer to my question, never mind the diversion?

THIRU T. MARTIN : Sir, my supplementary question is this. Under articles 26 and 30 of the Constitution of India, fundamental rights, absolute rights, unqualified rights have been guaranteed to religious minorities to establish religious institutions and charitable institutions and educational institutions on their own choice and administer them according to their internal management arrangements. That being so, when such a right has been guaranteed under the Constitution to the religious minorities and their institutions, will it not be an interference with their fundamental rights if they are required to get the permission of the Director to utilise their own funds for developmental activities regarding education?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே சிறுபான்மையினரின் உரிமை பாதிக்கப்படுகிற நிலைமை இல்லை எனப் பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தனியார் பள்ளியிலே ரூ. 70,000 நிதி வைத்திருக்க வேண்டுமென்று விதி வைத்திருக்கிறது. தனியார் பள்ளி வைப்பதற்கு முன் ரூ. 70,000 டெபாசிட் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. கட்டடம் கட்டுவதற்கு அனுமதி பெற்றுத்தான் கட்டடங்கள் கட்ட வேண்டும். குறிப்பிட்ட பள்ளியைப் பொறுத்தவரை, அவர்கள் சேர்த்திருக்கிற நிதியிலிருந்து எந்த ஒன்றுக்குச் செலவழிப்பதாக இருந்தாலும், இயக்குநர் அனுமதியின் பேரில் செய்ய வேண்டுமென்றிருக்கிறது. கட்டடங்கள் கட்ட வேண்டுமென்றாலும் அனுமதி பெறவேண்டியிருக்கிறது. பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட நிதியாக இருந்தாலும்சரி, மானியமாக இருந்தாலும்சரி, ஊராட்சி மன்றம், ஒன்றியங்கள் இவற்றினுடைய நிதியாக இருந்தாலும்சரி, அரசாங்கத்தினுடைய அனுமதி பெற வேண்டும் என்றிருக்கிறது. கல்வித் துறையினரின் விதிகளுக்கு உட்பட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.





*Ariyalur-Pattukottai Railway Line*

* 16 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleaesd to state whether the Government have recommended to the Government of India the linking of Ariyalur and Pattukottai by means of railway via Tiruvaiyaru and Thanjavur?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அரசாங்கம் அத்தகைய பரிந்துரை எதையும் செய்யவில்லை.

**கிருஷ்ணா கோதாவரி நதிகளின் உபரி நீர்**

* 17 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலில் வீணாகப் போய்விழும் கோதாவரி, கிருஷ்ணா நதித் தண்ணீரை நமது ராஜ்யத்திற்குக் கொண்டுவரும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) இது குறித்து ஆந்திர மாநிலத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தால் அதன் விவரம் மேஜையின் மீது வைக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) அவ்வித உத்தேசம் உள்ளது.

(இ) அதுபற்றி முக்கியமான பேச்சு வார்த்தை எதும் இது வரை நடை பெறவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இதுபற்றிப் பத்தாண்டுக் காலமாகவே, "பேச்சு வார்த்தை நடைபெறுகிறது, நடைபெற்று வருகிறது" என்றுதான் பதிலளிக்கப்பட்டு வருகிறது. இப்போதுள்ள நிலைமை நம் எல்லோருக்கும் தெரியும். பத்தாயிரக் கணக்கான, இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களில் விவசாயம் அழிந்துவிட்டது. ஆடுமாடு செத்துவிட்டது, மனிதன் இறந்து விட்டான் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, தண்ணீரை நமக்கென்றே அவர்கள் கொடுக்கமாட்டோம் என்று சொன்னாலும், வீணாகும் தண்ணீரினால் அவர்களுக்குச் சேதம் ஏற்படுகிற நிலையில்—அப்படி அவர்களுக்கு அவசியமற்றபோது—வீணாகக் கடலில் போய் விழக் கூடிய தண்ணீரை, மிகப் பெரிய கால்வாய் வெட்டி, தமிழகத்திற்குத் திருப்பிவிடக் கூடிய அளவுக்காவது

முயற்சி எடுக்கப்படுமா ? இத்தகைய கால்வாய் வெட்டக் கூடிய அளவுக்கு மத்திய சர்க்காரை வற்புறுத்திக் கேட்பதற்கு நமது மாநில சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது மைசூர், ஆந்திரம், மராட்டியம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் முடிவு செய்யப்பட வேண்டிய விஷயமாகும். அவைகளுக்கிடையே இருக்கும் சிக்கல்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை. இதற்காக நான்கு திட்டங்கள் 1963-ஆம் ஆண்டிலே பேசப்பட்டிருக்கின்றன. கிருஷ்ணா நதியின் குறுக்கே நாகார்ஜுனசாகர் நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு 54 கோடி ரூபாய் செலவு என்ற அளவிலே ஒரு திட்டமும், கிருஷ்ணா நதியின் குறுக்கே ஸ்ரீசைலம் நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு 61 கோடி ரூபாய் செலவு என்ற அளவிலே ஒரு திட்டமும், துங்கபத்திரா நதியைக் கடந்து சங்கசாலா அணைக்கட்டிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு 59 கோடி ரூபாய் செலவு என்ற அளவிலே ஒரு திட்டமும் இதற்காக ஆராயப்பட்டன. ஆனால், கடைசியாக, சுலபமானதாகவும், தொகை குறைவானதாகவும் நிறைவேற்றப் படக் கூடிய திட்டம் என்ற அளவில், பெண்ணாற்றில் சோமசீலா நீர்த் தேக்கத்திலிருந்து, புழலேரியிலிருந்து 134 கல் தொலைவிலுள்ள இடத்திலிருந்து—ஒரு நாளுக்கு 10 கோடி காலன் தண்ணீர் வழங்குவதற்கான இத் திட்டத்திற்கு 15 கோடி ரூபாய் செலவாகும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக 500 கோடி கன அடி தான் தண்ணீரை அந்த நீர்த் தேக்கத்திலிருந்து நாம் பெற முடியும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த அணைக்கட்டை இப்பொழுது செயற்குறிப்பிலே தான் ஆந்திர மாநிலம் வைத்திருக்கிறதே தவிர, அதற்கான மதிப்பீடு முதலியவைகளையெல்லாம் வரையறுக்கவில்லை. அந்த மதிப்பீட்டை வரையறுக்கும் நேரத்தில், அந்த அணையைக் கட்டி, அதன்மூலம் சென்னைக்குத் தண்ணீர் வரும் காரணத்தால், சென்னையிலிருந்து எவ்வளவு பணம் கிடைக்கும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், இந்தக் காரணங்களால் இது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Sometime back there was a proposal to connect the rivers of North India with South Indian rivers, especially rivers like Chambal, Mahanadi, Krishna and Godavari. If river integration is achieved, I think it will help 'National Integration' also. Will the Hon. Minister for Public Works kindly look into this and take up the matter with the Central Government ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படியொன்றும் தீர்மானமாக நிறைவேற்றப்படவில்லை. அது, சி.பி. அவர்கள் ஒரு காலத்தில் சொன்ன கருத்து. அவ்வளவுதான்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** கிருஷ்ணா-கோதாவரி நதிகளின் தண்ணீரை மாத்திரமல்லாமல், தென் பிராந்தியத்தில் உள்ள எல்லா நதிகளின் தண்ணீரையும் தென் பிராந்தியத்தில் உள்ள





மாநிலங்களுக்கிடையில் பங்கிட்டுக் கொண்டு உபயோகித்துக் கொள்ளும் வகையில், ஏற்கனவே இருக்கின்ற ஒப்பந்தங்களுக்குப் பாதகம் இல்லாத வகையில், கொள்கையளவில் விவாதித்து முடிவு செய்வதற்கு தென் பிராந்திய கவுன்சிலில் ஏதாவது ஒரு முயற்சியை நமது சர்க்கார் எடுத்திருக்கிறதா ? ஆம் எனில், அந்த முயற்சி என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த முயற்சி ஒன்றும் திட்டவட்டமாக இப்போதைக்கு எடுக்கப்படவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த கிருஷ்ணா-கோதாவரி நதிகளின் தண்ணீரைத் தென் பகுதிக்குக் கொண்டுவருவதுபற்றிய திட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே அமலாக்கப்பட்டு, அதற்காகப் பல கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு, அத்தனையும் செய்த பிறகு, மாநிலங்கள் பிரிந்த பிறகு வந்த குழப்பமே தவிர வேறெதுவும் இல்லை. இப்பொழுது தென் பகுதிக்குத் தண்ணீர் முக்கியமாகத் தேவைப்படுகிற காரணத்தினாலே, இப்பொழுதிருக்கிற அமைச்சர் முழு முயற்சி எடுத்து, வேண்டிய நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்து, துரிதப் படுத்தி, அந்தத் தண்ணீரை நமது மாநிலத்திற்குக் கொண்டுவர வழிவகை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வழிவகை செய்ய முயற்சிக்கப்படும்.

**திரு. க. ர. நல்லசிவன் :** பல்வேறு மாநிலங்களில் ஓடுகிற நதிகளைப் பொறுத்த வரையில் அது மத்திய நீர், விசைக் குழுவின் பொறுப்பில் உள்ளது. அதற்கு இப்பொழுதுள்ள சட்டம் போதாது. ஆகவே, பல்வேறு மாநிலங்களில் ஓடும் நதிகளைப் பொறுத்த வரையில், மத்திய சர்க்கார் நேரடிக் கவனம் செலுத்துகிற மாதிரி ஒரு தனிச் சட்டத்தை இயற்ற வேண்டும் என்ற வகையில் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்த இந்த மாநில சர்க்கார் ஏதாவது தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட முயற்சியில் இறங்குமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்ளும்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** மெயின் கொஸ்டின், கிருஷ்ணா-கோதாவரி ஜலத்தைப்பற்றி இருந்தாலும், ஒரு டைவர்ஷன் மாதிரி, ஒரு சின்ன கேள்வி கேட்கிறேன். அதற்காக மன்னித்து பதில் சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். கேரளாவில் ஏராளமான ஜலம் அரபிக் கடலில் வீணாகப் போய் விழுகிறது என்ற புகார் ரொம்ப நாளாக இருந்து கொண்டிருக்கிறது. தமிழக சர்க்கார் அதற்குத் தகுந்த ஆதாரங்களும் வைத்திருக்கும். அது விஷயமாக சென்ட்ரல் வாட்டர் அண்டு பவர் கமிஷன் என்று டில்லியில் ஒரு பெரிய ஸ்தாபனம் இருக்கிறதே, அதிலே ஏதாவது முயற்சி இப்போதுள்ள அமைச்சர் செய்திருக்கிறாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுபற்றி இரு மாநில முதலமைச்சர்களும் பேசியிருக்கிறார்கள். மீண்டும் பேசுவார்கள். அப்பொழுது இவைகளெல்லாம் ஆராயப்படும்.

DR. H. V. HANDE : We are glad to learn that the Hon. Minister for Public Works is visiting Delhi to discuss about water distribution and other aspects. In view of the fact that the Hon. Minister is going to participate in the meeting, will he give us an indication as to the likely type of talk and attitude the Government is going to take in these talks? Is the Hon. Minister aware of the fact that the entire Deccan Plateau is not only sloping towards east but the entire Deccan Plateau is also supposed to slope from North to South (many engineers have given a statement to that fact)? In view of that it is very easy to get water from norhern rivers and especially rivers like Krishna and Godavari. As far as the water that we are going to get from Cauveri to augment the city's water supply is concerned, it is going to be very little. Even the other day my friend Sri P. G. Karuthiruman was telling that a dam was going to be constructed to impound waters of Cauvery by Mysore and we will be losing water from Cauvery. Tamilnad is in a great crisis so far as water is concerned. So, will the Hon. Minister give us an indication as to the exact type of talks he is going to have, the exact attitude he is going to take in the ensuing conference that is going to be held in Delhi?

THE HON. THIRU C. N. ANNADURAI : The type of talk is conditioned naturally by two parties and not by one party alone. Therefore the Hon. Minister for Public Works will table out the type of talk as and when it is necessary. But the suggestion given by the hon. Member will be fully utilised by the Hon. Minister for Public Works.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, வடக்கத்தி மாநிலங்களிலே ஓடுகின்ற நதிகளின் தண்ணீரை, நம்முடைய மாநிலத்தில் ஓடுகின்ற நதிகளோடு இணைப்பதுபற்றி மத்திய சர்க்காருடைய உதவியைக் கோருவதற்கு முன்பாக, மாநிலங்களின் அளவில் இந்த அரசு என்ன என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? அந்தப் பேச்சுவார்த்தைகளின் முடிவு என்ன ? ஏதாவது பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறதா என்பதைச் சபைக்கு அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதை ஒரு மாநிலத்தில் அரசாளுகின்ற திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ளுவதைவிட, பல மாநிலங்களில் அரசாளுகின்ற காங்கிரஸ் கட்சி மேற்கொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் பிரசாரம் செய்யவேண்டும் என்று விரும்புகிறேன்.



## நெல்லூர் அரிசி

* 18 வினா.—**திரு. எஸ். இராமச்சந்திரன் :** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆந்திர மாநிலத்திலிருந்து நெல்லூர் அரிசி பெறுவதற்காக இந்த அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, கடந்த 1967-ம் ஆண்டு மார்ச் திங்களில் ஆந்திர மாநிலம் தமிழக அரசுக்கு 15 ஆயிரம் டன் நெல்லூர் அரிசி கொடுத்து உதவியது. 23—2—1968 அன்று ஹைதராபாத்தில் ஆந்திர பிரதேச முதல் அமைச்சருடனும், உணவு அமைச்சருடனும் நான் இது குறித்து விவாதித்தேன். முதற்கண் 5,000 டன் (மொலகுலுகுலு) நெல்லூர் பச்சரிசியும், அம் மாநிலத்தில் நெல் கொள்முதல் பணி மும்முரமானதும் மேலும் 10,000 டன் பச்சரிசியும் அனுப்ப ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் ஒப்புக் கொண்டுள்ளார். ஆந்திரப் பிரதேசத்தினின்று எவ்வளவு பச்சரிசி தருவிக்கப்படுகின்றதோ, அதற்குப் சரிநிகரளவு புழுங்கலரிசியை அதே திங்களில் கேரளா மாநிலத்துக்கு இம்மாநிலம் அனுப்பியாக வேண்டும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நமக்குக் கிடைத்த நெல்லூர் அரிசி எவ்வளவு ? இந்த ஆண்டு கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் அரிசி எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மூலக் கேள்வியிலே பதில் சொல்லிவிட்டேன். கடந்த ஆண்டில் 15 ஆயிரம் டன் அரிசியை ஆந்திர மாநிலம் நமக்குக் கொடுத்தது. இந்த ஆண்டு நமக்கு 15 ஆயிரம் டன் அரிசியை வழங்குவதாக ஆந்திர மாநில முதலமைச்சர் ஒப்புக் கொண்டு, முதல் கட்டமாக 5 ஆயிரம் டன் அரிசியை நமக்குத் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்தில் வாங்கப்படுகிற அரிசி டன் ஒன்றுக்கு அல்லது ஒரு குவிண்டாலுக்கு எவ்வளவு விலை தரப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, ஆந்திராவிலிருந்து வரவழைக்கப்பட்ட அரிசியை கேரளத்திற்கு கொடுப்பதாகத் தெரிவித்தார்கள், ஆந்திராவில் வாங்கிய அதே விலைக்குக் கேரளத்திற்குக் கொடுக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சென்னை நகரத்தினுடைய மக்கள் மொலகுலுகுலு என்ற பெயருள்ள உயர்ரக அரிசியைச் சாப்பிட்டுப் பழக்கமானவர்கள். மொலகுலுகுலு

என்ற ரக அரிசி உயர்ந்த ரக அரிசி. நாம் ஆந்திராவிலிருந்து வாங்குகிற அரிசியைக் கேரளத்திற்குக் கொடுப்பதில்லை. நாம் புழுங்கலரிசியைத்தான் கேராளவிற்கு அனுப்புகிறோம். நாம் ஆந்திராவில் வாங்குகிற அரிசியின் விலைக்கும், நாம் கேரளாவிற்கு அனுப்புகிற புழுங்கலரிசியின் விலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. இரண்டும் ஒரே விலை அல்ல.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** தலைவர் அவர்களே, நெல்லூர் அரிசியை ஆந்திர மாநிலத்திலிருந்து வருடா வருடம் வாங்க இந்த அரசு முற்படுவதாகச் சொன்னார்கள். அந்த அரிசியை ஏன் நமது மாநிலத்திலேயே உற்பத்தி செய்ய முடியாதா ? இனி மேலாவது அந்த அரிசியை உற்பத்தி செய்ய அரசு முயலுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது கனம் உறுப்பினர் கூறுகிற நிலைமைதான் வந்திருக்கிறது. முந்தைய அரசாங்கம், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 1½ லட்சம் டன் பச்சரிசியை வரவழைத்துக் கொண்டிருந்தது. நம் மாநிலத்தில் ரேஷன் வந்தபிறகு, ஆந்திரவிலிருந்து நமக்கு ஒரு லட்சம் டன் பச்சரிசி கொடுத்தால் அதற்கு ஈடாக இரண்டு லட்சம் டன் புழுங்கல் அரிசியை கேரள மாநிலத்திற்கு நாம் அனுப்ப வேண்டுமென்றும் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இந்த அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு நமக்கு வரும் பச்சரிசியின் அளவு மிகவும் குறைவு என்று கருதியது. கடந்த ஆண்டில் ஆந்திர மாநிலம் 15 ஆயிரம் டன் அரிசி கொடுத்தது. இந்த ஆண்டு முதல் கட்டமாக 5 ஆயிரம் டன் அரிசி கொடுக்கிறோம், பிறகு 10 ஆயிரம் டன் கொடுக்கிறோம் என்று ஆந்திர மாநில அரசு கூறியது. இப்பொழுது நம் மாநிலத்தில் திருவாரூரில் அமைந்திருக்கும் நவீன அரிசி ஆலையில் பச்சரிசி உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். மேலும் 11 நவீன அரிசி ஆலைகளை அமைப்பதற்கு திட்டமிட்டிருக்கிறோம். இந்த ஆலைகள், வருகிற குறுவை அறுவடைக்குள் செயல்படத் தொடங்கும் என்று கருதுகிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know whether our Government is selling Nellore rice at one rupee a measure?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது உயர் ரக அரிசி, மற்ற ரக அரிசியைக் கொடுக்கிற மாதிரி, படி அரிசித் திட்டத்தில் இந்த அரிசி கொடுக்கப்படுவதில்லை.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, நெல்லூர் அரிசி சென்னையிலுள்ள மக்களுக்கு வினியோகிக்கப்படுவதாகச் சொன்னார்கள். சென்னையிலுள்ள ரேஷன் கடைகளில் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தில் நல்ல அரிசி தரப்படுவதில்லை. நெல்லூர் அரிசியைக் கேட்கின்றவர்களுக்கு நெல்லூர் அரிசியும், மற்ற அரிசியைக் கேட்கின்றவர்களுக்கு மற்ற அரிசியும் போடுவதற்கான நிலைமையை அரசு ஏற்படுத்துமா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்ததுபோல், உண்மைக்கு மாறாக நண்பர் அவர்கள் சொன்னார்கள். ஒழுங்கான அரிசி, தரமான அரிசி, நல்ல ரக அரிசி தரப்படுவதாக சென்னைவாசிகள் சொல்லுகிறார்கள். நெல்லூர் அரிசி, ரேஷன் திட்டத்தில், அதாவது ரூபாய்க்கு ஒரு படி என்ற திட்டத்தில் கொடுப்பதில்லை.—செகண்ட் ஸார்ட்—இரண்டாவது ரக அரிசியைத்தான் ரூபாய்க்கு ஒரு படி என்ற திட்டத்தில் கொடுக்கிறோம். இரண்டாவது ரக அரிசி, கிலோ 66 பைசாவுக்குக் கொடுக்கப்படுகிறது. சென்னை நகர மக்கள் நெடுங்காலமாக நெல்லூர் அரிசியைச் சாப்பிட்டுப் பழக்கமானவர்களாகையால், அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தோடு தான், நெல்லூர் அரிசியை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற சமயத்தில், ‘முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைத்ததுபோல்’ என்று கூறினார்கள். நான் அதற்கு மிக்க வருத்தப்படுகிறேன். அங்கத்தினர் தனக்குக் கிடைத்த தகவலைக் கொண்டுதான் கேள்வி கேட்கிறார். அதற்குரிய பதிலைத்தான் அமைச்சர் அவர்கள் தர வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை வரவேற்கிறேன். இப்பொழுது கிடைக்கக்கூடிய சோறு பூசணிக்காயை மறைக்கக்கூடிய அளவுக்குப் போதாது. (சிரிப்பு)

DR. H. V. HANDE : It is a fact that we are getting better rice during the Hon. Mr. Mathialagan's regime than during the Hon. Mr. Ramiah's regime as is told by my own wife who is a critic. What is the cost at which Nellore rice is bought by the Government and is the entire quantity of Nellore rice acquired by the Madras Government given to the ration shops? The complaint is that Nellore rice is sold at Rs. 1-30 a kilo. That is very exorbitant. Will the Minister telll us why exactly is the Nellore rice sold at Rs. 1-30? If it is a fact that the Government itself is selling at that high rate, will the Government look into this?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நெல்லூர் அரிசி வேண்டுமென்று கேட்பவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அதை யார் மீதும் திணிக்கவில்லை. முதல் ரக அரிசி வாங்குபவர்கள் யாராவது தங்களுக்கு நெல்லூர் அரிசி வேண்டுமென்று கேட்டால், அவர்களுக்கு வழங்கப்படுகிறது. சிலர் மொலகொலுகு அரிசியைச் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்கள். உண்மையிலேயே இந்த அரிசி சற்று விலை அதிகம்தான். அதிக விலை கொடுத்து வாங்குகிற மக்களுக்காக இந்த ரக அரிசி போடப்படுகிறதே தவிர, யார்மீதும் திணிக்கப்படவில்லை.

[1968 ஆகஸ்ட் 17

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, நெல்லூர் அரிசி, சென்னை நகர மக்களுக்கு மட்டும் என்று சொல்லுகிறார்கள். எங்கள் பகுதிக்கும் அப்படிப்பட்ட அரிசி கிடைக்க அரசினர் வழி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கோயம்புத்தூர் நகரத்திற்கு இப்போது 369 டன் அரிசி அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் 630 டன் அரிசி கோயம்புத்தூர் ரேஷன் பகுதிகளில் கொடுக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. சா. மெய்யப்பன் :** தலைவர் அவர்களே, நெல்லூர் அரிசி வாங்கப்படுகிற கொள்முதல் விலை என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் ஏற்கெனவே இதற்குப் பதில் சொல்லிவிட்டேன். சிறிய பகுதியினருக்காக, அவர்களுக்குச் சௌகரியம் செய்து கொடுப்பதற்காக இந்த அரிசி வாங்கப்படுகிறது. இது ஆந்திர மாநிலத்தினருடன் வியாபார முறையில் வாங்கப்படுவதில்லை. (குறுக்கீடுகள்) தனியாகக் கேள்வி கேட்க வேண்டும். இப்போது அதிகமான விலை கொடுத்துத்தான் வாங்குகிறோம். கொஞ்சம் மக்களுக்காகத்தான் 15 ஆயிரம் டன் வாங்குகிறோம். இந்த அளவு சாதாரணம்தான். தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் கூறுகிறேன்.

மு. ப. 9-30 **திரு. ரா. ராமச்சந்திர துரை :** முன்பு இருந்த அரசாங்கம் ஒரு லட்சம் டன் பச்சை அரிசிக்குப் பதிலாக 2 லட்சம் டன் புழுங்கல் அரிசியை கேரளத்திற்குக் கொடுக்க எழுதியிருந்தார்கள் என்று கூறினார். இந்த ஆண்டில் எத்தனை டன் பச்சை அரிசி இந்த அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது ? அதற்குப் பதிலாக எத்தனை டன் புழுங்கல் அரிசியைக் கொடுக்க இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது பழைய அரசாங்கத்தினுடைய கதை. ஆந்திர அரசாங்கம் நமக்கு 1 லட்சம் டன் பச்சை அரிசி கொடுத்தால் 2 லட்சம் டன் கேரளத்திற்குக் கொடுப்பதாக எழுதி வைத்திருந்தார்களே தவிர, நடைமுறையில் அது சாத்தியப்படவில்லை. இப்போது நமக்கு ஆந்திரத்தில் இருந்து 15 ஆயிரம் டன் பச்சை அரிசி கிடைக்கிறது. நாமும் கேரள மாநிலத்திற்கு 15 ஆயிரம் டன் புழுங்கல் அரிசியை அனுப்பி வைத்தோம். நமக்குக் கிடைக்கிற அளவு நாமும் வெளியில் கொடுப்பது என்பது இப்போதிருக்கிற ஏற்பாடு.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** நெல்லூர் அரிசியைவிட வட ஆற்காடு வெல்லூர் அரிசி உயர்ந்த ரகமானது என்று சொல்லப்படுகிறதே, உயர்ந்த ரக அரிசியைக் கொண்டுவந்து சென்னை நகரில் உள்ளவர்களுக்கும் கொடுப்பதானால்—வெல்லூர் அரிசியைக் கொடுக்கக் கூடாதா ? இன்றைக்கு அரசாங்கம் நெல்லூர் அரிசிக்கும், வெல்லூர் அரிசிக்கும்—ஆக இந்த இரண்டு க்வாலிடிக்கும் கொடுக்கிற விலை வித்தியாசம் என்ன ?



1968 ஆகஸ்ட் 17]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வெல்லூர் அரிசியும் கொடுக்கப்படுகிறது. மிகுந்த நாட்களாக நெல்லூர் அரிசியே சாப்பிட்டுப் பழகியவர்களுக்கு நெல்லூர் அரிசியும் கிடைக்கச் செய்யத்தான் இந்த ஏற்பாடு. நெல்லூர் அரிசியின் வரத்தும் வரவரக் குறைந்து வருகிறது. வெல்லூர் அரிசி நம் மாநிலத்து அரிசி. நெல்லூர் அரிசி ஆந்திர மாநிலத்து அரிசி.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, நெல்லூர் அரிசிக்கு அதிக விலை கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் மிகவும் சிரமத்திற்கு இடையில் சொன்னார்கள். அதுமாதிரி தமிழகத்து அரிசிக்கும் அதிக விலை கொடுக்கப்படவில்லை என்கிற குறைபாடு விவசாய மக்களிடையே இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இங்கிருக்கிற விவசாயிகளை இந்த அரசாங்கம் ஏமாற்றி வருகிறது என்பதனை உணர்ந்து அதை மாற்ற ஏதேனும் கொள்முதல் விலையில் உயர்வு செய்ய சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் அங்கத்தினர் சொல்கிற ஏமாற்றுகளில் நமது ராஜ்ய விவசாயிகள் ஏமாறவில்லை. அவர்களுக்குக் குறை இருந்திருந்தால் மிகக் குறுகிய காலத்தில் ஐந்து லட்சம் டன் கொள்முதல் நமக்குக் கிடைத்திருக்காது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்த அரசாங்கம் ஆந்திர அரிசியை வாங்குவது, நம் அரிசியைக் கேரளத்திற்குக் கொடுப்பது என்பது எல்லாம் காங்கிரஸ் அரசாங்கக் கொள்கை. அதுவே போய் விட்டது. இந்த அரசாங்கமாவது இந்த சிவில் சப்ளை டிபார்ட்மெண்டையே எடுத்துவிட்டு பிரீ மூவ்மெண்டு Fr(e movemet ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த அரசாங்கத்திற்கும் அப்படிப்பட்ட ஒரு நிலை வரவேண்டும் என்பதுதான் ஆசை. நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூட நமது மாநிலத்தில் உற்பத்தி பெருக வேண்டும், கேரளத்திற்கு மட்டும் அல்ல, மற்ற மாநிலங்களுக்கு எல்லாம்கூட நாம் ஏற்றுமதி செய்கிற நிலை ஏற்பட வேண்டும் என்றே விழைகிறார்கள். ஆனால் இன்றுள்ள நிலைமையைப் பார்த்தால் அதற்குச் சிறிது காலம் பிடிக்கும் என்று தெரிகிறது. நேற்று ஆந்திர மாநில விவசாய அமைச்சர் அவர்கள் என்னுடன் பேசிக்கொண்டிருந்த போது பெரு மழையினால் ஆந்திராவில் ஏற்பட்டிருக்கும் சேதத்தைப் பார்க்கிறபோது அவர்களே நம்மிடம் அரிசி கேட்கும் நிலை கூட ஏற்படுமோ என்று அஞ்சுவதாகச் சொன்னார்கள். ஆகவே கனம் அங்கத்தினர் சொல்வதுபோல செய்வதற்கான சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை. அந்த நிலை வருவதற்கு நாம் பாடுபட வேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** ஆந்திர மாநில நெல்லூர் அரிசிக்குக் கொடுக்கிற விலையைப் போல நம் மாநிலத்தில் விளையும் உயர்ந்தரக அரிசிக்கு இந்தச் சர்க்கார் கொடுக்க முன்வந்தால் நமது

மாநிலத்திலும் உயர்ந்த ரக அரிசியை உற்பத்தி செய்ய விவசாயிகள் முன்வருவதற்கு ஊக்கம் அளிக்காதா ? ஆகவே நமது மாநிலக் கொள்முதல் விலையையும் உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கொள்முதல் விலை என்பது வேறு விஷயம். ஆந்திர மாநில நெல்லூர் அரிசியைச் சாப்பிட்டே பழகியவர்களுக்கு—அவர்கள் கொஞ்சம் பேராகத் தான் இருக்கிறார்கள் என்றாலும், அவர்களுடைய தேவையும் கவனிக்கப்படுகிறது, இந்த அரசாங்கத்தினால் என்பது தான் இங்கே கவனிக்கப்பட வேண்டிய விஷயம். நெல்லூர் அரிசிதான் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை.

*Veterinary College*

* 19 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state when the Department of Flaying was separated from the Department of Meat Inspection in the Madras Veterinary College?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள இறைச்சி—சோதனைத்துறையி லிருந்து, தோலுரிக்கும் பிரிவு பிரிக்கப்படவில்லை.

*Building Works in Co-operative Department*

* 20 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) whether there is any proposal to create a separate Engineering cell in the Co-operative Department to supervise and execute the various building works under the Co-operative Department; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) பொதுப் பணித் துறையிலிருந்து மாற்றப்பட்ட உதவிப் பொறியாளர் ஒருவரும் பதின்மூன்று பொதுப்பணித்துறை மேற்பார்வையாளர்களும் கூட்டுறவுத் துறையில் ஏற்கெனவே பணியாற்றி வருகின்றனர். அவர்கள், அத் துறையில் கட்டிடம் கட்டும் வேலைகளை மேற்பார் வையிட்டு வருகின்றனர். பதின்மூன்று மேற்பார்வையாளர் களில் இருவர் தலைமையிடத்திலும் பதினொருவர் மாவட்டத் தலை மையிடத்திலும் பணியாற்றி வருகின்றனர்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** மாநிலம் முழுவதற்கும் ஒரே ஒரு துணைப் பொறியாளர் இருப்பதனால் வேலைகள் துரிதமாக நிறைவேற்றப்படுவதற்குக் கஷ்டம் இருக்கிறது. ஆகையால் இதில் கூட பொறியியல் வல்லுநர்களை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அவ்வப்போது தேவையை ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.



*Directorate of Treasuries*

* 11 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal with the Government to merge the Directorate of Treasuries with the Examiner of Local Fund Accounts Department; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :**

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

உலகத் தமிழ் மாநாட்டிற்கு அழைப்புகள்

* 12 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்கு எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு அனுப்பப் பட்டதா ?

(இ) இல்லை என்றால், அதன் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) ஆம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, இந்தக் கேள்வியை இந்த மன்றத்தில் எழுப்புகிற சூழ்நிலை வந்ததற்கு வருந்துகிறேன். உலகத் தமிழ் மகாநாட்டிற்கு மட்டும் அல்ல, குடியரசுத் தலைவர் வந்த விழாவிற்கும் சரி, நேற்று கோட்டையிலே நடைபெற்ற கொடியேற்று விழாவிற்கும் சரி பலருக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்படவில்லை, ஏன் இந்த பார பட்சம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கோட்டையில் கொடியேற்று விழா நடைபெற்றது. அதற்கு வழக்கம்போன்று நகரத்தில் உள்ள எம்.எல்.ஏ., எம்.எல்.ஸி., எம்.பி.-க்களுக்கு எல்லாம் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன.

**திரு. கே. விநாயகம் :** உலகத் தமிழ் மகாநாடு நடந்தபோது சட்டசபை அங்கத்தினர்களுக்கு அழைப்பிதழ்கள் தரப்படவில்லை என்று பல புகார்கள் வந்தன. அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலையும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனாலும் திரு. கருத்திருமனைச் சேர்த்துக் கொண்டிருக்கலாம், மாஜி முதல் அமைச்சர் அவர்களைச் சேர்த்துக்கொண்டிருக்கலாம்—அவர் இவர்களுக்கு வேண்டிய வராக இருக்கலாம்—ஆயினும் இது ஏதோ திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் நடத்துவதுபோல,

கொடுக்கக்கூடிய தொகையிலிருந்து அதை எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவிற்கு அவர்கள் விருப்பம் தெரிவிப்பார்களானால் அதற்கு ஏற்பாடு செய்யலாம்.

### *Additional Deputy Commissioner of Police*

* 13 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a post of Additional Deputy Commissioner of Police has been sanctioned for Madras City; and

(*b*) if so, the reasons thereof?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) ஆம்.

(இ) 1968 மார்ச் திங்களில் சென்னை மாநகரில் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையின் தொழிலாளர்களுக்கும், மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களையடுத்து, சட்டம்-ஒழுங்கைக் காப்பதற்காகக் காவல் துறையில் துணை ஆணையாளர் பதவி ஒன்றைக் கூடுதலாக ஏற்படுத்தும் தேவை ஏற்பட்டது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தீ வைத்தல், பட்டப் பகலில் கொள்ளையடித்தல் இன்னும் இம்மாதிரி பலவிதமான மக்களுக்குப் பாதுகாப்பு இல்லாத முறையிலே சம்பவங்கள் நடப்பதைத் தடுப்பதற்கு இம்மாதிரிப் பொறுப்புவாய்ந்த போலீஸ் அதிகாரிகள் தங்களுடைய கடமையை ஆற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா? சமீபத்திலே பட்டப்பகலிலே தஞ்சையிலே ஒரு பெண் தாக்கப்பட்டாள். இம்மாதிரிச் சம்பவங்களைத் தவிர்ப்பதற்குப் போலீஸ் நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்தக் கேள்வியினுடைய தொடர்புடையதாகக் கேள்வி இல்லை யென்றாலும் சொல்கிறேன். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கவலை தருகின்ற பிரச்சினை சர்க்காருடைய கவனத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கூடுதல் துணை ஆணையர் ஒருவர் அதிகப்படுத்துவதற்கு எவ்வாறு ஆணையிடப்பட்டுள்ளதோ அதைப் போன்று சாதாரணக் காவல் துறையினரையும்கூட அதிகப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தேவைப்படுகின்ற பொழுது அது மேற்கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM: In spite of the additional posts being granted in the higher ranks of the Police Department the crimes have not gone down. I refer to the crimes committed in the City of Madras. Has the Hon. Minister got any statistics to compare what were the nature of crimes and the number of crimes committed during the past when compared to the increasing number of crimes that are being perpetrated nowadays?





THE HON. THIRU C. N. ANNADURAI: Comparative figures do not establish that there is increase of crimes in all branches and in all avenues. There is slight increase in one quarter while decrease in other. I do not possess at present all the relevant figures but I may say that the Government is keenly aware of the anxiety for putting down crimes and they will be taking all adequate measures for that.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஐயா, காவல் துறையிலே மேல் நிலையிலே இருக்கின்ற அதிகாரிகளை அதிகப்படுத்தினாலும் கீழ் நிலையிலே இருக்கிற அதிகாரிகளை அதிகப்படுத்தினால்தான் முறையாகச் செயல்படுவதற்கும் சட்டம், ஒழுங்கு இவற்றை நேரடியாகக் கவனிக்கவும் சௌகரியம் இருக்கும். எனவே மேல்நிலையில் உள்ள அதிகாரிகளை அதிகப்படுத்துகிற நேரத்திலே கீழ்நிலையில் உள்ள அதிகாரிகளையும் அதிகப்படுத்துவதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இது ஒரு யோசனை என்ற முறையில் கவனிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM: With a view to work the Prohibition Department more efficiently than it used to be, with a view to check the illicit distillation and transportation of liquor and drunkenness, will the Hon. Minister and will the Government agree to constitute a separate wing inside the Police Department especially to look into these crimes and put them down? I think the Hon. Minister will agree with me that the setting fire to these huts is on the increase especially after the Hon. Chief Minister came into power. What are the steps that the Hon. Chief Minister is taking to redress it or to put it down completely?

THE HON. THIRU C. N. ANNADURAI: It is very unfortunate that the hon. Member should couple me with fire.

THIRU K. VINAYAKAM: I said "after the Hon. Chief Minister came to power".

THE HON. THIRU C. N. ANNADURAI: If the hon. Member also feels very happy that this Government is beset with these difficulties, it is not in the best of taste. The increase in fire has caused anxiety and all adequate measures are being taken.

DR. H. V. HANDE: Will the Government examine the necessity of toning up the Police administration especially the violence that is exhibited by the Police officials inside the Police stations. Even though they do not want to give information, whenever a man is taken to Police station on a charge of gambling or drunkenness he is taken to the Police station and put in the

படமெல்லாம் எடுத்து, பெரும்பான்மையான காங்கிரஸ்காரர்களை விலக்கிவிட்டு—ஒதுக்கிவிட்டு இருக்கிறார்கள் என்கிற புகார்கள் வருகின்றனவே, அதில் உண்மை இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்களே பதில் அளித்துவிட்டார்கள். அது வெறும் புகார் தான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சுதந்திர தின விழாவாக இருந்தாலும் சரி, குடியரசு தின விழாவாக இருந்தாலும் சரி, இதுபோன்ற அரசாங்க விழாக்களுக்கு அழைப்பிதழ் அனுப்புகிற போது எல்லா உறுப்பினர்களுக்குமே இனிமேலாவது அனுப்ப சர்க்கார் யோசனை செய்வார்களா ? இது ஒரு ஆலோசனைதான்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த யோசனை முதன் முதலாக வெளியிடப்படுவதனால் உரிய முறையில் கவனிக்கப்படும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** உலகத் தமிழ் மகாநாட்டுக்கும் சரி, மற்றவற்றுக்கும்—எங்களுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பப் படவில்லை. இனிமேலாவது இந்த மாதிரி காரியங்கள் நடை பெறாமல் இருக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கவனிக்கப்படும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** உலகத் தமிழ் மகாநாட்டை ஒட்டி ஒரு சிறப்பு மலர் வெளியிட்டார்கள். சட்டசபை உறுப் பினர்களுக்கு அது அனுப்பப்படவில்லை. இனிமேலாவது அனுப்பு வதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உலகத் தமிழ் மகாநாட்டு நிகழ்ச்சிகளில் பல உறுப்பினர்கள் நேரில் கலந்து கொண்டார்கள். நாள் இதழ்களிலும் விரிவாக வந்திருக்கின்றன. கனம் உறுப்பினர் குறிப்பிடுகிற மலர் வெளிநாட்டு வித்தகர் களுடைய கட்டுரைத் தொகுப்பு. அதன் விலை 30 ரூபாய். 60 ரூபாய் என்று விலை நிர்ணயிக்கப்பட்டாலும் வாங்குவதற்கு உறுப்பினர்களுக்குள்ள தகுதி எனக்குத் தெரியும்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இதுபோன்று அனுப்பப்படும் அழைப்புகள் என்னைப்போன்று கிராமத்திலுள்ள வர்களுக்கு நிகழ்ச்சி நடக்கும் அன்றோ அல்லது நிகழ்ச்சி நடந்து முடிந்த பின்னரோ கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. அப்படி காலதாமதம் ஏற்படாமல் முன்னதாகவே அனுப்பி வைப்பதன் மூலம் உறுப்பினர்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளியூர் உறுப்பினர்களுக்கும் அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள், உறுப்பினர் அவர்கள் கிடைக்



கிறது, ஆனால் காலத்திலே கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இரண்டுக்கும் பொருத்தம் குறைவாக இருக்கிறது. இருந்தாலும் அவர்களுடைய யோசனை உரிய காலத்தில் கவனிக்கப்படும்.

**திரு. கே. விநாயகம் :** முதலமைச்சர் அவர்கள் இதெல்லாம் புகார்தான் என்று சொன்னார்கள். பூம்புகார் நடந்தபொழுது அந்த இடத்தில் நடந்த குறிப்புகளைக் கொண்டு பார்த்தால் யார் யார் பங்கு கொள்வார்கள் என்று இருந்ததோ அதிலே காங்கிரஸ் காரர்கள் அழைக்கப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன ? காங்கிரஸ்காரர்களுக்கு இலக்கியம் தெரியாது என்பது கருத்தா ? அல்லது அவர்களுக்கு இதிலே அக்கறை இல்லை என்பது கருத்தா ? இப்படிப்பட்ட காரியங்களிலே வேண்டுமென்றே அவர்களை ஒதுக் கியதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பூம்புகார் மாநாட் டிலே துவக்கத்திலேயே எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள்தான் நடத்திக் கொடுத்தார்கள். வேறு காங்கிரஸ்காரர்கள் இல்லையோ என்று நினைக்க வேண்டாம். மறைந்த காங்கிரஸ் தலைவர் திரு. சத்தியமூர்த்தி அவர்களின் குமாரி அவர்களும் அதிலே பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது தெரியாதா . . . (திரு. கே. விநாயகம் : தெரியும்) காங்கிரஸ்காரர்களுக்கு இலக்கியத்திலே பற்று உண்டா இல்லையா என்று ஆராய்ந்து பார்த்துச் செய்வதாகக் கூறுவது சரியானதல்ல. யாரையும் ஒதுக்கிவைக்கவில்லை. முன்னாள் முதலமைச்சர் வேண்டியவரா அல்லது நண்பரா அதனால் தான் அவரை அழைத்ததாகச் சொன் னார்கள். அவரை எனக்கு நண்பர் என்று சொன்னதற்காக பெருமைப்படுகிறேன். அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவ ராக இருந்த திரு. காமராஜ் அவர்களும் என்னுடைய நண்பர். காங்கிரஸிலே வேண்டுமென்றே என்னிடத்திலே பகை காட்டு கிறவர்களைத் தவிர, எல்லோருமே எனக்கு நண்பர்கள் என்று தான் கருதுகிறேன்.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகப் பிரசித்திபெற்ற இரண்டாவது தமிழ் மாநாட் டின் பெயரால் வெளியிடப்பெற்ற மிகச் சிறந்த இலக்கியக் கட்டு ரைகள் அடங்கிய மாநாட்டு மலர் தமிழ் அறிந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் கிடைக்கச் செய்வது பொருத்த மாக இருக்கும். பேறிஞர் அண்ணா அவர்கள் உறுப்பினர் திரு. ராமசாமியை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்கள் வாங்கிக் கொள்வார்கள் என்று நினைக்காமல் எல்லோருக்கும் அந்த மலரை இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சில சட்டமன்ற உறுப்பினர்கள் உடனடியாக வாங்கமுடியாவிட்டாலும், சர்க்கார் அவர்களுக்குக் கொடுத்து விட்டு பின்னால் உறுப்பினர்களுக்குக்

lock-up and in the process of being kept in lock-up he is beaten. Many a time I have known such instances. On 13th, in my own constituency in the lock-up attached to C-2 Police station in Elephant Gate, a man died in the lock-up or on way to the hospital. I do not know all the details. Will the Hon. Chief Minister know that this sort of death inside lock-up leads to unrest in the area that such and such a man died in the lock-up because of beating, etc. Such sort of thing is most unfortunate. This is a legacy handed over to us by British and the Congress Regime continued the same. The same is now being continued. I am not blaming the Hon. Minister or Ministry as such. But the officials have not changed their habit. Will the Government take note of the serious charge that I have placed before the House about the incident in the C-2 Police station and will the Hon. Minister see to it that such things do not happen?

THE HON. THIRU C. N. ANNADURAI : Whenever especially complaints of this nature are brought to my notice, I take special care to instruct the Police department to look into them, enquire into them and send reports to me and reports are sent to me. Regarding the particular incident referred to by the hon. Member, if he were to give the details to me in writing, I will certainly look into them.

**திரு. டி. மார்டின் :** முதலமைச்சர் அவர்கள் தீ விபத்தைப் பற்றிக் கூறினார்கள். தீ விபத்து ஏற்பட்ட அந்த நிலைமையைப் பற்றி ஆராய போலீஸ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு இன்னும் அவருடைய அறிக்கை தாக்கல் செய்யப்படாததற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. அதே நிலைமை இன்று அதிகமாகி சென்னையில் பல குடிசைகள் எரிக்கப்பட்டன. இப்போது தீ விபத்து ஏற்பட்ட நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் 'அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த விதமான தீ விபத்துக்கள் நடைபெறுகின்றன' என்று பேசியிருக்கிறார்கள். அது 'முரசொலி' பத்திரிகையிலும் வந்திருக்கிறது. ஆனால் தற்போது ஏற்பட்ட தீ விபத்துக்களுக்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு ஏராளமான குடிசைவாழ் பெண்களும் மற்றவர்களும் தண்டனை அடைந்திருக்கிறார்கள். அவர்கள்தான் தீ விபத்துக்குக் காரணம் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அரசியல் காழ்ப்புணர்ச்சி என்று முதலமைச்சர் அவர்கள் கூறியது எந்த அரசியல் காழ்ப்புணர்ச்சி என்ற விவரத்தை இந்த மன்றத்திற்குத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்களுடைய கேள்வியில் இரண்டு பகுதிகள் அடங்கியிருக்கின்றன. ஒன்று, முன்னாலே இதற்கென்று நியமிக்கப்பட்ட அதிகாரி வெளியிட்ட அறிக்கை ஏன் இன்னமும் வெளியிடப்படவில்லை என்பது. அது பற்றி முன்னாலேயே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமான வழக்கு ஒன்று இன்னமும் விசாரணையில் இருப்பதால் அந்த அறிக்கையை வெளியிட்டால் அது



வழக்கைப் பாதிக்கக்கூடும் என்ற கருத்தில் வெளியிடப்படவில்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தீ விபத்துக்கள் நேரிட்டன என்ற கருத்தை நான் சொன்னதற்கு ஆதாரம் ஏதேனும் உண்டா என்று அவர்கள் கேட்டார்கள். அந்த அறிக்கை வெளியிடப்படுகின்ற நேரத்தில் அதற்கு ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்பதை உறுப்பினர்கள் அறிந்து கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி, துணைக் கமிஷனர் நியமனம் பற்றியது. அதைப்பற்றி மட்டும் துணைக் கேள்விகள் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : The Chief Minister was pleased to state that there was an appeal pending before the High Court regarding a fire accident. Is it not a fact that the Lower Court has acquitted the accused people and said that they are not guilty? Is it not a fact that the Government went on appeal to the High Court just to harass Congressmen?

THE HON. THIRU C. N. ANNADURAI : My hon. Friend is thoroughly misinformed. There was a series of cases. In one or two cases the accused were acquitted. There is a case where a sentence was given and the party has preferred an appeal.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதாவை அவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் மசோதாக்கள்.

### (அ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதாவை இம் மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதாவை அவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதாவை இம் மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(உ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள் (எடுத்து விடுதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள் (எடுத்துவிடுதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதாவை இம் மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(எ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, கூட்டுறவு நில அடமான வங்கிகள் (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, கூட்டுறவு நில அடமான வங்கிகள் (திருத்த) மசோதாவை மன்றத்திற்கு அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## 4. 1968-69-ம் ஆண்டிற்க்கான முதலாவது துணை நிதிநிலை அறிக்கை அளித்தல்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1968-69-ம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்முன் வைக்க வேண்டி உங்கள் முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்குகின்ற விரிவான விவர அறிக்கையொன்று மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கையின் மொத்தம் 6 கோடியே 40 இலட்சம் ரூபாயாகும். இதில் 3 கோடியே 32 இலட்சம் ரூபாய் வருவாய்க் கணக்கின்பாற்படும். கடந்த பிப்ரவரித் திங்களில் சட்ட மன்றத்தின் முன் நடப்பு ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டம் வைக்கப்பட்ட பின்னர் ஒப்பளிப்பு வழங்கியுள்ள "புதுப் பணித்" திட்டங்களும் இத் துணை மதிப்பீடுகளில் அடங்கும். சில மானியங்களின்கீழ் முதற்கண் வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்த செலவினங்களுக்கு மேல் இப்போது அதிகமாய்ச் செலவாகக் கூடுமென எதிர்பார்க்கப்படுவதால், அந்த மானியங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்டிடவும். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டுள்ளோம். மு.ப 10-00

நடப்பு ஆண்டில் ஜூன் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி வீதங்களை உயர்த்தி ஒப்பளிப்பு வழங்கியிருப்பதுவே, தற்போதைய துணை மதிப்பீடுகளில் எதிரொளிக்கின்ற மிகப் பெரிய கூடுதல் செலவினப் பொறுப்பாகும். இந்த உயர்வு காரணமாக, நமது பணியாளர்களுக்குரிய அகவிலைப்படி வீதங்கள் அதே தரங்களில் உள்ள மத்திய அரசுப் பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்களை ஒத்திருக்கின்றன. வழக்கம் போல் இந்த அகவிலைப்படி வீத உயர்வு உள்ளாட்சிப் பணியாளர்க்கும், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கட்கும் பொருந்தும். இதன் காரணமாக ஏற்படும் கூடுதல் செலவினம் ஆண்டொன்றுக்கு 3 கோடியே 60 இலட்சம் ரூபாயென மதிப்பிடப்படுகின்றது. நடப்பு ஆண்டில் ஆகும் கூடுதல் நிகரச் செலவு 2 கோடியே 70 இலட்சம் ரூபாயாகும். இதற்கென வெவ்வேறு மானியங்களின் கீழ் எதிர்பார்க்கப்படும் அளவிற்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது. ஐந்தாம் நிதி ஆணைக் குழு நமது மாநிலத்தின் நிதித் தேவைகளைப் பற்றி முடிவு செய்கையில், இன்றியமையாத இச்செலவுப் பொறுப்பினைக் கருத்தில் கொண்டு செப்டம்பர் திங்களில் வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதன் இடைக்கால அறிக்கையில் நமது மாநிலத்திற்குப் போதிய நிதி வசதி கிட்டுவதற்கு வகை செய்யுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 ஆகஸ்ட் 17

இப்போது செயல்படுத்தப்பட்டு வரும் மிகப் பெரிய உணவு உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பெருமளவில் நிறுவனக் கடன் வசதி பெறவேண்டுமென்று அரசாங்கம் மேற்கொண்ட பெருங்கொள்கை முடிவைப் பற்றி எனது வரவு-செலவுத் திட்ட உரையில் நான் தெரிவித்திருந்ததை மாண்புமிகு உறுப்பினர்களின் நினைவிற்குக் கொண்டுவர விழைகின்றேன். உழவர்களின் கடன் தேவைகளை நில அடைமான வங்கிகளின் வாயிலாக எளிய முறையில் திறம்பட நிறைவு செய்யும் வகையில் புதிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, மாவட்ட அளவில் சிறப்புப் பணியாளர்களை நியமித்துள்ளோம். இதற்காக, 16, 19-வது கோரிக்கைகளின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களுக்கெனச் சிறப்பு வளர்ச்சித் திட்டங்களையும் நாம் மேற்கொண்டிருப்பதால், 16-வது கோரிக்கையின்கீழ் அவற்றிற்கு நிதி ஒதுக்கம் வேண்டப்படுகின்றது. இத்திட்டங்களின் கடன் பகுதியை மத்திய நில அடைமான வங்கி வழங்கும். இத்திட்டங்களுக்கான மொத்த முதலீடு 2 கோடி ரூபாய்க்கு மேல் ஆகுமென மதிப்பிடப்படுகிறது. இத்திட்டங்களின்படி, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 2,000 தனியார் குழாய்க் கிணறுகளும், 1,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும், செங்கற்பட்டு மாவட்டத்தில் 2,000 தனியார் குழாய்க் கிணறுகளும் மூன்றாண்டுக் கால அளவில் தோண்டப்படும். புதிய பெரும் பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்புகள் நமது மாநிலத்தில் குறைவாதலின், நிலத்திற்கடியிலுள்ள நீர்வளத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான இவ்வகைத் திட்டங்களையே நாம் இயல்பாக நம்பியிருக்க வேண்டியுள்ளது. இவற்றோடு இணைந்து, இறைவைப் பாசனத்திற்கு மின்சக்தி வசதியை விரிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டங்களையும் நாம் விரைந்து செயல்படுத்த வேண்டியுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் தனியார்துறை மின்சார உரிமதாரர்கள் பற்பல காரணங்களினால் கிராம மின்சாரத் திட்டங்களில் போதிய அக்கறை காட்டவில்லையென்றும், அதன் விளைவாக நமது மாநில வேளாண்மைப் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிற இப்பகுதி, இறைவைப் பாசனத்திற்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவதில் நமது மாநிலத்திலுள்ள எஞ்சிய பகுதிகளைவிடப் பின்தங்கிய நிலையில் உள்ளதென்றும் இடைவிடாமல் புகார்கள் வந்தவண்ணமிருந்தன. எனவே, இம்மாவட்டத்தில் செயல்பட்டுவந்த தனியார் உரிமதாரர்களின் நிறுவனங்களை மேற்கொள்ள நாம் அறிவிப்புகள் விடுத்திருந்ததை இப்பேரவையினர் அறிவர். இவற்றில், மாயூரம்-மன்னார்குடி-திருவாரூர் உரிம நிறுவனம் ஏற்கனவே மாநில அரசின் கைவசம் வந்துவிட்டது. சட்டப்படி அதற்குச் சேரவேண்டிய இழப்பீட்டுத் தொகையில் 75 சதவீதம் விரைவில் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, அதைக் கையகப்படுத்திக் கொண்டதற்காகச் செலுத்த வேண்டிய மதிப்பீட்டுச் செலவின் நிமித்தம் இத் துணை மதிப்பீட்டில் 74 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கும்படி வேண்டப்பட்டுள்ளது.



1968 ஆகஸ்ட் 17] [திரு. சி. என். அண்ணாதுரை]

சிறு பாசன வாயில்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்குச் சிறப்பிடம் அளிப்பது சரியே என்றாலும், அதே நேரத்தில் பெரும் பாசனத் திட்டங்களை தக்கவாறு பேணி வருவதும் முக்கியம் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. தஞ்சைக் கழிமுகப் பகுதியில் புதிய பயிர்முறை செயல்படுத்தப்படுவதிலிருந்து கிடைத்துள்ள அனுபவத்தையொட்டி, இப்புதிய பயிர் முறை உறுதியாக வெற்றியளிக்கும்பொருட்டு, அரசு கல்லணைக்கும் காவிரிப் பாசன ஏற்பாடுகளுக்கும் 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மேம்பாடுகள் செய்வதற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கென நடப்பு ஆண்டில் எதிர் பார்க்கப்படுகிற செலவினத்திற்காக, 26-வது மானியத்தின் கீழ் 26 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. உர வகைகளை வாங்குவதற்கென உழவர்களுக்குக் கடன்கள் வழங்குவதற்கு 50 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்துள்ளதையும் இம்மன்றத்தினர் வரவேற்பார்களென உறுதியாக நம்புகின்றேன். இந்த நிதி ஒதுக்கத்தைச் சேர்த்து, நடப்பு ஆண்டில் இதற்கென வகை செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகை 2 கோடி ரூபாயாகிறது.

மணலியில் பல்வகைத் தொழில்கள் விரைந்து வளருவதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு முனைப்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காண இம் மன்றம் மகிழ்ச்சியடையுமென நம்புகினறேன். சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலைக்காக ஏறத்தாழ 88 இலட்சம் ரூபாய்ச் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிற நீர்வழங்குத் திட்டம் விரைவாக நிறைவேறி வருகின்றது. மணலியில் நிறுவப் பட்டு வரும் சென்னை உரத் தொழிற்சாலைக்கு அன்றாடம் 60 இலட்சம் காலன் தண்ணீர் வழங்குவதற்காக ஒரு கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஒரு திட்டத்திற்கு இப்போது ஒப்பளிப்பு வழங்கியுள்ளோம். இதற்கென நடப்பு ஆண்டில் ஏற்படக்கூடிய செலவினத்திற்காக இதில் கணிசமான தொகையான ஒரு கோடியே 5 இலட்சம் ரூபாய்க்கு நிதி ஒதுக்கும்படி 42-வது மானியத்தின்கீழ் வேண்டப்படுகின்றது. இத் திட்டத்திற்காகும் முழுச் செலவும் இந்திய அரசிடமிருந்து பெறப் படும் சிறப்புக் கடனுதவியின் மூலம் ஈடு செய்யப்படும்.

இலங்கையிலிருந்து விரைவில் ஏராளமான அகதிகள் தாயகம் திரும்பவிருக்கின்றனர். தங்கள் திறனுக்கேற்ற தொழில்களை அவர்கள் மேற்கொள்வதற்கு இயலும் வகையில் அவர்களுக்குக் கடன்கள் வழங்குவதற்கான திட்டமொன்றைத் தீட்டியுள்ளோம். இத் திட்டத்திற்கென 47-வது மானியத்தின்கீழ் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கும்படி வேண்டப்பட்டுள்ளது. நடைமுறைத் தேவைகளுக்கிணங்க நாளடைவில் இந்த நிதி ஒதுக்கத்தை உயர்த்த வேண்டியிருக்கும். முக்கியமான இப்பணி ஒப்படைக்கப் பட்டுள்ள நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கையை

உயர்த்தவும், நடைமுறைகளைச் செம்மைப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம். இதற்கென 33-வது மானியத்தின்கீழ் நிதி வகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின் ஆளுகையிலும் ஏனைய நகராட்சிகளின் ஆளுகையிலும் இயங்கிவருகிற உயர்நிலைப் பள்ளிகள் மீதான செலவினம் குறித்து அவைகட்கு வழங்கப்பட்டுவரும் உதவித் தொகைகளைத் தாராளமாக வழங்குவதற்கிணங்க, உரிய விதிமுறைகளைத் திருத்தியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்களென உறுதியாக நம்புகின்றேன். இதுவரை அவற்றிற்கு ஏற்பட்ட நிகர பற்றுக்குறைத் தொகையில் 50 சத வீதம் மட்டுமே ஈடு செய்து வந்ததற்கு மாறாக, மாநில அரசு இப்போது அத் தொகையில் 66-2/3 சத வீதத்தை ஈடு செய்யக் கருதுகிறது. இதற்கென 13-வது மானியத்தின்கீழ் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது. மற்றும், தனியார் பொறியியற் கல்லூரிகளிலும் பல்தொழிற் பள்ளிகளிலும் துண்டுவிழும் நிகர தொகைகளை அரசு பெருமளவில் ஈடு செய்ய வேண்டியிருப்பதால், அதற்கான நிதி ஒதுக்கமும் இதே மானியத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. 1967-68 முதல் இது குறித்த மாநில அரசின் பங்கு 66-2/3 சத வீதத்திலிருந்து 75 சத வீதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

உயரிய கலைத் திறனும், தொழில் நுட்பத் தரமும் வாய்ந்த தமிழ்ப் படங்களைத் தயாரிப்பதற்கு ஊக்கமளிக்கும் வகையில், முழு நீளத் தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கும் திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு கருதுகிறது என்பதை அறிய இம் மன்றத்தினர் களிப்படைவார்களென நம்புகின்றேன். 1967-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களுக்கு நடப்பு ஆண்டில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் அளவிற்குச் சிறு சேமிப்புப் பத்திரங்கள் வடிவில் பரிசுகள் அளிக்கப்படும். இதற்கிணங்க, 12-வது கோரிக்கையின்கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கின்ற செய்திக் கதிர் ஒன்றைத் திங்கள்தோறும் தயாரிப்பதற்கான திட்டமொன்றையும் அரசு தொடங்கியுள்ளது. 9-வது மானியத்தின்கீழ் இதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத் துணை மதிப்பீடுகளில் அடங்கியுள்ள பிற திட்டங்கள் பற்றி சிறப்பான எந்த விளக்கமும் தேவையில்லையென்று கூறி, 1968-69-ம் ஆண்டிற்குரிய இந்த முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்கும்படி வேண்டுகின்றேன்.

## 5. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நமது சட்டப் பேரவை நடைமுறை விதிகளின் 21(3) பிரிவின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் ஐந்தாவது நிகழ்ச்சியாகவுள்ள தமிழ்





நாடு மின்சார வாரியத்தின் 1968-69-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தை நான்காவது நிகழ்ச்சியாக ஏற்றுக்கொண்டு, நான்காவதாகவுள்ள அரசினர் தீர்மானத்தை ஐந்தாவது நிகழ்ச்சியாக மாற்றிக்கொள்ளுமாறு கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 6. 1968-69-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது விவாதம் (தொடர்ச்சி).

* திரு. ந. வீராசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1968-69-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது நான் ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு இருபது ஆண்டு காலமாக நாட்டு மக்கள் ஒரே ஆட்சியின்கீழ் பட்ட இன்னல்களுக்குப் பிறகு ஒரு புது ஆட்சி வந்ததைப்போல் தமிழ்நாடு மின்சார வாரியம், ஒரு பத்து ஆண்டு காலமாக ஒரே தலைமையின்கீழ் இயங்கி வந்த அந்த இலாகா இப்போது பல மாற்றங்களுக்கிடையில் ஒரு புதிய நிலையைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய நிலையில் இந்த அரசு வந்ததற்குப் பிறகு செய்திருக்கிற நல்ல பல காரியங்களை இந்த இடத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு மின்சார இலாக்காவில் பணியாற்றிக்கொண்டிருந்த தொழிலாளர்கள் பல ஆண்டுகளாக அவர்களுடைய கோரிக்கைகளை இந்த மன்றங்களிலும், அந்த இலாக்காக்களிலும், அங்கேயிருக்கும் அதிகாரிகளிடத்திலும் எடுத்துக் கூறியும்கூட அதிலே வெற்றி பெறுமல் இருந்தார்கள். ஆனல் இந்த அரசாங்கம் தகுந்த உத்தரவுகளை அங்கேயிருக்கும் அதிகாரிகளிடத்தில் இட்டதன் பயனுக அங்கே இப்பொழுதிருக்கும் தலைவரும், மற்ற அதிகாரிகளும் தொழிலாளர்களுடன் நல்ல உறவுமுறை வைத்துக்கொண்டு பணியாற்றியதன் காரணமாக இன்று அங்கு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாடு மின்சார இலாக்காவில் பணியாற்றிக்கொண்டிருந்த களைக்காயர்கள் தங்களுடைய கோரிக்கைகளை, முக்கியமாக வேலைப்பளு குறைய வேண்டுமென்ற கோரிக்கையை பத்தாண்டுக் காலமாகக் கூறி போராடி வந்தார்கள். ஆனல், இதுவரையில் நிறைவேற்றப்படாத அந்தக் கோரிக்கை இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல. அப்படி நிறைவேற்றியிருப்பதன் காரணமாக ஏறக்குறைய 4 டெபுடி சீஃப் அக்கௌண்டண்ட் பதவிகளும், 70 அக்கவுண்டண்ட் பதவிகளும், 320 உதவியாளர்கள் என்று சொல்லப்படும் அந்தப் பதவிகளும், 394 எழுத்தர்களும் இப்படி இன்னும் பல, ஸ்டோர் கீப்பர்கள், பில் கலெக்டர்கள்

போன்ற பதவிகளும் உருவாக வாய்ப்பாக இருக்கிறது. அதன் மூலம் அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் இந்த அரசாங்கத்தையும், இந்த இலாக்காவின் தலைவரையும் மனதாரப் பாராட்டுகிறார்கள். அதேபோன்று இப்பொழுது அங்குள்ள தொழிலாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது.

அடுத்தபடியாக, இந்த அரசாங்கம் மைசூரிலிருந்து 30 கோடி யூனிட் மின்சாரத்தை உபயோகிப்பதற்காக அதன் விலையினை யூனிட் ஒன்றுக்கு 9 காசிலிருந்து கிட்டத்தட்ட 4.66 காசாகக் குறைத்திருக்கிறது என்றால் அதற்குக் காரணமான நமது அமைச்சரையும், அந்த இலாக்காவிலே பணியாற்றும் அக்கவுண்ட்ஸ் மெம்பரையுமே பாராட்ட வேண்டும். இந்த இரண்டு பேரும், அவ்வாறு விலையைக் குறைக்க மைசூர் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி இதற்குப் பல புள்ளிவிவரங்களைத் தயாரித்து அந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதேபோல, நெய்வேலியிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு 5.2 காசிலிருந்து 5.9 காசாக இன்று உயர்த்தியிருந்தாலும் அதை இன்னும் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

அவ்வாறு சொல்வதற்குக் காரணம், நாம் ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க வேண்டுமென்று சொன்னால் அதிகமான நிலக்கரி பாழாகிறது, அவ்வாறு பாழாகும் நிலக்கரி அதிகமாகயிருப்பதால் மின்சார உற்பத்தியின் விலை கூடுகிறது என்று செய்தி கிடைக்கிறது. அங்கங்கேயிருக்கும் உற்பத்திச் செலவைக் குறைத்தால் இன்னமும் மின்சாரத்தின் விலையைக் குறைப்பதற்குரிய வாய்ப்பிருக்கிறது என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், 51,746 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால், இத்தனை ஆண்டுகளாக நடைபெறாத நிகழ்ச்சி இந்த ஆண்டு நடைபெற்றிருப்பதால் அதற்காகப் பாராட்ட வேண்டும். அதுமட்டுமல்ல. இந்த இணைப்புகள் போதுமா என்றால் போதாது. இப்பொழுதிருக்கும் நிலையில் ஏறக்குறைய 6 இலட்சம் இணைப்புகள் இந்தத் தமிழகத்திற்கு உடனடியாகத் தேவைப்படுகிறது. அதற்கேற்றாற்போல் கோரிக்கைகள் இருந்தாலும், இக்கோரிக்கைகளை நிறைவேற்ற மின்சார இலாகாவிற்குப் பணம் தேவைப்படுகிறது. தேவையான பணமிருந்தால் திறமையான இஞ்சினியர்களும், திறமையான பணியாளர்களும் அதை நிச்சயம் செய்வார்கள். பணமில்லாத ஒரே ஒரு குறையினால்தான் அது தடைப்படுகிறது. அதைப் போக்க மத்திய சர்க்காரில் விவசாயத் துறை அமைச்சரிடமிருந்து நம் நாட்டில் மின்சார இணைப்பிற்காக 5 கோடி ரூபாய் கொடுங்கள்



என்று இந்த அரசு கேட்டிருக்கிறது. இங்கேயிருக்கும் காங்கிரஸ்காரர்கள் அங்கேயிருக்கும் அமைச்சர்களைச் சந்திக்கும் நேரத்தில் தமிழக அரசு 5 கோடி ரூபாய் கேட்டிருக்கிறது, அதைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும், அதன் மூலம் தமிழக விவசாயிகள் பலனடைவார்கள் என்று சிபாரிசு செய்து இந்த அரசாங்கத்திற்கு உதவி செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, மின்சார இலாக்காவில் இருக்கின்ற விண்ணப்பங்கள் அத்தனைக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்றால் 150 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ரூபாய் இருந்தால் தமிழகத்திலே எல்லா இடங்களுக்கும், கேட்கின்ற எல்லா விவசாயிகளுக்கும் மின்சாரம் கொடுக்கக்கூடிய நிலை உருவாக முடியும். இந்த 150 கோடி ரூபாயை இப்பொழுது நாம் எங்கேயிருந்து பெறுவது ? கூடிய விரைவிலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வரப்போகிறது என்று சொல்கிறார்களே, அது உண்மையிலேயே வருவதாக இருந்தால் இந்த அரசாங்கம் மின்சார வாரியத்திற்கு 150 கோடி ரூபாயைப் போராடிப் பெற முடியவில்லை என்றாலும் குறைந்தது 100 கோடி ரூபாயாவது கொடுக்கப்பட வேண்டுமென்று கூறி அந்தப் பணத்தை மின்சார வாரியத்திற்குப் பெற்றுத் தந்தால் இன்னமும் முறையாகச் செயல்பட முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

பொதுவாக, கிராமப்புறங்களில் மின்சார இலாக்காவைப்பற்றி கூறப்படும் குறைபாடு ஒன்றே ஒன்று. அதுதான் தெரு விளக்குகள் எரிவது இல்லை என்பது. இது பல ஆண்டுகளாகச் சொல்லப்படும் குறைபாடு. கடந்த ஆண்டு இங்கு குறிப்பிட்டதற்குக் குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். பல்புகள் இல்லையென்ற காரணத்தால் அந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு பல்புகள் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காகக் கிராமங்கள் அத்தனையையும் இருட்டாக வைத்திருப்பது வாரியத்திற்கு நல்லது அல்ல. எனவே, கிராமப்புறங்களில் எல்லா இடங்களிலும் டியூப் லைட்டுகள் போடுவதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குக் கூடுதலாகக் கொஞ்சம் பணம் செலவாகிறது என்றாலும் கூடுதல் செலவில் கொஞ்சம் அரசாங்க மானியமாகக் கொடுத்து எல்லாக் கிராமங்களுக்கும் டியூப் லைட்டுகள் போட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்படியில்லையென்றால், அங்கங்கே இருக்கின்ற பஞ்சாயத்துக்கள் அங்கே வேண்டிய பல்புகளை அங்கேயிருக்கின்ற அந்தந்தப் பஞ்சாயத்துக்களே வாங்கிப் போட்டுக் கொள்ளக்கூடிய அதிகாரத்தைக் கொடுத்தால் இந்த மின்சார கழகத்திற்கும், அரசாங்கத்திற்கும் கெட்ட பெயர் வராது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இந்த இலாக்காவிலே பணிபுரியக்கூடிய ஊழியர்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாலும் இன்னும் ஒரு சில பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. குறிப்பாகப் பதவி உயர்வு என்று வரும் நேரத்தில் நிலையான கொள்கைகள்

கிடையாது. அப்படிச் சொல்லுகின்ற நேரத்தில் 'அசிஸ்டெண்ட்' என்று இருக்கின்றவர்களை 'அக்கவுண்டண்ட்' என்று மாற்றுகிற நேரத்தில் ஒன்று சீனியாரிட்டியை எடுத்துக்கொள்ளப்படுகிறதா அல்லது உதவியாளர்களானதிலிருந்து உள்ள சர்வீஸைக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறதா என்றால் சில நேரங்களில் 'காமன் சீனியாரிட்டி' என்று எல்.டி.சி.-யாக ஐந்து வருஷம், யு.டி.சி.-யாக ஐந்து வருஷம் என்று இந்தக் கணக்கைக்கொண்டு பதவி உயர்வு கொடுக்கிறார்கள். இந்த நிலையால் குழப்பங்கள் இல்லாமலிருக்க ஒரு காமன் சீனியாரிட்டியை எல்லா இடங்களிலும் பின்பற்றி பதவி உயர்வு கொடுக்க வழி செய்ய வேண்டும். உதாரணத்திற்காகக் கூறுகிறேன்—செங்கல்பட்டிலே ஒருவர் எல்.டி.சி.-யாக ஆரம்பித்து, பத்தாண்டுகள் பணி செய்தால் பிறகு அவர் 'அக்கவுண்டண்ட்' ஆகிறார். ஆனால் சென்னையிலே பத்தாண்டுகளாக இருப்பவர் 'அசிஸ்டெண்ட்'-டாகவே இருக்கிறார். இத்தகைய வேறுபாட்டைப் போக்க காமன் சீனியாரிட்டியை இந்த இலாக்காவில் கொண்டு வர வேண்டும்.

அதேபோல் ஸ்டோர் கீப்பர்ஸ் விஷயத்திலும் நிலையான கொள்கை இல்லாமல் பதவி உயர்வு கொடுக்கும் நிலை இருக்கிறது. ஒரு சில நேரத்தில் 3-வது (தேர்ட்) கிரேடிற்கு நேரடியாக பதவியை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். சில நேரங்களில் செகண்ட் கிரேடாக இருந்தவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்திருக்கிறார்கள். இப்படியில்லாமல் நிலையான கொள்கையை உருவாக்கி அந்த பதவி உயர்வைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதேபோல் கடைநிலை ஊழியர்கள், பியூன்கள் பற்றி ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த ஆண்டு நான் கடைநிலை ஊழியர்களுக்குச் சீருடை வழங்க வேண்டுமென்று சொன்னேன். வாரியம் கொடுத்துள்ள குறிப்பில் சீருடை வழங்குகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் 12 ஆண்டுகளாக அங்கே பணியாற்றியிருக்கிறேன். இப்பொழுதும் வாரத்திற்கு ஒரு முறை அங்கு சென்று கொண்டிருக்கிறேன். அப்படி நான் சென்றபொழுது அவ்வாறு சீருடை வழங்கப்படவில்லை என்று தெரிந்தது. எனவே அவர்களுக்குச் சீருடை வழங்க வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேபோன்று வேலையில்லை என்ற காரணத்தால் கடைநிலை ஊழியர்கள் 7, 8 ஆண்டுகள் வேலை செய்தவர்களையும் வீட்டிற்கு அனுப்புகிறோம். இன்னொரு புதிய பியூன் வேகன்ஸி ஏற்பட்டால் வீட்டிற்கு அனுப்பப்பட்ட அந்த அந்த ஊழியர்களை அழைக்காமல், 'எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச்' யிலிருந்து அழைப்பது அவ்வளவு நியாயம் அல்ல. கடந்த மாதம் அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. 'போர்ட் ஆபீஸ்'-ற்கு பியூன் தேவை என்று எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்சில் கேட்டிருக்கிறார்கள். அதனால் தமிழகத்தில் பல பியூன்கள் 7 ஆண்டுகள்,



8 ஆண்டுகள் என்று உழைத்து விட்டு வேலை இல்லை என்ற காரணத்தால் வீட்டிற்குப் போனவர்கள் இருக்கிறார்கள். எனவே அவ்வாறு காலியாகக்கூடிய அந்த இடத்திலே அவர்களை அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, இந்த இலாக்காவிலுள்ள பல விவரங்களை இந்தச் சபைக்குத் தர வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு மின்சார விரயம் எவ்வளவு என்று காட்ட வேண்டும். கடந்த ஆண்டு அவ்வாறு கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு கொடுத்த புள்ளிவிவரங்களில் எந்த அளவு மின்சார விரயம் என்று கொடுக்கப்படவில்லை. அப்படியானால் மின்சார விரயமே ஆகவில்லையா என்றால் நிச்சயமாக இருக்க முடியாது. இதற்கு முன்னால் ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய 12 கோடி ரூபாய் மின்சார விரயம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எவ்வளவு ஏற்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரங்கள் இல்லை. அந்தப் புள்ளிவிவரங்கள் கொடுத்திருந்தால் நாம் இங்கே அதைப்பற்றி விவாதிப்பதற்கு ஏதுவாக இருக்கும். அந்தப் புள்ளிவிவரங்கள் கொடுக்காத காரணத்தினால் அதைப்பற்றி நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை.

அதேபோல இன்னும் சில நிகழ்ச்சிகளை இங்கே சொல்லுவது நல்லது என்று நினைக்கிறேன். சில இடங்களில் மின்சார இலாகாவில் பொருள்கள் 10 ஆண்டுக் காலமாக தேக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் ஒரு பயனும் இல்லாமல் இருக்கின்றது. அப்படி தேக்கி வைக்கப்பட்டிருக்கிற பொருள்களினுடைய மதிப்பு எவ்வளவு என்று பார்த்தால் ஒரு இடத்திலே எம்.ஈ.எஸ். என்று சொன்னால் ஏறக்குறைய 50 இலட்சம் ரூபாய் அளவுக்கு 'கரண்ட் டிரான்ஸ்ஃபார்மர்கள்', அதேபோல் 'ஓ.சி.பீஸ்,' இப்படிப்பட்ட பொருள்கள் 10 ஆண்டுக் காலமாக வீணாக ஒரே இடத்திலே தேக்கிவைத்திருக்கிறார்கள். அப்படி இருப்பதன் மூலம் தமிழகத்திலே எல்லா மின்சாரப் பிரிவுகளிலும் 5 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள அப்படிப்பட்ட பொருள்கள் தேங்கிக் கிடக்கின்றன. 5 கோடி ரூபாய் என்று சொன்னால் மின்சார கழகத்திற்கு அது மிகப் பெரிய தொகை. மின்சார கழகத்திற்கு இப்பொழுது 2 கோடி ரூபாய் கிடைத்தால் போதும், ஏறக்குறைய 10,000 பம்ப் செட்கள் இணைப்பதற்கு வசதி இருக்கும். ஆனால் 5 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் 10 ஆண்டு காலமாக கேட்பாரற்று தேங்கிக் கிடக்கின்றதே, அதற்கான வட்டி என்ன ஆயிற்று ? உதவாத பொருள்களை எல்லாம் ஏலம் விட்டு வருவாய் ஈட்டி அதில் ஏதாவது செய்ய முடியுமா என்பதையும் இந்த இலாகா கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Madras State Electricity Board's Annual Financial Statement. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய 37-வது பக்கத்தில் 44-வது எண்ணில் 'Construction of a temporary shed to S.O.'s Office and Staff'. ரூ. 10,000 என்று ஒதுக்கி இருக்கிறார்கள். எந்த இடத்திலே 'எஸ்.ஓ.' ஆஃபீஸ் கட்டப்

போகிறார்கள்? எந்த இடத்திலே 'ஷெட' அமைக்கப் போகிறார்கள்? விவரம் இல்லை. ஏன் விவரங்கள் இல்லை என்பதற்கான நிகழ்ச்சிகள் எனக்குத் தெரியும். நான் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கோயம்புத்தூரிலே மின்சார அலுவலகத்தில் சூப்பரின்டெண்டிங் இன்ஜினீயர் இருக்கிற இடத்தில் சுமார் ரூ. 70,000 மதிப்புள்ள கட்டிடம் கட்டப்பட்டு எந்தப் பயனும் இல்லாமல் இருக்கின்றது. ஒரு கல்யாணக் கூடத்தைப்போல் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கட்டிடம் கட்டுவதற்கு எஸ்டிமேட் இல்லை. எப்படி அந்தக் கட்டிடம் அங்கே வந்தது? யார் அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்குப் பணத்தைத் தந்தார்கள்? அதிகாரிகள் கொடுதார்களா? அல்லது தொழிலாளிகள் கொடுத்தார்களா? அந்த இடம் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது? ஒரு விவரமும் இல்லை. பல இடங்களிலே மின்சார இலாகாவிலே ஊழியர்கள் வேலை செய்வதற்குக்கூட இடம் இல்லை. தாராபுரம் மின்சார இலாகா ரெவின்யூ யூனிட் அலுவலகத்தில் எழுத்தர்கள் வேலை செய்வதற்கு இடம் இல்லை. மாதம் ரூ. 500 கொடுத்து வாடகைக்கு இடம் வாங்கியிருக்கிறார்கள். அந்த இடத்திலே பாம்புகள் வந்திருக்கின்றன. தாராபுரத்தில் மின்சார பணியாளர்கள் வேலை செய்து கொண்டிருந்த நேரத்திலே பாம்புகள் வந்தன. ஆட்கள் அத்தனை பேரும் வெளியே ஓடி வந்தார்கள். இப்படிப்பட்ட இடங்களில் கட்டிடம் கட்டினால் பயனுள்ளதாக இருந்திருக்கும். ஆனால், கோயம்புத்தூர் போன்ற இடங்களிலே ஏற்பட்டிருக்கும் வீண் விரயங்கள் நிச்சயம் தவிர்க்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேடடுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் புதிய திட்டங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். மாநில அரசாங்கத்திடமிருந்து புதிய திட்டங்கள் இந்த இலாகாவோடு சேர்ந்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 10 திட்டங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த 10 திட்டங்கள் அனுப்பியதற்குப் பிறகு இன்னும் அந்தத் திட்டங்கள் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை அந்த 10 திட்டங்கள் நிறைவேறினால் இங்கே இருக்கிற பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். பல தொழிலாளிகள், அதிலும் சூப்பர்வைசர்கள், சிவில் டிப்பார்ட்மெண்டிலே இருக்கக் கூடியவர்கள் வேலை இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் நிறைவேறினால் இந்த வேலையில்லா நிலையைப் போக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. 6 ஆண்டுகள், 7 ஆண்டுகள் வேலை செய்தவர்கள் இந்த இலாகாவிலிருந்து வெளியே போகப் போகிறோமோ என்ற பயத்தோடு இருக்கிறார்கள். ஏறக்குறைய 10 திட்டங்களை நாம் மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்திருக்கிறோம். அந்த 10 திட்டங்கள் நிறைவேறுவதற்கு இந்த அரசாங்கமும், அந்த இலாகாவும் மத்திய அரசாங்கத்தோடு போராடி பெறுவதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





அதேபோல் அங்கு இருக்கிற கணக்காயர் சங்கம் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. ஒரு சங்கத்தை அங்கீகரிப்பது என்று சொன்னால் அந்தச் சங்கத்திலே பெரும்பாலான அங்கத்தினர்கள் இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். இந்தச் சங்கத்திலே பெரும்பாலான அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது க்ளெரிக்கல் ஸ்டாஃப் என்று சொன்னால் அவர்களுக்கு ஒரு யூனியன் இருக்கிறது. மொத்த க்ளெரிக்கல் ஸ்டாஃபே 5,000 பேர்கள். அதிலே 4,000 பேர்கள் அந்த சங்கத்திலே அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அந்த சங்கத்தினுடைய பதிவேடு லேபர் ரிலேஷன்ஸ் ஆபீஸர் என்பவரால் பரிசீலனை செய்யப்பட்டு, சிபாரிசு செய்து அனுப்பப்பட்டிருக்கிறது. என்றாலும் கூட, இன்னும் சில அரசியல் கட்சிகளுடைய தலையீட்டால், இன்னும் சில அதிகாரிகளுடைய தலையீட்டால் இந்த அக்கவுண்ட்ஸ் சபார்டினேட் யூனியனுக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அந்த அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் அங்கே பணியாற்றக்கூடிய தொழிலாளிகளுக்கு கான்ஃபிடன்ஷியல் ஃபைல் இருக்கிறது. தமிழக அரசிலே இருக்கக்கூடிய பணியாளர்களுக்கு இருக்கக் கூடிய அந்த கான்ஃபிடன்ஷியல் ஃபைல் முறையை ஒழித்து விட வேண்டுமென்ற அந்த கோரிக்கையை நமது மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்கள் ஒரு கூட்டத்திலே அறிவித்து இருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய கொள்கை இன்னும் தெளிவாக்கப்படவில்லை. ஆனால் மின்சார வாரியம் ஒரு தனி வாரியமாக இருக்கிற காரணத்தினால் அங்கே இருக்கின்ற பணியாளர்களுடைய கான்பிடன்ஷியல் ஃபைலை போக்குவதற்கு இந்த அரசாங்கமும் அந்த இலாகாவும் முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் குறை நீக்கக் குழுக்களைப் பற்றி அறிவித்து ஓர் ஆண்டுக் காலம் ஆயிற்று. அந்த குழுக்கள் நியமிக்கிறோம் என்று சொல்லியும் இன்னும் செயல்பட ஆரம்பிக்க வில்லை. அப்படிப்பட்ட குறை நீக்கக் குழுக்கள் இன்னும் செயல்படவும் இல்லை; அதை நியமிக்கவும் இல்லை என்று தெரிகிறது. ஆகவே, அந்த குறை நீக்கக் குழுக்களை நியமிக்க இந்த அரசாங்கம் உடனடியாக முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்திலே பணியாற்றக் கூடிய ஊழியர்கள் தங்களுடைய பிள்ளைகளை பி.யூ.சி. வரை இலவசமாக படிக்க வைக்கலாம். அதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், மின்சார வாரியத்திலே வேலை செய்யக் கூடிய ஊழியர்கள் தங்களுடைய பிள்ளைகளை பி.யூ.சி. வரை இலவசமாக படிக்க வைக்க வழி செய்யப்பட்டிருக்கிறதா என்று சொன்னால் வழி செய்யப்படவில்லை. எனவே, இந்த அரசாங்கம் மின்சார வாரியத்திற்குச் சிபாரிசு செய்து அங்கே பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுடைய பிள்ளைகள் பி.யூ.சி. வரை இலவசமாகப் படிப்பதற்கு வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு ஹாண்ட்லூம் லோன், இன்னும் டிராவலிங் அலவன்ஸ் இவைகளில் எல்லாம் அதிகம் கவனம் செலுத்தி இப்பொழுது இருப்பதைவிட ஏதாவது உயர்த்திக் கொடுக்க முடியுமானால் இந்த அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆக மொத்தத்தில் இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு மின்சார வாரியத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன ; புதிய அதிகாரிகள் வந்திருக்கிறார்கள் ; பல ஆண்டுகளுக்குப் பிறகு புதிய கொள்கைகள் வகுக்கக் கூடிய வாய்ப்பு வந்திருக்கின்றன. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வாரியமும் அரசும் நல்ல முறையிலே நாட்டு மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

* **திரு. என். எஸ். வி. சித்தன்** : தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968-69-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன். சென்ற ஆண்டு நடைபெற்ற விவாதத்திலே பங்குபெற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய கருத்துக்களையும் அந்தக் கருத்துக்களின் மீது மின்சார வாரியத்தினுடைய நடவடிக்கைகளையும் தெளிவுரைகளையும் கொண்டிருக்கிற முறையில் அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல் மற்ற மானியக் கோரிக்கைகளிலே நடைபெறுகின்ற விவாதம் பற்றியும் அதன்மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளைப் பற்றியும் தெளிவாக விவர அறிக்கை ஒன்று கொடுக்கப்படுமானால் அந்த விவாதத்திலே கலந்து கொள்கின்ற அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களின்மீது எந்த அளவு அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது ; அல்லது தங்களுடைய கோரிக்கைகளில் என்ன சிக்கல் இருக்கிறது என்பதைப் பற்றி நன்றாகப் புரிந்துகொள்ளலாம். எனவே, இது மாதிரியான விளக்கக் குறிப்புகள் எல்லா மானியக் கோரிக்கைகளுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று நான் முதலாவது கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய நாகரீக உலகில் மின்சாரத் தேவையை அறியாதவர்கள் இல்லையென்றே சொல்லலாம். அதிலும் நம்முடைய விவசாயப் பிரச்சினைகளிலே மின்சாரம் பிரிக்க முடியாத ஒன்றாக இணைந்துள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரையிலே ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டியாக தமிழகத்திலே மின்சார வாரியம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கான நல்ல சூழ்நிலையை, நல்ல அஸ்திவாரத்தை இதற்கு முன்னே இருந்த காங்கிரஸ் அரசு செய்திருக்கிறது என்று நான் இங்கே பெருமையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 9,000 கிராமங்களுக்கு மின் இணைப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன ; ஏறத்தாழ 18 ஆயிரத்திற்கு அதிகமான சிற்றூர்களுக்கு மின்சார இணைப்பு கொடுத்திருக்கிறோம் ; 3½ இலட்சம் விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு வாரியத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்துடன் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற இந்த விவர அறிக்கையிலே இன்னும் 5 ஆண்டுகளில் 1,346 மெகவாட் மின்சாரம் மட்டுமே உறுதியாக வழங்க முடியுமென குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 10 ஆண்டுகளில், 2,500 மெகவாட்டுக்கு அதிகமாகப் போகும் என்று ஒரு கணக்குச் சொல்கிறார்கள். ஆக, இப்பொழுதுள்ள புனல் மின்சார நிலையங்கள் அதாவது நீரைக் கொண்டு மின்சாரத்தை எடுத்து வந்தது ஏறத்தாழ முடிந்து விட்டது. ஆக, இனி அனல் மின்சார நிலையங்களின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்கிறோம். அதற்கான உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. இருந்தாலும், அணு மின்சார நிலையங்களை ஆரம்பிப்பதுதான் சரி என்று எனக்குப் படுகிறது. அதற்கு நிரம்பச் செலவிட வேண்டுமென்று நேரிட்டாலும் வளர்ந்து வருகிற தேவையைப் பூர்த்தி செய்ய அணு மின்சார நிலையத்தை ஏற்படுத்துவதுதான் சிறந்த வழி என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





தமிழக மின்சார வாரியம் நல்ல முறையிலே பணியாற்றி வருகிறது என்றாலும் கூட அது முழுக்க முழுக்க சரியாக, சீரான முறையிலே பணியாற்றுகிறது என்கின்ற வாதத்தை என்னால் ஒத்துக்கொள்ளமுடியாது. ஏனென்றால் தொலை தூரத்திலே உள்ள விவசாயிகளுக்கும் கிராம மக்களுக்கும் மின்சார வாரியத்தின் பலன் எட்டவில்லை என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளின் பம்ப் செட்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கும்போது யூனிட் ஒன்றுக்கு 8¼ பைசா வாங்கப்படுகிறது. அது மிக அதிகம் என்றே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற முறை கூட நானும் மன்ற உறுப்பினர்களும் ஆளும் கட்சி உறுப்பினர்களும் இதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். பொதுவாக உற்பத்திச் செலவு ஒவ்வொன்றுக்கும் வேறுபடுகிறது. அணைக்கட்டு நீரைக் கொண்டு உற்பத்தி செய்பவர்களுக்கு ஒரு செலவு ஆகிறது, குளங்களைக் கொண்டு உற்பத்தி செய்பவர்களுக்கு ஒரு செலவு ஆகிறது, கிணறுகள் தோண்டி பம்ப் செட் வைத்திருப்பவர்களுக்கு ஒரு செலவு ஆகிறது. ஆக, எப்படி விளைச்சல் செய்தாலும் விலை ஒரே விலைதான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, விவசாயச் செலவைக் குறையுங்கள் என்று சொல்வதில் நியாயம் இருக்கிறது. எனவேதான், விவசாயிகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 8¼ காசு வீதத்திலிருந்து விலையைக் குறைக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். 8¼ காசிலிருந்து 6 காசாகக் குறைக்கப்பட வேண்டும். அது விவசாயிகளுக்கு அதிக நன்மை பயக்கும். அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில் மைசூர் மாநிலத்திலிருந்து 4.66 காசுக்கு மின்சாரம் வாங்கப்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நெய்வேலி கார்ப்பரேஷனிலிருந்து ஒரு யூனிட் 5.9 காசுக்கு வாங்கப்படுகிறது. எனவே 6 காசுக்கு வழங்க

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1968 ஆகஸ்ட் 17

வேண்டும் என்று கேட்பதில் நியாயமிருக்கிறது, அந்த நியாயமான கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை குறைக்க வேண்டுமென்றால், பெரிய தொழில்களுக்கு மின்சாரக் கட்டணத்தைக் கூட்டவேண்டும் என்ற யோசனை இதற்கு முன்பு சொல்லப்பட்டது. பெரிய தொழில்களுக்கு மின்சாரக் கட்டணத்தைக் கூட்டினால் அந்தத் தொழில்கள் நசித்துவிடும் என்ற வாதத்தை ஒத்துக் கொள்வதற்கில்லை. பெரிய தொழில்களுக்கான மூலப் பொருள் களின் விலை ஏற்கெனவே கூடியிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லப்போனால், சிமெண்டு, எஃகு, இரும்பு, ரசாயனப் பொருள்கள் போன்றவற்றிற்கு விலை ஏற்கனவே கூடி இருக் கிறது. அந்த விலை ஏற்றத்தை ஒப்பிட்டால், பெரிய தொழில்களுக் கான மின்சாரக் கட்டணம் பல ஆண்டுகளாக உயர்த்தப்படவில்லை. பெரிய தொழில்களுக்கு மின்சாரக் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு ஒரு காசு உயர்த்தினால், பெரிய தொழில்களுக்கு எந்த விதமான இழப்பும் ஏற்பட்டுவிடாது, பெரிய தொழில்கள் அதனால் நசித்து விடும் என்றும் சொல்வதற்கில்லை. மின்சார வாரியம் வியாபார நோக்கத்தோடு இயங்குகிற வாரியம் என்று சொல்லப் படுகிறது, ஒத்துக்கொள்கிறேன். பெரிய தொழில்களுக்கு உற்பத்திச் செலவை விட குறைந்த விலைக்கு எதற்காக மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும்? அலுமினியம் தொழிற் சாலைக்கு யூனிட் ஒன்றுக்கு 2.2 காசுக்கு மின்சாரம் வழங்கப்படு கிறது. நான் முன்பு சொன்னதுபோல் பெரிய தொழில்களுக்கு மின்சாரக் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு ஒரு காசு உயர்த்தினால் மின்சார வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2½ கோடி வருமானம் கிடைக்கும். அதன்மூலம் விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முடியும். வீடுகளுக்கு உள்ள மின்சாரக் கட்டணத்தை 30 காசிலிருந்து 32 காசுகளாக உயர்த்தி யிருக்கிறார்கள். அதையும் குறைக்கலாம் என்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் ஏற்படுகிற பண விரயத்தைத் தடுத்தால், அந்த வாரியத்திற்கு பல கோடி ரூபாய் லாபம் கிடைக்கும். மின்சார வாரியத்தில் காண்டிராக்ட் முறை, நெகோஷியேட் டெண்டர் என்ற முறைகள் பின்பற்றப்படுகின்றன. இதனால் மின்சார வாரியத்திற்குப் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. சிமெண்டு, காங்க்ரீட் கம்பங்களை மின்சார வாரியம் காண்டிராக்ட் மூலம் வாங்கிக்கொண்டிருக்கிறது. 24 அடி உயரமுள்ள காங்க்ரீட் கம்பத்தை மின்சார வாரியமே உற்பத்தி செய்தால், ரூ. 75-ல் உற்பத்தி செய்ய முடியும். அதே மாதிரி 27 அடி உயரமுள்ள காங்க்ரீட் கம்பத்தை ரூ. 95-க்கு உற்பத்தி செய்ய முடியும். காண்டிராக்ட் முறையில் வெளியார் 24 அடி கம்பத்தை ரூ. 85-க்கும் 27 அடி கம்பத்தை ரூ. 105-க்கும் சப்ளை செய்கிறார்கள்.



1968 ஆகஸ்ட் 17] [திரு. என். எஸ். வி. சித்தன்]

இப்படி வெளியே வாங்குவதால் கம்பம் ஒன்றுக்கு சுமார் ரூ. 10 அதிகமாகச் செலவாகிறது மின்சார வாரியத்திற்கு. இந்த வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ஒரு லட்சம் கம்பங்கள் தேவைப்படும் என்று கருதுகிறேன். ஆகவே, இந்த காங்க்ரீட் கம்பங்களை இந்த வாரியமே தயார் செய்வதற்கான ஏற்பாட்டை துரிதமாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் ரூ. 10 லட்சம் லாபம் கிடைக்கும் என்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அத்துடன் எனக்கு முன்பு பேசிய நண்பர் கூறினார். வாரியத்தில் அதிக அவசியம் இல்லாத பொருள்களை மிக அதிக அளவில் வாங்கி முடக்கியிருப்பதால், கணிசமான அளவுக்கு மூலதனம் முடங்கிக் கிடக்கிறது என்று கூறினார். அந்தக் கருத்தினை நான் ஆதரிக்கிறேன். எந்தப் பொருள்கள் வாங்கினாலும், ஒரு உயர் மட்ட கமிட்டி போட்டு, அந்தக் கமிட்டி மூலம் பொருள்களை வாங்க வேண்டும் என்ற யோசனையை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முன்பு பேசிய நண்பர் திரு. வீராசாமி அவர்கள் மின்சாரம் அதிகமாக விரயமாகிறது, அந்த விரயத்தைக் குறைப்பதற்கான விவரம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்று கூறினார். மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும், மின்சாரம் விநியோகிக்கப்படுவதற்கும் இடையே உள்ள கட்டத்தில் 17 சதவிகிதம் விரயமாகிறது அல்லது காணாமல் போகிறது, அல்லது திருட்டுப் போகிறது என்ற ஒரு நிலை இருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் சொல்கிறார்கள். மின்சாரத்தைக் கணக்கிடும் அளவைக் கருவி சரியான முறையில் பொருத்தப்படாதது, அந்த அளவைக் கருவி சரியான முறையில் இயங்காமை, அந்த அளவைக் கருவி கிடைக்காமல் இருப்பது, டிரான்ஸ்பார்மரில் மீட்டர் பொருத்தப்படாமல் இருப்பது, இது போன்ற பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. இதனால் 17 சத விகிதம் அளவுக்கு விரயமாகிறது. இதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால், மின்சார வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10, 12 கோடி மீதமாகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மின்சார வாரியத்திற்கான பில் புத்தகங்கள், மற்றவைகள் அச்சடிப்பதற்கு வாரியத்திற்கென்றே தனியாக ஒரு அச்சகம் இருக்க வேண்டும் என்று பல வருஷங்களாக இந்த மன்றத்தில் வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. மின்சார வாரியத்திற்கென ஒரு தனி அச்சகம் கூடிய சீக்கிரம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற யோசனையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமங்களில் தெரு விளக்குகள் சரியாக எரிவதில்லை என்ற குற்றச்சாட்டு சென்ற ஆண்டில் எங்கள் கட்சி அங்கத்தினர்களால் எடுத்துச் சொல்லப்பட்டது. அமைச்சர் அவர்களும் ஆவன செய்வதாக உறுதி அளித்தார்கள். 1½ வருஷங்கள் ஆகியும் கிராமங்களில் பல்புகள் மாற்றப்படாத சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. பல்புகளுக்கு இறக்குமதி செய்யப்படும் சில

பொருள்கள் தேவைப்படுகின்றன, அவை கிடைப்பது அரிதாய் இருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்கள் பல்புகளை வெளிச் சந்தையில் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். மின்சார வாரியத்திற்கு பல்புகள் கிடைக்கவில்லையென்றால், வெளிச் சந்தையில் ஊராட்சி மன்றத்திற்கு எப்படிக் கிடைக்கும்? மின்சார வாரியம்தான் அதிகமான அளவுக்கு பல்புகளை உபயோகப்படுத்துகிறது. அதற்கு பல்புகள் கிடைக்கவில்லை என்றால், வெளிச்சந்தையில் மட்டும் எப்படி பல்புகள் கிடைக்கும்? காலாகாலத்தில் பல்புகள் தேவையான அளவுக்குக் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். எத்தனை முறை திரும்பத் திரும்பச் சொன்னாலும், கடந்த 1½ ஆண்டு காலமாக இதுவரையில் இல்லாத அளவுக்கு கிராமங்களில் இருள் சூழ்ந்து கிடக்கிறது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது காணப்பட்ட இருட்டடிப்பான நிலைமை இப்பொழுது கிராமங்களில் நிலவுகிறது என்பதை மிகவும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல்புகளைப் பொறுத்தவரையில், மின்சார வாரியமே தயாரிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆரம்ப காலத்தில் அதற்காக மிக அதிகமாகச் செலவானாலும், தொடர்ந்து ஆண்டுதோறும் பல்புகள் அதிகமான அளவுக்குத் தேவைப்படுவதால், பல்புகள் தயாரிக்கும் தொழிற்சாலையை மின்சார வாரியம் விரைவிலே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் ஒரு நிறுவனம் சரியான முறையில் செயல்பட வேண்டுமென்றால், அதிலே இருக்கிற ஊழியர்கள் உற்சாகமாக வாழ வேண்டும். அப்பொழுதுதான் வாரியம் சரியான முறையில் இயங்க முடியும். ஏறத்தாழ 75 சதவிகித ஊழியர்கள் வாழ்க்கையில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல், பதவி உயர்வு இல்லாமல், ஊதிய உயர்வு இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உற்சாகத்தோடு உழைக்க வேண்டுமென்றால், சரியான முறையில் பணியாற்ற வேண்டுமென்றால், அவர்கள் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். கூடிய சீக்கிரத்தில், முதல் தவணையாக, முதல் முயற்சியாக அவர்களுக்கு ஊதியத்தை ஓரளவுக்காவது உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே சென்ற ஆண்டு மின்சார வாரியத்தின் வருமானம் ரூ. 44.2 கோடியாக இருந்தது, இந்த ஆண்டு 50.34 கோடியாக உயர்ந்து இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழக அரசுக்குக் கொடுக்கக்கூடிய வட்டியும் 11 கோடி ரூபாயிலிருந்து 13 கோடியாக உயர்ந்திருக்கிறது. ஆனால், ஊழியர்களுக்குப் போனஸ் ரூ. 31 லட்சத்திலிருந்து 33 லட்சமாகத்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. வருமானம் ரூ. 6 கோடி உயர்ந்திருக்கிறது. அரசுக்குக் கொடுக்கக்கூடிய வட்டி ரூ. 2 கோடி கூடியிருக்கிறது. ஆனால் ஊழியர்களுக்குக் கொடுக்கக்கூடிய போனஸ் ரூ. 2 லட்சம் அளவிற்குத்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது.



அதிகமாக வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு உயர்ந்த அளவு போனஸ் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் மேலும் மேலும் தொழிலாளர்களுடைய உற்சாகமான உழைப்பைப் பெற முடியும். 4 சதவிகித போனஸ் என்பதை மாற்றி, இன்னும் உயர்ந்த அளவுக்கு போனஸ் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1957-ம் ஆண்டு முதல் 1964-ம் ஆண்டு வரையில் இடைப்பட்ட 7 ஆண்டு காலத்திற்கு இன்னும் போனஸ் வழங்கப் படவில்லை. இதை விரைவிலே வழங்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட வேலை முடிந்துவிட்டது. அதனால் ஏறத்தாழ 2,000 தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு விரைவிலே ஊட்டியில் ஆரம்பிக்கப்பட இருக்கிற பாண்டியாறு-புன்னப்புழா திட்டத்தில் மாற்று வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் பல இடங்களில் கட்டப்பட்டு முடிந்திருந்தும், பல ஆண்டுகளாக மின் இணைப்பு கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. விவாக் குறிப்பில் குறிப்பிட்டுக் கூறப்பட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்று மட்டும் கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் பச்சைக் கொம்பன்பட்டி, கரடிக்கல், கே. புளியங்குளம் போன்ற இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு, அவைகள் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், இன்னும் மின் இணைப்பு கிடைக்கவில்லை. விரைவிலே இவைகளுக்கு மின் இணைப்பு கிடைக்க வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியம் (ரீஜனல் ரெவின்யூ யூனிட்) வருவாய் பிரிவுகளை அங்கே இருக்கிற மக்களுடைய நலனை உத்தேசித்து, பிராந்தியத்திற்கு ஒன்று என்ற முறையில் அமைத்திருக்கிறார்கள். இப்பொழுது மதுரையில் மதுரை வடக்கு ரெவின்யூ யூனிட்டும், மதுரை தெற்கு ரெவின்யூ யூனிட்டும் ஒரே இடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மதுரை தெற்கு ரெவின்யூ பிரிவை அந்தப் பிராந்தியத்திற்கு மாற்றவேண்டும். அதாவது மதுரை தெற்கு வருவாய் பிரிவை திருமங்கலத்தில் அமைக்கவேண்டும். திருமங்கலத்தில் அந்த வருவாய் பிரிவு அமைக்கப்பட்டால்தான், அங்கே சுற்றியுள்ள கள்ளிக்குடி, கல்லுப்பட்டி, எழுமலை, வாலாந்தூர், உசிலம்பட்டி, திருப்பரங்குன்றம் போன்ற பகுதிகளிலுள்ள, மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். 17,000 மின் இணைப்பு இருந்தால், அங்கே ஒரு வருவாய் பிரிவு அமைக்கலாம் என்ற விதி இருக்கிறது. இந்தப் பகுதியில் 19,000 மின் இணைப்புக்கள் இருப்பதால், திருமங்கலத்தில் மதுரை தெற்கு வருவாய் பிரிவை அமைக்கவேண்டும் என்று கூறிக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு அவகாசம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கரு. சீமைச்சாமி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது எனனுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் பேசவேண்டுமென்று நினைத்த கருத்துக்களையெல்லாம் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் திரு. சித்தன் அவர்களும், திரு. வீராசாமி அவர்களும் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும், நானும் பேசவேண்டுமென்ற காரணத்தினால், சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஆண்டு மின்சார வெட்டு இல்லை என்பதற்காக உண்மையிலேயே நாம் அமைச்சர் அவர்களையும், மின்சார வாரியத்தினரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கடந்த 8 மாத காலமாக மழை இல்லாமல் இருந்தாலும்கூட, மின்சார வெட்டு இல்லாதது குறித்து விவசாயிகள் உண்மையாகவே பாராட்டக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சரவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையிலே, பண்ணைகள், தொழிற்சாலைகள், வீடுகள் இவற்றிற்கு மின் இணைப்புக் கொடுத்திருப்பது பற்றிக் கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அபபடி மின் இணைப்புக் கொடுப்பதுதான் இலட்சியம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே சமயத்திலே, திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டது போல, தெரு விளக்குகள் போட்டிருப்பதில், பல்புகள் இல்லாததால், கிராமங்களில் இருள் சூழ்ந்து கிடக்கிறது. ஏன் பல்புகள் சரியாக இல்லை என்பதைப் பார்க்கும் போது, அந்த பல்புகளிலே திருகு மூடிகளுக்குப் பித்தளை வெளிநாடுகளிலிருந்து வருகிறது, பல்புகளுக்கு செப்புக் கம்பிகள் இல்லை, என்றெல்லாம் சொல்லுகிறார்கள். எந்தக் காரணம் எப்படி இருந்தாலும், தெரு விளக்குகளுக்குப் போடும் பல்புகள் 10, 15 நாட்களில் 'ஃப்யூஸ்' ஆகிவிடுகின்றன. அவை எப்படி ஃப்யூஸ் ஆகின்றன, அதில் பித்தளைத் திருகு இருக்கிறதா, இல்லையா என்பதையெல்லாம் கிராமத்து மக்களுக்குப் புரியவைக்க முடியாது. வீடுகளிலே வாங்கிப் போடும் பல்புகள் மட்டும், ஆறு மாதம், ஒரு வருஷம் என்று நல்லபடியாக இருக்கின்றனவே. அதே நேரத்திலே, மின்சார போர்டார் கொடுத்து பஞ்சாயத்திலே போடும் பல்புகள் மட்டும் ஏன் இப்படி 10, 15 நாட்களில் ஃப்யூஸ் ஆகின்றன என்பது புரியவில்லை. தரக் குறைவான பல்புகளை வாங்கிப் போடுகிறார்களா? தமிழகத்திலே உள்ள 15,000-க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் சேர்ந்து தவறுகளைச் செய்து விட்டார்களா? இந்த மின்சார போர்டு பல்புகள் வாங்குவதில் ஏதோ தவறு இருக்கிறது என்கிற ஐயப்பாடுதான் இருக்கிறது. அப்படிப்பட்ட சந்தேகம் ஏற்படும் சூழ்நிலைதான் இருக்கிறது. போர்டார் டெண்டர் விடுகிறார்கள். குறைந்த டெண்டர் கொடுத்தவர்களுக்கு ஆர்டர் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்படும் பல்புகள் 10, 15 நாட்களில் ஃப்யூஸ் ஆகிவிடுகின்றன என்றால், அதற்கான காரணம் என்ன? எந்தக் கம்பெனியிடமிருந்து வாங்குகிறார்களோ, அவர்களிடமிருந்து இந்தமாதிரி



தரக்குறைவான பல்புகள் கொடுத்ததற்காக நஷ்ட ஈடு அடையக் கூடிய ஏற்பாடு ஏதாவது உண்டா? இவற்றையெல்லாம் கவனிப்பதோடு, இனிமேலாவது இப்படிப்பட்ட தரக்குறைவான பல்புகளைப் போடாமல் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்திருப்பதுபற்றி எல்லா உறுப்பினர்களும், ஏகோபித்த கருத்துத் தெரிவித்தார்கள். நான் ஒரு விவசாயி. எட்டு மாத காலமாக மழை இல்லாததால், மின்சாரம் கிடைத்தால் மண்ணைக் கிண்டி கிண்டி தண்ணைக் கண்டுபிடிக்கலாமா என்று நினைக்கும் விவசாயிகளுக்கு, மாதக் கணக்காக, வருஷக் கணக்காக மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை என்றால், அது எவ்வளவு சங்கடமானது என்பதைப் பார்க்க வேண்டும். மின் இணைப்புக் கிடைக்கும் என்று கிணறு வெட்டியாகிவிட்டது; எஸ்டிமேட்டுகளெல்லாம் போட்டு, பம்பு செட்டுக்காக ஷெட்டும் போட்டாகிவிட்டது. ஆனால் வருஷக்கணக்காக இன்னமும் மின் இணைப்புக் கிடைக்கவில்லை. அது மிகவும் வருந்தத்தக்க விஷயம் சாதாரண சாமான்களே கிடைக்கவில்லை என்கிறார்கள். செமண்ட் பைப்புகள், போல்கள் கிடைக்கவில்லை என்கிறார்கள். மோட்டார்கள் இல்லை என்கிறார்கள். செப்புக் கம்பிகள் இல்லை என்கிறார்கள். அப்படியே இந்தச் சாமான்கள் இருந்தாலும், அவற்றை எடுத்துக் கொண்டு போக லாரிகள் இல்லை என்கிறார்கள. ஸ்விச்சுகள் சரியாக இல்லை, ஸ்டார்டர் சரியாக இல்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் விவசாயிகளிடம் சொல்வதால் என்ன பொருத்தம் என்று கேட்கிறேன். சாதாரண விவசாயி எங்களிடம் என்ன கேட்கிறான்? நீங்கள் எம்.எல்.ஏ.-தானே, எப்படி ஒரு ரைஸ்மில் வைத்தால் உடனே மின் இணைப்புக் கிடைக்கிறது, சிறிய தொழில் பட்டறைக்கு எப்படி மின் இணைப்பு உடனேயே கிடைக்கிறது, சின்னச் சின்ன தொழிற்சாலைகளுக்கும் கிடைத்துவிடுகிறதே, ஆனால் விவசாயிகளுக்கு மட்டும் ஏன் கிடைக்கவில்லை என்று கேட்கிறார்கள் எந்த வகையில் விவசாயிகளை நாங்கள் சமாதானம் சொல்வதென்று தெரியவில்லை.

என்னுடைய தொகுதியில் சில ஊர்களில் இன்னமும் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. பெரும்பாலான ஊர்களில் அப்படிக் கொடுக்கப்படவில்லை. ஆனால், இங்கே அறிக்கையோடு கொடுத்திருக்கும் கணக்கை எடுத்துப் பார்த்தால், தஞ்சாவூரில், உணவு உற்பத்தி செய்ய வேண்டும் என்று மின் விசையேற்றங்களுக்கு இணைப்புக் கொடுத்திருப்பதாகப் பார்க்கிறோம். தஞ்சாவூரிலே, ஏற்கனவே இரண்டு போகம் விளைகிறது. மூன்றாவது போகம் விளைவிக்க இவ்வளவு ஏற்பாடுகளும் செய்யப் புகும்போது, இராமநாதபுரம் ஜில்லாவிலே, வானம் பார்த்த பூமிக்கு, 20 வருஷ காலமாக புறக்கணிக்கப்பட்ட பிரதேசத்திற்கு, எத்தனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போது, அது மிகக் குறைவு என்பதைப் பார்க்கலாம். மாநிலத்திலேயே இந்த ஆண்டு, 51,746 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்திருப்பதாகக்

குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். அதற்காக மொத்தத்தில் 3.42 லட்சம் பம்பு செட்டுக்களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அமைச்சரவர்கள் பதிலில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இந்த 51,746 மின்விசையேற்றங்களில், மாவட்ட வாரியாக எத்தனை எத்தனை கொடுக்கப்பட்டிருக்கின்றன என்கிற கணக்கையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எத்தனை கிணறுகள் என்றும், மாவட்டவாரியாகக் கொடுக்க வேண்டும். அப்படிக் கணக்குப் பார்த்தால், உண்மையாகவே, கிழக்கு இராமநாதபுரம் மிக மிக புறக்கணிக்கப் பட்டிருக்கிறது என்பதை நாம் காணலாம். அந்த நிலையில் தஞ்சாவூருக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன ? தஞ்சை மாவட்ட அங்கத்தினர்கள் வருத்தப்பட்டாலும் கவலையில்லை. உற்பத்திப் பெருக்கம் அங்கே மட்டும்தானா ? கிழக்கு இராமநாதபுரத்தில் இல்லையா ? கனம் முதல் அமைச்சரவர்களும் வந்துவிட்டார்கள். இதையெல்லாம் மனதில் கொண்டு, இராமநாதபுரத்திற்கு விசேஷ கவனம் செலுத்தி, சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் 1967-68-ம் வருஷத்தில் 3,210 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் மாவட்டவாரியாகக் கணக்குக் கொடுத்தால், கிழக்கு இராமநாதபுரம் மிகவும் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது, பின்தங்கியதாக இருக்கிறது என்பதைக் காணலாம். அதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயிகள், என்ஜினீயர்கள் போன்ற அதிகாரிகளைப் பார்ப்பது என்பது மிகக் கடினமாக இருக்கிறது. இந்த சூப்ரவைசர்கள், ஏ.ஈ.-கள் இவர்களைக் கேட்டால், அவர்கள், "நாங்கள் என்ன செய்ய முடியும் ?" என்கிறார்கள். இப்படிச் சொல்வது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். பெரிய பெரிய தொழிற்சாலைகளிலே மோட்டார்கள் ஸ்டக் ஆகிப் போயிருக்கின்றன, திரும்பப் பெற ஆறு மாதம், ஏழு மாதம் என்று ஆகிறது. மோட்டார்களைக் கழட்டி கொண்டுபோய் வைத்துவிடுங்கள் ரிப்பேர் செய்யக் காலதாமதம் ஆகிறது. மதுரையில் அம்மாதிரி பல மோட்டார்கள் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், போர்டுக்கு பல லட்சக் கணக்கான ரூபாய்கள் நஷ்டம். இப்படிக் காலதாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறியவேண்டும்.

டேபிள் ரீடிங் அங்கே போய்ப் பார்த்துச் செய்வதில்லை. உட்கார்ந்தபடியே, ஏதோ எழுதிக் கணக்குக் கொடுத்துவிடுகிறார்கள். அந்தமாதிரி டேபிள் ரீடிங் செய்வதை மேற்பார்வை செய்யத் தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



பசுமலை ஓ.எம். ஸ்டோரில் பல லட்சக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள சாமான்கள் உபயோகிக்காமலேயே வீணாகக் கிடக்கின்றன. அவை உபயோகப்படுத்தப்படவில்லை. பிற்பாடு வேலைக்கு அவசியம் ஏற்பட்டபோது வேறு சாமான்களைப் புதிதாக வாங்கி உபயோகிக்கிறார்கள். இந்த சாமான்கள் 4, 5 வருஷங்களுக்கு முன்பாக வாங்கியவை. ஏன் என்று, அதுபற்றி விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பசுமலை ஆபரேஷன் மெயின்டினன்ஸ் ஸ்டோரில் மட்டுமல்லாமல், அதே போன்று, மதிப்பிற்குரிய திரு. வீராசாமி குறிப்பிட்டது போல, இன்னும் பல ஸ்டோர்களிலேயும் அப்படிச் சாமான்கள் தேங்கிக் கிடக்கின்றன. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒரு பி.காம். பட்டதாரி, 10, 12 ஆண்டுகளாகியும், எல்.டி.சி, ஆகவே இருக்கிறார். பிரமோஷன் இல்லை. ஆனால், அதே போன்று பி.காம். பட்டதாரிகள் நேரிடையாக யு.டி.சி-யாக வந்தவர்களுக்குப் பிரமோஷன் கிடைக்கிறது. அதைப்பற்றி கவனம் செலுத்த வேண்டும். கேரளாவில், ஒரு யு.டி.சி-யின் சம்பளம் ரூ. 150-10-300. ஆனால் தமிழக மின்சார போர்டின் ரூ. 125-6-185 என்று இருக்கிறது. இதை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும் என்றும், மின் இணைப்பிற்கு மனுப் போட்ட மூன்று மாத காலத்திற்குள் செய்து கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என் உரையை முடிக்கிறேன்.

* **திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1968-69-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைப் பற்றி என்னுடைய சில கருத்துக்களைக் கூற முன்வந்திருக்கிறேன். இந்த வாரியத்தின் சில நல்ல அம்சங்களை வரவேற்கிறேன். முக்கியமாக இந்த வாரியத்தில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு மின்சார வாரியத் தொழிலாளர்கள் சம்மேளனம் என்று ஒன்று இருக்கிறது. கடந்த காலத்தில், தொழிலாளர்களுடைய சங்கத்தையும், அவர்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்துவதையும் காங்கிரஸ் சர்க்கார் அனுமதிக்கவில்லை, அங்கீகரிக்கவில்லை. ஆனால், இப்பொழுதுள்ள அரசு இந்தத் தொழிலாளர்கள் சம்மேளனத்தை அங்கீகாரம் செய்திருப்பதை வரவேற்கவேண்டும்.

அதோடு, தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் எதுவாக இருந்தபோதிலும், அவற்றை நேரிடையாகப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைப்பது என்று தொழிலாளர் சம்மேளனமும், மின்சார வாரியமும் ஒரு நல்லிணக்கத்திற்கு வந்திருப்பதற்கு நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேநேரத்தில் தொழிலாளர்களுடைய 60 கோரிக்கைகள் அடங்கிய பிரச்சினைகளில் பல இன்னும் தீர்க்கப்படாமல் இருந்து வருகின்றன.

தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டுமென்று இந்த அரசையும், மின்சார வாரியத்தையும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகம் முழுவதிலும் மின்சார வாரியத்தின் கீழ் கேஷுவல் லேபர் என்று சொல்லக்கூடிய என்.எம்.ஆர். என்பவர்கள் கிட்டத்தட்ட 12 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 8 ஆயிரம் பேர்கள் ஆறு வருடம், எட்டு வருடம், பத்து வருடம் என்று தினசரிக் கூலிகளாகவே வேலை செய்து வந்தும் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருந்து வருகிறார்கள். ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும்போது, அரசு முதலாளிகளிடம், தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்ட ஓராண்டுக்குள் நிரந்தரமாக்க வேண்டும் என்று கூறுகிறது. தொழிற்சாலை முதலாளிகளும், அரசின் ஆணைப்படி, தொழிலாளர்களை நிர்ந்தர மாக்குகிறார்கள். ஆனால் அரசின் கீழுள்ள மின்சார வாரியத்தில் வேலை செய்யும் 8 ஆயிரம் பேர்கள் தினசரிக் கூலிகளாகவே நிரந்தரமாக்கப்படாமல் இன்னும் இருந்து வருவது இன்றைய கால கட்டத்திற்குப் பொருந்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் தொழிலாளர்களின் மத்தியில் ஒருவித அதிருப்தியும், மனச்சோர்வும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, மின்சார வாரியமும், அரசும் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், பி.யு.சி. படித்தவர்கள் எல்லாம் வேலையில்லாத திண்டாட்டத்தின் காரணமாக, பிராஜெக்ட்களில் கூலி வேலை செய்து வருகிறார்கள். கணக்காயர்களாகவோ, பில் கலெக்டர்களாகவோ மின்சார வாரியத்தில் வேலைக்கு ஆட்கள் எடுக்கும்போது, பிராஜெக்ட்களில் வேலை செய்துவருபவர்களின் கல்வியையும், தகுதியையும், திறமையையும் பார்த்து சீனியாரிடி அடிப்படையில் அவர்களுக்கு முதலிடம் தர வேண்டும். அப்படித் தருவதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சீனியாரிடி அடிப்படையில் தொழிலாளர்கள் இருக்கும்போது, எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலிருந்து, வெளியிலிருந்து படித்து வந்தவர்கள் என்ற காரணத்திற்காகவோ பதவி உயர்வு கொடுத்துவிட்டு, தொழிலாளர்களைப் புறக்கணிப்பது பாரபட்சம் காட்டுவதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெளியிலிருந்து ஆட்கள் எடுப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. கஜேந்திர கட்கர் அவர்கள் தலைமையில் ஒரு குழு இங்கே வந்தபோது, அவர், 'ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டும்' என்று சொன்னார்கள். நாம் சொல்வதெல்லாம் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டும்



என்பதுதான். மின்சார வாரியத் தொழிலாளர் சம்மேளனம் என்பதை அரசு அங்கீகரித்துள்ளது. கணக்காயர் சங்கம் என்று ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதற்கு ஊக்கம் அளித்தால், தொழிலாளர்களுடைய நிலைமை என்ன ஆவது? ஒரு தொழிலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் இருந்தால், பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அதற்குப் பதிலாக சங்கங்களுக்குள் போட்டியும், பொறாமையும் தான் ஏற்படும். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதை இந்த அமைச்சரவையும் அரசும் ஒப்புக் கொள்ளும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, பழிவாங்குதல் கூடாது என்பதுதான். 9—2—1968-ம் தேதியன்று வேலை நிறுத்தம் செய்த 200 தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. தொழிலாளர்களுடைய குடும்ப நிலைமைகளை உத்தேசித்து மீண்டும் பரிசிலனை செய்து அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். வேலை நிறுத்தம் செய்தவர்கள், மன்னிப்பு கேட்டால்தான் பதவி உயர்வு கொடுக்கப்படும் என்று கோரப்படுகிறது. இந்த நிலைமையைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களுடைய போனஸ் பிரச்சினை. இன்றையதினம் தொழிலாளர்களுக்குத் தரப்படுவது 4 சதவீத போனஸ்தான். மின்சார வாரியத்திற்கு தற்போதைய வருமானம் 44 கோடி ரூபாயிலிருந்து 50 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஆனால் தொழிலாளர்களுக்குப் போனஸ் தருவது 31 லட்சத்திலிருந்து 33 லட்சம் என்ற அளவுக்குத்தான் உயர்ந்திருக்கிறது. வருமானம் 6 கோடி ரூபாய் உயர்ந்த அதே நேரத்தில் தொழிலாளர்களின் போனஸ் 2 லட்சம்தான் கூடுதலாகியிருக்கிறது. இது மிக மிகக் குறைந்த அளவு என்பதை அரசின் கவனத்திற்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். 300 கோடி ரூபாய் மூலதனமும், 50 கோடி ரூபாய் வருமானமும் உள்ள இந்த ஸ்தாபனத்தில் லாபம் இல்லையென்று யாரும் மறுக்க முடியாது. போனஸ் பிரச்சினையை மீண்டும் பரிசீலனை செய்து, நியாயமான அளவில் வழங்க வழிவகை காண வேண்டும். ஏனெனில் இன்றைய நிலவரத்தில் குடும்ப நிலைமைகளையும், வருவாயையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், தொழிலாளர்களுக்கு நியாயமான அளவில் போனஸ் தரப்படவில்லை என்பது நன்கு விளங்கும். மின்சார வாரியத்தில் லாபம் இல்லை என்று சொன்னால், அதற்கு காரணம் இதில் ஏற்படும் ஊதாரிச் செலவுகளும், ஊழல்களும்தான். அதன் காரணமாகவே, நமக்குக் கிடைக்க வேண்டிய லாபம் குறைந்துவிடுகிறது. தனியார் வாங்கி உபயோகிக்கும் மின்சாரக் கம்பெனிக்கு நல்ல லாபம் கிடைக்கிறதென்றால், இந்த வாரியத்திற்கு மட்டும் என் லாபம் கிடைக்கவில்லையென்ற எண்ணம் தொழிலாளர்களின் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. லாபத்தைக் குறைவாகக் காட்டுவதற்காகத்தான் மின்சார வாரியத்தின் கமர்ஷியல் பாலன்ஸ்

[திரு. செஞ்சி வெ. முனுசாமி] [1968 ஆகஸ்ட் 17

அடுத்து செஞ்சிப் பகுதியின் குறைகளை மின்சார வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டுவர இந்தப் பேரவையின் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகள் மின்விசை பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதையும், அதற்குப் பண விரயம் கூடுதலாக ஏற்படுகிறது என்பதையும் இந்த மன்றமும், வாரியமும் ஒத்துக் கொள்ளும் என்று நான் கருதுகிறேன். மின் இணைப்புப் பெற வேண்டுமென்று சொன்னால், பலவிடங்களுக்குச் சென்று மிகவும் கஷ்டப்பட்டு சட்ட மன்ற உறுப்பினர்களைப் பிடித்தால் தான் நடக்கும் என்று நினைத்து டி.இ.ஐப் பார்க்கலாம் வாருங்கள், ஏ.இ.ஐப். பார்க்கலாம், வாருங்கள் என்பதாகச் சொல்லி நடக்கின்ற நிலையைப் பார்க்கிற போது நாங்கள் சங்கடப்படுகிறோம். இத்தகைய குறைபாட்டுக்கும் காரணமே கீழ் மட்டத்தில் இருக்கிற சிக்கல்கள் தான். கீழ் மட்டத்தில் இருக்கிற லைன்மென்கள், சூப்ரவைசர்கள் உண்டாக்குகிற இடைஞ்சல்கள் கொஞ்ச நஞ்ச மல்ல. ஏ.இ. அல்லது டி.இ ஐப் பார்த்து வந்துவிட்டால், "அவர்களைப் போய் பார்த்து வந்துவிட்டீர்கள் அல்லவா, அவர்களே செய்யட்டும்" என்று அலட்சியமாகப் பேசுகின்ற நிலையைப் பார்க்கிறோம். இந்த நிலைமை நிச்சயமாக மாற்றப்படவேண்டும். மின் இணைப்புப் பெறவேண்டுமென்றால் கீழ் மட்டத்தில் அதிகப் படியாகப் பணத்தைச் செலவிட்டே ஆக வேண்டுமென்ற நிர்ப்பந்தம் மாறியாக வேண்டும். மின்சார இணைப்புக் கொடுப்பதில் உள்ள குறைபாட்டை நீக்க வேண்டுமென்றால், விண்ணப்பத் தாள்களைத் துணைப் பொறியாளர் அவர்களே கொடுக்க வேண்டும். அதைப் பூர்த்தி செய்து விவசாயிகள் கொடுத்தவுடன் அதை துணைப் பொறியாளர் அவர்களே ரிஜிஸ்தர் சென்று சீரியல் நம்பர் கொடுக்கவேண்டும். அந்த சீரியல் நம்பர் வரிசைப்படி கனெக்ஷன் கொடுக்கப்பட வேண்டும் என்கிற வரைமுறையை ஏற்படுத்தியாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மின்சார வாரியம் தீவிரமாக கிராமப் புறங்களில் இருந்து வருகிற விண்ணப்பங்களை சீரியல் நம்பர் பிரகாரம் வரிசைப்படுத்தி மின் இணைப்புக் கொடுக்கின்ற நிலையை ஏற்படுத்தும் என்று நான் கருதுகிறேன்.

அதற்கடுத்து தெருவிளக்குகள் எரியவில்லை என்று சென்ற ஆண்டும் சொன்னார்கள். இந்த ஆண்டும் சொன்னார்கள், போதிய அளவுக்கு திருகு மின் குமிழ்களையே தெருவிளக்குகளுக்குப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. சொருகு மின்குமிழ்கள் பயன் படவில்லை. திருகு மின் குமிழ்களையே உபயோகப்படுத்துகிறபோது கூட பல்பு போட்டு பத்து நாட்கள் எரிகின்றன. 11-ஆம் நாள் ப்யூஸ் ஆகிவிடுகிறதையும் பார்க்கிறோம். இதற்குக் காரணம் மான்யுபாக்ச்ரிங் டிபெக்ட் தான் என்று தோன்றுகிறது. இதைப்பற்றியும் ஆராய்ந்து அந்த டிபெக்ட் நீக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு நமக்குப் போதுமான அளவு திருகு மின்குமிழ்கள் கிடைக்கவில்லை. அவற்றை நல்ல முறையில் நாமே உற்பத்தி செய்து கொள்ள மத்திய அரசின் அனுமதியுடன் நமது அரசே ஒரு தொழிற்சாலையை அமைப்பது பற்றி ஆராய்ந்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.



1968 ஆகஸ்ட் 17] [திரு. செஞ்சி வெ. முனுசாமி]

அதற்கடுத்து செஞ்சிப் பகுதியில் உள்ள ஒரு முக்கியமான குறைபாட்டை எடுத்துச் சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. இன்றையதினம் செஞ்சி வட்டம் பரந்த பூமியாகவும், வறண்ட பூமியாகவும் இருக்கிறது. அங்கே ஒரு துணைப் பொறியாளர் அலுவலகம் கிடையாது. சூப்ரவைசர் அலுவலகம் இருக்கிறது. கன்ஸ்ட்ரக்ஷன் துணைப்பொறியாளரைப் பார்க்க வேண்டுமென்றால் திண்டிவனம் போக வேண்டும். ஓ. அண்டு எம். துணைப் பொறியாளரைப் பார்க்க வேண்டுமென்றால், விழுப்புரம் போக வேண்டும். அந்தப் பகுதி மக்கள் விழுப்புரத்திற்கும் திண்டிவனத்திற்கும் நடந்து நடந்து சலித்துப் போகிறார்கள். செஞ்சியிலேயே ஒரு ஏ.இ. அலுவலகம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்து இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு ஆதாரவாக மின்சார வாரியம் இருக்கிறது—குறிப்பாக ஐந்து சூப்ரவைசர்களுக்கு ஒரு ஏ.இ. இருக்கவேண்டும். அலவலூர்பேட்டை இன்றைக்கு வேலூர் மின்சார சிஸ்டத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பிரித்து தென்னாற்காடோடு சேர்த்தால் செஞ்சியிலே ஒரு ஏ.இ. அலுவலகம் ஏற்படுத்த வசதியாக அமைத்து விடும். என்னுடைய கிராமம் திருவம்பட்டு. செஞ்சிக்கு வரவேண்டுமென்றால் 7 மைல் சென்றாக வேண்டும். நேமூருக்குப் போக வேண்டுமென்றால் 8 மைல் சென்றாக வேண்டும். அப்பம்பட்டில் ஒரு எஸ்.ஓ. ஆபீஸ் ஏற்படுத்தினால் அங்குள்ள விவசாய மக்களுக்கு சூப்ரவைசரோடு தொடர்புகொள்ளவும், கட்டணம் கட்டச் செல்வதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே செஞ்சியிலே ஒரு ஏ.இ. அலுவலகம் ஏற்படுத்த வேண்டும். அப்பம்பட்டில் ஒரு எஸ்.ஓ. அலுவலகம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து, விழுப்புரம் கோட்டப் பொறியாளர்—ஓ. அண்டு எம். கன்ஸ்ட்ரக்ஷன் சேர்ந்து இருந்தது. இப்போது கன்ஸ்ட்ரக்ஷனைப் பிரித்து விருத்தாசலம் டி.இ.யோடு இணைத்திருக்கிறார்கள். இதுபற்றி சூப்ரண்டெண்டிங் என்ஜினீயருக்கு எழுதிக் கேட்டால் அட்மினிஸ்ட்ரேடிங் கன்வீனியன்ஸ்க்காக மாற்றி இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்றையதினம் இதனால் ஏற்படுகிற பப்ளிக் இன்கன்வீனியன்ஸ் எவ்வளவு என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செஞ்சியிலுள்ள மக்கள், திண்டிவனத்திலுள்ள மக்கள் விருத்தாசலத்திற்குச் செல்வது என்றால் சாதாரண விஷயமல்ல. எனவே ஓ. அண்டு எம்.-ஐயும் கன்ஸ்ட்ரக்ஷனையும் ஒன்றாக்கி முன்பிருந்ததுபோல் விழுப்புரத்திற்கே கோட்டப் பொறியாளரிடத்தில் மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தெரு விளக்குகளைப் போடவேண்டுமென்றால் சுவிட்சைப் போடுவதற்கு ஒருவர் இருக்கிறார், லைன்மென்தான் சுவிட்ச் போட வேண்டுமென்று விதி இருக்கிறது. யாராவது ஒருவரைப் பார்த்து சுவிட்சைப் போட்டுவிடு என்று சொல்லிவிடுவதால் மாலையில் 5 மணிக்குப் போட்டுவிடுவதும் காலையிலேவரை எரித்து

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [1968 ஆகஸ்ட் 17

வேலை பல கட்டங்களிலே நடைபெற வேண்டியிருக்கின்றது. முதலிலே சர்வே, அதற்குப் பிறகு எஸ்டிமேட் போடப்படுகிறது. அதற்குப் பிறகு சாங்ஷன் செய்வது மூன்றாவது கட்டமாக இருக்கிறது. ஓர்க் ஆர்டர் போடுவது நான்காவது கட்டமாக இருக்கிறது, எக்ஸிக்யூஷன் ஐந்தாவது கட்டமாக இருக்கிறது, டெஸ்ட் செக் என்பது ஆறாவது கட்டமாக இருக்கிறது. இப்படிப் பல கட்டங்களிலே வேலை நடைபெற வேண்டியிருப்பதால் மூன்று மாதங்கள் ஆகிறது வேலை முடிவதற்கு. இதைக் குறைக்க வேண்டும். மதுரையை எடுத்துக்கொண்டால் மொத்தமாக முனிசிபாலிட்டிக்குக் கொடுக்கப்பட்டு விடுகிறது. 10, 15 கனக்ஷன்களுக்கு ஒரு ஸ்டோர் உருவாக்கப்பட்டு செக்ஷன் ஆபீசரிடமே கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுப்பதன்மூலம் தாமதத்தைத் தவிர்க்கலாம். காலம் ஆறு மாதங்கள்வரை ஆகிறது, இதைத் தவிர்க்கலாம். இந்தத் துறை லாபகரமாக நடத்தப்பட வேண்டுமென்பது குறிக்கோள். இதற்குப் பல வழிகள் இருக்கின்றன. ஆறு வழிகளில் தாமதம் ஏற்படுவதால் மக்களுக்கு வாரியத்தின்பேரில் அதிருப்தி ஏற்படுகிறது. எலக்ட்ரிக் கனக்ஷன் வேண்டுமென்று மனுக் கொடுத்துவிட்டால் அதிலிருந்து 30 நாட்களுக்குள் ஒன்று அது மறுக்கப்பட வேண்டும், அல்லது அனுமதி அதற்குத் தரவேண்டும். பட்டா மாற்றுவதற்குக்கூட 90 நாட்களுக்குள் முடிவு செய்யவேண்டுமென்று கூறப்படுகிறது. அதேபோல் இதிலேயும் செய்யவேண்டும். மனுக் கொடுத்த 30 நாட்களுக்குள் முடிவு சொல்லிவிட வேண்டும். டெபாசிட் செலுத்தி 30 நாட்களுக்குள் என்று இருக்கக்கூடாது. இந்த டெபாசிட்டை வாங்குவதற்கு வருஷக் கணக்கில் ஆகி விடுகிறது. அந்தக் காரணத்தை வைத்து தாமதப்படுகிறது. மனுக் கொடுத்த தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் முடிவு செய்வது நல்லது.

இன்று வேளாண்மைத் துறை சம்பந்தப்பட்டமட்டில் மின்சாரக் கட்டணம் 8 பைசா வசூலிக்கப்படுகிறது. இன்று தொழில்களுக்கு மின்சாரம் கொடுப்பதில்கூட ஸ்லாப் சிஸ்டம் இருக்கிறது. இன்று வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருப்பவர்கள் உணவுப் பொருள் உற்பத்திக்காக அதிக அளவு மின்சாரத்தை, ஆயிரம் யூனிட், இரண்டாயிரம் யூனிட் என்ற அளவுக்குப் பயன்படுத்துகிறார்கள். மொத்தத்தில் 90 நாட்கள் மின்சாரத்தைக் கொண்டு தண்ணீர் இறைக்கும்போது உற்பத்திச் செலவு அதிகமாகிறது. உங்கள் கணக்குப்படி பத்து கோடி ரூபாய் லாபம் ஏற்பட்டு அது வட்டிக்காகக் கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறீர்கள். அது வரவேற்கத்தக்கது, நிர்வாகத்தைப் பற்றி பெருமையாகச் சொல்லலாம். ஆனால் உணவுப் பொருளைச் சாகுபடி விவசாயிகளுக்கு மேலும் சலுகை கொடுக்க வழி செய்ய வேண்டும்.

முக்கியமாகக் கிணற்றை ஆழப்படுத்த வேண்டுமென்றால் வெல் போரிங் டிரில் வேண்டியிருக்கிறது. அதைப்பற்றி ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள்.



1968 ஆகஸ்ட் 17] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

Memo. No. 350 J2/68-1, dated 3rd May 1968 from the Office of the Additional Chief Engineer for Electricity, Madras to the Superintending Engineer, Vellore Electricity System.

Thiru S. Muthulingam, M.L.A., Wandiwash, called at this office and represented that there are some difficulties in the matter of getting supply for well boring operations in the agricultural services under the agricultural tariffs. The Superintending Engineer, Vellore Electricity System is informed that there is no objection to allow agricultural tariff for supply to such purposes.

என்று போட்டிருக்கிறார்கள். 1968 மே மாதத்தில் 3-ஆம் தேதி கொடுக்கப்பட்டது. இன்று வரை அமல் நடத்தவில்லை.

Letter, dated 12th July 1968 from the Superintending Engineer, Tirunelveli Electricity System, Tirunelveli to Thiru Vengoo Iyer, Arnagiriapuram, Kadayanallur.

Temporary supply to Thiru Vengoo Iyer for a connected load of 10 H.P. under tariff IV is hereby sanctioned for a further period of 25 days from 23rd June to 17th July 1968 (both days inclusive). என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அக்ரிகல்சுரல் டாரிஃப் கொடுக்கலாம் என்று நீங்கள் மெமோ கொடுத்திருக்கிறீர்கள். நடைமுறையில் அப்படி இல்லை. இந்த மாதிரிச் சிக்கலைத் தவிர்ப்பதற்கு எஸ்.டி. ஏரியாவில் இருக்கக் கூடியவர்கள் அந்தப் பகுதி எம்.எல்.ஏ., பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ஆகியோரை வைத்துக்கொண்டு சிக்கலான காரியங்களைப் பற்றிக் கேட்டு முடிவு செய்யும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். மெமோ கொடுத்தும் அதை நடைமுறையில் நடத்த இவ்வளவு கஷ்டம் இருக்கிறது.

அடுத்து, முக்கியமான ஒன்று பில் கலெக்டர்கள் பற்றியது. பில் கலக்டர் வேலைக்கு எடுத்துக் கொள்வதற்காக இண்டர்வியூ நடத்தி மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆயிரக்கணக்கான பேர்கள் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணத்துடன் மதுரை சென்னைக்கு வந்திருக்கிறார்கள். இண்டர்வியூவில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற அறிவிப்புக் கொடுத்து மூன்றாண்டுகள் ஆகியும் அவர்கள் யாரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளாத நிலைதான் இருக்கிறது. இதிலே எவ்வளவு பணம் விரயம் என்பதைக் கவனிக்க வேண்டும். பில் கலெக்டர்கள் எப்போது தேவையோ அப்போதுதான் இண்டர்வியூ வைக்கவேண்டும். ஏற்கனவே இண்டர்வியூவுக்கு மதுரைக்கும் சென்னைக்கும் வந்தவர்கள் மிகுந்த அதிர்ச்சியுடன் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கச் சாதாரண மக்களின் கஷ்டம் தெரிந்த இந்தச் சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

ஷீட் இன்னும் வெளியிடப்படாமல் இருக்கிறதோ என்ற ஐயப்பாடு இருந்து வருகிறது.

அடுத்தபடியாக, ஒரு முக்கியமான விஷயம். ஆழியார் பிராஜெக்ட் பகுதியில் தற்போது தொழிலாளர்கள் போராட்டம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கை ஒன்றும் பெரிய கோரிக்கை அல்ல. அவர்களுடைய கோரிக்கை இரண்டே இரண்டு விஷயங்களைப் பொறுத்தது. முதலாவதாக அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். அதாவது அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். இரண்டாவதாக, சம்பள உயர்வு அளிக்கப்பட வேண்டும் என்பது. சமீபத்தில் கோவை கலெக்டர் அவர்கள் முன்னிலையில் அந்தத் தொழிலாளர்களுக்குத் தினக்கூலி 3 ரூபாய் அளிக்கப்பட வேண்டுமென்ற ஒப்பந்தம் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என அறிகிறேன் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலவரத்தில் இரண்டு ரூபாய், இரண்டரை ரூபாயில் ஒரு குடும்பத்தை நடத்திச் செல்ல முடியாத நிலைமைதான் இருந்து வருகிறது. ஆகவே, அரசு இதைப் பரிசீலனை செய்து அவர்களுக்கு மூன்று ரூபாய் சம்பளம் போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், ஒரு பிராஜெக்டில் வேலை முடிந்தவுடன் தொழிலாளர்கள் வீட்டிற்கு அனுப்பப்படுகிறார்கள். பத்து வருஷம், பதினைந்து வருஷம் என்று வேலை செய்துவிட்டு அவர்கள் வெளியே போய் எங்கே வேலை தேடுவது? அவர்களை நிரந்தரமாக்காததால், தங்களுடைய எதிர்காலம் பயங்கரமாக இருக்குமோ என்று தொழிலாளர்கள் அச்சம் கொள்கிறார்கள். பத்து பிராஜெக்டுகள் அமைக்க வேண்டுமென்று நம் அரசு மத்திய அரசைக் கேட்டிருக்கிறது. அதில் இரண்டு மூன்று நிச்சயம் கேட்டுக் வாங்கியாக வேண்டும். வேலை தொடங்கும்போது, இந்தத் தொழிலாளர்களுக்கு முதலிடம் கொடுத்து அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் அல்லது வேறு பல மின்சாரம் விநியோகிக்கும் இடங்களில் இவர்களுக்கு மாற்று வேலை ஏதாவது உடனடியாக கொடுக்கு உதவும் என்ற உத்தரவாதத்தை இந்த அரசு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்தபடியாக, தொழிலாளர்களை வெளியேற்ற மாட்டோம் என்ற உத்தரவாதத்தை அரசு அளிக்க வேண்டும். இன்றைக்குப் போராடிக் கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்களில் 60 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் மத்தியில், தங்களுக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது இந்த அரசின் முதல் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப் பகுதிகளில், விவசாயிகளுக்கு மின் இணைப்புத் தருவதில் அதிக காலதாமதம் ஏற்படுகிறது என்பதை அனைவரும் ஒப்பக் கொள்கின்றனர். கடமலைக்குன்று பகுதியில் நரியூத்து என்ற கிராமத்தில் பட்டா நிலங்களில் விவசாயிகள்



கிணறுகளை வெட்டி எக்ரிமெண்ட் செய்துவிட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் மின் இணைப்புத் தரவில்லை. காரணம் கேட்டால், டிரான்ஸ்பார்மரில் லோட் இல்லை, என்று கூறுகிறார்கள். ஆனால் ஒரு பெருந்தனக்காரர், நல்ல வசதி படைத்தவர் தனக்கு மின் இணைப்பு வேண்டுமென்று டெலிபோனிலே கேட்ட ஒரு மு. ப. 11-00
வாரத்திற்குள்—நல்ல பாதைவசதிகள் இல்லை, லாரி செல்லக்கூடிய வசதிகள் இல்லை என்றாலும்—50 கிலோவாட் சக்தியுள்ள மின் இணைப்புத் தந்திருக்கிறார்கள். கம்பங்களைத் தூக்கிச் செல்ல என்.எம்.ஆர்.-களை உபயோகப்படுத்தி, ஒரு வார காலத்திற்குள் மின்சப்ளை செய்து கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி நடந்தது என்பதை அறிய விரும்புகிறேன். அன்றைக்குப் பெரிய மழை பெய்து ரோடில் போக்குவரத்து வசதி தடைப்பட்டிருந்தும் கூட, லாரிகளில் போஸ்டுகள் எடுத்து வர முடியாத நிலைமை இருந்தும் கூட ஆட்களின் தோள்களிலே போஸ்டுகளை சுமந்து வந்து போஸ்டுகள் நட்டு, 50 கிலோவாட் மின்சார சப்ளை கொடுத்திருக்கிறார்கள்—முதலாளி என்றால் வழி தெரிகிறது, விவசாயிகள் என்றால் வழி தெரியவில்லை, முதலாளி என்றால் லோட் எடுக்கும், விவசாயிகள் என்றால் லோடு எடுக்காது—இப்படிப்பட்ட இந்தப் போக்கு நீடிக்கலாமா என்று கேட்கிறேன். இது போன்று நிறைய உதாரணங்களைக் கொடுக்க முடியும். நேரம் இல்லாத காரணத்தினால், இப்படிப்பட்ட குறைபாடுகள் களையப்பட வேண்டும், விவசாயத் தொழிலாளர்களுக்குப் பம்பு செட்டு கனெக்ஷன் உடனடியாகக் கொடுக்கிற சூழ்நிலை உருவாகி, நல்ல முறையில் வாரியம் செயல்படவேண்டும் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. செஞ்சி வெ. முனுசாமி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தொழில் அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையின் முன் வைத்துள்ள 1967-68-ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை மீதும் 1968-69-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீதும் எனது கருத்துக்களை வழங்கலாம் என்று விழைகிறேன். இன்றையதினம் மின்சாரம் சாதாரண மக்களுடைய வாழ்க்கையில் இணைந்திருக்கிறது. சாலை போகாத இடங்களில் எல்லாம் இன்றைய தினம் மின்சாரம் ஒளிவிட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. கிராமப் பெரு மக்கள் எல்லாம் வருவாய்த்துறையினிடத்தில் தொடர்பு கொண்டிருந்த நிலைமை மாறி பெருவாரியான அளவுக்கு மின்சார இலாக்காவோடு தொடர்புகொண்டு துரிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அதோடு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மின்வெட்டு இல்லை என்பதைப் பற்றியும், மின்வெட்டே ஏற்படாத நிலைமைக்கு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதும் பாராட்டுவதற்குரியதாகும். அதோடு ரசீது எழுதும் பணியாளர், கட்டணம் வசூலிக்கும் பணியாளர், பண்டகசாலைப் பணியாளர் போன்றவர்களின் வேலை அளவையும், மேற்பார்வை விகிதாச்சாரத்தையும் இணைத்து அவர்களுடைய மத்தியில் சுமுகமான நிலை ஏற்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

நிறுத்தக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. இருட்டுக்காலங்களில் அப்படிப் போடவேண்டுமென்றிருக்கிறது. ஆனால் பௌர்ணமி காலத்திலேகூட அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதால்—அதற்குக் காரணம் பொது மக்கள் ஒத்துழைக்கவில்லை என்றும் சொல்லலாம், இருந்தாலும் அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிற ஏவலாள்தான் சுவிட்சைப் போட வேண்டும், நிறுத்தவேண்டும் என்று கட்டாயமாக ஏற்படுத்தவேண்டும்—மின்சார விரையம் ஏற்படுகிறது, அதைத் தடுத்துக்கொள்ளமுடியும்.

மின்சாரத்திற்காகக் கிராமப் பஞ்சாயத்துக்களில் அதிகக் கட்டணம் வசூலிக்கிறார்கள். தெருவிளக்குத் தனி மீட்டர் பொருத்திவிட்டால் அந்த அந்தப் பஞ்சாயத்துக்கள் அங்கங்கே எவ்வளவு மின்சாரம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்து, அந்த அளவுக்குக் கட்டணத்தை வசூலிக்கலாம். அந்த முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்புகளுக்கு என்றும், ட்யூப் லைட்டுகளுக்கு என்றும் கட்டணம் வசூலிக்கிறார்கள். எரியாத ஊர்களிலிருந்தும், எரிகின்ற ஊர்களிலிருந்தும் கட்டணம் வசூலிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அதைத் தடுப்பதற்காக சுவிட்ச் போர்டுக்கு அருகிலேயே மீட்டர் வைத்துக் கணக்கெடுத்துக் கட்டணம் வசூலிக்கும்படி செய்யவேண்டும்.

கிராமப்புறங்களிலே ரீடிங்ஸ் எடுப்பது இல்லை என்ற புகார்கள் பரவலாக வந்துகொண்டிருக்கின்றன. கிராமங்களிலே படிக்கத் தெரியாதவர்கள் கட்டணத்திலே வித்தியாசம் வந்தால் கூட, எவ்வளவு யூனிட்டுகள் என்ற விவரம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே கார்டுகளை மீட்டர்களில் தொங்கவிட்டுவிட வேண்டும். வீட்டுக்காக உபயோகப்படுத்துகிற மின்சாரமாக இருந்தாலும்சரி, பம்ப் செட்டுக்காக உபயோகப்படுத்துகிற மின்சாரமாக இருந்தாலும்சரி, ரீடிங்ஸ் எவ்வளவு என்பதை கார்டில் குறிப்பிட்டால்தான் ஒழுங்கான முறையில் ரீடிங் எடுக்கப்பட்டுக் கட்டணம் வசூலிக்கப்படும், அதோடு ரீடிங் பற்றிய புகார்களுக்கும் இடம் வராமல் இருக்கும். இதுவரை நம்முடைய மின்சார வாரியம் எடுத்திருக்கிற நல்ல பெயரோடு, இனிமேலும் நல்ல பெயரை எடுக்கவேண்டுமென்று கூறி, உண்மையிலேயே விவசாய மக்கள் இந்த வாரியத்தினிடம் அதிருப்திகொண்டு இருக்கிறார்கள், அதற்குக் காரணம் நேரடியாக அவர்களுடைய குறைகளைக் கவனிப்பதில்லை, அப்படியில்லாமல் குறைகளை நேரடியாகக் கண்காணித்து நல்ல முறையில். அவர்கள் பம்ப்செட்களுக்கு மின்சாரத்தைக் கொடுத்து, அதன்மூலம் உற்பத்தியைப் பெருக்கத் தீவிரக் கவனம் செலுத்தவேண்டுமென்று மின்சார வாரியத்தினரைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இது லாபகரமான வியாபாரக் குறிப்





போடு நடத்தப்படுகிறது. உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்தால் நிர்வாகச் சீர்கேடுகளால் லாபகரமாக நடைபெறாமல் இருப்பது தெரியும். ஸ்ட்ரீட் லைட்டின் கிரையம் 4 ரூபாய் இருக்கும், அதற்கு நான்கு மாதங்கள் உத்திரவாதம் கொடுக்கப்படுகிறது. நான்கு மாதங்கள் எரித்தாலே 8 ரூபாய் ஒரு லைட்டின் பேரில் வாரியத்திற்கு லாபம் கிடைக்கிறது. இப்படி எல்லா இடங்களிலும் பல்புகள் போட்டால், ஒரு பல்புக்கு 8 ரூபாய் வீதம் லாபம் கிடைக்கும். மீட்டரின் விலையை எடுத்துக்கொண்டால் அது 30 ரூபாய் பெறும். மீட்டர் இல்லாமல் மின்சாரம் கொடுக்கப்படாமல் நிறுத்தப்படுகிறது. மாதத்திற்கு மீட்டருக்காக 10 ரூபாய் கொடுக்கக்கூடிய நிலைமை வருகிறது. ஆகவே மீட்டர் வாங்கிப்போடக்கூடிய நிலைமை ஏற்பட்டால் லாபகரமாகச் செயல்படும். ஒரு போலுக்குக்கூட மின்சாரம் கொடுக்கக்கூடிய நிலைமை இல்லாமல் இருக்கிறது. காரணம் என்னவென்றால் டிரான்ஸ்பார்மரில் லோட் அதிகமாகிறதால் என்று சொல்கிறார்கள். பல துறைகளிலே நெருங்கிப் பார்க்கும்பொழுது டிரான்ஸ்பார்மரைச் சரிக்கட்டி பழையபடி மின்சாரம் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதில்தான் லஞ்சம் தாண்டவமாடுகிறது. ஒரு போல் சம்பந்தப்பட்டவரையில் தைரியமாக மின்சாரம் கொடுக்க முன்வர வேண்டும். இந்த அறிக்கையின் 13-வது பக்கத்தில் "வேளாண்மை மின் இணைப்புக் காரியங்களுக்காக சுமார் 40 சதவீத மின்சாரம் வழங்கப்பட்டாலும், சுமார் 25 சதவீத மின்சாரம்தான் உண்மையில் பயன்படுத்தப்படுகிறது எனலாம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருபத்தைந்து சதவீத மின்சாரம்தான் சராசரியாகப் பயன்படுத்தப்படுகிறது. நாற்பது சதவீதம் வரையிலும் திட்டம் வகுத்து இருக்கிறோம். டிரான்ஸ்பார்மர் லோடினால் காரியம் நிறுத்தப்படக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது. ஒரு போஸ்டுக்கு மின்சாரம் கொடுப்பதில்கூட இதனால் தாமதம் ஏற்படுகிறது, இதைக் கவனிக்கவேண்டும். ஒரு போஸ்டு என்றால் மின்சாரம் கொடுக்கலாம் என்று போட்டு, பிறகு அதில் ஏதாவது தவறுகள் ஏற்பட்டால் அதைப் போக்குவதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம்.

இருக்கக்கூடிய பவர்ஸ் எடுத்துக் கொண்டால், ஏ.இ., டி.இ., இவர்களுடைய அதிகாரங்களை எடுத்துக் கொள்ளுங்கள். 20 வருஷங்களுக்கு முன்னாலே என்ன நிலைமையோ, அதே நிலைமைதான் இன்னும் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் பி.டபிள்யூ.டி. டிபார்ட்மெண்டை எடுத்துக் கொள்ளுங்கள். அதிலே சாதாரணமாக இ.இ.-க்கு 25 ஆயிரம் ரூபாய்வரை சாங்க்ஷன் செய்ய அதிகாரம் இருக்கிறது. அந்த மாதிரி அதிகாரத்தை இங்கேயும் கொடுக்க வேண்டும். ஆர்டிகிள்ஸ்களை எடுத்துக் கொண்டால் அவற்றின் விலை அதிகமாகியிருக்கிறது. ஆகவே அவற்றை வாங்குவதற்கு ஏற்ற முறையில் 1,000 ரூபாய் என்று இருக்கிற வரம்பு சரியல்ல, இதை உயர்த்தவேண்டும். அப்படிச் செய்வதன்மூலம் மின் இணைப்புக் கொடுக்க நல்ல வாய்ப்பு இருக்கும்.

* **திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வாரியம் 300 கோடி ரூபாய் மூலதனமும், 50 கோடி ரூபாய் வருவாயும், எழுபதாயிரம் தொழிலாளர்களும் கொண்டு இயங்கி வருகிற மாபெரும் ஸ்தாபனமாகும். இந்த ஸ்தாபனம் சிராகவும், சிறப்பாகவும் இயங்கி வர வேண்டுமென்று அனைவருமே விரும்புகிறார்கள்.

இன்றைய நிலையிலே மின்சாரம் எல்லா அம்சங்களிலும் தேவைப்படுகிற ஒரு பொருளாக மாறிவிட்டதால், அதிலே அனைவருடைய கவனமும் ஒருமுகமாக நின்று கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சபை கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். 1967-68-ம் ஆண்டிலே, 3,215 கிராமங்களுக்கு மின்சார வசதி 51,746 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருப்பது, 443 அரிசன குடியேற்றங்களுக்கு மின்வசதி செய்து கொடுத்திருப்பது போன்ற நல்ல காரியங்களைச் செய்திருப்பது பாராட்டத்தக்கது. இதுபோன்ற நல்ல காரியங்கள் மிக அதிகமாகச் செய்யப்பட வேண்டிய சூழ்நிலையில் மின்சார வாரியத்தினுடைய வரவு-செலவு, நடைமுறைக் கொள்கை இவற்றையெல்லாம்பற்றி ஆராய்ந்து மாற்றிக் கொள்வது நல்லதென்று நான் சொல்ல விரும்புகிறேன். நமது ராஜ்யத்திற்கு மைசூர் ராஜ்யத்திலிருந்து மின்சாரம் வாங்குவது யூனிட்டு 4.66 பைசா என்றும், நெய்வேலியில் இருந்து வாங்குவது 5.9 பைசா என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலையைவிடக் குறைந்த செலவிலே நமது ராஜ்யத்திலே மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். எப்படி இருந்தாலும் இதை ஒரு வியாபார ஸ்தாபனமாகத்தான் நடத்த வேண்டுமென்று நாம் கருதுகிறோம். அப்படி வியாபார ஸ்தாபனமாக நடத்துவது என்று சொன்னால் மற்றைய இடங்களில் இருந்து விலைக்கு வாங்குகிற மின்சாரத்தை அந்த விலையைவிடக் குறைத்து இன்னொருவருக்கு விற்பது என்பது பொருந்தாததாக இருக்கிறது. உற்பத்திச் செலவைவிடக் குறைந்த விலைக்கு இன்னொருவருக்கு விற்பது என்பது பொருத்தமானதாக இல்லை. அதிகமாக மின்சாரத்தை உபயோகிப்பவர்களுக்கு அலுமினியம், எஃகு, சிமெண்ட் போன்ற தொழில்களுக்குக் குறைந்த விலையிலே, நாம் உற்பத்தி செய்கிற விலையைவிடக் குறைந்த விலையிலே கொடுக்கிறோம். வெளியிலிருந்து வாங்குகின்ற மின்சாரத்தையும் விலையைக் குறைத்துக் கொடுக்கிறோம். இப்படி வியாபரத்தில் அதிக விலை கொடுத்து வாங்கி, குறைந்த விலைக்குக் கொடுப்பது என்று சொன்னால் அதிக நாள் நீடித்து இருக்க வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

தற்போது மின்சார வாரியத்தினர் அரசாங்கத்திலிருந்தும் வெளியிலிருந்தும் கடன் பெறுகிறார்கள். அவ்வாறு பெறுகிற கடனுக்குக் கொடுக்கிற வட்டி மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பாகமாக இருக்கிறது. 11 கோடி ரூபாய் என்று இருந்தது 13 கோடி ரூபாய் என்று வட்டிமட்டும் ஏறிக் கொண்டிருக்கிறது. இது வியாபாரத்திற்குப் பொருத்தமான





தாக இல்லை. நம்மிடமிருந்து மின்சாரத்தைப் பெற்று விநியோகிக்கின்ற தனிப்பட்ட கம்பெனிக்காரர்கள் அதிகமான லாபத்தைக் காட்டுகிறார்கள். நாம் அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்களுக்குக் குறைந்த விலையிலும், குறைவாகப் பயன்படுத்துபவர்களுக்கு அதிக விலையிலும் அளித்து வருகிறோம். இது முரண்பாடான தன்மையுடையதாக இருக்கிறது. இன்றைய அரசு சமுதாயத்தை நோக்குகின்ற விதம் சாதாரண ஏழை மக்களுக்கு உதவி வேண்டுமென்பதாகும். ஆனால் செயல் முறையில் பார்க்கும்போது அதிக வசதியுள்ளவர்களுக்கு உதவி செய்யும் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதுதான் இதிலிருந்து நமக்குப் படுகிறது.

நமது அரசாங்கம் பணமாகட்டும் அல்லது மற்றப் பணங்களாகட்டும் சாதாரண மக்களிடமிருந்துதான் அதிகமாக வருகிறது. முற்பகல் 11-30
ஆகவே சாதாரண மக்களுக்கு உதவி செய்வதுதான் நியாயமே தவிர, சாதாரண மக்களைச் சுரண்டுகிற, சாதாரண மக்கள்மீது ஆதிக்கம் செலுத்துகிற, அல்லது சாதாரண மக்களைக்கொண்டு லாபம் பெறுகிற அத்தகையவர்களுக்கு உதவி செய்கிற முறையில் மின்சார விநியோகமும், விற்பனையும் இருந்துகொண்டிருப்பது இன்றைய சமுதாயத்தைப் பார்க்கும் நீதிக்கு அது பொருத்தமானதல்ல. அது சரியானதும் அல்ல. ஆகவே அதை மாற்றியமைக்கவேண்டியது மிகவும் அவசியமானது என்று நான் கருதுகிறேன். அதோடு கணக்குகள் வைத்துக்கொள்வதில் பல சிக்கல்கள் இருப்பதாக எனக்குத் தகவல் வருகிறது. தேய்மானக் கணக்கு ஒதுக்குவதில் 1925-ல் இருந்து தேய்மானக் கணக்கு இருந்து வருகிறது. இந்தத் தேய்மானக் கணக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரையில், அதாவது ஒரு குறிப்பிட்ட காலம் வரும்போது அந்த இயந்திரம் அல்லது மூலதன மதிப்பிற்குச் சமமாகி விட்டால் மேலும் தேய்மானத்தில் எப்படிப் பணம் சேர்ப்பது என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் மீண்டும் மீண்டும் தேய்மானம் எழுதிக் கொண்டே வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. தேய்மானத்திற்காக ஒதுக்கப்படும் தொகையிலிருந்து வெளியே கடன் அளிக்கப்படுகிறது என்றும் சொல்லப்படுகின்றது. தேய்மான நிதிக்கு ஒதுக்கப்படும் பணத்திலிருந்து நமது தேவைகளுக்காக அதை மாற்றிக் கொள்வதில் எந்தவிதத் தடையும் இருக்காது என்று தோன்றுகிறது. இங்குள்ள பேசின் ப்ரிட்ஜ்க்கு நிலக்கரியை வெளியிலிருந்து வாங்குகிறோம். அப்படி வெளியிலிருந்து வாங்கப்படுவது ரெயில்வே வழி வருவதைவிட கப்பலில் வரும்போது அதிகப் பணமாகிறது. அப்படிக் கப்பலில் வருவதை ஓரளவு ஈடுகட்ட, அதாவது கப்பலில் வரும் செலவை ஓரளவு ஈடுகட்ட மானியம் அளிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்தப் பணங்கள் எல்லாம் ரெவின்யூக் கணக்கில் வராமல் வேறு கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இதன்பேரில் பளு ஏற்படுகிறது. ஆளியார் திட்டமிருக்கிறது, சோலையார் திட்டமிருக்கிறது. அங்கு பவர் ஹௌஸ் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு, பவர் ஹௌஸ்க்காக பணம் ஒதுக்கப்பட்டு, பவர் ஹௌஸ் கட்டப்பட்டிருக்கிறது. அது ஓடவேண்டுமென்றால் தண்ணீர்

வேண்டும். அதற்கு வேண்டிய தண்ணீருக்கு முதலில் ஏற்பாடு செய்ய வேண்டும். நீரார் குறித்துக் கேரளாவுடன் உடன்பாடு காணாததால் இதற்கான ஏற்பாடு செய்யவில்லை. பவர் ஹௌஸ்க்காக ஒதுக்கப்படும் பணம் தேக்கமடைகிறது. அந்தப் பணத்திற்கும் வட்டி அளிக்க வேண்டியிருக்கிறது. ஆக எல்லாம் சேர்ந்துதான் மின்சார வாரியத்திற்கு இந்தப் பெரிய பளு ஏற்படுகிறது. வாரியம் வருமானத்தைப் பெருக்கி லாபம் காட்ட வழியில்லாமல் இருப்பதற்குக் காரணம், பல்வேறு கோணங்களில் அதன் செலவுகள் ஏறியிருக்கின்றன என்பதினால்தான். மின்சார வாரியத்தில் வேலை செய்கிற தொழிலாளர்கள் அவர்கள் அடைய வேண்டிய நலன்களை அடைய முடியாமல் போய்விடுகிறது. லாபம் அதிகமாக வந்தால் அந்த லாபம் அங்கு வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குப் பகிர்ந்து அளிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அப்படிப் பகிர்ந்து அளிக்கிற வாய்ப்பு ஏற்படும் முறையில் அதன் வருமானம் இல்லை. பல ஆண்டுகளாக அங்குள்ள தொழிலாளர்கள் தற்காலிகத் தொழிலாளர்களாக வைத்துக்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக மாற்றுவதற்கு நமக்கு முடியவில்லை. பல தொழில்கள் காண்ட்ராக்டுக்கு விடப்படுகிறது. நிலக்கரியை ஏற்றுவதும் இறக்குவதும்கூட காண்ட்ராக்டுக்கு விடப்படுகிறது. அணைக்கட்டுகள், பவர் ஹௌஸ் போன்றவை காண்ட்ராக்டுக்கு விடப்படுகிற இடங்களில் வேலை செய்பவர்கள் வேலை முடிந்த பிறகு வேறு எங்கெங்கோ போக வேண்டியிருக்கிறது. அங்கு வேலை செய்பவர்களின் பெயர்கள் பொய்யாக, தவறாக பதிவுசெய்யப்பட்டு பணம் எடுத்துக் கொள்ளப்படுகிறது என்ற புகார் வருகிறது. அம்மாதிரித் தவறுகளைக் களைய வேண்டுமென்றால், நம்மிடத்தில் வேலை செய்தவர்களே மீண்டும் வேலை செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். மத்தியில் ஒருவர் இருந்துகொண்டு லாபம் சம்பாதிக்கும் நிலை இருக்கக் கூடாது. ஆகவே, அப்படி அதை நாமே ஏன் நேரடியாகச் செய்யக்கூடாது, ஏன் அப்படி முயற்சி செய்யக்கூடாது என்று பார்க்கவேண்டும். அப்படிச் செய்ய முடியுமா முடியாதா என்று ஆராயப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. மின்சாரம் வழங்குவதில் பல இடங்களில் பல கோளாறுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மின்சாரம் வழங்குவதற்காக ஒரு பகுதியிலிருந்து விண்ணப்பங்கள் போடப்பட்டால், அவை வரிசையாக ஆராயப்பட்டு மின்சாரம் வழங்குதல் வேண்டும். ஆனால் அம்மாதிரிச் செய்யப்படாமல் செல்வாக்குக் காரணமாக வரிசைக் கிரமமாக இல்லாமல் முன்னே போட்டவர்களுக்கு பின்பும், பின்னே போட்டவர்களுக்கு முன்னமேயும் மின்சாரம் வழங்குவதாகப் பல இடங்களில் புகார்கள் வருகின்றன. கிணறுகளுக்கு மின்சாரம் வழங்குவதிலும் பல ஊழல்கள் நடப்பதாகப் பல புகார்கள் வருகின்றன. கீழேயுள்ள லைன்மென், எஸ்.ஓ. பணம் இல்லாமல் மின்சார இணைப்புக் கொடுப்பதில்லை என்ற முறையில் பல இடங்களில் இருந்து புகார்கள் வருகின்றன. அந்தப் பணம் எவ்வளவு பேர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது என்று உறுதியாகச்





சொல்ல முடியாவிட்டாலும் ஓரளவு ஒருமாதிரி மட்டங்களில் இருப்பவர்களுக்கு அதில் பங்கு உண்டு என்று சொல்லப்படுகிறது. இப்படிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. கடந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கைமீது பேசும்போது என்னுடைய கருத்துக்கள் பொதுவாக இருந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது சொல்லப்போவது பொதுவானதல்ல. நங்கவல்லி பஞ்சாயத்து யூனியனில் சூரப்பள்ளி பஞ்சாயத்து என்றதொரு பகுதி இருக்கிறது. அது மிகவும் பிற்போக்கான பகுதியாகும். அங்கு தெரு விளக்குகள் வேண்டுமென்றும், 284 கிணறுகளுக்கு மின்சார இணைப்பு வேண்டுமென்றும் கேட்டு விண்ணப்பங்கள் போடப்பட்டு வெகு நாட்கள் ஆகிவிட்டன. கீழே இதற்கான திட்டமிடப்பட்டு ப்ரப்போசல் மேலே அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேட்டூருக்கு அருகாமையில் உள்ள பகுதிகளுக்குக்கூட மின்சாரம் கிடைக்கவில்லையென்றால் என்ன சொல்வது. முன்பு நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று கூறியிருப்பதால் இப்போது இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். மேட்டூருக்கு அருகாமையிலுள்ள சூரப்பள்ளி பஞ்சாயத்துக்கு வேண்டிய மின்சாரம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டும், அதில் உடனே கவனம் செலுத்தி, வேண்டியது செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நேரமாகிவிட்டதால் இத்துடன் என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆர். நாகசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் இதற்கு முன்னால் நண்பர் திரு. சித்தன் அவர்கள் பேசும்போது இரண்டாவது உலகப் போரின்போதுகூட அவ்வளவு பெரிய இருட்டடிப்பு இருந்ததில்லை என்று கூறினார்கள். அவர் தமிழ்ப் புலவராக இருந்திருந்தால் ஒருவேளை மிகைப்பட கூறியிருக்கிறார் என்று கூறலாம். ஒரு வேளை அவர்கள் இரவு காலங்களில்கூட கறுப்புக் கண்ணாடி அணிந்து, அந்த விளக்குகள் தெரியாத அளவிற்கு அது மறைத்திருக்குமோ என்று எண்ணுகிறேன். கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து கோடை காலங்களில் அணைக்கட்டுகளில் தண்ணீர் இல்லாமல், எங்கு பார்த்தாலும் இருட்டடிப்பு இருந்ததை நாம் அனைவரும் அறிவோம். தொழிற்சாலைகள் இயங்கவில்லை, சினிமாக் கொட்டகைகள் ஓடாது, அப்படிச் சினிமாக் கொட்டகைகளில் ஒரு ஆட்டம் இருந்தாலும் கூட, மின்சாரம் விசிறிக்குப் பதிலாக பனைஓலை விசிறி தரப்பட்டது. தொழிலாளர்களின் வீடுகளில் உள்ள அடுப்புகளில் பூனை தூங்கும் என்ற நிலை இருந்தது. வருமுன் காத்தல் என்பதுபோல் எதிர் காலத்தில் இப்படிப்பட்ட மின் வெட்டுகள் வரக்கூடாது என்று கருதித்தான் இப்போதுள்ள நம் அரசு மைசூர் அரசோடு ஒப்பந்தம் செய்துகொண்டு இந்த ஆண்டு எங்குமே மின் வெட்டு இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்டாவிட்டாலும்கூட சும்மாவாவது இருந்திருக்கலாம். அடுத்து, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அலுவல் மொழியாகத் தமிழ் மொழியை உடனடியாகக் கொண்டுவரவேண்டு

மென்று கேட்டுக் கொள்கிறேன். அலுவலகப் பெயர் பலகைகள், உந்துகள் ஆகியவற்றில் தமிழில் பெயர்கள் எழுதப்படவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். கடிதப் போக்குவரத்தும் தமிழில் உடனடியாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, பைகாரா, மேட்டூர், மதுரை ஆகிய திட்டங்களில் பணிபுரியும் எழுத்தாளர்களுக்கு பத்து, பன்னிரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தும் அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைப்பதில்லை. ஆனால் தென் ஆர்க்காடு, வேலூர், செங்கல்பட்டு பகுதிகளில் ஐந்தாறு ஆண்டுகளில் அவர்கள் பதவி உயர்வு பெற்று விடுகிறார்கள். அனைவருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக 'காமன் ஸீனியாரிட்டி ஃபார் க்ளார்க்ஸ்' என்பதை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய திரு. வீராசாமி அவர்கள் கூறியதுபோல் ப்யூன்ஸ், கீழ்த்தர சிப்பந்திகள் இவர்கள் பல ஆண்டுகள் பணி புரிந்தும்கூட "ஃபார் வாண்ட் ஆப் வேக்கன்ஸி லூஸ்டட்" என்று வெளியே அனுப்பிவிடுகிறார்கள். பிறகு அவர்கள் டிஸ்ட்ரிக்ட் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சில் பதிவு செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. மறுமுறை வேகன்சிஸ் வரும்போது திரும்ப அந்த நபர்களை அனுப்புவதில்லை. காரணம் அவர்களின் பெயர்கள் புதிதாக பதிந்திருக்கும். புதிதாக பதிவு செய்திருப்பதால் அவர்களை அனுப்பாமல் வேறு ஒரு சிலரை அனுப்பி விடுகிறார்கள். பல ஆண்டுகள் பணி புரிந்த ஊழியர்களுக்கு மறுபடியும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. ஆகவே ஏற்கனவே பணி புரிந்து லூஸ்ட் ஆனவர்களை, அவர்கள் அலுவலகத்தில் ஒரு லிஸ்ட் வைத்துக் கொண்டு அந்த லிஸ்டிலிருந்து அவர்களுக்கு சந்தர்ப்பம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாயூரம், மன்னார்குடி, திருவாரூர் நிறுவனங்களை நமது அரசு ஏற்றுக் கொண்டுவிட்டது. அதேபோல் திருச்சி, தென் சென்னை மின் வழங்கும் நிறுவனங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களும் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் அவர்கள் இணைப்புகள் தர முடிவதில்லை. அதிகப்படியாக விளக்குகள் வேண்டுமென்றோ, விவசாயத்திற்கு பம்புகளுக்கு இணைப்புகள் வேண்டுமென்றோ கேட்டால் அவர்கள், அரசாங்கத்தினிடம் கடன் கேட்டிருக்கிறோம். அது வந்தால்தான் செய்ய முடியுமென்று சொல்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கத் தயாராக இருக்கும் இந்த நிலையில் அரசாங்கம் எப்படி கடன் வழங்கும்? எனவே எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தனிப்பட்ட கம்பெனிகளை அரசு எடுத்துக் கொள்ளவிருக்கிறது. அவர்கள் புதிதாக யாரையும் நியமிக்கக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. அது நியாயமானதுதான். ஆனால் தனியார் கம்பெனிகளில் பல ஆண்டுகளாகப் பணி புரிந்துள்ள ஊழியர்களுக்கு வேலை நீக்க நோட்டீஸ் கொடுத்திருப்





பதாகத் தெரிகிறது. திருச்சி, தென் சென்னை மின் வழங்கும் கழகத்தில் பல ஆண்டுகளாகப் பணி புரிந்துள்ள ஊழியர்களுக்கு இத்தகைய நோட்டீஸ்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே, பல ஆண்டுகளாக அவர்கள் பணிபுரிந்துள்ள காரணத்தால் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பை நமது அரஅசாங்கம் செய்து தரவேண் வேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** தலைவரவர்களே, இந்த மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டில் சென்ற ஆண்டு நடைபெற்ற விவாதங்களில் கூறிய கருத்துரைகளின்மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பற்றி கொடுத்த அறிக்கைக்காக முதலில் மிக்க நன்றியைச் செலுத்தக்கடமைப்பட்டிருக்கிறோம். இம்மாதிரி கூறுகின்ற கருத்துக்களின் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது மிகமிக இன்றியமையாதது. அவ்வாறு எடுத்துக் கொண்டமைக்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் சில முக்கியமான கருத்துக்களை இப்பொழுதும் சொல்ல வேண்டியது இன்றியமையாததாய் இருக்கிறது.

சாதாரணமாக விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதிலே 'டிரான்ஸ்பார்மரி'லே எவ்வளவு லோடு இருக்கிறது என்று கவனிக்காமல் அதிகமாகக் கொடுத்திருப்பதால் குடியானவர்கள் பல தொல்லைகளை அனுபவிக்கும் நிலை இருக்கிறது. மீட்டர் ஓடிக் கொண்டேயிருக்கிறது. அதனால் அதிகமாகச் சூடாகி தண்ணீரும் வருவது குறைந்தும் நின்றும் மீட்டரும் ஓடிக் கொண்டிருப்பதால் குடியானவர்கள் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். இப்படி இல்லாமல் அதைச் சீராக அமைப்பது மிகவும் இன்றியமையாதது.

ஆரம்பச் செலவுக்குக் குடியானவர்களிடம் வாங்கும் தொகை அதிகமாக இருக்கிறது. நிச்சயமாக அந்தத் தொகையைக் குறைக்க வேண்டும். ஆனால், மின்சார இலாக்காவிலே, ஆகின்ற செலவிலே கணக்கிட்டுத்தான் கேட்கிறார்கள். அதனால் அவர்கள் மீது குறை கூறுவதாக அல்ல பொருள். அந்தத் தொகையை நிச்சயமாகக் குறைக்க வேண்டும். பல துறைகளில் அதிகமாகச் செலவாகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு கம்பம் நட்டு 50 அடி தூரத்திலேயிருந்து கொண்டு வர 300, 350 ரூபாய் செலவாகிறது. இதைக் குறைக்க, தக்க நடவடிக்கை எடுப்பது மிக மிக இன்றியமையாதது.

மின் இணைப்புக்கு விண்ணப்பம் கொடுத்தவுடனேயே அந்த ஆண்டு மின் கடன் எழுப்புவதன் மூலம் கடன் வாங்கப்படுகிறது. சென்ற ஆண்டே இம்மாதிரி விவாதத்தின்பொழுது, குடியானவர்களிடம், சக்தியில்லாதவர்களிடம் கடன் பெறக்கூடாது என்று கூறியபொழுது அவ்வாறே கையாளப்படும் என்று கூறப்பட்டது. ஆனால், இப்பொழுதும் முன்போலவே அவர்களைக் கசக்கிப் பிழிந்து ஏழைகளிடமிருந்து வாங்குவது நடைமுறையில் இருக்கிறது. அவிநாசியில் இரண்டாண்டுகளுக்கு முன்பு அவர்களிடம் ஆள் ஒன்றுக்கு 100 ரூபாய், 200 ரூபாய் வசூல் செய்யப்

பட்டது. அந்த ஆண்டு இணைப்பு கிடைக்காமல் அடுத்த ஆண்டும் மின்சாரக் கடன் வசூல் செய்யும் சலுகை உள்ளவர்களுக்கு ஒரு மாதிரியும், இல்லாதவர்களுக்கு ஒருமாதிரியாகவும் நடந்து கொண்டேயிருக்கின்றன. இவைகள் மிகவும் விரைவில் கவனித்தாக வேண்டிய காரியங்கள். மிக்க ஏழைகளிடத்திலே இவ்வாறு பணத்தை வாங்குகிறார்கள். அந்த ஏழைகளுக்கு நூற்றுக்கு 5 ரூபாய் வட்டிக்குக் கூட கிடைப்பது இல்லை. அந்த ஏழைகளிடம் அரை ரூபாய் வட்டிக்கு வாங்கிக் கொள்ளுகிறார்கள். அந்த எட்டணா வட்டியாவது அவர்களுக்கு கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை. அப்படிப்பட்டவர்களிடமிருந்து பணத்தை வாங்குவது பெரிய பாவமாகும். இதைத்தவிர, சூப்பர்டாக்ஸ், இன்கம்டாக்ஸ், சர்சார்ஜ் என்று எத்தனையோ வகைகளில் பிடித்துக் கொண்டு தான் கொடுக்கிறார்கள். இந்த இன்கம்டாக்ஸ், சூப்பர் டாக்ஸ் வாங்க தனி இலாக்கா இருக்கிறது. இன்கம்டாக்ஸ், சூப்பர்டாக்ஸ் என்றால் இன்னது என்றே தெரியாதவர்களிடம் அதற்காகப் பிடித்துக்கொண்டு, பிடித்துக் கொண்டதை விண்ணப்பித்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். இவர்கள் பிடித்துக் கொண்டு, திரும்பவும் அதை உரிய இலாக்காவிலிருந்து திரும்பவும் பெற வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படி வேண்டாத இடத்திலே, தேவையில்லாத இடத்திலே இருந்து பணம் கேட்பது அக்கிரமம். இது கொள்ளையடிப்பது போன்ற நிலை. எனவே இவ்வாறு செய்வதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். இதைப்பற்றி முன்பே சொன்னேன். கவனிக்கப்படவில்லை.

ஒரே இணைப்பிலே ஒருவருக்குக் கிடைப்பது, ஒரு ஸ்கீமிலேயே பக்கத்திலிருப்பவருக்குக் கிடைப்பது இல்லை. இதைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் பேசிவிட்ட காரணத்தினால் அது சம்பந்தமாக அதிகமாகப் பேச விரும்பவில்லை. இதற்கு நேரிய முறையிலே ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக அடிஷனல் செக்யூரிட்டி பற்றிச் சொல்ல விரும்புகிறேன். உயர்ந்த பட்சமாக 3 மாதத் தொகையை அடிஷனல் செக்யூரிட்டியாக வாங்குகிறார்கள். சில காலங்களில் தண்ணீர் இல்லாமல், ஓடத் தேவையில்லாமல் இருக்கும் அந்த 3 மாதங்களுக்குரிய தொகையை முன்பணமாகக் கட்ட வேண்டுமென்பது சரியாகாது. 12 மாதங்களுக்கு ஆகும் செலவிலே ஒழுங்காக நான்கில் ஒரு பங்கை வாங்கிக் கொண்டால் நியாயமாக இருக்கும். அந்தச் சிறு மாறுதலையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, ஆர்.எஃப்.சி.-யில் உள்ள கஷ்டங்கள். எங்கள் பகுதியிலே சாதாரண விவசாயிகள் பலதுறைகளிலும் மின்சாரத்தை உபயோகிக்கும் பழக்கம் கொண்டிருக்கிறார்கள். கிணறு போர் போடுவதற்கு, தானியக் கதிர் அடிப்பதற்கு, கரும்பு ஆலை போன்றவைகளுக்கு மின்சாரத்தை உபயோகிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு இந்த ஆர். எஃப்.சி. மூலம் பலவித இன்னல்களும், இடைஞ்சல்களும், இலஞ்ச ஊழல்கள் பெருகு



வதற்கு வாய்ப்புகளும் ஏற்படுகின்றன. இவைகளைக் குறைக்க வேண்டும். குறிப்பாகச் சொல்லப் போனால், ஆர். எஃப்.சி. கண்டிஷன் வேண்டுமென்று விண்ணப்பித்து, அதற்குரிய லைசென்ஸ் பெற்றவர்களிடம் அத்தாட்சி பெற்றால்தான் கண்டிஷன் சொல்ல முடியுமென்ற நிலையிருக்கிறது. அவைகளை மாற்ற வேண்டும். யாரோ வேலை செய்ய வேண்டுமென்றால், அந்த லைசென்ஸ் பெறுவதற்கு ஒரு தொகையைக் கொடுத்து, எங்கேயோ கையெழுத்து வாங்கிக்கொண்டு வரும் பழக்கம் இருக்கிறது. இந்த முறையினால், லைசென்ஸினால் வியாபாரம் ஆகின்றதே தவிர எந்தவிதமான நன்மையும் இல்லை. இந்த முறையை எடுத்துவிட வேண்டும். ஏற்கெனவே சட்டப்படி அரசாங்கம் கொடுத்து வந்தது ஒழுங்காகயிருந்தது. அதைவிட்டு, இதற்காக ஒருவரிடம் கையெழுத்து வாங்கவேண்டுமென்று சொன்னால் லஞ்சம் கொடுக்க வேண்டி வந்து அதனால் லஞ்ச ஊழல்தான் பெருகும்.

இரண்டாவதாக, ஆர்.எஃப்.சி. கண்டிஷன், நிரந்தரமாக எவ்வளவு குதிரை பவர் ஓடுமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று முறை. அதற்கு அனுமதியைக் கேட்டு, மேலிடங்களுக்கு விண்ணப்பங்களை அனுப்பும்போது, சூப்பர்வைசர் முதலியவர்களின் அளவிலே, குறிப்பிட்ட அளவுக்கு மேல் ஓடாமல் பார்த்துக் கொள்ள வைத்தால் செம்மையாக இருக்கும். அதைவிட்டு, ஒவ்வொரு முறையும் மேல் மட்டத்திற்குப் போய், கையெழுத்து வாங்கி வர வேண்டுமென்று தொல்லைகள் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று சொல்லுகிறேன், அது மின்சாரத்தோடு சம்பந்தப்படாததாகயிருந்தாலும் உண்மையிலேயே அதனோடு சம்பந்தப்பட்டதாகும். இன்று மின்சாரம் பொது விவசாயிகளிடமும், பல இடங்களிலும், கிராமங்களிலும் பரவியிருக்கிறது. ஏராளமான பொருளை அரசாங்கம் அதில் கொட்டியிருக்கிறது. அது லாபமாக நடக்க வேண்டும். பல கிணறுகளில் தண்ணீர் இல்லை. சென்ற ஆண்டு 100 ரூபாய்க்கு மின்சாரம் உபயோகிக்கப் பெறப்பட்டது. ஆனால், இன்று 20 ரூபாய், 10 ரூபாய்க்குக் கூட இல்லை. எங்கு பார்த்தாலும், எங்கள் பகுதியிலே உழவர்கள் நஷ்டப்படக்கூடிய நிலையிருக்கிறது. விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள், தொழிற்சாலைகள் மூடுவிழாவிலே போய்க் கொண்டிருக்கின்றன. இந்த முறையில் விவசாயமும் தொழிலும் அடியோடு நசுக்கப்பட்டால் மிகக் கஷ்டமாகப் போய்விடும். ஆகவே, மின்சார வாரியம் லாபகரமாக நடக்க வேண்டும். அதன் மூலம் உற்பத்தி மிகுதியாக கிடைக்க வேண்டும். அந்த முறையிலே மிக இன்றியமையாத முறையிலே தண்ணீர் கிடைப்பதற்கு என் பகுதியிலே, கோவையிலே, ஒரு பெரும் பகுதியிலே எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. ஆகவே, ஒரு திட்டம் கொண்டு வந்து கிணற்றிலே தண்ணீர் உற்பத்தி ஆகச் செய்து அதன் மூலமாக மின்சார வாரியம் லாபகரமாக நடக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குக் கொடுத்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

[1968 ஆகஸ்ட் 17.

*திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றி செலுத்திக் கொள்கிறேன். மின்சாரம் இன்றைய நாகரீக உலகத்திற்கு மிகவும் தேவையான அத்தியாவசியமான ஒரு பொருள். அதிலும் குறிப்பாக விவசாய உற்பத்திக்கு மின்சாரம் மிகமிகத் தேவை. அதனால் பெருவாரியான உணவு உற்பத்தி ஆகிறது. அதிலும் குறிப்பாக தமிழகத்தை எடுத்துக் கொண்டால் மின்சாரத்தினால் அதிகமான உணவு உற்பத்தி செய்யப்படுகிறது என்பது தெரிந்ததே. வடாற்காடு மாவட்டத்தில் இன்றைக்கு தஞ்சைக்கு அடுத்தாற்போல் உணவு உற்பத்தி செய்யப்படுகிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் மின்சாரம் தான். தஞ்சை மாவட்டத்திலே பல இயற்கை சாதனங்கள், இயற்கை வசதிகள் இருந்தும் அங்கு செய்யப்படாத ஒரு காரியத்தை வடாற்காடு மாவட்டம் செய்கிறது என்றால் அது மின்சார இணைப்பினால்தான் என்பதை இந்த அவைக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்த மின்சார ஸ்தாபனம் கடந்த காங்கிரஸ் ஆட்சியிலே தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிகவும் நல்லமுறையில் இயங்கி வந்தது என்பது பாராட்டுக்குரியது. இன்றைக்குக் கொஞ்சம் சற்று மாறுபட்ட நிலையில் இருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்திலே பல மனுக்கள், விவசாயிகள் தங்களுக்கு கனெக்ஷன் வேண்டுமென்று மனு செய்தும், பல மனுக்கள் குவிந்தும் அதற்கு கனெக்ஷன் கொடுக்காமல் காலதாமதம் ஆகிக் கொண்டு வருகிறது. அதற்கு அதிகாரிகளை அணுகினால் இன்ன இன்ன பொருள்கள் இல்லை என்ற ஒவ்வொரு காரணங்களை ஒவ்வொரு வாரமும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக அந்த மாவட்டத்திற்கு டிரான்ஸ்பார்மர் இல்லையென்ற ஒரு பெருத்த குறை இருந்து வருகிறது. அந்த மாவட்டத்தைப் பார்த்து வருகிற 'எஸ்.ஈ.' அவர்களே நேரில் சொன்னார்கள். அதிலும் ஒரு கிராமம் இருக்கிறது என்றால் அந்த கிராமத்தில் ஒன்றிரண்டு டிரான்ஸ்பார்மர்கள் இருக்கின்றன. அதில் கூட, இரண்டத்தனை, மூன்றத்தனை அளவுக்கு மனுக்கள் இருந்தும் அதில் செய்யக் கூடிய அளவுக்கு வசதிகள் இருந்தும், கனெக்ஷன் வேண்டுமென்று விவசாயிகள் கேட்டால் எங்களிடம் போதிய லோடு இல்லையென்ற ஒரு காரணத்தைக் காண்பிக்கிறார்கள். அரசாங்கத்தினாலோ அல்லது மின்சார வாரியத்தினாலோ ஒரு உத்திரவு இடப்பட்டது, இரவு நேர மின்சார கனெக்ஷன் தரலாம் என்று. அந்த இணைப்புகள் கூட அந்த மாவட்டத்திலே தரப்படாமல் இருப்பது மிகமிக வேதனைக்குரியது. விவசாயி தன்னுடைய வாழ்விலே உயர வேண்டுமென்றால் மின்சார வாரியம் மிகவும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். அதிலும் வரப்பில் நெல்லுக்கு மாற்றி விட்டார்கள். அதற்கு உழவு செய்ய வேண்டுமானால் தண்ணீர் இறைக்க மின்சாரம் தேவைப்படுகிறது. மின்சார இணைப்புக் கிடைக்காமல், விவசாயம் செய்யக் கூடிய ஏழை விவசாயிகள் எப்படி நன்மை அடைய முடியும்? அந்த விவசாயி கையில் பணம் வைத்துக் கொண்டு பம்ப் செட் போடுவ





தில்லை. கடன் வாங்கிப் பம்ப் செட் போடுகிறான். அதற்கு வட்டி அதிகமாக ஏறிக் கொண்டே போகிறது. பம்ப் செட் போட்டு இரண்டு வருஷம், மூன்று வருஷம் ஆன பிறகும் அவனுக்கு இணைப்புத் தரவில்லையென்று சொன்னால் அந்தக் கடன் அவனுக்கு மேலும் வட்டியைக் கூட்டுகிறது. கடனாளியாகத் தான் ஆகிறானே தவிர, தன்னுடைய பொருளாதாரத்தை உயர்த்திக்கொள்ளக் கூடிய வசதி இல்லாமல் போய்விடுகிறது. நான் பல உதாரணங்கள் சொல்ல முடியும். அதற்கு வேண்டிய மனுக்கள் கூட இருக்கின்றன.

என்னுடைய கணியம்பாடி தொகுதியிலே, மனுக்கள் அனுப்பப்பட்டும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையோ விவரமோ கிடையாது. அதிகாரியை அணுகினால் அவர் பரிதாபத்திற்குரியவராகத் தெரிகிறார். எங்களிடம் கம்பி இருந்தால் கம்பம் இல்லை, கம்பம் இருந்தால் கம்பி இல்லை என்ற பதிலைத்தான் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அவர்களைவிட மேலதிகாரிகளை அணுகினால் அதற்கு வேண்டிய ஒதுக்கீடு கிடையாது என்று தெரிவிக்கிறார்கள். ஏதோ, அறிக்கையிலே திட்டங்களைப் போட்டு பம்ப்செட் கனெக்ஷன் கொடுக்கிறோம் என்ற புள்ளி விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது மிகமிகப் பின்தங்கித்தான் இருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மின்சாரத்தை பொறுத்த அளவுக்கு பல அங்கத்தினர்களும் இங்கே குறிப்பிட்டார்கள்—பல கிராமங்களில், பஞ்சாயத்துகளில் மின்சார விளக்கு கிடையாது. பல்ப் இல்லாத காரணத்தால் வெளிச்சம் கிடையாது. காங்கிரஸ் அரசு வெளிச்சம் உண்டாக்குகின்ற அளவுக்கு செய்ததை இந்த அரசு வெளிச்சம் இல்லாத அளவுக்குத்தான் செய்கிறதே தவிர, வெளிச்சம் உண்டாக்கக்கூடிய அளவில் ஒன்றும் செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்து சாஸ்திரப் பிரகாரம் விளக்கேற்றி வைத்த லக்ஷ்மி என்று கூறுவார்கள். அந்த விளக்கை நீக்கக்கூடிய அளவுக்குத்தான் இந்த ஆட்சி இருக்கிறதே தவிர, முன்னேற்றம் ஒன்றும் இல்லையென்று நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதிகாரிகள் பித்தளை, செம்பு இல்லையென்று கூறினார்கள். அது சாதாரணமான காரணம் என்று நான் கூற முடியும். சில காலத்திற்கு முன்னால் காட்பாடி விஸ்தரிப்பிலே ஒரு எஸ்.ஈ. அவர்கள் நான் இந்த ஹோல்டர்களுக்கெல்லாம் மாற்றுகிறேன் என்று சொன்னார்கள். இன்றைக்கு வரையில் ஒன்றும் மாற்றவில்லை. நான் பஞ்சாயத்துத் தலைவராகக் கூட என்னுடைய தொகுதியில் இருக்கிறேன். அங்கும் ஒன்றும் மாற்றவில்லை. மற்ற மற்ற கிராமங்களில் எல்லாம் இதே நிலைதான் இருக்கிறது என்பது மற்ற அங்கத்தினர்களுக்கும் தெரிந்த உண்மை. அது அமைச்சர் அவர்களுக்குக் கூடத் தெரியும் என்று நான் கருதுகிறேன். மேலும் இந்த நிலையை நீடிக்க விடாமல் இந்தக் குறைகளை

நிவர்த்திக்க வேண்டுமென்று அதிகாரிகளை பணிந்து கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில் அமைச்சர் அவர்களும் ஆவன செய்ய வேண்டுமென்று பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்திலேயிருந்து பாலார் பேசின் விதி என்ற விதியைக் காண்பித்து பல விவசாயிகள் ஏங்கக் கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. மின்சார இலாகா அதிகாரிகளும், ரெவின்யூ இலாகா அதிகாரிகளும் கலந்து அதற்கு ஒரு வழி வகுக்க வேண்டுமென்று நான் பணிந்து கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் பின் தங்கிய மாவட்டமாக இருந்தாலும் உணவு உற்பத்தியிலே மிகவும் அக்கறையுள்ள மாவட்டமாக இருக்கும். அதே நேரத்திலே விவசாயிகளுக்கு நல்ல வாய்ப்புகளும் இருக்கும் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஜில்லாவிலே மின்சாரம் சரியான முறையில் கொடுக்கவில்லை. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். தற்போது இயற்கை மழையும் கிடையாது. இந்த வசதிகள் அளிக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக அந்த ஜில்லாவில் இருக்கக் கூடிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எம். அண்ணாமலை தலைமையிலே சிலர் சென்னை ஜார்ஜ் கோட்டை முன்னாலே உண்ணாவிரதம் இருக்க இங்கு வந்தார்கள். அவர்களைக் கூடக் கைது செய்தது இந்த அரசாங்கம். இப்படிப்பட்ட நிலையை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதுடன் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவரோடு மட்டுமல்லாமல் மற்ற விவசாயிகளையும் கைது செய்திருக்கிறார்கள். மேலும், பல நாட்களாக இங்கே உண்ணாவிரதம் இருக்க அவர்கள் வந்திருப்பதன் நோக்கம் அரசியல் நோக்கம் அல்ல. அந்த ஜில்லாவிலே மின்சாரத் தட்டுப்பாடு உள்ளதனால் தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அமைச்சரவைக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். அரசியல் நோக்கோடு இல்லாமல் வந்த திரு. எஸ். எம். அண்ணாமலை அவர்களையும் அந்தப் பகுதி விவசாயிகளையும் கைது செய்ததோடு இல்லாமல் பீச் போலீஸ் ஸ்டேஷனில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு தகவல் கூட குறிப்பாக சற்று நேரத்திற்கு முன் எனக்கு வந்தது. அதையும் இந்த அமைச்சரவை கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மின்சார வாரியத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் கிராமப் புறங்களில் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். மூன்று அல்லது நான்கு டிரான்ஸ்ஃபார்மர்களுக்கு அஸிஸ்டெண்ட்ஸ் ஒயர்மேன் அமர்த்தலாம் என்ற ஓர் உத்திரவு இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அங்கே அதிகமான வேலைகளைக் கொடுப்பதனால் அந்த ஊழியர்கள் தங்கள் பணிகளை செவ்வனே செய்ய முடியவில்லை. அப்படி முடியாததினால் விவசாயிகள் தங்களுடைய மின்சாரத்திற்கு தடை ஏற்படும்போது அவர்களை கண்டு பிடிப்பதற்கே ஒரு நாள், இரண்டு நாள் ஆகிறது. இதனால் வயல்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. மின்சார வாரியத்தில் மனுக்கள் ஒழுங்கீனமான முறையில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஒரு





விவசாயி மனுவைக் கொடுத்தான் என்றால், வரிசைக்கிரமமாக
எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. பின்னால் கொடுத்த
நபர் பெரிய நபராக இருந்து, அல்லது வேறு யாராவது
நபர்களுக்கு, பணம் கொடுத்தவர்களுக்கு வேலை ஆகிறது என்ற
எண்ணத்தைக் கொடுக்கக் கூடிய அளவுக்கு இந்த மின்சார
வாரியம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். இந்த மனுக்களை வரிசைக்கிரமப்
படுத்தி, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான்
இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். செக்ஷன் ஆபீஸர் நடப்பு 12 00
இருக்கக்கூடிய இடத்தில், சூபர்வைஸர் இருக்குமிடத்தில், வாரத்
திற்கு ஒரு முறையோ அல்லது மாதத்திற்கு ஒரு முறையோ
அந்த மனுக்களை சேகரிக்கக்கூடிய 'க்ரீவன்ஸ் டே' என்ற முறை
யில், அதிகாரிகள் குற்றங்குறைகளை கேட்டறிய வேண்டும்.
அப்படி விவசாயிகளுடைய குறைகளை நேரில் கண்டறிந்தால்,
விவசாயிகளின் குறைகளை துரிதமாகப் போக்க முடியும். எஸ்.ஈ.
ஆபீஸ் தூரத்தில் இருப்பதினால் கல்வி அறிவு இல்லாத விவசாயி
கள் ஏதோ மனுச் செய்தோம், பம்பு செட்களை வாங்கினோம், மின்
விஸ்தரிப்புக் கொடுப்பார்கள் என்ற எண்ணத்தில் வருகிறார்கள்.
அவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். அவர்கள்
நிலையை மாற்றுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க, மின்சார
வாரியம் பாடுபடவேண்டும். குறிப்பாக வட ஆற்காடு மாவட்ட
மக்களுக்கு மின்சார வாரியம் மேலும் உறுதுணையாக இருந்தால்,
வட ஆற்காடு மாவட்டம் மற்ற மாவட்டங்களைக் காட்டிலும்
உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று இந்த சந்தர்ப்பத்தில்
பெருமையோடு கூறிக்கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்ட
மக்கள் சார்பாக மின்சார வாரியத்திற்கு என்னுடைய நன்றியறி
தலை தெரிவித்துக் கொண்டு, மின்சார வாரியம் நன்கு இயங்க
பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்கு பேசுவ
தற்கு சந்தர்ப்பம் வழங்கிய தலைவர் அவர்களுக்கு நன்றி தெரி
வித்துக்கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்
களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது
என்னுடைய கருத்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். பொது
வாக, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், மின்சார வாரியம் மிக
நல்ல முறையில் பணி செய்து, இந்தியாவிலேயே கிராமப் புறங்
களுக்கு மின்சாரம் விஸ்தரிப்பதில் முதன்மையாக விளங்கு
கிறது. அதற்காக மின்சார வாரியத்தையும், அதன் அதிகாரி
களையும், அங்கு இருக்கிற ஊழியர்களையும் கிராமப்புற மக்களின்
சார்பாக நான் பாராட்டுகிறேன். அப்படிப் பாராட்டுகின்ற
அதே நேரத்தில், குற்றங்குறைகள் இல்லை என்று திட்டவட்ட
மாகச் சொல்லிவிடமுடியாது. குற்றங்குறைகள் என்று
சொல்லும்பொழுது, அவர்கள் திட்டமிடுகின்ற முறைகளில் சில
குற்றங்குறைகள், அந்தத் திட்டங்களை அமுல் நடத்துகின்ற
முறைகளில் சில குற்றங்குறைகள் இருக்கின்றன. அப்படிப்
பார்க்கும்பொழுது, இந்தத் தேசத்தில் மூன்று ஐந்தாண்டுத்

திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுடைய நோக்கம் பொதுவாக திட்டங்களைப் பற்றிச் சொல்கிறேன், மின்சாரத்தை மட்டும் சொல்லவில்லை--உற்பத்தியைப் பெருக்குவது என்று தான் போட்டார்கள். ஆங்காங்கு பல துறைகளில் உற்பத்தி பெருகி இருக்கிறது. ஆனுல், விநியோகத்தைப் பொறுத்த அளவில் சரியான திட்டம் எதுவுமில்லை. அதன் விளைவாக உற்பத்தியின் பலன் பெருவாரியான மக்களுக்கு கிடைக்காமல் போய்விட்டது. அதன் பிரதிபலிப்பைத் தான் நாம் மின்சார வாரியத்தின் திட்டங்களில் பார்க்கிருேம். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம், குந்தா திட்டம், எண்ணூர் அனல் மின்சார திட்டம் இப்படிப் பல திட்டங்களைப் போட்டிருக்கிருேம். உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பது தான் நோக்கம். ஆனுல் உற்பத்தி பெருகியிருந்தாலும் கூட, அந்த உற்பத்தியின் முழுப் பலன், முழுத் திறன் பெரும்பாலான மக்களுக்குக் கிடைக்கவில்லை, பெருவாரியான மக்கள் அதன் முழுப் பலனையும் அனுபவிக்கவில்லை. இது ஒரு அம்சம். இரண்டாவது அம்சம் என்னவென்ருல், உற்பத்தியைப் பொறுத்த அளவில் ஒருங்கிணைப்பு இருக்கிறதா என்ருல், அதுவுமில்லை. முழு அளவுக்கு ஆங்காங்கு உற்பத்தித் திட்டங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றனவா என்ருல், அதுவும் கிடையாது. உதாரணத்திற்குச் சொல்லப் போனுல், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் இப்பொழுது ஒரே ஒரு பவர் ஹவுஸ் சர்க்கார்பதி தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. மற்ற பவர் ஹவுஸ்கள் இயங்காமல் இருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிற இலாகாவிலுள்ள குறைபாடுகள் தான். வேறு ஒரு காரணமும் கிடையாது. சோலையாறு திட்டத்தில் பவர் ஹவுஸ் ஒன்று, இரண்டு இருக்கிறது. இதிலே பவர் ஹவுஸ் இரண்டிற்கு தண்ணீர் கொடுக்கிற பொறுப்பு பொதுப்பணித் துறையினரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. பொதுப்பணித் துறையினர் கட்டுகிற அணையிலிருந்து அந்தப் பவர் ஹவுஸுக்கு தண்ணீர் வரவேண்டும். பொதுப் பணித்துறையினர் அந்த அணையைக் கட்டி முடித்துவிட்டார்கள். ஆனுல், மின் துறையினர் பவர் ஹவுஸ் இரண்டை இன்னும் கட்டி முடிக்கவில்லை. அதனுல் அந்த பவர் ஹவுஸ் இயங்க முடியவில்லை. பவர் ஹவுஸ் ஒன்றைப் பொறுத்தவரையில் பொது பணித் துறையினர் அந்த அணையைக் கட்டி முடிக்கவில்லை, மின் துறையினர் கட்டி முடித்துவிட்டார்கள். அதனுல் அதுவும் இயங்கவில்லை. ஒரு பக்கம் மின்சார வாரியத்தினர் பவர் ஹவுஸைக் கட்டி முடித்துவிட்டார்கள், பொதுப்பணித் துறையினர் அணையைக் கட்டி முடிக்கவில்லை. இன்னெரு பக்கம் பொதுப்பணித் துறையினர் அணையைக் கட்டி முடித்துவிட்டார்கள், மின்சார வாரியத்தினர் பவர் ஹவுஸைக் கட்டி முடிக்கவில்லை. இதனுல் இரண்டு பவர் ஹவுஸ்களிலும் உற்பத்தி துவக்கப்படாமல் இருக்கிறது. இந்த இரண்டு துறையினரும், பொதுப்பணித் துறையினரும், மின்சாரத் துறையினரும் ஒருங்கிணைந்து, ஒருமுகமாக செயல்பட்டிருந்தால், இரண்டு துறை அதிகாரிகளும் அவ்வப்பொழுது கூடிப் பேசி, நிலைமைகளைப் பரிசீலித்து, வேலை





களைச் செய்திருந்தால் நலமாக இருந்திருக்கும். அப்படி ஒரு இணக்கமான முறையில், ஒருங்கிணைப்போடு செயல்படாததினுல, இரண்டு பவர் ஹவுஸ்களினுல் பொது மக்களுக்கு எந்தவிதமான லாபமும் இல்லை. கோடிக்கணக்கான பணம் வீணுக அங்கே முடங்கிக் கிடக்கிறது.

அடுத்தபடியாக, சர்க்கார்பதி பவர்ஹவுஸை எடுத்துக்கொண்டால், சென்ற வருஷ நிலையைச் சொல்கிறேன். இந்த வருஷம் எப்படியோ நிலை தெரியாது. அந்தப் பவர் ஹவுஸ் 30 மெகவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. துணைக் கடவு அணையிலிருந்து தண்ணீர் வரவேண்டும். துணைக்கடவு அணை கேரள ராஜ்யத்தைச் சேர்ந்த அணை. வன இலாகாவைச் சேர்ந்த மரங்களை வெட்டாததால், குறிப்பிட்ட அளவிற்கு அந்த அணையில் தண்ணீர் தேக்க முடியவில்லை. அதனுல் 30 மெகவாட் உற்பத்தித் திறனுள்ள சர்க்கார்பதி பவர் ஹவுஸில் இப்பொழுது 18 மெகவாட் அளவுக்குத் தான் உற்பத்தி செய்துகொண்டிருக்கிருர்கள். இதனுல் ஓரளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் பணம் இல்லை என்று சொல்ல முடியாது. இதற்கெல்லாம் தேவைப்படும் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனுல், இந்தத் துறையினர்களிடையே ஒருங்கிணைந்த, ஒருமித்த முயற்சிகள் இல்லாத காரணத்தினுல், இந்தக் குறைபாடுகள் காணப்படுகின்றன. இதனுல் பணம் ஒரு பக்கம் முடங்கிக் கிடக்கிறது. பொது மக்களுக்கும் எந்தவிதமான நன்மையும் கிடைக்கவில்லை.

அடுத்தபடியாக, நெய்வேலியில் 400 மெகவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழக மின்சார வாரியம் தான் நெய்வேலியிலிருந்து முழுக்க முழுக்க மின்சாரத்தை வாங்குகிருர்கள். இப்பொழுது நெய்வேலியிலிருந்து எவ்வளவு அளவு மின்சாரம் எடுத்துக்கொள்ளப்படுகிறது என்று பார்த்தால், ஒரு சில சமயங்களில் 75 மெகவாட் அளவு தான் மின்சாரம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. பாக்கி காலங்களில் சும்மாக தூங்கிக் கொண்டு தான் இருக்கிறது. சில சமயங்களில் 150 மெகவாட் அளவு மின்சாரம் எடுத்துக் கொண்டாலும், 400 மெகவாட் அளவுக்கு எடுத்துக் கொள்கிற மாதங்கள் எவ்வளவு இருக்கும் என்ருல், மூன்று மாதங்கள் தான் இருக்கும். ஆகவே, அதனுல் நெய்வேலி நிலையத்தினர் தங்களுக்கு அதிகமாக நஷ்டம் வருகிறது என்று சொல்கிருர்கள். அது எந்தத் துறையில் நிறுவப்பட்டதாயிருந்தாலும் சரி, மாநில அரசுத் துறையானுலும் சரி, மத்திய அரசுத் துறையானுலும் சரி, போடப்பட்ட திட்டத்தின் பலன் இப்படி விரதாவாகப் போகிறது. பெரும்பாலான மக்களுக்கு திட்டத்தின் முழுப்பலனும் கிட்டாமல் போய்விடுகிறது. மற்ருெரு பக்கத்தில் விநியோகத்தை எடுத்துக்கொண்டால், எங்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்ற புகார் நிறைய இருக்கிறது. கிராமப்புறங்களுக்கு மின்சார விஸ்தரிப்பிற்காக திட்டம் போட்டு, அதற்காக வேண்டிய பணமெல்லாம் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. பெண்டிங்காக இருக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாத்திரம் ரூ. 20 கோடி செலவு செய்ய வேண்டும் என்ற

நிலைமை ஒரு பக்கம் இருக்கிறது. இன்னொரு பக்கம் மின்சாரம் அதிகப்படியாக உற்பத்தியானாலும், அது வீணாக தூங்கிக் கொண்டிருக்கிறது. மின்சாரம் தேவை, தேவை என்ற கூக்குரல் மக்களிடையே எழுப்பப்படுகிறது. அவர்களுக்கு மின்சாரத்தைக் கொண்டுபோய் கொடுக்க முடியவில்லை. இதற்கெல்லாம் நிர்வாகத்தில் இருக்கிற கோளாறுகள் தான் காரணம். இப்பொழுது புதிய அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. புதிய சேர்மன் வந்திருக்கிறார்கள். புதிய மாநில அரசு ஏற்பட்டிருக்கிறது. இதெல்லாம் சென்ற காலத்தில் நடந்தது. இனியாகிலும் புதிய அமைப்பில் இம்மாதிரி நடக்காமல் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இருக்கிற கபாஸிடியை, சக்தியை வைத்துக் கொண்டு, அதை எப்படி பொது மக்கள் அதிகப்படியான அளவில் உபயோகிப்பதற்கு முடியும் என்பதை ஆராய்ந்தறிந்து திட்டவட்டமான முறையில் மின்சாரத்தை பெரும்பாலான மக்களிடையே விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது நெய்வேலியில் உற்பத்தியை 400 மெகவாட்டிலிருந்து, 600 மெகவாட்டிற்கு உயர்த்தப்போவதாக சொல்லப்படுகிறது. 400 மெகவாட் உற்பத்தி செய்யும்பொழுதே, மின்சாரம் உபயோகப்படுத்தப்படாமல் தூங்கிக் கொண்டிருக்கிறது என்றால், 600 மெகவாட் உற்பத்தி செய்தால் என்ன ஆகப்போகிறது. ஆகவே, இதையெல்லாம் நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும். இன்னும் பல மின்சார திட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கிறோம். எண்ணூர் அனல் மின்சார திட்டம், கல்பாக்கத்தில் அணு மின்சார திட்டம் இப்படி திட்டம் போட்டுக் கொண்டு போகிறோம். மின்சார உற்பத்திக்கு மூலதனச் செலவு ஒரு யூனிட்டுக்கு ஒரு ரூபாய் என்றால், அதற்கு விநியோகச் செலவு ரூ. 2½ ஆகும் என்று கணக்குச் சொல்கிறார்கள். உற்பத்தியில் மாத்திரம் கவனம் செலுத்திவிட்டு, விநியோகத்தில் கவனம் செலுத்தாமல் இருப்பது பயன் தராது. விநியோகத்திற்கு இப்பொழுது ஒதுக்கியிருப்பதைவிட இன்னும் அதிகப்படியான நிதி ஒதுக்கி, உற்பத்தி செய்ததன் முழுப் பலனையும் சமூகத்திலுள்ள பெரும்பாலான மக்கள்—தொழில் பகுதி மாத்திரம் அல்லாமல், விவசாயப் பகுதியிலுள்ள மக்களும்—அனுபவிப்பதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். இதற்கு வேண்டிய முறையில் மின்சார வாரியம் திட்டம் போட்டு வேலை செய்ய வேண்டும் என்று நான் யோசனை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் சபையின் கவனத்திற்கு மற்றொரு விஷயத்தையும் கொண்டுவர ஆசைப்படுகிறேன். கிராமப்புறங்களில் மின்சார விஸ்தரிப்புக்காக இப்பொழுது பெண்டிங்காக இருக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாத்திரம் ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது போகிற வேகத்தைப் பார்த்தால் இப்பொழுது ஒரு விவசாயி மின்சார இணைப்புக்கு விண்ணப்பம் போட்டால், இன்னும் 5, 6 வருஷங்களுக்குக்கூட அவனுக்கு மின்சாரம் கிடைக்காது என்ற நிலையில்தான் இருக்கிறோம். அதிலும் குறிப்பாக என்னுடைய பிரதேசத்தில் ஒரு சில உதாரணங்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பெருந்துறைப் பிரதேசம் மிகவும் பிற்பட்ட பிரதேசம். நான் வரும்பொழுது அங்குள்ள நிர்மாணப் பிரிவு அஸிஸ்டெண்டு என்ஜினியரிடம் சாங்ஷன் செய்யப்பட்டு, நிறைவேற்றப்படக்கூடிய நிலைமையில் உள்ள திட்டங்கள் எவ்வளவு பாக்கி இருக்கின்றன, கொடுக்கப்பட்டிருக்கிற பணத்தை வைத்துக்கொண்டு, இருக்கிற அளவில் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எத்தனை வருஷங்கள் ஆகும் என்று கேட்டேன். இருபத்தைந்து திட்டங்கள் பாக்கி இருக்கின்றன என்றும், கொடுக்கப்பட்டிருக்கிற பண அளவைப் பொறுத்து, அவைகளை நிறைவேற்றுவதற்கு இன்னும் குறைந்தபட்சம் நான்கு வருஷங்கள் ஆகும் என்றும் அவர் சொன்னார். இப்படி நான்கு வருஷங்கள் காத்திருக்க வேண்டும் என்ற நிலை தானா இருக்கவேண்டும்?





தஞ்சாவூர் மாவட்டத்திற்கு பாசனத்திற்கு காவிரியிலிருந்து தண்ணீர் கொடுக்கிறோம். தஞ்சாவூரிலே ஃபில்டர் பாயிண்டுகள் வைக்க என்பதற்காக, நாற்றங்கால் போடுவதற்கு மாத்திரம்—இதைச் சற்றுக் கவனிக்கவேண்டும், நாற்றங்கால் போடுவதற்காக மட்டும்—30 நாட்களுக்கு என்று மட்டும், 75 லட்சம் ரூபாய் செலவில், ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில், முழுக்க முழுக்க கிணறுகளையே நம்பியிருக்கும் பகுதிகளுக்கு, அதுவும் கிணறுகள் என்றால் 30, 40 அடி ஆழம் அல்ல, 60 அடி, 80 அடி, 100 அடி ஆழம் இருந்து மிகப் பயங்கரமாக இருக்கும் கிணறுகள். அங்கே மின்சாரம் கொடுத்து உதவி செய்ய எந்த விதமான 'கிராஷ் ப்ரோக்ராம்' கூட இல்லை என்பது வருந்தத்தக்கது. சென்ற வருஷம் கூட சற்று வேகம் இருந்தது. ஆனால் இந்த வருஷம் பணம் இல்லை, பணம் இல்லை என்று சொல்கிறார்கள். எப்படிப்பட்ட சாதனங்கள் இல்லை என்று சொல்கிறார்கள். சாதனங்கள், ட்ரான்ஸ்பார்மர்கள், மோட்டார்கள், கண்டக்டர்கள், 6-ம் நெம்பர், 8-ம் நம்பர் கண்டக்டர்கள் கிடையாது. ஏப்ரல் மாதத்திலேயே சொல்லிவிட்டார்கள். அதையே இன்னமும் சொல்லுகிறார்கள். மெடீரியல்களே கிடையாது என்கிறார்கள். அப்படி இருக்கும்போது எப்படி திட்டங்கள் நிறைவேற்றப்படும்? ஒரு பகுதிக்கு நன்மை செய்வதற்காக, இன்னொரு பகுதியைப் பட்டினி போடுவது என்பது சரியாகாது. அப்படி ஒரு பகுதிக்காக வேறொரு பகுதியை புறக்கணிக்கக் கூடாது.

பணம் இல்லை, பணம் இல்லை என்று கூறுகிறபோது, ஒரு யோசனை கூற விரும்புகிறேன். அது தமிழ்நாடு அரசைப் பொறுத்த விஷயமாகக் கூட இருக்கும். விவசாயப் பகுதிகளை இரண்டாகப் பிரித்து, இரண்டு பகுதிகளாகச் செய்து, ஒன்று நிரந்தரமாக பாசன வசதி பெற்றது, மற்றொன்று மழையையே நம்பியிருக்கும் வானம் பார்த்த பகுதி என்று செய்து, அப்படி நிரந்தரமாகப் பாசன வசதி பெற்ற பகுதிகளுக்கு இவ்வளவு காலமாக பொதுப்பணத்தைக் கொண்டு அணைகள் கட்டி பாசன வசதிகள் செய்து கொடுத்திருக்கிறோம் என்பதால், அந்தப் பகுதி

[திரு. செ. பாலசுப்பிரமணியன்] [1968 ஆகஸ்ட் 17

மக்களிடமிருந்து மற்ற பிற்பட்ட பகுதி மக்களுடைய
விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட
காரியத்திற்காக, அப்படி நிரந்தர பாசனம் பெற்றவர்களிட
மிருந்து, ஒரு 'ஸெஸ்' என்று வசூல் செய்து, வறண்ட பகுதி
மக்களுக்கு உதவி செய்ய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள
லாம். வசதியற்ற பகுதி மக்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டும்
என்ற ஒரே காரியத்திற்காக இப்படி ஒரு ஸெஸ் வசூல் செய்யக்
கூடிய ஏற்பாட்டைச் செய்து, வளமற்ற பகுதியையும் வளமாக்கு
வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்கிற இந்த
யோசனையைத் தமிழக அரசுக்கு எடுத்துச் சொல்லி, என்
உரையை முடிக்கிறேன்.

**திரு. தி. பொன்னுமலை:** தலைவர் அவர்களே, எனக்கு முன்னால்
பேசிய பல உறுப்பினர்களும், மின்சாரம் எவ்வளவு தேவை
என்பதை விளக்கமாகப் பேசினார்கள். அதே நேரத்திலே, நிதி
நிலை அறிக்கையையும், சமர்ப்பித்து இருக்கிறார்கள், பார்க்கிறோம்.
நான்கு கோடி ரூபாயாக இருந்ததை, ஆறு கோடி ரூபாய் என்று
உயர்த்தி, அதன் பிறகு அதை இன்னும் 7½ கோடி ரூபாய்
என்றும் அதிகப்படுத்தி, தற்போது அதை ஒன்பது கோடிச்
சில்லரை ரூபாய் என்ற அளவில் செய்து, நம்முடைய அரசு அதிக
கவனம் செலுத்தியிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அதோடு
மட்டுமல்லாமல், மேலும் ஐந்து கோடி ரூபாய் தேவை என்று
மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம், அதுவும் விரைவிலே
கிடைக்க வேண்டும் என்று அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள்.
அதைக் கண்டு நாம் மிக மிகப் பெருமைப்படுகிறோம். இவ்வளவு
செய்திருந்தும் கூட எங்கள் ஊரில் மின்சாரம் இல்லை, எங்கள்
மாவட்டத்தில் மின்சாரம் குறைவு என்கிற குறைபாடுகள் வந்து
கொண்டிருக்கின்றனவே தவிர, முழுமையைக் காணவில்லை.
ஆகவே, இந்த மின்சாரத் திட்டங்களை அமல் நடத்த ஊக்கம்
கொடுத்து, உதவி செய்ய வேண்டிய வழிவகைகளைக் காண
வேண்டிய நிலையில் இருக்கிறோம். வருஷத்திற்கு ஏறக்குறைய 15
கோடி ரூபாய் என்ற அளவில் ஒதுக்கி, அப்படி ஒரு வருஷத்திற்கு
மட்டுமல்லாமல், தொடர்ந்து, மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு
ஆண்டுக்கு 15 கோடி ரூபாய் என்று ஒதுக்கீடு செய்து, இன்னும்
அதிகமான அளவில் விவசாயத்திற்கு பம்புசெட்டுகளுக்கு மின்
இணைப்புக் கொடுக்க முடியும். நம் நாடு விவசாயத்தை நம்பி
யிருக்கிறது. நாம் உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்திலே
ஈடுபட்டிருக்கிறோம். அந்தப் பெருக்கத்தை அதிகமாக அடைய,
விவசாயிகளுக்கு ஊக்கமளிக்க, அவர்களை அதிகமான அளவில்
விவசாயத்திலே ஈடுபடும்படிச் செய்ய, மின்சாரம் அவசியமாக
இருக்கிறது. விவசாயம் செய்யக் கூடியவர்களுக்கு மின்சாரம்
எவ்வளவு தேவைப்படுகிறது என்பதையெல்லாம் உறுப்பினர்கள்
விளக்கமாகச் சொன்னார்கள். நான் கூட நேற்றையதினம் நம்
முடைய புதிய ஹாஸ்டலுக்குப் போகும்போது, எவ்வளவோ
கஷ்டங்களுக்கு இடையிலே இப்படிப் பல லட்சக்கணக்கான
ரூபாய்களைச் செலவு செய்து, பல கோடி ரூபாய்களைக் கொட்டி,



1968 ஆகஸ்ட் 17] [திரு. தி. பொன்னுமலை]

இப்படிக் கட்டடங்களைக் கட்டுவதற்குப் பதிலாக, இப்படிப் பட்ட
கட்டடங்களையெல்லாம் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு நிறுத்தி
வைத்து விட்டு, இப்படிச் சிலபல வேலைகளை ஒதுக்கிவைத்துவிட்டு,
அத்தியாவசியமான உற்பத்தி பெருக்கம் சம்பந்தமான வேலைகளை
மட்டும் செய்வது என்று இருந்தால் மிக்க நலமாக இருக்குமே
என்று எண்ணினேன். அந்த வகையில் பணிபுரிந்தால்,
நம்முடைய அரசும், நம்முடைய நாடும் எவ்வளவு சீக்கிரம்
நலமை அடையும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.
பற்பல இடங்களிலும் இப்படிப்பட்ட கட்டடங்களை
கோடிக்கணக்கான ரூபாய்கள் கொட்டிக் கட்டி வைத்
திருக்கிறோம். இவற்றைப் பார்த்தால் மிக்க வேதனைப்பட
வேண்டியதாக இருகிறது. அதே நேரத்தில் விவசாயிகள், விவ
சாயம் முன்னுக்கு வரக்கூடிய வேலைகளுக்குப் பணம் இல்லாமல்
இருக்கிறது. ஆகவே, இரண்டு மூன்று வருஷங்களுக்கு இம்
மாதிரியான கட்டடங்களுக்குச் செலவு செய்வதைக் குறைத்துக்
கொள்ளவும், மற்ற உற்பத்தித் திட்டங்களுக்கு அதிகமாகச் செலவு
செய்யவும் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அப்படிச் செய்து நம் அரசு இந்தியாவிலேயே
நல்ல பெயர் வாங்கவேண்டும் என்றும் விரும்புகிறேன். நம்
முடைய மின்சார அதிகாரிகள், எவ்வளவு கொடுந்தாலும் செலவு
செய்து மக்களுக்கு நன்மை செய்வார்கள். ஆறு கோடி ரூபாய்
கொடுத்தால் போதாது, 12 கோடி ரூபாயளவில் வேண்டும்
என்று பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு 15 கோடி ரூபாய் 20
கோடி ரூபாய் கொடுத்தாலும், அந்த ஆண்டிலேயே வேலையைப்
பூர்த்தி செய்துவிடுகிறார்கள். எந்த வகையிலும் பணத்தை திரட்டி,
அவர்களுக்குக் கொடுத்தால் நல்ல வகைகளில் அவர்களும் பணி
புரிந்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி செய்ய வாய்ப்
பாக இருக்கும். இந்த நாகரிக உலகத்தில், பெரிய பெரிய
கட்டடங்கள் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால், நாம்
இன்றைக்கு இருக்கும் நிலையில் உற்பத்தியைப் பெருக்கியாக
வேண்டும். உணவுப் பொருள்கள் பெருகியாக வேண்டும். நாட்
டிலே பல்லாயிரக் கணக்கானவர்கள் உணவு இல்லாமல் கஷ்டப்
படுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட காரியங்களை ஓரிரு ஆண்டு
களுக்கு ஒத்திவைத்து விட்டு, மின் இணைப்பில் அதிகமாகக்
கவனம் செலுத்த வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்
கிறேன்.

இன்றைக்கு விவசாயிகள் காட்டும் ஊக்கத்தைப் பார்த்தால்,
பம்பு செட்டு வைக்க என்று ரூபாய் 250 தலைக்குக் கொடுக்க
வேண்டும் என்று சொன்னால் கூட, அவர்கள், அப்படி வட்டி
யில்லாமல், 4, 5 ஆண்டுகளுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்
கள். அந்த வகையில் செய்தால், கிட்டத்தட்ட அரசுக்கு 2½
கோடி ரூபாய் கிடைக்கும். வட்டியில்லாமல் சுலபமாகக் கிடைக்
கும். அதை வைத்துக் கொண்டு விவசாயிகளுக்கு நல்ல பல
காரியங்களை செய்யமுடியும். அது விவசாய உற்பத்திக்கும் உதவி
யாக இருக்கும் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. தி. பொன்னுமலை] [1968 ஆகஸ்ட் 17

ஒரு கம்பம், இரண்டு கம்பம், மூன்று கம்பம் என்று இருக்கக் கூடிய விவசாயிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடிய சிறுசிறு விவசாயிகளுக்கும், மின் இணைப்பு வசதி செய்து கொடுத்தால், இன்றைக்கு இருக்கும் நிலையில், ஓரளவில் உற்பத்திப் பெருக்கத்தைக் காணமுடியும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நாம் போகும் இடங்களில் இன்றைக்குப் பார்க்கிறோம், பல இடங்களில் கோழிப்பண்ணைகள் என்று, பெரிய பெரிய மாடிக் கட்டடங்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள். அவையெல்லாம் அவ்வளவு அவசியம் தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட கட்டடச் செலவுகளை நிறுத்தி வைத்து விட்டு, மின் இணைப்புக் கொடுப்பதில் அந்தப் பணத்தைச் செலவு செய்தால் விவசாய மக்களுக்கு மிக்க வசதியாக இருக்கும். அந்த வகையில் மின் இணைப்புக் கொடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதைப்போலவே விவசாயிகளுக்குப் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு செய்து தருவதிலே அதிக காலதாமதம் ஆகிறது. மின் இணைப்பு செய்து தாருங்கள் என்று விவசாயி கேட்கும் நேரத்தில் மின்சார வாரியத்தினர் கம்பி இல்லை, போல்ட் இல்லை, இது இல்லை, அது இல்லை என்று கூறி தாமதம் செய்து வருகிறார்கள். இதை மின்சார வாரிய அதிகாரிகள் கவனித்து விரைவில் மின் இணைப்புச் செய்து தர வழிவகை செய்ய வேண்டும். லட்சக் கணக்கில், கோடிக்கணக்கில் மூலதனம் போட்டு நடத்துகிற இத்துறையில் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் பெறுமானமுள்ள சாமான்கள் கிடைக்கவில்லையென்ற குறையினால் மின் இணைப்புச் செய்துதர காலதாமதமாகிறது என்று கூறுவது ஏற்றுக்கொள்ளத் தக்க பரிகாரமாகாது. இப்படிப்பட்ட சிறிய காரியங்களிலுள்ள குறைகளையெல்லாம் அதிகாரிகள் களைந்து, உடனடியாக விவசாயிகளுக்கு மின் இணைப்புச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத் துறை அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஹெல்ப்பருக்கு ஒரு சைக்கிளும், சூபர்வைசருக்கு ஒரு மோட்டார் சைக்கிளும், ஏ.இ. அவர்களுக்கு ஒரு ஜீப்பும் அளிக்கப்பட வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். இவர்கள் பத்துப் பதினைந்து மைல் பரப்புள்ள தங்கள் ஏரியாவைக் கவனித்துக் கொள்ள இந்த வாகனங்கள் உபயோகப்படும். திடீரென்று ஓரிடத்தில் பல்பு ஃப்யூஸ் போய் விடுகிறதென்றால் அதை ரிப்பேர் செய்ய மின்சார அலுவலகத்திற்குப் போனால் அங்கிருக்கக்கூடிய ஹெல்ப்பர் நடந்துவர அரை மணி நேரமாகிறது. ஆகவே, மின்சாரத் துறையிலுள்ள ஹெல்ப்பர், சூபர்வைசர், ஏ.இ. இவர்களுக்கு தக்க வாகன வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்



1968 ஆகஸ்ட் 17] [திரு. தி. பொன்னுமலை]

கொள்கிறேன். இதனால் மின்சார வாரிய அலுவலர்கள கூடிய விரைவிலும் விவசாயிகளிடத்தில் தொடர்பு கொள்ள வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார அலுவலகத்தில் எலக்ட்ரிக் கன்ஸ்ட்ரக்ஷன் என்றும், கமர்ஷியல் டிபார்ட்மெண்ட் என்றும், ஓ. அண்டு எம். என்றும் மூன்று பிரிவாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். ஒரே வேலைக்காக மூன்று இடங்களில் எஸ்டிமேட் தயாராக வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த மூன்று பிரிவுகளையும் ஒன்றாக இணைத்து விட்டால் எஸ்டிமேட் தயார் செய்வதில் காலதாமதம் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) என்னுடைய உரைகளையெல்லாம் கருத்திற்கொண்டு, மின்சார வாரிய அதிகாரிகள் தக்க கவனம் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கையுடன் இங்கு பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1968-69-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழக மின்சார வாரியத்தினுடைய சாதனைகள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவை. குறிப்பாக, வேறு மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய மாநிலத்தில் மின்சார உற்பத்தியும், அதனுடைய ஊழியர்களுடைய சேவையும் நம்மால் பாராட்டப்பட வேண்டிய ஒன்று என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் கிராமப்புறங்களிலே, குறிப்பாக நீர்ப்பாசன வசதியில்லாத இடங்களிலே இறைவைப் பாசனத்திற்கு மின் இணைப்புச் செய்து தர வேண்டியது மிகமிக அவசியமாகிறது. மின்சார இணைப்பு வசதி இல்லையென்றால் உணவு உற்பத்தி செய்ய முடியாது. ஆகவே, காலாகாலத்தில் நாம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்திற்குத்தான் மின்சாரம் முதலில் தரப்பட வேண்டும். எல்லா இடங்களுக்கும் மின்சாரம் விஸ்தரிக்க பணம் போதவில்லையென்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. அதற்கு என்னுடைய ஆலோசனை என்னவென்றால், தற்போது பெரிய தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் குறைந்த கட்டணத்தில் அளிக்கப்பட்டு வருகிறது. அந்தக் கட்டணத்தை மாற்றி கொஞ்சம் கூடுதலாக அதிகமான கட்டணம் விதிக்கலாம். மூலதனங்களுக்கு வட்டி என்ற பெயரால் கொடுத்துவரும் வட்டி விகிதத்தைக் கொஞ்சம் குறைக்க முயற்சி செய்ய வேண்டும். இந்த ஆண்டுகூட மின்சார வாரியத்தின் வருமானத்திலிருந்து 10 கோடிக்கும் அதிகமான தொகையை வட்டியாக கொடுத்திருக்கிறோம். வட்டி விகிதத்தை அரசு கொஞ்சம் குறைத்தால், ஆண்டுக்கு இப்போது 51,746 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்குப் பதிலாக ஒரு லட்சம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1968 ஆகஸ்ட் 17

தவிர, மின் இணைப்பு தருவதற்குப் போதிய கருவிகள் இல்லையென்று சொல்லப்படுகிறது. மீட்டர்கள் இல்லை, போஸ்டுகள் இல்லையென்று சொல்லுகிறார்கள், நெல்லை மாவட்டத்தில், கோயில்பட்டி வட்டாரம் பாசனவசதி இல்லாத பகுதி. அந்த இடங்களில் உள்ள பெரும்பகுதி விவசாய மக்கள் தங்களுடைய கிணறுகளிலிருந்து தண்ணீரை இறைவைப் பாசனம்செய்து விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் ஆயில் இன்ஜின் வைத்தோ, மற்றபடியோ தண்ணீரை இறைக்க முடியாத வசதியற்ற நிலையில் உள்ளவர்கள். அந்தப் பகுதி விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புச் செய்து தராவிட்டால் அவர்களுடைய விவசாயம் பாழ்பட்டுவிடும். ஆகவே, குறைந்தபட்சம் மனுச்செய்த மூன்று மாதங்களுக்குள்ளாகவாவது மின் இணைப்புச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்கம்பிகள் வெகு தொலைவில் இருப்பதால், அங்கிருந்து வரக்கூடிய நிலைமை இல்லையென்று சொல்லப்படுகிறது. பக்கத்திலே ஒரு தூண், இரண்டு தூண்கள் இருக்கக்கூடிய பகுதிகளுக்கும் மின் இணைப்புத் தரப்படவில்லை. எப்பொழுது கேட்டாலும், கம்பி இல்லை, மீட்டர் இல்லை, கருவிகள் இல்லையென்று சொல்லப்படுகிறது. ஆகவே, மின்சார வாரியமே தங்களுக்கு வேண்டிய கருவிகளை உற்பத்தி செய்துகொள்ள வேண்டுமென்று எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். கருவிகள் உற்பத்தி செய்யும் பொறுப்பை தனிப்பட்ட காண்ட்ராக்டர்களிடம் விடாமல் வாரியமே, வேண்டிய சாமான்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வாரியத்திற்கு இன்றையதினம் வருமானமாக ஆறு கோடி ரூபாய்க்கு வந்திருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் சிரமப்பட்டு வருமானத்தைப் பெருக்க முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஊழியர்களுக்கு 2 லட்சம் ரூபாய்தான் போனஸாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஊழியர்களுக்குத் தரப்படும் போனஸ் தொகையின் அளவைக் கூட்ட வேண்டும்.

அடுத்தபடியாக, தொழிலாளர்கள் பல வருஷங்களாக வேலை செய்தும்கூட நிரந்தரமாக்கப்படாமல் இருந்துவருகிறார்கள். அவர்களையும் நிரந்தர ஊழியர்களாக ஆக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, கிராமங்களிலே தெருவிளக்குகள் போடப்படும்போது அரிஜனக் குடியிருப்புகளுக்கு விளக்கு போட முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் போன்றவற்றிற்கு பத்துப் பதினைந்து லைட்களுக்கு சாங்ஷன் ஆகிறது. ஒரு கிராமத்திற்குப் லைட்போடும் போது, அந்தக் கிராமத்திற்கு பத்து லைட்கள் என்றால், கிராமத்திற்கே அவை போதாத நிலையில் இருக்கின்றன. கிராமத்தை விட்டு சற்று ஒதுக்குப்புறமாக இருக்கும் அரிஜனக் குடியிருப்புகளுக்கு லைட் வசதி அளிப்பது என்பது இயலாத காரியமாக ஆகி



[திரு. சோ. அழகர்சாமி]

விடுகிறது. ஆகவே, மின்சார வாரியமே நேரடியாக கிராமத்
திலுள்ள, அரிஜனக் குடியிருப்புகளுக்கும் லைட்கள் போடும்படி
யான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக இன்று ஒரு தொழிலுக்கு ஒரே சங்கம்
என்ற முறையில் இந்த மின்சார வாரியத்தில் இருக்கும் தொழி பி.ப. 12-30
லாளர்களின் சங்கங்களில் மெஜாரிட்டி உறுப்பினர்கள் கொண்ட
சங்கத்தை அங்கீகரித்து எல்லாத் தொழிலாளர்களும் ஒரு சங்கத்
தின் அடிப்படையில் செயல்பட வழிவகை செய்ய வேண்டும்.
அதோடு தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை அவ்வப்போது
பரிசீலனை செய்து போனஸ் போன்ற மற்ற வசதிகளைக் கொடுத்து
அவர்களை ஊக்குவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அப்போதுதான் இன்னும் நல்ல முறையில் வாரியம் செயல்பட
வாய்ப்பு ஏற்படும். இப்போது மொத்தமாக மூன்று லட்சத்து
நாற்பத்திரண்டாயிரம் பம்புசெட்டுகளுக்குத்தான் கனெக்ஷன்
கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 7 லட்சம் கிணறுகளுக்கு
மேல் கனெக்ஷன் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது.
எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்களும் சொன்னார்கள்.
கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் மனுச் செய்தால்
சரியான முறையில் கவனிக்கப்படுவதில்லை. கிராமப்புறங்
களுக்குப் போகும்போது இதுதான் எங்களுக்கு உள்ள பிரச்சினை
நாங்கள் மனுப்போட்டு நான்கைந்து வருடங்களாகின்றன. பணம்
கட்டி இரண்டாண்டுகள் ஆகின்றன. இன்னமும் கனெக்ஷன்
கொடுக்கப்படவில்லை என்பது பெரிய புகாராகச் சொல்லப்படு
கிறது. ஆகவே விவசாய பம்பு செட்டுகளுக்கு முதன்மை இடம்
கொடுத்து கனெக்ஷன் கொடுக்கப்படவேண்டும். நாட்டின்
நலனைக் கருதியும், விவசாயிகளின் வாழ்வைக் கருதியும்,
உணவுப்பொருள், மூலப்பொருள் உற்பத்தி அதிகரிக்கச் செய்ய
வேண்டும் என்கிற நிலையில் விவசாயக் கிணறுகளுக்கு கனெக்ஷன்
கொடுப்பதில் முக்கியத்துவம் கொடுத்தாக வேண்டும் என்று
சொல்லி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின்
மீது ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த
அமைச்சரவை பொறுப்பேற்ற பிறகு மின்சாரத் துறையில் இருந்து
பல்வேறு சிக்கல்களும் நீக்கப்பட்டு ஒரு சுமுகமான நிலைமை
ஏற்படுத்தப்பட்டிருப்பது குறித்து நான் அமைச்சரவைக்கும்,
அமைச்சர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்,
மனமுவந்து பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் மைசூர் மாநிலத்தில்
இருந்து இதுவரை யூனிட் 9 காசு என்று வாங்கிக் கொண்டிருந்த
மின்சாரத்தை இனி 4.66 காசுக்கு வாங்குவது என்று குறைத்
திருப்பதே இந்த அரசின் மாபெரும் சாதனையாக இருக்கிறது
என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நெய்வேலி மின்

[திரு. அ. லெ. சுப்பிரமணியம்] [1968 ஆகஸ்ட் 17

சாரத்தைப் பொறுத்தவரையில் 5.5 காசாக நிர்ணயித்திருப்பதும் இந்த மந்திரிசபையின் திறமைக்கு எடுத்துக்காட்டாகும் என்று கூற விரும்புகிறேன்.

பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டதுபோல மின்சார வெட்டு இல்லாமல் திறமையாகச் சமாளித்துக்கொண்டு வந்திருப்பதற்கு விவசாயிகள் சார்பில் இந்த மந்திரி சபைக்கும், அமைச்சர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதே நேரத்தில் ஒருசில குறைபாடுகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு நமக்கு வெளிநாட்டினர்கள் மின்சாரத் திட்டங்களுக்காக ஏராளமான பணத்தைத் தந்திருக்கிறார்கள். குந்தாத் திட்டத்திற்காக கனடா நாட்டினர் ஏழு கோடி ரூபாய் இனாமாகத் தந்திருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கம் இந்தப் பணத்தைப் பெற்று நமக்குத் தந்திருக்கிறபோது நம்மிடத்தில் 5.5 சத விதம் வட்டி வசூலிக்கிறார்கள். இந்தப் போக்கை மாற்றி அமைக்க இந்த அமைச்சரவை நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல ஸ்விட்ஜர்லாந்து நாட்டினர் நமக்கு 13 கோடி ரூபாய் பணத்தை 2 சத விதம் வட்டிக்குத் தந்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் இந்தப் பணத்தைப் பெற்று நமக்குத் தந்து அதற்காக ஏழு சத வித வட்டி தரவேண்டும் என்று நிர்ப்பந்தம் தருகிறார்கள். வெளிநாட்டார் நமக்கு உதவி செய்கிறபோது கூட மத்திய அரசினர் இப்படி நமக்குக் குறுக்கே நிற்கிற போக்கை மாற்றி அமைக்க இந்த அமைச்சரவை முழு மூச்சுடன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு உற்பத்தியாகிற மின்சாரத்தில் கிட்டதட்ட இருபது சத வீதம் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுவதைப் பார்க்கிறோம். விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மின்சாரத்தின் விலையை அதிகப்படுத்தக் கூடாது. ஆனால் மத்திய அரசாங்கத்தில் இருந்து ஒரு குறிப்பு வந்திருக்கிறது. அதில் விவசாயிக்கு 12 பைசா யூனிட்டுக்கானால் அதில் பாதியை மானியமாகத் தருவதாக சமீபத்தில் வந்த செய்தியைப் பார்த்தேன். தமிழக அரசு இன்றைக்கு விவசாயிகளுக்கு யூனிட் 8.2 சத வீதம்தான் சார்ஜ் செய்து வருகிறது. இதற்கே மத்திய அரசின் மானியம் கிடைக்கத்தக்க வழிவகைகளை மேற்கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த வாரியத்தின் நிதிப் பெருக்கத்திற்கான சில யோசனைகளைக் கூற விரும்புகிறேன். இன்றைக்குப் பெரும் தொழில் நிறுவனங்களுக்கு நாம் மிகக் குறைந்த செலவில் மின்சாரத்தைத் தருகிறோம். இதை அதிகப்படுத்த வேண்டுமென்று எல்லோரும் வற்புறுத்தியிருக்கிறார்கள். நமது பெருமதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கூட கணக்காயர் சங்கத்தில் பேசுகின்றபோது இணக்கம் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக்



1968 ஆகஸ்ட் 17] [திரு. அ. லெ. சுப்பிரமணியம்]

கட்டணத்தைக் கூட்டுவதன் மூலமாக ஓரளவுக்கு மின்சார வாரியத்தின் வருமானத்தைக் கூட்ட முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று,, மின்சார இழப்பு என்ற முறையில் லைன் லாஸ்; இந்த ஆண்டு எவ்வளவு என்று காட்டவில்லை என்பதாக உறுப்பினர் வீராசாமி குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு கணக்குப் பார்க்கிறபோது 18 சத வீதம் லைன் லாஸ் ஏற்பட்டிருக்கிறது. தோட்டத்தில் பாதி கிணறு என்பது போல 18 சத விதம் மின்சார இழப்பு என்பது அதிகமானதாகும். இதற்கான காரணம் என்ன என்பதைப் பரிசீலித்தாகவேண்டும். பழைய ஒயர் காரணமா? டிரான்ஸ்பார்மர் டிபெக்டா? இதைப்பற்றி ஆராய்ந்து அறிவதற்கு ஒரு டெக்கினிகல் எக்ஸ்பர்ட் கமிட்டியைப் போட்டு இந்த விழுக் காட்டைத் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைத் தடுத்து நிறுத்தினாலே அதிகப்படியான லாபத்தைப் பெற முடியும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொன்று. மின்சார வாரியத்தைச் சேர்ந்தவர்கள்—நாட்டு மக்களுக்குத் தரவேண்டிய கடனை எப்படி அடைக்கப்போகிறார்கள் என்கிற பெரும் பிரச்சனை இருக்கிறது. தமிழ்நாடு முழுவதற்கும் மின்சாரத்தைப் போட்டாக வேண்டும். ஆகவே கடன்களை அடைக்க ஒரு திட்டவட்டமான தத்துவத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. மின்சார இலாக்காக்களில் ஏராளமான ஜீப்புகளும், கார்களும், லாரிகளும் இருக்கின்றதைப் பார்க்கிறோம். இது மின்சாரத்துறையா, போக்குவரத்துத்துறையா என்று கூடச் சந்தேகம் ஏற்படும். ஆயினும் அவர்கள் பயணப்படி என்றும் ஏராளமாக வாங்குவதைப் பார்க்கிறோம். இதைத் தடுத்து நிறுத்தியாகவேண்டும்.

கிராமப் பகுதியைப் பொறுத்தவரையில் பம்புசெட்டுகளுக்கு இணைப்புத் தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 1964-65-இல் இருந்து பல மனுக்கள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அதுபற்றி அதிகாரிகளிடத்தில் கேட்டால் ஒரு டிரான்ஸ்பார்மருக்கு 200 கிணறுகளுக்கு கனெக்ஷன் கொடுக்கலாம், 10 கிணறுக்கு அதிகம் தேவைப்படுகிறது என்கிறார்கள். டிரான்ஸ்பார்மர் லோடு தாங்கும்படியாக மாற்றி அமைக்கவேண்டும், அல்லது புது டிரான்ஸ்பார்மர்களை யாவது போட்டு எல்லாக் கிணறுகளுக்கும் கனெக்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தெருவிளக்குகள் சம்பந்தமாகவும் பல குறைபாடுகள் இருக்கின்றன. விளக்கு எரியவில்லை என்று அடிக்கடி எடுத்துச் சொல்கிறார்கள். ப்யூசான பல்புகளை மாற்றிக்கொள்ள பஞ்சாயத்துகளுக்கே அதிகாரம் வழங்கப்படுவது பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார வாரிய அலுவலகங்களை எடுத்துக்கொண்டால் "ஓ "அண்டு எம்" என்று ஓரிடத்தில், "கன்ஸ்ட்ரக்ஷன்" என்று ஓரிடத்தில், "அக்கவுண்ட்ஸ் ப்ரான்சு" என்று ஓரிடத்தில் என்பதாக இப்படி பலவிடங்களில் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் ஓரிடத்தில் வைத்தால் குழப்பம் ஏற்படாதிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் இப்படி மின்சார வாரியம் பயனுள்ள முறையில் செயல்படவேண்டுமென்று கூறி—மின்சார வாரியத்தைச் சேர்ந்தவர்களுக்கு என்னுடைய நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி செலுத்துகிறேன். மின்சார வாரியத்தின் மீது பேச வாய்ப்பு ஏற்படுகிற போதெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியோடு பங்குகொள்கிற நான்—இந்த நாட்டுக்கு எங்கள் கட்சி சர்க்கார் அளித்திருக்கிற மிகச் சிறப்பான பல குழுக்களில் இதுவும் ஒன்று—இது தலைசிறந்து விளங்குகிறது என்கிற மகிழ்ச்சியோடு பேசுகின்றேன்.

அடுத்து மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலும் சென்ற ஆண்டில் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கு வாரியத்தின் யோசனைகளை அல்லது பதில்களைக் குறித்து அச்சிட்டுப் புத்தகமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் படித்துப் பார்க்கிற நேரத்தில் உறுப்பினர்கள் குறிப்பிட்ட யோசனைகளை வாரியத்தினர் உண்மையாகவே தகுந்த முறையில் பரிசீலனை செய்து பார்த்து இந்தப் பதில்களை அளித்திருக்கிறார்களா என்று பார்க்கிறபோது உண்மையில் வருந்தத்தோடு கூறிக்கொள்ள வேண்டியிருக்கிறது. உறுப்பினர்களுடைய யோசனைகளை இன்னும் தீவிரமாக ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்து முடிவு எடுத்திருக்கலாம் என்று நினைக்கிறேன். உதாரணமாக, மின்சார வாரியமே தனக்குத் தேவையான பல்புகளை உற்பத்தி செய்து கொள்வதற்காக ஒரு தொழிற்சாலையை நிறுவி, அந்தத் தொழிற்சாலையை நடத்தினால் இன்றைக்கு இருக்கிற மிகப் பெரிய குறை நீங்கிவிடும் என்று சென்ற ஆண்டு சொல்லியிருந்தோம். அதற்கு மின்சார வாரியம் தந்திருக்கிற பதில்

As far as the Board is concerned, the suggestion to start a factory to manufacture bulbs is not feasible.

என்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே இருக்கிற மிகப் பெரிய பிரச்னை இன்றையதினம் இந்த மன்றத்திலே இருக்கிற எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் எந்தக் கட்சியிலே இருந்தாலும் ஒத்துப்போகின்ற ஒரு விவகாரம் தெருவிளக்குகள் நன்றாக எரிவதில்லை. பழுதடைந்து போகின்றன அவற்றை மாற்றுவதற்கு பல்புகள் கிடைக்கவில்லை என்ற இந்தக் குறைபாடுதான். இந்தக் குற்றச்சாட்டை, குறைபாட்டை மின்சார வாரியமே ஏற்றுக்கொண்டு இருக்கிறது. உடனடியாக இதைத்





தீர்த்தாக வேண்டுமென்ற நிலைமை ஏற்படுவதால் உருப்படியான முறையிலே வழி காண்பது நல்லது. மின்சார வாரியத்தினர் அறிக்கையிலே

The question of starting a few units to manufacture screw-cap bulbs has been remitted to the Industries, Labour and Housing Department.

என்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த வாரியத்தைப் பொறுத்தவரையில் இந்த வாரியம் நல்ல முறையிலே செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அது தன்னுடைய தேவைகளை ஏன் தானே நிறைவேற்றிக் கொள்ளக்கூடாது, அதற்கான முயற்சிகளில் ஏன் ஈடுபடக்கூடாது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு இந்த விவாதத்திலே கலந்து கொண்ட அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்பொழுது சொன்னார்கள், ஸ்க்ரூ பல்புகள் போதுமான அளவுக்கு கிடைக்காத காரணத்தாலே போதுமான அளவுக்கு குழல் விளக்குகள் போட்டுவிடலாம் என்று யோசனை கூறினார்கள். அவர்களுடைய யோசனை நல்ல யோசனையாக இருந்தாலும், குழல் விளக்குகள் அதிக வெளிச்சத்தைத் தருவனவாக இருந்தாலும், தலைவலி சென்று திருகு வலி வந்ததைப்போல், அவை சீக்கிரமாகப் பழுதடையக் கூடிய நிலைமையும், எரியாத நிலைமையும் இருக்கிறது. குழல் விளக்குகளைப் பொறுத்தவரையில் கண்டக்டர் போன்றவை சரியாக இருந்தால்தான் எரிகின்றன, இல்லாவிட்டால் எரிவதில்லை, அதனால் வாரத்திற்கு இரண்டு முறைகள் தொழிலாளர்கள் கம்பங்களில் ஏறி அவற்றை சரிபடுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. எனக்குக் கிடைத்த தகவலின்படி இப்பொழுது இருக்கிற குழல் விளக்குகள் எல்லாம் தரக்குறைவாக உள்ளவை யென்று தெரிகிறது. மின்சாரவாரியத்தின் கணக்குப்படி ஒரு ஆண்டுக்கு ஒரு பல்பு மாற்றவேண்டும் என்று இருந்தாலும், இப்பொழுது மாதத்திற்கு இரண்டு முறைகளாவது பல்புகள் மாற்றவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அப்படியில்லாமல் நல்ல பல்புகளாக விலை அதிகமானாலும்கூட நல்ல தரமுள்ள பல்புகளாக போடவேண்டும். தரம் குறைந்த பல்புகளை வாங்கி வாரியத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்துவது நல்லதல்ல.

திண்டிவனம், செஞ்சி போன்ற பிற்பட்ட பகுதிகளுக்கு மின்சார வாரியத்தினுடைய உதவி பயன்படுத்தப்படாத பகுதிகளுக்கு தனியாக செப்பரேட் டிவிஷன் வேண்டுமென்று கேட்டிருந்தோம். அந்த நிலைமையைப்பற்றிச் சொல்கிறபொழுது பார்க்கலாம் என்று மின்சார வாரியம் தந்திருக்கிற பதில்

The formation of new Operation and Maintenance Divisions is based on the number of Operation and Maintenance sub-divisions in the system. Hence the matter will be considered at appropriate time subject to usual workload standard being satisfied.

என்பதாக பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் ஏதோ எதிர்க் கட்சியிலே இருப்பதால் அரசாங்கத்திற்குச் சிக்கல் ஏற்படுத்த

[திரு. க. இராமமூர்த்தி] [1968 ஆகஸ்ட் 17

வேண்டுமென்று இதைச் சொல்லவில்லை. இதை நான் மட்டும் சொல்லவில்லை. முன்னேற்றக்கழக உறுப்பினரான திரு. பால கிருஷ்ணன் அவர்கள்கூட சென்ற ஆண்டு இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதிகளில் எவ்வளவு சீக்கிரம் செய்துகொடுக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்து கொடுக்கவேண்டும்.

விவசாயிகளுக்கு மின்சாரம் தரப்படுகின்றபொழுது அதற்கான கட்டணங்களை குறைக்கவேண்டுமென்ற முறையும், டெபாசிட்டு களை எடுக்கவேண்டுமென்ற முறையையும் சொன்னோம், திரும்பத் திரும்ப அதை வலியுறுத்த விரும்புகிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையில் இப்போது நஷ்டக் கணக்கில் அவர்களுடைய வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. அவர்களுடைய பளுவை, சுமையை அதிகப் படுத்தாமல், குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார இலாகாவைப் பொறுத்தவரையில் எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள், ஓ. அண்டு எம். கமர்ஷியல், கன்ஸ்ட்ராக்ஷன் போன்ற மூன்று துறைகள் இருப்பதாகச் சொன்னார்கள். ஒருவருக்கு மின்சாரம் கிடைக்கவேண்டு மென்றால் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. சில இடங்களில் ஒரே ஊரைச் சேர்ந்த சிலர் கமர்ஷியல் டிபார்ட் மெண்டுக்குச் சென்று அந்த எஞ்சினியரை அணுகி மனுக்கொடுக்க வேண்டியிருக்கிறது, அதே ஊரைச் சேர்ந்த சிலர் அல்லது பக்கத்து ஊரைச் சேர்ந்தவர் ஓ. அன் எம். எஞ்சினியரிடம் மனுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. யார் பல ஆண்டுகள் காத்திருந் தாலும் ஒன்றிரண்டு மாதங்களுக்குள் சிலர் மின்சாரம் பெறக்கூடிய வாய்ப்பு இதனால் ஏற்படுகிறது, சலுகையுள்ளவர்கள் சொன்னால் தான் இவையெல்லாம் கிடைக்கும் என்ற பொதுவான கருத்து மக்களிடத்திலே பரவியிருக்கிறது. இதை நிவர்த்திக்க வேண்டு மானால், மனுக்களை வாங்குவது, பரிசீலனை செய்வது, யார் முன்னாலே கொடுத்தார்களோ அவர்களுக்கு முன்னாலே தருவது பின்னாலே கொடுத்தவர்களுக்கு பின்னாலே தருவது இவற்றை யெல்லாம் பரிசீலனை செய்து மூன்று இடங்களுக்குச் செல்லாமல் ஒரே இடத்தில் சென்று மனுக்கொடுப்பதன் மூலமாக ஒழுங்காகச் செய்யலாம். அதனால் வாரியத்திடம் பொதுமக்களுக்கு நல்ல மரியாதையும் மதிப்பும் ஏற்படும்.

என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையில் அடிக்கடி மின்சார வோல்டேஜ் குறைந்துவிடுகிற காரணத்தினாலே மின்சார பம்பு செட்டுகள் நல்ல முறையிலே வேலை செய்ய முடிவதில்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. கரண்ட் அதிகமாக வந்து திடீரென்று குறைந்து விடுகிற நிலைமை இருக்கிறது. மயிலம் அல்லது வெங்கத் தூர் பகுதியில் 110 கே. வி. லைன் ஓடுகிறது. அங்கே ஒரு சப் ஸ்டேஷன் நிறுவுவதற்கு முயற்சி எடுக்கவேண்டும். அச்சரப் பாக்கத்திலிருந்து இப்பொழுது அங்கே கரண்ட் வரவேண்டி யிருக்கிறது. அங்கே இருக்கிற 33 கே.வி. ஸ்டேஷனை அதிகப்



1968 ஆகஸ்ட் 17] [திரு. க. இராமமூர்த்தி]

படுத்தாமல் 110 கே.வி. ஸ்டேஷனை ஏற்படுத்துவதன்மூலம் அங்கேயுள்ள பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் பெரிய உதவி யாக இருக்கும். தொழிற்சாலை நடத்துகிறவர்களுக்கும், அவர் களுடைய இயந்திரங்கள் பழுதடையாதவாறு உத்திரவாதம் கொடுக்கமுடியும். திண்டிவனத்திலே ஒரு ரெவின்யூ யூனிட் ஏற்படுத்தவேண்டும். மின்சார வாரியத்திற்குச் சொந்தமான கட்டடங்களைக் கட்டவேண்டும், இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் நிரந்தரமாகிவிட்டது. நல்ல வேலைகளையெல்லாம் அந்த வாரியத்தின் மூலம் செய்வதால் வேலையை விட்டுச் செல்கிற சில பல எஞ்சினியர்களுக்கு வேலைவாய்ப்பு தரக்கூடிய நிலைமை உருவாகும். இந்த இலாகாவினரும் வேலை குறைப்புச் செய்வதை விட்டு, இருக்கிற எஞ்சினியர்களைப் பயன்படுத்தி இந்த நாட்டிற் கும் இந்த வாரியத்திற்கும் நன்மையைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம் இந்த அளவிலே முடிகிறது. அடுத்து, அரசினர் தீர்மானம்.

## 5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

**(இ) சென்னை மாநில (பெயர் மாற்ற) மசோதா, 1968, என்னும் நாடாளு மன்ற மசோதாவின் மீது தமிழக சட்டப் பேரவை தெரிவிக்கும் கருத்துக்கள்.**

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே,

"குடியரசுத் தலைவர் அவர்கள், இந்திய அரசியலமைப்பின் 3-வது பிரிவின்படி, அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கும் 'சென்னை மாநில (பெயர் மாற்ற) மசோதா, 1968' * என்ற தலைப்புள்ள நாடாளுமன்ற மசோதாவை, இந்தப் பேரவையினரின் கருத்துக்களை அறியும்பொருட்டு இப் பேரவைக்கு அனுப்பியுள்ளாராகையால்,

மேற்படி மசோதாவில் கண்டுள்ள செயற்குறிப்புகள் அனைத்தும் சொல்லி லும், பொருளிலும் அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுவதாக இந்தப் பேரவை தனது ஆன்ற கருத்தினை அறிவிக்கின்றது.

மற்றும், இம் மசோதா நாடாளுமன்றத்தில் இயன்ற விரைவில் அறிமுகம் ஆகி, சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் இந்தப் பேரவை விரும்புகின்றது."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இந்தத் திர்மானத்திற்குச் சில திருத்தங்கள் மாண்புமிகு உறுப்பினர் களால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும், திரு. க. இராமமூர்த்தி அவர்களும் திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடன் கலந்து உரையாடி, அவர்களுடைய திருத்தங்களின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு இந்தத் திருத்தத்தை அரசு கொண்டு வருகிறது.

தீர்மானத்தின் இரண்டாவது பகுதிக்குப் பதிலாக கீழ்க்கண்ட பகுதி யைப் பொருத்துக:—

"இந்த மசோதாவில் 'தமிழ் நாட்' என்ற சொற்கள் எங்கெங்கு வரு கின்றனவோ அங்கெல்லாம் 'தமிழ் நாடு' என்ற சொற்களை அமைக்க பரிந் துரைத்து, இந்தத் திருத்தத்திற்கு உட்பட்டு மேற்படி மசோதாவில் கண் டுள்ள செயற்குறிப்புகளை இந்தப் பேரவை ஏற்றுக்கொள்வதாக தனது ஆன்ற கருத்தினை அறிவிக்கின்றது."

* 215-ம பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதற்கு திருவாளர்கள் ம. பொ. சிவஞானம் அவர்களும், க. இராமமூர்த்தி அவர்களும், செ. பாலசுப்பிரமணியம் அவர்களும் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றின் கருத்துக்களை ஏற்று, கொடுத்திருக்கும் திருத்தத் தீர்மானத்தை ஒட்டி, அவர்களுடைய திருத்தங்களை வற்புறுத்துகிறார்களா அல்லது திரும்பப் பெற்றுக் கொள்ளுகிறார்களா என்பதைத் தெரிவித்துவிட வேண்டும்.

THIRU K. VINAYAKAM : At the first reading stage there will be a general discussion. Amendments will have to be moved at the second reading stage.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது அந்தத் தீர்மானங்களை முன்மொழிகிறார்களா இல்லையா என்பதுதான் கேள்வி.

**திரு. ம. பொ. சிவஞானம் :** முதலில் திருத்தத்தை முன்மொழிந்து அபிப்பிராயம் சொல்ல அனுமதிக்க வேண்டும். திருத்தங்களைப் பிரேரேபிக்க அனுமதித்து விடுவது நல்லதென்று கூற விரும்புகிறேன்.

"மசோதாவில் 'Tamil Nad' என்ற சொற்கள் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் 'Thamizh Nadu' என்ற சொற்களை அமைக்க வேண்டும்" என்ற என்னுடைய திருத்தத்தை முன்மொழிகிறேன்.

திருத்தம் வழிமொழியப்பட்டது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன் :

In paragraph 2 of the Government Resolution for the words "in entirety, in wording and substance", the following may be substituted :—

"with the following alteration, namely, in Clause 3 for the words "Tamil Nad" the words "Tamil Nadu", in Clause 4 for the words "Tamil Nad" the words "Tamil Nadu", in clause 5 (1) for the words "Tamil Nad" the words "Tamil Nadu", in Clause 5 (2) for the words "Tamil Nad" the words "Tamil Nadu", and in Clause 8 for the words "Tamil Nad" the words "Tamil Nadu".

என்னுடைய திருத்தத்தை முழுக்க முழுக்க முதலமைச்சர் அவர்களுடைய திருத்தத்திலே ஏற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால், நான் என்னுடைய திருத்தத்தை முன்மொழியாமல் விட்டுவிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU S. BALASUBRAMANIAN : I beg to move the following amendment :—

In paragraph 2 of the Resolution for the words "in entirety in wording and substance" the following may be substituted :—

"subject to the amendment that wherever the words 'Tamil Nad' occur the word 'Thamizhagam' may be substituted".

திருத்தம் வழிமொழியப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலத் தீர்மானமும் அதற்கு முன்மொழியப்பட்ட திருத்தத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.



***திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, தமிழ் நாடு என்ற பெயர் மாற்றம் குறித்து நாடாளுமன்றத்தில் இருந்து நம்முடைய அபிப்பிராயத்திற்காக அனுப்பப்பட்ட மசோதாவின்மீது அரசாங்கம் தீர்மானம் கொண்டுவந்து, அது ஏகமனதாக நிறைவேற்றப்பட வேண்டுமென்ற வகையில் திருத்தம் கொண்டு வந்தவர்களின் கருத்தையும் அறிந்து அந்தத் திருத்தங்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் வகையிலே அரசாங்கமே திருத்தத்தையும் கொடுத்து ஏகமனதாக இது நிறைவேற்றப்பட இருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்பதை நான் தெளிவாக விளக்கியிருக்கிறேன். என்னுடைய கட்சியைச் சார்ந்த அனைவரும் இதை மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்; பெருமைப்படுகிறோம். ஆனால், சிலர் ஒருவிதமான கருத்துக்களை வெளியே கூறி வருகிறார்கள். சென்ற தடவை இது பற்றிய தீர்மானம் வந்தபோது முதலமைச்சர் அவர்களைப் பூரணமாக ஆதரித்தோம், பாராட்டினோம். அவர்களும் வரவேற்றார்கள். ஆனால் சில பத்திரிகைக் காரர்கள், ஆளும் கட்சிக்காரர்களுக்குத்தான் இதிலே அக்கறை இருப்பது போலவும் மற்றவர்களுக்கு அக்கறை இல்லாதது போலவும் தோன்றும் விதத்தில், அவர்கள் எல்லாம் தமிழ்நாடு என்று கோஷம் போடும்போது நான் அழுதுகொண்டிருப்பது போல் கேலிச் சித்திரம் போட்டார்கள். உண்மையிலேயே கூற வேண்டுமென்றால் தமிழ் மொழியின் பெருமைக்கும் வளர்ச்சிக்கும் ஒரு கட்சி பாடுபட்டிருக்கிறது என்று கூற வேண்டுமென்றால் அது காங்கிரஸ் கட்சியாகத்தான் இருக்குமே தவிர, வேறு எந்தக் கட்சியாகவும் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்மொழி ஆட்சி மொழி ஆக வேண்டுமென்ற சட்டம் 1956-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ம் தேதி நிறைவேற்றப்பட்டது. இப்போது ஆளும் கட்சியில் இருக்கும்படியான அங்கத்தினர் ஒருவர்கூட அப்போது இந்தச் சட்டசபையில் இல்லையென்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நீங்கள் செய்ததைப் பற்றிக் கூறுங்கள். அதிகமாகச் செய்கிறோம் என்று கூறுங்கள். ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று நீங்கள் கூறும்போதுதான் நாங்கள் மக்களிடம் இதைப்பற்றி விளக்கிச் சொல்லவேண்டியிருக்கிறது. எங்களுடைய தேசியத் தோழர் பாரதியார்—

"செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே

எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று பாடினார். அதைத்தான் நான் சொன்னேன். ஜெர்மனியில் தந்தை நாடு (ட்யூஸ் லாண்ட்) என்றுதான் சொல்லுகிறார்கள்.

இப்போது பெயரை மாற்றுவதிலே ஆட்சேபணை இல்லை. சர்க்கார் அவசரம் அவசரமாக எல்லா இடங்களிலும் "தமிழகம்" என்று போட்டுவிட்டார்கள். இப்போது இதிலே இறுதி வடிவம் பெற்று "தமிழ் நாடு" என்று மாற்றும்படியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி அவசர அவசரமாகச் செய்யும்போது இது மாதிரிச் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "ஸ்டேட் ஆப் மெட்ராஸ்" என்பது "ஸ்டேட் ஆப் டமில் நாடு" என்று மாற இருக்கிறது. ஆகவே, "கவர்ன்மெண்ட் ஆப் மெட்ராஸ்" என்பது "தமிழ் நாடு சர்க்கார், தமிழ் நாடு அரசு" என்ற நிலையில்தான் இருக்க வேண்டுமென்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இப்போது நாம் எதைச் சொல்லுகிறோமோ அதை மத்திய அரசினர் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள் என்பதிலே சந்தேகம் இல்லை. அபிப்பிராய பேதம் எந்த நிலையிலும் இல்லை. "தமிழ் நாடு" என்றுதான் இருக்கவேண்டும். முதலமைச்சர் அவர்கள் எல்லோருடைய கருத்துக்களையும் கேட்டு திருத்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, கான்ஸ்டிட்யூஷனில் சட்டபூர்வமாக "தமிழ் நாடு" என்று மாற்றிய பிறகு எல்லாவற்றிலும் அந்தப் பெயர்தான் இடம் பெறவேண்டும்.

பி.ப.
1-00 தமிழ் மொழியிலுள்ள சிறப்பு "ழ"கரம் வேறு எந்த மொழியிலும் கிடையாது. நமக்கு சிறப்பை, உயர்வைக் கொடுக்கும் அந்த "ழ"கரம் வேறு எந்த பாஷையிலும் கிடையாது என்பது நாம் பெருமைப்படக்கூடிய பெரிய தொரு விஷயமாகும். முதல் அமைச்சர் அவர்கள் கூறியபடி நமக்குப் பின்னால் வரும் சந்ததியினர் பெருமைப்படக்கூடிய வகையில் இந்த ஒரு சம்பிரதாயத்தை பூரணமாக நாம் ஏற்றுக்கொண்டோம் என்ற தகுதிக்கும் பெருமைக்கும் நாம் உரியவர்களாவோம். ஆக, முதல் அமைச்சர் அவர் களின் தீர்மானத்தை எங்கள் கட்சி சார்பாக, எங்கள் சார்பாக, தமிழ் மக்கள் சார்பாக நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று கூறிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை நான் ஆதரிக் கிறேன். அப்படி ஆதரிக்கும் முறையில் எங்கள் திருத்தத்தை வற்புறுத் தப் போவதில்லை என்று முன்பே சொல்லிவிட்டோம். இருந்தபோதி லும் ஒரு விஷயத்தை பின்னால் யோசனை செய்து, சந்தர்ப்பம் ஏற்படும் போது முடிவு செய்து கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். தமிழ் நாடு போன்ற பல்வேறு மாநிலங்கள் நம் தேசத்தில் இருக்கின்றன. நாடு என்று குறிப்பிடுவதற்கு பல்வேறு மரபுகள் இருக்கின்றன. புராண இதிகாச காலத்திலிருந்து தற்போதைய சரித்திர காலம் வரையில் நாடு என்ற சொல்லை உபயோகப்படுத்திக் கொண்டு வருகிறோம். அந்தக் காலத் தில்—சேர நாடு, சோழ நாடு, கொங்கு நாடு என்று கூறி வந்த காலத்தில் —இந்திய நாடு என்று ஒன்று கிடையாது. இந்திய நாடு என்று ஒன்று ஏற்பட்டதற்குப் பின்னால் அதற்கேற்ற முறையில் அந்தந்தப் பகுதிகளைக் குறிப்பிட்டுக் கொள்வதுதான் சீராக இருக்கும். வருங்காலத்தில் முதல் அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் நாடு என்பதற்குப் பதிலாக— தமிழகம் என்ற வார்த்தை இருக்கிறது—அதை உபயோகப்படுத்திக்கொள் ளும் சாத்தியக் கூறுகள் பற்றி எண்ணிப் பார்க்கவேண்டும் என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். இன்று அதை வற்புறுத்துவதற்காக இதைச் சொல்லவில்லை. தமிழில் எப்படி ஒரு வார்த்தையை உச்சரிக்கவேண்டும் என்று நாம் ஆலோசிக்கவேண்டுமே தவிர, ஆங்கிலேயர்கள் எப்படி அதை உச்சரிப்பார்கள், இந்திக்காரர்கள் எப்படி அதை உச்சரிப்பார்கள, அது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்குமே என்று நாம் கவலைப்பட வேண்டிய தில்லை. அவர்களுக்கு அதற்கு எழுத்து இருந்தால் அதை உச்சரிக்கட்டும். அப்படி அதற்கு எழுத்து இல்லாவிட்டால் விட்டு விட்டுப் போகட்டும். நம் மிடம் "ழ" என்ற எழுத்து இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில் இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளில் இந்த "ழ" என்ற எழுத்து கிடையாது. அதற்காக "ழ" வின் பெருமையை நாம் விட்டுக்கொடுக்க முடியாது. "L" என்பதற்குப் பதிலாக "ZH" என்று போடவேண்டுமென்று சொன்னார்கள். இப்போது இந்த ஒரு பெரிய மாறுதல் வந்திருக்கிறது. எங்கள் திருத்தத்தை நாங்கள் வற்புறுத்தப்போவதில்லை. பெயரைப் பொறுத்தமட்டில் பிறத்தியார் உச்சரிக்க முடியவில்லையே என்பதற்காக நாம் நம் உச்சரிப்பை மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை என்று கூறி, சந்தர்ப்பம் வரும்போது அதை மாற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத் தீர்மானத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

***திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை என் கட்சி சார்பில் ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாடு என்ற பெயர் வைக்கவேண்டுமென்று தமிழ் மக்களிடையே நீண்ட பல வருடங்களாக இருந்து வந்த ஒரு பெரிய கோரிக்கை இன்றைய தினம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இது மகிழ்ச்சிக் குரிய ஒரு விஷயமாகும். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இம்மாதிரி யான ஒரு பெயர் மாற்றம் கொண்டு வந்து சட்டபூர்வமாக ஆக்குவதற்கு





ஒரு தீர்மானமும் நிறைவேற்றி அனுப்புவது குறித்து, தமிழக மக்கள் இந்த சர்க்காரிடம் மிகவும் விசுவாசமாக இருப்பார்கள். பல வருடங் களுக்கு முன்னலேயே அரசியல் கட்சிகள் தோன்றிய காலத்திலிருந்தே, பல மொழி பேசுவோர்கள் ஒன்றுக இருந்தபோது கூட, தமிழ்நாடு காங் கிரஸ் கட்சி, தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு கமிட்டிகள் என்ற பெயர்களால் கட்சிகள் செயல்பட்டுக்கொண்டு வந்தன. நாடு விடுதலை பெற்ற பிறகு, காங்கிரஸ் கட்சி பதவியேற்ற பிறகு இம்மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று இம்மன்றத்தில் பல தடவை கள் தீர்மானங்கள் கொண்டு வந்தபோது அத்தீர்மானங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்படாமல் காங்கிரஸ்காரர்கள் அவற்றை எதிர்த்து முறியடித்திருக்கிறார்கள். ஆகவே, இன்றைய தினம் தமிழ் மக்கள் நல்லதொரு வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாடு என்று பெயரிடு வதை மக்கள் சார்பிலும், எங்கள் கட்சி சார்பிலும் வரவேற்று என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானம் முன்னலேயே நிறைவேற்றப்பட்டுவிட்டது. இப்போது சட்ட பூர்வமாக ஆக்குவதற்காக பழையபடி பார்லிமெண்டில் கொண்டு வந்ததைக் கொண்டுவந்திருக்கிறார்கள். கலியாணம் எல்லாம் முடிந்து, சடங்குகளெல்லாம் முடிந்த பின்னர், கடைசியில் ஒரு சடங்கு நடத்துவார்கள். அதுமாதிரித்தான் இந்த சமாசாரமே தவிர, இதில் விசேஷமாக இன்று ஒன்றும் இல்லை. ஆனால், தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்ற சரித்திரம் சென்ற பதினைந்து வருட காலமாக இருந்து வருகிறது. முக்கியமாக இன்றைய ஆளும் கட்சி யினர் ஆரம்பித்த கோஷம்தான் அது. அது 1961 பெப்ருவரி மாதம் சட்டசபையில் வந்தது. காங்கிரஸ்காரர்கள் எவ்வளவோ பெருந்தன்மை படைத்தவர்களாக இருந்தாலும், இந்த விஷயத்தில் narrow-minded ஆகத்தான் இருந்தார்கள். அது கொஞ்சம் வேதனை தரக்கூடியதுதான். விசால ஆந்திரா வேண்டுமென்று ஆந்திரர்கள் கேட்டபோது கட்சிப் பாகுபாடு இன்றி எல்லோரும் ஏகோபித்து இருந்தார்கள், காங்கிரஸ் கட்சி உட்பட நாட்டுக்குப் பொதுவானது, அதனால் நன்மை இருக்கிறது என்று எல்லோரும் அதை ஆதரித்தார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் காங்கிரஸ் பெரியோர்கள் அதுபற்றிய தீர்மானம் சட்டசபையில் வந்தபோது கேலியும் கிண்டலுமாகப் பேசினார்கள். நான் 1961-ல் சட்டசபையில் இருந்திருக்கிறேன். அன்று எதிர்க்கட்சியிலிருந்த இன்றைய முதல் அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் பெரிய மனது வைத்து இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்ட காலத்தில், அவர்கள் எள்ளிநகையாடினர். இன்று பாருங்கள், இந்தியப் பார்லிமெண்டிலே நம் சட்டசபைத் தீர்மானத்தை அப்படியே சட்ட மாக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இது தமிழக மக்களுக்கு பெரியதொரு வெற்றி, முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழக மந்திரி சபைக்கு ஒரு வெற்றி என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன. (ஆரவாரம்) காக்காய் பிடிப்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. (ஆரவாரம்) சில விஷயங்களை நம்மை அறியாமலேயே சில நேரங்களில் சொல்ல வேண்டிவருகிறது. தமிழ்நாடு என்று பெயர் வைத்து விட்டால் ஒவ்வொரு வீட்டிலும் அரிசியும், இங்கிலீஷ் வெஜிட்டபிள்சும் வந்து விழுமா, லாபம் கிடைத்துவிடுமா, பொருளாதார உயர்வு கிடைத்துவிடுமா என்றால், அது இல்லை. இருந்தாலும், தமிழ் மொழி என்று சொல்லும் போது ஒரு இருதயபூர்வமான மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதற்கு இணையே கிடையாது. அந்த மகிழ்ச்சியை இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இம்மாதிரி ஒரு தீர்மானத்தை 1961-ல் சட்ட சபையில் கொணடு வந்தபோது கேலி கிண்டல் செய்தார்கள். 1964-ல் சட்டசபையில் திரு. அரங்கண்ணல் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்தபோது, அன்றிருந்த காங்கிரஸ் பெரியோர்கள், "தமிழ்நாடு சட்டசபை என்று

சொல்கிறோமே, தமிழை ஆட்சி மொழியாக வைத்திருக்கிறோமே, தமிழைப் போதனமொழியாகக் கொண்டு வந்திருக்கிறோமே, பின் எதற்கப்பா சட்ட சபையில் இதையெல்லாம் செய்யவேண்டும்?" என்றார்கள். மெட்றாஸ் என்றால்தான் உலகமெல்லாம் மரியாதை என்று என்னென்னவோ பேசினார்கள். இன்றிருக்கும் கல்வி அமைச்சர் அவர்கள் அன்று சொன்னார்கள், பம்பாய் என்பதற்கு எவ்வளவு பெரிய பெயர் இருக்கிறது, இருந்தபோதிலும் மகாராஷ்டிரர்கள் அதை வேண்டாம் என்று ஒதுக்கி வைத்துவிட்டு, மகாராஷ்டிரா என்று பெயர் வைக்கச் சம்மதித்திருக்கிறார்கள், நீங்கள் என் ஐயா இப்படிச் சொல்கிறீர்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். அது ஒன்றும் அவர்கள் காதில் ஏறவில்லை. இன்று நமது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறார்கள். அப்படியாவது நல்ல காரியத்தில் இனறு ஒத்துக்கொண்டிருப்பது குறித்து மிக்க சந்தோஷம். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பெரிய கம்பர், கோவைக் கம்பர். அதனால் அவர்கள் தமிழ்நாடு என்ற வார்த்தையே இலக்கியப் பெயர் என்றும், வெள்ளைக்காரன் "மெட்றாஸ்" என்று சொல்லிக் குழப்பிவிட்டுப் போய்விட்டான் என்றும், இலக்கியத்தில் ஆர்வமுள்ளவர்கள் படித்தது என்ற முறையில் இந்த மசோதாவை ரொம்பவும் நல்ல விதமாக வரவேற்றிருக்கிறார்கள். "தேன் வந்து பாயுது காதினிலே" என்று சொன்னார்கள். இது எல்லோரும் சொன்னதுதான். இருந்தாலும் காங்கிரஸ் கட்சியினும் இந்தத் தீர்மானத்தை ஏகோபித்த முறையில் வரவேற்றிருக்கிறார்கள். இந்தச் சட்டத்திற்கு ஒரு சின்னத் திருத்தம் சொல்கிறார்கள். அதை நல்ல விதமாகச் சொல்லி ஏகோபித்த முறையில் அனுப்ப வேண்டும். "நாடு" என்று தீர்மானம் இருக்க வேண்டும் என்று நமது முதலமைச்சரவர்கள் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். மற்ற இராஜ்யங்களிலும் "உ"வைச் சேர்த்துக் கொள்ளவில்லை. "ஆந்திரப் பிரதேசு" என்று இல்லை. "உ"-இல்லாமல் இருந்தாலே நன்றாக இருக்கும். இதெல்லாம் சில்லறை விஷயம் என்று ஜாஸ்தி விவாதம் பண்ண முடியாத நிலையில் விட்டுவிடுகிறேன்.

இந்தத் தீர்மானம், பார்லிமெண்டில் வரக்கூடிய சட்டம், தமிழ் மக்களின் மகத்தான வெற்றியாகும். அதற்கு வழிகோலியது டி.எம்.கே. தான் என்பதை யாராலும் மறுக்க முடியாது. (குறுக்கீடு) இராஜாஜி சில விஷயங்களைச் சொல்லிக்கொண்டிருப்பார். மகான் இராஜாஜி அவர்கள், "மதருஸ் மனதே" என்று ஸ்ரீ பிரகாசம் அவர்களும், மற்றவர்களும் சொன்ன நேரத்தில், சென்னைப்பட்டணம் தமிழருக்குத்தான் உரியது என்று வற்புறுத்திப் பெற்றுத் தந்தார். இன்றைய தினம் பார்லிமெண்டில் இந்தச் சட்டம் வருகிறது என்றால் அது தமிழ்நாட்டு மக்களின் வெற்றி, தமிழ் மொழியின் வெற்றியாகும். ஆகவே, "தமிழா! நீ தலை நிமிர்ந்து நில்லடா" என்று நாம் எல்லோரும் மேடையிலே பேசுவது மாதிரி, தமிழன் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய நிலையைத் தேடித்தந்த பொன்னான சட்டம் என்று சொல்லி, எல்லோரும் ஏகோபித்து வரவேற்போம் என்பதைச் சொல்லிக்கொண்டு வணக்கத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தை எனது கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக வரவேற்கிறேன். பாரதி கூறிய "தேன் வந்து பாயுது" என்ற "தமிழ்நாடு" என்ற பெயருக்காக 21 ஆண்டுகள் தமிழக மக்கள் இயக்கம் நடத்த வேண்டியிருந்தது என்பதை இந்தச் சிறு வார்த்தையோடு இணைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். நம் அருமைக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் "கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்" என்று சொன்னார்கள். போரிலும் கெட்ட போர் என்றும், நல்ல போர் என்றும் உண்டா என்று கேட்கலாம். தமிழக மக்கள் 21 ஆண்டுகளாக "தமிழ்நாடு" என்று பெயர் வைக்க வேண்டுமென்று நடத்திய போராட்டம் நல்ல போராட்டம். அந்தப் போராட்டத்திற்கு இடையூறாகக் கெட்ட போராட்டம் நடத்தியவர்கள் தோல்வியுற்றதைப் பார்க்



கிறோம். இதிலே மிக முக்கியமாகக் கவனிக்கவேண்டியது, தேசியம், தேசிய ஒருமைப்பாடு என்று கூறி, மக்களுடைய நல உரிமைகளைப் புறக்கணிப்பது எவ்வளவு சரியல்லாதது என்பதை இன்று இங்கே விவாதிக்கும் இந்த விவாதமே எடுத்துக் காட்டுவதாகும். நம்முடைய நாடாளுமன்றமே இந்தச் சபைக்கு அனுப்பி, உங்கள் நாட்டிற்கு என்ன நாமம் சூட்ட வேண்டுமென்று சொல்லுங்கள், என்று கேட்கிறது. அதுவே நமக்கும் தமிழக மக்களுக்கும் கிடைக்கும் பெரும் வெற்றி என்று நானும், என் கட்சியும் கருதுகிறோம். வருகிற காலங்களிலேனும் மக்களின் சரியான அபிப்பிராயங்களை தமிழகத்திலேயுள்ள காங்கிரஸ் நண்பர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறேன். 21 ஆண்டுகளுக்குப் பிறகு வெற்றி பெற்றிருக்கும்பொழுது, இன்னும் பல வெற்றிகளைத் தமிழக மக்கள் காண வேண்டியிருக்கிறது. இன்னும் ஆங்கில மோகம் கொண்ட சில தமிழர்களின் போக்கையும் சுயநல, சுரண்டல் எண்ணம் கொண்ட சில தமிழர்களின் போக்கையும் எதிர்த்துத் தமிழ் மக்கள் வெற்றி கொள்ள வேண்டியுள்ளது. அந்த வெற்றிகளெல்லாம் கிடைக்க வேண்டுமென்று கூறி, முதலமைச்சரவர்களுடைய திருத்தத்தை மனப்பூர்வமாக வரவேற்று அமர்கிறேன்.

*திரு. ம. பொ. சிவஞானம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தையும் அதற்கான திருத்தத்தையும் நான் வரவேற்று, என்னுடைய திருத்தத்தையொட்டி சில கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன். 13 மாதங்களுக்கு முன்பு இந்தப் பேரவையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றினோம், "தமிழ் நாடு" என்று பெயர் மாற்ற வேண்டுமென்று. அந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, அதற்காக ஒரு மசோதாவைத் தயாரித்து நமக்கு அனுப்பியிருப்பது ஏதேச்சாதிகாரத்திற்கு எதிராக ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். காங்கிரஸாட்சி மீது தி.மு.க. ஆட்சி அடைந்த வெற்றி என்று வருணித்தால், அது பிழையாகாது.

எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசும்பொழுது பாரதியாரின் பாடலில் உள்ள ஒரு கருத்தைச் சொன்னார்கள். கடந்த காலத்தில் நடந்தவைகளை மறந்துவிட வேண்டுமென்றுதான் நானும் முயற்சித்தேன். ஆனால், அவரே நினைப்பூட்டியதால் இப்பொழுது நினைக்க வேண்டியிருக்கிறது. அதை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மறந்திருக்கலாம். 1961-ஆம் ஆண்டிலே ஆயிரம் ஆயிரம் முறை பாரதியாரின் பாடலைப் பாடி, அதனால் எச்சு வாங்கியவன் நான். அப்பொழுது அதற்குப் பலன் இல்லை. இன்றேனும், பாரதியார் 40 ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன அந்த வாக்கியத்திற்கு வெற்றி கிடைத்திருக்கிறது. அதற்கும் தி.மு.க. ஆட்சி வரவேண்டியிருந்தது.

இதிலே நான் கொடுத்துள்ள இரண்டு திருத்தங்களில் ஒன்று "உ" கரம் பற்றியது; மற்றொன்று, "தமிழ்" என்பதிலுள்ள "ழ" கரம் பற்றியது. "நாடு" என்று இருக்க வேண்டுமென்று கூறினேன். முதலமைச்சரவர்கள் "நாடு" என்பதை ஏற்றுக்கொண்டார். இதிலிருந்து "தமிழ்"— "நாட்" (Not) என்பது இல்லை; "தமிழ்" உண்டு-என்று பெருமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, ஒரு மொழியினர் இன்னொரு மொழியை ஏற்றுக்கொள்ளும்போது அதன் இலக்கணங்களைத திருத்த வேண்டுமென்பது நம்பிக்கை. மலேசியா, நம்முடைய நாடு விடுதலை பெற்றதற்குப் பின்னால் விடுதலை பெற்ற நாடு. 6-ஆம் வகுப்பு பாடத்திற்குமேல் பாட புத்தகமே இல்லாதது மலாய் மொழி. அவர்கள்கூட, ரோமன் எழுத்துக்களை எடுத்துக் கொள்ளும்பொழுது "Police" என்பதற்கு "Polis" என்று போட்டுக் கொள்ளுகிறார்கள். இப்படி நூறு நூறு சொற்களை மாற்றிக்கொண்டுள்ளனர். ஆகவே, "நாடு" என்று சொல்ல வேண்டுமென்ற திருத்தத்தை ஏற்றுக்கொண்டு விட்டதால், அந்த என்னுடைய திருத்தத்தை வலியுறுத்த அவசியமில்லாமல் இருக்கிறது.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1968 ஆகஸ்ட் 17

இன்னொன்று, "தமிழ்" என்பதிலுள்ள "ழ"கரம் பற்றியது. நாமெல்லாம ஒப்புக்கொள்ளுகிறோம், உணர்கிறோம், தமிழுக்குள்ள சிறப்பு அந்த "ழ"கரம் என்பதை. "தமிழ்" என்பது ஒரு நாட்டின் பெயர். ஒரு இனத்தின் பெயர். தமிழ்நாடு என்பது ஒரு தாலூக்கா, ஒரு ஜில்லா என்று எண்ணுபவர்களும் இருக்கிறார்கள். தமிழ் என்பது தன்னுடைய கிளை மொழியோ என்று எண்ணுபவர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்; தமிழர், 50 கோடி பாரத சந்தைக கூட்டத்திலே சேர்ந்தவர்கள் என்று எண்ணுகிறார்கள். அப்படி இல்லாமல், தமிழ்நாடு சுய நிர்ணயம் பெறவும், சுய ஆட்சி பெறவும் தகுதி படைத்த தனிப் பகுதி என்ற அடிப்படையில் இந்தப் பெயர் மாற்றத்தை அளிக்க—இந்தச் சிறப்பு "ழ"கரம் நம்முடைய பெயரில் இருக்க—வேண்டுமென்று நான் எண்ணுகிறேன். ஆங்கிலத்தினுடைய ஒலியும், எழுத்து முறையும் "ழ"வுக்குக் கை கொடுக்கவில்லை என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். அதனால் zh என்று நாம் போட்டோம். "ழ" வுக்கு zh போட்டால் 'தமிஸ்' என்று ஆகுமேயொழிய, தமிழ் என்று ஆகாது என்றார்கள். எப்படியானாலும் ஆங்கிலத்திலும் "ழ"கரம் போட வேண்டும். "ழ"கரம் "ள"கரம் ஆகுமே தவிர, "ல"கரம் ஆகாது. "பழம்", "பளம்" ஆகும். "பவழம்", "பவளம்" ஆகும். "பவளம்", "பவழம்" ஆகும். இங்கே "தமில்" என்று "ல"கரம் வருகிறது. ஒருவேளை ஆங்கிலம் சிறப்பு "ழ" கரம் இல்லாத மொழியாதலால் zh வேண்டாம் எனலாம். ஆனால் TA என்று என் வரவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. T 'AMIZH —தமிழ் என்று சொல்லலாம். THAMIZH என்றுல் பிசகு ஒன்றும் ஏற்படவில்லை. இப்பொழுது கூட முதலமைச்சர் கருணைகொண்டு இதனை ஏற்பதாகச் சொல்லலாம் என்று எண்ணுகிறேன். தமிழ் என்ற சொல் காப்பாற்றப்படுவதற்கு இன்னும் பல காலம் காத்திருக்க வேண்டுமானால், காத்திருக்கத் தயார்.

திரு. நல்லசிவம் அவர்கள் "நாடு" என்பது தனி நாடு மனப்பான்மையை அளிக்கிறது என்று சொன்னார். "தமிழகம்" என்று பெயரிடலாம் என்றார். நாடு என்பதற்கும் அகம் என்பதற்கும் ஒரே பொருள் தான். அகம் என்கின்ற வார்த்தை, ஒரு வீடு—இது சொந்தமானது என்பதைத் தான் குறிக்கும். அவருடைய கொள்கையை—தமிழகம் என்ற கொள்கையை நான் மறுக்கவில்லை; ஏற்கிறேன். ஆனால், பொருள் சொன்னதைத்தான் விளக்க விரும்புகிறேன். நாடு என்பதனை, State—ராஜ்யம் என்ற பொருளில்தான் நாம் இப்பொழுது உபயோகிக்கிறோம். சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பவை சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள் ராஜ்யங்கள் என்ற பொருளில்—வழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன. "சிற்றூரும் நாடு ஆகும் அறுவா நாடு" என்பது சான்று. பன்னிரு நாடு, இந்தத் தொண்டை மண்டலம்; ஆக, நாடு என்பது இ.பொழுதும் State எனபது—தமிழ் State, ஆந்திர State என்று சொல்லப்பட்டு வருவதால் பிரிவினை உணர்ச்சி வராது, வந்தாலும் முதலமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்வார், கவலைப்பட வேண்டாமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாடு என்பதை நாம் எடுத்து விட்டால்தான் பிரிவினை உணர்ச்சிக்கு இடம் கொடுப்பவர்கள் ஆவோம். 'ராஷ்டிரம்' என்றால், நாடு என்று தான் பொருள். ராஷ்டிரம், தேசம் என்றுதான் பொருள் தரும. ராஷ்டிரபதி என ஜனாதிபதியைச் சொல்லுகிறார்கள். காங்கிரஸ் தலைவரை ராஷ்டிரபதி என்றும் சொல்வது உண்டு. "ராஷ்டிர ஜண்டே" என்று தேசியக் கொடியைச் சொல்வது உணடு. இந்தத் தேசத்திற்கு உட்பட்ட 14 ராஜ்யங்களில் ஒன்று, மஹாராஷ்டிரம்—ராஷ்டிரத்தை விட பெரிய ராஷ்டிரம் என்று இருக்கிறது. அந்தப் பெயர் திருத்தப்படும் நேரத்தில்தான் நாடு என்பதையும் நாம் யோசிக்க வேண்டும்.

இந்தத் தீர்மானத்தில், முதல்வர் அவர்கள் நாடு என்ற "உ" காரத்தை ஏற்றுக்கொண்டதால், ஆங்கில வார்த்தை ஒன்றும் கெட்டுப்போகாது. தமிழ் என்பதை ஒலிக்க zh வேண்டுமென்கிறேன். அமெரிக்காவுக்கு ஓர் ஆங்கிலம் இருக்கிறது. பிரிட்டனுக்கு ஓர் ஆங்கிலம் இருக்கிறது. இரண்டு ஆங்கிலத்



1968 ஆகஸ்ட் 17] [திரு. ம. பொ. சிவஞானம்]

தோடு இந்தியர்களுக்காக நாமும் ஒரு வேற்றுமையைக் காட்டி zh
போட்டால ஒன்றும் பிழை இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.
ஆனால், எல்லோரும் ஒருமித்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற
வேண்டும். அதன் காரணமாக என்னுடைய திருத்தத்தை வற்புறுத்
தாமல், முதல்வரது தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே,
கனம் உறுப்பினர்கள் தங்களுடைய திருத்தங்களுக்குப் பல நல்ல கார
ணங்கள் எடுத்துக் காட்டினார்கள் என்றாலும், இன்றிருக்கிற நிலையில் அரசு
கொண்டு வந்திருக்கிற திருத்தப்பட்ட இந்தத் தீர்மானத்தை அவர்கள்
பெருமனதோடு ஏற்றுக்கொண்டதற்கு முதலிலே அவர்களுக்கு நான்
நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன்னாலே இதைப்பற்றி
இந்த அ.வையிலே மிக விரிவாகவும் தெளிவாகவும் பேசியிருப்பதாலே நான்
இதை முன்மொழிந்தபொழுது எந்தவிதமான உரையையும் ஆற்ற
வில்லை. இப்பொழுதும் விரிவாக எதுவும் பேசுவதாக இல்லை. தமிழ்
நாடு என்பதற்கு நாம் ஆதாரங்கள் தேடி, சான்றுகள் காட்டி வாதாடக்
கூடிய கட்டம் ஒரு காலத்திலே இருக்கத்தான் செய்தது. ஆனால், இன்
றையதினம் அந்தப் பழைய நிலைமைகளை எல்லாம் நம் நினைவிலே கொண்டு
வராமல் இந்த அவையிலே உள்ள எல்லோரும் கூடி இதை ஏற்றுக்
கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவிப்பதில் நாம் மிகுந்த பெருமை
பட்டுக் கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் இம்மாநிலத்
திற்கு தமிழ்நாடு என்ற பெயர் வேண்டுமென்று விருப்பம் தெரிவிக்கப்
பட்ட நேரத்தில் மறுக்கப்பட்ட சம்பவங்களைப் பற்றி மாண்புமிகு திரு.
ஆதிமூலம் அவர்கள் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். கடந்த காலத்திலே
ஏற்பட்டு விட்ட நிலைமைகளை எல்லாம் கூட இந்த மகிழ்ச்சிகரமான நேரத்
தில் நாம் மறந்துவிட வேண்டும். இப்பொழுது அனைவரும் ஒன்றுபட்டு
இந்த அவை முழுவதும் தமிழ்நாட்டின் சார்பில் இந்த மசோதாவிலே
ஒன்றுபட்டு இருக்கிறது என்பதை இந்தியப் பேரரசுக்கு உணர்த்தக்கூடிய
வகையில் அனைவரும் கூடி இதனை வரவேற்றிருக்கிறார்கள் என்பதில்
நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

பழைய கால சம்பவங்களை எல்லாம் நினைவுப் படுத்திக்கொள்ள
வேண்டாமென்று நான் கூறிக்கொள்கின்ற நேரத்தில் ஒரே ஒரு சம்ப
வத்தை மட்டும், நெஞ்சுருக்கக் கூடிய சம்பவத்தை மட்டும், தமிழ்நாட்டு
வரலாற்றில் குறிப்பிடத்தக்க சம்பவத்தை மட்டும் நினைவுப் படுத்திக்
கொள்வது தேவை என்று கருதுகிறேன். தமிழ்நாடு என்ற இந்தப் பெயர்
நமக்கு கிடைக்க வேண்டுமென்பதற்காக விருதுநகரைச் சார்ந்த சங்கரலிங்க
நாடார் என்ற முதியவர் பல நாட்கள் உண்ணாவிரதம் இருந்து, அணு
அணுவாக தம்முடைய உயிரைச் சிதைத்துக் கொண்டு அவர்கள் இறந்து
பட்டார்கள். அவர்கள் இறந்துபடுவதற்கு ஒரு 15 நாட்களுக்கு முன்ன
தாக நான் அவரிடத்திலே போய்ப் பார்த்து பேசுகின்ற வாய்ப்பு கிடைத்த
பொழுது, நாங்கள் தமிழ்நாடு பெயர் மாற்றத்தைப் பார்த்துக் கொள்
கிறோம், நீங்கள் உண்ணாவிரதத்தை விட்டு விடுங்கள் என்று சொன்ன
நேரத்தில், "உங்களுக்கு இந்தப் பெயர் மாற்றத்தைக் கொண்டு வரத்தக்க
அரசியல் வலிவு இல்லை; ஆகையால் நீங்கள் என்னைத் தடுக்காதீர்கள்.
நான் இறந்து விடுவதால் ஏதாவது நன்மை ஏற்படுமானால் நான்
இறந்துவிடுவதிலே நஷ்டம் எதுவும் இருக்காது" என்று அவர்கள் சொன்
னார்கள். அந்தப் பெரியவருடைய உறுதியால், அவர் தன்னைத்தானே
தியாகம் செய்துகொண்டு அந்த நாட்களிலே ஒரு பேரெழுச்சியை
ஏற்படுத்தினார். அவைகளை இந்த நேரத்திலே நினைவுபடுத்திக் கொள்வது
மிகவும் பொருத்தமானது என்ற காரணத்தினாலே அவருடைய நினை
விற்கு அஞ்சலி செலுத்தி, இந்த திருத்தத் தீர்மானத்தை நீங்கள்
ஏற்றுக்கொண்டதற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய நண்பர் ம.பொ.சி. அவர்களுக்கு தமிழ் என்ற அந்த
'ழ'கரம் இல்லாது போனதில் எவ்வளவு வருத்தம் உண்டோ அவ்வளவு
வருத்தம் எனக்கும் நிச்சயமாக உண்டு. ஆனால், அதை ஆங்கிலத்திலே

எழுதி சிலரிடத்திலே சொல்லச் சொல்லிக் கேட்டிருக்கிறேன். வெளி நாட்டவர்களிடத்திலே கேட்டிருக்கிறேன். யாராலும் அந்த 'ழ'கரம் என்பதற்கு ஆங்கிலச் சொற்கள் எதைப் போட்டாலும் அதை உச்சரிக்க முடியவில்லை— உச்சரிக்க வரவில்லை. உதாரணத்திற்காக கழகம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி வடக்கே உள்ள பாராளுமன்ற உறுப்பினர் கள், கஜகம் கஜகம் என்று தான் கடைசியிலே சொல்கிறார்களே தவிர, 'ழ' என்று அவர்களுக்கு வரவில்லை. அது மட்டுமல்லாமல், இந்தியப் பேரரசின் சார்பில் மிகப் பெரிய தலைவர்களிலே ஒருவர் என்னிடத்திலே, "நீங்கள் இந்த 'ழ'கரத்தைச் சேர்த்துவிடாதீர்கள். எங்களுக்கு இந்த உச்சரிப்பு வரவில்லை. அருள் கூர்ந்து அப்படியே விட்டுவிடுங்கள். தமிழ்நாடு என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் சொல்லுகிறபோது தமிழ் என்று சொல்லிககொள்ளுங்கள். 'ழ'வை நாங்கள் பேசப் பழகிக்கொள்ளுகிறோம். அதன் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று சொன்னார்கள். ஆகையினாலே அவர்களுடைய வசதிக் குறைவைக் கவனத்திலே வைத்துக் கொண்டு இந்த 'ழ' என்பதை ஆங்கிலத்திலே சரியான முறையிலே எழுத முடியவில்லை என்பதனாலே அப்படிப் போடப்பட்டிருக் கிறது. ம.பொ.சி. அவர்கள் எண்ணிப் பார்ப்பாரானால் நம்முடைய தமிழுக்குக் கூட அது பெரிய பெருமை என்று தெரியவரும். தமிழிலே உள்ள ஒரு எழுத்துக்கு வேறு பல மொழிகளில் எத்தனை எழுத்துக்கள் போட்டாலும் அந்த எழுத்தினுடைய ஒலியைப் பெற முடியாது. அது நம்முடைய தமிழ் மொழிக்குப் பெருமை என்பது நாமெல்லாம் எண்ணி எண்ணி மகிழத் தக்கதாகும். இந்த 'ழ'கரம் நம்மோடு இருப்பது மட்டுமல்லாமல் எந்த நாட்டினருக்கும் அது வரத்தக்க விதத்தில் தமிழர் கள் மற்றவர்களோடு பழகி வரவேண்டும். நான் சிலரிடத்திலே நாக்கை எப்படி யெல்லாம் மடிக்க வேண்டும், அதை தொட்டும் தொடாமலும் விட வேண்டுமென்பதை அவர்களுக்கு செய்துகூடக் காட்டி னேன். நான் செய்து காட்டியபோது அதைப் போல் செய்கிறார்கள். மறுபடியும் செய்யச் சொன்னால் 'ழ'கரம் வர மறுக்கிறது. இதை நாங்கள் எழுதுகின்ற பொழுது தமிழ்நாடு என்று தான் எழுத இருக் கிறோம்; தமிழ்நாடு என்றுதான் எழுதுகிறோம். ஆங்கிலத்திலே வரு கின்றபோது 'ழ'கரத்தைப் போட முடியாத காரணத்தினால் எனக்கும் ஓரளவு மனக் குறைதான் என்றாலும் இப்பொழுது நாம் முக்கியமாகக் கருத வேண்டியது—'சென்னை ராஜ்யம்' என்று அரசியல் சட்டத்திலே இருப்பதை 'தமிழ் நாடு' என்று மாற்றுகிறோம் என்பதில் நாம் ஒரு பெரிய வெற்றியைக் கண்டிருக்கிறோம் என்ற மன நிறைவை நாம் கொள்ள வேண்டுமென்பதை எடுத்துச் சொல்லிக்கொண்டு இதற்கு எல்லாத் தரப்பிலே இருந்தும் எல்லாக் கட்சிகளிடமிருந்தும் ஒருமித்த ஆதரவு கிடைத்ததற்கு அனைவருக்கும் நான் நன்றி கூறிக் கொண்டு இதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அத்தனை பேரையும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இப்போது திரு ம.பொ. சிவ ஞானம் அவர்களும், திரு செ. பாலசுப்பிரமணியன் அவர்களும், அவரவர் தந்துள்ள திருத்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறார்கள். அவர்களுடைய இரண்டு திருத்தத் தீர்மானங்களும் பேரவையின் அனுமதி யோடு திரும்பப் பெறப்படுகின்றன.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் திருத்தத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இப்பொழுது மூலத் தீர்மா னத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய திருத்தத்துடன் சேர்த்து பேரவையின் வாக்கெடுப்புக்கு விடுகிறேன்.



பேரவையின் முன்புள்ள கேள்வி —

* "குடியரசுத் தலைவர் அவர்கள், இந்திய அரசியலமைப்பின் 3-வது பிரிவின்படி, அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கும் 'சென்னை மாநில (பெயர் மாற்ற) மசோதா, 1968' என்ற தலைப்புள்ள நாடாளுமன்ற மசோதாவை, இந்தப் பேரவையினரின் கருத்துக்களை அறியும்பொருட்டு இப் பேரவைக்கு அனுப்பியுள்ளாராகையால்,

இந்த மசோதாவில் 'தமிழ் நாட்' என்ற சொற்கள் எங்கெங்கு வருகின்றனவோ அங்கெல்லாம் 'தமிழ் நாடு' என்ற சொற்களை அமைக்க பரிந்துரைத்து, இந்தத் திருத்தத்திற்கு உட்பட்டு மேற்படி மசோதாவில் கண்டுள்ள செயற் குறிப்புகளை இந்தப் பேரவை ஏற்றுக்கொள்வதாக தனது ஆன்ற கருத்தினை அறிவிக்கின்றது.

மற்றும், இம் மசோதா நாடாளுமன்றத்தில் இயன்ற விரைவில் அறிமுகம் ஆகி, சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும் என்றும் இந்தப் பேரவை விரும்புகின்றது."

மூலத் தீர்மானம், திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவுக்கு விடப் பட்டு, ஒருமனதாக, ஆரவாரத்திற்கிடையே, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. 19—8—1968 திங்கள்கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது. பி. ப. 1-30

## 7. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

+ 160. Notification issued with G.O. Ms. No. 2586, Public (Services-A), dated the 7th December 1967, in regard to an amendment to the Madras Public Service Commission Regulations, 1954, published at pages 759 to 768 of Part I of *the Fort St. George Gazette*, dated the 9th June 1954, as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

161. Notification issued with G.O. Ms. No. 924, Revenue, dated the 29th April 1968, in regard to the determination of land revenue in respect of all lands in Chinnakalrayanmalai inam estate in Attur taluk of Salem district. [Laid on the Table of the House under section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]

## B. Reports, Notifications and other papers.

+ 31. Speech of Hon. Thiru V. R. Nedunchezhiyan, Minister for Education and Industries, initiating the discussion in the Madras Legislature on the Annual Financial Statement for 1968–69 and the Supplementary Financial Statement for 1967–68 of the Madras State Electricity Board (English and Tamil).

* தீர்மானத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு 216-ம் பக்கத்தில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

+ 32. Statement showing the action taken on the suggestions made by the Members of the Madras Legislature during the discussions on the Annual Financial Statement of the Madras State Electricity Board for the year 1967–68 (English and Tamil).

@ 33. Annexure to the Madras Municipal Authorities (Term of Office and Election of Councillors) Amendment Bill, 1968.

+ Placed on the Table of the House on 16th Aug. 1968.

@ Despatched to Members on 14th Aug. 1968.



ANNEXURE I

[*Vide* foot-note on page 203]

SCHEDULE

## THE MADRAS STATE (ALTERATION OF NAME) BILL, 1968

A BILL TO ALTER THE NAME OF THE STATE OF MADRAS

BE it enacted by Parliament in the Nineteenth Year of the Republic of India as follows :—

*Short title and commencement*

1. (1) This Act may be called the Madras State (Alteration of Name) Act, 1968.

(2) It shall come into force on such date as the Central Government may, by notification in the Official Gazette, appoint.

*Definitions*

2. In this Act, unless the context otherwise requires,—

(*a*) " appointed day " means the date appointed under sub-section (2) of section 1 for the coming into force of this Act;

(*b*) " appropriate Government " means, as respects a law relating to a matter enumerated in List I in the Seventh Schedule to the Constitution, the Central Government, and as respects any other law, the State Government ;

(*c*) " law " includes any enactment, ordinance, regulation, order, bye-law, rule, scheme, notification or other instrument having the force of law in the whole or any part of the State of Madras.

*Alteration of name of State of Madras.*

3. As from the appointed day, the State of Madras shall be known as the State of Tamil Nad.

*Amendment of article 31-A, article 168 and article 290-A of the Constitution.*

4. In sub-clause (*a*) of clause (2) of article 31-A, in sub-clause (*a*) of clause (1) of Article 168 and in article 290-A of the Constitution for the word ' Madras ", the words " Tamil Nad " shall be substituted.

*Amendment of the First and Fourth Schedules to the Constitution.*

5. (1) In the First Schedule to the Constitution under the heading "I. THE STATES ", for the figure and word " 7. Madras ", the figure and words " 7. Tamil Nad" shall be substituted.

(2) In the Fourth Schedule to the Constitution, for the figure and word "8. Madras", the figure and words "8. Tamil Nad" shall be substituted.

*Power to adapt laws.*

6. (1) For the purpose of giving effect to the alteration of the name of the State of Madras by section 3, the appropriate Government may, before the expiration of one year from the appointed day, by order, make such adaptations and modifications of any law, whether by way of repeal or amendment as may be necessary or expedient, and thereupon every such law shall have effect subject to the adaptations and modifications so made.

(2) Nothing in sub-section (1) shall be deemed to prevent a competent legislature or other competent authority from repealing or amending any law adapted or modified by the appropriate Government under the said sub-section.

*Power to construe laws.*

7. Notwithstanding that no provision or insufficient provision has been made under section 6 for the adaptation of a law made before the appointed day, any court, tribunal or authority required or empowered to enforce such law may construe the law in such manner, without affecting the substance, as may be necessary or proper in regard to the matter before the court, tribunal or authority.

*Legal proceedings.*

8. Where immediately before the appointed day any legal proceedings are pending to which the State of Madras is a party, the State of Tamil Nad shall be deemed to be substituted for the State of Madras in those proceedings.

## ANNEXURE II.

[*Vide* foot-note on page 213.]

WHEREAS the President of India has, in accordance with article 3 of the Constitution of India, referred to this House, a Parliamentary Bill entitled "The Madras State (Alteration of Name) Bill, 1968" fully set out in the Schedule hereto, for expressing the views of this House thereon;

THIS HOUSE RECOMMENDS THAT for the words 'TAMIL NAD' wherever they occur in the said Bill, the words 'TAMIL NADU' shall be substituted, and subject to this modification this House declares its considered opinion that the proposals contained in the said Bill be and the same are hereby approved.

AND THIS HOUSE FURTHER DESIRES THAT the said Bill be introduced in Parliament and passed into law as expeditiously as possible.

## *தமிழக சட்டப் பேரவை.*

*திங்கட்கிழமை, 1968 ஆகஸ்ட் 19.*

---

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்,** புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### *1. நீத்தார் நினைவுக் குறிப்பு.*

*திரு. டி. வேலுச்சாமி, முன்னாள் உறுப்பினர்.*

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** *1957-ல் இருந்து 1959-வது ஆண்டு வரை ஆலங்குளம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. டி. வேலுச்சாமி அவர்கள் 10—8—1968 அன்று மறைந்துவிட்டதைக் குறித்து, இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.*

*அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து, ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.*

*(பேரவையில் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றார்கள்.)*

### *2. வினாக்கள்-விடைகள்*

***வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்***

*Repayment to Reserve Bank*

*21 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that there was a demand from the Reserve Bank of India in the first part of March 1967, for repayment of overdraft to the tune of Rs. 3 crores;

(*b*) whether it is a fact that a sum of Rs. 3 crores was received from the Central Government in February–March 1967; and

(*c*) if so, the date on which the said amount was received?

***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :*** *பொது நலனை முன்னிட்டு இவ் விவரங்களை வெளியிடுவது உகந்ததல்ல என அரசாங்கம் கருதுகிறது.*

THIRU K. VINAYAKAM : May I know what necessitated this kind of overdraft, Sir?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இது ஓவர்டிராப்ட் பற்றி பொதுவான கேள்வி அல்ல. குறிப்பிட்ட காலகட்டத்தைப் பற்றிய கேள்வி. ஆகவே, இதுபற்றித் தகவல் வெளியிடுவது பொது நலனுக்கு உகந்ததல்ல என்று சொன்னேன். பொதுவாக, ஓவர்டிராப்ட் ஏற்படுவது இரண்டு வகையில் ஏற்படலாம். ஒன்று வரவினத்திற்கு மேற்பட்டுச் செலவு செய்துவிட்டு ஓவர்டிராப்ட் வாங்குவதுண்டு. இந்த அரசு அந்த முறையில் பெற்றதில்லை. இரண்டாவது சில நேரங்களில் மத்திய அரசிடமிருந்து வர வேண்டிய பணம் வருவதற்கு குந்தகங்கள் ஏற்படுகிறபோது டெம்பரவரி ஓவர்டிராப்ட் என்ற முறையில் வாங்கப்படுவது.

DR. H. V. HANDE : Will the Hon. Chief Minister be pleased to state whether it is a fact that there was little credit with the Reserve Bank of India by the end of the last financial year and whether it is really a fact that a few cheques issued by the Government of Madras bounced back ? May I also know whether there are any overdraft facilities for the Government with the Reserve Bank to prevent such unfortunate situations? What is the credit of overdraft—the amount of overdraft—allowed for our Government with the Reserve Bank of India ? Will the Hon. Chief Minister be pleased to state these facts ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I have to reiterate that in public interest, such details cannot be given.

THIRU K. VINAYAKAM : May I know whether cheques issued by our State Government were dishonoured for want of funds with the Reserve Bank of India?

THE HON. THIRU C. N. ANNADURAI : If the hon. Member is in possession of the fact, he can pass it on to me.

*Pension to the disabled*

* 22 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is a proposal to give pension to all disabled persons in the State who could not work and earn their livelihood ; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

**திரு. டி. மார்டின் :** இன்றைய ஆளுங்கட்சியின் தேர்தல் அறிக்கையில் 6-வது பக்கத்தில் 26-வது பாராவில் உறுப்புக் குறைப் பாட்டால் உழைக்க முடியாமல் இருப்பவர்களுக்கும், உதவியற்ற விதவைகளுக்கும் அரசாங்கம் உதவிப் பணம்தர முயலுவது



என்றிருக்கிறது. இன்றைய ஆளும்கட்சி அதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கிற காரணத்தால், வருகிற ஆண்டிலிருந்தாவது அந்த உதவியைக் கொடுப்பதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** வருகிற ஆண்டிலிருந்து தர முடியும் என்ற உறுதி அளிக்காவிட்டாலும், வசதி ஏற்படுகிறபொழுது இந்த அரசு அதைக் கவனிக்கும் என்று அறிவிக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அரசியல் தியாகிகளுக்கு பென்ஷன் கொடுக்கப்படுகிறது. மத்திய சர்க்கார் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அதேபோல் அங்கஹீனர்களுக்கு அதாவது உழைக்க முடியாதவர்களுக்கு குறிப்பிட்ட அளவு பென்ஷனோ அல்லது வேறு பெயரிலோ உதவி செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்காரை வற்புறுத்தி வாங்குவதற்கு முயற்சியாவது செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** முன்னாலே கேட்ட கனம் உறுப்பினருக்குச் சொன்ன பதிலைத்தான் கனம் உறுப்பினருக்கும் சொல்ல வேண்டும். வசதிகள் ஏற்படுகிறபொழுது முறைப்படி அந்த விஷயம் கவனிக்கப்படும்.

THIRU R. PONNAPPA NADAR : May I know whether at least during the next financial year this pension to the disabled will be given by the Government ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I cannot give any assurance as to the time-limit. But, I can assure the Honourable House that the matter will be very favourably considered under favourable circumstances.

THIRU B. VENKATASWAMY : May I know whether there is any proposal to construct Orphan Houses in our State for the benefit of disabled persons?

THE HON. THIRU C. N. ANNADURAI : Usually, orphans are coupled with young people. This question is about destitute persons, disabled persons. Whether they are orphans or disabled persons, when the finances of the State permit, the suggestion will be considered.

**திரு. சோ. அழகர்சாமி :** ஐயா, முதியோர் பென்ஷன் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்கள் 60 வயது என்றிருப்பதை அங்கஹீனம் அடைந்தவர்களுக்கு மட்டும் 50 ஆகக் குறைக்க உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உறுப்பு இழந்தவர்களுக்கு உதவி செய்கின்ற திட்டம் மேற்கொள்ளப்படுகிறபோது இந்த யோசனை கவனத்தில் வைத்துக்கொண்டு ஆராயப்படும்.

திரு. இல. பலராமன் : ஏற்கெனவே சர்க்காரின் பென்ஷனைப் பெறுகின்றவர்களுக்குக் காலாகாலத்தில் உதவி கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா? காலதாமதம் ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தேவைப்படுகிற தகவல்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறபோது, பணம் கொடுப்பதிலும் தாமதம் ஏற்படுகிறது.

*Obscene dances*

*23 Q.—THIRU K. VINAYAKAM:

THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that two drama actors staged obscene dances in Tiruchirappalli on or about 23rd July 1967;

(*b*) if so, whether they were arrested for such offence; and

(*c*) whether any criminal case was registered against them?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) ஆம்
(இ) ஆம்.

(உ) ஆம், இ.பி.கோ. 294 (எ) பிரிவின்கீழ், அவர்கள் ஒவ்வொருவருக்கும் 25 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

THIRU K. VINAYAKAM: May I know what is the type of obscene dances performed by these actors? Were they seminude or complete nude? * * *

THE HON. THIRU C. N. ANNADURAI * * * As for the former portion of the question. I was forutnate enough not to witness these dances. Therefore, I do not know what the nature of those dances was.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியில் குற்றச்சாட்டுகள் இருக்கக்கூடாதென்று விதியிருக்கிறது. ஆகையால் திரு. விநாயகம் அவர்களது கேள்வியின் பிற்பகுதியைச் சட்டப் பேரவை நடவடிக்கையிலிருந்து நீக்கி விடுகிறேன்.

THIRU K. VINAYAKAM: I am asking for information. The Chair cannot bar me from seeking information from the Ministers. The Question-hour is meant for seeking information from the Cabinet. I do not want to make any insinuation.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி கேட்பதற்கு உரிமை இருக்கிறது. ஆனால், கேள்வியை முறையாகக் கேட்க வேண்டுமென்று விதி இருக்கிறது. கேள்விகளில் குற்றச்சாட்டுகள், அவதூறுகள் இருக்கக்கூடாதென்று விதி இருக்கிறது.

** Expunged as ordered by the Chair.





THIRU K. VINAYAKAM: Let me explain my position. I read in the Press this kind of authenticated news. I based my question only on such news. I have only sought information whether it is true and I have not made any ininuation or defamatory statement. When I ask for information, the Chair cannot shut me like this on the pretext that it contains insinuation. Where is the question of insinuation or talking below the dignity of the House or the dignity of any member of the Cabinet? I have simply sought information whether such and such thing is a fact. It is open to the Chief Minister to say 'yes' or 'no', That is all.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது குற்றச்சாட்டுதான். அதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

According to sub-rule (5) of rule 31, a question 'must not contain arguments, inferences, imputations, ironical expressions or defamatory statement.

என்று விதி இருக்கிறது. தங்களது கேள்வியில் இது இல்லை என்று சொல்லுகிறீர்களா?

THIRU K. VINAYAKAM: I have not made any insinuation. I have simply sought information.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி முறையாக இருக்க வேண்டும். எது வேண்டுமானாலும் கேட்கலாம், அதற்கு அமைச்சர்கள் பதில் சொல்லிவிடலாம் என்ற நடைமுறை இந்த அவையில் இல்லை. ஆகையால்தான் அந்தப் பகுதியை அவை நடவடிக்கையிலிருந்து நீக்கிவிடும்படி நான் உத்தரவிட்டேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே பெரிய ஓட்டல்களிலே இதுபோன்ற ஆபாச நடனங்கள் நடைபெறுவதாகச் சொல்லுகிறார்களே, அது இந்த அமைச்சரவைக்குத் தெரியுமா? தெரியுமென்றால், அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? இல்லையென்றால், இனியாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நல்லவேளையாக எனக்கு அத்தகைய அனுபவம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : இதுமாதிரி ஆபாச நடனங்கள் நடத்துவதில் ஒன்றும் தவறு இல்லை, சென்னை, கோவை போன்ற பெரிய நகரங்களில் இதுமாதிரி ஆபாச நடனங்கள் நடக்கின்றன என்று வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் அவர்கள் சொல்லியிருக்கிறார்களே, அது சம்பந்தமாக முதலமைச்சரவர்களுடைய கருத்து என்ன?

[1968 ஆகஸ்ட் 19

**மாண்புமிகு திரு. சி. என் அண்ணாதுரை :** வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் என்ன சொன்னார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் மத்திய அமைச்சர்களிலே ஒருவர், இந்தியா முழுவதிலும் நைட் க்ளப் வைத்தால் நிறைய வருமானம் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட கருத்தைக் கொண்டவர்களும் இருக்கிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இதுபோன்ற ஆபாச நடனம் ஆடுபவர்களில் சிலோன் லைலா என்ற பெயரெல்லாம் சொல்லுகிறார்கள். அனுபவம் இல்லையென்று சொல்லித் தப்பிக்க முடியாது. முதலமைச்சரும் பார்த்திருக்கலாம். ஓரிடத்தில் அதைக் கட்டுப்படுத்தி நடவடிக்கை எடுத்துவிட்டு, அதேபோன்ற நடனத்திற்கு இன்னோர் இடத்தில் அனுமதி கொடுக்கும் அளவுக்கு நிலைமை இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? குறிப்பாக, திருச்சியிலே தடைசெய்து, கோயம்புத்தூரிலே இதுபோன்ற நடனத்திற்கு அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் வந்தது. அப்படிப்பட்ட பாகுபாடு இருப்பதற்குக் காரணமென்ன?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** திருச்சியிலேகூட, முதலிலே அந்த நடனங்கள் நடத்தப்பட்டு வந்தன. அது குறித்து, "நாங்கள் ஆபாச நடனங்கள் ஆடப் போகிறோம்" என்று யாரும் அனுமதி கேட்பது இல்லை. நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, ஆபாச நடனங்களாக அது இருக்கிறது என்று புகார்கள் வந்ததன் பேரில், போலீசார் சென்று பார்த்து, ஆபாச நடனம் என்று தெரிந்து தடுத்திருக்கிறார்கள். கோவையிலும் அதுபோலத்தான். ஆபாச நடனம் என்று யாரும் அனுமதி கேட்பது இல்லை. "நாங்கள் நடனம் ஆடப் போகிறோம்" என்று கேட்கிறார்கள். அது ஆபாசமாகத் திரும்புகிறபோது தடுக்கப் படுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, சென்னையிலே 'நைன் ஜெம்ஸ்' என்ற நாடக அரங்கில், லைசென்ஸ் பெற்று, இந்த அரை நிர்வாண, முக்கால் நிர்வாண நடனங்கள் நடைபெறு கின்றனவே, சர்க்கார் அதற்கு அனுமதி அளித்திருக்கிறதா? சர்க்காருடைய அனுமதி பெற்ற பிறகு எந்த நிர்வாண நடனத்தை யாவது புகுத்தியிருந்தால், உடனடியாக நிறுத்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதுகுறித்து, கனம் உறுப்பினர் அவர்கள் முறையான தகவல் கொடுப்பார் களானால், போலீசை விட்டு, அப்படி நிர்வாண நடனம் நடக் கிறதா என்று பார்க்கும்படியாகச் சர்க்கார் உத்தரவிடும். கனம் உறுப்பினர் அவர்கள் அதைப் பார்த்ததாகச் சொல்லு கிறார்கள். அப்படிப்பட்ட இடத்திற்குப் போகாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன் (சிரிப்பு).



1968 ஆகஸ்ட் 19]

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Chief Minister whether this Government is in favour of opening night clubs?

THE HON. THIRU C. N. ANNADURAI : No. Sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** என்னுடைய தீர்ப்பில் கனம் உறுப்பினர் திரு. வினாயகம் அவர்களுடைய கேள்வியின் பிற்பகுதியைப் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் வெளியிட வேண்டாம் என்று சொன்னேன். அதேபோல், பத்திரிகைகளிலும் அதை வெளியிடாமலிருக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

THIRU K. VINAYAKAM : This is stifling democracy. On a point of order, Sir' You said that you did not want this to go into the proceedings of the House. But why are you dictating to the Press? The Press is at liberty to publish whatever happens on floor of the House. There must be a limit to this kind of curtailment.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையில் நடை பெறுகின்ற நிகழ்ச்சிகளை வெளியிடுவதற்குப் பத்திரிகைகளுக்கு முழு உரிமை இருக்கிறது. ஆனால், நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று தீர்ப்பளித்த பகுதியை மட்டும் தான் பத்திரிகைகளிலே வெளியிட வேண்டாம் என்று நான் சொல்லி யிருக்கிறேனே தவிர, மற்றப் பகுதிகளை அல்ல. ஆகையால், இது பத்திரிகை உரிமையைக் கட்டுப்படுத்துவதாக இருக்காது. அடுத்த வினா எண் 24.

THIRU K. VINAYAKAM : I want to put another supplementary question. Why are you hustling like this?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நாளொன்றுக்கு 10 கேள்விகளே வினாப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, நிறைய துணைக் கேள்விகளுக்கு வாய்ப்பு அளிக்கும்போது, 'விடையளிக்கப்பட வேண்டிய கேள்விகள் நிறைய இருக்கின்றனவே' என்று சொல்லு கிறீர்கள். இன்று இருபது கேள்விகள் வினாப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இப்பொழுதும், பத்து கேள்விகளை மட்டும் எடுத்துக் கொள்ளும்போது அனுமதிக்கப் பட்ட எண்ணிக்கையில் துணை வினாக்களை அனுமதிக்க வேண்டு மென்றால், அது எப்படி முடியும்? அதிக மூலக் கேள்விகளை எடுத்துக் கொண்டு, அதிகமான எண்ணிக்கையில் துணை வினாக்களையும் அனுமதிக்க வேண்டும் என்றால், மூலக் கேள்விகள் எல்லாவற்றுக்கும் விடையளிக்க வேண்டும் என்பது எப்படி முடியும் என்று தெரியவில்லை.

**திரு. கே. வினாயகம் :** வினா நேரத்தை ஒன்றரை மணி என்று வைத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா நேரம் ஒரு மணி என்று விதிகளிலே வகுக்கப்பட்டிருக்கிறது. விதிகளையொட்டித் தான் நடக்க வேண்டும். வினா நேரத்தை அதிகரிக்க வேண்டு மென்றால், விதிகளில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

THIRU K. VINAYAKAM : There is direction. I want to put one more supplementary question.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 23-ஆம் எண்ணுள்ள மூலக்கேள்விக்கு கடைசித் துணைக் கேள்வியை திரு. விநாயகம் அவர்கள் கேட்கலாம்.

**திரு. கே. விநாயகம் :** தாங்கள் கொஞ்சம் 'லிபரலாக இருக்க வேண்டும். You must be large-hearted and liberal.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். துணைக் கேள்வி அனுமதிப்பதா, இல்லையா என்று முடிவு செய்ய வேண்டியது பேரவைத் தலைவருக்குள்ள உரிமையாகும். துணைக் கேள்வியை அனுமதிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது ஒழுங்கு தானா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. கே. விநாயகம் :** எப்படிக் கேள்வி கேட்க வேண்டும் என்பதும், எப்படிச் சமாளிக்க வேண்டும் என்பதும் எங்களுக்குத் தெரியும். வேண்டுகோள்தானே விடுத்தோம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கனம் உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசிக் கொள்ளக் கூடாது. எதையும் என்னிடம் சொல்ல வேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** திருச்சியில் நடந்த ஆபாச நடனம் என்று சொல்லப்படுகிறதே அது சம்பந்தப்பட்ட குற்றவாளிகள்—அவர்கள் அரெஸ்ட் செய்யப்படுவதற்கு முன்பு—எத்தனை முறை அந்த நடனத்தை நடத்திக் காட்டினார்கள்? பிறகு எத்தனை முறை நடந்த பிறகு, அது ஆபாசம் என்று போலீசார் கண்டு பிடித்து நடவடிக்கை எடுத்திருந்தார்கள்? எத்தனை பேர்கள் அந்த நடனத்தைப் பார்த்தார்கள்? இதுபற்றி ஏதாவது விவரம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எத்தனை பேர் பார்த்தார்கள் என்பது திருச்சியிலே நடந்த நடனத்தின்போது உடன் இருந்து பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். நான் அப்படிப்பட்டவர்களில் ஒருவன் அல்ல. 'ஆபாச நடனம்' என்ற புகார் போலீசாருக்கு வந்தவுடன், அவர்கள் தகவல் அறிந்து, அதைத் தடுத்து இருக்கிறார்கள்.

### முன்னாள் அமைச்சர்கள் உபயோகித்த கார்கள்

*24 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

முன்னாள் அமைச்சர்கள் உபயோகித்த பெரிய கார்கள் இப்பொழுது எதற்காகப் பயன்படுகின்றன?





**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** முன்னாள் அமைச்சர்களால் பயனபடுத்தப்பட்டு வந்த பெரிய கார்களில் நல்ல நிலைமையில் உள்ளவை, தகைசான்றவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தருகையில் பயன்படுத்தப்படுகின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பெரிய கார்கள் எத்தனை இருக்கின்றன என்ற விவரம் கொடுக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பெரிய கார்கள் ஆறு இருக்கின்றன. அவைகளாவன—இரண்டு செவர்லே; ஒன்று செவர்லே இம்பாலா; ஒன்று டாட்ஜ்; ஒன்று ஓபல் காப்டான ஒன்று ஃபோர்டு ஸெபைர். இவைகளில் சில பழுதுபட்டிருக்கின்றன. சில பழுதுபட்டிருப்பது மட்டுமல்லாமல், சரிபடுத்தவே முடியாது என்ற நிலையில், விற்று விடலாமா என்ற நிலையிலும் இருக்கின்றன. மற்றவை இப்படிப்பட்ட உபயோகத்திற்கு இருக்கின்றன.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, சமீபத்திலே பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விபத்துக்குள்ளானதற்குக் காரணம், சிறிய காரில் பயணம் செய்ததனால் இருக்கக் கூடும். பெரிய கார்களை உபயோகித்து வந்தால், அத்தகைய விபத்துக்கள் தடுக்கப்படலாம். பயண நேரமும் மிச்சப்படும். மெயின்டினென்ஸ் செலவும் குறையும். ஆகவே, நெடுந்தூரம் பயணம் செய்யும்போது, பெரிய கார்களை அமைச்சர்கள் உபயோகப்படுத்த உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பெரிய கார்களில் போனால் விபத்துக் குறைவாக இருக்கும் என்ற ஒரு கருத்து இருக்கத்தான் செய்கிறது. ஆனால், பெரிய கார்களில் போயும் விபத்து ஏற்பட்ட சம்பவங்களும் இருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know the number of previous Ministers who used big cars?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஆறு பேர்கள் பெரிய கார்கள் வைத்திருந்தார்கள். ஒருவர் இருவர் சின்னக் கார்கள் அம்பாஸடர் கார்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள்.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, "தகைசான்றவர்கள் தமிழ்நாட்டுக்கு வருகை தருகையில் அந்தப் பெரிய கார்கள் பயன்படுத்தப்படுகின்றன" என்று கூறினார்கள். தகைசான்றவர்கள் அடிக்கடி இங்கு வருவதில்லை. ஒருசில நேரங்களில்தான் வருகிறார்கள். மற்ற நேரங்களில் இந்தக் கார்களெல்லாம் 'ஐடில்' ஆக ஷெட்டில் நிற்பதைத் தவிர்த்து, அவற்றை வெளிநாடுகளிலிருந்து சென்னைக்கு வருகின்றவர்கள் உபயோகிக்கக்கூடிய டாக்சிகளாக விடுவதற்கான செயல்முறையை இந்த அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்திற்குச் சொந்தமான பெரிய கார்களில் ஒன்று, சில மாதங்களுக்கு முன்பு உதகையில் விபத்துக்கு உள்ளாகியது. அது எந்தச் சூழ்நிலையில், யார் அதில் சென்றபோது விபத்து ஏற்பட்டது என்ற விவரத்தைச் சபைக்கு அறிவிக்கலாமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதற்கான விவரம் என்னிடம் இல்லை. ஆனால், 15—5—1967 அன்று செவர்லேட் இம்பாலா என்கிற கார் உதகையில் விபத்துக்குள்ளாகி, அது மிகவும் பழுதான நிலையில் இன்றையதினம் கோவையில் இருக்கின்றது. அதைப் பொது ஏலத்திற்குவிட வேண்டும் என்றும் அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

## Small Industries Corporation

* 25 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government proposes to appoint a full-time Managing Director for the Madras State Small Scale Industries Corporation Limited?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழக சிறு தொழில் கார்ப்பரேஷனுக்கு 4-2-1968 முதல் ஒரு முழு நேர நிர்வாக நெறியாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

DR. H. V. HANDE : Sir, will the Hon. Minister be pleased to state the number of units that are under this particular Corporation and also what is the substantial progress made by his Corporation in the matter of developing industries. Also, will he be pleased to place before this House details about this Corporation?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் அதிகத் தொடர்பு இல்லை. 1—12—1965-ல் 65 தொழில் யூனிட்டுகள் இந்தக் கார்ப்பொரேஷனின் கீழ்க்கொண்டு வரப்பட்டது. இந்தக் கார்ப்பொ செய்யப்பட்டிருக்கிறது. அதிகமான இடங்களைக் கொடுத்தால் நலமாக இருக்காதா என்பதை அரசாங்கம் யோசிக்குமா?

## செஞ்சி நகரத்திற்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

* 26 வினா.—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செஞ்சி நகரத்தில் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.



திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, செஞ்சி வட்டத்தில் செஞ்சி நகரத்தைச்சுற்றி முப்பது மைல் பரப்பளவில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றும் கிடையாது. செஞ்சி வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டமாக இருக்கிறது. ஆகவே, செஞ்சி நகரத்தில் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை நிறுவ அரசு ஏதேனும் உத்தேசித்திருக்கிறதா? அப்படி உத்தேசமில்லையானால், இனிமேலாவது ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை நிறுவ, வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் இப்பொழுதே 117 அரசினர் ஆசிரிய ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளும், தனியார் துறையில் 20 பயிற்சிப் பள்ளிகளும் இருக்கின்றன. தென்னார்க்காடு மாவட்டத்தில் அரசாங்கத் துறையில் ஏழு பயிற்சிப் பள்ளிகளும், தனியார் துறையில் நான்கு பயிற்சிப்பள்ளிகளும் ஆகச் சேர்ந்து மொத்தம் 11 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. மேலும் நமது மாநிலத்தில் ஆண்டுதோறும் பயிற்சிபெற்று வெளிவரும் ஆசிரியர்களுக்கே வேலை கொடுக்கக்கூடிய அளவுக்குப் பள்ளிகள் போதுமானதாக இல்லை. இதனால் ஆசிரியர் பயிற்சிபெற்று வெளிவருகின்றவர்களுக்கு வேலை கிடைக்காத சூழ்நிலை உருவாகலாம். இதே நிலையில் இருந்தாலும், பள்ளிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகைப்பட்டு விடுமோ என்ற ஐயப்பாடு இருந்து வருகிறது. ஆகவேதான் இந்நிலையில், புதிதாக எந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியையும் துவக்க முடியாத நிலையில் அரசு இருக்கிறது. மேலும் செஞ்சிக்குப் பக்கத்தில் திண்டிவனத்தில் தனியார் துறையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இருப்பதாலும் மேலும் புதிதாகத் துவக்க முடியாத நிலை இருந்து வருகிறது.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்துத் தேர்ச்சி பெற்று வருகின்ற ஆசிரியர்களின் மத்தியிலே வேலையில்லாத் திண்டாட்டம் நிலவி வருவதால், ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்கு, பயிற்சியையும், ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் ஸ்டைபண்டையும் நிறுத்தி, பயிற்சிப் பள்ளிகளை மூடி வைக்க அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பக்கத்துத் தொகுதி உறுப்பினர் புதிதாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளி வேண்டும் என்கிறார்; கனம் உறுப்பினர் அவர்கள் இப்பொழுது இயங்கி வரும் பயிற்சிப் பள்ளிகளையே மூடிவிட வேண்டும் என்கிறார். அரசு, புதிதாகப் பயிற்சிப் பள்ளிகளைத் துவக்குவதாகவும் இல்லை, மூடுவதாகவும் இல்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : தலைவர் அவர்களே, தனியார் துறையிலுள்ள பயிற்சிப் பள்ளிகளின் மானேஜர்கள், பள்ளிகளை ஒரு பிசினஸ் கன்சர்னாகவே எண்ணிக் கொண்டு, அதிக்கங்கள் செலுத்திக் கொண்டு வருவதால் ரொம்பவும் ஊழல்கள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. ஆகவே, தனியார் துறையிலுள்ள பயிற்சிப் பள்ளிகளை அடுத்த கல்வி ஆண்டிற்குள்ளாகவாவது ரத்து செய்ய அரசாங்கம் யோசனை செய்யுமா?

[1968 ஆகஸ்ட் 19

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தனியார் துறையிலுள்ள எல்லா ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் முறைகேடாக நடந்து வருகின்றன என்று பொதுவாகக் குற்றம் சாட்ட முடியாது. ஏதோ ஓரிரு பள்ளிகள் முறைதவறி நடந்திருக்கலாம். எந்தப் பள்ளியில் இத்தகைய குறைபாடுகள் காணப்படுகின்றனவோ, அந்தப் பள்ளியைப்பற்றி கனம் உறுப்பினர்கள் எழுதி அனுப்புவார்களானால், சட்டதிட்டத்திற்குட்பட்டு அப்பள்ளியின் மீது நடவடிக்கை எடுக்கவும், இனி அத்தகைய குறைபாடுகள் ஏற்படாவண்ணம் தடுக்கவும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. என். துரைபாண்டியன் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சர்க்கார், பெண்கள் பயிற்சிப் பள்ளியில் தற்போது 40 மாணவர்களைத்தான் சேர்த்துக்கொள்கிறார்கள். இதனால் பலருக்கு, ஏழை எளியவர்களுக்கு இடம் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. ஆகவே, 40 மாணவர்கள் என்ற எண்ணிக்கை 80 மாணவர்கள் என்ற அளவுக்கு அதிகரிப்பதற்கு அரசாங்கம் உத்தேசம் செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நிலையில் அரசாங்கம் இல்லை. பயிற்சிபெற்று வெளிவரும் ஆசிரியர்களுக்கே வேலை கொடுக்கக் கூடிய அளவில் பள்ளிகள் போதுமானதாக இல்லை. ஆகவே, ஆசிரியர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த இப்போதுள்ள நிலைமையே நீடிக்கும்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் ஸ்டைபண்ட் அளவைக் கொஞ்சம் உயர்த்தித் தர அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 30 இடங்களுக்கு 300 விண்ணப்பங்களும், 40 இடங்களுக்கு 4 ஆயிரம் விண்ணப்பங்களும் வந்துகுவியும் இந்நேரத்தில் ஸ்டைபண்ட் கொடுப்பதை அரசாங்கம் நிறுத்திவிடலாம் என்று பலர் சொல்லிக் கொள்கிறார்கள். ஸ்டைபண்ட் கொடுப்பது, பயிற்சிபெறும் மாணவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் ஓரளவு உதவியாக இருக்கும் என்ற எண்ணத்தினால்தான். குறிப்பாக திக்கற்றவர்கள், பெண்கள், ஏழை-எளியவர்களுக்கு இந்தத் தொகை ஓரளவு பயன்படும். மாணவர்களின் பயிற்சிக் காலத்தில் இந்தத் தொகை அவர்களுக்கு உறுதுணையாக இருக்கட்டும் என்ற கருத்தில் அரசாங்கம் ஸ்டைபண்டு கொடுத்து வருகிறது.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவர் அவர்களே, பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் அநேகர் வேலையில்லாமல் இருப்பதால், குறிப்பாகக் குறைபாடுகள் உள்ள தனியார் துறையினர் நடத்தி வரும் பயிற்சிப் பள்ளிகளை ரத்து செய்யும் யோசனை அரசுக்கு உண்டா?



1968 ஆகஸ்ட் 19]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை அரசுக்கு இல்லை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, தனியார் துறையில் நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளைச் சேர்ப்பதற்குக் கூட, கட்டிட நிதி என்ற வகையில் நூறு, இருநூறு என்று கேட்கிறார்கள். நூறு, இருநூறு கொடுத்துப் பள்ளிகளில் சேர முடியாத நிலையில் ஏழை மக்கள் இருக்கிறார்கள். சர்க்கார் இந்தப் பள்ளிகளுக்குக் கிராண்ட் கொடுப்பதால், ஏழைக் குழந்தைகளைச் சேர்த்துக் கொள்ளுமாறு பள்ளிகளை அரசாங்கம் வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஏழை-எளியவர்கள் தகுதியும் திறமையும் இருந்து, அவர்களுக்கும் சேருவதற்குச் சில சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சில குறிப்பிட்ட பள்ளிகளில் இம்மாதிரியான குறைபாடுகள் இருக்குமானால், கனம் உறுப்பினர்கள் எழுதியனுப்பினால் அதுபற்றி நிச்சயமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** தலைவர் அவர்களே, தனியார் துறையிலுள்ள பயிற்சிப் பள்ளிகளுக்கு மூன்றில் இரண்டு பங்கை அரசாங்கம் மானியமாகக் கொடுத்து வருகிறது. மற்ற ஒரு பங்குக்கான தொகையை பள்ளி நிர்வாகிகள் நன்கொடைகள் மூலம் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கிறார்கள். இப்படி அரசாங்கம் இரண்டு பங்கு மானியம் கொடுத்து ஒரு பங்குத் தொகைக்காக நன்கொடை பெறுவதை விட, அரசாங்கமே முழுச் செலவுகளை ஏற்றுக்கொண்டுவிட்டால் நலமாக இருக்கும். இது சம்பந்தமாக ஆலோசனை செய்ய அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தனியார் பள்ளி நிர்வாகிகள் ஒரு பங்குத் தொகையைக் கட்டுவதற்கான வாய்ப்பிருந்து, வசதியிருந்து விண்ணப்பித்துக் கொள்பவர்களுக்கே, அரசினர் அனுமதி வழங்குகிறார்கள். மற்ற இரண்டு பங்குத் தொகையை அரசாங்கம் மானியமாக வழங்குகிறது. கனம் உறுப்பினர் கூறுகிற மாதிரி, பள்ளிச் செலவுகள் முழுவதையும் அரசாங்கம் தரக்கூடிய நிலைமை ஏற்படும் என்றால், பள்ளிகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்வதுதான் சரி. அரசாங்கம் தனியார் பள்ளிகளில் இப்படி முதலீடு செய்வதைவிட அப்பள்ளிகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளலாம். தனியார் பள்ளிகளில் ஒரு பங்குத் தொகைக்காக நன்கொடைகள் வசூலிப்பதில் ஏதாவது முறைகேடுகள் இருக்குமானால் அதுபற்றி அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக் கேள்வி செஞ்சி வட்டத்தைப் பற்றியது. துணைக் கேள்வியைக் கேட்கக்கூடிய உறுப்பினர்கள் மூலக் கேள்வியை ஒட்டிக் கேட்க வேண்டும்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : அவைத் தலைவர் அவர்களே, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவைக்கு மேல் இருப்பதால், இளநிலைப் பயிற்சியை நிறுத்திவிடும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கனம் உறுப்பினர் கூறுவது ஜூனியர் பேசிக் பயிற்சிப் பள்ளிகளைப் பற்றியது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறுகிறபடி உடனடியாக நிறுத்திவிடும் யோசனை அரசுக்கு இல்லை. அப் பள்ளிகள் மெல்ல, மெல்ல—சிறிது சிறிதாக எடுக்கப்பட்டு வருகின்றன.

*Fee concession to P.U.C. students*

*27 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of students who have newly joined the Pre-University Course in 1967-68; and

(b) the number among them who received fee concession?

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : (a) 56,006, (b) 33,691.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் ஜாதி, மதம், பெற்றோர் வருமானம் இவற்றைப் பார்க்காது எஸ்.எஸ்.எல்.சி; வரைக்கும் எல்லா மாணவர்களுக்கும் சம்பளச் சலுகை கொடுத்து படிக்க வசதி இருந்தது. அதே மாதிரி, இப்போது கல்லூரி புகுமுக வகுப்பில் எல்லோருக்கும் சம்பளச் சலுகை அளிக்க முடியாவிட்டாலும், பெற்றோருடைய வருமானம் 2,000 என்றிருப்பதை 3 ஆயிரமாகவோ, நாலாயிர மாகவோ உயர்த்தினால் இன்னும் அதிகமான மாணவர்கள் சலுகை பெற்று படிக்க முடியும். அதற்கான செயற்குறிப்பை இந்த ஆண்டாகிலும் அரசு உருவாக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில்தான் இதனுடைய உச்சவரம்பு, ரூ. 1,500-லிருந்து 2,000 என்று கொண்டு வரப்பட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் போன்றவர்களுக்கும் சம்பளச் சலுகை இந்த வருமானத்திற்குக் குறைந்தவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. என்.ஜி.ஓ.-க்களுக்கு முழுச் சம்பளச் சலுகை கொடுக்கப்படுகிறது. 400 ரூபாய் வரை சம்பளம் உள்ள ஆசிரியர்களுக்கும், தனியார், பொதுத் துறை களில் இருப்பவர்களுக்கு, இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது. வேறு எந்தவிதமான மாற்றமும் செய்வதாக இல்லை.



திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, புகுமுக வகுப்பில், பல கல்லூரிகளிலும் அட்மிஷன் நடந்த பிறகு, 52 சீட்டு கள காலி இருப்பதாகவும், இன்னும் சில இடங்களில் காலி இடங்கள் நிரப்பப் படவில்லை என்றும் போர்டில் போட்டிருக் கிறார்கள். அதே நேரத்திலே புதுக்கோட்டையில் 52 இடம் இருக்கிறது ஆண்கள் கல்லூரியில் என்று போர்டில் போட்டிருக் கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் பெண்கள் இடம் கிடைக்காமல் இருக்கிறார்கள். அங்கங்கே உத்தியோகத்தில் இருப்பவர்களுடைய பெண்கள், வேறு இடங்களுக்குப் போக முடியாதவர்கள். ஆனால் அந்தப் பெண்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லை. அம்மாதிரி யான இடங்களைப் பெண்களுக்குக் கொடுக்க கல்லூரி முதல்வர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அப்படிப் பட்ட இடங்களை பெண் களுக்குக் கொடுக்க ஏன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் தொடர்பில்லை என்றாலும், ஏற்கனவே இதைப்பற்றித் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. பெண் கள் புகுமுக வகுப்பில் ஆண்களோடு சேர்க்கப்படுவதைப் பல்கலைக் கழக சிண்டிகேட்டும், துணைவேந்தரும் அனுமதிக்கவில்லை. பி.ஏ., பி.எஸ்.ஸி. வகுப்பில் சேர்க்கலாம். ஆனால், புகுமுக வகுப்பில் அப்படிச் சேர்க்கக்கூடாது என்பது அவர்களுடைய நோக்கம். அது சம்பந்தமான முழுப் பொறுப்பும் பல்கலைக் கழகத்திடம் தான் இருக்கிறது. ஆகவே இந்த அரசு திட்டவட்டமான உத்தரவு எதுவும் போடுவதற்கில்லை. அதுதான் இருக்கும் நிலை.

திரு. சா. மெய்யப்பன் : புகுமுக வகுப்பில் ஹிஸ்டரி, காமர்ஸ், லாஜிக், அட்வான்ஸ்ட் டமில் போன்ற பாடங்களுக்குக் கட்டுப்பாடு கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிகமான இடங்களைக் கொடுத்தால் நலமாக இருக்காதா என்பதை அரசாங்கம் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இடங்களைப் பெருக்குவது பல்கலைக் கழகத்தின் அனுமதி பெற்றுத் தான் செய்ய வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, இடவசதி, வேறு பல வசதிகள் இவற்றைப் பெருக்க வசதிகள் வாய்ப்புக்கள் இருக்கின்றனவா என்று பார்த்துச் செய்ய வேண்டியிருக்கிறது. இவற்றை யெல்லாம் பார்த்துப் பல்கலைக் கழகம் அனுமதி அளிக் கிறது. பல்கலைக் கழகத்தின் கவனத்திற்கு ஆங்காங்கே இருக்கும் நிலைமைகள், நெருக்கடிகள் கொண்டுவரப்படுகின்றன. அதன் காரணமாக, சையன்ஸ் பிரிவில் 460 இடங்களையும், கலைப் பிரிவில் 480 இடங்களையும், ஆக, 900-சில்லரை இடங்களை விரிவுபடுத்தும் நிலையில் செய்யப் பட்டிருக்கிறது. அப்படி இந்த ஆண்டு கல்லூரி களுக்கு இடங்கள் அளித்திருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Whereas there was the promise that if the Congress were to come to power, education at the P.U.C. level would be made completely free to all children irrespective of the community to which they belong and irrespective

of the monetary income of their parents, may I know what is the policy of this Government towards making education at P.U.C. level free to all children?

THE HON. THIRU C. N. ANNADURAI: This Government has expressed its view more than once. It is not social justice to give concession to those who can afford to pay and I would refer my hon. friend to the preamble to the Fourth Plan issued by the Congress Government which lays stress on this point, viz., that those who can afford to pay should be asked to pay.

*திரு. கரு. சீமைச்சாமி:* சார், இந்த ஆண்டு புகுமுக வகுப்பில், தமிழ் மொழியில் சேர்ந்த மாணவர்கள் ஆங்கிலத்தில் படிக்க வேண்டும் என்று 300-க்கும் மேற்பட்டவர்கள் ஊர்வலம்கூட வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஆங்கிலத்தில் படிக்கத் தக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:*** இந்தக் கேள்விக்கும், கனம் அங்கத்தினர் எழுப்பியிருக்கும் பிரச்சினைக்கும் தொடர்பு இல்லை. ஆனாலும், அப்படி ஒரு பிரச்சினை உருவாகியிருக்கிறது. அதைச் சர்க்கார் கவனித்து வருகிறது.

*திரு. வி. கே. கோதண்டராமன்:* சார், சலவைத் தொழிலாளர்களும், சவரத் தொழிலாளர்களும், அதாவது டோபி, பார்பர்கள் அவர்களும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள்; அவர்களையும் ஷெடூல்ட் வகுப்பில் சேர்த்துக் கொள்ள ஏதாவது செயற் குறிப்பு சர்க்காரிடம் உண்டா?

***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:*** இந்தக் கேள்விக்கும், நம்முடைய மாண்புமிகு கோதண்டராமன் அவர்கள் எழுப்பியிருக்கும் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை. ஆனால், அவர்களுக்கு இருக்கும் சம்பந்தம் புரிகிறது. ஆனால், இந்திய அரசு அவ்வளவு எளிதில் பதில் அளிக்கும் என்று கருதவில்லை.

*திரு. ம. பொ. சிவஞானம்:* தலைவர் அவர்களே, 'தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்றுக் கொண்டு, புகுமுக வகுப்பில் சேர்ந்த மாணவர்கள், பிறகு மனத்தை மாற்றிக்கொண்டு, ஆங்கிலப் பயிற்சி மொழிக்கு இடம் தரவேண்டும் என்ற கோரிக்கையை விட்டிருக்கிறார்களா? என்ற கேள்விக்கு, "வந்திருக்கிறது, கவனிக்கப்படுகிறது" என்று முதல் அமைச்சர் பதிலளித்தார்கள். அந்த மாணவர்களே வேண்டுமென்று கேட்டுத்தான் தமிழ் பயிற்சி மொழி வகுப்பில் சேர்ந்தார்கள். தமிழ்தான் பயிற்சி மொழி என்பது அரசின் கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையில் 'கவனிக்கப் படும்' என்று தெரிவிக்க முடியுமா?

***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:*** கவனிக்கப்படும் என்றால், மாணவர்களுக்குச் சர்க்காருடைய கொள்கை விளக்கப்படும், அவர்களே விரும்பி தமிழ் வகுப்பில் சேர்ந்தார்கள் என்பதும் விளக்கப்படும். எல்லாவற்றையும் உள்ளடக்கியதுதான் அது.



*திருமதி கே. பி. ஜானகியம்மாள்:* தலைவர் அவர்களே, புகுமுக வகுப்பில், மதுரை நகரில் செந்தமிழ்க் கல்லூரி, மீனாட்சி கல்லூரி இவைகளில் இவ்வாண்டு அதிக மாணவிகள் பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். ஆனாலும், பல மாணவ மாணவிகள் இன்னமும் இடம் இல்லாமல் வெளியிலே நிற்கிறார்கள். எல்லா மாணவர்களுக்கும் இடம் கிடைக்கும் வகையில் 'ஷிப்டு' முறையில் பாடம் போதிக்க அரசாங்கம் யோசிக்குமா?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:*** தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் ஷிப்டு முறையைக் கையாள வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. அரசினர் கல்லூரிகளிலும், ஷிப்டு முறையில் மாலை நேர வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எங்கெங்கு வாய்ப்பு இருக்கிறதோ, அங்கங்கே அந்த முறையை ... தனியார் கல்லூரிகளுக்கும் கருத்துத் தெரிவிக்கப் ...து. அப்படிச் செய்யும்போது புதிதாக ஆசிரியர்கள் ...ண்டியிருக்கிறது. இன்னும் பல்வேறு பொறுப்புக் ...ன்றன. அவற்றையும் கவனித்தே இந்தக் கருத்து ...ட்டிருக்கிறது.

*... மாரிமுத்து:* குடந்தைக் கல்லூரியில், மெடிகல் ...டம் கிடைத்தவர்கள் சென்றுவிட்ட காரணத்தால், ...ங்களுக்குப் பையன்களைச் சேர்க்க 16-8-1968 கடைசி ... சொல்லிவிட்டார்கள். இன்னும் பல மாணவர்கள் ...ாரணத்தால், அதை மாற்றி இன்னமும் பிள்ளைகளை ... அரசாங்கம் உத்தரவு இடுமா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* மூலக் கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும், கல்வித் துறை இயக்குநருக்கு அதுபற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருக்கும் லிஸ்டுப்படி அவர்கள் அனுமதிப்பார்கள். மிச்சம் இருந்தால், அனுமதி பெற்று அவற்றையும் நிரப்பலாம். அப்படி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல் கும்பகோணத்தில் மாணவர்கள் இருந்தால், அவர்களைச் சேர்ப்பதில் ஆட்சேபணை இருக்காது. கல்வி இயக்குநர் அவர்களுக்குக் கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

*Revision of pension of retired teachers*

* 28 Q.—THIRU T. MARTIN:

THIRU N. S. V. CHITHAN:

DR. H. V. HANDE:

Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether there is any proposal to revise the scales of pension amount payable to the retired teachers in the State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின் :** சார், ஆசிரியர்கள் பொதுவாக அதிகமாகக் குழந்தைகள் பெற்று இருக்கிறவர்கள். அவர்களுடைய குழந்தைகளின் பாமரிப்பிற்காகவும் அதிகச் செலவாகிறது. விலைவாசி ஏற்றத்தாலும் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. இவற்றை எல்லாம் மனத்தில் கொண்டு அவர்களுடைய ஓய்வு ஊதியத்தை அதிகப்படுத்த செயற் குறிப்பு ஏதாவது அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முன்பு ஆசிரியர்களுக்கு ஓய்வு கால ஊதியம் தரப்படாத நிலை இருந்தது. அவர்களுக்கு இருக்கும் நெருக்கடியை ஆராய்ந்து, 1—4—1955-லிருந்து துவக்கப் பள்ளி ஆசிரியர்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் என்று தொடங்கி, மெல்ல மெல்ல இந்த ஓய்வு ஊதியம் மற்றவர்களுக்கும் கொடுக்கப்படும் நிலை வந்தது. இந்த ஓய்வு கால ஊதியம் 1—4—1958-லிருந்து, ஆங்கிலோ-இந்தியன் பள்ளி ஆசிரியர்கள், பயிற்சிப் பள்ளி ஆசிரியர்கள், பி.டி. ஆசிரியர்கள் என்று எல்லா ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டது. இந்த ஓய்வுகால ஊதியம், ஆசிரியர்கள் கடைசி மூன்று ஆண்டுக் காலத்தில் வாங்கும் சராசரிச் சம்பளத்தில் 1/120 பங்கு என்ற அளவில் கணக்கிடப்படுகிறது. இந்த ஊதியம், எல்.டி., பி.டி. ஆசிரியர்களுக்கு ரூ. 60 என்றும், தலைமை ஆசிரியர்களுக்கு ரூ. 75 என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கல்லூரி முதல்வருக்கு ரூ. 150, எம்.ஏ படித்த ஆசிரியர்களுக்கு ரூ. 125, பேராசிரியர்களுக்கு ரூ. 100, துணை ஆசிரியர்களுக்கு ரூ. 75, ட்யூடர்கள், டெமான்ஸ்ரேடர்கள் முதலானவர்களுக்கு ரூ. 60, மற்றப்படி ரூ. 90 முதல் 140 வரை வருமானம் உள்ளவர்களுக்கு ரூ. 35, ஃபிஸிகல் டைரக்டர்கள், பயிற்சிக் கல்லூரி பேராசிரியர்கள் இவர்களுக்கு ரூ. 70, என்று இம்மாதிரி நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த முறைதான் இப்பொழுது கையாளப்பட்டு வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தலைமை ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் 75 ரூபாய் தரப்படுவதாகச் சொன்னார்கள். நாங்கள் கோட்டையில் குடியிருந்தாலும் எங்கள் இருதயத்தில் ஆசிரியர்கள் குடியிருக்கிறார்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் முன்பு ஒரு முறை சொல்லியிருக்கிறார். அந்த ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கடைசி மூன்று வருடத்தில் வாங்குகிற சம்பளத்தைக் கூட்டி அதில் 1/120 விதம் கொடுக்கப்படுகிறது.





Dr. H. V. HANDE : Sir, there was a concrete proposal some time back to treat the retired teachers on a par with the non-gazetted officers by extending to them the three-eights pension and gratuity scheme. The Government has a chronic habit of giving whatever concessions are given to the teaches after a lot of agitation. First, fortunately certain concessions are given to the non-gazetted officers. Why should not the Government see that the concessions given to the non-gazetted officers are immediately given to the teachers also? What is the difference between the teachers and the non-gazetted officers and why should teachers be treated on a different footing? Why should the teachers be made to waste their valuable time. . . .

(Deputy Speaker rang the bell)

Dr. H. V. HANDE : If you want, I will sit down. I raised my hand half a dozen times during the previous question. If you do not want me to put the question, I will keep quiet. Yours obediently I will sit down.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதுவரை எட்டு கேள்விகள்தான் கேட்கப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கே 45 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. இன்னும் 20 கேள்விகள் கேட்கப்பட இருக்கின்றன. திரு. ஹாண்டே அவர்களை நான் துணைக் கேள்வி போடக் கூடாது என்று சொல்லவரவில்லை. கேள்வி நேரத்தில் துணைக் கேள்வி போட எல்லா உறுப்பினர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, ஓர் உறுப்பினர் போடுகிற கேள்வி சுருக்கமானதாக இருந்தால் விடையும் சுருக்கமாக இருக்கும். அதிகத் துணைக் கேள்விகள் போட நேரம் கிடைக்கும். ஆதலால் திரு. ஹாண்டே அவர்களைச் சுருக்கமாகக் கேள்விபோடும்படியாகச் சொல்கிறேன்.

Dr. H. V. HANDE : Will the Hon. Minister tell us why this disparity is there between the teachers and the non-gazetted officers? When are the Government going to give to the teachers the same concessions, especially the retirement concession, as are given to the non-gazetted officers?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, என்.ஜி.ஓ.-க்களை வேலைக்கு அமர்த்துவதற்கான விதிமுறைகள், க்வாலிபிகேஷன் எல்லாம் வேறு. ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான விதிமுறைகள் எல்லாம் வேறு. ஆசிரியர்கள் என்கிறபோதும் தனியார் பள்ளி ஆசிரியர்கள், கழக உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், அரசுப் பள்ளி ஆசிரியர்கள் என்று இப்படி பல்வேறு பிரிவுகளில் அவர்கள் வருகிறார்கள். மேலும் என்.ஜி.ஓ.-க்கள் 55 வயதில் ஓய்வு அளிக்கப்படுகிறார்கள். அரசுப் பள்ளியாக இருந்தால் ஆசிரியர்களுக்கு ஓய்வு வயது 58. தனியார் பள்ளிகளில் 60 வயது வரைகூட வைத்திருக்கிறார்கள். ஆக என்.ஜி.ஓ.-க்களுக்கும், இவர்களுக்கும் உள்ள அடிப்படைச் சட்ட

திட்டங்களே வேறுபட்டிருப்பதால் மற்றவற்றிலும் வேறுபாடு இருக்கத்தான் செய்யும். அதுவும் தனியார் பள்ளி ஆசிரியர்கள், அரசுப் பள்ளி ஆசிரியர்கள் இவர்களுக்கிடையேகூட வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும்.

THE HON. THIRU C. N. ANNADURAI: The Education Minister has answered the specific point. I would like to add something to the general remarks made by the hon. Member. He said that the Government had got a chronic habit of giving concessions only after agitations. I may remind the hon. Member that there were Governments which did not yield even after agitations and this is an improvement. When a Government is formed with members possessing a nature like Dr. Hande's nature, no agitation perhaps will be necessary and they will detect what is needed by the country and go on granting concessions to the country as a whole. I wish for that day.

THIRU K. S. KOTHANDARAMIAH: A large number of retired teachers do not own houses. The amount that they get from the Provident Fund is very small. Considering the very yeoman services they render to the society, will the Government consider the question of giving some financial aid to the retired teachers for building at least some small houses?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அப்படிப்பட்ட யோசனை இப்போது இல்லை.

**திரு. எ. சி. நரசிம்மன்:** தலைவர் அவர்களே, 1960-க்கு முன் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், அதற்குப் பிறகு ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்—இவர்களுக்குள்ளே வித்தியாசம் உண்டா? அதனைப் போக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

**திரு. ஆர். கருப்பையா:** ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிற டி.ஏ. இரண்டு, இரண்டரை என்று மிகக் குறைவாக இருப்பதாகப் பேசிக் கொள்கிறார்கள். அவர்களுடைய நிலைப்படியையாவது உயர்த்துகிற உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இது ஆசிரியர்களுடைய தனிப்பட்ட பிரச்சினை மட்டும் அல்ல. சர்க்கார் அலுவலர்கள் சம்பந்தப்பட்டும் அந்தக் குறைபாடு இருக்கிறது. அவர்கள் எல்லோரிடத்தும் அனுதாபமும், அக்கறையும் இருந்தாலும்—நிதிநிலைமை அவர்களுடைய குறையைப் போக்குவதற்கு இடம் விடவில்லை என்பதைக் கனம் உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



*Industrial unit at Kadampuliyur*

*29 Q.—THIRU S. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start an industry in the co-operative sector in Kadampuliyur in South Arcot district with a view to utilise the cashewnuts and its products which are available in plenty in that area?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. டி. மார்டின்:** முந்திரிப் பருப்பின் தோட்டில் இருந்து ப்ளாஸ்டிக் உற்பத்தி செய்ய முடியும் என்று நமது முதல் அமைச்சர் அவர்கள் முன்பு கூறியிருக்கிறார்கள். எனவே, இது போன்ற தொழிற்சாலையை எங்காவது தமிழகத்தில் ஓரிடத்தில் நிறுவ முயற்சி செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இன்றைய முதல் அமைச்சர் அதைத் தொடர்ந்து வலியுறுத்தாததில் இருந்தே அது சாத்தியம் அல்ல என்பதை அறிந்து கொண்டிருக்கலாம்.

**கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு முன் பணம்**

*30 வினா.—திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு சொசைட்டிகளில் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு அவர்களின் விசேஷ காலச் செலவுகளுக்காக அட்வான்ஸ் கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. சி. கோவிந்தராசன்:** இதர தொழில்களில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்குப் போனஸ் போன்ற மற்ற வசதிகள் கிடைக்கின்றன. ஆனால் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்குத் திருமணம் போன்ற சமயங்களில்கூடக் கடன் பெறக்கூடிய வசதி இல்லை. கூட்டுறவு சொசைட்டிகளின் மூலமாக கடனைப் பெறுவதற்காவது ஏற்பாடு செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கைத்தறிக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் பணிபுரிகிற உறுப்பினர்கள் சலுகை பெற அட்வான்ஸ் பெறுவதற்கான வாய்ப்பு ஒரே ஒரு வழியில் தான் இருக்கிறது. சி.டி. பண்டு—ஸ்கீம் (Contributary Thrift Fund Scheme) என்று 1—7—1962-ல் இருந்து துவக்கப்பட்டு நடக்கிறது. நூற்று இருபத்தொன்பது சங்க நெசவாளர்கள் அதில் இருக்கிறார்கள். மொத்தம் அதில் 9,400 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதன்படி கூட்டுறவுச் சங்க நெசவாளர்கள் தங்கள் வருமானத்தில் ஒவ்வொரு ரூபாய்க்கும் 6 காசு தர வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் 2 காசு தரும். மாநில அரசு நான்கு காசு தரும். இந்தப் 12 காசு என்ற அடிப்படையில் 30—6—1967 வரை

அந்த நிதியில் 27 லட்சம் ரூபாய் சேர்ந்திருக்கிறது. இதற்கு அரசு 8 லட்சம் ரூபாய் ஈடுகட்டியிருக்கிறது. இந்த நிதியில் இருந்து உறுப்பினர்கள் கடன் வாங்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. எல்லா நெசவாளர்களும் இதில் மேலும், மேலும் சேர்ந்து இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. தோ. மு. நல்லசாமி: தலைவர் அவர்களே, இன்று கூட்டுறவுத் துறையின் மூலம் தொழிற்துறையை உற்சாகப்படுத்த வேண்டுமென்ற முறையிலே நெசவுத் துறையிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு, தனியார் துறையிலே உள்ள பேக்டரிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற வசதிகள், கிடைக்காத நிலைமை இருப்பதால், கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்கள்கூட அபிவிருத்தியடையவில்லை. ஆகவே, அவற்றிற்கும் அட்வான்ஸ் கொடுத்து உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** உறுப்பினர் அவர்கள் கூறியபடி எந்த எந்தத் துறைகளில் என்ன என்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து செய்யலாம்.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: கிராமத்திலே உள்ளவர்கள் கிராமப்புறங்களிலே உள்ள ஐக்கிய நாணயச் சங்கங்களிலே இருந்து கடன் வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அந்தச் சங்கங்கள் விவசாய காரியங்களுக்காகத்தான் கடன் வழங்க வேண்டுமென்று விதி இருக்கிறது. இதன் காரணமாக நெசவாளர்கள் தங்களது சொந்தச் செலவுகளுக்கு சிறிய சிறிய செலவுகளுக்கு பணம் பெறமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட செலவுகளுக்காக உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. அதுபற்றிக் குறிப்பாக கவனத்திற்குக் கொண்டு வந்தால் கவனிக்கலாம்.

DR. H. V. HANDE : Sir, with regard to weavers who are only in the City—unlike the weavers who are very near the mofussil areas where they can also do some other work—and who can do no other work except weaving work, will this Government come forward with some sort of good and advantageous scheme like the Housing Scheme whereby they can at least improve their standard of living?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே வீடு கட்டித் தருகின்ற பிரச்னை, கடன் வழங்குகின்ற பிரச்னை, பல்வேறு சலுகைகள் வழங்குகின்ற பிரச்னை, இவையெல்லாம் தனித்தனியாக கவனிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால் எல்லோருக்கும் அத்தகைய உதவிகள் செய்வதற்கான சூழ்நிலை இல்லையென்றாலும் அந்த முறையிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.



திரு. ஏ. சி. நரசிம்மன் : இந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி ஆரணி சில்க் கோவாப்ரேடிவ் சொஸைடிக்குக் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ள கட்டடம் பழுதடைந்துவிட்டதால் அதை சரிசெய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனிக் கேள்வி போடவும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த திரிஃப்ட் ஸ்கீம் இன்னும் விஸ்தரிக்கப்படாத எல்லா சொஸைடிகளுக்கும் கண்டிப்பாக விஸ்தரிப்பதற்கு ஆணை பிறப்பிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அது எந்த அடிப்படையில் கையாளப்பட்டு வருகிறது என்று தெரியவில்லை. அதனுடைய சாதக பாதகங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்தக் கருத்தையும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

*Allotment of wheat*

* 31 Q.—THIRU A. M. RAJA :
THIRU S. RAMACHANDRAN :
Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the quanty of wheat and wheat products allotted to this State during the years 1965–66, 1966–67 and 1967–68?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 1965, 1966, 1967-ம் ஆண்டுகளிலும் 1968-ம் ஆண்டிலும் இந்திய அரசு இம்மாநிலத்திற்கு ஒதுக்கியுள்ள கோதுமை, கோதுமைப் பொருள்களின் அளவு விவரம் கீழேகொடுக்கப்பட்டுள்ளது :—

| | கோதுமை. | கோதுமைப் பொருள்கள். (டன்னில்.) | மொத்தம். |
|---|---|---|---|
| 1965 ... ... ... | 81,700 | 109,952 | 191,653 |
| 1966 ... ... ... | 146,000 | 171,738 | 317,738 |
| 1967 ... ... ... | 51,500 | 106,605 | 161,105 |
| 1968 ... ... ... | 18,500 | 53,500 | 72,000 |

THIRU K. VINAYAKAM : Sir, in view of the bumper crop in the North and in view of the fact they are trying to sell away wheat, will this Government import more wheat from the North for our consumers and thus make arrangements to give more quantity of wheat to the City-dwellers or to those who want it instead of doling it out in some measured quantity?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த அரசு வந்ததற்குப் பிறகு மிகக் குறைவாகக் கொடுத்துக் கொண்டிருந்த மத்திய அரசு, இப்பொழுது ஜூலை, ஆகஸ்டு மாதங்களிலே 32 ஆயிரம் டன் கோதுமைவரை கொடுத்திருக்கிறது. அதன் விளைவாக சென்னை நகரத்திலேயும், வேறு இடங்களிலேயும் அரிசி வாங்கு

கிறவர்களுக்குக் கோதுமையும்கூட 5 கிலோ வாங்கிக் கொள்ளக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கோதுமை மட்டுமே வாங்கக் கூடியவர்களுக்கு முழு அளவிலேயும் கோதுமை கொடுக்கப் படுகிறது. அது மட்டுமல்லாமல் கோதுமைப் பொருள்கள் தாராள மாகக் கொடுக்க முடியும் என்பதால் மாவுமில் சொந்தக்காரர்கள்—ரேஷனில் மட்டும அல்லாமல்—வெளிச்சந்தையிலே விலை குறைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இப்பொழுது இருக்கிற நிலைமை கொடுக்கிற கோதுமையை வாங்க வில்லை என்ற நிலைமைதான் இருக்கிறதே தவிர, கோதுமை கிடைக்கவில்லையென்ற நிலைமை இப்பொழுது நம் மாநிலத்தில் இல்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know the difference in the rate of wheat grown in our country and that of the wheat imported from foreign countries?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I want notice.

THIRU R. PONNAPPA NADAR: Sir, is there any proposal for decontrolling wheat and wheat products under the examination of the Government?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கோதுமைப் பொருள்களை மத்திய அரசு எவ்வப்பொழுது கொடுக்கிறதோ அப்போதைக்கப்போது அது விநியோகிக்கப்பட்டு வந்தது. முதலமைச்சர் அவர்களும், உணவுத் துறையும் இதைப்பற்றி வற்புறுத்தியும்கூட கோதுமையைப் பொறுத்தவரையில் அந்த நெருக்கடி இருந்தது. முன்பெல்லாம் 12 ஆயிரம் டன்தான் கோதுமை கொடுத்துக்கொண்டு வந்தது. இப்பொழுது எதிர் பாராத விதமாக நல்ல நிலைமை ஏற்பட்டிருப்பதன் காரணமாக கடந்த இரண்டு வாரங்களாக 32 ஆயிரம் டன் கோதுமை கொடுத் திருக்கிறது. இப்பொழுது வெளிச் சந்தையிலே கோதுமை கிடைக்கிறது. ரேஷனில் கிடைப்பதைத் தவிர, வெளிச்சந்தை யிலும் கோதுமை, மைதா, ரவா இவையெல்லாம் கிடைக்கின்றன. குறிப்பிட்ட நாட்களுக்குள் ரேஷன் கடைக்காரர்கள் எடுத்துக் கொள்ளவில்லையென்றால் வெளிச்சந்தையிலே கொடுக்கவும் மேக்ஸிமம் விலைவைத்து அந்த விலைக்குள் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலே அரிசிப் பங்கீடு செய்யும்பொழுது கோதுமையையும் கட்டாயப்படுத்திக் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது, அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கட்டாயப்படுத்த வில்லை. அரிசி கொடுப்பதோடு கோதுமையும் உதவியாக இருக் கட்டும் என்பதால்தான் கொடுக்கப்படுகிறதே தவிர, கட்டாயப் படுத்தவில்லை.



**திரு. வி. கே. கோதண்டராமன்:** இப்பொழுதெல்லாம் பொது மக்கள் கோதுமையையும், கோதுமைப் பண்டங்களையும் சாப்பிட மிகவும் நல்லபடியாகப் பழகிவிட்டார்கள். அப்படி இருக்க 1965-66-ம் ஆண்டு அமைச்சர் அவர்கள் கணக்குப்படி அதிகப்படி யான கோட்டா கோதுமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு குறைந்த அளவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் கேட்டு கொடுக்கவில்லையா அல்லது கேட்கவே இல்லையா? அதற்குக் காரணம் என்ன? முற் பகல் 10-00

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நான் ஏற்கனவே சொன்னேன். இந்த அரசு வருவதற்கு முன்னால், இரண்டு வருஷங் களுக்கு முன்னால் இரண்டு லட்சம் டன் அளவுக்கு இந்த மாநிலத்திற்குக் கோதுமை கிடைத்திருக்கிறது. 1966-ல் 3 லட்சம் டன் அளவுக்குக் கூடக் கிடைத்தது. ஆனால் நாங்கள் வந்த பிறகு 1½ லட்சம் டன்தான் கொடுத்தார்கள். கடந்த ஓராண்டு காலமாக முதலமைச்சர் அவர்களும், உணவுத் துறையும் மிக வற்புறுத்தி வந்த காரணத்தால் தற்போது கொஞ்சம் தாராளமாகக் கிடைக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. தற்போதுள்ள நிலை இருக்கிற கோதுமையும், கோதுமைப் பொருள்களும் முழு அளவு விற்காமல் இருக்கின்றனவே என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. பேரவையின் அனுமதி யுடன் எஞ்சிய கேள்விகளை சிறிது அதிக நேரம் எடுத்துக் கொண்டு முடிக்க விரும்புகிறேன்.

### *Relief to victims of fire accidents*

* 32 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether any change has been made in the grant of money to the affected families due to fire accidents?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஆம்.

* 33 வினா.—திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தீ விபத்துக்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்ட கலெக்டர்களால் வழங்கப்படும் நிவாரணத் தொகையை அதிகரிக்க உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இல்லை; தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் ரொக்கத் தொகை ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1—7-1967-லிருந்து ரூ. 30-லிருந்து ரூ. 60 ஆகவும், உடை மானியம் ரூ. 10-லிருந்து ரூ. 20 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

[1968 ஆகஸ்ட் 19

திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்: தலைவர் அவர்களே, இப்போது தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 80 ரூபாய் அரசாங்கத்தில் இருந்து கொடுக்கிறார்கள். ஏழ்மைப் பட்ட சிலருக்கு அந்த 80 ரூபாய் போதுமானதாக இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட ஏழ்மை நிலையில் இருப்பவர்களுக்கு 500 ரூபாய், 1,000 ரூபாய் என்று கடனாகக் கொடுத்து உதவும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இப்போதே தக்காவி கடன்கள் என்ற முறையில் கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அரிசன மக்களுக்கு ரூபாய் 300 வரையில் வட்டி இல்லாக் கடனாகக் கொடுக்கப்படுகிறது. அதற்கு ஒரு ஜாமீன் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் அவர்கள் அதிகமான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டதை வரவேற்கிறேன். அவ்வாறு கேட்ட அதே சமயத்தில் 30 ரூபாயை 60 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருப் பதைப் பற்றி ஒரு மகிழ்ச்சியோ நன்றியோ தெரிவித்திருந்தால் பாராட்டத்தக்கதாக இருந்திருக்கும்.

திரு. சி. கோவிந்தராசன்: 1—7—1967-ல் இருந்து, 30 ரூபாயாக இருந்தது 60 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. சாதாரண குடிசை எரிந்து விட்டாலும் அதைப் புதுப்பிக்க குறைந்தபட்சம் 200 ரூபாய் செலவாகும். ஆகவே, இந்தத் தொகையை ரூ. 150 ஆகவாவது அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா? அவர்களுக்கு, ஒரு குடிசை எரிந்து விட்டால் புறம்போக்கில் இருந்து இரண்டு பனை மரம், மூன்று பனை மரம் எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அந்த எண்ணிக்கையையும் அதிகரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

(விடை இல்லை.)

திரு. என். வரதராஜன்: புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி இருப்பவர்களுடைய குடிசைகள் எரிந்து விட்டால் அவர்கள் உதவித் தொகை பெறுவதற்குச் சட்டத்தில் இடம் இல்லையென்று அதிகாரிகள் கூறுகிறார்களே, உண்மையா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: உண்மைதான். இருந்தாலும் அவர்களுக்கும் வேறு உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: சென்னையிலே தீப் பிடித்த வீடுகளுக்குப் பதிலாக தீப் பிடிக்காத வீடுகளை அரசாங்கம் இனமாகக் கட்டித் தருகின்றனர். கிராமப் புறங்களில் இருக்கும் ஏழை மக்களுக்கு அந்த வசதி இல்லை. சென்னையிலேயாவது ரூபாய்க்கு ஒரு படி அரிசி போன்ற சலுகைகளை அரசாங்கம் அளித்து வருகிறது. ஆகவே, தீப் பிடிக்காத வீடுகளைக் கட்டித் தரும் திட்டத்தைக் கிராமப் புறங்களுக்கு விஸ்தரிக்க அரசாங்கம் முன்வருமா?



1968 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: சென்னையிலே கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகள் பெரும்பாலும் கிராமத்தில் இருந்து சென்னைக்கு வந்தவர்களுக்குத்தானே தவிர, சென்னை வாசிகளுக்கு அல்ல என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: தீ விபத்தால் பாதிக்கப்படக் கூடிய வர்கள் பெரும்பாலும் ஏழைகள். ஏழைகளுடைய கஷ்டத்தை 60 ரூபாயாக உயர்த்தியது. ஆனால், பழைய விதிமுறைகள் அப்படியேதான் இருக்கின்றன. பத்து ரூபாய்க்கு உட்பட்டு வரி செலுத்தக் கூடியவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப் படுகிறது. வருட வருமானம் ரூ. 50-க்குட்பட்டவர்களுக்கும் உதவியளிக்கப்படுகிறது. ரூபாய் பத்துக்கு மேலும், வருட வருமானம் ரூ. 50-க்கு மேலும் வருவாய் உள்ளவர்களுக்கும் உதவி கிடைக்க இது போன்ற விதிமுறைகளையெல்லாம் மாற்றியமைக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இந்த விதிமுறைகள் எல்லாம் இருக்கின்றனவே தவிர, நடைமுறையில் வெகு தாராள மாகவேதான் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

ஹாஜி மா. மு. பீர் முஹம்மது: சிறிய குடிசைகள் தீப் பிடிக்கின்ற நேரத்தில் குறைந்த அளவு நிதி கொடுப்பதன் மூலம் அவைகளுக்கு ஈடு கட்ட முடிகிறது. ஒரு வாரத்திற்கு முன்பு ஐயம்பேட்டை என்ற ஊரில் நான்கு பெரிய வீடுகள் தீப்பிடித்து விட்டன. ஒரு வாரத்திற்குள் ஆறு சம்பவங்கள் ஏற்பட்டிருக் கின்றன. அங்கு தீப் பிடித்த வீடுகளில் நான்கு வீடுகள் 80,000 ரூபாய் வரை பெறுமானமுள்ளவை. இந்த நிலையை உத்தேசித்து உதவித் தொகையாகவோ, கடனாகவோ கூடுதலாகக் கொடுக்க முடியுமா? தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை எந்த ஏரியாவில் தீ எப்போது பிடிக்குமோ என்ற பரபரப்பான சூழ்நிலை இருக்கிறது. அங்கு விசேஷ பாதுகாப்புத் தர முடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இதைப் பற்றிய விவரங்கள் இல்லை. தனிக் கேள்வியாக உறுப்பினர் அவர்கள் போட வேண்டும்.

திரு. ஆர். நாகசுந்தரம்: ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலமைச்சர் அவர்கள் பெயரால் பொது நிதி சேர்த்து சென்னை நகரத்திலே தீப் பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் போல் அந்தந்த மாவட்டங்களிலே தீ விபத்தால் பாதிக்கப்பட்ட ஏழை களுக்குத் தீப்பிடிக்காத வீடுகள் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

(விடை இல்லை.)

[1968 ஆகஸ்ட் 19

**திருமதி சு. குப்பம்மாள் :** தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 80 கொடுத்து வரப்படுகிறது. போளூருக்கு அடுத்தாற்போல் 65 வீடுகள் சாம்பலானதற்கு மறுநாளே நாங்களும், தாசில்தாரும் சென்று ரூ. 80 வீதம் கொடுத்து ஆறுதல் சொல்லி விட்டு வந்தோம். ஆனால் அவர்கள் வீடுகட்ட மானியமாகக் கேட்டார்கள். நாங்கள் கடனாக வாங்கித் தருகிறோம் என்று கூறியிருக்கிறோம். கடனாகக் கேட்டதற்கு அதிகாரிகள் கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ரூ. 300 என்பதை ரூ. 500 ஆக கடனாகக் கொடுத்து அவர்களை ஆதரிக்கும் உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் ஏற்கனவே சொன்னேன். அம்மையார் அவர்கள் கூறுவதிலிருந்தே எவ்வளவு துரிதமாக இது விநியோகிக்கப்படுகிறது என்பது தெளிவாகிறது. கடன் கொடுப்பதில் சில விதிமுறைகள் இருக்கின்றன. ஹரிஜனங்களாக இருந்தால் அவர்களுக்கு உத்தரவாதப் பத்திரம் தேவைப்படுகிறது. மற்றவர்களுக்கு ரூ. 300 கடன் கொடுப்பதென்றால் ரூ. 600 அளவிற்கு செக்யூரிட்டி கொடுக்க வேண்டியிருப்பதால் இப்படி நிலை இருக்கிறது. இருந்தபோதிலும் எவ்வளவு தூரம் விரைவுபடுத்தவேண்டுமோ அந்த அளவிற்குத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள் 34, 35 ஒற்றிவைக்கப்படுகின்றன.

### தாழ்த்தப்பட்டோர் நல கூட்டு நெறியாளர் பதவி

*** 36 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்டோர் நல நெறியாளர் அலுவலகத்தில் கூட்டு நெறியாளர் ( Joint Director ) பதவி ஒன்று இருந்தது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டுவரை அப்பதவி இருந்தது ?

(உ) எப்போது எடுக்கப்பட்டது ? அதன் காரணம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) 5—6—1967 வரை.

(உ) பணி இடத்தை நிரப்பாடு செய்யப்பட்டதேயன்றி எடுத்துவிடவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தாழ்த்தப்பட்டோர் நல நெறியாளர் அலுவலகத்தில் கூட்டு நெறியாளர் இருந்த காலத்தில் ஒருவர் அலுவலகத்தைக் கவனித்துக் கொள்ளவும் இன்னொருவர் வெளி மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ள அலுவலகங்கள், விடுதிகள், பள்ளிகள் போன்றவற்றினைக் கண்காணிக்கவும் முடிந்தது. ஆகவே, இந்தக் கூட்டு நெறியாளர் பதவியை வைத்துக் கொள்ள அரசு மறு பரிசீலனை செய்ய முன்வருமா ?



1968 ஆகஸ்ட் 19]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்த நெறியாளரின் பணி அவசியம் என்பதை உணர்ந்துதான் அதை அடியோடு எடுத்து விடவில்லை. தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் அதை ஐ.ஏ.எஸ். காடரில் போடுவதை விட டி.ஆர்.ஓ. தகுதி பெற்ற ஒரு அதிகாரியைப் போடுவதற்கு அரசு உத்தேசித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பதவி இருக்க வேண்டுமென்று விரும்பித்தான் அதை அடியோடு ரத்து செய்யவில்லை.

**திரு. கே. பி. எஸ். மணி :** இந்த நெறியாளரை நியமிப்பதற்கு முன்னதாக கல்வி முறையையும், ஹாஸ்டல்களையும் மட்டும் நேரடியாகக் கண்காணிப்பதற்குத் தனியாக அவரை நியமிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** துணை நெறியாளர் ஹரிஜன நல இலாகாவின் எல்லாத் திட்டங்களைத்தான் கண்காணித்து வருகிறார். கல்வியில் அதிக சிரத்தையோடு கவனிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கிறது. அந்தப் பதவியில் யாரையும் நியமிக்கவில்லை யென்பதால் இந்த இடர்பாடு ஏற்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, whereas the workload that is cast upon the Director of Harijan Welfare is enormously increasing nowadays because of a large number of applications coming to his office, will the Government think of the possibility of appointing a Joint Director specially to deal with Backward Classes and Most Backward Classes and leave the Director of Harijan Welfare to deal with the affairs concerning Harijan boys?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இயக்குநர் அவர்கள் இலாகாவின் முழுப்பொறுப்பையும் ஏற்று நடத்தி வருகிறார். அவருக்குத் துணையாக இருக்கும் வகையில்தான் இந்த அதிகாரி பணியாற்றி வந்திருக்கிறார். இப்போது அவர் பணியாற்றவில்லை. அது மிகமிக அவசியம் என்பதை கருத்தில் வைத்துத்தான் வேறு ஒரு அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமென்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது. விரைவில் அந்த அதிகாரி நியமிக்கப்படுவார். உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் அத்துறையில் வேலைப்பளு அதிகமாகியிருப்பதை உணர்ந்து மேலும் அதிகாரிகள் நியமிப்பதற்குக்கூட அரசு பரிசிலனை செய்து கொண்டு வருகிறது.

**திரு. என். மருதாசலம் :** கோவையில் ஜில்லா உணவு சப்ளை ஆபீசர் அவர்கள் ஹரிஜன வெல்பேர் ஆபீசராகவும் இருந்து வருகிறார். இந்த இரண்டு வேலைகளையும் அவர் பார்க்க வேண்டியிருப்பதால் வேலைகளில் தடை ஏற்படுகிறது. ஆகவே ஹரிஜன வெல்பேர் ஆபீசர் என்று தனியாகப் போட அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர் இரண்டு வேலையையும் பார்த்து வரவில்லை.

[1968 ஆகஸ்ட் 19

**திரு. கரு. சீமைச்சாமி :** சென்னையில் வாழ்கிற மக்களுடைய குடிசைகள் தீப்பிடித்து விட்டால் உடனே பெரிய பெரிய சினிமா நடிகர்கள் பத்தாயிரம், இருபதாயிரம் என்று கொடுக்க முன் வருகிறார்கள். அரசாங்கமும் அவர்களுக்கு உடனடியாக உதவிகளைச் செய்து கொடுக்கிறது. சமீபத்தில் மதுரை, இராமநாதபுரத்தில் ஏற்பட்ட தீ விபத்தின்போது அவர்களுக்கு சாதாரணமாகக் கொடுக்கக்கூடிய உதவித் தொகை 30 ரூபாயோ, 60 ரூபாயோ கூடக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கு டெபுடி தாசில்தார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. இது பற்றி அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைப் பற்றித் தகவல் இல்லை. கனம் உறுப்பினர் பொதுப்படையாகச் சொல்வது சரியல்ல. எந்த ஊரில் அப்படி கொடுக்கப்படவில்லை என்று கூறினால் உடனடியாக கலெக்டர் அவர்களோ, வருவாய்த் துறை அதிகாரியோ நடவடிக்கை எடுத்துக் கொள்வார். தற்போது 60 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பதுகூட சரியல்ல, உடைக்கு 20 ரூபாய் கொடுப்பதையும் சேர்த்து 80 ரூபாய் கொடுக்கப்படுகிறது. எங்காவது தவறு நிகழ்ந்திருந்தால் அதைப் பற்றிக் குறிப்பாக எழுதினால், திருத்திக் கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

**திரு. பெ. சீனிவாசன் :** நிவாரண உதவியை உடனடியாகத் தரும் அதிகாரம் தாசில்தாருக்கு வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போதே கூட இருக்கிறது. கலெக்டர், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், தாசில்தார் ஆகியோருக்குத்தான் அதிகாரம் இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குத் தற்போது உதவித் தொகை 30 ரூபாய் தான் வழங்கப்படுகிறது. அவர்களுக்கும் இதே போல் 60 ரூபாய் உதவித் தொகை வழங்க அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது தீ விபத்து சம்பந்தமானது. மற்றப்படி வெள்ளம், கடலரிப்பு போன்றவற்றால் ஏற்படும் கஷ்டங்களுக்கு உதவித் தொகை கொடுப்பதை அதிகரிப்பது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்த உதவித் தொகையைக் கூடுதலாக்கிக் கொடுப்பதற்காக அரசாங்கத்திற்கு முதற்கண் நன்றி. 25 ரூபாய் அடிப்படைச் சம்பளத்திற்குப் பஞ்சப்படி 125 ரூபாய் என்று உள்ள காலத்தில் இருக்கிறோம். ஆகவே 80 ரூபாய் என்று கொடுக்கப்படக் கூடியதை ரவுண்டாக 100 ரூபாயாகவும், அரிசனங்களுக்கு வட்டி இல்லாமல் கொடுக்கப்படுகிற கடன் தொகை 300 ரூபாயில் பாதியை 150 ரூபாயை இனாமாகவும் கொடுப்பது பற்றி அரசாங்கம் அனுதாபத்துடன் பரிசீலனை செய்யுமா ?



1968 ஆகஸ்ட் 19]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதையெல்லாம் அதிகப்படுத்திக் கொடுப்பது நம்முடைய வருவாய்த் துறையிலிருந்து வரும் வருவாய் அதிகரிப்பதைப் பொறுத்தது. அப்படி வரும்போது இந்த மாதிரிக் காரியங்களில் எல்லாம் வெகு தாராளமாக இருக்கக் கூடியவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த மன்றம் நன்கு அறியும். விற்பனை வரி, கேளிக்கை வரி இவற்றின் மூலம் வருகின்ற வருவாய் போன ஆண்டு 9 கோடி ரூபாய் அளவுக்கு அதிகமாகியிருக்கிறது. அந்த வரிகள் எல்லாம் சரியானபடி சர்க்காருக்குச் சேருவதற்கு உறுப்பினர்கள் ஒரு பொது எண்ணத்தை ஏற்படுத்தினால் இந்தக் காரியங்களில் எல்லாம் மிகத் தாராளமாக நடந்து கொள்ள முடியும்.

**திரு. க. ர. நல்லசிவன் :** இப்போது நான் கேட்பது பணத்தைப் பற்றியல்ல. நெருப்பு பிடிப்பதற்கான அடிப்படைக் காரணம் ஏழைகளின் குடிசைகள் மிக நெருக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. அவை பட்டா நிலங்களில் இருக்கலாம் அல்லது புறம்போக்கு நிலங்களில் இருக்கலாம். பட்டா நிமாக இருந்தாலும் சரி அல்லது எந்த நிலமாக இருந்தாலும் சரி குறைந்தது ஐந்து சென்ட் என்ற அடிப்படையில் வீடு இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கவும், குறைந்த நிலத்தை வைத்துக் கொண்டு வீடுகட்டிக் கொண்டிருப்பவர்களுக்கும் அப்படி ஐந்து சென்ட்டாவது கொடுப்பதற்கு ஒரு இரண்டாண்டுத் திட்டம் போட்டு அதை நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே இது சம்பந்தமான திட்டங்கள் தீட்டப்பட்டு ஏராளமான வீட்டு மனைகள் மூன்று சென்ட், ஐந்து சென்ட் என்ற அளவில் பல்வேறுயிடங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக ஒரு தீவிரமான திட்டத்தைப் போட்டு எவ்வளவு இடங்களில் வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, எங்கெங்கெல்லாம் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன, என்க்ரோச்மென்டாக இருந்தால் கூட கொடுத்து விடலாமா என்று இதற்காக ரெவின்யூ போர்ட் மெம்பர் ஒருவரைக் கொண்டு ஒவ்வொரு மாதமும் என்னென்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று குறியீட்டு எண் வைத்து செய்யப்பட்டு வருகிறது.

**திரு. வை. சுவாமிநாதன் :** திருச்சி நகராட்சி சமீபத்தில் திருச்சியில் நடந்த தீ விபத்தினால் வீடிழந்தவர்களுக்கு 500 ரூபாய் அவர்கள் நிதியிலிருந்து கொடுக்க தீர்மானித்து அதை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அம்மாதிரி மனு வந்தால் திருச்சி நகராட்சி நிதியிலிருந்து ரூ. 500 கொடுக்க அனுமதி அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அம்மாதிரித் தகவல் என்னிடமில்லை.

[1968 ஆகஸ்ட் 19

திரு. எம். சுரேந்திரன்: கிராமங்களில் உள்ள ஹரிஜனச் சேரிகள் பலயிடங்களில் மோசமாகயிருக்கின்றன. வீட்டு வசதி, குடி தண்ணீர் வசதி இவையெல்லாம் சரிபெற நடைபெறுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி, தாழ்த்தப் பட்டோர் நல கூட்டு நெறியாளர் பதவிபற்றியது. அதைப்பற்றிக் கேளுங்கள்.

(உறுப்பினர் வினா கேட்கவில்லை.)

### விதவைகளுக்குப் பள்ளி

* 37 வினா.—திருமதி வி. ப. பழனியம்மாள்: மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்டத்திலும், விதவைகளுக்கென்று ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்க அரசாங்கம் ஆவன செய்யும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள்: ஒவ்வொரு மாவட்டத்திலும் இளம் விதவைகளுக்கு பள்ளிப்படிப்பும், மற்றவர்களுக்கு வயதிற் கேற்றவாறு தொழில் கல்வியும் கற்றுக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போது கோவை, சேலம், மதுரை, திருச்சி போன்ற இடங்களில் சேவை இல்லங்கள் என்ற இல்லங்கள் நடைபெறுகின்றன. அந்த இல்லங்களில் விதவைகள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். தனியாக விதவைகளுக்கு எந்த இல்லமும் அரசாங்கம் துவக்க உத்தேசமில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: இளம் பெண்கள் விதவைகளாகி விடுகிறார்கள். அவர்களுக்கு மறுமணம் செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ? சில சமூகங்களில் கணவனை இழந்து விட்டால் விதவைகளாக காலத்தை கடத்தி விட வேண்டியிருக்கிறது. அப்படிக் கடத்தி விடுகிறார்கள். சில ஜாதிகளில் மறுமணம் செய்து கொள்கிறார்கள். அதுமாதிரி செய்ய ஏதாவது ஏற்பாடு உண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் அவர்கள் இந்த சமூக சீர்திருத்தக் கருத்தை சமூகத்தில் பரப்பு வாரானால் அது மிக வெற்றிகரமாக முடியும் என்று கருதுகிறேன்.

### கூட்டுறவு நாணய சங்கங்கள்

* 38 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—



1968 ஆகஸ்ட் 19]

கூட்டுறவு நாணய சங்கங்களில், மோசடி காரணமாக தண்டனை அடைந்தவர்களை மீண்டும் சாதாரண அங்கத்தினர் களாகவும் சேர்த்துக் கொள்ளாத அளவுக்குச் சட்டத்தைத் திருத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒழுக்கக் குறைபாடு காரண மாக ஒருவர் தண்டிக்கப்பட்டிருந்தால் அத்தண்டனை முடிவடையும் தேதியிலிருந்து ஐந்தாண்டுக்கால அளவுக்கு அவர் எந்தக் கூட்டுறவுச் சங்கத்திலும் உறுப்பினர் ஆகக்கூடாதென தமிழக 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 18-வது பிரிவு வகை செய்கிறது. ஒருவர் மோசடிக் குற்றத்தின் கீழ் தண்டிக்கப் பட்டதன் காரணமாகவே அவர் கூட்டுறவுச் சங்கமொன்றில் என்றென்றும் உறுப்பினராகக் கூடாதெனத் தடைசெய்யும் வகையில் அச் சட்டத்தைத் திருத்தும் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், கூட்டுறவு நாணயச் சங்கங்கள் சரியான முறையில் செயல்படவில்லை என்று சொன்னால், நாணயச் சங்கங்கள் நாணயமானவர்களைக் கொண்ட தலைமையின் கீழ் இயங்கவில்லை என்று சொன்னால் அது நாணயமாக இருக்க முடியுமா? ஆகவே, குற்றவாளி என்று தெரிந்தபிறகும், ஐந்து வருஷங்களுக்குப்பிறகு அங்கத்தினர்களாக இருக்கலாம் என்று சொன்னால் அவர்கள் தேர்தலிலே நின்று தலைவராகக் கூடிய அளவுக்கு நிலைமையிருக்கிறது. ஆகவே, நாணயச் சங்கங்கள் நாணயமாக நடக்க வேண்டுமென்றால், குற்றம் புரிந்து விட்டார்கள், தண்டனை அடைந்துவிட்டார்கள் என்று தெரிந்த பிறகாவது அவர்களை அங்கத்தினராகச் சேர்க்கக்கூடாது என்ற அளவுக்கு சட்டத்தையே மாற்றித் திருத்தியமைக்க இனிமேலாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாணயச் சங்கங்கள் மட்டு மல்ல, எந்தப்பதவிக்குமே ‘டிஸ்குவாலிபிகேஷன்’ இருந்தால், ஐந்து வருஷங்களுக்கு உறுப்பினர் ஆகக்கூடாதென்று விதியிருக் கிறது, சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட. இதை மாற்ற வேண்டுமானால் பரிசீலனைக் குழுவிற்கு அங்கத்தினர் அவர்கள் தங்கள் கருத்தை அறிவிக்கலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவரவர்களே, இப்பொழுது மூலக் கேள்விக்கு அமைச்சரவர்கள் பதில் கூறியதிலிருந்து, கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் இடம் தரவில்லை என்று தெரிகிறது. ஆனால், இங்கே என்னுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டியது முக்கிய மென்று கருதி தெரிவிக்க விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங் களில் ஒரு பதவி வகிப்பவர்கள் 3 ஆண்டுகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்று முன்பிருந்த மந்திரிசபை முடிவுக்கு வந்திருக் கிறது. அதைச் செயல்படுத்தும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: குழு பரிசீலித்து அறிக்கை அனுப்பியிருக்கிறது. அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. சி. கோவிந்தராசன் :** சார், கூட்டுறவு நாணயச் சங்கமாலுைம் சரி அல்லது எந்த கூட்டுறவு சொஸைட்டியாலுைம் சரி கள்ளக் கையெழுத்திட்டு பணத்தைக் கையாடல் செய்தவர்கள், அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டிவிட்டால் குற்றத்திலிருந்து நீக்கப்படுகின்ற கொள்கைகள் கோவாப்பரேட்டிவ் துறையிலே இருக்கிறது. அது சரியா ? அப்படிப்பட்ட குற்றங்களும் குற்றங்கள் தானே ? எனவே அவைகள் குற்றங்கள்தான் என்று அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட கொள்கைகள் கூட்டுறவுத்துறையில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. "வைகேரியஸ் லயபிலிடி" என்று இருக்கிறது. தலைவர்கள், பொறுப்பாளர்கள் சம்பந்தமில்லாமல் மறைமுகமாக சம்பந்தப் படுத்தப்பட்ட குற்றங்கள் இழைக்கப்படுகின்ற நேரத்தில் அவைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வரும்பொழுது பரிசீலித்து உண்மையாகவே குற்றத்தில் ஈடுபடவில்லையென்றால் அரசாங்கம் அதைப்பற்றி உத்தரவிடுகிறது.

**திரு. நா. காசிராமன் :** தலைவர்களே, நாணயச் சங்கங்களில் இம்மாதிரி குற்றங்கள் புரிந்தவர்கள் என்றென்றைக்கும் அங்கத்தினராக வரக்கூடாது என்று இல்லாமல், அங்கத்தினர்களாக அவர்கள் வரும்பொழுது டைரக்டர்களாகவோ அல்லது தலைவராகவோ அவர்கள் வரக்கூடாது என்று விதிகளிலே திருத்தி சட்டத்தை மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முன்னால் கூறியபடி இது பற்றி விதிமுறைகளை அதன் குழு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அதன் முடிவு வந்தபிறகுதான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும்.

DR. H. V. HANDE : Sir, is the Hon. Minister aware that in the case of the Madurai Saurashtra Co-operative Bank Ltd., one of its members was found to a defaulter and he was not allowed to contest for the directorship of the Bank. Later on, he filed a writ petition in the High Court and the High Court is yet to dispose of that writ petition, but he was allowed to contest the directorship for the subsequent vacancy. Has this anomaly been brought to the notice of the Hon. Minister and if so, what immediate action he proposed to take in the matter to prevent the reccurence of such things?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** குறிப்புகள் அனுப்பினால் கவனிக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், போர்ஜரி கையெழுத்திட்டு பணத்தைக் கையாடியதாகச் சில புகார்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் அவர்கள் பணத்தைக் கொடுத்துவிட்டார்கள். அப்படி அவர்கள் பணத்தைக் கொடுத்திருந்தபோதிலும் போர்ஜரி கையெழுத்திட்டவர்களின் மீது 'கிரிமினல்' நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு உள்ளதா ? இல்லையா ? அமைச்சரவர்களிடம்



ஒன்றிரண்டு புகார்கள் கொடுத்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இனிமேலாவது அதுபோன்ற புகார்கள் கொடுக்கக்கூடிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அமைச்சரவர்களிடம் கொடுக்கப்பட்ட புகார்களைப்பற்றிய கேள்வி எழுதி அனுப்பப் பட்டால் பரிசீலிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Does the Hon. Minister agree with me when I say that anybody cannot be always adjudged a criminal simply because he has committed a crime. Once a criminal, a person cannot always remain a criminal and so if a member of a society who commits a mistake is debarred from becoming a member of the Society subsequently, will it not affect the fundamental rights guaranteed in the Constitution viz., freedom of association?

THE HON. THIRU C. N. ANNADURAI : I will pass on this opinion to the people who hold opposite opinion.

### கௌரவ முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள்

*39 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கௌரவ முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் எத்தனை கௌரவ முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் இருக்கின்றனர்?

(இ) இவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) நாற்பது.

(இ) கலெக்டரின் பரிவுரையை ஆலோசித்துப் பார்த்து அரசாங்கம் இந்த நியமனங்களைச் செய்கிறது. நாற்பது வயதுக்கு மேற்பட்டவராகவும் அறுபத்தைந்து வயதுக்குட்பட்டவராகவும், சட்டங்களுக்குப் பொருள் விளக்கம் கூறும் அளவுக்கு ஆட்சி மொழியில் தேர்ந்தவராகவும் இருக்க வேண்டும். அவர் அரசாங்கச் சார்பற்றவராயிருந்தால், மக்களின் முழு நம்பிக்கையைப் பெறும் வகையில் மிகத் திறமையுள்ளவராக இருக்க வேண்டும். அவர் ஓய்வு பெற்ற அரசாங்க அதிகாரியாயிருந்தால் இரண்டு கட்சிக்காரர்களிடையே தகராறுகளை முடிவு செய்த அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும். அவர் காவல் துறையில் பணியாற்றியவராயிருக்கக்கூடாது.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், இந்த முதல் வகுப்பு மாஜிஸ்ரேட் பதவிகள், ஆங்கிலேயர்கள் காலத்தில், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், சில குடும்பங்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக கொடுக்கப்பட்ட தீர்ப்புகளைப் பார்த்து எந்த முறையிலே கௌரவ மாஜிஸ்ரேட் பதவிகளுக்கு மரியாதை இருப்பதாகத் தெரியவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, I object to this kind of insinuation against the Members of the Bench. I was once an Honorary Presidency Magistrate.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* பதவிக்கு மரியாதை இல்லை என்ற வார்த்தையைச் சொல்ல வேண்டாம்.

*திரு. கரு. சீமைச்சாமி :* அவர்களுக்கு முக்கியத்துவம் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, இதை ஒழிக்க உத்தேசம் உண்டா? என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* கௌரவ மாஜிஸ்ட்ரேட் பதவிகள் கௌரவத்திற்காகக் கொடுக்கப்பட்ட காலம் போய் விட்டது என்பது உண்மையே. ஆனால், இன்று அது தேவை என்று கருதப்படுகிறது. சாதாரண வழக்குகளை விசாரித்து நடத்த அது நீடிக்கப்படுகிறது. தேவை இல்லை என்று சொல்லக் கூடிய கருத்தும் இருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, are the Government aware that the hon. Member, Thiru Cheemaichamy applied for the post of the Honorary Presidency Magistrate in the Madurai City.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* கேள்வி கேட்கும் நேரத்தில் மன்றத்திலே உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டுகள் கூறக்கூடாது. எனவே, நான் இதை அனுமதிக்கவில்லை.

### *Probation Officers*

* 40 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) whether the Government proposes to appoint more Probation Officers on the basis of the recommendation of the Inspector-General of Prisons; and

(b) if so, for what purpose ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* (அ) & (இ) மாநிலச் சிறைத் துறைத் தலைவர் இது குறித்து அனுப்பியுள்ள செயற் குறிப்பு ஆய்வில் உள்ளது.

THIRU K. VINAYAKAM : Sir, may I know when the Government will take a proper decision on that Report?

THE HON. THIRU S. MADHAVAN : The hon. Members may wait and see.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]





## 3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

### (i) தமிழக அரசு தலைமைச் செயலகத்தின்முன் உண்ணாவிரதம் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* உறுப்பினர் திரு சித்தன் அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, " தமிழ் நாட்டுச் சட்டப்பேரவை விதி 42-ன் கீழ், கீழ்காணும் அவசரமும் பொதுமுக்கியத்துவமும் " வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்க வேண்டுகிறேன்:—

" இன்று காலை தமிழக அரசின் தலைமைச் செயலகத்தின்முன் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக ஒரு நாள் அடையாள உண்ணாவிரதமிருந்த திரு. எஸ். அண்ணாமலை உள்பட 9 விவசாயிகள் கைது செய்யப்பட்டது பற்றி விவாதிக்க ' என்று கொடுத்திருக்கிறார்கள். உண்ணாவிரதமிருப்பது, கைது செய்வது பற்றி ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுப்பது முறையாகாது என்று விதிமுறைகள் கூறுகின்றன. எற்கெனவே, 1961-ல்

" Hunger strik e by Harijan students of M. C. Raja Students' Hostel—Disallowed on the ground that hunger strike could not form the subject-matter of an adjournment motion, and the Member, who gave notice of the adjournment motion, was advised to put a short notice question if he wanted ".

என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். எனவே, நான் இதற்கு அனுமதியளிக்க மறுக்கிறேன்."

### (ii) சென்னை அரசினர் கலைக்கல்லூரியில் தமிழ் போதனை முறையினால் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மை.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* அடுத்தபடியாக டாக்டர் ஹாண்டே அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை அவர்கள் படிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : Sir, I have given notice of the following motion :—

" That the business of the House stand adjourned to discuss a matter of urgent public importance, namely, the serious unrest among the students in the Tamil Medium Class in the Government Arts College, Madras as a result of the fear that Tamil medium would hamper their progress at some stage. Conversion of the Tamil medium classes into English medium wherever the students want it appears to be the only way to solve this problem. "

I request you, Sir, to adjourn the business of this House to discuss how best this can be brought about.

I request the Hon. Deputy Speaker to allow adjournment of the House for discussing this question for the simple reason that there is unrest not only in this college but in several colleges. There is a fear that Tamil medium may not allow them to go for higher studies and to take jobs outside Madras State. The Hon. Chief Minister was good enough to give some sort of assurance during question-hour. If he were to say that the students' interests will be protected and will be looked after, that would be enough. Even several of us, several M.L.As. who take inside and outside about this medium, when it comes to one's own relations I have seen many a time and I can quote and prove several instances, they admit the boys only in English medium. I request the Hon. Minister to give some sort of assurance to this House that the interests of the students will be looked after. This concerns the lives of the boys. If they have a few political dogmas. I have no objection. Our political attachment should not harm the students. These students took to this course for the simple reason that they were not given any seats in the English medium. As a despatch measure, since there was no other scope to do anything they went to this Tamil Medium. That is the stark reality. Let us face facts and face them squarely.

முற்பகல் 10-30

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்னர் நானும் ஓர் ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். ஆனால், சபாநாயகர் அவர்கள் என்னைப் படிப்பதற்கு அனுமதிக்கவில்லை. அதே நேரத்தில் மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் படிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. படிப்பதற்கு மாத்திரம் அல்ல; விளக்கம் கொடுக்கவும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மற்ற அங்கத்தினர்கள் படிப்பதற்கும் விளக்கம் கொடுப்பதற்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஏன் இந்த பாரபட்சம் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் தலைவர் மீதா? தலைவருடைய தீர்ப்பின் மீதா? (திரு. என். எஸ். வி. சித்தன் : பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.) பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பியது தலைவருடைய தீர்ப்பின் மீதா? ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிப்பதற்கு, அல்லது அனுமதி மறுப்பதற்கு தலைவருக்கு உரிமை உண்டு. அந்த முறையிலே அனுமதி மறுப்பதற்கு தலைவருக்கு உரிமை உண்டு. கொண்டு வருகின்ற தீர்மானங்களின் மீது ஏற்கனவே கொடுக்கப்பட்ட கௌரவமான பதவி. ஆனால், இந்தக் காலத்தில் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறதோ அந்த முறையிலே அனுமதி மறுக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. அந்த முறையிலே இதில் எந்தவிதமான பாரபட்சமும் இல்லை. கொண்டு வரப்படுகின்ற தீர்மானங்களைப் பொறுத்துத்தான் அனுமதி அளிப்பது அல்லது மறுப்பது என்ற நிலை இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒற்றி வைப்புத் தீர்மானத்தைப் பற்றி விளக்கம் கூறுவதற்கு இடம் இல்லை. இதற்கு அவை முன்னவர் அவர்கள் பதில் கூறுவார்கள்.



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டு வந்திருக்கிற கருத்து ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு உட்பட்டது அல்ல என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். இது இந்த இனத்தின் கீழே வாராது. அதிலே கூறப்பட்ட கருத்தினுடைய அடிப்படையிலே அமைதியின்மை ஏற்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அந்த மாதிரி அமைதியின்மை ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது திட்டவட்டமாக, தெளிவாக எடுக்கப்பட்ட கருத்தின் மீது அமைந்த ஒன்றாகும். அந்த முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் மத்திய அமைச்சர்கள் மகாநாட்டிலே கூட, பிராந்திய மொழியிலே 10 ஆண்டு காலத்திற்குள் பயிற்றுவிக்கிற முறை வலியுறுத்தப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு எல்லா மாநில அரசுகளுக்கும் முடிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த முறையிலே தமிழிலே பயிற்றுவிக்கிற முறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், கோத்தாரி கமிஷனும் இது படிப்படியாக மாற வேண்டுமென்ற கருத்து தெரிவித்திருக்கிறது. இந்த மன்றமும் அப்படிப்பட்ட கருத்து தெரிவித்து முடிவு எடுத்திருக்கிறது. உடனடியாக மாற்ற வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்படாவிட்டாலும் படிப்படியாக மாற்றிக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலே அரசினர் கல்லூரிகளிலே கலையியல் பாடங்களும், அறிவியல் பகுதியிலே ஒரு பிரிவை மாற்றுவது என்றும், பிறகு பி.ஏ., பி.எஸ்.ஸி., என்று மெல்ல மெல்ல மாற்ற வேண்டுமென்ற கருத்து இந்த மன்றத்திலே பல தடவை தெரிவிக்கப்பட்டது. நூற்று இருபத்தெட்டு கல்லூரிகளுக்கு மேல் உள்ளதில் கிட்டத்தட்ட 32 அரசினர் கல்லூரிகள். மற்ற தனியார் கல்லூரிகளும் இருக்கின்றன. 1968-69-ஆம் ஆண்டிலே அரசினர் கலைக் கல்லூரிகளில் இருக்கிற கலையியல் பகுதிகள் எல்லாம் தமிழில் நடத்தப்படும் என்று திட்டவட்டமாக, தெளிவாகச் சொல்லி, அது அறிக்கையின் மூலமாக மாணவர்களுக்கெல்லாம் அறிவிக்கப்பட்டது. புகுமுக வகுப்புக்கு இருக்கிற 56,000 இடங்களில் அரசினர் கல்லூரிகளில் 8 ஆயிரத்து சில்லறை இடங்கள்தான் தமிழிலே பயிற்றுவிப்பதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் தனியார் கல்லூரிகளிலே 4,000 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 56,000 இடங்களில் 12,000 இடங்கள் தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 44 ஆயிரத்து சில்லறை இடங்களிலே ஆங்கிலத்திலே பயிற்றுவிப்பதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, யாருக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டது என்று இல்லை. ஆக, அரசினர் கல்லூரிகளிலே இதற்குத்தான் இடம் என்று அறிவிக்கப்பட்டு, அதை உணர்ந்ததற்குப் பிறகுதான் மாணவர்கள் இதிலே சேர்ந்திருக்கிறார்கள். அதிலும், இன்ன இன்ன பாடங்களுக்கு, இன்ன இன்ன வகுப்புகளுக்கு, இத்தனை இத்தனை இடங்கள் என்று தெளிவாக, திட்டவட்டமாகச் சொல்லி, அந்த இடங்களுக்குத்தான் மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு

பி.எஸ்.ஸி.-யில் சேர 500 பேர்கள் மனு அனுப்பியிருந்தாலும் 60 இடங்கள் இருந்தால் 60 பேர்கள்தான் ஏற்றுக்கொள்ளப் படுவார்கள். அவர்கள்தான், சூவாலஜி தாருங்கள்; அது இல்லா விட்டால் பாட்டனியாவது தாருங்கள்; அதுவும் இல்லாவிட்டால் எக்கனாமிக்ஸாவது தாருங்கள்; அதுவும் இல்லாவிட்டால் காமர்ஸாவது தாருங்கள் என்று அவர்களாகத்தான் கேட்கிறார்களே தவிர நாம் சொல்லக்கூடிய நிலை ஒன்றும் இல்லை. ஆங்கிலம்தான் படிக்க வேண்டுமென்று விரும்பினால் 48,000 இடங்கள் அவர்களுக்காக உள்ளன. 12 ஆயிரத்து சில்லறை இடங்கள்தான் தமிழுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. அதிலும் அரசினர் கல்லூரிகளிலே 8 ஆயிரத்து சில்லறை இடங்கள்தான் இதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. தெளிவாக அறிவிக்கப் பட்ட பிறகு, தெரிந்து, அறிந்து சேர்ந்திருக்கிறார்களே தவிர அவர்கள் ஏதோ ஒன்று எடுத்துவிட்ட பிறகு, அது கிடைக்காத காரணத்தினால் தமிழ்தான் படிக்கவேண்டுமென்று வற்புறுத்தப் படுகிற நிலை இல்லை.

ஆக, அரசினருடைய கொள்கையையும் நிலை நாட்ட வேண்டும் மெல்ல மெல்ல மாற்ற வேண்டுமென்று தெளிவாக, திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே படிக்க சில பேருக்கு இடமில்லையாகையால், அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்னமும் கியூ வரிசையிலே நின்று கொண்டிருக் கிறார்கள். ஒவ்வொரு பாடத்தையும் எடுத்துக்கொண்டதற்குப் பிறகு அதை மாற்ற வேண்டுமென்ற நிலை ஏற்படுமானால் அது முடியாத காரியம். உதாரணமாக ஸையன்ஸ் எடுக்கின்றவர்கள் பி.எஸ்.ஸி.-யிலே எல்லாவற்றையும் கெமிஸ்ட்ரிக்கு மாற்ற வேண்டு மென்று கேட்கிறார்கள். 120 இடங்கள் மொத்தம் இருந்தால் எல்லாவற்றையும் அதற்கு மாற்ற வேண்டுமென்று கேட்கிறார்கள். காமர்ஸ் வேண்டாம்; எக்கனாமிக்ஸ் வேண்டாம்; ஹிஸ்டரி வேண்டாம்; இந்த இடங்களையெல்லாம் பி.எஸ்.ஸி. சூவாலஜியாக மாற்றுங்கள்; எல்லா இடங்களையும் பி.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரியாக மாற்றுங்கள்; எல்லா இடங்களையும் பி.எஸ்.ஸி. ஃபிஸிக்ஸாக மாற்றுங்கள் என்றால் முடியாது. உதாரணமாக, கெமிஸ்ட்ரி போஸ்ட் கிராஜுவேட்டுக்கு 8 இடங்கள் என்றால் 8 இடங்கள் தான். அதிலே எந்த மாற்றமும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இது யாரையும் நம்பச் செய்து கெடுக்கிற நிலை அல்ல. ஒரு சிலர் விருப்பம் தெரிவிக்கிறார்களே, அவர்களாகக் கேட்பது தான். கெமிஸ்ட்ரி, ஃபிஸிக்ஸ் கிடைக்காமல் சி.பிளஸ் வாங்கிய தன் காரணமாக ஏதாவது கொடுங்கள் என்று சொல்லுகிற நிலை தான் இருக்கிறது. சி.பிளஸ் எடுத்துவிட்டதற்காக கெமிஸ்ட்ரி யாவது, பிஸிக்ஸாவது ஏதாவது வேண்டுமென்றுதான் கேட்கப் படுகிறதே தவிர, அரசு யாரையும் வற்புறுத்தவில்லை. அரசு அதற்கு பொறுப்பாகாது. ஆகையினாலே இதிலே ஒன்றும் தவறில்லை. திட்டவட்டமாகவும், தெளிவாகவும் எடுக்கப்



பட்டிருக்கிற கொள்கை இது. ஆங்கிலம் படிப்பவருக்கு ஏராள மான இடங்கள் இருக்கின்றன. ஆகவே, இதிலே எந்த மாற்றமும் செய்வதற்கில்லை. மாணவர்கள், சொன்னால் ஏதாவது கிடைக்குமா என்று எதிர்பார்க்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே இதை எழுப்பியதன் மூலம், அரசி னுடைய கருத்தை தெளிவாக்குவதற்கான சூழ்நிலை ஏற்பட்ட தற்காக, இதுதான் அரசினுடைய கருத்து என்று மாணவர்களுக்கு தெரிவிப்பதற்கு இந்த வாய்ப்பு பயன்படுகிறது என்று சொல்லி, ஆனால் இது ஒற்றி வைப்புத் தீர்மானத்தின் கீழே வராது என்று மட்டும் கூறிக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** எலுசிடேஷன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எலுசிடேஷன் என்று இல்லை.

**திரு. சா. மெய்யப்பன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர், ப்ரொஸிஜர் பற்றி. சார், 42-வது விதியில்

'A motion for an adjournment of the business of the Assembly for the purpose of discussing a definite matter of urgent public importance should be made in accordance with the rules in this chapter'

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 45-வது விதியில்

'The Speaker shall then read the statement referred to in rule 43 to the House and decide whether the matter proposed to be discussed is or is not in order'.

என்றுதான் இருக்கிறதேயொழிய இந்த 44-45-வது விதிகளின் கீழே மெம்பர் பேசுவதற்கு, அதற்குப் பிறகு அமைச்சர் அதற்குப் பதில் சொல்ல சட்டத்திலே என்ன விதி இருக்கிறது என்று புரிய வில்லை. அதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஓர் ஒற்றி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தவுடன் அது எப்படி அரசின் அன்றாட அலுவல்களுக்கு உட்படாதது என்பதைப் பற்றி பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் இது ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு உரியதுதானா இல்லையா என்பதற்கான காரணம் கூறினார்கள். அதற்குப் பிறகு சபாநாயகர் தீர்ப்பு கூறுவதற்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் முறை.

**திரு. சா. மெய்யப்பன் :** அது நான் எந்த விதியின்படி என்று கேட்கிறேன். ஏனென்றால், பிற்பாடு

'If the Speaker gives consent under rule 43, the matter may, after questions and before the further business set down in the list of business for the day is entered upon, ask the leave of the House to make the motion.'

அதுதான் கேட்டாயிற்று, அதற்குப் பிற்பாடு

'The Speaker shall then read the statement referred to in rule 43 to the House and decide whether the matter proposed to be discussed is or is not in order.'

அவ்வளவுதான் இருக்கிறது. ஆகையினுலே அதைக் கேட்க வேண்டுமே ஒழிய அமைச்சர் பேசியது சரியான புரோசிஜர் தானு என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது சட்டமன்ற விதிமுறைகளின்படி ஓர் ஒற்றி வைப்புத் தீர்மானம் கொண்டுவந்தால், அது ஒற்றி வைப்புத் தீர்மானமாக ஏற்றுக் கொள்வதற்கு உரியதா, இல்லையா என்பதை சபாநாயகர் முடிவு செய்வார். அப்படி முடிவு செய்யும்பொழுது சில சமயங்களில் அறையிலே கூட விதிமுறைகளை ஒட்டி அது ஒற்றிவைப்புத் தீர்மானத்தின்கீழே வராது என்று சொல்லி, அனுமதி மறுக்கலாம். அம்மாதிரி சமயங்களும் உண்டு. சில நேரங்களில் உறுப்பினர் கருத்தை அறிந்த பிறகு அது ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு உரியதா, இல்லையா என்று முடிவு செய்யக்கூடிய நிலைமையும் உண்டாகலாம். அந்த நிலையில் உறுப்பினர் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளித்து, அது எந்த முறையில் ஒற்றி வைப்புத் தீர்மானத்தின் கீழ் வரும் என்பதை அவர் விளக்கிய பிறகு, அதற்குரிய அமைச்சர் அவர்களிடமிருந்து அது ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு உரியதா, இல்லையா என்ற கருத்தை அறிந்த பிறகு, சபாநாயகர் அதுபற்றி ஒரு முடிவுக்கு வரலாம். இது தான் முறை.

திரு. சா. மெய்யப்பன்: விதியில் இடமில்லை. சம்பிரதாயம் என்பது தலைவர் அவர்களுடைய அபிப்பிராயமா? எல்லாவற்றிற்கும் இது போல் உண்டா?

MR. DEPUTY SPEAKER: Where the Speaker is not in possession of full facts to decide the admissibility of a notice, he may mention in the House the receipt of the motion and after hearing a brief statement from the member and or the Minister concerned whether the matter sought to be raised is with in the rules, give his decision on merit.

என்று விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறைகளை ஒட்டித்தான் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

அவை முன்னவர் அவர்கள் விளக்கியபடி, இது அரசினுடைய அன்றாட நிகழ்ச்சிகளுக்குட்பட்டதே தவிர, அப்பாற்பட்ட நிகழ்ச்சி அல்ல என்ற காரணத்தினுல், இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### வரகநேரி கிராமம், பெரியார் நகர்ப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து

திரு. ஆ. கு. சுப்பையா: 14—7—1968-ம் நாள் திருச்சி வரகநேரி கிராமம் பெரியார் நகரப் பகுதியில் நிகழ்ந்த கோரமான தீ விபத்து பற்றியும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு அளித்த நிவாரணம் பற்றியுமான அவசரமும் பொதுமுக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, there was a fire accident (Acidental one) in Periyar Nagar, Varaganeri village of Tiruchirappalli taluk, at 2 p.m. on 14th July 1968 in which about 347 houses were gutted, 4 women and 3 children lost their lives and about 7 herds of cattle perished. The loss was estimated at Rs. 2 lakhs.

The Collector who inspected the scene of accident on that day immediately arranged for feeding and other relief measures such as disbursement of cash grants to eligible victims. 128 families which were affected by fire were paid Rs. 80 each by the Collector towards housing and clothing grant and 110 families were paid Rs. 20 each towards clothing grant only. The remaining 109 families were not eligible for any of the grants.

## 5. அறிவிப்புகள்

### (i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனும்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதா

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனும்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதாவை இப் பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: நான் ஒரு மணி நேர விவாதத்திற்கு 57-வது விதியின்படி ஒரு அறிவிக்கை கொடுத்திருக்கிறேன். அது மிகவும் அத்தியாவசியமானது, முக்கியமானது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் மழை இல்லாத காரணத்தினுல், குடியாத்தம், வேலூர், திருப்பத்தூர், செய்யாறு போன்ற சில பகுதிகள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் 57-வது விதியின்படி ஒரு மணி நேர விவாதத்திற்குக் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றிய முடிவை என்னுடைய அறையிலே வந்து கேட்டுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

## 6. அரசினர் மசோதாக்கள்

### (i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனும்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதா

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு இனும்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதாவை இந்த மாமன்றத்தின் திருமுன் அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

**(ii) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, வாடகை வண்டிகள் (திருத்த) மசோதா**

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் துணைத் தலைவர் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1968-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) மசோதாவை இந்த மன்றத்தின் முன் அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

**(iii) 1968-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா**

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "1968-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதாவை இந்த மன்றத்தின் முன் அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

**(iv 196 -ம் ஆண்டு சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள் (திருத்த மசோதா)**

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "1968-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதாவை இந்த மன்றத்தின் முன் அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.



**(v) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, ஒருவருக்கே உரிய எஸ்டேட்டுகள் கிராமப் பணியையும் பரம்பரை கிராமப் பதவிகளையும் (ரத்து செய்யும்) மசோதா**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move for leave to introduce the Madras Proppprietary Estates' Village service and the Madras Hereditary Village Offices (Repeal) Bill, 1968.

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

**(vi) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பயிரிடப்படும் குத்தகைக்காரர்கள் (சிறப்பு விதித் துறை) மசோதா**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move for leave to introduce the Madras Cultivating Tenants (Special Provision) Bill, 1968.

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

**(vii) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குடிவார உரிமைப் பதிவு மசோதா**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move for leave to introduce the Madras Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1968.

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

**(viii) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொதுப் பொறுப்பு நிறுவனங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்த மசோதா**

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Sir, I move for leave to introduce the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Bill, 1968.

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

**(ix) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) மசோதா**

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Sir, I move for leave to introduce the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1968.

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

## 7. 1968-69-ம் ஆண்டிற்கான முதலாவது துணை நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்

* THIRU M. WILLIAM : Mr. Deputy Speaker, Sir, with regard to the Demands for Grants for Further Expenditure, I wish to offer a few remarks. Firstly, I will deal with the Education Demand. Nearly a crore of rupees is asked for for expenditure under this Head. Of course, very many schools have been opened and very many schools have been upgraded. Though much progress has been made in the matter of education, the pupils and the public still suffer due to several hardships experienced in the matter of school buildings in which the students are to study. Recently, due to the heavy rains in the Kanyakumari district a number of primary schools have fallen down. Similarly a few middle schools and also one or two high schools have fallen down. As a result of that the pupils and the teaching staff were exposed to rain and sun and for a few days the imparting of education was stopped in the schools. The Deputy Inspectors and the District Education Officers were rather indifferent and they did not go to the affected places. They did not make sufficient enquiry and they did not take any steps to replace the fallen buildings and so much so, some of the buildings which have fallen down remain in the same state and no structures—either temporary or permanent—have been put up in those places. So, the people there are facing a lot of difficulties due to rain and also sun. Representations have been made to the District Educational authorities and they did not care to take any steps in that direction and therefore I would request the Hon. Minister to spend some time on this matter and issue necessary instructions so that the schools which have fallen down are replaced and semi-permanent or permanent structures are erected there.

Now, I want to refer to one of the high schools in Karungal, about which representations have been made both when the Congress Party was in power and when this Government came to power. It is a very big school and its strength is about 2,000 and still there is no semi-permanent or permanent building for that high school. In the recent examinations, that school stood first in the district and in spite of that the request of the public has not been heeded and they are exposed to rain and heat. In this connection, I want to point out that a certain amount has been allotted for this purpose but the construction of the main building has not yet begun. So also in regard to another high school in Kollengode, people are experiencing the same hardships. In order to have effective control over the District Education Officers and the Deputy Inspectors, I think the post of a Chief Education Officer



for the Kanyakumari district is absolutely essential. Now the Chief Education Officer has to look after the Kanyakumari and the Tirunelveli districts. But since compulsory primary education was introduced in the Kanyakumari district as early as 1946, a number of high schools, middle schools and primary schools are located in each and every village. In view of the large number of schools in the Kanyakumari district, the post of a Chief Education Officer is highly necessary to effectively administer the department there. I think the Hon. Minister will consider the aspect of the matter and see that a separate Chief Education Officer is posted for the Kanyakumari district which is highly advanced in the matter of education.

Then with regard to Irrigation Demand, of course certain amounts are set apart for maintenance and repair works. Several representations regarding the Neyyar Left Bank Channel have been made. That work was ill-conceived and ill-executed. Though originally a sum of Rs. 12 lakhs was set apart for that work, it culminated in about Rs. 22 lakhs but still the work remains in an almost hopeless condition. Several branches of the main channels are always silted up due to soil erosion and so much so there is no smooth flow of water and the ryots who have taken loans from the taluk office and the Agriculture Department are not able to pay them back in view of the fact that they are not able to cultivate their lands in time due to obstructions here and there due to soil erosion, which have not been attended to in time. Also in some places breaches had taken place and in some other places water remained stagnant and there was no free flow and so much so a large part of the area still remains uncultivated though there is plenty of water in the dam and in the channel. So, I request the Hon. Minister to kindly consider this aspect of the matter and see that whenever there is soil erosion or obstruction, that must be immediately attended to and the hardships of the people should be relieved.

As regards transport, during the last budget discussion mention was made about the hardships experienced by the travelling public and the conductors in the matter of giving changes for the coins given by them. For instance, for a 22-paise ticket, the travelling public may give a 25-paise coin and the conductor may not have sufficient small coins to give the changes. So a view was expressed that the rates might be rounded off and the rate of 22-paise might be reduced to 20-paise or increased to 25-paise. But in the Kanyakumari district, immediately after the last Budget session was over, all of a sudden the rate of 22-paise was increased to 40-paise instead of reducing it to 20-paise or increasing it to 20-paise. This works a great hardship to the travelling public. Besides that, the travelling public have to pay 10-paise in the case of a particular bus and 20-paise in the case of another bus plying in the same route, and for the same distance. So, I request the Hon. Minister to see that a uniform rate is introduced in all the buses plying in the same route.

[Thiru M. William] [1968 ஆகஸ்ட் 19

முற்பகல் 11-00

We understand that some new posts are being created in some departments. In the matter of filling up these new posts, those persons who have been ousted from some other departments should be given preference. But that is not being done and their claims are not being considered. New persons are being recruited for those posts. There is the case of 'Fieldmen'. They have been working in the community blocks and some of them have put in three to seven years of service. They have been ousted from service. Several of them are married and have children and family depending on them. Without best owing any thought on their welfare, 500 of them have been ousted. They have all given a memorandum to Government and the Hon. Chief Minister, detailing their hardship and grievances. Some of these pesrsons are qualified to become bus conductors. But their applications are not being considered. Even the employment Officer is not prepared to send their names even though they are qualified. In spite of instruction by the Collector, the Employment Officer says he will adhere to the priority fixed by Government. May I therefore request that Government may issue instructions saying that even though the names of these people have been subsequently registered their names should be given priority in the matter of filling up new posts. If such directive is given from the Government, I am sure most of these persons who have been ousted could be re-employed.

Similarly there is the case of bus conductors. Hundreds of them have been interviewed about six months ago; yet postings have not been given. They are remaining outside without being appointed. Their grievances may be looked into by this Government. I request that proper steps may be taken to remedy their grievances.

* திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நமது மன்றத்தில் 1968-69-ம் ஆண்டுக்கான முதலாவது துணை நிதிநிலை அறிக்கைமீது விவாதம் நடைபெற்று வருகிறது. (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொது விவாதம் 1 மணிக்குள் முடிந்துவிட வேண்டும். அதன் பின்னர் வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்படும். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து நிமிடங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. குறிப்பாக விவசாயத்திற்கு முதலிடம் தரப்பட்டிருக்கிறது. அதிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 2 ஆயிரம் குழாய் கிணறுகளும், ஆயிரம் வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் வெட்ட வேண்டுமென்று வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கு உறுதுணையாக 50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பருவமழை சரியாக



1968 ஆகஸ்ட் 19] [திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்]

இல்லாத காரணத்தால் எங்கள் பகுதி பாதிக்கப்பட்டு, விவசாயத்தில் சிற்சில தொந்தரவுகள் ஏற்பட்டு விவசாயிகள் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சிறுபாசனத்தைப் பொறுத்தவரையில், பொதுப்பணித் துறை அமைச்சர் நன்முறையில் கவனம் செலுத்தி வருகிறார். கிராமங்களிலுள்ள விவசாயிகள் எல்லோரும் திருப்திப்படக்கூடிய அளவில் ஏரிகள், குளங்கள், குட்டைகள் மராமத்து செய்யப்பட்டுவிட்டன. ஒன்றிரண்டு இடங்களில் வேலை துவங்காமல் இருக்குமானால் அவைகளும் இந்நேரத்திற்குள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும். இதன் காரணமாக கிராமப்புற விவசாய மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். பெரிய நீர்த்தேக்கங்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

அதே நேரத்தில், தொழிற்சாலையைப்பற்றி இதிலே விரிவாகக் குறிப்பிடப்படவில்லை. இன்றைக்கு இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய அளவில் தொழிற்சாலைகள் வளரவில்லையென்று எல்லோரும் கருதுகிறார்கள். தொழிற்சாலைகள் அதிகமாக இல்லாத காரணத்தால் எங்கு பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து வருகிறது. இந்த நிதி ஒதுக்கீட்டிலே தொழிற்சாலைகளுக்கு இன்னும் சிரத்தை காட்டியிருந்தால், நலமாக இருக்குமென்று கருதுகிறேன். என்னுடைய தொகுதியில் வெள்ளைக் களிமண் அதிக அளவில் கிடைக்கிறது. அதைக் கொண்டு ஏதாவது தொழிற்சாலை அமையாதா என்று அப்பகுதி மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, இதை அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும், சில இடங்களில் சுமார் 200 அடிக்கும் கீழே சுத்தமான கருப்பு நிலக்கரி இருப்பதாக கிணறு வெட்டப் போனவர்கள் கூறுகிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரிந்தால், அந்தப் பகுதிகளை அரசாங்கமே கைப்பற்றிக் கொள்ளும் என்று பயந்து, அதை வெளியே சொல்லிக் கொள்ளாமல் இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அந்தப் பகுதிகளைப் பரிசீலனை செய்து பார்த்து, அங்கு நிலக்கரி கிடைக்கிறதா, அதனால் அரசுக்கு ஆதாயம் உண்டா, அப்பகுதி மக்களுக்கு பாதகம் இல்லாமல் அதை பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இலங்கையிலிருந்து ஏராளமான அளவில் தமிழர்கள் தாயகம் திரும்புகிறார்கள். ஏராளமான அளவில் தமிழர்கள் திரும்புகிறார்கள் என்றால், அவர்களுடைய கணக்கு என்ன? அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வசதிகள் செய்து தர முடியுமா என்பது பற்றி நான் சங்கடப்படுகிறேன். இலங்கையிலிருந்து திரும்பும் மக்களின் புனர் வாழ்வுக்காக பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், அவர்கள் இலங்கையில் என்ன தொழில்களைச் செய்து வந்தார்களோ, அந்த மாதிரியான தொழில்களில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்தவர்களுக்கு, நமது

மாநிலத்திலுள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலை கொடுத்துத் தர வேண்டும். விவசாயம் செய்து வந்தவர்களை, விவசாயப் பகுதிகளில் குடியேற்ற வேண்டும். தொழிற்சாலைகளில் வேலை செய்தவர்களை தொழிற்சாலையுள்ள பகுதிகளில் குடியேற்ற வேண்டும். அப்பொழுதுதான் இலங்கையில் செய்துவந்த தொழிலை மேற்கொண்டு, தங்கள் வாழ்க்கையை அவர்கள் செம்மைப்படுத்திக் கொள்ள முடியும். தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்பவர்களை விவசாயப் பகுதியிலும், விவசாயம் செய்து வந்தவர்களை தொழிற்சாலைப் பகுதிகளிலும், தொழில் செய்பவர்களை தேயிலைத் தோட்டப் பகுதிகளிலும் மாற்றி மாற்றி குடியமர்த்தினுல் அவர்களுடைய வாழ்க்கை சீர்கெட்டுவிடும். அவர்களுடைய தொழில் முறை மாருத வகையில் அரசு தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

அடுத்தபடியாக, கல்வியிலே எவ்வளவோ செலவு செய்தும் இன்னும் பற்ருக்குறை இருந்து வருகிறது. குறிப்பாக ஆதி திராவிட மாணவர்களுக்கு தரப்பட வேண்டிய வசதிகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. சுமார் 200 பேர்கள் கல்லூரியில் சேர்க்கப்பட்டார்கள். ஆனுல் அவர்கள் கல்லூரி மாணவர் விடுதியில் சேருவதற்கு இடமில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள் என்பதை அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இதுபற்றி அமைச்சர்களிடம் கேட்டபொழுது, "ஒதுக்கப்பட்ட பணம் இவ்வளவுதான், அரசாங்கம் கொடுக்க வேண்டியதையெல்லாம் கொடுத்தாகி விட்டது. இனிமேலும் கொடுக்க வேண்டுமென்று சொன்னுல், மத்திய சர்க்காரிடமிருந்து ஏதாவது மானியம் வந்தால்தான் மேலும் கொடுக்க முடியும் நம்முடைய மாநிலத்தின் நிதிநிலையை வைத்துச் சமாளிக்க முடியாமல் நாங்களும் தவித்துக் கொண்டிருக்கிருேம்" என்று கூறினுர்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து மத்திய சர்க்காரிடம் அணுகி மேலும் நிதி உதவி பெற்று அரிஜன மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் ஆகவே, உணவு விடுதியில் இடமில்லாமல் கஷ்டப்படும் மாணவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய அமைச்சர்கள் தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் விடுதியிலே இடம் கிடைக்காவிட்டாலும் வேறு இடத்தில் தங்கி படிக்கலாம் என்று பார்த்தால் அவர்களுக்கு சர்க்கார் உதவி நிதி கிடைக்காது என்று சொல்லப்படுகிறது. அதற்கு என்ன வழி வகைகள் செய்யப் போகிருர்கள் என்று தெரியவில்லை. அதையும் சீர்தூக்கிப் பார்த்து—நெருக்கடியான நிலைமை இருந்தாலும் அதற்கு ஒரு நல்ல முடிவு கண்டால் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்று. எனது தொகுதியில் உயர்நிலைப் பள்ளியைத் துவக்க வேண்டும் என்பதற்கு—இரண்டாண்டுகள் ஆகிவிட்டன, அமைச்சர் அவர்கள் வந்து கல்நாட்டு விழா





செய்து, ஒன்பதாவது வகுப்பு வரை இந்த ஆண்டு திறக்க வழி செய்த போதிலும்—6, 7, 8 வகுப்புகளைச் சேர்க்கவேண்டுமென்று பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டார்கள். காலதாமதமானுலும் ஒரு வகுப்புத் திறக்கப்பட்டது. அந்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டு 2 மாதங்களாகின்றன. நானும் மேலதிகாரிகளிடம் நடந்து நடந்து சங்கடப்பட்டு விட்டேன் என்ன காரணமோ தாமதித்துக் கொண்டிருக்கிருர்கள். டைரெக்டர் ஆபீசில் கேட்டால் அந்த பேப்பரை செக்ரடேரியட்டுக்கு அனுப்பிவிட்டதாகச் சொல் கிருர்கள். இங்கே வந்து கேட்டால் இன்னமும் எதுவும் வரவில்லை என்கிருர்கள். இடையில் எந்த இடத்தில்தான் வைப்பார்களோ தெரியாது. 1967-க்கு முன்பு இருந்த அரசாங்கத்தை மக்க ளெல்லாம் மாற்ற வேண்டுமென்று முயற்சி எடுத்து மாற்றி விட்டார்கள். அரசாங்கம் மாறிற்றே தவிர அதிகாரிகள் மாறியதாகத் தெரியவில்லை. அரசாங்க அதிகாரிகள் மாற்றப்பட வேண்டுமென்று நான் கருதவில்லை. அவர்கள் மனம் மாறினுலே போதும். தயவு செய்து அதிகாரிகளை அமைச்சர்கள் அழைத்து "நீங்கள் உங்களது பழைய மனப்போக்கை மாற்றிக் கொள்ளுங் கள். உடனுக்குடன் மக்களுக்கு நல்லது செய்கிற காரியங்களைச் செய்யுங்கள்" என்று சொல்லியாக வேண்டும். எங்கள் தொகுதி ஹைஸ்கூல் சம்பந்தமான விஷயத்திலும் சீக்கிரமாக உத்தரவிட வேண்டும். இல்லையென்ருல் நாம் எவ்வளவுதான் நன்மை செய்தும் கூட அதிகாரிகளின் இந்தப் போக்கினுல் மக்கள் மனம் சங்கடம் அடைந்து வருகிறது. ஆகவே இதற்கான வழிவகைகளைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**திரு. சா. மெய்யப்பன்:** தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையை ஓரளவு வரவேற்று என்னுடைய சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக இந்தத் துணை மானியக் கோரிக்கையில் செழிப்பான பகுதிகளுக்கே அதிகம் செழிப்புச் செய்யும் வகையில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஆழ்கிணறுத் திட்டம், பம்புசெட்டுகள் என்று தஞ்சை மாவட்டத்திற்கே அதிக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டி ருக்கிறது. ஆனுல் என்னுடைய ஜில்லா பின் தங்கிய ஜில்லா அந்தப் பகுதியை வளம் செய்வதற்கு ஒன்றும் செய்யப்படவில்லை. இந்தத் துணை மானியக் கோரிக்கையில் குறிப்பாக ஒரே ஒரு இடத்தில்தான் நான் எங்கள் மாவட்டத்தைப் பார்க்க முடிகிறது. அதுவும் ப்ரொக்யூர்மெண்டு விஷயத்தில், ஸ்மக்லிங் பிரிவென்ஷன் விஷயத்தில் எங்கள் ஜில்லா அதிகம் இடம் பெற்றிருக்கிறது. குறிப்பாக 6-வது பக்கத்தில்

Additional staff for five checkposts in Tiruchirappalli and Ramanathapuram districts to control movement cut of Thanjavur district.

என்று காணப்படுகிறது. இராமநாதபுரம் ஜில்லா தஞ்சை பார்டரையும், திருச்சி பார்டரையும் தொட்டு நிற்கிறது. இது மிக வறண்ட பிரதேசம். விளைச்சல் அதிகம் இல்லை. சாப்பாட்டிற்கு

[திரு. சா. மெய்யப்பன்] [1968 ஆகஸ்ட் 19

மற்ற இடங்களில் இருந்துதான் அரிசி வரவேண்டியிருக்கிறது. இருந்தும் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இருந்து அரிசி கடத்தப்படுவதைக் தடுக்க செக்போஸ்டு பார்டர்களில் அமைத்திருக்கிறார்கள். ஆயினும் புதுவயல், தேவகோட்டைக்கு அருகில் உள்ள மண்டலக்கோட்டை இங்கெல்லாம் விவசாயிகள் தங்களுடைய தானியத்தைத் தலையில் எடுத்து வந்து விற்க வருகிறபோது கூட—இவை தஞ்சை மாவட்டத்தில் இருந்து கடத்தப்பட்டது என்பதாகப் பிடித்து தொந்தரவு கொடுக்கிறார்கள். வழக்குகள் போடுகிறார்கள். இது பற்றி சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தும் கூட இன்னும் பல வழக்குகள் நடக்கின்றன. வழக்குகள் என்று போடுகிறபோது வேண்டிய அரண்கள் தேடிக்கொண்டே வழக்குகள் போடுகிறார்கள். அதன் காரணமாக கோர்ட்டுக்குப் போகிறபோது

We are not governed by moral things, we are governed by legal things.

என்று அவர்கள் சொல்லிவிடுகிறார்கள். இந்த நிலைமையினால் பொதுமக்கள் கஷ்டப்படுகிறார்கள். தலைச்சுமையாகக் கொண்டு வருகிறவன் தன்னுடைய ஜீவனத்திற்காகக் கொண்டு வருகிறான். சைக்கிளில் கொண்டு வருகிறவன் தன் குடும்ப ஜீவனத்திற்காகக் கொண்டு வருகிறான். அதிலும் வண்டியில் கொண்டு வருகிறவர்கள் தன்னுடைய வண்டியையும், மாட்டையும் என்னுடையது அல்ல என்று விட்டுவிட்டு ஓடிவிட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. தஞ்சாவூரில் இருந்து வந்தால் பிடிக்கட்டும். ஆனால் புதுவயல், மண்டலக்கோட்டை ஆகிய பகுதிகளிலேயே வைத்திருக்கிற ஸ்மக்ளிங் தடுப்பு அதிகாரிகள் இப்படி உள்ளூர்காரர்களுக்கே தொந்தரவு கொடுக்கிற அநியாயத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாக இன்றைக்கு கையில் உள்ள கொஞ்ச தானியத்தை விற்றுக்கூட வேளாண்மைச் செலவுக்கு பணம் சம்பாதித்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. கண்டிரோல்கள் எல்லாவற்றையுமே எடுத்து விடவேண்டும் என்கிற நிலையில்—இன்றைக்கு இப்படிப்பட்ட கெடுபிடிகள் இருப்பதையாவது குறைக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கேட்டிருக்கிற கோரிக்கையில் செக் போஸ்டுகளை இன்னும் விரிவுபடுத்த வேண்டும் என்பது ஒன்றாகும். செக் போஸ்டுகளை விரிவு படுத்திப் பயன் இல்லை. இன்றைக்கு லாரிகளில் கொண்டு போகப்படுபவை போய்க்கொண்டுதான் இருக்கின்றன. ஒன்றிரண்டு லாரிகள் வேண்டுமானால் பிடிக்கப்படுகின்றன. போஸ்டுகளை விரிவுபடுத்துவது என்பது பயனற்றது என்று அதுவும் கண்டிரோலைத் தளர்த்தவேண்டிய நிலைமையில் செக் தெரிவித்துக்கொள்கிறேன். **Employment of staff for the Government Godowns in Ramanathapuram district**



1968 ஆகஸ்ட் 19] [திரு. சா. மெய்யப்பன்]

என்று அடுத்து இருக்கிறது. இது மிகவும் முக்கியம். இராமநாதபுரம் ஜில்லாவில் விளைவு அதிகமாயில்லை. அரசாங்கம் தான் கொள்முதல் செய்து அங்கே விநியோகிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே கோடவுன்களில் இருக்கும் சரக்கை நல்ல முறையில் பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்கிறபோதே, வருகின்ற அரிசியின் தரத்தையும் கவனிக்கின்ற அதிகாரிகளைப் போட்டு நல்ல தரமான அரிசி சப்ளை செய்ய வேண்டுமென்பதை வற்புறுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மாநில காவல்படை முதலியவைகளை விஸ்தரிக்க வேண்டியதாக இருக்கிறது. அவை எல்லாம் நாட்டின் அமைதியைக் காப்பதற்கு வேண்டும் என்றாலும் நல்ல முறையில் அவர்கள் கண்காணிக்கப்படவேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில்—எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள்—அது மிகவும் பிற்போக்கான மாவட்டம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இப்பொழுது மக்களுக்கு முக்கியமாக வேண்டியது உணவுதான். அந்த மாவட்டத்தில் முக்கியமாக ஸ்ரீவில்லிபுத்தூர்; சாத்தூர் தாலூக்காக்களைப் பொறுத்தவரையில் பஞ்சப் பிரதேசமாகச் சிபாரிசு செய்யப்பட்டு கலெக்டர் மூலமாகக் கீழ் அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது: அங்கே 12 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு; 1,200 கிராம் அரிசி போடப்பட்டது. அதை 1,000 கிராமாகக் குறைத்திருக்கிறார்கள். 1,200 கிராம் கொடுத்தாலும் மூன்று நாட்களுக்குக்கூட அது போதாத நிலைமைதான் இருந்தது. அதையும் குறைத்த பிறகு அது 2 நாட்களுக்குக்கூட போதாத, ஜீவனம் செய்யமுடியாத இக்கட்டான நிலைமை இருக்கிறது என்பதை உணர வேண்டும். அந்த நிலைமையைப் பற்றி கலெக்டர் அவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் எடுத்துச் சொன்னாலும்கூட தமிழ்நாட்டில் உள்ள நிலைமையிலே கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் பக்கத்தில் உள்ள மாநிலங்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து அரிசி அனுப்பப்படுகிற நிலைமையைப் பார்க்கிறோம். திருநெல்வேலி மாவட்டத்திலே குறைக்கப்படவில்லை, அங்கேயெல்லாம் 1,200 கிராம் என்ற அளவிலேதான் போடப்படுகிறது, ஸ்டேடஸ் கோ மெயின்டெயின் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் மோசமான நிலைமைதான் இருக்கிறது. அமைச்சர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் பஞ்சப் பிரதேசமாக இருக்கக்கூடிய இடங்களிலே எல்லாம் கலெக்டர் மூலமாக முறையாக நல்ல விதத்திலே போதுமான அளவுக்கு அரிசி போடக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும் என்பதுதான். அரிசிக்குப் பதிலாக கோதுமையையும், மற்றப் பண்டங்களையும் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1968 ஆகஸ்ட் 19

மைதாவை எடுத்துக்கொண்டால் அதிக நாள் மைதாவை வைத்திருந்தால் அது கெட்டுவிடுகிறது. சோளத்தை எடுத்துக் கொண்டால் அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள், அதைச் சாப்பிடுவதற்கு கூட ஆள் கிடையாது, மாடுகள் கூட தின்னமுடியாத நிலைமையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே உடனடியாக பஞ்சத்தில் அடிபட்டிருக்கிற இடங்களில் எல்லாம் விளைச்சல் இல்லாத இடங்களில் எல்லாம் கடைகளின் மூலமாக உணவுப் பண்டங்களை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒரு சிறு விஷயத்தை இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆஸ்பத்திரி கட்டுவது சம்பந்தமாக சிங்கம்புனரி ஆஸ்பத்திரி கட்டுவதற்காக வசூல் நடக்கிறது, அங்கே ஒரு ஆஸ்பத்திரி கட்ட வேண்டியது தான், செய்யக் கூடாது என்ற அபிப்பிராயத்தில் நான் இல்லை. அந்த ஆஸ்பத்திரிக்காக மாநிலம் முழுவதிலும் அங்கங்கே உள்ள அதிகாரிகள், கூட்டுறவு அதிகாரிகள், டி.சி.டி.ஓ., ஏ.சி.டி.ஓ., இவர்கள் எல்லாம் பிரஷர் கொடுத்து வாங்கக் கூடிய நிலைமையைக் காண்கிறோம். இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். ராஜபாளையம் ஜனத்தொகை அதிகமான இடம். அங்கேயும் ஒரு ஆஸ்பத்திரி ஆரம்பிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். இராமநாதபுரம் மாவட்டத்திலேயே ராஜபாளைத்தில்தான் ஜனத்தொகை அதிகம். சிங்கம்புனரிக்குப் பக்கத்தில் திருப்பத்தூரில் எல்லாம் ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆனால் இங்கே இல்லை. எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் அது கஷ்டமாக இருக்கிறது. நம்முடைய ஊரில் ஆஸ்பத்திரி இல்லையென்று. அமைச்சர் அவர்கள் அதிகாரிகளிடத்திலே நல்ல விதமாகச் சொல்லவேண்டும். வீவர்ஸ் சொஸைடிகளில் காமன் பண்டிலிருந்து 500, 600 கொடுக்கவேண்டுமென்று டி.ஆர். பிரஸ் பண்ணிச் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அமைச்சர்கள் எல்லோரும் மாநில ரீதியிலே அவர்களே நேரில் சென்று வசூல்களைச் செய்து ஆஸ்பத்திரிகளை விரிவுபடுத்துவதற்காக நிதியைச் சேர்த்து வைத்துக்கொண்டு, அதன் பிறகு எங்கெங்கே ஆஸ்பத்திரி வேண்டுமோ அங்கெல்லாம் கட்ட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு சில இடங்களுக்கு மட்டும் அதிகமான கவனத்தைச் செலுத்திவிட்டு, சில இடங்களிலே கவனம் செலுத்தவில்லை என்ற நிலைமை வரக்கூடாது. அந்தப் பெயர் சர்க்காருக்கு வரக்கூடாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நெசவாளர்களுடைய பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. நெசவாளர்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சர்க்காரிலிருந்து கடன் கொடுப்பதால் தற்காலிகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. நிரந்தரமான நிவாரணம் அவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. அரசாங்கத்தினிடத்திலே முறையிட்டு அவர்களும் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இதிலே மத்திய சர்க்கார் அதிகமான கவனம் செலுத்தவில்லை



1968 ஆகஸ்ட் 19] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

என்ற நிலைமையில், மனிதாபிமான கண்ணோட்டத்தோடு இந்தப் பிரச்சினையைப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிதி நிலைமையைப் பொறுத்து—நிதி நிலைமை சரியாக இல்லாத நிலையில் இருந்தாலும்கூட—செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறோம் என்று அமைச்சர்கள் சொல்லக்கூடாது. நிதி நிலைமை அவ்விதம் இருந்தாலும்கூட, மனிதர்கள் வாழவேண்டும், என்ற மனிதாபிமான பிரச்சினையாக எடுத்துக்கொண்டு பரிகாரம் தேட முற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகரசபைகளைப் பார்ப்போமானால் அநேகமாக நிதி நிலை சரியாக இல்லை, அதிகமாக வேண்டுமென்று எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மத்திய சர்க்காரிலிருந்து நிதி வரவில்லை, மாநில சர்க்காரும் முடியாத நிலைமையில் இருக்கிறது என்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது. அதேபோல் நகரசபைகளும் சொல்ல முடியும், நகரசபைகளின் அதிகாரம் எல்லாம் மாநில சர்க்காரின் கையில் இருக்கின்றன, அதிகமாக உதவிசெய்ய வேண்டும் என்று சொல்லக்கூடிய நிலைமையில் சொல்லலாம், ஆனால் அது அழகல்ல. ஆகவே நகரசபைகளுக்கும் சர்க்கார் தலையிட்டு—எப்படி மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்துகிறார்களோ, அதேபோன்று—அதிகாரங்களைப் பரவலாக நகரசபைகளுக்கு அளிக்க வேண்டுமென்று, நான் ஒரு நகரசபைத் தலைவன் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன்.

தீ விபத்து சம்பந்தமாக எடுத்துக்கொண்டால், நிவாரணம் அளிக்கும்பொழுது சர்க்கார்தான் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது. எங்களுக்கும் அந்த வகையில் அதிகாரம் அளிக்க வேண்டும். வருமானம் உள்ள நகரசபைகள் எல்லாவற்றிற்கும் அதிகாரங்கள் அளிக்கலாம், அவை கடன் கொடுக்கலாம், வீடு கட்டிக் கொடுக்கலாம். இதிலேயும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, 1968-69-ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையின்பேரிலே பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். துணை மானியக் கோரிக்கையின் மூலம் செலவுக்கு 6 கோடியே 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே பெரும்பகுதி அரசாங்கச் சிப்பந்திகளுக்கு என்ற முறையிலும், ஆசிரியர்களுக்கு என்ற முறையிலும் அலவன்ஸ் கொடுக்கின்ற முறையிலே திட்டங்கள் எடுத்துக்கொண்டதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் இன்னொரு பிரச்சினையை நான் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கோவை மாவட்டத்திலே மூடப்பட்ட ஆலைகளை அரசு ஏற்று நடத்தவேண்டுமென்ற முடிவை—ஏற்கனவே, போன மே மாதத்திலே 27 ஆம் தேதியன்று

[திரு. கே. என். குமாரசாமி] [1968 ஆகஸ்ட் 19

முதலமைச்சர் அவர்களிடம் பேசும்பொழுது, தனியார்கள் ஆலைகளை நடத்த முடியாது என்று சொல்லி மூடிவிடுகின்ற நிலைமையில் அரசாங்கமே அவற்றினை எடுத்து நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க—முதலமைச்சர் அவர்கள் சரியென்று ஒத்துக் கொண்டார்கள். ஆனால் துணை மானியக் கோரிக்கையிலே ஆலைகளை எடுத்து நடத்தவேண்டுமென்றால் மத்திய அரசும் மாநில அரசும் பாதிப் பாதி பணங்களைப் போட்டு நடத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதற்காக இந்த துணை மானியக் கோரிக்கையில் பணம் ஒதுக்கப்படவில்லை. அதனாலே, இந்த முற்பகல் 11-30 ஆலைகளை எப்படி அரசு எடுத்து நடத்தப் போகிறது என்ற கேள்விக்கு அரசு பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல ஆலைகளை மூடிக் கொண்டே இருக்கிறார்கள். அதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. சம்பளம் கொடுக்க மறுக்கிறார்கள். அரசு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கவில்லையானால், மிகப் பயங்கரமான விளைவுகள் எங்கள் ஜில்லாவில் ஏற்படும் என்பதை அரசுக்கு உணர்த்த விரும்புகிறேன். இதிலே காலதாமதப்படுத்திக் கொண்டிருப்பதால், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய குடும்பங்கள் நாசமாகிக் கொண்டிருக்கின்றன. போன பட்ஜெட் கூட்டத்தின்போதுகூட, இந்தப் பிரச்சினையிலே அரசு மாறுதல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அரசு நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். இதுவரை ஒரு சில கோரிக்கைகளை ஏற்று கமிட்டிகளை ஏற்படுத்தியிருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் செய்யவில்லை. இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக ஒரு தீர்வை அரசு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் பல்லடம் பகுதியில் குடிதண்ணீர்ப் பிரச்சினையே பெரும் பிரச்சினையாக இருக்கிறது. கிணறு வெட்டினாலும் தண்ணீர் இல்லையென்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குக்கூட நம்மால் தீர்வு காண முடியாவிட்டால் பொதுமக்கள் என்ன செய்வார்கள்? இதிலே அவசரமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அங்கே பருவ மழை கிடையாது. அதன் காரணமாக விவசாயம் செய்ய முடியவில்லை. அதைப் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அதற்கு, பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் செய்ய முடியாது, வரிகளை வசூலிப்பதை மட்டுந்தான் ஒத்தி வைக்கலாம் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு அதைவிடக் கடினமான நிலைமை ஏற்பட்டு கொஞ்சநஞ்சம் கூட விவசாயம் செய்ய முடியாத நிலைமையில் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு முன் நடவடிக்கையாக ஏதாவது வேலை வாய்ப்புத் தருவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.



1968 ஆகஸ்ட் 19] [திரு. கே. என். குமாரசாமி]

அங்கு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் அரசு கவனம் செலுத்துவதாகவும், பெரிய நீர்ப்பாசனத் திட்டங் களுக்குத் தமிழகத்தில் வழிவகைகள் கிடையாது என்றும் சொல்லப்பட்டது. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு விரும்புகிறேன். குந்தா நீர்ப்பாசனத் திட்டத்தை மேலும் விரிவு இன்னும் தமிழகத்தில் வாய்ப்பு இருக்கிறது என்று நான் கூற படுத்துவதன் மூலம் அந்தப் பிரதேசத்தில் 50,000 ஏக்கருக்குத் தண்ணீர் கிடைக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்த முடியும். குந்தா நீர்த் தேக்கத்தில் இருந்து அதிகமாக வெளியே வரும் நீரை குளம் குட்டைகளில் தேக்கும் நிலைமையை அரசு ஏற்படுத்தினால், குடி தண்ணீர் பிரச்சினை, விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர்ப் பிரச்சினை ஆகியவற்றைத் தீர்க்க முடியும். நம்முடைய அரசு பெரிய அளவு மனது வைத்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தத் திட்டத்தைச் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

எங்கள் தாலுகாவில் 60, 70-க்கு மேற்பட்ட குட்டைகளைத் துப்புரவு செய்து ஆழப்படுத்துவதற்காக எஸ்டிமேட் தயார் செய்தும் பணம் ஒதுக்கப்படாமல் வேலை மேற்கொள்ளப்படவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்த நிலைமையில் இருக்கிறது. அதற்கு உடனடியாகப் பணம் ஒதுக்கி அந்தக் குளம் குட்டைகளைத் துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

கூட்டுறவு பாங்குகளில் கடன் வாங்குவதற்கு பங்குத் தொகையாக நூற்றுக்கு 20 ரூபாய் கட்டச் சொல்லுகிறார்கள். ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்க வேண்டுமென்றால், ஆயிரம் ரூபாய் பங்குத் தொகையாக செலுத்த வேண்டியிருக்கிறது. விவசாயிகள் இந்த அளவுக்கு அதிகமான பங்குத் தொகையைச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்தப் பங்குத் தொகையைக் குறைக்கும் மார்க்கத்தை அரசு ஆராய வேண்டும். கடந்த இரண்டு ஆண்டு ஆண்டுகளாகப் பருவ மழை இல்லாததால், சர்க்காருடைய கடன் வசூலைப் போன ஆண்டு தள்ளி வைத்தது மாதிரி, இந்த ஆண்டும் தள்ளி வைக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

தஞ்சாவூரில் சர்க்கார் கடன்களை வசூல் செய்வதாக அறிகிறேன். அவர்கள் கையில் காசு இல்லாத நேரம் இது. அவர்கள் சொசைடியில் வாங்கிய கடனைக் கட்டிவிட்டார்களானால், விவசாயத்திற்குச் செலவு செய்யப் பணம் இருக்காது. ஆகவே, கட்டாயப்படுத்தி வசூல் செய்வதை நிறுத்தி குருவை விளைச்சல் வந்ததற்குப் பிறகு வசூல் செய்யும் ஏற்பாட்டை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் விவசாயிகள் கையில் பணம் இருக்கும். அதைச் செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கோவை தாலுகாவில் மக்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் மிகவும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் குளம், குட்டைகள்

வேலைகளை எடுத்துக் கொண்டால் நல்லது. P.W.D.-ல் கேட்டால் பணம் இல்லையென்று கூறுகிறார்கள். அந்த வேலைகளை மேற்கொள்வதற்கான பணத்தை அரசாங்கம் உடனடியாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்தமைக்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின் மீது என் கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி கூறிக் கொள்கிறேன். ஒரு ஆட்சி இயந்திரம் செம்மையாக இயங்குவதற்கு அரசுத் துறையில் பணியாற்றுகின்ற அதிகாரிகள் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்த இந்த அரசு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முழுமையாக உயர்த்தாவிட்டாலும், மத்திய அரசு பணியாளர்கள் வாங்குகின்ற படி அளவுக்கு ஓரளவு சமப்படுத்த வேண்டுமென்ற முறையில் படியை உயர்த்தியதன் காரணமாக நடப்பு ஆண்டில் 2 கோடி 80 லட்சம் ரூபாயை அந்த இனத்தில் ஒதுக்கியிருப்பது, இந்தத் தமிழக அரசு, அரசு ஊழியர்கள் மீது எவ்வளவு பாசம் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டுவதாக இருக்கிறது.

அடுத்து, பாசனத்திற்காக, கல்லணை கால்வாய், காவிரிப் பாசனங்களை விரிவாக்க 26 லட்சம் ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கிறது. தஞ்சைச் சீமையும் அதன் மண வளமும் தமிழகத்திற்கு அதிகமான நெல் உற்பத்தியைத் தருகிறது என்பதைக் கருத்தில் கொண்டு 26 லட்சம் ரூபாயை நடப்பு ஆண்டில் செலவு செய்வதை நான் பாராட்டுகிறேன்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே விவசாயிகள், கோயிலிலே இறைவனைப் பார்த்தாலும் பார்க்கலாம், உரத்தைப் பார்க்க முடியாது என்ற நிலையிலே இருந்தார்கள். ஆனால் இன்று உரம் கடை வீதியில் இருக்கும் கத்திரிக்காயைப் போல் வீதியிலே எங்கு பார்த்தாலும் உரத்தைப் பார்க்கிறார்கள். அந்த அளவு உரம் உழவர்கள் கையில் கிடைக்கின்ற அளவுக்கு புதிய அரசு தெளிவான வரையறைகளை வகுத்து விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்திருக்கிறது என்பதை பற்றி விவசாய மக்கள் மிகவும் பெருமைப்படுகிறார்கள்.

சென்னையிலுள்ள எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையைப் பற்றி அதிகமான அக்கறை கொண்டு அதற்கும் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். முன்னாலே உறுப்பினர்கள் சொன்னது போல் இலங்கையிலே மனிதர்களாக இருந்தவர்கள், தமிழர்களாக இருந்தவர்கள், இலங்கை அரசால் அகதிகளாக அனுப்பப்படுகிறார்கள். அந்த அகதிகளின் வாழ்வு வளம் பெற வேண்டுமென்ற முறையில் பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த பத்து லட்சம் ரூபாய் போதுமானதுதானா என்ற வினாவை எழுப்புகின்ற போது மத்திய அரசைத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. ஏற்கனவே பொருளாதார நிலை சீர்குலைவு பெற்ற நேரத்தில், புதிய அரசு பொறுப்பேற்று இருக்கிறது. அதற்குப் பின்னாலே இத்தகைய அகதிகளைத் தமிழக அரசு அணைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறது. இந்த இரண்டு நிலைகளையும் பார்த்து மத்திய அரசு இலங்கையில் இருந்து வருகிற அகதிகளின் வாழ்க்கைக்கான செலவுகளின் முழுப் பொறுப்பையும் ஏற்று அவர்களுக்கு மறு வாழ்வு கொடுப்பதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





புஞ்சைக்கு வரி இல்லையென்று சென்ற ஆண்டு தமிழக அரசு அறிவித்தது. அந்தப் புஞ்சையிலே ஆயிரம், ஆயிரத்து ஐநூறு என்று தென்னை மரங்களை நட்டு இரண்டாயிரம் ரூபாய் அளவுக்கு வருமானத்தை பெறுகிறார்கள். ஆகவே, புதிய அரசு தென்னை மரங்களுக்கு ஒரு மரத்திற்கு 25 காசு வீதம் வரி விதித்து வருவாயைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று மா மரம், புளிய மரம் போன்று பலன் தரும் மரங்கள் புஞ்சை நிலங்களில் இருந்தால், அந்த மரங்களுக்கும் மரம் ஒன்றுக்கு 25 காசு வீதம் வரியாக வசூலிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், ஒரு ஊருக்கு ஒரு திரைப்பட அரங்குதான் இருக்க வேண்டுமென்ற நிலையை மாற்றவேண்டும். ஒரு மைலுக்குள் இரண்டு திரைப்படக் கொட்டகைகள் இருக்கக் கூடாது என்ற சட்டத்தை மாற்றியமைக்கவேண்டும். ஒரு ஊருக்கு எவ்வளவு திரைப்படக் கொட்டகைகள் வேண்டுமென்றாலும் வைத்துக் கொள்ளலாம், நாலைந்து கொட்டகைகள் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் என்ற உரிமையை பொது மக்களுக்கு வழங்க வேண்டும். யார் கேட்டாலும், எவர் கேட்டாலும் "திரைப்பட அரங்கா", எடுத்துக்கொள் என்ற நிலையை புது அரசு உருவாக்க வேண்டும். அதேபோன்று போக்குவரத்தை தேசியமயமாக்கினாலும், எவ்வளவு பஸ்கள் வேண்டுமானாலும் ஒரு வழித்தடத்தில் செல்லலாம் என்ற நிலையையும் உருவாக்க வேண்டும். அதனால் அரசுக்கும் அதிக வருவாய் கிடைக்கும். ஆகவே இதுபற்றி சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தரிசு நிலங்களை எடுத்துக் கொண்டால், ஒரு ஏழை விவசாயி தரிசு நிலம் வேண்டுமென்று கேட்டால், அவர் கணக்குப்பிள்ளை, நாட்டாண்மைக்காரர் இவர்களிடம் சென்று இன்னல்பட்டு அந்நிலத்தின் எண்ணைப் பெற்று அதை தாசில்தாரிடம் கொடுக்க தாசில்தார் இந்த எண்ணுள்ள சர்வே நிலத்தை இவருக்கு வழங்கலாமா என்று அதை ஊராட்சித் தலைவருக்கு அனுப்புகிறார். அந்தத் தலைவருக்கும் அந்த ஏழை விவசாயிக்கும் ஏதாவது தகராறு இருக்கும், ஆகவே அந்த ஊராட்சித் தலைவர் அவருக்கு பட்டா உரிமை வழங்கக் கூடாது என்று கூறிவிடுகிறார். ஆகவே நான் சொல்வது என்னவென்றால், தொகுதிவாரியாக எவ்வளவு ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றனவென்று ஒரு கணக்கு எடுத்து அதுபற்றிய விளக்கத்தை அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களிடம் ஒப்படைக்கவேண்டும். உங்கள் தொகுதியில் ஐம்பது அல்லது நூறு ஏக்கர் தரிசு நிலம் இருக்

என்ற நிலை தொடர்ந்து இருப்பது வேதனைக்குரியது. ஆகவே இப்படிப்பட்ட சம்பவங்கள் எங்கும் நடக்காமலும், நடந்த இடங்களில் விசாரணை செய்து சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். முதலில் அப்படிப்பட்டவர்களை அங்கிருந்து மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். எனது வட்டாரத்தைப் பொறுத்தவரையில் கோவில்பட்டி வட்டாரத்தில் தொடர்ந்து மூன்று நான்கு ஆண்டுகளாக பருவமழை பொய்த்திருப்பதினாலும், சமீபத்தில் இந்த ஓராண்டு காலத்தில் அங்குள்ள விவசாயிகள் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருள்களின் விலைகள் தலைகீழாக வீழ்ச்சியடைந்திருப்பதாலும் அங்குள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை நான் சொல்லும்போது விலைகளை உயர்த்த வேண்டுமென்று சொல்கிறேனோ என்று நினைக்கலாம். நான் சொல்வது, எங்கள் பகுதியில் பிரதானமாக விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்கள், பருத்தி, மிளகாய் வத்தல், மல்லி, நிலக்கடலை போன்றவையாகும். இவைகளின் விலைகளில் திடீரென்று இந்த ஆண்டு வீழ்ச்சியடைந்திருப்பதால் உற்பத்திச் செலவுக்குக் கட்டுபடியாகாமல் சர்க்காரிடம் வாங்கிய கடன்கள், மற்ற லேவாதேவிக்காரர்களிடம் வாங்கிய கடன்கள் இவற்றைத் திருப்பிச் செலுத்த முடியாமல் இந்த ஆண்டு விவசாயம் செய்ய யாரிடம் கடன் வாங்குவது. விவசாயம் எப்படிச் செய்வது என்ற சிக்கலுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், போன வருஷத்திற்கு முந்திய வருஷங்களிலே மிளகாய் வற்றல் 600, 700, 800 ரூபாய் வரை இருந்தது. போன வருஷம் 100 ரூபாய், 120 ரூபாயாகக் குறைந்து விட்டது. போன வருஷம் விலை அதிகமாகக் கிடைக்க வேண்டுமென்று கூட்டுறவுச் சங்கங்களில் ஈடு வைத்தார்கள். அதை இந்த ஆண்டு திரும்பப் பெற்றுக்கொள்ள ஈடுவைத்திருந்த பத்து குவிண்டலுடன் மேலும் 10 குவிண்டல் இந்த ஆண்டு மிளகாய் வத்தலையும் விற்றுத்தான் கட்ட வேண்டியிருக்கிறது. விலைகளெல்லாம் முன்பு இருந்ததை விட தலைகீழாக விழுந்து விட்டன. ஆனால் அவர்கள் விற்று முடிந்தவுடன் மறுபடியும் உயர்ந்துவிட்டது. இம்மாதிரி அந்த வட்டாரத்திலே, மானம் பார்த்த பூமியிலே உள்ள விவசாயிகளுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதைப் போக்கி, நியாயமாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைக்கும் வகையில் செய்ய அரசாங்கம் ஏதாவது யோசனை செய்ய வேண்டும். ஏனென்றால் உழைப்பின் பலனை அவர்கள் அனுபவிக்காமல் இடையிலேயுள்ள யாரோ அனுபவிக்கிறார்கள். உழைத்த அவர்கள் விற்கும்பொழுது 60 ரூபாய்க்குத்தான் விற்க முடிகிறது. ஆனால் அதையே அவர்கள் திரும்ப வாங்கும்பொழுது 200 ரூபாய் ஆகிவிடுகிறது. அதனால் வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கும் நியாயம் கிடைக்கவில்லை, உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கும் நியாயம் கிடைக்கவில்லை. இடையிலேயிருப்பவர்களுக்குத்தான் அது லாபகரமாக ஆகி விடுகிறது. இந்த நிலையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்



கொள்ளுகின்றேன். இது விஷயமாக அந்தப் பொருள்களுக்கு ஒரு நியாயமான குறைந்தபட்ச விலைகளை நிர்ணயித்து அதற்கு மேலே போகாமலும், குறைந்து போகாமலும் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கிணறுகள் வெட்ட பல கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடன்களை வாங்கி வெட்டக்கூடிய நேரத்தில், விவசாயிகள் வெட்டி முடிக்க சில நாட்கள் காலதாமதமாகக் கூடும். குறிப்பிட்ட ஒரு மாத காலத்தில் பார்க்கக் கூடிய நேரத்தில் காலதாமதமாகியிருந்தால் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கவில்லை என்று கூறி மானியம் இல்லை என்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்த கடனை கிணறு வெட்டுவதற்காகவே விவசாயிகள் செலவு செய்திருந்தாலும்கூட அதை உடனே திரும்பச் செலுத்த வேண்டுமென்று டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பிவிடுகிறார்கள். எந்த நோக்கத்திற்காகக் கடன் கொடுக்கப்பட்டதோ, அந்த நோக்கத்திற்காக பணம் செலவு செய்யப்பட்டிருந்தாலும் கூட, குறிப்பிட்ட காலத்தில் ரிப்போர்ட் அனுப்பவில்லை என்பதாலும், பத்து நாட்களுக்குப் பின்பு வேலை முடிக்கப்படுகிறது என்பதாலும் மானியம் இல்லை என்று சொல்லப்படுகிறது. மேலும் 10 வருஷ தவணைக்கு என்று வாங்கியிருப்பதை உடனே திரும்பக் கட்ட வேண்டுமென்றும் நிர்ப்பந்திக்கப்படுகிறது. அதுமாதிரியில்லாமல், கிணறு வெட்டுவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆனாலும் கூட அதைச் செய்து முடித்திருந்தால் மானியம் கிடைக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், கடனையும் எத்தனை தவணைகளில் செலுத்த வேண்டுமென்றிருக்கிறதோ, அத்தனை தவணைகளில் தான் வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகின்றேன்.

*திரு. என். துரை பாண்டியன்: தலைவரவர்களே, 1968–69-ம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் மேல் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

துணை மதிப்பீடு 6 கோடியே 40 இலட்சம் ரூபாய். ஆனால் கடந்த பட்ஜெட்டில் அல்லது உபரி பட்ஜெட் என்று ஆளும் கட்சியினர் பெருமிதமாகச் சொல்லி வந்தார்கள், பொதுமக்களும் அதை வரவேற்றார்கள். ஆனால் திடீரென்று இப்பொழுது பஞ்சம் வரவில்லை, வெள்ளம் உருவாகவில்லை, தீ விபத்துக்கள் பெரும்பாலும் வழக்கம்போல நடந்தது அல்லாமல் புதிதாக ஒன்றும் நடக்கவில்லை. இப்படிப்பட்ட நேரத்தில் திரைப்படத்திற்காகவும், வழக்கமாகவுள்ள நிலைமைக்காகவும் 6 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கு புதியதாக மதிப்பீடு வந்திருக்கிறது. இவைகளை ஒன்றாகச் சேர்த்து முன்னதாகவே பட்ஜெட்டில் சேர்த்திருந்தால், அது உபரி பட்ஜெட்டாக இருந்திருக்க முடியாது. ஆகவே, ஒரு சில மாதங்களுக்குள் இதிலும் ஒரு வித்தையைக் காட்டும் முறையில் இந்தத் துணை மதிப்பீடு இருக்கின்றது. குறிப்பாக வேதாகமத்தில் சொல்வது போல, "உள்ளவனிடத்தில் கொடுக்கப்படும், இல்லாதவனிடத்தில் உள்ளதை எடுத்துக்கொள்ளப்படும்"

கிறது, இந்தத் தரிசு நிலங்களை உங்கள் தொகுதியிலுள்ள ஏழை மக்களுக்குப் பட்டா வழங்கும் அதிகாரத்தை உங்களுக்கே கொடுக்கிறோம் என்ற உரிமையை சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு இந்த அரசு வழங்கவேண்டும். அப்படி வழங்கினால் ஏழை எளிய மக்கள் கிராம அதிகாரிகளிடம் சென்று கஷ்டப்படுவதோ அல்லது அதிகாரிகளிடம் சென்று அலைவதோ இல்லாத நிலை ஏற்படும். என் தொகுதியில் வைகை, பெரியாறு தண்ணீர் பாய்கிறது. ஆனால் தண்ணீர் பாய்கிற குளங்களை வெட்ட திட்டமில்லை என்று கூறுகிறார்கள். கடந்த வாரம் மதிப்பிற்குரிய சட்ட அமைச்சரோடு ஒரு மகாநாடு நடத்தினோம். அதில் பெரியாறு சம்பந்தப்பட்ட பொறியாளர் அவர்கள் சொன்னது, தண்ணீர் பாய்ச்ச அதிகாரமிருக்கிறது, ஆனால் குளங்கள் வெட்டுவதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லையென்று சொன்னார்கள். குளங்கள் வெட்டுவதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு ஏதாவது செய்யுமானால்தான் எங்களால் வெட்ட முடியும் என்று சொன்னார்கள். ஆக, கிட்டத்தட்ட 820 குளங்கள் உடனடியாக வெட்டி ஆழப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றன, அவைகளை வெட்டி ஆழப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புன்செய்க்கு தண்டத் தீர்வை அதிகமாகப் போடுகிறார்கள். அங்கு நெல்லைத் தவிர வேறு எதுவும் பயிரிடமுடியாது. வாய்க்கால் தண்ணீரைப் பயன்படுத்தி நீ நெல்லா பயிரிடுகிறாய் என்று, சாதாரணமாக ஏக்கருக்கு 20 ரூபாய் வரி போட்டால் புன்செய்யில் நெல் விளைவித்தால் ஏக்கருக்கு ரூ. 120 போடுகிறார்கள். கடந்த ஆண்டு என் தொகுதியில் அட்டம்பட்டி, தும்பம்பட்டி, கொடுக்கம்பட்டி ஆகிய இடங்களில் ரூ. 40,000-க்கு மேல் வரி போட்டிருக்கிறார்கள். அதை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலூர் மருத்துவமனைதான் எங்கள் பகுதியிலுள்ள தலைமை மருத்துவ மனை. அங்கு ரத்த சேமிப்பிற்கான வசதிகள், வெளியிடங்களிலிருந்து நோயாளிகள் வந்து வைத்திய வசதி பெற்றுக்கொள்வதற்கான வைத்திய வசதிகள் போன்றவற்றிற்கு கட்டட வசதி இல்லை. அதற்குப் பக்கத்தில் ஊராட்சி ஒன்றியப் பள்ளியிருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தை இந்த மருத்துவ மனைக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலூர் நகரம் அதிக மக்கள் தொகை கொண்ட நகரம். அங்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று முன்னாலிருந்த அமைச்சர்கள் கூட முயன்றிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆனால் அந்த முயற்சி நடைபெறவில்லை. ஆகவே பாலாறு அல்லது வைகையிலிருந்து குடிதண்ணீர் திட்டத்தை மேலூருக்கு அவசியம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. சோ. அழகர்சாமி** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தத்துணை மானியக் கோரிக்கைகள்மீது நான் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாக இதில், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தஞ்சா



வூரிலுள்ள தனியார் மின்நிலையத்தை அரசாங்கம் கையகப்படுத்த வேண்டுமென்ற திட்டத்தை உடனடியாக நிறைவேற்றியிருப்பதை நான் பாராட்டுகிறேன். அடுத்தபடியாக, இன்று ஸ்தலஸ்தாபன ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரது பஞ்சப்படியை உயர்த்தி அவர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்க திட்டமிட்டிருப்பதையும் நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் பொதுவாக கிராமப் புறங்களில் நடக்கும் போலீஸ் நடவடிக்கைகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் நொச்சிக்குளம் என்ற கிராமத்தில் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்ட நிலத் தகராறில் போலீஸ் அனாவசியமாகத் தலையிட்டது. அங்கு மூன்று நான்கு விவசாயிகளைப் போலீஸ் அடித்து துன்புறுத்தியது மட்டுமல்லாமல், துப்பாக்கிப் பிரயோகம் நடந்து ஒருவர் இறந்திருக்கிறார். மறுநாள் அந்தக் கிராமத்திற்குப் போலீஸ் ஒரு படையுடன் சென்று சாதாரண ஹரிஜன விவசாயிகள் மீதும், மற்ற விவசாயிகள் மீதும் கடுமையான தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் வைத்திருந்த நெல், அரிசி இவற்றைக் கொள்ளை அடித்துச் சென்றது மட்டுமல்லாமல், கோழிகள், இரண்டு கிடா இவற்றையும் அடித்துச் சென்று விட்டார்கள். இதுபற்றி தகவல் கொடுக்கப்பட்டு, எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் அதுபற்றி விசாரணை நடத்த வேண்டுமென்று சொன்னதன் பேரில் அந்த ஜில்லாவைச் சேர்ந்த ரெவின்யூ அதிகாரி ஒருவர் விசாரணை செய்வதற்காக அங்கு முகாம் இட்டார்கள். அந்த நேரத்தில் சாட்சி சொல்லக் கூட ஊரில் ஆள் இல்லை. சாட்சி சொல்லக்கூட அவர்கள் பயந்தார்கள். பயந்து சென்ற அவர்களை நாங்கள் கண்டு சாட்சி சொல்ல வாருங்கள் என்றால் அவர்கள் பயப்படுகிறார்கள். காரணம், சாட்சி சொன்னால் பின்னர் போலீஸார் நீ சாராயம் வைத்திருந்தாய் என்று சொல்லி கேஸ் போட்டு அடித்து நொறுக்கிவிடுவார்களோ என்ற பயம் அவர்களுக்கு. போலீஸ் செய்யும் அடக்குமுறைகளைப் பற்றி அதிகாரிகளிடத்தில் சொல்வதற்குக் கூட அவர்கள் பயந்துபோயிருக்கிறார்கள். இந்நிலை பலயிடங்களில் இருக்கின்றன. கயத்தாரில் ஒரு கொலைக் கேஸ் சம்பந்தமாக விசாரணை நடக்கக்கூடிய காலத்தில் சாட்சி சொல்ல மறுத்த ஒருவரை போலீஸ் ஸ்டேஷனில் வைத்து கடுமையாகத் தாக்கி அதனால் அவர் இறந்து விட்டதாகச் சொல்லப்பட்ட புகார்கள் உள்ளன. பஞ்சாயத்து தலைவர் முதற்கொண்டு, பஞ்சாயத்து போர்ட் தீர்மானம் போட்டும், பொது மக்கள் மகஜர் கொடுத்தும் கூட அந்தச் சப் இன்ஸ்பெக்டரை மாற்றாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் அங்கு இருப்பதால் நடந்ததை சாட்சிகள் சொல்ல முடியாமல் இருக்கிறது என்று கூறியும் அவர் மாற்றப்படவில்லை. அப்படி நடந்ததைப் பற்றி சாட்சி சொல்லக்கூட மக்கள் பயப்படுகிறார்கள். இம்மாதிரிச் சம்பவங்கள் எல்லாம் இந்த அரசுக்கு ஒரு கெட்ட பெயரை ஏற்படுத்தும். முன்னால் இப்படிப்பட்ட சம்பவங்கள் இருந்தது போன்று, குடிசைகள் பிய்த்து எறியப்பட்டாலும், என்ன சேதம் செய்தாலும் அதைப் பற்றி சாட்சிகூட சொல்லமுடியவில்லை

என்றபடி தென்னார்காடு, செங்கற்பட்டு, தஞ்சை ஆகிய செழிப்பாக உள்ள ஜில்லாக்களுக்கு அதிக மானியம் ஒதுக்கப்படுகிறது. இராமநாதபுரம், திருநெல்வேலி, வடார்க்காடு ஜில்லாக்களில் கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்து கஷ்டப்பட்டு விவசாயிகள் உழைக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கு எந்தவிதமான சலுகையுமிருப்பதாக இந்த பட்ஜெட்டில் காணப்படவில்லை. குறிப்பாக எனது மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், தெற்கே ஒதுங்கியிருப்பதுபோலவே, இந்த அரசாங்கமும் ஒதுக்கியிருக்கிறது.

எங்கள் ஜில்லாவில், அடைமான பாங்கிலிருந்து விவசாயிகளுக்கு அதிகக் கடன் கிடைக்க வாய்ப்பு, வசதி செய்ததாக அரசாங்கம், நமது தமிழக அரசு பெருமை பாராட்டுகிறது. ஆனால், நமது அமைச்சர்களுக்குத் தெரியும், இந்த அரசு வந்த நாள் முதலிலிருந்து, அந்தப் பாங்குகள் வைக்கப்பட்ட நாளிலிருந்து, இதுவரையிலும் அந்தக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லையென்று திட்டவட்டமாகச் சொல்ல முடியும். இராதாபுரம், நாங்குனேரி, வள்ளியூர் பஞ்சாயத்து யூனியன்களில் டிராக்டர்கள் வாங்கக்கூட பணம் இல்லை. உண்மையிலேயே நினைத்திருந்தால், திரைப்படத்திற்கு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பதை சில டிராக்டர்கள் வாங்க ஒதுக்கீடு செய்யலாம் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, கொழும்புவிலிருந்து வரும் அகதிகளுக்குத் துணை மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. அது இன்று ஏற்பட்ட பிரச்சினை அல்ல, அன்றே உள்ள பிரச்சினை. இதைத் துணை மதிப்பீட்டில் போடுவது சரியல்ல. இது மக்களை ஏமாற்றுவதற்குத்தான் என்று சொல்ல முடியுமே தவிர வேறொன்றுமில்லை. விவசாயிகளைக் காப்பாற்றக்கூடிய அளவில் உதவி செய்யலாம். உதாரணமாக, ஒரு யூனிட்டிற்கு 8 பைசா, 8¼ பைசா என்றிருப்பதை 7 பைசாவாக ஆக்கலாம். குறிப்பாக இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், தி.மு.க. ஆட்சி வந்தபிறகு விலைவாசி குறைந்திருக்கிறது என்கிறார்கள். எந்தவிலை குறைந்திருக்கிறது என்று சொன்னால் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பண்டங்களின் விலை தான் குறைந்திருக்கிறது, விவசாயிகள் வாங்கக்கூடிய பண்டங்களின் விலை குறையவில்லை. எனவே, அவர்கள் ஒரு யூனிட்டிற்குக் கொடுக்கக்கூடிய கட்டணத்தையாவது குறைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அதற்குப் பணம் அதிகமாக வேண்டுமென்றால், சர்க்கார் இப்பொழுது 'லாட்டரி' அடிக்கிறது, அந்த 'லாட்டரி'யை மாதத்திற்கு ஒரு முறை வைத்து பணத்தை அதிகரித்துக்கொள்ளலாம் என்று யோசனை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மில்களை எடுத்துக்கொண்டால், செங்கோட்டையில் ஒரு மில் மூடப்பட்டிருக்கிறது. அதனால் 600 குடும்பங்கள்



ஒரு வருஷ காலமாக வேலையில்லாமல் இருக்கிறார்கள். அது சம்பந்தமாக இந்தச் சர்க்கார் எந்தவிதமாக முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை என்ற அந்தக் குற்றச்சாட்டைச் சாட்டப்பிரியப்படுகிறேன்.

பள்ளி மாணவர்களை எடுத்துக்கொண்டால், எம்.ஏ., எம்.எஸ்.ஸி., அட்மிஷன்கள் எங்கள் ஜில்லாவில் ஓரளவு நடந்திருக்கிறது. சென்னை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அட்மிஷன்கள் ஆனதாகத் தெரியவில்லை. பெற்றோரும், பையன்களும் பெரியவர்களை அண்டிக்கொண்டிருக்கிறார்கள். இதுமாதிரி இல்லாமல் ஒவ்வொரு வருஷமும் ஜூலை 1-ம் தேதிக்குள்ளாக மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழில் ஆர்வமிருப்பதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். பையன்களும், 'தமிழ் வாழ்க, இந்தி ஒழிக' என்று சொன்னார்கள். ஆனால் இன்று மாணவர்கள் தமிழில் படிக்கப் போகிறேன் என்று சொல்லவில்லை. மாணவர்கள் ஆங்கில மீடியம் இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள் என்பதை இந்த அரசுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** எல்லாவற்றையும் ஆங்கிலமாக மாற்றிவிட வேண்டுமென்பது உறுப்பினரின் எண்ணமா?

**திரு. என். துரைபாண்டியன்:** கட்டாயத் தமிழாகச் செய்யாமல், மனதார அதை விரும்புகிறவர்கள் அதை இஷ்டப்பாடமாக எடுத்துப் படிக்க அனுமதி வழங்கும்படியாக அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்கு உதவி செய்வதாகச் சொல்லுகிறோம். நில அடைமான பாங்கிலிருந்து கடன் கிடைக்க, சொத்து மதிப்பீடு, செக்யூரிட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. பட்டா வழங்குகிறோம் என்று சொல்லுகிறார்கள். கடந்த அரசாங்கமும் செய்தது. நிலமில்லாத ஏழைகளுக்கு, ஜாதிமத பேதமில்லாமல் ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்கிறார்கள். அதில் விவசாயம் செய்ய வேண்டுமென்றால் அதற்குக் கிணறு வெட்ட வேண்டும். அதற்குக் கடன் எங்கே கேட்பது? பம்பு செட்டு வைக்கக் கடன் எங்கே கேட்பது? என்னுடைய தாழ்மையான விண்ணப்பம் என்னவென்றால், இப்படி ஐந்து ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறோமே இதையே ஜாமீனாக வைத்துக்கொண்டு ஏழை விவசாய மக்களுக்குக் கிணறுகள் வெட்டி, பம்பு செட்டு வைத்துக்கொள்ள உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, எனது மாவட்டத்தை நீங்கள் எடுத்துக்கொண்டால் எலெக்டிரிசிட்டி மெயின் விஸ்தரிப்பு அதிகம் இருந்தாலுங்கூட, பல குறைகள் இருக்கின்றன. நாம் பெருமையாக மேடைகளிலே பேசுகிறோம், தமிழகமெங்கும் மின் விஸ்திரிப்பு அதிகப்படுத்தி நண்பகல் 12-00

[1968 ஆகஸ்டு 19

[திரு. என். துரைபாண்டியன்]

யிருக்கிறோம் என்று. உண்மைதான், ஒத்துக்கொள்கிறேன். ஆனால் என்ன நிலைமை இருக்கிறது என்றால் விவசாயிகள் கிணறு வெட்டி, பம்ப் செட் அமைத்து, ரூம் கட்டி வைத்திருக்கிறார்கள், அதற்காக. மின் இணைப்பு வாங்க உத்தியோகஸ்தர்களை அணு கினால், அங்கே போஸ்ட் இல்லையென்று சொல்லிக்கொள்ளும் தன்மைதான் இருக்கிறது. இன்றைய நிலையில், திருநெல்வேலியில் ஒரு மோட்டார்கூட எக்ஸ்ட்ரா கிடையாது. ஆதலால், மோட்டார் பற்றாக்குறை, ஒயர் பற்றாக்குறை, போஸ்ட் பற்றாக்குறை அங் கிருக்கிறது. ஆகையால், அந்தப் பற்றாக்குறைகளையெல்லாம் உடனடியாக நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1968-69-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின்மீதும், 1968-69-ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் மீதும் என்னுடைய கட்சியின் சார்பிலே கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல முன் வருகின்றேன். இந்த ஆண்டின் எதிர்பாராச் செலவு நிதி யிலிருந்து முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ள 49 திட்டங்களுக்குப் பேரவையின் அனுமதி வேண்டப்படுகிறது. அதிலே, மாநில அரசுப் பணியாளர்களுக்கு அதிக அகவிலைப் படி கொடுப்பதற்கும், இன்னும் வைத்திய வசதியை விஸ்தரிப்பதற்கும், பயன்தரும் வேளாண்மைத் திட்டங்களுக்கும், சென்னை நகரக் குடிநீர் திட்டத் திற்கும், முன்னாள் இராணுவத்தினர் நல்வாழ்விற்கும், இன்னும் சொல்லப்போனால் இலங்கையிலிருந்து தமிழகம் திரும்ப இருக்கிற நமது உடன் பிறப்புக்களுக்கு வாணிபக் கடனுதவி வழங்கு வதற்கும், கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகள் திறப்பதற்கும் நிதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றிற்கு நிதி ஒதுக்கு வதிலே யாருக்கும், எந்த கட்சிக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால், தமிழக அரசுசெய்தித் துறை தயாரிக்கின்ற செய்திக்கதிர் படத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 1½ இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த 1½ இலட்சம் ரூபாயில் செய்திக் கதிர் இப்பொழுது அவசியம்தானா? ஏற்கனவே, மத்திய அரசாங்கம் இதுபோன்ற செய்திப் படத்தை எடுத்து வருகிறது, எல்லா மாநிலங்களிலும் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளை எடுத்து வெளியிட்டு வருகின்றார்கள். அப்படி இருக்கின்ற பொழுது முழுக்க முழுக்கத் தமிழ்நாட்டில் நடக்கின்ற நிகழ்ச்சிகளை எடுத்து வெளியிடுவதற்காகச் செய்திக் கதிர் படங்க ளுக்காக 1½ இலட்சம் ரூபாய் அவசியம்தானா என்று கேட்க விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் பலமுறை சொல்லியிருக் கிறார்கள், கட்சி வேறு, அரசாங்கம் வேறு என்று. தமிழக அரசு தயாரித்திருக்கின்ற ஒன்றிரண்டு செய்திக் கதிர் படங்களைப் பார்க் கின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியது. முழுக்க முழுக்க அமைச்சர் கள் பங்கு கொள்ளுகின்ற நிகழ்ச்சிகள்தான் கட்சியை வளர்ப்ப தற்குப் படமாகக் காட்டப்பட்டு வருகின்றது. அப்படியானால்



1968 ஆகஸ்டு 19]

[திரு. என். எஸ். சித்தன்]

தமிழ்நாட்டில் அமைச்சர்கள் கலந்து கொள்ளாத நிகழ்ச்சிகளே இல்லையா ? மத்திய அமைச்சர்கள் கலந்து கொள்ளுகின்ற நிகழ்ச்சி கள் இல்லையா? இது வீண் விரயமாக இருக்கிறதே தவிர, பொது மக்களுக்கு நல்ல பலன் விளைவிக்கக் கூடிய செய்திப் படமாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அகில இந்திய வானொலியிலே மிக விரிவாக அமைச்சர்களுடைய பேச்சை நாள் தோறும் ஒலி பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். இதுவரை இல்லாத அளவுக்கு மிகப் பரிவோடும், உருக்கத்தோடும், அமைச்சர்கள் பேச்சை ஒலி பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்—நமக்கு ஒரு செலவும் இல்லாமல். அப்படி இருக்கும்போது இந்தச் செய்தித் துறை யினுடைய செய்திக் கதிர் அவசியம் தானா? சர்க்கார், இதற்காக ஒதுக்கியுள்ள பணத்தை வேறு ஏதாவது நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற செய்திக் கதிர் படங்களுக்காகப் பணம் ஒதுக்கி யிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஆண்டுதோறும் சிறந்த தமிழ்ப் படம் தயாரிப்பதற்குப் பரிச ளிக்க ரூபாய் 1,10,000 ஒதுக்கியிருக்கிறார்கள். இதுவும் அவசியம் தானா என்று கேட்க விரும்புகிறேன். ஏனென்றால், இப்போது வருகின்ற தமிழ்ப் படங்கள் எல்லாம் மிகவும் தரக் குறைவாக இருக்கின்றன. ஏனைய படங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது நிச்சயமாக நல்ல தரமான படங்கள் இல்லை. இந்தியா விலே எத்தனையோ மாநிலங்களிலே படங்கள் தயாரிக்கிறார்கள். இந்திக்கு அடுத்தபடியாக, அதிக அளவு படங்கள் தமிழில் தயா ரிக்கிறார்கள். இருந்தும்கூட தமிழில் தரமான படங்கள் இல்லை. இதுவரை தமிழ்ப் படங்களுக்கு ஜனாதிபதி பரிசு கிடைக்கவில்லை. இந்திக்காரர்கள் பெற்றிருக்கிறார்கள். வங்காளத்தார்கள் பெற்றி கிறார்கள் ? கேரளத்தவர்கள் கூடப் பெற்றிருக்கிறார்கள். மொத்தத்தில் தமிழ்ப் படங்கள் இன உணர்ச்சியைத் தூண்டக் கூடிய, கீழ்த்தர உணர்ச்சியைத் தூண்டக் கூடியதாக இருக் கின்றனவே தவிர, தரமானவையாக இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். தமிழ்ப் பட தயாரிப்பாளர்கள் யாருமே நல்ல படங்களைத் தயாரிக்கவில்லை; அவர்கள் தயாரிக்கின்ற படங்கள் அத்தனையும் மட்டம் என்கிற கருத்தில் நண்பர் அவர்கள் பேசிக் கொண்டிருக் கிறார்கள். அவர்களுடைய சார்பில் இங்கே அவர்களுடைய பிரச்சினைகளை எடுத்துப் பேசுவதற்கு, பதில் அளிப்பதற்கு யாருமே இல்லாத அவர்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது என்பது . . .

திரு. கே. விநாயகம் : இது என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர்?

THIRU N. V. S. SITHAN : Is it in order?

பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான தமிழ்ப் படங்கள் தரக் குறைவாக இருக்கின்றன. இங்கே இருக்கிற உறுப்பினர்

களை நான் சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்கிறேன், நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள், தமிழ்ப் படங்கள் ஒன்றிரண்டைத் தவிர, மீதமுள்ள படங்களெல்லாம் தரமுள்ளபடங்களா? ஆக, மிகக் குறுகலான காலத்திலே குறைந்த உழைப்பிலே நிறைய ஊதியம் சம்பாதிக்கிற படங்கள் தயாரிக்கின்றவர்களுக்கு நமது அரசாங்கம் நிதி ஒதுக்க வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழக அரசு சிறந்த படங்களுக்குப் பரிசளிக்கின்ற திட்டத்தைக் கண்டிக்கிற வகையில் தரமான படங்கள் இருக்கவில்லையென்று கனம் உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். நல்ல படங்கள் எடுக்க வேண்டுமென்பதற்காக, சிறந்த படங்கள் வர வேண்டுமென்ற எண்ணத்திலேதான் பரிசளிக்கின்ற திட்டத்தை இந்த அரசாங்கம் புகுத்தியிருக்கிறது. பரிசளிக்கின்ற திட்டத்தையும் கண்டிக்கின்ற கனம் உறுப்பினர் அவர்கள் தரமான படங்கள் இல்லையென்று கூறுவது பொறுத்தமற்றது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாதம் இதற்காக மத்திய அரசாங்கத்தினர் பரிசுகள் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். நமக்குள்ள பற்றாக்குறை நிதியில் இது அவசியந்தானா? இந்தத் தொகையை வேறு பல நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று தான் நான் சொல்ல விரும்புகிறேன். இந்த ரூபாய் 1,10,000 வேளாண்மைக் காரியங்களுக்காகவோ, அல்லது வாடுகின்ற நெசவாளர்களுக்காகவோ, அல்லது குடி தண்ணீர்த் திட்டங்களுக்காகவோ, அல்லது ரோடு போடுவதற்காகவோ, அல்லது புதிய கண்டுபிடிப்புகளுக்காகவோ செலவிட வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், முதலமைச்சர் அவர்கள் இந்த 10-வது இனத்தின் கீழே ரிசர்வ் படையை வலுப்படுத்தும்பொருட்டு, 16 அணிகள் கொண்ட ஒரு பிரிவை ஏற்படுத்துவதற்காக ரூபாய் 11,37,500 வேண்டியிருக்கிறார்கள். உண்மையிலே, இந்த ரிசர்வ் படையை வலுப்படுத்துவதற்காக இந்தப் பிரிவை ஏற்படுத்துவது என்பது, இந்த மன்றத்திலேயும், வெளியேயும் சொல்லப்பட்டு வருகிறதே, சட்டம், ஒழுங்கு, அமைதி சீர்குலைந்து வருகிறது என்று, அதனை அரசு ஒத்துக்கொண்டது போலாகின்றது. மேலும், என்னுடைய விருப்பம் இந்த படை நல்ல பணிகளுக்காகப் பயன்பட வேண்டுமே தவிர, ஆகஸ்டு முதல் நாள் அன்று, சென்னையிலே காந்திய வழியிலே சென்று கொண்டிருந்த ஊர்வலத்திலே, ஜனநாயகத்தைக் காப்பாற்றக் கூடிய முறையிலே சென்று கொண்டிருந்த ஊர்வலத்திலே, அமைதியாகச் சென்று கொண்டிருந்த ஊர்வலத்திலே, இளைஞர் காங்கிரஸ் ஊர்வலத்திலே, அந்த ஊர்வலத்தைக் கெடுக்க







வேண்டுமென்பதற்காக, மாசுபடுத்த வேண்டுமென்பதற்காக, தடியால் அடித்து, அதன் பொருட்டு சென்னை வீதியிலே பலர் குருதி கொட்டியிருக்கிறார்கள், அதைப் போன்ற பணிகளுக்காக இதைப் பயன்படுத்த வேண்டாமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். நான் மிகவும் பரிவோடு சொல்லிக் கொள்கிறேன், ஆகஸ்டு ஒன்றாம் தேதி நடந்த தடியடி நிகழ்ச்சி நமது முதலமைச்சர் அவர்களின் கரங்களைக் கறைபடுத்தி இருக்கிறது. அந்தக் கறை நீக்கப்பட வேண்டுமானால், அது களையப்பட வேண்டுமானால் நீதி விசாரணைக்கு உத்திரவிட வேண்டும். நீதி விசாரணை வேண்டுமென்பதிலே வலிவு, நியாயம் இருக்கிறது. இந்த அரசு நியாயமான அரசாக இருந்தால், ஜனநாயகத்திலே நம்பிக்கையுள்ள அரசாக இருந்தால், நீதி தவறாக அரசாக இருந்தால் ஆகஸ்டு ஒன்றாம் தேதி நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி நீதி விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை

*** திரு. எ. பாலசுப்பிரமணியன் :** அவைத் தலைவர் அவர்களே, இது குறித்துப் பேசும்பொழுது விரிவாக சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழக அரசின்கீழ் பணி புரியும் 4,500 மருந்தாளர்கள் தங்களுடைய நியாமான குறைகள் சிலவற்றை நீக்க வேண்டுமென்று வற்புறுத்தி, நிவாரணம் கிடைக்கவில்லையென்று காரணத்தைக் கூறி இப்பொழுது பெரிய மறியல்களிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கைதாகிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அனுதாபத்தோடு அவர்களுடைய குறைகளைக் கவனித்து, துரித நடவடிக்கை எடுத்து அவற்றைத் தீர்க்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்கிறேன். உண்ணாவிரதம் இருக்கிறார்கள். மறியல் என்று கூறியதற்கு மன்னிக்கவும். தமிழகத்தின் பொருளாதாரத்தில் முக்கியமாக இருப்பவை ஆலைகள், பஞ்சாலைகள், நூற்பாலைகள். தற்சமயம் 27 ஆலைகள் மூடிக்கிடக்கின்றன. பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகளுக்கு வேலை இல்லை. இந்தப் போக்கு இன்னும் நீடித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு நமது தமிழக அரசு பொறுப்பு இல்லை என்பது எனக்குத் தெரியாதது அல்ல. 30 கெஜம் வாங்க வேண்டுமென்ற நிலை போய், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 18 கெஜம் ஒவ்வொருவரும் வாங்கவேண்டுமென்று சொன்னதெல்லாம் போய், இப்போது 16 கெஜம்கூட வாங்க முடியாத நிலையில் நாட்டு மக்கள் இருக்கிறார்கள். இதன் விளைவாக ஆறு கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி துணி தேங்கியிருக்கிறது. கிராமத்திலுள்ள மக்கள்தான் வாங்கும் சக்தி குறைந்திருக்கிறார்கள் என்றில்லை. நகர மக்களிலேயும், கீழ்த்தட்டிலே இருக்கும் மக்களும், நடுத்தர மக்களும் வாங்கும் சக்தியை இழந்து கொண்டே வருகிறார்கள்; வாங்கும் சக்தி குறைந்து கொண்டே வருகிறது. இது மேலும் மேலும் . . .

ளுள்ளவரைக்கூட வாய்க்கு வந்தபடி மரியாதை இல்லாமல் பேசுகிறார். இரவில் டார்ச் லைட் வைத்துக்கொண்டு குடிசைகளில் புகுந்து அக்கிரமம் செய்கிறார். இப்படியெல்லாம் நடந்துகொண்டிருக்கிறது It is endemic in the system. அமைதி சட்டம் பாது காக்கப்பட வேண்டும், ஜனநாயகம் குலைந்துவிட்டது என்று கூக்குரல் போட்டுக் கொண்டிருந்தார்கள் காங்கிரஸ்காரர்கள். அதன் விளைவை அவர்கள் அனுபவித்தார்கள். அவர்கள் அடிப்பட்டார்கள் என்று நான் மகிழ்ச்சி அடையவில்லை ஆனால், நாங்கள் சிலர் அடிப்பட்டபொழுது அவர்களில் சிலர் மகிழ்ச்சி அடைந்தார்கள். அதுமாதிரித் தி.மு.க.-வினர் சிலர் அடிப்பட்டபொழுது அவர்களில் சிலர் மகிழ்ச்சியுற்றார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நானோ எனக்கு எதிரில் இருப்பவர்களோ காங்கிரஸ்காரர்கள் அடிப்பட்டார்கள் என்பது குறித்து மகிழ்ச்சி அடையக் கூடியவன் அல்ல. ஊர்வலத்தில் சென்றவர்கள்மீது தடியடிப்பிரயோகம் நடந்திருக்கிறது. பலர் அடிப்பட்டு, காயமடைந்து, ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். பலருக்கு தலையிலே காயம் என்ற நிலை, ஆகவே, இதுபற்றி ஒரு விசாரணை நடத்துவது நலம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இம்மாதிரிச் சம்பவங்கள் போலீஸ்காரர்களுடைய மிருகத்தனமான நடவடிக்கையைக் காட்டுகின்றன. போலீஸாரால் தடியடிப்பிரயோகம், அல்லது துப்பாக்கிச் சூடு இருந்தால், அதுபற்றி ஒரு விசாரணை நடக்கும் என்ற கவலை, பயம் இருக்கவேண்டும் என்பதான் என்னுடைய நிலை.

ஒரு மாநில அரசுக்கு என்னென்ன செய்யமுடியும், என்ன என்ன செய்யமுடியாது என்பதெல்லாம் நன்றாகத் தெரியும். நாம் எதைச் செய்தாலும், மககள் நம்முடைய 'போன ஃபைடிசை' ஏற்றுக் கொள்ளவேண்டும். சாதாரண நிலையை ஏற்படுத்த வேண்டும். இந்த அதிகார வர்க்கம் அதைக்கூட அனுமதிக்க மாட்டார்கள். அதிலும் போலீசார் கட்டாயம் செய்யமாட்டார்கள். அந்த மாதிரியான நிலைமை இருந்தால்தான் மக்கள் அமைதியாக இருக்க முடியும். அந்த நிலை இல்லை என்பதை மிக்க வருத்தத்தோடு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஞாயிற்றுக்கிழமை லீவு உண்டு, சம்பளம் உண்டு என்பது இருக்கிறது. ஹைகோர்ட் தீர்ப்பு இருக்கிறது இருந்தாலும், முதலாளிகள்—தோல்ஷாப் முதலாளிகள்----அதைப் பின்பற்றுவதில்லை. அவர்களை பின்பற்றச் செய்ய என்ன ஏற்பாடு இருக்கிறது? ஒன்றும் இல்லை. எத்தனை கம்ப்ளெயிண்டுகள் கொடுக்கிறார்கள். எத்தனை கிளர்ச்சி செய்ய வேண்டியிருக்கிறது. முதலாளிகள் செய்யும் தவறால் இவை ஏற்படுகின்றன. ஆனால் என்ன சொல்லுகிறார்கள், கிளர்ச்சி செய்கிறார்கள், ஸ்ட்ரைக் செய்கிறார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். இந்த முதலாளிகள் முதல் அமைச்சர் அழைத்தாலும் பேச்சுவார்த்தை நடத்த வரமாட்டோம் என்கிறார்கள். அவர்களிடம் அதிகாரம் இருக்கிறது, நாமென்ன,



சட்ட மன்றத்திலேதான் இருக்கிறோம். அவர்களுக்குச் சமுதாயத்தில் அதிகாரம் இருக்கிறது; அதிகார வர்க்கம் அவர்கள் பக்கத்தில் இருக்கிறது. அவர்களுக்குத் தைரியம் இருக்கிறது.

ஆகையினால் தான் சொல்கிறேன், இவற்றையெல்லாம் சரிசெய்ய வேண்டும், சாதாரண நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்று, இந்தத் துணைமானியத்தில் எவ்வளவு தொகைகள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். பணம் ஒதுக்குவதிலோ, ஒப்புதல் அளிப்பதிலோ எந்தவிதமான சந்தேகமும் இல்லை. வேண்டியது எடுத்துக்கொள்ளலாம். ஆனால், இன்றைக்கு இருக்கும் நிலை என்ன என்பதை உணர்ந்து அதைத் திருத்துவதற்கு அமைச்சர்கள் எல்லோரும் சேர்ந்து செயல்பட்டால்தான், மக்களுக்கு அமைதி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த வாய்ப்புக் கொடுத்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* திரு. க. ர. நல்லசிவன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்றைக்கு சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், மாநிலம் பூராவும் பெருவாரியாகப் பருவ மழை தவறிவிட்டது. அதனால், விவசாயிகள் செய்யும் சாகுபடி வேலைகள் எங்கும் தடைபட்டு இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். எங்கோ சில அணைகளில் தேங்கியிருக்கும் ஜலத்தை விட்டு, சிற்சில இடங்களில் விவசாயம் நடைபெற்றுக்கொண்டு இருக்கலாம். ஆனால், நீர்ப்பாசனப் பகுதிகளில் போதுமான தண்ணீர் இல்லாததால், அங்கு நாற்றுக்கூட விட்டாகவில்லை. கடைக் கோடியில் தண்ணீர் இல்லை. மற்றொன்று இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலையைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதை அப்படியே விட்டுவிடுவோம், என்ன ஆகிறது பார்க்கலாம் என்றிருந்தால் பிரச்சினை தீராது. நேரடியாக அதைச் சமாளிக்க முயற்சிகள் எடுக்க வேண்டும். சமீபத்தில் பார்த்தால், ஓரளவிற்கு பஞ்ச நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை சர்க்கார் உணர்ந்திருக்கிறது, இருந்தாலும் நிலைமைக்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை. தயவுசெய்து, இந்த அரசை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு எப்படி ஆந்திர மாநிலத்தில், சர்க்கார் பஞ்சப் பிரதேசங்களுக்கு மத்திய சர்க்கார் அமைச்சர்களை அழைத்துக் காட்டி 25, 30 கோடி என்று உதவி கோருகிறார்களோ, அதேபோல, நம்முடைய அரசும், மத்திய சர்க்காரிடம் பஞ்சப் பகுதிகளைக் காண்பித்து, உதவி கேட்க வேண்டும்; அப்படிக் கேட்டு நிவாரணம் கொடுப்பதில் அழுத்தம் திருத்தமாக இருக்கவேண்டும். உடனடி நடவடிக்கையில் இறங்கவேண்டும். இன்றைக்கும் அதிகாரிகள், முன்போலவேதான் இருக்கிறார்கள். ஒரு பிரதேசத்தில் பஞ்சம் இருந்தால், பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்க அவர்கள் ஒப்புக்கொள்ள முன்வருவதில்லை. ஆகவே, அரசாங்கம் தீவிரமான நடவடிக்கை எடுத்து, இந்தப் பஞ்சப்பேயை மிக விரைவில் விரட்ட வேண்டும். ஒரு பக்கத்தில், ஆலை முதலாளிகள் எடுக்கும் நடவடிக்கை காரணமாக, கோவையில் 10,000 தொழிலாளிகள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு மணிக்கெல்லாம் வாக்கெடுப்பு எடுக்க வேண்டும். நீங்கள் பேசிய பிறகு, திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் பேசிய பிறகு, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசிய பிறகு, முதலமைச்சர் அவர்கள் பதியளிக்க வேண்டியிருக்கிறது. அதற்கேற்றவாறு நீங்கள் பேசுங்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** அவையினுடைய நேரத்தை வீணாக எடுத்துக்கொள்பவன் அல்ல என்பதை மட்டும் நினைவுறுத்தி, தங்களது கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடப்பேன்.

கைத்தறித் துணி 6 கோடிக்கு மேல் தேங்கியிருக்கிறது. இது மேலும் அதிகரிக்கும். இதோடு நிற்காது. இரண்டு மில்கள் புதியதாக திறக்கப்பட்டால், நான்கு மில்கள் மூடப்படும் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். ஏதோ பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று செய்யக்கூடிய பிரசாரத்தைக் கண்டு நாம் ஏமாந்துவிடக்கூடாது. மில் அதிபர்கள் சம்பளப் பாக்கியை கேட்டால் மூடிவிடுவோம் என்று சொல்லக்கூடிய அவல நிலை இருக்கிறது. மில்களைத் திறக்கவேண்டுமென்றால், சர்க்காரிடம் பணம் கேட்கிறார்கள். பாங்குகளிடம் காரண்டி சொல்லிப் பணம் வாங்கிக்கொடுக்கும்படி மில் அதிபர்கள் கேட்கிறார்கள். நாம் அனைவரும் பாங்கு முதலாளிகளிடம் கெஞ்சிக் கேட்டு அவர்களுக்குக் கடன் வாங்கிக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. மில் ஆலைகளைப் புதுப்பிக்க வேண்டுமென்றால், அதற்கு பப்ளிக் எக்ஸ் செகரிடமிருந்து பணம் கொடுக்க வேண்டுமென்று மில் அதிபர்கள் கேட்கிறார்கள். மில் அதிபர்கள் சம்பாதித்த கோடிக் கணக்கான ரூபாய் லாபத்தைத் தொலைத்துவிட்டு, அல்லது வேறு தொழில்களில், வியாபாரத்தில் ஈடு செய்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு கள்ளக் கணக்கு எழுதிவிட்டு, சர்க்காரிடம் பணம் கேட்கிறார்கள்---மில்களை புதுப்பிக்க வேண்டுமென்றால், இதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டில் மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். மக்களுக்கு துணி தேவை. மில்கள் இருக்கின்றன. வேலை செய்யும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆறு லட்சம் நெசவாளர்கள் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு மாற்று வேலையும், அதற்கான பயிற்சியும் தரும்வரை, வேலை தர வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் சாவி மட்டும் சில தனிப்பட்ட நபர்கள் கையில் இருக்கிறது. சாவி கை மாறியாக வேண்டும். இந்த நிலையை மாற்றி அமைத்தாக வேண்டும். நாட்டுக்குத் துணி தேவை. நெசவுக்கு நூல் தேவை. தொழிலாளர்களுக்கு வேலை தேவை. ஆலைகள், இயந்திரங்கள் இருக்கின்றன. ஆனால் இதற்கெல்லாம் சாவி விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரிடம் சிக்கிக்கொண்டிருக்கிறது. இவர்கள்தான் குறுக்கே நிற்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றினால்தான், குறுக்கே நிற்பவர்களை நீக்கினால்தான் தொழிலாளர் மக்களுக்கு விமோசனம் கிடைக்கும். ஆகவேதான் பஞ்சாலைத்



தொழிலை நாட்டுடைமையாக்கவேண்டும் என்ற கேள்வி நிகழ்ச்சி நிரலில் இன்றைக்கு இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். உடனடி நிவாரணமாக தேங்கியிருக்கும் கைத்தறித் துணிக்கு 25 சதவீதம் மானியம் அளித்து, உதவி செய்தால், ஓரளவுக்கு நிலைமை சீரடையும். அது சாத்தியப்படாவிட்டால் வருடத்தில் 2, 3 மாதங்களுக்கு 10 பைசா வீதம் ரிபேட் கொடுப்பதை ஆண்டு பூராவும் கொடுக்க முன் வந்தால், ஓரளவுக்குத் தேங்கிக் கிடக்கிற துணி அழியும். துணி அழிந்தால், மேற்கொண்டு நூல் செலவாவதற்கு வசதி ஏற்படும். இது ஓரளவுக்கு நெசவாளர்களுக்கு உதவியாக இருக்கும். ஆலை முதலாளிகளின் முதலைக் கண்ணீருக்கு நாம் இடம் கொடுத்துவிடக்கூடாது. அவர்களுடைய மோசடி, கள்ளக் கணக்குகளைக் கண்டு நாம் ஏமாந்து விடக்கூடாது. இதில் அவசியம் நாம் கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களின் கஷ்டம் மிகவும் கொடுமையானது. கஷ்டம் வளர்ந்துகொண்டே இருக்கிறது. அவசரமாக அவர்களுடைய பிரதிநிதிகளைக் கலந்து ஆலோசித்து இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதை முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுமக்களிடம் வாங்கும் சக்தி அதிகரிக்கவேண்டுமென்றால் கிராமப்புற மக்கள் மேலும் மேலும் முன்னேறவேண்டும். கிராமப்புறத்தில் அடிப்படை மாற்றங்கள் தேவை. நிலச் சீர்திருத்தத்தைப் பக்குவமாகச் செய்யாதவரையில் நாட்டு மக்கள் முன்னேற முடியாது. நாடு முன்னேற முடியாது. தொழிலாளர் மக்களுடைய அவல நிலைமையைப் போக்குவது மிகவும் முக்கியம். இந்த அடிப்படை விஷயத்தை நாம் மனதில் கொண்டு செயலாற்றவேண்டும்.

அடுத்து, நாட்டிலுள்ள அதிகார வர்க்கத்தைப்பற்றி ஏற்கனவே மதிப்பு மிக்க பாலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. சர்க்கார் கொள்கைக்கு மாறாக அதிகாரிகள் நடக்கக்கூடாது. உதாரணத்திற்கு ஒரு நிகழ்ச்சியைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். முனிசிபாலிடிகளில் வேலை செய்யக்கூடிய காங்கிரஸ் மஸ்தூர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் பற்றி 1950-ம் ஆண்டு ஜி.ஓ. இருக்கிறது. மீண்டும் இதுபற்றி 1964-ம் ஆண்டும் ஒரு ஜி.ஓ. போடப்பட்டிருக்கிறது, அவர்களை பெர்மனென்டு ஆக்கவேண்டும், அவர்களுக்கு லீவ் வசதிகள் தரவேண்டும் என்றெல்லாம் ஏற்கனவே 1950, 1964-ம் ஆண்டுகளில் ஜி.ஓக்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் என் கையில் இருக்கின்றன. இருப்பினும் இன்றைக்கு இருக்கக் கூடிய இன்ஸ்பெக்டர் ஆஃப் முனிசிபல் கவுன்சில்ஸ் அவர்கள் ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கின்றார். என்ன அனுப்பியிருக்கின்றார் ?

There is no need to appoint the same Gang mazdoors all through the year making them permanent. A number of such temporary mazdoors should be kept in the roll and they may be put on work

[திரு. க. ர. நல்லசிவன்] [1968 ஆகஸ்ட் 19

வேலையில்லாமல் இருக்கிறார்கள். மற்றொரு பக்கம், தமிழகத்தில், கைத்தறி நெசவாளர்கள் சிறு சிறு கிளர்ச்சிகள் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான கூலி கிடைக்கவில்லை; பாதுகாப்பு இல்லை. இந்த அரசாங்கம் கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் எந்தவிதமாகவாவது ஒரு முடிவு எடுத்திருக்க வேண்டும். இனிமேலாவது, தீவிரமாக, ஏதாவது ஒரு திட்டத்தைப் போட்டு கைத்தறியாளர்களின் கஷ்டத்தைப் போக்கி, அவர்களைக் காப்பாற்ற முடியுமா என்று பார்க்க வேண்டும். ஒத்திப் போடுவதால் நிலைமை சீர்கேடாகப் போய்விடும். இன்றைக்கும் இருக்கும் வேகத்தில் பார்த்தால், இன்னும் 6 மாதத்தில், ஒரு வருஷத்தில் நிச்சயமாக நிலைமை மோசமாகிவிடும். எப்பொழுது வெடிக்குமோ என்ற நிலையில் இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து இந்த அரசாங்கம் அப்படிப்பட்ட நிலைமையை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ச்சியாக சில ஆண்டுகளாக பஞ்சப் பிரதேசமாக இருக்கும் இடங்களுக்கு, நிரந்தரமான நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க தக்க ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிட்டால், தொடர்ச்சியாக பஞ்சப் பிரதேசமாக இருக்கும் இடங்களுக்கு கிணறு வெட்டக் கடன் என்றெல்லாம் கொடுப்பதால் பிரச்னையைத் தீர்க்க முடியாது. ஒன்று சொல்வேன். பயத்தோடுதான் சொல்கிறேன், அந்த விவசாயிகள் என்ன சொல்வார்கள் என்பதையும் பார்த்துச் செய்யவேண்டும். ஆனால், சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். விவசாயிகளும் ஒப்புக் கொள்வார்கள் என்றே நம்புகிறேன். அப்படிச் செய்யவேண்டுமா, வேண்டாமா என்பதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். பல ஆண்டுகள் பஞ்சப் பிரதேசமாக இருக்கும் இடங்களில் இருக்கும் விவசாயிகளை நல்ல நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களுக்கு மாற்றி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யலாமா என்பதை யோசிக்க வேண்டும். கனம் உறுப்பினர் திரு. குமாரசாமி மேற்குப் பகுதி பற்றிச் சொன்னார்கள். அமெரிக்க நிபுணர்கள் வந்து பார்த்துவிட்டு, இனிமேல் இங்கே கிணறு வெட்டுவதால் பிரயோசனம் கிடையாது. நீங்கள் தொழில் துறையில் கவனத்தைச் செலுத்த வேண்டும் அல்லது வேறு இடத்திற்குப் பெயர்ந்து செல்லவேண்டும் என்று பத்திரிகையாளர்களிடம் சொல்லிச் சென்றார்கள். அந்தப் பகுதியில் நிரந்தரமாக நீர்பாசன வசதிகள் செய்ய முடியுமா முடியாதா என்பதை பரிசீலனை செய்து, முடியாவிட்டால், அங்கே சிறு சிறு தொழில்களை ஆரம்பிக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அல்லது அந்தப் பகுதி மக்களை வேறு பகுதிக்கு மாற்றத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சாதாரண ஜனங்களுடைய மனோபாவத்தை மாற்ற முடியுமா என்பது தெரியவில்லை. இதைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1968 ஆகஸ்ட் 19] [திரு. க. ர. நல்லசிவன்]

அந்தப் பகுதிகளில் கிணறு வெட்டுவது என்பது ஒரு சூதாட்டம் போல் இருக்கிறது. கடன் தொகைகளை வருஷா வருஷம் சர்க்காரிடம் வாங்குவதும், அதை அவர்களுக்குக் கட்ட வேண்டும் என்று சொல்லும் போது, ஏதாவது காரணத்தைக் காட்டி, முதல் அமைச்சரிடம் சென்று, கலெக்டரிடம் சென்று ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்பது என்கிற நிலையில்தான் எல்லாம் செய்யப் படுகிறது. ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு விவசாயம் நீங்கலாக வேறு தொழில்களில் ஊக்கம் அளிக்க வேண்டும். அல்லது, முடியுமானால், வேறு பகுதிக்கு மாற்றி விவசாயம் செய்யக்கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வெள்ளைக்காரன் காலத்தில் காங்கிரஸ்காரர்கள் அரசியல் கைதிகளாக நடத்தப்படவேண்டும் என்று கோரினார்கள். ஆனால், அவர்களே ஆட்சிக்கு வந்தபிறகு அதை மறந்துவிட்டார்கள். இந்தப் புதிய அரசாங்கம் அந்த வகையில் நல்லதைச் செய்யும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. இனிமேலாவது, தயவுசெய்து அரசியல் போராட்டத்தால் கைதானவர்களை, அரசியல் கைதிக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளைக் கொடுத்து நடத்த வேண்டும். மத்திய அரசு சட்டத்திலே திருத்தம் செய்தாலும் செய்யாவிட்டாலும், நம்முடைய மாநில அரசு அளவில், நம் தமிழகத்தில் எதை எதைச் செய்யமுடியுமோ அவற்றைச் செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னும் வாழ்நாள் கைதிகள் என்று பலர் இருக்கிறார்கள். அவர்களை அனுதாபத்தோடு கவனித்து, விடுதலை வழங்க முயற்சி எடுக்க வேண்டும். பண்ணைச் சிறைகள் வைப்பதுபற்றி குறிப்பிடப்பட்டது. விரிந்த சிறையில் இருந்து வாழ்நாள் பூராவும் வேலை செய்ய அந்தக் கைதிகள் தயாராக இருக்கிறார்கள். அதையும் நம்முடைய அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

பிற்பகல் 12-30

கடைசியாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் சர்க்காரின் உத்தரவின் காரணமாக அநேக இந்தி ஆசிரியர்கள் வேலையிழந்து விட்டார்கள். அவர்களில் பலர் முழுத் தகுதி பெற்றவர்களாக இருக்கிறார்கள். வேலையிழந்த ஆசிரியர்களுடைய உத்தியோகம் காப்பாற்றப்பட இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். தற்போதைய நிலையில் இந்தி ஆசிரியர்கள் வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் படும் கஷ்டம் நமக்கெல்லாம் தெரியும். மேலும் பஞ்ச நிலைமை நம்முடைய ராஜ்யத்தில் பரவிக் கொண்டிருக்கிறது. பஞ்ச நிலைமையைத் தடுப்பதற்கும், அதிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கும் அரசாங்கம் தீவிர முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும், கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சனைகளையும் மனத்தில் கொண்டு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன். பிற்பகல் 12-30

once every week or fortnight rotating alternatively so that there will be no difficulty in the availability of mazdoors and there will be better turn o ver of work also.

வாரத்திற்கு ஒரு முறை அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறை காங் மஸ்தூர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, வேறு காங் மஸ்தூர்களை நியமனம் செய்யவேண்டும், இப்படி தனியார் துறை முதலாளிகள் செய்வதுபோலவே மாற்றி மாற்றி, நீக்கிவிட்டு நியமனம் செய்யவேண்டும் என்று சொல்லக்கூடிய யோசனை இதை சுற்றறிக்கையில் இருக்கிறது. சர்க்கார் கொள்கைக்கே இது வேட்டு வைப்பதாக அமைந்திருக்கிறது. இதன் விளைவாக நகர சபைகளால் நீக்கப்பட்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்டவர்கள் ஏராளமான காங் மஸ்தூர்கள் இருக்கின்றனர். இது குறித்து அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன், செயலாளரிடம் சொல்லியிருக்கிறேன். டெப்டி செயலாளரிடம் கூறியிருக்கிறேன். காங் மஸ்தூர்கள் நகரசபைகளில் நீக்கக்கூடிய கேவல நிலை இருந்துகொண்டிருக்கிறது. இதனால், அனாவசியமாகச் சங்கைகளையும் கிளர்ச்சிகளையும் தூண்டிவிட்டிருக்கின்றனர் அதிகார வர்க்கத்தினர் என்று இந்த நேரத்தில் குற்றம் சாட்டிச் சொல்ல விரும்புகிறேன். அலுவலகங்களில் இருக்கிற அதிகார வர்க்கத்தினரின் போக்கு இன்னும் மாறவில்லை. அவர்களிடையே தேவையான மாறுதல் இன்னும் ஏற்படவில்லை. ஆட்சி மாறியிருக்கிறது, சட்டமன்றம் மாறி இருக்கிறது, சட்ட மன்றப் பேச்சுக்கள் மாறியிருக்கின்றன. ஆனால், அதிகார வர்க்கத்தினர் செயலகத்திலிருந்து கீழே இருக்கக்கூடிய கிராம முன்சீப் வரை அப்படியேதான் பழைய நிலைமையில் இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இது நல்லதல்ல. இதனால் பிரச்னைகள் தீரா. ஜனநாயகத்தில் மக்களுடைய உள்ளத் துடிப்பை உணர்ந்து நடந்துகொள்ளவேண்டும். அமைச்சர்களுடைய நல்லெண்ணம் மட்டும் செயல்படாது. நல்லெண்ணத்தின் பின்னால் உறுதியான நடவடிக்கை தேவைப்படுகிறது என்பதை அமைச்சர்கள் மனதிலே கொள்வது அவசியம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து போலீஸ் நடவடிக்கை. இந்த விஷயத்தில் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம், காங்கிரஸ் கட்சியினர் கூப்பாடு போட்டுக்கொண்டிருந்தார்கள், அவர்கள் அதில் ஓரளவுக்கு வெற்றி அடைந்துவிட்டார்கள். சட்டம் குலைந்து விட்டது, அமைதி குலைந்துவிட்டது, மோசமாகிவிட்டது என்று சொல்லிச் சொல்லிக் கூப்பாடு போட்டுக்கொண்டிருந்தார்கள். சமீபத்தில் போலீசார் இஷ்டப்படி நடந்துக்கொள்ளக்கூடிய போக்கு வளர்ந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதன் விளைவாக கடந்த நான்கு, ஐந்து மாதங்களாக மிகவும் துர்பாக்கியமான சம்பவங்கள், நிகழ்ச்சிகள் நடந்தவண்ணம் இருக்கின்றன. சகஜமாக போலீஸ் தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் நடந்து கொண்டிருக்கிறது. தொழிலாளர்கள் மீது போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். மணலியில் கருங்காலிகளை போலீஸ்





வான் பாதுகாப்பாகக்கொண்டு போய் விடுகிறது. முன்னால் போலீஸ் வான், பின்னால் போலீஸ் வான் இடையே கருங்காலிகள், இப்படி கருங்காலிகளுக்கு போலீஸார் பாதுகாப்பு அளித்து வருகிறார்கள். ஸ்மால் ஆர்மஸ் பாக்டரியில் பயங்கரமான தடியடிப் பிரயோகம் நடந்திருக்கிறது. தொழிலாளர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். வடாற்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் மண்டையில் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏராளமான பேர்கள் காயமடைந்திருக்கிறார்கள். சென்ற பட்ஜெட் விவாதத்தின்போதுகூட பல விவரங்களை நான் கூறியிருக்கிறேன். இதுமாதிரி நிகழ்ச்சிகள் நீடித்து நடந்துக்கொண்டே போகக்கூடாது. முதல் அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்கவேண்டும். ஸ்ரீவைகுண்டத்தில் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு அரிஜன் கொல்லப்பட்டிருக்கிறான். அவனுடைய மனைவி கொடுத்த புகார் இருக்கிறது. மதுரையில் வேலு என்ற தொழிலாளி அனாவசியமாக குற்றம் சாட்டப்பட்டு போலீசாரால் துன்புறுத்தப்பட்டதால் இறந்துபோனான். மதுரை நகரமே கொதிப்படைந்தது. சென்னையிலே இன்ஸுலேட்டர் பாக்டரியிலே இது போன்ற சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இன்று காலையிலே எனக்கு வந்த தகவல், எட்டையபுரம் சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸில் குமாஸ்தா வேலைபார்ப்பவரை குலசேகரப் பட்டினம் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்று வைத்து, அடித்து துன்புறுத்தியிருக்கிறார்கள். அவர் இப்பொழுது திருநெல்வேலி ஆஸ்பத்திரியில் இருக்கிறார். முதல் அமைச்சர் அவர்களுக்கு சங்கத் தலைவர் ஜோதிநாயகம் அவர்கள் இதுபற்றி மனு கொடுத்திருக்கிறார். முதல் அமைச்சர் அவர்களுடைய இளகிய மனது போலீஸ் இலாகாவில் இருப்பதாக நினைக்கக் கூடாது. போலீஸார் இஷ்டப்படி நடப்பது என்ற நிலைமை இருக்குமானால், அது ஜனநாயகத்தில் பெரிய விளைவுகளை உண்டாக்கும். நாம் வந்ததும் நிலைமை திருந்திவிட்டது என்று எண்ணிவிடக் கூடாது Riding the tiger போலத்தான். சிற்சில இடங்களில் சில சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அடிப்படையில் பிரச்சனை இருந்துகொண்டே இருக்கிறது. இந்த அதிகாரவர்க்கம் Profoundly anti - democratic இது பியூராக்ரஸியின் மிகவும் மோசமான அம்சம். இந்த முறையில் போலீஸ் இலாகா இயங்கக்கூடாது. இந்த நிலைமை கண்டிப்பாக மாற்றப்படவேண்டும். இது குறித்து நாம் அக்கறை காட்டினாலன்றி, நமக்கு நாமே வேட்டு வைத்துக் கொள்வராவோம். இதனால் ஜனங்களுக்கு, தொழிலாளர்களுக்கு மிகவும் கஷ்டம். திண்டுகல்லில் மேட்டுப்பட்டி என்ற இடத்தில் புதியதாக ஒரு சப்-இன்ஸ்பெக்டர் போடப்பட்டிருக்கிறார். படித்தவர்களைப் போட்டால் நிலைமை மாறிவிடும் என்று நாம் கருதுகிறோம். ஆனால் நிலைமை அப்படி அல்ல. படித்தவர்கள் தான் எப்படி திருட்டுத்தனம் செய்யவேண்டும் என்று நன்றாக அறிந்துகொண்டு செய்கிறார்கள். அந்த ப்ரொபேஷனரி சப்-இன்ஸ்பெக்டர் மக்களை அடித்துத் துன்புறுத்தி, வாய்க்கு வந்தபடி பேசுகிறார். 70 வயது வந்தவரைக் கூட, கையெடுத்து வணங்கவேண்டிய நிலைமை

* THIRU R. PONNAPPA NADAR: I wish to speak a few words regarding the supplementary grant which is now under discussion before this House. Before I proceed with other points I would like to say that the present supplementary demand is to the tune of Rs. 6.40 crores and the bulk of that amount is earmarked for the enhancement of dearness allowance sanctioned with effect from 1st June 1968, I have got one suggestion to make in this connection. There have been incessant increases in dearness allowance to our staff as and when Government of India increased dearness allowance of their employees. It would be in the fitness of things if a Commission were to be empanelled to go into the question of merging dearness allowance with pay of the N.G.Os. as well as officers. Of course it may be argued that it would be a heavy drain on the exchequer. It is fortunate that we expect some more assistance from the fifth Finance Commission which is going to submit its interim report by the end of September. That is what the Hon. Chief Minister stated in the speech he has made. I would humbly request the Hon. Chief Minister to see that some finances are allotted to the State so that the ever-pressing problem of the N.G.Os. and officers may be solved at a higher level. I think a Committee may go into all the aspects and suitable solution may be arrived at.

Another point which I want to refer is about the Police excesses which have happened in the City of Madras. The Police has set a record in our State not in crime detection but on excess of violence and I will illustrate the police excesses that have happened on 1st August 1968 in the City of Madras. The orgy of violence unleashed by the police on the Youth Congress marchers on 1st August 1968 is inhuman and horrible. They broke the limbs and legs of many and the number of persons injured is more than 600. It is said that a press magnate had employed certain persons and with the uniform of Special Armed Police they got into the vast procession and inflicted injuries on the peaceful marchers. One point which I want to stress is that the procession has been properly licensed by the police and there was no violence when the procession started. Only when the procession had come to a particular place, it is stated that a portion of the procession attempted to enter a premises and therefore lathi-charge had to be initiated. My submission is that there was no Magistrate present, no high officials were present. It is said that the Police officers were in touch with superior authorities and they were getting minute to minute instructions. What was the red rag which provoked the Police officers to inflict the lathi-charge is not known. This is a fit case for being investigated by a judicial officer and there should be a judicial enquiry. This has been pressed not only by me but by Left Communist Party also. They also said that the orgy of violence by the Police on these people should be investigated by a judicial inquiry. This incident shows that the law and order situation has deteriorated. How can it not be so when the police are taking such an attitude? My humble submission is



that if private persons are engaged, if private armies are allowed to enter to disperse peaceful marchers, then there would be no law and order. This is a matter that should be enquired and investigated. My information is that many persons were taken in lorries in advance. The innocent marchers had been subjected to inhuman torturers. This has caused mental anguish to several people. There was no one to render medical aid to these people at that juncture. They were helpless. All this had happened in the City of Madras where there is I.G., Commissioner of Police and our revered Chief Minister. If these things happen in the City, what would be the law and order situation in the mofussil? One can imagine for himself

We are aware of the mysterious fire that has been occurring day in the City and recently in Trichy and Tanjore and in other places also there has been fire. The Police are not able to book the culprits and that is the state of Police administration. That is why there is an impression among responsible people that law and order situation has deteriorated in Madras State. This has to be answered. My submission is that this is a matter that calls for strict control at the hands of the Hon. Chief Minister.

Another point is about the State Raffle Scheme. Of course it may be a source of revenue. It must be properly controlled. State raffle agents are now beeing appointed in the districts and various places and it has come to my notice that several party men had been chosen as agents. My submission is that at official level there should be no room for suspicion. This Raffle Scheme is for everybody and things should be done judiciously and impartially. Strict control should be there to see that there is no abuse of official power.

The Hon. Chief Minister said that for industrial complex at Manali and water supply scheme for Madras Refineries, a sum of Rs. 88 lakhs had to be incurred. I welcome it and request that speedy steps may be taken so that we may be able to produce fertilisers quickly for development of agriculture in our State.

It has also been stated that for welfare of Ceylon repatriates a scheme is being thought of. It would be worthwhile if these people who have had their livelihood in plantations are settled in plantations in Nilgiris, Coimbatore and other hilly districts wherein there might be such possibilities. Relief may be given to them on co-operative or some other basis so that they can earn their livelihood.

Another point is about sugar procurement policy. As a result of the present policy it has been stated that this Government has incurred a loss of Rs. 60 lakhs on account of the present fall in prices.

We have procured sugar at a higher price and now prices had fallen. We had fallen into the trap of the industrial magnates and because of the policy pursued by the Government. . . .

THE HON. THIRU C. N. ANNADURAI: Is the hon. Member referring to the Central or this Government?

THIRU R. PONNAPPA NADAR: I mean the Madras Government. Had it not been for such a policy, we would not have incurred such heavy losses.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, சர்க்கரை வியாபாரத்தில் பெரிய நஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதாக ஒரு பத்திரிகையில் வந்த செய்தியை ஆதாரமாக வைத்துக் கொண்டு உறுப்பினர்கள் பேசக்கூடாது. சர்க்கரையினுடைய விலை ஏறி, அதனால் மக்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகக் கூடாதே என்பதனால்தான் அரசாங்கம் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டது. சர்க்கரை வியாபாரத்தில் சுமார் ஒரு கோடி, ஒன்றரை கோடி ரூபாய் லாபம் கிடைக்கும் என்பதைக் கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ ஒரு பத்திரிகையில் 'சர்க்கரை வியாபாரத்தில் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது' என்று வந்துள்ள செய்திக்கும் உண்மைக்கும் சம்பந்தமில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: I am very happy that the Hon. Minister has said that the Government had gained more than Rs. 1 crore due to this sugar policy. If the statement that appeared in a newspaper is incorrect, a statement or press release correcting that statement ought to have been issued by Government then and there so that the public may be aware of the position. Proper action may be taken against the paper also.

THE HON. THIRU C. N. ANNADURAI: As a lawyer the hon. Member knows that when anything is stated, the full truth should be taken. A part cannot be taken as full truth. In the sugar deal by the Government, taken as a whole what the Hon. Minister has stated is correct. Particularly during seasonal conditions, there may be loss in one season. It would be compensated by profit gained earlier or profit to be gained in future. Therefore it should be looked at as an overall picture.

THIRU R. PONNAPPA NADAR: Am I to take it that there is some loss at this point of time when Government is selling sugar at a subsidised rate?

THE HON. THIRU C. N. ANNADURAI: There is certainly some loss as far as the present release of sugar is concerned. We have purchased it at a particular price and due to the fall in price, we incur a loss. But that is compensated amply by the fact that the overall turnover of this sugar deal ends in a profit.

THIRU R. PONNAPPA NADAR: Another thing which I want to express before this House is regarding the condition of the schools. That is a local matter which I want to stress before the Hon. Minister for Education.

(The time bell was rang.)

**I will finish within five minutes.**



[Thiru R. Ponnappa Nadar]

Many of the school buildings in the Kanyakumari District have collapsed on account of the heavy and incessant rain that has occurred in that district. Some provision may be made so that the buildings may be improved under a phased programme. There are buildings of high schools, primary schools and others which require urgent repair. The Minister visited the district. He visited some of the high schools and he is convinced of the fact that the school buildings require urgent repair. My only submission is that they should be attended to early. Some priority may be given to the school buildings as well as the hospital buildings, because these are nation-building activities which cannot wait. In the Karungal school, there are more than 1,600 students. They have no accommodation and they are housed in some temporary shed. Some money has been sanctioned as early as in 1962, but nothing has been done so far. I would earnestly request the Education Minister to see that early steps are taken for the construction of the school buildings. With these words I resume my seat.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தலைவர் அவர்களே, பொதுவாக இந்த முதல் துணை மதிப்பீடுகள் பற்றிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எதற்காக இந்த நிதி தேவைப்படுகிறது என்று அறிவித்திருக்கிறோமோ அவற்றில் எந்தக் குறைகளையும் காணாதது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. துணை மதிப்பீடுகள் மீதான விவாதத்தின்போது கொள்கை அடிப்படையான கருத்துக்கள் அதிகமாக எடுத்துக் கூறப்படுவதில்லை. ஆனாலும் அவைகளைக் கூறக்கூடாது என்று விதி இல்லை. பொதுவாகக் கூறப்படுவதில்லை. இந்தத் துணை மதிப்பீடுகள் எந்த எந்தக் காரியத்திற்காக என்று கூறப்படுகின்றனவோ அவைகள் தேவைதானா என்பதை, ஏற்றுக்கொள்ளப்படவேண்டியவைதானா என்பதை பரிசீலிக்க வேண்டியதே இந்த விவாதத்தின் நல்ல நோக்கமாக இருக்கவேண்டும். அந்த நோக்கத்தின்படி இன்றைய விவாதத்தில் கலந்துகொண்டவர்கள் யாரும் எவ்விதக் குறைகளும் காணாமல் இவைகள் எல்லாம் தேவைதான் என்று எடுத்துக் கூறியதற்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சி உப தலைவர் திரு. பொன்னப்பநாடார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மூன்று கோடி ரூபாய்க்கு மேல் சர்க்கார் அலுவலர்களுக்கு பஞ்சப்படி உயர்த்தியிருப்பது தேவைதான் என்பதை ஒப்புக்கொண்டாலும், அதை சம்பளத்தோடு சேர்த்துவிட வேண்டும், அதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். பொதுவாகப் பலராலும் எடுத்து வற்புறுத்தப்பட்டு வருகிற கருத்தாகும் இது. அதற்கும் துணை மானியக் கோரிக்கைகளுக்கும் பொருத்தமென்ன என்று நினைக்கத் தேவையில்லை. அது பொதுவாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். அதற்காக 'பே கமிஷன்' நியமிக்கப்படவேண்டுமென்ற கருத்தைக் குறிப்பிட்டார்கள். நம் நாட்டில் இந்தக்

[திரு. சி. என். அண்ணாதுரை]

அதேபோல பள்ளிக்கூடங்கள், தொழிற் பள்ளிக்கூடங்கள் இவற்றிற்கு இதுவரையிலும் ஒதுக்கிக்கொண்டுவந்ததைக் காட்டிலும் அதிகமான ஈட்டுத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. 66-2/3 சத வீதம் பள்ளிக்கூடங்களுக்கும் 75 சத வீதம் பல் தொழில் பள்ளிக்கூடங்களுக்கும் ஒதுக்கியிருப்பதை அவையினர் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.

இரண்டே இரண்டு விஷயங்களுக்குத்தான் சிலர் அதிருப்தியைத் தெரிவித்தார்கள். சினிமாப் படங்களுக்குப் பரிசு கொடுக்க வேண்டுமா, செய்திக் கதிர் வெளியிடுவதற்கு ஒரு இலட்சம் ஒதுக்குவது நியாயந்தானா என்று சொன்னார்கள். **It all depends upon the taste** என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். இது அவரவர்களுக்கு இருக்கிற விருப்பு வெறுப்புகளைப் பொறுத்தது. நல்ல தரமான சினிமாப் படங்களுக்கு ஒரு இலட்ச ரூபாய்க்கு மேல் பரிசு வழங்குகிறோம் என்பதைப் பார்க்கும் பொழுது, சினிமாத் துறையின் மூலமாகச் சர்க்கார் அடைகின்ற ஆதாயத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும். ஆறு கோடி, ஏழு கோடி ரூபாய்க்கு தமாஷா வரி பெறுகிறோம். நல்ல படங்கள் வெளிவருவதன்மூலம், அதிகமான மக்கள் பார்க்கத்தக்க நிலைமையில் இதற்காக நாம் செலவழிக்கிற தொகைக்கு ஏற்ப ஒரு கோடி ரூபாய்வரை இன்னும் அதிகமாக வருமானம் வரும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தால் அவர்கள் அதைப்பற்றிக் கேட்டிருக்க மாட்டார்கள். . . .

**திரு. என். எஸ். வி. சித்தன்:** முதலமைச்சர் அவர்கள் பேசும் பொழுது நிறைய வருமானம் வரும் என்று சொன்னார்கள். அப்படியானால் நிறைய வருமானம் வரும் என்பதற்காக மது விலக்கை எடுப்பதுபற்றி யோசிக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அவரைப்போன்று கருதிக் கொண்டவர்கள்தான் காங்கிரஸ் மாநிலத்திலே மது விலக்கை எடுத்துவிட்டார்கள். நான் சொல்வது வருமானம் வருகிறது என்பதைப்பொறுத்து மட்டுமல்ல, தரம் உயரும் என்பதற்காகவும் சொன்னேன். உடனே காங்கிரஸ்காரர்கள் முன்னாலே உள்ளதைவிட நல்ல தரம் உள்ள மதுவைத் தயாரிக்கலாம் என்று சொல்வார்கள், அதனால் இன்னும் வருமானம் அதிகமாக வரும்.

THIRU K. VINAYAKAM: Sir, is our Hon. Chief Minister in order or is it right on his part to criticise the policy of a neighbouring State irrespective of the policy pursued by our State or can we interfere like this on the floor of this House? Does it amount to good taste?

THE HON. THIRU C. N. ANNADURAI: Talks about 'taste' should be reciprocal and not unilateral. Is it in order for the hon. Member to suggest that I should lift Prohibition and earn money? It is not in good taste.



[திரு. சி. என். அண்ணாதுரை]

THIRU K. VINAYAKAM: The question before the House is, is he right in criticising the policies pursued by a neighbouring State. Usually we do not interfere in such matters and that is the convention that we have developed. So, is he right in saying so?

THE HON. THIRU C. N. ANNADURAI: The hon. Member is perfectly right. If I criticise any Government, it is open to the hon. Member to pull me up but I am making merely a statement of fact.

ஆகையினாலே கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்திக் கதிர் தயாரிப்பது தேவைதானா என்று சொன்னார்கள். தேவை என்பது அரசுக்குப்பட்டதால்தான் தயாரிக்கிறார்கள். அரசுக்கு தேவை என்பதிலே ஐயப்பாடில்லை என்பதை அவர்கள் உணர்கிறார்கள். ஆனால் தேவையில்லை என்ற உணர்வு அவர்களுக்கு இருக்கலாம். எங்களுக்குத் தேவை என்று நினைக்கிறோம். அதிலே அமைச்சர்கள் முகங்கள்தான் வருகின்றன, மற்ற முகங்கள் வருவதில்லை என்றால் எல்லா முகங்களும் வரவேண்டுமென்று தான் செய்து வருகிறோம். அதிலே சில முகங்கள் வரவில்லை என்றால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல.

துணை மானியக் கோரிக்கையின்மீது சில பொதுவான கருத்துக்கள் தரப்பட்டன. அந்தக் கருத்துக்களுக்குரிய மரியாதையைத் தருவதற்கு நான் தயங்கமாட்டேன். ஆனால் மரியாதையைத் தருகிற நேரத்திலே அந்தக் கருத்துக்களையெல்லாம் அப்படியே நான் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நீங்கள் கருதமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும் பொழுது, போலீஸ் உடையில் யாரோ வந்து அடித்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால், இன்னின்னாருக்கு போலீஸ் உடை கொடுக்கப்பட்டது என்று சொல்லவில்லை. நல்ல வேளையாக அவர்கள் போலீஸ்காரர்கள் வரையில் சொன்னார்கள். இருக்கின்ற டி.சி.-க்கள், இன்ஸ்பெக்டர்கள் எல்லோரும் உண்மையானவர்கள் அல்ல, அவர்கள் உடையில் யாரோ வந்தார்கள் என்ற அளவுக்குக் கற்பனை போகாமல், குறிப்பிட்ட அளவோடு நின்றதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் உண்மையான விவரங்களை அறிந்தவன், அரசைப் பொறுப்பேற்று நடத்துகிறவன் என்ற முறையிலே அதையெல்லாம் நான் முழுக்க முழுக்க மறுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடிபட்டவர்கள் 600 பேர்கள் என்று சொன்னார்கள். நேற்றுவரையில் 500 பேர்கள் என்று சொன்னார்கள். பத்திரிகையில் 300 பேர்கள் என்று வந்தது. என்னைப் பொறுத்தவரையில், அடிபட்டது 3 பேர்கள் என்றால்கூட வருத்தப்படுவேன். சொல்கிறபொழுது அடிபட்டவர்களின் எண்ணிக்கையை நாளுக்கு நாள் உயர்த்திக்கொண்டே போவதன் மூலம் குற்றச்சாட்டு கெட்டிப்பட்டு விடும் என்ற எண்ணத்தில் சொல்லவேண்டாமென்று மட்டும் நான் பணிவன்போடு கேட்டுக்

[1968 ஆகஸ்ட் 19

[திரு. சி. என். அண்ணாதுரை]

கருத்து பல்வேறு துறையினராலும் எடுத்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மத்திய மாநில அரசுகளால் பரிசீலிக்கப்பட்டு வருகிற பல பிரச்சினைகளில் இது ஒன்றாகும். ஆனால் இப்போது நமது சர்க்கார் அலுவலர்களுக்கு மத்திய அரசினர் அலுவலர்களுக்குக் கொடுக்கப்படுகிற பஞ்சப்படி அளவுக்கு உயர்த்திக்கொடுப்பது நியாயமானது, தேவையானது என்பதை நாம் உணர்ந்து அதனைக் கொடுத்திருக்கிறோம். வேறு சில மாநிலங்களில் அவ்வாறு கொடுப்பதில் தயக்கம் காட்டப்பட்டதும், அதன் காரணமாக தடுமாற்றங்கள் இருந்ததும் உறுப்பினர்கள் அறிவார்கள். அப்படி எந்தவிதமான தகராறும் இல்லாமல் இந்த அரசு தன் அலுவலர்களுக்கு நியாயமான இந்தக் கருத்தில் உடனடியான ஒரு பரிகாரம் ஏற்படும்படியாக நடந்து கொண்டிருப்பதற்குப் பலரும் மகிழ்ச்சி அடைவார்கள் என்றே நான் கருதுகிறேன்.

ஆறு கோடி ரூபாய்க்கு மேல் துணை மதிப்பீடுகள் கோரப்பட்டிருந்தும், அவற்றில் சரிபாதி அளவுக்கு நமது சர்க்கார் ஊழியர்களுக்குத் தருகிற பணத்திற்குப் போகிறது. மற்றவைகள் எல்லாம் விவசாய வளர்ச்சிக்கும், மற்றும் நம்முடைய இறைவை நீர்ப் பாசனத்திற்கு மின்சார விஸ்தரிப்புக்கான திட்டங்களுக்காக, தனியாரிடம் இருந்து அரசு தன் கைவசப்படுத்தி அதன்மூலம் இறைவைப் பாசனத்தை அதிகப்படுத்துவதற்காக—இந்தப் பணத்தில் ஒரு பகுதி செலவழிக்க வேண்டியிருக்கிறது. இங்கே ஓர் உறுப்பினர் பேசுகின்றபோது செழுமையாக இருக்கிற பகுதிகளுக்கு மேலும் செழுமையை உண்டாக்கிக் கொண்டிருப்பது போல தஞ்சை மாவட்டப் பகுதிக்கே 66 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதே என்று குறிப்பிட்டார். தஞ்சைப் பகுதிக்கு ஏன் இப்படிச் செலவழிக்க வேண்டும்? மற்ற பகுதிகளுக்கு எல்லாம் வசதிகள் செய்யக்கூடாது என்றல்ல. தஞ்சைப் பகுதியில் இருக்கிற கல்லணை கழிமுகப் பகுதிகள் நீண்ட நெடுங்காலமாக கவனிக்கப்படாமல் இருந்துவிட்டதை நிபுணர்கள் எடுத்துக் காட்டினார்கள். அவர்களுடைய யோசனையை வைத்துக்கொண்டு தான் விசேஷமான முறையில் ஒரு திட்டத்தை 66 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொண்டு அதற்காக 26 இலட்சம் ரூபாயை இந்த மதிப்பீட்டில் இருந்து செலவழிக்க அரசு தீர்மானித்திருக்கிறது. அது தேவையானது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

அதைப்போலவே உழவர்களுக்கு உரம் வாங்குவதற்காக கடன் வழங்குவதற்கு 50 லட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று இதில் கூறப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் இதற்காக 2 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்று நான் கருதுகிறேன்.

கனம் பொன்னப்பநாடார் குறிப்பிட்டதுபோல் மணலியில் அமைந்து வருகிற பெரிய தொழில் நிலையத்திற்கு 88 லட்சம் ரூபாய் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக இந்த அரசு ஒதுக்கி, திட்டத்தை



1968 ஆகஸ்ட் 19]

[திரு. சி. என். அண்ணாதுரை]

மேற்கொண்டதை யாரும் மறுக்க மாட்டார்கள். சொல்லப் போனால் அதை விரைவுபடுத்த வேண்டும் என்றே நமது பொன்னப்பநாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது விரைவு படுத்தப்பட்டு வருகிறது, விரைந்து அந்தக் காரியம் முடிவுபெற்றுக் கொண்டு வருகிறது என்று நான் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அதுபோல் இலங்கையில் இருந்து திரும்பி வருகிறவர்களுக்கு என்ன என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி கனம் உறுப்பினர்கள் எடுத்துக் சொன்னார்கள். இதில் பத்து லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதனால் இந்தக் காரியம் பத்து லட்சம் ரூபாயில் முடிந்துவிடக் கூடியதாக எண்ணத் தேவையில்லை. அப்படி சிலர் கருதிக்கொண்டதன் காரணமாகத்தான் அவர்களுக்கு மலைக் காடுகளில் இடம் கொடுக்கவேண்டும், தேயிலைத் தோட்டங்களில் இடம் கொடுக்கவேண்டும், நீலகிரிப் பகுதியில் குடி அமர்த்த வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். இவை அனைத்துமே பற்பல திட்டங்களாக உருவாக்கப்பட்டு, இந்திய அரசுக்குப் அனுப்பப்பட்டு, அவர்களது ஒப்புதலையும் பெற்று இன்றைக்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தப் பத்து லட்சம் என்பது இலங்கையில் இருந்து வருகிறவர்கள் ஏதாவது சிறு தொழில் நடத்த வேண்டுமென்று விரும்பினால் அவர்கள் அந்தத் தொழிலை நடத்துவதற்கு கடன் உதவி அளிப்பதற்காக என்று மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையாகும்.

அது தவிர இலங்கையில் இருந்து வருகிறவர்களுக்காக நமது அரசு என்ன என்ன உதவிகளை அளித்து வருகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டால் பெரிதும் மகிழ்ச்சி அடைவார்கள். அவை பற்றி அவ்வப்போது சர்க்கார் அறிவிப்புகள் வெளியிடப் படுகின்றன. உயர்நிலை அதிகாரிகள் அந்தமான் தீவுக்குச் சென்று பத்து அல்லது பதினைந்தாயிரம் ஏக்கரா நல்ல வளமான பூமிப் பகுதியைப் பார்த்து வந்து—அதை விவசாயம் செய்வதற்கு அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசுக்கும் சிபார்சு செய்து—அவர்கள் அதைப் பரிசீலித்துப் பார்த்து ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல கூடலூர் பகுதியில் தேயிலைத் தோட்டங்களில் அவர்களைக் குடியமர்த்துவதாகிய திட்டமும் அமுலில் இருக்கிறது. நீலகிரிப் பகுதியிலும் அப்படிப் பட்ட ஒரு திட்டம் இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் விளைச்சலுக்குப் பாங்கான நிலங்கள் என்ன என்ன என்பதைக் கணக்கிட்டு—அவைகளில் இலங்கையில் இருந்து வருகிற நல்ல விவசாயிகளை ஈடுபடச் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டு வருகின்றது.

அதைப்பற்றிய முழு விவரங்களை நாம் அறிந்துகொள்வோமானால் செய்யப்பட்டிருக்கிற காரியங்களில் 10 இலட்சம் ரூபாய் என்று இருப்பது பட்டியலிலே ஒரே ஒரு விவரமே தவிர, முழு விவரமல்ல என்பதை நண்பர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன்.

[திரு. சி. என். அண்ணாதுரை]

கொள்கிறேன். அவர்களே சொன்னார்கள், சமாதானமாகச் சென்ற ஊர்வலத்தைத் தாக்கினார்கள் என்று. ஏற்கனவே திருப்பித் திருப்பி வலியுறுத்தப்பட்டு வருகிறது, இப்பொழுதும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஊர்வலத்துக்கு அனுமதி கொடுக்கின்ற நேரத்திலே, ஊர்வலம் எந்த, எந்த வழியாகச் செல்ல வேண்டுமென்று ஒரு ரெகுலேட்டரி ஆர்டர் வழங்கப்படும். அந்த வழியாகச் சென்ற யார்மீதும் போலீசார் தாக்குதல் நடத்தவில்லை, தாக்கவேண்டிய நிலைமை ஏற்படவில்லை. அனுமதிக்கப்படாமலிருந்த பாதை வழியாக, ஊர்வலத்தின் பெரும் பகுதியினர் சென்றுகொண்டிருந்ததற்குப் பின்னர், பிற்பகுதியினர் வேறு பக்கத்திற்குச் செல்ல முயற்சித்த நேரத்தில் அவர்கள் கலைக்கப்பட்டார்கள். கலைக்கப்பட்ட நேரத்தில் தடியடி நடத்தப்பட்டது என்பதுதான் எனக்குக் கிடைத்த தகவல். அந்தத் தகவல்தான் பத்திரிகையிலும் வந்திருக்கிறது. ஊர்வலத்தின் முன்பகுதி கிட்டத்தட்ட கன்னப்பர் திடலை நோக்கி நடந்து கொண்டிருந்தது. பிற் பகுதியினர் அனுமதிக்கப்படாத பாதை வழியாக வேறு பக்கத்திற்குச் செல்ல முயற்சித்ததால் கலைக்கப்பட்டார்கள். அவர்கள் தாக்கவேண்டுமென்று தாக்கியிருப்பார்களானால் நான் கண்டிப்பேன். ஊர்வலம் நடத்துவது என்பது ஜனநாயக முறைகளில் ஒன்று. ஒதுக்கப்பட்டிருக்கிற பாதையை விட்டு வேறு பாதை வழியாகச் செல்லும்பொழுது சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் அவர்களைத் தடுத்து நிறுத்தவேண்டிய அவசியமும், கலைக்கவேண்டிய அவசியமும் போலீசைச் சார்ந்தது. கடுமையான தடியடி நடந்தது என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள், உடனடியாக நான் போலீஸ் அதிகாரியிடம் கேட்டு முழு விவரங்களையும் பெற்றுக்கொண்டேன். இப்பொழுது நான் சொல்லப்போவது, நடைபெற்றதற்குச் சமாதானம் என்று நினைக்க வேண்டாம். நாங்களும் தடியால் தாக்கப்பட்டோம். எங்களுக்கு அனுதாபத் தீர்மானம், ஒற்றிவைப்புத் தீர்மானம் இல்லை. சென்னை மருத்துவ மனையிலே சேர்ப்பதற்குக்கூட வசதியற்ற நிலையில் சென்னையைச் சுற்றியுள்ள மருத்துவ மனைகளில் எங்களுடைய தோழர்கள் கவனிக்கப்படுகின்ற அளவுக்கு தாக்குதலுக்கு ஆளானார்கள். ஆகையினால் இதைச் செய்கிறோம் என்று நினைத்தால்—எனக்கு ஈர மனது இருப்பதாகச் சொன்னார்கள், அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்—அது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இதைச் சொல்வது, நடைபெற்றதற்குச் சமாதானமாக அல்ல. ஆனால், இது பெரிது படுத்தப்படுவதற்குக் காரணம் அரசியல் நோக்கத்தோடு, அரசியல் பிரசாரத்திற்காகத்தான் என்பதை நான் எடுத்துச் சொல்லாமல் இருப்பதற்கில்லை.

திரு. கே. விநாயகம்: நமது முதலமைச்சர் அவர்கள் இந்த ஊர்வலத்தில் ஏற்பட்ட தடியடி பற்றி விவரித்துக் கொண்டு வரும் போது, 'அவர்கள் திசை மாறிப் போனதற்காகத்தான் நாங்கள்



[திரு. கே. விநாயகம்]

என்று சொன்னார்கள். திசை மாறிப் போன இடத்தில் அடித்தீர்களா? அல்லது மூர் மார்க்கட் வரை பின் தொடர்ந்து அடித்தீர்களா? அதே போன்று, சிந்தாதிரிப்பேட்டை வழியாகப் போனவர்களை அடித்த காரணம் என்ன? போலீஸ் கமிஷனர் காலையில் ஒரு அறிக்கை கொடுக்கிறார், மாலையில் ஒரு அறிக்கை கொடுக்கிறார். ஒரே ஒரு முறை அடித்ததாகச் சொல்லுகிறார். 600 பேரை ஒரே ஒரு முறை அடித்தார்களா? தொடர்ந்து அடித்தார்களா? அவர் சொல்லுவதிலே கான்ஃப்லிக்ட் இருக்கிறதே. இதையெல்லாம் நீங்கள் பார்த்தீர்களா? என்று எங்களைப் பார்த்து கேட்கிறீர்களே, நீங்கள் இதையெல்லாம் பார்த்தீர்களா? போலீஸ் அதிகாரிகளை அதிகமாக நம்பாதீர்கள். உங்கள் அதிகாரிகள் சொல்லுகிறார்களே, நியாயமாகத்தான் இருக்கும் என்று நீங்கள் அவர்களை நம்பி முடிவு செய்து விட்டால் எங்களுக்கு நேர்ந்த கதிதான் உங்களுக்கும் ஒரு நாள் வரும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** முன்னாலேயே சொன்னேன். அதற்காக இவர்கள் அனுபவிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. எங்களுக்குப் பின்னாலே வேண்டாம்—முன்னாலேயே எங்களுக்குக் கொடுக்க வேண்டிய அளவுக்குக் கொடுத்தீர்கள். அதற்காகத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் நடந்தது என்று தயவு செய்து கருதாதீர்கள். அதுவல்ல. போலீஸ் அதிகாரி அளித்த அறிக்கை முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது என்று சொன்னார்கள். நீங்கள் சொல்லுவதே முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறதே. முதலில் 300 பேர் என்றீர்கள், பிறகு 500 பேர் என்றீர்கள், இப்போது அது 600 பேராகக் காரணம் என்ன? (திரு. கே. விநாயகம்: ஜுடிஷியல் என்குயரி வையுங்கள்.) ஜுடிஷியல் என்குயரி வேண்டியதில்லை. அங்கிருந்து மூர் மார்க்கட் வரை அடித்துக்கொண்டு போனார்களே என்று கேட்டார்கள். தடுத்த இடத்தில் தடை போட்டவுடனே திரும்பிப் போயிருந்தால் தாக்குதல் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கும் போலீசுக்கும் இடையே கை கலப்பு நடந்தது. தொடர்ந்து நடந்தது. ஆகவே, அந்த இடத்தை விட்டுப் போகின்ற வரையில் தாக்குதல் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு இரண்டு உயர்தரப் போலீஸ் அதிகாரிகளும், 70 போலீஸ் அதிகாரிகளும் ஆளாகியிருக்கிறார்கள் என்பதே எதிர்த்தாக்குதல் நடத்தினார்கள் என்பதற்குச் சான்று. அதைக் கூட நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள், யாரோ போலி உடையணிந்த போலீஸ்காரர்கள் நிஜ உடையணிந்த போலீஸ்காரர்களைத் தாக்கினார்கள் என்றெல்லாம் சொல்லுவார்கள். அதைக் கதையாக எழுதி—செய்திக் கதிருக்காக அல்ல—சினிமா படமாகப் பிடித்தால் ஒரு சமயம் கற்பனைத் திறத்திற்காக ஒரு லட்சம் ரூபாய் பரிசை அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடும் என்று கருதுகிறேன். அப்படி அவர்கள் சொல்லும் முறையில் நடக்க இந்த அரசு ஒரு துளியும் இடம் கொடுக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முறையில் அழைத்து, எப்படியாவது தீர்த்து வையுங்கள் என்று அனுப்பினேன். வட ஆற்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலாளர் கிளர்ச்சி, தோல் பதனிடும் தொழிலாளர் கிளர்ச்சி நடந்த நேரத்தில் இரு சாராரையும் அழைத்து சமரசம் செய்து வைக்க முயன்று நியாயம் கிடைக்க வழி செய்திருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வது நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்களுக்காக மட்டுமல்ல, தொழில் அமைதி கெட்டு விட்டது, யாரும் கவனிக்கவில்லை என்றெல்லாம் சொல்வதற்கு ஆதாரம் இல்லையென்பதற்காகவுந்தான். எது எதிலே சமரசம் செய்து வைத்திருக்கிறோம் என்பதற்குச் சில சான்றுகளைத் தந்தேன்.

சிலவற்றில் சமரசம் செய்து கொடுக்க முடியாத முறையில் நிலைமை அதே அளவில் இருந்து கொண்டு வருகிறது. எங்களுடைய பொறுமையான எண்ணத்தின் காரணமாக எல்லாவற்றையும் தீர்த்து வைக்க முடியும் என்பதில் முழு நம்பிக்கை கொண்டவனாக இருக்கிறேன். அந்த நம்பிக்கையோடுதான் கோவை ஆலைப் பிரச்சினையையும் அணுகி வருகிறேன். அதற்கு மட்டும் மத்திய அரசு புதியதாக விதிக்கப்பட்டிருக்கும் எக்ஸைஸ் வரி விகிதத்தில் ஓரளவு தாராள மனப்பான்மையைக் காட்டியிருப்பார்களேயானால், நாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியோடு சேர்த்து மத்திய சர்க்காரும் அந்த முயற்சியில் ஈடுபட்டு அதற்கு இணங்கியிருப்பார்களேயானால், அந்தப் பிரச்சினை வெகு விரைவில் தீர்க்கப்பட்டிருக்க முடியும்.

ஆனால் எத்தனை முறை மத்திய அரசை அணுகினாலும் அவர்கள், அதிலும் நிதி அமைச்சர் அவர்கள், எக்சைஸ் வரியை எடுப்பதில் இன்னமும் ஒரு துளியும் அசைந்து கொடுக்க மறுக்கிறார். நம் மாநில அரசால் அதற்காக எண்ணற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இரண்டு, இரண்டரைக் கோடி ரூபாய்க்கு மேல் அந்த ஆலைகளுக்குக் கடன் வழங்குவதற்குச் சர்க்கார் உத்தரவாதம் கொடுத்து ஆலைக்காரர்கள் அப்படிச் செலுத்தத் தவறினால் அதை அரசு செலுத்தும் என்று சொல்கிற முறையில் 2½ கோடி ரூபாய்க்கு மேல் ஆலைகளுக்குக் கடன் கிடைக்கும்படிச் செய்திருக்கிறது. அதே போல் ஆலைகளை நடத்திச் செல்லுகிறவர்கள், மின்சார வரிக் கட்டணத்தை எங்களால் இப்போது கட்ட முடியாது என்றால், கால தாமதமாகும் என்றால், தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. விற்பனை வரி கொடுப்பதற்குத் தவணை தேவையென்றால் அந்தத் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் இவ்வளவையும் சர்க்கார் ஏற்று நடத்துவதற்காக ஒரு குழு நியமிக்க வேண்டுமென்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி தொடர்ந்து அதில் ஈடுபட்டவர்களுக்குத்தான் தெரியும். அதற்காக எத்தனை முறை டெல்லி போகவேண்டியிருந்தது, எத்தனை அமைச்சர்களின் கதவுகளைத் தட்டவேண்டியிருந்தது, எத்தனை அமைச்சர்களிடம் ஒரு முறைக்குப் பன்முறை கேட்க வேண்டியிருந்தது, அந்தக் குழுக்களை அமைப்பதில் எவ்வளவு



காலதாமதத்தை அவர்கள் காட்டியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னால், உள்ளபடியே மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையேயுள்ள சில மாறுபாடான கருத்துக்களைச் சொல்ல வேண்டிவரும் என்பதால் நான் அதைப் பற்றிய முழு விவரத்தையும் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன். ஏனெனில், மாநில அரசின் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்ட பிறகு மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் வீணான மனக்கசப்பு ஏற்படக் கூடாது என்பதில் நான் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறேன். இருந்தாலும் இந்த ஆலைப் பிரச்னையைப் பொறுத்த வரையில் மாநில அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிக்குத் தகுந்த அளவிற்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளவேண்டியவனாக இருக்கின்றேன். இந்த ஒத்துழைப்பு நல்ல அளவில் கிடைக்குமானால் இந்த ஆலைப் பிரச்சினை தீர்க்கப்பட முடியும் என்ற நம்பிக்கையோடுதான் அதில் இன்னும் நாம் ஒரு குழுவிற்குப் பதிலாக மூன்று குழுக்கள் விசாரணை நடத்தும்படி ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். என் நண்பர்கள், கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களானாலும் சரி அல்லது காங்கிரஸ் கட்சி நண்பர்களானாலும் சரி, எந்த அரசு அமைக்கப்பட்டாலும் குறிப்பிடப்பட்டிருக்கிற சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதை அனைவரும் உணருவார்கள். ஒரு ஆலை சரிவர நடக்கவில்லை அல்லது அதை மூடிவிட்டார்கள் என்றால் உடனடியாக சர்க்கார் இதை நாங்கள் ஏற்று நடத்திக் கொள்கிறோம் என்று சொல்லிவிட முடியாது. நண்பர் விநாயகம் அவர்கள் ஒரு வழக்கறிஞர், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு வழக்கறிஞர். திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும் ஒரு வழக்கறிஞர்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** அரசியல் சட்டத்தின் கீழ் நமக்கு அவ்வாறு எடுப்பதற்கு அதிகாரம் இல்லை என்பது அனைவரும் அறிந்ததுதான். இருந்தபோதிலும், பல்லாயிரக்கணக்கான உழைப்பாளிகளின் வாழ்க்கையைக் கெடுத்து, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும்போது அதற்கான சட்டத்தை நிறைவேற்ற அதற்கு சம்மதம் வேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்கவேண்டுமென்பதுதான் நாங்கள் கேட்பது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அவர்கள் சொல்வது நீதி, நான் விளக்கிக் கொண்டிருப்பது சட்டம். சில வேளை சட்டத்திற்கும், நீதிக்கும் முழுப் பொருத்தம் ஏற்படுவதில்லை. அப்படி ஏற்படவேண்டும் என்பதுதான் என் விருப்பம். ஆக, இவைகளை அப்படியே ஏற்று நடத்திக் கொள்ள முடியும் என்ற உரிமை மாநில அரசுக்கு இருந்திருக்குமானால் ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால் அப்போது அதற்கு காங்கிரஸ் உறுப்பினர்கள் சம்மதம் அளித்திருப்பார்களா என்பது வேறு. ஒரு அங்கத்தினர் சொன்னதாக என் நினைவு. நீங்கள் பொது மக்களின் பணத்தை இப்படிப் போடுவதால் எங்களைக் கேட்டுக்கொண்டு செய்யுங்கள் என்று

நம்முடைய கம்யூனிஸ்டு கட்சி நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இதே பிரச்சினையைப் பற்றிப் பேசுகின்றபோது, பொதுவான ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை வைத்து மட்டுமல்ல, பொதுவாகவே அதிகாரிகள் மனப்பான்மை மாறவில்லை, அதுவும் போலீஸ் நடவடிக்கைகள் மாறவில்லை, மாறுதலுக்கு வழி செய்யவேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். அது பொதுவான கருத்தாகும், பொதுவான பிரச்சனையாகும். ஆனால் அவரைப் போல் அடிப்படை மாறுதல் தேவையென்று சொல்கின்ற கம்யூனிஸ்டு கட்சி அரசாளுகின்ற இடத்திலே தடியடிப் பிரயோகம் நின்று விட்டதா, துப்பாக்கிப் பிரயோகம் நின்று விட்டதா என்று பார்த்தால், இல்லை. அதற்காகவே அவர்களும் வருத்தப்பட்டார்கள் என்று கருதுகிறேன், நானும் வருத்தப் படுகிறேன். அவரும் நானும் சேர்ந்து எதிர்பார்க்கக்கூடிய நல்ல மாறுதல் வெகு சுலபத்திலே வர முடியாது, வெகு எளிதிலே வர முடியாது, வெகு சீக்கிரத்திலே வர முடியாது. கூடுமான வரையில் இந்த ஆட்சியில் அந்த மனப்பான்மை மாறும் வகையில் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: சென்ற பட்ஜட் தொடர் கூட்டத்திலேயே நான் குறிப்பிட்டுச் சொன்னேன். இந்த அரசில் மட்டுந்தான் என்று நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கேரளாவிலும் அப்படித்தான் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னேன். இங்கு ஒரு ஆட்சி, அங்கு ஒரு ஆட்சி என்று இடத்திற்குத் தக்கபடி மாற்றிப் பேசவில்லை. நடக்கிற உண்மைகளைத்தான் எடுத்துச் சொன்னேன். எப்போதும் அப்படியே சொல்வேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அதையேதான் நானும் சொன்னேன். காங்கிரஸ் நண்பர்கள் சொன்னதற்கும் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் பார்க்கின்ற நோக்கத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதற்காகத்தான் சென்னேன். பொதுக் கருத்தைக் கூறியிருக்கிறீர்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஊர்வலத்தில் இருந்து வழிமாறிச் சென்றதற்காக லத்தி சார்ஜ் செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். ஊர்வலத்தின் ஆரம்ப பகுதியிலிருந்து வழி மாறிச் சென்றார்களா அல்லது பின் பகுதியினர் வழிமாறிச் சென்றார்களா? இதைப் பற்றித் தயவுசெய்து விளக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: ஊர்வலம் என்பது முழுப் பகுதியைத் தான் குறிக்குமே தவிர, முன் பகுதிக்கு ஒரு விதி, பின் பகுதிக்கு ஒரு விதி என்று கிடையாது என்பதைக் கனம் உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. அது அவரே தெரிந்து கொள்ளக்கூடிய ஒன்று.

மற்றபடி குறிப்பிட்டுச் சொன்னது தொழில் அமைதியைப் பற்றியது. தொழில் அதிபர்கள் சரியான போக்கில் நடந்து கொள்ளவில்லை என்று குறிப்பிட்டார்கள். தொழில் அதிபர்களைக் கூப்பிட்டுப் பேச வேண்டுமென்றால் அவர்கள் அதற்கு இணக்கம் தருவதில்லை என்று குறிப்பிட்டார்கள். ஒரு தொழில் நிறுவனத்தில்





உள்ள முக்கியமான ஒருவரை சமரசம் செய்து வைக்க வேண்டுமென்று விரும்பி அழைத்த நேரத்தில் வரத் தயக்கப்பட்டது உண்மை. அதற்காக நான் வருத்தப்பட்டேன். பிறகு அவர் என்னிடத்தில் வந்து விளக்கங்களை எல்லாம் கொடுத்தார். 'அந்த நேரத்திலே வந்திருப்பேனேயானால் இருக்கிற சூழ்நிலை மிக மோசமாக ஆகி இருக்கும், அதனால்தான் வரவில்லை' என்று சொன்னார். என்ன சொன்னாலும் என்னுடைய மனம் திருப்தி அடையவில்லை என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்வதற்கு நம்முடைய பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்ன கருத்து துணை புரிந்ததற்காக அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த இடத்தில் தொழில் அமைதி கெடுவதாக இருந்தாலும் உடனுக்குடன் அது என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டவுடன் அவர்களை அழைத்து, இரு தரப்பாரையும் வைத்துக் கொண்டு பேசி தொழிற் தகராறுகளைத் தீர்ப்பதில் மிகுந்த விருப்பத்தைக் காட்டுகிறவன் என்பதைப் பல சம்பவங்கள் சான்றாகக் காட்டும். நேற்று இரவுகூட ஒரு மணி வரை, விவசாயத் தொழிலாளர்கள் தங்களுக்கு நிலம் தேவை என்ற காரணத்தால் கிளர்ச்சியில் ஈடுபடுவதற்கு முன்னால் சென்னைக்கு வந்திருந்தவர்களுடன் கலந்து பேசி, அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் நல்ல முறையில் கேட்டுக் கொண்டு உரிய பரிகாரத்தைத் தேடுவதாகப் பேசி முடித்திருக்கிறேன். அதேபோல் சென்ற வாரத்தில் தஞ்சையின் ஒரு பகுதியில் மிராசுதாரர்களுக்கும் உழவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறுக்காக இருசாராரையும் வரவழைத்து—எனக்கு சில நாட்களாக உடல் நலம் சரியாக இல்லாமல் இருந்தும், அதிகமாகப் பேச முடியாத நிலை இருந்தபோதிலும்—பிற்பகல் இரண்டு மணி வரை இருசாராரிடத்திலும் பேசி ஒரு விதமான சமரச முடிவு ஏற்பட்டது. எனக்கும் இந்த அரசுக்கும் தொழில் அமைதியைக் காப்பாற்றுவதில் அக்கறை இருக்கிறது, அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்பதற்குச் சான்றாக சிலவற்றைக் கூற விரும்புகிறேன். ஈசன் குரூப் தொழிற்சாலை தகராறு, மெட்டல் பாக்ஸ் கம்பெனியில் ஏற்பட்ட தகராறு, விம்கோ தொழிற்சாலையில் ஏற்பட்ட தகராறு, இந்தியன் ஃபோர்ஜ்ல் ஏற்பட்ட தகராறு, இந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட தகராறு ஆகிய இவை ஒவ்வொன்றும் என்னுடைய சர்க்கார் நிர்வாகத்தில் தீர்த்து வைப்பதற்காக முயற்சி எடுத்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல், என்னுடைய நண்பர்களை எல்லாம் கூட அழைத்து, அதற்காக முயற்சி செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்வதை ஒரு சம்பிரதாயமாகவே, ஒரு பழக்கமாகவே கொண்டு வருகிறோம். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் கை வண்டித் தொழிலாளர்கள் எல்லாம் கிளர்ச்சி செய்ய முற்பட்ட போது, சுதந்திராக் கட்சி உறுப்பினரும், இந்த மன்ற உறுப்பினரும், என்னுடைய நண்பருமான டாக்டர் ஹாண்டே அவர்களை அந்தப் பகுதி எம்.எல்.ஏ. என்ற

சொன்னதாக நினைவு. ஆகவே இவற்றை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று மற்றவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தாலும் அவர்கள் சம்மதித்திருக்க மாட்டார்கள். ஆனால் நல்ல வேளையாக அவர்கள் சம்மதம் பெற்றுத்தான் தீரவேண்டுமென்ற நிலையில் பொது மக்கள் என்னை வைக்காத காரணத்தினால் அதைப்பற்றி நான் அதிகம் அக்கறை செலுத்தத் தேவையில்லை. எக்ஸைஸ் வரி எடுபடுவதற்கு அல்லது குறைவதற்கு மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்கள் ஒத்துழைப்பு அளிப்பார்களானால் தேசாய் அவர்கள் ஓரளவிற்கு இணங்கி வரக்கூடும், இந்த ஆலைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சினிமா செய்திக் கதிர் இருக்கிறது. ராமமூர்த்தி அவர்கள் 'நைட் டான்ஸ்' க்கு போவார், ஆனால் சினிமா எப்படி பிடிக்காமல் போய்விட்டது என்று ஆச்சரியப்பட்டேன். சித்தன் அவர்களும் சொன்னார்கள்: இந்த சினிமாத் துறை என்பது வெறும் பொழுதுபோக்கு சாதனம் மட்டும் அல்ல. பல்லாயிரக் கணக்கான மக்களுக்குத் தொழில் தருகிற ஒரு சாதனம் இது. விஞ்ஞானக் கருவிகளுக்கு நல்ல வாய்ப்பளிக்கிற சாதனம், ...களின் கற்பனைத் திறனும், நடிப்புத் திறனும் இவையெல்லாம் மேம்பாடு அடையச் செய்யும் சாதனம். . ஆகவே அவற்றிக்கு தரம் அறிந்து பரிசு கொடுப்பது அரசு செய்யும் காரியங்களில் ஒன்று. . நல்ல புத்தகம் எழுதுபவர்களுக்கு பரிசு அளிப்பதுபோல், நல்ல இசைவாணர்களுக்கு பரிசு அளிப்பதுபோல், நல்ல சினிமா நடிகருக்கு பாராட்டு தெரிவிப்பதுபோல் நல்ல படத்திற்கு பரிசு அளிப்பது வருவாயை உயர்த்தவும், தரத்தை உயர்த்தவும் பயன்படும். அம்முறையில் ஒரு இலட்சத்திற்கு சற்று அதிகம் செலவழிப்பது என்றால் அதை நண்பர் சித்தன் அவர்கள் பொறுத்தருளுவார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. கே. விநாயகம்:** அரசியல் நோக்கம் உள்வராது என்ற உத்திரவாதம் அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அரசியல் நோக்கம் உள்வராதா என்று கேட்டார்கள். சினிமாவில் அரசியல் இருக்கலாமா என்பது நெடுநாள் பேசப்பட்டு, சினிமாக்காரர்கள் அரசியலுக்கு வரலாமா என்ற கேள்வி கேட்கப்பட்டு, அதற்குப் பிறகு தேடித் தேடி அவர்களை அரசியல் மேடைக்குக் கொண்டு வந்து, (ஆரவாரம்) அதற்குப் பிறகு இப்போது அது அரசியல் நோக்கத்திற்காகப் பயன்படுமா என்று நண்பர் அவர்கள் கேட்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் ஓரளவிற்கு கலை விஷயத்தில் நல்ல நோக்கோடு உள்ளவன். அது மட்டுமல்ல அரசியலைக்கூட ஒரு கலை என்று நான் கருதுகிறேன். அரசியல் என்றால் ஏதோ கலைக்கு அப்பாற்பட்டது என்று பொருள் அல்ல. கலை என்பதற்கே சீர்படுத்தப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட திறமை அவ்வளவும் கலை என்ற தலைப்பில் வரும். ஆகவே, அரசியல் நோக்கம் கலக்குமா என்று கேட்கிறபோது வேறு ஏதோ கேட்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டு பாதி





அளவிலே நின்று விடுகிறார்கள். அவர்கள் கேட்க எண்ணியதை நான் சொல்கிறேன். காங்கிரஸ் பற்றுள்ள நடிகர்கள் நடித்த படங்களுக்குப் பரிசு கிடைக்காமல் போய்விடுமோ என்று நண்பர்கள் சொல்வார்களேயானால் நான் பெயரைக் குறிப்பிடாமல் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் யாரை காங்கிரஸ் பற்றுள்ள நடிகர் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்களோ அவரும் என் தம்பிகளில் ஒருவர் என்ற முறையில் (ஆரவாரம்) எந்தவிதமான அரசியல் நோக்கமும் கலக்கப்பட மாட்டாது என்று உறுதி அளிக்க விரும்புகிறேன். ஆனால் அது முதல்தரமான படம் என்று அதற்குரிய குழு தீர்மானிக்க வேண்டுமே தவிர நானோ விநாயகமோ அல்ல. பாதித் தூக்கத்தில் பார்க்கிறபோது தரமுள்ள படமெல்லாம் கூட தரமற்றதாகத் தெரியக்கூடும். ஆனால் அந்தக்குழு, அதற்கென்று உட்கார்ந்திருப்பவர்கள் அதற்குள்ள சில இலக்கணங்களை வைத்துக் கொண்டு பரிசுகள் வழங்குவார்கள்.

**திரு. நா. காசிராமன்:** சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு, அந்தக் கலையில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்ற வகையில் இத்திட்டத்தை வகுத்திருப்பதாகச் சொன்னார்கள். நல்ல காரியந்தான். அதேபோல் தமிழ்நாட்டில் பல தொழிற்சாலைகளில் பல பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்தந்தத் தொழில்களை எடுத்து அதற்குத் தகுந்தாற்போல் இம்மாதிரி பரிசு வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தினால் நல்ல தரமான பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதோடு அது சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கக்கூடும் என்பதால் அதைக் கருத்தில் கொண்டு ஏதாவது செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இந்த மேலான யோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அடுத்த சந்தர்ப்பம் கிடைக்கிறபோது அதை நான் நிச்சயமாக நிறைவேற்றுவேன். ஆனால் இப்போது கூட எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சில் மூலம் ஏற்றுமதி தரமாகச் செய்கிறவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதேபோல் இன்வென்ஷன்ஸ், புதுக் கண்டுபிடிப்புகள் செய்கிறவர்களுக்கு பரிசுகளும், பாராட்டுகளும் வழங்கப்படுகின்றன. அதை இன்னும் விரிவான முறையில் அமல் நடத்த வேண்டும் என்பதுதான் என் நோக்கமும்கூட. கைத்தறியில் நல்ல பார்டர் டிசைன்களுக்குக்கூட பரிசுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நண்பர் அவர்கள் சொன்ன மேலான யோசனையை நான் வரவேற்கிறேன். . நண்பர்கள் எடுத்துச் . சொன்ன கருத்துக்கள் ஒவ்வொன்றையும் பற்றி நான் எடுத்துப் பேசவில்லை என்ற காரணத்தினால் அவற்றை எல்லாம் நான் கவனிக்காமல் விட்டு விட்டேன் என்று யாரும் எண்ணிக் கொள்ள வேண்டாம். அவைகளுக்கெல்லாம் உரிய மரியாதை கொடுத்து எதை எதையெல்லாம் நான் ஏற்றுக்கொள்ள முடியுமோ அவற்றை ஏற்றுக்கொண்டு,

எவற்றைப் பரிசீலிக்க வேண்டுமோ அவற்றைப் பரிசீலித்து, எவை எனக்குத் திருப்தியில்லை என்று தோன்றுகின்றனவோ அவைகளை எல்லாம் சந்தர்ப்பம் நேரிடுகிறபோது நண்பர்களுக்கு விளக்கிக் காட்டுவேன் என்று எடுத்துச் சொல்லி இத் துணை மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ச. இராமமூர்த்தி:** பர்சனல் எக்ஸ்பிளனேஷன் சார் இரவு நடனங்களுக்கு நான் சென்றதைப்பற்றி முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு அரசாங்கம் அனுமதியளித்திருப்பதினால் அவைகள் நல்ல நடனங்கள்தான் என்று செல்லுகிறோம். சென்ற பிறகுதான் இப்படிப்பட்ட நடனங்களுக்கும் அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது என்பது தெரிகிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இந்த வாலிபவயதிலே போகாமல் வேறு எப்பொழுதுதான் போக முடியும்? போவதிலே தவறு என்று சொல்லவில்லை, போய்விட்டு வந்து குறைபட்டுக் கொள்வதைப் பற்றித்தான் சொன்னேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாகக் கமிட்டி அமைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது இன்னும் விசாரணையைத் தொடங்கவில்லை. அந்தக் கமிட்டி அமைக்கப்பட்டபொழுது 21 மில்களாக இருந்தன. இப்பொழுது மேலும் 6 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. இன்னும் பல மில்களை மூடப் போவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதில் தாமதம் செய்வதன் மூலம் மத்திய சர்க்கார் மீண்டும் ஆலைகளை மூட ஒத்தாசை புரிகிறதா? இதனால் மாநிலத்திலுள்ள தொழிலாள மக்களுக்குத் தொல்லைகள் ஏற்படுகின்றன. இவ்வாறு மத்திய சர்க்கார் கால தாமதம் செய்வது ஏன் என்பதற்கு விளக்கம் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** குழுக்கள் அமைக்க வேண்டுமென்று யோசனை சொல்லப்பட்டபொழுது ஒரேவொரு குழுவுக்குச் சம்மதம் தெரிவித்தார்கள். ஒரு குழுவும் சில ஆலைகளை மட்டும் பரிசீலிக்க இணக்கம் தெரிவித்தார்கள். மறுபடியும் அணுகி இன்னமும் பல ஆலைகள் இருக்கின்றன, ஒரு குழுவேயிருந்து எல்லாவற்றையும் விசாரிக்க வேண்டுமென்றால் தாமதமாகிவிடும், எனவே மூன்று குழுக்கள் போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். மூன்று குழுக்களுக்குத் தகுந்த தலைவர்கள் கிடைக்க மாட்டார்கள் என்று விளக்கம் கொடுத்து இறுதியில் மூன்றையும் போட்டிருக்கிறார்கள். காலதாமதமாவதைப் பற்றி கனம் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களையும் அவையின் கருத்தாக எண்ணி மத்திய அரசுக்கு வலியுறுத்தி சொல்லிக்கொள்வேன்.

மத்திய அரசு காலதாமதம் காட்ட என்ன காரணம் என்று உறுப்பினரவர்கள் கேட்டார்கள். நான் கிடைத்தாலே என்னைப்





பார்த்துக் கேட்டார்கள், நான் யாரைப் பார்த்துக் கேட்பது என்று தெரியாமல் இருக்கிறேன். என்ன காரணம் என்று உள்ளபடியே எனக்குத் தெரியவில்லை. உள்ளபடியே எவ்வளவு பெரிய பயங்கரப் பிரச்சினை என்றும், ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சனை என்றும் என் சக்திக்கு எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு விளக்கிச் சொன்ன பிறகும் இன்னமும் தாமதமாக நடந்து கொள்வது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொளகிறேன். அமைச்சர் தினேஷ் சிங் அவர்கள் கூட நான் செப்டம்பர் மாதத்திலே வருகிறேன், ஆலை முதலாளிகளையும் தொழிலாளர் தலைவர்களையும் சந்தித்துப் பேசுகிறேன், சென்னைக்கும் கோவைக்கும் வருகிறேன், இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருக்கிறேன் என்று கூறி, தனக்கு அக்கறை உண்டு என்று எடுத்துச் சொன்னது ஓரளவு நம்பிக்கையையும், ஆறுதலையும் தருவதாக அமைந்துள்ளது. விரைவில் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவர்களிடத்திலும் நம்முடைய முழுத் தகவல்களையும் கொடுத்து மத்திய சர்க்காருக்கு மேலும் அதிக அக்கறை ஏற்படும்படியாக நாம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகும் மத்திய சர்க்கார் தயக்கம் காட்டினால் இதைக் கட்சிப் பிரச்சினையாகக் கருதாமல் நாட்டுப் பிரச்சினையாகக் கருதி மத்திய சர்க்கார் நல்ல நடவடிக்கை எடுக்க நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள் என்னுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். மற்றவர்களைக் கேட்டுக் கொள்ளாமல் அவர்களை மட்டும் ஏன் கேட்டுக்கொள்ளுகிறேன் என்றால் மற்றவர்கள் ஒத்துழைப்பு தருவதாக தீர்மான வடிவத்திலே தெரிவித்திருக்கிறார்கள். "தமிழ் நாடு" பிரச்சினையில் எப்படி எல்லோரும் ஒன்று பட்டிருக்கிறோமோ அதைப்போல இதிலும் காங்கிரஸ் நண்பர்கள் ஒன்றுபட்டு இந்த ஆலைப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இந்த ஆலைப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால், ஆலைகள் நல்ல முறையில் இயங்கும் வகையிலே இந்த 'எக்ஸைஸ் வரியை எடுக்க வேண்டுமென்று காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட ஏகமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் என்னுடைய கருத்திற்கு நல்ல வலிவு கிடைக்கும். இதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவரவர்கள் தமது கட்சியினருடன் பேசி எனக்குத் தெரிவித்தால் அதற்குத் தீர்மானத்தைக்கூட நிறைவேற்ற சம்மதிக்கிறேன். அவர்கள் எதிர்த்தால் அது எந்த வகையில் பாதிக்கும் என்றால் அது இங்கே பாதிக்காது; இங்கே நிறைவேறிவிடும். ஆனால் அது மத்திய சர்க்காரிடத்திலே போகும் பொழுது 'காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்த்திருக்கிறார்கள்' என்பதையே காரணமாகக் காட்டி, 'இது ஏகமனதான கோரிக்கை அல்ல, நீங்களும் உங்களுடன் தேர்தல் கூட்டுறவு வைத்திருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியினரும், சோஷலிஸ்ட் கட்சியினரும் சொல்லும் காரியம்' என்று அவர்கள் சொல்லிவிடுவார்கள். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட—நம்முடன் ஒத்துழைப்பதாக சுதந்திராக் கட்சியைச் சார்ந்துள்ள, கோவையிலேயிருக்கின்ற ஒரு தொழிற்சங்கமும் அறிவித்திருக்கிறது. எனக்குக் கிடைக்க

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 ஆகஸ்ட் 19

வேண்டிய உதவி, சொல்ல வேண்டிய சம்மதம், பெறவேண்டிய இணக்கம், நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர்களிடத்திலேதான் இருக்கிறது. அதை எதிர்க் கட்சித் தலைவர்கள் தீர யோசனை செய்து, கட்சியில் உள்ளவர்களுடன் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.**

## 2. 1968-69-ம் ஆண்டில் கூடுதல் செலவிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

### கோரிக்கை எண் 1—நிலவரித் துறை

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,74,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 55,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,90,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



1968 ஆகஸ்ட் 19]

THIRU K. VINAYAKAM : Sir, the House can give permission to the Leader of the House to move these Demands.

[பேரவையின் அனுமதியுடன் மற்ற கோரிக்கைகளை மாண்புமிகு அவை முன்னவர் முன் மொழிந்தார்]

### கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத் துறை

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,25,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 6— மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

"கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 7—தேர்தல்கள்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 40,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,08,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,09,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,25,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,25,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 12—காவல் துறை

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்



"கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,45,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 13—கல்வி

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,15,65,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 14—மருத்துவம்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,95,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,25,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 16—வேளாண்மை

பிற்பகல் 1-30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,61,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 17—மீனளம்**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 90,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை **வழங்கப்பட்டது.**

**கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,50,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 19—கூட்டுறவு**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,05,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 20—தொழில்கள்**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,57,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை **வழங்கப்பட்டது.**

**கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,50,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."



நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 24—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 24—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,50,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை **வழங்கப்பட்டது.**

**கோரிக்கை எண் 25—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 25—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,50,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 26—பாசனம்**

**கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள்**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 26—பாசனம், கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்புக்களின்கீழ் ரூ. 26,13,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை **வழங்கப்பட்டது.**

**கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ்

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

ரூ. 6,80,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 33—பல்வகை

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 39,85,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 34—எழுதுபொருள்-அச்சுத் துறை

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 34—எழுதுபொருள்-அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,00,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,50,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



### கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 80,00,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,31,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 42—பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 42—பொதுப் பணிகள் மூலதனச் செலவுகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,06,11,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 1,16,07,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ii) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) மசோதா

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) மசோதாவை இப் பேரவையின்முன் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவை தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இந்த நிதிக் கோரிக்கைகளைப் பொறுத்தவரையிலே எங்களுடைய 'கட் மோஷன்'களை நாங்கள் பிரஸ் செய்யப் போவதில்லை. ஆனால் எங்களுடைய 'கன்செண்ட்' கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு மணிக்கு மேலே எந்த வெட்டுத் தீர்மானமும் பிரேரேபிக்கப்படுவதில்லை.

6. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

x தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) மசோதா

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, "1968-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இம் மசோதாவை அறிமுகம் செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பிற் பகல் 1-37 பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

@ 162. Notification issued with No. 156959/67/F1, dated the 25th March 1968, in regard to the extension of certain provisions relating to the building regulations of the Madras District Municipalities Act, 1920, to the Andipatti Town Panchayat, Madurai district. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]





@ 163. Notification issued with G.O. Ms. No. 645, Home, dated the 7th March 1968, in regard to the exemption from the tax payable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, to a vehicle belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Government Kasturba Gandhi Hospital for Women and Children, Madras [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

@ 164. Notification issued with G.O. Ms. No. 1250, Home, dated the 26th April 1968, in regard to an amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960, published at pages 3–121 of the Supplement to Part V of the *Fort St. George Gazette*, dated the 14th September 1960, as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]

165. Notification issued with Pdl. No. 41/67-F1, dated the 25th March 1968, in regard to the alteration of classification of certain village panchayats into town panchayats. [Laid on the Table of the House under section 179 (1) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

166. Notification issued with G.O. Ms. No. 212, Rural Development and Local Administration, dated the 9th February 1968, in regard to an amendment to the rules relating to supplies of materials, goods, etc., to municipal councils, published at page 677 of Part I-A of the *Fort St. George Gazette*, dated the 23rd September, 1941, as subsequently amended. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

## B. Reports, Notifications and Other Papers.

34. Notification issued with G.O. Ms. No. 849, Revenue, dated the 19th April 1968, in regard to the exemption from the stamp duty in respect of mortgage deed in respect of loan from the Government of India for the construction of a hostel attached to the Ramakrishna Mission Technical Institute, Madras under Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

@ 35. Demnds for Grants for Further Expenditure and Supplementary Estimates thereof for the year 1968—(English and Tamil).

@ 36. Notice for Demand for Grants for Further Expenditure in the year 1968-69 (English and Tamil).

@ 37. Speech of the Hon. Chief Minister presenting the First Supplementary Statement of Expenditure for the year 1968–69 (English and Tamil).

[1968 ஆகஸ்ட் 20

**கோவை, சேலம்,** பொள்ளாச்சி முதலிய பகுதியில் **உள்ளவர்** களிடமிருந்து வருகின்றன. சாகுபடி செய்கிறவர்களுக்கு ஏற்றுமதி செய்தால் போதுமான ஆதாயம் கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மணிலா விலை இறங்கிவிட்டது. அதனால் அதைச் சாகுபடி செய்யக்கூடியவர்கள் ஸ்தம்பித்துப் போய்விட்டார்கள். எண்ணெய்வித்துக்கள் ஏற்றுமதி செய்ய வேண்டும். ஆனால் பிண்ணாக்கு முதலியவற்றை ஏற்றுமதி செய் வதை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்போது பிண்ணாக்கு ஏற்றுமதி செய்வதில்லை. இதிலே இரண்டு கருத்துக்கள் இருக் கின்றன. எண்ணெய் பொருள்கள் உபயோகிக்கக்கூடியவர் களுக்கு அவைகளினுடைய விலை உயராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அது ஒருவிதமான கருத்து. சாகுபடி செய்பவர் களுக்கு ஏற்றுமதியினால்தான் போதுமான ஆதாயம் கிடைக்கும் என்பது இரண்டாவது விதமான கருத்து. இந்த இரண்டு கருத் துக்களும் இரண்டு அங்கத்தினர்கள் கேட்டதிலிருந்து தெரிகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், பெரிய அளவிற்கு ஏற்றுமதி செய்கின்றவர்கள் ராலீ பிரதர்ஸ், வால்காட் பிரதர்ஸ், டாட்டா, பிர்லா போன்றவர்கள்தான் ஈடுபட்டு மார்க்கட்டை டௌன் செய்து குறைந்த அளவிற்கு வாங்கி பிறகு உயர்த்தக் கூடிய அளவிற்கு லாபத்தைக் கருதி வியாபாரம் நடத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அதனுடைய விலையையாவது கட்டுப்படுத்தக்கூடிய அளவிற்கு மத்திய சர்க்காரை வற்புறுத்த உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் அவர் கள் குறிப்பிடுவதுபோல் எந்தப் பெரிய கம்பெனிகளையும் ஊக்கு விக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்படவில்லை. மணிலா விலை வீழ்ச்சி அடைந்ததன் காரணமாக அவர்களுடைய நிலைமை பாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய நிலைமையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

### தமிழக அமைச்சர்கள்-பிரதம அமைச்சர் சந்திப்பு

* 35 வினு.—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967 ஜூலை மாதம் தமிழக அமைச்சர்கள் பிரதம மந்திரியை டெல்லியில் சந்தித்து உணவு விவசாயத் துறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ரூபாய் 100 கோடி திட்டத்திற்கு உதவி கோரினார்களா ?

(இ) அதன் முடிவு என்ன ?



1968 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) இல்லை.

(இ) இவ் வினு எழவில்லை.

DR. H. V. HANDE : Sir, there was a proposal sometime back to get some large amount from the Centre and put it on the fields in our State. Probably, there was some provision made in the next five-year plan. I think there was some programme also to see that the money is utilised for augmenting the food production in our State and also to increase the irrigation facilities. There was a detailed programme as per the speech of the Minister in several places. So, will the Hon. the Minister be pleased to tell us what exactly he proposes to do if he gets the amount ? How exactly is he going to distribute the amount. What are the steps that he is going to take to improve the irrigation facilities and augment the food producton ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அரசாங்கத்தின் விருப் பத்திற்கு இணங்க மிகக் குறுகிய காலத்திலே உணவு உற்பத்தியை எவ்வாறு பெருக்குவது என்று திட்டம் தயாரிப்பதற்கு உணவு உற்பத்தி கமிஷனர் அவர்கள் ஒரு திட்டத்தை அரசுக்கு சமர்ப் பித்தார்கள். சிறிய நீர்ப்பாசனத்திற்கும், புதிய கிணறுகள் வெட்டுவதற்கும், விசை ஏற்ற அமைப்பு ஏற்படுத்துவதற்கும், தனியார் குழாய்க் கிணறுகள் வெட்டுவதற்கும், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் போடுவதற்கும், அரசாங்கம் குழாய்க்கிணறுகள் போடு வதற்கும், டிராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டத்திற்கும், டிராக்டர்களை தவணை முறையில் கொடுக்கும் திட்டத்திற்கும், கிராமப்பகுதியிலே மின்சாரம் விஸ்தரிக்கும் திட்டத்திற்கும், ஆக எல்லாத் திட்டத்திற்கும் 4, 5 ஆண்டுகாலத்தில் 100 கோடி ரூபாய் வேண்டுமென்ற அளவில் 1967-68-க்கு மட்டும் 20 கோடி ரூபாய் அவுட்சைட் தி பிளான் ஒதுக்கவேண்டுமென்று முதல் அமைச்சர் கள் மாநாட்டிலே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் வற் புறுத்தினார்கள். அவர்கள்கூட உணவு அமைச்சர் அவர்களும், நானும் சென்றிருந்தோம். கேள்வியில் 100 கோடி ரூபாய் என்றி ருக்கிறது. கொடுக்கப்பட்டது 20 கோடி ரூபாய்தான். ஆனால் இன்னும் கொஞ்சம் பணம்கூட வழங்கப்படவில்லை. மத்திய ராஜ்ய உணவு அமைச்சர் திரு. அண்ணாசாகிப் சிண்டே அவர்கள் மதுரை வந்தபோது, 6 கோடி ரூபாய் மின்சாரம் விஸ்தரிப்பதற் காகவும், சிறிய நீர்ப்பாசனத்திற்கும் வழங்குவதாக வாக்களித் தார்கள். அதற்குப் பிறகு தஞ்சை வந்த மத்திய உணவு அமைச்சர் திரு. ஜெகச்சீவன்ராம் அவர்கள் நல்ல மனதோடு சிறிய தொகை வழங்குவதாக வாக்களித்தார்கள். பெரியவர்கள் வாயால் சிறிய தொகை கொடுத்தாலும் நல்லது என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரையிலும் அந்த தொகை யும் வரவில்லை. மானியமாக இல்லாவிட்டாலும் கடனாகவாவது வழங்குங்கள் என்று சொல்லுகிறோம். இதனால் நம்முடைய விவசாயிகளுக்கு உதவி செய்யமுடியாத நிலைமை வந்திருக்கிறது. நில அடமான வங்கி, அக்ரிகல்சரல் பைனான்ஸ் கார்ப்பொ ரேஷன், அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் ஸ்டேட் கார்ப்பொரேஷன்,

# தமிழக சட்டப் பேரவை

---

## செவ்வாய்க்கிழமை, 1968 ஆகஸ்ட் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேற்று தள்ளி வைக்கப்பட்ட வினாக்கள் முதலிலே எடுத்துக்கொள்ளப்படும்.

### எண்ணெய் வகைகள் ஏற்றுமதி

*34 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலிருந்து என்னென்ன விதமான எண்ணெய், எந்த அளவு வெளிநாடுகளுக்கும், இதர ராஜ்யங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது ?

(இ) அதே போல் இறக்குமதி செய்யப்படுகிறதா ?

(உ) 1960 முதல் 1966 வரை, விபரம் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) முதல் (உ) வரை: பேரவைமுன் விவர அறிக்கை a ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்த விவர அறிக்கையில் நமது ராஜ்யத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏராளமான கடலை எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்று தெரிகிறது. அதோடு கடலையும் பிண்ணாக்குமாகப் போய்விடுகிறது. இதன் காரணமாக இங்கே அவற்றின் விலை உயர்ந்து மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் அல்லவா ? ஆகையால் அதைக் கட்டுப்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** வேர்க்கடலை, முழு வேர்க்கடலை ஆகியவை மத்திய அரசினுடைய நிபந்தனையின் பேரில் அவர்களுடைய ஆணைக்குட்பட்டுத்தான் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகையால் கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறபடி கணிசமான அளவு ஏற்றுமதி ஆகவில்லை. ஏற்றுமதி ஆகவேண்டுமென்ற கோரிக்கைகள் மணிலா சாகுபடி செய்யக்கூடியவர்களிடமிருந்து, சாகுபடி செய்யக்கூடிய வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு,

---

a 416-419-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1968 ஆகஸ்ட் 20

இவை மூலமாக விவசாயிகளுக்கு உதவவேண்டுமென்று நிலைமைகள் எடுத்துச் சொல்லப்பட்டன. விவசாயிகளுக்கு நாம் குறிப்பிட்ட இனங்களுக்கு கடன்களாக மூன்று இனங்கள் தரப்பிலே டிராக்டர் வாங்கவும், கிணறுகள் எடுக்கவும், மின்சாரம் கொடுக்கவும் ஏற்பாடு செய்யலாம். அந்த வகையில் கிணறு வெட்டுவதற்கு ரூ. 3,000 வரை கொடுத்து அந்த அட்வான்ஸ்க்கு வட்டியாக 6 சதவிகிதம் மின்சார வாரியத்திற்குக் கொடுக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. சென்ற ஆண்டில் நாம் 8 கோடி வரையிலும் நில அடமான வங்கியின் மூலமாக கொடுப்பதற்குத் திட்டமிட்டு அது 12 கோடி ரூபாய் வரை செலவழிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. தேவைப்பட்டால் இன்னும் அதிகமாக உதவக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. வினாயகம் :** நமது நாட்டைப் பாதிக்கிற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், நமக்கு உதவி வேண்டுமென்றால், எதற்கெடுத்தாலும் வடக்கேயிருக்கிற சர்க்காரிடம் காவடி எடுத்துக்கொண்டு போவதைவிட—காரணம், அப்படித்தான் காவடி எடுக்கிறார்கள் என்றெல்லாம் இப்பொழுது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் முன்பு குற்றம் சாட்டுவதுண்டு—நமது சர்க்காரிலேயே அல்லது நமது பிராந்தியத்திலேயே வேண்டிய அளவு பணத்தைச் சேகரித்து இந்தத் திட்டங்கள் எல்லாம் அமல்படுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்தப் புதிய அரசைப் பொறுத்தவரையில் காவடி எடுக்கின்ற பழக்கம் கிடையாது. ஏற்கனவே அந்த நிலை இருந்திருக்கலாம். நமது வட பழனியில் இருக்கும் வினாயகம் அவர்கள் அடிக்கடி காவடி எடுக்கிற பழக்கத்தில் சொல்லுகிறார் போலும். நாங்கள் காவடி எடுப்பது கிடையாது. ஆனால், மத்திய அரசாங்க அமைச்சர்களைச் சந்திக்கிறபோது நம்முடைய மாநில மக்களுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்கின்றோம். பிச்சை கேட்பது போன்ற முறை மற்றவர்கள் கையாண்ட முறையாக இருக்கலாமே தவிர நாங்கள் பிச்சை கேட்கவில்லை. உரிமைக்காக வாதாடுவோம், வாதாடுவோம் என்ற உறுதியை மீண்டும் சொல்லுகிறேன். (ஆரவாரம்)

**திரு. வி. கே. கோதண்டராமன் :** எந்த இடத்திற்கு காவடி எடுத்து கேட்டுப் பெற வேண்டுமோ அதைப் பெறத் தெரியாத காரணத்தினாலே நண்பர் வினாயகத்தைத் தேர்ந்தெடுத்து திருத்தணிக்குக் காவடி எடுத்து ஏமாற்றம் அடைகிறார்கள் பலர் என்பது தெரியுமா ?

**திரு. கே. வினாயகம் :** What is that question about. ஒருவர் கிண்டல் செய்கிறார். அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நான் 'பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன்' கேட்கும்போது என்னை உட்காரும்படிச் சொல்லுகிறீர்கள்.



1968 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தக் கேள்வியை அனுமதிக்கிறேனா, இல்லையா என்பதற்கு என்னுடைய முடிவைத் தெரிந்துகொண்ட பிறகு கனம் உறுப்பினர் எழுந்திருக்க வேண்டும்.

**திரு. கே. வினாயகம் :** நான் கேள்வி கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களைக் கூப்பிட்ட பிறகு நீங்கள் கேள்வி போடுங்கள். இப்பொழுது திரு. இராமமூர்த்தி அவர்கள் கேள்வி கேட்கலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஓர் அங்கத்தினருடைய மனத்தைப் புண்படுத்தக்கூடிய அளவுக்கு பேசுவதோ கேள்வி கேட்பதோதான் கிண்டலாகும். என்னுடைய கேள்வி புண்படுத்தக்கூடிய அளவுக்கு இல்லை. ஏதோ தமாஷாகக் கேட்கக்கூடியதை, கிண்டல் பண்ணுவதாக அவர் சொல்லுவது ஏன் என்று தெரியவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த விவசாயத்திற்கான கடன் தொகை கோருகின்ற நேரத்தில், அதிகாரியினுடைய அறிக்கை இருக்கிறது. அதன் அடிப்படையில் செலவினங்கள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தச் சபையை நம்பிக்கைக்கு எடுத்துக்கொண்டு அந்த அதிகாரியினுடைய அறிக்கையின்படி எந்த எந்த இனத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, எந்த அடிப்படையில் அந்தக் கடன் கொடுக்கப்படுகிறது என்ற விவரங்களைச் சபைக்கு அமைச்சர் அவர்கள் தருவார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** சிறிய நீர்ப்பாசனச் சிறப்புத் திட்டங்களுக்காக 425.07 இலட்ச ரூபாயும், புதிய கிணறு உதவித் திட்டத்திற்காக 306.73 இலட்ச ரூபாயும், விசை ஏற்ற அமைப்புத் திட்டத்திற்காக 409.73 இலட்ச ரூபாயும், சமுதாயக் கிணறு திட்டத்திற்காக 27.44 இலட்ச ரூபாயும், தனியார்க் குழாய்க் கிணறுகளுக்காக 112.68 இலட்ச ரூபாயும், வடி முனைக் குழாய்க் கிணறுகளுக்காக 61.81 இலட்ச ரூபாயும், அரசாங்கக் குழாய்க் கிணறுகளுக்காக 13.80 இலட்ச ரூபாயும், டிராக்டர்கள் வாடகைத் திட்டத்திற்காக 185 இலட்ச ரூபாயும், டிராக்டர் தவணைக் கொள்முதல் திட்டத்திற்காக 36.26 இலட்ச ரூபாயும், கிராமப் பகுதியில் மின்சார வசதி அளிப்பதற்காக 400 இலட்ச ரூபாயும், ஆக கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் இந்தத் திட்டங்களுக்காக மத்திய அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்கப்பட்டிருக்கிறது. இந்தக் கடன் வசதிகளை மத்திய அரசாங்கம் கொடுக்காத காரணத்தால், இந்த அடிப்படையில் செலவு செய்யாமல் அவர்கள் கொடுத்திருக்கிற லைசென்ஸ் பேரில், நில அடமான வங்கியின் மூலமாகவும், வேளாண்மை மறு உதவிக் கழகத்தின் மூலமாகவும், வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலமாகவும் இப்பொழுது கடன் வசதி செய்து தரப்படுகிறது. கிணறுகள்

வெட்டுவதற்கு, டிராக்டர்கள் வாங்குவதற்கு, பம்ப் செட் இணைப்பதற்கு இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் மூலமாகவே அந்த விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். அதைப் பரிசீலனை செய்து, நில அடமான வங்கியின் மூலமாகக் கடன் வழங்குகிறார்கள், நான் குறிப்பிட்ட இனங்களுக்கு. அதுபோலவே, அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும் ஒரு கோடி ரூபாய் பம்ப் செட் அமைப்பதற்கும், 70 இலட்ச ரூபாய் டிராக்டர்கள் வாங்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே மட்டும் 450 டிராக்டர்களுக்கு—இதுவரையில் வழங்காத அளவுக்கு—கூடுதலான அளவுக்கு—அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்விகளுக்கு விடை அளிக்கும் நேரத்தில், அமைச்சர்கள் நீண்ட விடை அளிக்க வேண்டியிருக்கிறது. ஒரு மணி நேரத்தில் கேள்விகளை முடிக்க வேண்டியிருக்கிறது. அதற்கான விதிமுறை இருக்கிறது :

The Speaker may direct that lengthy answers or statistics given in answer to a starred question shall be laid on the table and printed in the official report of the proceedings of the Assembly instead of being given orally.

என்பது விதி. மாண்புமிகு அமைச்சர்கள் நீண்டதொரு விடை அளிக்க வேண்டியிருந்தால், "தனியாகக் கேள்வி கேளுங்கள்" என்று சொல்லுகின்ற முறையையோ அல்லது அச்சடித்து உறுப்பினர்களுக்கு வழங்குகின்ற முறையையோ மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கேள்வி எண்கள் 41, 42, 43, 44 ஆகியவற்றை பிறகு எடுத்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது கேள்வி எண் 45 எடுத்துக் கொள்ளப்படுகிறது.

### *Bureau of Tamil Publications*

*45 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) the number of books published by the Bureau of Tamil Publications so far;

(b) the value of such books;

(c) the amount realised by way of sale of books as on 30th September 1967; and

(d) the value of books remaining unsold?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:**

(அ) 1—4—1968 வரையில் 150 நூல்கள்.

(இ) ரூ. 19,49,045.00.

(உ) விற்பனையாளருக்குத் தந்த தரகு நீங்கலாக நிகர வசூல் ரூ. 5,29,123.00.

(எ) ரூ. 11,35,010.00.



**திரு. மா. பா. சாரதி:** தலைவர் அவர்களே, இப்பொழுது வெளியிட்ட நூல்கள் என்ன என்ன என்று சொல்லமுடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 150 நூல்கள், கிட்டத்தட்ட பதினெட்டுக்கு மேற்பட்ட வகைகளில் வெளியிடப்பட்டிருக்கின்றன. பொருளியல், வரலாறு, புவியியல், அரசியல், உளவியல், தத்துவம், வணிக இயல், சமூக இயல், புள்ளி இயல், கல்வி, அறிவியல், கணிதம், பௌதிகம், விலங்கியல்; தாவர இயல்; மருத்துவம், பொறியியல், சட்டம் ஆகிய துறைகள் பற்றிய நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ரூ. 11 இலட்சத்திற்கு மேற்பட்ட அளவுக்கு நூல்கள் தேங்கிக் கிடப்பதன் காரணம் என்ன? அந்த நூல்கள் தேங்காமல் இருப்பதற்கு அரசினர் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, புகுமுக வகுப்பு, கடைநிலை வகுப்பு ஆகியவைகளுக்குப் பயன்படும் வகையில் இந்த நூல்கள் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டன. இப்பொழுதுதான் தமிழைப் பாட மொழியாகப் புகுத்துகின்ற நிலைமையும், தீவிரப்படுத்துகின்ற நிலைமையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தால், இந்த நூல்களெல்லாம் நாளடைவில் விலை போகும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**திரு. டி. மார்டின்:** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இன்றைய முதலமைச்சர் அவர்கள் முன்பு எழுதிய புத்தகங்களாவன, 'கம்பரசம்', 'குமரிக்கோட்டம்', 'ஆரிய மாயை' போன்ற புத்தகங்களை இந்தத் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் மூலம் வெளியிடப் போவதாகப் பரவலாகப் பேசப்படுகிறதே, அது உண்மையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இனி நடைபெறப் போவதைப்பற்றி கேள்வி கேட்கக்கூடாது. எனவே, இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

THIRU K. VINAYAKAM : Are these books published by this Bureau of Tamil Publications just translations from the original books or compilation of the subject by the authors?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, சில புத்தகங்கள் மொழி பெயர்ப்புகளாக இருக்கின்றன. பெரும்பாலான புத்தகங்கள், அந்தந்தத் துறைக்குரிய ஆசிரியர்களாலேயே எழுதப்பட்ட புத்தகங்களாகத்தான் இருக்கின்றன.

### விருதுநகர் செந்திக்குமார் நாடார் ஆண்கள் கல்லூரி.

*46 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் செந்திக்குமார் நாடார் ஆண்கள் கல்லூரி அதன் நிர்வாகத்தினரால் அக்டோபர் மாதம் மூடப்பட்டதா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

[1968 ஆகஸ்ட் 20

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மாணவர் விடுதியின் விதிகளைத் தளர்த்தவேண்டுமென்று மாணவர் விடுத்த கோரிக்கையை ஏற்க முடியவில்லை. விடுதித் துணைப் பொறுப்பாளரிடம் மாணவர்கள் தகாத முறையில் நடந்து கொண்டார்கள். நிலைமை கடுமையானதால், கல்லூரி அதிகாரிகள், கல்லூரியையும், மாணவர் விடுதியையும் தற்காலிகமாக மூடிவிட்டனர்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இதன் காரணமாக மாணவர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி விடுதியிலிருந்து இரவு 8½ மணியிலிருந்து காலை 5 மணி வரையில் விடுதித் துணைக் காப்பாளருடைய அனுமதியின்றி எந்த மாணவரும் வெளியே போகக்கூடாது என்று விதி இருக்கிறது. அந்த விதியைத்தான் தளர்த்த வேண்டும் என்று விடுதி மாணவர்கள் கேட்டுக்கொண்டு வந்தார்கள். அந்த விதியைத் தளர்த்துவதற்குக் கல்லூரி முதல்வரும், விடுதி துணைக் காப்பாளரும் ஒப்புதல் அளிக்கவில்லை. அதற்குப் பிறகு, 8-10-1967-ல் அதுபற்றி ஒரு கிளர்ச்சியை அந்த விடுதி மாணவர்கள் தொடங்கி, விடுதித் துணைக் காப்பாளரிடம் தகாத முறையில் நடந்து கொண்டார்கள். நிலைமை கட்டுக்கு அடங்காத காரணத்தால், 11-10-1967 அன்று கல்லூரியையும் விடுதியையும் மூடி விட்டார்கள். அதற்குப் பிறகு, ஒவ்வொரு மாணவரும் நன்னடத்தை பற்றி அவரவருடைய பெற்றோருடைய கையெழுத்தோடு எழுதித் தரவேண்டும் என்றதன் பேரில், எல்லோரும் எழுதிக் கொடுத்த பிறகு, 17-10-1967-லிருந்து கல்லூரியும் விடுதியும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இப்பொழுதும் அமைதியாக அதே விதியின் அடிப்படையில் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரியின் விடுதியிலுள்ள மாணவர்கள் இரவு 8½ மணிக்கு மேல் வெளியே போகக்கூடாது என்று நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டார்கள். அதைக் கடைப்பிடிக்க மாணவர்கள் மறுத்ததால் விடுதி மூடப்பட்டு, மாணவர்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதே போல சர்க்கார் கல்லூரிகளிலும், ஆர்ட்ஸ் காலேஜ், மாநிலக் கல்லூரி போன்ற கல்லூரிகளிலும் உள்ள விடுதி மாணவர்கள் அந்த முறையைப் பின்பற்ற வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த முறை நல்ல முறை. கடைப்பிடிக்க வேண்டிய முறை. எந்தக் கல்லூரி விடுதிகளில் கடைப்பிடித்து வருகிறார்கள் என்பது தெரியவில்லை. அப்படி இல்லாத கல்லூரி விடுதிகளிலும் இந்த முறை கடைப்பிடிக்கப்படும் என்று கருதுகிறேன்.



1968 ஆகஸ்ட் 20]

திரு. கே. சகாதேவக் கண்டர்: தமிழ் வெளியீட்டுக் கழகம் வெளியிட்டுள்ள புத்தகங்களில் கம்பரசம், ஆரியமாயை . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த கேள்வி.

அரசினர் தொழிற் பயிற்சிப் பள்ளி, தேனி.

* 47 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், தேனி அரசினர் தொழிற்பயிற்சிப் பள்ளி மாணவர்கள் கடந்த ஒரு வருட காலமாக ஆசிரியர் இல்லை என்பதற்காக 13-11-1967 முதல் உண்ணாவிரதம் தொடங்கியுள்ளது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தேனி தொழிற் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுபவர் எழுவர். 14-11-1967 ஒரு நாள் மட்டும் உண்ணா நோன்பு இருந்தனர். 15-11-1967 அன்று உண்ணா நோன்பு நின்றது. பயிற்சி பெறுபவர்கள் அன்று முதல் பயிற்சி வகுப்புகளுக்குச் சென்று வருகின்றனர்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற் பயிற்சிப் பள்ளியில் ஒரு வருட காலத்திற்கு ஆசிரியர் இல்லை என்ற காரணத்தினால் மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள் என்பது உண்மையா? அப்படியானால், திரும்பவும் எப்பொழுது ஆசிரியர் நியமிக்கப்பட்டார். இப்பொழுது ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களிடமிருந்து நிறைய விண்ணப்பங்கள் வந்துள்ளனவே? ஏன் இந்த ஆசிரியர் இடம் காலியாக இருந்தது, பூர்த்தி செய்யப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தேனி அரசினர் தொழிற் பயிற்சிப்பள்ளியில் முக்கியமாக இரண்டு பிரிவுகள் உள்ளன. ரேடியோ அண்டு டெலிவிஷன் மெகானிகல் டிரேடில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. அதாவது வானொலி அண்டு தொலை காட்சி தொழில் நுட்பம். இந்தப் பிரிவுகளுக்கு இரண்டு ஆசிரியர்கள் உண்டு. ஒரு ஆசிரியர் 24-3-1966-லிருந்தும் மற்றொரு ஆசிரியர் 5-1-1967 லிருந்தும் மேற்கண்ட இரண்டு பிரிவுகளிலும் வேலை பார்த்தார்கள். 1-8-1966-க்கு முன்பு ஒரே பிரிவுதான் இருந்தது. அதற்குப் பிறகுதான் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன. 1-8-1966-லிருந்து 1967 ஜனவரி வரையில் ஒரு ஆசிரியரே இரண்டு பிரிவுகளையும் பார்த்துக் கொண்டிருந்தார். புதியதாக நியமிக்கப்பட்டவர் 3-7-1967-ல் ராஜிநாமா செய்து விட்டார். இந்த இடத்திற்கு வேறு ஒருவர் நியமிக்கப்பட்டார். அதாவது அம்பத்தூரிலிருந்து ஒருவர் அந்த இடத்திற்கு மாற்றப்பட்டார். அவர் தொடர்ந்து மருத்துவ விடுப்பு எடுத்துக்கொண்டு அங்கே போய்

சேரவே இல்லை. ஆகவே, மற்றப் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர் இந்தப் பிரிவையும் சேர்த்து பார்த்துக்கொண்டு வந்தார். அந்த இடம் இடையிலே மூன்று மாதம் காலம்தான் காலியாக இருந்தது என்பது அல்ல. இரண்டு பிரிவுகளையும் பார்த்துக் கொள்ளக்கூடிய திறமை படைத்தவர்தான் 3 மாதங்களுக்கு இரண்டு பிரிவுகளையும் பார்த்துக் கொண்டிருந்தார். மாணவர்கள் எண்ணிக்கையும் அதிகமாக இல்லை. 1966-ல் ஜூனியர் பிரிவிலும், சீனியர் பிரிவிலும் முறையே 10, 14 மாணவர்களும், 1967-ல் 21, 7 மாணவர்கள்தான் இருந்தார்கள். இந்த இரண்டு பிரிவுகளையும் சேர்த்து ஒரு ஆசிரியர் பார்ப்பது அதிக கஷ்டமில்லை. சீனியர் பாட்ச்சிலுள்ள 7 மாணவர்கள் தனியாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்படாவிட்டால் 12-11-1967-லிருந்து உண்ணா நோன்பு இருப்பதாக அறிவித்தார்கள். இதற்கிடையில் இன்னொரு ஆசிரியர் நியமிக்கப்பட்டு அவர் 9-11-1967-ல் வேலையில் சேர்ந்தார். இருந்தும் அந்த 7 மாணவர்கள் திருப்தியில்லாமல் 10-11-1967, 13-11-1967-ல் பள்ளிக்கு வரவில்லை. 14-11-1967-ல் உண்ணாவிரதம் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. 15-11-1967-ல் மாணவர்களே திரும்ப வகுப்புக்கு வந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அங்கே எல்லாம் அமைதியாக நடைபெறுகிறது.

**திரு. பி. வேலுசாமி:** இந்தப் பிரிவில் பயிற்சி பெறுகிறார்களே, அப்படி பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு சர்க்காரில் ஏதாகிலும் இந்தப் பிரிவைச் சேர்ந்த காலி ஸ்தானங்கள் வரும்பொழுது அவர்களுக்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கூடுமானவரையில் ஐ.டி.ஐ.-யில் படித்து வெளியேறுகிறவர்களுக்குத்தான், தனியார் துறையானாலும் சரி, பொதுத் துறையானாலும் சரி, அவர்கள் ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் தக்க பயிற்சி பெற்றிருக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கு முதல் சலுகை அளித்து எடுத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலைதான் இருந்து கொண்டு வருகிறது.

## ஏற்றுமதி–இறக்குமதி

* 48 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்றுமதி—இறக்குமதிகளைத் தனியார் துறையில் அல்லாமல் பொதுத் துறையிலேயே ஏற்று நடத்த வேண்டுமென்பதை பற்றிய ஆலோசனையை மத்திய சர்க்காரிடம் நமது சர்க்கார் கொடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.





**திரு. வி. கே. கோதண்டராமன்:** ஏற்றுமதி, இறக்குமதி தனியார் கையில் இருக்கிற காரணத்தினால், நாட்டினுடைய நன்மை பாதிக்கக்கூடிய அளவுக்கு, நாட்டுக்கு தீங்கு ஏற்படக் கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? நாட்டின் நலனைக் கருதியாவது–வெங்காயம், மிளகாய் இவைகளெல்லாம் ஏற்றுமதி செய்யப்படுகிறது—அம்மாதிரிப் பொருள்களை நமது ராஜ்யத்திலிருந்து நமது ராஜ்ய சர்க்காராவது ஏற்றுமதியை மேற்கொள்ளுவதற்கு உத்தேசிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி ஏற்றுமதி, இறக்குமதி 100-க்கு 100 இந்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது. ஆகவே, அதைப் பொறுத்து ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமென்றால் இந்திய நாடாளுமன்றத்தில் அதைப்பற்றிய முடிவுகள் எடுத்துச் செய்யவேண்டும். ஆகவே மாநில அரசுக்கு அந்தக் கொள்கையைப் பொறுத்தவரையிலே எதையும் எடுத்துச் சொல்வதற்கு சட்டப்படி இடமில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் இங்கே எடுத்துச் சொல்லிய அதே கருத்தை நாடாளுமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லி, மத்திய அரசாங்கத்தினர் அதற்கான சட்ட திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். ஏற்றுமதி, இறக்குமதியைப் பொறுத்தவரையில் மாநில அரசு இந்திய அரசினருடைய கொள்கைக்கு எந்த அளவுக்கு ஒத்துழைப்பு தந்து, கொள்கையை நிலைநாட்டவேண்டுமோ அந்த அளவுக்கு ஒத்துழைப்பை நல்கிக்கொண்டு வருகிறது. அந்த அடிப்படையில்தான் சிலபல பொருள்களுக்கு சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன. விற்பனை வரி நீக்கம், சப்ஸிடி போன்ற சலுகைகள் தரப்பட்டு ஏற்றுமதியை அதிகப்படுத்துவதற்கு வழி வகைகள் செய்யப்படுகின்றன. எக்ஸ்போர்ட் பிரமோஷன் செய்வதற்கு பரிசுத் திட்டங்கள் ஏற்பாடு செய்வதன் மூலம் ஏற்றுமதியை விரிவு படுத்தவேண்டும், கூடுமானவரையில் இறக்குமதியைக் குறைத்து, ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டுமென்ற கொள்கையை இந்திய அரசு கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறது. ஏற்றுமதி, இறக்குமதி யாரிடம் இருக்கவேண்டுமென்பதுபற்றி மத்திய அரசுதான் முடிவு செய்யவேண்டுமே தவிர, மாநில அரசுக்கு அதற்கும் தொடர்பு இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** ஏற்றுமதி சம்பந்தப்பட்ட மட்டில் தனியாரிடம் இருப்பதால், அவர்கள் நல்ல சரக்குகளை அனுப்பவில்லை என்ற காரணத்தினால், சிலோன் போன்ற நாடுகளில் மிளகாய், உள்ளி போன்ற பொருள்களுக்கு இப்பொழுது மார்க்கெட் குறைந்துகொண்டு வருகிறது. ஆகவே, இதை தனியார் கையில் விடாமல், சர்க்காரே ஏற்றுமதி செய்யவேண்டும் அல்லது கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ஏற்றுமதி செய்யவேண்டும்

என்ற யோசனையை இந்த அரசு மத்திய அரசுக்கு சிபார்சு செய்து, நமது மாநிலத்திலிருக்கிற கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ஏற்றுமதி செய்ய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் முதலில் எடுத்துச் சொன்னதுபோல், ஏற்றுமதி, இறக்குமதி மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டது. ஏற்றுமதி, இறக்குமதி தனியார் துறை மூலம் செய்யப்படுகிறது. சில பொருள்களைப் பொறுத்தவரையில் அரசாங்கமும் வைத்துக்கொண்டிருக்கிறது. ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமும் மாநில அரசு இறக்குமதிக்கு அனுமதி தந்து இறக்குமதி செய்வதற்கு வழி வகைகள் செய்கிறார்கள். இதுபற்றிய முழு அதிகாரமும் இந்திய அரசாங்கத்தின் கையில் இருக்கிற காரணத்தினால், அவர்கள் பார்த்துத் தான் ஏதாவது தக்க மாற்றம் செய்யவேண்டுமென்றால் செய்ய வேண்டிவரும்.

*Supply of rice to students' hostels*

* 49 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the educational institutions in Tirunelveli district in informal rationing areas are being supplied with rice on ad hoc quota basis for their pupils in their hostels; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம், திருநெல்வேலி மாவட்டத்தில் கல்வி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் விடுதிகள் அனைத்திற்கும் வார அடிப்படையில் அரிசி வழங்கப்படுகிறது.

(இ) திருநெல்வேலி மாவட்டத்தில், 9 வட்டங்களில் கல்வி நிலையங்களுடன் இணைக்கப்பட்ட 146 மாணவர் விடுதிகளுக்கும் பள்ளிகளுடன் இணைக்கப்பட்டுள்ள 466 நண்பகல் உணவு நிலையங்களுக்கும் அரிசி வழங்கப்படுகிறது.

146 கல்வி நிலையங்களுடன் இணைக்கப்பட்ட மாணவர் விடுதிகளுக்கு ஒரு வாரத்தில் 280 குவிண்டால் அரிசி வழங்கப்படுகிறது. பள்ளிகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் 466 நண்பகல் உணவு நிலையங்களுக்கு ஒரு வாரத்தில் மொத்தம் 158 குவிண்டால் அரிசி வழங்கப்படுகிறது.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டையிலுள்ள சவேரியார் கல்லூரி, செயிண்ட் ஜான்ஸ் கல்லூரி, கிரிஸ் ராஜா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆகிய இடங்களிலுள்ள ஹாஸ்டல் மாணவர்களுக்கு அதிகமான அரிசி தேவைப்படுகிறது. அதன் காரணமாக, அவர்களுடைய நிலங்களில் அவர்களுடைய சொந்த உபயோகத்திற்காக விளைவித்த நெல்லை அந்த விடுதிகளிலுள்ள மாணவர்கள் கொண்டு வருவதற்கு கலெக்டர் அவர்கள் தடை விதித்தது உண்மையா? அம்மாதிரி



தடை விதித்தது சரியல்ல என்று அந்தக் கல்லூரி நிர்வாகத்தினர் அரசுக்கு மனு அனுப்பியது உண்மையா? அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இதைப்பற்றி தகவல் எதுவும் இல்லை. தனியாகக் கேள்வி பேட்டால் பதில் சொல்லலாம்.

*Ceiling on Urban Properties*

*50 Q.—THIRU S. RAMACHANDRAN : THIRU A. M. RAJA : THIRU N. KITTAPPA : } Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether there is any proposal to fix ceiling on holding of urban properties? மு.ப. 9-30

THE HON. THIRU K. A. MATHIALAGAN : There is no proposal at present to fix ceiling on urban holding, but data are being collected in order to find out the nature and intensity of concentration of urban holdings in individual cases.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில், ஏற்கெனவேயே விவசாயிகளுக்கெல்லாம், நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம், அவர்களுடைய சொத்துக்கு உச்ச வரம்பு ஃபிக்ஸ் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், சமுதாயத்திலே, மேல் மட்டத்திலே இருக்கும் ஆலை அரசர்களும், சீமான்களும், தங்களுடைய சொத்துக்களைக் கொண்டு நகரங்களிலே பெரிய, பெரிய கட்டடங்களைக் கட்டுகிறார்கள். அப்படி இங்கேயுள்ள சொத்துக்களுக்கு உச்சவரம்பு கட்டுவதற்குச் சட்டம் கொண்டு வருவதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் சொன்னேன். அது ஒரு முற்போக்கான அம்சம். நகர்ப்புறம், கிராமப் புறம் எங்கு இருந்தாலும், தாரதம்மியம் இன்றி, செல்வக் குவியல்களை முறைப்படுத்த, இப்பொழுது நகர்ப்புறங்களில் இம் மாதிரியாகச் செல்வக் குவியல்கள் எந்த அளவிற்கு அந்த மாதிரி குவிந்திருக்கிறது ஒரு சிலர் கையில், எவ்வளவு இருக்கிறது, என்ன வகையில் இருக்கிறது என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள துவக்கம் செய்து, புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்று மூலக் கேள்விக்கு பதில் சொன்னேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், நகர்ப்புறங்களிலே உச்ச வரம்பு மாத்திரமல்ல, விலைக்கட்டுப்பாடும் செய்ய வேண்டும் என்பது அத்தியாவசியம் என்று அமைச்சர் கருதுகிறார்களா? இன்றைக்கு இருக்கும் நிலையில் இங்கே ஒரு சென்ட் நிலம் ரூ. 1,000 முதல் ரூ. 5,000 வரை விற்கக் கூடிய அளவில் இருக்கிறது. அதன் காரணமாக ஏழை எளியவர்கள் வீடு கட்டிக் கொண்டு வாழ வசதியில்லாமல், கண்ட கண்ட இடங்களில் குடிசைகள் கட்டிக் கொண்டு வாழும் நிலை இருக்கிறது. ஆகவே, சொத்துக்கு

உச்ச வரம்பு கட்டுவதோடு, விலை நிர்ணயம் செய்வதும் அவசியம் என்பதை உணர்ந்து, உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுதான் கூறினேன். அப்படிப்பட்ட நிலையில் இதுவும் ஒருங்கிணைந்து இருக்கிறது. ஒரு முனையில் செல்வம் குவிந்திருப்பது சமுதாயத்திற்கு ஆபத்தானது என்பதைத்தான் கனம் உறுப்பினர் அவர்களும் வற்புறுத்துகிறார்கள். எந்த அளவிற்கு அப்படிச் செல்வக் குவியல் சில இடங்களில் மட்டும் சேர்ந்திருக்கிறது என்று கணக்கிட ஒரு துவக்கத்தைத்தான் அரசாங்கம் செய்ய ஆரம்பித்திருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** உச்ச வரம்பு முடிவு செய்வதற்கு முன்னால், குறைந்த பட்சத்தை முடிவு செய்ய அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உச்ச வரம்பு குறைந்த வரம்பு என்பதைச் செய்வதற்கு முன்னதாக, எந்த அளவிற்கு அப்படி இருக்கிறது. எவ்வளவு பேர்கள் கையில் ஏராளமான சொத்துக்கள் குவிந்து செல்வந்தர்கள் ஆகிவிட்டார்கள் என்ற உண்மையான நிலைமையை அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : When it is not possible or when it is difficult to introduce ceiling on urban properties, is it not proper to keep in abeyance land ceiling also, until that period?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It has already become law.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஐயா, இருக்கிற சட்டப்படி திடீர் பணக்காரர்களைக் கட்டுப்படுத்த வழி இருந்தும், அவர்களைக் கட்டுப்படுத்தாமல், நாட்டுக்கு தீமை பயக்கும் முறையில் அவர்கள் அதிகபட்ச விலைக்கு விற்கின்ற நிலைமை இருக்கிறது. இருக்கும் சட்டத்தை அமுல்படுத்தி, அதற்கான உத்தரவுகளை அதிகாரிகளுக்குப் போட்டு, நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நம்முடைய பொருளாதார அமைப்பு சமதர்ம சமுதாயப் பொருளாதாரப் பிரச்சினையோடு இணைந்த பிரச்சினையாக இருக்கிறது.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, நகர்ப்புறத்திலே உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் பெரும் ஆலைகள் போன்றவற்றை சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும் என்பது மத்திய சர்க்காருடைய சட்டத்தோடு இணைந்ததாக





இருப்பதால், மாநில அரசு குறிப்பிட்ட தொழில்களை தேசிய மயமாக்க வேண்டும் என மத்திய அரசுக்கு சிபாரிசு செய்ய உத்தேசம் உண்டா ?

(விடை இல்லை)

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, தனிப்பட்ட நபர் களுடைய சொத்துக்களுக்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்று சொல்லும்போது, அரசியலில் இருப்பவர்களுக்கும், பொருளா தாரத்திற்கும் உச்ச வரம்பு கட்ட ஏதாவது யோசனை உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அரசியலில் என்ன உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்று கனம் உறுப்பினர் சொல்கிறார்கள் என்பது தெரியவில்லை. அதை விளக்கமாகச் சொன்னால் சௌகரியமாக இருக்கும்.

DR. H. V. HANDE : The Hon. Minister said that they are collecting data with regard to urban properties. Will the Hon. Minister tell us what steps have been taken to collect the data, whether a start has been made, what is the agency through which the data is going to be collected. Will the Hon. Minister give the details?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Data are being collected.

**திரு. பி. வேலுசாமி :** சார், கிராமப்புறங்களிலே நிலத்திற்கு உச்ச வரம்பு இருப்பது போல், நகர்ப்புறத்திலேயும் வீடுகளுக்கு உச்ச வரம்பு கட்ட உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைப் பற்றித்தான் நாம் இப்பொழுது விவாதித்துக் கொண்டு இருக்கிறோம். எந்த அளவில் செல்வக் குவியல் இருக்கிறது, உச்ச வரம்பு கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதற்கான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. அதன் பிறகு தான் அதற்கான வரம்பு முறைகளை உருவாக்க முடியும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** கிராமப் புறத்தில் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக, அந்தக் சட்டத்திலிருந்து தப்பிக்க வேண்டும் என்று அப்படிப்பட்ட நிலங்களை விற்றுவிட்டு நகர்ப்புறங்களில் வீடுகளைக் கட்டுகிறார்கள். அதோடு கருப்புப் பணம் இருக்கிறது. இன்கம்-டாக்சை ஏமாற்றுவதற்காக வழி காண இதையெல்லாம் செய்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் கேள்வியைக் கேட்கவேண்டும்; ஸ்டேட்மெண்ட் கொடுக்கக் கூடாது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** உச்ச வரம்புச் சட்டத்தை அர்பன் ப்ராபர்ட்டிகளுக்கும் சீக்கிரமாகக் கொண்டுவர முயற்சிப் பார்களா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தப் பிற்பகுதியை மட்டும் அனுமதிக்கிறேன்.

THIRU S. BALASUBRAMANIAN : My question was not out of order, I think.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதை நான் முடிவு செய்யவேண்டும். கேள்வி நேரத்தில், மாண்புமிகு அமைச்சர்களிடம் இருந்து செய்திகளைத் தெரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். நம்முடைய கருத்துக்களையெல்லாம் கூறி, கேள்வி கேட்க நேரம் கிடையாது, இடம் கிடையாது. "அர்பன் சொத்துக்கள்" அவைகளுக்கு உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வர உத்தேசம் உண்டா என்கிற கேள்விபற்றி துணைக் கேள்வி போட வேண்டும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** நிலைமைகளை எடுத்துச் சொல்லித்தானே கேள்வி கேட்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற வகையில் செய்வதற்காகத்தான் அரசாங்கம் முயற்சிகளைத் துவங்கியிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Instead of having a ceiling on urban properties, there was a proposal that the Government was contemplating in terms of levying a ceiling on urban incomes from professions of intelligentsia like doctors, lawyers and engineers. Is that ceiling in the offing or have the Government given it up.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I want notice, Sir.

## புயல் நிவாரணம்

*51 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.—

மதுராந்தகம் வட்டம் இடைக்கழி நாடு பகுதிகளில் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், தென்னந்தோட்டம் இழந்தவர்கள், வீடிழந்தவர்கள் ஆகியவர்களுக்கு நீண்டகால கடன் கொடுக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தென்னங்கன்றுகள் நட்டு தென்னந்தோப்புகளை உண்டாக்குவதற்காக ஏக்கருக்கு ரூ. 300 வீதம் நீண்டகாலக் கடன் வழங்கும் திட்டம், பழைய தோட்டங்களைப் புதுப்பிப்பதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1966-ம் ஆண்டு நவம்பர் திங்களில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட செங்கற்பட்டு மாவட்டப் பகுதிகளுக்குப் பயன்படுமாறும் அரசாங்கம் மேற்படி திட்டத்தில் வகை செய்துள்ளது. இப்புயலின்





காரணமாக வீடிழந்தவர்களுக்குக் கடன் வழங்குவது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்தது. ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டைப் பழுது பார்ப்பதற்கு ரொக்க மானியம் கொடுக்கப்பட்டதாலும் விவசாயிகளின் துயர் தணிப்புக்காக ஏராளமான பணம் செலவு செய்யப்பட்டதாலும் மேற்படி திட்டம் கைவிடப்பட்டது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கும், வீடிழந்தவர்களுக்கும் ரொக்கப் பணம் அப்போது தரப்பட்டது. விவசாயிகளுடைய நிலங்கள் புயலால் பாதிக்கப்பட்ட காரணத்தினால் மேற்கொண்டு அவர்களுக்கு நீண்டகாலக் கடன்கள் ஏதாவது வழங்க உத்தேசம் உண்டா ? அடுத்து, அங்குள்ள விவசாயிகள் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் துரிதமாக வசூலிக்கப்படுவதால், விவசாயிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, விவசாயிகள் திருப்பிச் செலுத்தும் கடனைத் தள்ளிவைக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, முன்பே அதைத்தான் நான் சொன்னேன். மதுராந்தகம் இடைக்கழிநாடு பகுதிகளில் ரூ. 23,55,610 தென்னந் தோப்புகளுக்கும், தென்னங்கன்றுகள் வாங்குவதற்கும் நீண்டகாலக் கடனாக கொடுக்கப்பட்டுள்ளது. சுமார் 1 லட்சத்து 43 ஆயிரம் தென்னங்கன்றுகள் வாங்கப்பட்டுள்ளன. அதற்கிற்கு பாதி விலையிலே அதாவது ஒரு தென்னங்கன்றுக்கு 50 பைசாவுக்கு அதிகப்படாத அளவுக்கு மானியம் வழங்கப்பட்டது. ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் என்ற அளவிலே நீண்டகாலக் கடனாக அளிக்கப்பட்டது. புயலால் பாதிக்கப்பட்ட மக்கள், தென்னந்தோட்டம் இழந்தவர்கள் ஆகியோருக்கு நிவாரணம் அளிக்கப்பட்டது. வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் இதுபற்றி நல்ல முறையில் ஆலோசனை கூறியுள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக் கேள்வி மதுராந்தகம் வட்டம் இடைக்கழிநாடு பகுதிகளைப் பற்றியது. உறுப்பினர்கள் மூலக் கேள்வியையொட்டி கேள்வி கேட்க வேண்டும்.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, மதுராந்தகம் தாலுக்காவில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 23 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புயல் காரணமாக அந்தப் பகுதி விவசாய வேலைகள் எத்தனை நாட்கள் அல்லது எத்தனை மாதங்கள் வரையில் பாதிக்கப்படும்படியான நிலைமை ஏற்பட்டது என்பதை அரசு அறிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, பழைய அரசாங்கத்திலேதான் புயல் வந்தது. புயலும் போய் விட்டது; அந்த அரசாங்கமும் போய்விட்டது. புதிய விவசாய அமைச்சர், புதிய உறுப்பினர்கள் வந்த பிறகுதான் நிவாரண

வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1966-ம் ஆண்டு நவம்பர் 3-ம் தேதியிலிருந்து 10-ம் தேதிவரையில் ஏற்பட்ட கோரப் புயலின் காரணமாக இந்தச் சேதம் ஏற்பட்டது.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, நான் கேட்டது, புயல் காரணமாக விவசாய வேலைகள் எத்தனை நாட்கள் வரை தள்ளிப் போடப்பட்டது என்பதுதான்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த அரசாங்கம் வந்த நான்காவது நாளிலிருந்து நிவாரண வேலைகள் தொடங்கப் பட்டன.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, விவசாய சம்பந்த மான வேலைகள் புயல் காரணமாக எத்தனை நாட்கள் பாதிக்கப் பட்டன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது விவசாய சம்பந்த மான வேலையே அல்ல. இந்தப் பகுதி தென்னந்தோப்புகள் இருக்கிற பகுதியாகும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் திரும்பவும் தென்னங்கன்றுகளை நட்டு, தோப்புகளைப் புதுப்பிப்பதற்காக நிவாரண வேலைகள் தொடங்கப்பட்டன.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இடைக்கழி நாடு தேங்காய்க்குப் பெயர்போன பகுதியாகும். அந்த ஊருக்குப் போனால் தேங்காய் மலிவாக வாங்கி வரலாம் என்று சொல்லுவார்கள். ஆகவே, தோப்புகளைப் புதுப்பிக்க பணம் கொடுத்து, தென்னங்கன்றுகளைக் கொடுத்தால் மட்டும் போதாது. பணத்தைச் சரியாகப் பயன்படுத்தி, தோப்புகளை உற்பத்தி செய்யும் செயல்கள் சரிவர நடைபெறுகிறதா என்பதைக் கண் காணிக்க வேண்டும் என்பதை அரசு உணர்ந்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தென்னங்கன்றுகளை ஒரே நாளில் நந்தனார் காலம் மாதிரி வளர்த்துவிட முடியாது. புயலினால் பாதிக்கப்பட்ட இடங்களில் ஏக்கருக்கு 300 ரூபாய் அளவில் கடனைக் கொடுத்து, தென்னங்கன்றுகள் கொடுத்து தென்னந்தோப்புகளை உண்டாக்கும் முயற்சியில் வேலைகள் நடை பெற்று வருகின்றன. ஒரே நாளில் நாம் இவைகளை உண்டாக்கி விட முடியாது. காலத்தை நாம் கட்டுப்படுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, 23 லட்சம் ரூபாய் அரசு கொடுத்துள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தப் பணம் எந்த அரசால் கொடுக்கப்பட்டது ? மேலும், நந்தனார் காலம் மாதிரி உடனடியாக தென்னந்தோப்புகளை உண்டாக்க முடியாவிட்டாலும், கொடுக்கின்ற பணத்தை வைத்துக் கொண்டு தோப்புகளை உண்டாக்குகிறார்களா, இல்லையா என்பதை அரசு கண்காணித்து வருகிறதா ?





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தென்னங்கன்றுகள் வைத்து தென்னந்தோப்புகளை அபிவிருத்தி செய்யும் வேலையை வேளாண்மைத் துறை அதிகாரி ஒருவர் கண்காணித்து வருகிறார். கனம் உறுப்பினர் அவர்கள், எந்த அரசாங்கத்தாலும் இந்தப் பணம் கொடுக்கப்பட்டது என்று கேட்டார். அவருக்கு சந்தேகம் வந்திருக்க வேண்டியதில்லை. இப்போதிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்—அண்ணா அரசுதான்—இந்தப் பணத்தைக் கொடுத்தது.

*Suspension of Assistant in Animal Husbandry Department.*

*52 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether an Assistant in Animal Husbandry Department in Chingleput district is kept under suspension for the last five years ; and

(*b*) if so, the charges framed against him and the reasons for not arriving at a final decision in the matter?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம். உதவியாளர் (Assistant.) ஒருவர் 1—8—1966 முதல் வேலையிலிருந்து தாற்காலிக தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டார்.

(இ) அந்த உதவியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவரை எழுத்தர் வேலைக்குத் தாழ்த்தி இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு

* 53 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நடமாடும் கால்நடை மருத்துவ யூனிட் ஒன்றை ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏற்படுத்தும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, சில இடங்களில் கோமாரி நோய் வந்து ஏராளமான அளவில் மாடுகள் இறந்துவிடு கின்றன. அவசர காலத்திற்கு மாவட்ட ஆஸ்பத்திரிக்குச் செல்வது என்பது முடியாத நிலைமையாக இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும் நடமாடும் கால்நடை மருத்துவமனையை வைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, மா வட்டந்தோறும் இப்பொழுது நடமாடும் கால்நடை மருத்துவ யூனிட் இருந்து வருகிறது. அவசர கேஸ்களைக் கவனிப்பதற்கு இது உதவிகாரமாக இருக்கும்.

[1968 ஆகஸ்ட் 20

**திரு. ஆர். கருப்பையா:** தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனை டாக்டர்கள் கிராமங்களுக்கு வர வேண்டுமென்றால் டாக்சி வைத்துக் கொண்டு வரச் சொல்கிறார்கள். அப்படி டாக்சிகளில் அழைத்துக் கொண்டுபோய் சிகிச்சை முடிந்தபிறகு பணம் கேட்கிறார்கள். பணம் கொடுக்காவிட்டால், மறுநாளைக்கு சிகிச்சை செய்ய வர மறுக்கிறார்கள். இம்மாதிரியான நிலைமைகளைப்போக்க அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கால்நடை மருத்துவர்கள் தங்களுடைய தினசரி வேலைநேரம் போக ஓய்வு நேரங்களில் அருகிலுள்ள கிராமங்களில் சிகிச்சைக்குப் போய் வருகிறார்கள். சிலர் கார் வைத்து அவர்களை அழைத்துப் போகிறார்கள். சிலர் சொந்தக் கார்களில் அவர்களை அழைத்துப் போகிறார்கள். கார் கொண்டுவந்தால்தான் வருவேன் என்று சொல்வது தவறு. ஆனால் நீண்ட தூரமாக இருந்தால் கார் இல்லாமல் எப்படிப் போவது, அவ்வளவு தூரம் நடந்துபோக முடியாது.

**ஹாஜி ம. மு. பீர். முஹம்மது:** தலைவர் அவர்களே, கால்நடைகளுக்காக நடமாடும் மருத்துவமனை மாவட்டத்திற்கு ஒன்று இருப்பது போதிய அளவில் பயன்பட முடியாத நிலைமை இருப்பதால், ஊராட்சிஒன்றியங்களுக்கு ஒன்று அல்லது வட்டத்திற்கு ஒன்று என்ற அளவில் இருக்குமானால் திடீர் திடீர் என்று ஏற்படும் நோய்களிலிருந்து இறந்துபோகும் கால்நடைச் செல்வங்களை நாம் காப்பாற்ற முடியும். ஆகவே, வட்டத்திற்கு ஒன்றோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒன்றோ என்ற அளவில் நடமாடும் மருத்துவ மனை வசதியை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ? அப்படி அரசாங்கம் ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நிதிநிலை அதற்குச் சாத்தியமாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண். 54, 55 இரண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விருப்பப்படி ஒற்றி வைக்கப்படுகின்றன.

### நில அடைமான வங்கி, குடியாத்தம்

* 56 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1965 டிசம்பரில் குடியாத்தம் தாலுக்கா கூட்டுறவு நில அடைமான பேங்கு நிர்வாகஸ்தர்களுக்கான தேர்தல், தலைவர் தலைமையின்கீழ் நடந்ததா ?

(இ) அது முறையாக நடைபெறவில்லையென்று வடார்க்காடு மாவட்டம் டெபுடி ரிஜிஸ்ட்ராருக்கு அப்பீல் செய்யப்பட்டதா ?



1968 ஆகஸ்ட் 20]

(உ) அது விஷயமாக எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) வேலூர் துணைப் பதிவாளரால் 7—2—1966-ல் அனுமதிக்கப்பட்ட தேர்தல் வழக்கு, அவரால் தள்ளுபடி செய்யப்பட்டது. துணைப் பதிவாளரின் இந்த ஆணையை எதிர்த்து, திரு. பி. வி. (P.V.) நாகரத்தினம் என்பவரும் வேறு எட்டு பேரும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரிடம் மேல் முறையீடு செய்து கொண்டனர். அவர் 4—12—1967-ம் தேதியன்று தேர்தலைத் தள்ளுபடி செய்தார். பதிவாளரின் ஆணைகளுக்கு எதிராக, நில அடமான வங்கியின் தலைவர் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைப் பதிவு செய்து எல்லா நடவடிக்கைகள் குறித்தும் தடை ஆணை பெற்றுள்ளார். எனவே இது நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, கூட்டுறவு சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும், வருடக்கணக்கிலே தள்ளிக் போட்டுக் கொண்டே போவதன் காரணமாக இன்றைக்கு மிக மோசமான அளவுக்கு நிலைமை வந்துகொண்டிருக்கிறது.

Thiru K. VINAYAKAM: On a point of order, Sir. The Minister was pleased to say that this is a matter pending before the High Court. Does it not amount to *sub-judice* if the Member pursues the question and if the Minister is willing to answer?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேட்கிற கேள்வி அதைப்பற்றி இல்லை. அந்த இடம் வருகிற நேரத்தில் நான் அனுமதிக்க மாட்டேன். நானும் கனம் உறுப்பினருடைய கேள்வியை கவனித்துக் கொண்டிருக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** நீதி ஸ்தலத்திலே, நியாய ஸ்தலத்திலே...... (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** விசாரணை செய்யத் தகுந்த அதிகாரிகள், மேலதிகாரிகள் இடம் சென்று முறையிட்ட நேரத்தில் அந்த வழக்கை அவர்கள் தள்ளுபடி செய்துவிட்டனர். சரியான முறையில் கவனிக்கப்படாததால், அந்த வழக்கு இன்றைக்கு ஹைகோர்ட்டில் இருக்கிறது. ஆகவே, இனிமேலாவது மூன்று

மாதங்கள் அல்லது ஆறு மாதங்களுக்குள் **இதுபோன்ற வழக்குகளை** விசாரணை செய்ய தக்க நடவடிக்கைகளை **அரசாங்கம்** மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, சட்ட திட்டத்திற்கு உட்பட்டுத்தான் எந்த அதிகாரியும் நடவடிக்கை எடுக்க முடியும். முதலில் டேபுடி ரிஜிஸ்ட்ராரிடம் செய்து கொள்ளப்பட்ட மனு விசாரணை செய்து தள்ளுபடி செய்யப் பட்டது. பின்னர் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரிடம் மேல் முறை யீடு செய்து கொள்ளப்பட்டது. விசாரணையின் முடிவின் பிறகு தான் அப்பீல் செய்துகொள்ளலாம் என்று சட்டம் கூறுகிறது. மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நேரத்தில் எல்லாம் விசாரணைக்கு வராமல் வாய்தா கேட்கப்பட்டது. பல முறை வாய்தா கொடுக்கப்பட்டது. தீர்ப்பு அளிக்கும் நாளன்றும் விசாரணைக்கு வராததால் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு இதை உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்திருக்கி றார்கள். இந்த விஷயத்தில் அரசாங்கமும் அதிகாரிகளும் தவறு செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி குடியாத்தம் தாலுக்காவைப் பற்றியது. உறுப்பினர்கள் மூலக் கேள்வியை ஒட்டி கேள்வி கேட்க வேண்டும்.

THIRU K. VINAYAGAM : Sir, whenever a dispute arises in these elections, the aggrieved party goes to the Deputy Registrar or Registrar of Co-operative Societies. Is there anything in the law to prevent lawyers from taking up these issues ? I have information tha they refuse to entertain lawyers in these cases.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுபற்றிய தகவல் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அந்த வழக்குக்கு நாக ரத்தினம் என்று சொல்லக்கூடியவர்கள் செல்லவில்லை என்று சொன்னார்கள். அதன் காரணமாகத்தான் அப்படி ஏற்பட்டது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர் 27 வாய்தாவுக்கும் சென்றிருக்கிறார். ஒவ்வொரு தடவையும் ஒத்தி வைத்துக் கொண்டே வந்திருக்கிறார்கள். அப்படி இருக்க அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கிற ரிப்போர்ட்டே தவறாகப் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு இருக்கிறது. (மணி அடிக்கப் பட்டது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் இந்த அவையில் கொடுக்கிற விவரத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும். கேள்வி நேரத்தில் தகவல் கொடுக்க வேண்டியதில்லை. கேள்வி யாகப் போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.





**திரு. வி. கே. கோதண்டராமன்:** நான் அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கக் கூடிய தகவலைப்பற்றித்தான் சொன்னேன். 28 முறை வாய்தாவுக்கு அவர் வந்திருந்தும் அவை ஒத்திவைக்கப்பட்டே வந்து 29-வது முறை அவர் சார்பில் ஏற்படுத்தப்பட்ட சீனியர் அட்வகேட்...... (மணி அடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மறுபடியும் சொல் கிறேன். விளக்கம் தேவையில்லை. சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அமைச்சர் அவர்களே சில கேள்விகளுக்கு விளக்கமாகப் பதில் சொன்னால் தான் புரியும் என்று சொல்கிறார்கள். அது போல நான் கேட்கிற கேள்வியை விளக்கமாகச் சொன்னால்தான் அவர்களால் புரிந்து கொள்ள முடியும். அதற்காக வேண்டி சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் விளக்கமாகச் சொல்வதற்காக வேண்டி அவையின் நேரத்தை எடுத்துக் கொள்வது முறையாகாது. வேண்டுமானால் அதை எழுத்து மூலமாகவே அமைச்சரிடத்தில் கொடுக்கலாம். இனி அடுத்த கேள்வி 57.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார் ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இது முக்கியமான கேள்வி. நான் கேட்கிற கேள்வி மாதிரி கேட்கக்கூடாது என்று சொன்னால் வெளியே போய்விட லாம். அப்படிச் சொல்வதற்குப் பதிலாக மறைமுகமாக வேறு கேள்விக்குச் செல்கிறீர்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) கேள்வி நேரம் என்பது பொன்னான நேரம். அதில் எங்களுக்கு வாய்ப்புக்கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் . . (மணி அடிக்கப்பட்டது. மாண்புமிகு பேரவைத் **துணைத் தலைவர்** தன் ஆசனத்தில் எழுந்து நின்றார்.) எங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று சொன்னால் இந்த அவைக்கு வருவதைவிட வராமல் இருக்கலாம். (மணி அடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினரவர்கள் சட்டமன்ற மரபுகளையாவது கடைப்பிடிக்க வேண்டும். தலைவர் நிற்கும்போது உறுப்பினர் உட்கார்ந்து கொண்டுவிடவேண்டும் என்பது விதி. திரு. கோதண்டரமன் அவர்கள் கேள்வி நேரம் பொன்னான நேரம் என்று சொன்னார்கள். அதைத் தான் நானும் சொல்கிறேன். உறுப்பினர் மட்டும் அந்த நேரத்தை எடுத்துக் கொண்டுவிடக் கூடாது. அத்தனை உறுப்பினர் களுக்கும்தான் இந்தக் கேள்வி நேரம் பொன்னான நேரம். கேள்வி பெரியதாக இருந்தால் விளக்கத்தோடு அமைச்சரிடத்தில் எழுதிக் கொடுக்கலாம். 41-வது விதியின் படி எழுதிக் கொடுத்தாலும் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுப்பார்கள். அவையிலே கேள்வி போடுவதும் குறுகலாக இருக்க வேண்டும். விடையும் குறுகலாக இருக்கவேண்டும். நீண்ட விடைகளாக இருந்தால் அச்சிட்டே கொடுத்துவிடவேண்டும் என்கிற தீர்ப்பு இருக்கிறது.

[1968 ஆகஸ்ட் 20

ஆகவே, எந்தவகையிலும் உறுப்பினர்களுடைய உரிமையைக் கப்பட்டுத்தவேண்டும் என்பது எனக்கு இல்லை. நானும் இந்த அவையில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். ஆகவே, திரு. கோதண்டராமன் அவர்கள் மேலும் விளக்கம்பெற வேண்டினால் கவன ஈர்ப்பு அறிவிக்கை கொடுக்கலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** நான் ஏற்கனவே விதி 41-ன் கீழ் கொடுத்த அறிவிக்கைக்கு 1½ மாதத்திற்குப் பிறகும் விளக்கம் வரவேயில்லை. (மணி அடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது அப்படி இல்லை. மிக விரைவாகவே விளக்கம் கொடுக்கப்படுவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்ற உறுதியைக் கொடுத்திருக்கிறேன். அந்த உறுதி காப்பாற்றப்படும்.

* * * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எ. பாலசுப்பிரமணியன் பேசுவதற்கு எழுந்ததிலிருந்து இதுவரையில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சபை நடவடிக்கைகளிலிருந்து நீக்கிவிட வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எந்தப் பத்திரிகையிலும் வெளிவரக்கூடாது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்திரிகைகளும் இந்தச் செய்திகளை வெளியிடக்கூடாது.

*Powers of Sub-Magistrates.*

*57 *Q.*—THIRU P. SOUNDARAPANDIAN: Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether any recommendation has been received by the Government from the High Court on the empowering of the Sub-Magistrate with the powers of First Class Magistrates; and

(*b*) if so, the present stage of the matter?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இது போன்ற நிலைமை ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருந்து வருவதாகத் தெரிகிறது. அதனால் அங்கு மாஜிஸ்ட்ரேட்டுகள் உற்சாகத்துடன் பணி புரிந்து வருவதாக அறிகிறேன். அது போன்று நம்முடைய மாநிலத்திலும் மாற்றுவதற்கு பரிசீலனை செய்ய அரசு முன் வருமா?

* பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.



1968 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சப் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு பஸ்ட் கிளாஸ் பவர் கொடுக்கப்பட்டது என்பது மற்ற மாநிலங்களிலும் இல்லை. 'இன்டகிரேஷன் ஆப் எஸ். எம். எஸ். அண்டு எஸ். டி. எம். எஸ்.' என்பது ஆந்திராவில் அமலில் இருக்கிறது. கேரளாவில் ஒரு பகுதி மட்டும் அமலில் இருக்கிறது. இதைப் பற்றி உயர்நீதி மன்றம் பரிசீலித்து தக்க ஆலோசனைகளைக் கூறினால் இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

**திரு. டி. மார்டின்:** இது நீதித் துறையைப் பொறுத்தமட்டில் இருப்பதால் இதனை கேட்கின்றேன். சப் ஜட்ஜ்களுடைய ரிடையர்மெண்ட் வயதை 55-ல் இருந்து 58 ஆக ஆக்கும் கோரிக்கை பல நாட்களாக இருந்து வருகிறது. அது பற்றி அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போது இருக்கக்கூடிய முறையே நீடித்து இருக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது.

**திரு. சு. துரைசாமி:** சப் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு மாஜிஸ்ட்ரேட் அதிகாரம் கொடுக்காவிட்டாலும் அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளம் 250—400 என்ற குறைந்த வீதத்தில் இருப்பதால் அதை 300—600 என்ற அளவுக்காவது கூட்டிக் கொடுக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அவர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை இந்த அரசாங்கம் உணருகிறது. நிதி வசதியைப் பொறுத்து யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. சா. மெய்யப்பன்:** சப் மாஜிஸ்ட்ரேட்டுகள் முன்சீப்புகளின் சம்பளத்தையும், தகுதியையுமாவது பெறவேண்டும். அவர்களுடைய படிப்பு எல்லாம் ஒன்றுதான். ஆகவே, முன்சீப்புகளுக்கு செலெக்ஷன் செய்யும்போது சப் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு முதலிடம் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதுதான் இன்டகிரேஷன் ஆப் எஸ். எம். எஸ்., எஸ். டி. எம். எஸ். அண்டு டிஸ்ட்ரிக்ட் முன்சீப்ஸ். ஆந்திராவில் பின்பற்றி வருகிறார்கள். இப்போதே முன்சீபுகளைத் தேர்ந்தெடுக்கும்போது ஒரு பகுதி எஸ் எம்.-களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** சமீபத்தில் சப் மாஜிஸ்ட்ரேட்டுகள் கெஜெட் பதிவு பெற்ற அதிகாரிகளாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மற்ற இலாக்காக்களில் கெஜெட் பதிவு பெற்ற அதிகாரிகள் பெறும் சம்பளம் அளவுக்காவது மாற்றிக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

[1968 ஆகஸ்ட் 20

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது அவர்களை கெஜெட் பதிவு பெற்றவர்களாக மாற்றுவதோடு சம்பளத்தையும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அப்போதைய முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டோம். அவர்கள் கெஜெட் பதிவு ஆக்குவதற்கு ஒத்துக் கொண்டார்கள், சம்பளம் கூட்டிக் கொடுக்க முடியாது என்று கூறி விட்டார்கள். இப்போது நம்முடைய அரசாங்கம் அவர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுப்பதுபற்றி பரிசீலித்து வருகிறது.

**திரு. டி. மார்டின்:** சென்னை உயர்நீதி மன்றத்தில் பணி புரியும் பணியாளர்களுக்கு தலைமைச் செயலகத்தில் கொடுக்கப்படும் போல் ஸ்கேல் ஆப் பே-யைப்போல் கொடுக்கவேண்டுமென்று கோரி தலைமை நீதி மன்றத்தில் இருந்து அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது சப் மாஜிஸ்ட்ரேட்டுகள் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போடவும்.

### சிறைச்சாலைகளுக்கு ஆலை அரிசி விநியோகம்

*** 58 வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறைச்சாலைகளில் கைதிகளுக்குத் தற்போது கொடுக்கப்பட்டு வரும் கைக்குத்தல் அரிசிக்குப் பதிலாக ஆலைகளில் தயாராகும் அரிசி கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** சிறையில் அமைச்சர் அவர்கள் கூட இருந்திருக்கிறார்கள். அவர்களுககு நன்றாகத் தெரியும். அங்கு கைக்குத்தல் அரிசி பயன்படுத்தப்படுகிறது. ஆனால் கைதிகள் அதைச் சாப்பிடுவது இல்லை. கைக்குத்தல் அரிசி சொசைடிகளும் சரியான முறையில் கைக்குத்தல் அரிசியைத் தயார் செய்து கொடுக்கவில்லை. ஆகவே, இதற்குப் பதிலாக வெளியிலிருந்து அரிசி வாங்கிக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கைக்குத்தல் அரிசியில் சத்து இல்லையென்பதை ஒத்துக்கொள்ள முடியாது. சத்துள்ள உணவு என்ற காரணத்தினால்தான் போடுகிறார்கள். இந்த அரிசி கிடைக்காவிட்டால் வெளியில் இருந்து வாங்கலாம் என்று இப்போதே உத்தரவு இருக்கிறது.

**திரு. .இல. பலராமன் :** தற்போது அரசினர் கைதிகளுக்கு கைக்குத்தல் அரிசி என்ற பெயரால் மில்களில் தயாரிக்கப்படும் அரிசி வழங்கப்படுவதாகப் புகார்கள் வந்துள்ளனவா ? அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?



1968 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படி அரிசி மாறுட்டம் செய்வதாகத் தகவல் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** சிறைச்சாலைகளில் கைதிகளுக்காக கொடுக்கப்படும் எண்ணெய், சீக்காய் போன்றவை பற்றாக்குறையாக இருக்கின்றன. அதைப் போக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ? அவர்களுக்குக் கொடுக்கப்படும் துணி மணிகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றை அன்றாடம் சுத்தப்படுத்திக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதே அவையெல்லாம் சிறந்த முறையில் கவனிக்கப்படுகிறது.

**திரு. மா. பா. சாரதி :** கைக்குத்தல் அரிசி பார்ப்பதற்குச் சிகப்பாக இருக்கிறது. அதோடு இரும்புப் பாத்திரங்களில் சிறைகளில் சமையல் செய்கிறார்கள். அதனால் அந்தச் சாதம் கறுத்து விடுகிறது. ஆகவே, வேறு பாத்திரங்களில் சமையல் செய்வதற்கு வழி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரிசி மிகவும் வெள்ளையாகி விட்டால் சத்துக் குறைந்து விடுவதாகச் சொல்லுகிறார்கள். சமையல் செய்யும் பாத்திரத்தை மாற்றுவது பற்றி யோசித்தோம். அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து என்ன மாதிரிப் பாத்திரங்களைப் பயன்படுத்தலாம் என்பது பற்றிச் சொல்லும்படி தலைமைச் சிறை அதிகாரியைக் கேட்டிருக்கிறோம்.

**திரு. எஸ். பரமசிவம் :** கைக்குத்தல் அரிசி சத்துள்ள உணவு என்பதாலும், ஆயிரக்கணக்கான மக்கள் அதனாலே வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதாலும் அரிசன உணவு விடுதிகளுக்கு மட்டுமல்லாமல் அனைத்து மாணவ உணவு விடுதிகளிலும் கைக்குத்தல் அரிசியைப் போட அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** காதி போர்டு துணைத் தலைவர் அவர்கள் அக்கறையோடு இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

### சென்னை பொது மருத்துவ மனை

*** 59 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை (ஜெனரல்) மத்திய மருத்துவ மனையில் நோயாளிகளுக்கு ஏ-வகுப்பு, பி-வகுப்பு அறைகள் கிடைப்பது கடினமாக இருப்பது அரசினருக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) சென்னை அரசாங்க பொது (ஜெனரல்) மருத்துவ மனையில் எல்லா வகுப்பு வார்டுகளிலும், குறிப்பாக பொது வார்டுகளில் இடம் கிடைப்பது கடினமாகவே இருக்கிறது.

(இ) அம் மருத்துவ மனையில் இருக்கும் அங்கீகரிக்கப்பட்ட படுக்கைகளைவிட அதிக எண்ணிக்கை உள்ள நோயாளிகள் அனுமதி கோருவதே மேற்குறிப்பிட்ட கடின நிலைக்குக் காரணம் ஆகும். அதிக கட்டிடங்கள் புதிதாக அமைப்பதன் மூலம் இந் நிலையைத் தீர்க்கலாம். ஆனால் அம் மருத்துவ மனையில் மேலும் கட்டிடங்கள் கட்டுவதற்குப் போதிய இட வசதி இல்லை. சென்னை நகரில் உள்ள இதர அரசாங்க மருத்துவ மனைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கான வசதிகளைப் பெருக்குவதே இதற்குரிய மாற்றமாகும். இதற்காக சென்னை நகரிலுள்ள சில அரசாங்க மருத்துவ மனைகளில் மேலும் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** குறிப்பாக, சென்னை மத்திய மருத்துவ மனையில் ஏ வகுப்பு, பி வகுப்பு போன்றவற்றில் இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் படுக்கைகள் வழங்குவதிலும் ஊழல்கள் இருப்பதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. ஆகவே, சென்னை மத்திய மருத்துவ மனைக்குப் புதிய கட்டிடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஏ வகுப்புகள், பி வகுப்புகள் ஆகியவற்றில் இடம் ஒதுக்குவதற்குக் குறிப்பிட்ட விதி முறைகள் இருக்கின்றன. அவை அனுசரிக்கப்பட்டு வருகின்றன. ஊழல்கள் இருந்தால் குறிப்பாகக் கனம் அங்கத்தினர் அதைப்பற்றிக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும். இப்போது மத்திய மருத்துவ மனைக்காகப் புதிய கட்டிடங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

DR. H. V. HANDE : Sir, what is the number of 'A' class and 'B' class wards and the number of beds in 'A' class and 'B' Class in the General Hospital? In view of the lack of space in the hospital compound, there was a proposal to extend the hospital to the place where at present the jail is located. What is the stage in which that proposal is at present?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : So far as 'A' class is concerned, there are seven beds of which two are for V.I.Ps. In 'B' class for men there are 35 beds and for women 24 beds.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்த கேள்வி . . .

**திரு. கே. வினாயகம் :** ஒரே ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுக்குக் கொடுத்தால் ஒவ்வொருவரும் கேட்பார்கள்.





**திரு. கே. வினாயகம் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், ஹாண்டே அவர்கள் கேட்ட கேள்வி ஆஸ்பத்திரியில் இடம் பற்றாக் குறையாக இருப்பதால் தற்போது ஜெயில் இருக்கும் இடத்தையும் ஆஸ்பத்திரிக்காக எடுத்துக் கொள்ளும் உத்தேசம் இருக்கிறதா என்பது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுக்கு எப்படி கேள்வி கேட்க உரிமை இருக்கிறதோ அதே போன்று அமைச்சர்களுக்கு விடை அளிக்காமல் இருக்கவும் உரிமை இருக்கிறது. ஆகவே, இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை.

### பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்களிலுள்ள சிப்பந்திகள்

* 60 வினா—**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசினர் மருத்துவ மனைகளில் வேலை செய்யும் எம்.என்.ஓ. போன்ற சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் பென்ஷன் போன்ற எல்லா வசதிகளையும் பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனைகளிலுள்ள எம்.என்.ஓ. போன்ற சிப்பந்திகளுக்கு நீட்டிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. சி. கோவிந்தராசன் :** அரசினர் மருத்துவ மனையில் உள்ள எம்.என்.ஓ. போன்றவர்களும், பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரியில் உள்ள எம்.என்.ஓ. போன்றவர்களும் ஒரே மாதிரி வேலையைச் செய்கிறார்கள். ஒரே மாதிரி வேலைகளைச் செய்து ஒரே மாதிரி தகுதிகளைப் பெற்றிருக்கிற அவர்கள் வேறு இலாகாவிலே பணி புரிகிற காரணத்தால் பென்ஷன் போன்ற சில சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்காமல் இருப்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்து அவர்களுக்கும் அந்தச் சலுகைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பஞ்சாயத்து யூனியனில் பணி புரிகின்ற ஊழியர்களில் ஆசிரியர்களைத் தவிர வேறு யாருக்கும் பென்ஷனரி பெனிபிட்ஸ் கிடையாது. அவர்களை ஒரேவிதமாக நடத்துவது பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

### *Non-Tamil I.A.S. Officers*

* 41 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the cash award scheme formulated for non-Tamil Indian Administrative Officers serving in this State?

THE HON. THIRU C. N. ANNADURAI : At the instance of the Government of India, the State Government are giving a cash award of Rs. 1,000 for the I.A.S. Officers borne on the Madras

[1968 ஆகஸ்ட் 20

Cadre, whose mother tongue is not Tamil, who have not studied Tamil either in the High School or in the College and who have not completed six years of service.

**திரு. மா. பா. சாரதி :** அப்படி தமிழர்கள் அல்லாத ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நம் மாநிலத்தில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது குறித்த விவரம் என்னிடமில்லை. ஆனால் தமிழ் அறியாத அதிகாரிகள் இங்கு வந்து பணியாற்றுவதுபோல் இங்குள்ளவர்கள் அவர்களுடைய தாய்மொழி அல்லாத இடங்களில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அதுபற்றிய முழு விவரமும் தேவை என்றால் தனிக் கேள்வி போட்டால் தகவல் தரப்படும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** இந்த ரொக்கப் பரிசுப் பணத்தை இந்திய சர்க்காரின் சிபார்சின்பேரில் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பணத்தில் இந்திய அரசு ஏதாவது பங்கு பெறுகிறதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இவ்வளவு சிறிய தொகைக்கு அவ்வளவு பெரிய அரசிலிருந்து நாங்கள் பங்கு எதுவும் கோரவில்லை.

**திரு. நா. காசிராமன்:** இந்தத் தொகை எந்த வருடத்திலிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதற்கான உத்தரவு 1967, நவம்பர் மாதத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது முதற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

THIRU K. VINAYAKAM : Sir, with a view to enable these non-Tamil Indian Administrative Officers to get qualifed in the Tamil language, what is the *modus operandi* that is being adopted to get them qualified? Are they made to attend any classes conducted by the Government or do they themselves study and get qualified ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, a draft syllabus has been prescribed for them which corresponds to the S.S.L.C. standard. The syllabus has been very carefully drafted by the Madras Public Service Commission and examinations are held. They get private training and write the examination.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தமிழர் அல்லாதவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வெகுமதி கொடுப்பதைப் போலவே தமிழர்கள் இந்தி படிப்பதற்காக வேண்டி அது போன்ற ஆயிரம் ரூபாய் வெகுமதி அளிக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** நாம் எடுத்துக் கொண்டிருக்கிற இந்த நல்ல யோசனை மற்றயிடத்திலும் நல்ல கருத்தைப் பரப்பும் என்று எதிர்பார்க்கிறேன்.



1968 ஆகஸ்ட் 20]

**திரு. க. இராமமூர்த்தி :** இதுவரை இந்த ஆயிரம் ரூபாய் பரிசு பெற்ற அதிகாரிகள் எவ்வளவு பேர்கள்? அதிகம் பேர்கள் பெற்றிருந்தாலும் அல்லது பெறாமலிருந்தாலும் இப்படி பரிசு தருவதை ஒரு நிகழ்ச்சியாக நடத்தினால் மேலும் அதிகாரிகள் இதில் ஊக்கம் கொண்டு விரைவாக முன்னேற வசதியளிக்கும் அல்லவா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நல்ல யோசனை, கவனிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, cash awards are given to non-Tamil Indian Administrative Officers. Is that facility given to other Subordinate Indian Officers also?

THE HON. THIRU C. N. ANNADURAI : At present only I.A.S. and I.P.S. officers are covered by this scheme.

### வட்ட அலுவலக எழுத்தர்களுக்கு வீட்டு வாடகைப் படி

*42 வினா.—**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் திருப்பூர், ஈரோடு, கோவை ஆகிய இம்மூன்று தாலுக்கா அலுவலகங்களில் பணிபுரியும் எழுத்தர்களுக்கு வீட்டு அலவன்ஸாக ரூ. 5-ம் ரூ. 7-ம் கொடுக்கப்படுவதைப் போல் மற்ற தாலுக்கா அலுவலகங்களில் பணிபுரியும் எழுத்தர்களுக்கு ஏன் கொடுக்கப்படுவதில்லை ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** வீட்டு வாடகைப் படி வழங்குவதற்காக, முக்கியமாய் மக்கள் தொகை அடிப்படையிலும் அந்தந்தப் பகுதிகளில் வீட்டு வசதிப் பற்றாக்குறை நிலையையும் பொறுத்து, ஊர்கள் வகைப்படுத்தப்படுகின்றன. 50,000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்களில் ரூ. 300-ம், அதற்குச் குறைந்தும் சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு அவர்களின் சம்பள அடிப்படையில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 5, 7, 9, 12 என்று வீட்டு வாடகைப் படி அளிக்கப்படுகிறது. வீட்டு வாடகைப் படி விதங்கள் வரையறுக்கப்பட்டபோது, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பிற வட்டத் தலைமையிடங்களில் மக்கட் தொகை 50,000-க்கும் குறைவாகவே இருந்தது; எனவே இந்த இடங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 3 என்கிற ஒரு படிதான் குறைந்த வீதத்திலேயே வீட்டு வாடகைப் படி அளிக்கப்படுகிறது.

**திரு. என். மருதாசலம் :** கோவை, ஈரோடு, திருப்பூர் போன்றயிடங்களில் உள்ள தாலுகா ஆபீஸ்களில் பணிபுரியும் எழுத்தர்களுக்கு ரூ. 5, 7 வாடகைப் படி கொடுக்கிறார்கள். ஆனால் மற்ற இடங்களிலுள்ள தாலுகா ஆபீஸ் எழுத்தாளர்களுக்கு கொடுப்பதில்லை, காரணம், ஜனத்தொகை அடிப்படையில் கொடுப்பதாகச் சொன்னார்கள். பொள்ளாச்சியில் அதிகப்படி ஜனத்தொகை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிக்கு ஏன் கொடுப்பதில்லை ?

[1968 ஆகஸ்ட் 20

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்த விகிதம் வரையறுக்கப்பட்டபோது அந்தந்த ஊர்களிலுள்ள ஜனத்தொகை அளவில் விவரம் என்னிடமிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் அந்த விகிதங்கள் எல்லாம் வரையறுக்கப்பட்டன. ஏதாவது ஊரில் ஜனத்தொகை ஏற்பட்ட பிறகு தகவல் கிடைத்து அது பற்றி சர்க்காரிடத்தில் எடுத்துச் சொல்லப்படுமானால் அது திருத்தியமைக்கப்படுவது கவனிக்கப்படும்.

## *Stray cattle in City*

* 43. Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : will the Hon. the Chief Minister we pleased to state the steps proposed to be taken to stop the stray cattle menace in the residential areas in Madras City?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பொது இடங்களில் அல்லது தனியார் இடங்களில் திரியும் கால்நடைகள் 1888-ம் ஆண்டு சென்னை மாநகர் காவலர் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 3/1888) 23-வது, 60-வது பிரிவுகளின்கீழ், பிடிக்கப்பட்டு, பல்வேறு காவல் நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள பட்டிகளில் அடைக்கப்படுகின்றன. கால்நடைகளுக் குரியவர்கள் அவைகளை 10 நாட்களுக்குள் மீட்டுச் சென்றால், பட்டியில் வைத்திருந்ததற்காக, வெள்ளாடு, செம்மறியாடு, பன்றி இவை ஒவ்வொன்றுக்கும் 50 காசு வீதமும், ஏனைய விலங்கு ஒன்றுக்கு ரூ. 1 வீதமும் கட்டணம் வசூலிக்கப் படுவதுடன், அடைக்கப்பட்டிருந்த விலங்குகளைப் பேணி வருவதற்கான செலவுத் தொகையும் உடைமையாளரிடமிருந்து வசூலிக்கப்படும். கால்நடைகளுக்குரியவர்கள் அவைகளை 10 நாட்களுக்குள் மீட்கப்படவில்லை என்றால், அவை பொது ஏலத்தில் விற்கப்படும். விற்ற முதல் தொகையிலிருந்து கட்டணத்தையும் தீனிச் செலவுகளையும் கழித்து பிறகு எஞ்சிய தொகையை உரியவர்களிடம் கொடுக்கப்படும். கால்நடையின் சொந்தக்காரர் விற்ற முதல் தொகையை விற்பனைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கேட்டுப் பெறாவிட்டால், அது காவல்துறை காரியங்களுக்குப் பயன்படத்தக்க ஏதாவதொரு நிதியில் சேர்க்கப்படும். 1888-ம் ஆண்டு சென்னை மாநகர் காவலர் சட்டத்தில் 60-ம் பிரிவைத் திருத்தி மேலே குறிப்பிட்ட பட்டிக் கட்டணத்தை அதிகரிப்பது குறித்த செயற்குறிப்பு ஆலோசனையில் இருந்து வருகிறது. கால்நடைகள் அலைந்து திரிவதைச் செம்மையாகத் தடுப்பதுதான் இதன் நோக்கமாகும்.

**திரு. ஆர். கருப்பையா :** இதுபோன்று பட்டிகளில் அடைக்கப்படும் கால்நடைகளின் தீனைத்திற்காக பணம் எடுத்துக் கொண்டாலும்கூட அவைகளுக்கு ஒழுங்காக தீவனம் கொடுக்கப்படுவதில்லை என்பது நாடறிந்த உண்மை. ஆகவே, சரியானபடி அவைகளுக்கு தீவனம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?



1968 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பட்டிகளில் அடைக்கப்பட்டிருக்கும் கால்நடைகளுக்கு சரியான தீவனம் போடுகிறார்களா இல்லையா என்பதல்ல பிரச்னை. பட்டியில் அடைக்கப்பட்ட மாடுகள் சில தீவனம் சரியாக எடுத்துக் கொள்வதில்லை.

**திரு. நா. காசிராமன் :** நகரில் கட்டுப்பாடின்றி கால்நடைகள் திரிவதால் அதிலும் குறிப்பாக எருமை மாடுகள் திரிவதால் போக்குவரத்து விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டர் இவற்றைக் கண்டால் வெறித்துக் கொண்டு ஓடும்போது எந்தவிதமான விபத்து ஏற்படும் என்று சொல்ல முடியாத அளவிற்கு விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இதைப்பற்றி காவல்துறை அதிகாரிகளிடம் சொல்லி சட்டத்தை நன்கு இயக்கி இந்தக் கால்நடைகள் திரியாதபடி பார்த்துக் கொள்ள அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** காவல்துறை இது விஷயத்தில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் எடுத்துச் சொல்ல முடியும். ஆனால், பொது மக்கள் இந்தப் பழக்கத்தை விட்டு விடவேண்டுமென்று பொது மக்களின் பிரதிநிதிகளான நம் நண்பர் காசிராமன் அவர்களைப் போன்றவர்கள்தான் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** பவுண்டில் அடைக்கப்பட்ட கால்நடைகளுக்கு 50 காசு வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இந்த 50 காசு என்ற அபராதத்தை 2 ரூபாய் அல்லது மூன்று ரூபாய் என்று போட்டால் இதை ஓரளவிற்குத் தடுக்க முடியும். ஆகவே இந்த 50 காசு என்பதை உயர்த்தி மூன்று ரூபாய் என்று வைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நண்பர் அவர்கள் என் பதிலில் உள்ள 50 காசு என்ற பகுதியை மட்டும்தான் கவனித்திருக்கிறார்கள். ஆகவே, அதைவைத்துக் கேட்கிறார். பதிலின் இறுதியில் அந்தக் கட்டணத்தை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டேன். அதை விவாதிக்கிறபோது மூன்று ரூபாய் என்று திரு. ராமசாமி அவர்கள் சொன்னதை நினைவில் வைத்துக்கொள்வேன்.

## *Screening of Hindi films*

* 44 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government propose to offer police protection to the screening of Hindi films in Madras City theatres?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** திரைப்பட மாளிகை உரிமையாளர்கள் தங்கள் திரைப்பட மாளிகைகளில் இந்தி படங்களைத் திரையிட விரும்பினால், அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுமென்று அரசாங்கம் ஏற்கெனவே உறுதி அளித்துள்ளது. அத்தகைய படங்களைத் திரையிடுவதால் தொல்லை ஏற்படுமெனத் திரைப்பட மாளிகை உரிமையாளர்கள் அஞ்சினால் அவர்கள் காவல் துறையின் பாதுகாப்பினை வேண்டிப் பெறலாம்.

சென்னை மாநகரிலும் வெளியூர்களிலும் இந்தி படங்கள் திரையிடப்பட்டு வருவதால், இவற்றிற்குக் காவல்துறை பாதுகாப்பு அளிக்கும்.

வினா எழவில்லை.

DR. H. V. HANDE: Many friends here have made disparaging and flippant remarks abut the standard of films produced here in Madras. At the same time many of us are really proud of the very high quality of pictures produced in Tamilnad. Will the Hon. Chief Minister tell us whether Government have taken any concrete steps to increase production of films in Madras State and will the Government come forward to construct some film studios in Madras, as has been done in Mysore State, wherein film producers can pay some nominal charge and produce films?

THE HON. THIRU C. N. ANNADURAI: As far as Madras is concerned there are first-class studios here which are the envy of other parts of the country. I do not think that Government entering into building of studios will improve matters in any way. Our studios are maintained at a very high standard.

THIRU K. VINAYAKAM: I remember the hectic days when Hindi films could not be screened in the City of Madras. Were there any requests made by theatre owners to the Police Department so that the police can give protection and are there instances wherein the police people, using their discretion, refused to give police protection with the result, Hindi films were not screened in those days?

THE HON. THIRU C. N. ANNADURAI: I have no such instances to cite.

**திரு. மா. பா. சாரதி:** தலைவரவர்களே, இந்திப் படங்களுக்குத் தமிழகத்திலே பாதுகாப்பு அளிக்க நாம் நல்ல மனதுடன் முன் வருவதுபோல மற்ற மாநிலங்களில் தமிழ்ப்படங்கள் வெளியிடப் படும்பொழுது மற்ற மாநில சர்க்கார்கள் அதற்கு ஊக்கம் தருகிறார்களா, பாதுகாப்பு தருகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** மற்ற மாநிலங்களில் இங்கே இந்திப் படங்கள் வெளியிடப்படுவதுபோல் தமிழ்ப் படங்கள் தொடர்ந்து வெளியிடப்படுவது இல்லை. ஞாயிற்றுக் கிழமை காலைக் காட்சிகள் என்ற முறையில் அவைகள் வெளியிடப் படுகின்றன. அதற்குக்கூட சில மாநிலங்களில் எதிர்ப்பு வந்தபொழுது அந்த மாநில அரசு தகுந்த பாதுகாப்பு கொடுத்து அவைகளெல்லாம் சரிவர நடக்கும்படி பார்த்துக் கொண்டன.



**திரு. டி. மார்டின்:** ஸ்பீக்கர் சார், தமிழக அரசு எடுக்கக் கூடிய மாதாந்திர செய்திப்படங்களை இந்தியிலும், ஆங்கிலத்திலும் தயாரிப்பதற்கான செயற்குறிப்புகள் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மான்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இதுவரையிலே அந்த வகையான எண்ணம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் வர்கள் சொன்னபிறகு அந்தக் கருத்து தெரிய வருகிறது. இது சம்பந்தமாக பண விஷயத்தைக் கவனித்துத்தான் அதைச் செயல்படுத்த முடியுமா என்பதை யோசிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அவருடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் மூவரும், திரு. சி. என். அண்ணாதுரை அவர்களுடைய தலைமையின்கீழ் நடக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்று தெரிவித்து சட்டப் பேரவை விதி 55-ன்கீழ் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்திற்கு இந்தப் பேரவையின் அனுமதி இருக்கிறதா என்பதை, அறிந்து கொள்ள வேண்டும். அனுமதி வழங்க ஆதரவாயுள்ள உறுப்பினர்கள் எழுந்து நிற்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறிப்பிட்ட எண்ணிக்கைக்குமேல், அனுமதி வழங்க ஆதரவாயுள்ள உறுப்பினர்கள் எழுந்து நின்றிருப்பதால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதென்று அறிவிக்கிறேன்.

பேரவை நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியைக் கூட்டி, என்றைக்கு இதன்மீது விவாதம் வைத்துக் கொள்ளலாம் என்பதை அறிந்து, பேரவைக்குத் தெரிவிக்கிறேன்.

அடுத்து 41-வது விதியின்கீழ், திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

[1968 ஆகஸ்ட் 20

**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவரவர்களே, . .

**திரு. சா. மெய்யப்பன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். 55-வது விதி, 2-வது பிரிவில், " If the Speaker is of the opinion that the motion is in order, he shall read the motion to the House and shall request those members who are in favour of leave being granted to rise in their places and if not less than twenty-one members rise accordingly, the Speaker shall intimate that leave is granted and that the motion will be taken on such day, not being more than ten days from the date on which leave is asked for, as he may appoint " என்றிருக்கிறது. ஆகையால் இது வந்தவுடன் பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியைக் கூட்டி, பிறகு சொல்ல வேண்டுமென்று இல்லையே, இதன்படி உடனேயே சொல்லிவிட வேண்டுமென்று இருக்கிறதே, அது சரியானதுதானா என்பதைத் தலைவர் அவர்கள் யோசிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உடனடியாகச் சொல்ல வேண்டுமென்பது இல்லை. பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியைக் கலந்துகொண்டு கூறுகின்றேன் என்று சொன்னேன். இதில் முறைகேடு ஒன்றும் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் சொன்னபடி, அனுமதி கிடைத்துவிட்டது. இந்தத் தீர்மானம் என்ன என்பதை சர்க்குலேஷன் செய்து விட்டால் சபையின் நேரம் வீணாகாமல் இருக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மோஷன் என்று வருகிறதோ அன்று அந்தத் தீர்மானம் உறுப்பினர்களுக்கு அச்சடித்துக் கொடுக்கப்படும்.

### 3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் விளக்கம் கோரல்

THIRU K. VINAYAKAM : I have given an adjournment motion yesterday to the Secretary and I believe it must have reached the Speaker already. Now I have had a communication that he has disallowed it. But the understanding between the House and Speaker yesterday was that a member who desires to move an adjournment motion must be allowed to read the adjournment motion here and then immediately if the Speaker decides that it is not in order, he can give his ruling or in case he wants elucidation the Minister concerned can also give his views. That was the understanding reached between us. But I get a notice now. . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள், கனம் சபாநாயகரவர்கள் அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் உள்ள ஒரு சந்தேகத்தைக் கேட்கிறார்கள்.



1968 ஆகஸ்ட் 20] [திரு. கே. ஏ. மதியழகன்]

அந்தச் சந்தேகத்தைப்பற்றி சபாநாயகரவர்களைக் கேட்க உரிமை உண்டு. ஆனால், அவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலே எழுதிய கடிதத்தைக் கொண்டுவந்து மன்றத்தில் ஒரு பிரச்சினையாகக் கிளப்ப இந்த மன்றத்தின் விதிகள் அனுமதிக்கின்றனவா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. சா. மெய்யப்பன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், திரு. விநாயகம் அவர்கள் சொல்லும்பொழுது நேற்று ஒரு 'அன்டர்ஸ்டாண்டிங்' இருக்கிறது என்று சொன்னார்கள். எந்த விதமான 'அண்டர்ஸ்டாண்டிங்'கும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். 'அட்ஜர்ன்மெண்ட் மோஷனை'ப் பற்றிச் சொல்வதற்கு சபாநாயகரவர்கள் அனுமதி கொடுக்க வேண்டும். அதற்கு இடம் கொடுக்கவில்லை என்று சொல்லும்பொழுது 'அண்டர்ஸ்டாண்டிங்' இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிப்பட்டு எழுதிய கடிதத்தைக் கொண்டு வந்து வியாஜ்யப் பிரச்சனையாக இந்த மன்றத்தில் எழுப்பலாமா என்பதைத் தெரிவிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப்பற்றி முடிவெடுக்க வேண்டியது சபாநாயகருடைய உரிமை. எப்படி நிராகரிப்பது, எந்த முறையில் நிராகரிப்பது, எந்த முறையைக் கையாள்வது என்பது சபாநாயகருடைய உரிமை. சிலவற்றை அறையிலேயே நிராகரிக்கலாம், சிலவற்றை இங்கே படித்துவிட்டு நிராகரிக்கலாம், சிலவற்றைப் படித்து இருவருக்கும் வாய்ப்பு அளித்து பிறகு தீர்ப்பு அளிக்கலாம். இதில் கொடுத்தவர்கள் யார் என்பதைப்பற்றி பிரச்சினை அல்ல, கொடுத்த பொருளைப்பற்றித்தான் பிரச்சினை. ஆகவே, எந்த முறையைக் கையாள்வது என்பது பற்றி முடிவு செய்ய வேண்டியது சபாநாயகருடைய உரிமை. திரு. விநாயகம் அவர்கள் பேச்சு வார்த்தை நடந்தது என்று சொன்னார்கள். நாம் எல்லோரும் சேர்ந்து பேசி முடிவு எடுத்ததற்கும், நான் வழங்கிய தீர்ப்புக்கும் முரண்பாடு இல்லை, இதில் எந்தவித பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை. சபாநாயகரின் தீர்ப்புக்கெல்லாம் விளக்கம் வேண்டுமென்று சொன்னால் அதற்கு இந்த மன்றம் இடம் இல்லை, சபாநாயகர் அறையிலே கேட்க வேண்டும். அதை மன்றத்திற்குக் கொண்டுவர வேண்டாம். அந்த மரபைக் காப்பாற்ற வேண்டும். திரு. விநாயகம் போன்றவர்கள் பல ஆண்டு காலமாக அனுபவம் பெற்றவர்கள், அவர்கள் இதைக் கையாள வேண்டும், இதற்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும், அந்த மரபைக் காக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

THIRU K. VINAYAKAM: On a point of information, Sir, I do not mind the Deputy Speaker having a dig at my expense on the floor of the House. But what was the subject matter of that adjournment motion? Does it not deserve the merit of this House? Should it be decide in the room?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அறிவிக்கை கொடுக்கப்பட்டிருக்கின்ற எந்த ஒற்றி வைப்புத் தீர்மானமும் பேரவைமுன் கொண்டு வரத் தக்கது தானா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டியது சபாநாயகருடைய பொறுப்பு. உறுப்பினரவர்கள் கொண்டு வந்த ஒற்றி வைப்புத் தீர்மானம் இந்த மன்றத்திலே கொண்டு வரக் கூடிய தகுதி அற்றது என்ற காரணத்திற்காகத் தான் அங்கேயே அனுமதி மறுக்கப்பட்டது. ஆகவே, மன்றம் முடிவுசெய்ய வேண்டிய நிலை இல்லை.

* **திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். சபாநாயகர் அவர்கள் கூறுகின்றபொழுது அட்ஜர்ன்மெண்ட் மோஷன் சிலவற்றை தன்னுடைய அறையிலேயே தள்ளி விடலாம் என்று கூறினார்கள். அறையிலே தள்ளிவிடக் கூடிய அந்த அட்ஜர்ன்மெண்ட் மோஷனைக் கொடுத்த அங்கத்தினரிடம் நாச்சுரல் ஜஸ்டீஸ் என்ற முறையிலே, அந்த அங்கத்தினரிடம் இந்த காரணத்திற்காக நான் தள்ளுகிறேன் என்று கூறி, அதற்குப் பின்பு திருப்திப்படுத்தி, தங்களுடைய தீர்ப்பை வழங்கினால் அது மெம்பருடைய உரிமையைப் பாதுகாக்கக்கூடியதாக இருக்கும். அதை அங்கத்தினருக்கு எழுதி அளித்தால் அது பெரும் நாச்சுரல் ஜஸ்டீஸ் என்ற முறையில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அறையிலே தீர்ப்பு வழங்குகின்ற நேரத்தில் இன்ன காரணத்திற்காக அனுமதி மறுக்கப்படுகிறது என்று எழுதிக் கொடுத்துத்தான் அனுமதி மறுக்கப்படுகிறது. அதற்குக் காரணம் சொல்லுகின்றபொழுது இந்த விதியின்கீழ் அனுமதி மறுக்கப்படுகிறது என்று எழுதப்படுகிறது. நீங்கள் எல்லாம் அந்த விதியைத் தெரிந்திருப்பீர்கள் என்ற காரணத்தால், அந்த விதியை எழுதுவது இல்லை. இந்த விதியின்கீழ் என்று எழுதித்தான் அனுமதி மறுக்கப்படுகிறது. அதுவும் உறுப்பினர்களுக்கு உடனுக்குடனே இந்த விதியின்கீழ் அனுமதி மறுக்கப்படுகிறது என்று அறிவிக்கப்படுகிறது. இதிலே எந்த விதமான மாறுபாடும் இல்லையென்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. டி. மார்டின் :** நான்சரியான முறையில் தங்களுக்குச் சொல்லவில்லை என்று கருதுகிறேன்.

When an adjournment motion is presented to the Speaker, the Speaker says that he can disallow the motion inside his chamber. When such a step is being taken, my request is that the Hon. Speaker may give a show cause notice or an opportunity to the



member to satisfy the Speaker that it comes within the scope for being mentioned in the House, and then it may be disallowed by the Hon. Speaker.

THE HON. THIRU C. N. ANNADURAI: I do not think that, this is an issue to be argued by both sides. The Speaker is empowered unilaterally to reject any adjournment motion in his own chamber. The natural justice referred to by the hon. Member is fully satisfied by the fact that it has been rejected is duly communicated to the member who has given the adjournment motion.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கனம் மார்டின் அவர்கள் ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுக்க, அந்த தீர்மானம் எப்படி முறையாகாது என்று கூறி, அதை நீங்கள் 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்பு தீர்மானமாகக் கொண்டு வாருங்கள், இப்படிக் கொண்டு வந்தீர்களானால், இதற்கு அனுமதி மறுக்கப்படலாம்; கவன ஈர்ப்பு தீர்மானமாகக் கொண்டு வந்தால், அதற்கு வேண்டிய தகவலை அமைச்சர் அவர்கள் தருவார்கள் என்று கூறி, அவர் இப்படி ஒரு தீர்மானம் கூட கொடுத்து இருக்கிறார். ஆக இவ்வளவு விளக்கமும் என்னிடம் பெற்றுவிட்ட பிறகு, நீதி இல்லாமல் என்னுடைய அறையிலே தள்ளிவிட்டேன் என்று சொல்வது இந்த சபையினுடைய கௌரவத்தைக் காப்பாற்றுவது ஆகாது என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** 16-ம் தேதி அன்றைக்கு நமது மதிப்பிற்குரிய கனம் சபாநாயகருடைய அறையிலே நடைபெற்ற பிஸினஸ் அட்வைஸரி கமிட்டிக் கூட்டத்திலே அங்கத்தினர்கள் பல்வேறு ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்த போதிலும் தினந்தோறும் இரண்டு ஒற்றிவைப்புத் தீர்மானங்களை எடுத்து விவாதிக்க வேண்டுமென்ற முறையிலே சபாநாயகர் அவர்கள், நாம், எல்லோரும் சேர்ந்து பேசி முடிவு செய்தோம். அதற்கு ஏற்ப, இரண்டு தீர்மானங்கள் வந்து விட்டபிறகு அதற்கு மேல் மதிப்பிற்குரிய விநாயகம் அவர்களுடைய தீர்மானம் இருக்கிறது என்ற முறையில் தள்ளப்பட்டதா? அல்லது ஒன்றுகூட வராமல் வேறு ஏதாவது சட்டபூர்வமான காரணங்களுக்காகத் தள்ளப்பட்டதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டு தீர்மானங்கள் அன்றாடம் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்ன நேரத்திலே, சிலவற்றை அறையிலே தள்ளக்கூடிய நேரத்திலே, அதை இங்கே கொண்டு வந்து தள்ள வேண்டுமென்று கனம் உறுப்பினர்கள் விரும்ப மாட்டார்கள். ஆகவே, தாக்கல் செய்யக் கூடியதாக இருப்பதை மட்டிலும்தான். எடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டு என்று சொன்னவுடனே அது எதுவாக இருந்தாலும் கொண்டு வருவது என்பது முறையாகாது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இலட்சக்கணக்கான மக்களைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு, கோடிக்கணக்கிலே நஷ்டம் ஏற்படக் கூடிய அளவுக்கு இன்றைக்கு வட ஆற்காட்டிலே மழை இல்லாமல் பயிர் நாசம் ஆகின்றது. கரும்பிலிருந்து, வாழையிலிருந்து எல்லாம் நாசமாகிக் கொண்டிருக்கிறது . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஒழுங்குப் பிரச்சினை தான். நானும் 42-வது விதியின்படி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன், மறுத்திருக்கிறீர்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற திரு. பலராமன் அவர்கள் ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் இதே பொருளைப் பற்றி கொடுத்திருக்கிருக்கிறார்கள். திரு. விஜயராஜ் அவர்களும் ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள், மழை இல்லை; பஞ்சம் இருக்கிறது என்று திரு. விநயகம் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் ஒரு ஒத்தி வைப்பு தீர்மானம், மழை இல்லை என்ற அளவிலே கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் குடியாத்தம் பற்றி, இன்னொருவர் செங்கம் பற்றி, இன்னொருவர் கணியம்பாடி பற்றி, இப்படித் தனித்தனியாகக் கொடுப்பதை விட, வடாற்காடு முழுமைக்கும் ஒரு கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு ஸ்டேட்மெண்ட் வாங்கி விடலாம் என்ற அளவிலே அதைக் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வாருங்கள் என்று கூறி அனுமதி மறுத்திருக்கிறேன். இதற்கெல்லாம் ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுப்பது முறையாகாது என்று சட்டமன்ற விதி இருக்கிறது. ஒவ்வொரு ஒற்றி வைப்புத் தீர்மானத்தையும் இந்தச் சபையிலே படிப்பது என்றால் அதற்கு மட்டிலுமே சபை நடக்க வேண்டியிருக்கும். ஆகவே, எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்துத்தான், தகுதியின்மை பார்த்துத் தான் ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுத்திருக்கிறேன்.

**திரு. இல. பலராமன் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நான் கொடுத்த ஒற்றி வைப்புத் தீர்மானத்தில் வடாற்காடு ஜில்லா முழுமைக்கும்தான் பஞ்சம் என்று குறிப்பிட்டிருந்தேன். அதில் நான் ஒரு தொகுதிக்கு என்று குறிப்பிடவில்லையென்று மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்களும், திரு. பலராமன் அவர்களும் கொடுத்த ஒற்றி வைப்புத் தீர்மானத்தைப் பற்றி இந்த அரசாங்கத்தினுடைய கருத்தையும் கேட்பதற்கு நீங்கள் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டிருக்கலாம். ஏனென்றால், ஒரு நல்ல





பிரச்சினையின்மீதுதான் ஒற்றி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். பொதுவாக, மழை இல்லையென்றுதான் கொண்டு வருகிறார்கள். இன்றைக்கு இந்த அரசு உணவு நெருக்கடியை நல்ல நிலையிலே வெற்றிகரமாக சமாளித்தால்கூட ஒரு பக்கத்திலே திரு. கோதண்டராமன் அவர்கள் இன்னும் அரிசி அதிகமாகப் போட வேண்டுமென்று அதைப்பற்றி பேசுகின்ற நேரத்திலே கூறுகிறார்கள்.

THIRU P. G. KARUTHIRUMAN : He is not raising a point of order. On what basis is the Hon. Minister speaking ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேசுவதற்கு இடம் கொடுத்திருக்க வேண்டுமென்றார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முக்கியமாக இந்த மன்றம் தெரிந்துக்கொள்ள வேண்டிய நிலைமையைப் பற்றியது இது.

THIRU S. BALASUBRAMANIAN : On a point of order. Under what rule is the Minister making a statement ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : A Minister can explain the Government's position. There is no rule. These are conventions not governed by rules.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 82-வது விதியின்கீழ் அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கலாம் என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்கள் மழையில்லையென்று சொல்கிறார்கள். அது நிரம்ப உண்மையான விஷயம். அதே நேரத்தில் தமிழ்நாட்டிலே இன்றைக்கு வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே 60,000, 70,000 டன்கள் அரசு கொள்முதல் செய்கிறது. ஆனால் தற்பொது வட ஆர்க்காடு மாவட்டத்திலே 30,000, 40,000 டன்கள் கூட கிடைக்கவில்லை. இருந்தாலும் கூட நாம் இந்தப் பிரச்சினைகளைச் சமாளித்து வருகிறோம். இந்தமாதிரி பிரச்சினைகள் கவன ஈர்ப்புத் தீர்மானமாக வருவது சரியானதுதான். அதன் மூலம் அரசாங்கம் தங்களுடைய நிலைமையை விளக்குவதற்கு ஒரு வாய்ப்பு இருக்க வேண்டும். ஏனென்றால், இவ்வளவு நெருக்கடிக்குப் பிறகும் நல்ல நிலை உண்டாகிவிட்டது என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சர்க்காருடைய சாமர்த்தியத்தினாலும் நிர்வாக இயந்திரத்தினாலும் இந்த நிலைமைகளைச் சமாளித்திருக்கிறோமே தவிர, நல்ல நிலைமைகள் இல்லையென்ற நிலைமைதான் இருக்கிறது என்பதையும் இரண்டையும் கணக்கிலே வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு புறத்திலே 100, 200 ரூறுவை சாகுபடி மழை வரும் . . . (மணி அடிக்கப்பட்டது) தயவு செய்து சர்க்கார் தரப்பில் பேச வேண்டாமென்று சொல்லி விடுங்கள், இடையிலே மணி அடிக்காதீர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இப்போது நான் பொதுவாக அமைச்சர் அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கக் கூடாது என்பதற்காக அல்ல. இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமோ, ஒற்றி வைப்புத் தீர்மானமோ கொடுத்த உடனே, இந்த அவையிலே அமைச்சர்களுக்குத் தெரியாமல் சில தகவல்களைக் கூறுகின்ற நேரத்தில் அமைச்சர்களுக்குப் போதிய அளவு தகவல் இல்லாமல் போய்விடக் கூடும். அமைச்சர் அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான், ஒற்றி வைப்புத் தீர்மானம் மூலம் இந்த விஷயத்தை எழுப்புவதைக் காட்டிலும், 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரலாம் என்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் நிலைமையை நன்றாக அறிந்து தெளிவான அறிக்கை கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் எனக் கருதித்தான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரலாம் என்று சொன்னேன். அமைச்சர் அவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் அந்த முறையைச் சொன்னேன். அமைச்சர்கள் அந்த முறையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, on a point of order. Is it in order for the Hon. Member, Thiru Kothandaraman, to raise a discussion on the matter and the Hon. Minister for Food to reply to it. I had also given notice of an adjournment motion sometime ago on the tragic position of nearly 4 or 5 lakhs of people who had lost their abode and who had no place of living for them because of the fire accidents. I had also requested the Chair to allow me to discuss that matter concerning people who are practically on the roads without any shelter. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்பிவிட்டு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? பாயிண்டு ஆப் ஆர்டரைச் சொல்லுங்கள். ஒழுங்குப் பிரச்னை என்ன என்பதை மட்டும் குறிப்பிடுங்கள்.

DR. H. V. HANDE : Sir, naturally as a person who is moving with these people, I want some sort of reply from the Hon. Minister for Food or an assurance from the Hon. Chief Minister as that would give some sort of solace to the lakhs and lakhs of people who are without shelter. They wonder why the matter has not been raised so far . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நீங்கள் ஒழுங்குப் பிரச்னை என்ன என்பதை மட்டும் குறிப்பிடவேண்டும். உங்கள் ஒற்றிவைப்புத் தீர்மானம் மறுக்கப்பட்டது, அது ஒழுங்கு முறைதானா என்பது இப்பொழுது கேள்வி. அதுதான் உங்கள் கேள்வியா ? ஒழுங்குப் பிரச்சினை என்று சொல்லிவிட்டு வேறு பேச்சுக்களைப் பேசக்கூடாது. இதைப்பற்றி நான் பல முறை சொல்லியிருக்கிறேன். சட்டமன்ற நிகழ்ச்சிகள் முறை மாறாகக் நடைபெறுகின்றன, சட்டமன்ற விதிமுறைகள் முறை மாறாகக்



கையாளப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு மட்டும் தான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாமே தவிர, வேறு காரணங்களுக்காக அல்ல. ஒற்றிவைப்புத் திர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்படும்பொழுது, சிலவற்றில் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தைக் கேட்பதற்கு இடமிருக்கும், சிலவற்றிற்கு நான் அறையிலேயே அனுமதி மறுத்துவிடலாம். அப்படி அனுமதி மறுப்பதற்கு சபாநாயகருக்கு உரிமை இருக்கிறது. அதன் மீது ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது முறையாகாது.

DR. H. V. HANDE : I will explain the point of order. Is it in order to deny me also the right of getting some solace from the Hon. Chief Minister for these people who are without homes. That is my only request.

THE HON. THIRU C. N. ANNADURAI : I am glad that the hon. Member has given me an opportunity of explaining what measures have already been taken. Before I explain that, I share the feeling which the hon. Member is having. But one thing he has stated, viz., he is moving with those people. I too move with those people and therefore I share the same feelings. But I am very much surprised that an hon. Member who is conscious of the distress of the people is not conscious of the measures that have already been taken by the Government. The area has been surveyed. Bulldozers have been sent to make it habitable and demarcations have been made and more than 1,500 fire-proof huts are proposed to be built in that place and the Government also are trying to find out other places and whether they come under the Government poramboke or owned by the Corporation or by the private parties. Wherever the Government can find places to build houses, they are prepared to build houses and they are also adequately in possession of the finances necessary for that. If my hon. Friend can visit the places where these things are now taking place along with some of our officers, he will feel happy that adequate measures are being taken.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. I would like to know, what are we doing here. About 10 minutes ago we were discussing about North Arcot. Now the Hon. Chief Minister has made a statement re-fire accidents. What is going on in this House? Is there any order? There must be some procedure. Now everybody raises a point and every Hon. Minister comes up and gives an answer. Is this the way how we should transact business here ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The point of order which the hon. Member has referred to, has been enhanced by his own interruption.

**திரு. கோ. பூவராகன்**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வினா எழுப்பப்பட்டபோது கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல எழுந்தார். அவர்கள் பதில் சொல்வதற்கு 82-வது

[திரு. கோ. பூவராகன்] [1968 ஆகஸ்ட் 20

விதியின் கீழ் உரிமை இருக்கிறது என்று தீர்ப்பு அளித்தீர்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது குறிக்கிட்டு நிறுத்துவதற்கு சபையின் விதிகளில் இடம் இருக்கிறதா ? 82-வது விதியின் கீழ் அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டியதை முழுவதும் சொல்லி முடித்துவிட வேண்டும். இடையிலே சபாநாயகர் அவர்கள் குறிக்கிட்டு அமைச்சர் அவர்களை நிறுத்துவதற்கு விதிகளில் இடம் இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதினாலே, சபையிலே இருக்கிற அமைச்சர் அவர்களும் விளக்கம் தருவதிலே அக்கரையோடு இருப்பதினால், இந்தப் பிரச்சினையின் பேரில் விவாதம் நடத்துவதற்கு சபாநாயகர் அவர்கள் அனுமதி அளிக்கவேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, தாங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறேன். 42-வது விதியின் கீழ் அறிவிக்கை கொடுக்கக்கூடிய நேரத்தில், எதை மறுக்க வேண்டும், எதை அனுமதிக்க வேண்டும், எதை அறையிலே தள்ளவேண்டும் என்று முடிவு செய்யும் 'ரைட்' தங்களுக்கு உண்டு. 41-வது விதியின் கீழ் இந்தப் பிரச்னையை எழுப்ப வேண்டுமென்றால், மூன்று தினங்களுக்குள் பதில் கிடைப்பதற்கு உத்திரவாதம் உண்டா ? அவ்வளவு விரைவில் பதில் வரக்கூடிய நிலைமை இருக்குமா ? இது உடனடியாக கவனிக்கப்படவேண்டிய பிரச்னை. உணவுப் பிரச்னை. உணவு அமைச்சர் அவர்களும் இதில் ரொம்ப சீரியசாக கவனம் செலுத்துகிறார். ஆகவே, உடனடியாக தகவல் தரவேண்டுமென்ற அடிப்படையிலேதான் 57-வது விதியின் பிரகாரம் ஒரு மணி நேரம் விவாதத்திற்குக் கேட்டேன். இதைத் தாங்கள் அனுமதிக்கவில்லை. 42-வது விதியின் கீழும் இது வரவில்லை. 41-வது விதியின் கீழ் இதற்கு அறிவிக்கைக் கொடுத்தால், இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது கொடுத்தால், அடுத்த முறை சட்ட மன்றம் கூடும்பொழுதாவது பதில் வரும் என்றுகூட சொல்லமுடியாத அளவுக்கு நிலைமை இருப்பதின் காரணமாக, வட ஆர்க்காடாக இருந்தாலும் சரி, செங்கற்பட்டாக இருந்தாலும் சரி, மாநிலத்தில் எங்கு இந்த நிலைமை இருந்தாலும் சரி, உணவு சம்பந்தப்பட்ட பிரச்சனையாக இருப்பதினால், வேறு எந்த விஷயமாக இருந்தாலும் அதை ஒற்றிவைத்துவிட்டு, இதில் அவசரமாக கவனம் செலுத்தவேண்டும். இதுபற்றி அமைச்சர் அவர்கள் ஒரு விளக்க அறிக்கை கொடுத்தால் மிகவும் நல்லது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நாட்களுக்கு முன்புகூட நான் சொல்லியிருக்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு விரைவிலே இந்தத் தொடர் கூட்டம் நடைபெறும் காலத்திலேயே, அமைச்சர்கள் அறிக்கை கொடுப்பதற்கு வழிவகை செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அதற்குண்டான முறையில்



1968 ஆகஸ்ட் 20] [பேரவைத் துணைத் தலைவர்]

சட்டப்பேரவை செயலாளர் மற்ற துறைகளின் செயலாளர்களுக்கு தகவல் அனுப்பி, எவ்வளவு விரைவில் பதில் தரமுடியுமோ, அவ்வளவு விரைவில் பதில் தருவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கவேண்டுமென்பதற்கான செயல்முறைகளை நான் மேற்கொண்டிருக்கிறேன். என்னுடைய உறுதிமொழியிலே தாங்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். விரைவில் பதில் கொடுப்பதற்கு வழி வகைகள் செய்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், 42-வது விதியின் கீழ் அல்லது 57-வது விதியின் கீழ் அவசரமும், முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினைகளைப்பற்றி நாங்கள் கொடுத்திருந்த அறிவிக்கைகளை அறையிலேயே தள்ளுபடி செய்து, எங்களுக்கு பதில் அனுப்பிவிட்டீர்கள். அதேபோல மற்ற கட்சி அங்கத்தினர்களும் அறிக்கைகள் கொடுத்திருந்தார்கள். மற்ற அங்கத்தினர்களில் சிலர் இங்கு சபா நாயகரை அதுபற்றி கேட்ட நேரத்தில், அதைப்பற்றி பேசுவதற்கு தாங்கள் அனுமதி அளிக்கின்ற வகையிலே, அந்தப் பேச்சுக்கள் சபை நடவடிக்கைகளில் அமையும்பொழுது சில அங்கத்தினர்கள் தான் இதில் அக்கரை கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களுக்கு அக்கறை என்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அதற்கு இடம் தாராமல் உதவி சபாநாயகர் அவர்கள் ஒற்றிவைப்புத் தீர்மானங்கள், 57-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்ட தீர்மானங்களை சபையிலே படித்து, பிறகு தள்ளுபடி செய்வாரா ?

**திரு. இல. பலராமன் :** ஆன் பாயிண்டு ஆப் ஆர்டர், சார், 42-வது விதியின்படி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எம். அண்ணாமலை போராட்டத்தைப் பொருத்து அவர் கைது செய்யப்பட்டதைக் குறித்து நான் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதே பொருள்பற்றி இன்னொரு அங்கத்தினரும் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தார். அதைப்பற்றி அவையிலே படிக்கப்பட்டது. நான் கொடுத்த தீர்மானம் எந்த விதமான காரணத்தைக்கொண்டோ தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி எனக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மீண்டும் மீண்டும் அங்கத்தினர்கள் ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்ததுபற்றியும், அவை நிராகரிக்கப்பட்டதுபற்றியும் அத்தனை பேர்களும் இந்த மன்றத்தில் கேட்டுக்கொண்டிருப்பது என்று சொன்னால், மன்ற நிகழ்ச்சிகள் நல்ல முறையில் நடைபெற முடியாது. "சிலவற்றிற்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தீர்களே, அமைச்சர்கள் அறிக்கை கொடுப்பதற்கு வாய்ப்பு இருந்ததே, அந்த வகையில் எங்களுக்கு இல்லையே" என்று திரு. ராமமூர்த்தி அவர்கள் கேட்டார்கள். அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களை ஓரளவுக்கு திருப்திபடுத்தவேண்டும் என்ற முறையிலே

அரசாங்கம் வழங்கியது. பின்னர் மேலும் ஆலைகள் மூடப்பட்டமையால், அந்த ஆலைகளின் சிக்கல்கள் குறித்து ஆராய்ந்து அவற்றை மீண்டும் செயல்படுத்தப் பரிவுரைகள் செய்யுமாறு டாக்டர் பி. எஸ். லோகநாதன் தலைமையில் 1967, ஏப்ரலில் மூவர் அடங்கிய குழு ஒன்றை அரசாங்கம் அமைத்தது. இக் குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் இம்மாநிலத்திலுள்ள பதினைந்து ஆலைகளுக்கு உத்தரவாத உதவி அளிக்கப்பட்டது. கோயம்புத்தூர் சோமசுந்தரம் ஆலை (தனியார்) நிறுவனத்துக்கு அளித்த ரூ. 25 லட்சம் உட்பட அரசாங்கம் அளித்த உதவி மொத்தம் ரூ. 173·54 லட்சம் அளவிற்கு எட்டியது. ஒன்பது ஆலைகள் ரூ. 89·72 லட்சம் தொகை வரையில் இந்த உதவியைப் பயன்படுத்திக் கொண்டன. மற்ற நான்கு ஆலைகள் உதவியைப் பெற மறுத்தன. எஞ்சிய ஐந்து ஆலைகள், வர்த்தக வங்கிகளிலிருந்து இன்னும் கடன் தொகையைப் பெற வேண்டும்.

பல முறைகளில் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் மத்திய வணிக அமைச்சரைச் சந்தித்து, பல இடர்ப்பாடுகளினால் தொல்லைப்படும் இத்தொழிலிற்குப் புத்துயிர் அளிக்க உத்தரவாத உதவி மட்டும் போதாதாகையால் இத் தொழிலுக்கு உதவியளிக்கும் அவசியத்தை அவரிடம் வலியுறுத்தியதன் விளைவாக இந்திய அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது :—

(1) நிதி, வணிக அமைச்சகங்களில் துறைச் செயலாளர்களும் பம்பாய் துணி ஆலை ஆணையாளர், சென்னை கைத்தறித் துறை இயக்குநர் ஆகியோரும் அடங்கிய துறைகளுக்கு இடையிலான பிரிவு ஒன்றை அமைத்தது. உதவிக்காக கம்போடியா ஆலை நிறுவனம், ரங்க விலாஸ் நூற்பு, நெசவு ஆலை நிறுவனம் ஆகியவற்றின் சிக்கல்களை ஆராயவே மேற்படி பிரிவு அமைக்கப்பட்டது. இப் பிரிவின் அறிக்கை இந்திய அரசிடம் உள்ளது.

(2) மின்சாரப் பயன் இன்றித் தயாரிக்கப்பட்ட கைத்தறித் துணிகளை வழவழப்பாக்குவதற்கு அண்மையில் விதிக்கப்பட்ட ஆயத்தீர்வையை நீக்கியது.

(3) ஒரு ரூபாய்க்கு 5 காசு சிறப்புக் கூடுதல் தள்ளுபடி அளிக்க ஒப்புதல் அளித்தது; அதாவது கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் கைத்தறித் துணிகளைச் சில்லறையாக விற்பதற்கு மூன்று திங்களுக்கு மேற்படாத கால அளவு வரையில் ஒரு ரூபாய்க்கு 10 காசு வீதம் தள்ளுபடி அளிக்க ஒப்பியது முதலில் 25-5-1968 முதற்கொண்டு மூன்று வார கால அளவிற்குச் சிறப்புத் தள்ளுபடியை மாநில அரசாங்கம் செயல்படுத்தியது. எஞ்சிய கால அளவு தேவை எழும்போது திருவிழாக் காலங்களில் பயன்படுத்திக்கொள்ளப்படும்.

(4) ஆலைகளில் தேங்கிக் கிடக்கும் நூல் இருப்பைக் குறைக்க உதவும் நடவடிக்கையாக கைத்தறிக் கூட்டுறவுச் சங்கம் மூலம் நூல் வாங்குவதற்கு மாநில அரசாங்கத்திற்கு ரூபாய் 50 லட்சம் கடன் தொகையை வழங்கியது.





(5) நூலும், குறிப்பாகக் கைத்தறித் துணி உட்படத் துணியும், ஏற்றுமதி செய்ய ரொக்கப் பணம் அளிக்கும் திட்டம் நீடிக்கப்பட்டது.

(6) கீழ்வரும் சங்கங்களுக்கு முன்பணமாக இருப்பு மதிப்பின் 90 சதவீதம் இந்திய ஸ்டேட் வங்கி அளிக்கக்கூடிய நூல் மதிப்பின் 20 சதவீதத்திற்கு மேற்படாமல் இந்திய அரசு வழங்கும் உத்தரவாத உதவி அடிப்படையில் திரட்டப்படும் நிதியுடன் தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கமும் தமிழ்நாடு ஆலை உரிமையாளர்கள் சங்கங்களும் இணைந்து செயல்படுத்தும் இருப்பு வைப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. இத் திட்டத்தைச் செயல்படுத்துவதனால், இந்திய அரசுக்கு ஏற்படும் விரயத்தில் 50 சதவீதத்தைப் பகிர்ந்து கொள்ள தமிழ்நாட்டு அரசாங்கம் ஒப்புக் கொண்டது.

முன்னர் குறிப்பிட்ட உத்தரவாத உதவியுடன் இந்த அரசாங்கம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது :—

(1) இந்த ஆலைகள் தயாரித்து நூல் பதிவுபெற்ற ஏற்றுமதியாளர்களுக்குச் செய்யும் விற்பனையின் மீது 1959-ஆம் ஆண்டு தமிழ்நாட்டுப் பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரி சம்பந்தமாக 1--6--1968 முதற்கொண்டு பஞ்சாலைகள் அனைத்திற்கும் விலக்களிக்கப்பட்டுள்ளது. மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழும் இந்த விற்பனைகள் சம்பந்தமாக இது போன்ற விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(2) தகுந்த காரணங்கள் இருந்தால், பஞ்சாலைகள் சட்டப்படி அளிக்கவேண்டிய நிலுவைத் தொகைகளைச் செலுத்த கால நீட்டிப்பு அனுமதித்தது.

(3) மதிப்பையொட்டியன்றி சதுர மீட்டர் அடிப்படையில் துணிகள் மீது ஆயத் தீர்வை விதிப்பது, மட்டரக, நடுத்தர வகை துணிகளைப் பயன்படுத்தும் ஏழை மக்களைப் பாதிப்பதாலும், நடுத்தர மக்களுக்காக இந்த வகைத் துணிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைப் பெரிதும் பாதிப்பதாலும் குறிப்பிட்ட தீர்வைகளுக்குப் பதிலாக மதிப்பீட்டின் பேரில் வரி விதிப்பதற்கு இந்திய அரசுக்கு இந்த அரசாங்கம் கடிதம் எழுதியுள்ளது.

அண்மையில் தமிழ்நாட்டு முதலமைச்சர் மத்திய வணிக அமைச்சரைக் கண்டு பேசியதன் விளைவாக இம்மாநிலத்திலுள்ள இருபது ஆலைகளின் சிக்கல்களை ஆராய 1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் மூன்று ஆய்வுக் குழுக்களை இந்திய அரசு அமைத்தது. 1968, செப்டம்பருக்கு முன் அவற்றின் அறிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இத் தொழிலில் நெருக்கடி ஏற்பட்டதற்கான முக்கியக் காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) நிலையாக அதிகரித்து வரும் வர்த்தகப் பற்றுக்குறை ;

(2) பருத்தி நூல், கைத்தறித் துணி இவற்றின் விற்பனையிலிருந்து ஈட்டும் தொகை குன்றியது;

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 ஆகஸ்ட் 20

(3) ஆலைகளில் உள்ள பழைய இயந்திரங்களுக்குப் பதிலாகப் புதிய இயந்திரங்களை மாற்ற அவை தவறியது;

(4) பருத்தி நூலின் மீதும் துணிகள் மீதும் விதிக்கப்பட்டுள்ள ஆயத் தீர்வையை உயர்த்தியது;

(5) வாழ்க்கைச் செலவுப் புள்ளியுடன் அகவிலைப்படியை இணைத்ததன் விளைவாக சம்பளப் பட்டியலில் உயர்வு ஏற்பட்டது;

(6) நாட்டின் தென் பகுதியில் நூற்பு ஆலைகள் மிக அதிகமாகத் தோன்றியதால், அவற்றின் விளைவாகப் பொருளாதாரத்தில் சம நிலை நிலவாதது.

இக் காரணங்களால் இத் தொழிலில் நீண்ட கால நோக்கில் சீர்திருத்தம் செய்ய வேண்டிய நிலை உள்ளமையால், இத் தொழிலின் நிலைமையை எந்த அளவுக்கு மேம்படுத்த முடியுமென்று அரசாங்கம் ஆய்வு செய்து வருகிறது.

## (2) திருச்சி வட்டாரப் பொறியியல் கல்லூரி விரிவுரையாளர் குறைகளை அகற்ற நடவடிக்கைகள்.

DR. H. V. HANDE : Sir I wish to call the attention of the Hon. Minister for Education and Industries to a matter of urgent public importance, namely, the suspension order issued on 25 lecturers of Regional Engineering College, Tiruchirappalli even after withdrawal of strike on 15th July 1968, commenced by them on 10th July 1968, and also the need to take immediate steps to redress the grievances of staff members.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியற் கல்லூரி, டாக்டர் எஸ். ஜி. மணவாளராமானுஜம் தலைமையில் உள்ள தன்னுரிமையுள்ள ஆளுநர்க் குழுவினால் நிர்வகிக்கப்பட்டு தனித்தியங்கும் நிலையமாகும். எனினும், அக் கல்லூரி முற்றிலும் மைய அரசாலும் மாநில அரசாலும் அளிக்கப்படும் பொருளுதவியாலேயே நடைபெறுகிறது. அக் கல்லூரிப் பணியாளர்களைப் பற்றிய பொருள்களுக்கு ஆளுநர்க் குழுவே பொறுப்புடையதாகும். எனினும், அரசிடம் உள்ள தகவலை யொட்டி, பின்வரும் விவர அறிக்கை அளிக்கிறேன்.

1968-ம் ஆண்டு மார்ச் திங்களில் அக் கல்லூரிப் பணியாளர்களில் சிலர் ஆளுநர்க் குழுவின் தலைவரிடம் நேரடியாகக் கூட்டு மனு ஒன்றைச் சமர்ப்பித்தனர். அம் மனுவில் அவர்கள் தங்கள் பணி நிலைமைகளைக் குறித்துத் தங்களுக்குள்ள குறைகளையும், கல்லூரி முதல்வரைப் பற்றிச் சில குற்றச் சாட்டுகளையும் தெரிவித்திருந்தனர். இவ்வரசின் விருப்பப்படி, கல்லூரி ஆளுநர்க் குழு 23—4—1968 அன்று கூடி மேற்படி மனுவை விவரமாக ஆய்வு செய்தது. பணியாளர்களின் கூட்டு மனுவில் இருந்த தெளிவற்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமில்லையென்று ஆளுநர்க் குழுவிற்குத் தெரிந்தபோதிலும், சட்டரீதியாக கல்வித் துறையிலும் நிர்வாகத் துறையிலும் கல்லூரிக்கும் தலைவராக அமைந்த கல்லூரி முதல்வர்



1968 ஆகஸ்ட் 20] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கல்லூரிப் பணியாளர்களைச் சந்தித்து அவர்களுடைய குறிப்பிட்ட குறைகளை விசாரித்து ஆளுநர்க் குழுவின் அடுத்த கூட்டத்தில் அறிக்கை அனுப்ப வேண்டும் என்று ஆளுநர்க் குழு, கல்லூரி முதல்வரை கேட்டுக் கொண்டது.

எனினும், குழுவின் மேற்படித் தீர்மானம் நிறைவேற்றப்படுமுன் கல்லூரியின் ஆசிரியர்கள் சுமார் 40 பேரில் ஏறத்தாழ 26 பேர் 1968 ஜுலைத் திங்கள் 10-ம் நாள் முதல் 14-ம் நாள் முடிய வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் கல்லூரியின் நிலைமைகள் குறித்து விசாரிக்க ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று கோரினர். வேலை நிறுத்தம் செய்த ஆசிரியர்களுக்குப் பரிந்து ஆசிரியரில்லாத பணியாளர்கள் சுமார் 50 பேரும் வேலை நிறுத்தம் செய்தனர். ஆனால் அவர்கள் ஜுலை 12-ம் நாளன்றே வேலைக்குத் திரும்பிவிட்டனர். வேலைநிறுத்தம் செய்த ஆசிரியர்களைத் தற்காலிகமாக வேலையைவிட்டு விலக்கி வைத்து, கல்லூரி முதல்வர் ஆணையிட்டார். ஜுலை 13-ம் நாளன்று ஆளுநர்க் குழுத் தலைவரைச் சந்தித்த பின் ஆசிரியர்களும் வேலை நிறுத்தத்தை ஜுலை 15-ம் நாள் முதல் கைவிட்டு முன்போல் மாணவர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கலாயினர்.

மீண்டும் இவ் வரசின் விருப்பப்படி ஆளுநர்க்குழு 18—7—1968 அன்று திருச்சிராப்பள்ளியில் கூடி வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட நிலைமை குறித்து ஆலோசித்தது. வேலைநிறுத்தம் தேவையற்றது என்றும், சட்டவிரோதமானது என்றும், அக் கூட்டத்தில் ஆளுநர்க் குழு கருதியது. வேலைநிறுத்தம் செய்திருந்த ஒவ்வொரு பணியாளரும் கல்லூரி முதல்வருக்கு நிபந்தனையற்ற மன்னிப்புக் கடிதம் எழுதித் தரவேண்டும் என்றும், அவரவர்க்குள்ள குறிப்பிட்ட குறைகளையும் பொதுவான குறைகளையும் எழுதி, கல்லூரி முதல்வருக்குப் பணிந்தனுப்ப வேண்டுமென்றும் ஆளுநர்க் குழு ஆணையிட்டது. ஒவ்வொரு பணியாளரின் குறிப்பிட்ட குறைகளையும் பொதுவான குறைகளையும் பற்றிக் கல்லூரி முதல்வர் அறிக்கை ஒன்று தயாரித்து ஆளுநர்க் குழுவின் அடுத்த கூட்டத்தில் வைக்க வேண்டும் என்று அவரை ஆளுநர்க் குழு கேட்டுக் கொண்டது. மேற்சொன்னவாறு மன்னிப்புக் கடிதம் வரப் பெற்றவுடன், வேலை நிறுத்தம் செய்த பணியாளர்களைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைத்திருந்த உத்திரவுகளைத் திரும்பப் பெறவேண்டும் என்றும் கல்லூரி முதல்வரை ஆளுநர்க் குழு கேட்டுக் கொண்டது.

வேலை நிறுத்தம் செய்திருந்த பணியாளர்கள் ஆளுநர்க் குழு ஆணையிட்டபடி நிபந்தனையற்ற மன்னிப்புக் கடிதங்களைக் கல்லூரி முதல்வருக்குப் பணிந்தனுப்பவில்லை. எனவே 1—8—1968 அன்று கல்லூரி முதல்வர் அப் பணியாளர்களுக்கு அறிவிப்பு ஒன்று விடுத்தார். அவ் வறிவிப்பில் அப் பணியாளர் செய்த ஒழுங்கீனங்கள் குறிப்பிடப்பட்டிருந்ததோடு, அவ்வறிவிப்பு கிடைத்த பத்து நாட்களுக்குள் தங்கள் மேல் ஏன் கண்டன

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 ஆகஸ்ட் 20

நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது என்று காரணம் காட்டி அப்பணியாளர்கள் கல்லூரி முதல்வருக்கு விடையளிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

வேலைநிறுத்தம் செய்த பணியாளர்கள் இப்போது நிபந்தனையற்ற மன்னிப்புக் கடிதம் கொடுத்துவிட்டனர் என்று தொழிற் கல்வி இயக்குநரிடமிருந்து அறியப்படுகிறது. தொழிற்கல்வி இயக்குநரிடமிருந்து அறிக்கை ஒன்றையும் அரசு கேட்டுள்ளது. அவ் வறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

கல்லூரி ஒழுங்கான முறையில் அமைதியாக நடைபெற எல்லா நடவடிக்கைகளையும் இவ்வரசு எடுக்கும். ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பிற பணியாளர்கள் ஆகிய அனைவருடைய நியாயமான குறைகள் அனைத்தையும் ஆளுநர்க் குழு அக்கறையோடு கவனித்து அக் குறைகளைப் போக்குவதற்கான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பது குறித்தும் ஐயம் இல்லை.

Dr H. V. HANDE: The very fact that the lecturers have struck work shows that there are some grievances. Secondly no lecturer will be bold enough to strike work. But several lecturers have struck work. That is the unfortunate position to-day Therefore there must be some grievance. Arising out of the answer given by the Hon. Minister, will the Hon. Minister see whether it will be possible for him to personally examine the whole thing, call all officers and examine the question. He can also examine the lecturers and know what exactly are their grievances. Whereas the sanctioned strength is 81, the actual number working is 39—3 36 only. That is also a serious matter. Perhaps the workload is more. That might have given rise to some misunderstanding. In view of all these things, the Hon. Minister may personally look into the matter. We are all interested in the college running smoothly. Will the Hon. Minister therefore call for these lecturers personally and hear their point of view? If he were to discuss matters personally there might be some solution.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்களின் குறைகளை நல்ல முறையிலே அறிந்துகொள்ள நான் கூட்டம் கூட்டச் சொன்னேன். அதற்குப் பிறகு தான் இந்த நிலைமை ஏற்பட்டது. பணியாளர்கள் தங்கள் தங்கள் குறைகளையும் பொதுவான குறைகளையும் குறிப்பிட்டு கல்லூரி முதல்வருக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், அந்தக் குறைகள் அடங்கிய அறிக்கை அடுத்து வரும் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட வேண்டுமென்றும் ஆளுநர்க் குழு தீர்மானித்தது. அந்தக் குழுவில் கல்வித் துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், தொழில்நுட்பத் துறை இயக்குநர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். அந்தக் குழுவின் அறிக்கை என்னுடைய



1968 ஆகஸ்ட் 20] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கவனத்திற்குக் கொண்டுவரப்படும். குழுவின் அறிக்கையை ஆராய்ந்து தக்க முடிவுகளை முறைப்படி எடுக்க இந்த அரசு முயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அரசினர் மசோதா.

### தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 21/1968)

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1968-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 21/1968) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

*** திரு. ந. காசிராமன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நிதி ஒதுக்கீடு மசோதாமீது ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகி விட்ட காரணத்தால் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை சுருக்கமாக வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்களே, 219 கோடி ரூபாய்க்கு முன்பு நிதி ஒதுக்கீடு குறிப்பிடப்பட்டிருந்தது. 6·35 கோடி ரூபாய் என்பது அதில் 3 பர்சென்ட் ஆகிறது. ஆகவே, முன்பு உபரியாக இருந்த பட்ஜெட் துண்டுவிழக்கூடிய அளவில் மாறுமோ, என்னென்ன புதிய வரிகள் வருமோ என்ற ஐயம் தோன்றுகிறது.

அடுத்தப்படியாக போலீஸ் இலாகாவைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவில் விவசாய சம்பந்தமான வேலைகள் மும்முரமாக நடைபெறக்கூடிய தருணம். அங்கு ஒரு பட்டத்தில் கூலிப் பிரச்சினையின் காரணமாக, குறிப்பாக கிழக்கு தஞ்சாவூர்ப் பகுதியில் விவசாய வேலைகள் தடைப்படுகின்றன. சில இடங்களில் தண்ணீர் வினியோகம் சரியாக இல்லாத காரணத்தால் விவசாய வேலைகள் தடைப்படுகின்றன. ஆகவே, அரசு இதில் தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கும்பகோணம், தஞ்சாவூர் போன்ற எங்கள் பகுதிகளில் திடீர் திடீரென்று நெருப்பு பற்றிக் கொள்கிறது. குடிசைகள், வைக்கோல் போர்கள். சில சமயங்களில் நெல் மூட்டைகள் எல்லாம் நெருப்புக்கு இரையாகிக் கொண்டிருப்ப

பேசியதால் வந்த விளைவு இது. அதனாலே எல்லா அமைச்சர்களும் அறிக்கை கொடுப்பதென்றால், இந்த சபை நடைபெற வேண்டிய முறையில் நடைபெறாமல் போய்விடும். உறுப்பினர்கள் மன்ற விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும், மன்றத்தின் மரபுகளைக் காப்பாற்ற வேண்டும். மரபுகளை ஒட்டித்தான் தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. எந்தவிதமான தீர்ப்பும் முறைகேடாகவோ அல்லது அங்கத்தினர்களுடைய உரிமையைக் கெடுக்க வேண்டுமென்ற முறையிலோ அளிக்கப்படுவது அல்ல. மன்றத்திலுள்ள உறுப்பினர்களுடைய உரிமையைக் காட்டிலும், மன்றத்தினுடைய பெருமையைக் காப்பாற்றவேண்டிய பெரிய பொறுப்பு சபாநாயகருக்கு இருக்கிறது. ஆகவேதான் இப்படிப்பட்ட நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் உறுப்பினர்கள் ஒத்துழைக்கவேண்டும். அவர்கள் பேசினார்கள், எங்களுக்கு வாய்ப்பு இல்லை. பேசுவதற்கு இடமில்லை என்று சொல்வது முறையல்ல. அவர்கள் சொல்லிவிட்டார்கள். நானும் சொல்கிறேன். எனக்கும் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுக்கட்டும் என்ற முறையில் கேட்பது முறையாகாது அதற்கு இந்த மன்றத்தில் இடம் தர முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, இந்த மன்ற நிகழ்ச்சிகளில் இனிமேலாகிலும் இப்படி குறுக்கிடாமல், தொடர்ந்து நடவடிக்கைகள் நடப்பதற்கு இடம் அளிக்குமாறு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மு.ப. 11.00 **திரு. க. இராமமூர்த்தி:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாயிண்ட் ஆப் ஆர்டரை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** ஒரே பிரச்சினையைப்பற்றிப் பல அங்கத்தினர்களும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருந்தார்கள். எல்லோருக்கும் பதில் அளிக்கப்பட்டது. அதைப்பற்றி இந்த சபையில் எழுப்பக்கூடாது அது தள்ளப்பட்டது என்று. ஆனால், அதற்குப் பிறகு, சிலரோ அல்லது ஒருவரோ அதை இங்கே எழுப்ப அனுமதி கொடுத்தது முறையா, ஒழுங்கா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்களுக்கு, அமைச்சர்கள் குறுக்கிட்டு பதிலளித்ததே முறையல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. அது முறையல்ல என்றாலும், உறுப்பினர்களுடைய கவலையை மதித்து அமைச்சர்கள் அப்படிச் சொன்னார்கள் என்றால் அதைப் பாராட்ட வேண்டுமேயல்லாது, அது முறைதானா என்று கேட்பது சரியல்ல. அது ஒரு ஒழுங்குப் பிரச்சினை அல்ல. அதை மேலும் மேலும் ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.





**திரு. க. இராமமூர்த்தி:** நான் அமைச்சர் கொடுத்த பதிலைப் பற்றிச் சொல்லவில்லை. அவர்கள் சொல்லட்டும், அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால், எல்லா அங்கத்தினர்களும் கொடுத்திருக்கும்போது, அவர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமான பதிலை அனுப்பியிருக்கும்போது, ஒற்றிவைப்புத் தீர்மானம் அங்கீகரிக்கப் படமாட்டாது, சபையில் எழுப்பக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கும்போது, அதில் சிலரை அதை இங்கே எழுப்ப அனுமதித்திருக்கிறார்கள் தலைவர் அவர்களே என்பதுதான் என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் மறுபடியும் சொல்கிறேன். அதை இங்கே எழுப்புவது முறையல்ல; அதை எழுப்பிவிட்டு, அதற்கு அமைச்சர் பதில் அளித்ததும் முறையல்ல. ஆனால் அதைக் காட்டி, ஒழுங்குப் பிரச்சினையாக எழுப்புவது சரியில்லை, சபைக்கு உகந்தது இல்லை.

### 4.. கவன ஈர்ப்பு.

### மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறத்தல்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் விதிகள் 41-வது விதியின் கீழ் அவசரமும் பொது முக்கியமுமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"தமிழகத்தில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளைத் திறப்பதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்து, அவற்றை உடனடியாகத் திறப்பதற்காக தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்."

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பொது நலனைக் கருதி தனது கண்காணிப்பில் வைத்திருப்பது உகந்ததென்று மத்திய அரசு கருதுகிற தொழில்களில் ஒன்றாக 1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி, முறைப்படுத்தல்) சட்டத்தின் விவர அட்டவணையில் பஞ்சாலைத் தொழில் சேர்க்கப்பட்டு உள்ளது.

இத் தொழிலில் 1965-ம் ஆண்டு வாக்கில் நெருக்கடி நிலை தொடங்கியது. 1966-ம் ஆண்டின் முதற்பகுதியில் இம்மாநிலத்தில் பத்து ஆலைகள் மூடப்பட்டபோது, இந்த ஆலைகளின் தொழில் நுட்ப, நிதி நிலைமைகளைப்பற்றி ஆராய்ந்து பரிவுரைகள் செய்ய கைத்தறிகள் துறை இயக்குநர், தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர், தென்னிந்திய பஞ்சாலைத் தொழில் ஆராய்ச்சிச் சங்கத்தின் இயக்குநர் ஆகியோர் அடங்கிய தொழில் நுட்பத் தனிக்குழு ஒன்றை அரசாங்கம் அமைத்தது. அதன் பரிவுரைகளுக்கிணங்க, கோயம்புத்தூர் கம்போடியா ஆலை நிறுவனம், கோயம்புத்தூர் ஜனார்த்தன ஆலை நிறுவனம், சங்கரன் கோயில் (திருநெல்வேலி மாவட்டம்) ரீதாஞ்சலி ஆலை நிறுவனம், ஆகியவற்றிற்கு ரூ. 25·85 லட்சத்திற்கு உத்தரவாத உதவியை

[திரு. நா. காசிராமன்] [1968 ஆகஸ்ட் 20

தால், விவசாய மக்கள்—பொதுவாக எல்லா மக்களுமே—பதட்ட நிலையிலே இருந்து வருகிறார்கள். ஆகவே மக்கள் விவசாய வேலைகளில் கவனம் செலுத்த முடியாத நிலைமை இருந்து வருகிறது. போலீஸ்காரர்களும், நெருப்பணைக்கும் பணியாளர்களும் தங்களால் இயன்ற அளவுக்கு உதவி செய்தும், அநேக இடங்களில் நெருப்பு பற்றிக்கொள்கிறது. ஆனால் நாம் ஒன்றை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். போலீஸ்காரர்களும், நெருப்பு அணைக்கும் பணியாளர்களும் மனிதர்கள்தானே. அவர்கள் ஆயாசப்பட்டு கொஞ்சம் சோர்வடைந்தால் மக்களுடைய பாதுகாப்பு நிலை என்ன ஆவது? போலீஸ்காரர்களும் நெருப்பணைக்கும் பணியாளர்களும் எண்ணிக்கையில் குறைவாக இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் எல்லா இடங்களுக்கும் விரைவாகச் செல்ல முடியவில்லை. ஆகவே, அவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தி, நாட்டு விரோதச் செயல்களில் ஈடுபடும் இந்தச் சக்திகளைக் கண்டுபிடிக்க வேண்டியது அரசின் முதற்கடமையாகும். நாட்டு விரோதச் சக்திகளைக் கண்டு பிடிக்க தஞ்சை ஜில்லாவில் ஒரு தனி இலாக்காவையே ஏற்படுத்திக் கொடுத்தால் விவசாய மக்கள் நிம்மதியாக தங்கள் வேலைகளில் ஈடுபட முடியும். ஆகவே, இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அரசு முன்வர வேண்டும்.

அடுத்தபடியாக, அண்மையில் முக மூடித் திருடர்களை சென்னை போலீஸ் கண்டு பிடித்தது. முக மூடித் திருடர்களைக் கண்டு பிடித்தவர்களுக்கு நெருப்பு வைப்பவர்களைக் கண்டு பிடிப்பது கடினமான காரியம் அல்ல. ஆகவே, போலீஸ் துறை அவர்களைக் கண்டு பிடித்து மக்கள் ஆதரவைப் பெற வேண்டும். அதற்கு போலீஸ் இலாகாவில் அதிகமான ஆட்களைச் சேர்த்துக் கொள்ள அரசு வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, கல்வியைப் பொறுத்த வரையில் தனியார் நடத்தும் பள்ளிகளுக்கு மேட்சிங் கிராண்ட் தருவதுபோல, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் நடத்தும் பள்ளிகளுக்கு கிராண்ட் தருவதில்லை. முனிசிபாலிட்டிகளுக்கோ, மற்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கோ வருஷாவருஷம் செலவு அதிகமாகிக் கொண்டு வருகிறது. வருவாயைப் பெருக்கிக் கொள்ள வரி போட முடியாது. முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். குழாய் வரியைச் சிறிது அதிகப்படுத்தினாலும் போதும், குழாய் இல்லாதவர்கள் எல்லாம்கூட கவுன்சிலர்களை அழைத்துக் கொண்டு கூடி விடுவார்கள். ஆகவே மாநில அரசாங்கம்தான் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உதவி செய்ய வேண்டும். குறிப்பாக தனியார் பள்ளிகளுக்குக் கொடுப்பது போல இவற்றின் பள்ளிகளுக்கும் கொடுக்க வேண்டும். இப்போது மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பளத்தையோ, பஞ்சப்படியையோ உயர்த்தினால் அதைப்போல ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளுக்கு உயர்த்தப்படுவதை வரவேற்கிறேன். செலவு உயர்வது போல ஸ்தல ஸ்தாபனங்களின் வருவாய்



1968 ஆகஸ்ட் 20] [திரு. நா. காசிராமன்]

உயர்வதற்கு வசதியில்லையாதலால் இதுபோன்ற இனங்களில் அவர்களுக்கு எவ்வளவு அதிகம் செலவாகிறதோ அதை மாநில அரசே ஏற்றுக் கொண்டு கொடுக்க முன்வர வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, துணை மானியக் கோரிக்கைகள் புதிய திட்டங்கள், புதிய சர்வீஸ்கள் இவற்றைக் குறித்துத் தாக்கல் செய்யப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். ஒத்துக் கொள்கிறோம். ஆனால் எந்தத் துறையிலும் புதிய சர்வீஸ்கள், திட்டங்கள் குறித்து வகை செய்யப்படுவதாகத் தெரியவில்லை. இதில் பெரும்பகுதி டியர்னஸ் அலவன்சுக்காகவே போகிறது. மொத்தத்தில் 75 சத விகிதம் டியர்னஸ் அலவன்ஸ் உயர்வே அடித்துக் கொண்டு போகிறது. உதாரணமாக இரண்டொன்று சொல்லவேண்டுமென்றால் ஜில்லா நிர்வாகத்திற்கு ரூ. 12 லட்சம் கோரப்படுகிறது. இதில் அகவிலைப்படி உயர்வுக்கே ரூ. 6 லட்சம் போய் விடுகிறது. காவல் துறையை எடுத்துக் கொண்டால் 33,45,300 ரூபாய் கோரப்படுகிறது. இதில் 20 லட்சம் அகவிலைப்படி உயர்வுக்கே போய்விடுகிறது. மருத்துவ துறையை எடுத்துக் கொண்டாலும் 19·9 லட்சம் ரூபாய் கோரப்படுகிறது. இதில் 14 லட்சம் அகவிலைப்படி உயர்வுக்கே போய்விடுகிறது. இன்றைக்கு ஆஸ்பத்திரிகளை எடுத்துக் கொண்டால் மருந்துகள் போதவில்லை. கட்டிடங்கள் இல்லை. உபகரணங்கள் இல்லை. அதுவும் கும்பகோணம் ஆஸ்பத்திரியில் மருந்துகள் இல்லை. இதற்கெல்லாம் என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஆக பொதுச் சுகாதாரத்துறையை எடுத்துக்கொண்டாலும், விவசாயத் துறையை எடுத்துக் கொண்டாலும், மருத்துவத் துறையை எடுத்துக் கொண்டாலும் நாம் ஒதுக்குகிற பணத்தில் பெரும்பகுதி அகவிலைப்படி உயர்வுக்கே போய்விடுகிறது.

கடைசியாக ஒரே ஒரு சமாசாரத்தை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1967 ஜூலை மாதம் 28-ஆம் தேதியன்று கும்பகோணத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் முதல் அமைச்சர் அவர்கள் பேசினார்கள். அதைக் கேட்கக்கூடிய வாய்ப்பு எனக்கும் ஏற்பட்டது. 'முரசொலி', 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைகளிலும் அவர் பேசின விஷயம் வந்திருக்கிறது. 3 கோடி ரூபாய் அரசாங்கம் உடனடியாகக் கட்ட வேண்டுமென்று ரிசர்வ் பாங்க் தாக்கீது அனுப்பியிருப்பதாக அவர் குறிப்பிட்ட செய்தியை வைத்துத்தான் நான் ஒரு கேள்வி கொடுத்திருந்தேன். அதைச் சபையில் சொல்வது பொதுஜன நலனுக்கு உகந்தது அல்ல என்று அதற்குப் பதில் சொல்லவில்லை. இந்த மாதிரி விஷயங்களில் பொதுக் கூட்டங்களில் சொல்லுகின்றவற்றையாவது இந்தச் சபையில் சொன்னால் உறுப்பினர்களுக்குத் திருப்தி அளிக்கக் கூடியதாக இருக்கும்.

ஆக, நான் குறிப்பிட்டதைப்போல போலீஸ் இலாக்காவின் ஆள்பலத்தை அதிகரித்து தஞ்சை ஜில்லாவில் ஏற்பட்டிருக்கிற தகராறுகள், மர்மத் தீ பயம் இவற்றை எல்லாம் போக்க ஒரு வழி

வகை காண வேண்டுமென்று சொல்லி, எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. டி. எஸ். ஆதிமூலம் :** உதவி சபாநாயகர் அவர்களே, முக்கியமாக நான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய சம்பளம், அகவிலைப்படியை அவர்கள் உயர்த்துகிறார்கள். அதற்கு ஏற்றாற்போல நாம் உயர்த்துகிறோம். இது இப்படியே அனுமார்வால் போல நீண்டு கொண்டே போகிறது. ஒரு வருடத்தில் 3 தடவை உயர்த்திக் கொண்டே போனால் அது எங்கு கொண்டு போய்விடும் என்று தெரியவில்லை. நம்முடைய ஊழியர்களுக்கு நீங்கள் எல்லாம் கொடுக்க வேண்டும். என்கிறபோது நான் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. அடல்ட்ப்ரான்சைஸ் வந்துவிட்டது—நாங்களும் ஓட்டு வாங்குவதை மனதில் வைத்துத்தான் பேச வேண்டியிருக்கிறது. (சிரிப்பு) ஆயினும் இதற்கு நமது முதல் அமைச்சர் அவர்கள் ஒரு யோசனை செய்தாக வேண்டும். விலைவாசி கூடுதலாகிக் கொண்டே போவதனால் நாமும் கூட்டிக் கொண்டே போகிறோம். டெல்லிக்கு ப்ளானிங் கமிஷன் கூட்டத்திற்குப் போகும் போதாவது இதற்கு எப்படி ஒரு முற்றுப்புள்ளி வைப்பது என்பதைப் பற்றி நமது முதல் அமைச்சர் அவர்கள் ஒரு யோசனை செய்தாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சிவில் சப்ளை இனத்தில் ஜீப்புகள் வாங்குகிறோம். செக் போஸ்டுகளை விரிவுபடுத்துகிறோம் என்பதாகச் செலவினம் கூடிக் கொண்டே போகிறது. சிவில் சப்ளை என்பது வெள்ளைக்காரன் காலத்தில் ஒரு யூனிட்டாக இருந்தது. காங்கிரஸ்காரர்கள் காலத்தில் கடலைப் பருப்பு, அரிசி என்று இப்படி க்ஷவர ப்ளேடு வரை சப்ளை செய்வது என்று வந்து அந்த இலாக்கா பெரிய அளவுக்கு விஸ்தரிக்கப்பட்டு கோடிக்கணக்கான ரூபாயைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது. அதை இந்தச் சர்க்காரும் அப்படியே விஸ்தரித்துக் கொண்டு போவது சரியல்ல. கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது என்றால் ஒரு இன்சென்டிவ் போனசாவது கொடுத்து மில்காரர்களிடம் இருந்து வாங்கிக் கொள்ளலாம். அறுவடை சமயத்தில் 1/2 டஜன் ஜீப்புகள், 1/2 டஜன் தாசில்தார்கள் என்று போட்டு அரசாங்கமே நேரில் ஈடுபட வேண்டும் என்பது இல்லை. இது ஒரு க்ஷேம நல சர்க்காருக்கும் நல்லதல்ல. காங்கிரஸ்காரர்கள் தோல்வி அடைந்ததற்குக் காரணமே உணவுப் பொருள் விஷயத்தில் அனாவசியமான கெடுபிடிகளை ஏற்படுத்தி ஜனங்களுக்குத் துன்பம் அளித்து வந்தது தான். அதை நீங்கள் தீவிரமாக மனதில் கொள்ள வேண்டும். இது விஷயமாக எத்தனையோ தடவை சொல்லியாகிவிட்டது.

ஜில்லா நிர்வாகஸ்தர்களுக்கு முதல் அமைச்சர் அவர்கள் 'கட்சிக்காரர்கள் என்பதற்கான நிர்வாகத்தில் தலையிட அனுமதிக்காதீர்கள், உங்கள் கடமைகளை நல்லவிதமாக தைரியமாக





ஆற்றுங்கள்' என்று அறிவித்திருக்கிறார். அதை நான் வரவேற்கிறேன். அதைத் திறமையான முறையில் அமுல்படுத்த வேண்டும்.

மேலும், அமைச்சர்கள் சுற்றுப் பயணம் வரும்போதும் ஆளும் மு.ப. 11-30
கட்சி எம்.எல்.ஏ.-க்களை தங்களை நெருங்கவிடுவதோடன்றி மற்றவர்களும் கூடயிருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியானால் தான் மக்கள் மத்தியில் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் சொன்னால் தான் நடக்கும் என்கிற எண்ணம் மாறும். யார் சொன்னால் என்ன, நிர்வாகம் செம்மையாக நடைபெறும், யாருடைய தலையீடும் அன்றி என்கிற நம்பிக்கை அவர்களுக்கு வரும்படி செய்ய வேண்டும். அதனால் நல்ல நிர்வாகம் நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுக்கெல்லாம் தெரியுமென்று நினைக்கிறேன். எங்களுடைய ஜில்லாவிலே மாவட்டச் செயலாளர் தேர்தலில் ஒரு லகரம் செலவு. அதாவது ஒரு லட்சம், மற்ற ஜில்லாக்களில் போட்டிகள் கடுமையாக இருந்தன என்பதையெல்லாம் பத்திரிகையிலே பார்த்தோம். அது உங்கள் கட்சியின் வளர்ச்சியைக் காட்டுகிறது என்பதில் சந்தேகம் இல்லை. வட்டச் செயலாளர் தேர்தல் என்றால் 10 ஆயிரம் ரூபாய் எஸ்டிமேட். எங்கள் ஜில்லாவில் உள்ள ஒரு புண்ணியவாளருடைய ஏற்பாடு இது. ஜில்லா செயலாளர் தேர்தலுக்கு ஒரு லட்சம். ஏதோ கட்சிக்காரர்களுக்குப் பணம் கிடைப்பதில் தவறு ஒன்றும் இல்லை. சர்க்காரிலேதான் பணம் லஞ்சம் வாங்கக் கூடாதே தவிர மற்றவர்களுக்குப் பணம் கிடைப்பதில் தவறு ஒன்றுமில்லை. அவர்கள் அந்த அளவுக்கு இதிலே தீவிரமாக நடப்பதற்குக் காரணம் நம்முடைய சர்க்கார் நடக்கிறது, ஒவ்வொருவரும் அவர் அவர்களுக்கு வேண்டிய காரியங்களைத் தலையிட்டுச் செய்யலாம் என்ற மனோபாவம்தான். அந்த மனோபாவம் தி.மு.க கட்சியில் வளர்ந்திருக்கிறது. ஆகவே, இந்த மந்திரி சபையினர் ஜாக்கிரதையாக இருந்து கொள்ள வேண்டும். முன்பு கேரளாவில் அஜிட்டேஷன் (Agitation) நடந்த மாதிரி இல்லாமல்—இங்கே அப்படி நடக்காது. நடப்பது எல்லாம் புஸ் புஸ் என்று போய்விடும்—என்றாலும் பரவலாக ஆளும் கட்சித் தலையீடு நடக்காமல் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவிலே இரண்டு நீர்ப் பாசனத் திட்டங்கள், அணைக்கட்டுத் திட்டங்களில் வேலை நடக்க ஆரம்பித்திருக்கின்றன. கடனா நதி அணைக்கட்டுத் திட்டம், ராம நதி அணைக்கட்டுத் திட்டம் இந்த இரண்டு அணைக்கட்டுத் திட்டங்களின் மூலம் நிறைய விவசாய வசதிகள் ஏற்படுவதற்கான சூழ்நிலை இருக்கிறது. அந்த வேலைகள் ஆமை வேகத்தில் நடப்பது மாதிரி இருக்கக் கூடாது. ஒன்றே முக்கால் கோடி ரூபாய் செலவில் கட்டப்படக் கூடிய அந்த கடனா நதி அணைக் கட்டுத் திட்டத்திற்கு இந்த

வருஷம் 10 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று ஒரு கோடி ரூபாய் அளவில் கட்டப்பட இருக்கிற ராமநதித் திட்டத்திற்காக இந்த வருஷம் 10 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பணம் இல்லை யென்ற முறையில் நாம் சாக்குப் போக்குச் சொல்லி அணைக்கட்டு வேலைகளை 6, 7 வருஷங்களுக்குத் தொடர்ந்து நடத்தக்கூடிய முறையில் இருந்தால் ஏராளமான பண விரயம்தான் ஏற்படும். அந்தத் திட்டங்களின் மூலம் எதிர்பார்த்த பலன் அடைய முடியாது. அந்தத் திட்டங்கள் காங்கிரஸ் சர்க்கார் காலத்தில் செய்யவில்லை என்ற அதிருப்தி இருந்தது, ஒரு கோடி ரூபாய் திட்டத்தினை 3 வருஷத்திலே முடிக்க வேண்டாமா? 10 லட்சம், 5 லட்சம் என்று தொகை ஒதுக்கினால் அந்தத் தொகை டூல்ஸ் வாங்குவதற்கும், மெஷினரி வாங்குவதற்கும், ரோடு போடுவதற்கும், தான் பயன்படுமே தவிர, வேலை உருப்படியாக நடக்காது. ஆகவே அந்த அணைக்கட்டுத் திட்டங்களுக்கு ஜாஸ்தி தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) நான் சுருக்கமாக முடித்துவிடுகிறேன், என்னைத் தயவு செய்து பயமுறுத்தாதீர்கள்.

சர்க்கார் சிவில் சப்ளை டிபார்ட்மெண்டிலே சிக்கனத்தைக் கையாள வேண்டும். அடுத்த வருஷத்திலிருந்து இதைப்பற்றித் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும். வட இந்தியாவிலே சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டின் மூலம் கெடுபிடிகள் நடத்திக் கொண்டிருந்தார்கள், இப்பொழுது அதனால் ஒன்றும் முடியாமல் அவர்களே கடுமையான ஆர்டர்களை எல்லாம் தளர்த்தி விட்டார்கள். அதனால்தான் இப்பொழுது விலைவாசி யெல்லாம் குறைந்து விட்டன. தி.மு.க. சர்க்கார் வந்த நேரத்தில் அவை குறைந்திருக்கின்றன, அந்த க்ரெடிட்டில் 25 சத விகிதம் சர்க்காருக்கும் இருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. சிக்கனம் என்ற முறையில் முருகேச முதலியார் பஞ்சாயத்து விஷயமாக ரிப்போர்ட் வந்தது, அதை மூலையில் கட்டி வைத்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். அதிலே பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. காங்கிரஸ் சர்க்கார் காலத்திலே ஊழியர்களுக்கு உதவி செய்வதற்காக சோஷியல் ஒர்க்கர்ஸ் என்றெல்லாம் போட்டார்கள், எல்லாம் ஸ்லீப்பிங் ஆபீஸ் (Sleeping office) தான். பப்ளிக் மணியை ஊதாரித்தனமாக பஞ்சாயத்து யூனியன்களிலே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அந்த ரிப்போர்ட்டை அடுத்து வருகிற பட்ஜெட் காலத்திற்குள்ளாகவாவது அமல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

யூனியன் பொது நிதியில் (General Fund) உள்ள பணத்தை, ஜில்லா கலெக்டரே ஆர்டர் போட்டு, 'காலேஜுக்குக் கொடு, ஹைஸ்கூலுக்குக் கொடு' என்று சொல்கிறார்கள். அந்தப் பணங்களை யெல்லாம் அனாவசியமாக டைவர்ட் பண்ணாமல் இருக்க வேண்டும். கிராமாந்திரங்களில் ரோடுகள் முக்கியமானவை. அவை ஒழுங்காகப் பராமரிக்கப்பட வேண்டும். ஆகவே யூனியன் பணத்தை வேறு விஷயங்களில் விரயமாக்காமல், 4 பேர்கள் வந்து



மந்திரியைப் பார்த்துவிட்டால் அதுமாதிரி நடக்காதபடி, பார்த்துக் கொள்ள வேண்டும். யூனியன் ரோடு வேலைகளைச் செய்வதற்கு வழி செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்கள் யூனியன்களில் இருக்கின்றன. இது எல்லாம் சுத்த அபத்தம். இந்திய சர்க்கார் கண்டுபிடித்தது. முக்கூடலிலே ஒரு ஆஸ்பத்திரி கட்டுவதற்காக பொது ஜனங்களிடம் 25 ரூபாய் வரை வசூல் செய்து ஒரு ஜில்லா போர்டு ஆஸ்பத்திரி ஏற்பாடு செய்தோம். அது நல்ல முறையில் பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரியாக வந்து காலையில் 100 பேர்களும் மாலையில் 50, 60 பேர்களும் ஒழுங்காக வந்து மருத்துவ வசதி கிடைத்துக் கொண்டிருந்தது. பஞ்சாயத்து யூனியன் கூட்டத்திலே அதை பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றிவிட்டார்கள். நான் அந்தக் கூட்டத்தில் இல்லை, அப்பொழுது நான் எம்.எல்.ஏ. வாக இல்லை. இப்பொழுது பிரைமரி ஹெல்த் சென்டர் நடக்கிறது. டாக்டர் 11 மணி வரைதான் இருக்கிறார். அதுவும் இப்பொழுது நான்கு மாத காலமாக டாக்டரே இல்லை. டாக்டர் அங்கே 11 மணி வரையில் வேலை பார்க்கிறார். அதற்குமேலே அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஜீப் அல்லது வேனை எடுத்துக் கொண்டு கிராமங்களில் வைத்தியம் செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டு துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். வெள்ளைக்காரன் காலம், அதற்குப் பின்னால் கொஞ்ச காலம்வரை வைத்திய வசதி நல்ல முறையிலே ஓரளவாவது இருந்தது. இப்பொழுது 10 வருஷமாக காங்கிரஸ் ஆட்சியிலே டெல்லி ஒரு உத்திரவைப் போட்டு அதன் மூலம் இமயம் முதல் கன்னியாகுமரி வரையில் வைத்திய வசதியையே குட்டிச்சுவராக்கி விட்டார்கள். பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருந்தாலும் டாக்டர் இல்லை. ஆகவே, டாக்டர்கள் உடனே போட வேண்டும். மருத்துவ அமைச்சர் அவர்கள் அதை யெல்லாம் பரிசீலனை செய்து டாக்டர்கள் ஒழுங்காக டிஸ்பென்சரிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த டெபுடி ஸ்பீக்கர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. என். சங்கரய்யா :** உதவி சபாநாயகர் அவர்களே, 1968-69-ம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கைகளுடைய நிதி ஒதுக்கீடு மசோதாவின் பேரில் பின்வரும் முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி அரசினரின் கவனத்திற்கு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியில் இருந்து தமிழகத்தில் இருக்கக்கூடிய 4,500 மருந்தாளுநர்கள் (பார்மசிஸ்ட்) சட்டசபை முன்னால் அடையாள உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு மாலையில் விடுதலை செய்யப்பட்டாலும் இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இதைப் பற்றி ஏற்கனவே மேல்சபையில் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். மருந்தாளுநர்கள் ஒரு நாளைக்குப் 16 மணி நேரம் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய வேலையோடு கூட எழுத்து வேலை

[திரு. என். சங்கரய்யா] [1968 ஆகஸ்ட் 20

யும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்த பிறகு இரண்டு ஆண்டுகள் பார்மசிஸ்ட் கோர்ஸ் படித்த பிறகும் அவர்களுக்கு எல்.டி.சி. வேஜ் ஸ்கேல்தான் கொடுக்கப்படுகிறது. சானிடரி ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்குக் கொடுக்கின்ற அளவுக்காவது அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. இதுபோன்ற முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்பதற்காக 4,500 மருந்தாளுநர்களும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் எல்லாம் நியாயமானவை. மருந்தாளுநர்களுடைய சங்கம் அங்கீகரிக்கப்பட்ட சங்கம். நம்முடைய மாநில அரசும், சுகாதார அமைச்சர் அவர்களும் அந்தச் சங்கத்தினரோடு சுமுகமாகப் பேசி நியாயமான அளவு அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுப்பதோடு அவர்கள் மீது பதிவு செய்திருக்கும் வழக்குகளையும் வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

உணவு அமைச்சர் அவர்கள் பல விஷயங்களைப் பற்றிக் கூறி இருக்கிறார்கள். சென்னை, கோவை நகரங்களைச் சுற்றியிருக்கும் பகுதிகளில் குடும்பக் கார்டு முறைப்படி உணவுப் பண்டங்கள் வழங்கப்படுவது போல் மதுரை நகரைச் சுற்றியுள்ள பகுதியிலும் குடும்பக் கார்டு முறையில் உணவுப் பண்டங்கள் வழங்கப்பட வேண்டும். நான் குறிப்பிடுவது படி அரிசித் திட்டத்தைப் பற்றி யல்ல. சென்னை, கோவையில் இருப்பதுபோல் மதுரையைச் சுற்றியுள்ள நகரசபைக்கு அப்பாற்பட்ட பகுதிகளும், நகரசபை நிர்வாகத்தில் இல்லாத பிரதேசங்களாக இருக்கின்றனவே தவிர அவை விவசாயப் பிரதேசங்கள் அல்ல. அந்த இடங்களிலும் குடும்பக் கார்டு முறையில் உணவுப் பண்டங்களை விநியோகிக்க நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. மதுரையைச் சுற்றியுள்ள அந்தப் பகுதிகளில் தொழிலாளர்களும், நடுத்தர மக்களுந்தான் வசித்து வருகிறார்கள். இதைப் பற்றி நான் எழுதிக் கொடுத்ததற்கு அமைச்சர் அவர்கள் கவனிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் எனக்கு உணவுத் துறையில் இருந்து வந்த பதிலில் 'முடியாது' என்று எழுதியிருக்கிறார்கள். அதற்குக் காரணமாக அரசாங்கத்தின் கையிருப்பில் தானியங்கள் குறைவாக இருப்பதாகவும், பொதுவாக விலைவாசிகள் குறைந்து விட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக இந்த மாநிலத்திலுள்ள பெரும் நிலப் பிரபுக்கள் எவ்வளவுதான் கூச்சலிட்டாலும் மாநில அரசாங்கம் கிஞ்சித்தும் அதைக் கண்டு அஞ்சக் கூடாது. இந்த ஆண்டும் கொள்முதலை நல்ல முறையில் நடத்தினால்தான் வரக்கூடிய நாட்களில் மக்களுக்கு உணவு அளிக்க முடியும். விலைவாசிகள் இறங்குவது அகில இந்திய ரீதியில் ஏற்பட்டிருக்கும் சம்பவங்களால்தான். நம்முடைய கட்டுப்பாட்டால் வந்துவிட்டது என்று பொருள் அல்ல. தற்போதே சரியான மழை இல்லையென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆகவே, இந்த உணவுத் துறையில் அஜாக்கிரதை



1968 ஆகஸ்ட் 20] [திரு. என். சங்கரய்யா]

யாக இருந்தால் பெரிய நெருக்கடி தமிழ்நாட்டில் ஏற்பட்டு விடும். ஆகவே, அதற்கு இடம் கொடுக்காமல் மூன்று ஏக்கர் வரை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு விதிவிலக்குக் கொடுத்து விட்டு பத்து ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்களிடமிருந்து அவர்களுடைய தேவை போக பாக்கி முழுவதையும் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். மதுரையைச் சுற்றி இருக்கும் பிரதேசங்களுக்குக் குடும்பக் கார்டு முறையைக் கொண்டு வருவது பற்றி அரசாங்கம் புனராலோசனை செய்ய வேண்டும். படி அரிசித் திட்டத்தை இன்னும் சில இடங்களுக்கு விஸ்தரிக்கப் போவதாகக் கூறினார்கள். அதை விஸ்தரிப்பதைக் காட்டிலும் அடிப்படையில் நியாய விலைக் கடைகள் வேண்டுமென்று கேட்கும் பகுதிகளில் குடும்பக் கார்டு முறையைக் கொண்டு வர ஏற்பாடு செய்தால் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏழை தொழிலாள மக்களுக்கு நன்மை செய்ததாக இருக்கும். அவர்கள் இந்த அரசாங்கத்தை மனமாரப் பாராட்டுவார்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்திலும் மற்ற இடங்களிலும் மிராசுதார்களை விவசாயத் தொழிலாளர்கள் பயமுறுத்துவதாகப் பேசப்பட்டது. வாழ்க்கையில் எந்த விதமான ஆதாரமும் இன்றி, பாதுகாப்பும் இன்றி இருப்பவர்கள் விவசாயத் தொழிலாளர்கள். தஞ்சை மாவட்டத்தில் பேச்சு வார்த்தையின் மூலம் ஓரளவுக்கு நல்ல முறையில் ஒப்பந்தம் ஏற்பட்டு வருகிறது என்று சொன்னாலும் கூட, சட்ட ரீதியாக விவசாயத் தொழிலாளர்களுடைய கூலியை நிர்ணயம் செய்யும் வகையில் நம்முடைய அரசாங்கம் தமிழகத்திலுள்ள விவசாயக் கூலிகள் நியாயமான அளவுக்குக் கூலி பெறும் வகையில் கூலி நிர்ணயச் சட்டத்தை இந்த அவையில் கொண்டு வந்து நிறைவேற்றி நடைமுறையில் அமலுக்குக் கொண்டு வரச் செய்வது மிக அவசியம்.

இன்று சில பத்திரிகைகள், பெரும் முதலாளிகளால் நடத்தப்படும் பத்திரிகைகள், விவசாயத் தொழிலாளர்களும், மற்றத் தொழிலாளர்களும் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்காக கிளர்ச்சி செய்தால் ஏதோ குழப்பத்தை உண்டாக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள் என்ற வகையில் சித்தரித்துக் காட்டி அரசாங்கம் அந்த ஏழை மக்கள் மீது அடக்கு முறையைக் கையாள்வதற்குத் தூண்டுதலாக இருக்கிறார்கள். நிச்சயமாக அந்த வழியில் நம்முடைய அரசாங்கம் செல்லாது என்பதிலே எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த அரசு பதவியேற்ற போதே, 'விவசாயத் தொழிலாளர்கள், மற்றத் தொழிலாளர்கள், ஏழை மக்கள் ஆகியோருக்குச் சாதகமாகத்தான் இந்த அரசு செயல்படும்' என்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கொள்கையிலேயே இந்த அரசு நின்று செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கிய தமிழ் பத்திரிகை ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. 'இடதுசாரி கம்யூனிஸ்டுகள் திராவிட முன்னேற்றக்

கழக அரசாங்கத்தைப் பயமுறுத்தி தொழிலாளர்களுக்குச் சாதகமான கோரிக்கைகளை வற்புறுத்தி தொழில் வளர்ச்சி ஏற்பட முடியாத நிலைமையை உண்டாக்கி இருக்கிறார்கள். அதை அடக்கி வெளி மாநிலங்களில் இருந்து பெரு முதலாளிகள் தமிழ்நாட்டுக்கு வந்து முதல் போட்டு பெரிய தொழில்களை உண்டாக்குவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்' என்று எழுதியிருக்கிறார்கள். இது இடது சாரி கம்யூனிஸ்டுகள் பிரச்சினை அல்ல, அரசியல் கட்சிப் பிரச்சினை அல்ல. பெரும் முதலாளிகள் தொழில் நடத்தாமல் இருந்தாலும் ஆண்டாண்டு காலத்திற்கு வாழ்க்கை நடத்த அவர்களுக்குப் பண வசதி இருக்கிறது. ஆனால் தொழிற்சாலை தாற்காலிகமாக மூடப்பட்டாலும் தொழில் லே ஆப் செய்யப்பட்டாலும் உடனடியாக அது தொழிலாளர்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கிறது. தொழிலாளர்களுக்கு அது வாழ்க்கைப் பிரச்சினை. ஆகவே, அந்த மாதிரி நேரங்களில் அரசாங்கம் தொழிலாளர்கள் சார்பில் நின்று, அரசாங்கத்தின் செல்வாக்கு முழுவதையும் பயன்படுத்தி நியாயமான கோரிக்கைகள் ஈடேற ஏற்பாடு செய்ய வேண்டும்.

போலீஸ் இலாகாவைப் பற்றிக் கூறப்பட்டது. அந்த இலாகாவைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். போலீஸ் நிலையங்களில் எல்லாம் காந்திஜியின் படத்தை வைத்து சத்தியமே வெற்றி பெறும் என்று எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால் சாதாரண நபர், நிலப் பிரபுவாகவோ, பணக்காரராகவோ இல்லாத ஒரு நபர் போலீஸ் நிலையத்திற்குப் புகார் கொடுக்கப் போனால் அவரை உட்காரச் சொல்லி என்ன புகார் என்று கேட்பதில்லை. ஏதோ அவரையே குற்றவாளி போல் கருதி நிற்க வைத்துக் கேள்விகள் கேட்கிறார்கள். இவ்வாறு மரியாதையாக நடத்தப்படுவதில்லை என்பதோடு மட்டுமல்லாமல், தொடரப்பட்ட வழக்குகளை எப்படியாவது வெற்றி பெறச் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன், அப்போதுதான் தங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும் என்ற நோக்கத்துடன் சந்தேகப்பட்டவர்களை அடித்தும் துன்புறுத்தியும் சாட்சிகளைத் தயார் செய்கிறார்கள். சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ள முறையில்தான் இன்வெஸ்டி-கேஷன்செய்யவேண்டும், சாதாரண நபர்கள் துன்புறுத்தப்படக் கூடாது என்ற அடிப்படையில் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். மதுரையிலே போலீஸ் நிலையத்திலே காவலிலே வைக்கப்பட்ட கைதி தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டு இறந்து விட்டார் என்று ரிப்போர்ட் கொடுக்கிறார்கள். ஒருவர் போலீஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்படுகிறார் என்றால் சில விதி முறைகள் அனுசரிக்கப்பட வேண்டும். அவருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடும் என்று கருதக்கூடிய எல்லா விதமான பொருள்களையும் அவரிடமிருந்து நீக்கி விடுகிறார்கள். அப்படி இருக்கும்போது காவலில் இருந்தவர் தன்னைத்தானே தீ வைத்துக்கொண்டு இறந்து விட்டார் என்றால் அதிலே என்ன கருத்து அடங்கியிருக்கிறது? பெருவாரியாக, துன்புறுத்தப்பட்டு இறந்து விடுவார்களானால், அதிலிருந்து தப்பித்துக் கொள்ள இம்மாதிரி விளக்கங்களைச் சொல்லித் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். மாநில அரசாங்கம் இதைப்பற்றி முக்கியமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்குவது பற்றிக் குறிப்பிட்டார்கள்.

மதுரையில் ஆகஸ்ட் 11-ல் நடைபெற்ற தமிழ்மாநில மாணவர் மாநாட்டில் இந்த அரசாங்கம் கல்லூரிகளில் தமிழை பயிற்சி மொழியாக ஆக்குவதற்கு [illegible] தெரிவித்திருக்கிறது. இன்று தமிழ் பயிற்சிமொழியாக இல்லாதிருக்கக் கூடிய விஞ்ஞானத்துறை, மருத்துவத் துறை, பொறியியல் துறை இவைகளிலும் தமிழைக் கொண்டு வந்து இந்த மாநிலம் முழுவதிலும் பிரதேச மொழிதான் பயிற்சி மொழியாக இருக்கவேண்டும் என்ற முறையில் நடவடிக்கைகள் எடுப்பதின் மூலமாகத்தான் மாணவர்களின் நலன்களை நாம் பாதுகாக்க முடியும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தைரியமாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக அரசாங்க இலாகாக்களில் உள்ள காலதாமதத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூறிக்கொள்ள விரும்புகிறேன். லால்மியா சாகிப் என்பவர் பி.டபிள்யூ.டி.-யில் ரோடு மேஸ்திரியாக இருந்து விலகிக் கொண்டார். அவருக்கு க்ராச்சுவிட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. கடந்த ஒரு ஆண்டு காலமாக முயற்சித்து வருகிறேன். டயரக்டர் ஆஃப் ரூரல் டெவலப்மென்ட்டுக்கு எழுத வேண்டுமென்று சொன்னார்கள். நான் அவர்களை நேரில் பார்த்தேன். பின்னர் அது பி.டப்ள்யூ.டி. செகரட்டரிக்கு மாற்றப்பட்டிருப்பதாக கடிதம் வந்தது. அதுபற்றி கடிதங்கள் எழுதியும் பதில் வரவில்லை. அதுபற்றி அமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்தேன். பொதுப்பணித்துறை காரியதரிசி அவர்களிடமும் மனு கொடுத்தேன். அதற்கு உப காரியதரிசி, மீண்டும் அது டயரக்டர் ஆஃப் ரூரல் டெவலப்மென்டுக்கு மாற்றப்பட்டுள்ளதென்றும், அக்கவுண்டெண்ட் ஜெனரலிடம் விளக்கம் கேட்கப்படவிருக்கிறதென்றும் பதில் அளித்திருக்கிறார்கள். ஆக 1½ ஆண்டுகளாக அந்த ஓய்வு பெற்ற ஊழியருக்கு க்ராச்சுவிட்டி வந்து சேரவில்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினர் முயற்சி எடுத்தும் 1½ ஆண்டு காலமாக அது கிடைக்கவில்லை என்றால், சாதாரண மக்களுக்கு அரசாங்கத்திலிருந்து எவ்வளவு துரிதமாக காரியங்கள் நடக்கும் என்று சிந்திக்க வேண்டும். ஆகவே, மக்களிடமிருந்து வரும் கோரிக்கைகளை அல்லது சட்டமன்ற அங்கத்தினர்களிடமிருந்து வரும் கோரிக்கைகளை கவனித்து உடனுக்குடன் பதில் சொல்ல வேண்டும் என்று அரசாங்கம் பணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கே. பி. எஸ். மணி: தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கல்வி, சுகாதாரம், மருத்துவம், போலீஸ் போன்றவைகள் இதில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், உண்மையில் யார்

யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, இந்திய ரீதியில் ஒவ்வொரு அரசாங்கமும் எந்த ஒரு சமூகத்தை மேல் நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்று எண்ணுகிறதோ அந்த சமூகத்தைச் சார்ந்த மக்களை மேல் நிலைக்குக் கொண்டுவருவதற்கு எத்தகைய திட்டமும் இதில் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு சுமார் 200 ஆதித் திராவிட மாணவர்களுக்கு படிப்பதற்காக கலாசாலைகளில் இடம் கிடைத்தும், ஹாஸ்டல் வசதியில்லாத காரணத்தினால் அவர்கள் கலாசாலைகளில் படிப்பதை விட்டு விட்டார்கள். அதே நிலைதான் இந்த ஆண்டும். இந்த ஆண்டு சுமார் 250 மாணவர்கள் கலாசாலைகளில் சேர்க்கப்பட்டும் அவர்களுக்கு விடுதியில்லாததின் காரணமாக வீட்டுக்கு திரும்புவதா அல்லது படிப்பை எப்படி மேற்கொள்வது என்ற மிகப் பெரிய பிரச்னையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்நிலையை மாற்றுவது பற்றி அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொண்டபோது, அட் ஹாக் அமௌண்டாக ரூபாய் 200 கொடுக்கப்பட்டிருக்கிறது, அதைத் தவிர வேறு வழியில்லை, வேறு நிதி இல்லை என்று சொன்னார்கள். இரண்டாம் முறை சந்திக்கும் போது ஹாஸ்டல் வைப்பதற்கான முயற்சி செய்கிறோம் என்று சொன்னார்கள். சொன்னது சொன்ன நிலையில் இருக்கிறதே தவிர, அதற்கான அதிகாரிகள் எத்தகைய வேலைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை எங்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இந்நிலையில் இந்தப் பரிதாபகரமான ஆதித் திராவிட சமூக மாணவர்களைப் பார்த்து மற்ற அரசியல் தலைவர்கள் பங்கு போட்டுக்கொண்டு அந்த மாணவர்களை எந்த வழியில் இழுத்துக்கொண்டு போகலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த ஆண்டு இந்த மாணவர்களின் படிப்பு கெட்டுப்போகாமல் உடனடியாக விடுதிகளை ஆரம்பித்து இந்த 250 மாணவர்களுக்கும் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தனியார் துறையினரால் நடத்தப்படுகிற கலாசாலைகள் இருக்கின்றன. இவை மிகவும் பயங்கரமாகவும், கீழ்த்தரமான நிலையிலும் இருக்கின்றன என்று நான் தைரியமாகச் சொல்ல முடியும். சுவாமி விவேகானந்தர் அவர்களின் பெயரால் சென்னையில் ஏற்பட்டுள்ள கல்லூரியில் ஒரு ஆதி திராவிட மாணவன்கூட சேருவதற்கும், விடுதியில் சேருவதற்கும் அனுமதிக்கப்படவில்லை. அப்படி அனுமதித்திருந்த மாணவர்களைக் கூட வெளியே போ என்று அனுப்பி விட்டார்கள் என்று சொன்னால், இந்த 1968-ம் ஆண்டில் இப்படிப்பட்டதொரு கல்லூரி இந்தத் தமிழ்நாட்டில் இருக்கவேண்டுமா? அதேபோல் நாஷனல் காலேஜ் திருச்சியில், சர்க்காரால் அந்தக் கல்லூரியில் சேர்ந்து கொள் என்று உத்தரவு கொடுக்கப்பட்ட ஒரு மாணவனுக்கு அந்தக் கல்லூரி பிரின்சிபால் அவர்கள் இடம் கொடுக்க மறுக்கிறார்கள். கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். இதுபற்றி அதிகாரிகளைக் கேட்கும்போது, தனியார் துறையிலுள்ள கல்லூரிகளில் இவர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள், இவ்வளவு விகிதாசாரம்



சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்ல சர்க்காருக்கு அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள். உண்மையில் அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. அதிகாரம் இருக்கிறது. காரணம், சர்க்காரிலிருந்து அவர்கள் மானியம் பெறுகிறார்கள். அப்படி சர்க்கார் மானியத் தொகை பெறும்போது, ஏன் அவர்களை சர்க்கார் வற்புறுத்தக் கூடாது என்று கேட்கிறேன். அரசாங்கக் கல்லூரிகளில் மட்டுந்தான் தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் 16 சத விகிதம், 25 சத விகிதம் என்ற முறையில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். நான் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், பிராமணர்களால் நடத்தப்படுகிற எந்தக் கல்லூரியிலும் தாழ்த்தப் பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் 16 சதவிகிதம், 25 சத விகிதம் என்ற அளவில் சேர்க்கப்படுவதில்லை. இது கண்டிக்கத் தக்கது. ஆகவே, கல்வி அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவ மனைகள். ஒவ்வொரு தாலுகாவிலும் ஹெட் க்வார்ட்டேர்ஸ் ஆஸ்பத்திரிகளை சிறப்பான மருத்துவமனைகளாகத் திருத்தியமைக்கவேண்டுமென்ற முறையில் திட்டமிட்டும், நிதி ஒதுக்கீடு இல்லாமல் அங்குள்ள ஊழியர்களுக்கு மட்டும் சம்பளம், படி இவற்றை உயர்த்தும்படியான நிலை இருக்கிறது. எனக்கு முன் பேசிய ஒரு உறுப்பினர் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் உள்ள மருத்துவ மனைகளில் பணம் தவறாக செலவழிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஒருசில யூனியன்களில் வேண்டுமானால் அப்படியிருக்கலாமே தவிர, நல்லமுறையில், சிறப்பான முறையில்தான் அவைகள் நடைபெற்று வருகின்றன. பஞ்சாயத்து யூனியன் ஆட்சி நேர்மையாக நடக்கவேண்டுமென்றால், நன்கு நடக்கவேண்டுமென்றால் இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட வேண்டும். ஹெல்த் டிப்பார்ட்மெண்ட் என்று சொன்னால் அவர்கள் யூனியனின் நேரடி கண்ட்ரோலில் இல்லை, கல்வி இலாகா என்றால் அவர்களும் யூனியனின் நேரடி கண்ட்ரோலில் இல்லை. ஆக இந்த இரட்டை ஆட்சி முறையிருப்பதினால் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தைச் சிறப்பான முறையில் நடத்த முடியவில்லை.

அடுத்தபடியாக, இந்த பிஸிக்கல் ட்ரெய்னிங் ஆசிரியர்கள் கேட்பாரற்றுக் கிடக்கிறார்கள். இந்த பிஸிக்கல் டிரெய்னிங் இன்ஸ்ட்ரக்டேர்ஸ்-ஐ நல்லமுறையில் ஊக்குவித்து, நல்ல உடல் வலுவுள்ள மாணவர்களை நாம் தயார் செய்தால்தான் அவர்களின் பிற்காலம் நன்றாகயிருக்கும். மாநாடு ஒன்று போட்டு மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்களை அழைத்து குறைகளைச் சொல்லியிருக்கிறோம். இருபது கோரிக்கைகளில் ஒரு கோரிக்கையை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சமூக விகிதாசாரத்தை உயர்த்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவில் நிர்வாகம் பொறுத்தவரையில், தென் இந்தியாவில் விருதுநகரில்தான் சாதாரண ஏழை மக்கள் கையில் ஒரு கோவில் நிர்வாகம் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் கையில் சுமார் 20 லட்சம் ரூபாய் மதிப்புள்ள கோவில் சொத்துக்களின் நிர்வாகம் இருக்கிறது. அதையும் சமுதாய ரீதியாக நாடார்கள் தங்களுடையதாக ஆக்கிக்கொள்ளவேண்டுமென்று—நகரின் மத்தியப் பிரிவில் அவர்கள் இருக்கிறார்கள்—அந்தக் கோவில் நிர்வாகத்தை என்டோமென்ட் போர்ட் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கிளர்ச்சி உண்டு பண்ணி, அதை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கோவில் சொத்துக்களை ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி அறிவு பெறத்தக்க விதத்தில் உபயோகிக்க வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கைகள் மீது நான் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம் நாட்டிலுள்ள உணவுப் பற்றுக்குறையைப் போக்குவதற்காக அரசாங்கம் பெரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டதுபற்றி அரசாங்கத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். அதே சந்தர்ப்பத்தில் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நெல் எங்கும் போகக் கூடாது என்று தடை செய்து அங்கேயே கொள்முதல் செய்து வருவதால் தஞ்சை மாவட்டத்தில் விலை ஓரளவு நிதானமாக இருக்கிறது. சர்க்கார் நிர்ணயித்த விலைக்கு நெல்லைக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். தற்சமயம் சர்க்காருடைய கொள்முதல் முடிந்துவிட்டதால் வெளி மாவட்டத்திலிருந்து தனிப்பட்ட வியாபாரிகள் 'பர்மிட்' பெற்று, கொள்
நண் பகல் 9-30 முதல் செய்ய வருகிறார்கள். இதர மாவட்டங்களிலிருந்து தஞ்சை மாவட்டத்திற்கு வந்து கொள்முதல் செய்ய ஆரம்பித்திருப்பதால் தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யக்கூடியவர்கள் கையிலே இருப்பதை விற்று விட்டு பிறகு அதிக விலை கொடுத்து வாங்கிச் சாப்பிடக்கூடிய நிலைமையிருக்கிறது. வாங்கிச் சாப்பிடக்கூடிய நேரத்தில், அங்குள்ள விவசாயிகள், தொழிலாளிகள், கூலி வேலை செய்பவர்கள் அதிக விலை கொடுத்து அரிசி வாங்கிச் சாப்பிட வேண்டியிருப்பதால் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். விற்கும்பொழுது குறைந்த விலைக்கு விற்றுவிட்டு, வாங்கிச் சாப்பிடும்பொழுது அதிக விலை கொடுக்கும்படியான துர்ப்பாக்கியமான நிலைமை தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்றது. இன்னும் கொள்முதல் செய்ய வேண்டுமென்றால் அரசாங்கமே கொள்முதல் செய்வதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் தனியார்களுக்கு பர்மிட் வழங்குவதன் மூலம் விலையேற்றம் ஏற்பட்டு வாங்கிச் சாப்பிட முடியாத நிலையிலிருக்கிறது. எனவே தனியார்களுக்கு பர்மிட் வழங்காமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, விவசாய மக்களிடத்தில் இப்பொழுது கையில் பணமில்லை. சென்ற வருஷம் மழையில்லை, தண்ணீர்ப் பற்றுக்குறை ஆகிய காரணங்களினாலே அவர்கள் கையிலே காசில்லாத நேரம். இப்பொழுது வரிவசூல் செய்ய கடுமையான நடவடிக்கை





எடுத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் வசதி செய்து கொடுக்கிறோம். காலத்தோடு கொடுக்கிறோம், அந்த நேரத்திலே ரெவின்யூ இலாக்கா வரி வசூலைச் செய்வதால் அவர்கள் வாங்கிய கடனை வரி வசூலுக்காகக் கொடுத்துவிட்டு விவசாயத்தில் கவனம் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வருவாய் வரக்கூடிய காலத்தில் துரிதமாக நடவடிக்கை எடுத்து வசூல் செய்தால் பணத்தைக் கொடுத்துவிடுவார்கள். ஆனால், வருவாய் வராத காலத்தில், கடன் வாங்கி விவசாயம் செய்யும் நேரத்தில் வரிவசூலைத் துரிதப்படுத்துவதனால் அவர்கள் வாங்கியுள்ள கடனைக் கொடுத்துவிட்டு, சாகுபடி செய்ய வேண்டியதற்கு உரம் வாங்க முடியாமல் சாகுபடி பாதிக்கப்படுகிறது. ஆகையால் துரிதமாக வசூல் செய்வதைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன். சாதாரண வசூல் செய்வது நடக்கட்டும் வேகமாக, துரித வசூல் செய்வதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். குறுவை அறுவடை காலத்தில் வசூல் செய்தால் கையில் பணமிருக்கும், வசூல் செய்யவும் சுலபமாக இருக்கும். இவ்வாறு செய்யாததால் எங்கள் பகுதியில் சிரமமாயிருக்கிறது. ஆகவே அரசு அக்கறை எடுத்துக் கொண்டு குறுவை அறுவடை வரும் வரையில் துரித வசூலைத் தாமதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

* திரு. கோ. பூவராகன்: கனம் உதவி சபாநாயகரவர்களே, இன்று மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற துணை நிதி ஒதுக்க மசோதாவின் மீது ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். முதல் துணை நிதிநிலை அறிக்கை இப்பொழுது வந்திருக்கிறது. மிக அவசரமாக, மிக முக்கியமாக, நான்கு மாதங்களுக்குள்ளாக தவிர்க்க முடியாத காரியங்கள் ஏற்பட்டு அந்தக் காரணங்களாலே இந்த நிதியை ஒதுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதா என்று இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்தோமானால், ஒரு காரியத்தைத் தவிர மற்றவை நடந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்த்த வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஒரு வேளை இது சம்பந்தமாக மத்திய சர்க்காருடன் பேசி, இந்த நிதியை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பேசி, அவர்கள் ஒத்துக்கொண்ட பிறகு இப்பொழுது இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலே வந்திருக்குமென்று எண்ணுகிறேன், அதனால்தான் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சேர்க்கப்படாமல் இது துணை மதிப்பீட்டிலே வந்திருக்கும் என்று கருதுகிறேன். எப்படியிருந்தபோதிலும் வரிசையாக 40, 47 தலைப்புகளுக்குக் கீழே நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். இம்மாதிரி இடைக்கால நிதி ஒதுக்குவது சகஜம்தான். அதை மறுக்கவில்லை. ஆனால் இந்த நிதி ஒதுக்கப்பட்டிருப்பது அவசியத்தின் பாற்பட்டு ஒதுக்கப்பட்டிருக்கிறதா? இந்த நான்கு மாத காலத்திற்குள் தவிர்க்க முடியாத காரியங்கள் ஏற்பட்டு அதனால் இந்த நிதியை ஒதுக்குகிறோம் என்று சொன்னால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். அப்படிப்பட்ட காரியம் என்ன

நடந்திருக்கிறது? நேற்றுகூட முதலமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள், படம் எடுக்கவேண்டும், நல்ல படங்களைத் தயாரிப்பவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும், அதற்காக ஒதுக்குகிறோம் என்று சொன்னார்கள். இது தவிர்க்க முடியாத காரியமா என்றால் இல்லை. நல்ல நோக்கத்திற்காகத்தான் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த நோக்கம் நல்ல நோக்கமா அல்லது இல்லையா என்பதல்ல பிரச்சினை. ஆனால், இது ஆண்டு மதிப்பீட்டிலே வராமல் மிக அவசரம் அவசரமாக இப்பொழுது வந்திருக்க வேண்டியது அவசியமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நிதிநிலையிலே மிகவும் நெருக்கடி இருக்கிறது என்பதை அறிவோம். இந்த இரண்டு காரியங்களும் முக்கியமாக இருந்தாலும் இவைகள் முதல் நிதிநிலை அறிக்கையிலே வந்திருக்கலாம், இல்லையென்றால் அடுத்த ஆண்டு வரக்கூடிய ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சேர்ந்திருக்கலாம். அப்படியில்லாமல் இப்பொழுது அவசரம் அவசரமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். இவைகள் வேண்டுமென்று சொல்லுகின்றபொழுது, இன்னும் பல காரியங்கள் இருக்கின்றனவே, அவைகளை ஏன் விட்டு விட்டார்கள் என்று கேட்கத் தோன்றுகிறது.

சில மாவட்டங்களில் மழையில்லாத காரணத்தால் பஞ்ச நிலை ஏற்பட்டு ஆங்காங்கு விவசாயக் காரியங்கள் தடைபட்டுக் கிடக்கின்றன. அப்படிப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல், குளிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் இருக்கிறார்கள். அங்குள்ள ஆடு, மாடுகளுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை. அங்குள்ள மக்களுக்கு விவசாயப் பண்டங்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. உணவுப் பண்டங்களை வாங்க முடியாமல் விவசாயக் கூலிகளின் நிலைமை சிரமமாயிருக்கிறது. அப்படிக் காரியங்களுக்கு இதிலே இடம் இருக்கிறதா என்றால் கிடையாது. இந்த 3, 4 மாதங்களிலே அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை உணர்ந்திருப்பார்களேயானால் வரிவஜா செய்வது, பஞ்ச நிவாரண வேலைகளுக்கு என்று நிதியை ஒதுக்கி இலட்சக்கணக்கான விவசாயக் கூலிகளுக்கு வேலை கொடுப்பது போன்ற இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டு இருக்க வேண்டும். அப்படி ஈடுபட்டிருக்கிறது என்றால் அதை நாங்கள் வரவேற்கத் தயார். ஆனால் இப்படிப்பட்ட காரியங்களிலேயெல்லாம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. இன்றைய தினம் பார்க்கிறோம். இருபது, 24 மில்களுக்குமேல் மூடப்பட்டிருக்கின்றன. அவைகள் திறக்கப்படவில்லை. இதுசம்பந்தமாக இடைக்கால நிவாரணம் கொடுக்கிறோம் என்று திருச்சியிலே தொழிலாளிகளைச் சந்தித்து வாக்குறுதி கொடுத்தார்கள். மாதத்திற்கு முடிந்த அளவு பண உதவி கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படிச் சில காலம் கொடுத்தார்கள், பிறகு நிறுத்தி விட்டார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வரையிலும் தொழிலாளிகளுக்கு உதவி கொடுக்க இவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்று சொன்னால் அதை வரவேற்கிறோம்.





அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் கஷ்டமான நிலைமையிலிருக்கின்றன. அவர்களுக்குப் பஞ்ச நிவாரணம் அளித்து, தற்காலிகமாக ஏதாவது உதவியளிக்க வேண்டுமென்று இதில் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. இப்படிப்பட்ட காரியங்களுக்காக, கஷ்டமான நிலையிலே உள்ள காரியங்களுக்காகத் துணை மதிப்பீடு வரும் என்றால் அதை வரவேற்கத் தயார், அதற்கு ஆதரவு அளிக்கத் தயார். ஆனால் அவ்வாறு ஒதுக்கப்படவில்லை.

விவசாயிகள் மழையில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மூவாயிரம் கிணறுகள் வெட்டுவதற்கு மூன்றாண்டுத் திட்டத்திற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கிணறு தோண்டும் காலம் போய்விட்டது. இந்தப் பணத்தை ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கி ஏப்ரல், மே மாதங்களில் அந்தக் காரியங்களைச் செய்யும்படி செய்திருக்கக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். இப்பொழுது ஏன் கொடுத்தீர்கள் என்றோ, அப்படிக் கொடுத்தது தவறு என்றோ சொல்லவில்லை. இதை முன்னாலேயே திட்டமிட்டுச் செய்திருக்க வேண்டும் அந்த நல்ல காரியங்களுக்கு. இப்படிப்பட்ட விஷயங்கள் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே வராமல் துணை மதிப்பீட்டில் வருகிறது என்றால் அது வருத்தமாகயிருக்கிறது என்று முதலமைச்சரவர்களிடத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பல காரியங்கள் இன்னும் நடக்க வேண்டியிருக்கின்றன. நேற்று கூடச் சொன்னார்கள், கவனத்திலே ஏற்றுக்கொண்டு செய்வதாக. அதைப் பற்றிக் கேட்கும்பொழுது ஏதாவது பதிலைச் சொல்லிவிட வேண்டுமென்ற முறையை வைத்துக்கொண்டிருந்தால், அது சீராக நடைபெறாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

போலீஸ் நிர்வாகத்தைப்பற்றி எல்லோரும் சொன்னார்கள். இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரவர்களும் ஆங்காங்கு எப்படி நடக்கிறது என்பதைப்பற்றிச் சொன்னார்கள். எந்தக் காரியங்களுக்காக அந்தச் செயல்கள் நடக்கின்றன என்று பார்க்க வேண்டும். இதைக்கேட்டால், இதற்கு முன்னால் நடக்கவில்லையா, அதற்கு முன்னால் நடக்கவில்லையா, அந்த ராஜ்யத்திலே நடக்கவில்லையா என்று சொல்வது என்றால் அது பொருத்தமாக இருக்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உடையார் பாளையம் சம்பவத்தைப் பொறுத்தவரையில் அது நீதிபதி விசாரணையில் இருக்கிறது. ஆனால், அந்தக் காரியம் எதனாலே ஏற்பட்டது என்பது பற்றி முதலமைச்சரவர்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். முதலமைச்சரவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களை அண்ணாமலைநகரில் சந்தித்தார்கள். அப்பொழுது முதலமைச்சரவர்கள் கூறியதைக் கேட்டு அவர்கள் திருப்தியுடன் சென்றார்கள். அப்பொழுது பிரச்சினை முடிந்து விட்டதாகக் கருதப்பட்டது. பிறகு திரும்பவும் எதனால் அந்தப் பிரிவினைப் பிரச்சினை வருகிறது,

[திரு. கோ. பூவராகன்] [1968 ஆகஸ்ட் 20

அதற்கான அடிப்படைக் காரணம் என்ன, என்று பார்க்க வேண்டும். காரணம் யார் என்பதைப்பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குக் காரணம், அங்கு தி.மு.க. வட்டச் செயலாளர் தேர்தல் நடந்த பொழுது, தேர்தல் அதிகாரியாய்ச் சென்றவர்கள் இந்தப் பெயரிலே இருப்பவர்களின் ஓட்டுகள் செல்லாது என்று சொல்லிவிட்டதால் அந்தத் தகராறு ஏற்பட்டது என்று சொல்கிறார்கள். அப்படியிருந்தால் அதை முதலமைச்சரவர்கள் பரிசீலனை செய்து, அதற்குக் காரணம் யார் யார் என்று கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** விசாரணை நடக்கின்ற நேரத்தில் ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்கள் காரணமாக இருக்கலாம் என்ற விவரத்தை சொல்லுவதன் மூலம் அந்த கட்சிக்காரர்கள் மீது பழி சுமத்துகின்ற நிலைமைக்கு அது போய்விடும் என்று நான் அஞ்சுகிறேன். தயவு செய்து அதுபற்றி பேசுவது நல்லதல்ல.

**திரு. கோ. பூவராகன்:** நான் சொல்வது இந்த விசாரணைக்குக் கூட உதவியாக இருக்கும். அதற்காக நான் சொன்னேன்.

வட சென்னையிலே ஒரு போலீஸ் நிலையத்திலே சில தினங்களுக்கு முன்பு ஒருவரை அழைத்து வந்து போலீஸ்காரர்கள் அடித்ததனாலும், பூட்ஸ் கால்களால் அடித்ததனாலும் அந்தத் தொழிலாளி இறந்துவிட்ட அந்தச் செய்தி அந்தப் பகுதியிலே பெரிய பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. விசாரணை செய்து அதற்கு தக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார்கள். அவ்வப்பொழுது முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே உறுதி கொடுக்கிறார்கள். இதையெல்லாம் செய்யத் தயாராக இருக்கிறோம் என்று அந்த உறுதியிலே நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம். அவர்கள் என்ன என்ன செய்திருக்கிறார்கள் என்பதை, இப்படிப்பட்ட காரியங்கள் நடந்திருக்கின்றன என்று இந்த மன்றத்திலே ஓரளவுக்குச் சொன்னால் மன்றத்திலே அமர்ந்திருக்கிற உறுப்பினர்களுக்கு ஒரு திருப்தி அளிக்கக் கூடியதாக இருக்கும். அதை இது வரையில் செய்யவில்லை. அதைச் செய்ய வேண்டுமென்று நான் அவர்களைத் தாழ்மையாக கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும், இது போன்ற பல விஷயங்களை நாம் சொல்ல முடியாமல் இருக்க முடியவில்லை. கூட்டுறவு சங்கங்களில் ஒரு பொது நிதி, காமன் குட் ஃபண்ட் இருக்கிறது. எவ்வளவு தொகை கொடுக்க அவசியம் இருந்தாலும், ஜெனரல் ஃபண்டிலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அது எப்படி இந்த மாநிலம் முழுமைக்கும் அந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளலாம்? அங்கே டெப்புடி ரிஜிஸ்ட்ரார் இன்னும் அது சம்பந்தப்பட்டவர்களுடைய உதவியுடன் அது ஜெனரல் ஃபண்டிலிருந்தும் காமன் குட் ஃபண்டிலிருந்தும் எடுக்கப்பட்டிருக்கிறது. மாநிலம் முழுமைக்கும் இந்தப் பணத்தைப் பெற்று, ஒரு திட்டத்திற்கு இவ்வளவு பணத்தை நீங்கள்



1968 ஆகஸ்ட் 20] [திரு. கோ. பூவராகன்]

செலவு செய்ய வேண்டுமென்று தலைமைச் செயலகத்திலிருந்து செய்தி போகும் என்று சொன்னால், அதைப் பகிர்ந்து இந்த காரியங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதை வரவேற்கிறேன். அது கூட தவறுதான்; ஏனென்றால், ஜெனரல் ஃபண்டிலிருந்து என்றால் அது சரியாக இருக்க முடியாது. ஒரு ஊரிலே அமைச்சர் சொந்த முயற்சியிலே, அதுவும் அவர் பொறுப்பிலே இருந்து அவர் இஷ்டத்திற்கு ஒரு உத்தரவைப் போட்டு அந்த காரியங்கள் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அமைச்சராக இருந்தவர், கொஞ்சம் பொறுப்போடு பேசினால் நன்றாக இருக்கும். அமைச்சர் உத்தரவு போட்டார் என்றால், எந்த அமைச்சர், எப்பொழுது போட்ட உத்தரவு, அது எந்த சொஸைட்டியிலிருந்து கொடுத்த உத்தரவு போன்ற தகவல்களைச் சொன்னால் விசாரணை நடத்துவதற்கு உதவும்.

**திரு. கோ. பூவராகன்:** விசாரணை நடத்துவதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். கூட்டுறவு இலாகாவிலிருந்து போட்டார்கள் என்றால் அமைச்சரே போடுவதில்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** முதலில் அமைச்சர் போட்டார்கள் என்று இப்பொழுது சொன்னியே.

**திரு. கோ. பூவராகன்:** சொன்னியே நீ என்று சொல்கிறார் என்றால் இதுதான் சபையில் பேசுகின்ற பேச்சா? அல்லது வேறு இடத்தில் பேசுகின்ற பேச்சா? அமைச்சர் ஒருவர் இப்படிப் பேசலாமா?

(பல காங்கிரஸ் உறுப்பினர்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுந்தார்கள்.)

THIRU J. JAMES: Sir, the Hon. Minister must withdraw that word.

**திரு. கோ. பூவராகன்:** உங்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமை எங்களுக்கும் இருக்கிறது. நீங்கள் எப்படிப் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறீர்களோ அப்படியே நாங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோம். எல்லாம் அங்கே கிராமத்திலே, வெளியிலே போய் பேசுகின்ற பேச்சு. சட்டசபையிலே இருந்து பேசுகின்ற பேச்சு அல்ல. அமைச்சராக இருந்து கொண்டு இப்படிப் பேசுவது அவ்வளவு பொருத்தம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுது நம்முடைய தமிழ்நாட்டிலே பல பகுதிகளிலே இருக்கிற மக்கள் பேசுகின்ற நேரத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு சொல்லை ஒவ்வொரு விதமாக வழங்குகிறார்கள். வழங்குகின்ற நேரத்தில் சில சொற்கள், அவர்கள் உண்மையிலேயே மரியாதையுள்ள சொற்களாக நினைத்துக்கொண்டு பேசுகின்ற சொற்கள், சில இடங்களில் மரியாதைக் குறைவாகத் தோன்றும். அந்த முறையிலே

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்] [1968 ஆகஸ்ட் 20

"சொன்னியே" (மாண்புமிகு திரு. செ. மாதவன் குறுக்கிடு) என்ற அந்தச் சொல் இராமநாதபுரம் போன்ற சில மாவட்டங்களிலிருந்து வருகின்றவர்கள் பேசுகின்ற நேரத்தில் நமக்குக் கொஞ்சம் முரண்பாடாகத்தான் தோன்றும். பல இடங்களில் அப்படிப்பட்ட நிலை இருக்கும். அதைப் பொருட்படுத்த வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன்:** இதனாலே, இப்படிப்பட்ட காரியங்கள் இந்தக் கூட்டுறவுத் துறையிலே நடக்கின்றன என்பதை மட்டும் நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நல்ல விசாரணை . . .

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** 'சொன்னியே' என்பது அன்பார்லிமெண்டரி வேர்டா என்று நீங்கள் சொல்ல வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைச் சொல்லியாகி விட்டது.

**திரு. கோ. பூவராகன்:** அடுத்து, நமது சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. ஆதிமூலம் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்து யூனியன் கூட்டு மன்றங்களிலிருந்த நிதிகளெல்லாம் பல காரியங்களுக்கு மாற்றப்படுகின்றன என்று சொன்னார்கள். ஏற்கனவே, என்னென்ன காரியங்களுக்கு மாற்றலாம் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. என்னென்ன காரியங்களுக்கு அந்தப் பொது நிதியை எடுத்து உபயோகப்படுத்துவது, எப்படிப்பட்ட காரியங்களுக்கு உபயோகப்படுத்துவது என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால், இன்றைய தினம் பஞ்சாயத்து யூனியன் நிதியைப் பல காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். சீரணி நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஒவ்வொரு மன்றத்திடமிருந்தும், ஒவ்வொரு பஞ்சாயத்து மன்றத்திடமிருந்தும் ரூபாய் 100, ரூபாய் 200 கேட்டிருக்கிறார்கள். அதற்கு விதிமுறை போட்டிருக்கிறார்களா என்பது தெரியாது. என்னுடைய விருத்தாசலம் டிவிஷனை எடுத்துக் கொண்டாலும் பஞ்சாயத்துக்களிடமிருந்தும், பஞ்சாயத்து கூட்டு மன்றங்களிடமிருந்தும் கலை நிகழ்ச்சிகளுக்கும் இது போன்ற காரியங்களுக்கும் ரூபாய் 500, 1,000, 5,000 என்று மாற்றியிருக்கிறார்கள். ஆனால், சாலை போடுவதற்கு, கிணறு வெட்டுவதற்குப் போன்றவற்றிற்குப் பணம் இல்லை. பஞ்சாயத்துக்களிடம் பணம் இருந்தால், பரவாயில்லை; பஞ்சாயத்துக்களுக்குப் பணம் மிகமிகக் குறைவு என்பது நமக்குத் தெரியும். அதற்கு அங்கங்கே மாற்றிவிடலாம் என்று சொன்னாலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களோ, கோட்டாட்சித் தலைவர்களோ, கமிஷனர் அவர்களோ அதிகாரம் கொடுத்து, இந்தப் பணத்தை இப்படி வாங்கிக் கொடுங்கள் என்று சொன்னால் அது சரியாக இருக்க முடியாது. அதோடு, நிதி வசூல் என்ற பெயரிலே பல மோசடிகள் இன்றையதினம் நடக்கின்றதை முதலமைச்சர் அவர்கள் கண்காணிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். நிதி என்றால், யார் வசூலிப்பது, எப்படிப்பட்டவர்கள் வசூலிப்பது,



1968 ஆகஸ்ட் 20] [திரு. கோ. பூவராகன்]

அரசாங்கம் அனுமதி பெற்றவர்களா, வசூலித்த பணத்தை எங்கே கட்டுவது என்று அவர்கள் இதை கண்காணிக்க வேண்டும். ஆங்காங்கு குழுக்கள் வைத்திருக்கிறார்கள், கலா நிகழ்ச்சி நடக்கிறது, நாடகம் நடக்கிறது என்று நோட்டீஸ் அடித்து விடுகிறார்கள். அதிகாரிகளுடைய கண்காணிப்பின் பேரிலே வசூல் செய்யப்படுகிறது. யார் இதற்குப் பொறுப்பு? என்னுடைய பகுதியில் ஆர்.டி.ஓ. அவர்களே ஒரு நோட்டீஸ் அடித்திருக்கிறார்கள். ஸீல் வைத்திருக்கிறார்கள். இந்தக் குழுக்களிலே உள்ளவர்கள் வேறு வசூல் செய்கிறார்கள். இந்தப் பணத்திற்கு என்ன கணக்கு என்று சொன்னால், 2 இலட்சம் 3 இலட்சம் வசூல் நடக்கிறது; கடைசியில் 90,000 அல்லது ஒரு இலட்சத்திற்குக் குறைவாக வசூல் ஆயிற்று என்று சொன்னால் மீதிப் பணம் எங்கே என்று தெரிவதில்லை. ஆகவே, இதற்கு ஒரு வழிவகை காண வேண்டும். பொதுக் காரியங்களுக்கு வசூல் செய்வது என்று சொன்னால், தலைமைச் செயலகத்திலிருந்து உத்திரவு போக வேண்டும். அதற்கு ஒரு முறை வைத்துக் கொள்ள வேண்டும். இன்ன இடத்திலே இந்த வசூல் செய்யப்பட வேண்டும். இப்படிப்பட்ட காரியங்களுக்கு அதைப் பயன்படுத்த வேண்டுமென்று ஒரு ஒழுங்குபடுத்திக் கொண்டால் நல்ல முறையிலே இருக்குமென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற முறை நமது நிதிநிலை அறிக்கையில் விருத்தாசலத்தில் ஒரு கல்லூரி ஏற்படுத்துவதற்காக 5 இலட்ச ரூபாய் வேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் கல்லூரியில் பட்டப் படிப்பு வேண்டுமென்று கேட்டபோது துவக்கப்படப் போவதாகச் சொல்லப்பட்டது. அதற்கு 5 இலட்சமும் வசூல் செய்யப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு இந்த ஆண்டு கல்லூரியில் பட்டப்படிப்பு துவக்கப்படவே இல்லை. அங்கே இப்படிப்பட்ட காரியத்திற்கு எதற்காக வசூல் செய்தார்கள்? கமிட்டி கூட்டம் நடந்தது. இன்னும் பல காரியங்கள் நடந்தன. விசாரணை செய்து பார்த்தால் அந்த வசூல் எங்கு இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அதைச் செய்யவில்லை. அதாவது கல்லூரி திறக்கவில்லை. அதற்கு மாறாக சின்ன சின்ன கிராமங்களிலே 2 மைல், 3 மைல் தூரம் நடந்து சென்று பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்தார்கள். அந்த கிராமங்களிலேயும், 2, 3 கிராமங்களிலே நடந்து கொண்டிருந்த பள்ளியை மூடியிருக்கிறார்கள். என்ன நோக்கத்தோடு மூடினார்களோ தெரியாது. நாங்கள் வந்தால் பள்ளிக்கூடங்களை மூடமாட்டோம் என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது மூடியதன் காரணமாக 2 மைல், 3 மைல் தூரம் நடந்து சென்று படித்துக் கொண்டிருந்த குழந்தைகள் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதை நாம் பார்க்கிறோம்.

மற்றும், நம்முடைய கே. பி. எஸ். மணி அவர்கள் சொன்னார்கள், தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மாணவர்களுக்குத் தொழில் கல்லூரி, விவசாயக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, இவைகளிலே போதிய இடம் அளிக்கப்படவில்லையென்று. இது பரவலாக

[திரு. கோ. பூவராகன்] [1968 ஆகஸ்ட் 20

இருக்கிற குற்றச்சாட்டு. இது உண்மையிலே அவ்வாறு நடக்கின்றது என்பது தெள்ளத் தெளிவு. ஓராண்டு தவறிவிட்டால், அவர்கள் படிப்பு போய்விட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழ் படிக்கும் மாணவர்கள் எல்லோருமே விரும்பி அதைக் கேட்கிறார்கள் என்று கல்வி அமைச்சர் அவர்கள் நேற்று சொன்னார்கள். கல்லூரிகளில் ஆங்கிலப் பயிற்சியில் சேர சிபாரிசு கொடுத்தால்தான் இடம் கிடைக்கிறது. மதிப்பெண்கள் வாங்கியவர்களுக்கு இடம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறதா என்றால் இல்லை. சிபாரிசு இருக்கின்றவர்களுக்கு, மிக வேண்டியவர்களுக்கு, இவர்களுக்குத்தான் இடம் கிடைக்கும் என்று சொன்னால் சமுதாயத்திலே யார் யார் படிக்க வேண்டுமென்று பல திட்டங்களைப் போட்டு கல்விக் கொள்கையை வகுத்திருக்கிறோமோ அவர்கள் படிப்பதற்கு இடம் கிடைக்கவில்லை என்று சொன்னால் அதற்கு ஒரு வழிவகை காண வேண்டும்.

தமிழ் பயிற்சி மொழி, ஆங்கிலப் பயிற்சி மொழி என்று வைத்திருக்கிறோம். இதில்தான் இடம் இருக்கிறது என்று சொல்லி தமிழ் பயிற்சி மொழியில் சேர்க்கிறார்கள். மற்றவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி தாராளமாக இருக்கிறது. ஆரம்பத்திலே கொள்கை வகுக்கின்றபொழுது தனியார் கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழி இல்லை; அரசினர் கல்லூரிகளில்தான் தமிழ் என்று வைத்தோம். பொதுவாக, பின்தங்கிய மாணவர்கள் அரசாங்கக் கல்லூரிகளில்தான் சேருகிறார்கள். தனிப்பட்டவர்கள் கல்லூரிகளிலே அவர்களுக்கு இடம் கிடைப்பது மிகவும் சிரமம். ஆகவே, தனியார் கல்லூரியாக இருந்தாலும் தனிப்பட்டவர் கல்லூரியாக இருந்தாலும் புகுமுக வகுப்பில் தமிழில் தொடங்கப்பட வேண்டும் என்ற நியதியை வைத்துக் கொண்டால் இந்த சிரமம் ஏற்பட்டு இருப்பதற்கு சந்தர்ப்பம் இருந்திருக்க முடியாது. அதை நாம் செய்யாத காரணத்தினால் இன்றைய தினம் அப்படிப்பட்ட மாணவர்களுக்கு மிக சிரமங்கள், கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சிரமங்கள், கஷ்டங்கள் இருப்பதை ஓரளவாவது நிவர்த்திப்பதற்கு முதல் அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டார்களா என்றால் இல்லை. நான்கு, ஐந்து மாதங்களுக்குள்ளே துணை மதிப்பீடு வந்திருக்கிறது. துணை மதிப்பீட்டில் பேசுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. ஆங்காங்கு இருக்கிற நிலைமைகளை அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குடிப்பதற்குப் பல இடங்களில் தண்ணீர் இல்லை. ஆடு, மாடுகளுக்குக் கூட தண்ணீர் கிடையாது. முன்பெல்லாம் அங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சித் தலைவர் ஆகியோர் எவ்வாறு தண்ணீர் இல்லாத நிலைமையைப் போக்குவது என்பது குறித்து முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே நெய்வேலிப் பகுதியில் குழாய்க் கிணறுகள் போட்டிருக்கிறார்கள். அந்தக் குழாய்க் கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைத்து, குளங் குட்டைகளில் தண்ணீரைத் தேக்கிக் குளிப்பதற்கும், ஆடு மாடுகள் குடிப்பதற்கும்கூட உபயோகப்படுத்துவது வழக்கம்.



1968 ஆகஸ்ட் 20] [திரு. கோ. பூவராகன்]

அந்த மாதிரி முயற்சி பல தடவை அனுசியும் இதுவரையில் அங்கு செய்து கொடுத்ததாகத் தெரியவில்லை. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பல இடங்களில் பல கிணறுகளில், விவசாயக் கிணறுகளில் தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லாததினால், கடலை, கரும்பு போன்ற விவசாயம் பாதிக்கப்படுகிறது. இந்த பாதிப்புக்கு ஒருவாறு நிவாரணம் அளிக்க வேண்டும். மற்ற மாவட்டங்களிலும் இதுமாதிரி நிலை இருப்பதுபற்றி மற்ற உறுப்பினர்களும் இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். அதை உணவு அமைச்சர் அவர்கள்கூட காலையிலே ஒத்துக் கொண்டார்கள். 'இந்த நிலை பரவலாக எல்லா இடங்களிலும் இருக்கிறது என்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம். அதற்கு ஏதாவது ஒரு பரிகாரம் காணவேண்டும்' என்று அவர்கள் சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்களும் இதை உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, இதற்குத் தக்க முறையில் பரிகாரம் தேட வேண்டுமென்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிற் பயிற்சி பள்ளிகளுக்கு மேலும் கருவிகள் வாங்குவதற்காக இங்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. சென்ற தடவை இந்தப் பள்ளிகளில் சேருவதற்கு இருந்த வேகம், விறுவிறுப்பு இந்தத் தடவை மாணவர்களிடத்தில் இல்லை. எத்தனை மாணவர்களுக்கு இடம் இருக்கின்றதோ ஏறக்குறைய அத்தனை மாணவர்களுக்கு குறைவாகத்தான் விண்ணப்பித்திருக்கிறார்கள். இந்தப் பள்ளிகளில் சேருவதற்கு மாணவர்களிடையே தயக்கம் ஏற்பட்டிருக்கிறது. பள்ளியில் பயிற்சி பெற்ற பிறகு இவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. ஓரிரண்டு ஆண்டுகள் படித்து, பயிற்சி பெற்றுவிட்ட பிறகு, அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாவிட்டால் என்ன செய்வது என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதால்தான், ஆங்காங்கு மாணவர்கள் சேருவதற்குத் தயங்குகிறார்கள். அங்கங்கே பள்ளிகளில் படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை, இருக்கிற நிலைமை இதையெல்லாம் பார்க்கிறபொழுது, புதியதாக கருவிகள் வாங்க வேண்டியதுதான். ஆனால் இந்தக் கருவிகள் சில இடங்களில் முழுக்க முழுக்க பயன்படுத்தப்படாத நிலை இருக்கிறது. அப்படிப் பயன்படுத்தப்படாத காரணம் என்னவென்று அறிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் தேடிக் கொடுப்பதற்குப் புதிய முயற்சிகளில் ஈடுபட்டாகவேண்டும். படித்துப், பயிற்சி பெறுவதில் பிரயோசனமில்லை, வேலை வாய்ப்பு இல்லாவிட்டால், அவைகளில் சேருவதற்கு மாணவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். இந்த நிலைமையைப் போக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

துணை மதிப்பீடுகள் வரும்பொழுது, அவசியமான பிரச்னைகளை விட்டுவிட்டு, ஏதோ ஒரு சில பிரச்னைகளை மட்டும் சேர்க்க வேண்டும் என்பதற்காக காரியம் ஆற்றினால் அது பொருத்தமாகாது. மக்களுடைய கஷ்டங்களை, சிரமங்களைப் போக்கக்கூடிய அவசியமான பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு, அவற்றிற்குத் துணை மதிப்பீட்டில் முதல் இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு காரியத்தைப்பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். சாலை ஓரங்களில் இருக்கிற மரங்களையெல்லாம் வெட்டுகிறார்கள். மரங்களை வெட்டுவது என்று சொன்னால், ஏதோ லாரிகள், பஸ்கள் போவதற்குத் தடையாக இருந்தால், அப்படியிருக்கும் சிறிய கிளைகளைமட்டும் அப்புறப்படுத்துவது வழக்கம். ஆனால் இன்றைய தினம் நான் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பல சாலைகளில் மரங்களையே வெட்டியிருக்கிறார்கள். தயவுசெய்து முதல் அமைச்சர் அவர்கள் அங்கு போய்ப் பார்க்க வேண்டும். அவர் சரியென்று சொன்னால் ஒத்துக் கொள்கிறேன். மனச் சாட்சி உள்ளவர்கள் யாரும் அதை ஒத்துக் கொள்ள மட்டார்கள். மரங்கள் வளர்வது எவ்வளவு கஷ்டம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** லாரிகள், பஸ்கள் ஓட்டுவதற்கு தடையாக இருக்கும் கிளைகளை மட்டும் வெட்ட வேண்டும் என்று சொல்லியிருந்தும், சில இடங்களில் கண்டிராக்டர்கள் தவறாக வெட்டியிருப்பதை நானே நேரிடையாக கண்டு கண்காணித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் பார்த்தாலும் சரி, எந்த அமைச்சர் அவர்கள் பார்த்தாலும் சரி, மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கவேண்டுமென்பதுதான் நிலை. சில இடங்களில் தவறுதலாக உத்தரவை சரியாக கவனிக்காமல், தவறுதலாக இந்த உத்தரவைப் பயன்படுத்திக்கொண்டு மரங்கள் வெட்டப்பட்டிருப்பதை கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன்:** தவறுதலாக ஏதோ ஒரு சில இடங்களில் வெட்டப்பட்டால் பரவாயில்லை. ஆனால், இங்கிருந்து 30 மைல், 65 மைல், 75 மைல் தூரத்திற்கு எவ்வாறு இப்படி மரங்கள் வெட்டப்படுகின்றன? என்னுடைய மாவட்டத்தில் மட்டுமல்ல, வட ஆர்க்காடு மாவட்டத்திலும் இந்த நிலைமை நிலவுகிறது. மரங்களை வைத்துப் பயிர் செய்தவர்கள் என்ன நினைப்பார்கள்? முதல் அமைச்சர் அவர்கள் நேரில் போய்ப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு பகுதியை வெட்டிவிட்டு, மற்ற பகுதியை அப்படியே காற்றுக்கும், மழைக்கும் விட்டுவிடுகிறார்கள். அது எவ்வளவு அபாயகரம் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அதுவும் எல்லாம் புளிய மரங்கள், நல்ல நல்ல மரங்கள். மரங்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதுபோக, இப்படி மரங்களை வெட்டி வீழ்த்தினால், அது எந்த அளவுக்கு நியாயமானது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ‘சில இடங்களில் தவறுதலாக வெட்டியிருக்கிறார்கள், அதைப் பார்த்து நான் கண்டுபிடித்திருக்கிறேன்’ என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பார்த்தால் தெரியும். மரங்கள் வெட்டுவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. முதல் அமைச்சர் அவர்கள்கூட இதைப் பார்த்தால் நலமாக





இருக்கும் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட நிலைமையைத் தோற்றுவித்த அதிகாரி யாராக இருந்தாலும் சரி, அவர் பேரில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். எப்படிப்பட்ட காரியம் நடந்திருக்கிறது? இப்படி சாலை ஓரங்களில் மரங்கள் வெட்டுவதை கட்டாயமாக தடுக்கவேண்டும். நான் ஒரு திருமணத்திற்குச் சென்று திரும்பி வரும்போதுகூட பார்த்தேன். மரங்களை வெட்டி குவித்துக்கொண்டு போகிறார்கள். இன்னும் அந்த உத்தரவு மாற்றப்படவில்லை, யார் மாற்றி உத்தரவு போட்டார்கள் என்று அவர்கள் விரட்டுகிறார்கள். ஆகவே, இப்படி நடப்பது சரியான முறையல்ல, இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறாமல் தடுத்து நிறுத்தவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டு, தெளிவாக ஒரு குற்றச்சாட்டு சொன்னார்கள். ஒரு அமைச்சர் தன்னுடைய இலாகாவுக்கு உத்தரவு போட்டு, அதன் மூலம் பணம் வசூல் செய்வதாக அவர்கள் சொன்னார்கள். அவர் முன்னாள் அமைச்சர்; அப்படி அவர் சொல்வது உண்மையாக இருக்குமானால் எந்த அமைச்சர் எந்த உத்தரவு போட்டார், எந்த தேதியில் எந்த இலாகா சம்பந்தப்பட்டது என்று திட்டவட்டமாக தகவல் தந்தால், விசாரணை நடத்துவதற்கு பயனுள்ளதாக இருக்கும். எப்படியாவது குற்றம் சாட்ட வேண்டும் என்ற முறையில் சொல்லக்கூடாது. இது சட்டபூர்வமாக போடப்பட்ட உத்தரவா, இல்லையா என்பதைப்பற்றியெல்லாம் விசாரணை நடத்துவதற்கு போதுமான தகவல்களை உறுப்பினர் அவர்கள் தர வேண்டும். எந்தக் கமிட்டியில் ஏற்பட்டது, யார் பணத்தை யார் மோசடி செய்தார்கள் என்பதைப்பற்றியெல்லாம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு வரும்பொழுது பேசிக் கொள்ளலாம். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற காரணத்தினால், விவரங்களைத் தெளிவாகச் சொல்லவேண்டும். தெளிவில்லை என்றால், நம்முடைய விதிமுறைப்படி, குறிப்பிட்டு ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால், அதற்கு அந்த அங்கத்தினர் பொறுப்பு ஏற்க வேண்டும். இதில் உறுப்பினர் அவர்களுடைய பொறுப்பு என்ன? பொறுப்பு இல்லாமல் சொல்லிவிட்டார்கள் என்றால் நான் ஒத்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன்:** கூட்டுறவுத் துறை யார் பொறுப்பில் இருக்கிறதோ அந்த அமைச்சர்தான் இதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும். கூட்டுறவுத் துறையிலேதான் இந்தக் காரியம் நடந்திருக்கிறது. அந்த உத்தரவின் நகல் கூட இங்கே இருக்கிறது. அதைச் சபாநாயகர் அவர்களிடம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். கூட்டுறவு டெப்டி ரிஜிஸ்டிரார் (கிரெடிட்) திரு. கணேசன் அவர்களிடமிருந்து அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருக்கு அனுப்பப்பட்ட உத்தரவின் நகலைப் படிக்கிறேன். சிங்கம்புணரி, அமைச்சர் அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்தது, அவர் மாவட்டத்தைச் சேர்ந்தது. அதை அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

[திரு. கோ. பூவராகன்] [1968 ஆகஸ்ட் 20

*R.C. No. 8834 of 1968 L. II. dated 17th June 1968.*

*Subject.*—Co-operative Societies—Utilisation of Common Good Fund towards donation for the construction of additional blocks of Government Hospital at Singampunari, Ramanathapuram district.—Regarding.

Under Rule 46, Sub-rule 7 of the Madras Co-operative Societies Rules the amount available in Common Good Fund can be utilised for any objects specified in Section 2 of the Charitable Endowments Act, 1890 (Central Act VI of 1890), such as medical relief, sanitation, etc. The Singampunari Government Hospital at Singampunari in Ramanathapuram district proposes to construct additional blocks for its use and for this purpose it has arranged a benefit dance performance by Selvi. Jayalalitha of cine fame under the Presidentship of Thiru M. G. Ramachandran, M.L.A. Cine Actor.

The tickets for this benefit performance will be Rs. 500, Rs. 250 and Rs. 100.

As your co-operative society is having sufficient funds under Common Good Fund, I appeal that this amount may be utilised in purchase of tickets for the above performance so that the amount can be utilised for noble cause. I request your co-operation in this regard. Tickets can be purchased from the Co-operative Sub-Registrars and Senior Inspectors of this Office when they actually contact you in this regard. Cheque may be made in favour of the "அரசினர் மருத்துவ மனை அபிவிருத்திக் குழு, சிங்கம்புனரி'.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒரு அமைச்சர் உத்தரவு போட்டார் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் யாரோ ஒரு அதிகாரிதான் உத்தரவிட்டிருக்கிறார். அதைத்தான் அவர் படித்துக் காட்டியிருக்கிறார். அமைச்சர் உத்தரவு போட்டிருக்கிறார் என்று தெளிவாகச் சொல்ல ஏதாவது ஆதாரம் இருக்கிறதா?

**திரு. கோ. பூவராகன் :** நான் சொல்கிறேன், அமைச்சர் அவர்களுடைய ஒப்புதல் இல்லாமல், அமைச்சர் அவர்களுடைய ஆணை இல்லாமல், அமைச்சர் அவர்களைக் கேட்காமல் இப்படிப்பட்ட ஒரு உத்தரவை எந்த அதிகாரியும் போட்டு இருக்க முடியாது. தனிப்பட்ட முறையில் ஒரு குறிப்பிட்ட நிதிக்காக பணம் கோரியிருக்கிறார்கள் ரிஜிட்டிரார் அவர்கள். யார் டான்ஸ் ஆடுகிறார்கள், யார் தலைமை வகிக்கிறார்கள், தொகை எவ்வளவு என்றெல்லாம் இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. டிக்கெட் கட்டணம் ரூ. 500, 250, 100 என்றெல்லாம் இதில் விவரம் கொடுத்திருக்கிறார்கள், அமைச்சர் அவர்களைக் கேட்காமல் செய்திருக்க முடியாது என்று நான் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM : Will the Hon'ble Minister be pleased to place the records at our disposal to see what has happened?



1968 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, கடைசியாகக் குறிப்பிடப்பட்ட விஷயத்தை முதலாவதாக எடுத்துக்கொள்கிறேன். நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்கள் 'அமைச்சர் உத்திரவிட்டார்' என்று சொன்னார்கள். அது முறையானதல்ல. இலாகாவிலே உள்ள அதிகாரி உத்தரவிட்டிருக்கிறார் என்றால், அமைச்சர் அவர்களுடைய சம்மதத்தின் பேரில் தானே அந்த அதிகாரி அந்த உத்தரவை இட்டிருப்பார் என்று விளக்கம் அளிப்பதற்கும், அமைச்சர் உத்திரவிட்டிருக்கிறார் என்று கூறுவதற்கும், பொருத்தம் அதிகமாக ஏற்படமுடியாது. அதுமட்டுமல்லாமல், அந்த அதிகாரி வெளியிட்டு இருக்கிற அறிக்கையில், முறைகேடாக, விதிகளுக்கு மாறாக, இந்த உத்திரவு போட்டிருப்பதாகத் தெரியவில்லை. முன்னாள் அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையில், இன்னின்ன விதிப்படி (Common Good Fund.) விருந்து, (Charitable purpose)-க்கு, பொது நன்மையான காரியங்களுக்கு, பண உதவி கொடுங்கள் என்று விதியைக் காட்டி, அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். ஆகையினால், அமைச்சர் வேண்டுமென்றே ஒரு உத்தரவை அனுப்பினார் என்று அவர்கள் முதலிலே சொன்ன குற்றச் சாட்டு பொருத்தமானது அல்ல. அது மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு, பஞ்சாயத்து யூனியன் . . . .

**திரு. கோ. பூவராகன் :** பொதுவாக ஒரு விதியிருக்கிறது; அந்த பி.ப.
அந்த இலாகாக்களிலே நடக்கிறது. எல்லாவற்றையும் அமைச்சர் 12-30
களே கையெழுத்திட்டு அனுப்புவதில்லை. அமைச்சர் சொல்லிவிட்டால், இலாகாவிலே இருக்கிறவர்கள் அனுப்புகிறார்கள். அப்படி இலாகாவிலே நடப்பது அமைச்சரவைக்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்வது அவ்வளவு பொருத்தமானதாக இருக்காது என்பதை முதல் அமைச்சருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் முன்னாள் அமைச்சர் பேசுகிறபோது, அமைச்சரை இழுக்காமல் பேசியிருந்தால், இன்னும் சற்று தரம் உயர்ந்ததாக இருந்திருக்கும். இப்பொழுது அதிகாரி வெளியிட்டிருக்கும் அறிக்கை, மருத்துவ மனைக்கு புதிதாக கட்டடம் எழுப்ப பணம் கொஞ்சம் தேவைப்படுகிறது,, உங்களுடைய காமன் குட் ஃபண்டிலிருந்து, டிக்கட்டுகள் வாங்கி, அந்தப் பணத்தைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அது போல முன்னாலே நடந்தது இல்லையா என்று கேட்பார்களே என்பதை யூகித்துக் கொண்டு, முதலிலேயே, முன்னாலே நடக்கவில்லையா, அந்த அரசு காலத்தில், என்றெல்லாம் காட்டாதீர்கள் என்று முன்னாலேயே அணை போட்டு கொண்டார்கள். அப்படி அணை போடாமல், எடுத்துச் சொல்ல ஆரம்பித்தால், உள்ளபடியே விவாதத்திற்கு வருமே என்ற எண்ணத்தில், முன்னாலே என்று குறிப்பிடாதீர்கள் என்று சொன்னார்கள். உள்ளபடியே முன்னால் நடந்ததிலே குற்றங்குறை ஏதும் இல்லை என்று தெரியும் என்றால், 'எங்கள் காலத்தில் இப்படி

நடந்ததா' என்று மார் தட்டிக் கொண்டு கேட்டிருந்திருக்கலாம். அவர்கள் காலத்தில் நடந்து இருந்தது தவறாக இருந்தால், அதையே நாங்களும் மேலும் செய்யவேண்டும் என்று நான் விரும்பவில்லை. அதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே ஒரு தடவை சொன்னார்கள், அப்படிச் செய்து விட்டுத்தான் நாங்கள் இங்கே வந்து விட்டோம், நீங்களும் அந்த மாதிரி ஏன் செய்கிறீர்கள்? செய்யாதீர்கள், என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக நம் நாட்டில், சில நல்ல காரியங்கள் நடக்கும்போது, பொது ஸ்தாபனங்களிலிருந்து, பணத்தைத் திரட்டுவது, முறைகேடான காரியம் இல்லை என்பதை அவர்களே குறிப்பிட்டார்கள். விருத்தாசலம் பகுதியில், பஞ்சாயத்து யூனியனிலிருந்து கல்லூரிக்குப் பணம் ஒதுக்க வேண்டும் என்று சொல்லி, ஒதுக்கியிருக்கிறார்கள். (திரு. கோ. பூவராகன் : நான் அப்படிச் சொல்லவில்லை. ஒதுக்கக்கூடாது என்றுதான் சொன்னேன்) அவர் மனது நல்ல மனது என்று புரிகிறது. ஒதுக்கக் கூடாது என்று சொன்னதாகச் சொல்கிறார்கள்.

திரு. கோ. பூவராகன் : ஏற்கனவே கல்லூரிக்குப் பணம் கொடுத்தாகிவிட்டது. ஐந்து லட்சம் ஏற்கனவே கொடுக்கப்பட்டுவிட்டது, இரண்டு லட்சம் பொது மக்களிடமிருந்தும், மூன்று லட்சம் கோவில் பணத்திலிருந்தும் கொடுத்தாகிவிட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கல்லூரியினுடைய பணம் வந்துவிட்டதா, வரவில்லையா என்பது பிரச்சினை அல்ல. கல்லூரிக் கட்டடத்திற்கு பொது ஸ்தாபனத்திலிருந்து பணம் எடுத்துக் கொடுப்பது முறைகேடு இல்லை என்பதற்குச் சான்று சொன்னேன். இன்னும் சற்றுத் தெளிவான சான்று தேவையென்றால், முன்னாள் அமைச்சருக்கு நினைவிருக்கும், அரியலூரில் கல்லூரி அமைப்பதற்கு பஞ்சாயத்து யூனியன் பண்டிலிருந்து பணம் பெறப்பட்டிருக்கிறது. எங்கள் காலத்தில் அப்படி நடந்திருக்கலாம், உங்கள் காலத்தில், அப்படிப்பட்ட நல்ல காரியத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது, என்று சொன்னால், அது எவ்வளவு பொருத்தமற்றது என்பதை. . . .

திரு. கோ. பூவராகன் : குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அரியலூர் கல்லூரிக்கு, அப்பொழுது மாவட்டக் கலெக்டராக இருந்தவர் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களைக் கேட்டிருந்தார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, இனிமேல் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களிலிருந்து இப்படிப்பட்ட காரியங்களுக்குக் கொடுக்கக் கூடாது என்ற விதியும் அனுப்பப் பட்டிருக்கிறது. அது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அப்படி விதியிருக்கும்போது, இந்த பணத்தை எப்படிக் கொடுத்தார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அம்மாதிரிப் பணம் கொடுத்த பிறகு எடுத்துக் கொண்ட நடவடிக்கை பற்றிச் சொல்கிறார்கள். அவர்கள் பகுதியில் பணம் கொடுத்த நடவடிக்கை பற்றியும், அந்தத் தகவலும் தருகிறார்கள். நான் சொல்லுவது,



பொது நலக் காரியங்களுக்கு, பொது ஸ்தாபனங்களிலிருந்து பணம் கொடுப்பது என்பது தவறான காரியம் இல்லை, முறைகேடான காரியம் இல்லை என்று நான் கருதுகிறேன். அதிலே, அமைச்சருடைய தொகுதியாக இருப்பதால், அதற்கு இழுக்கு இருக்கும் என்று அவர்கள் கருதுவது என்றால், ஒருவர் அமைச்சராக இருப்பதாலேயே, அவருடைய தொகுதியில் எத்தனையோ விட்டுவிட வேண்டிவரும். ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களுடைய தொகுதியில் என்னென்ன வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நண்பர்களும் அறிவார்கள். அந்த மாவட்டவாசி என்ற முறையில் நானும் அறிவேன். அதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். அதை குறைபாடாகக் கருதவில்லை. ஆகையினால், அமைச்சர் தொகுதியில், சிங்கம்புணரியில் மருத்துவமனை ஏற்படுத்துவது என்பது மிகப் பொருத்தமானது என்பதை நண்பர் ஒத்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன். திரு. பூவராகன் அவர்களுக்கு தமிழ் இலக்கியத்தில் பற்று உண்டு என்பது தெரியும். பாரியும், பாரி மகளிரும் வாழ்ந்த அந்த இடத்தில் மருத்துவமனைக்காக யாரையோ ஆடச் சொல்லி, யாரையோ தலைமை தாங்கச் சொல்லி அதற்கு டிக்கட் வாங்குங்கள் என்று கேட்டது முறைகேடு என்று நம்முடைய முன்னாள் அமைச்சர் கருதுவார்களானால், "அவ்வளவு கறந்த பாதாக" அவர்களுடைய ஆட்சியிலே நடந்து கொண்டார்களா என்ற கேள்வி எழுகிறது. ஆனால், அதை நான் கேட்க விரும்பவில்லை. ஏனென்றால், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே, நாங்கள் தவறு செய்தோம், தண்டனையை அனுபவிக்கிறோம், நீங்களும் தவறு செய்யாதீர்கள்,' என்று நல்லெண்ணத்தோடு சொல்லியிருக்கிறார்கள். தவறியும் அவர்களைப் போல் தவறு செய்து தண்டனை பெற்றுக் கொள்ளமாட்டேன், தவறும், கேடும் நடப்பதைப் பார்த்துக் கொண்டு இருக்கமாட்டேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

(Thiru K. Vinayakam : Compulsion and coercion.) ஆங்கிலத்தில், நம்முடைய விநாயகம் சொல்கிறார்கள் Compulsion and coercion என்று When another party uses persuasion, it appears to be pressure. When his party uses pressure, it is persuasion. It is political distionary topsy-turvy. !

நண்பர்கள் பேசியதில், துணை மதிப்பீட்டில் நிதி ஒதுக்கியது தவறு என்று யாரும் சொல்லவில்லை. திரு. பூவராகன் அவர்கள் கூட, இன்னும் சில காரியங்களுக்கு ஒதுக்கியிருக்கலாம் என்றுதான் சொன்னார்கள். வசதி அதிகமாக இருந்திருந்தால், பல நல்ல காரியங்களுக்கு, நிதி அதிகம் ஒதுக்க வேண்டும் என்று விருப்பம் தான்.

மருத்துவமனைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மருத்துவமனைகள் பற்றி இன்றையதினம் எடுக்கும் முயற்சி உள்ளபடியே மனநிறைவு தருவதாக இல்லை. எனக்கே, பல வேளைகளில் மனக்

குறைவு உண்டு. நிதி நிலை சரியான முறையில் இல்லாததால், நல்ல முறையில் கவனிக்க முடியவில்லை. ஆனால், கவனிக்கக் கூடாது என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். துணை மதிப்பீடு வருவதன் நோக்கத்தை அறிக்கையில் விளக்கியிருக்கிறோம். ஓர் இனத்தில், எதிர்பார்த்த செலவு, செலவு ஆகும்போதே, கூடுதலாக ஆகும். அப்படி ஆகும் கூடுதலுக்கு அவையின் அனுமதியைக் கோருகிறோம். எதிர்பார்த்த அளவில் நடக்காதது இன்று நேற்று நடப்பதில்லை. இங்கு அங்கு மட்டும் நடப்பதில்லை. அது பல நாட்களாக, பல இடத்தில் நடப்பது. எனக்கு நன்றாக நினைவு வருகிறது. முன்னாள் நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களே இதே அவையில், நல்ல விளக்கம் கொடுத்தார்கள். திட்டமிட்ட அளவுக்கு, 6 லட்சம் என்றால், 6 லட்சத்திற்கு மேல் செலவாகாது என்று நாங்கள் சொல்லிவிடுவோமானால், இன்னொரு லட்சம் அதிகமாகத் தேவைப்பட்டால், செலவழிக்க முடியாமல் போய்விடும். இவ்வளவு தேவைப்படும் என்று சொல்லும்போது, அதிகச் செலவு, கூடுதலாக ஏற்பட்டால், அப்பொழுது அவையின் அனுமதியைக் கோரி, அதிகத் தொகை ஒதுக்கப்படுகிறது என்று அவர்கள் சொன்னதை மறுபடியும் நினைவூட்ட விரும்புகிறேன். நாம் இங்கே கவனிக்க வேண்டியது, இந்தத் துணை மதிப்பீட்டில் ஒதுக்கியிருப்பது, அக்கிரமமான காரியத்திற்கா, தேவையற்ற காரியத்திற்கா, பயன் பெறாத காரியத்திற்கா. பொருத்தமற்ற காரியத்திற்கா, பொருள் அற்ற காரியத்திற்கா, இப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் கவனிக்க வேண்டும்.

சர்க்கார் அலுவலர்களுக்கு பஞ்சப்படி கொடுப்பதில் ரூ. 3 கோடியளவுக்கு ஒதுக்க வேண்டியிருக்கிறது. இது நியாயமான ஒதுக்கீடு. சர்க்கார் அலுவலர்களுக்கு, பஞ்சப்படியை உயர்த்திக் கொடுக்க, பண வசதி இல்லை என்று கொடுக்க முடியாது என்று இறுதிவரையில் நிராகரித்துக் கொண்டே இருப்பது வீரியம் ஆகாது; சர்க்கார் அலுவலர்களுக்குக் காட்ட வேண்டிய மரியாதையும் ஆகாது. நண்பர் திரு. ஆதிமூலம் கேட்டார்கள், இதற்கு முடிவே கிடையாதா, மத்திய சர்க்காரிடத்தில் பேசும்போது கேட்கவில்லையா என்று. மத்திய சர்க்காரில் இருக்கின்ற பெரிய அமைச்சர் கூடச் சொன்னார்கள், சர்க்கார் ஊழியர்களுக்குப் பஞ்சப்படி கொடுக்கக் கூடாது என்று எழுதிக் கொடுங்கள், அதை வைத்துக் கொண்டு நாங்கள் பஞ்சப்படியை நிறுத்திவிடுகிறோம், என்று ரொம்ப நல்ல எண்ணத்தோடு சொன்னார்கள், சர்க்கார் ஊழியர்களுக்கு என்மேல் ஆத்திரம் பிறக்கட்டும் என்று. எது நடக்கலாம், எது நடக்கக்கூடாது என்று எங்களை எழுதிக் கொடுக்கச் சொல்கிறீர்களே, அது முறையல்ல என்று குறிப்பிட்டேன். விலைவாசி உயர்ந்துகொண்டே போகும் நேரத்தில் பஞ்சப்படி கொடுப்பது நியாயம்தான் என்று எழுதிக் கொடுப்பேன் என்று சொன்னேன். அதற்கு அவர் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். இதுபற்றி அங்கு மறுபடியும் எதுவும் பேசவில்லை. உரிய





நேரத்தில் நண்பர் திரு. ஆதிமூலம் அவர்கள், "பஞ்சப்படி கொடுப்பதற்கு ஒரு முடிவே ஏற்படாதா?" என்று கேட்டார். பஞ்சப்படி கொடுப்பது எப்போது முடிவடையும் என்று என்னைக் கேட்டால், நாலைந்து அறுவடைகள் திருப்திகரமான முறையிலே அமைந்து, கிராமப்புறங்களிலே செல்வம் வளர்ந்து, அதன் காரணமாக தொழில்களுக்கான மூலதனத்தைக் கிராமப்புறங்களிலே கண்டுபிடித்து தொழில்கள் வளர்ச்சியடைந்து, அதன் காரணமாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படும்போதுதான் பஞ்சப்படி என்று ஏற்படாமல் இருக்கும். அம்மாதிரியான நிலைமை விரைவிலே வரவேண்டுமென்பதுதான் எல்லோருடைய விருப்பம். அந்த நிலைமையை உருவாக்குவதற்குத்தான் நாம் எல்லாம் முயன்றுகொண்டிருக்கிறோம். ஓரளவுக்கு அதிலே முன்னேறிக் கொண்டிருக்கிறோம். நாம் ஓரளவுக்குத் திருப்தியடைகிறோம்.

நண்பர் திரு. ஆதிமூலம் அவர்கள், இந்த அரசுக்கு 25 பர்சென்ட் மார்க்தான் கொடுத்தார். அதாவது வந்ததே என்ற திருப்தி எனக்கு ஏற்பட்டது. ஆனால், திரு. கருத்திருமனைக் கேட்டிருந்தால் அந்த 25 மார்க் கூட கொடுக்க மாட்டார். ஏதோ தாராள மனப்பான்மை வைத்துத்தான் நண்பர் திரு. ஆதிமூலம் 25 மார்க் கொடுத்தார். விலைவாசி இறக்கம் எங்களாலும் பரவலாக ஏற்பட்ட சூழ்நிலைகளாலும் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் காலத்தில் அது ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் என்பதற்காக அவர்கள் வருத்தப்படக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக சில மேடைகளில் விலைவாசி வீழ்ந்துவிட்டது, வீழ்ந்துவிட்டது என்று பேசியதாக பத்திரிகைகளில் பார்த்தேன். விலைவாசி வீழ்ந்துவிட்டது என்பது தவறு. (குறுக்கீடு) என்னைப் பொறுத்தவரையில் விலைவாசி வீழ்ந்துவிடவில்லை, இறங்கிக்கொண்டுதான் வருகிறது. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இப்படி விலைவாசிகள் இறங்கிக்கொண்டே போனால் அது உற்பத்தியாளர்களைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு வீழ்ச்சியடையும்படி விட்டுவிடுவோமா? உற்பத்தியாளர்களைப் பாதிக்கக்கூடிய அளவில் விலைவாசி இறங்கிக் கொண்டே போனால் அதைக் கட்டுப்படுத்தும் கடமை சர்க்காருக்கு இருக்கிறது. அந்தக் கடமையிலிருந்து இந்தச் சர்க்கார் தன்னை விடுவித்துக்கொள்ளாது. தற்பொழுது விலைவாசி இறங்கிக் கொண்டே வருகிறது. விலைவாசி இறங்கிகொண்டு வருவது என்பது எல்லோருமே வரவேற்கத்தக்க அம்சமாகும். அதில் சிலருக்கு வருத்தம் இருப்பதுதான் எனக்கு மிகுந்த வாட்டத்தைக் கொடுக்கிறது.

மூன்று கோடி ரூபாய் சர்க்கார் அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்து கொடுத்திருப்பது என்பது சாதாரண காரியம் அல்ல. அது மட்டுமல்ல, நம்முடைய நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்காக தஞ்சைத் தரணியிலே தனியார் துறையிலுள்ள மின்சார வாரியங்களையெல்லாம் சர்க்கார் உடைமையாக்குவதற்கு வேண்டிய

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 ஆகஸ்ட் 20

நிதி ஒதுக்கீடு செய்கிறோம். இது நியாயமில்லையென்று யாரும் சொல்லமாட்டார்கள். தனியார் துறையில் மின்சார நிறுவனங்கள் இருப்பதால், அவர்கள் உணவு உற்பத்தியில் அக்கறை காட்டுவதில்லை, பாசன வசதிக்கான மின்சாரம் கொடுப்பதில்லை என்று பலமான குற்றச்சாட்டுக்கள் அடுக்கடுக்காகச் சொல்லப்பட்டு, அதற்காக எடுத்த நடவடிக்கைகள் நியாயமானவை அல்லவென்று யாரும் கருத மாட்டார்கள்.

அடுத்தபடியாக, தொழில்வாய்ப்புக்கள் அதிகப்பட வேண்டுமென்பது எல்லோருக்கும் உள்ள விருப்பம். ஒரு சிலர், எங்களுடைய காலத்தில் தொழில் வாய்ப்புக்கள் இன்னும் அதிகப்படவில்லையே என்று கவலை தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒன்றை மறந்துவிடுகிறார்கள். கடந்த பதினைந்து வருடங்களாக தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்துக்கொண்டு வருவது முதல், இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடங்கப்பட்ட பிறகுதான். மாநில அரசு தன் சொந்த வருவாயைக் கொண்டு தொழில் வாய்ப்புக்களை வளர்த்துக் கொண்டதற்கு பட்டியல் எதுவும் இல்லை. ஏதோ ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் என்ற அளவில் தீக்குச்சி செய்தல், காலணி செய்தல் போன்ற சிறுசிறு தொழில்களில்தான் மாநில அரசு ஈடுபட முடிந்தது. நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது, சர்க்கார் தாப்பில் காலணி தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு, அதற்கு என்ன பெயர் வைக்கலாம் என்பது குறித்து, நானும், திரு. சுப்பிரமணியம் அவர்களும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தோம். 'மாலு' என்று காலணித் தொழிற்சாலைக்குப் பெயர் சூட்டப்பட்டது. சர்க்காராகப் பார்த்து, தீக்குச்சி செய்தல், காலணி உற்பத்தி செய்தல், வேடிக்கையாகக் கருத வேண்டாம், அப்பளத் தொழிற்சாலை— போன்றவற்றை நடத்தி வந்தது. நண்பர்கள் வருத்தப்பட்டுக் கொள்ளக்கூடாது. நானும் சட்டமன்ற உறுப்பினராக இருந்ததாலேயே இதனைக் கூறுகிறேன் .

பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில்தான் துவங்கப்பட்டன. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரமோ, என்னவோ, ஐந்தாண்டு திட்டம் நிறுத்தப்பட்ட நேரமும், நாங்கள் பொறுப்பு ஏற்ற நேரமும் பொருந்தி வந்தது. நான்காவது ஐந்தாண்டு திட்டம் கொண்டுவரப்பட்டிருந்தால், வேலை வாய்ப்புக்கள் இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிடைத்த வேலை வாய்ப்புக்களைவிட நம்முடைய மாநிலத்தில் அதிக அளவில் கிடைத்துத்தான் இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தாமதப்பட்டதற்கு யார் காரணம்? திராவிட முன்னேற்றக் கழக அரசா காரணம்? தமிழகத்தில் யார் அரசாண்டாலும் இந்தியப் பேரசுதான் அதற்கு காரணம்—சாட்சாத் காங்கிரஸ்காரர்கள்தான் காரணம். அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்கி வைக்க முடியாத நிலையை



1968 ஆகஸ்ட் 20] [திரு. சி. என். அண்ணாதுரை]

உண்டாக்கிக்கொண்டு, உங்களுடைய ஆட்சியில் தொழில் வாய்ப்பு ஏற்படவில்லையே என்று கூறுவது, எனக்கு ஒரு நீதிமன்றக் கதையைத்தான் நினைவுபடுத்துகிறது.

'ஒருவன் தன்னுடைய தாயையும், தகப்பனையும் குடிவெறி காரணமாகக் கொன்றுவிட்டான். வழக்கை விசாரித்த நீதிபதி அவனுக்குத் தூக்குதண்டனை தரும்படி உத்தரவிட்டார். தூக்கு தண்டனை என்று சொன்னதும் அவன் நீதிபதியைப் பார்த்து, "ஐயா, எனக்குத் தாயும் இல்லை, தந்தையும் இல்லை, ஆகவே, என்னைக் கொல்லாதீர்கள்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டானும். இருந்த தாயையும் தகப்பனையும் அவன்தான் கொன்றுவிட்டான். அப்படிக் குற்றக்கூண்டிலே இருந்து நியாயம் கேட்ட குற்றவாளியைப்போல, நீங்கள் ஐயோ, தொழில்வாய்ப்புக்கள் இல்லையே என்று கேட்கிறீர்கள் (சிரிப்பு). வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கவில்லையே என்று நீங்கள் கேட்கும்போது எனக்கு இந்த நீதிமன்றக் கதைதான் நினைவுக்கு வருகிறது. இது கதை மட்டுமல்ல, உண்மையில் சில பேர் அப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்குவதற்கான சூழ்நிலை உருவாகும்போது, தக்க முறையில் பயன்படுத்திக்கொள்ள இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனாலும், ஒன்றிரண்டு தொழில்கள் நல்ல முறையில் இயங்குவதற்கான சூழ்நிலை இருந்து வருகிறது. அம்முறையில் இருந்து வருவது மணலி தொழிற்சாலையாகும். அதற்கு 88 லட்சம் ரூபாய்ச் செலவில் குடிநீர் வழங்குவதற்கான திட்டத்திற்கு இதிலே 26 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்க வேண்டுமென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இது தவறானது என்று யாரும் கருத மாட்டார்கள். அதைப் போலவே பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கின்ற ஈட்டுத் தொகை, அதாவது மானியம் பாலிடெக்னிக் பள்ளிகள் போன்றவற்றிற்குக் கொடுக்கப்படும் மானியத் தொகையின் அளவினை சற்று உயர்த்தித் தர நிதி ஒதுக்கீடு செய்யும்படிக் கேட்டிருக்கிறோம். இதனை தவறு என்று யாரும் சொல்ல மாட்டார்கள். ஆனால் குறிப்பாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது மாணவர்கள் பாலிடெக்னிக்குகளில் சேருவதில் மிகவும் தயக்கம் காட்டுகிறார்கள். என்னுடைய ஊரிலே கூட, இந்தத் தேதிக்குள் மாணவர்கள் சேருவதற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம் என்று அறிவிப்பு செய்தும், காலத்தை நீட்டிப்பு செய்தும் கூட, பாலிடெக்னிக் பள்ளியில் இடம் காலியாகவே இருக்கிறது. பல தடவைகளில் சேருவதற்கான காலத்தை நீடிப்பு செய்தும் இடம் காலியாகவே இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை கொஞ்சம் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். முன்பு நம் மாநிலத்தில் தொழில் அமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் சொன்னதை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். "மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்ற பிறகு வேலை தேடிக்கொண்டு போவதற்காக பாலிடெக்னிக்குகள் அமையவில்லை. மாணவர்கள் பாலிடெக்னிக்கு

களில் சேர்ந்து படித்து, தொழில் நுட்பம் அறிந்து தாங்களே சொந்தத்தில் தொழில் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்கவே பாலிடெக்னிக்குகள் அமைந்திருக்கின்றன" என்று மிக விளக்கமாக திரு. வெங்கட்ராமன் அவர்கள் தெளிவுபடுத்தினார். ஆனால் பாலிடெக்னிக்குகள் துவக்கப்பட்ட நாளிலிருந்து அதில் பயிற்சி பெற்று, பட்டம் பெற்ற மாணவர்கள் வேலைக்குப் போவதிலேதான் தங்கள் நாட்டத்தைக் கொண்டிருக்கிறார்களே தவிர, சொந்தமாக தொழில் ஆரம்பிப்பதில் தங்கள் நாட்டத்தைச் செலுத்தவில்லை. அதற்குக் காரணம் நம்முடைய ஐந்தாண்டுத் திட்டம் பரவலாக்கப்படாத காரணத்தினால் பாலிடெக்னிக்கில் படித்தவர்கள் வேலையைத் தேடிச் செல்ல முன்வந்தார்களே தவிர, சொந்தத்தில் தொழில் நடத்த முன்வரவில்லை. ஆகவேதான் இன்றைக்கு பாலிடெக்னிக்கில் படித்து வெளியேறுகிற மாணவர்கள் சொந்தத்தில் தொழில் நடத்த வேண்டும், அதற்குச் சர்க்கார் உதவி செய்யவேண்டும் என்பதாக சர்க்காரை அணுகுவார்களேயானால், அவர்கள் ஏற்படுத்த விரும்புகிற தொழிலின் தன்மையை ஆராய்ந்து பார்த்து அவர்களுக்கு உதவி அளிக்க வேண்டுமென்று இந்த அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

எனக்கு நினைவுக்கு வருகிறது. வேலைவாய்ப்புகள் பெருகாவிட்டால் இந்த பாலிடெக்னிக்குகள் ஃபாலி டெக்னிக்குகளாகி விடும் என்று அப்போதே குறிப்பிட்டேன். அதைப்போலவேதான் இப்போது அதன் மதிப்பு குறைந்திருக்கிறது. இது நாட்டுக்கு நல்லதல்ல. தொழில் நுட்பத்தை இளைஞர்கள் பெற்றுக்கொள்ள வேண்டியது விரும்பத்தக்க நிலைமையாகும். அதற்கேற்ற சூழ்நிலை, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவு எடுத்து, அமல்படுகிற நேரத்தில் வரும் என்று கருதுகிறேன்.

இதில் குறிப்பிடப்பட்டிருக்கிற எந்தத் தொகையும் தேவையற்றது என்று யாரும் தள்ளிவிடவில்லை. இன்னும் சிலவற்றுக்கான நிதி ஒதுக்கம் இருந்திருக்கலாம் என்றே குறிப்பிட்டார்கள். சந்தர்ப்பம் ஏற்படுகிறபோது வாய்ப்புகள் கிடைக்கிறபோது அவர்கள் சொன்ன நல்ல கருத்துக்கள் ஏற்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் சினிமாப்படத்திற்காக பரிசு அளிக்க, ஒதுக்கப்பட்ட தொகை வேண்டாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கு ஏற்கனவே விளக்கம் அளித்திருக்கிறேன். ஆறு, ஏழு கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருவாய் தரக்கூடிய ஒரு துறை அது. அதற்கு ஒரு சிறிய தொகை ஒதுக்குவது முறையற்ற காரியம் அல்ல. திரு. காசிராமன் அவர்கள் இதுபோல தொழில் விற்பன்னர்களுக்குப் பரிசு அளிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதையும் நான் வரவேற்று அதைக் கூடிய விரைவில் அரசு ஆலோசனை நடத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால் துணை மதிப்பீடுகள், அதற்கான ஒதிக்கீடுகள் ஆகியவற்றில் மனக்குறை இல்லை என்பதை ஒவ்வொருவரும் பேசிய பேச்சில் இருந்து நான் நன்றாகப் புரிந்துகொள்ள முடிந்தது. சர்க்காரிடத்தில் மனக்குறை இருக்கிறது. அது எப்படி இல்லாமல் போகும்? அந்த மனக்குறையைப் பல்வேறு வடிவில் புகுத்தினார்கள்.



நண்பர் காசிராமன் அவர்கள் முகமூடிக் கொள்ளையர்களைப் பிடித்த போலீஸ் இலாக்காவினரின் திறமையைப் பாராட்டியதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இலாகாவினரைப் பாராட்டியது—அந்த இலாக்காவை நிர்வகிக்கின்ற எனக்கும் மகிழ்ச்சி அளித்தது. அவர்கள், முகமூடிக் கொள்ளையர்களைப் பிடித்தவர்கள், மர்மத் தீக்கான குற்றவாளிகளைப் பிடிக்க முடியாதா என்று சொல்வதற்காக அதைச் சொன்னார்கள். அதையும் நான் உணராமல் இல்லை. ஆயினும் தீ விபத்துக் குற்றம் கண்டு பிடிப்பது என்பது மிகவும் கஷ்டமானது என்பதை வழக்கறிஞர்கள் உணர்வார்கள். All the evidence is burnt along with the fire என அந்தச் சான்றுகள், தடயங்கள் எல்லாம் தீயினால் பாதிக்கப்பட்டு விடுவதனால்தான் அந்தக் குற்றவாளியைக் கண்டு பிடிக்க முடியாமல் இருக்கிறதே தவிர, போலீஸ் துறையினருக்கு உற்சாகக் குறைவு என்றோ, திறமைக் குறைவு என்றோ எண்ணத் தேவையில்லை. போலீஸ்காரர்களிடத்தில் நண்பர் காசிராமனுக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. அதன் காரணமாகத்தான் அவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தி, அவர்களுக்கு இன்னும் வசதி செய்து கொடுங்கள் என்றார்.

THIRU K. VINAYAKAM : In the matter of fire, it is a fact, as the Chief Minister says, that all the material evidence of the fire is burnt. But the man does not get burnt. You can set your police dogs upon the culprit and find out.

THE HON. THIRU C. N. ANNADURAI : He began his logic well, but ended in a faulty way because he asked me to set the police dogs. When the materials are burnt, dogs cannot get scent.

நம்முடைய நண்பர் காசிராமன் அவர்கள் தஞ்சைப் பகுதியில் ஏற்பட்டு வருகிற தீ விபத்தைக் குறிப்பிட்டார்கள். பத்திரிகையில் படிக்கிறபோதும், அந்தப் பகுதியில் இருந்து வருகிறவர்கள் சொல்கிறபோதும் எங்களுக்கும் அது பயங்கரமானதாகத் தோன்றுகிறது. அதற்காக போலீஸ் இலாக்காவில் ஒரு தனிப் பிரிவே ஏற்படுத்தி அதை நல்ல முறையில் தடுப்பதற்குக் கண்காணிப்பை ஏற்படுத்த வழிவகை செய்யலாம் என்கிற கருத்து இருக்கிறது. அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்கிறேன். இதிலே அதிகம் போலீசை அனுப்பிக் கண்டுபிடிக்க வேண்டுமென்று சொல்வதன் மூலம் போலீசாரின் திறமையில் நம் உறுப்பினர் திரு. காசிராமன் நம்பிக்கை தெரிவித்ததற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் போலீஸ் அத்துமீறி மதுரையில் நடந்திருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை திரு. சங்கரய்யா வைத்தார்கள். அவரது பேச்சை நான் இங்கிருந்து கேட்காவிட்டாலும் நான் இருந்த இடத்தில் இருந்தே கேட்டேன். போலீஸ் இலாகா முழுவதற்கும் கனம் உறுப்பினர் சொன்ன கருத்துப்படி ஒரு

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 ஆகஸ்ட் 20

சுற்றறிக்கை அனுப்பலாம் என்று இருக்கிறேன். ஜனநாயகம் வளர்ந்து வருகிற நாட்டில் மக்களிடத்தில் காவல் துறையினர் மிகவும் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஒருவர் இருவர் தவறாக நடந்து கொண்டிருந்தால்—அதற்கான திட்டவட்டமான ஆதாரங்களை என்னிடத்தில் கொடுப்பார்களேயானால் அதைப்பற்றி விசாரிப்பதற்கு எவ்விதமான தயக்கமும் காட்டமாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் ஆயிரம் பேர்கள் கொண்டு விவசாயிகளின் கூட்டத்தை ஊர்வலமாக நடத்திச் செல்கிறார்கள். பத்துபேர்கள், பத்துபேர்களுக்கு மத்தியில் தலைவர்களும் செல்கிறார்கள். இன்னவாறுதான் கோஷமிட வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். அந்த ஆயிரம் பேர் கூட்டத்தில் பத்து இருபது பேர்கள் கட்டுக்களை மீறி, சொல்லத்தகாத கோஷங்களை எழுப்பிவிடுகிறார்கள் என்பது என் கவனத்திற்கு வந்திருக்கிறது. அந்தத் தலைவர்களையே கூப்பிட்டுக் கேட்டிருக்கிறேன். "நடந்து விட்டது, நாங்கள் விரும்பவில்லை" என்று சமாதானம் சொல்கிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் நடந்தது. தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் உள்ளே சென்று வேலை செய்ய விரும்பினார்கள். அந்தத் தொழிற்சங்கத் தலைவர் உள்ளே தொழிலாளர்கள் போகக்கூடாது என்று மிரட்டுவதற்காக—உள்ளே போன பெண்ணைக் கையைப் பிடித்து இழுத்து கை குண்டைக் காட்டி மிரட்டினார் என்றால் அது மிகவும் அருவருக்கத்தக்கது. எந்தத் தொழிலாளர்களின் தலைவரும் அதை வரவேற்கமாட்டார்கள். என்னுடைய மதிப்பிற்குரிய தொழிற்சங்கத் தலைவர்களிடம் தொழிலாளர்கள் பரிபூரண நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு கட்டுப்பாடுகள் வந்துகொண்டே இருக்கின்றன. அதனை உறுதிப்படுத்துகின்ற அரசும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எப்படி போலீஸ்காரர்கள் தவறாக நடந்தால் அதைப்பற்றி விசாரிக்கிறேன் என்று நான் உத்தரவாதம் அளிக்கிறேனோ அதைப் போலவே தொழிலாளர்கள் தவறுதலாக நடந்து கொண்டால் அவர்கள் தொழிற்சங்கத்தில் இருந்து நீக்கப்படுவார்கள் என்கிற உத்தரவாதத்தை அவர்கள் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

தஞ்சைப் பகுதியில் நடைபெறுகிற விவசாயப் பிரச்சினையைப் பற்றி திரு. காசிராமன் அவர்கள் சொன்னார்கள். மிராசுதாரர்களுக்கும், சாகுபடியாளர்களுக்கும் இடையே கூலியில் சச்சரவு ஏற்பட்டால் இதை இரவோடு இரவாகத் தீர்த்து வைக்க நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் குறிப்பிட்ட மிராசுதார் வீட்டு வாயில்படியில் பெண்கள் சென்று மாரடித்துக்கொண்டு அழுவது என்ற முறையில் அதனை நடத்துவது தொழிலாளர் தலைவர்களுக்கே சொல்கிறேன் விரும்பத்தக்கது அல்ல. அருவருக்கத்தக்கது. காமன் பண்டிகை நடக்கிற காலத்தில் இப்படி நடப்பது



1968 ஆகஸ்ட் 20] [திரு. சி. என். அண்ணாதுரை]

உண்டு. தொழிலாளர், கூலி உயர்வு சம்பந்தமான பிரச்சினைக்கு இந்தமாதிரியான முறைகள் கைக்கொள்ளப்படுவது விரும்பத்தக்கது அல்ல. அவர்களுடைய உரிமைகள் நிச்சயம் பாதுகாக்கப்படும். ஆயினும் வரவர இதுபோன்ற தொழில் தகராறு வருகிறபோது முதலாளிகளைக் கண்டபடி ஏசச்செய்வது என்கிற பழக்கம் வளர்ந்து வருகிறது. நானும் தொழிற்சங்கங்களில் வேலை செய்திருக்கிறேன். வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டிருக்கிறேன். திரு. வி. க. காலத்தில் பக்கிங்ஹாம் கர்னாடிக மில் தொழிலாளர் சங்கத்தில் பங்குகொண்டிருக்கிறேன். ஏ. எஸ். கே. ஐயங்காருக்கு முன் துறைமுகத் தொழிலாளர்கள் சங்கத்தில் ஈடுபட்டிருக்கிறேன். அப்போது நடைபெற்று வந்த வேலைநிறுத்தங்களுக்கும் இப்போது நடைபெறுகிற வேலை நிறுத்தங்களுக்கும் நிச்சயமாக மாறுதல் இருக்கிறது. அவர்களுக்கு எரிச்சலூட்ட வேண்டும் ஆத்திரமூட்டவேண்டுமென்ற முறையில் தாறுமாறான முறையிலே ஏசுதலை நடத்துவதால் தொழிலதிபர்களை இன்னும் சற்றுப் பிடிவாதமான முறைக்குத்தான் அது கொண்டு செல்கிறது என்ற முறையில் அவற்றையெல்லாம் திருத்தியமைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் தொழிற்சங்கத் தலைவர்களை நண்பர்கள் என்ற முறையிலும், என்னுடைய அரசுக்கு ஆதரவு அளிக்கிறவர்கள் என்ற முறையிலும், என்னுடைய அரசுக்கு மட்டுமல்ல, எந்த நல்ல அரசுக்கும் ஆதரவு அளிக்கிறவர்கள் என்ற முறையில் நான் கேட்டுக் கொள்கிறேன். சுலபத்தில் தீர்த்துக்கொள்ளக்கூடிய பிரச்சினைகளைக்கூட வளரவிடக்கூடிய சம்பவங்கள் நிறைய இருக்கின்றன. நான் நேற்றுமுன்தினம் குறிப்பிட்டேன். தொழில் அமைப்பைச் சேர்ந்தவர் ஒருவர் நான் அழைத்தும் வரவில்லையென்று, அதைப் பத்திரிகையிலே மாற்றிப் போட்டிருக்கிறார்கள், கோவை தொழில் அதிபர் வரவில்லையென்று அவர் இங்குள்ள தொழிலதிபர் அல்ல; வேறு பகுதியில் உள்ள தொழிலதிபர், அவர் கிட்டதட்ட 1,000 மைல்களுக்கு அப்பாலிருந்துகொண்டு இங்கு வந்துபோகிறார் என்று கருதுகிறேன். அந்த அமைப்பைச் சேர்ந்தவர் வரவில்லை என்று கருதுகிறேன். தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் உரிமைகளுக்காக மட்டுமல்ல, பசியோடு போராடுகிறார்கள் என்ற அடிப்படை உண்மையை உணர்வார்களானால் அவற்றை முற்றாகப் பார்த்துக் கொள்ளமுடியும் என்று கருதுகிறேன். தஞ்சைப் பகுதி விவசாயிகளைப்பற்றி திரு. காசிராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இடதுசாரி கம்யூனிஸ்டுகளைச் சேர்ந்த விவசாயிகளானாலும் சரி, வலதுசாரி கம்யூனிஸ்டுகளைச் சேர்ந்த விவசாயிகளானாலும் சரி, திராவிடர் கழகத்தைச் சேர்ந்த விவசாயிகளானாலும் சரி, திராவிடமுன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த விவசாயிகளானாலும் சரி சமாசம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் முயற்சியெடுத்துக்கொள்ளுகின்ற நேரத்திலே நல்ல ஒத்துழைப்பைக் கொடுத்து சமரசம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சோஷலிஸ்டுகளையும், பிரஜா சோஷலிஸ்டுகளையும் நான் விட்டு விட்டேன் என்று கருதாதீர்கள். அவர்களும் அவ்வப்பொழுது இணக்கம் தெரிவித்திருக்கிறார்கள். சில நேரங்களில் என்னுடைய

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 ஆகஸ்ட் 20

கவனத்திற்கு வராமல் பல காரியங்கள் முறை தவறி—வண்டி போகிறபொழுது—யாரும் தவறாகக் கொள்ளமாட்டார்கள்—என்று கருதுகிறேன், மாடு மூலை வாருவது, கிராஸ் ரோட், என்று சொல்வார்கள்—விபத்துகள் ஏற்படுகின்றன; அதுமாதிரித்தான். தஞ்சை தரணியைப் பொறுத்தவரையில் விவசாயிகளுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்த அரசு போதுமான முயற்சிகளை எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். திரு. காசிராமன் அவர்கள் சொன்னார்கள், இப்படியே போனால் என்ன என்ன புதிய வரிகள் போடுவீர்களோ என்று சொன்னார்கள். அதற்கு வழி அவர்கள்தான் சொல்லவேண்டும். இருபது ஆண்டுகளாக வரி போட்டு போட்டு பழக்கப்பட்ட கட்சிக்காரர்கள் இதிலாவது துணை சேராமல் வேறு எதிலேதான் துணைசேரப் போகிறார்கள்? ஆகவே அதற்கான யோசனைகளை அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, துணை மானியம் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம்:** இப்பொழுது நாட்டில் தொழில் துறையிலே மந்தம் ஏற்பட்டிருப்பது அனைவருக்கும் தெரியும். மத்திய சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கொண்டுவராததன் காரணமாகத்தான் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று முதலமைச்சர் விமர்சனம் செய்தார்கள். நம்முடைய அரசுக்கு இருக்கிற அதிகாரங்களுக்குட்பட்டு, நம்முடைய சக்திக்குட்பட்ட முறையில் தொழில்களை ஆரம்பிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அதற்கு என்ன முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்? There is an dustrial stagnation in our State என்ற முறையிலே லேபர் பாலிசி Most unsettled ஆக இருக்கிறது. எந்தப் பக்கம் சேருவோம், யாரைக் காப்பாற்றுவோம் என்று தெரியவில்லை. இதன் காரணமாக பிரைவேட் என்டர்பிரனர்ஸ், பணம் போட்டு முதலீடு செய்து தொழில் ஆரம்பிக்கத் தயங்குகிறார்கள். They are very niggardly and they do not have courage because they do not have a Settled policy மாநில சர்க்காரே மாநிலத்திலே உள்ள சக்திக்குட்பட்டு இங்கே இருக்கிற முதலாளிகளை தொழில்களை ஆரம்பிக்க என ஊக்குவிக்கக்கூடாது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** எங்களுக்கு No Settled Labour Policy என்று சொன்னார்கள். நாங்கள் நியாயத்தின் பக்கம்தான் சேருவோம். சில இடங்களிலே தொழிலாளர்கள் பக்கம் நியாயம் இருந்தால் தொழிலாளர்கள் பக்கம் சேருவோம். அவர்கள் பக்கம் நியாயம் இல்லாமலிருந்தால் சேரமாட்டோம். ஆகவே Settled Labour Policy இல்லை என்று சொல்வது சரியல்ல. அதைப் போல் காங்கிரஸ் கட்சியினருக்கு எந்த settled policy இருக்கிறது என்று கேட்க விரும்பவில்லை, ஏனென்றால் எனக்கே தெரியும். தொழில்கள் நடத்துவதற்கு என்ன ஊக்குவித்து இருக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். அதற்கு நான் வார்த்தைகளால் பதில் சொல்லவில்லை, எண்ணிக்கை



1968 ஆகஸ்ட் 20] [திரு. சி. என். அண்ணாதுரை]

யில் சொல்ல விரும்புகிறேன். 1968-ஆம் வருடம் ஜனவரி முதல் மார்ச் வரை தனிப்பட்ட முதலாளிகள் தொழில் நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பவை தமிழ்நாட்டில் 32; ஆந்திரப் பிரதேசத்தில் 12; கேரளத்தில் 11; கர்நாடகத்தில் 12.

**திரு. கே. விநாயகம்:** அப்ளிகேஷன் போட்டவர்கள்தானே! அவர்கள் உங்களை நம்பி வரவில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** எங்களை நம்பித்தான் 32 பேர்கள் வந்திருக்கிறார்கள். ஆந்திரப் பிரதேசத்தை நம்பி 12 பேர்கள் வந்திருக்கிறார்கள், கேரளத்தை நம்பி 11 பேர்கள் வந்திருக்கிறார்கள், கர்நாடகத்தை நம்பி 12 பேர்கள் வந்திருக்கிறார்கள். எங்களை அவர்கள் நம்பாமல் இல்லை. அது மட்டுமல்ல, தொழிலதிபர்கள் சப் கமிட்டி போட்டு 15 நாட்களுக்கு ஒரு முறை என்னிடத்தில் வந்து அவர்கள் தொழில் நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்துகொண்டு இருக்கிறார்கள். எங்களிடம் தொழிலதிபர்கள் நம்பிக்கை குறைந்திருக்கிறார்கள் என்பது வெறும் மனப்பிரமை.

**திரு. கே. விநாயகம்:** முன்பிருந்த காங்கிரஸ் சர்க்காரை நம்பித்தான் 32 பேர்கள் மனுப்போட்டார்கள். நீங்கள் வந்தபிறகு உங்களைப் புரிந்து கொண்டார்கள், தொழில் நடத்தினால் முடியாது, லாபகரமாக நடத்த முடியாது. சரிவர நடத்த முடியாது என்று. அதுதான் நான் கேள்விப்பட்டது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** ரொம்பத் தவறான விவரங்களைச் சொல்கிறவர்களிடத்திலே பழகுகிறார் என்று கருதுகிறேன். ஜனவரி முதல் மார்ச் வரையில் நான் எண்ணிக்கை சொன்னேன், நடத்த மாட்டோம் என்று யாரும் சொல்லவில்லை. அவற்றைப்பற்றிய விவரங்கள் எல்லாம் நான் சொன்னால் மற்ற மாநிலங்களுக்கு யார் யார் இங்கே வருகிறார்கள் என்று அறிவிப்பதாக இருக்கும் என்பதால் தெரிவிக்கவில்லை. யார் வருகிறார்கள் என்று அணுகி நாங்கள் வருகிறபொழுது வரலாம், இப்பொழுது வாரீர்கள் என்று ஏற்பாடு செய்வார்களோ என்னவோ தெரியவில்லை. நம்பிக்கைக் குறைவாக யாரும் எங்களைக் கருதமாட்டார்கள். நான் பம்பாய்க்குச் சென்ற நேரத்திலே தொழிலதிபர்கள், இந்தியாவிலேயே இந்த மாநிலத்தில்தான் ஹெல்தி அட்மாஸ்பியர் இருக்கிறது என்று சொன்னார்கள்.

**திரு. கே. விநாயகம்:** அது எங்கள் காலத்திலே.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அவர்கள் காலத்திலே என்று சொல்கிறார்கள். எங்கள் காலத்திலே பிளேக். அவர்கள் காலத்திலே போர்ட் டிரஸ்ட் வேலை நிறுத்தம் நடைபெறவில்லை, "இந்து" ஒரு மாதம் மூடப்படவில்லை, ஆலைகள் எல்லாம் மூடப்படவில்லை. எங்கள் காலத்திலேதான் இவையெல்லாம் நடந்திருக்கின்றன. அவர்கள் காலத்திலே ராமராஜ்யம், எங்கள் காலத்திலேதான் இப்படி நடக்கின்றன என்ற மன பிராந்தியை அவர்கள்

கொண்டிருந்தால் நீடூழிகாலம் அந்த மன பிராந்தியோடு வாழுங்கள். நேற்று பேசிய இண்டஸ்ட்ரியலிஸ்டஸ் எங்களிடம் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, புதிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 21/1968) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2 நிறைவேற்றப்பட்டது

அட்டவணை நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு, முகப்புரை, பிரிவு 1 இவை நிறைவேற்றப்பட் டன.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, "இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டும்" என்ற தீர்மா னத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்ட மாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, 1968-ம் ஆண்டு நகராட்சி அதிகார மன்றங்கள் (பதவிக்காலம்—மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்) திருத்த மசோதாவை ஆய் வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு சட்ட— கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கோருவார்கள்.

### 6. தீர்மானம்.

### பேரவை நிகழ்ச்சிகளை ஒத்திவைத்தல்

THIRU K. VINAYAKAM : Sir, I move—

'That the rest of the business may be taken up tomorrow'. We have already come to the stage of 'brain-fag'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு திரு. விநாயகம் அவர்களுடைய வேண்டுகோளைப் பேரவை ஏற்கிறது.

**இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறு கின்றன. நாளை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.**

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.



## 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

"NIL"

### B. Reports, Notifications and Other Papers.

@38. The Madras General Sales Tax (Third Amendment) Bill, 1968 (L.A. Bill No. 8 of 1968).

@39. The Madras General Sales Tax (Fourth Amendment) Bill, 1968 (L.A. Bill No. 9 of 1968) with annexure.

@40. The Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1968 (L.A. Bill No. 10 of 1968) with annexure.

@41. The Madras Co-operative Land Mortgage Banks (Amendment) Bill 1968 (L.A. Bill No. 11 of 1968).

---

@ Despatched to Members on 18th August 1968.

# APPENDIX

[ *Vide* answer to starred question 34 on page 1]

*Answer*—

*Statement showing the export of edible oils from Madras State to Foreign countries as well as to other States during the years* 1960-61 *to* 1965-66.

| Serial number, mode of transport and name of the commodity. | 1960-61 | 1961-62 | 1962-63 | 1963-64 | 1964-65 | 1965-66 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (QUANTITY IN TONNES) | | | |
| I. *Foreign trade*— | | | | | | |
| Groundnut oil .. .. .. | 343 | 443 | 6,314 | 11,157 | 389 | Nil. |
| Gingelly oil .. .. .. | 2 | Nil. | 1 | 3 | Neg. | Nil. |
| Castor oil .. .. .. | 1,171 | 704 | 400 | 14 | 3 | 8 |
| Copra oil .. .. .. | Nil. | .. | .. | .. | .. | .. |
| II. *Coasting trade*— | | | | | | |
| Groundnut oil .. .. .. | N.A. | 25,109 | 26,247 | 21,008 | N.A. | N.A. |
| Gingelly oil .. .. .. | N.A. | 10 | 75 | 29 | N.A. | N.A. |
| Castor oil .. .. .. | N.A. | 2 | 1 | 4 | N.A. | N.A. |
| Copra oil .. .. .. | N.A. | 36 | 58 | 57 | N.A. | N.A. |
| III. *Railborne trade*— | | | | | | |
| Groundnut oil .. .. .. | 25,084 | 25,768 | 35,758 | 25,444 | *11,617 | 18,867 |
| Gingelly oil .. .. .. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. |
| Castor oil .. .. .. | 155 | 149 | 46 | 23 | N.A. | N.A. |
| Copra oil .. .. .. | 13 | 29 | 20 | 15 | *53 | 252 |



*Statement showing the import of edible oils from other countries as well as from other States into Madras State during the years* 1960-61 *to* 1965-66.

| Serial number, mode of transport and name of the commodity. | 1960-61 | 1961-62 | 1962-63 | 1963-64 | 1964-65 | 1965-66 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (QUANTITY IN TONNES) | | | |
| I. *Foreign trade*— | | | | | | |
| Groundnut oil .. .. .. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. |
| Gingelly oil .. .. .. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. |
| Castor oil .. .. .. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. |
| Copra oil .. .. .. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. |
| II. *Coasting trade*— | | | | | | |
| Groundnut oil .. .. .. | N.A. | Nil. | Nil. | Nil. | N.A. | N.A. |
| Gingelly oil .. .. .. | N.A. | Nil. | Nil. | Nil. | N.A. | N.A. |
| Castor oil .. .. .. | N.A. | 7 | Nil. | 5 | N.A. | N.A. |
| Copra oil .. .. .. | N.A. | Nil. | Nil. | 2 | N.A. | N.A. |
| III. *Railborne*— | | | | | | |
| Groundnut oil .. .. .. | 1,043 | 360 | 2,157 | 2,023 | * 4,388 | * 271 |
| Gingelly oil .. .. .. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. | N.A. |
| Castor oil .. .. .. | 166 | 69 | 211 | 51 | N.A. | N.A. |
| Copra oil .. .. .. | 3,947 | 5,088 | 3,187 | 3,106 | * 1,743 | * 601 |

Neg. : Negligible.
N. A. : Not available.
* Provisional figures.

NOTE.—Figures of coasting trade and railborne relate to State to State movement.

## இணைப்பு.

பதில்—

1960–61-ம் ஆண்டு முதல் 1965–66-ம் ஆண்டுவரை தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கும் மற்ற மாநிலங்களுக்கும் ஏற்றுமதியான உபயோகப்படுத்தும் எண்ணெயைக் காட்டும் விவர அறிக்கை:—

| தொடர் எண்ணும், போக்குவரத்து முறையும், பொருட்களின் பெயரும். (1) | 1960–61 (2) | 1961–62 (3) | 1962–63 (4) | 1963–64 (5) | 1964–65 (6) | 1965–66 (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | (அளவு டன்களில்) | | | |
| **1. வெளிநாட்டு வணிகம்—** | | | | | | |
| வேர்க்கடலை எண்ணெய் .. .. | 343 | 443 | 6,314 | 11,157 | 389 | .. |
| நல்லெண்ணெய் .. .. | 2 | .. | 1 | 3 | புறக்கணிக்கக்கூடியது. | .. |
| ஆமணக்கு எண்ணெய் .. .. | 1,171 | 704 | 400 | 14 | 3 | 8 |
| தேங்காய் எண்ணெய் .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| **2. கடலோர வணிகம்—** | | | | | | |
| வேர்க்கடலை எண்ணெய் .. .. | விவரம் கிடைக்க வில்லை. | 25,109 | 26,247 | 21,008 | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. |
| நல்லெண்ணெய் .. .. | ,, | 10 | 75 | 29 | ,, | ,, |
| ஆமணக்கு எண்ணெய் .. .. | ,, | 2 | 1 | 4 | ,, | ,, |
| தேங்காய் எண்ணெய் .. .. | ,, | 36 | 58 | 57 | ,, | ,, |
| **3. ரயில்மூலம் செய்யும் வணிகம்—** | | | | | | |
| வேர்க்கடலை எண்ணெய் .. .. | 25,084 | 25,768 | 35,758 | 25,444 | *11,617 | *18,867 |
| நல்லெண்ணெய் | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. |
| ஆமணக்கு எண்ணெய் .. .. | 155 | 149 | 46 | 23 | ,, | ,, |
| தேங்காய் எண்ணெய் .. .. | 13 | 29 | 20 | 15 | *53 | *252 |



1960–61-ம் ஆண்டு முதல் 1965–66-ம் ஆண்டுவரை மற்ற நாடுகளிலிருந்தும் பிற மாநிலங்களிலிருந்தும் தமிழகத்திற்கு இறக்குமதியான உபயோகப்படுத்தும் எண்ணெயைக் காட்டும் விவர அறிக்கை :—

| தொடர் எண்ணும், போக்குவரத்து முறையும், பொருட்களின் பெயரும். (1) | 1960–61 (2) | 1961–62 (3) | 1962–63 (4) | 1963–64 (5) | 1964–65 (6) | 1965–66 (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | (அளவு டன்களில்) | | | |
| **1. வெளிநாட்டு வணிகம்—** | | | | | | |
| வேர்க்கடலை எண்ணெய் .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| நல்லெண்ணெய் .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| ஆமணக்கு எண்ணெய் .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| தேங்காய் எண்ணெய் .. .. | .. | .. | .. | .. | | |
| **2. கடலோர வணிகம்—** | | | | | | |
| வேர்க்கடலை எண்ணெய் .. .. | விவரம் கிடைக்க வில்லை. | .. | .. | .. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. |
| நல்லெண்ணெய் .. .. | ,, | .. | .. | .. | ,, | ,, |
| ஆமணக்கு எண்ணெய் .. .. | ,, | 7 | .. | 5 | ,, | ,, |
| தேங்காய் எண்ணெய் .. .. | ,, | .. | .. | 2 | ,, | ,, |
| **3. ரயில்மூலம் செய்யும் வணிகம்—** | | | | | | |
| வேர்க்கடலை எண்ணெய் .. .. | 1,043 | 360 | 2,157 | 2,023 | *4,388 | *271 |
| நல்லெண்ணெய் | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. | விவரம் கிடைக்க வில்லை. |
| ஆமணக்கு எண்ணெய் .. .. | 166 | 69 | 211 | 51 | ,, | ,, |
| தேங்காய் எண்ணெய் .. .. | 3,947 | 5,088 | 3,187 | 3,106 | *1,743 | *601 |

* தற்காலிகமான எண்கள், கடலோர, ரயில்மூலம் செய்யும் வணிகத்தின் எண்கள் மாநிலங்களுக்கிடையே செய்யும் வணிகத்தைக் குறிக்கும்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, கைத்தொழில் ஆசிரியர்கள் பகுதி நேர ஆசிரியர்களாக கருதப்பட்டு குறைந்த சம்பளம் மாதம் 30 ரூபாய் என்ற அளவில்தான் கொடுக்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்களை முழுநேர ஆசிரியர்களாக ஆக்கி முழுச் சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கைத்தொழில் ஆசிரியர்களுக்கு இருக்கும் நேரத்தைக் கணக்கிட்டுப் பார்த்துத் தானே அவர்கள் பகுதி நேர ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முழு நேரம் கொடுத்தால் அதற்குத் தகுந்தவாறு நேரம் ஒதுக்கவேண்டிய சங்கடம் இருக்கிறது. இதிலே என்னென்ன மாற்றம் செய்யலாம் என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

**திரு. எஸ். முருகையன் :** உயர் துவக்கப்பள்ளிகளில் கைத்தொழில் ஆசிரியர்களாக வேலைபார்ப்பவர்களை அந்தப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாறும்போது, அவர்களைப் பல இடங்களில் எடுத்துக்கொள்வது கிடையாது. அவர்களைத் தொடர்ந்து வைத்துக் கொள்ள அரசு ஆணையிடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, உயர் துவக்கப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றுகின்ற போதும் கைத்தொழில் ஆசிரியர்கள் அப்படியேதான் வைக்கப்படுவார்கள். அவர்கள் ஒதுக்கப்பட்டதற்கு வேறு காரணங்கள் இருந்தால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அது சரியா, தவறா என்று ஆராயப்படும்.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, கைத்தொழில் ஆசிரியர்கள் பார்ட் டைம் வேலைக்கு வரமாட்டேன் என்கிறார்கள், சம்பளம் அவர்களுக்குக் கட்டவில்லை என்ற காரணத்தால், கைத்தொழில் ஆசிரியர்கள் இல்லையென்றால், 6, 7, 8 வகுப்புகளுக்கு அங்கீகாரம் அளிப்பதில்லை. ஆகையால் கைத்தொழில் ஆசிரியர்கள் இல்லாவிட்டாலும் 6, 7, 8 வகுப்புகளுக்கு அங்கீகாரம் அளிக்க அரசு ஆணையிடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முழுநேர ஊதியம் இருந்தால்தான் வாழமுடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள். இங்கே பகுதி நேர ஆசிரியர்களை வைத்துக் கொள்ளக்கூடிய அளவிலேதான் நிதிநிலைமையும் மற்றவைகளும் இருக்கின்றன. முழுநேர ஆசிரியர்களாக ஆவதற்கு என்னென்ன சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்பதுபற்றி கல்வித் துறையினர் ஆராயவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த முடிவு ஏற்றதற்குப் பிறகு தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. போஜன் :** நம் மாநிலத்திலுள்ள உயர்நிலைப்பள்ளிகளிலும் தொடக்கப்பள்ளிகளிலும் சில இடங்களில் கைத்தொழில் பயிற்சிக்குப் பதிலாக விவசாயப் பயிற்சி கொடுக்கப்





படுகிறது. சில இடங்களில் கைத்தொழில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. விவசாயம், கைத் தொழில் இரண்டு பயிற்சிகளும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கிராப்ட்ஸ் ஆகியவற்றின்கீழ் இந்த பலவகையான தொழில்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எந்தெந்த இடத்திலே எவை எவை செய்தால் பயன்தரும் என்ற முறையில் செய்யப்படுகிறது. ஓவியம் செய்தல், வண்ணம் தீட்டுதல், தோட்டக்கலை, இசை, நூற்புத் தொழில், தச்சு வேலை, கருமான் வேலை இதுபோன்ற துணைத்தொழில்கள் விவசாயம் உள்பட இருக்கின்றன. சில இடங்களில் இடம் இருக்கின்ற காரணத்தினால், விவசாயம் நடத்தப்படுகிறது. சில இடங்களில் தச்சுவேலை, நூற்றலும் நெய்தலும் போன்ற வேலைகள் நடத்தப்படுகின்றன. மற்றவைகளைவிட விவசாயத்திற்கு முக்கியத்துவம் செலுத்தினால் நல்லது என்று தெரிவிக்கப்பட்டது. அது ஆராயப்பட்டுவருகிறது.

THIRU K. VINAYAKAM : Does the Government continue to believe in craft instruction based upon the basic type of education or does the Government believe that the money spent upon craft instruction is a criminal waste and it is a case of good money spent upon bad business ? What is the change which the Government have effected after it has come into power in regard to craft instruction ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முன்பு ஆதாரக் கல்வி என்ற முறையில் இருந்தது. அதைப் புகுத்தியவர்களே நடைமுறையில் கொண்டுவருவதற்கு முன்வரவில்லை. அதனால்தான் அந்த நோக்கத்தைமட்டும் ஏற்று நடத்தலாம் என்ற முறையிருக்கிறது. ஒர்க் எக்ஸ்பீரியன்ஸ் என்ற கொள்கை அடிப்படையில் கைகளும், கால்களும் பயன்படுத்தப்படுகின்ற அளவிற்கு பள்ளிப் பருவ காலத்திலே பயிற்சி தரவேண்டுமென்ற அடிப்படையிலேதான் கிராப்ட்ஸ் பயிற்சி வகுக்கப்பட்டிருக்கிறது. வேலைசெய்கின்ற மனப்பான்மை அந்தப் பருவத்திலே ஏற்பட வேண்டும். அப்படி ஏற்பட்டால்தான் பிற்காலத்தில் மனத்துணிவும் ஏற்படும் என்ற வகையில் அது வகுக்கப்பட்டிருக்கிறது. நோக்கம் தவறு என்று சொல்லமாட்டேன். நோக்கம் சரியானதுதான், நிறைவேற்றுவதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. பள்ளிகளைப் பார்த்தால் எல்லாமே அறையிலே போட்டு மூடி பூட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போது அது வேஸ்ட் என்று சொல்லலாம். ஆனால் அதைப் பயன்படுத்துகின்ற நிலைமையில்தான் உண்மையான நோக்கம் நிறைவேறும். இதுபற்றி ஆராயப்பட்டு வருகின்றது. ஒர்க் எக்ஸ்பீரியன்ஸ் என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

# தமிழக சட்டப் பேரவை

புதன்கிழமை, 1968 ஆகஸ்ட் 21.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள் 61, 62, 63, 64 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

*Posts of Craft Instructors in schools*

* 65 Q.—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal for the abolition of the posts of Craft Instructors in Secondary and Elementary Schools in Madras State ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. டி. மார்டின் :** துணைச் சபாநாயகர் அவர்களே, 1967-ல் இந்த அரசு பொறுப்பு ஏற்ற பின்பு ஏதாவது தமிழகப் பள்ளிகளில் கைத்தொழில் ஆசிரியர்கள் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்களா ? அந்த விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதைப்பற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்து கொடுக்கப்படும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இதுமாதிரி கைத்தொழில் பயிற்சி ஆசிரியர்களுக்கு முன்பு ஒரு வாரத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த பீரியட்களைக் குறைத்து பாதியாக்கியிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் கைத்தொழில் ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல் பொதுவாகக் குறைக்கப்படவில்லை. 1-வது முதல் 3-வது வகுப்பு வரை 7 பீரியட்டுகளும், 4-வது முதல் 8-வது வரை 4 பீரியட்டுகளும், 9-வதிலிருந்து மூன்று பீரியட்டுகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. முன்பு 40 பீரியட்டுகளாக இருந்ததை 30 பீரியட்டுகளாக ஆக்கவேண்டுமென்று தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க 9-வது வகுப்புத் தவிர மற்றவைகளெல்லாம் ஏற்கெனவே இருந்தவைதான் இருந்து வருகின்றன.

[1968 ஆகஸ்ட் 21

*Language formula*

* 66 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) the languages, a student has to learn in secondary school in Madras State ; and

(b) whether the Madras State Government has been following three language formula or two language formula in the secondary schools in our State ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** (அ) & (இ) 1968-ம் வருடம் ஜனவரி 24-ம் தேதி முதல், தமிழகத்தில் இருமொழித் திட்டம் கீழ்க்கண்டவாறு செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.—

பகுதி ஆ.—வட்டார மொழி அல்லது தாய்மொழி (தாய் மொழி வட்டார மொழியிலிருந்து வேறுபட்டதாக இருப்பின்).

பகுதி இ.—ஆங்கிலம் அல்லது இந்திய மொழியல்லாத மற்றொரு மொழி.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், தமிழகத்திலுள்ள பள்ளிகளில், மொழிப் பயிற்சிக்காக—தமிழாக இருந்தாலும் சரி, ஆங்கிலமாக இருந்தாலும் சரி—வகுப்பு நேரங்களில் அதிகமாக ஒதுக்கிவிட்டு, விஞ்ஞானம், கணிதம் போன்ற மற்ற ஸப்ஜெக்ட்களுக்கு நேரத்தைக் குறைவாகக் கொடுத்து, அதன் காரணமாக மாணவர்கள் இந்த விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களை நல்ல முறையில் படித்துப் பூரண அறிவு பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமலிருக்கிறபடியால், மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போன்று, மொழிப் பயிற்சிக்கான நேரத்தைக் கொஞ்சம் குறைத்து, விஞ்ஞானப் பாடங்கள், கணிதப் பாடங்கள் இவைகளுக்கான நேரத்தை அதிகப்படுத்துவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த நேரங்களை எப்படி ஒதுக்குவது என்பதில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த தனியார்ப் பள்ளி, அரசினர் பள்ளி, உதவி பெறும் பள்ளி ஆகிய பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களைக் கொண்ட தலைமையாசிரியர்கள் சங்கத்தினரைக் கூப்பிட்டு வைத்து, அவர்களைக் கலந்து ஆலோசித்து, எந்தெந்த வகையில் பீரியட்டுகளை ஒதுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதே வகையில்தான் 9-வது வகுப்பில் தமிழுக்கு ஆறு பீரியட்டுகளும், ஆங்கிலத்திற்கு ஏழு பீரியட்டுகளும். கணிதத்திற்கு ஆறு பீரியட்டுகளும், பொது விஞ்ஞானத்திற்கு ஏழு பீரியட்டுகளும் என்ற அளவுக்கு நேரம் பகிர்ந்து தரப்பட்டிருக்கிறது. ஆகவே, கணிதத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் அதிக நேரம் ஒதுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் ஆறு பீரியட்டுகளும், ஏழு பீரியட்டுகளும் முறையே ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மொழிப்



1968 ஆகஸ்ட் 21]

பயிற்சியைப் பொறுத்த வரையில், பத்தாவது வகுப்பை முடிப்பவர்கள் ஆங்கில மொழியில் தரம் பெற்றிருக்கவேண்டும் என்பதற்காக அந்தப் பீரியட்டைக் குறைப்பதற்கில்லை என்று சொல்லுகிறார்கள். தமிழைப் பொறுத்தவரையில், அந்தப் பாடத்திற்குரிய பீரியட்கள் இருக்கவேண்டும் என்று, தமிழாசிரியர்களும் மற்ற தலைமையாசிரியர்களும் வற்புறுத்தினார்கள். அவர்களே ஒப்புக் கொண்டு அதிலிருந்து ஒரு பீரியட்டை எடுத்துத் தரலாம் என்றால் அரசுக்கு ஆட்சேபனை இல்லை. தக்கவர்களையெல்லாம் கலந்தாலோசித்து இந்தப் பீரியட்கள் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

THIRU B. VENKATASAMY : Will this Government come forward to introduce three language formula to facilitate the minorities whose mother-tongue is other than Tamil to learn our State language ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** . தலைவர் அவர்களே, இரண்டு-மொழித் திட்டத்தைத்தான் இந்த அரசு நடைமுறைப் படுத்தி இருக்கிறது. ஆனாலும் கூட, சிறுபான்மையோர் தங்களுடைய மொழிகளுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கருதுகிற வகையில், ஆங்காங்கு அவர்களுடைய தாய் மொழியில் பயிற்றுவிப்பதற்கு என்று கிட்டத்தட்ட 74 பள்ளிகள் இருக்கின்றன. இரண்டாயிரத்திற்கும் மேலாக உள்ள பள்ளிகளில், 74 பள்ளிகளில் வேறு ஏழெட்டு மொழிகளுக்கு மேல் தாய் மொழிகளாகக் கொண்டவர்களுக்கு அந்த மொழியில் பாடம் சொல்லிக் கொடுக்கும் தன்மை இருக்கிறது. இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு, அந்த மொழியில் பாடங்களைப் படிக்கவேண்டுமென்று விரும்பியவர்களுக்கென்று இரண்டு பள்ளிக்கூடங்கள் இந்தி மொழியிலேயே நடைபெறுகின்றன. அவை வட சென்னைப் பகுதியில் இருக்கின்றன. அதே போன்று குஜராத் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கென்று அந்த மொழியில் ஒரு பள்ளியும், மராட்டிய மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கென்று அந்த மொழியில் ஒரு பள்ளியும், உருதுவைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கு அந்த மொழியில் ஒரு பள்ளியும், எல்லைப் புரத்தில் தெலுங்கு மொழியிலும், கன்னட மொழியிலும், மலையாள மொழியிலும் கற்றுக் கொடுப்பதற்கு வாய்ப்புகள் தரப்பட்டிருக்கின்றன. மேலும், "க்ளாசிகல் லாங்வேஜ்" என்று சொல்லப்படுகிற சமஸ்க்ருதம், அராபிக் போன்ற மொழிகளையும், தமிழ், ஆங்கிலம் படித்தாலும்கூட, அத்துடன் படிக்க வாய்ப்பு ஏற்படவேண்டும் என்றும் சிலர் கருதுகிறார்கள். அந்த வகையிலேதான் இப்பொழுது கல்வித் துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி விரும்பினால், இரண்டு பீரியட்டுகள் ஒதுக்கலாமா என்றும் ஆராயப்படுகிறது. தமிழ், ஆங்கிலம் மட்டுமே எடுத்துப் படிக்க வேண்டும் என்கிறவர்களை அப்படியே விட்டுவிட்டு, சமஸ்க்ருதம் அல்லது அராபிக் எடுத்துப் படிக்கவேண்டும் என்று விரும்பினால் அதற்கும் பீரியட்டுகள் ஒதுக்குவதுபற்றி ஆராயப்படுகிறது.

எப்படியும் தமிழைப் படிக்காத சூழ்நிலை ஏற்படக் கூடாது என்பதனாலும், தமிழ், மாநில மொழியாக இருப்பதனாலும், சமஸ்கிருதம், அராபிக் மொழிகளைப் படிக்க வாய்ப்பு ஏற்பட வில்லை. பல இடங்களிலிருந்து விண்ணப்பங்கள் வந்திருக்கிற காரணத்தால், அது ஆராயப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு தக்க முடிவு எடுக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : During the last session of the Assembly the Hon. Chief Minister was kind enough to give an oral assurance about safeguards to linguistic minorities. He promised to follow the decisions of the Zonal Council scrupulously but yet is continues to be an oral assurance. May I request the Hon. Minister for Education to give an official status to the oral asurance ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தெலுங்கு மொழி படிக்கிறவர்களாக சிறுபான்மையோர் இருந்து, பதினைந்து பேர்களுக்கு மேல் முன்வரும் நிலைமை இருந்தால், அவர்களுக்கு அந்த மொழியில் படிக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும் என்ற நிலைதான் இருக்கிறது. அதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

**திரு. நா. காசிராமன் :** தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இரண்டு மொழிகள் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அது தவிர என்னென்ன பிற மொழிகள் கற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய வசதிகளை இந்த அரசாங்கம் செய்து கொடுத்துள்ளது என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முதலில் சொன்ன படி, சிறுபான்மையோராக இருந்து, தங்களுடைய தாய் மொழியாக இருந்து, அந்த மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று பதினைந்து பேருக்குக் குறையாமல் வந்தால், அவர்களுக்கு அந்த மொழியில் பாடங்கள் கற்றுத் தருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது. 74 பள்ளிகளில் வேற்று மொழிகளின் மூலம் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. சிறுபான்மையோராக இருந்து, தாய் மொழியாக இருந்து, அதில் படிக்க 15 பேர்கள் வந்தால், அவர்களுக்கு அந்த மொழி ஆசிரியரை நியமித்துத்தர இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது.

*Vanaspathy industry at Vadalur*

* 67 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start an industry in the co-operative sector at Vadalur in South Arcot district for manufacturing soap, vanaspathi, etc., by utilising groundnut and its products ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.



**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, விவசாய விளைபொருள்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்ற அடிப்படையில், அப்படி ஏதேனும் ஆரம்பிக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஏராளமாக சோப் உற்பத்தியாகும் காரணத்தால், சோப் தொழிற்சாலை, 'பான்டு லிஸ்ட்' டில்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்குப் புதிதாக லைசென்ஸோ, மற்றவையோ தரும் நிலை இல்லை. ஆகவே, சோப் தொழிற்சாலை ஆரம்பிக்கக்கூடிய நிலை இல்லை என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

**திரு. மா. பா. சாரதி :** மணிலாப் பயிர் அதிகமாக உற்பத்தியாகக்கூடிய வடார்க்காடு மாவட்டத்தில், ஏற்கனவே வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு, அது நடத்தப்பட முடியாமல் போய்விட்டதை உத்தேசித்தும், வடார்க்காடு மாவட்டத்தில் நிலக்கடலை அதிகமாக உற்பத்தி ஆவதை உத்தேசித்தும், அந்த மாவட்டத்தில் ஒரு வனஸ்பதித் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முற்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முன்பிருந்தது என்ன காரணத்தினால் நடத்தப்பட முடியாமல் போயிற்று என்பதைக் கண்டுபிடித்து, அந்தக் காரணங்களையெல்லாம் நிவர்த்திக்க வாய்ப்பு ஏற்படுமானால், மறுபடியும் அது பற்றி ஆலோசிக்கலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புரத்தில் ஆரம்பிக்கப்பட்ட வனஸ்பதித் தொழிற்சாலை எந்த அளவிலே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்தத் தொழிற்சாலை நடைபெறுகின்ற முறைக்கும் நெய்வேலியில் வனஸ்பதித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, The Madras Vanaspathi factory at Villupuram had been closed down. என்றுதான் விவரம் தரப்பட்டிருக்கிறது. அது மூடப்பட்டதற்கு என்ன காரணங்கள் என்பதைக் கண்டறிந்து, உள்ளபடியே தொழிற்சாலையை நடைபெறச் செய்யவேண்டும் என்பது தான் நம்முடைய நோக்கமாகும். அதற்கு ஏதாவது ஆதரவு அளிப்பதற்கோ, அல்லது அதை ஊக்குவிப்பதற்கோ வழிவகை இருந்தால், செய்யலாம். அதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால், ஆராய்ந்து விவரங்கள் தரலாம்.

*Price preference scheme*

* 68 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Government propose to introduce 'price subsidy scheme' for the manufactured articles purchased by Government Departments from private industries; and

(b) if so, the details thereof?

[1968 ஆகஸ்ட் 21

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அ & இ : தமிழ் நாட்டில் ஏற்கெனவே 'விலைச்சலுகைத் திட்டம்' ஒன்று செயலில் உள்ளது. உறுப்பினர் அத்திட்டத்தைப் பற்றியே குறிப்பிடு கிறுரென நம்புகிறேன். அத்திட்டத்தின் விவரங்கள் அடங்கிய அரசாங்க ஆணையின் நகல் * ஒன்று (தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறையில் 1—3—1968-ம் தேதியுள்ள 831-ம் எண் அரசாங்க ஆணை) பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக, இதர மாநிலங்களிலிருந்து வாங்கும் பொருள்களின் விலையைவிட 10 சத விதம் அதிகமான விலையாக இருந்தாலும், நம்முடைய மாநிலத்திலுடைய பொருள் களையே வாங்கவேண்டும் என்று விதி தரப்பட்டிருக்கிறது. "ப்ரொவைடெட் தி க்வாலிடி ஈஸ் கம்பாரபிள்" என்று அந்த விதிக்கு மட்டும் இருக்கிறது. ஆனுல், மற்றவைகளிலே அது இல்லை. இப்பொழுது க்வாலிடி சரியில்லை என்று சொல்லிவிட்டு, வேறு மாநிலங்களிலிருந்து சரக்குகளை அதிக விலை கொடுத்து வாங்கு வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, 'ஸேம் மெடீரியல்' என்று போட்டாலே போதும். அந்த வகையில் திருத்தம் செய் வதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எது எப்படியிருந் தாலும், க்வாலிடிதான் மிக மிக முக்கியம், இந்த மாநிலத்தில் வாங்கினுலும், வெளி மாநிலங்களிலிருந்து வாங்கினுலும். ஆகவே, அதை விட்டுவிட்டு வாங்குவது என்று வைத்தால், இந்த மாநிலத்தில் உற்பத்தியாவதையெல்லாம் வாங்கவேண்டும் என்று ஒரே உத்தரவு இட வேண்டியிருக்கும், மற்றவற்றை வாங்கு வதற்கே முடியாமல் இருக்கும். ஆகவே, க்வாலிடி அடிப்படையில் தான் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அதனுல் கொஞ்சம் விலை அதிகமாகலாம். 10 சத விதம் கூடக் கொடுத்து, இந்த மாநிலத்தில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்று அத்தகைய சலுகை தரப்பட்டிருக்கிறது. ஒரே விதமான க்வாலிடி இருந்து, நல்ல க்வாலிடியாக இருந்து, ஆனுல் விலை இதைவிடக் குறைவாக இருக்கிறது என்ருல் அதையும் வாங்க லாம், இதையும் வாங்கலாம். அதற்காகத்தான் 10 சத விதம் கூடத் தரலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தளர்த்திவிட்டால், பிறகு பண்டங்கள் வாங்குவதில் பல குறை பாடுகள் ஏற்படும்.

*Landing space for fishing boat in Ovari*

*69 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is a proposal to acquire vacant sites in Ovari village in Nanguneri taluk, Tirunelveli district to provide landing spaces for the boats of fishermen of the said village?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இல்லை.

* 516-519-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1968 ஆகஸ்ட் 21]

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர், சார். நாங்குனேரி தாலுகாவைச் சேர்ந்த உவரியிலும், திருச்செந்தூர் தாலுக்காவைச் சேர்ந்த பெரியதாழை என்ற கிராமத்திலும் அதிகமாக மீன்கள் பிடிக்கிருர்கள். குறிப்பாக, பெரியதாழையில் கடலில் இருக்கக்கூடிய பாறைகளின் காரணமாக, காற்றுக் காலங்களில், திடீரென்று பாறைகளில் படகுகள் மோதுவதன் காரணமாக, மீனவர்களுக்குப் பெருத்த பொருட் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றன. இந்த நிலையை உத்தேசித்து, பெரியதாழையிலும் உவரிப் பகுதியிலும் மீன் பிடிக்கும் கிராமங்களிலே [illegible] படகுகளை நிறுத்தக்கூடிய அளவுக்கு வசதி செய்து கொடுக்கும் படியாக, நிலங்களை சர்க்கார் நில ஆர்ஜிதச் சட்டத்தின் மூலமாக எடுத்து, மீனவர்களுக்கு வழங்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கடல் அரிப்பு ஏற்பட்ட தன் விளைவாக, அந்த உவரி என்ற கிராமம் இரண்டாகப் பிரிக்கப் பட்டு, ஒரு பகுதியை 'நாடார் உவரி' என்றும் வேறு பகுதியை 'பரவர் உவரி' என்றும் குறிப்பிட்டு இந்த நிலங்கள் நாடார் உவரிக்குத்தான் சொந்தம் என்ற நிலையை உருவாக்கிவிட்ட காரணத்தினுலே, முதலாளிகள் வசம் அதனுடைய மேல் பார்வை இருப்பதால், பரதவர் நிவாரண சங்கத்தினர் சம்பந்தப்பட்ட வர்களைச் சந்தித்து வேறு நிலத்தைக் கேட்டார்கள், பெற்றிருக் கிருர்கள். இதற்குச் சம்பந்தம் இல்லாததால், அந்தப் பிரச்சினை யைத்தீர்க்க முடியாத நிலை இருக்கிறது. கனம் அங்கத்தினர் இப்பொழுது குறிப்பிட்ட பிரச்சினையைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்ருல், அதைப்பற்றித் தனியாகக் கடிதம் எழுதி அனுப்பலாம்.

### வேளாண்மை பொறியியல் தொழிலாளர்கள்

* 70 வினு—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை தமிழ்நாடு அரசினர் வேளாண்மை பொறி யியல் தொழிலாளர்கள் தங்கள் குறைகளைப்பற்றி 23—7—1967-ம் தேதி சர்க்காருக்கு விண்ணப்பித்து உள்ளார்களா?

(இ) ஆமெனில், அதன்மேல் சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. என். மருதாசலம்:** கோவையிலுள்ள விவசாயப் பண்ணை யில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தனியார் பண்ணைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதைவிட குறை வாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆகவே தனியார் பண்ணை களில் கொடுக்கக்கூடிய கூலியை சர்க்கார் பண்ணைகளிலும் கொடுப்பார்களா? அங்கு வேலை செய்யும் வாச்மேன் போன்றவர் களுக்கு நிரந்தரமாக வேலை கொடுக்க அரசு உத்தேசிக்குமா ?

[1968 ஆகஸ்ட் 21

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அரசாங்கப் பண்ணைகளில் பணி புரிகிறவர்களுக்கு எப்போதும் வேலை கொடுக்கப்படுகிறது. ஆனால் தனியார் துறையைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அவசியமானால் வைத்துக் கொள்வார்கள், அவசியமில்லை என்றால் வேலையிலிருந்து நீக்கி விடுவார்கள். ஆகவே கூலி உயர்வு பற்றிய பிரச்னை வருவதற்கு இடமில்லை. மற்றபடி அங்கத்தினர் அவர்கள் கூறியதைப் போன்று 12 கோரிக்கைகள் இருக்கின்றன. அவை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அவர்களுக்கு பதில் அனுப்பப்படும்.

**திரு. எம். பூபதி:** பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தப் பிரச்னை எப்போது முடியும்? ஏனெனில் ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது. ஆகவே அதை உடனடியாக முடிக்க தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** சில பிரச்னைகள் உடனடியாக தீர்க்கக்கூடிய பிரச்னைகளாக இருக்கின்றன. சம்பள விகித உயர்வு என்றிருப்பதால் அதைப்பற்றி பரிசீலனை செய்த பிறகு தான் முடிந்த கட்டத்திற்கு வர முடியும். விரைவில் அவர்களுக்கு பதில் அனுப்பப்படும்.

**திரு. பி. வேலுசாமி:** விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச கூலி எவ்வளவு என்று நிர்ணயிக்க உத்தேசித்துள்ளது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

DR. H. V. HANDE: Sir, how many employees are there in this department? The Minister said that there were twelve grievances. Will he be pleased to state the most important grievances or, if possible, all the twelve grievances?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அதைப்பற்றி விவரமாக சொல்லவேண்டுமென்றால் சபாநாயகர் அவர்களின் அனுமதி கிடைக்காது. நேற்றே ஒரு தடை உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். முழு விவரம் வேண்டுமானால் தனியாக எழுதிக் கேட்கலாம்.

## முறைப்படுத்தப்பட்ட சந்தைக் குழு

* 71 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் விவசாய விளை பொருள் ஒழுங்கு மார்க்கெட் கமிட்டி (Agricultural Produce Regul te Mark t ng Co mittee ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** ஆம், இச் செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.



1968 ஆகஸ்ட் 21]

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் தற்போது இந்த ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் கமிட்டீஸ் இருக்கின்றன? அப்படி ஒன்று ஆரம்பிக்க வேண்டுமானால் அதற்கான அடிப்படைத் தேவைகள் என்ன?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** பொதுவாக எந்தெந்த மாவட்டங்களில் பணப் பயிர்கள் விளைகின்றனவோ அந்தப் பகுதிகளில் எல்லாம் இந்த மார்க்கெட்டிங் கமிட்டி துவக்கப்படுகிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இருக்கிறது, வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருக்கிறது. செங்கல்பட்டுக்கு வரவேண்டுமென்ற நிலை இருக்கிறது. திருச்சியில் இருக்கிறது, கோவையில் இருக்கிறது. பணப் பயிர்கள் விளைகின்ற மாவட்டங்களில் எல்லாம் இந்தக் கமிட்டி துவங்கப்பட்டிருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில் காலம் கடந்ததற்குக் காரணம் சைதாப்பேட்டை, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய பகுதிகளில் கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிங் சமிட்டீஸ் இருப்பதால் அதை நீக்கிவிட வேண்டுமென்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அதை நீக்கக்கூடாது, ஒரே முறை இருக்க வேண்டுமென்று இப்போது மறு பரிசீலனை செய்து ஏற்கனவே நாமினேட் செய்யப்பட்டவர்கள் நிலையை மாற்றியமைக்க அரசாங்கம் கொஞ்சம் காலம் எடுத்துக் கொண்டது. ஆகவே கால தாமதம்.

**திரு. மா. பா. சாரதி:** இந்த மார்க்கெட்டிங் கமிட்டியில் பெரும்பாலும் நிலக்கடலை ஒன்றுதான் அங்கு வருகிறது. ஆகவே மற்றப் பொருள்களான மிளகாய் வத்தல், வெல்லம் போன்ற பொருள்களையும்கூட இதன் கீழ் கொண்டுவந்து விற்பனை செய்ய சர்க்கார் முயன்று துரித நடவடிக்கைகள் எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மிளகாய், வெல்லம், பருத்தி போன்ற பொருள்களையும் மார்க்கெட்டிங் கமிட்டிக்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் குறிக்கோள். அப்படி அந்தப் பொருள்கள் மார்க்கெட்டிங் கமிட்டிக்குப் போவதால் சில வியாபாரிகள் தனிப்பட்ட முறையில் தங்களுக்கு ஆதாயம் கிடைப்பதில் இடையூறு இருக்கிறது என்று அப்படி மார்க்கெட்டிங் கமிட்டிக்குப் போவதால் வசதி கிடைக்காது என்று கூறி, குறுக்கே நிற்கிறார்கள். மார்க்கெட்டிங் கமிட்டிக்குப் போவதால் நல்லமுறையில் நியாயமான விலை கிடைக்கும் என்பதை சட்ட மன்ற உறுப்பினர்கள் பிரசாரம் செய்தால் இந்தப் பொருள்கள் எல்லாம் அங்கு வருவதற்கு வழி ஏற்படும்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** நெல் பயிர் போன்றவை கூட இந்த ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் ஆக்ட்டின் கீழ் வருகிறதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** நெல்லும் அதில்தான் வந்தது. அதில் ஒரு பிரச்னை எழுந்தது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நெல்லையும் கொண்டுவரவேண்டுமென்றுதான் அரசாங்கம் கருதுகிறது. அதற்கு ஓர் எதிர்ப்பு இருப்பதால் அது பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள் 72, 73 ஒத்திவைக்கப்படுகின்றன.

*Jobless Workers' Fund*

*74 Q.—THIRU A. M. RAJA: Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) whether the Government have given any contribution to the Jobless Workers' Fund at Coimbatore; and

(b) the total amount so given and the number of workers benefited?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ): கோவையில் வேலையிழந்த தொழிலாளர்க்கு உதவுவதற்கென எந்த உதவி நிதியும் இல்லை. அதனால் தமிழக அரசு அம்மாதிரி எந்த நிதிக்கும் உதவித் தொகை வழங்குவதென்ற கேள்விக்கு இடமில்லை. ஆயினும் கோவையிலுள்ள மூடப்பட்ட ஐந்து மில்களைச் சார்ந்த 5,132 தொழிலாளர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் 40 ரூபாய் விதம் முதலமைச்சரின் உதவி நிதியிலிருந்து பண உதவி வழங்கப் பட்டது.

**திரு. ஏ. எம். ராஜா:** வேலையில் உள்ள தொழிலாளர்கள் இந்த உதவித் தொகைக்கு ஏதாவது நிதி திரட்டிக் கொடுத்தனரா? ஆம் எனில் அந்தத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மற்ற வேலையில் உள்ள தொழிலாளர்களும் ஒரு பங்கு கொடுத்தார்கள். அது எவ்வளவு என்ற குறிப்பு என்னிடமில்லை.

**திரு. சு. துரைசாமி:** கோவையில் மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு முதல் அமைச்சர் அவர்களின் நிதியிலிருந்து பணம் கொடுத்ததாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதேபோல் பம்பாய், கேரளா போன்ற வேறு மாநிலங்களிலும் பஞ்சாலைகளும் வேறு பல ஆலைகளும் மூடப்பட்டு அங்கும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். அப்படி இந்தியாவிலுள்ள வேறு மாநிலங்களில் தொழிற்சாலைகள் மூடப்பட்ட காரணத்தினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அங்குள்ள அரசாங்கங்கள் உதவித் தொகை கொடுத்திருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மற்ற மாநில தொழிலாளர் நல அமைச்சர்களுடன் நான் இதைப்பற்றி விவாதித்தேன். நாற் பாலைகளில், காம்போசிட் மில்களில், பம்பாய், குஜராத், நாக்பூர் போன்றவிடங்களில் இப்படிப்பட்ட விதத்தில் தொகை கொடுக்க தாகச் சொன்னார்கள். எந்த அளவிற்குச் செய்தார்கள் என்ற தகவல் என்னிடம் இல்லை. நம் முதல் அமைச்சர் நிதியிலிருந்து 2,05,280 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது.





**திரு. க. ர. நல்லசிவன்:** நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் வேலையில் இருந்து சந்தர்ப்பக் கோளாறு காரணமாக வேலை கிடைக்காதிருக்கும் சூழ்நிலையில் ஏதாவது உதவித் தொகை கொடுப்பதற்கு இந்த ராஜ்யத்தில் ஒரு நிதி ஏற்பாடு செய்யும் உத்தேசம் சர்க்காரின் கருத்தில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் முடிவு பெறவில்லை. வேலையில் இருந்து வேலையில்லாமல் போகிறவர்களுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டுமென்ற அவர்களின் நல்ல கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அதற்கான போதுமான நிதி வசதியில்லை. மத்திய அரசு இதற்கென்று ஒரு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வரலாமா என்ற ஆலோசனை இருக்கிறது. அதுபற்றி முடிவு எடுக்கப்பட்டால் அது தொழிலாளர்களுக்குப் பயனாக அமையும்.

**திரு. எம். சுரேந்திரன்:** கோவையில் மூடப்பட்ட மில்களில் இதுவரை வேலை செய்து வந்தவர்கள் ஜீவிப்பதற்கு உதவி செய்வதற்கு முதல் அமைச்சர் அவர்களும் தொழிற்சங்கத் தலைவரும் ஏதாவது ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படி ஓர் ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றுதான் கருதுகிறேன். பேச்சு வார்த்தை நடைபெற்றது. அதில் அவர்களுடைய கோரிக்கை தொழிலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்பது. அது குறித்து பரிசீலிப்பதற்கு முதல் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அதன் விளைவாக இரண்டு லட்சத்து சொச்சம் ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இன்று வளர்ந்து வருகிற வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும் வகையில் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற கொள்கையை கைக்கொண்டிருக்கிற இந்த அரசு தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் மில் தொழிலாளர்கள் மற்ற தொழிலாளர்கள் என்று பாராமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் இல்லாமல் அலைந்து கொண்டிருக்கும் படித்த வாலிபர்களுக்கு தொழில் வாய்ப்பு அளிக்கும் வகையில் ஒரு நிதித் திட்டத்தை வகுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும் ஒரு திட்டத்தை வகுக்க இந்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தொழிலாளர்களுக்காக கனம் உறுப்பினர் இப்போதாவது பரிந்து பேசுவது வரவேற்கத் தக்கதாகும். அதற்கு என்ன திட்டம் என்று உரிய ஒரு திட்டத்தைக் கொடுத்தால் அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும்.

**திரு. எம். பூபதி:** தலைவரவர்களே, திருச்சியிலே தொழிற் சங்கத் தலைவர்களும் முதலமைச்சரவர்களும் சந்தித்துப் பேசிய பொழுது மில்கள் திறக்கப்படும் வரையில் உதவி நிதி கொடுப்ப

தாகக் கூறியிருக்கின்றார். ஒப்பந்தமிருக்கிறது, ஆனால் அந்த உதவி நிதி தொடர்ந்து கொடுக்க முடியாவிட்டாலும் அந்தப் பஞ்சாலைகளைத் திறக்கவாவது நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் இன்றுவரையில் பல்வேறு மில்கள் திறக்கப்படாமல் இருக்கின்றன. அதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தொழிலாளர் தலைவர்கள் அப்படிப்பட்ட ஒரு உதவி செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுத்தது உண்மையே. ஆனால், அரசாங்கத் தரப்பிலே தொடர்ந்து தருவதாக ஒத்துக் கொள்ளப்படவில்லை. ஆலைகளைத் திறப்பது சம்பந்தமாக நன்றாகத் தெரியும். ஒரு முறை அல்ல பல முறை எல்லாத் தொழிலாளர் தலைவர்களிடத்திலும், பல இடங்களில்கூட முதலமைச்சரவர்கள் பங்கேற்று பல பேச்சு வார்த்தைகள் நடத்தி இதுபற்றி ஆராய்ச்சி செய்ய பரிசீலனை செய்ய மூன்று குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. இடைக்கால தீர்க்கமான நடவடிக்கைகள் எதாவது எடுக்கலாம் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் ஆலோசனை கொடுத்தால் அதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, வேலையில்லாத தொழிலாளர்களுக்கு பிராவிடெண்ட் பண்ட், முதலாளிகள் காண்ட்ரிபியூஷனிலிருந்து மாதம் 100 ரூபாய் கடன் கொடுக்கலாம் என்று அரசு ஏற்பாடு செய்வதாகச் சொல்லப்பட்டது. அது எந்த அளவுக்கு உள்ளது. மத்திய அரசுக்கு இது சம்பந்தமாக தமிழ்நாடு சர்க்கார் ஏதாவது குறிப்புகள் அனுப்பியுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதுபற்றி மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.

**திரு. பி. [illegible]:** தலைவரவர்களே. கோவை மாவட்டத்தில் சிங்காநல்லூர் பகுதி பஞ்சப் பிரதேசம். அங்கே தி காஞ்சனா மில் 7, 8 மாதங்களாக மூடப்பட்டிருப்பதால் ஏழைத் தொழிலாளர்கள் கஷ்டப்படுகின்றனர். அவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது உதவி செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நல்ல யோசனை.

THIRU K. VINAYAKAM : Sir, now that many mills have been closed in Coimbatore, how many workers are out of job and also out of the money contributed from the Chief Minister's Relief Fund, how much was doled out to each worker and how long did it last? If this state of affairs continue, what is the panacea for all these ills and how are the Government going to solve the unemployment problem of at least the thrown-out workers?

THE HON. THIRU C. N. ANNADURAI : Taking the last portion of the question first, the panacea for all these ills is only in the economic regeneration of the country as a whole, for which the



main partner is the Central Government which the hon. Member could persuade to act on correct lines. As to the former portion of the question, there is no Unemployment Insurance Scheme as such in our State or in any other State and there is no question of doing out anything.

The hon. Member, Thiru Bhoopathi has also raised that question. When the mill workers were thrown out of employment, the labour union leaders and myself conferred and stated that such of those people who were in need of some help could be given some money partly from the Chief Minister's Relief Fund and partly from the contributions by the labourers themselves. The Coimba tore labour people collected some money and more or less a matching grant from the Chief Minister's Relief Fund was given and that money was distributed and that was neither adequate nor continuing. The hon. Member Thiru Bhoopathi, also raised the question, why it was stopped. It was stopped because the contribution from the labour side was not forthcoming.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, arising out of the reply given by the Hon. Chief Minister, may I know what is the economic policy of the D.M.K. Government, apart from the economic policy of the Central Government?

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member knows fully well that the State Government cannot have a separate economic policy and it has to fall in line with the Central Government's economic policy but here and there the State Government can assist it and its economic policy is full employment, free employment, safeguarding of labourer's rights and full momentum to the economic reconstruction.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, கோவையிலே மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறக்க மாநில அரசாங்கத்தோடு மத்திய அரசு போதிய அளவுக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்பதுதான் காரணம் என்று பேசப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அதைப்பற்றி நேற்றே, அதற்கு முன் தினமோ இங்கே பேசப்பட்டது. ஆனால் இன்று காலையில் 5 கோடி ரூபாய் நூல்களை தேங்கிக் கிடக்கும் நூல்களை வாங்க மத்திய சர்க்கார் கொடுக்கச் சொல்லியிருந்தது இப்பொழுது விரைவு படுத்தப்பட்டு கைவசமாக்கும் நிலை வந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### சீரணி

* 75 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீரணிக்கு எதிராக அவரி ஓட்டப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா?

relationship between small landholders and all other 'vivasayees'. Such senas have a demoralising effect on the peace of the entire State. Will the Hon. Chief Minister categorically give a clear-cut order banning all these senas except the ' Prosperity Brigade ', a non-party organisation, which can go on. Other senas, by whatever party they are started, may be banned. Will the Hon. Chief Minister categorically say ' I am going to ban all these senas ' ?

THE HON. THIRU C. N. ANNADURAI: I do not know the legal implications. But this morning also I read that in one State they are starting what is termed as " Kranthi Sena ". The more the number of senas, the less their importance. The hon. Member made mention of a sena in Thanjavur. I am not aware of any sena there. Whenever the Communist Party want to convene a conference, they organise a volunteer force. Such a volunteer force was organised last year also when they had their conference at Thanjavur. So also whenever the Congress Party organised any conference, the ' Seva Dal ' volunteers are there. So there is no question of banning voluntary organisations. I have requested the Home Minister at the Centre, during the last Home Ministers' conference at Delhi to call for the objectives published by these organisations (senas) and go through them and if any one organisation publishes that its object is violence or disturbance of public peace or sovereignty and integrity of India, the Home Minister can advise these organisations to get themselves disbanded. So I think the initiative should come from the Centre and they are, I think on a look-up.

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சேரணிப் படைக்கு நமது தமிழ்நாடு சட்டசபை ரூ. 10 இலட்சம் ஒதுக்கியிருந்தும் கூட, அதுபற்றி பாராளுமன்றத்திலே ஒரு மெம்பர் கேள்வி கேட்டபொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இல்லையென்று மறுத்திருக்கிறார் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படி இருந்தால் அந்தத் தவறான தகவலை ஏன் கொடுத்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* மெம்பர் சொன்ன விவரத்தை அறிந்து அதற்குப் பிறகு பதில் அளிக்கிறேன்.

THIRU K. VINAYAKAM: Sir, I want to put a supplementary question.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* இல்லை.

THIRU K. VINAYAKAM: If you were to hear my question, you will appreciate it. The heavens are not going to fall if one more supplementary question is permitted. You could allow one more question.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த ஒரு கேள்விக்கு மட்டிலும் 6 துணைக் கேள்விகள் கேட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. வினாயகம் :** இதுதான் ரொம்ப இம்பார்டென்ட் க்வெச்டியன்.

You can shut out a member like this since you are in a convenient position. But I say, Sir, you must have more humanitarian consideration, be more large-hearted and more liberal.

## திருப்பூர் சப்-ஜெயில்

* 76 வினா.—*திரு. சு. துரைசாமி :* மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் சப்-ஜெயிலை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

*திரு. சு. துரைசாமி :* பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்திலே இருக்கிற அந்த சிறைச்சாலையானது போதுமான வசதி குறைவாக இருப்பதோடு, அங்கே சில நேரத்திலே அரசியல் காரணமாக சிறை செல்லுகின்றவர்கள் உணவு உண்பதற்கோ வேறு காரியங்களுக்கோ எந்தவிதமான வசதியும் இல்லை. அந்த அளவு மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. ஆகவே, அதை விரிவுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(திரு. கே. வினாயகம் அவர்கள் முதல் அமைச்சர் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சபையினுடைய நிகழ்ச்சி கெடாத வகையில் உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒருவர் பேசலாம்.

*திரு. சு. துரைசாமி :* பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்திலே இருக்கிற சிறைச்சாலையானது போதுமான வசதி இல்லாமல் இருக்கின்றது. அங்கே பல நேரங்களில் அரசியல் காரணங்களுக்காக 100, 200 பேர்கள் வருகிற நேரத்தில் உணவு உண்பதற்கும் மற்ற காரியங்களுக்கும் வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்த சிறைச்சாலையை விரிவுபடுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுது 44 கைதிகள் அங்கே இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்குள்ள வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது எதிர்பாராத சில சமயங்களில் ஏற்படுகிற

[1968 ஆகஸ்ட் 21

(இ) அப்படியானுல், அது விஷயமாக என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இவ் வினு எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் தமிழர் படை என்று ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதே, அதைப் பற்றிய கருத்து என்ன, அரசு அதை வரவேற்கிறதா? அந்தப் படையைச் சேர்ந்தவர்கள், அமைச்சர்களுக்கு எதிராக கறுப்புக் கொடி காட்டும் கட்சியைச் சேர்ந்த தலைவரின் உருவப் படத்தை எரிப்பதாகச் சொல்லப்படுகிறதே . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி சேரணியைப் பற்றியது.

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் கேட்பது சேரணிக்கு எதிரான அணி பற்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சேரணிக்கு எதிரான அணி அல்ல.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : சேரணிக்கு எதிராக எந்த அணியும் திரட்டப் போவதாகத் தகவல் இல்லை. ஆனுல், அதற்கிடையில் தமிழர் படையைப் பற்றி உறுப்பினரவர்கள் சொன்னுர்கள். அமைச்சர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டப்பட்டால். . . .

திரு. என். எஸ். வி. சித்தன் அமைச்சர்களுக்கு எதிராக கறுப்புக் கொடி காட்டப்பட்டால் அப்படிக் கறுப்புக் கொடி காட்டிய கட்சியின் தலைவர் உருவங்களை எரிப்பதைக் கொள்கையாக அறிவித்துள்ளது. அதை இந்த அரசாங்கம் வரவேற்கிறதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : கொள்கை அல்ல முதலில். அமைச்சர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டப் பட்டால் அமைச்சர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், அல்லது சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கவும் அதற்கான படைப் பிரிவினர்கள் நிரம்ப இருக்கிறுர்கள். அதற்கென்று தமிழர் படை ஏற்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : தலைவரவர்களே, தமிழர் படையைச் சார்ந்தவர்கள், அமைச்சர்களுக்கு கறுப்புக் கொடி காட்டுகிற நிகழ்ச்சிகளில் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்ப தாக உறுப்பினர் அவர்கள் சொன்னுர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.



1968 ஆகஸ்ட் 21]

திரு. செ. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, நாட்டுப் புனருத்தாரணத்திலே நல்ல நோக்கத்திற்காகக் கட்சிச் சார் பில்லாமல் ஆரம்பிக்கப்பட்ட அந்தப் படைக்கு எதிராக வேண்டு மென்றே பலவிதமாகத் தவருகக் கூறி வருகிறுர்களே, இதைத் தவிர்க்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியாது. அது சரியான நோக்கத்தோடுதான் ஆரம்பிக்கப்பட்டது என்று கருதுகின்ற உறுப்பினர்கள் அந்தக் கருத்தைப் பரப்பலாம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சேரணிக்கு எதிராக வெண்புறு சேனை என்று ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்லுகிறுர்களே, அது உண்மையா? வெண்புறு சேனை ஆரம்பிக்கப்பட்டது எந்தக் காரணத்தையொட்டி என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : சேரணிக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டது என்று தெரியவில்லை. ஏனென்றுல் சேரணி சில உருவான காரியங்களைச் செய்கிறது. அதற்கு எதிராக எந்தப் படையையும் நடத்த முடியாது. நண்பர் சொன்ன வெண்புறு சேனையைப்பற்றி அதிகமாகக் கேள்விப்படவில்லை. புறுவாக இருப்பதனுல் பறந்து போய் விட்டது என்று கருதுகிறேன்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, 1968-69 நிதி ஆண்டுக் கணக்கிலே 10 இலட்சம் ரூபாய் இந்த சேரணிப் படைக்காக ஒதுக்கப்பட்டது. அந்தத் தொகையில் இதுவரையில் என்னென்ன காரியங்கள், எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த அளவில் நடைபெற்றிருக்கின்றன, மாவட்டங்களுக்கு எந்த அளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். மாவட்டங்களில் சேரணிப்படை செய்த விவரங்களைக் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : அந்தந்த மாவட்டங் களிலே அதற்கான மலர்களெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இப்பொழுது நண்பர் அவர்கள் கேட்ட குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சேரணிப் படையிலே எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது, என்னென்ன பொதுக் காரியங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்க லாம். அவருடைய மாவட்டத்திலே சேரணிப்படை சம்பந்தமாக மலர் வெளியிடப்பட்டு அது அவர்கள் கைவசம் கூட இருக்கிறது என்று கருதுகிறேன்.

DR. H. V. HANDE: Does the Hon. Chief Minister feel the necessity to ban all these counter brigades whether it is 'Tamil Sena' or any other sena as the one formed in East Thanjavur (I do not know its name) with lathis, etc., trying to worsen the

நிகழ்ச்சியைப் பற்றி. அப்பொழுதைக்கப்பொழுது அது பரிசீலிக்கப்பட்டு, அந்த சிறைச்சாலையில் இடம் இல்லையென்றால் மத்திய சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிறார்கள்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** திருப்பூர் டிவிஷனில் மாஜிஸ்டிரேட் கோர்ட் இருந்தது. அப்பொழுது சிறைச் சாலைகள் கட்டப்பட்டிருக்கின்றன. சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் என்ற அளவில்தான் அவற்றை கட்டி வந்திருக்கிறார்கள். ஆகையால், அந்த டிவிஷனில் அந்த சிறைச்சாலைகளையாவது கொஞ்சம் விரிவுபடுத்துவதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது யோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இவையெல்லாம் சப்-ஜெயில்ஸ்—துணை சிறைச்சாலைகள்தான். மத்திய சிறைச்சாலைகள் வேறு இருக்கின்றன. சிறைச்சாலைகளை அதிகப்படுத்துவது என்பது இந்த அரசாங்கத்தினுடைய விருப்பம் அல்ல.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளிலே வேலை செய்கின்ற கைதிகளுக்கு மேற்கொண்டு ஏதாவது சௌகரியம் செய்ய சர்க்கார் உத்தேசித்து இருக்கிறதா ? அதே நேரத்தில் அவர்கள் பல்வேறு தொழில்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி நிதி கொடுக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனிக் கேள்வி போடவும்.

**திரு. கே. என். குமாரசாமி :** சார், திருப்பூர் சிறைச்சாலையிலே கைதிகளுக்குச் சாப்பாடு போடுகிற இடம் பப்ளிக் ரோடு மாதிரி இருக்கிறது. ஒரு 'பவுண்ட்'டாவது கட்டி, அவர்களுக்கு மறைவான இடத்தில் சாப்பாடு போடுவதற்கு யோசனை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினருடைய யோசனை இலாகாவுக்கு அனுப்பப்படும்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சிறையிலே இருக்கும் கைதிகள் தனியார் வேலைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாக—புதுக்கோட்டை அரண்மனை வேலைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாக—என்னிடம் ஆதார பூர்வமான தகவல் இருப்பதால் இப்படிப்பட்ட புகார் அரசுக்கு வந்திருக்கிறதா ? வந்திருந்தால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நானே அந்த புதுக்கோட்டை சிறைச்சாலையிலே இருந்தேன். அந்த மாதிரி ஒன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் அவரிடம் இருக்கும் ஆதார பூர்வமான தகவலை அரசுக்கு அனுப்பினால் அதைப்பற்றி உடனடியாக விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்கப்படும்.



## திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் ஊழியர் கூட்டுறவு நாணயச் சங்கம்

*77. வினு.—**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிப்பு பொது ஊழியர் கூட்டுறவு நாணயச் சங்கம் சில ஆண்டுகள் சரிவர இயங்காதது பற்றி அரசுக்கு மனு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிப்பு பொது ஊழியர் கூட்டுறவு நாணயச் சங்கம் 1—7—1965 முதல் 13—10—1967 வரை செயல் படாமல் இருந்தது. 5—11—1967-ல், அதன் புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள், உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய காலங்கடந்த கடன்களை வசூலிக்க நடவடிக்கை எடுக்கின்றனர். சங்கம் இப்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றிப்புப் பொது ஊழியர் கூட்டுறவு நாணயச் சங்கம், அந்த நாணயச் சங்கத் தலைவரின் கையாடல் காரணமாகவும், அவர் தவறான முறையில் நடந்து கொண்டதன் காரணமாகவும் தான் சரிவர இயங்கவில்லை. இவ்வாறு தவறான முறையில் நடந்து கொண்ட அந்தத் தலைவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதுபற்றி விசாரணை செய்து, குழு மாற்றி அமைக்கப்பட்டு, இந்த ஆண்டு கூட ரூ. 50,640 அந்தக் கூட்டுறவு சங்கத்திற்குக் கடன் கொடுத்து, இப்பொழுது சங்கம் ஒழுங்காக நடைபெறுவதாகத் தான் தகவல் இருக்கிறது. அந்தத் தலைவரின்மீது கூறப்பட்ட புகாருக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

**திரு. எஸ். அக்கினி ராஜு :** தலைவர் அவர்களே, முன்பிருந்த அந்தத் தலைவரே மீண்டும், மறுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இப்பொழுதும் அந்தத் தலைவர் மீது பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்பதற்கு பல ஆதாரபூர்வமான தகவல்களை அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தக் கடிதம் பற்றித் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, கூட்டுறவு சொஸைட்டியில் 100-க்கு 80 பங்கு சரிவர வேலை செய்யவில்லை. இது சம்பந்தப்பட்ட சொஸைட்டி வேலை செய்யாமல் இருக்கக் காரணம் என்ன—அந்தக் காலக் கெடுவரையில் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதிலே, அவர்கள் மீது கூறி இருக்கக்கூடிய குற்றச்சாட்டுகள், ரசீது பொறுத்தமாகக் கொடுக்கப்படவில்லை ; கௌண்டர்ஃபாயிலுக்கும் கொடுக்கப் பட்டதற்கும் சரிவரவில்லை. லோன் ரெக்கவரி அந்தப் புத்தகத்தில் லெட்ஜரில் குறிப்பிடப்படவில்லை ; சாதாரண வெள்ளைக் காகிதத்தில் ரசீது போட்டு கொடுத்தார் என்ற மூன்று குற்றசாட்டுகள் தான் என்னிடத்திலே இருக்கிறது. அதற்குப் பிறகு விசாரணை செய்து, பிறகு பொது உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி விசாரணை செய்து அதற்குப் பிறகுதான் புதிய நிர்வாக குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### ஒலகடத்துக்கு ஆரம்பச் சுகாதார நிலையம்

* 78 வினு.—திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி வட்டத்திலுள்ள, ஒலகடம் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் (Primary health centre) வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து கடந்த ஆண்டில் கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, ஒலகடம் கிராமத்தைச் சுற்றியுள்ள ஊர்களிலுள்ள மக்களுக்கு வைத்திய வசதி தேவையாக இருந்தால், 10 மைல்களுக்கு அப்பால் வர வேண்டியுள்ளது. ஆகவே, ஒலகடம் கிராமத்தில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஏற்கனவே இந்த பிளாக்கில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. இரண்டாவது பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை.

### இராயப்பேட்டை மருத்துவ மனை

*79 வினு.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—.

(அ) அரசாங்க இராயப்பேட்டை மருத்துவ மனையை விரிவு படுத்திக் கட்டடம் ஏதேனும் கட்டப்பட்டு வருகிறதா ?



(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) ஆம். எலும்பு முறிவு மருத்துவம் கதிர் வீச்சு மருத்துவம் முதலிய பிணிகளுக்குக் கூடுதல் இடவசதி அமைப்பதற்காக ஆறேகால் லட்ச ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையில் போதிய இட வசதியில்லாமல் வராந்தாவில் நோயாளிகள் படுக்க வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த ஆஸ்பத்திரி விரிவுபடுத்தி கட்டப்படுமா ? ஆரம்பத்தில் இந்தக் கட்டடத்தை விரிவுபடுத்துவதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ? பின்னால் இது குறைக்கப்பட்டதா ? இப்பொழுது வேலை தொடர்ந்து நடத்தப்படுகிறதா ? விரிவு படுத்துவதற்கான முயற்சி எப்பொழுது முடியும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ரூ. 6¼ லட்சம் செலவில் த்ரீ-ஸ்டோரிட் பில்டிங் கட்டுவதற்கு முடிவு எடுக்கப்பட்டது. இந்த ஆண்டு கிட்டத்தட்ட ரூ. 3 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ரூ. 4 லட்சம் செலவழிக்கப்படும்.

DR. H. V. HANDE : If I remember right, the original scheme was for Rs. 12-1/2 lakhs. Dr. P. V. Cherian was one of the members of the committee and they raised a fund of Rs. 1 lakh. Later on, the Government promised to give some more funds. Will the Minister be pleased to state what the fund criginally allotted was, what the orginal scheme was and whether there has been any reduction, when exactly the scheme is going to be completed and how many beds are going to be provided ? Will the Minister be pleased to give details about these things?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I have no particulars at present. My Friend may put a separa te question.

### மேலூருக்கு குடி நீர்த் திட்டம்

* 80 வினு—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு மருத்துவதுறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூருக்குக் குடி தண்ணீர் வழங்கும் திட்டத்தின்கீழ் பள்ளப்பட்டிக்கு அண்மையில் ஓடும் பாலாற்றிலிருந்தோ அல்லது திருப்புவனத்திற்கு அண்மையில் உள்ள வைகையிலிருந்தோ தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்பெறும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) வைகை ஆற்றிலிருந்தாவது அல்லது பெரியாறு வாய்க்காலிலிருந்தாவது மேலூர் பஞ்சாயத்துக்கு நீர் வழங்கும் திட்டத்திற்கான ஆய்வு வேலை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை முடிப்பதற்கு இந்த அரசு ஏதாவது கால அளவு நிர்ணயித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்பொழுது தான் ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு தான் அதைப்பற்றி சொல்ல முடியும்.

### I.A.S. Officers

* 61 Q.—Thiru A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the criterion adopted by this Government for recommending officers in the Madras Civil Service and Police Service for Indian Administrative Service and Indian Police Service; and

(b) whether officials from any particular department is preferred for conferring Indian Administrative Service?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : (அ) இந்திய ஆட்சிப் பணி இந்தியக் காவல் துறைப்பணி தேர்வுக்குழுவின் கூட்டம் ஆண்டுக்கொருமுறை நடக்கின்றது. இக் குழு 1955-ம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணி/இந்தியக் காவல் துறைப்பணி (பதவி உயர்வு மூலம் நியமனம்) விதி முறைகளின்கீழ் அமைக்கப்பட்டுள்ளதாகும். அந்த ஆண்டில் ஜனவரித் திங்கள் முதல் நாளன்று மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் காவல் பிற துணைக் கண்காணிப்பாளர் பதவியில் எட்டு ஆண்டுகளுக்குக் குறையாத கால அளவுக்குத் தொடர்ந்து பணியாற்றி முடித்தவர்களும், மாநில சிவில் பணியைக் காவல் துறைப் பணியைச் சேர்ந்தவர்களுமான நிலையான உறுப்பினர்களது நேர்வுகளை இக் குழு ஆராய்ந்து “தேர்வுப்பட்டியல்” ஒன்றைத் தயாரிக்கின்றது. அத் தேர்வுப் பட்டியல் மத்தியப் பணியாளர் தேர்வுக் கழகத்தினுலும், இந்திய அரசினுலும் ஒப்பளிக்கப்பட்ட பின்னர், அத் தேர்வுப் பட்டியலில் கண்டுள்ள மாநில ஆட்சிப்பணி காவல் துறைப்பணி அதிகாரிகள் முறையே இந்திய ஆட்சிப்பணி இந்தியக் காவல் துறைப்பணிக்கு நியமிக்கப்படுகின்றனர்.

(இ) இல்லை. தொடர்புள்ள துறைகளைச் சேர்ந்த தகுதியுள்ள அதிகாரிகள் அனைவரின் உரிமைகளும் இது குறித்து ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, இதுவரையில் சட்ட மன்றத் துறையிலிருந்து யாராவது இந்திய அரசுப் பணிக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

Thiru K. VINAYAKAM : While officers of the Madras Civil Services are being recommended for being taken in into the Indian Administrative Service is the principle of communal





representation or the principle of giving preference to the Backward Classes, Most Backward Classes and Harijans being observed as was being observed in the past?

The Hon. Thiru C. N. ANNADURAI : The question is about the criterion adopted by this Government for recommending officers in the Madras Civil Service and Police Service for Indian Administrative Service and Indian Police Service and I have explained the procedure. I have not explained the policy behind these things.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாநில சர்வீஸிலிருந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக்குவதற்குச் சிபார்சு செய்கின்ற கோட்டாவை அதிகப்படுத்துவதற்கு சர்க்கார் ஏதேனும் முயற்சி எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இது தொடர்பான பல பிரச்சினைகள் குறித்து கடிதப் போக்குவரத்துகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. க. இராமமூர்த்தி : ஐ.ஏ.எஸ், ஐ பி.எஸ். பதவிகளுக்கான சிபார்சைப் பொறுத்தவரைக்கும், ப்ரொவிஜர் சம்பந்தமாக இது வரையிலும் ஏதாவது அதிகாரிகளுக்கு விதிவிலக்கு அல்லது சலுகைகள் தரப்பட்டிருக்கிறதா ? அப்படி ப்ரொவிஜரிலிருந்து விதிவிலக்குத் தரப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : அதைப்பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தரலாம்.

### தனித் தமிழ்நாடு கோரும் சுவரொட்டிகள்

* 62 விஞ.—திரு. செ. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968 மார்ச் மாதத்தில் கோவை, ஈரோடு, திருப்பூர் ஆகிய நகரங்களில் தனித் தமிழ் நாடு கோரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : (அ) தனித் தமிழ் நாடு வேண்டுமென்கிற தமிழ்ச் சுவரொட்டிகள் 1968 மார்ச் திங்களில் கோயம்புத்தூரிலும் ஈரோட்டிலும் காணப்பட்டன.

(இ) 1967-ம் ஆண்டு சட்ட விரோதச் செயல்கள் (தடைச்) சட்டத்தின் 13-வது பிரிவின்கீழ் வழக்கு ஒன்றை ஈரோடு நகர்க் காவல் துறை பதிவு செய்துள்ளது. இது இப்போது புலனாய்வில் உள்ளது.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : நாம்-தமிழர் கட்சி என்கின்ற ஒரு கட்சி இந்த இயக்கத்திற்குப் பின்னால் இருக்கிறது என்பதையும், அதற்குப் பக்கபலமாக தமிழ் நாட்டிலுள்ள ஒரு பிரபல பத்திரிகை அதிபர் ஒருவர் இருக்கிறார் என்பதையும் இந்த அரசு உணர்ந்திருக்கிறதா? அப்படியானால், அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நண்பர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. சுவரொட்டிகள் இருந்திருப்பதாகத் தெரிகிறது. முன்னாலே நாம் தமிழர் கட்சியில் இருந்தவர்கள் அதிலிருந்து விலகி, அவர்கள் ‘ நாங்கள் நாம்-தமிழர் கட்சி ’ என்று சொல்லிக் கொண்டு இதை வெளியிட்டிருக்கிறார்கள். இவர்களுடைய நடவடிக்கைக்கும், கலைக்கப்பட்டுப்போன நாம்-தமிழர் கட்சியின் தலைவருக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதை நான் நேரடியாக அறிந்திருக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சுவரொட்டிகளைப் போலவே அண்மையிலே சீன அதிபர் மா-சே-துங் ஆதரவாளர் என்று கூறப்படும் ஒரு சாரார் தேசத்தின் ஐக்கியத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஊறு விளைவிக்கும் தன்மையிலே ஆயுதப் புரட்சி மூலமாகத்தான் நாட்டை கைப்பற்றலாம் என்பது போன்ற சுவரொட்டிகளை மதுரை மாவட்டத்தில் பல இடங்களிலும், இன்னும் தமிழ் நாட்டில் சில பகுதிகளிலும் வெளியிட்டிருக்கிறார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்? இதுபோன்ற தேசிய விரோத சக்திகள் இனி இந்தச் செயலில் ஈடுபடாமல் இருப்பதற்கு முன் எச்சரிக்கையாக என்ன ஏற்பாடுகளை இந்த அரசு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இதுபற்றி அரசுக்குத் தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றிய விவரங்களை அரசு சேகரித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : இந்திய அரசினுடைய மொழிக் கொள்கையிலே ஆத்திரம் அடைந்ததன் காரணமாக இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? ஆகவே, இதுபற்றி இந்த அரசு தன்னுடைய கருத்துக்களை மத்திய அரசுக்கு அறிவித்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மொழிக் கொள்கை விஷயமாக ஆத்திரம் அடைவது ஒன்று. அதற்காகத் தகாத செயல்களில் ஈடுபடுவது மற்றொன்று. தகாத செயல்களை இந்த அரசு ஆதரிக்காது.

THIRU K. VINAYAKAM : Sir, in pursuance of this kind of aspiration to have a seperate Tamilnad for one section of the people who are dissatisfied with the modern politics, is the Government aware of the fact that a Tamil flag (Thamizh kodi) had been



hoisted in Coimbatore on that day and the police officials were witnessing the demonstration without taking even the slightest action against people who indulged in such kind of unsocial activities and was a report about these activities sent to this Government?

THE HON. THIRU C. N. ANNADURAI : What the hon. Member says is true. The date is not correct; it was not on this date. It is true that a Tamil flag was hoisted. But the police took the flag and also registered a case.

*Report of Vigilance Commission*

* 63 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the One-man Commission of State Vigilance has pointed out that the "Speed Money" corruption in Government offices is deep-rooted:

(b) whether the agriculturists are the mute victims of the speed money technique; and

(c) if so, the steps the Government would take to eradicate this evil?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) ஆமாம். மு. ப. 10-00

(இ) அரசாங்க உதவி பெறுவதற்குத் தொடர்பான ஒவ்வொரு செயல்முறையிலும் இத் தீமை காணப்படுவதாகக் கண்காணிப்பு ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது. எனவே, உழவர்கள் மட்டுமே இதற்கு இலக்காகின்றனர் என்பதில்லை.

(உ) கண்காணிப்பு ஆணைக் குழுவின் சில செயற் குறிப்புகளை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

THIRU K. VINAYAKAM : Apart from examining those proposals or reports of the Vigilance Commission, what is the concrete action which this Government propose to take to put an end to this kind of ‘ Speed Money ’. ‘ Speed Money ’ is more or less a bribe given to the officers. This kind of evil has been there for many years and will the present Government take steps at least to minimise it, if it is not possible to eradicate it?

THE HON. THIRU C. N. ANNADURAI : In his question the hon. Member has admitted that it has been in vogue for a long number of years. This means (Thiru K. Vinayakam : I meant the British period in the intervening period there was no Congress Government! I can understand that he has no idea about the Congress regime because during a part of the period he was not there. But I am not accusing the Congress Government for that. Successive Governments have taken very sincere efforts to put down this thing, but the difficulty is that this does not come under the general term of ‘bribing’ because there are two ways of giving money and getting things done. This Speed Money is not given to do things out of the way and if the orders are scruti-

nised, they would be quite in order but the only purpose for which it is given is just to push on the paper from one table to another and it is very difficult to detect that because the individual who has given money will not divulge it because he has got the order that he wanted and the man who received it will not admit it and that is why it is difficult to put it down. The other way to put it down is to streamline the administrative machinery itself so that there need not be unnecessary delay and scope for such kind of speed money, I think that the Administrative Reforms Commission is seized of the matter and they will give concrete proposals for that.

THIRU B. VENKATASAMY : Sir, is there any proposal to include M.L.As. and M.Ps. in he concerned constituencies as non-officials in the Anti-Corruption Committee so as to help this Government to eradicate corruption completely?

THE HON. THIRU C. N. ANNADURAI : Even without M.L.As and others being members of the Committee, they have got every right to pass on any information in their possession to the Government.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Chief Minister whether a time-limit would be fixed in the matter of launching prosecutions regarding the cases conducted by the Vigilance Commission.

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I fully appreciate the anxiety with which the hon. Member wants things to be speeded up but law, as he, as a lawyer knows, has got to pass on through so many procedures and there are also certain natural delays. But as far as unnecessary delays are concerned, we will see to it that there is no unnecessary delay in the procedure.

*திரு. சா. மெய்யப்பன் :* சார், போலீஸ் டிபார்ட்மெண்டிலேயே இம் மாதிரியான விசாரணை விடப்பட்டிருக்கிறதே. அதற்குப் பதில், நீதி ஒழுங்காக நடப்பதற்காக, நீதிபதியையே நியமித்து, அவர்களுக்கு போலீஸ் பவர் கொடுத்து ஏற்பாடு செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* இந்த அரசுக்கு அப்படிப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை.

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* தலைவர் அவர்களே, இப்பொழுதும் நீதிபதியின் தலைமையில்தான் அந்தப் பிரிவு செயல்படுகிறது. அரசாங்கத்தின் கீழே செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THIRU T. MARTIN : Sir, in most of the cases that are brought before the court under the Anti-Corruption Act, we find that most of the Government officials were alleged to have received small sums of money ranging between Rs. 25 and Rs. 50 and also most of the cases were detected with the help of decoy witnesses after payment to the Government officials, So, one of the reasons that contributed to corruption among the Government Officials is the low-salary that is paid to them. Therefore, may I request the Hon. Chief Minister to state whether he will appoint a Pay Commission so as to revise the pay scales of these Government officials.



(No reply)

### அரசாங்க வழக்குகள் நடத்தக் கட்டணம்

** 64 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி :* மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அட்வகேட்-ஜெனரலுக்கு 1964, 1965, 1966, 1967 பிப்ரவரி வரையில் அரசாங்க வழக்குகளுக்காக வழங்கப்பட்ட தொகை வருடவாரியாக எவ்வளவு ?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* தேவையான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | வழங்கப்பட்ட மொத்தக் கட்டணம். |
|---|---|
| | ரூ. பை. |
| 1964 | 18,862—50 |
| 1965 | 19,787—70 |
| 1966 | 42,432—00 |
| 1967 ஜனவரி, பிப்ரவரி | 945—00 |

*திரு. எஸ். ஜே. ராமசாமி :* தலைவர் அவர்களே, முன்பு இருந்த அரசாங்கம், இவர்களுக்கு இவ்வளவு டி. ஏ. மற்றவை என்று ஒரு தொகை கொடுத்தார்கள். இப்பொழுது புதிய அரசாங்கம் பதவி ஏற்ற பிறகு மந்திரிகளுடைய சம்பளங்களெல்லாம் குறைத்துக் கொண்டு இருக்கும்போது, இவர்களுக்கும் குறைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* மந்திரிகள் குறைத்துக் கொண்டார்கள் என்றால் அதிகாரிகளுக்கும் குறைக்க வேண்டும் என்ற நியதி ஒன்றும் இல்லை. மந்திரிகளுடைய கீழே வேலை செய்கின்ற பல அதிகாரிகள் மந்திரிகளைப் போல நான்கு மடங்கு சம்பளம் வாங்கும் அதிகாரிகளும்கூட இருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, normally the Advocate-General must be a person who should be looked upon by other advocates. . . .

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* கேள்வியைக் கேட்க வேண்டும். கேள்வி நேரத்தில் எந்தவிதமான கருத்துக்களையோ, யோசனைகளையோ சொல்லக் கூடாது. கேள்வியை மட்டிலும் போடுங்கள்.

DR. H. V. HANDE : Sir, is it a fact that of late this Government have been seeking the advice of the Advocates other than the Advocate-General on vital matters and if so, is it not high time that the Government find an Advocate-General who is adequate for legal purposes?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I repudiate the allegation that the present Advocate-General is not adequate for our purpose.

*திரு. க. இராமமூர்த்தி :* தலைவர் அவர்களே, முன்னால் நம்முடைய அட்வகேட்-ஜெனரல் அவர்களுக்கு இதுவரையிலும், தரப்பட்ட பணம் அவருக்கு மட்டும் தரப்பட்டது. அவரே சுப்ரீம் கோர்ட்டுக்கும் சென்று வந்தார்கள். ஆனால் இப்பொழுது நம்முடைய வழக்குகளுக்கு வேறு வேறு வழக்கறிஞர்களையும் வைத்து அவர்களுக்குப் பணம் தந்து வருகிறோம் என்பதால், அரசுக்கு எவ்வளவு செலவு ஆகியிருக்கிறது என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* நான் கொடுத்த கணக்கே இரண்டு மூன்று மாதத்திற்குத்தான். முழு விவரமும் கிடைக்கும்போது, அந்தத் தகவலும் கொடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, is it not a fact that the emoluments to the Advocate-General are paid on the number of cases handled by him and they are not given salary or retainer's fee and if so, what is the amount which the present Government have paid after its own Advocate-General has been appointed and also what was the necessity for one Mr. M. K. Nambiyar to be appointed to conduct the Government case relating to admissions to the Medical College ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, it is not true that the Advocate-General is not paid anything. He is paid for his appearance and also monthly. As for the point that the hon. Member wants to know viz., why Mr. Nambiyar was asked to appear in the case relating to admissions to the Medical College, the Chairman of the Committee wanted that his interest should be represented by Mr. Nambiyar and in deference to his wishes, Mr. Nambiyar was asked to appear.

*திரு. ஆர். கருப்பையா :* தலைவர் அவர்களே, அரசினர் வழக்குகள் சம்பந்தப்பட்ட வரையில் ஆலோசனைகளைக் கொடுக்க சிறந்த அட்வகேட்-ஜெனரல் இருக்கும்போது, மோட்டார் ஆர்டினன்ஸ் சம்பந்தப்பட்ட வழக்கில் ஆலோசனைகளைக் கொடுக்கத் தனிப்பட்ட வக்கீல்களுக்கு ரூ. 1,500 அரசாங்கம் கொடுத்தது என்ற தகவல் வந்திருக்கிறதே, அது நியாயமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* இந்த விஷயங்களில் எந்த எந்த முறைகளில் செய்ய வேண்டும் என்பதற்கு அரசுக்கு உரிமை இருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Chief Minister the amount that has been paid to Mr. Nambiyar in that admission case?

THE HON. THIRU C. N. ANNADURAI : I have not got figures with me. If the hon. Member is very anxious to know it, he can put a separate question.



*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்வி.

### ஒத்திவைக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளித்தல்

*திரு. சா. மெய்யப்பன் :* தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சனை. இப்போது கேள்வி எண்கள் 61 முதல் 64 வரை எடுக்கப்பட்டது, விதிமுறைகளுக்குச் சரிதானா என்பது சந்தேகத்திற்கு இடமாக இருக்கின்றது. 37-வது விதிமுறையில், 'வினா கேட்கும் விதத்தையும், விடைகள் அளிக்கும் விதத்தையும் பேரவைத் தலைவர் முடிவு செய்வார்' என்று கூறுகிறது. ஆனால் விதி 35 (1) விதியில், 'ஒவ்வொரு நாள் கூட்டத்திலும் பட்டியலில் கண்டுள்ள வரிசைப்படி வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சர்களுக்காக விதி 35 (5)-ல், 'பட்டியலில் சேர்க்கப்பட்ட வினாவை அமைச்சர் வேண்டினால், பேரவைத் தலைவர் பிறிதொரு நாளுக்குத் தள்ளிப் போடலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. விதி 37-ஐப் பொறுத்த வரையில்,

'Subject to the rules, questions shall be put and answers given in such manner as the Speaker may, in his discretion, determine.'

என்று இருக்கிறது. ஆகையால் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் சபாநாயகர் செய்ய முடியும். விதி 35 (1)-ல்

Starred questions entered in the list of questions for a day shall be called, if the time made available for questions permits, in the order in which they stand in the list. லிஸ்டிலே எப்படி இருக்கிறதோ அப்படித் தான் போட வேண்டும். அமைச்சர் விரும்பினால் வரிசை மாற்றிக் கேட்கலாம். அப்படி வினாக்களை ஒத்தி வைக்கும்படி அமைச்சர்கள் கேட்டுக் கொண்டால், அடுத்த நாள்தான் அந்த வினாவைக் கேட்கலாம். விதிமுறையில் அவ்வாறு கூறப்பட்டுள்ளது. அப்படியின்றி, வினா ஒத்திவைக்கப்பட்ட நாளன்றே மீண்டும் வினாவைப் பட்டியலில் இடம் பெற வைக்கலாம் என்பது விதிமுறைக்குச் சரியாகப் பொருந்தி வரவில்லை. இப்போது நடந்தது விதிமுறைகளுக்குச் சரியானதல்ல. ஆகவே, இனிமேலாவது விதிமுறைகளுக்குட்பட்டு செயல்பட முடியுமா ?

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* உங்களுடைய பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ன ?

*திரு. சா. மெய்யப்பன் :* தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்கு மாறாக நாம் நடந்து கொண்டிருக்கிறோம். சிலநேரங்களில் என்னால் 9 மணிக்கு வருவதற்கு முடியாமல் இருக்கிறது. ஒத்தி வைக்கப்பட்ட வினாக்கள் பின்னால்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்று

[திரு. சா. மெய்யப்பன்] [1968 ஆகஸ்ட் 21

வரையறை செய்தால் உறுப்பினர்களுக்குக் கேள்வி கேட்பதற்கு வசதியாக இருக்கும். இப்பொழுது அமைச்சர் விரும்பினால் வினாக்களை பிறிதொரு நாளைக்குத் தள்ளிப்போடப்படுவதைப் போல உறுப்பினர்களும் விரும்பினால் வினாக்களைத் தள்ளிப் போடுவதற்கு விதிமுறை ஏதாவது பின்பற்றப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கனம் உறுப்பினர்கள் கொஞ்சம் நேரம் கழித்து வருவதற்கு எப்படி உரிமை இருக்கிறதோ, அப்படியே அமைச்சர்களுக்கும் எங்களுடைய வினாக்களைத் தள்ளிப் போடுங்கள் என்று கேட்கும் உரிமை இருக்கிறது; பின்னால் தள்ளிப் போடுங்கள் என்று கேட்ட வினாக்கள் ஒற்றி வைக்கப்பட்டு, அடுத்த கேள்வி கேட்பது முறையாக இருந்து வருகிறது.

**திரு. சா. மெய்யப்பன் :** தள்ளிப் போடப்படும் வினாக்களை அடுத்த நாளைக்கு அல்லாமல் அன்றே மீண்டும் எடுத்துக் கொள்ளும் உரிமை சபாநாயகருக்கு எந்த விதிமுறைகளின்கீழ் தரப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதற்கு விதிமுறையில் இடம் இருக்கிறது. எந்த விதி என்பதை நான் நாளைக்குக் கூறுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் எடுத்திருக்கும் பிரச்சினை சாதாரண பிரச்சினை அல்ல. விதி 35 (5)-ல்

" The Speaker, may, at the request of the concerned Minister postpone one or more questions entered in the list of questions for a day to a subsequent date." என்று இருக்கிறது. இதிலுள்ள பிரச்சினை என்னவென்றால், அமைச்சர்களின் வரிசைப்படி வினாக்கள் வருகின்றன. முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய வினாக்களைப் பின்னால் தள்ளிப் போடும்படி விருப்பப்படுவதாகத் தெரிகிறது. நாம் நமக்குள்ள சௌகரியத்தை உத்தேசித்து ஒரு அட்ஜஸ்ட்மெண்ட்செய்து கொள்கிறோம். முதலமைச்சர் அவர்களுடைய வினாக்கள் வரும் நாளெல்லாம் நேரம் கழித்தே வரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு)

### 3. ஒரு மணி நேர விவாதக் கோரிக்கை.

### சீரணிக்கு எதிராகத் திரட்டப்படும் அணி.

THIRU K. VINAYAKAM : I wanted to put a supplementary question about " Prosperity Brigade ", about which there was a question in the morning but you, Sir did not allow me to put my supplementary question. The Hon. Deputy Speaker was not willing to accede to my request. That matter is a very urgent and important matter of public importance. There are conflicting views about this brigade. When we were talking about ' Prosperity



1968 ஆகஸ்ட் 21] [Thiru K. Vinayakam]

Brigade ' , there was talk about " வெண் புறா " and the Hon. Chief Minister jocularly remarked that as that were " புறாக்கள் " they might have flown. That does not satisfy the questioner or the people who want more information. So I request the Hon. Deputy Speaker to allot one hour to debate on " Prosperity Brigade " as well as "anti Prosperity Brigades. "

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பேரவையிலே மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டு, நான்கு நாட்கள் விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சமயத்தில் அந்தக் கருத்துக்களை யெல்லாம் சொல்லிக் கொள்ளலாம். இப்பொழுது உங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாததற்கு வருந்துகிறேன்.

### 4. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### வட ஆர்க்காடு தேசிய உழவர்களின் அமைதியான போராட்டமும் திரு. சகாதேவக் கண்டர் உண்ணாவிரதமும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்தபடியாக, திரு. கே. விநாயகம் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

" To discuss about the peaceful agitation launched by national agriculturists of North Arcot headed by Thiru S. M. Annamalai, who was arrested and released later on 17th August 1968 and on 19th August 1968 headed by Sri K. Sahadeva Kandar, M.L.A., who subsequently went on fasting before the Fort St. George. "

இது அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டதாகும். சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், கைது செய்வது போன்றவற்றிற்காக ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு, பேரவையில் அதை அனுமதித்துத் தீர்ப்புக் கொடுக்கப்பட்டதாக இல்லை. இது அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாகையால் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

### 5. அரசினர் தீர்மானம்.

### விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, ஒரு நாளைக்கு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்தான் கொண்டு வரலாம் என்ற விதி இருந்து வருகிறது. மூன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்கள். கொண்டுவர, பேரவை அனுமதியளிக்கத் தீர்மானம் கொண்டுவரும்படி, அவை முன்னவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, " விதி 41 (3)-ன் படி, ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவர தடை இருப்பதை இன்று தளர்த்த வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 ஆகஸ்ட் 21

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### 6. கவன ஈர்ப்பு

#### (1) மதுரையில் திரு. முத்து, திரு. கதிரவன் கலந்து கொண்ட ஊர்வலத்தின்மீது கல், சோடா புட்டி வீச்சு.

**திரு. பெ. மலைச்சாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியமான காரியம் ஒன்றை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது,

கடந்த 21—7—71968-ம் நாள் மதுரையில் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் திரு. நெடுஞ்செழியன், மேலவை உறுப்பினர் திரு. முத்து, சட்டமன்ற உறுப்பினர் திரு. கதிரவன் ஆகியோர் கலந்து கொண்ட ஊர்வல நிகழ்ச்சியில் குறிப்பிட்ட அரசியல் கட்சியினர் சிலர் ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள்மீது கற்களையும், சோடா பாட்டில்களையும் எறிந்து காயப்படுத்தியதோடு அமைச்சர் போன்றவர்களின் உயிருக்குத் தீங்கும் விளைவிக்க முயன்றுள்ள நிகழ்ச்சிபற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை இப் பேரவை விவாதிக்க வேண்டும்."

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்காசி துணைத் தேர்தல் வெற்றி விழாக் கொண்டாடுவதற்காக 1968 ஜூலை 21-ம் தேதி இரவு, மதுரையில் தி.மு.க. மாபெரும் வெற்றி ஊர்வலம் ஒன்றை நடத்தியது. கல்வித் துறை அமைச்சரும், திருவாளர்கள் கே. எம். கதிரவன், எம்.எல்.ஏ., எஸ். முத்து, எம்.எல்.சி., எஸ்.எஸ். தென்னரசு ஆகியோர் இவ் விழாவில் கலந்துகொண்டனர். விரிவான அளவில் காவலர் பந்தோபஸ்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரவு சுமார் 8 மணி அளவில் ஊர்வலம் வடக்கு மாசி வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, தி.மு.க உறுப்பினர் ஒருவருக்கும் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. காங்கிரஸ் கொடிகளும் தோரணங்களும், தி.மு.க. ஊர்வலத்தினரால் சேதப்படுத்தப்பட்டதாக காங்கிரஸ்காரர் புகார் செய்தார். காவலர் தலையிட்டு அவர்களைப் பிரித்துவிட்டனர். இதற்கிடையில் ஊர்வலத்தில் கடைகோடியில் வந்து கொண்டிருந்த இருவர் காங்கிரஸ்காரர்கள் கல்வீச்சினால் தாங்கள் காயமடைந்ததாகக் கூறினர். பரமேஸ்வரன் பிள்ளை சந்தில் காமராஜர் பிறந்தநாளைக் கொண்டாடிய காங்கிரஸ்காரர்கள் கல் வீசியதாகவும் அவர்கள் கூறினர். காவலர் தக்க சமயத்தில் தலையிட்டு கைகலப்பு எதுவும் நேராமல் தவிர்த்தனர். பின்னர் இரவில் காங்கிரஸ்காரர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட சிலர் இரண்டு இடங்களில் அலங்கார வளைவு கம்பங்களைச் சேதப்படுத்த முயன்றனர். ரோந்து காவலர் அவர்களைத் துரத்திச் சென்று மேற்கொண்டு அத்தகைய



1968 ஆகஸ்ட் 21] [திரு. சி. என். அண்ணாதுரை]

சம்பவங்கள் நிகழாமல் தடுத்தனர். அமைச்சர் கலந்து கொண்ட ஊர்வலம் பொதுக் கூட்டம் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகள் அமைதியாக நடந்தேறின. எந்தவிதமான எதிர்விளைவும் இன்றி நிலைமை அமைதியாக இருக்கின்றது.

#### (2) வேலையிழந்த இந்தி ஆசிரியர்களின் நிலை.

THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Sir. I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, viz., the plight of Hindi Pandit who are thrown out of their appointment in the State.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மும்மொழித் திட்டத்தை நீக்கிவிட்டு, இருமொழித் திட்டத்தைக் கொண்டு வருவதென்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளதன் விளைவாக, இம் மாநிலத்தில் பல்வேறு நிர்வாகங்களின்கீழ் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் இந்தி ஆசிரியர்களைப் பணியிலிருந்து அகற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தகுதியுள்ள இந்தி ஆசிரியர்களைப் பணியிலிருந்து அகற்ற வேண்டாமென பள்ளிக் கல்வித் துறை இயக்குநருக்கு அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. அவர்களுக்கு எந்த மாற்று வேலைகள் அளிக்கப்பட்டாலும் அவர்கள் பெறும் சம்பளம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. கீழ்க் கண்ட வகை இந்தி ஆசிரியர்கள் தான் பாதிக்கப்பட்டனர். அவர்கள் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததே அதற்குக் காரணமாகும். (1) தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தகுதி பெறு இந்தி ஆசிரியர்கள் (2) பகுதி நேர இந்தி ஆசிரியர்கள்.

உள்ளாட்சி நிறுவனங்களின்கீழ் உள்ள பணியாளர்களுக்குப் பொருந்தும் விதிகளின்படி, தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் பணிகள், எந்த அறிவிப்பும் கொடுக்கப்படாமல் அல்லது எந்தக் காரணமும் காட்டப்படாமல் எந்தச் சமயத்திலும் குறிப்பாகப் பள்ளியாண்டின் முடிவில் இறுதி செய்யப்படும். அத்தகைய தற்காலிக இந்தி ஆசிரியர்களின் பணிகளை இறுதி செய்ய ஏற்கெனவே உள்ள விதிகளின் கீழ்ச் சில மாவட்டக் கல்வி அதிகாரிகளும் மகளிர் பள்ளிகளின் ஆய்வாளர்களும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது. தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள, ஆனால் தகுதி பெற்றுள்ள அத்தகைய ஆசிரியர்களுக்குக்கூட மாற்று வேலை அளிக்கும்படி அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு மகளிர் பள்ளிகளின் ஆய்வாளர்களுக்கும் பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் தேவையான கட்டளைகளைப் பிறப்பித்துள்ளார்.

## (3) தேசிய மாணவர் படை கலைப்பால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை

DR. H. V. HANDE: Sir, I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, viz., the serious situation arising out of the abolition of the N.C.C. training from colleges and the need to reintroduce the N.C.C. training or bring into force an alternate scheme of disciplined military training.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 1948-ம் ஆண்டு தேசிய மாணவர் படைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 31/1948) விதித்துறைகளை யொட்டி கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் தேசிய மாணவர் படை அமைக்கப்பட்டது. இந்தத் திட்டம் செயல்படத் தொடங்கியபோது படைப்பயிற்சி பெற்றவர்களுக்கு ஆங்கிலத்தி லேயே பயிற்சி அளிக்கப்பட்டது. 1957-ம் ஆண்டில் பயிற்சி மொழி இந்தியாக மாற்றப்பட்டது. இரண்டாண்டுகளுக்கு முன்னர்வரை, தேசிய மாணவர் படையில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் பாடங்களும் இந்தி மொழியிலேயே கற்பிக்கப்பட்டன. தேசிய மாணவர் படையினருக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகளைக் கருதி, தேசிய மாணவர் படையில் பயிற்சி மொழி ஆங்கிலமாகவோ, வட்டார மொழியாகவோ இருக்குமென அப்போதிருந்த முதலமைச்சர் சட்டமன்றப் பேரவையில் அறிக்கையிட்டார். எனினும், தேசிய மாணவர் படை அதிகாரிகள் செய்துகொண்ட முறையீட்டின்மேலும், ஆங்கிலக் கட்டளைச் சொற்களை அறிந்த அதிகாரிகள் போதிய அளவில் கிடைக்காமையாலும், கட்டளைச் சொற்களுக்கு மட்டும் இந்தியைப் பயன்படுத்தலாமென்றும், பாடங்களை ஆங்கிலத்திலாவது தமிழிலாவது மாணவர்களுக்குக் கற்பிக்கலா மென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டன.

1967-ம் ஆண்டு ஆட்சி மொழி (திருத்த) சட்டம் நிறைவேற்றப் பட்டதிலிருந்து நிலைமை பெரிதும் மாறிவிட்டது. இச் சட்டத்தின் கீழ் எல்லா மாநிலங்களும், மத்திய அரசாங்கத்துடன் அலுவல் நடக்க வேண்டுமென்றால் ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் நடத்த வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இதற்கு இந்தி ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

1967-ஆம் ஆண்டில் ஆட்சிமொழி (திருத்த) சட்டமும், அதற்குத் தொடர்பான தீர்மானமும் இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டதன் விளைவாகத் தோன்றியுள்ள நிலைமையை இந்தப் பேரவை 1968 ஜனவரி 23-ஆம் நாளன்று ஆலோசித்தது. மத்திய அரசின் மொழிக் கொள்கையைச் செயல்படுத்தக்கூடாது என்ற இந்த அரசாங்கத்தின் விருப்பத்தை யொட்டியும், தமிழ் நாட்டு மக்களும் மாணவர்களும் வெளியிட்ட கருத்துக்களை யொட்டியும், தேசிய மாணவர் படையிலும், அதைப்போன்ற படைகளிலும் இந்தி மொழிச் சொற்கள் ஆணைச் சொற்களாகப்



பயன்படுத்தக் கூடாது என்றும், இந்தக் கருத்தை மத்திய அரசு ஏற்காவிட்டால் தேசிய மாணவர் படை கலைக்கப்பட வேண்டு மென்றும் இந்தப் பேரவை தீர்மானித்தது.

இத் தீர்மானத்தை யொட்டி, இந்திய அரசுக்குக் கீழ்க்கண்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இம்மாநில மாணவர்களுக்குப் புரியாத இந்தி மொழியில் கட்டளைச் சொற்கள் இருப்பதில் பொருளில்லை. தேசிய மாணவர் படையினருக்கு ஆங்கிலக் கட்டளைச் சொற்களைப் பயன்படுத்தி பயிற்சியை அளிப்பதற்கென போதுமான அதிகாரிகள் உள்ளனர். ஆங்கிலக் கட்டளைச் சொற்களைப் பயன்படுத்துவதை எவரும் மறுக்கமாட்டார்கள். எந்தக் காரணத்தைக் கருதியாவது, ஆங்கிலக் கட்டளைச் சொற்களைப் பயன்படுத்துவதற்கு மத்திய அரசு ஏற்பு அளிக்காவிட்டால், தமிழ் நாட்டில் தேசிய மாணவர் படைப் பயிற்சித் திட்டத்தை அறவே கைவிட வேண்டிய அவசியம் ஏற்படலாம். அதற்குப் பதிலாக உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்றதும், குறைந்த செலவு ஆகக்கூடியதுமான மற்றொரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

இந்திய அரசினரிடமிருந்து ஆதரவான பதில் கிடைக்கும் வரையில், தேசிய மாணவர் படைக்குத் தொடர்பான வகுப்புகளில், உடற்பயிற்சிகளில் அல்லது முகாம்களில் கட்டளை இடும் போது இந்தி சொற்கள் எவற்றையும் பயன்படுத்தக் கூடாது என்று (தமிழ்நாடு-புதுச்சேரி) தேசிய மாணவர் படை இயக்குநருக்கு ஆணை இடப்பட்டது.

இதுகுறித்து இந்திய அரசுடன் இன்னும் கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது. இதில் இம் மாநில அரசாங்கத்தின் நிலை கீழே விளக்கப்படுகிறது:—

முதலாவதாக ஆட்சி மொழிகள் சட்டத்தை நிறைவேற்றியதின் மூலம், மாநில அரசாங்கம் விரும்பும் வரையில் ஆங்கிலத்தை ஆட்சிமொழியாகக் கொண்டிருக்கிற மாநிலங்களுக்கு உரிமையளிக்கப்பட்டுள்ளது; எனவே, தேசிய மாணவர் படையில் இந்தி "ஆணைச்சொற்களை" நீடிக்க வேண்டுமென வலியுறுத்துவதற்கு அவசியமில்லை. இரண்டாவதாக, மாணவர் படையினருக்கு ஆங்கில அல்லது வட்டார மொழி "ஆணைச் சொற்களைப்" பயன்படுத்திப் பயிற்சியளிக்கப் பல அதிகாரிகள் உள்ளனர்; இந்தி "ஆணைச் சொற்கள்"தான் பயன்படுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தும் அவசியமில்லை. மூன்றாவதாக, 1948-ம் ஆண்டு மத்தியச் சட்டம் செயல் அனுமதி வழங்குந் தன்மையில் அமைந்துள்ளது; தேசிய மாணவர் படையில் சேருவதற்கு அதில் மாணவர் எவரும் கட்டாயப்படுத்தப்படவுமில்லை; இம்மாநிலத்தில் தேசிய மாணவர் படையில் மாணவர்கள் சேர்ந்தாக வேண்டுமென்று மாநில அரசாங்கம் கட்டாயப்படுத்த வேண்டுமென்றும் இச் சட்டத்தின் கீழ் வலியுறுத்தப்படவுமில்லை. இம்மாநிலத்தில் எதிர்காலத்தில் தேசிய மாணவர் படை இயங்குவது, இந்திய அரசிடமிருந்து வரும்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 ஆகஸ்ட் 21

இறுதி மறுமொழியின் தன்மையைப் பொறுத்து உள்ளது. இந்திய அரசு, உணர்ச்சிவயப்படாது இச் சிக்கலைத் தொலை நோக்குடன் ஆராய்ந்து இந்த அரசாங்கத்தின் கருத்துரையை ஏற்குமென்று நம்பப்படுகிறது.

தேசிய மாணவர் படைக்குப் பதிலாக மாற்றுத் திட்டங்கள் செயல்படுத்துவதைப் பொறுத்தவரையில், இந்திய அரசு இரண்டு அமைப்புக்களைக் கூறியுள்ளது. தேசியப் பணிப்படை, தேசிய விளையாட்டு அமைப்பு ஆகிய இரண்டு அமைப்புகள் குறித்துக் கருத்தறிவித்துள்ளது. பல்கலைக் கழகங்களுடன் கலந்து, இச் செயற்குறிப்புகள் ஆராயப்பட்டு வருகின்றன; இவை குறித்து நாளடைவில் முடிவு எடுக்கப்படும்.

Dr. H. V. HANDE : Sir, there is a stalemate on this issue. The boys do not know whether they will be given an opportunity to have this training or not. The Chief Minister also has given a statement sometime ago that N.C.C. training is optional. In view of these things there is a sort of confusion in the minds of the students as to when exactly they are going to get this training. Will the Government give some sort of categorical assurance that some training will start on such and such a date? Why should we wait till the Central Government gives a reply? Why should we not start some sort of military training at an early date so that boys may not be sitting idle? In view of this, will a snap decision be taken at this stage?

The Hon. Thiru C. N. ANNADURAI : The answer is in the question itself. A decision has not been taken as yet, because there is a stalemate. If one way or the other it is decided, the State Government can begin something. But, as the hon. Member said, there is a stalemate. That should be first cleared.

(Thiru K. Vinayakam and Dr. H. V. Hande rose.)

Dr. H. V. HANDE : Under the rules, with permission of the Chair 'one or two questions may be asked by the same member'. I can ask, but he cannot ask.

There are at present 1,000 or 1,500 civilian employees of various categories like clerks, head clerks and lascars. They also are in confusion. They do not know what their future will be and whether they will be thrown out of employment. Will the Chief Minister or the Minister for Education give some sort of assurance, for these civilian employees who are very much scared ?

The Hon. Thiru C. N. ANNADURAI : The hon. Member is fully aware of the delicacy of the problem and also about the emotional surcharge that has been created in the N.C.C. itself last year. There is still correspondence going on between the Central Government and the State Government. Also the Ministers in



1968 ஆகஸ்ட் 21] [Thiru C. N. Annadurai]

the Centre and the Ministers here are carrying on a dialogue. Since we cannot categorically state now what the outcome of the correspondence and the dialogue will be, I cannot give any assurance about what the future will be or about the shape of things to come. But this much is certain that our stand is logical, maintainable and legal. மு.ப. 10-30

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: இது சம்பந்தமாக இந்த அரசாங்கம் என்ன முடிவு எடுக்கப் போகிறது? எடுத்த முடிவை எப்போது வெளியிடப் போகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அதற்கான முடிவை எடுத்தவுடன் அறிவிக்கப்படும்.

## 7. அறிவிப்பு.

### அவை அலுவல் குழுவின் தீர்மானங்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி பேரவையின் திருத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலை அறிவிக்கிறேன் —

| | |
|---|---|
| Thursday, 22nd August 1968 ... | Non official day. |
| Friday, 23rd August 1968 and Saturday 24th August 1968 | Discussion on the No-Confidence Motion. |
| 25th August 1968 | Sunday—Holiday. |
| Monday, 26th August 1968 and Tuesday 27th August 1968 | Discussion on the No-Confidence Motion. |
| Wednesday, 28th August 1968 | Discussion on the Annual Financial Statement of the Madras State Electricity Board for 1968–69 (Continued.) |
| Thursday, 29th August 1968 | Discussion on the Annual Financial Statement of the Madras State Electricity Board for cluded.) |

8. அரசினர் மசோதாக்கள்.

(1) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா (ச. பே. மசோதா எண் 8/1968).

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Deputy Speaker, Sir, I beg to move—

@' That the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1968 be taken into consideration.'

In the case *State of Punjab* vs. *Jullundur Vegetable Syndicate*, the Supreme Court has held that unless there is statutory provision permitting assessment of a dissolved firm, no assessment of a firm after its dissolution can be made under the East Punjab General Sales Tax Act, 1948. At present there is no specific provision in the Madras General Sales Tax Act, 1959 for assessment of dissolved firms and associations and Hindu undivided families which have been partitioned. The absence of a provision to assess the tax on the business of a firm after it has been dissolved is a temptation which would encourage dissolution whenever it is profitable. Assessments have been made in the past on firms after their dissolution. These assessments would become illegal in the light of the Supreme Court's decision under reference, and the State may have to refund large amounts of tax collected, since the inception of Madras Act 1 of 1959. To get over the situation created on account of the Supreme Court's decision, it has become necessary to amend the Madras General Sales Tax Act, 1959 suitably with retrospective effect and to validate past levy and collection of tax since the inception of the principal Act. The Bill before the House accordingly contains the necessary provisions in this regard.

Clause 2 of the Bill provides for making specific reference to firm and other association of persons in the definition of "dealer" in section 2 of the principal Act

Clause 3 of the Bill seeks to insert a new section 19-A in the principal Act.

Clauses 2 and 3 of the Bill have been given retrospective effect from the inception of Madras Act I of 1959.

Clause 4 of the Bill seeks to amend section 53 of the principal Act so as to make provision for rules being made for the assessment of dissolved firms and associations and Hindu undivided families which have been partitioned.

Clause 5 of the Bill validates all taxes levied or collected or purporting to have been levied or collected under the principal Act before the date of publication of the proposed Amendment

@ Published in the *Fort St. George Gazette* Extraordinary; dated 17th August 1968



Act in the *Fort St. George Gazette* in respect of any Hindu undivided family, firm or other association of persons after its partition or dissolution as the case may be.

Sir, I commend the motion for the acceptance of the House.

DR. H. V. HANDE : Sir, with regard to this Bill, I wish to offer a few remarks for consideration by the Hon. Minister for Food. Sir, we do not know how many cases would come under the purview of this Bill and what is the total amount to be collected under this amending Bill. I would have been happier if the Hon. Minister had given us some indication or the exact reasons that prompted him to bring forward this Bill. Of course, it has been clearly stated in the Statement of Objects and Reasons appended to the Bill that the judgment of the Supreme Court in the case, State of Punjab *vs.* Jullundur Vegetable Syndicate has prompted this Government to being forward this amending Bill. But I would like to know from the Hon. Minister for Food, how many such cases would be in our State.

Then with regard to Section 19-A of the Act relating to the liability to tax of a partitioned Hindu family, dissolved firm, etc., I want to know whether that liability is only in respect of the Hindu undivided family or it is also in respect of other communities. I would be happy if the Hon. Minister for Food would be able to tell us whether it is only for the Hindu joint family or any other joint family.

Now I would like to refer to another point without taking much time of the House. How are we to collect the tax after the dissolution of a particular agency and what is the *modus operandi* by which the Governmental agency is going to collect this tax and whether it would be possible to do so ? I would like the Hon. Minister to clarify this point also.

Then I would like to refer to another matter concerning hire purchase transactions of motor vehicles. Until the year 1954 the sales tax was being collected on hire purchase transactions from the parties and paying the same to the Government. But by virtue of a Tribunal's judgment in or about the year 1954 all such transactions were held not to be sales under the Madras General Sales Tax Act and thereby not liable to Sales Tax. But the Department have not refunded the amount already collected. Then, during the year 1958 or so by virtue of a judgment of the Madras High Court in I. K. Johar and Company *vs.* the Deputy Commercial Tax Officer, the Sales Tax Department reopened the past assessments and levied tax on the hire purchase transactions. Then in 1964 there had been a judgment of the Supreme Court in the case of I. K. Johar and Company, that the hire purchase transactions were sales but the sale was said to be complete only when all the instalments were fully paid and the hirer became the owner of the vehicle and further the sale value should be taken as the depreciated value of the vehicle at the time

of the closure of the hire purchase agreement and not the original value of the hire purchase agreement. In spite of this judgement, the Department has not disposed of the cases relating to such transactions for the last three or four years.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The hon. Member should confine his remarks to the subject-matter before the House and not to other matters.

DR. H. V. HANDE : I have practically finished.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I have no objection to the hon. Member raising the point. But in this particular amendment, is that necessary?

DR. H. V. HANDE : My submission to the Hon. Minister is that he may please apply his mind to the important points I have raised. I am quite aware of my responsibilities. He may apply his mind particularly to the last point I have raised. I would like the Hon. Minister to apply his mind to the point that the department's work has to be toned up. I think as Members of the Legislature we have the right to say that the department is not properly functioning and that it has to be toned up. That is the relevant point. The working of the Department of Sales Tax has to be toned up. That is the department which is bringing large revenue. Whatever cases are pending in the department may be disposed of without subjecting the people to extraordinary delays. I would like the Hon. Minister also to tell us how he is going to dispose of cases after dissolution of partnership, whether it be of Hindus or other communities.

* THIRU R. PONNAPPA NADAR : I wish to offer a few remarks regarding this Bill. The first is insertion of Section 19 (A) concerning liability to tax of a partitioned Hindu family, dissolved firm, etc. It has been proposed to give retrospective effect. Whether it would be proper for the Legislature to give retrospective effect to fiscal statues is a matter which will have to be considered by the Hon. Minister. It may be argued that legislative sanction may be given for reasonable collections from firms which have been already dissolved. That is the object that has been stated by the Hon. Minister. But my friend Mr. Hande pointed out that hire purchase will not strictly come within the ambit of amendment which is the subject under discussion. But so far as Section 19-A is concerned, my main objection is that the entire Act should not be given retrospective effect. That is the only point for consideration. It may be said the collections already made will have to be then refunded. Appreciating that point, will it be in order to give retrospective effectto a fiscal statute ? It has been ruled by our High Court as well as Supreme Court that in the matter of fiscal statutes very seldom retrospective effect is given. Of course the Hon. Minister may say that the previous Government resorted to this practice, That would be no answer. Anticipating all that my submission is that the clause giving retrospective effect may be reconsidered.



மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களும், எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் ஒன்றிரண்டு சந்தேகங்களைத்தான் எழுப்பியிருக்கிறார்கள். இந்தத் திருத்தம் வந்ததின் நிலைமையே, டிஸால்வ் செய்யப்பட்டிருக்கும் இந்த மாதிரி கம்பெனிகள், இந்து கூட்டுக் குடும்பம் இவைகளைப்பற்றிய ஒரு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பால்தான் வந்தது. சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புகூட இம்மாதிரி அஸெஸ் செய்யவேண்டாம் என்று போடவில்லை. இப்படிப்பட்ட ஒரு ப்ரொவிஷன் இல்லாமல் இருக்குமானால், அஸெஸ் செய்ய உரிமை இல்லாதிருக்குமானால் அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என்று தீர்ப்பு வழங்கினார்கள். அந்தத் தீர்ப்பு ஒரு சங்கடமான நிலையை ஏற்படுத்திவிட்டது. இந்த அஸெஸ்மென்ட்கூட டிஸால்வ் செய்யப்பட்ட கம்பெனிகள் அல்லது மற்றவைகளின் மீது அல்ல. அதற்கு முன்னால் அவர்கள் அங்கத்தினர்களாக அதில் இருந்தார்களே அதற்காகப் போடப்பட்ட வரியே தவிர வேறல்ல. சட்டப்படி இப்படிப் போடுவது தப்பு என்று சுப்ரீம் கோர்ட் சொல்லவில்லை. நம் விற்பனை வரிச் சட்டத்தில் அந்தப் பகுதி இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி இல்லாமல் இருக்குமானால் பல பேர்கள் கலைத்து விடுவார்கள். அப்போது பல இலட்சக்கணக்கான ரூபாய் ஏமாற்றப்படுவதற்கு வழி ஏற்படும்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னதுபோல் இது 'ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கூட அல்ல. ஏற்கனவே கூட்டுக் குடும்பங்கள் அல்லது கம்பெனிகளில் அங்கத்தினர்களாக இருந்தவர்கள் நியாயமாக செலுத்தவேண்டியதற்காக அதற்கான அஸெஸ்மென்ட் செய்யும் வகையில்தான் இது இருக்கிறது. ஆகவே, இது இந்துக்களுக்காகத்தான் ஏற்பட்டது, மற்றபடி முஸ்லீம்கள், மற்றவர்களுக்கு இல்லை என்ற நிலை இல்லை. நாம் இப்படிச் செய்யாவிட்டால் 1959-ல் இருந்து கம்பெனிகள், கூட்டுக் குடும்பங்கள் இவைகளுக்கான வரி வசூல் செய்யப்பட்டவை, ஏற்கனவே கொடுக்கப்படாமல் இருப்பது போவதற்கான வாய்ப்பிருக்கிறது. அதோடு இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு பல பேர்கள் ஏமாற்றும் நிலை ஏற்பட்டுவிடும். அதற்காகத்தான் இந்த மசோதா இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் 'ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுப்பதற்கும், வேறு இடத்தில் 'ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுப்பதற்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : After 1964 or 1965, have there been cases of joint families dissolving and trying to cheat Government? Or is this Bill being brought forward just because of the Supreme Court's judgment in the Punjab case ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : There is always the temptation of the people trying to evade tax and this Bill is to curb such bad tendencies.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள கேள்வி—

'தமிழ்நாடு 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 8/1968) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.'

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள கேள்வி:

"பிரிவு 3, மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU S. MEIYAPPAN : Sir, I move the following amendment :—

'In sub-clause (a) of New Section 19 (A)—

(i) after the words "the tax payable under" insert the words and figures "section 12 (1) and (2) of";

(ii) delete the words "and all the provisions of this Act shall supply accordingly";

(iii) in sub-clause (b) of New Section 19 (A) delete the words "penalty or other amount" and after the words "payable under" add the words and figures "section 12 (1) and (2) of",

The amendment was duly seconded.

திரு. சா. மெய்யப்பன்: இதுபற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மொத்தமாக வரி போடும் சட்டம் என்று வரும்போது அரசினர் சிறிது கவனமாக இருக்க வேண்டும். வருமான வரி சட்டத்திற்கும், இந்த விற்பனை வரிச் சட்டத்திற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. வருமான வரிச் சட்டத்தைப் பொறுத்தவரையில் வருகின்ற வருமானத்திற்குத் தகுந்தபடி, அதுவும் குடும்பத்திற்கு 2 பிள்ளைகள் இருந்தால் அதற்கென்று பிரத்தியேகத் தொகை ஒதுக்கப்பட்டு அதற்குமேல் உள்ள வருமானத்திற்குத்தான் வரி உண்டு. ஆனால் விற்பனை வரியிலே நாம் வியாபாரிகளை அரசினருக்கு ஏஜண்டுகளாக வைக்கிறோம். வாங்குகிறவர்கள் வரி கொடுக்கிறார்கள் அவர்கள் வாங்கும் தொகை அளவிற்கு. அதை ஒரு சில நாட்கள் வியாபாரிகள்





வாங்கி வைத்து கொண்டிருக்கிறார்கள். பிறகு ஒரு ஆண்டு கழித்து இந்த வியாபாரிகள் அதை அரசினருக்குக் கொடுக்கிறார் கள். ஆகவே அவர்கள் சர்க்காருக்கு ஒரு ஏஜண்டுபோலத்தான் இருக்கிறார்கள். அந்த நிலை வரும்பொழுது எந்தத் தொகைக்கு அவர்கள் வாங்கினார்களோ அந்த அளவிற்குத்தான் அதை அவர் கள் கொடுக்க முடியுமே தவிர அவர்கள் வாங்கியதற்கு மேலாக, அல்லது வாங்கியதை மறைத்து விட்டார் என்று அபராதம் போடு வதற்கு விற்பனை வரியிலே இடம் இருக்கிறது. 12-வது பிரிவில் 1, 2, 3 ஆகியவற்றைப் பார்த்தால் இருக்கிறது.

'12. *Procedure to be followed by the assessing authority.*—(1) The assessment of a dealer shall be on the basis of the prescribed return relating to his turnover submitted in the prescribed manner within the prescribed period.

(2) If no return is submitted by the dealer under sub-section (1) within the prescribed period, or if the return submitted by him appears to the assessing authority to be incomplete or incorrect, the assessing authority shall, after making such enquiry as it may consider necessary, assess the dealer to the best of its judgment:

Provided that before taking action under this sub-section the dealer shall be given a reasonable opportunity of proving the correctness or completeness of any return submitted by him.

(3) When making any assessment under sub-section (2), the assessing authority may also direct the dealer to pay, in addition to the tax assessed, a penalty not exceeding one and a half times the amount of tax due on the turnover that was not disclosed by the dealer in his return or, in the case of failure to submit a return, one and a half times the tax assessed, as the case may be.

ஆகவே, ஒரு ஆபீஸர் நினைத்தால் அதற்கு 1½ பங்கு தண்ட வரி யாகப் போடலாம். இப்பொழுது வரப்போகும் சட்டத்தில் எல்லாச் சட்டங்களும் பொருந்தும் என்றிருக்கிறது. குறிப்பாகப் பொதுக் குடும்பங்கள், பிரிவினை ஆகாத இந்து குடும்பங்கள் என்பதற்குத் தனிப்பட்ட சட்டம் இருக்கிறது. தனிப்பட்ட சட்டம் வகுக்கப்பட்டிருக்கும்போது ஒரு தகப்பனுக்கு 4 பிள்ளை கள் இருந்தால் தகப்பனும் 4 பிள்ளைகளும் சேர்ந்து ஒரு பொதுக் கடை வைத்திருக்கிறார்கள். 1959-ஆம் ஆண்டு, 1960-ம் ஆண்டு வரியைத் தகப்பனார் கொடுத்து விட்டார் என்றால் அதற்குப் பிறகு 1962-இல் தான் கணக்கு கொடுக்கின்றார். 1962-இல் வரிக் கணக்குக் கொடுக்கும் பொழுது ஆபீசர் பார்த்து சரி என்று நினைத்து ஏதாவது ஒரு வரியைப் போட்டு விடுகின்றார். பிறகு 1967-ஆம் ஆண்டு வரை அசெஸ்மென்ட் ரீ-ஓபனிங் பார்த்து கணக்கு கொடுக் கிறார்கள். அதற்கு சட்டத்தில் உரிமை இருக்கிறது. ஆனால் 1966-ல் பாகப் பிரிவினை ஏற்பட்டு அதில் வரும் ஐந்திலே ஒரு பங்குதான் கிடைக்கிறது. அப்பொழுது 1967-இலே ஆபீசர் அதைப் பார்த்து

[திரு. சா. மெய்யப்பன்] [1968 ஆகஸ்ட் 21

விட்டு அது பொய்க் கணக்கு, கணக்கு சரி இல்லை என்று கூறி 1½ மடங்கு வரி போட இடமிருக்கிறது. வரியை வாங்கும்பொழுது பொதுப்படையாக எல்லோரிடத்திலும் ஐந்து பேர்களிடத்திலும் வாங்கிக் கொள்ளலாம் என்று சட்டத்தில் இருக்கிறது. கிரிமினல் சட்டப்படி ஒருவர் செய்த குற்றத்திற்கு வழி வழியாக வந்தவர்கள் நிச்சயமாக பாத்தியப்பட மாட்டார்கள். 1962-லே யாரோ ஒருவர் செய்த குற்றத்திற்கு, அல்லது குற்றம் செய்யாமலே குற்றம் செய்தவர் என்று கூறப்பட்டு, ரீ-ஓபனிங் செய்து அதன் மூலம் வரி போட வேண்டுமென்று சொன்னால், பலனடையாதவர்கள் கட்ட வேண்டி வரும். பலனடைந்தவர்கள்கூட ஐந்தில் ஒரு பங்குதான் பலன் அடைந்திருப்பார்கள், முழுப் பலனையும் அடைந்திருக்க மாட்டார்கள். இந்தத் திருத்தச் சட்டப் பிரேரணை வருவது குறித்து மகிழ்கிறேன். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டில் கூட அன்டிவைடட் ஃபேமிலிக்கு எதுவும் கிடையாது. டிசால்வ்ட் ஃபேர்ம்ஸ்க்குத்தான் இருக்கிறது. 'டிஸொல்யூஷன்' என்று வரும்பொழுது பலனை யார் அடைந்தார்களோ அதற்குமேலே ஒருவருக்கும் கொடுக்க முடியாது. இப்பொழுது இருக்கும் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் சட்டத்திலேயே செக்ஷன் 15, 19, 27-ல் இருக்கிறது.

15. *Assessment of legal representatives.*—Where a dealer dies, his executor, administrator, or other legal representative shall be deemed to be the dealer for the purpose of this Act and the provisions of this Act shall apply to him in respect of the business of the said deceased dealer, provided that, in respect of any tax or fee assessed as payable by any such dealer or any tax or fee which would have been payable by him under this Act if he had not died, the executor, administrator or other legal representative *shall be liable only to the extent of the assets of the deceased* in his hands என்று செக்ஷன் 15-இல் இருக்கிறது. அவனுடைய கையில் எவ்வளவு சொத்துக்கள் வந்திருக்கின்றனவோ, மதிப்பீடுகள் பொறுப்பீடுகள் வந்திருக்கின்றனவோ அந்த அளவுக்குத்தான் அவன் பாத்தியப்பட்டவன் ஆவான் என்றிருக்கிறது.

'27. *Recovery of tax where business of dealer is transferred.*—Where the ownership of the business of a dealer liable to pay tax or other amount is transferred, any tax or other amount payable under this Act in respect of such business and remaining unpaid at the time of the transfer and any tax or other amount due up to the date of transfer though unassessed, may, without prejudice to any action that may be taken for its recovery from the transferor, be recovered from the transferee as if have were the dealer liable to pay such tax or other amount;

Provided that the recovery from the transferree of the arrears of taxes due for the period prior to the date of the transfer shall be limited to the value of the assets be obtained by transfer.



1968 ஆகஸ்ட் 21] [திரு. சா. மெய்யப்பன்]

என்று செக்ஷன் 27-இல் இருக்கிறது. நஷ்டம் அல்லது லாபம் வருகிறது என்று சேலஸ டாக்ஸை மாற்றிவிட்டால் என்ன செய்வது என்பதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு அவனுக்கு வந்திருக்கிறதோ, அவனிடத்தில் கிடைத்திருக்கிறதோ அந்த அளவு சொத்துக்குத்தான் செய்யலாம் என்றிருக்கிறது.

"Every person who was at the time of such partition, or dissolution a member or partner of the Hindu undivided family, firm or association of persons and the legal representative of any such person who is deceased shall, notwithstanding such partition or dissolution, be jointly and severally liable for the payment of the tax, penalty or other amount payable under this Act by such family, firm or association of persons, whether assessment is made prior to or after such partition, or dissolution",

என்று இப்பொழுது கொண்டு வந்துள்ள திருத்த மசோதாவில் இருக்கிறது. குற்றம் செய்தவன் யாரோ இருக்க, பலன் அடைந்தவர்கள் யாரோ இருக்க, அதனால் கொஞ்சம் பலன் அடைந்திருந்தால் அவனுக்கும் சேர்ந்து விடுகிறது என்பதால் இவர்களைப் பொறுத்தவரையில் செக்ஷன் 12(3)-இல் இது பொருந்தாது. 12 (1), (2) நிச்சயமாக ஆபத்தில்லாதது, குறிக்கோளுக்கும் உகந்தது. ஏனென்றால் அமைச்சரவர்கள் பேசும்பொழுது, சிலர் ஏமாற்றி விடுவார்கள், அதற்கு ஊக்கம் கொடுக்கக் கூடாது என்று அழகாக சொன்னார்கள். ஏமாற்றத்தைத் தடுக்க வேண்டியதுதான். ஏமாற்றுகிறாரா, இல்லையா என்று பார்க்க ஆபீசருக்கே to the best of its judgment" என்றிருப்பதால் ஏமாற்றினால் தண்டத்தைக் கொடுக்குமாறு செய்யலாம். குற்றவாளிகளைத் தப்பிக்க விட்டாலும் நிரபராதியைக் கண்டித்து விடக் கூடாது. அதுதான் சட்டமாக இருக்க வேண்டும். மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் போட்டு தொகையை வாங்கிக் கொள்ளலாம். யார் ஒருவன் அனு மு.ப.
பவிக்கவில்லையோ அவன் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தண்டிக்கப் 11 00
பட்டால் சட்டத்தைச் சட்டமாக மதிக்கமாட்டார்கள் என்ற நிலையிலிருக்கும். ஆகவே, பெனல்ட்டி அல்லது வரி முதலியவைகளைப் போடும்பொழுது, நம் சட்டத்தை செயல்படுத்தினால், மற்றவர்களுக்கு, லீகல் ரெப்ரசன்டேடிவ் அல்லது அதை அடைந்தவர்களுக்கு நாம் அப்ஜக்ட் செய்யக் கூடாது என்று வற்புறுத்த விரும்புகிறேன். அதேபோல் அடுத்து வருகின்றதைச் சொல்ல விரும்புகிறேன்.

'The tax payable under section 12 (1) and (2) of this Act by such family.'

என்று சொன்னால் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனித்து இதற்குத் தகுந்த அளவு பெனல்ட்டி முதலியவைகளை ஒதுக்கி விடச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். இன்னும் செக்ஷன் 45, ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் ஆக்டில்—

being an assessee under this Act, fails to submit a return as required by the provisions of this Act, or the rules made thereunder," என்றிருக்கிறது. இதிலும் பெனல்ட்டி கிளாஸ் 4, 5 அவர்களிடத்திலே வசூல் செய்கிற பொழுது, பெனல்டி வசூல் பண்ணும் பொழுது அவரும் வரி விதிப்புக்கு உட்பட்டவராக ஆகின்ற காரணத்தினாலே இந்த சட்டத்தை 12 (1) (2) மட்டும் வைத்துக்கொண்டு 12 (3) மற்றவர்களுக்குப் பொருந்தாது என்ற அளவுக்குக் கூறி, பெனல்ட்டி அவரிடமிருந்து வசூல் பண்ணுவதை விலக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவை அவர்களே விரிவாக வியாக்கியானம் செய்துகொண்டு அதில் இல்லாத கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். அங்கத்தினர் அவர்கள் சிவிலிலும் திறமையான வழக்கறிஞர்; கிரிமினலிலும் திறமையான வழக்கறிஞர். ஆகவே, விரிவாக அதைப்பற்றிச் சொன்னார்கள். ஆனால் மசோதாவினுடைய கருத்து மிகமிகச் சுருக்கமாகும். அவரது விளக்கம் எல்லாம் இதற்குப் பொருந்தாது. இந்து லாவிலே ஒரு தனிச் சட்டம் இருப்பதை அவர்களே ஒப்புக்கொண்டார்கள். அதைப் போலவே உரிமைக்காகச் சட்டம் இருக்கிறது. ஒரு ஃபர்மிற்கு அசெஸ்மெண்டு போடும்பொழுது தொடர்ந்திருக்கிற ஒருவர் அசெஸ்மெண்டு வருவதற்குள்ளாக பிரிவினை செய்து கொண்டாலும் அல்லது அந்தக் கூட்டு வியாபாரத்தைக் கலைத்துக் கொண்டாலும் அவர்களுக்கு டாக்ஸ் அசெஸ் பண்ண முடியுமா என்பதுதான் பிரச்சினை.

'19-A. Liability to tax of a partitioned Hindu family, dissolved firm, etc.,

அந்த மாதிரி கலைக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு, ஒரு குழுவிற்கு, அது ஃபர்மாக இருந்தாலும் சரி, ஜாயிண்ட் ஃபாமிலியாக இருந்தாலும் சரி, கலைக்கப்பட்டதற்குப் பின்னாலே அசெஸ் செய்ய முடியாது என்பது தீர்ப்பு. அசெஸ்மெண்டு பண்ணாமலே இருந்தால் எடுத்துக் கொள்ளக் கூடாது; அசெஸ்மெண்டு பண்ணி வரும் போது ஒரு காலக் கட்டத்திலே கலைத்து விட்டால் அசெஸ்மெண்டு செய்யக் கூடாது என்று சொல்வது தவறு என்பதுதான் இந்த மசோதாவினுடைய உண்மையான நோக்கமாகும். ஆகவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல இந்த 'assessment prior to dissolution or prior to division' என்று இருக்கிறது. ஆகவே, கலைக்கப்பட்டதற்குப் பின்னாலே வந்ததாக ஊகித்து விடக் கூடாது என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அசெஸ் பண்ணுவதற்கு உரிமை எடுத்துக் கொள்கிறார்கள். இந்து ஜாயிண்ட் ஃபாமிலியாக இருந்தால் எப்படி லையபிலிட்டி இருக்கலாம்; பெனல்ட்டி இருக்கலாம் என்பதைப்பற்றி படித்துக் காண்பித்தார்கள். கடைசியிலே கொடுத்த வார்த்தைகளை அவர்கள் விட்டு விட்டார்கள். . . .



'payment of the tax, penalty or other amount payable under this Act by such family, firm or association of persons. . .!

இந்த அசெஸ்மெண்டு போடும் பொழுது அவர்கள் உண்மையாகவே இந்த சட்டத்தின் கீழே கொடுக்க வேண்டுமென்று, சட்டத்தின் விதிக்கு உட்பட்டு இருந்தால் அசெஸ்மெண்டு போடுகிறோம். ஆகவே, கலைத்து விட்டகாரணத்தினாலே உரிமை போய்விட்டது என்று சொல்லமுடியாது. அவர்களுக்கு அந்த லையபிலிட்டி இருக்கத்தான் செய்கிறது. Exteit liability லாவிலே எப்படி இருக்கிறதோ அதே லையபிலிட்டிதான் இருக்கிறது. அந்த இந்து லாவை மாற்றுவதற்கு நாங்கள் விரும்பவில்லை. ஆனால், ஏற்கனவே லையபிலிடி உறுதியாயிற்று. அந்த லையபிட்டிக்கு அவர்கள் அத்தனை பேரும் ஜாயிண்ட் ஃபாமிலி என்ற முறையிலே, ஃபர்ம் என்ற முறையிலேதான் அவர்கள் கட்ட வேண்டுமென்று இங்கே விளக்கிக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, வேறு பிரிவிலே உள்ள பெனல்ட்டியை இங்கே போடுவதாகவோ, அல்லது பெனல்ட்டியை போடுவதாகவோ சொல்வது அவ்வளவு பொருத்தம் இல்லையென்றுதான் நினைக்கிறேன்.

ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்டிலே இரண்டு விதம் உண்டு. சட்டம் போடும்பொழுது இந்த வரியை இந்த தேதியிலிருந்து கொடுக்க வேண்டுமென்று ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுப்பது ஒன்று. இந்த சட்ட மன்றத்திற்கு அந்த உரிமை இருந்தாலும் அதைப் போடுவது வழக்கமாக இல்லை. ஏற்கனவே, இருக்கிற லீகல் புரவிஷனுக்கு நாம் ஒரு இன்டர்பிரிட்டேஷன் கொடுத்து வசூல் செய்து வந்திருக்கிறோம். புதிதாக வசூல் செய்யவில்லை. இதற்கு சுப்ரீம் கோர்ட்டு இன்னொரு லீகல் இன்டர்பிரிட்டேஷன் கொடுத்திருக்கிறது. அது தவறு என்று இன்டர்பிரிட்டேஷன் கொடுத்த காரணத்தினாலே, அதை தவறு என்று சொல்லி ரெக்கவரி நம் மீது போடுவதிலிருந்து நாம் பாதுகாப்புத் தேடிக் கொள்வது ஒரு முறை. இந்த முறையைத்தான் இதிலே பின்பற்றுகிறோம். அதிலே கூட தவறு இல்லையென்று சொல்லிக்கொள்கிறேன். இந்துக்களுக்கு இருப்பது முஸ்லீம்களுக்கு வராது என்ற கேள்வி எழுப்பப்பட்டது. இந்து லாவின் தத்துவம் ஒன்று இருக்கிறது. இந்து ஜாயிண்ட் ஃபாமிலிக்கு என்று ஒரு தத்துவம் இருக்கிறது. முஸ்லிம்களுக்கு வேறு தத்துவம் இருக்கிறது. அதே போல் கிறிஸ்தவர்களுக்கு வேறு தத்துவம் இருக்கிறது. இதிலே, புதிதாக பெனல்ட்டி போடப் போகிறோம், புதிதாக வரி வசூல் செய்யப் போகிறோம் என்ற கருத்து கொண்டு இதனை நோக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது பிரிக்கப்படுவதற்கு முன்னாலே இருந்த லையபிலிட்டிக்குத்தான் அசெஸ்மெண்டு செய்வதற்கு அதிகாரம் எற்றிருக்கிறோம். வசூல் செய்வதற்கு புரவிஷன் இருக்கிற நேரத்தில், எப்படி வசூல் செய்யப்படும் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள்.

[திரு. செ. மாதவன்] [1968 ஆகஸ்ட் 21

இன்றைக்கு நான் சொல்வது

'the right to assess a liability which has arisen before division or before dissolution'.

THIRU R. PONNAPPA NADAR: Sir, will the liability be restricted to the extent of the assets that are passed on the dissolved firm, or to the entire assets?

THE HON. THIRU S. MADHAVAN: That would be governed by the existing law and not the Sales Tax Act.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள் கூறியதைத் தொடர்ந்து நான் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அதுவும் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. மெய்யப்பன் அவர்களுடைய திருத்தத்தைப் பற்றிக் கூற வேண்டியிருக்கிறது. அவர்கள் பல விஷயங்களைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், இந்த திருத்தத்திலே அவர் கொடுத்திருக்கிற அம்சம்

'After the words "the tax payable under" insert the words and figures "section 12 (1) and (2) of"

என்று கொடுத்திருக்கிறார்கள். 12(1) என்பது எப்படி அதை வசூல் பண்ணுவது என்பதற்கு ஒரு வழி வகைதான். அவர்களே கூட சொன்னார்கள், டர்ன் ஓவர் கொடுக்கவில்லையென்று. best of judgment முறையில் இதைப் பார்க்க வேண்டும். அந்த 12(1) (2) என்ற செக்ஷன்கள் இந்த சட்டப்படி வசூல் செய்வதற்கான செக்ஷன்கள் அல்ல. அந்த செக்ஷன் வசூல் செய்கிற அதிகாரம் படைத்த ஒரு வரியை அந்த வழிவகையிலே முதலிலே அவர்கள் டர்ன்ஓவர் கொடுத்துவிட்டால் தொடர்ந்து பண்ணச் செய்வது தான். எப்படி வழிவகை செய்வது என்பதற்கு இருக்கிற செக்ஷன் அந்த 12-வது செக்ஷன். அதனாலே மட்டும் இந்த வரி வசூல் செய்வதற்கு வேண்டிய அதிகாரம் வந்து விடாது. நம்முடைய விற்பனை வரி சட்டத்திலே செக்ஷன் 3, 4 மற்றும் மற்ற செக்ஷன்களின்படி அசெஸ் செய்வார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள்.

It is stated in section 3 (1) of the Act—

'Every dealer other than a casual trader or agent of a non-resident dealer whose total turnover for a year is not less than ten thousand rupees and every casual trader or an agent of a non-resident dealer, whatever be his turnover for the year shall pay a tax for each year at the rate of two and half per cent of his taxable turnover.' 3, 4 என்ற செக்ஷன் தான் இதற்கான Changable section' இந்த 3, 4, 5 செக்ஷன்கள் மூலம் வரி விதிக்கிற அதிகாரத்தை எப்படி அமல் படுத்துவதென்பதற்கான செக்ஷன் தான் அவர்கள் கொடுத்திருக்கிற 12 (1) என்ற செக்ஷன். அவர்கள் சொன்னார்களே தவிர, ஒரு குழப்பம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக நான் சொல்கிறேன் அவர் சொல்லுகிற சட்டத்தை எடுத்துக் கொண்டால், இந்த சட்டத்தின் அதிகாரமே குறைந்துவிடும். இப்பொழுது கொண்டு வந்திருப்பதில் கூட ஒரு சந்தேகம் அவர்களுக்கு இருக்கிறது. ஏற்கனவே, டிசலுஷன் செய்யப்பட்டதற்கு



1968 ஆகஸ்ட் 21] [திரு. கே. ஏ. மதியழகன்]

முன்பு இருந்த நிலைமைகளுக்குத்தான் இந்த வரியே தவிர, டிசலுஷனுக்குப் பின்னாலே இருக்கிற வரி அல்ல. கூட்டுக் குடும்பங்களிலே உள்ள உறுப்பினர்கள் என்ற முறையிலே தான் இது செய்யப்படுகிறதே தவிர, அவர்கள் அனுபவிக்காத ஒன்றை, அவர்கள் செய்யாத ஒன்றைச் செய்வதற்கான முயற்சி கூட அல்ல. 1, 2 என்று போடுவதன்மூலம் இது தோற்கடிக்கப்படுகிறது என்பதோடு மட்டும் அல்லாமல் ஒரு புதிய நிலைமையையும் ஏற்படுத்தி விடுகிறது. அவர் கொடுத்தது இந்த மசோதாவினுடைய அடிப்படை நோக்கத்தைத் தோற்கடிக்கும் என்று கூறி, 12-வது நிலையைக் கொடுத்தால் மட்டும் நிவர்த்தி ஆகிவிடாது, அப்பொழுதும் ஒரு இலக்குறைவை ஏற்படுத்தும் என்ற காரணத்தினாலே அவர்கள் இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் வேறு பெனல்ட்டி எல்லாம் கூடாது என்று சொன்னார்கள். பெனல்ட்டி என்றாலே பெரும் குற்றம் என்றுதான் அர்த்தம்.

நிரபராதி எவரும் அகப்படக் கூடாது என்று சொல்வது போலவே, குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளக் கூடாது என்பது வழக்கறிஞரின் சித்தாந்தமாக இருக்க வேண்டும். பெனல்டி, கம்பௌண்டிங் இதெல்லாம் இயற்கையான நடைமுறைகள்தான். வரி கொடுக்காவிட்டால், பெனல்டி, கம்பௌண்டிங் முறைகள் அனுசரிக்கப்படுகின்றன. இவைகளெல்லாம் ஏற்கனவே இருக்கிற விதிமுறைகள், நடைமுறைகள். புதியதாக ஏதோ திடீரென்று பெனல்டி போடுவது என்பதில்லை. 1959-ம் வருடத்திலிருந்து இந்த வரி வசூல் செய்யப்படுகிறது. நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜ்மெண்டு இருக்கிறது. ஒழுங்காக நடந்துகொண்டிருக்கிற ஒரு காரியத்திற்குக் குந்தகம் ஏற்படக்கூடாது, தவறான வழிகள் பின்பற்றப்படக் கூடாது. இதற்கெல்லாம் வழிவகை செய்வதற்குத்தான் இந்த மசோதா இருக்கிறது என்று சொல்லி, மாண்புமிகு திரு. மெய்யப்பன் அவர்களைத் திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சா. மெய்யப்பன்: நிச்சயம் திரும்பப் பெற்றுக்கொள்ளத் தான் போகிறேன். ஆனாலும், இந்தப் பிரிவைப் பொறுத்த அளவிலே 'the tax payable under this Act என்று வந்துவிட்டால் 12, 3, 16, 45, எல்லாம் சேர்ந்தது அதிலே Hindu undivided family, firm or other association of persons and such family, firm or association is partitioned, or dissolved as the case may be, என்று போட்டுவிட்டு, ஏ-யைப் பொறுத்தவரையிலே shall be asessed as if no such partition or dissolution had taken place and all the provisions of this Act shall apply accordingly. என்று அப்படியே இருக்கிறது. அதற்கப்புறம் in clause (b) whether assessment is made prior to or after such partition or dissolution.

என்று வந்தால், இதற்கு முன்னால் அஸெஸ்மெண்டு நடந்துவிட்டாலும், அந்த அசெஸ்மெண்டு நடந்த பிற்பாடு ரீஓபன் பண்ணி

[திரு. சா. மெய்யப்பன்] [1968 ஆகஸ்ட் 21

செக்ஷன் 16-படிக்கு எஸ்கேப்டு டர்ன்ஓவர் என்று சொல்லி ரீஓபன் பண்ணிவிட்டால், குற்றவாளி இல்லாதவர்கள், சாப்பிடாதவர்கள் வரி கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. பேஸிஸையும் சேர்த்து ஓரளவு ரிசர்வேஷன் இருந்தால் தேவலை என்று அபிப்பிராயப்பட்டேன். அமைச்சர்கள் இரண்டு பேர்களும் இது அஸெஸ்மென்டை பொறுத்த நிலை, ப்ரொஸீஜரைப் பொறுத்த அளவிலே பின்னால் சட்டவிதிமுறைகள் செய்யும்பொழுது செய்யப்படலாம் என்ற ரீதியிலே சொன்ன காரணத்தினாலே நான் என்னுடைய திருத்தத்தை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** டிஸால்வ் பண்ணப்பட்ட பாமிலியாக இருந்தாலும்கூட, ஏற்கனவே டிஸால்வ் பண்ணுவதற்கு முன்னாலே உள்ள நிலைமையில் அஸெஸ் பண்ணலாம் என்பதுதான் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின் சாரம்சம். அதற்கு முன்னால் பண்ணியிருக்கவேண்டும் என்பது அல்ல. டிஸால்வ் பண்ணப்பட்ட குடும்பத்தைப் பொறுத்தவரையில், அதற்கு முன்னால் இருந்த நிலைமையைப் பற்றி அஸெஸ் பண்ணுவதற்கு நிலைமை இருக்கிறதே தவிர, அதிலே ஒரு கெடுதலும் இல்லை. சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்டின் சாராம்சம் அதுதான். அப்படி அஸெஸ் பண்ணுவதற்கு உரிமை இருக்கிறது. டிஸால்வ் பண்ணப்பட்ட குடும்பத்தை அசெஸ் செய்வது என்பது அல்ல. டிசால்வ் பண்ணப்படாத ஒரு குடும்பத்தைப் பற்றித்தான் அஸெஸ்மென்டு செய்கிற நிலைமையில்தான் அதன் அமைப்பு இருக்கிறது. விதிமுறைகளும் அப்படித்தான் அமைந்திருக்கின்றன.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, I move the following amendment standing in my name :—

'In the proposed new Section 19 (A), delete sub-clause (b)'.

The amendment was duly seconded.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Much discussion has taken place about this matter. What I am afraid is that the limited object which is sought to be achieved by the introduction of this amendment will have far-reaching consequences. My earnest request to the Hon. Minister would be to refer this part of the amending Bill to a Select Committee of the House, just to have an opportunity to consider the views that have been now expressed and which the Hon. Minister tried to crase. I appeal to the Hon. Minister to refer this part of the Bill to Select Committee so that it might be possible to find out whether this amendment will have more far-reaching consequences.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : This is a mere enabling Bill and I do not see any necessity to refer it to a Select Committee. The hon. Member need not therefore press his amendment.



1968 ஆகஸ்ட் 21]

The amendment of Thiru Sowdi Sundara Bharathi, was by leave withdrawn.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூன்றாவது பிரிவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற திரு. சா. மெய்யப்பன், திரு. எஸ். சௌடி சுந்தர பாரதி ஆகியோர்களுடைய திருத்தத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்படுகின்றன.

மூன்றாவது பிரிவு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

### பிரிவு-4.

**திரு. சா. மெய்யப்பன் :** நான்காவது பிரிவிலே 'ஸிஸி' என்ற உட்பிரிவிலே assessment to tax under sections 12 (1) and (2) என்றுதான் போட்டிருக்கிறேன். ஏற்கனவே மூன்றாவது பிரிவுக்குக் கொடுத்த திருத்தத்தைத்தான் இதிலும் சேர்க்கவேண்டுமென்று சொன்னேன். மூன்றாவது பிரிவில் விவாதம் நடந்து, நான் சில காரணங்களைச் சொல்லி என்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டேன். அதைப்போல இதையும் திரும்பப்பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. மெய்யப்பன் அவர்கள் தன்னுடைய திருத்தத் தீர்மானத்தை முன்மொழியவில்லை.

நான்காவது பிரிவு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

ஐந்தாவது பிரிவு, நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move—

'That the Madras General Sales-Tax (Third Amendment) Bill, 1968 (L.A. Bill No. 8 of 1968) be passed.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (2) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா (ச. பே. மசோதா எண் 9/1968).

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move—

"That the Madras General Sales Tax (Fourth Amendment) Bill, [a] 1968 be taken into consideration.'

Under item 37 of the First Schedule to the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959) all kinds of soaps

a Published in the *Fort St. George Gazette* Extraordinary dated 17th August 1968

and soap powder including metal polishing bar ' are liable to single point tax of 5-1/2 per cent at the point of first sale in the State. In order to make it clear that soap flakes like 'lux' flakes and detergent powders and liquids like 'Det' 'Vim', 'Surf' 'C. P. Fluid', etc., are also liable to tax under the above item, the Government decided to amend the description of the goods under that item suitably.

In order to give effect to the above section the Government have issued a notification under sub-section (1) of Section 59 of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959) amending item 37 of the First Schedule to the Act. The amendment has been given effect to from the 1st August 1968. Under sub-section (2) of section 59 of the Act, a Bill to replace the notification has to be introduced during the present session of the Legislature.

The Bill now before the House accordingly contains necessary provisions in this regard. Sir, I commend the motion for the acceptance of the House.

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.*

*பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.*

*நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு இவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.*

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** *தலைவர் அவர்களே,*
*"தமிழ்நாடு 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா நிறைவேற்றப் படவேண்டும்"*
*என்று கோருகிறேன்.*

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.*

*(3) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள் (எடுத்து விடுதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதா (ச. பே. மசோதா எண் 10/1968).*

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Deputy Speaker, Sir, I beg to move—

'That the Madras Inam Estates (Abolition and Conversion into Ryowari) Amendment Bill , 1968, be taken into consideration.'[a]

The Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) applies to all inam estates, part village inam estates and Pudukkottai inam estates.

a Published in the Fort St. George Gazette Extraordinary dated 17th August 1968



In Schedule I to the Act, 82 Pudukottai inam estates have been specified. Alattivayal is an inam village specified as item 40 under Thirumayam taluk in the said Schedule. Though it was originally in Thirumayam taluk of Tiruchirappalli district, it has subsequently been transferred to Arantangi taluk of Thanjavur district. Hence this inam village was not taken over on the notified date. The Government have however included this village under Arantangi taluk as item 84 in Schedule I to the Act by a notification issued under sub-section (1) of section 73A of the Act and published in the *Fort St. George Gazette* on the 31st January 1968. Under the proviso to sub-section (2) of section 73A of the Act, the Government have no power to omit any entry from Schedule I to the Act by a notification. It has therefore been decided to undertake legislation to omit item 40 Alattivayal under Thirumayam taluk from the Schedule.

Section 76 of the Act empowers the Government to issue orders to remove any difficulty that may arise in giving effect to any of the provisions of the Act. The Supreme Court in the case Messrs. Jalan Trading Company *versus* Mill Mazdoor Sabha (1967, I.SC.J. 189) has observed that the owner to remove any doubt or difficulty by altering the provisions of the Act would in substance amount to exercise of legislative authority and that it cannot be delegated to an executive authority. It has therefore been decided to omit the section and to make the necessary consequential amendments.

Sir, I have now briefly indicated the object of the legislation. I request the House to accept the motion.

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.*

*பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.*

*நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.*

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** *தலைவர் அவர்களே,*
*"தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (எடுத்துவிடுதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதா நிறைவேற்றப் பட வேண்டும்"*
*என்று கோருகிறேன்.*

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.*

**(4) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனாம்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதா (ச. பே. மசோதா எண் 12/1968).**

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Deputy Speaker, Sir, I beg to move—

'That the Madras Inam (Assessment) (Amendment) Bill [a], 1968, be taken into consideration'.

The Madras Inam (Assessment) Act, 1956 (Madras Act XL of 1956) provides for the levy of full assessment on certain inam lands in the State. Under sub-section (2) of section 1 of that Act, the Act shall be deemed to have come into force on the 1st day of July 1956. The Act was published in the *Fort St. George Gazette*, dated the 27th February 1967. Section 3 of the Act empowers the Government to levy full assessment on inam lands after following the procedure laid down in sub-sections (2) and (3) of that section. Rule 17 of the Madras Inams (Assessment) Rules, 1957, framed under the Act provides for the levy of assessment with effect from the 1st July 1956. In Writ Petitions Nos. 441, 642, etc., of 1964, the Madras High Court has held that sub-section (2) of section 1 of the Act is not sufficient to give retrospective effect to the assessment from the 1st July 1956 and that under that section only the process of assessment can be initiated from the 1st July 1956. The High Court has also observed that if the intention of the Legislature is that the assessment as finally determined under sub-section (3) of section 3 should relate back to the 1st July 1956, a specific provision to that effect should be made. In the light of the above judgment, it was considered necessary to make a specific provision in section 3 of the Act to the effect that the assessment will take effect from the 1st July 1956 and to validate the levy and collection already made.

It was also considered necessary to amend section 3-A of the Act so as to make it clear that the revised assessment under that section should take effect from the commencement of the fasli year in which such revised assessment is published. Accordingly the Madras Inams (Assessment) (Amendment) Ordinance, 1968 (Madras Ordinance 3 of 1968) was promulgated by the Governor. The Bill seeks to replace the Ordinance aforesaid.

I request the House to accept the motion.

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.*

*பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.*

*நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.*

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary dated 19th August 1968



THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I move—

'That the Madras Inams (Assessment) (Amendment) Bill, 1868 (L.A. Bill No. 12 of 1969) be passed.

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.*

**(5) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, ஒருவருக்கே உரிய எஸ்டேட்டுகளின் கிராமப் பணியையும், தமிழ்நாடு பரம்பரை கிராமப் பதவிகளையும் (ரத்து செய்யும்) மசோதா (ச. பே. மசோதா எண். 16/1968).**

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Deputy Speaker, Sir, I beg to move—

"That the Madras Proprietary Estates' Village Service and the Madras Hereditary Village Offices (Repeal) Bill [a], 1968, be taken into consideration".

The Madras Proprietary Estates' Village Service Act, 1894 (Madras Act II of 1894) and the Madras Hereditary Village Offices Act, 1895 (Madras Act III of 1895) provide for the hereditary system of appointment of Village Officers. This system was in force with certain exceptions in the districts of Chingleput, South Arcot, Tirunelveli, Madurai, Ramanathapuram, Coimbatore and North Arcot and in portions of Tiruchirapalli and Salem districts. The Supreme Court held in Gazula Dasaratha Rama Rao *versus* State of Andhra Pradesh (1961 I.S.C.J. 310) that section 6(1) of the Madras Hereditary Village Offices Act, 1895 (Madras Act III of 1895) embodying the principle of hereditary right in the matter of appointment of Village Officers involved discrimination on the ground of descent only contravening Article 16 (2) of the Constitution and was therefore void. The Government examined the judgment of the Supreme Court. As the principle of hereditary appointments has been held to offend the fundamental rights, the Government decided to repeal the Madras Proprietary Estates' Village Service Act, 1864 (Madras Act II of 1894) and the Madras Hereditary Village Offices Act, 1894 (Madras Act III of 1895) and certain other enactments dealing with Village Officers. After repeal of these enactments the service conditions of the Village Officers will be regulated by the rules to be framed under the proviso to Article 309 of the Constitution as in the case of other Government servants.

I request the House to accept the motion.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் முன் மொழிந்த தீர்மானம் அவையின்முன் விவாதத்திற்கு வைக்கப் படுகிறது.*

** திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சார், இந்த மசோதாவை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை அவைமுன் வைக்க விரும்பு கிறேன். இந்த ஹெரிடிடரி கிராம முன்சீப் சம்பிரதாயத்தை*

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 19th August 1968.

எடுத்துவிட வேண்டும் என்று இந்த மசோதா மன்றத்திலே தாக்கல் ஆகியிருக்கிறது. குறிப்பாக, இந்த மாதிரியான உரிமையைக் கொடுப்பது 'டிஸ்க்ரிமினேடரி' என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்த பிறகு இந்த மசோதா உருவாகியிருக்கிறது. கன்யாகுமரி ஜில்லாவிலே வில்லேஜ் ஆபீசர்களெல்லாம் முன்பிருந்த திருவிதாங்கூர்-கொச்சி அரசாங்கத்திலேயே பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம், ஒரு கம்யூனல் ஜி. ஓ. பிரகாரம் வேலையிலே அமர்த்தப் பட்டார்கள். அவர்கள் சர்க்காருடைய முழு நேர அலுவலர்களாகவே இருந்து வந்தார்கள். அவர்கள் நல்ல முறையிலே பணியாற்ற உகந்த முறையாக இருக்கிறது. அதையே பின்பற்ற வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனாலும், அது சம்மந்தமான விதிமுறைகளை அமைப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. நீண்ட நெடுங்காலமாக இருக்கும் வேண்டுகோள் ஆகவே, இதில் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கக்கூடிய ஊதியமும் குறைவாகவே இருக்கிறது. அதைப் பற்றி பன் முறையும் எடுத்துக்காட்டப்பட்டு, தீர்மானங்கள் போட்டு, இந்த மன்றத்திற்கும், வெளியிலேயும் நம்முடைய, அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக்கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை உருவாக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே, வழிவகைகளையும் சிந்தித்துப் பார்த்து செய்வது நலமாக இருக்கும். அவர்களை முழுநேரச் சர்க்கார் ஊழியர்களாகவும் செய்து, அவர்களுக்கு அதிகமான ஊதியத்தையும் கொடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராம அதிகாரிகளுக்கு மெஜிஸ்டீரியல் ஃபங்க்ஷன்கூட கொடுத்திருக்கிறார்கள். அந்த அதிகாரத்தை போலீஸ் இலாகாவிற்குக் கொடுக்க வேண்டுமா, கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டுமா என்பதையும் ஆய்வு செய்வது சிறப்பாக இருக்கும். ஏதாவது ஒரு குற்றம் ஏற்பட்டுவிட்டால். கிராம முன்சீபிடம் இருந்துதான் 'ஃபர்ஸ்ட் இன்பர்மேஷன் ரிபோர்ட்' தாக்கல் செய்யும் முறை இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷனிலும் இந்த அதிகாரத்தைச் செலுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அதே மாதிரி, இருக்கின்ற அதிகாரத்தை இவர்களிடம் மறுபடியும்
மு.ப. 11-30 ஒப்படைக்க வேண்டுமா அல்லது தனியாக போலீஸ் இலாகாவிலே இந்த அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டுமா என்பதை இந்தச் சமயத்தில் ஆய்வு செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தை முழு மனதோடு ஆதரிக்கிறேன் என்று கூறிக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. என். சங்கரய்யா :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரிக்கக்கூடிய நிலையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்திய அரசியலமைப்பு 309-வது பிரி





வின்படி மாநில ஆளுநர் அவர்கள் மூலமாக ஒரு சட்டம் இயற்றலாம் அல்லது அதற்கான விதிமுறைகளை நீட்டிப்பதற்கான வழிவகை செய்யலாம். இந்த அரசு ஏன் ஒரு புது சட்டம் கொண்டுவரக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். கிராம உத்யோகஸ்தர்கள் எல்லாம் வம்சாவழியாக இருந்து வருகிறார்கள். இதற்கு ஒரு புதிய முறை கண்டுபிடிக்க வேண்டும். கிராம உத்தியோகஸ்தர்களுடைய வேலைவாய்ப்புக்கள், வாழ்க்கை வசதிகள் இவற்றிலெல்லாம் சிரமங்கள் இருக்கின்றன. சமீபத்திலே கிராம உத்தியோகஸ்தருக்கான தேர்வு ஒன்று நடந்தது. திண்டுக்கல் தாலுகாவிலே சித்துவார்பட்டி என்ற கிராமத்தில் இரண்டு பேர்கள் கிராம உத்தியோகஸ்தர் வேலைக்கு விண்ணப்பித்துக்கொண்டனர். ஒருவர் மற்றவரைக் காட்டிலும் நல்ல பணவசதி படைத்தவர் என்ற காரணத்தைக் காட்டி, அவருக்கு அந்த உத்தியோகம் அளிக்கப்பட்டது. இதுபற்றி மற்றவர் ரெவின்யூ இலாகாவிற்கு அப்பீலுக்குப் போனபோது அப்பீலை பரிசீலிக்கும் உரிமை இலாகாவிற்கு இல்லாத காரணத்தால் அவருடைய மனு நிராகரிக்கப்பட்டது. பின்னர் அவர் ஹைகோர்ட்டில் ரிட் மனு போட்டு, தடை கொண்டுவந்திருக்கிறார். இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்றால், பணவசதி படைத்தவராகப் பார்த்துத்தான் கிராம உத்தியோகஸ்தர் பதவி கொடுக்கப்படுகிறது. கிராம உத்தியோகஸ்தர் பதவிக்கு பணவசதி குறுக்கே நிற்கக்கூடாது என்று விதிகளையும் சட்டங்களையும் கொண்டுவர வேண்டும். மேலும், விண்ணப்பதாரருடைய தகுதி, திறமை போன்ற நல்ல அம்சங்களைக் கருத்தில் கொண்டு, கிராம உத்தியோகஸ்தர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. க. ர. நல்லசிவன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராம உத்தியோகஸ்தர்கள் பரம்பரை பாத்தியதை முறையில் நியமனம் செய்யப்பட்டு வந்தார்கள். கிராம உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் பரம்பரை பாத்தியதை கூடாது என்பதை நான் ஆதரிக்கிறேன். கிராமப்புறங்களிலே இருப்பவர்கள் கிராம மணியக்காரர்கள். இவர்கள் நாட்டு நடப்புக்கள், சட்ட திட்டங்கள் இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டுதான் மக்களை அணுகுகிறார்களா இல்லையா என்பது தெரியவில்லை. சர்க்காருடைய திட்டங்களைப் புரிந்துகொண்டு, ஜனநாயக முறையில் கிராம உத்தியோகஸ்தர்கள் நடந்துகொள்ளக்கூடிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். கிராம உத்தியோகஸ்தர்களாக வருபவர்களுக்கு குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி. அளவிற்காவது கல்வி அறிவு இருக்கவேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள்தான் கிராம உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்படவேண்டும் என்ற ஒரு சட்டதிட்டத்தை உண்டாக்க வேண்டும்

அடுத்தபடியாக, கிராம உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய இப்போதைய முறைக்குப் பதிலாக ஒரு நல்ல முறையைக் கண்டுபிடித்தாக வேண்டும். இப்போ இருக்கக்கூடிய

[திரு. க. ர. நல்லசிவன்] [1968 ஆகஸ்ட் 21

ரெவின்யூ அதிகாரிகள் மூலமாக இந்தத் தேர்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. தேர்வுக்கான சிபாரிசுகள் தாலூக்கா மட்டத்திலே, ஜில்லா மட்டத்திலே போய்க்கொண்டிருக்கின்றன. சில சமயங்களில் மணியக்காரர்கள் நியமனக் கோரிக்கையானது மந்திரி சபை அளவிலே வந்துவிடுகிறது. முக்கியமாக கிராம உத்தியோகஸ்தர்களுக்கு குறைந்தபட்ச கல்வி இருப்பது முதலாவது அம்சம். இரண்டாவதாக, ஒரு புதிய தேர்வுமுறை கொண்டு வரப்பட வேண்டும். கிராமக் கர்ணங்களுக்கும்கூட இதே முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை முழுவதும் ஆதரிக்கும் நிமித்தம் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றைக்கு கிராம உத்தியோகஸ்தர்கள் கிராம மட்டத்தில் மிகவும் சக்திவாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நினைத்தால் எதையும் செய்ய முடியும். மேலே இருக்கின்ற அதிகாரிகள் என்ன சொன்னாலும், அவர்கள் நினைத்ததைத்தான் செய்து வருகிறார்கள். ஏன் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது? அதைக் கட்டுப்படுத்த முடியாதா? என்று எனக்குத் தோன்றுகிறது. அப்படிப்பட்ட கிராம உத்தியோகஸ்தர்களால் பல நன்மைகளும் ஏற்படலாம்; அவர்களால் பல தீமைகளும் ஏற்படலாம் என்பதை இன்றையதினம் கிராமப்புற விவசாயிகள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். கிராம உத்தியோகஸ்தர்கள் ஒரு பகுதி நேர ஊழியர்கள் என்று கருதிக்கொண்டிருப்பதால் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சம்பளம் மிகக் குறைவு. அப்படி குறைந்த சம்பளம் பெற்று எப்படி வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். ஆகவேதான், அவர்கள் தவறான காரியங்களைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆகவே, அரசுக்கு எவ்வளவு செலவானாலும் கிராம உத்தியோகஸ்தர்களை முழுநேர ஊழியர்களாக நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அவர்களுக்கு குறைந்தபட்ச கல்வி யோக்கியதை இருக்க வேண்டும். அவர்களுக்கு நல்ல சம்பளங்களைக் கொடுக்க வேண்டும். ஆகவே, இனியும் காலம் தாழ்த்தாமல் கிராம உத்தியோகஸ்தர்களை முழுநேர ஊழியர்களாக நியமனம் செய்ய வேண்டும் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். துரைபாண்டியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். அந்நாளில் கிராம அதிகாரிகளை பெருந்தனக்காரர்கள் என்ற முறையில் நியமித்து, சிறிய ஊதியம் கொடுத்து வந்தார்கள். காலப்போக்கில் பெருந்தனக்காரர்களில் பலர் சிறுதனக்காரர்களாகிவிட்டார்கள். தற்போதைய நிலையில் அவர்கள் அந்த குறைந்த ஊதியத்தில் தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாமல் இருப்பதால், கிராமங்களில் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து வருகிறார்கள்.



1968 ஆகஸ்ட் 21] [திரு. என். துரைபாண்டியன்]

அடுத்தபடியாக, இன்றையநிலையில் அவர்களுக்கு கல்வித் தகுதி ஒன்றும் வரையறுக்கப்படவில்லை. ஆகவே, கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் குறைந்தது எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தகுதியாவது வைத்து, அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டும். மேலும் சர்க்கார் அலுவலகங்களில் நடக்கிறமாதிரி, அடிக்கடி அவர்களையும் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யவேண்டும். இல்லாவிடில் எவ்வளவுதான் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தாலும், ஒரே இடத்தில் அவர்கள் இருந்தால் அந்தக் கிராமத்திற்கு அவர்கள் டிக்டேட்டராகி விடுவார்கள். கிராம உத்தியோகஸ்தர்கள் ஜனநாயக முறையில் தங்களுடைய கடமைகளைச் செய்ய வேண்டுமென்றால், அவர்களும் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இட மாற்றம் பெற வேண்டும். இதுபோன்ற எல்லாக் கருத்துக்களையும் மனதில் கொண்டு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரிக்கும்படியான அளவிலே நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கிராம உத்தியோகஸ்தர்கள் நியமனம் சம்பந்தப்பட்டமட்டில் அவர்களிடம் பணவசதி எவ்வளவு இருக்கிறது என்பதைப் பார்க்கக்கூடாது என்று எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் பேசினார்கள். என்னைப் பொறுத்தவரையில், கிராம உத்தியோகஸ்தர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு பணவசதியும் யோக்கியமான அம்சங்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதுதான். ஏனெனில் தற்போது கிராம உத்தியோகஸ்தர்களாக இருக்கக்கூடியவர்கள் பணம் கையாடல் செய்துவிட்டார்கள் என்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அப்படி கிராம உத்தியோகஸ்தர்கள் பணம் கையாண்டுவிட்டால் அவர்கள், கையாடல் செய்த பணத்தை திரும்ப வசூலிப்பதற்கு அவர்களிடம் சொத்து இருக்க வேண்டும். கிராம உத்தியோகஸ்தர்கள் பணவசதி அற்றவர்களாக இருந்தால் எப்படி கையாடல் செய்த பணத்தைத் திரும்பப் பெறுவது? ஆகவே, அவர்களுக்கு சொத்து இருக்க வேண்டும் என்பதை நான் வற்புறுத்துகிறேன். சொத்து இருந்தால் சர்க்கார் அவர்களிடமிருந்து பின்னால் வசூலித்துக்கொள்ளலாம் என்ற கருத்தில்தான் கிராம உத்தியோகஸ்தர்களுக்கான தகுதியில் பணவசதி சேர்க்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். கிராம முன்சீப்புக்களைப் பொறுத்த வரையில் பல பிரச்சனைகள் இருக்கின்றன. அவர்களை மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இடமாற்றம் செய்வது நல்லது என்று சொன்னார்கள். இதுமாதிரி கிராம முன்சீப்கள்பற்றி பல கருத்துக்கள் இருப்பதால், ஆழ்ந்து தீர ஆலோசித்து அவர்கள் நியமனம் பற்றி இருக்கக்கூடிய பல அம்சங்கள் என்ன என்ன என்பதையெல்லாம் ஆராய்ந்து சர்க்கார் ஒரு நல்ல கருத்தைக் கொண்டு அவர்கள் எந்தவிதமாக நியமிக்கப்படவேண்டுமென்று முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய

**திரு. க. இராமமூர்த்தி:** துணைத் தலைவர் அவர்களே, கிராம உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில் பரம்பரை முறையை ஒழிப்பதற்காகக் கொண்டுவரப்படுகிற இந்த மசோதாவை நான் வரவேற்றுப்பேசுகின்ற இந்த நேரத்தில் ஒன்றைமட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிராம உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் குறைவான சம்பளம் வாங்கினாலும் கூட இந்த நாட்டிற்கு அடிவேர் போன்ற உத்தியோகத்தில் இருக்கிறார்கள். அந்த உத்தியோகம்தான் பல்வேறு இனங்களில் இந்தச் சர்க்காருக்கு உதவியாக இருக்கிறது. இந்தச் சர்க்காருக்கு மட்டுமல்ல, எந்தச் சர்க்காருக்கும் உதவியாக இருக்கும். கிராம உத்தியோகஸ்தர்களுடைய எல்லைக்குள் அவர்கள் வேலை வரி வசூல் செய்வது மட்டுமல்ல, அந்தப் பகுதியில் வாழுகின்ற மக்களுக்கு சர்டிபிகேட்டிலிருந்து அவர்களுடைய மற்ற மற்றத் தேவைகளை எல்லாம் பூர்த்திசெய்யக்கூடிய அளவில் அடிப்படையான அத்தியாவசியமான உத்தியோகஸ்தர்களாக அவர்கள் இருக்கிறார்கள். பல இடங்களில் கிராம உத்தியோகஸ்தர்கள் பதவியை துஷ்பிரயோகம் செய்திருந்தாலும், கிராம உத்தியோகஸ்தர்களுடைய சேவை முக்கியமாகத் தேவைப்படுகிறது. நானே கூட ஒரு ஆண்டுக்காலம் மணியமாக உத்தியோகம் பார்த்தேன். கிராம உத்தியோகஸ்தர்களின் வேலைகளை அடிப்படையிலே பார்க்கின்ற நேரத்திலே நுணுக்கமான சில வேலைகளை படிப்படியாகத்தான் தெரிந்து கொள்ளக்கூடிய நிலைமையிருக்கிறது. வரி வசூலாக இருந்தால் பரவாயில்லை, மற்ற முக்கியமான வேலைகளாக இருக்கின்றவற்றை பரம்பரையாக வந்தால் தெரிந்து கொள்ளக் கூடிய நிலைமையும் இருக்கிறது. இருந்தாலும், சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின் மூலமாக இந்த முறையை மாற்ற வேண்டிய நிலைமை இருப்பதால் இந்த முறையை மாற்றவேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவிற்கு இந்த மாமன்றத்தின் எல்லாத் தரப்பிலேயும் இருந்து அமோகமான வரவேற்பு இருப்பது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. நெடுங்காலமாகவே பெரிய சீர்திருத்தத்தைச் செய்யவேண்டுமென்ற நிலைமையில் இருந்து வந்திருக்கிறோம். திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதுபோல் கிராம உத்தியோகஸ்தர்கள் இந்தச் சமுதாயத்தினுடைய ஆணிவேராகவும் அச்சாகவும் இருந்து வருகிறார்கள். 20 ஆயிரம் பேர்கள் கிராம முன்சீப்களாகவும். 20 ஆயிரம் பேர்கள் கர்ணங்களாகவும் இருந்துவரக்கூடிய ஒரு பெரிய அமைப்பான இது ரெவின்யூ இலாகாவினுடைய அச்சாணியாக இருக்கிறது. பழங்கால முறைகள்தான் இன்னும் இருந்துவருகின்றன என்றெல்லாம் பேசப்பட்டது. என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. நல்லசிவம் அவர்கள் இந்தச் சபையிலே இதைப்பற்றியெல்லாம் காரசாரமாகப் பேசினார்கள். அந்த அளவிற்கு இந்தப் பிரச்சினை எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்துக்கொண்டிருந்த நேரத்தில்



சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பையும் செயல்படுத்துகின்ற முறையிலே தான், வமிசாவழி முறையை ரத்துசெய்யக்கூடிய நிலைமை இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதைக்கண்டு யாரும் பயப்படத் தேவையில்லை. பரம்பரையெல்லாம் போய்விடும் என்ற கருத்துக் கொள்ளவேண்டாம். அதற்காகத்தான் நான் தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராம உத்தியோகஸ்தர்களை எல்லாம் அழைத்துச் சொன்னேன். வமிசாவழி தான் போகிறதே தவிர, அவர்களும் அந்தப் பதவிக்கு ஒரு விண்ணப்பம் செய்யலாம், அவர்களும் விண்ணப்பம் செய்து, மற்றவர்களும் செய்தால், அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் மார்க் கிடைக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது என்று சொன்னேன். ஏற்கெனவே இருந்துவந்திருக்கிற கிராம உத்தியோகஸ்தர்களின் உரிமையை அரசாங்கம் பறித்துக்கொண்டது என்பது இல்லை. இனிமேல் கிராம உத்தியோகஸ்தர்கள் இருக்கமாட்டார்கள் என்று எண்ணக்கூடாது என்று நான் தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராம உத்தியோகஸ்தர்களை அழைத்துச் சொன்னேன். பெரிய பெரிய சுதேச சமஸ்தானங்கள், மன்னர் பரம்பரை, அந்தக் குடும்பத்திலே பிறந்தவன், அவர் மகன் என்ற பழைய தத்துவங்கள் எல்லாம் மாறி இன்றைக்கு புதிய சமுதாயம் வேகமாக வளர்ந்து கொண்டுவருகின்ற புது யுகத்தில் நாம் இருக்கின்றோம். இந்த நேரத்திலே பல நல்ல யோசனைகளை சங்கரய்யா அவர்களும், பொன்னப்ப நாடார் அவர்களும், சௌடி சுந்தரபாரதி அவர்களும் சொன்னார்கள். அவர்கள் கேட்டார்கள், ஏன் இதைச் சட்டத்தின் அடிப்படையிலே கொண்டுவரக்கூடாது என்று. இன்றைக்கு இருப்பதிலே இதுமாதிரியான இடைஞ்சல்கள் நிறைய இருக்கின்றன, தங்களுடைய இஷ்டப்படி நடந்துகொண்டு ஊரையே தம்முடைய நிலக்களமாக ஆக்கக்கூடிய நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன.

தமிழகத்திலே உணவு உற்பத்தித் துறையில் நாம் மௌனமாக தீவிரமான புரட்சியைச் செய்துகொண்டிருக்கிற நேரத்திலே, நாட்டின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக இருக்கிற 90 சதவீத மக்கள் வாழ்க்கையிலே ஒரு பொருளாதார சுபிட்சத்தை ஏற்படுத்தவேண்டுமென்று நாம் முயற்சி செய்கின்ற நேரத்திலே அச்சாணிபோன்று விளங்கக்கூடிய இவர்களிடத்திலேயும் ஒரு பெரிய மாறுதலைச் செய்து தீரவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். வருவாய்த்துறை வாரியம் இந்த வகையில் என்ன என்ன செய்யவேண்டுமென்று பரிந்துரை செய்தார்கள், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் யோசனைகளைச் சொன்னார்கள். இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து விதிமுறைகளைச் செய்யக் கூடிய நிலைமை ஏற்படுகிறது.

சிறிய காரணத்திற்காக கிராம முன்சீப்பை வேலையிலிருந்து சஸ்பெண்ட் செய்துவிடுகிறார்கள். மேலதிகாரிகளின் விருப்பு வெறுப்புகளுக்குட்படாமல் இருந்தால் சஸ்பெண்ட் செய்துவிடு

கிறார்கள். ஏதாவது மோசடி என்பதுபோன்ற பெரிய குற்றத்திற்காக சஸ்பெண்ட் செய்யலாம், ஆனால் அவர்களுடைய விருப்பு வெறுப்புகளுக்குட்படாமல் இருந்தால்கூட சஸ்பெண்ட் செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆர்.டி.ஓ. ஒன்று போட்டுவிட்டார் என்றால் அதற்கு அப்பீலே கிடையாத நிலைமை இருக்கிறது. கிராம உத்தியோகஸ்தர்கள் மற்றவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டு நடக்கக்கூடிய வேட்டைக்காடாக இன்று நிலைமை இருக்கிறது. அந்த வேட்டைக் காட்டை நல்ல முறையில் மாற்றக் கூடிய வகையில் புதிய விதிமுறைகளையெல்லாம் தயாரித்துக்கொண்டு இருக்கிறோம்.

அவர்களுடைய படிப்பு அம்சத்தை எடுத்துக் கொண்டால்கூட எஸ்.எஸ்.எல்.சி. வரை இருக்கலாமா அல்லது குறைவாக இருக்கலாமா என்று யோசிக்கப்படுகிறது. எஸ்.எஸ்.எல்.சி. வரை என்று வைத்தால் எட்டாவது, ஒன்பதாவது வகுப்புகள்வரை படித்தவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் பாதிக்கப்படுவார்கள். அதையும் யோசிக்கவேண்டும். வயதைப் பொறுத்தவரையில் 55 வயது வரையில் வேலை பார்க்கலாம், வேண்டுமானால் நீடிக்கலாம் என்ற அளவிலே யோசிக்கப்படுகிறது. இப்பொழுது அப்பீல் என்றால் போர்ட் ஆப் ரெவின்யூ வரைதான் போகிறது. அப்படியில்லாமல் அரசாங்கத்திற்கு அப்பீல் செய்யக்கூடிய முறையை வைக்கலாமென்ற நிலைமைகளையெல்லாம் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் 40 ஆயிரம் பேர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையுமே குமாஸ்தாக்களாகப் போட்டு விடுவார்கள் என்று பயப்படத் தேவையில்லை. விண்ணப்பம் செய்யும் பொழுது பரம்பரையாக வந்தவர் விண்ணப்பம் செய்யலாம். இன்னொருவரும் விண்ணப்பம் செய்கிறார் என்றால் பரம்பரையைச் சேர்ந்தவருக்கு யோக்கியதாம்சம் அதிகமாக இருக்கக்கூடிய அளவில் யோசனை சொல்ல அரசாங்கம் முயற்சிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசினர் தோட்டத்தில், ராஜாஜி ஹாலுக்குப் பக்கத்திலே உள்ள இடத்தை, கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் உள்ள இடத்தை கிராம அதிகாரிகள் இல்லம் ஏற்படுத்துவதற்காக அரசு முன்வந்து கொடுக்க முயற்சிக்கிறது. ஒரு வெளிநாட்டுக்கார கவர்னரின் மாளிகையாக இருந்த இடத்தில் இன்று நாட்டின் அச்சாணிபோன்று இருக்கின்ற கிராம அதிகாரிகளின் பிரதிநிதிகள் தங்களுடைய இல்லத்தை அமைக்கிறார்கள் என்ற அளவுக்கு. அவர்களுடைய குறைகளையெல்லாம் கவனிக்கத்தக்க அளவுக்கு வகைசெய்ய ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அதோடு கூட, கர்ணத்திற்கு அதிகச் சம்பளம், மணியக்காரருக்குக் குறைவான சம்பளம் ஆகியவற்றையெல்லாம் கூட செம்மைப்படுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. தாசில்தார் கோபித்துக் கொண்டால், ஆர்.டி.ஓ. கோபித்துக் கொண்டால் வேலை போய்விடுமோ என்ற பயம் எல்லாம் நீங்கி அவர்களுடைய வாழ்க்கையில் உற்சாகமும், விழிப்புணர்ச்சியும், மனதில் புரட்சிகரமான எண்ணங்களும் ஏற்படும் வகையில் இன்றைக்கு இந்தச் சர்க்கார் இந்த மசோதாவை இந்த மன்றத்தின் முன் வைத்திருக்



கிறது. நண்பர் நல்லசிவம் போன்றவர்கள் இதைப் பற்றி ரொம்ப காலமாகப் பேசிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மசோதாவுக்கு நீங்கள் எல்லாம் நல்ல முறையில் ஆதரவைத் தெரிவித்ததைப் போல் ஏகமனதாக இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.*

*பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.*

*நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.*

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I move—

'That the Madras Proprietary Estates' Village Service and the Madras Hereditary Village Offices (Repeal) Bill, 1968 (L.A. Bill No. 16 of 1968) be passed'.

*தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.*

## (6) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைக்காரர்கள் (சிறப்பு விதித்துறைகள்) மசோதா (ச. பே. மசோதா எண் 17/1968).

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Deputy Speaker, Sir,

I beg to move that the Madras Cultivating Tenants (Special Provisions) Bill, @ 1968 be taken into consideration.

By the Madras Cultivating Tenants (Protection from Eviction) Act, 1966 (Madras Act 11 of 1966), cultivating tenants were given protection from eviction on the ground of arrears of rent payable to the landlord or the Public Trust, as the case may be. The Act had remained in force upto and inclusive of the 19th April 1968. Under section 6 of the said Act all applications for the eviction of cultivating tenants and all suits and proceedings stayed under the said Act should, after the expiration of the said Act, be proceeded with subject to the provisions of any law which might be then in force, from the stage which had been reached when the application, suit or proceeding was stayed. By reason of this section in that Act, the cultivating tenants would have been faced with eviction proceedings on the ground of arrears of rent. Having regard to the economic background

@ Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 19th August 1968

of the cultivating tenants, it was considered that it might be difficult for them to clear off the arrears in one lump sum. After careful consideration, the Government decided to enable the cultivating tenants to pay all the arrears upto the 20th April 1968 in four equal annual instalments, the first instalment being payable on or before 1st February 1969. Accordingly the Madras Cultivating Tenants (Special Provisions) Ordinance, 1968 (Madras Ordinance 2 of 1968) was promulgated by the Governor. The Bill seeks to replace that Ordinance.

I request the House, Sir, to accept the Motion.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் முன் மொழிந்த தீர்மானம் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றது.

***திரு. என். சங்கரய்யா :** துணைச் சபாநாயகர் அவர்களே, பயிரிடும் குத்தகைக்காரர்கள் பற்றிய இந்த மசோதாவை நாங்கள் பொதுவாக ஆதரிக்கக்கூடிய நேரத்திலே, இதற்குச் சிலபல திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். அது வரும்போது அதைப் பற்றிப் பேசிக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். 1965, 1966-ம் ஆண்டுகளிலே பயிர் விளைச்சல் சரி இல்லாத காரணத்தால், தீய்ந்து விட்ட காரணத்தால் பயிரிடும் குத்தகைக் காரர்கள் தங்கள் பங்கைச் செலுத்த முடியாது என்று கருதி 1966-ம் ஆண்டிலே மசோதா கொண்டுவரப்பட்டது. அப்படிக் கொண்டுவரப்பட்ட நேரத்திலே, பயிர்கள் தீய்ந்துபோய் விட்ட காரணத்தால் குத்தகைக்காரர்கள் செலுத்தவேண்டிய பங்கைப் பூரணமாக ரத்து செய்ய வேண்டுமென்றும் இரண்டு ஆண்டு காலத் திற்கு மட்டும் ஒத்திவைப்பது மட்டும் போதாது என்றும் பிரச்சனை கிளப்பப்பட்டது. இன்றைக்கும் அந்தப் பிரச்சனை, 1968 ஏப்ரல் 19-ம் தேதி முதல் விவசாயிகள் சார்பாக கிளப்பப்பட்டிருக் கிறது. அது வற்புறுத்தப்பட்டதன் பேரில் அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அது தற்போது மசோதாவாகக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படுகின்ற நேரத்திலே, இந்த மசோதா விலே குறிப்பிட்டுள்ளபடி தவணைகளைச் செலுத்துவது என்றால் அது சற்றுச் சிரமப்படும். மேலும் சட்டத்தில் கண்டுள்ள சில ஷரத்துகளிலும் சில திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. அதன் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நாங்கள் கொடுத் திருக்கக்கூடிய திருத்தங்களைப் பொறுத்து சாதகமான முடிவை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** கனம் துணைச் சபாநாயகர் அவர் களே, இந்த மசோதாவிலே ஒரு திருத்தத்தை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதை வற்புறுத்துவதற்காக இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். குத்தகை விவசாயி கள் குத்தகை செலுத்த முடியாத நிலை ஏற்பட்ட காரணத்தால் தான் அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்



பட்டது. அவ்வாறு குத்தகை கொடுக்கப்படாமல் தேங்கியிருப் பதை நான்கு தவணைகளாகக் கொடுக்க வேண்டுமென்று இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மசோதா கூறு கிறது. முன்பே ஏற்பட்ட சட்டத்தினால் ஏற்பட்ட சங்கடம் இதனாலும் ஏற்படாமல் இருக்கவேண்டும். அவர்கள் கிட்டத்தட்ட மூன்று நான்கு ஆண்டுகளாக பாக்கி கொடுக்க வேண்டிய நிலை யில் இருக்கிறார்கள். நான்கு வருஷப் பாக்கியை நான்கு தவணை களில் கொடுக்க வேண்டுமென்று வரும்போது நடப்பு ஆண்டுக்கு 40 சதவிகிதம், பழைய பாக்கி 40 சதவிகிதம் ஆக 80 சதவிகிதம் விளைச்சலில் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அப்படி ஏற்பட்டுவிட்டால் 20 சதவிகிதந்தான் மிஞ்சுகிறது. 20 சதவிகிதம் மிச்சத்தை வைத்துக் கொண்டு நான்கு ஆண்டுகளுக்கு தவணை பாக்கியைக் கொடுத்தால் அதனால் நிச்சயம் சாகுபடி பாதிக்கப் படும். உற்பத்திப் பெருக்கத்தை நோக்கமாகக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அந்தத் தவணையை நான்கு தவணைகளில் இருந்து எட்டு தவணைகளாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** 40 சதவிகிதம் இந்தக் குத்தகைக்குக் கொடுக்கிறார்கள். பழைய பாக்கி 40 சதவிகிதத்தை நான்கு தவணைகளாகக் கொடுக்கிறார்கள். அப்படி இருக்க எப்படி 80 சதவிகிதம் கொடுக்க வேண்டியிருக்கும் ?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** ஏற்கெனவே நான்கு ஆண்டுகள் தவணை பாக்கியிருக்கிறது. ஆகவே, நான்கு தவணைகள் என்னும் போது அது 40 சதவிகிதமாகிறது. தற்போது கொடுக்கவேண்டி யது 40 சதவிகிதம். ஆக 80 சதவிகிதமாகிறது.

ஆகவே, இதனால் அந்தக் குத்தகை விவசாயிகள் பாதிக்கப் படுவதோடு கூட மீதி இருக்கும் 20 சதவிகிதத்தை வைத்துக் கொண்டு சாகுபடியை நல்ல முறையில் செய்யமுடியாது என்ற காரணத்தால் . இதனை 8 தவணைகளாகக் கூட்டிக் கொடுக்க வேண்டும். குறிப்பாக தஞ்சை ஜில்லாவில் பல லட்சக்கணக்கான ஏக்கர்கள் குத்தகை சாகுபடியில்தான் இருக்கின்றன என்ற உண்மையை உணர்ந்து, நல்ல விளைச்சல் ஏற்பட வேண்டுமென்ப தற்காக எட்டு தவணைகளாகப் பாக்கி கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, with regard to this Bill, I wish to offer a few remarks. This is a very complicated matter. We have got on the one side landlords having 10 or 15 acres a very small group and on the other side cultivating tenants who are actually working in the fields and who are responsible for the direct cultivation of lands. Then we have got another group of persons who are, for all practical purposes, just like absentee landlords or absentee tenants.

They hire some coolies and dole out something for the work done by them. They collect the produce. They treat the coolies as workmen. These tenants are directly responsible for the growth of our good economy. They enjoy all the benefits. At the same time they do not pass on the benefits to the small landowners who own two or three acres and whose lands they have taken on tenancy. I know several instances of landowners owning two or three acres, widows and destitutes, who have no other source of income, except the portion which these tenants earmark and give to them. Unfortunately nobody is there to speak about this particular section. These small landowners depend for their very existence upon what the tenants give them. They have no forum to ventilate their grievances. I wish this Government tackle their problem in all earnestness. They are entitled to all benefits which the Government or society can give them. But these tenants do not give them all they are entitled. These tenants take the lands (2 or 3 acres) from 'A' and lands (2 or 3 acres) from 'B' and so on. They should not be called 'tenants'; they are more like 'landlords'. They are the 'middlemen'. They do not actually plough the fields. They employ 'thozhilalies'. When it comes to the question of paying the 'thodhilalica' they are ruthless. They dole out something. But when it comes to a question of paying the "சிறுநிலச்சுவான்தார்" their portion, they give all sorts of excuses saying "there has been no rain, no produce". The small landholders, who have no other source of income, have to be content with what these tenants give. These small landowners represent a large section of the people and I think many complaints have come to the Hon. Minister (many complaints have come to me also). We have to redress their grievances. Otherwise we will be exposing a large area of dissatisfaction and unrest amongst these people, who have no forum or association to voice their grievances. Some protection should be given for these people, whose case deserve sympathy. I do agree with the provision for paying arrears in four instalments. At the same time, whatever is due to the small landowner should also be given. The bigger landowners, the small landowner, the small peasant and these tenants all these four classes they are all looking in different directions. With the result, entire food production is coming to a standstill, even though astronomical arithmetical figures are given regarding our food production. I therefore request the Hon. Minister just to look into this matter personally and see that a proper solution is arrived at.

ந.ப. 12-00 திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நில வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தை குத்தகை பாக்கியை வசூல் செய்யக்கூடிய ஒரு சட்டமாகத்தான்



நான் பார்க்கிறேன். 1966-ல் அதிகமான மழை பெய்ததாலும், பூச்சி வெட்டு போன்றவைகளால் மிகப் பெரிய அளவில் சேதம் அடைந்ததாலும் குத்தகைக்காரர்கள் குத்தகை அளக்கமுடியாததொரு நிலை ஏற்பட்டு அவர்கள் அன்றையதினம் முதலமைச்சராக இருந்த உயர்திரு பக்தவச்சலம் அவர்களை பேட்டி கண்டு எங்களால் குத்தகை நெல் அளக்கமுடியாததொரு நிலை ஏற்பட்டிருக்கிறது, எங்களை நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடிய அளவிற்கு ரெவின்யூ கோர்ட்ஸ் அமைத்திருக்கின்றன, ரெவின்யு கோர்ட்டிலிருந்து எங்களை நிலத்திலிருந்து வெளியேற்றி விடுவார்கள் என்ற முறையைத் தெரிவித்தார்கள். இன்று ரெவின்யூ அமைச்சராக இருக்கக் கூடிய அமைச்சர் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். அந்த முறையீட்டை கருத்தில்கொண்டுதான் அன்றைய அரசு குத்தகை பாக்கிக்காக யாரையும் நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்ற ஒரு சட்டத்தைப் போட்டுவிட்டுச் சென்றார்கள். அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தபோது நாங்கள் ஆலோசனைகள் கூறியிருக்கிறோம். பாதிக்கப்பட்டவர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள், விளையாதவர்கள் இருக்கிறார்கள், குத்தகை அளப்பதற்கு தகுதியில்லாத நிலையில் இருப்பவர்கள் இருக்கிறார்கள், ஆகவே பாகுபாடு செய்து ஒரு சட்டத்தைக் கொண்டு வாருங்கள் என்று நாங்கள் சொன்ன யோசனையை ஏற்றுக்கொள்ளாமல் முழுவதுமாக நிறுத்தி வைக்கும் முறையில் சட்டத்தைப் போட்டு விட்டுச் சென்றார்கள். இன்று மூன்று வருடங்களுக்கு மேல் ஆகிறது. இன்று மூன்று ஆண்டு காலமாக பல மாவட்டங்களில் காய்வு ஏற்பட்டிருக்கிறது, வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது, குத்தகைக்காரர்கள் பெரிய அளவில் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் கோவில் மடங்களுக்குச் சொந்தமான நிலங்களின் நிர்வாகம் மோசமான நிலையில் இருக்கிறது. அவர்கள் சரியான முறையில் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்வதில்லை. அல்லது தள்ளுபடி செய்து கொடுப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லி சென்னையில் உள்ள என்டோமென்ட் போர்டார்தான் அதைச் செய்யவேண்டும் என்று சொல்லி கையைவிரித்து விடுகிறார்கள். அல்லது கோர்ட்டுக்குச் சென்றால் கோர்ட்டார் தீர்க்கமாக உடனடியாக பைசல் செய்வது கிடையாது. சென்ற சட்டசபைக் கூட்டத்தில் கூட ஒரு உறுப்பினர் ஒரு கேள்வி கேட்கும்போது கோவில், மடங்கள் இவற்றிற்கு பல்லாயிரக்கணக்கான கலம் நெல் அளக்க வேண்டிய பாக்கியிருக்கிறது என்ற ஒரு அறிக்கையும் சமர்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாக்கிகளை எல்லாம் சேர்த்து வசூல் செய்வது என்பது சாத்தியப்படாது. அப்படி வசூல் செய்யக் கூடிய காலத்தில் நிச்சயமாக விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் ஒரு அபாயம் நிறைந்த சட்டமாகத்தான் இதை நான் பார்க்கிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1968 ஆகஸ்ட் 21

இன்று ரெவின்யூ கோர்ட்டுகளில் நிலச்சுவான்தார்களை அழைத்து விசாரிப்பது கிடையாது. நெல் பாக்கி அளக்கவேண்டுமா என்று கேட்பார்கள். ஆம் என்று பதில் சொல்வார்கள். உடனே நிலத்தை விட்டு வெளியே போ என்று சொல்கிறார்கள். அப்படி அவை நில வெளியேற்றக் கோர்ட்டுகளாக இருக்கின்றனவே தவிர நிலச் சொந்தக்காரர்களுக்கும் குத்தகைகாரர்களுக்கும் சமரசம் செய்து வைக்கக்கூடிய அல்லது வசூல் செய்வதற்கு ஆலோசனை சொல்லக்கூடிய கோர்ட்டுகளாக அவை அமையவில்லை. இப்போது சட்டத்தில் சொல்கிறார்கள், நான்கு தவணைகளில் வசூல் செய்து கொள்ளலாம் என்று. நான்கு வருட பாக்கியை, காணாத பாக்கியை அளக்கமுடியாத பாக்கியை நான்கு தவணைகளில் வசூல் செய்து கொள்ளலாம் என்றிருக்கிறது. அந்த நான்கு தவணைகளில் ஒரு தவணை செலுத்தத் தவறினாலும் அவர்களை வெளியேற்றிவிடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் அபாயமானது. மறைமுகமாக நிலத்தை விட்டு வெளியேற்றும் ஒரு சட்டமாகத் தான் இது அமைகிறது. லட்சக்கணக்கான குத்தகைக்காரர்கள் இந்த ஆபத்திற்கு பலியாக்கப்படுவார்கள் என்றதொரு நிலையை நான் சொல்லாமல் இருக்கமுடியாது.

இந்தச் சட்டத்தை வேறுவிதமாகக் கொண்டுவந்திருக்கலாம். சிறுநிலச் சொந்தக்காரர்களுக்கு, மூன்று, ஐந்து ஏக்கர் உள்ளவர்களுக்கு விதிவிலக்கு அளித்து அதிகம் நிலம் உள்ளவர்களுக்கு குத்தகை பாக்கியிருந்தால் பூராவையும் தள்ளுபடி செய்திருக்க லாம். அவர்களால் அதைத் தாங்கிக் கொள்ள முடியும். இல்லை யென்று சொன்னால் ஒரு அதிகாரியை நியமனம் செய்து எந்தெந்தப் பிரதேசங்களில் எந்தளவிற்கு பாதிக்கப்பட்டிருக் கிறது, எவ்வளவு காய்வு ஏற்பட்டிருக்கிறது, எவ்வளவு விளையாமல் இருக்கிறது, எவ்வளவு விளைந்திருக்கிறது என்று பரிசீலனை செய்து அந்தப் பரிசீலனைக்குப் பிறகு எங்கெங்கு குத்தகை கொடுப்பதற்கு தகுதியாகயிருக்கிறார்களோ அவர்களிடம் வசூல் செய்வதற்கு வேண்டிய ஒரு பகுதியை இந்த மசோதாவில் செய்திருக்கலாம். அப்படியில்லாமல் மொட்டையாக எல்லாவற்றையும் நான்கு தவணைகளில் செலுத்தவேண்டும், ஒரு தவணை செலுத்தவில்லை யென்றாலும் கூட நிலத்திலிருந்து வெளியேற்றிவிடுவது என்று சென்ற அரசு புதிய சுமையை விவசாயிகள் தலையிலே சுமத்தி யிருக்கிறார்கள். இப்பொழுது வந்திருக்கும் அரசு பாக்கியெல்லாம் வசூல் செய்யும் நிலையை மேற்கொள்ளுகிறது என்ற கெட்ட பெயர் இந்த அரசுக்கு ஏற்படக்கூடாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதை கனம் அமைச்சரவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டத்திலே 14 இலட்சம் ஏக்கரிலே விவசாயம் செய்யப்படுகிறது என்றால் பிப்ரவரி மாதத்திலேதான் அறுவடை செய்யமுடியும். ஜனவரி, பிப்ரவரி, மார்ச் 15 தேதிக்குத்தான்



1968 ஆகஸ்ட் 21] [திரு. ஆ. கு. சுப்பையா]

தாளடி அறுவடை செய்ய முடியும். அறுவடை செய்து வைக்கோல் அடித்து கணக்குப் பார்க்க இரண்டு மூன்று மாதங்கள் பிடிக்கும். ஆகவே ஜூன் மாதம் கொடுக்கலாம் என்றிருக்க வேண்டும். அல்லது ஏப்ரல் என்றாவது போடுங்கள். அறுவடை நடந்து கொண் டிருக்கும்பொழுதே குத்தகை நெல் அளக்கவில்லை என்று கூறுவது ஆபத்தானது. அதையும் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். எனவே, பிப்ரவரி மாதம் என்பதைத் தள்ளி ஜூன் மாதம் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதையும் அரசாங்கம் ஆலோசிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* THIRU R. PONNAPPA NADAR : Sir, I wish to offer a few remarks regarding the general features of this Bill. This measure gives great relief to the cultivating tenants. Protection is given to them and no eviction can be ordered on the ground of arrears of rent. Arrears are made payable in easy instalments. The one point that has been stressed is that this measure should not cause hardship to the small landholders. I will not dwell on that

I wish to place for the earnest consideration of the Minister one defect which I noticed in the drafting of the Bill. It is said in sub-clause (2) of clause 1 of L.A. Bill No. 18 of 1968. "It extends to the whole of the State of Madras.". But similar provision has not been made in this Bill. The Bill does not say ' that it extends to the whole of the State of Madras or to certain specified areas. This point may be examined so that there may be no legal ambiguity and that this point may not be urged before any court of law.

* **திரு. டி. எஸ். ஆதிமூலம் :** டெபுடி ஸ்பீக்கர் சார், இந்த மசோதாவைப் படித்துக் கொள்ளவில்லை என்றாலும் பொதுவாகத் தெரியும், இதிலே உள்ள சாராம்சம் என்னவென்று. இந்த மசோதாக்களெல்லாம் ஓட்டுக்களை எதிர்பார்த்துத்தான் முக்கிய மாகக் கொண்டு வரப்படுகின்றன. காங்கிரஸ் சர்க்கார் செய்த தவறுகளிலே ஒன்று இந்த 'டெனன்ட்ஸ் புரொடக்ஷன் ஆக்ட்' என்பது. இதிலே எங்கள் கட்சியைச் சார்ந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் வலியுறுத்தியபடி சிறுநிலச்சுவாந்தார்கள் விஷயத்தில் ரொம்பவும் கவனக் குறைவாக இருந்து விட்டார்கள். பொதுவாக நிலம் வைத்திருப்பவர்களைத் துன்பப்படுத்தித்தான் விவசாயி களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதை எப்படித்தான் அகில இந்திய காங்கிரஸ்காரர்கள் கண்டுபிடித்தார்கள் என்பது கடவுளுக்குத்தான் தெரியும். இது எப்படியிருக்கிறது என்றால், **Rob Peter and Pay Paul** என்று சொன்னபடி எவனையோ பிடித்துக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேதான் கொள்ளையடித்து ஆளுகிற கட்சிக்கு எப்படியாவது ஓட்டைப் பிடித்துக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலேதான் காரியங்கள் நடைபெறுகின்றன. விவசாயிகளுக்கு நன்மை செய்ய

[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1968 ஆகஸ்ட் 21

மேல் நாடுகளிலே பல திட்டங்களை வைத்திருக்கிறார்கள். அதுபோல் இங்கேயும் விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றால் இங்கேயும் விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றால், ஸ்டேட் பூராவும் 5, 6 கோடி ரூபாய்க்கு உரங்களை இனமாகக் கொடுக்க திட்டம் செய்யுங்கள். இப்படிப்பட்ட நல்ல காரியங்களை செய்யலாம். அதைவிட்டுவிட்டு எப்பொழுது பார்த்தாலும் "குத்தகை பணத்தைக் கொடுக்காதே" என்பது. அதனால் "ஆர்டினன்ஸ்" போட்டவுடனே இஸம் வகைகள் சேர்ந்து கொண்டு 4 தவணைகளாக இருப்பதை 8 தவணைகளாக ஆக்க வேண்டும் என்று இப்படி அக்கிரமமாகச் சொல்லும் அளவுக்கு சூழ்நிலையிருந்தால் இந்த நாட்டிலே மழை ஒழுங்காகப் பெய்யாது. "முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல்" என்பது திருக்குறள். நீங்களே திருக்குறள் படித்த கட்சிக்காரர்கள். உங்களிடத்தில் என் பொட்டலத்தை அவிழ்க்க வில்லை. அதனால் நீங்கள் விவசாயிகளுக்கு நன்மை செய்வதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. அதற்காக வேண்டி 10 கோடி ரூபாய் வரி போடுங்கள், டெனன்ட்ஸ்க்கு (Tenants) வசதி செய்யுங்கள். அதற்காக உடல் வருந்த பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களுக்கும், அந்நிய நாடுகளுக்கும், பர்மா போன்ற இடங்களுக்கும் போய் வியாபாரம் செய்து தங்களுடைய சிக்கனத்தினாலே சேர்த்து வைத்து சாப்பிடுவதற்கு நிலம் வாங்கி வைத்திருந்தால் அதில் கை வைக்காதீர்கள். ஒரு ஏக்கர் நிலமுள்ள ஒருவன், கல்கத்தாவிற்குச் சென்று வேலை தேடிப் பிழைத்துக்கொள்ளலாம் என்று எண்ணி அந்த ஒரு ஏக்கராவைக் குத்தகைக்கு விட்டு விட்டுப் போகிறான். ஆனால் அங்கே அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. எனவே திரும்ப இங்கே வந்து அந்த நிலத்தைப் பழையபடி பயிர் செய்ய வேண்டுமென்று கேட்டால், இஸம்களும், அரசியல் கட்சிகளும் சேர்ந்து கொண்டிருக்கின்றன, சட்டத்திலே ஓட்டை இருக்கிறது. காங்கிரஸ் சர்க்கார் ஏன் இப்படி பரிதாபகரமாகத் தோற்றது? தர்மம் போய்விட்டது, தர்மம் போனவுடனே ஒரேயடியாய் அடிபட்டுப் போய்விட்டது. தாய் 8 அடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாயும் என்பதுபோல் இப்பொழுது இருக்கிறது. சட்டசபை ஒரு மாத காலம் நடந்தது. சட்டசபை நடக்கும் காலத்திலே இந்த பில்லை கொண்டு வந்திருந்தால் விரிவாக மெம்பர்களின் அபிப்பிராயத்தைச் சொல்லி சிறிய நில உடமையாளர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் ஒரு மாத காலம் சட்டசபை முடிந்து ஊருக்குப்போய் பொட்டலத்தை அவிழ்க்கும் நேரத்தில் 'கவர்னர் ஆர்டினன்ஸ்' என்று வருகிறது. நிலம் வைத்திருப்பவர்கள் எல்லாம் மடையர்களா? சின்ன நிலச்சுவான் தார்கள் விஷயத்திலாவது அனுதாபமாகக் கவனிக்கலாம். மேலும், தர்ம ஸ்தாபனங்கள் போன்றவற்றில் உள்ள குத்தகை பாக்கிகளை வசூலிக்க முடியவில்லை. இருக்கக்கூடிய கோயில்களை மூடுங்கள் என்று சட்டம் கொண்டு வாருங்கள், ஆட்சேபணை



1968 ஆகஸ்ட் 21] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

இல்லை. காங்கிரஸ் சர்க்கார் மகாத்மாவின் தலைமையிலே இருந்தாலும் ஓட்டு காய்க்கும் மரத்துக்குத் தண்ணீர் விடுகிறோம் என்று செல்வ காங்கிரஸ்காரர்கள் அவசரமாகச் சட்டம் செய்து விட்டார்கள். நீங்கள் தயவு செய்து அதைப் பின்பற்ற வேண்டாம். லேண்ட் சீலிங் ஆக்ட், (Land Ceiling Act) அது, இது என்று கொண்டுவந்து கட்டுப்பாடு செய்திருக்கிறோம். அதனாலே இப்பொழுது குத்தகை பாக்கி விஷயமாக சட்டங்களை இனி அடிக்கடி கொண்டு வந்து துன்பப்படுத்தி இந்த நாட்டிலேயுள்ள பல லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு கஷ்டத்தை உண்டாக்காதீர்கள். சட்டம் போட்டு, சட்டம் போட்டு சட்டத்திற்கே மரியாதை இல்லாமல் செய்துவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். 'லாலெஸ்னஸ்' வந்து இந்த சர்க்காரையே ஆக்கிரமித்து விடும்; அசைத்து விடும். தி.மு.க. கழகம் பெரிய கட்சியாக இருக்கலாம். இப்படி பல கட்சிகள் வந்தால் ஆங்காங்கே 'இசம்கள்' வளர்ந்து அதுவே சர்க்காரை அசைத்து விடும். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. திராவிட முன்னேற்றக் கழகம் பெரிய கட்சி இந்தியாவிலே. அது பெரிய சக்தியாக உள்ளது. அதனாலே, நீங்கள் கொஞ்சமும் பயம் இல்லாமல் தாராளமாக, சர்க்கார் நடத்துங்கள். சிறு நிலச்சுவான்தாரர்களுக்கு என்ன வேண்டுமானாலும் பண்ணிக்கொண்டு போங்கள். ஆனால் அவர்கள் விஷயத்திலே அனுதாபத்தோடு செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(திரு. கோ. இரா. ஞானசம்பந்தன் எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது, இன்னும் பல மசோதாக்கள் இருக்கின்றன.

**திரு. கோ. இரா. ஞானசம்பந்தன்:** தலைவர் அவர்களே, இது குடியானவர்கள் என்ற உணர்வோடு கொண்டு வரப்பட்டிருந்தால் 8 தவணைகள் கொடுக்கப்படுவது மிகமிக அவசியம் என்பதை மாமன்றத்தின் நினைவிற்குக் கொண்டு வருகிறேன். பல இடங்களில் வசூலிப்பதற்கு ஒரு தனி அதிகாரியை நியமித்து அப்படி வசூலிக்காத இடங்களில் என் வசூல் பணம் அளிக்கப்பட முடிய வில்லை என்பதைப் பற்றி பரிசீலிப்பதற்கான ஒரு திட்டமும் இச் சட்டத்திலே கொண்டு வர வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் நினைவிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். பரிசீலித்த பிறகும் பாக்கி ஏற்படுமானால் அந்த பாக்கியை 8 தவணைகளில் கொடுக்காவிட்டால் வெளியேற்றப்படும் என்ற அதை எடுத்து விட்டு 8 தவணைகளில் கொடுக்காவிட்டால் சிவில் கோர்ட்டுகளின் மூலமாக வசூலிக்க வேண்டுமென்ற முறை இந்த சட்டத்தில் புகுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படுமானால், எந்த உணர்வோடு இந்த சட்டம் வருகிறதோ அந்த உணர்வு நடைமுறைக்கு வரும். குடியானவர்களுக்கு ஊக்கம் அளிக்கக் கூடிய இதைச் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய எல்லா கருத்துக்களையும் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தேன், இந்த மசோதா, ஒரு அவசர சட்டத்தின் மூலமாக ஏப்ரல் மாதம் 19-ம் தேதி ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருந்த உரிமை காலாவதியாகி விட்ட காரணத்தினாலே மீண்டும் குடியானவர்களுக்கும் சாகுபடிதாரர்களுக்கும் ஒரு பாதுகாப்பு அளிப்பதற்காகத்தான், கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது இந்த மசோதாவிலே மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற நம்முடைய வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் சுப்பையா அவர்கள், பட்டுக்கோட்டை உறுப்பினர் மாரிமுத்து அவர்கள், சங்கரய்யா அவர்கள் எல்லோரும் ஒன்றை சொன்னார்கள், இந்த சட்டம் இப்பொழுது வராமல் இருந்திருந்திருக்குமானால் என்ன ஏற்பட்டிருக்கும் என்று அதையும் கொஞ்சம் சொல்லியிருப்பார்களானால் நான் இன்னும் கொஞ்சம் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். 19-ம் தேதி காலாவதியான நேரத்திலே, இந்தச் சட்டத்திற்கு இப்பொழுது புதிய வழிமுறை மட்டும் ஏற்படாமலிருந்திருக்குமானால், ஆயிரக்கணக்கான. பத்தாயிரக்கணக்கான குடியானவர்கள் நில வெளியேற்றம் செய்யப்பட்டு அபாயகரமான நிலைமையிலே விடப்பட்டிருப்பார்கள், அப்பொழுது எப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கும் என்பதையும் சொல்லியிருப்பார்களானால் கொஞ்சம் அனுகூலமாக இருந்திருக்கும்.

இம்மாதிரியான சட்டத்தில் அவர்கள் குத்தகை பாக்கி கொடுக்கவில்லையென்றால் அதற்காக நிலத்திலிருந்து வெளியேற்றப்படலாம் என்ற விதி இருக்கிறது. அந்த விதி முறையை அமுல் படுத்தக்கூடாது என்பது தான் இரண்டு ஆண்டுகளாக இருந்த சட்டம். குத்தகை பாக்கி கொடுக்கவில்லையென்றால் அந்த காரணத்திற்காக அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றி விடலாம் என்ற அந்த விதியை நடைமுறைபடுத்த வேண்டாமென்பதுதான் இவ்வளவு நாளாக இருந்த சட்டம். அந்தச் சட்டம் காலாவதியானவுடனே ஆயிரக்கணக்கான, பத்தாயிரக்கணக்கான இன்னும் அதைவிட அதிகமான குடியானவர்கள் நில வெளியேற்றம் செய்யப்படுவதன் மூலம் ஏற்படும் பயங்கரமான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டாமென்று தான் இந்த அவசர சட்டம் இம்மாமன்றத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, இதைக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்திற்கு ஒரு காரணம் இருந்தது. அதை யாரும் மறுக்க முடியாது. விவசாயிகளுக்கும், குடியானவர்களுக்கும் ஏதோ தர்மமாக கொடுக்க வேண்டுமென்றோ, அல்லது அவர்களுக்கு இலவசமாக கொடுக்க வேண்டுமென்றோ இந்த வசதி செய்யவில்லை; அப்படி கொண்டு வரப்பட



வில்லை. 19-ம் தேதி காலாவதியாகிவிட்ட காரணத்தாலே, எல்லோருடைய நல்வாழ்வையும் இதிலே கணக்கிட்டு குறிப்பாக குடியானவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற வகையிலே அவர்கள் கட்ட முடியாத குத்தகையை ஒரே வருஷத்தில் கட்ட முடியாததை 4 தவணைகளாக கட்டு என்று சொன்னோம். நம்முடைய நண்பர் அவர்கள் அந்த திருத்தத்தை இன்னும் கொஞ்சம் திருத்திச் சொல்லியிருப்பாரானால் நன்றாக இருக்கும். 4 தவணைகள் என்றால், ஏதோ கடிகாரம் மற்ற பொருள்கள் தவணை முறையில் வாங்குவதைப்போல அல்ல; 4 ஆண்டுகளில் பழைய பாக்கியை கேட்கிறார்கள். ஆனால், இதற்கு அவர்கள் கேட்பது 8 ஆண்டுகள். இது சரியானது அல்ல. இதற்குப் பதிலாக இதை 'ரைட் அஃப்' செய்து விடுங்கள் என்று தாராளமாக திருத்தம் கொடுத்திருப்பார்களானால் அதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் கூட, இதை விட அது நல்ல திருத்தம் என்று கொள்ள முடியும். ஏற்கெனவே, கொடுக்க வேண்டிய பாக்கியை பாக்கி என்றால் கணக்கிட்டுத்தான், 4 தவணைகளில் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். 25 சதவிகிதத்திற்கு மேலே போனால் அதை எல்லாம் கழிப்பதற்கு விதி முறைகள் இருக்கின்றன. அதற்குப் பிறகும் கணக்கிடப்பட்ட பழைய பாக்கியை 4 வருஷங்களிலே. 4 தவணைகளிலே—4 மாதங்களிலே அல்ல—கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். அதுவும் எந்த வருஷத்திலே இருந்து? 1966-லிருந்து 1968-வரை உள்ள பாக்கியை 1970-லே ஆரம்பித்து 1974 வரை கொடுப்பதற்கான வாய்ப்புக்குத் தான் இந்த மசோதா வழிவகை செய்கிறது. அந்த 4 வருஷம் என்பதை 8 வருஷம் என்று ஆக்குவதற்குப் பதிலாக, இல்லையென்று சொல்லிவிடுவதாலே ஒன்றும் தவறிருக்காது என்ற காரணத்தினாலே இதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலே இருக்கிறேன். குடியானவர்களுடைய, விவசாயிகளுடைய, உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற அவர்களுடைய வாழ்வை வளப்படுத்தாமல் பெரிய நெருக்கடியை, உணவு நெருக்கடியை தீர்க்க முடியுமென்று இந்த அரசாங்கம் ஒரு நாளும் கருதவில்லை. இது குடியானவர்களுடைய சர்க்கார்; விவசாயிகளுடைய சர்க்கார்; நிலத்தைச் சார்ந்திருக்கிறவர்களுடைய சர்க்கார். பின்னாலே வரப்போகின்ற மசோதாவுக்கு இது முன்னோடி என்று சொல்லிக் கொள்கிறேன். அண்ணாவினுடைய ஆட்சிக் காலத்திலே வர இருக்கின்ற அந்த மசோதாவுக்கு ஆரம்ப விழா போல இன்றைக்கு இது வருகிறது. குடியானவர்களுடைய வாழ்வு நல்வாழ்வாக இல்லாவிட்டால் நிம்மதியான வாழ்வாக இல்லாவிட்டால், நாட்டிலே சுபீட்சம் ஏற்படும் என்று ஒரு நாளும் இந்த அரசாங்கம் கருதாது. நம்முடைய நண்பர் அவர்கள் 8 தவணைகள் கேட்கிறார்கள்; 8 வருஷம் கேட்கிறார்கள். 1970-லே துவக்கி, 1978-வது ஆண்டு வரை தவணை கேட்கிறார்கள்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1968 ஆகஸ்ட் 21

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஜூன் மாதம் போடலாம் என்று சொல்கிறார்கள். அது அவ்வளவு பொருத்தமானதாகத் தெரியவில்லை. ஜனவரி மாதம் தான் நெல் அறுவடை மாதம். அப்பொழுதுதான் கொடுக்கப்படும். ஜூன் மாதத்திற்கு மாற்றினால் வறட்சி இருக்கும். அப்பொழுது பயிர்கள் எல்லாம் காய்ந்து போயிருக்கும். முன்பெல்லாம் அந்த மாதத்தில் சங்கீத கச்சேரி நடைபெறும். இப்பொழுதெல்லாம் அரசியல் கூட்டங்கள் நடைபெறுகின்றன. வயல் எல்லாம் வரண்டு காய்ந்து போயிருக்கும். இந்த நேரத்திலே நாம் பழைய பாக்கியை வசூலிக்கப் போனால் அது எந்த விதத்திலும் சரியானதாக தெரியவில்லை. அது பழைய நிலைமையைத் தான் நீட்டிக்கும் என்ற காரணத்தால் அதையும் கூட நண்பர் அவர்கள் வற்புறுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மசோதாவின் மூலம் குடியானவர்களிடம், விவசாயிகளிடம் நிலத்தோடு சம்பந்தப்பட்டவர்களிடம் இந்த அரசுக்கும் இந்த மாமன்றத்திலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அக்கறை இருக்கிறது என்பதையும் அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களிலும், சுக துக்கங்களிலும் எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதையும் உறுப்பினர்கள் அறிவார்கள். அவர்களுடைய நலனில் இந்த அரசுக்கு அதிக அக்கறை உண்டு. அவர்களுக்கு ஒரு அபத்து ஏற்படாத முறையில் நடந்து கொள்ளும். சிலர் ஜம்பத்திற்காக மிராசுதார் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவருக்கு 2 ஏக்கர் இருந்தால் கூட மிராசுதார் என்று தான் சொல்லிக் கொள்கிறார். அவர்களும் குடியானவர்கள் தான். நிலத்தோடு சேர்ந்தவர்கள் தான். நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பல மணி நேரங்கள் இதை விவாதித்ததற்கு பிறகுதான் இப்படிப்பட்ட அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இவைகளை ஏற்று நிறைவேற்றித் தருவதற்கு இந்த மாமன்றம் கடமைப்பட்டிருக்கிறது என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

பி.ப. 12-3 **திரு. கொ. ரெ. ஞானசம்பந்தன் :** தஞ்சாவூர் ஜில்லாவில் மார்ச்சில் தான் அறுவடை முடிகிறது. ஆகவே, ஜூன் என்பதை எடுத்துக்கொள்ள விட்டாலும், ஜனவரிக்குப் பதிலாக ஏப்ரல் என்று வைத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். தஞ்சாவூர் ஜில்லாவில் ஜனவரியில் அறுவடை ஆரம்பித்து மார்ச்சில் முடிவடையும். ஆகவே. ஜூன் என்பதற்குப் பதிலாக ஏப்ரல் என்றாவது வைத்துக் கொள்ளலாம்.

**திரு. என். துரைபாண்டியன் :** விவசாயிகள் பாக்கிக்காக நிலத்தை விட்டு அப்புறப்படுத்தப்படுவார்களா? அல்லது சிவில் கோர்ட்டிற்குப் போய்த்தான் அப்புறப்படுத்த முடியுமா? பாக்கியை வசூல் செய்வதற்கு சிவில் கோர்ட்டுக்குப் போய்



1968 ஆகஸ்ட் 21] [திரு. என். துரைபாண்டியன்]

பணம் மூலம் வசூல் செய்வார்களா அல்லது பொருள்களை ஜப்தி செய்து வசூல் செய்வார்களா? அப்படியில்லாமல் நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தப்படுவார்களா?

* **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்டில் எவிக்ஷன் பற்றி இருக்கிறது. வாரத்தைப் பொறுத்தவரையில் ஃபேர் ரென்டு ஆக்டில் இருக்கிறது. சிவில் கோர்ட்டில் அர்ரியர்ஸ் ஸூட் போடுவதற்கும் அனுமதி இருக்கிறது. இடைக்காலத்தில் போடப்பட்ட சட்டத்தில் எவிக்ஷன் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவில் இன்ஸ்டால்மெண்டு பேஸிஸில் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு இன்ஸ்டால்மெண்டு கட்டாவிட்டால், ஏற்கனவே இருக்கக்கூடிய 1955-ம் வருஷத்திய

Tenants' Protection Act will automatically apply. Whatever rights he has got under that Act, he will get.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி : "இரண்டாவது பிரிவு மசோதாவிற்கு உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்"

THIRU N. SANKARIAH: Sir, I move the following amendment standing in my name—

"Add the following after (*e*) as (*ee*) :—

'Arrears of rent means, the rent due to the landlords upto 20th April, 1968. The loss in production due to drought conditions or heavy rains, shall be deducted and the balance only shall be treated as arrears of rent. The responsibility of determining the arrears of rent shall vest with the Conciliation Officer."

THIRU A. K. SUBBIAH: Sir, I second the amendment.

* **திரு. என். சங்கரய்யா :** இந்தத் திருத்தம் மிகவும் முக்கியமானது என்று கருதுகிறேன். பாக்கி என்று நிர்ணயிக்கும் பொழுது, மழையின்மையினாலோ அல்லது அதிக மழையினாலோ உற்பத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டத்தைக் கழித்துவிட்டுத் தான் நிர்ணயம் செய்யவேண்டும். ஃபேர் ரெண்டு ஆக்டின் கீழ் தாசில்தார் அந்தஸ்து உள்ளவர் கன்ஸிலியேஷன் ஆபீஸர். அப்படிப்பட்ட கன்ஸிலியேஷன் ஆபீஸருடைய முடிவுக்கு விடுவது, பாக்கியை சரியான முறையில் நிர்ணயிக்க உதவி செய்வதாக இருக்கும். எனவே தான் என்னுடைய திருத்தத்தை நான் வற்புறுத்துகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: The nature of the arrears has been clearly set out in clause 4 (1) of the Bill. There is therefore no need to give a separate definition for 'arrears of rent'.

As regards remission towards the loss in productoin due to drought conditions or heavy rains, it may be stated that under section 5 (2) of the Fair Rent Act, whenever adverse seasonal conditions result in the reduction of the gross produce from any particular crop to the extent of more than 25 per cent, the landowner shall be bound to remit a proportionate part of the fair rent due to him from his cultivating tenant in respect of that rent for that period. Similar provision exists in section 25 (2) of the Madras Public Trusts Act, 1961 also. In view of the above specific provision, this amendment is not necessary.

திரு. என். சங்கரய்யா, அவர்களுடைய திருத்தத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

இரண்டாவது பிரிவு பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு. நிறைவேற்றப்பட்டது.

மூன்றாவது பிரிவு பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### பிரிவு-4.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 4, மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendments—

'That in sub-clause (1) after the words "the 20th April 1968 in" delete the words "four equal annual".'

'That in sub-clause (2) delete the words "specified in sub-section (1)," and substitute the words "as directed by the competent authority".'

THIRU N. S. V. CHITHAN: Sir, I second the amendments.

THIRU N. SANKARIAH: Sir, I move the following amendments:—

'That in sub-clause (1) delete the words "in four equal annual instalments" and substitute the following "in eight equal annual instalments".'

'That for the figure and words "1st February" wherever they occur, the figure words "30th June" shall be substituted.'



'That in sub-clause (2), at the end add the following:—

'The decree holder shall apply to the Collector for the collection of the decree amount as collection of the land revenue. The Collector will collect this amount on receipt of this application".'

THIRU A. K. SUBBIAH: Sir, I second the amendments.

THIRU S. MEIYAPPAN: Sir, I move the following amendment:—

'That in clause 4 (i) for the words "without interest" substitute the words 'with interest and costs".'

THIRU SOWDI S. SUNDARA BHARATHI: Sir, I second the amendment.

திரு. க. இராமமூர்த்தி: இந்த மசோதா எவ்வளவு அத்தியாவசியமானது என்பதும், நான் கொடுத்திருக்கிற திருத்தம் எவ்வளவு நியாயமானதும், தேவையானதுமாகும் என்பதும் இங்கு நடைபெற்ற விவாதத்தினாலும், அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்தும் விளங்குகிறது. இந்த மசோதாவைப் பொறுத்த வரைக்கும் குறிப்பிட்ட பகுதியில் தரவேண்டிய பாக்கியை எந்த முறையில் திருப்பித் தருவது என்பதற்கான ஒரு விதியை வகுக்கின்றது. அதனை பொறுத்தவரைக்கும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு ஆண்டும் இந்தத் தவணையைத் தரவேண்டும். நான்கு ஆண்டுகளுக்குள்ளாக தந்துவிடவேண்டும் என்று சொன்னார். மசோதாவிலே என்ன இருக்கிறது என்று சொன்னால் 'four equal annual instalments' என்று இருக்கிறது. இந்த விவாதத்தில் நாம் கண்டோம். புயல் காரணமாகவோ அல்லது வரட்சி காரணமாக பயிரிடப்படாததினாலோ, இப்படிப்பட்ட இயற்கையின் எதிர்பாராத விளைவுகளினால் இந்த பாக்கி ஏற்படுகிறது. இந்த மசோதாவின்படி நான்கு ஆண்டுகளுக்குள் ஒவ்வொரு ஆண்டும் சமமான அளவிலே திருப்பித்தரவேண்டும் என்ற முறையில் விதி வகுக்கப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், இந்த அவையும் ஏற்றுக்கொள்ளும், அமைச்சர் அவர்களும் ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். நான்கு சரியான அளவான தவணை முறை என்பதை நீக்கி, 1968 ஏப்ரல் 20-ம் தேதியிலிருந்து நான்கு ஆண்டுகளுக்குள்ளாக ஒவ்வொரு ஆண்டும் சமமான அளவிலே அந்த பாக்கியைத் தரவேண்டும் என்பதற்குப் பதிலாக, நான்கு ஆண்டுகளுக்குள்ளாக இந்த பாக்கியைத் திருப்பித்தரவேண்டும் என்ற விதி இருக்குமானால் நலமாக இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட அளவு தந்துதான் ஆகவேண்டும். தரமுடியவில்லை என்றால், அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வது போல, வரப்பிலே செல்கிற, சேற்றில் இறங்கி பயிரிடுகிற விவசாயி வெகுவாக பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படும். முதல் ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ அந்த ஆண்டிற்கு அவன் தரவேண்டிய பாக்கி தரமுடியாத நிலை ஏற்படு

கிறபொழுது, அதை அடுத்த ஆண்டிலோ அல்லது அதற்கு அடுத்த ஆண்டிற்குள்ளோ சம்பந்தப்பட்ட அதிகாரி குறிப்பிடுகிற நாளில் திருப்பித் தரக் கூடிய முறையில் மசோதா அமையவேண்டும். விவசாயி தன்னையும் காப்பாற்றிக்கொள்ளவேண்டும், பாக்கியையும் திருப்பித்தரவேண்டும். அந்த அளவுக்கு சட்டமும் ஒத்துழைக்கக்கூடிய நிலைமையில் அமைய வேண்டும். அந்த நிலையில் அமைய வேண்டுமானால் என்னுடைய திருத்தம் மிகவும் அவசியம். விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய வகையில் தான் என்னுடைய திருத்தம் அமைந்திருக்கிறது. அதற்காகத்தான் நான் வெகு ஜாக்கிரதையாக, நான்கு ஈக்வல் இன்ஸ்டால்மெண்டுகள் என்பதை நீக்கவேண்டும் என்கிற திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தம் தருகிற நேரத்தில் போதுமான அவகாசம் இல்லை, ஆகவே அது முழுமை பெறவில்லை. 'On or before the 1st February of each' என்கிற வார்த்தைகளுக்குப் பதிலாக w h n என்ற வார்த்தை சேர்க்கப்படுமேயானால், திருத்தம் முழுமை பெற்றதாக இருக்கும்.

அதே போல பிரிவு 4, (2)-ல் நான் கொடுத்திருக்கும் திருத்தம் சர்க்காரால் ஏற்றுக் கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். அது தான் சர்க்காரின் கொள்கையும், அவையின் பெரும்பான்மையோரின் எண்ணமும் ஆகும். சுதந்தராக் கட்சியைச் சார்ந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், சிறிய விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படக்கூடாது என்று. அதற்காகத்தான் சம்பந்தப்பட்ட அதிகாரி என்ன நிர்ணயிக்கிறார்களோ அது என்கிற அளவில் அதிகாரம் தந்தால், அவர்களுடைய நலன்களும் அதிகாரியால் பாதுகாக்கப்படும். சுதந்தராக் கட்சித் தலைவர் இந்தச் சட்டம் காங்கிரஸினால் கொண்டுவரப்பட்டது, இது ஒரு திமையான சட்டம் என்று குறிப்பிட்டார்கள். இது எவ்வளவு நன்மையான சட்டம் என்பது மற்றவர்களுக்குத் தெரியும். சுதந்தராக்கட்சி நிலச் சீர்திருத்தச் சட்டத்தை எவ்வளவு எதிர்க்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல் . . .

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கனம் உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சுதந்திராக் கட்சி எதிராக இருக்கிறது என்று சொல்வது ஒரு அரசியல் நோக்கோடு கூடியதாக இருக்கிறது. சுதந்திராக் கட்சி பொதுவாக விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேறு ரூபங்களில் சர்க்கார் எந்த திட்டங்கள் போட்டாலும் அதை வரவேற்கிறது என்பதை மட்டும் விளக்கிவிட விரும்புகிறேன். சுதந்திராக் கட்சி, சிறிய, மத்தியதர நிலஉடைமையாளர்களுடைய பிரச்சனைகளை அனுதாபத்தோடு அணுகுகிறது என்பதையும் தெரிவிக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** நான் சொல்வதெல்லாம், பெரிய விவசாயிகளைக் காப்பதற்காக, சிறிய விவசாயிகளைக் காட்டுகிறார்கள் என்பதுதான். என்னுடைய திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்





கொள்வதால், நாட்டு விவசாயிகள் நிச்சயமாக நன்மை பெறுவார்கள் என்பதால் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

*** திரு. என். சங்கரய்யா:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரிவு நான்கில் நான்கு வருஷத் தவணை என்பதற்குப் பதிலாக எட்டு வருஷத் தவணைகள் என்கிற திருத்தத்தை, மாண்புமிகு திரு. ஏ. கே. சுப்பையா, திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. நல்லசிவம் இவர்களோடு சேர்ந்து அந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இது மிகவும் முக்கியமான திருத்தம். மாண்புமிகு அமைச்சர், பொது விவாதத்திற்கு பதில் அளிக்கும் போது, குத்தகை பாக்கியையே ரத்து செய்துவிடவேண்டும் என்று சொல்லிவிட்டால் நலமாக இருக்கும் என்றார்கள். அந்தப் பாக்கிகளை ரத்து செய்ய வேண்டும் என்கிற கருத்தை, சென்ற காலத்தில் காங்கிரஸ் சர்க்கார் 1966-ல் இந்த சட்டத்தை கொண்டு வந்த நேரத்திலேயே எடுத்துச் சொல்லப்பட்டது. இப்பொழுது, அந்த பாக்கிகளை முழுமையாக ரத்து செய்யமுடியாது என்று சொல்லப்படுவதால், குத்தகை விவசாயிகளுக்குச் சாதகமாக தவணைகளையாவது அதிகப்படுத்த வேண்டும் என்று எட்டு தவணைகள் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்தக் குத்தகை விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இந்தத் திருத்தத்தை வற்புறுத்த விரும்புகிறேன்.

ஜூன் 30-ந் தேதி என்று இருக்க வேண்டும் என்று தஞ்சை மாவட்ட பிரதிநிதிகள் கூடச் சொன்னார்கள். எப்ரல் ஒன்றாம் தேதி என்றிருந்தால் நலமாக இருக்கும். அப்படிப்பட்ட திருத்தத்தை அரசினர் சார்பில் கொண்டு வந்தால் இந்தத் திருத்தத்தை கூட வாபஸ் பெற்றுக் கொள்ளலாம்.

அடுத்து டிக்ரீ-ஹோல்டர் கலெக்டருக்கு அப்ளை செய்து நிலவரி போல, வசூல் செய்து கொடுக்க வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இது விவசாயிகளுக்குப் பாதகம் [illegible] டாமல் கலெக்டர் மூலம் வசூல் செய்து கொள்ள வேண்டும் என்ற கருத்தில் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தையும் அரசினர் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(டாக்டர் ஹாண்டே எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருத்தம் கொடுத்தவர்கள் முதலில் பேசட்டும். அதன் பிறகு மற்ற உறுப்பினர்கள் பேசலாம்.

**திரு. சா. மெய்யப்பன்:** சார், ஓரளவு விவாதங்களுக்குப் பிறகு, என்னுடைய திருத்தம் ஆச்சரியமாகக் கூட இருக்கும் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். வட்டியில்லாமல் குத்தகை பாக்கியைப் பெறவேண்டும் என்பதற்குப் பதிலாக, 4-வது பிரிவில், வட்டியும், செலவும் சேர்த்துக் கொடுக்கவேண்டும் என்கிற திருத்தத்தை

[திரு. சா. மெய்யப்பன்] [1968 ஆகஸ்ட் 21

நான் கொடுத்திருப்பதை ஒரு ஆச்சரியமான திருத்தம் என்று நினைக்கலாம். அதே நேரத்திலே நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். சட்டம் என்பது எந்த எந்த சமயங்களில், எவ்வெப்பொழுது எதற்காக ஏற்படுத்துகிறோம் என்பதைக் கவனிக்க வேண்டும். 1955-லே எப்படி, எதற்காக இந்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது? அன்று இருந்த நிலை என்ன? சில இடங்களில் பஞ்சங்கள் ஏற்பட்டன. விவசாயிகள் கண்டிப்பாக நல் வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காக இதை நிர்ணயித்தார்கள், அப்பொழுது இருந்த சர்க்கார். 1955-லே ஒரு புயல் கூட ஏற்பட்டது என்று நினைக்கிறேன். பிற்பாடு 1957-லே ஒரு தேர்தல் கூட நடந்தது. அந்த நிலையில் இந்தச் சட்டம் ஏற்படுத்தப் பட்டது. அதன் பிறகு, ஆண்டு தோறும் அதை மறுபடியும் மறுபடியும் திருப்பித் திருப்பிக் கொண்டு வந்துகொண்டே இருந்தார்கள். இப்பொழுது 1968-லே ஏப்ரல் மாத முடிவிலே சட்ட மன்றக் கூட்டம் முடிந்து விட்டது. என் கட்சித் தோழர்கள் சொன்னது போல, அப்பொழுது கவர்னர் ஆர்டினன்ஸாக வந்தது. அது இப்பொழுது சட்டமாக வருகிறது.

அமைச்சரவர்கள் இது குடியானவர்கள் சர்க்கார் என்று சொன்னார்கள். ஒரு ஏக்கர் வைத்திருப்பவனும் குடியானவன்தான், 4, 6 ஏக்கர் வைத்திருப்பவனும் குடியானவன்தான். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நன்மை பயக்கும் முறையில் செய்வோம் என்று சொன்னார்கள். மிகவும் சந்தோஷம். இன்றைக்குள்ள நிலையில், பெரிய பெரிய மிட்டாதார்கள், மிராசுதார்கள் என்று இல்லை; முன் போல 60 ஏக்கர், 80 ஏக்கர், 200 ஏக்கர் என்று யாரும் வைத்துக் கொண்டிருக்கவில்லை. ஆகவே, சர்ச்சைக்கே இடம் இல்லை. உச்சவரம்பு கட்டியாகிவிட்ட பிறகு 30 ஏக்கருக்கு மேல் யாருக்கும் கிடையாது. ரூ. 7500 ஆண்டு வருமானம் வரும் என்று தெரிகிறது. அதைக் கணக்குப்பார்த்தால், மாதம் கிட்டத் தட்ட ரூ. 500, 600 என்றுதான் ஒருவருக்கு வரும். ஆகவே, இப்பொழுது மிராசுதார்களே இல்லை. 1955-லே இருந்த நிலை வேறு; இன்றைக்கு 60-க்குப் பிறகு, 67-லே, 68-லே நிலைமை வேறு. ஒரு ஏக்கர் இருப்பவர் கூட மற்றவருக்குக் குத்தகைக்குக் கொடுக்கிறார். அவரும் நிலச்சுவாந்தார், 'லாண்ட்-லார்ட்' ஆகிவிடுகிறார். ஒரு ஏக்கர் பிரபு, 'லாண்ட்-லார்ட்' ஆகிவிடுகிற போது, நிலம் இல்லாதவருக்குக் கொடுக்கும் போது, வேறு தொழிலில் ஈடுபட்டிருப்பதால், மதுரையில், வேறு நகரத்தில் வக்கீலாகவோ, டாக்டராகவோ, தொழில் நடத்தும்போது, அவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்துகிறது. இந்த நிலையைப் பார்க்கிறபோது சட்டம் ஏற்பட்ட காலத்திலும், பிறகு அது வளர்ந்து வந்த காலத்திலும் ஏற்பட்ட குத்தகை எதற்காக என்று பார்க்கும்போது, குடியானவர்கள் அத்தனைபேரையும் குடியானவர்களாகவே கருதுகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னது நினைவிற்கு வருகிறது. ஆர்.டி.ஓ. ஆபீசிலே வக்காலத்திற்குப் போனால் ஸ்டாம்ப் 1½



1968 ஆகஸ்ட் 21] [திரு. சா. மெய்யப்பன்]

ரூபாய், பெடிஷன், டைப் செலவு என்றெல்லாம் செலவாகிவிடுகிறது. தமிழக அரசு எல்லாவற்றையும் பார்த்து அவர்களை ஒன்றும் இல்லாமல் ஆக்கிவிடக் கூடாது என்பதற்காக லாண்ட்லார்டுகள். குடியானவர்கள் இரண்டுபேருக்கும் நல்லதைச் செய்ய வேண்டும் என்ற கொள்கையிலேதான் 1972 வரை, அதாவது இன்னும் 4 ஆண்டுகள் வரை இந்தச் சட்டம் இருக்கட்டும் என்ற எண்ணத்தில் செய்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுக்கலாம் என்று சட்டம் சொல்லலாம். இப்பொழுது ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு தடை ஏற்பட்டுவிட்டது. 1955-லிருந்து 1968 வரை குத்தகைப் பணங்கள் வசூலாகவில்லை. நிலச் சொந்தக்காரன் என்று பெயர் பட்டாவில் இருக்கும், அடங்கலில் இருக்கும், வரி கட்டும் உரிமையும் அவனுக்கு இருக்கும். ஆனால் அவனுடைய குத்தகைப் பணம் வசூலாவதற்கு வழியில்லை. இந்த நிலைமை ஏற்படக்கூடாது. விவசாயிகளையும் நாம் அதிகமாகக் கட்டுப்படுத்திவிடக்கூடாது என்று சர்க்கார் இருந்துவிடக்கூடாது. வாங்கிய பணத்தைக் கொடுக்கக்கூடாது என்பது தமிழர்களுடைய பண்பாடு அல்ல என்பதை உணர்ந்த தமிழக அரசு, இப்போது இம்மசோதாவைக் கொண்டுவர முன் வந்திருக்கிறது. யார் குடியானவர்கள் என்பதுதான் கேள்வி. இப்பொழுது குடியானவர்களுக்கு மனத்தாங்கல் ஏற்படும் என்று அரசு கருதாமல் வட்டியையும் தொகையையும் செலுத்த அரசு இப்போது முன்வராவிட்டாலும், பிற்பாடாவது இதைப்பற்றி யோசிக்கும் என்று என்னுடைய கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன். 1963 வரைக்கும் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லும் போது அதை நான்கு ஆண்டுகளில் பிரித்துக் கொடுக்கிறார்கள்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒரு தவறான வாதத்தை உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். ஸ்டே ஆஃப் எவிக்ஷன்-நேரத்தில் அரியர்ஸை கலெக்ட் பண்ண வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்படி நாங்கள் எப்போதுமே சொல்லவில்லை. இங்கே டிக்ரிகூட அல்ல. கொடுக்க வேண்டிய பாக்கியை வசூலித்துக் கொள்ளலாம். இப்போது ஒருமொத்தம் ஆக வசூலிக்கப் போகிறார்கள் என்று உணர்ந்த பிறகுதான் 4 பகுதியாகப் பிரித்துக் கொடுக்கலாம் என்று சர்க்கார் உணர்ந்துள்ளது.

"It is not a decree. Automatically common law will apply. Interest, he will automatically get."

THIRU S. MEIYAPPAN: "A Bill to make special provisions in respect of certain arrears of rent payable by Cultivating Tenants. Whereas by the Madras Cultivating Tenants (Protection from Eviction) Act, 1966 (Madras Act 11 of

[திரு. சா. மெய்யப்பன்] [1968 ஆகஸ்ட் 21

1966), cultivating tenants in the State were given protection from eviction on the ground of arrears of rnet"
என்று அமைச்சர் சொன்னதுபோல் குத்தகைப் பணத்தைக் கொடுக்காமல் இருக்கக்கூடிய காரணம் ஒன்றினால் அவர்களை வெளியேற்றக்கூடாது என்ற நிலைமை இருக்கிறது. இந்தக் குத்தகைப் பணத்தை வசூல் செய்வதற்கு நாம் தவணைமுறைகளை ஏற்படுத்துகிறோம். இதற்கு தமிழக அரசு சௌகரியம் செய்திருக்கிறது. அரியர்ஸ் கலெக்ஷன் என்று வரும்போது அதைக் கொடுக்காவிட்டால் என்ன வழி? நானும் மற்றவர்களைப்போல குடியானவன் தான். ஏதோ சுதந்திராக் கட்சிக்காரன் சொல்லுகிறான் என்று எண்ணிவிடக் கூடாது. குடியானவர்களுக்கு விரோதமாகச் சொல்லுகிறேன் என்று எண்ணிவிடக்கூடாது. இப்போது இருக்கின்ற குடியானவர்களும் முதலாளிகளாகி விடுகிறார்கள். இப்பொழுது ஊரில் 1½ ஏக்கராவை வைத்துக்கொண்டு, சென்னையில் தொழில் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டும் கொடுக்கப்பட வேண்டும். அப்படி வட்டி கொடுக்கக் கூடாது என்பது தர்மத்திற்கு நியாயத்திற்குப் புறம்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பலனை அனுபவித்து வரும் விவசாயிகள் வட்டி கொடுக்கக்கூடாதா? வட்டி கொடுப்பது தான் தர்மம். வாங்கிய பணத்தைக் கொடுக்க வேண்டாமென்பதற்காக சர்க்கார் சட்டங்கள் கொண்டுவருகின்றன. சர்க்கார் எல்லாரையும் குடியானவர்களாகப் பாவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒருபக்கம் வக்கீலுக்கும், டைப் செலவுக்கும், வக்காலத்திற்கும் பணத்தைச் செலவு செய்துகொண்டு நிலச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய இப்போர்ப்பட்ட செலவிற்காவது கொடுக்கும்படியான அளவில் வழிவகை செய்வது நியாயம் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய திருத்தத்தை எற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தில் என்னுடைய கருத்துக்கள் விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திருப்பி வசூல் பண்ணக்கூடிய காலக்கெடு பிப்ரவரி என்று சொல்லி, ஜூன் என்று சொல்லியிருக்கிறோம். அநேகமாக எப்ராலாவது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இல்லையென்று சொன்னால் சட்டம் கொண்டு வருவதில் பிரயோஜனம் இருக்காது. இதை அமல்படுத்துவதில் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரைப் போடலாம் என்றால் அவர் ஒரே உத்திரவில் குடியானவர்களை வெளியே போ என்று சொல்லிவிடுவார். அது மிகவும் ஆபத்தானது. அடுத்தபடியாக நான்கு தவணைகள் என்று சொல்லப்பட்டிருப்பது இன்னும் ஆபத்தானது. இதனால் சர்க்காருக்கு கெட்ட பெயர் ஏற்படும்.

இரண்டாவதாக, விளையாத பயிருக்கு வட்டியும் முதலும் சேர்த்துக்கொடு என்கிறார்கள். அது எப்படி தர்மமாகும்? வெள்ளம் வந்து, புயல் அடித்து, பூச்சி அரிப்பது போன்ற காரியங்



1968 ஆகஸ்ட் 21] [திரு. ஆ. கு. சுப்பையா]

களால் எப்படி பலனை எதிர்பார்க்க முடியும்? வட்டியும் முதலும் சேர்த்து வசூல் செய் என்பதும், நாட்டிலே குத்தகைதாரர் இருக்கக்கூடாது என்பதும்தான் சுதந்திராக் கட்சியின் நோக்கம். 30 ஏக்கர் வைத்துக்கொண்டு, பண்ணை வைத்துக்கொண்டு வருவது யாருக்கும் தெரியாது என்பதல்ல. அதை நாங்கள் சொல்ல முடியாதா? எப்ரல் மாதம் கலெக்ட் பண்ணுவதுபற்றி எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. அவர்கள் கொடுக்கவில்லை என்பதற்காக அவர்களை வெளியேற்றக்கூடாது. நிலவரி வசூல் செய்வதைப்போல் அதையும் வசூல்செய்துகொள்ளலாம், அதனால பாதகம் ஒன்றும் வராது. இதையெல்லாம் கருணைகூர்ந்து சர்க்கார் ஆலோசனைசெய்து என்னுடைய நியாயமான திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: I wish only to clarify a point or two with regard to party principles that were dragged into the discussion. My good friend Mr. Ramamoorthy has moved the amendment that in sub-clause (1) of clause 4, after the words "the 20th April 1968 in" delete the words "for equal annual". It is not clear like the amendment of my Friend Mr. A. K Subbiah which wants that the arrears of rent should be permitted to be paid in eight equal annual instalments. What exactly is in his mind we do not know. If, as the Minister feels, the payment is postponed to the very end, it will be very difficult. There should be clarity as far as possible. If thre is no clarity, there will be always confusion and there as going to be heart-burning between the tenant and the landlord. Our policy is very clear. We have accepted law and order and certain rights to property. If the whole thing is abolished, then it is a different thing. Everybody is agreed that there should be law and order in the land and that property rights should be respected. If the entire thing is totalitarian, then you can plough the whole land with tractor. This is an entirely different thing. Mr. Subbiah and myself are for production. Production should not go down below 60 lakhs of tonnes Whatever tenancy laws we frame should ultimately aim at production. Our aim should be improvement of production and potection of all interests. As far as possible we should try to avoid bringing in a class conflict between the landlord and the tenant. We should try to smoothen the relationship beween them.

Coming to Mr. Ramamoorthy's amendment, he has made the mistake of thinking that we are for landlords. Nothing of that sort. (Interruption by Thiru K. Ramamoorthy.) Keep quiet, listen to me and try to improve yourself.

THIRU K. RAMAMOORTHY: It is a personal insinuation as if the Doctor has improved himself and it should be expunged.

DR. H. V. HANDE : I think my Friend is continuoulsy misunderstanding me. I am improved after his speech, because I know what his thoughts are. I think he will have the advantage of listening to me and understanding my point. When we understand each either, we will improve. If we speak and it is not understood, it is not my fault.

My Friend Mr. Ramamoorthy has moved another amendment to delete the words "specified in sub-section (1)" in clause 4 (2) and substitute the words "as directed by the competent authority". I can understand my Communist friends. They ask for the complete removal of whatever protection is there for the landlords. They are convening *vivasoya manadu* after *vivasaya manadu* and all the big landlords are there. I do not know who share the expenditure. They have these huge functions and there they go on telling 'Increase this rate' and facilities for the landlords are discussed. A clear-cut policy will be all right. Ours is a clear cut policy. We do not have any ill-will towards the tenants or the landlords. My friends of the Communist Party have get a clear-cut policy. This sort of confusion will lead to the complete breaking up or the suspension of good relationship. Suppose the decision is left to the competent authority. He may say that the entire arrears have to be paid in one instalment. If it is left to the competent authority, even the protection of payment in four equal annual instalments is removed. That is the sum and substance of the amendment. It can be clearly stated that the arrears should be paid in eight, ten or twelve instalments. I have absolute and great regard for my friend Mr. Ramamoorthy. The idea of the House is to improve, so that I know his point of view and somebody else knows my point of view. We are there for the improvement of the lot of the tenants and for the maintenance of good relationship and our arguments are directed towards improving the quality and quantity of production.

*திரு. க. இராமமூர்த்தி :* நான் என்னுடைய அமெண்ட்மெண்டின் மேல் பதில் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருத்தத்தின்மீது மறுபடியும் பேசுவதற்கு முடியாது.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னுடைய திருத்தத்தைப்பற்றி ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய திருத்தத்தில் காம்பிடன்ட் அதாரடி பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆர். டி. ஒ. தான் அதை நிர்ணயிப்பார், எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று அவர் நிர்ணயிப்பார். அவர் இஷ்டம்போல் செய்துவிட்டால் என்ன செய்வது என்று கேட்கிறார்கள். அதிகாரி களுக்குச் சில அதிகாரங்களைக் கொடுக்கிறோம். சாதகமாக இருக்கிற நேரத்திலே மட்டும் நாம் நம்பிக்கை கொண்டுவிட்டு



மற்ற நேரங்களில் அவர்மீது நம்பிக்கை கொள்ளாமல் இருக்கக் கூடாது. அவர்கள் ஏதாவது ஒன்றைச் செய்கின்ற நேரத்திலே அதற்குத் தகுந்த காரணங்களையும் எழுதித்தான் ஆகவேண்டும். ஆகவே அதைப்பற்றி ஒன்றுமில்லை. அடுத்தபடியாக 'இன் ஃபோர் ஈக்குவல் ஆன்யுவல் இன்ஸ்ட்டால்மெண்ட்ஸ்' என்று சப்கிளாஸ் ஒன்றில் இருப்பதை எடுத்துவிடச் சொல்வதாகச் சொல்லும் பொழுது அதையே சப் கிளாஸ் இரண்டிற்குக் கொடுத்த திருத்தத் தோடு சேர்த்து வாசித்தால் எல்லோருக்குமே புரியும். தனித் தனியாக வாசித்தால் புரிந்து கொள்வது சற்று சிரமமாகவே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் கீழ் பல்வேறு வகையான திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய நண்பர் எனக்கு அதிகமான வேலை இல்லாத அளவுக்கு ஒவ்வொருவரும் அவர்களுக்குள்ளேயே, திரு. மெய்யப்பன் அவர்களுக்கு திரு. சுப்பையா அவர்களும் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு டாக்டர் ஹாண்டே அவர்களும் பதில் அளித்தார்கள், அதனால் எனக்கு வேலையைக் குறைத்திருக் கிறார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் அவர்களுடைய திருத்தத்தில் 'இன் ஃபோர் ஈக்குவல் இன்ஸ்ட்டால்மெண்ட்ஸ்' என்பதை எடுத்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். ஃபோர் இன்ஸ்ட்டால்மெண்ட்ஸ் என்று இருப்பதை எடுத்துவிட்டால் குடியானவர்மீது பெரிய பாரத்தை அது சுமத்திவிடும். கடைசி தேதி வந்தால்தான் கொடுக்க வேண்டிய சுபாவம் வரும். அந்த சுபாவம் வரும்பொழுது நீண்ட குழப்பங்கள் ஏற்படும். அவர்கள் என்ன மனதிலே கருதிக் கொண்டு அதைக் கொண்டுவந்தார்களோ தெரியவில்லை. நான்கு வருடங்களில் கொடுக்கவேண்டுமென்றுதான் இருக்கிறது. அப்படி யில்லாமல் இருந்தால் தள்ளிக்கொண்டே போய் கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே இதை அவர்கள் வற்புறுத்த மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக இரண்டா வது சப்கிளாஸில் 'ஸ்பெஸிபைட் இன் சப் செக்ஷன் (1)' க்கு பதில் 'ஆஸ் டிரெக்டெட் பை தி காம்பிடன்ட் அதாரடி' என்று சேர்க்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் ஒரு கையில் கொடுப்பதை மறுகையில் தட்டிப்பறித்துக்கொள்ளக் கூடிய நிலைமையாகத்தான் முடியும்.

சாகுபடிதாரர்கள் இன்ன தேதிக்குள் கொடுக்கவேண்டு மென்று இருக்கிறது. அப்படிக் கொடுக்காவிட்டால் நில உரிமை யாளர் மேற்கொண்டு செல்வதற்கு இருக்கக்கூடிய வாய்ப்பைத் தடுத்து 'As directed by the competent authority' என்று செய்து விட்டால் மேலும் தாமதமாவதற்கும் நோக்கம் ஒழுங்காக நிறை வேறாமல் போய்விடுவதற்கும் ஆன நிலை ஏற்பட்டுவிடும்.

**திரு. க. இராமமூர்த்தி** : நான்கு சமமான தவணைகளில் தருவது என்ற நிலைமையைப் பொறுத்தவரை 200 கலம் தர வேண்டுமென்று வைத்துக் கொண்டால், முதல் ஆண்டில் 50 கலம் கொடுக்க வேண்டும். அப்படி 50 கலம் கொடுக்க முடியாமல் 40 கலந்தான் கொடுக்க முடியும் என்ற நிலை இருந்தால் அதற்கு அரசு என்ன வழிவகை செய்கிறது. அதற்குப் பொறுப்பாக அங்கிருக்கக்கூடிய காம்பிடென்ட் அதாரிடி, ஆர்.டி.ஓ. இருக்கக்கூடாது என்று கூறுவது சரியாக இல்லையே.

**திரு. என். சங்கரய்யா** : அமைச்சர் அவர்கள் 'ஏப்ரல் 1-ம் தேதி' என்ற திருத்தத்தை ஏற்றுக் கொண்டதற்காக எங்களுடைய வந்தனத்தைக் தெரிவித்துக் கொள்கிறோம். 'எட்டு தவணைகளாக மாற்ற வேண்டும்' என்று கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தைத் தவிர மற்றத் திருத்தங்களை எல்லாம் வாபஸ் பெற்றுக் கொள்கிறோம். அந்த ஒரு திருத்தத்தை மட்டும் வற்புறுத்துகிறோம்.

THIRU K. RAMAMOORTHY : Sir, I press my amendment as there is no explanation forthcoming from the Hon. Minister.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : முதலில் நான்காவது பிரிவுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திருத்தம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது.

அவை முன் உள்ள கேள்வி—

'For the figure and words "1st February" wherever they occur, the figure and words '1st April" shall be substituted.'

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

நான்கு தவணைகள் என்பதை எட்டு தவணைகளாக மாற்ற வேண்டும் என்று கண்டுள்ள திரு. சங்கரய்யா அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிராகரிக்கப் பட்டது.

திரு. சங்கரய்யா, திரு. மெய்யப்பன் ஆகியோர் கொடுத்த மற்ற திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் படுகின்றன.

பிரிவு 4, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 5.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 5 மசோதாவிற்குரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."



THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, in clause 5 I want to move a consequential amendment in view of the Government amendment to Clause 4. Sir, I move the following amendment :—

'For the figure and words "1st February" wherever they occur, the figure and words "1st April" shall be substituted.'

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 5, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 6 முதல் 13 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன. நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

**மாண்புமிகு திரு. கே. எ. மதியழகன்** : தலைவரவர்களே, "தமிழ் நாடு 1968-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (சிறப்பு விதித் துறைகள்) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 17/1968) திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்படவேண்டும்" எனக் கோரு கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, திருத்தப்பட்டபடி மசோதா சட்டமாக்கப்பட்டது.

**(7) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குடிவார உரிமைப்பதிவு மசோதா (ச. பே. மசோதா எண் 18/1968).**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : தமிழ் நாடு 1968-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குடிவார உரிமைப் பதிவு மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 18/1968) ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள் என அறிவிக்கின்றேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move—

"That the Madras Agricultural Lands Records of Tenancy Rights Bill* (L.A. Bill No. 18 of 1968) be taken into consideration"

The Madras Cultivating Tenants Protection Act, 1955 (Madras Act XXV of 1955) provides *inter-alia* that in the case of every tenancy agreement between a landlord and cultivating tenant, a lease deed shall be executed in triplicate in the prescribed form. One of the three copies has to be kept by the landlord, another by the cultivating tenant and the third shall be caused to be lodged in the taluk office by the landlord or his agents within a fortnight of the date on which the cultivating tenant signs it. Similar provision also exists in the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Madras Act 57 of 1961). Despite these provisions, many landlords and tenants prefer to keep the leases oral and

* Published in *Fort St. George Gazette* Extraordinary, dated 14th August 1968.

[Thiru K. A. Mathialagan] [1968 ஆகஸ்ட் 21

consequently quite a large number of tenancies do not come to the notice of the revenue authorities.

Executive instructions have also been issued to the revenue authorities for recording particulars of leases of agricultural lands to cultivating tenants in the Adangal. Thus based on these instructions, the particulars of cultivating tenants are being entered in the Adangal as far as possible. But it cannot be claimed that as a result of these efforts, a correct and reliable record of tenancy rights has come into being in the State. Generally a presumptive value of evidence is attached to the record of tenancy rights. Past experience has shown that in the absence of reliable record of tenancy rights, it is difficult to implement measures of land reforms and in particular, enforce legislative provisions which seek to provide security of tenure to the tenant-cultivators who are also, generally denied credit facilities from institutional agencies, as they are, in a majority of cases, not in a position to establish the tenancy rights due to incomplete land records. The Government have, therefore, felt the urgent need for a correct and up to date record of tenancy rights for an effective implementation of land reform measures. Accordingly, the Government consider that in the context of programmes designed to bring out quick increase in food production, the preparation of correct and reliable records of tenancy rights is of great importance, not only for the effective implementation of land reforms but also for provision of necessary credit and other facilities to the actual cultivators. The Government have therefore decided to undertake necessary legislation for the purpose. The Bill seeks to achieve the above objects. I request the House, Sir, to accept the motion.

THIRU RAMA ARANGANNAL: Sir, I move the following amendment standing in my name :—

'That the Madras Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1968 (L.A. Bill No. 18 of 1968) be referred to a Select Committee of the House consisting of the following Members of the Assembly :—

Thiru T. P. Alagamuthu.
Thiru D. S. Authimoolam.
Thiru M. C. Balan.
Thiru L. Ganesan.
Thiru M. Gopal.
Thiru M. Kannappan.
Thirumathi S. Kuppammal
Thiru A. Marimuthu.
Thiru A. R. Marimuthu.
Thiru K. R. Nallasivam.
Thiru Palanivel Rajan.
Haji M. M. Peer Mohammed.
Thiru R. Ponnappa Nadar.
Thiru S. Ramachandran.
Thiru S. Ramalingam.
Thiru N. Sankariah.



1968 ஆகஸ்டு 21] [திரு. ராம. அரங்கண்ணல்]

Thiru N. Somasundaram.
Thiru A. K. Subbiah.
Thiru A. L. Subramaniam.
Thiru M. Subramania Gounder.
Thiru C. V. Velappan.

The amendment was duly seconded.

*திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.*

MR. DEPUTY SPEAKER: Under Rule 97 (1) of the Assembly Rules, the Minister in charge of the Bill will be a member of the Committee and under Rule 99 (1) of the Assembly Rules I nominate the Hon. Minister for Revenue who is an ex-officio member of the Committee, to be Chairman of the Committee.

*இன்றைய நிகழ்ச்சி நிரலில் எஞ்சியுள்ள பகுதிகள் 23-ம் தேதி மாலை எடுத்துக் கொள்ளப்படும்.*

THIRU K. RAMAMURTHI: Sir, the amendment of mine gets the first priority and then only the amendment of Sri Rama Arangannal can come.

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: திரு. ராமமூர்த்தி அவர்களின் பேரில் எந்தவிதமான திருத்தமும் இல்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார் மு. ப. 1-27
கள். ஒரே மாதிரியான திருத்தம் கொடுத்தால் எதை எடுத்துக் கொள்ளலாம் என்பதற்கு அவைத் தலைவருக்கு உரிமையிருக்கிறது. ஆகவே, திரு. அரங்கண்ணல் அவர்களின் திருத்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.*

*இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. நாளைக் காலை 9 மணி அளவில் அவை மீண்டும் கூடும்.*

*பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*

## 9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

*167. Notification issued with G.O. Ms. No. 641, Local Administration, dated the 30th March 1968, in regard to an amendment to the rules relating to Acquisition and Transfer of Immovable Property by Municipal Councils, published at pages 758 to 767 of Part I-A of the *Fort St. George Gazette*, dated the 7th November 1939, as subsequently amended. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

† 168. Notification issued with G.O. Ms. No. 1037, Revenue, dated the 18th May 1968 in regard to an amendment to the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965, published at pages 26 to 63 of Part V of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 15th February 1965. [Laid on the Table of the House under section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]

† 169. Order issued with G.O.R. No. 262, Revenue, dated the 1st March 1968, in regard to the exemption from the liability of entertainment tax to the exhibition of cinematograph shows by the cinema theatre owners in Namakkal taluk on any one day within the period from 25th February 1968 to 9th March 1968. [Laid on the Table of the House under section 16 (4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939).]

† 170. Notification issued with G.O. Ms. No. 1015, Education, dated the 22nd June 1967 in regard to the approval of the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of Idappadi Municipality. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play Fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]

† 171. Notification issued with G.O. Ms. No. 1708, Revenue, dated the 29th September 1967 in regard to the ryotwari settlement of certain inam estates specified in the schedule of the notification situated in the Tirunelveli district. [Laid on the Table of the House under section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]

## B. Reports, Notifications and Other Papers.

@ 42. Annexure to the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1968.

@ 43. Annexure to the Madras Co-operative Land Mortgage Banks (Amendment) Bill, 1968.

@ 44. The Madras Inams (Assessment) (Amendment) Bill, 1968 with annexure (L.A. Bill No. 12 of 1968).

@ 45. The Madras Hackney Carriage (Amendment) Bill, 1968 with annexure (L.A. Bill No. 13 of 1968).

@ 46. The Motor Vehicles (Madras Amendment) Bill, 1968 with annexure (L.A. Bill No. 14 of 1968).



@ 47. The Madras City Municipal Corporation and District Municipalities (Amendment) Bill, 1968 (L.A. Bill No. 15 of 1968).

@ 48. The Madras Proprietary Estates Village Service and the Madras Hereditary Village Offices (Repeal) Bill, 1968 (L.A. Bill No. 16 of 1968).

@ 49. The Madras Cultivating Tenants (Special Provisions) Bill, 1968 (L.A. Bill No. 17 of 1968).

@ 50. The Madras Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1968 (L.A. Bill No. 18 of 1968).

@ 51. The Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Bill, 1968 with annexure (L.A. Bill No. 19 of 1968).

@ 52. The Madras Hindu Religious and Charitable Endowment (Amendment) Bill, 1968 with annexure (L.A. Bill No. 20 of 1968).

@ 53. The Madras Appropriation (No. 4) Bill, 1968 (L.A. Bill No. 21 of 1968).

---

**@ Despatched to Members on 19th Aug. 1968.**
*** Laid on the Table of the House on 19th Aug. 1968.**
**† Laid on the Table of the House on 20th Aug. 1968.**

APPENDIX

[*Vide* answer to Starred Question No. 68 on page 427]

## DEPARTMENT OF INDUSTRIES, LABOUR AND HOUSING

[INDUSTRIES (SPECIAL).]

[STORES.—Products of College and Small-scale Industries—Policy of protection—Orders—Passed.]

**G.O. Ms. No. 831, dated 1st March 1968.**

READ AGAIN—

G.O. Ms. No. 468, Industries, Labour and Co-operation, dated 15th March 1958.

G.O. Ms. No. 633, Industries, Labour and Co-operation, dated 31st March 1959.

G.O. Ms. No. 805, Industries, Labour and Co-operation, dated 14th April 1960.

G.O. Ms. No. 1229, Industries, Labour and Co-operation, dated 24th August 1960.

G.O. Ms. No. 7241, Industries, Labour and Co-operation, dated 29th December 1961.

G.O. Ms. No. 613, Industries, Labour and Co-operation, dated 3rd February 1964.

G.O. Ms. No. 1164, Industries, Labour and Co-operation, dated 2nd March 1965.

READ ALSO—

Letter from the Director of Industries and Commerce Lr. No. 187915/PDS-1/67 dated 13th September and 2th October 1967.

*Order.—No. 831, Industries (Special), dated 1st March* 1968.

Under the existing orders a price preference—

(*a*) up to 15 per cent for the products of private small-scale and cottage industries is being given over the price quoted for the same articles produced by the large scale industry;

(*b*) up to 10 per cent is allowed to the products of cottage, small-scale industries and large-scale industries within this State, against those manufactured outside this State, but within India provided the quality is comparable.

The purchasing officers have also been directed to follow the following procedure :—

(i) If the articles are available from small-scale and cottage industrial units *owned* by the Government, purchases should be made in accordance with the instructions contained in G.O. Ms. No. 633, Industries, Labour and Housing (Special), dated 31st March 1959.



(ii) If the articles are not available from small-scale and cottage industrial units owned by the Government, open tenders should be called for and purchases made, giving preference to products of *private* small-scale and cottage industries, the preference taking the form of a price preference of 15 per cent over the price quoted for the same articles produced by large-scale industries.

The effect of the existing price preference is as follows :—

| | Large-scale Industries. | Small-scale Industries. | Cottage Industries. |
|---|---|---|---|
| | Rs. | Rs. | Rs. |
| Other States in India | 100 | 115 | 115 |
| Madras State | 110 | 125 | 126 |

The above orders are now in force up to 31st March 1968.

2. The Government consider that the price preference concession indicated in paragraph 1 above should be made permanent in view of the fact that the small scale industrial units are always at a disadvantageous position when compared to medium and large-scale industries in organisational set up, technological progress, productivity and financial resources. Besides, there is also the need to rescue the small-scale industrial units from the recession which has affected them vitally.

3. Accordingly, the Government direct that the existing concession of price preference set out in paragraph 1 above be made a permanent measure with effect from 1st April 1968.

4. This order issues with the concurrence of the Finance Department—*vide* its U.O. No. 125785/P5/67-1, dated 23rd December 1967.

## தொழில், தொழிலாளர் வீட்டு வசதித்துறை

[தொழில்கள் (சிறப்பு.)]

[பண்டகசாலைகள்—குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள் மூலம் கிடைக்கும் பண்டங்கள்—பாதுகாப்பு அளிப்பது குறித்த கொள்கை—ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன.]

**அரசாங்க ஆணை எண் (நிலை) 831, நாள் 1968 மார்ச் முதல் தேதி.**

**கீழ்க்கண்டவற்றை மீண்டும் படித்துப் பார்க்கவும்—**

தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறையின் 1958 மார்ச் 15 தேதியுள்ள 468-ம் எண் அரசாங்க நிலை ஆணை.

தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறையின் 1959 மார்ச் 31 தேதியுள்ள 633-ம் எண் அரசாங்க நிலை ஆணை.

தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறையின் 1960 எப்ரல் 14 தேதியுள்ள 805-ம் எண் அரசாங்க நிலை ஆணை.

தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறையின் 1960 ஆகஸ்டு 24 தேதியுள்ள 1229-ம் எண் அரசாங்க நிலை ஆணை.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1968 ஆகஸ்ட் 21

நண்பர் சங்கரய்யா அவர்களும், மாரிமுத்து அவர்களும், நல்லசிவம் அவர்களும் சொன்னார்கள். அவர்களுடைய உணர்வுகள் எனக்கு விளங்குகிறது. அரசாங்கமும் நன்றாக உணர்ந்திருக்கிறது. பிரத்தியட்சமான நிலைமையைக் கவனிக்கவேண்டும். எட்டு தவணைகள் என்று மாற்றுவதால் பிரத்தியட்சமான அனுகூலம் ஏற்படாது. ஆகவே, நான்கு தவணைகள் என்பதை ஏற்றருள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சங்கரய்யா அவர்கள் 'If, having to deposit a further sum the cultivating tenant fails to do so within the time allowed by the competent authority, the landlord may evict the cultivating tenant as provided in section 6' என்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இதன்படி குத்தகைதாரர் பணம் கட்டாவிட்டால் நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்கு வழி செய்கிறது. இதை எடுத்துவிட வேண்டுமென்று சொன்னால் ஆறாவது செக்ஷனிலே, நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தையும் அடித்துவிட்டது மாதிரி ஆகிவிடும். ஆகவே, இந்தத் திருத்தம் பொருந்தாது என்று கூற விரும்புகிறேன். மேலும் இந்த மசோதாவை எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வருகிறோமோ அதற்கே விரோதமாகிவிடும் என்று கூற விரும்புகிறேன்.

இன்னொரு திருத்தத்தையும் கொடுத்திருக்கிறார்கள்—

'For the figure and words "1st February" wherever they occur, the figure and words "30th June" shall be substituted.'

இதைப் பற்றி ரொம்ப உருக்கமாகப் பேசினார்கள். தஞ்சை மாவட்ட விவசாயிகளின் நிலை பற்றிக் கூறி நல்ல முறையில் வசூலாவதற்கு இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரினார்கள். நண்பர் சங்கரய்யா அவர்களுடைய கோரிக்கையையும், நண்பர் சுப்பையா அவர்களுடைய கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளும் வகையில் '1st February' என்பதை '1st April' என்ற வகையில் மாற்றி அரசாங்கத்தின் சார்பில் ஒரு திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன்.

Sir, I move—

'For the figure and words "1st February" wherever they occur, the figure and words "1st April" shall be substituted.'

நம்முடைய நண்பர் காரைக்குடி உறுப்பினர் மெய்யப்பன் அவர்களுடைய திருத்தம் புது மாதிரியான திருத்தமாக இருந்தது. அவர் கூறியது சுதந்திரக் கட்சியின் அதிகார பூர்வமான கருத்தா என்பது கூட சந்தேகத்திற்குரியதாகத்தான் இருக்கிறது. காலையில் விற்பனை வரி பற்றிய மசோதாவில் பேசும்போது 'பெனல்டி' வசூல் செய்யக்கூடாது என்று பேசியவர், இப்போது



1968 ஆகஸ்ட் 21] [திரு. கே. ஏ. மதியழகன்]

இந்தக் குடியானவர்களிடமிருந்து பாக்கியை வசூலிக்கும்போது வட்டியுடன் வசூலிக்கவேண்டுமென்று கூறினார்கள். இந்த அரசாங்கம் குடியானவர்களுடைய அரசாங்கம்.

அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிற குடியானவர்கள் வேறு, நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கின்ற குடியானவர்கள் வேறு. சில பேர் வேண்டுமானால் உச்ச வரம்புக்கு மேல் வைத்துக் கொண்டிருக்கின்ற மிராசுதார்களாக இருக்கலாம். எங்கள் பக்கத்தில் 10 ஏக்கர், 20 ஏக்கர் வைத்துக் கொண்டிருப்பவர்களை எல்லாம் குடியானவர்கள் என்றுதான் அழைக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர்கள் கூட நிலத்தில் இறங்க மாட்டார்கள். நாங்களும் கொஞ்சம் நிலபுலன் வைத்திருக்கிறோம். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை 100 ஏக்கர் 200 ஏக்கர் என்று வைத்திருந்தவர்கள் கூட பூமியில் இறங்கி வேலை செய்வார்கள். அந்த அளவுக்கு நிலம் வைத்திருக்கக் கூடிய வீட்டுப் பெண்கள் கூட நிலத்தில் இறங்கி வேலை செய்வார்கள். குடியானவர்கள் என்ற சொல் இழிவான சொல் அல்ல. இந்தத் தமிழகத்தில் 80 சதவிகிதம், 90 சதவிகிதம் பேர் குடியானவர்கள்தான். அவர்களுக்காகவேதான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

திரு. சா. மெய்யப்பன் : தலைவர் அவர்களே, குடியானவர்கள் என்று நான் வேறு எந்த அர்த்தத்திலும் சொல்லவில்லை. விவசாயிகள் எல்லோரும், பாடுபட்டு உழைக்கக்கூடியவர்கள், எல்லோரும் 'குடி ஆனவர்கள்' என்றுதான் சொன்னேன். ஆகவே வேறு எந்த அர்த்தத்தையும் மனத்தில் வைத்துச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர்களிடம் இருந்து வட்டியும் வாங்கவேண்டுமென்று சொன்னார்கள். வெள்ளம் வந்து விட்டது, சாவி ஆகிவிட்டது, அறுவடை ஆகவில்லை, ஆகவே தவணையைத் தள்ளிப் போட வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்றத்தான் இந்த மசோதாவே கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்கு வட்டி போட வேண்டுமென்று சொன்னால் இந்த மசோதா வட்டி வாங்குகிற மசோதாவாக ஆகிவிடுமே தவிர, உண்மையிலேயே அவர்களுக்கு நன்மை செய்வதாகாது.

தஞ்சை மாவட்டத்தின் நிலைமையை அனுசரித்து 'ஏப்ரல் 1-ம் தேதி' என்று மாற்றுவதற்கு ஒத்துக் கொள்கிறேன் என்று கூறி, நான்கு தவணைகளை எட்டு தவணைகள் என்று மாற்ற வேண்டுமென்று கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தையும் மற்றத் திருத்தங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் வற்புறுத்தாமல், அரசாங்கத்தின் சார்பில் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்துடன் இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

## தமிழக சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1968 ஆகஸ்ட் 22.

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண்கள் 81-லிருந்து 83-வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Infant Jesus Girls' High School, Mulagumoodu.*

* 84 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether any orders have been issued by the Director of School Education, Madras, fixing the strength of staff for the Infant Jesus Girls' High School, Mulagumoodu, Kanyakumari district for the academic year 1966–67; and

(*b*) if so, the particulars thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) தலைமை ஆசிரியை 1. உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் 8. நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் 7. (ஆசிரிய நிபுணர்கள் நீங்கலாக.)

**திரு. டி. மார்டின் :** மாநிலத்திலுள்ள பள்ளிகள் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்படுகின்றன. ஜூன் மாதம் அவை ஆரம்பிக்கப்படுகின்றபோது ஏராளமான மாணவர்கள் சேர்க்கப் படுகிறார்கள். நிர்வாகிகள் செக்ஷன்களைப் பிரிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதிகமான மாணவர்களைச் சேர்த்ததன் காரணமாக அதிகமான செக்ஷன்கள் வேண்டுமென்று கல்வி இலாகாவிற்கு மனு செய்தால் உடனடியாகப் பரிசீலனை செய்து ஆர்டர் போடுவதில்லை. ஜூன் மாதம் கொடுத்த மனுவிற்கு நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில்தான் அதற்கான உத்திரவு அனுப்பப்படுகிறது. அதுகாறும் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலைமையும், கொடுக்கப்பட்ட சம்பளத்தை ரீபண்ட் கொடுக்க வேண்டிய நிலைமையும் ஏற்படுவதால், காலதாமதம் ஏற்படாமல் உடனுக்குடன் உத்தரவு அனுப்ப கல்வி இலாக்காவினருக்கு அரசு ஆணையிடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஜூன் மாதத்தில் சில பள்ளிகள் துவக்கப்பட்டாலும், ஜூலை ஆகஸ்ட் மாதங்கள் வரை மாணவர்கள் சேர்க்கப்படவேண்டிய நிலைமை இருக்கிறது. இதிலே காலத்தாழ்வு ஏற்படக் கூடாதென்று சென்ற ஆண்டே

தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறையின் 1961 டிசம்பர் 29 தேதியுள்ள 7241-ம் எண் அரசாங்க நிலை ஆணை.

தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறையின் 1964 பிப்ரவரி 3 தேதியுள்ள 613-ம் எண் அரசாங்க நிலை ஆணை.

தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறையின் 1965 மார்ச் 2 தேதியுள்ள 1164-ம் எண் அரசாங்க நிலை ஆணை.

**கீழ்க்கண்ட கடிதத்தையும் படித்துப் பார்க்கவும்—**

தொழில்-வணிகத்துறை இயக்குநரின் 1967 செப்டம்பர் 13, அக்டோபர் 28 தேதிகள் கொண்ட 187945/ PDS-1/67 எண் கடிதம்.

**ஆணை—எண் 831, தொழில்கள் (சிறப்பு), மார்ச், 1968.**

தற்போதுள்ள ஆணைகளின் கீழ், கீழ்க்கண்டவாறு விலைச் சலுகை அளிக்கப்படுகிறது :—

(அ) தனியார் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் மூலம் கிடைக்கும் பண்டங்களுக்காக பெரிய அளவுத் தொழில்களால் உற்பத்தி செய்யப்பட்ட அதே பண்டங்களுக்குக் கேட்கப்படும் விலைகளுக்கு மேற்பட்டு 15 சதவீதம் வரையில் ;

(ஆ) இம் மாநிலத்திற்குள் உள்ள குடிசைத் தொழில்கள், சிறுரகத் தொழில்கள், பெரிய தொழில்கள் மூலம் கிடைக்கிற பண்டங்களுக்கு இம் மாநிலத்திற்கு வெளியே ஆனல் இந்தியாவிற்குள் தயாரிக்கப்பட்ட பண்டங்களுக்கு மேற்பட்டு (அப்பண்டங்கள் அதே தரத்தைக் கொண்டிருக்க வேண்டும்) 10 சதவீதம் அனுமதிக்கப்படுகிறது.

பண்டங்களை வாங்கும் அதிகாரிகள் கீழ்க்கண்ட நடைமுறையை மேற்கொள்ள வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது—

(i) அரசாங்கத்துக்குச் சொந்தமாயுள்ள சிறு தொழில்கள், குடிசை தொழிற் பிரிவுகளிலிருந்து பண்டங்கள் கிடைக்குமாறல் தொழில், தொழிலாளர்-வீட்டு வசதித் (சிறப்பு) துறையின் 1956 மார்ச் 31-ம் தேதியுள்ள 633-ம் எண் அரசாங்க ஆணையில் கண்டுள்ள ஆணைகளையொட்டி அப்பண்டங்கள் வாங்கப்படவேண்டும்.

(ii) அரசாங்கத்துக்குச் சொந்தமான சிறு தொழில்களிலிருந்தும் குடிசைத் தொழிற் பிரிவுகளிலிருந்தும் பண்டங்கள் கிடைக்காவிட்டால், ஒப்பந்தப் புள்ளிகளைக் கேட்டு அறிவிப்பு வெளியிட்டு, அப்பண்டங்கள் வாங்கப்பட வேண்டும், அவ்வாறு செய்கையில், தனியார் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்களும் தயாரித்த பண்டங்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் அதாவது, பெரிய அளவுத் தொழில்கள் தாம் தயாரித்த அதே பண்டங்களுக்குக் கேட்கிற விலைக்கு மேல் 15 சதவீதம் விலைச் சலுகை வழங்கப்படவேண்டும்.



தற்போதுள்ள விலைச் சலுகை மூலம் கீழ்க்கண்ட விளைவு ஏற்பட்டுள்ளது:—

| | | பெரிய அளவுத் தொழில்கள் | சிறிய அளவுத் தொழில்கள் | குடிசைத் தொழில்கள் |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்கள். | .. | 100 | 115 | 115 |
| தமிழ்நாடு | .. | 110 | 125 | 125 |

மேலே குறிப்பிட்ட ஆணைகள் 1968 மார்ச் 31 வரையில் செயலில் உள்ளன.

2. மேலே 1-வது பாராவில் குறிப்பிட்டுள்ள விலைச் சலுகையை நிலையாகச் செயல்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. ஏனெனில், நடுத்தரத் தொழில்கள், பெருந்தொழில்கள் இவற்றுடன் ஒப்பு நோக்கும் போது, நிறுவன அமைப்பு, தொழில் நுட்ப முன்னேற்றம், உற்பத்தித்திறன், நிதி வாயில்கள் பொறுத்த வரையில் சிறு தொழில்கள் எப்போதும் சற்று பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. அத்துடன் சிறு தொழில்கள் முக்கியமாக மந்த நிலை காரணமாகப் பாதிக்கப்படுகின்றன. அவற்றை அத்தகைய மந்த நிலையிலிருந்து மீட்பதற்கான அவசியமும் உள்ளது.

3. அதற்கேற்ப, மேலே 1-வது பாராவில் குறிப்பிட்டுள்ளதும், தற்போது செயலில் உள்ளதுமான விலைச்சலுகை 1968 ஏப்ரல் முதற்கொண்டு நிலையாகச் செயல்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் ஆணையிடுகின்றது.

4. நிதித் துறையின் இசைவுடன் இந்த ஆணை பிறப்பிக்கப்படுகிறது. 1967 டிசம்பர் 23-ம் தேதியுள்ள 125785/P5/67-1 -ஐக் காண்க.

கூறப்பட்டது. காலத்தாழ்வு ஏற்படாமல் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக நிர்ணயித்து உத்தரவு போடமுடியுமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக உத்தரவு அனுப்ப வேண்டுமென்று இயக்குநருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் :* இந்தப் பள்ளியிலே பயிற்சிக்கு சேர்ப்பதற்கு என்னென்ன விதிகள் கையாளப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன். குறிப்பிட்ட வகுப்பினரை எந்த அளவிற்குச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றி தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறதா ?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** அப்படி தாக்கீது அனுப்பப்படவில்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

*திரு. வி. கே. கோதண்டராமன்:* சார், பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் பள்ளிகள் திறந்ததற்குப் பிறகும்கூட உடனுக்குடன் பணியாளர்களை நியமிக்காமல் மாதக் கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறது. இதன் காரணமாக கல்வியின் தரம் பாதிக்கப்படுகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆரம்பத்திலேயே பணியாளர்களை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** தலைவர் அவர்களே, நான் முன்பே எடுத்துக்கூறியபடி அதிகமான மாணவர்கள் சேர்க்கப்பட்டால் ஆசிரியர்கள் அதிகமாகத் தேவை என்று எழுதுகிறார்கள். அதற்கு எவ்வளவு தேவை என்று நிதி இலாக்காவில் பரிசீலித்து அதற்கேற்ப அனுமதி அளிக்கப்படுகிறது. அதன் பிறகுதான் ஆசிரியர்களுக்கான உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இதில் காலத்தாழ்வில்லாமல் செய்யவேண்டுமென்று சென்ற ஆண்டே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. காலத்தாழ்வு ஏற்படாமல் தக்க முறையில் அது தவிர்க்கப்படவேண்டுமென்று கல்வி இயக்குநருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Without meaning any offence to any community, may I know from this Government whether this high school stipulates that admission to this institution will be restricted only to the Catholics ? I understand that even the teachers are drawn from the same community, viz., the Catholic community. Is it a fact that they prevent even Christians of other denominations such as Protestants and also the Hindus from getting into the school ?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய உதவி பெறுகின்ற எந்தப் பள்ளியிலேயும் குறிப்பிட்ட வகுப்பினருக்குத்தான் இடம் உண்டு என்று நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ தள்ளப்பட்டதாக சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் மாணவர்களாக, ஆசிரியர்களாக இருக்கவேண்டுமென்ற நியதி இல்லை. அப்படிச் சேர்ப்பார்களானால் நடவடிக்கை எடுக்கலாம். எங்கும் அப்படி இல்லை, இருக்கவும் கூடாது.





*திரு. டி. மார்டின் :* தமிழகத்தில் டீச்சர் பியூபில் ரேஷியோ, செகண்டரி ஸ்கூல்கள் அதாவது ஹையர் ஸ்கூல்களில் டீச்சர்ஸ் பியூபில் எந்த விகிதத்தில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** ஒரு வகுப்புக்கு 40 மாணவர்கள் இருக்கவேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. போதுமான அளவிற்கு இடவசதி இருந்தால் 45 மாணவர்கள் வரை என்று தலைமை ஆசிரியர்கள் விரும்பினால் சேர்த்துக் கொள்ளலாம். அதற்குமேலும் இடம் இருந்து அந்த இடம் ஒரு மாணவருக்கு 10 சதுர அடி என்ற அளவில் இருந்தால் இயக்குநருடைய அனுமதி பெற்று 55 மாணவர்கள் வரை சேர்க்கலாம். ஐம்பத்தைந்து மாணவர்களுக்குமேல் சென்றுவிட்டால் கட்டாயம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான் பிரிக்கப்படுகிறது.

*திரு. வி. கே. கோதண்டராமன் :* சார், சர்க்கார் துறையிலே நடைபெறக்கூடிய பள்ளிகளிலே எப்படி மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்களோ அப்படி தனியார் துறையிலே சேர்க்கப்படுவதில்லை என்றால் அவர்களுக்குக் கொடுக்கின்ற நிதியை மட்டுமல்ல அங்கீகாரத்தையும் ரத்து செய்ய உத்தேசம் உண்டா ?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:*** தனியார் பள்ளிகள் அதற்காக ஒரு முறையை வகுத்து சேர்த்துக்கொள்ளக்கூடிய நிலைமைதான் இருந்து வருகிறது. அவர்களைக் கட்டாயப்படுத்த சட்டம் இல்லை. அப்படி நடக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று வற்புறுத்தவேண்டிய நிலைமையில்தான் இருக்கிறோம். இன்றைக்கு இருக்கிற சட்டப்படி அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்றால் உதவியை நிறுத்தவோ அல்லது அங்கீகாரத்தை மறுக்கவோ இடமில்லை.

*திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :* 1:40 விகிதம் காரணமாக கல்வியின் தரம் குறைவாக இருக்கிறது. ஆசிரியர்களுக்கும் பளுவாக இருக்கிற காரணத்தால் 1:20 என்று மாற்ற உத்தேசம் உண்டா ?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** தலைவர் அவர்களே, 1:20 அளவிலே இருந்தால் கல்வியின் தரம் நன்றாகத்தான் வளரும். ஆனால் போதுமான அளவில் எல்லா வகுப்பினருக்கும் அல்லது இடங்களுக்கும் கல்வியைப் பரப்ப முடியாது பட்ஜெட்டிலே 58 கோடி ரூபாய் வரை ஒதுக்கி செலவழித்து கல்வியைப் பரப்பக்கூடிய சூழ்நிலையில் இன்னும் இருக்கிறோம். எப்படியாகிலும் கல்வியைப் பரப்ப வேண்டும், அதிகமான மாணவர்கள் படிக்க வேண்டும் என்ற அளவில்தான் 40, 45 என்ற அளவிற்கு ரேஷியோ சென்று விடுகிறது. இருபது என்று ஆக்கினால் ஆசிரியர்கள் அதிகமாகத் தேவைப்படும், செலவும் அதிகமாக ஆகும். அப்படிச் செய்தால் சில பள்ளிகளைத்தான் நடத்த முடியும் என்ற சூழ்நிலை ஏற்படும். அதிகமாகச் செலவு செய்து கல்வியைப் பரப்ப

வேண்டுமென்ற நோக்கத்தில் வசதிக் குறைவுகள் இருந்தாலும்கூட எண்ணிக்கை அதிகரிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். 1:40 1:45, 1:50, 1:55 என்பது வரையிலும்கூட போகக்கூடிய அவசியம் ஏற்படுகிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** ஐம்பத்தைந்து மாணவர்களுக்குமேல் அதிகமாக இருக்கக்கூடாது. ஆனால் அரசினர் பள்ளிகளில் 60-க்கு மேல் இருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பிலே 62 பேர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறார்களே, அப்படிப்பட்ட வகுப்புகளெல்லாம் இரண்டாகப் பிரிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி மாணவர்கள் எண்ணிக்கை 55-க்கு மேல் இருந்தால் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து அதற்கு வேண்டிய ஆசிரியர்களை நியமித்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட பள்ளிகள் அதற்காக இயக்குநருக்கு எழுதிக் கேட்கலாம்.

### மின் உற்பத்தி

* 85 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் மிகவும் சிறிய அளவில் மின்விசை உற்பத்திக்கும் நீர்த்தேக்கங்களுக்குமான வாய்ப்புகள் உள்ள பிரதேசங்கள் குறித்து பரிசிலனை செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அப்படி ஏற்பாடு செய்யப்பட்ட இடங்கள் யாவை, ஜில்லாவாரியாக ?

(உ) இல்லை என்றால், இதுகுறித்து விசேஷ முயற்சி எடுக்கும் உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) முதல் (உ) வரை—15 மெகா வாட்டுக்கு மேற்பட்ட மின்விசைத் திறன் கொண்ட பெரிய, நடுத்தர மின்விசைத் திட்டங்களுக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. அத்தகைய பல திட்டங்கள் உருவாக்கப் பட்டு, இப்போது புலனாய்வு செய்யப்பட்டு வருகின்றன. அதிக ஆதாயம் தரக்கூடிய பெரிய திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றி முடித்த பிறகே சிறிய திட்டங்களைப் புலனாய்வு செய்வது பற்றி ஆலோசிக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அதிக ஆதாயத்தைத் தரக்கூடிய திட்டங்கள் இப்பொழுது எவை எவை உள்ளன ? அவற்றை நிறைவேற்றுவதற்கு இன்னும் எவ்வளவு காலம் ஆகும்? இது போன்ற சிறிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எந்த எந்த இடத்திலே இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டுள்ளது என்பதைச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பெரிய திட்டங்கள் என்ற அடிப்படையில், ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றவைகளில், பைக்காரா, மேட்டூர், கீழ்பவானி



ஆகியவை நீர்ப்பாசனத்தோடு சேர்ந்து நீர் மின்விசை உற்பத்தி செய்யும் நிலையங்களாகவும் இருக்கின்றன. இப்பொழுதிருக்கும் திட்டங்களில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்தான் நீர்ப் பாசனத்திற்கும் மின்சார உற்பத்திக்கும் பயன்படும் வகையில் இருந்துகொண்டு வருகிறது. குந்தா திட்டம், மின்விசை எடுக்கக்கூடிய வகையிலும், ஆனால், நீர்ப்பாசனத்திற்குப் பயன்படாத வகையிலும் இருக்கிறது. சிறு சிறு நீர் வீழ்ச்சியிலிருந்து சிறிய மின்விசைத் திட்டம் ஏற்படுத்தும் நிலைமையில் இருக்கிறோம். நீர்ப்பாசனத்திற்குப் பயன்படும் திட்டங்களை மின்சாரம் எடுப்பதற்கும் பயன்படுத்த வேண்டும் என்ற நிலையை உருவாக்கவேண்டுமென்றால், சிறிய அளவில் எடுத்தால் செலவு அதிகமாகும். ஆகவே, இப்பொழுது இன்வெஸ்டிகேஷன் அதைப்பற்றி அமையவில்லை. செலவு எப்படியும் அதிகம் ஆகும் என்ற காரணத்தால், இவற்றில்தான் நாட்டம் செலுத்தப்படுகிறது.

**Dr. H. V. HANDE :** Sir, normally small hydro-electric projects are very costly. In view of the exorbitant cost that the Government will have to put up with and also in view of the fact that we are able to get a substantial quantity of electricity from the Neyveli Power House and from the neighbouring State, what is the policy of the Government—whether to have mere hydel smaller and bigger projects or to buy power from inside the State from an outside agency like the Neyveli Power House?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நீர் மின்விசையின் மூலமாகத்தான் குறைந்த செலவில் மின் சக்தியைப் பெறலாம். கிட்டத்தட்ட இரண்டரை காசிலிருந்து மூன்று, மூன்றரை காசுக்கு யூனிட் ஒன்று கிடைக்கிறது. அனல் மின்சார உற்பத்திச்செலவு 4 முதல் 5 காசு வரையிலும் ஆகிறது. ஆகவே, கூடுமானவரையில், நீர் மின்சாரத்தைப் பெற வழிவகை ஏற்படுமானால், அதை நாம் பெறலாம். அந்த வகையில்தான், மேட்டூரில் டன்னல் ஸ்கீம் வைத்திருக்கிறோம். அங்கு நீர் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு யூனிட்டு ஒன்றுக்கு மூன்று, மூன்றரை காசுதான் ஆகிறது. அனல் மின்சார உற்பத்திக்கு யூனிட் ஒன்றுக்கு 4, 4½, 5 காசு வரையில் ஆகும். அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நமக்கு எந்த அளவுக்குச் செலவு ஆகிறதோ, அதே அளவுக்குத்தான் மைசூரிலிருந்து நாம் மின்சாரம் வாங்குவதற்கும் கிட்டத்தட்ட 4½ முதல் 5 காசு வரையில் விலை கொடுக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். எப்படியும் நீர் மின்சாரத்தைப் பெற வாய்ப்பு இருந்தால், அது குறைந்த செலவில்தான் இருக்கும். அதெல்லாம் முடியாத நிலையில்தான், அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதோ, மற்ற மாநிலங்களுக்குச் செல்வதோ ஆகிய நிலை ஏற்படுகிறது.

**Thiru B. VENKATASWAMY :** Is it a fact that a dam will be constructed near Hogenakkal in Dharmapuri District so as to generate electricity and, if so, when will it be started?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, முன்பே அடிக்கடி இந்த அவையிலே விடை கூறியிருக்கிற அடிப்படையில், மைசூர் மாநில அரசும், தமிழக மாநில அரசும் கலந்து

செய்துகொள்ளுகிற உடன்படிக்கையின் அடிப்படையில்தான் அந்தத் திட்டம் நிறைவேற வேண்டும். அந்தத் திட்டத்தின் மூலம் நமக்கு மின்சாரம் கிடைக்கக்கூடிய வாய்ப்பும், அவர்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படக்கூடிய வாய்ப்பும் இருக்கும் என்ற நிலைமை இருக்கிறது. காவிரியின் சரிபாதியிலேதான் எல்லைக் கோடு விழுகிறது. வீழ்ச்சியில் ஒரு பாதி அவர்களுக்கும் ஒரு பாதி நமக்கும் வருகிறது. ஆகவே, இரண்டு மாநிலங்களும் சேர்ந்து பேசித்தான் எந்த முடிவும் எடுக்க வேண்டும். இன்னும் பேச்சு வார்த்தை கட்டத்தில்தான் இருக்கிறது. இந்த நிலையில் அதுபற்றி ஒன்றும் சொல்லுவதற்கில்லை.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** கோதையாறு மின்சாரத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? அது எப்பொழுது முடிவடையும்? அதைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கோதையாறு மின்சாரத் திட்டத்தில் வேலைகளெல்லாம் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அது எப்பொழுது முடிவாகும் என்ற விவரக் குறிப்பு இங்கு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலுள்ள மேல் தாம்பிரபரணி, மேல் மணிமுத்தாறு புனல் மின்சாரத் திட்டங்கள் சர்வே செய்து முடிந்திருக்கின்றன. அவை பெரிய திட்டத்தில் சேர்ந்திருக்கின்றனவா? சிறிய திட்டத்தில் சேர்ந்திருக்கின்றனவா? லாபகரமுள்ளதாக இருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னதனாலே, அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** திருநெல்வேலி மாவட்டத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், நீர்ப்பாசனத் திட்டங்கள்தான் போடப்பட்டிருக்கின்றன. மின்சாரத் திட்டம் இல்லை.

**திரு. மு. ச. சிவசாமி :** மேல் தாம்பிரபரணி, மேல் மணிமுத்தாறு புனல் மின்சாரத் திட்டங்கள் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நீர் மின் நிலையம், அனல் மின் நிலையம் ஆகியவற்றைவிட, வளர்ந்து வரும் தேவைக்கு அணு மின் நிலையம் ஏற்படுத்துவது சிறந்த வழி என்று சொல்லுகிறார்கள். அணு மின் நிலையம் ஏற்படுத்துவதற்கு ஆரம்பச் செலவு அதிகமாக இருந்தாலும், நெடு நாளைய உபயோகத்தைக் கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது, அது மிகவும் சிக்கனமாக இருக்கும். ஆகவே, தூத்துக்குடி தவிர, வேறு அணு மின் நிலையம் ஏற்படுத்த ஏதேனும் திட்டம் இருக்கிறதா? அதுமாதிரி திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா? இல்லையென்றால் இனியாவது துவங்கப்படுமா?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில்தான் கல்பாக்கம் அணு மின் நிலைய வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. முதல் கட்டத்தில் 200 மெகாவாட் கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. அதற்குப் பிறகு, மேலும் 200 மெகாவாட் அளவு உற்பத்தி ஆவதற்கு வசதி வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்த நிலையம் முடிவு பெற்றதற்குப் பிறகு, மேலும் தேவையானால்தான், தூத்துக்குடியில் ஆரம்பிக்கலாம் என்றால் அணு மின் கமிஷன் அதுபற்றி யோசிக்கும். இப்பொழுது முதல் கட்டமாக 1971-72 வாக்கில் 200 மெகாவாட் மின்சாரம் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குப் பிறகு, மேலும் 200 மெகாவாட் பெற்றுக் கொள்ளலாம். நெய்வேலியில் 600 மெகாவாட் அளவுக்கு இப்பொழுது பெற வாய்ப்பு இருக்கிறது. அதை மேலும் பெருக்குவதன் மூலமாக ஆயிரம் மெகாவாட் அளவுக்கு உற்பத்தி செய்வதற்கு அங்கே வசதி இருக்கிறது. ஆகவே, தேவையையொட்டி, இவற்றையெல்லாம் பெருக்கிக்கொள்ள வசதி இருக்கும்.

**திரு. ந. வீராசாமி :** ஏறக்குறைய பத்து சிறிய நீர் மின் நிலையங்கள் துவக்க இந்த அரசாங்கம் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்த திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? அதை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை எப்பொழுது உருவாகும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் சேர்க்கும்படியாகப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விடை இந்திய அரசாங்கத்திடமிருந்து இன்னும் வரவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, with a view to generate electricity at a cheaper cost on a small scale or on a large scale, has the Government investigated the proposal for generating electricity from the sea waves in view of the fact that we have a long sea shore where electricity can be produced easily and cheaply?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது நேரடித் தொடர்புடையது இல்லையென்றாலும், கடல் அலையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தை ஃபிரான்ஸ் நாட்டில்தான் ஓரளவுக்கு நிறைவேற்றி வருகிறார்கள். அதுபற்றிய விளக்கக் குறிப்புகள், ஏடுகளையெல்லாம் முன்னாள் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள், அங்கே சென்றிருந்தபோது, பெற்று நம்முடைய மின்சார வாரியத்தில் கொடுத்து, அதுபற்றி ஆராயும்படிச் செய்தார்கள். அலையின் மூலம் மின்சார உற்பத்தி செய்யவேண்டுமானால், 20, 25 அடி உயரம் அலைகள் எழும்பினால்தான் அந்த மின்சாரத்தை உருவாக்க முடியும். நம்முடைய கடற்கரையில், மூன்று, நான்கு அடி உயரம், அதிகமாகப் போனால், ஐந்து, ஆறு அடி உயரம்தான் எழும் நிலை இருக்கிறது. கடற்கரையோரம் ஆழமாக இருந்தால் தான் அதிக உயரம் அலை எழும்பக்கூடிய வாய்ப்பு இருக்கும். நம்முடைய கடற்கரை மேடிட்டிருப்பதால், அலை அதிக உயரமாக எழும்பக்கூடிய வாய்ப்பு இல்லாமலிருக்கிறது. பம்ப் செய்து,

உற்பத்தி செய்யலாமா என்று பார்த்தால், அதற்குச் செலவு அதிகமாக ஆகிறது. ஆகவே, குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கூறுகளையெல்லாம் கண்டறிந்து, எல்லாம் முடிந்ததற்குப் பிறகு, எந்த விலை ஆனாலும், மேலும் மின்சாரம் தேவை என்ற கட்டத்திற்கு வந்தால், அலை மின்சாரத்தைப் பற்றியும், சூரிய ஒளி மின்சாரத்தைப்பற்றியும் யோசிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : With regard to Hogenakkal Hydro-Electric Project, will the Hon. Minister be pleased to state the exact place where they are going to construct the generating house and whether that place will be within our State or in the Mysore State?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த நிலைமைகளும் கூட பேசப்பட்டு வருகிறது. இடத்தைப் பொறுத்தும் அங்கே சில ஆட்சேபணைகள் இருக்கின்றன. அதைக் குறித்து அதிகாரிகள் கட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. அது முடிந்ததற்குப் பிறகு, அமைச்சர்கள் அளவில் அந்தப் பேச்சுவார்த்தை நடைபெறும்போது, அதுபற்றித் தக்க முடிவு ஏற்படும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** கேரள மாநிலத்தில் புதிதாகக் கட்டப்படுகிற சபரிகிரி நீர்மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரம் முழுவதையும் மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கத் தயாராக இருப்பதாகச் சொல்லுகிறார்களே, அங்கிருந்து மின்சாரம் பெறுவதற்கு நமது மின்சார வாரியம் முயற்சி எடுத்திருக்கிறதா ? இல்லையென்றால், இனிமேலாவது முயற்சி எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நம்முடைய தேவையைப் பொறுத்துத்தான் நாம் அவர்களிடத்திலிருந்து கேட்க வேண்டும். இப்பொழுது அவர்களுக்கு உற்பத்தியாகும் நிலையைப் பொறுத்து, அவர்கள் மற்றவர்களுக்குத் தரக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆனால், நமக்குத் தேவையானால்தான் அவர்களிடத்தில் பேசவேண்டிய அவசியம் ஏற்படும். பெறுவதிலே எந்த இடையூறும் இருக்காது. ஏனென்றால், உற்பத்தி அந்த அளவு இருக்கிறது. அவர்கள் கொடுக்கச் சம்மதித்தாலும், நமக்குத் தேவை இருந்தால்தான் எடுத்துக்கொள்ளக்கூடிய அந்த நிலை இருக்கும், அவர்களையும் அணுக முடியும். அவர்களை அணுகினால் தருவதற்கு அவர்கள் ஆயத்தமாகத்தான் இருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** சார், அணு மின்சார உற்பத்திக்குத் தேவையான இல்மினைட், மோனசைட் போன்ற பொருள்கள் மணவாளக்குறிச்சியில் ஏராளமாகக் கிடைக்கின்றன. அதிலும் உலகத்திலேயே சிறந்த 'குவாலிடி' உடைய உலோகங்கள் கிடைக்கும் காரணத்தால் அங்கு அணு மின்சார உற்பத்தி நிலையம் ஆரம்பிக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மணவாளக்குறிச்சியில் அணுசக்திக்குத் தேவையான உற்பத்தி உலோகங்கள் கிடைப்பது உண்மையே. அதனாலேயே அதற்குப்



பக்கத்திலேயே அணு மின் நிலையம் இருந்து தீர வேண்டிய அவசியமில்லை. அதை நம்பித்தான் கல்பாக்கம் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே அங்கிருந்து உலோகங்களைக் கொண்டு வந்து பயன்படுத்தலாம். குறைந்தது 5, 10 மைல் அளவில் சுற்று வட்டாரத்தில் வேறு கிராமங்கள் இருக்கக் கூடாது என்று கணக்கிட்டு, சென்னைக்கு அருகிலே இருப்பதாலே மின் இணைப்புகளுக்கு பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் கணக்கிட்டுத்தான் கல்பாக்கம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. உலோகங்களை மணவாளக்குறிச்சியிலிருந்து வரவழைத்துக்கொள்ளலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, ஆளியார் மின்சார பவர் ஹௌஸ்கள் வேலை செய்ய ஆரம்பித்து விட்டனவா ? எத்தனை பவர் ஹவுஸ்கள் ஆரம்பிக்கப்பட்டு வேலை நடக்கின்றன ? இது சம்பந்தமாக கேரளாவுடன் ஏதாவது ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய முழு விவரம் இல்லை.

## தெலுங்கு ஆசிரியர்கள்

* 86 வினா.—**திரு. வி. கே கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நம் ராஜ்யத்திலும், ஆந்திர ராஜ்யத்திலும் தெலுங்கு உபாத்தியாயர் பயிற்சி பெற்று வரும் ஆசிரியர்களில், நமது ராஜ்யத்தில் பயிற்சி பெற்று வருபவர்களுக்குத்தான் முதலில் உபாத்தியாயர் வேலை கொடுக்கவேண்டுமென்று உத்திரவு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இப்பொழுது நடைமுறையிலே இங்கே தமிழகத்தில் இருக்கக்கூடிய தெலுங்கு பயிற்சிப் பாடசாலைகளிலே இடம் கிடைக்காத காரணத்தாலே ஆந்திராவிலே உள்ள பயிற்சி பாடசாலைகளுக்குச் செல்லுகிறார்கள். ஆனால் இந்த ராஜ்யத்திலே இருக்கக்கூடிய பயிற்சிப் பள்ளிகளிலே தேர்ச்சி பெறக்கூடியவர்களை மட்டும் ஆசிரியர் உத்தியோகங்களுக்குச் சேர்த்துக் கொண்டு ஆந்திராவிலேயிருந்து பயிற்சி பெற்று வரக்கூடியவர்களைச் சேர்ப்பது இல்லை. இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பாகுபாடு அற்ற விதத்திலே சேர்க்க வேண்டுமென்று உத்தரவு போடப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், அப்படிப்பட்ட நிலை இல்லை என்று. இங்கே இருப்பவர்களைச் சேர்ப்பது, அங்கே இருப்பவர்களைச் சேர்ப்பது அல்ல என்பது இல்லை. தேவைக்கேற்ப ஆந்திர மாநிலத்திலிருந்து வருபவர்களையும் சேர்க்கத்தான் வேண்டும். ஹோசூரிலே ஒரு பள்ளி இருக்கிறது. அங்கு தெலுங்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆந்திரப் பிரதேசத்திலே படித்து நன்றாகப் பயிற்சி பெற்று வருபவர்களைச் சேர்த்துக்

கொள்ள வேண்டாம் என்று உத்தரவு எதுவும் இல்லை. அப்படி வருகிறவர்களையும் சேர்த்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, at present we have got only one Telugu training school at Hosur. This year we have received nearly 1,000 applications for 48 seats in respect of the higher grade and 48 seats in respect of the secondary grade. Moreover, students who are coming from Tiruttani and other areas have to cover long distances and also climatic conditions differ. So, taking all these into consideration, will the Government try to open one more Telugu training school at Tiruttani or Tiruvallur ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, இப்பொழுது ஹோசூரிலே இரண்டு முதலாண்டு பிரிவுகள் உள்ளன. ஒன்று ஆணுக்கு, மற்றொன்று பெண்ணுக்கு. ஐம்பது, ஐம்பது இடங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது ஆண்டு பிரிவுகள் செகண்டரி கிரேடிற்கு இரண்டும், எலிமெண்டரி கிரேடிற்கு ஒன்றும் இருக்கின்றன. மாநிலத்தில் தேவை அதிகமாக இருந்து, பயிற்சி பெறுகிறவர்கள் குறைவாக இருந்தால் வேறு பள்ளியை ஆரம்பிப்பதோ அல்லது பள்ளிகளை அதிகரிப்பதோ, அதைப்பற்றி ஆராயலாம். கனம் உறுப்பினரவர்கள் கூறிய கருத்தை மனத்தில் கொண்டு ஆராயப்படும்.

DR. H. V. HANDE : Sir, there is a scare among the Telugu-speaking people of the Madras State that there is a possibility of winding up of the Telugu section in certain Telugu schools and also the prospects that the Telugu people getting chances in Telugu Training Schools are also dwinding. So, will the Hon. Minister give a categorical assurance that the interests of the Telugu-speaking students as well as the Telugu teachers will be completely looked after by this Government ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, முதலிலே கூறியபடி 15 மாணவர்களுக்கு மேலாக அந்த மொழியைக் கொண்டு நாங்கள் படிக்க விரும்புகிறோம் என்று கூறி ஆசிரியர்கள் வேண்டுமென்று கேட்டால் அதற்கு வாய்ப்பு தர அரசு தயாராக இருக்கிறது. சிலபல பள்ளிகளிலே இரண்டாவது மொழியாக படிக்க தெலுங்கு இருக்கிறது. குறிப்பிட்ட எண்ணிக்கைக்குமேல் மாணவர்கள் வந்தால் அந்தப் பள்ளிகளிலே வசதிகள் செய்து தர அரசு முன்வரும்.

THIRU K. VINAYAKAM : Sir, are the Government aware of the fact that the Telugu teachers in our border areas are fast taking to learning Tamil and they are getting adjusted in those areas with the result there is no demand—or the demand is dwindling—for the employment of Telugu teachers ? Even those who were trained in the Training School at Hosur feel it very difficult to get employment in the Telugu schoole in the border areas.





*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, அப்படிப்பட்ட சூழ்நிலை வளர்ந்து வருவது வரவேற்கத்தக்கது. அந்தந்த இடத்திற்குத் தகுந்தாற்போல் தாய்மொழியோடு வட்டார மொழியையும் கற்று வருவது நல்லதுதான். ஆசிரியர்கள் பாதிக்கப்படுவதாகச் சொன்னார்கள். பாதிக்கப்படாமல் இருக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அதை எடுக்க அரசு கவனிக்கும்.

### நெசவாளர்களுக்கு இலவச வீட்டுமனை

* 87 வினா.—*திரு. சி. கோவிந்தராசன் :* மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வீடில்லாத நெசவாளர் குடும்பங்களுக்கு இலவசமாக மனைகள் வழங்க அரசாங்க திட்டம் இருக்கிறதா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* இல்லை.

*திரு. சி. கோவிந்தராசன் :* தலைவரவர்களே, அரிசனங்களுக்கு இலவசமாக மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுப்பது மாதிரி வருமானத்தில் குறைந்தவர்களுக்கு, வருஷத்திற்கு ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இலவசமாக மனைகளை வாங்கிக் கொடுக்க திட்டம் இருப்பதாகக் கூறப்படுகிறதே, உண்மையா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* இந்தக் கேள்வியைப் பொறுத்து அது எழவில்லை. அப்படிப்பட்ட திட்டம் கூட்டுறவு நெசவாளர்களைப் பொறுத்து இல்லை.

*திரு. முனு ஆதி :* தலைவரவர்களே, அரசினர் புறம்போக்கு நிலங்களையாவது இந்த வீடில்லாமல் தவிக்கும் நெசவாளர்கள் குறிப்பிட்ட இடங்களைக் கேட்டால் பட்டா வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, இப்பொழுது பெரும்பாலும் ஆங்காங்கு இருக்கிற அரிசன மக்களுக்குத்தான் அந்த புறம்போக்கு நிலங்களிலே இட வசதிக்கு ஒதுக்கப்படுகிறது. அதிலேகூட எல்லோருக்கும் ஒதுக்கித் தர முடியவில்லை. நெசவாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் தர வேண்டுமென்ற பிரச்சினை இப்பொழுது இல்லை. அது என்னுடைய இலாக்காவிலே இல்லை. தனிக்கேள்வி போட்டால் அதற்குரிய இலாக்காவிலே ஆராய்ந்து விடையளிப்பார்கள்.

*திரு. கே. என். குமாரசாமி :* சார், நெசவாளர்களுக்கு அரசாங்கம் வீடு கட்டிக் கொடுப்பதாகத் திட்டம் இல்லை என்கிறார்கள். அவர்கள் மிகவும் பின்தங்கியவர்களாகக் காட்சியளிக்கிறார்கள். அவர்கள் வருமானத்தை உத்தேசித்தாவது சர்க்கார் இனிமேலாவது திட்டமிட்டு அவர்களுக்கு வீட்டு மனை கட்டிக் கொடுக்கக் கூடிய நிலைமைகளை உருவாக்கிக் கொடுப்பார்களா ?

[1968 ஆகஸ்ட் 22

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்திய அரசாங்கத்தின் கடன் உதவியின் பேரிலேதான் இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலே நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக ஒரு பகுதி கடன் ஆகவும், மற்றொரு பகுதி மானியமாகவும் கொடுக்கப் பட்டது. அந்த வகையிலே 36 வீடு கட்டும் திட்டங்களை மேற்கொண்டு, 32 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதற்கு 1,27,65,000 ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதில் 95,91,000 ரூபாய் கடனாகவும், 31,74,000 ரூபாய் மானியமாகவும் தரப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வசதி செய்து இதற்காக ஒதுக்கப்பட்டு தந்தால் இந்த முறை கவனிக்கப்படும். ஆனால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகாத காரணத்தால் இப்பொழுது அதுபற்றிய திட்டம் இல்லை.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, வீட்டுமனைகளை நெசவாளர்களுக்கு இலவசமாகக் கொடுப்பது மட்டுமல்லாமல், தற்போது வறட்டுப் பகுதிகளிலே உள்ள நெசவாளர்கள், சேலம் மாவட்டத்தில் கொண்டலாம்பட்டி, காட்டூர் போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் குடிசை போட்டுக்கொண்டு பல ஆண்டுகள் ஆகியும், அவர்கள் பட்டாவுக்கு எழுதியும் பட்டா கொடுக்காமல் இருக்கிறார்களே, அந்த நெசவாளர்களுக்கு உடனடியாக பட்டா வழங்க அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்புடையது அல்ல, தனிக் கேள்வி போடவும்.

**திரு. என். துரைபாண்டியன்:** டெபுடி ஸ்பீக்கர் சார், கஷ்டமான தொழிலாகவும், வருமானம் குறைச்சலாகவும் உள்ள தொழிலான பனை ஏறுவதைத் தொழிலாகக் கொண்டிருக்கும் பனையேறும் தொழிலாளர்களைத் தொழிலாளர்களாகக் கவனித்து அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனிக் கேள்வி போடவும்.

12-30 பி.ப.

**திரு. எஸ். முருகையன் :** சார், நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய அளவுக்கு அரசாங்கத்திலே பணம் இல்லையென்றாலும் நெசவாளர் கூட்டுறவு சங்கத்திலே இருக்கிற நெசவாளர்களுக்கு அந்த சங்கத்தினுடைய பொது நிதியிலிருந்து வீட்டு மனைகள் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்திரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. அப்படி விண்ணப்பிப்பார்



1968 ஆகஸ்ட் 22]

களானால் அந்த நிதியிலிருந்து எடுத்து செலவழிக்க வழி இருக்கிறதா என்று ஆராயப்படவேண்டும். தனிக் கேள்வி போட்டால் அதுபற்றி ஆராய்ந்து சொல்லப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், பொதுவாக பரம ஏழைகளாக இருக்கக்கூடிய எல்லோருமே வீடு இல்லாமல் நடு ரோட்டிலே சாக்கடை ஓரங்களிலே பல இடங்களிலே குடிசை போட்டு வாழக்கூடிய அளவுக்கு இருக்கிறது. ஆகவே, வீடு கட்டிக் கொடுக்கவில்லையென்று சொன்னாலும் அவர்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்க சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் அவர்கள் இருக்கக்கூடிய அளவுக்கு 5 சென்ட் கொடுக்கவில்லையென்றாலும் 3 சென்ட்டாவது உடனடியாக கொடுக்க திட்டம் வகுக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பொதுவாக எல்லா ஏழைகளுக்கும் வீடு கட்டிக் கொள்ள இடம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கம் இருந்தாலும் ஆங்காங்கு கிடைக்கிற நில வசதியைப் பொறுத்தும் அங்கு இருக்கிற ஏழை எளிய மக்களுடைய எண்ணிக்கையை பொறுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விண்ணப்பித்திருப்பார்களானால் அது ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெசவுத் தொழில் மிகப் புராதனமான தொழில், அதே நேரத்திலே இன்றைய நிலைமையில் மிகப் பரிதாபகரமான தொழிலாக இருக்கிறது. மிகவும் பின் தங்கிய மக்களுக்குச் செய்யப்படுகின்ற சலுகைகளைப் போல இவர்களுக்கும் கல்வித் துறையிலும், உத்தியோகத் துறையிலும் செய்வதற்கு இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே முன்பே குறிப்பிட்டபடி நெசவாளர்களுக்குப் பல வகைகளில் சலுகைகள் தருவதற்கு பல ஏற்பாடுகள் ஏற்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவு சொசைட்டிகள் ஏற்படுத்தவும் அதற்கு அரசாங்கக் கடன் வழங்கவும் வேறு பல சலுகைகள் தருவதற்கும் பல வசதிகளை நீண்ட காலமாக அரசாங்கம் செய்து வருகிறது. தொடர்ந்து செய்வதற்கான பல்வேறு ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது. இப்பொழுதே இலவசக் கல்வி பெறுவதற்கு வருமான அடிப்படையில் வாய்ப்பு இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட பிரிவினரைப்போல் கல்விச் சலுகை பெற வாய்ப்பு வசதிகள் எல்லாம் இவர்களுக்கும் இருக்கின்றன. மெரிட் ஸ்காலர்ஷிப் போன்றவை பெறுவதற்கும் வசதிகள் இருக்கின்றன. ரூ. 1,500-க்குக் குறைந்த வருமானம் உடையவர்கள் எல்லாம் புகுமுக வகுப்பிலே இலவசக் கல்வி பெறலாம் என்ற வசதி இருக்கிறது. இவர்களுக்கு தனிச் சலுகை தருவதற்கான முறையில் இப்பொழுது எந்த திட்டமும் இல்லை.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, பல்லாயிர வருஷ காலமாக இந்த நெசவாளர்கள் வாழ்க்கையைப் பற்றிப் பேசிக்கொண்டே இருக்கிறோமே இதை மாற்றி அவர்கள் வாழ்க்கையிலே புது நிலைமையைக் காண்பதற்கு வழிவகை ஏதாவது திட்டத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்தச் செயல் செய்வதாக இருந்தாலும் முதலிலே பேசித்தான் தீர வேண்டும். ஆகவே, பேச்சு முதலில் இருந்தால்தான் செயல் பின்னால் வரும். ஆகவேதான் பேசுகிறோம். அந்த முறையில்தான் பேசிய பிறகு செயல் ஆற்றப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE : These weavers in the City cannot be given a place each for construction of houses. For instance, in Choolai we have got about 3,000 weavers, 400 or 500 families. They have put in petitions after petitions to the Housing Board for construction of houses. They have got an association. Even though the subject of ' housing ' does not come under the purview of the Minister for Education but because 'weavers' come under the Minister for Industries, will the Hon. Minister for Education get in touch with the Minister for Housing and evolve some sort of housing scheme for these unfortunate weavers? These people have no livelihood except weaving and they do not get even Re. 1 per day. Will the Hon. Minister for Education view this sympathetically ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை பகுதியில் அதற்காக அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டு வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதைப்பற்றிய முழு விவரமும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்து மனதிலே கொள்ளப்பட்டு அதற்கு வசதி, வாய்ப்பு இருக்குமானால் கவனிக்கப்படும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, அரிஜனங்களுக்கு மட்டும் தான் மனைகள் விநியோகிக்கப்படுகின்றன என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அரிஜனங்கள் அல்லாத ஏழைகளுக்கும் மனைகள் வழங்கப்படும் என்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறதா ? ஏற்றுக்கொள்ளுகிறது என்றால், அதை அமல்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அரிஜனங்களுக்குத்தான் இன்றைக்கு வீடுகள் கட்டிக்கொள்ள மனைகள் கொடுக்கப்படுகின்றன என்றாலும் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்ற நோக்கத்தில் 90 சதவிகிதம் அரிஜனங்களுக்கும், 10 சத விகிதம் அரிஜனங்கள் அல்லாதவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக மனைகளில் இடம் அளிக்கப்படுகிறது. எனவே, இரண்டையும் சேர்த்து 100 சத விகிதம் ஆகிறது.





THIRU K. VINAYAKAM : Whereas the weavers' problem is a thorny problem, agitating the minds of many politicians as to how to solve the problem of their low standard of living . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி கேளுங்கள்.

THIRU K. VINAYAKAM : **கேள்விதான் ;** ' whereas ' என்றாலே கேள்விதான்

When I began with ' whereas ' it mans I am putting a question.

Whereas I remember that the Hon. Chief Minister has made a statement when a deputation of weavers came to him that he had conceived of some scheme to solve the problem of the entire community of weavers and to lift them from the mire in which they have got stuck up, may I know whether the Hon. Chief Minister has conceived that idea and is he prepared to deliver it now?

THE HON. THIRU C. N. ANNADURAI : When I met weavers in Madurai I said that they may present their grievances to me and have a general talk over it. When they did not come to me, I asked the Collector of the district to have preliminary discussions and later come to me. I am glad that the hon. Member has said that I have conceived a scheme for them. I am glad he has not said we are scheming. Any such scheme can fructify only along with the general economic reconstruction. It cannot be apart from that.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண்கள் 88, 89, 90, 91, 92 ஆகியவை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளின்படி பிரிதொரு நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும். வினா எண்கள் 93, 94 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Pudukkottai and Chettinad Livestock Farms*

* 95 *Q*.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether the Minister for Agriculture, during his visit to Pudukkottai and Chettinad Livestock Farms in May-June 1967 found out that Railway Cinders were purchased in the name of Blackgram Kurnai husk and cotton waste in the name of cotton seed and groundnut cake; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. THIRU A. GOVINDASAMY : (*a*) & (*b*) I visited the Ramanathapuram District Livestock Farm, Chettinad, during June 1967 and noticed certain defects in the maintenance of the feed samples and also in the running of the Farm. Immediate action was taken to rectify the defects pointed out by me. I also visited the District Livestock Farm, Pudukkottai, during May 1967. I did not however find that Railway Cinders were purchased in the name of Black-gram Kurnai husk or cotton waste in the name of cotton seed and groundnut cake in either of these District Livestock Farms.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, பொருள் வாங்குவதில் இது போன்ற தவறுகள் ஏற்படாதிருக்க 'பர்ச்சேஸ் கமிட்டி' ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏற்கனவே, ஒவ்வொரு பண்ணையிலும் தனிக் கமிட்டி இயங்கி வந்தது. அதிலே, சில குறைபாடுகள் ஏற்பட்டதாலே ஒரு சென்ட்ரல் பர்ச்சேஸ் கமிட்டி ஏற்படுத்தி இந்த ஆண்டிலே இருந்து வழங்கப்பட்டுள்ளது. அப்படி புதுக் கமிட்டி அமைத்ததனுலே இந்த ஆண்டு மட்டும் ரூபாய் 10 இலட்சம் அரசாங்கத்திற்கு ஆதாயமாய் கிடைத்தது என்ற நல்ல செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: சர்க்காரே இந்த 'பாலன்ஸ்ட்ஃபுட்டு' தயார் பண்ணி எல்லா பண்ணைகளுக்கும் கொடுப்பதற்கு திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கனம் அங்கத்தினரே ஒரு குழுவிலே உறுப்பினராக இருக்கிருர்கள். அண்மையிலே ஹோசூரிலே நடந்த குழுக் கூட்டத்திலே இப்படி ஒரு திட்டம் எடுக்கப்பட்டது அவருக்குத் தெரியும். அதைப்பற்றி பரிசிலனை செய்திருக்கிறேம். அதைப்பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க குறிப்பாக தீவன தயாரிப்பை கண்டு பிடிப்பதற்காக ஒரு ஜாயிண்ட் டைரக்டரை எல்லா பண்ணைகளையும் பார்வையிட்டு ஒரு தனி திட்டம் கொடுக்கும்படியாக கேட்டிருக்கிறேம்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister for Agriculture the men who are responsible to accept tenders in the Animal Husbandry Department? If any malpractices are found in accepting tenders, will this Government come forward to punish such offenders ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: டைரக்டர் ஆஃப் அனிமல் ஹஸ்பண்டரி, டெபுடி டைரக்டர், சம்பந்தப்பட்ட பண்ணை சூப்பரின்டெண்டண்டு இவர்களெல்லாம் குழு உறுப்பினர்களாக இருக்கிருர்கள். அதிலும் ஏதாவது குறைபாடு இருந்தால் விவசாயச் செயலாளர் அவர்கள் கவனித்துவருகிருர் ; அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே இது மாதிரி சில தவறுகள் நடந்ததை தவிர்ப்பதற்காக இதை ஒரு சென்ட்ரல் குழுவாக, பர்ச்சேசிங் கமிட்டி என்று போட்டு இந்த நடவடிக்கையிலே ஈடுபட்டிருக்கிறேம்.

திரு. ஆர். கருப்பையா : சென்ட்ரல் குழு அமைக்கப்பட்டுள்ளதாகச் சொல்கிருர் அமைச்சர் அவர்கள். தமிழ்நாடு அளவில் அமைக்கப்பட்டுள்ளதா அல்லது மாவட்டவாரியாக அமைக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மொத்தமாகத்தான் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒவ்வொரு ஃபாரத்திற்கும் ஒரு குழு இருந்தது. இப்பொழுது மொத்தமாக சென்னையில் சாம்பில்கள் வரவழைக்கப்பட்டு டெண்டர்கள் இங்கேயே ஓபன் செய்யப்பட்டு முடிவு எடுக்கப்படுகிறது.



திரு. சா. மெய்யப்பன் : செட்டிநாடு கால்நடைப் பண்ணை ஆரம்பித்த முதலிலிருந்து இதுவரையிலே லாபமா, நஷ்டமா ? நஷ்டம் என்ருல், எவ்வளவு நஷ்டம் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். செட்டிநாடுப் பண்ணை பெருத்த நஷ்டத்தில் தான் இயங்கிக் கொண்டிருந்தது. இப்பொழுதும் அப்படித் தான் இயங்கிக்கொண்டு வருகிறது. அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எவ்வளவு நஷ்டம் என்ற புள்ளிவிவரம் பற்றி தனிக் கேள்வி போட்டால், விவரம் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பொதுவாக உடல் நலனை பாதிக்கக் கூடிய அளவுக்கு—கால்நடைகள் மட்டுமல்ல, மனிதர்கள் அருந்தக்கூடிய உணவுப் பொருள்களில்கூட இது போன்ற மோசமான அளவுக்கு கலப்படம் நடந்துகொண்டு வருகிறது. இந்தக் கலப்படம் விஷயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு சட்டம் இயற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அது தனி விஷயம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது விசாரணை நடத்தப்பட்டதா ? எத்தனை ஆண்டு காலமாக இத்தகைய செயல்கள் நடைபெற்று வருகின்றன என்பது விசாரணையின்போது சர்க்காருக்குத் தெரிய வந்ததா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்தந்த இடங்களிலிருந்து மாற்றப்பட்டுவிட்டார்கள். அதைப்பற்றி விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. உடனே அதிகாரிகள் அனைவரையும் அந்தந்த இடங்களை விட்டு மாற்றிய பிறகு நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : During the last Session of the Assembly I brought to the notice of the Hon. Minister about the mismanagement and malpractice in the Livestock Research Station, Hosur, and will the Hon. Minister be pleased to state the steps taken to rectify them and the position as it stands now?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஹோசூரில் தீவனம் வாங்கியதாக ஒரே நாளில் ரூ 25,000 கணக்கு எழுதிவிட்டு, தீவனம் வாங்காத நிலைமை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. முதல் அமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில் ஒரு குழு அமைத்திருக்கிருர்கள். அந்தக் குழுவில் ஒரு அங்கத்தினர் முன்னுல் டெப்யூடி டைரக்டராக இருந்தவர், திரு. விநாயக முதலியார். அவர் ஹோசூர் பண்ணையைப் போய் பார்த்து, நடந்த தவறை அரசாங்கத்தின் கவனத்

திற்குக் கொண்டுவந்தார்கள். உடனே அரசாங்கம் செயலாளரை அனுப்பி விசாரணை நடத்தியது. விசாரணையின்பொழுது ருசுவாகிற சூழ்நிலை ஏற்பட்டதினால், அந்த விஷயத்தை இப்பொழுது விஜிலன்ஸுக்கு அனுப்பியிருக்கிறோம்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மாற்ற நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏன் அப்படிப்பட்ட அதிகாரிகளை சஸ்பெண்டு செய்துவிட்டு விசாரணை நடத்தக்கூடாது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இது நல்ல யோசனை தான். ஆனால், அன்றைய சூழ்நிலையில் மாற்றினாலே போதும் என்ற நிலைமைதான் இருந்தது. அங்கு கண்டுபிடிக்கப்பட்டது என்னவென்றால் வைக்கோல் ஒழுங்காகப் போடப்படவில்லை, மாட்டுக்கு தீவனம் போடவில்லை என்பது தான். கனம் அங்கத்தினர் அவர்களுடைய தொகுதிக்குச் சென்றுவிட்டு 7 மணிக்கு கால்நடைப் பண்ணைக்கு நேரில் போய் பார்த்தேன். கால்நடைகளுக்கு தீவனம் போடப்படாமல் இருந்தது. விசாரித்ததில் இரவு 8 மணிக்கு தீவனம் போடப்படுவதாகச் சொல்லப்பட்டது. ஆனால், உண்மை நிலை அப்படியில்லை. மாட்டுக்கு தீவனம் போடப்படாத சூழ்நிலைதான் இருந்ததாகத் தெரியவந்தது. இப்படிச் சிறிய சிறிய குற்றங்குறைகள்தான் இருந்ததால், அவைகளைத் தீர்ப்பதற்கு மாற்றிவிட்டால் போதும் என்று கருதப்பட்டது. மாட்டுக்குத் தீவனம் ஒழுங்காகப் போடாதது, வைக்கோல் ஒழுங்காகப் போடாதது; சாம்பில் பாட்டில்களுக்கு கண்டிராக்டர் ஸீலும் சூப்பிரன்டெண்டு ஸீலும் வைக்கவேண்டும், கண்டிராக்டர் ஸீல் வைக்கப்படாமல் இருந்தது போன்ற குற்றங்குறைபாடுகளைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய குற்றச்சாட்டுகள் ஒன்றுமில்லாத காரணத்தினால் சஸ்பெண்டு செய்யப்படவில்லை.

**திரு. மு.ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, செட்டிநாடு கால்நடைப் பண்ணையில் நடந்த ஊழல் எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது? அங்கே நடைபெறுகிற ஊழலை எந்த அரசியல் கட்சியாவது அரசாங்கத்திற்குக் கூறி உதவியதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** செட்டி நாடுப் பண்ணையில் நடந்த செய்தியைக் குறித்து நான் திருச்சி பிரயாணிகள் விடுதியில் தங்கியிருந்த நேரத்தில் எனக்கு ஒரு கடிதம் வந்தது. வைக்கோல் வண்டியில் கல்லை வைத்து நிறுப்பதாக எனக்குத் தகவல் வந்தது. உடனே, நானே பண்ணைக்குச் சென்று போய்ப் பார்த்தேன். வைக்கோலோடு கல்லையும் சேர்த்துவைத்து நிறுத்து, எடையை அதிகமாகக் காட்டக்கூடிய நிலையை நானே கண்டுபிடித்தேன். கல் யார் காலில் விழுந்ததோ அவரையே கூப்பிட்டு விசாரணை செய்தேன். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது வண்டியோடு சேர்த்து வைக்கோலை நிறைபோடும் பழக்கம் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.



### *Wild life sanctuary*

*96 *Q*.—THIRU E. M. NATARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any scheme under consideration to establish a wild life sanctuary in the forests in Burgur hill areas of Bhavani taluk in Coimbatore district?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இல்லை.

### தஞ்சை மாவட்ட அரிசன நலப்பள்ளி ஆசிரியர்கள்

*97 வினா.—**திரு. கே. இரா. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்திலுள்ள அரிசன நலப்பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களை எவ்விதக் காரணமுமின்றி மாவட்டம் பூராவும் அடிக்கடி மாற்றம் செய்வதை தடுத்து நிறுத்த உடனடி நிர்வாக உத்தரவு அரசாங்கம் பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை. நிர்வாக வசதிக்காகவும், தகுந்த காரணங்களை முன்னிட்டும் இக்கல்வியாண்டில் ஒரு சிலர் மாற்றப்பட்டனர் என்று தஞ்சாவூர் கலெக்டர் அறிவித்துள்ளார்.

**திரு. கே. இரா. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களை மாற்றுவதற்கு அட்ஹாக் கமிட்டி போன்று ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டிருப்பதுபோல இந்த ஆசிரியர்களை மாற்றுவதற்கும் அம்மாதிரி ஒரு கமிட்டி ஏற்படுத்துவதற்கு இந்த அரசு உத்தரவிட்டால், இம்மாதிரி தவறுகள் நடக்காமல் தடுப்பதற்கு அனுசரணையாக இருக்காதா? அதைப் பற்றி அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தவறுதல் காரணங்களுக்காக ஆசிரியர்களை மாற்றவில்லை. ஆனால், 16 பேர்கள் கணவன் மனைவியாக பல்வேறு இடங்களில் இருந்த காரணத்தினால், 1966-ம் ஆண்டில் திருக்காட்டுப்பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர்கள் மாநாட்டில், 16 பேர்கள் கணவன் மனைவியாக இருப்பவர்களை ஒரே இடத்திற்கு மாற்றவேண்டும் என்று விண்ணப்பம் செய்து கொண்டிருந்தார்கள். அதற்கேற்றவாறு 16 பேர்களும் கணவன் மனைவி ஒரே இடத்தில் இருக்கும்படியாக மாற்றப்பட்டார்கள். மேலும் சில இடங்களில் சில புகார்களுக்கு ஆளாக்கப்பட்டவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 31 ஆசிரியர்கள் அவர்களாகவே விரும்பி பல்வேறு இடங்களுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்ட பிறகு, மாற்றப்பட்டார்களே தவிர, வேறு எந்தவித தவறுதல் காரணத்திற்காக யாரையும் மாற்றவில்லை. அதற்காக தனியாக எந்தவித அமைப்பும் ஏற்படுத்தவேண்டிய அவசியமில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பொதுவாகவே, இந்த மாவட்டத்தில் இத்தகைய டிரான்ஸ்பர்ஸ் ஏராளமாக நடந்து கொண்டிருக்கின்றன என்று என்னிடத்திலே விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அமைச்சர் அவர்களுக்கு கலெக்டர் தகவல்

கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எத்தனை பேர்கள் அப்படி மாற்றப்பட்டார்கள் என்ற தகவலைக் கொடுக்க முடியுமா? அது மட்டுமின்றி, இப்படித் தகாத அடிப்படையில், கணவன் மனைவியுமாக இருக்கக்கூடியவர்களைப் பிரிவினை செய்து மாற்றிக் கொண்டிருப்பதால், குடும்பத்திற்கே கோளாறு ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை எங்கு பார்த்தாலும் உண்டாகியிருக்கிறது. ஆகவே, திட்டவட்டமாக ஒரு உத்தரவு போட்டு அரசாங்கம் இம்மாதிரி டிரான்ஸ்பர்களைத் தடுக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கணவனும், மனைவியும் ஒரே இடத்தில் இருக்க வேண்டுமென்பதற்காகத் தான் இப்படி 16 பேர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். மேலும், ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கத் தான் மாற்றம் செய்யப்பட்டதே தவிர, வேறு தவறான முறையில், வேண்டுமென்றே அலைக்கழிக்க வேண்டுமென்ற முறையில், ஒருவரும் மாற்றப்படவில்லை. ஆகவே, அதற்காக ஒரு தனி அமைப்பு அல்லது முறை ஏற்படுத்தும் உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஆசிரியர்கள் மாற்றத்திற்குக் கமிட்டிகள் நியமித்து அதன் மூலம் மாற்றங்கள் செய்தால், லோகல் அட்மினிஸ்டிரேஷனில் அது கெடுதலான விளைவை ஏற்படுத்துகிறது, ஒழுங்கீனத்தை உண்டு பண்ணுகிறது. ஆகவே, இம்மாதிரி கமிட்டியை நியமித்தால் ஜில்லா அட்மிஸ்டிரேஷன் கெடும்படியான நிலைமை இருப்பதனால், நிரந்தரமாக இப்படிப் பட்ட கமிட்டியை நியமிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்த மாற்றல்கள் எந்தக் கமிட்டியின் மூலமாகவும் செய்யப்படவில்லை. மாவட்ட நல அதிகாரியின் மேற்பார்வையின் கீழ், அவர்களே கேட்டதன் பேரில் இந்த மாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, மாவட்ட ரீதியில் நலப்பள்ளிகளில், மாவட்ட அதிகாரிகள் மாற்றங்கள் செய்யும் போது, ஊழல்கள், லஞ்சப்புகார்கள் எழும்பி விடுகின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு குழு அமைத்து மாற்றங்கள் செய்யப்படுவதுபோல, மாவட்ட நலப் பள்ளிகளிலும் செய்ய என்ன சிரமம், சிக்கல் இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஊழல்கள், தவறுகள் ஏற்படும்போது, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் போது, தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தனிக் குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இந்தவிதமான ஆசிரியர்கள் மாற்றப்படும்போது, படித்துக் கொண்டிருக்கும் அவர்களுடைய குழந்தைகளும் பாதிக்கப்படுகிறார்கள். அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள், பின்தங்கியவர்கள், மதம் மாறியவர்களுக்கு ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் போன்றவை மறுக்கப்படுகிறது என்ற கருத்து பரவலாக இருக்கிறது. அது உண்மையா?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மதிப்பிற்குரிய உறுப்பினர் இரு வேறு கேள்விகளை ஒன்றாகக் கேட்டிருக்கிறார்கள். ஒன்று, இப்படி மாற்றப்படுகிறவர்களுடைய குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது. இரண்டாவது மதம் மாறிய கிறித்தவ மாணவர்களுக்குச் சரியான முறையில் சலுகைகள் தரப்படவில்லை என்பது. ஒரு தலைமுறை, அதாவது தந்தை ஒரு மதமும், தாய் வேறு மதமுமாக இருந்து பிறக்கிற குழந்தைகளுக்கு இப்பொழுதே அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும் கல்விச் சலுகைகள் தரப்படுகின்றன. மாறுதல்கள் செய்யப்படுவது அவர்களே கேட்டுக் கொண்டதன் பேரில்தான், அப்படிச் செய்யப்படுகிறது.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** அரிசன நலப் பள்ளிகளில், ஆசிரியர்கள் குறைந்தபட்சம் எவ்வளவு காலத்திற்குத்தான் பணி புரியவேண்டும் என்று ஏதாவது விதி வைக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** முறையாக மூன்று ஆண்டு காலத்திற்கு மேல் ஒரு பள்ளியிலேயே இருக்கக் கூடாது என்று இருக்கிறது என்றாலும், அதற்கும்மேல் கூட இருக்கிறார்கள். அதை ஒட்டியும் மாறுதல்கள் செய்யப்படுகின்றன.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், ஆசிரியர்களிடம் கட்டாயமாக மாறுதல் வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களும், பிரசிடெண்டுகளும் எழுதி வாங்கிக் கொண்டு, டிரான்ஸ்பர் செய்ய வழி செய்து விடுகிறார்கள். அதனால், ஆசிரியர்கள் அவதிக்கு உள்ளாகிறார்கள். அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்வி அரிசன நலப்பள்ளி ஆசிரியர்களைப் பற்றியது.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படிப் பட்ட புகார் எதுவும் இல்லை.

**திரு. நா. காசிராமன் :** இந்த மாதிரி அவசியத்தை முன்னிட்டு அரிசன நலப் பள்ளி ஆசிரியர்கள் மாற்றப்படும்போது, அவர்களுடைய குழந்தைகள் ஒரு பள்ளியிலிருந்து வேறு பள்ளிக்குப் போக வேண்டியிருப்பதால், அந்தப் பள்ளியில் அவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அப்படி மாற்றப்படும் ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கட்டாயமாக, டர்ம் டேஸ் பார்க்காமல், அனுமதி கொடுக்க உத்தரவு போடப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்பொழுதெல்லாம் பல வசதிகளும் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

*Nationalisation of cinema houses*

* 98 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state :

(*a*) whether there is any proposal pending before the Government to nationalise cinema houses in the State ; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின் :** சார், இம்மாநிலத்தில் திரைப்பட அரங்குகளில் நுழைவுக் கட்டணம், அதாவது டிக்கெட்டு, அதிகமாக இருப்பதால் ,சாதாரண ஏழை மக்கள் பல படங்களைப் பார்க்க முடியாமல் போய்விடுகிறது. இப்பொழுது சர்க்காரே ஏற்று நடத்தும் வாய்ப்பு இல்லாவிட்டாலும், இனிமேலாவது தமிழக சர்க்கார் அவர்களே திரைப்பட அரங்கை பரீட்சார்த்தமாகக் கட்டி. நடத்தி, குறைந்த, நியாயமான கட்டணம் வாங்கி எல்லோரும் சினிமா பார்க்கும்படிச் செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** முதலிலேயே சொன்னேன், இப்பொழுது அந்த எண்ணம் அரசுக்கு இருக்கவில்லையென்று.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவையைச் சேர்ந்த ஒருவர், 1967 ஜனவரியிலேயே, சென்னை எ லாபூரில் பேசுகின்றபோது, படியரிசித் திட்டத்தை நடத்த தமிழக சர்க்கார் சினிமாத் துறையை தேசியமாக்கலாம் என்று சொன்னார்கள். படி அரிசித் திட்டத்தை அமலாக்க, சினிமாவை அரசு தேசியமாக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அமைச்சர் அளித்த பதிலை கனம் உறுப்பினர் கவனித்து இருந்தால், இந்தத் துணைக் கேள்வி போட வேண்டிய அவசியம் இல்லை என்பதை உணர்ந்திருக்கலாம். அவர்கள் ' அந்த உத்தேசம் இப்பொழுது இல்லை ' என்று ( ான்னார்கள். (சிரிப்பு)

**திரு. கே. என். குமாரசாமி :** சினிமாத் துறையை அரசாங்கம் தேசியமாக்கவிட்டாலும், முனிசிபாலிடி, நகரசபை இவற்றின் வருமானத்தைப் பெருக்கும் அளவிற்கு, அவற்றின் கீழ் வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படிப்பட்ட திட்டமும் இப்பொழுது இல்லை.



*அவலூர்பேட்டைக்கு பத்திரப் பதிவாளர் அலுவலகம்*

* 99 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு சட்டக் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி வட்டம், மேல்மலையனூர் தொகுதியில் உள்ள அவலூர்பேட்டையில் ஒரு பத்திரப் பதிவாளர் அலுவலகம் திறக்க உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, செஞ்சி வட்டம், என் தொகுதியில், அவலூர்பேட்டை கிராமத்தில் இருந்து பத்திரப் பதிவு அலுவலகம் 10 மைல் தூரத்தில் இருப்பதால், மழைக் காலங்களில், நான்கு மாத காலம் மக்கள் அவதிப்படுகிறார்கள் என்கிறதனால், அங்கேயே ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பத்து மைலுக்குள் இன்னொரு அலுவலகம் திறப்பது லாபகரமாக இருக்குமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

**திரு. எஸ். முருகையன் :** அவலூர்பேட்டையில் திறக்காவிட்டாலும், பக்கத்தில் இருக்கும் மங்கலம் என்ற இடத்தில் இருக்கும் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு இந்தக் கிராமப் பதிவுகளை மாற்றுவதற்கு அரசாங்கம் உத்தரவு இடுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியாக எழுதியனுப்பினால் பரிசீலிக்கலாம்.

*சிறையிலுள்ள கைதிகள்*

* 100 வினா—திரு. செஞ்சி வெ. முனுசாமி : மாண்புமிகு சட்டக் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சப்-ஜெயில்களில் தண்டனை பெற்ற கைதிகளையும், ரிமாண்ட் செய்யப்படுகின்ற கைதிகளையும் பிரித்து தனித்தனியே வைக்க வகை செய்யும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது குறித்து திட்டவட்டமான விதிகள் முன்பே இருப்பதால் இத் திட்டத்தைப் புதிதாகப் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. செஞ்சி. வெ. முனுசாமி :** சப்-ஜெயிலிலே ரிமாண்டிலே வைக்கப்படும் கைதிகளும், தண்டனை அடைந்த கைதிகளும் ஒன்றாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால், பல இடையூறுகள் ஏற்படுவதால், அவர்களைப் பிரித்து வைக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தண்டனை அடைந்தவர்கள், பிடிக்கப்பட்டவர்கள் இரண்டு பேர்களையும் சிறைச்சாலையில் ஒன்றாக வைக்கக் கூடாது என்று இப்பொழுதே இருக்கிறது. இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் சப்-ஜெயிலில் ஏராளமாகக் கைதிகள் வந்துவிடும்போது, அவர்களை உடனடியாகப் பிரித்து வைக்க முடியாவிட்டாலும்கூட, சில நாட்களிலேயே மத்திய சிறைக்கு மாற்றப்பட்டு விடுகிறார்கள். இந்த முறைதான் பின் பற்றப்பட்டு வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இப்பொழுது குற்றத்திற்காகப் பிடிக்கப்படுகிறவர்கள், ரிமாண்ட் காலத்தில், சிறைச்சாலையில் வைக்கப்படும் முன்பாக, குற்றவாளிகளாக ஒப்புக்கொள்ளக்கூடிய நிலை இருந்தாலும், சிறைக்குச் சென்ற பிறகு, மற்ற தண்டனை பெற்ற கைதிகளோடு இருக்கும்போது, அவர்கள் தப்பிக்க சட்ட நுணுக்கங்களையும், இப்படி இப்படி பதில்கள் சொல்ல வேண்டும் என்றும் சொல்லிக் கொடுப்பதால் குற்றத்திலிருந்து மீளும் வழியைக் காண முயற்சிக்கிறார்கள். ஆகவே, ரிமாண்ட் பிரிசினர்களையும், தண்டனை அடைந்த கைதிகளையும் பிரித்து வைக்கும் முறையைக் கையாள்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முதல் கேள்வியிலேயே அவர்கள் பிரித்துத்தான் வைக்கப்படுகிறார்கள் என்று சொன்னேன். துணைச் சிறைச்சாலைகளில் அதிகமாகக் கைதிகள் வருகிற காரணத்தால், சில சமயங்களில் இரண்டு பேர்களையும், ரிமாண்ட் பிரிசினர்ஸ் அண்டு கன்விக்டட் பிரிசினர்ஸ், இரண்டு பேர்களையும் ஒன்றாக வைக்கக்கூடிய நிலை வருகிறது. அதுவும் சில நாட்களுக்குத்தான். அதிகமாகக் கைதிகள் இருந்தால், சிறை அதிகாரி மத்திய சிறைக்கு அனுப்ப ஏற்பாடு செய்கிறார்கள். கன்விக்டட் பிரிசினர்கள் யோசனை சொல்கிறார்கள், ரிமாண்ட் பிரிசினர்கள் ஒப்புக்கொள்ளக் கூடியவர்கள் என்கிற இரண்டு கருத்துமே தவறானவை. ரிமாண்ட் பிரிசினர்கள் என்பவர்கள் குற்றம் சாட்டப் பட்டவர்கள்தான். குற்றவாளிகள் அல்ல. வழக்கறிஞர்களுடைய யோசனையில் வாதாடுகிறார்கள். கன்விக்டட் பிரிசினர்கள் யோசனை சொல்வார்கள் என்று கனம் வழக்கறிஞர் உறுப்பினர் சொல்வதை வழக்கறிஞர் என்ற முறையில் நான் ஏற்றுக் கொள்ள முடியாது.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, சப்-ஜெயிலிலே ரிமாண்டில் இருப்பவர்கள் குற்றம் நிருபணம் ஆகும் வரையில் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சில வசதிகள், கொடுக்க வேண்டியது நியாயமானது. அப்படிப் பட்ட வசதிகள் தண்டனை அடைந்தவர்களுக்குக் கிடையாது. பல சந்தர்ப்பங்களிலே சப்-ஜெயிலிலே ஆடுமாடுகள் போல் அவர்களை நடத்துகிறார்கள். அம்மாதிரியான நிலையை மாற்றி, ரிமாண்டில் இருப்பவர்களுக்கு அதிகமான வசதிகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது நல்ல கருத்துத்தான். இப்பொழுது அம்மாதிரிதான் செயல்பட்டு வருகிறது. ரிமாண்ட் கைதிகள் அவர்களுடைய சொந்த உடையிலே இருக்கலாம். எந்த விதமான வேலையும் செய்யாமல் சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தற்பொழுது கேள்விக்குரிய நேரம் முடிந்துவிட்டது என்றாலும், பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரத்தை சில வினாடிகள் நீட்டித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Whereas segregation of prisoners, the convicted prisoners and remanded prisoners is possible only if there are two or three rooms inside the sub-jail, is the Hon. Minister aware of the fact that in most places the sub-jails have just one-room and there are no compartments to segregate them? In spite of the standing orders prevailing, there is no human possibility of segregating them. Will the Government take steps to construct sub-jails with many compartments?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நானே பல சிறைச்சாலைகளைப் பார்த்திருக்கிறேன். பல அறைகள் இருப்பதைப் பார்த்திருக்கிறேன். தனித்தனியான அறைகள் இருப்பதையும் பார்த்திருக்கிறேன். நான் பலமுறை திடீர் சோதனைகளின்போது பார்த்தபோதுகூட தண்டனையடைந்த கைதிகளும், ரிமாண்ட் கைதிகளும் ஒன்றாக வைக்கப்படவில்லை யென்பதைக் கண்டேன். புதிய சப்-ஜெயில்களை ஆரம்பிக்கும்போதும் தனித் தனியான அறைகள் கட்டுவதுபற்றி இந்த அரசு உத்தேசிக்கும்.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலுள்ள பெரும்பாலான சப்-ஜெயில்களில் சிறுநீர், மலம் கழிப்பதற்கான வசதி இல்லை. கைதிகள் சட்டியைத் தூக்கிக்கொண்டு போகக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, உடனடியாக இந்த நிலைமையை மாற்றி ஃபிளஷ்-அவுட் கக்கூஸ் ஒவ்வொரு சப்-ஜெயிலிலும் அமைக்க இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தப் பெரும் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சித் தலைவர் சர்தார் வல்லபாய் படேல் கூறிய கருத்தை நினைவுறுத்தி, நான் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தபோது அரசுக்கு எடுத்துக் கூறியிருக்கிறேன். இன்றைக்கு அரசாங்கம் இதை ஏற்றுக் கொண்டு, ஒவ்வொரு சப்-ஜெயிலிலும் ஃபிளஸ்-அவுட் கக்கூஸ் அமைப்பதற்கான திட்டத்தை தயாரித்து அதற்கான ஆணைகள் பிறப்பித்திருக்கிறது.

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, விசாரணைக் கைதிகளையும், தண்டனையடைந்த கைதிகளையும் பலமணி நேரம் சப் ஜெயிலுக்குள் ஒன்றாக அடைத்து வைக்கிறார்கள். விசாரணைக் கைதிகளையாவது வசதியுள்ள இடங்களில் பிரித்து வைத்து, பகல்

நேரங்களில் வெளியில் வைத்து, இரவு நேரங்களில் மட்டும் அடைத்து வைக்கும் ஏற்பாடு செய்யப்படுமா? அதற்கான உத்தரவு போடப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மத்திய சிறையில்தான் இம்மாதிரி செய்யப்படும். இப்போது அங்குதான் இம்மாதிரி வசதி இருக்கின்றது.

*Police Force*

* 81 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the services of the Police forces from Mysore and Andhra and also of the Central Reserve Police fom Kerala were requisitioned towards the end of March 1968 to maintain law and order in Madras City ;

(*b*) whether several platoons of Special Armed Police were also requisitioned from the districts to reinforce the Police in the city ; and

(*c*) whether there was any retrenchment in the Special Armed Police prior to the disturbances that have taken place at Madras in the second half of March 1968?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) இல்லை.

(திரு. காசிராமன் எழுந்தார்.)

**திரு. சா. மெய்யப்பன்:** தலைவர் அவர்களே, நான் நேற்று எழுப்பிய பிரச்சினைமீது தங்கள் தீர்ப்பு என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரம் முடிந்ததும் என் தீர்ப்பைச் சொல்லுகிறேன்.

**திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்களே, போலீஸ் இலாக்காவிலே அதிகப்படியான அதிகாரிகளும், போலீஸ்காரர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாகத்தான் வெளி மாநிலங்களிலிருந்து காவல் படையை வரவழைக்கும் அவசியம் ஏற்பட்டது என்று பரவலாகப் பேசப்பட்டு வருவது உண்மையா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, அது பரவலாகப் பேசப்பட்டாலும் உண்மை அல்ல.

**திரு. ந. வீராசாமி :** தலைவர் அவர்களே, சென்னை நகரில், 1968 மார்ச் பிற்பகுதியில், சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நிறுத்த இந்த அரசு தவறிவிட்டதைப் போலவும், மாநில ஆளுநர் அவர்கள் தான் மக்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தார் என்றும் பிரசாரம் செய்கிறார்களே, இது உண்மையா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது, இந்திய அரசியலமைப்புச் சட்ட நுணுக்கங்களை அறியாதவர்களுடைய பிரசாரமாக இருக்கலாம். மாநில ஆளுநர் அவர்களுக்கு, சட்டம் ஒழுங்கைக் காப்பதற்கான எந்தவிதமான பொறுப்பும் இல்லை. மாநிலத்தின் சட்டம் ஒழுங்கைக் காப்பதற்காக வெளியிலிருந்து காவல் படையை வரவழைக்கும் எந்தவிதமான உரிமையும் ஆளுநர் அவர்களுக்குக் கிடையாது.



**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு இவற்றைக் காப்பதற்காக மைசூர், ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்து காவல்படை வரவழைக்கப்பட்டதா? அப்படி யென்றால், நமது மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கேடு அடைந்துவிட்டது என்பதை இந்த அரசு ஒப்புக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எந்த மாநிலத்திலாவது கிளர்ச்சிகள் ஏற்பட்டு அதைக் கட்டுப்படுத்த தேவையான போலீஸ் படையை மற்ற மாநிலங்களிலிருந்து வரவழைத்துக் கொள்ளலாம் என்பது ஸோனல் கவுன்சிலில் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாகும். மற்ற மாநிலங்களுக்குத் தேவையான போலீஸ் படையை நம்மைக் கேட்டாலும் நாம் தர முடியும், தந்தும் இருக்கிறோம்.

THIRU K. VINAYAKAM : Whereas at the request of the State Government, Central Reserve Police were made to be present in Coimbatore, is the Hon. Minister aware of the fact that members of his party have been going about saying in platforms that the Central Government has been unkind to us and they have sent already their armymen with a suspicious view of watching the proceedings of the State Government ? Will the Hon. Chief Minister pull up his men and deprecate that kind of attitude ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Even some of my partymen are sometimes misinformed.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, நமது ராஜ்யத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்காக வேண்டி, இதர ராஜ்யங்களிலிருந்து காவல்படை பெறப்பட்டதைப்போல, மற்ற ராஜ்யங்களுக்கு இந்த மாநிலத்திலிருந்து காவல் படை கடந்த 1½ வருட காலத்திற்குள் எத்தனை முறை அனுப்பப்பட்டுள்ளது? எத்தனை பேர் அனுப்பப்பட்டுள்ளனர்?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதுபற்றிய விவரம் தற்போது இல்லை. தனியாகக் கேட்டால் விவரம் தரப்படும்.

**திரு. டி. மார்டின் :** வேறு மாநிலங்களிலுள்ள காவல்படை, இந்த மாநிலத்தின் அழைப்பை ஏற்று வருகிறது, அவர்களுடைய செலவுகள் யாரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, அதற்கெல்லாம் சில விதிமுறைகள் இருக்கின்றன. அதன்படி செலவுகள் பங்கிட்டுக்கொள்ளப்படுகின்றன.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Chief Minister whether there is any proposal to increase the strength of Police Force?

THE HON. THIRU C. N. ANNADURAI : Not at present Sir.

* 82 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the decisions arrived at the conference of the Inspectors-General of Police on the 9th May 1968 about mutual Police assistance?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* மாநிலத்திற்கு மாநிலம் காவற்படை உதவி அளித்து கொள்வதுபற்றி கீழ்க் கண்டவாறு முடிவு செய்யப்பட்டது. "ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் கூடுதலான காவற்படை வேண்டும் என்று எந்த அதிகாரியைக் கேட்கின்றனவோ அந்த அதிகாரி அம்மாநிலங் களுக்குக் காவற்படை அனுப்புவது குறித்த முறைவைப்பை (Priority) முடிவு செய்ய வேண்டிய நிலை ஏற்படக் கூடாது. சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கிடையில் ஆலோசனை நடத்தி காவற்படையை அனுப்புவது குறித்து முடிவு செய்யலாம். மேலும், ஒவ்வொரு மாநிலமும் எந்தச் சிக்கலைச் சமாளிப்பதற்கென மண்டலக் காவற்படையை அனுப்ப வேண்டும் என்று கேட்கிறதோ அந்தச் சிக்கலின் தன்மையைப் பொறுத்துச் சாதாரணமாக அந்தந்த மாநிலத்திற்குக் காவற்படை அனுப்பப் படும்". இரண்டு அணிகள் மட்டுமின்றி, இயன்றால் இன்னும் அதிக அணிகள், அனுப்பப்படலாம் என்றும் முடிவு செய்யப் பட்டது. எந்த ஒரு நிலைமையையும் சமாளிப்பதற்கென காவல் துறைத் தலைவர் அதிக அளவிற்குக் காவற்படையை அனுப்ப வேண்டும் என்று காவல் துறைத் தலைவர்கள் ஒருமித்த கருத்து தெரிவித்தனர்.

* 83 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether the attention of the Government has been drawn to the recent judgment of the Madras High Court on the reinstatement of an Indian Police Service Officer?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* ஆம்.

*திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :* தலைவர் அவர்களே, ஹைகோர்ட் ஜட்ஜ்மென்டினுடைய முடிவை கணக்கிலெடுத்துக் கொண்டு, அதை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா ?

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* உயர்நீதிமன்றத்தி னுடைய தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்துகொள்ளப் பட்டிருக்கிறது. தீர்ப்பை அமல்படுத்தும் கட்டம் வரவில்லை.

THIRU K. VINAYAKAM : May I know why the word 'Judgment' is wrongly spelt here ?

THE HON. THIRU C. N. ANNADURAI : That is because the typist I think was in a hurry.





## சென்னையிலுள்ள உணவகங்கள்

* 93 வினா.—*திரு. எஸ். இராமச்சந்திரன் :* மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திங்கட்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்களில் உணவு விடுதிகள் மூடப்பட வேண்டுமென்ற உத்தரவை நீக்க வேண்டுமென்று சென்னை நகர மக்களிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* (அ) திங்கட்கிழமை களிலும் வியாழக்கிழமைகளிலும், சிற்றுண்டிச் சாலைகளும் உணவகங்களும் மூடப்பட வேண்டுமென்று எவ்வித ஆணைகளும் பிறப்பிக்கப் படவில்லை. எனினும், திங்கட்கிழமையிலும், வியாழக்கிழமையிலும் அவ்வுணவகங்களில் மாலை நேரங்களில் அரிசி போன்ற உணவுப் பண்டங்களைப் பரிமாறுவதற்குக் கட்டுப் பாடுகள் இருந்தன. இந்தக் கட்டுப்பாடுகளை நீக்கும்படி வேண்டி முறையீடுகள் பெறப்பட்டன.

(இ) 13—4—1967 முதல் இந்தக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

*திரு. எஸ். இராமச்சந்திரன் :* தலைவர் அவர்களே, இந்தக் கட்டுப்பாடுகளை நீக்குவது குறித்து இந்தியப் பேரரசிடமிருந்து ஏதேனும் மறுப்பு வந்ததா ?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்* நாட்டிலே இருக்கின்ற உணவுநிலைமை, நெருக்கடி காரணமாக, பஞ்சம், பற்றாக்குறை பிரதேசங்களுக்கு உணவுத் தானியங்களை அனுப்பும் முயற்சியாகத் தான் இந்த ஆணையை மத்திய அரசு பிறப்பித்தது. இந்த ஆணையைத் தளர்த்துவதுபற்றி உத்தேசமில்லையென்று மத்திய அரசு கூறியது. இது நமது மாநிலத்திற்கு அவசியமில்லாததால், இந்த ஆணையைத் தளர்த்திவிடுகிறோம் என்று மத்திய அரசுக்குத் தெரிவித்துவிட்டோம்.

*திரு. நா. காசிராமன் :* இதுபோலவே மற்ற எந்த எந்த மாநிலங்களில் இந்த உத்தரவைத் தளர்த்தியிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* அதுபற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

*திரு. எம். சுரேந்திரன் :* இந்தக் கட்டுப்பாட்டின் காரணமாக உணவு தானியம் எவ்வளவு சேமிக்க முடிந்தது என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* கேள்வி பொதுத் தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. விவரம் இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன்** : அதுபோல விருந்துகளில் 25 பேர்களுக்கு மேல் உணவு அளிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இருக்கிறதே, அது நீக்கப்பட்டுவிட்டதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : கலியாணம் என்ருல் 50 பேர்களுக்குச் சாப்பாடு போடலாம், துக்க காரியங்களில் 25 பேர்களுக்குச் சாப்பாடு போடலாம் என்கிற உத்தரவு முந்திய சர்க்காரினுல் போடப்பட்டது. கலியாண விருந்துகளில் 100 பேர்களுக்குச் சாப்பாடு போடலாம், துக்க காரியங்களில் 50 பேர்கள் வரையில் போடலாம் என்பதாக இப்போது இந்த அரசினுல் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Whereas under the instructions of the Central Government hotels and restaurants in the Madras City were ordered to be closed on Mondays and Thursdays, does the Minister feel that consequent on this closure there would have been any appreciable saving of foodgrains?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Only to impress on the minds of the people that we have to conserve some foodgrains for the scarcity areas, it was done. It was done only as a gesture.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது** : பேரவைத் தலைவர் அவர்களே, மணவிழாக்களில் எதிர்பாராத வகையில் அதிகமான விருந்தாளிகள் வந்துவிடுகிற காரணத்தினுல் அவர்களுக்கு எல்லாம் உணவு அளிக்க வேண்டிய கடமை இருக்கிறது. அப்படி உணவு அளிப்பது தமிழர்களுடைய பண்பாடாகவும் இருப்பதனுல் இந்த அரசு அந்தக் கட்டுப்பாடு உத்தரவை ரத்து செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : உத்தரவை ரத்து செய்வது பற்றி யோசிக்கக் கூடாது. நமக்கு உணவுப் பொருள் கிடைக்க வேண்டும் என்பதோடு மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும். பரந்த இந்த நாட்டில் எந்த ஒரு மூலைப் பகுதியிலும் பஞ்சம், பட்டினி இருக்கக் கூடாது, என்கிற மனிதாபிமான உணர்ச்சியுடன் இந்த விதிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டியிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி** : சர்க்கார் கட்டுப்பாடு இருக்கிறதே தவிர ஒவ்வொரு விருந்திலும் பல நூறு பேர்கள் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிருர்கள். ஆகவே, இத்தகைய ஒரு உத்தரவு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இதைப்பற்றி அரசு மீண்டும் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : உத்தரவு இருந்தாலும் மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதில்லை. இருந்தாலும் ஒரு மனிதாபிமான உணர்ச்சியோடு இந்தச் சட்ட திட்டங்களை நாமும் ஏற்று இந்தியாவின் உணவு இயக்கத்தில் நாமும் பங்கு கொள்ள வேண்டியிருக்கிறது.



**திரு. என். துரைபாண்டியன்** : பட்டிணத்திற்குப் படி அரிசி ரேஷன் கொடுக்கிருர்கள். சில கிராமங்களுக்கு அரிசி கொடுப்பதே இல்லை. அப்படி இருக்க அந்தக் கிராமவாசிகள் இந்த நூறு பேர் கட்டுதிட்டத்திற்கு உட்பட வேண்டுமென்று சொல்வது நீதிதானு?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : இந்தச் சட்டதிட்டங்கள் ரேஷன், குடும்பக் கார்டு அமுலில் உள்ள பகுதிகளுக்குத்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Price of second sort rice*

* 94 .*Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether the Hon. Minister is aware of the fact that the subsidised second sort of rice is sold for Rs. 1.07 and not at Re. 1.00 per Madras measure?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : தாங்கள் சொல்லுவது உண்மைக்கு முற்றிலும் முரணனது, முறையற்றது (சிரிப்பு). பேரவைத் தலைவரைச் சொல்லவில்லை. கனம் உறுப்பினர் கேட்ட கேள்விக்குச் சொல்கிறேன்.

The question is whether the Hon. Minister is aware that second sort rice is sold for Rs. 1.07. I say it is not a fact and it is most incorrect.

இத் திட்டத்தின்கீழ் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் ஒரு கிலோ அரிசி 66 பைசாவுக்குத்தான் விற்கப்படுகிறது. இதன்படி ஒரு படி (1.52 கிலோ) அரிசியின் விலை ஒரு ரூபாய்தான்.

THIRU K. VINAYAKAM : Whereas it has been the considered policy of the Government to dole out one measure of rice for one rupee, has the Minister taken steps practically to find out how much rice in terms of kilograms is necessary to make up one measure? Has he worked it out or does he depend upon the official report? I have actually purchased rice, transferred it to the Madras measure and calculated the price. It comes to Rs. 1.07. Will the Minister practically see it and then come before this House?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The hon. Member is under a misapprehension. He would have measured it in the Madras measure. The Madras measure which we are using in our villages is a dry capacity measure which is no longer legal after the introduction of the metric system. What the Member says is the heaped measure. What we now have is the metric system in which we do not heap the grains in a conical fashion. We have taken all the necessary steps to calculate the price. The Director of Statistics has computed on the basis of the figures obtained through the Agricultural Economics Research Centre, University of Madras, that 1.52 kgs. of rice on an average will be equivalent to 1 Madras measure (1520 grams). The Government are supplying only medium and coarse varieties of rice at

subsidised rates. So the figures furnished by the Director of Statistics have been adopted by the Commissioner of Civil Supplies for calculating the price of rice per kg. at one rupee a measure—i.e., at 66 paise per kg. The calculation based on 1.52 kg. per Madras measure actually works out to 65.8 paise per kg. at one rupee a measure. This has been rounded off to 66 paise. Some people seem to carry on the propaganda that rice is being sold at Rs. 1.07 per Madras measure. This is most incorrect.

THE HON. THIRU C. N. ANNADURAI: The hon. Member said that he purchased and actually measured the rice and came to this conclusion and that the Food Minister also should actually measure. I can only rely upon what the hon. Member said. I should know the method of his measuring and the actual measure that he used and whether he has used the correct measure, because there are measures and measures and there are different methods of measuring. If the Member experiments along with me, then I can come back to the House and say whether what the hon. Member says is correct or not.

**திரு. நா. காசிராமன் :** இப்போது அரிசியை அளக்கக் கூடாது, நிறுத்துத்தான் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். நிறுவைப்படி கிலோ கிராம் அரிசி 66 பைசாவீதம் கொடுக்கப் படுவதாகச் சொன்னார்கள். கொள்முதல் விலை கிலோ கிராமுக்கு என்ன ஆகிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்

**திரு. வ. ஜார்ஜ் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒரு படி அரிசி 1 ரூபாய்க்கு வரும்படியாகத்தான் கிலோ கிராம் விலை நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் ரேஷன் கடைகளில் ஒரு கிலோ கிராம் என்பதே 50 கிராம், 100 கிராம் குறைவாகத்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே வாங்குபவர்களுக்கு படி 1 ரூபாய் 5 காசுக்கு மேலாகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எந்த ஊரில், எந்தக் கடைக்காரர் இப்படி அளவைக் குறைத்துக் கொடுக்கிறார் என்று சொல்ல வேண்டும். சட்டப் பேரவை மரபுப்படி இப்படி பொதுப் படையாகக் குற்றஞ்சாட்டுவது பயனுள்ளதாக ஆகாது.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** ஒரு படிக்கு ஒரு கிலோ கிராம், 600 கிராம் என்பதுதான் சரியாக இருக்கும். இந்த சங்கடத்தைப் போக்க இனியாகிலும் ஒரு ரூபாய்க்கு ஒரு படி என படியினாலேயே அளந்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் ஆரம்பத்திலேயே சொன்னேன்; மெட்ரிக் சிஸ்டம் வந்த பிற்பாடு அளந்து கொடுப்பதே சட்ட விரோதமானதாகும்.



**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, முதல் ரக அரிசியை ஹோல்சேல் டீலர்கள் ரீடெயில் டீலர்களுக்குக் கொடுக்கும் பொழுது மூன்றாம் ரக அரிசியாகத்தான் அனுப்புகிறார்கள். இது சாதாரணமாகப் பல இடங்களில் நடைபெறக் கூடிய தவறாக இருக்கிறது. இதைக் கண்காணிக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுவும் ஆதாரமற்ற ஒரு புகார் ஆகும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது எந்த இடத்திலே எப்பொழுது குறைவாகப் போடப்பட்டது என்றெல்லாம் கேட்டார்கள். அதே மாதிரிக் குறைவாகத் தவறான முறையில் போட்டால், கலப்படம் செய்தால் எடுக்கப் படுகிற நடவடிக்கைகளைப்போல் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுமாதிரி கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு ரேஷன் கடைக்காரர்களுக்கு அனுமதி ரத்து செய்யப்பட்டிருக்கிறது, சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் டி.ஆர்.ஓ. தான் நடவடிக்கை எடுக்கிறார்கள், அதற்குப் பிறகு அப்பீல் செய்கிறார்கள். அது சிவில் சப்ளைஸ் கமிஷனர் வரையிலேகூட நடைபெறுகிறது.

DR. H. V. HANDE: Sir, is the Hon. Minister aware of the fact that this entire controversy has arisen because of our putting the ideology of one-rupee-a-measure-of-rice before the public. As far as the Civil Supplies Department is concerned, they calculate it in terms of kilos but one measure is in terms of volume. So, the Ministry must calculate it in litres or accept the metric system. Also a litre is less than a kilo. So, will this Government come forward to state that $1\frac{1}{2}$ kilos is equal to one measure so that this controversy can be set at rest?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: This is a very dangerous suggestion which is neither arithmetical nor fair.

**திரு. கே. விநாயகம் :** சார், இப்பொழுது படி என்றால் ஒரு மெஷர், லிட்டர் என்றால் எடை போடுவது (சிரிப்பு) ஐ எம் சாரி, கிலோ என்றால் எடை போடுவது. நாங்கள் ஒரு படிக்கு ஒரு ரூபாய்தான் வாங்குவோம் என்று ஒரு பிரசாரத்தின் மூலம் மக்களிடையே அந்த எண்ணத்தைப் பரப்பியதன் காரணமாக அது இப்பொழுது அமலில் இருக்கக்கூடிய முறைக்குப் பொருந்தவில்லை. ஒரு படி அரிசி என்று சொல்லப்படுவதில் தலையை வெட்டி விட்டால் உங்கள் கணக்குச் சரி. தலையை வெட்டாமலே விட்டால் எங்கள் கணக்குச் சரி; தலையை வெட்டிப் போடுவது தான் உங்கள் சர்க்காருடைய கொள்கையா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலையை வெட்டுகிற கொள்கையை டெல்லியிலே உள்ள உங்களுடைய சர்க்கார்தான் போட்டார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன மாதிரி இரண்டு மூன்று முறைகள் இருக்கலாம். எங்கள் பக்கத்திலே எல்லாம், கோயம்புத்தூரிலே பட்டணம் படியில் போட்டால் இரண்டு படி என்று சொல்லுகிறார்கள். அதைப்போல் லிட்டர் என்பது ஒரு முறையாக இருக்கிறது. இப்பொழுது மெட்ரிக் முறை அதாவது வே பண்ணுகிற முறைதான் இருக்கிறது. அனுபவத்திலே பட்டணம் படி என்ற முறை இருக்கிறதே தவிர, சிவில் சப்ளைஸ் முறையைப் பொறுத்தவரையில் குழப்பம் இருப்பதாகக் கருதத் தேவையில்லை அங்கே கணக்குகள், வரவு-செலவுக் கணக்குகள் எல்லாமே 'கிலோ கணக்கிலேயும், குவிண்டால் கணக்கிலேயும்தான் வைக்கப்படுகின்றன. ஆகவே அவர்கள் சொன்ன யோசனைகளை ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏற்கனவே நல்ல முறையில்தான் அவை யெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

DR. H. V. HANDE : Sir, on a point of personal explanation. I do not accuse the Civil Supplies Department and let us stick to the verdict of the Civil Supplies Department and put it before the public. Why should we use the term 'measure' and why not we stick to the metric system so that there is no confusion ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Though the system of kilometres is introduced, we still say in terms of miles and so, that will take a long time.

*திரு. மு. ச. சிவசாமி :* தலைவர் அவர்களே, நெல்லை, மதுரை, மாவட்டங்களிலே குடும்பக் கார்டு நிர்ணய விலைக்கும் குறைவாக அரிசி கிடைக்கக்கூடிய நிலைமை இருப்பதால் குடும்பக் கார்டு முறையை ரத்து செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற ஒரு அம்சத்தை நான் வரவேற்கிறேன். அதை தான் இந்த மாமன்றத்தில் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். பல ஊர்களில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக விற்கிறது. அதனால் எல்லா இடங்களிலும் அந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்வதற்குக்கூட அவசியமில்லை என்பதற்கு ஒரு உதாரணமாகும் இது. சென்னை, கோயம்புத்தூர் பகுதிகளிலே மட்டும்தான் ஒரு ரூபாய்க்குக் கிடைக்கிறது என்ற தவறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே மற்றப் பகுதிகளிலே இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 1 கோடியே 25 லட்சம் மக்களுக்கு, குடும்பக் கார்டு முறை இருக்கிற இடங்களிலே தூத்துக்குடி நகரத்திலே, மதுரையிலே, கரூரிலே, தஞ்சாவூரிலே என்ன விலை விற்கிறது என்றால் பட்டணம் படி ஒன்றுக்கு ரூ. 1.17 என்ற அளவிலேதான் விற்கிறது. இங்கே ஒரு ரூபாய்க்குக் கிடைக்கிற அரிசி அங்கே யெல்லாம் 1.17-க்கு கிடைக்கிறது. கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி போன்ற இடங்களில் ரூ. 1.22-க்கு கிடைக்கிறது. இந்த மூன்று நிலைகளிலேதான் விலை



இருக்கிறது. சென்னையிலும், கோயம்புத்தூரிலும் பட்டணம் படி 1 ரூபாய்க்கும் மற்ற இடங்களிலே, அதாவது நீலகிரி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி பகுதிகளைத் தவிர, 1.17 காசுகளுக்கும், அரிசி கிடைக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. இங்கே கொடுப்பதற்கும் அங்கே உள்ளதற்கும் உள்ள வித்தியாசம் 0.17 காசுகள்தான். இந்த வித்தியாசம்தான் இருக்கிறது. இதனால்தான் ரேஷனை எடுத்துவிட வேண்டுமென்று ஆர்வத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அதற்குரிய நேரம் வரவில்லை. அதற்காகத்தான் உணவு உற்பத்தியிலே மிகத் தீவிரமான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தலின்போது சென்னையிலே முதல் ரக அரிசி இரண்டாவது ரக அரிசிக்கு பதிலாக விற்கப்பட்டது உண்டா ? அதற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** விற்கப்பட்டு இருக்கலாம். இரண்டாவது ரக அரிசி இல்லாத வேளையில் விநியோகம் இல்லாமல் சீர்குலைந்து விடக் கூடாது என்பதால் அப்படிச் செய்திருக்கலாம். அது ஒன்றும் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தாது. மக்களுக்கு அரிசி கிடைக்கவில்லை யென்று நிலைமை ஏற்படக் கூடாது. அப்படிச் செய்தால் கனம் அங்கத்தினரேகூட எப்படிச் சொல்வார்கள் ? ஆகவே இரண்டாவது ரக அரிசி இல்லை யென்றால் முதல் ரக அரிசி கொடுப்பதாலே பெரிய நஷ்டம் ஏற்படுவதில்லை, கொடுக்கப்பட்டிருக்கலாம்.

*திரு. கே. என். குமாரசாமி :* கோவைப் பகுதியில் குடும்பக் கார்டு பகுதிகளில் ஸ்டாக் இல்லை யென்ற காரணத்தால் விநியோகம் நிறுத்தப்படுகிறது. அந்தப் பகுதி பஞ்சப் பகுதியாக இருப்பதால் உடனடியாக அந்தப் பகுதிக்கு அரிசி போட ஏற்பாடு செய்வார்களா ?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* கூடுமான வரையில் இவை யெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டுதான் செய்யப் படுகிறது. கோவையைப் பொறுத்த வரையில் 35 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள், அவர்களில் 25 லட்சம் பேர்களுக்கு மேல் இந்த முறையில் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊரிலே உள்ள நிலைமைபற்றி கவனத்திற்குக் கொண்டுவந்த பிறகு அங்கும் போடப்படுகிறது. எல்லா இடங்களிலுமே குடும்பக் கார்டு தத்துவம் இருப்பதில்லை. அந்த முறை இருப்பதற்குக் காரணம் வெளி மார்க்கெட்டிலே, கள்ளச் சந்தைக்காரர்களிடத்திலே போய் விலை அதிகமாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான். இவற்றிலே குறைகள் இருக்குமானால் அதுபற்றி கலெக்டர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அது பற்றி முடிவு செய்யலாம்.

[1968 ஆகஸ்ட் 22

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்** : தலைவர் அவர்களே, அரசாங்கத்தில் நிறுவை மூலமாக உணவுக் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்று உத்திரவிட்ட போதிலும் விவசாயிகளிடத்திலே ஏற்படுவதை அனுபவப்பூர்வமாகப் பார்க்கிறோம். நிறுவை மூலமாக அரசாங்கத்திலே இருக்கக்கூடிய ஸ்டாக்குகளுக்கும், விவசாயிகளுடைய ஸ்டாக்குகளுக்கும் பலவிதமான தகராறுகள் ஏற்படுவதை அனுபவப்பூர்வமாகப் பார்க்கிறோம். நிறுவை என்பது பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் அரசாங்கத்திற்கும் அமல் செய்யப்படுவதில்லை, என்பதை அரசாங்கம் நிறுவை மூலமாகக் கொள்முதல் செய்வதிலிருந்து அறியலாம். ஆகையால் அதையும் திருத்தி விட்டு, படி மூலமாக அளக்கக்கூடிய முறையை அமலுக்குக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. கோமதி சங்கர தீட்சிதர் அவர்கள் சொல்கிற நிலைமையை ஏற்றுக்கொள்ள முடியாது. அளவை எல்லாம் நிறுவையிலேதான் செய்யப்படுகிறது. விவசாயிகளிடத்திலே 50 கிலோகிராம், 80 கிலோகிராம் கொண்ட மூட்டைகளாகத்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. அளக்கிற நேரத்திலே அளந்திருக்கலாம், ஆனால் மொத்தத்திலே எடுக்கும்பொழுது எ பேக் ஆப் 57 கிலோ கிராம்ஸ் என்ற அளவிலேதான் செய்கிறோம். புதுமைகள் வருகிற நேரத்திலே சமுதாயத்திற்குச் சங்கடங்கள் ஏற்படுவது இயற்கைதான். முதலிலே 1 அணா 2 அணா என்று சொன்னோம், இப்பொழுது பைசாக்களாக மாற்றிவிட்டோம். திருச்சிராப்பள்ளிக்குத் தூரம் கிலோ மீட்டர்தான் சொல்ல வேண்டும், இருந்தாலும் மைல்கள் என்று சொல்கிறோம். எல்லாம் ஒருமுகமான அளவையில் இருக்க வேண்டும் என்ற வகையில்தான் இந்திய அரசு இந்த முறைகளை மேற்கொண்டது. அதுதான் பின்பற்றப்படுகிறது.

10-30 மு. ப. **திரு. கே. விநாயகம்** : தென் சென்னைப் பாராளுமன்றத் தேர்தல் காலத்தில் குறைந்த விலைக்கு உகந்த இரண்டாம் ரக அரிசி ஸ்டாக்கில் இருந்த போதிலும், உயர்ந்த ரகமும், உயர்ந்த விலையுமாகிய முதல் ரக அரிசியை வேண்டுமென்றே தென் சென்னையிலும், வட சென்னையிலும் போட்டு அதுவும் குறைந்த விலைக்குப் போட்டது—அதற்குத் தகுந்த விலைக்குப் போட்டிருந்தால் தகராறு இல்லை—மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்குவதற்காகத் தான் என்று பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள் என்பது நமது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : கனம் உறுப்பினர் அவர்கள் இங்கு பேசியதைப் பொதுமக்கள் சரியாகக் கவனிப்பார்களானால் தேர்தலுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்பதை உணர்ந்து கொள்வார்கள். அவர்கள், தென் சென்னையிலும் வட சென்னையிலும் அவ்வாறு முதல் ரக அரிசி போட்டதாகச் சொன்னார்கள். தேர்தலுக்காகப் போட்டதாக இருந்தால் தென் சென்னையில் மட்டும்தான் போட்டிருக்க வேண்டும். இரண்டு



1968 ஆகஸ்ட் 22]

இடங்களிலும் போட்டிருக்கிறது என்று கனம் உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கும் பேச்சில் இருந்தே தேர்தலுக்காகப் போடவில்லை என்பதைப் பொதுமக்கள் உணர்ந்து கொள்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : திரு. விநாயகம் அவர்கள் 83-வது கேள்வியில் உள்ள 'ஜட்ஜ்மென்ட்' என்ற சொல் பிழையானதாக இருக்கிறது என்ற பிரச்சினையை எழுப்பினார்கள். ஆக்ஸ்போர்டு டிக்ஷனரி பிரகாரம் அந்தச் சொல்லிலே எழுத்துப் பிழை இல்லை. ஆகவே, அவ்வாறு எழுதுவதும் ஒரு முறை என்ற வகையில் அவ்வாறு எழுதலாம். இரு வகையாகவும் எழுதலாம்.

THIRU K. VINAYAKAM : Englishman speaks English in one way and American speaks English in another way. The correct spelling is " Judgment ".

## 2. நடைமுறைக் கேள்வி.

### ஒத்திவைக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளித்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நேற்று திரு. மெய்யப்பன் அவர்கள் கேள்விகளை வரிசைப்படுத்துவதைப் பற்றி ஒரு ஒழுங்கு முறையை எழுப்பினார்கள். அதற்கு நான் இன்று பதில் அளிக்கிறேன் என்று சொன்னேன்.

நம்முடைய பேரவை விதிகளில் 35-வது விதியில்—

Starred questions endered in the list of questions for a day shall be called, if the time made available for questions permits, in the order in which they stand in the list.

என்று இருக்கிறது.

இருந்தாலும் 37-வது விதியில்—

Subject to the rules, questions shall be put and answers given in such manner as the Speaker may, in his discretion, determine.

என்று இருக்கிறது.

அடுத்து விதி 35, பிரிவு (5)-ல்—

The Speaker may, t rhe request of the concerned Minister postpone one or more questiona entered in the list of questions for a day to a subsequent date.

என்று கூறப்பட்டிருக்கிறது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1968 ஆகஸ்ட் 22

மறு நாளைக்கு ஒத்தி வைக்கலாம் என்றும், வேறு நேரத்திற்கு ஒத்தி வைக்கலாம் என்றும் இருக்கிறது. இதனால் உறுப்பினருக்கு சந்தர்ப்பம் கிடைக்குமா என்ற எண்ணம் எழலாம். அதற்காக உள் விதி 3-ல்—

'When all the questions for which an oral answer is desired have been called the Speaker may, if time permits, call again any question which has not been asked by reason of the absence of the member in whos nam eit stands, and may permit the member, if present, to ask the question'.

என்று கூறப்பட்டிருக்கிறது.

அந்த உறுப்பினர் வராது போவதால் வாய்ப்பு இல்லாது போய்விடும் என்ற நிலையை ஒட்டி, பிறகு ஒரு முறை அந்தக் கேள்வியைக் கேட்டு, வாய்ப்பளிக்க இடம் இருக்கிறது. ஆகவே, இந்த முறையை அனுசரிப்பதிலே தவறோ, எந்த விதமான முறை கேடோ இல்லை.

**திரு. சா. மெய்யப்பன்** : தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: ஒரு ஒழுங்குப் பிரச்சினை மீது சபாநாயகர் தீர்ப்பளித்த பிறகு தீர்ப்புக்கு எதிராகப் பேசுவது மன்றத்தின் மரபாகாது. இந்தத் தீர்ப்பிலே உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எந்த விதமான முறைகேடும் இல்லை.

DR H. V. HANDE : Sir, will it not be in order if this House stands up in silence for a minute expressing our grief at the rape of democracy in Czechoslovakia wherein Warsaw Pact countries' troops ... ... ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : கனம் உறுப்பினர் அவர்கள் இந்த மன்றத்திலே எதைப் பற்றிப் பேசவேண்டுமென்று சொன்னாலும் தலைவருடைய அனுமதியை முதலில் பெற்றுக் கொண்டுதான் பேசவேண்டும். தலைவர் அனுமதியைப் பெறாமல் தாங்களாகவே எழுந்து பேசுவது சபையின் விதிமுறைகளுக்கு உகந்ததல்ல. ஆகவே, தங்களுக்கு அனுமதி மறுக்கிறேன்.

DR. H. V. HANDE : I have taken permission of the House. I am raising a point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : தீர்ப்பளித்த பிறகு தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.

DR. H. V.HANDE : I am raising a point of order . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. இதைப் பற்றி மூன்று ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டு இவை இந்த மன்றத்தின் விதி முறைகளுக்கு ஒத்து வராத காரணத்தால் என்னுடைய அறையிலேயே மறுத்திருக்கிறேன். அதைப் பற்றி இந்த மன்றத்தில் எழுப்புவது



1968 ஆகஸ்ட் 22] [பேரவைத் துணைத் தலைவர்]

என்றால் சபாநாயகர் அனுமதி பெற்றுத்தான் எழுப்ப வேண்டும். அனுமதி மறுக்கப்பட்ட பின்னரும் உறுப்பினர் அவர்கள் எழுந்து பேசுவது முறையாகாது.

DR. H. V. HANDE : I am not raising an adjournment motion. You have allowed the hon. Member Thiru K. Vinayakam to get up and speak about the business of the House. I want to know......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இதைப் பற்றி எழுப்புவதாக இருந்தால் தலைவர் அனுமதி பெற்றுத்தான் எழுப்ப வேண்டும். தலைவர் அனுமதி பெறாமல் எழுப்புவது முறையானது அல்ல.

DR. H. V. HANDE : I want to know the views of the Hon. Chief Minister ... ... ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அது வேறு. விளக்கங்கள் பெறுவது என்ற முறையில் அல்ல தாங்கள் இப்போது எழுப்புகின்ற பிரச்சனை.

DR. H. V. HANDE : I am only requesting, Sir, whether it will be possible for the Hon. Chief Minister to give his views.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பாயிண்ட் ஆப் ஆர்டரைப் பற்றித் தீர்ப்புச் சொல்லுகின்ற அதிகாரம், அவை நடவடிக்கைகளைப் பற்றி செய்யவேண்டிய அதிகாரம் தலைவருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது, அமைச்சரைக் கேட்கக் கூடாது.

DR. H. V. HANDE : I am just asking the Hon. Chief Minister to give his views on the subject.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இந்த ஒரு பொருளைப் பற்றி விவாதிக்க தலைவருடைய அனுமதி பெற வேண்டுமென்று சொல்லுகிறேன். விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறைகளுக்கு மாறாக பிரச்சினைகளை எழுப்ப முடியாது.

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மத்திய ஊதிய வாரியத்தின் பரிந்துரைகளையும் தோட்டத் தொழிலாளர் சட்டத்தையும் கன்னியாகுமரி ரப்பர் தோட்ட முதலாளிகள் நிறைவேற்றாதது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அடுத்து திரு. ஜேம்ஸ் அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் :—

"That the non-implementation of the recommendation of the Central Wage Board for the Rubber Industry and the Plantation Labour Act by the management of the Kanyakumari Rubber Plantations and the strike notice issued by about 2,000 labourers to strike work from 2nd September 1968.

தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே உள்ள தகராறைத் தீர்த்துக் கொள்ள மன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. அதற்கு வேறு வழி வகைகள் இருக்கின்றன என்ற காரணத்தாலும், எதிர்காலத்தில் வரப்போகிற ஸ்ட்ரைக் கைப்பற்றி விவாதிக்க இந்த மன்றத்தை ஒத்தி வைப்பது முறையாகாது என்ற காரணத்தாலும் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

**சீர்காழி, செட்டி நாடு பல் தொழில் பயிற்சி பள்ளிகளில் ஆசிரியர், பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் 41-வது விதியின்கீழ் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள்.

DR. H. V. HANDE : I wish to call the attention of the Hon. Minister for Education and Industries to a matter of urgent public importance viz., non-payment of salaries to the teaching and non-teaching staff including employees of workshops of Srinivasa Subbaraya Polytechnic, Puttur, Sirkali and Annamalai Polytechnic, Chettinad for five months and three months respectively and the necessity to arrange for payment of salaries to the concerned directly without routing them through the management.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : சீனுவாசா சுப்பராய பல்தொழில் பயிற்சிப் பள்ளி, தஞ்சவூர் மாவட்டம் புத்தூரில் (சீர்காழி) நிறுவப்பட்டுள்ளது. அண்ணாமலைப் பல்தொழில் பயிற்சிப் பள்ளி இராமநாதபுரம் மாவட்டம், செட்டிநாட்டில் நிறுவப்பட்டுள்ளது.

பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளை நிறுவுவதற்காகும் தொடராச் செலவை மத்திய அரசும், மாநில அரசாங்கமும் பள்ளி நிர்வாகமும் 2 : 1 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். தொடர் செலவும் முதல் ஐந்தாண்டுகளுக்கு அதே விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்பட்டது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு தொடர் செலவுக்கான மத்திய அரசு உதவி நிறுத்தப்பட்டது. அதன் பின்னர், தொடர் செலவு முழுவதையும் மாநில அரசாங்கமும் பள்ளி நிர்வாகமும் மட்டுமே ஏற்று வருகின்றன. தொடர் செலவில் ஏற்படுகிற நிகர பற்றுக் குறைக்கென மாநில அரசாங்க உதவி அவ்வப்போது அதிகமாக்கப்பட்டு வந்து, 1967-68 முதல் நிகர பற்றுக்குறையில் 75 சத வீதம் மாநில அரசாங்கத்தால் ஈடு செய்யப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் அதிக அளவில் உதவி அளித்த போதிலும், பல் தொழில் பயிற்சிப் பள்ளிகள் சில தொடர்செலவில் தமது பங்கை வழங்க இயலாமல் உள்ளன. தொடர் செலவு ஆண்டுக்காண்டு அதிகரித்து வந்துள்ளது என்பதையும், தாங்கள் முதற்கண்



ஏற்படுத்திய கட்டளைகளிலிருந்து தொடர் செலவை ஈடு செய்யும் அளவிற்கு வருவாய் ஈட்ட இயலவில்லை என்பதையும் பல்தொழில் பயிற்சிப் பள்ளி நிர்வாகத்தினர் முக்கிய காரணங்களாக எடுத்துக் கூறினர்.

நிகர பற்றுக்குறையில் தமது பங்கினைச் சரிக்கட்ட இயலாமல் உள்ள பல்தொழிற் பயிற்சி பள்ளிகளில் சீனுவாசா சுப்பராய பல் தொழிற் பயிற்சிப் பள்ளியும் ஒன்றாகும். இதை எந்த அளவிற்குச் சிறந்த முறையில் நிர்வகிக்கலாம் என்பது குறித்து 1967 அக்டோபரில் நான் அதன் நிர்வாகத்தினருடன் கலந்து பேசினேன். இந்தப் பல்தொழில் பயிற்சிப் பள்ளியின் ஆசிரியர்களுக்கு கடந்த ஐந்து திங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை என்று அரசாங்கத்துக்கு அண்மையில் முறையீடுகள் வந்துள்ளன. அதன்மேல், அந்த நிறுவனத்துக்கு வழங்கப்படத்தக்க தொடர் மானியத்தில் முன்பணம் வாங்கி, ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்க தொழில் நுட்பக் கல்வித்துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அதன்படி, இயக்குனர் அனுப்பிய அதிகாரி மூன்று திங்கள் சம்பளத்தை ஆசிரியர்களுக்கு 16—8—1968 அன்று வழங்கினர். எஞ்சியுள்ள திங்களுக்கான சம்பளத்தையும் அவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

செட்டி நாட்டில் உள்ள அண்ணாமலைப் பல்தொழில் பயிற்சிப் பள்ளியைப் பொறுத்தவரையில், 1968 மே, ஜுன் திங்களுக்கான சம்பளம் சிறிது காலந் தாழ்த்தி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், 1968 ஆகஸ்ட் 1-ம் நாளன்று வழங்கப்படத்தக்க 1968 ஜுன், ஜுலை சம்பளமும் விரைவிலேயே வழங்கப்படும் என்றும் பல்தொழில் பயிற்சிப் பள்ளி முதல்வரிடமிருந்து அறியப்படுகிறது.

DR. H. V. HANDE : Wile we are greatful for the efforts taken to pay the salaries which are outstanding, can we get an assurance from the Minister that hereafter this sort of thing will not take place and therefore will it not be better if the amount is given directly instead of being routed through the management ? Will the Government take steps to prevent such a thing happening in future ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவர்கள் கொடுக்க இயலாதிருக்கிற நிலைமையினால் கொடுக்கவில்லை. ஆனால் கொடுக்க மறுக்கத்தக்க அளவிற்கு பணம் இருந்தும் கொடுக்காமல் வேறு வகைகளில் அவர்கள் தவறு செய்தால் அப்போது அரசாங்கமே நேரடியாகக் கொடுக்கிற முறையைத்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கும். அந்த நிலை ஏற்படும்போது அரசாங்கம் கவனிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அடுத்து, தனியார் தீர்மானங்கள்.

DR. H. V. HANDE : About the other call attention notice, you have not given your decision. I was asked to raise it. The answer is ready.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரிய அமைச்சர் அவர்கள் வராததால் இன்னொரு நாளைக்குத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

### 5. தனியார் அலுவல்—தனித் தீர்மானங்கள்.
### உணவு உற்பத்தி (தொடர்ச்சி).

திரு. பி. ஜி. கருத்திருமன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று உத்தியோகப் பற்றற்ற தீர்மானத்தின்மீது விவாதிக்க, இந்த அமைச்சரவை வந்ததற்குப் பின்னால், 1½ ஆண்டுகளுக்கு மேல் இன்றாவது சந்தர்ப்பம் கிடைத்ததற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 29—11—1967-ல் வெறுமனே இந்தத் தீர்மானத்தைப் படிக்கும் சந்தர்ப்பம் மட்டும் தான் அளிக்கப்பட்டது. இப்போதாவது ஒரு நாள் இதற்காக ஒதுக்கியதில் கூட 1 மணி 45 நிமிடங்கள் கேள்வி நேரத்திலும், கவன ஈர்ப்புத்தீர்மானத்திலும் போய் விட்டது. ஆகவே இனி மேலாவது 'நான்-அஃபிஷியல் டே' அன்று இந்த நேரத்தையும் சேர்த்து உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இன்று எப்படியிருந்தாலும்கூட, இனிமேல் நிச்சயமாக வியாழக்கிழமை என்றால், உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்கள் மீது பூர்ணமாக விவாதிப்பதற்கு வேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலை ஏற்பட்டால்தான் அமைச்சரவையில் அல்லது சர்க்கார் கட்சியில் இல்லாத எதிர்க்கட்சிக்காரர்களான எங்களுக்கு நிலைமைகளை விளக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்.

முதலில் என் தீர்மானத்தை வாசித்து விடுகிறேன்—அதாவது—

"உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தில் நிலப் பண்பாட்டுத் திட்டங்கள், சிறு பாசனச் சிறப்பு நிதியொன்றிற்கு வகை செய்தல் போன்ற திட்டங்களை மேற்கொள்வதுடன், விதிப்புக் கொள்முதல் முறையைச் செயல்படுத்தி, உழவர் பெருமக்களுக்கு ஏற்ற வகைகளில் ஊக்கமளிக்க வேண்டுமென்று இப்பேரவை அரசாங்கத்திற்குப் பரிந்துரைக்கின்றது."

இந்த உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்களை ஆளும் கட்சியினர் எவ்வளவுதூரம் ஏற்றுக்கொண்டு அவைகளை அமல்படுத்துவார்கள் என்பது எனது பத்து பதினைந்து ஆண்டு கால அனுபவத்தில் தெரியும். இருந்தாலும் கூட இது ஒரு பொதுவான தீர்மானம். உற்பத்தியைப் பெருக்குவதற்கான தீர்மானம் இது. (நாட்டு மக்களில் பெரும்பாலான மக்கள் ஈடுபட்டிருக்கும் விவசாயத் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டுமென்று கோருகிற தீர்மானம் இது.) இதைப் பூரணமாக ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இருபது ஆண்டுகளுக்கு முன்னால் சட்டமன்றங்களில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று விவாதிக்கிற நிலை இல்லாமலிருந்தது. அப்போது ஜன உற்பத்தி குறைவு. அன்னிய ஆட்சி இருந்த காலத்தில் வெளி தேசங்களிலிருந்து இறக்குமதி செய்து



கொண்டிருந்தார்கள். அன்று, பூரணமாக மக்களுக்கு வேண்டிய உணவு கிடைக்கவில்லை. அப்போது உணவுப் பொருள்களின் விலை குறைவாக இருந்தாலும் எல்லோரும் சுகமாக இருந்தார்கள், எல்லோரும் நன்றாக இருந்தார்கள் என்ற நிலை இல்லை. அப்போது ரூபாய்க்கு இரண்டு படி, மூன்று படி அரிசி விற்றுக்கொண்டிருந்தது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, அப்போதும் பஞ்சம் இருந்தது. பெருவாரியான மக்கள் பஞ்சத்துக்கும், பட்டினிக்கும் ஆளாகிக்கொண்டு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை.

இப்போது உணவு உற்பத்தியை ஏன் அதிகப்படுத்தவேண்டும் என்பதில் இரு நோக்கங்கள் இருக்கின்றன. 'நுட்ரீட்டிவ் வால்யு ஆஃப் ஃபுட்' சக்தியுள்ள, தரமான உணவு இருக்கவேண்டும். அது ஒன்று. இரண்டாவதாக மக்களுக்குப் போதிய உணவு கிடைக்க வேண்டும். மக்களுக்கு வேண்டிய, தேவையான உணவு கிடைக்க வேண்டுமென்ற நிலையில் இப்போது பற்றாக்குறை ஓரளவிற்கு இருக்கிறது. பற்றாக்குறை இருந்தபோதிலும், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் உணவு உற்பத்திப் பெருக்குத் திட்டங்களில் போதிய அளவு கவனம் செலுத்தப்பட்டதால் 30 லட்சம் டன்னாக இருந்த நம் தமிழ்நாட்டில் இன்று 45, 50 லட்சம் டன் என்ற அளவிற்கு உற்பத்தி பெருக்கப்பட்டிருக்கிறது. இதற்கு இரண்டு மூன்று காரணங்கள் உள்ளன. ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒரு காரணம். இரண்டாவது காரணம், நவீன முறையில், விஞ்ஞான முறையில் உணவு உற்பத்தி பெருக்கப்படுகிறது. மூன்றாவது காரணம், விவசாய இலாகாவினால் அளிக்கப்படும் வித்துக்கள். இக் காரணங்களுக்கு மேல், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஓரளவிற்கு நல்ல விலை வெளி மார்க்கெட்டில் கிடைக்கும் நிலை ஒரு முக்கிய அடிப்படைக் காரணமாகும் என்பதை சர்க்கார் மறுக்க முடியாது. எற்கனவே இதை நான் பாராளுமன்றத்தில் அங்கத்தினராக இருந்தபோது அங்கு சொல்லியிருக்கிறேன்.

'The present increase in food is partly due to Plans, partly due to the advanced methods of cultivation and chiefly due to the prevailing high prices of foodgrains'.

என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

ப்ரொக்யூர்மென்ட் விலை பற்றி பின்னால் பேசிக் கொள்கிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிவகைகளை விவசாயிகளுக்குச் செய்து கொடுப்பது மிக மிக அவசியம். உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும், பெருக்கவேண்டும் என்று சொல்வதை விட அதற்கேற்ற ஒரு சூழ்நிலையை விவசாயிகளுக்கு அமைத்துக் கொடுக்கவேண்டியது சர்க்காரின் கடமை. மக்களிடமிருந்து கிடைக்கும் வரியில் ஒரு பெரும் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உபயோகப்படுத்தப்படவேண்டும். உணவு உற்பத்தி என்பது பூமி சம்பந்தப்பட்டது. பூமியில் உள்ள பூசாரச் சத்துக்கள் மிகவும் அதிகமாகவுள்ள இடங்களில் அதிக உற்பத்தி

எடுக்கலாம், பூசாரச் சத்துக்கள் குறைவாக இருக்கும் இடங்களில் பூசாரச் சத்துக்களை அதிகப்படுத்தி பூசாரத்திற்கு ஏற்ற வகையில் விவசாயத்தை அமைக்கவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

விவசாயம் என்பது சாதாரண எளிய விஷயமல்ல. அதை சிறப்பான முறையில், திறைமையான முறையில் நல்ல முறையில் செய்தால்தான் ஆதாயம் கிடைக்குமே தவிர, உழுது விட்டுவிட்டு பொறுப்பில்லாமல் இருந்தால் விவசாயம் கட்டுப்படியாகாத நிலையில்தான் இருக்கும். பழங்காலத்தில் சொல்வார்கள், உழவன் கணக்குப் பார்த்தால் உழவு கோல்கூட மிஞ்சாது என்று. ஆனால் இப்போதுள்ள சூழ்நிலையில், (இந்த விஞ்ஞான உலகத்தில் இன்டன்சிவ் கல்டிவேஷன், தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.) வள்ளுவர் 'உழவு' என்ற அதிகாரத்தில் சிறப்பாகக் கூறியிருக்கிறார். விவசாயத்திற்குப் பத்து அம்சங்கள் வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எந்தெந்த அம்சங்கள் இருந்தால் விவசாயம் சிறப்பாக இருக்கும் என்று வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருந்தாலும் இப்போது எந்த நிலையில் நாம் விவசாயம் செய்கிறோம் என்பதைச் சிந்தித்து பார்க்க வேண்டும்.

திருவள்ளுவர் கூறியிருக்கிறார், "ஏரினும் நன்றால் எரு இடுதல் கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு" என்று. மிகவும் அருமையான முறையில், மிகவும் சிறப்பான முறையில், விவசாயிகள் உணர்ந்து கொள்ள வேண்டிய முறையில் கூறியிருக்கின்றார். 'ஏரினும் நன்றால் எரு இடுதல்' என்கிறார். நன்றாக உழவேண்டும், நன்றாக எரு விடுதல் வேண்டும், தண்ணீர் விடல் வேண்டும், இந்த மூன்றும் சிறப்பாக இருந்தால்தான் சரியாக இருக்கும். நன்றாக உழ வேண்டும், உழுதலிலே ஒரு பலம் புழுதி கால் பலம் புழுதியாக ஆகும்படி உழ வேண்டும். அவ்வாறு நன்றாக உழுதால் எருகூட தேவையில்லை. உழவுக்குச் சிறப்பாக விளங்குவது நன்றாக உழுதல், எரு விடுதல், தண்ணீர் விடுதல் ஆகும். அதைவிட அவசியமானது காத்தல் தொழில். விவசாயி எவ்வளவு சிறந்த விவசாயியாக இருந்தாலும், எவ்வளவு விஞ்ஞான அறிவு படைத்த விவசாயியாக இருந்தாலும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது காத்தல் என்பது. காத்தலிலே இரண்டு வகை உண்டு. ஒன்று விவசாய பூமியை காப்பது, மற்றொன்று பூமியிலே இருக்கும் ஈரத்தைக் காப்பது. வள்ளுவர், "செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளின் ஊடி விடும்" என்று கூறியிருக்கிறார். மனைவியைக் கணவன் சரியாகக் கவனிக்காவிட்டால் வாழ்க்கை சுகமாக இருக்க முடியாது. அதுபோல பூமியுள்ளவன் பூமியைச் சரிவர கவனிக்கவில்லை என்றால் பூமி வேண்டியபலனைத் தராது என்கிறார். காத்தல் என்றால் மழை பெய்தால் அந்த ஈரத்தைக் காக்கக்கூடிய தன்மையைச் செய்ய வேண்டும். பூமியின் பூசார சத்துக்களைச் சேர்த்து வைத்துக்கொள்ளும்படி





செய்யவேண்டும். அப்பொழுதுதான் பயிர்கள் நன்றாக வளரக் கூடிய அடிப்படைகள் இருக்கும். அப்பொழுதுதான் பயிர்கள் வளர்வதற்கான நைட்ரஜன் இருந்து உணவு உற்பத்தி அதிகமாகப் பெருக முடியும். அந்த நிலையிலே பூமியிலே இருக்கும் மண், பூசார மண் வெளியிலே எடுத்துச் செல்லாமல் இருக்கும்படியான வரப்புகள் போட வேண்டியது அவசியம். அது மட்டும் அல்ல, அந்த மண், மழை, காற்றினாலே வேறு பகுதிகளுக்குச் செல்லாமல் இருக்க வேண்டும். தண்ணீர் மட்டும் விட்டு விட்டால், பயிரை மட்டும் நட்டு விட்டால் வளர்ந்து விடாது. முதலில் நல்ல வளமுள்ள பூமியாக வைத்துக்கொள்ள வேண்டும். அதற்குக் குறையாமல் எரு விடுதல் வேண்டும். அதற்குப் பிறகு அல்லும் பகலும் உழைத்து, காலாகாலத்தில் முறைப்படி காத்து செய்தால் தான் உணவு உற்பத்தி பெருக முடியும். 10, 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சூழ்நிலை வேறு. எனக்கு 30 ஆண்டுகளாக விவசாயத்தில் அனுபவம் உண்டு. அந்தக் காலத்திலே இருந்த சூழ்நிலை வேறு. பயிர் பாதுகாப்பு என்பது 25 வருஷங்களுக்கு முன்பு இல்லை. பயிர் பாதுகாப்பு இல்லாமலேயே உரத்தைப் போட்டு, நல்ல விதைகளைப் போட்டாலே நல்ல வேளாண்மை கிடைத்துக் கொண்டிருந்தது. இப்பொழுது அப்படி இல்லை. காலம் மாற மாற, சாதாரண நிலை மாறி, மனிதனுக்கு எப்படி பல விதமாக நோய்கள் வருகின்றனவோ அதுபோல பயிரை எடுத்துக் கொண்டாலும் பலவித தொல்லைகள் இருக்கின்றன, பூச்சிகள் வந்து கொண்டிருக்கின்றன. பயிரை எடுத்து அறுவடையாகும் வரையில் அதை சிறு குழந்தையைப் போல் எண்ணிப் பாதுகாக்க வேண்டும். பயிர்களுக்கு காலாகாலத்தில் செய்ய வேண்டியதை அவ்வப்பொழுது செய்வதன் மூலமாகத்தான் பயிரைப் பாதுகாக்க முடியுமே தவிர, சாதாரணமான நிலையிலிருந்தால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாது.

அணைக்கட்டுகள் கட்டியிருக்கிறோம், வாய்க்கால்கள் வெட்டியிருக்கிறோம். பாசன வசதி செய்யப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும் 1 கோடி ஏக்கராக்களிலே 30, 40 இலட்சம் ஏக்கர்கள் தான் பாசன வசதி பெற்றிருக்கிறது. மற்ற பகுதிகள் மானாவாரியாக இருக்கிறது, மழையை நம்பித்தான் இருக்கிறது. கிணற்றிலிருந்துதான் தண்ணீரைப் பெற வேண்டியிருக்கிறது. இப்பொழுது சாதாரணமாக மழையில்லாத நிலையில் 100-க்கு 75 கிணறுகள் வற்றிக் கிடக்கின்றன. எப்பொழுது மழை பெய்கிறதோ அப்பொழுதுதான் அவைகளில் தண்ணீர் இருக்கும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்திலே பெரும் பெரும் திட்டங்கள் முடிந்துவிட்டன. இனி சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டங்களிலே நாம் அக்கறை செலுத்தி, அதில் பூரணமாகக் கவனம் செலுத்துவதன் மூலம்தான் விவசாயிகளுக்கு நன்மை செய்ய முடியும்.) பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு 10 கோடி, 20 கோடி, 40 கோடி என்று செலவு செய்திருக்கிறோம். ஆனால் சிறு பாசனத் திட்டங்களுக்கு, மத்திய சர்க்காரின் மானியங்களை வைத்துக்கொண்டு மாகாண சர்க்காரிலே அக்கறை காட்டவில்லை.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 ஆகஸ்ட் 22

இப்பொழுதிருக்கும் நிலையிலே சிறுசிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமானால் அதற்காக ஒரு பெரிய நிதி அவசியம் என்று கருதுகிறேன். நாம் போட்ட திட்டங்களிலே தமிழக சர்க்கார் சிறுசிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்குப் போதுமான அளவுக்கு, குறைந்த பட்சம் 50 கோடி ரூபாய் ஒதுக்கி வைத்து மத்திய சர்க்காரிலிருந்து 25 கோடி ரூபாய் மானியம் ஆகவோ அல்லது வேறு விதமாகவோ பெற்றுச் செய்திருப்பார்களேயானால் சுமார் 50 இலட்சம் ஏக்கராக்களை நல்ல முறைக்குக் கொண்டு வர முடியும் என்பது என்னுடைய கருத்து.

விவசாயத்திலே இரண்டு மாநிலங்கள் முன்னேறியிருக்கின்றன என்று சொல்லலாம். ஒன்று பஞ்சாப் மாகாணம். பாகிஸ்தான் தேசப் பிரிவினையில் இரண்டு பட்டாலும் கூட அங்குள்ள விவசாயிகள் பெரு முயற்சியுடன் ஆக்கமும், ஊக்கமும் காட்டி தன்னிறைவு பெற்று அதிகமாக உற்பத்தி செய்யும் சாதனையைப் பெற்றிருக்கிறார்கள். அங்கே உள்ளவர்களுக்கு தமிழக விவசாயிகள் குறைந்தவர்கள் அல்ல. பாரத தேசத்தில் பஞ்சாபிற்கு அடுத்து நிற்பவர்கள் தமிழக விவசாயிகள்தான். சிறந்த முறையில் பாடுபட்டு, உற்பத்தி பெருகச் செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் சந்தோஷத்துடன் உற்பத்தியைப் பெருக்கவில்லை. அவர்களுக்கு வேறு வழி கிடையாது. எந்த நிலையிலே உற்பத்தி பெருகி இருக்கிறது என்றால், அவர்களுக்கு வேறு எந்தவிதமான வேலையும் கிடையாது. மூன்றே முக்கால் கோடி மக்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து சதவிகித மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள். அந்த நிலையிலேகூட எந்தெந்த இடங்களிலே தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறதோ, எந்தெந்த இடங்கள் வானத்தை நம்பியிருக்கிறதோ ஆங்காங்கே உள்ள விவசாயிகள் ஊக்கம் காட்டி பாடுபடுகிறார்கள். உதாரணமாக கோவை, சேலம் மாவட்டங்களிலே எடுத்துக்கொண்டால் அங்குள்ளவர்கள் ஊக்கம் காட்டி வேலை செய்கிறார்கள். நான் வேறு மாவட்டங்களைக் குறை கூறுவதற்காகச் சொல்லவில்லை. உழைக்கும்படியான விவசாயிகள் இந்தப் பகுதிகளிலே இருக்கிறார்கள். அவர்கள் உபயோகப் படுத்தக் கூடிய தண்ணீருக்கு அங்கு மிக மிகக் கஷ்டப்பட்டு அந்த நிலையிலும் அங்கு உழைத்து வேலை செய்கிறார்கள். அப்படிச் செய்யும்பொழுது அவர்களுக்கு சர்க்காரின் சார்பாக நாம் என்ன சலுகைகளைக் கொடுத்து இருக்கிறோம், என்ன வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம் ?

(திரு. வி. எஸ். கோவிந்தராஜன் தலைமை)

விவசாய இலாக்கா முன் காலத்திலே எல்லாம் நான்காம் தரம், ஐந்தாம் தரம்தான். ரெவின்யூ இலாக்கா இன்னமும் தலை தூக்கிக்
முற்பகல் 11-00 கொண்டிருக்கிறது. உணவுப் பற்றாக்குறை காரணத்தால் விவசாய இலாக்காவைப் போட்டு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தான் நாங்கள் பல இடங்களிலே சொல்வது போல் இந்த உணவு பற்றாக்குறை நீடித்து இருக்க வேண்டும்; அப்பொழுது தான் எங்களுக்கு மரியாதை இருக்கும்; அப்பொழுதுதான்



1968 ஆகஸ்ட் 22] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

எங்களுக்கு கௌரவம் இருக்கும் என்னும்படியான நிலைமை இருக்கிறது. அதிலே கூட இப்பொழுது கௌரவம் இருக்கும்படியான நிலைமை இருப்பதாகத் தெரியவில்லை. சர்க்கார் இதிலே தலையிட்டு இப்பொழுது கொள்முதல் செய்வதை நாம் பார்ப்போமானால், மானம், மரியாதை, கௌரவம் எல்லாவற்றையும் விவசாயி விட்டு விடவேண்டியதாக இருக்கிறது. மானம், மரியாதை, கௌரவம் ஆகியவற்றோடு யாரும் விவசாயத் தொழிலில் ஈடுபட முடியாது என்ற நிலைமை இருக்கிறது. விவசாயியைத் திருடனைப் பாவிக்கிறார்கள், கள்ளக்கடத்தல்காரனைப் பாவிக்கிறார்கள்; மிகவும் கீழ்த்தரமானவனைப் பாவிக்கிறார்கள். விவசாயி உற்பத்தி செய்யவில்லையென்றால் உணவுப் பற்றாக்குறையை நீக்க முடியாது. இந்த விவசாயத்தை அடிப்படையாக வைத்துத்தான் ஏனைய தொழில்கள் எல்லாம் முன்னேற்றம் அடையமுடியும். ஆகவே, நாடு முன்னேறுவதற்கு விவசாயம் தான் அடிப்படையாக இருக்க வேண்டும்.

முதலமைச்சர் அவர்களோ, சம்பந்தப்பட்ட அமைச்சர்களோ பதில் சொல்லும்போது சொல்வார்கள், இந்தக் காங்கிரஸ்காரர்கள் இப்படி இருந்தார்களே என்று. கிளிப்பிள்ளை சொல்கிற பதில். ஐயா, அப்பொழுதுதான் இருந்தார்கள். அதைக் கூட நான் பரிபூரணமாக ஏற்றுக் கொள்ளவில்லை. அப்பொழுது பரிபூரணமாக ஏற்றுக் கொள்ளாதவன் நான். பாராளுமன்றத்திலே விவசாயப் பிரச்னையைப் பற்றி பேசுகின்ற சமயத்திலே நான் சொன்னதை இப்பொழுது சொல்வது பொருத்தம் என்று கருதுகிறேன். அதை இந்த மன்றத்திற்கு ஞாபகப்படுத்தினால் தவறாகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய நிலை என்ன என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

Mr. Speaker, Sir, my forefathers were farmers, my father is a farmer and, after graduating myself, at the call of Mahatma Gandhi, I have become a progressive farmer. After all these land legislations and restrictions, I prefer my son to be a dock labourer than be a farmer in this blessed country.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நீங்கள் பாராளுமன்றத்திலே சொன்னதற்கு மாறாக இப்பொழுது உங்களுடைய மகனையே விவசாயக் கல்லூரிக்கு அனுப்ப முயற்சி எடுத்திருக்கிறீர்கள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வேறு வழி இல்லையே. சாப்பாட்டிற்கு வழி வேண்டாமா ? ஆகவே தான் இன்றைக்கு என்னுடைய மகனை விவசாயக் கல்லூரிக்கு அனுப்பியிருக்கிறேன். அதைவிட்டால் வேறு எந்தவிதமான வழியுமே கிடையாது. உங்களுக்கு இருக்கும்படியான சௌகரியங்கள் எனக்குக் கிடையாது. விவசாயத்தை நம்பித்தான் நாங்கள் இருக்க வேண்டும். அதை வைத்துத்தான் சாப்பிட வேண்டும். அதை உதாரணமாக சொன்னால் நன்றாக இருக்காது என்ற நிலைமையில் சொல்லாமல் இருக்கிறேன். எனக்கு 6 குழந்தைகள். 6-லே

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 ஆகஸ்ட் 22

ஒன்றைத் தான் நான் விவசாயத்திற்கு அனுப்பியிருக்கிறேன். சௌகரியமாக இருந்தால் எல்லாவற்றையுமே அனுப்பியிருப்பேன். நிலத்தைப் பார்த்துக் கொள்வதற்காகத்தான் ஒருவனை அனுப்பினேன். இன்ஜினியராக ஒருவர் இருக்கிறார்; டாக்டராக ஒருவர் இருக்கிறார்; விரிவுரையாளராக ஒருவர் இருக்கிறார். இதிலிருந்தே விவசாயத்தில் எவ்வளவு இலாபம் இருக்கும் என்பதை உணர வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்த அளவிலே ஏற்கனவேகூட ஓரளவு அவர்கள் சொன்னார்கள். அதை பூரணமாக அவர்கள் நிறைவேற்ற முடியவில்லை. காரணம், அரசியல் தான். எதை எடுத்தாலும் குறைவாகக் கொடுக்க வேண்டும்; எதை எடுத்தாலும் அரசியல் நோக்கத்துடன் மக்களுடைய மனதை மாற்றவேண்டும் என்பது தான் விவசாயத்திலே இருக்கும்படியான சூழ்நிலை. இதை மாற்ற வேண்டும் என்பது தான் எங்களுடைய கொள்கை; எங்கள் கட்சியினுடைய கொள்கை. அது இந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, மத்திய அரசாங்கமாக இருந்தாலும் சரி, மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

இதிலே, விலை நிர்ணயிக்கும்படியான நிலை யாரிடத்திலே இருக்க வேண்டும்? உற்பத்தியாக்கி அனுப்பும்படியான விவசாயி தான் உற்பத்தியாகும் செலவைக் கணக்கிட வேண்டுமே தவிர, ஐ.ஏ.எஸ். படித்தவர்களோ, அமைச்சர்களோ, செக்ரடேரியட்டிலே இருப்பவர்களோ, சென்னையிலே இருக்கிறவர்களோ இந்த விலையை நிர்ணயிக்கக் கூடாது என்று தான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். உற்பத்தி செய்கிற விவசாயி தான் நிர்ணயம் செய்ய வேண்டும். கொஞ்சம் மனது வைத்து உணவு அமைச்சரோ, விவசாய அமைச்சரோ இதை நினைத்துப் பார்க்கட்டும். இந்த விலையை எல்லா விவசாய மக்களுக்கும் சொன்னார்களா, இல்லை. இப்பொழுது, இந்த கொள்முதல் விலையை விட, வெளியிலே அதிகமான விலை கொடுக்கப்படுகின்ற காரணத்தால் தான் இந்த விலையை பூராவும் அமுல் படுத்த முடியவில்லை. இந்த விலையை பூராவும் அமுல் படுத்தினால் இந்த சர்க்கார் மூன்று வாரத்திற்குக்கூட நிலைத்து நிற்க முடியாது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சொல்லலாம். இது நியாயமான விலை என்று. பாக்கி இருக்கும்படியானதற்கு வேறு விலை என்ற நிலை இருக்கிறது. அன்-அஃபிஷியல் விலை. அவர்கள் குடும்பத்திற்குத் தெரியும் அதைப்பற்றி எந்த எந்த முறையிலே விற்றுக் கொண்டிருக்கிறார்கள்; எப்படி எப்படி எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். 1947-லே மகாத்மா காந்தி அவர்கள், 'மனிதனைக் கணக்குப் போட்டு, எண்ணிக்கையை கணக்குப் போட்டு, கட்டுப்பாட்டின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்தால் அது மிகவும் நல்லதல்ல' என்று சொன்னவுடனே 1948-ம் ஆண்டிலே கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கப்பட்டன. அப்பொழுது இருந்த நிலைமை வேறு. இப்பொழுது உள்ள நிலைமை என்ன? இப்பொழுது



1968 ஆகஸ்ட் 22] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

கொள்முதல் தேவை; இதுதான் என்னுடைய கட்சியினுடைய அடிப்படைக் கொள்கை. ஆனால், கொள்முதல் தேவை என்றால், குல்லாயை செய்து கொண்டு அதற்கேற்றவாறு தலையை வெட்டிவிடவேண்டுமென்று பொருள் அல்ல. தலைக்கேற்ற குல்லாயாக அமைய வேண்டுமே தவிர, குல்லாயை செய்து விட்டு அதற்கேற்ற தலையாகச் செய்வது என்பது முடியாது. இதுதான் நிர்ணயிக்கப்பட்ட விலை; இந்த விலைக்குத்தான் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆளும் கட்சியிலே இருக்கிற அங்கத்தினர்கள், விவசாயம் தெரிந்த அங்கத்தினர்கள் இதை ஏற்றுக்கொள்கிறார்களா? இதை அவர்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா? இந்த விலையில் உற்பத்தியைப் பெருக்க முடியுமா?

இப்பொழுது சூழ்நிலை பல்வேறு விதமாக போய்க் கொண்டிருக்கிறது. இப்பொழுது 100-க்கு 68, 70 பேர் படித்த மாணவர்கள் விவசாயத்திலே இருக்கிறார்கள். அவர்கள் விவசாயத்திற்கு வந்தாக வேண்டும். இப்பொழுது வேலையில் இருப்பவர்களுக்கே ஆபத்து இருக்கிறது. யார் யார் எப்படி எப்படி இருக்கிறார்களோ எவ்வளவு தூரம் போகிறவர்களோ என்ற சூழ்நிலை, இருக்கிறதனாலே வேலையில் இருப்பவர்களுக்கே ஆபத்து என்ற நிலைமை இருக்கிறது. இந்த நேரத்திலே படித்து வருகின்றவர்களுக்கு எங்கே வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப் போகிறார்கள்—ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பது சந்தேகத்திற்கு உரியதாக இருக்கிறது. 100-க்கு 75 மக்கள் விவசாயிகளாக இருக்கும்படியான தொழிலுக்குப் போயாக வேண்டிய நிலைமை தான் இருக்கிறது.

அடுத்து, இன்றைக்கு இருக்கும்படியான விவசாய உற்பத்திச் செலவையும் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்ன சொல்கிறார்கள்? "மூன்று படி அரிசி போடவில்லையா?" என்று கேட்கிறார்கள். "1932-ம் வருஷம் விற்றீர்களே, ஐயா" என்று கூறுகிறார்கள். விவசாயி இளிச்சவாயனாக இருந்த காலத்திலே போட்டார்கள். இப்பொழுது ஒரு ஏக்கருக்கு உற்பத்திச் செலவு எவ்வளவு? அப்பொழுது ஒரு ஏக்கர் நிலத்திற்கு ரூ. 30 இருந்தால் போதும். அப்பொழுது ரூ. 30 விற்ற காலத்திலே 50 படி நெல் ரூ. 5-க்குத் தான் விற்றது. அதை ஆராய்ந்து பாருங்கள். விவசாய அனுபவங்களைக் கொண்டு ஆராய்ந்து பாருங்கள். ஒரு ஏக்கருக்கு ரூ. 30 உற்பத்திச் செலவு இருந்த காலத்திலே 50 பட்டணம் படி கொண்ட ஒரு மூட்டை நெல் ரூ. 5. இப்பொழுது ரூ. 350 உற்பத்திச் செலவு. ரூ. 30 கணக்குப்படி பார்த்தால் ஒரு ஏக்கருக்கு 12 பங்கு அதிகமாக செலவாகிறது. தொழில் சங்கங்களில் சொல்வார்கள். லிவிங் இண்டெக்ஸ் என்று. அப்பொழுது 300 புள்ளி இருந்தது. இப்பொழுது 500 புள்ளியாகி விட்டது அதன் காரணமாக அவர்கள் கிராக்கிப்படி உயர்வு கேட்கிறார்கள். (குறுக்கீடு) 700 புள்ளி என்று சொல்கிறார்கள். (திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்களைப் பார்த்து) தைரியமாக என்னை ஆதரித்துப் பேசுவீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது.

[1968 ஆகஸ்ட் 22

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தைரியமாகத்தான் இருக்கிறேன். ஆனால், உங்களை ஆதரிக்க மாட்டேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னை ஆதரிக்க வேண்டாம்; நீங்கள் எப்படியாவது இருந்து அவர்களை ஒழித்து விட்டுப் போங்கள். நீங்கள் ஆதரிக்க வேண்டாம். உங்களுடைய ஆதரவு எனக்குத் தேவையில்லை.

ஆக, முன்பிருந்த நிலைக்கு இப்பொழுது 12 பங்கு உற்பத்தி செலவு அதிகமாக ஆகியிருக்கிறது. ஆகவே, 12 பங்கு விலை கொடுக்க வேண்டுமென்று சொன்னால் பிற்போக்குவாதி என்று சொல்வார்கள். எனக்கு அவ்வித எண்ணமும் கிடையாது. மக்களுடைய வாழ்க்கையைப் பார்க்கின்ற நேரத்தில் உணவு நிலைமையை உயர்த்த வேண்டுமென்ற தன்மை எனக்கு இருக்கிறது. இப்பொழுது இருக்கும்படியான விலை நியாயமான விலை இல்லை. கட்டுபடியாகக் கூடிய விலையைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அதோடு மட்டும் அல்ல. அப்பொழுது விவசாயி வாங்கும்படியான பொருள்களின் விலையும் குறைவாக இருந்தது. முன்பு ரூ. 150-க்கு ஒரு ஜோடி மாடுகள் வாங்கி, வண்டி கட்டி வெகு ஜோராக விடலாம். ஆனால் இப்பொழுது ரூ. 2,000-க்குத் தான் ஒரு ஜோடி மாடுகள் கிடைக்கின்றன. அந்த ரூ. 2,000 மாட்டுக்கு, தீவனச் செலவு வேறு. அது எவ்வளவு? முன்பு 50 கிலோ கொண்ட ஒரு மூட்டை பருத்திக் கொட்டை ரூ. 1½. இப்பொழுது ரூ. 35 ஒரு மூட்டை பருத்திக் கொட்டை. ஆகவே, ஒரு மாதத்திற்கு ஒரு மாட்டிற்கு ரூ. 50 அல்லது 100 பருத்திக் கொட்டை தீவனமே ஆகிறது. ஒரு வருஷத்திற்கு ரூ. 600 ஆகிறது. பாக்கி இருக்கக்கூடிய செலவையும் கணக்கிட்டுப் பார்த்தால், விவசாயிகள் வாங்கும்படியான பொருள்களெல்லாம் ஒன்றுக்கு 10 மடங்கு, 12 மடங்கு விலை விற்கிறது. ஆனால், அவர்களுக்குக் கொடுக்கும்படியான விலை முன்னால் இருந்த விலையைப் போல் 3 பங்கு தான். இதைப் பார்த்தீர்களா என்று கேட்டால், 'மத்திய சர்க்கார்தான் விலையை நிர்ணயிக்கிறார்கள் நாங்கள் நிர்ணயிக்கவில்லை' என்று இந்த சர்க்கார் சொல்கிறது. நான் மத்திய சர்க்காரிடமிருந்து புள்ளிவிவரம் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன். எல்லா மாகாண சர்க்காரும் விவசாயிகளிடம் அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த சர்க்கார் விவசாய மக்களுடைய நிலையைப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. ஏதாவது கேட்டால், உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் என்ன சொன்னார் என்று கேட்கிறார்கள். பல தடவை நான் இந்த சட்ட மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். சும்மா சொன்னால் போதாது. இந்த விலை தான் கொடுக்கவேண்டும். இதற்கு மேல் கொடுக்கக் கூடாது என்று ஏதாவது உத்தரவு இருக்கிறதா? அப்படியிருந்தால் அந்த உத்தரவை இந்த சட்டசபை முன்பு வைப்பார்களா? என்று கேட்டேன்.



1968 ஆகஸ்ட் 22] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

பாக்கி மாநிலங்களில் என்ன விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். டெல்லியிலிருந்து வந்த ஆதார பூர்வமான கடிதத்தைக் வைத்துக்கொண்டு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதிகமாக நெல் உற்பத்தி செய்யக்கூடிய ஆந்திர மாகாணத்தில் நெல் விலை நிர்ணயித்திருப்பதைப் பார்த்தால், கோர்ஸ் வெரைடி. ஆனால் ஒரு குவிண்டாலுக்கு ரூ. 46, அடுத்த ரக நெல் ரூ. 55, அதற்கு அடுத்த சூபர்ஃபைன் வெரைடி ரூ. 70, பீஹாரில் ரூ. 56 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது கொள்முதல் விலை. ஒரே ஒரு ரகம் தான். பாக்கியை இஷ்டப்பட்ட விலைக்கு விற்றுக்கொள்ளலாம். மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் இதையெல்லாம் வேண்டாம் என்று சொன்னாரா? யாராக இருந்தாலும் தவறு என்றால் தவறு தான். பீஹாரில் மட்டும் ஒரு ரகம், மட்ட ரகம் ஒரு குவிண்டாலுக்கு ரூ. 56. பாக்கியை இஷ்டப்பட்ட விலைக்கு விற்றுக்கொள்ளலாம். குஜராத்தில் அதைவிட குறைந்தது. கோர்ஸ் வெரைடிக்கு ரூ. 55 குவிண்டாலுக்கு குஜராத்தில் 7 வகை நெல். அடுத்த உயர்ந்த ரக நெல் ரூ. 91 ஒரு குவிண்டாலுக்கு. மகாராஷ்டிராவில் குறைந்த விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ. 56, அடுத்தது ரூ. 62, அடுத்தது ரூ. 67, அதற்கடுத்தது ரூ. 72. வெஸ்டு பெங்காலில் காங்கிரஸ் சர்க்கார் கிடையாது. காங்கிரஸ்காரர்கள் இருந்தால், அவர்கள் கொடுத்தார்கள் என்று சொல்லலாம். குறைந்த விலை ரூ. 56, அதற்கு அடுத்த ரகம் ரூ. 58, அதற்கு அடுத்தது ரூ. 61. இடதுசாரி கம்யூனிஸ்டு இருக்கும்படியான கேரளாவில் கூட ரூ. 56 தான் குறைந்த விலை, அதற்கு மேலே ரூ. 65, அதற்கு மேல் ரூ. 70 என்று கொடுக்கப்படுகிறது. ஆகவே, இந்த மாநில சர்க்கார்கள் எல்லாம் இந்த விலை கொடுத்து, அதை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கும்படியான சூழ்நிலை இருக்கிறது. ஏன் இந்த மாநில சர்க்கார் மட்டும் விவசாயிகளுடைய நிலைமையைப் புரிந்து கொண்டு, இந்த விலையை சிபார்சு செய்யவில்லை?

அவர்களைக் கேட்டால், காங்கிரஸ்காரர்கள் தான் அந்தக் காலத்தில் தீர்மானம் போட்டார்கள் என்று சொல்வார்கள். ஆம். தீர்மானம் போட்டது வாஸ்தவம் தான். 1965, 1966-ல் அது நடந்தது. அதற்குப் பின்னால் அக்ரிகல்சரல் பிரைஸ் கமிஷன் வந்து, விலை மாற்றப்பட்டிருக்கிறது. இவர்கள் மட்டும் அசையாத பிள்ளையாராக அப்படியேதான் இருக்கவேண்டும் என்று இவர்கள் சொல்லிவிட்டு, மத்திய சர்க்காரில் இருக்கும்படியான திரு. ஜகஜீவன்ராம் பேரில் பழியைப் போடுகிறார்கள். குறைந்த விலைக்குக் கிடைத்தால் யார்தான் வேண்டாம் என்று சொல்வார்கள்? அவர் வந்தார், "ஆமாம், நல்ல விலை" என்று சொன்னார். நான் நேரிலேயே அவர்களைக் கேட்டேன். மாகாண சர்க்கார் இந்த விலை கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லட்டும் என்றார். வேண்டுமென்றால் போராட்டம் நடத்தட்டும், குவிண்டாலுக்கு ரூ. 60 கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரோடு போராட்டம் நடத்தட்டும். நானும் அவர்களோடு சேர்ந்து

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 ஆகஸ்ட் 22

கொள்ளத் தயாராக இருக்கிறேன். போராடி வாங்கும்படியாக சக்தி என்னிடம் இருக்கிறது. அதெல்லாம் கிடையாது. இதெல்லாம் கேட்காதீர்கள் என்று சொல்கிறார்கள். மனதில் எதையோ வைத்துக் கொண்டிருக்கிறார்கள் (டாக்டர் எச். வி. ஹாண்டே : குறுக்கீடு) நான் ரிபெல் காங்கிரஸ் என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படி ஒன்றும் கிடையாது. நியாயம் என்ற முறையில் தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது இருக்கும்படியான கொள்முதல் கொள்கையினால் விவசாய மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறை இன்னும் சீராக இருக்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விலை பற்றாக்குறையாக இருப்பதினால் தான் விவசாயப் பெருங்குடி மக்கள் தானாகவே கொண்டுவந்து கொடுப்பதற்குக் கஷ்டப்படுகிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பற்றி நான் பின்னால் பேசப் போகிறேன். விலையை நிர்ணயம் செய்கிறார்கள். வாங்கித்தின்போர் பிரச்சினையும் இருக்கிறது. அதுவும் நியாயமான பிரச்சினை தான். உற்பத்தியைப்பெருக்கிக் கொண்டிருக்கிற சமயத்தில் பிரைஸிங் பாலிசி எந்த அடிப்படையிலே இருக்கவேண்டும்? ப்ரொட்யூஸர் ஓரியன்டட் பாலிசியா அல்லது கன்ஸ்யூமர்-ஓரியன்டட் பாலிசியா? உற்பத்தி செய்யும்படியான குடியானவனுடைய நிலையை அனுசரித்த விலையாகத்தான் இருக்க வேண்டும். கன்ஸ்யூமர்-ஓரியன்டட் பாலிஸி, அதிகமாக உற்பத்தியைப் பெருக்கியவுடன் அப்பொழுது அந்த நிலையை வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், அதே நிலையிலே உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால், விவசாயிகளுக்கு ப்ரொக்யூர்மெண்டு, கொள்முதல் விலை பெரிய இடைஞ்சலாக இருக்கிறது. அது விவசாயிகளுக்கு ஊறு விளைவிக்கிறது.

இப்பொழுது கொடுக்கும்படியான கொள்முதல் விலை ஒரு பக்கம் இருக்கட்டும். இப்பொழுது கொள்முதல் நடத்தும்படியான விதம், இந்த சர்க்கார் பழைய சர்க்காரை நல்லவர்களாகப் பண்ணும்படியான நிலையில் தான் இருக்கிறது. ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா இருந்தாராம். அவர் நெல்லைக் கொடுத்து அரிசியை வாங்கிக் கொண்டிருந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தார். அந்த ராஜா இறக்கும்பொழுது 'இது மாதிரி தர்ம ராஜ்யம் நடத்துகிறேன். அந்தப் பெயரை நீ காப்பாற்ற வேண்டும்' என்று சொல்லிவிட்டுச் சென்றார். மகன் என்ன செய்தான் என்றால், உமியைக் கொடுத்து அரிசியை வாங்கினான். அந்த ராஜா தேவலை, நெல்லைக் கொடுத்து அரிசி வாங்கினார். இவர் உமி கொடுத்து அரிசி வாங்குகிறாரே என்ற நிலை ஏற்பட்டு விட்டது. நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், எதிர்க்கட்சியாக இருக்கும்பொழுது கொள்முதலைத் தவிர்க்க வேண்டும். கொள்முதல் செய்யக்கூடாது, ஐந்து ஏக்கராவுக்கு மேல் இருப்பவர்களிடம் தான் கொள்முதல் செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக



1968 ஆகஸ்ட் 22] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

எலெக்ஷன் மானிஃபெஸ்டோவில் அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஏதோ ஒரு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு கொள்முதலிலிருந்து விலக்கு என்று சொல்கிறார்கள். அதுவும் பூரணமாகக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. புள்ளி விவரங்களை நாளைய தினம் குறிப்பிடுகிறேன். புள்ளி விவரம் என்னிடம் நிறைய இருக்கிறது. அப்பொழுது சொன்னார்கள். கொள்முதல் மிகவும் தவறான முறையில் நடக்கிறது. கொள்முதல் கூடாது, கொள்முதல் சீராக நடக்கவில்லை, விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இப்பொழுது என்ன சொல்கிறார்கள்? மத்திய சர்க்கார் சொல்கிறார்கள், கொள்முதல் செய்யவேண்டுமென்று. வாஸ்தவம் தான். கொள்முதல் வேண்டாம் என்று சொல்லவில்லை. முன்னாலிருந்த காங்கிரஸ் சர்க்காரும் 8 லட்சம் டன் தான் கொள்முதல் செய்தது. அதைத் தான் இந்த சர்க்காரும் இப்பொழுது செய்திருக்கிறார்கள். நான் இந்தச் சபைக்கு வைக்கும்படியான ஆலோசனை என்னவென்றால், கொள்முதல் வேண்டாம் என்று சொல்லவில்லை. கொள்முதல் வேண்டியது தான். நியாயமான முறையில் கொள்முதல் செய்யப்படவேண்டும். எப்படி? 10 ஏக்கர் வைத்துக் கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய சகோதரர்கள், கீழ்த்தட்டிலே இருக்கும்படியான மக்கள் நியாயமான விலைக்கு வாங்கவேண்டும், நியாயமான விலைக்கு வாங்கிச் சாப்பிடவேண்டும் அது நல்ல முறைதான். விளைந்ததில் 10 சத விகிதம் கொள்முதல் செய்யுங்கள், 15 சத விகிதம் செய்யுங்கள், குத்து மதிப்பு வைத்து கொள்முதல் செய்யுங்கள். அதைத் தான் நான் சொல்கிறேன். ஆனால் சர்க்கார் என்ன சொல்கிறது? அவைலபிள் சர்பிளஸ், தேவைக்குப்போக எஞ்சியது, தேவைக்குப் போக பாக்கி உபரி நெல்லை கொடுங்கள் என்று கேட்கிறார்கள். எவ்வளவு உபரி என்று யார் சொல்வது? ஊரிலுள்ள கணக்குப் பிள்ளை தான் கணக்குப் போடுகிறார். 10 ஏக்கர் இருந்தால், 10 குவிண்டால் என்று எழுதிவைத்துவிடுகிறார். வேண்டாதவர்களாக இருந்தால், 50 குவிண்டால் என்று எழுதி வைப்பார். இதுமாதிரி தான் கொள்முதலில் தவறுதல்கள் நடக்கின்றன. வேண்டாதவர்களுக்கு ஒரு நிலை, வேண்டியவர்களுக்கு ஒரு நிலை ஏற்படக்கூடாது. ஒருவருக்கு 10 ஏக்கர் இருக்கலாம். ஒருவருக்கு 50 ஏக்கர் இருக்கலாம். ஒரு ஏக்கருக்கு 5 குவிண்டால் என்பது மாதிரி ஒரு குறிப்பிட்ட அளவை நிர்ணயித்து, 30 ஏக்கர் இருந்தால் 150 குவிண்டால் கொடுத்தாக வேண்டும், 5 ஏக்கர் இருந்தால் அதற்குத் தகுந்த மாதிரி 25 குவிண்டால் கொடுக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருக்கவேண்டும் என்பது தான் என்னுடைய அவா. அதிலே அரசியல் வேறு கலந்து விடுகிறது. விளையாவிட்டால் என்ன செய்கிறது என்றால், வெளியிலே இருந்தாகிலும் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்ற நிலை இருக்க வேண்டும். சில விவசாயிகள் இதை ஆட்சேபிப்பார்கள் என்று சொல்லலாம், அப்படிக் கண்டிப்பாக ஓர் அளவுக்குக் கொடுத்தாக வேண்டும் என்ற நிலை இருக்கவேண்டும். 60 லட்சம் ஏக்கரா

இருந்தால், ஏக்கருக்கு 5 மூட்டைகள், 4 குவிண்டால் சராசரி என்றால், எல்லாம் வந்துவிடும். அதிகமாக உற்பத்தி செய்பவர்களுக்கு வெளியிலே விற்பதற்கு உரிமை இருக்க வேண்டும். மார்கெட் ரேட் என்று உணவு அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். என்ன விலை கொடுக்கிறோமோ அந்த விலைக்கு வெளியில் கிடைக்கிறது என்று சொல்வார்கள். பூனை பாலைக் குடிக்கும் பொழுது கண்ணை மூடிக்கொண்டு உலகமே இருண்டிருக்கிறது என்று சொல்வதுபோலக் கூறுவதில் பிரயோசனமில்லை. வெளியிலே அந்த விலைக்கு தாராளமாக எங்கும் கிடைக்கிறதா என்றால், இல்லை. அப்படியிருக்கும்பொழுது ஒரு லாரியை மடக்கி லட்ச ரூபாய் பெறுமான அரிசியைப் பிடித்து விட்டோம், பதுக்கிவைத்திருந்த நெல்லைப் பிடித்துவிட்டோம். துரத்தித் துரத்திச் சென்று பிடித்துவிட்டோம். இதெல்லாம் இந்த அரசாங்கத்தில் செய்யப்படுகிறது என்று சொல்கிறார்கள். முன்னால் கொஞ்சம் வேகமாகவே இருந்தார்கள் தி.மு.கழகத்தினர் அவர்கள் வீட்டில் அரிசி இருக்கிறது, இவர்கள் வீட்டில் அரிசி இருக்கிறது. நாங்கள் பிடித்துவிட்டோம் என்றார்கள் கடைசியில் அவர்கள் வீட்டிற்கே அரிசி போகும்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிட்டார்கள்

அந்த மாதிரி நிலையில், கொள்முதல் என்றால் நியாயமான அடிப்படையில் இருக்கவேண்டும், எல்லோரும் கொடுக்கக் கூடிய நிலையில் இருக்க வேண்டும். என் பகுதியில் எந்தப் பாக்கியும் இல்லாமல் கொடுத்திருக்கிறோம். தியாகம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என் பகுதி மக்கள். அது எந்த சர்க்காராக இருந்தாலும் சரி, காங்கிரஸ் சர்க்காரானாலும் சரி, வேறு சர்க்காராக இருந்தாலும் சரி, என் பகுதியில் பூரணமாக கொள்முதல் செய்து வசூல் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பகுதியில் தான் பாக்கியில்லாமல் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஈரோடு பகுதியில் என்ன நடந்தது? இவர்கள் எம்.எல்.ஏக்கள் பூச்சி விழுந்துவிட்டது. இது அது என்று சொல்லி, மூன்று மூட்டை கொடுத்து, ' அடிச்சுட்டேன் பார் ' என்கிறார்கள்.

(திரு. க. ர. நல்லசிவன் எழுந்தார்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராசன்) : நீங்கள் பேசும்போது சொல்லிக் கொள்ளுங்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : குற்றமுள்ள நெஞ்சு குறு குறு என்கிறதுபோல, சொல்லட்டும் ஈரோடு தாலுகாவில் எத்தனை கொடுக்கப்பட்டது ? கோபி தாலுகாவில் எத்தனை கொடுக்கப்பட்டது ? என்கிற புள்ளி விவரத்தைக் கொடுக்கட்டும். பார்க்கட்டும். ஈரோட்டில் அதிகமாக இருந்தால், நான் எத்தனை வேண்டுமானாலும் கொடுக்கிறேன். கீழ் பவானியில் கெட்டிருக்கலாம். அதைச் சாக்காக வைத்துக்கொண்டு அவர்கள் எம்.எல்.ஏ. இருக்கும் பகுதிகளில் கொள்முதல் சரியாகச் செய்யப்படவில்லை. பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள் நீங்கள் என்ன



இளிச்சவாயன்கள், நான் மந்திரியை அழைத்துக் காட்டி அடிச்சுட்டேன் பார் ஒரு அடி என்கிறார்கள். அதற்காகத்தான் நான் சர்க்காரிடம் கேட்டேன், ஐயா, தண்ணீர் பாசனக் கணக்கு இருக்கிறது. பட்டா இருக்கிறது, ஒவ்வொரு ஜில்லாவிலும், இதைச் செய்யுங்கள். இப்பொழுது மட்டும் சொல்லவில்லை. காங்கிரஸ் காலத்திலிருந்தே சொல்லுகிறேன். ஒரு ஊரில் பஞ்சாயத்து போர்டு ஆபீசில் போடுங்கள், இத்தனை பட்டா என்று தெரியும். 100, 120 பட்டாக்கள் இருக்கும். இத்தனை பட்டா இத்தனை நெல் வசூல் செய்யப்பட்டது என்கிற விவரங்களைப் போடுங்கள். என்று சொல்லுகிறேன். அதை ஏன் சிதம்பர ரகசியம் மாதிரி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அப்படிப் போட்டு விட்டால், இவ்வளவு விவசாயிகள் இருக்கிறார்கள், இவர்களுக்கு இவ்வளவு பட்டா இருக்கிறது, இவ்வளவு நெல் கொடுத்திருக்கிறார்கள் என்பதெல்லாம் தெரிந்து போகும். அப்பொழுது சொல்லமாட்டார்கள், கருத்திருமனுக்கு 1,000 ஏக்கர் இருக்கிறது, அவர் கொடுத்தாரா என்ற பேச்செல்லாம் இருக்காது. அப்படிப் பேசிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது குறைந்து விட்டது. அதிகமாகப் பேசுவதை அவர்களாகவே நிறுத்திவிட்டார்கள். இருக்கிற விஸ்தீரணத்தைக் கொண்டு, இத்தனை மூட்டை வசூல் என்று சொல்லி விடுவோமானால், நலமாகப் போய்விடும். யாருக்கும் குறை இருக்காது. அப்படிக் கொடுக்காதவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்ற நிலைமையும் இருக்கும். லெவி கொள்முதல் செய்கிறோம். அதைச் சில பணக்காரர்கள் ஆட்சேபிக்கிறார்கள். ஏன் ஆட்சேபிக்கிறார்கள்? முன்பெல்லாம் அவர்கள் தப்பித்துக்கொண்டு இருந்தார்கள். இலக்கு டார்கெட் என்று வைத்து, நடுத்தர, கீழ்த்தர விவசாயிகளிடம் அதிகமாக வசூல் செய்துவிட்டு, இவர்களிடம், 30 மூட்டை, 50 மூட்டை என்று மட்டும் வாங்கிவிடும் நிலையில் இவர்கள் தப்பித்துக்கொண்டு போவார்கள். இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வைத்திருப்பவரிடம் அதிகமாக வசூல் செய்து, மொத்தத்தில் 2000 மூட்டை வசூலாகிவிட்டது என்று கணக்குக் கொடுத்துவிடுவார்கள். அதற்காகத்தான் சொல்லுகிறேன், நம் முதலமைச்சர் சொல்வார்களே, tap the rich and pat the poor என்று, அந்த வகையில் tap செய்தார்களா பணக்காரர்களை ? எங்கே இப்பொழுது செய்யுங்கள் என்று கேட்கிறேன். பத்து ஏக்கராவிற்கு அதிகமாக வைத்திருப்பவர்கள் எத்தனை பேர்கள் ? 20,000 அல்லது 30,000 பேர்கள் இருப்பார்கள். இதே சட்ட மன்றத்திலே 1952-லேயிருந்து சொல்லி வருகிறேன். இப்பொழுது மட்டும் சொல்லவில்லை. levy system of procurement வேண்டும் என்று சொல்லுகிறேன். அப்படி வசூல் செய்துவிட்ட பிறகு, பாக்கியிருக்கும் நெல்லை, ஃப்ரீ மார்க்கெட்டில் விட்டு விடுங்கள். பதுக்கல் இருக்கிறது, அதைப் பிடித்தோம், லாரியை மடக்கினோம், டையரை உடைக்கிறது என்றெல்லாம் இருக்கக்கூடாது. அதற்காகத்தான் நியாயமான விலை நிர்ணயிக்கப்படவேண்டும் என்கிறேன். உற்பத்திச் செலவை வைத்து அந்த விலையை நிர்ணயிக்கவேண்டும் என்கிறேன். இதிலே

இன்னொரு கஷ்டமும் இருக்கிறது. உணவு உற்பத்தி செய்கிறவன் மட்டும்தான் அவதிக்குள்ளாகிறேன். மற்றபடி கரும்பு, பருத்தி பயிரிடுபவர்கள் நன்ருகத்தான் இருக்கிருர்கள். (குறுக்கீடு) யாராக இருந்தாலும் சரி. எங்கள் கட்சிக்காரர், காங்கிரஸ்காரர் என்ருலும் சரியே. அதற்காக கரும்பு உற்பத்தி செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. ஒரு பழமொழி உண்டு. கஞ்சிக்கு உப்பில்லாமல் இருக்கும்போது, கஞ்சிக்கு சர்க்கரைக்கு அழுதா ளும் என்று. மத்திய சர்க்கார் உணவு அமைச்சரிடமே கேட்டேன். இன்றைக்கு ரூ. 53-லிருந்து (மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கஞ்சிக்கு சர்க்கரையில்லை, பாலுக்கு சர்க்கரை) ஆமாம். கரும்புக்கு மட்டும் ரூ. 53-லிருந்து 73 ரூபாய் என்று ஆக்கியிருக்கிருர்கள். சில மில்களில் 100 ரூபாய்கூடக் கொடுக்கி ருர்கள். (குறுக்கீடு) 110, 120 என்ருலும் மகிழ்ச்சிதான். அவர் களுடைய நல்ல எண்ணத்தைப் பாராட்டுகிறேன். விவசாய சகோதரருக்கு நன்மைதான். ஆனல் அதே நேரத்திலே, உணவு உற்பத்தி செய்யும் விவசாயிக்கு மட்டும் ஏன் அதிக விலை கொடுக்கக் கூடாது ? பழைய பாட்டையே பாடுகிருர்கள். பக்தவத்சலம் கொடுத்தார் என்கிருர்கள். முன்னல் 45 கொடுத்ததை 55 ஆக்கி யிருக்கிருேம் என்கிருர்கள். அதற்கு மட்டும் காங்கிரஸ் சர்க்காரை, பக்தவத்சலத்தைக் காட்டுகிருர்கள். சிறப்பாக நடத்துகிருேம் என்று நீங்கள் காட்டுங்களேன். எவ்வளவு சீரும் சிறப்புமாக நடத்துகிருர்கள் என்று சொல்லுகிற அளவுக்கு நல்ல பெயரை வாங்குங்களேன். தேசப் பணி செய்யவில்லை என்று சொல்ல வில்லை. விவசாய துரோகிகளாக நடந்துகொண்டு இருக்கிறீர்கள் என்று சொல்லுகிறேன்.

பாக்கியிருக்கும் மாநிலங்களில் ரூ. 56 கொடுக்கும்போது, நீங்கள் ஏன் அப்படிக் கொடுக்கவில்லை என்பதுதான் கேள்வி. உணவு உற்பத்தி செய்கிறவர்களைப் பற்றிப் பேசும்போது, வாங்கிச் சாப்பிடுவோர்களுடைய நிலையையும் ஆராய வேண்டியதுதான். நான் சொல்லுவேன் அதற்கும் விலை நிர்ணயம் செய்யவேண்டும். விவசாயிக்குக் கொடுக்கும் விலையைவிட 10 சதவிகிதம் வாங்கிச் சாப்பிடுபவர்கள் கொடுக்கும் நிலை இருக்கவேண்டும். கன்ஸ்யூமர்ஸ் ப்ரைஸுக்கும், ப்ரொட்யூஸர்ஸ் ப்ரைஸுக்கும் 10 சத விகிதம் தான் இடைவெளி இருக்க வேண்டும். இப்பொழுது 30 சத விகிதம் இருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும். no profit என்ற நிலையில் 10 சத விகிதம் அதிகமாகக் கொடுக்கும் விலையை நிர்ணயிக்க வேண்டும். அப்படி வாங்கிச் சாப்பிடுகிறவனுக்கும் விலையை நிர்ணயித்துச் சட்டம் செய்துவிட்டால், நல்ல முறையில் நடக்கும்.

முதலிலே, இவர்கள் படி அரிசி போடுகிருேம் என்ருர்கள். ஆனல் பின்னல், விலையேற்றத்தைச் சொன்னர்கள். நாங்களும் 64 லட்சம் வாக்காளர்கள் வாக்கு பெற்றிருக்கிருேம். அவர்களுக் காகப் பேசவேண்டிய உரிமையும், கடமையும் இருக்கிறது. நீங்கள் 61 லட்சம் வாக்காளர்கள் வாக்கு பெற்றிருக்கிறீர்கள். அந்தப்





பொறுப்பு உங்களுக்கும் இருக்கிறது. முதல் அமைச்சர் சொல்லு கிருர்கள். பருவததில் மழை பெய்ய வேண்டும், உற்பத்தி பெருக வேண்டும், மத்திய சர்க்கார் மானியம் கொடுக்கவேண்டும், அப்படி யெல்லாம் இருந்தால், இது யோசிக்கப்படும் என்று. அதை முதலிலேயே சொல்லியிருக்கலாமே. இத்தனை நாள் கழித்துச் சொல்வானேன் ? அப்படியெல்லாம் ஏற்பட்டால், திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் செய்வது என்ன ? யார் வேண்டு மானலும் செய்யலாமே. சாதாரண வோட்டர்கூடச் செய்யலாமே. நாமெல்லாம் அவர்களுடைய பிரதிநிதியாக இருக்கவேண்டிய தேவையே இல்லையே. இப்பொழுது இருக்கும் பொறுப்பு உங்களுடையது. நீங்கள்தான் திட்டத்தை நிறைவேற்றவேண்டும். விவசாயிக்கு விலையைக் கொடுத்தால்தான் உற்பத்தியைப் பெருக்க சலுகைகள் பெற்று எல்லா செளகரியங்களும் அடைவது முடியும். அவர்கள் கஷ்டப்பட்டுக் கொடுக்க, பாக்கியிருப்பவர்கள் என்பது பொருத்தமற்றது. கேட்டால், காங்கிரஸ்தான் ஸ்டாசுடரி ரேஷன் வைத்து விட்டது என்கிருர்கள். சரி, காங்கிரஸ் காரன் செய்தது தப்பு. நீங்கள் அதை கான்சல் செய்துவிட்டுப் போங்களேன். அது தவறு, வேண்டாம் என்று உத்தரவு போடுங் கள். (குறுக்கீடு) அதன் விளைவுகளை நீங்கள் அனுபவியுங்கள். அவர்கள் செய்துவிட்டார்கள் என்பதில் அர்த்தம் இல்லை. இப் பொழுது நாட்டுப் பிரச்சினை, முக்கியமான பிரச்சினை, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க, அவர்கள் மானத்தோடு வாழ, கவுரவத்தோடு வாழ, உணவு கொடுக்கும் ஏழை விவசாயி வாழ வகை செய்யவேண்டும் என்பதுதான் இன்றைக்கும் இருக்கும் மிக முக்கியமான பிரச்சினை. இரண்டுங் கெட்டான் நிலை இருக்கக்கூடாது. குத்து மதிப்புக் கொள்முதல் நிறைவேற்றப்படவேண்டும். இதை நான் ஒன்றே முக்கால் ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். முதல் அமைச் சருக்கும் தெரியும், உணவு அமைச்சருக்கும் தெரியும். கொள் முதல் கொள்கையில் திருத்தம் செய்யுங்கள் என்று கேட்கிறேன். பரிசீலனை செய்கிருேம் ஆலோசனை செய்கிருேம் என்றுகூடச் சொல்லவில்லை. ஏதோ எட்டு லட்சம் டன் வசூல் ஆகிவிட்டது என்று இருக்கிருர்கள். அதனல் என்ன வேண்டுமானலும் செய்யலாம் என்று இருக்கிருர்கள். (திரு. ஏ. வி. பி. ஆசைத் தம்பி : 'ஒன்றே முக்கால் ஆண்டுகளாகவா சொல்லுகிறீர்கள்?')
ஆமாம். இன்னென்றும் சொல்லுகிறேன். ஒரு எச்சரிக்கையும் மு.ப.
விடுகிறேன். இந்தப் பிரச்சினையைத் தீர்க்காத வரையில், 11-30
விவசாயப் போராட்டத்தையே நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற் படும். ஆகவே, இந்தப் பற்ருக்குறை விலையை வைத்துக்கொண்டு நீங்கள் தப்பித்துக் கொள்ளாதீர்கள். இந்த நிலைமையே நீடித்தால் ஒரு நெல்மணிகூட கொள்முதல் செய்ய முடியாத நிலைமை விவசாயிகளிடத்தில் இருந்து வருகிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஒரு நெல்மணிகூட கொள்முதல் செய்யக்கூடாது என்பதுதான உங்கள் கட்சியின் கொள்கை ? இதை நீங்கள் தெளிவாக அறிவிக்கவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கொள்முதல் செய்ய வேண்டும். நான்கூட நெல் கொடுத்திருக்கிறேன். நீங்கள் கொடுக்கும் விலை போதாது என்பதற்காகத்தான் போராடிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் போடும் வலையிலெல்லாம் நான் சிக்க மாட்டேன். நிச்சயமாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொல்கிறேன். ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று கண்டிப்பாக இருக்கவேண்டும். அதற்குச் சட்டமே இருக்கவேண்டும். ஜிகினா மாதிரி பேசிக் கொண்டே போய் எங்களை ஏமாற்ற முடியாது (சிரிப்பு).

**திரு. வி. டி. அண்ணாமலை :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ‘ ஜிகினா ’ மாதிரி என்று கனம் உறுப்பினர் குறிப்பிட்டார். அதை அவர் விளக்குவாரா ?

**திரு. கே. விநாயகம் :** இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் உறுப்பினர் என்னிடம் நேரில் வந்தால் ‘ ஜிகினா மாதிரி ’ என்பது என்ன என்பதைச் சொல்வேன். தானியக் கொள்முதல் மட்டுமல்ல, தானிய வியாபாரத்தையும் சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும். ஆனால், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுக்க வேண்டும். அதாவது, கொள்முதல் விலைக்கும், மக்கள் வாங்கும்படியான விலைக்கும் வித்தியாசம் 10 சதவீதம் வரைக்கும்தான் இருக்க வேண்டும். இதிலே எந்த விதமான அபிப்பிராயபேதமும் இல்லை. கொள்முதல் வேண்டாமென்று சொல்லவில்லை. நாங்கள் சொல்வதெல்லாம் விவசாயிகளுக்குக் கட்டுபடியான விலை கொடுக்கப்பட வேண்டுமென்பதுதான். கம்யூனிஸ்ட் கட்சியும் விவசாயிகளுக்குக் கட்டுபடியான விலை கொடுக்க வேண்டுமென்றுதான் சொல்கிறார்கள். எந்த விலை என்று அவர்க்ள் சொல்லவில்லை. மற்ற மாநிலங்களில் கொடுக்கும்படியான விலை கொடுக்கப்பட வேண்டும். அவைகளெல்லாம் சூபர் ஃபைன் வெரைட்டி என்று நமது மந்திரிகள் சொல்கிறார்கள். அவர்கள் எல்லாம் உயர்ந்த மந்திரிகளா? நமது மந்திரிகள் எல்லாம் மட்டமாக ஆகிவிட்டார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடமிருந்து ஒரு தரமான பேச்சை எதிர்பார்த்தேன். முதலில் ‘ துரோகிகள் ’ என்றார். இப்பொழுது ‘ மட்டம் ’ என்கிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களுடைய தரம் கெட்டது, என்று நான் சொல்லவில்லை. வேறு மாநில அமைச்சர்களைப்போல நமது மந்திரிகளும் அறிவாற்றலிலும், தரத்திலும் குறைந்தவர்கள் அல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். உங்களைப் போய் மட்டம் என்றால் நானும் மட்டந்தானே. நமது மந்திரிகள் தரத்தில் மிக உயர்ந்தவர்கள் . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நமது மந்திரிகள் தரமானவர்கள், மிக உயர்ந்தவர்கள் என்று சொல்கிறாரே, அதை அவருடைய உண்மையான பேச்சாக எடுத்துக்கொள்ளலாமா ?





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நல்ல காரியத்தைச் செய்கிற வரையில் தரமானவர்கள், நல்லவர்கள்தான். உங்களைப்பற்றிப் பொதுமக்கள் சொல்லிக் கொள்ளட்டும். விவசாய அமைச்சர் அவர்கள் தவறாக எண்ணிக்கொள்ளக் கூடாது. விவசாயம் ஆக்கத்துடனும், ஊக்கத்துடனும் செய்யப்பட வேண்டுமானால், விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்கப்பட வேண்டும். கட்டுபடியான விலையில் கொள்முதல் செய்யப்பட வேண்டும். கொள்முதலுக்குப் பின்னர் எஞ்சியிருக்கும் நெல்லை விவசாயி தன்னிஷ்டப்படி வெளி மார்க்கெட்டில் விற்றுக்கொள்ள அனுமதி கொடுக்க வேண்டும். ஒரு கோடி பேருக்குத்தான் ரேஷன் கொடுக்க முடிகிறது என்று நமது உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரேஷன் என்றாலே அரை வயிற்றுச் சாப்பாடு என்றுதான் பொருள். 3½ கோடி 3¾ கோடி பேர் இருக்கக்கூடிய தமிழகத்தில் சுமார் 50 லட்சம், 60 லட்சம் பேர்களுக்குப் பூரணமாக சாப்பாடு போட முடியாத நிலையில் இருக்கிறோம். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால், விவசாயிகளுக்கு அதில் லாபம் கிடைக்க வேண்டும். விவசாயிகளுக்குக் கட்டுபடியான விலை கொடுக்கப்பட வேண்டும். விவசாயத்திற்கு வேண்டிய பொருள்கள் நியாயமான விலையில் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும். இதற்கு ஒரு பெரிய நிதி தேவை. சுமார் 50 கோடி ரூபாய் இதற்குத் தேவை. விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு, இந்தச் சர்க்கார் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்தி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவை மாற்றுந் தலைவர் அவர்களே, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த அதிகாரப் பற்றற்ற தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்தத் தீர்மானம் தேவையற்றது என்பதை அவருடைய பேச்சிலேயே மிக விரிவாக விளக்கினார் என்று கருதுகிறேன். உணவு உற்பத்தித் துறையிலே நல்ல விதைகள், நல்ல உர வினியோகம், நிலங்களைப் பண்பாடு செய்வது, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவது போன்ற திட்டங்களைப்பற்றி நம்முடைய சர்க்கார் 100 கோடி ரூபாய் அளவிலே ஒரு திட்டம் போட்டு, மத்திய சர்க்காருக்கு அனுப்பியுள்ளது. ஆண்டொன்றுக்கு பெயருக்கு 20 கோடி ரூபாய் கொடுத்தால்கூட உணவு உற்பத்தியை மேலும் பெருக்க முடியும் என்ற அளவில் ஒரு தனி அதிகாரியை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆண்டொன்றுக்கு 20 கோடி ரூபாய் மத்திய அரசிலே பெறுவதற்கு வழிவகை செய்வதைப்பற்றி இந்த அரசு முயன்று வருவதை அவர் விளக்கிப் பேசுவார் என்று எண்ணினேன். ஏனோ அவர் அதையெல்லாம்—இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளையெல்லாம்—மறைத்துவிட்டார். மத்திய அரசால் ஆண்டொன்றுக்கு 20 கோடி ரூபாய் உணவு உற்பத்திக்காகத் தர முடியாதது மட்டுமல்ல, நமக்குத் தந்த கடனுக்காக 14 கோடி ரூபாய் வட்டியாகப் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கவும், விவசாயம் நல்ல முறையில் வளர்ச்சி அடையவும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றைக்காவது ஒத்துழைப்பு அளித்தார்களா என்றால் இல்லை. கட்சி நலனைவிட நாட்டு நலன் பெரிது என்று அவர்கள் எந்தக் காலத்திலும் எண்ணியது கிடையாது. இன்றைக்குக் கட்சி நலத்திற்காகவே விவசாயிகளுடைய போராட்டத்திற்கு முயற்சியை மேற்கொள்கிறார்களே தவிர உண்மையிலேயே விவசாயிகளுடைய குறைகளைத் தீர்க்க விரும்பினால் இந்த அதிகாரப் பற்றற்ற தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தீர்மானமாகவோ, டெல்லி பாராளுமன்றத்திலோ நிறைவேற்றி தமிழக அரசு கோருகிற 100 கோடி ரூபாய்த் திட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 20 கோடியாவது தாருங்கள் என்று வற்புறுத்தினார்களேயானால் தமிழ்நாட்டு விவசாயிகள் அவர்களுக்கு நன்றி உடையவர்களாக இருப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் விவசாயக் கொள்முதல் விலையைப் பற்றிச் சொன்னார்கள். விவசாயி என்று சொல்கிறபோது எல்லோரும் விவசாயிகள் என்று நினைக்கிறார்கள். யார் விவசாயி என்பது தான் பிரச்சினைக்குரியது. நிலவுடைமைக்காரர்களும், நிலப் பிரபுக்களும் தாங்கள் தான் விவசாயிகள் என்று சொல்கிறார்கள். ஆனால் வாய்க்கால், வயல்களிலே வாழ்நாள் முழுவதும் பாடுபட்டுக்கொண்டிருப்பவன் தான் உண்மையான விவசாயி என்று இந்த அரசு கருதுகிறது. கொள்முதல் விலையை உயர்த்துவது வேண்டுமானால் நிலப் பிரபுக்களுடைய வருமானத்தை அதிகப்படுத்தும். அதே நேரத்தில் விவசாயக் கூலிகளுக்கு ஏதாவது பயன் தருமா என்றால் கட்டாயம் தராது என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் தான் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க முடியும். நல்ல உரங்கள் தருவதன் மூலம், விதைகள் தருவதன் மூலம் ஒரு ஏக்கருக்கு இரண்டு பங்கு உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம், இருபோகச் சாகுபடியைக் கொண்டு வருவதன் மூலம்தான் உற்பத்தி பெருகும். விவசாயிகளுக்கு வருமானம் அதிகரிக்கும். உற்பத்திச் செலவை சரிக்கட்ட, கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்பதில்லை. அதுவும் பொருளாதார மந்தம் ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்தில் விலைகளை நிர்ணயிக்க வேண்டும். நெல் விலை வீழ்ந்துவிடாது நிலைப்படுத்த வேண்டும் என்றே இந்த முறை கையாளப்படுகிறது. ஒரு பக்கம் கொள்முதல் விலையை உயர்த்துங்கள் என்று சொல்லிவிட்டு, இன்னொரு பக்கம் படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்துங்கள், இல்லையானால் கைவிடுங்கள் என்று சொல்வது சரியல்ல. பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் பயனடையவேண்டும் என்றே கொள்முதல் செய்கிறோம். கொள்முதல் விலையை உயர்த்தி, அரசின் கொள்கையை உடைப்பது—ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடிப்பது.



விவசாயிகளைத் துரோகி என்று குறிப்பிட்டார்கள். நான் சொல்கிறேன், இந்த நாட்டில் வாங்கிச் சாப்பிடுகின்ற ஏராளமான ஏழை எளிய மக்களுக்குத் துரோகம் செய்துவிடாதீர்கள்.

அதுமட்டும் அல்ல. கொள்முதல் விலையை அக்ரிகல்சுரல் ப்ரைஸ் கமிஷன் தான் நிர்ணயிக்கிறது. அந்தக் கமிஷனை மத்திய அரசு நியமிக்கிறதே தவிர தமிழக அரசு நியமிக்கவில்லை. அவர்கள் நிர்ணயித்திருக்கிற விலைக்கொப்பத்தான் நாம் கொடுக்கிற விலை இருக்கிறதே தவிர வேறு அல்ல. நல்ல அரசு அமைந்திருக்கிறது. நல்ல விவசாயத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படுகின்றன. இதைப் போற்றாதார் இல்லை. பாராட்டாதார் இல்லை. ஆகவே நமக்கு இருக்கிற பிரச்சினை எல்லாம்—உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும், உணவுப் பங்கீட்டைச் செம்மை படுத்த வேண்டும். விவசாயத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். இதற்கு இந்த அதிகாரப் பற்றற்ற தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தீர்மானமாகக் கொண்டுவந்து மத்திய அரசு நம்முடைய விவசாயத் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லி அதற்காக போராட்டமே வேண்டும் என்றாலும் நடத்தி அந்தப் பணத்தைப் பெற்றுத் தந்து அரசு விவசாயிகளுக்கு நன்மை செய்ய உதவ வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவர் அவர்களே, திரு. கருத்திருமன் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தின் பேரில் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று அவர்கள் கொள்முதல் விலையை உயர்த்தித் தரவேண்டும் என்று முக்கியமாக வற்புறுத்தினார்கள். அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருந்து வருகிறவர்கள். நான் பல வருடங்களாக பருவ மழை இன்றி விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதியில் இருந்து வரும் விவசாயி. ஆகவே விலையை உயர்த்துவது கூடாது, அதனால் மக்களுக்குப் பெரிதும் பாதகம் ஏற்படும் என்பதே எனது அழுத்தமான எண்ணம். இன்று விலைவாசி வரவரக் குறைந்துகொண்டிருக்கிறது. உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கிறது. அதிகமான உற்பத்தித் திட்டங்களையும் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உற்பத்திச் செய்கின்றவர்களுக்கு வருமானம் அதிகரிக்க விலையை உயர்த்த வேண்டும் என்பதை என் போன்றவர்கள் எதிர்க்கிறோம். ஏன் என்பதை ஆராய்ச்சி செய்யவேண்டும். உற்பத்திச் செலவு அதிகமாகிறது என்றால் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு என்ன என்ன வழிகளை மேற்கொள்ளலாம் என்று யோசிக்கவேண்டுமே தவிர கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று சொல்வது பொருளாதார தத்துவத்திற்குப் பொருத்தம் அல்ல என்று நினைக்கிறேன்.

ஏன் உற்பத்தி விலை அதிகமாக இருக்கிறது என்றால் கொடுக்கக் கூடிய உரம் அதிகமான விலைக்குக் கொடுக்கப்படுகிறது. உரத்தின் விலையைக் குறைப்பதற்கு நண்பர் கருத்திருமன்

[திரு. எஸ். இராமச்சந்திரன்] [1968 ஆகஸ்ட் 22

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, உணவு உற்பத்தித் துறையில் இந்த நாடு தன்னிறைவு பெறவேண்டுமென்ற எண்ணத்தில், மத்திய அரசை, வட்டித் தொகையை வாங்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டும் மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான பதிலும் இல்லை. அதற்கு மாறாக நம்முடைய வேண்டுகோள் மறுக்கப்பட்டது. கொடுக்க வேண்டிய கடனுக்கான வட்டியையாவது கொஞ்ச நாட்களுக்குத் தள்ளிப் போடுங்கள் என்று நாங்கள் கேட்டுப் பார்த்தோம். அதற்கும் மறுக்கப்பட்டது. இவ்வாறு நம்முடைய வேண்டுகோள்களுக்கெல்லாம் மத்திய அரசு புறக்கணிப்பு செய்யும் அளவிற்கு இந்திய அரசு மாற்றாந்தாய் மனப்போக்கில் நடந்து வருகிறது.

கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு உண்மையிலேயே விவசாயிகளிடத்தில் அக்கறை இருக்குமானால், விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்குமானால், தன்னை 'விவசாயி, விவசாயி' என்று அடிக்கடி கூறிக் கொள்ளும் போக்கு உண்மையானதாக இருக்குமானால், திராவிட முன்னேற்ற கழக அரசு எடுத்துக் கொள்ளும் உருப்படியான காரியங்களுக்கு நல்ல ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவருடைய நல்ல ஒத்துழைப்பின் காரணமாக இந்த உணவுப் பிரச்சினையைச் சமாளித்து விடலாம். கடந்த ஓராண்டு காலத்தில் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக உணவுப் பிரச்சினையை சமாளித்து விடலாம் என்பதற்கான சூழ்நிலை மிளிர்ந்து கொண்டிருக்கிறது. இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளை இந்த நாட்டிலேயுள்ளவர்கள் மட்டுமல்ல, அண்டை மாநிலங்களிலுள்ள அரசியல்வாதிகள், மற்ற கட்சி அமைச்சர்கள் உட்பட பாராட்டுகிறார்கள். 'தி.மு.க. அரசு உணவுப் பிரச்சினையை நல்ல முறையில் சமாளித்திருக்கிறது' என்று பாராட்டுகிறார்கள். ஒரு போக சாகுபடி நிலங்களை இரு போக சாகுபடி நிலங்களாக மாற்றி, நல்ல முறையில் விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது. மத்திய அரசு இந்நிலையில் என்ன செய்தது? உரத்தின் விலையைக் கூட்டினார்கள். அதேபோல் சிறுபாசனங்களுக்குத் தேவையான பணம் கேட்டபோதும் மறுத்தார்கள். இது மத்திய அரசின் மனப் போக்கைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

அரிசி அநியாய விலையில் விற்கிறது. மலிவான விலையில் மக்களுக்கு அரிசி கிடைக்கச் செய்யவேண்டும் என்று பேசப்பட்ட நேரத்தில் இந்த அரசு, நெல் அதிகமாகப் பயிரிடுங்கள் என்று வேண்டுகோள் விட்டது. அந்த நேரத்தில் 'நெல்லுக்குப் பதிலாக கரும்பு பயிரிடுங்கள்' என்று காங்கிரஸ்காரர்கள்தான் பேசினார்கள். அதுவும் குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் முன்னாள் அமைச்சராக இருந்த இப்போது சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிற—திரு. பூவராகன் அவர்கள்கூட நெல்லுக்குப் பதில் கரும்பு பயிரிடுவேன், இதை யார் தடுக்க முடியும் என்று பேசினார்கள்.



1968 ஆகஸ்ட் 22]

திரு. கோ. பூவராகன் : நெல்லுக்குப் பர்த்தி கரும்பு போடு என்று நான் சொல்லவில்லை. "கரும்பு பயிரிடுகிறவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கமாட்டேன் என்றபோது, எப்படிச் சொல்ல முடியும்? வழக்கமாகப் பயிரிடுகிற கரும்புதான் பயிரிடுவார்கள், யார் தடுக்க முடியும்?" என்று சொன்னேன். (திரு. எஸ். இராமச்சந்திரன். துரோகி என்றீர்கள்.)

நான் யாரையும் துரோகி என்று சொல்லவில்லை. கரும்பு பயிரிடுகிறவர்கள் துரோகி என்று ஒரு அமைச்சர் தான் சொன்னார். பத்திரிகையில் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : எந்த அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று கேட்கிறேன்.

திரு. கே. விநாயகம் : பத்திரிகையில் வந்திருக்கிறது என்கிறார்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உங்கள் பத்திரிகையில் ஆயிரத்தெட்டு வரும்.

திரு. கோ. பூவராகன் : 'முரசொலி' பத்திரிகையிலேயே வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : எங்கே காட்டுங்கள் ஆதாரத்தை. எந்த மந்திரி அப்படிச் சொன்னார்கள் என்பதை நிரூபியுங்கள்.

திரு. வ. சார்ஜ் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சபையில் ஓர் உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்கிறபோது அதற்கு ஆதாரமான அவ்வளவு டாக்குமெண்டுகளையும், புத்தகங்களையும் சட்டப் பேரவைக்குக் கொண்டுவருவது என்பது சாத்தியமானதல்ல. உடனே கொண்டுவா என்றால் லைப்ரரியையே சுமந்து வர வேண்டியதுதான். இந்தவிதமான நிர்ப்பந்தம் அளிப்பது சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தங்கள் பணியைச் செய்வதற்கு இடைஞ்சலாக இருக்காதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : துரோகி என்று குறிப்பிட்டது ஒரு மந்திரி என்று சொன்னார். அந்த மந்திரி பெயரைக் குறிப்பிடவேண்டும் என்றுதான் சொன்னேன். அதற்கு ரெக்கார்டு வேண்டியதில்லை.

திரு. கோ. பூவராகன் : சந்தர்ப்பம் வரும்போது ஆதாரத்தோடு சொல்கிறேன்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : நெல்லோ, கரும்போ பயிரிடுவது நானும் அல்ல. திரு. பூவராகனும் அல்ல. நாங்கள் பயிரிடுவது மந்திரிகான். (சிரிப்பு) அவர் அரசியலுக்காக அப்படிப் பேசினாரே தவிர அதைப் பொருட்படுத்த வேண்டிய தேவை இந்த மன்றத்திற்கு இல்லை என்று சொல்லிவிட விரும்புகிறேன்.

வெட்டுதல் திட்டம் ஒன்று வைத்திருக்கிறார்கள். அதற்குக்கூட பிளாஸ்டிங் மெட்டீரியல்ஸ் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பணம் கொடுப்பதற்கு மத்திய சர்க்கார் தயங்கினால் இவற்றையாவது கொடுத்தால் நல்லது. அதையாவது கொடுப்பதற்கு மத்திய சர்க்கார் வழி செய்வார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன். நம்முடைய விவசாய இலாகாவைப் பொறுத்த வரையில் வேலை சரிவரச் செய்வதில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள எனக்கு வருத்தமாக இருக்கிறது. நம்முடைய விவசாய இலாகாவுக்கு சில விஷயங்கள்பற்றிக் கடிதம் எழுதினால் வேகமாகச் செய்வதில்லை. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். 6—5—1968-ல் The Agricultural Extension Officer, Kadayanallur, and Additional Agricultural Extension Officer, Idaikal, are instructed to collect 1 kg. of ash at Agarakattu village which is the refuse in palm jaggery making as instructed in the staff meeting and send 500 grams of it to Agricultural Chemist to Coimbatore to analyse for potash and other materials for recommending coconut and tapioca. This should be done immediately and the fact may be reported. என்ற முறையில் என்னுடைய பகுதியில் உள்ள சாம்பலை அனலைஸ் பண்ணவேண்டுமென்று வேண்டுகோள் விடப்பட்டது.

உடனடியாக, மாவட்ட விவசாய அதிகாரி அவர்கள் 6—5—1968-ல் கோயம்புத்தூரில் இருக்கக்கூடிய அக்ரிகல்சரல்
12-00 ந.ப. ரிசர்ச் இன்ஸ்டிடியூஷனுக்கு எழுதினார்கள்.

I invite your kind attention to the reference cited. Thiru A. R. Subbiah Mudaliar, M.L.A., intends to use this ash to his coconut trees and tapioca and he requires the information on the actual ingredient and percentage of nutrients. I reque st you to please send the analytical report immediately. This may be treated as specially urgent and communicate the result. அதாவது 6—5—1968-ல் அனுப்பப்பட்டது. மறுபடியும் 23—7—1968-ல் இரண்டு மாதம் கழித்து, உடனடியாக அனலைஸ் பண்ணி அனுப்ப வேண்டுமென்று கேட்டு எழுதினார்கள். இன்று வரை, மூன்று மாதங்கள் ஆகியும் பதில் வரவில்லை. நான் டாபியோகாவைப் பயிரிட்டுக் கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகிறது. இன்றுவரை அனலிடிகல் ரிப்போர்ட் வரவில்லை. இதைப் பார்க்கும்போது சர்க்கார் எவ்வளவுதான் அக்கறை எடுத்துக் கொண்டாலும் இருக்கின்ற அதிகாரிகள் ஒத்துழைப்பு ஆங்காங்கு இல்லாததனால்தான் பல திட்டங்கள் குறைந்திருக்கின்றன என்பது தெரிகிறது. கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள்கூட, கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய குறைகளைப் பற்றியெல்லாம் வேகமாகச் சொல்லுவார்கள். அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, அவற்றை எல்லாம் நடைமுறையில் ஒழுங்குபடுத்துவதற்கு இலாகாவில் இருக்கக்கூடியவர்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை. உற்பத்திப் பெருக்கத்திலே





சர்க்காருக்கு உற்சாகம் இருந்தாலும் அமல் நடத்தக்கூடிய அதிகாரிகள் தங்கள் காரியங்களைச் செவ்வனே செய்வதற்கு வழி வகுக்கவேண்டும்.

ஸ்ப்ரேயிங்குக்கு பவர் ஸ்ப்ரேயர் இருக்கிறது. அந்தத் திட்டத்தைச் செவ்வனே நடத்த வேண்டுமென்றால் அதற்கு ஒரு திட்டம் வகுக்க வேண்டும். பிரிவேன்டிவ் மெஷர்ஸ் ஆக பவர் ஸ்ப்ரேயரை வைத்து ஆங்காங்கு இருக்கும் பயிர்களுக்கு மருந்து அடிக்க வழி செய்து விட்டால் நல்லது. பெஸ்ட் ஆக்டை அமல் நடத்தும் நிலைமையை ஏற்படுத்திவிட்டால் நோய் குறைந்து விடும். நோய் குறைந்தால் உற்பத்தி பெருகும். இது போன்ற காரியங்களை எல்லாம் செய்வதற்கு நண்பர் கருத்திருமன் அவர்கள் ஒரு திட்டத்தைச் சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். பொதுப்படையாகத் தீர்மானம் கொண்டு வருவது சர்க்காரைக் குறை சொல்லுவதற்கான முறையில் அமைந்திருக்கிறதே தவிர, சர்க்காருக்கு யோசனை சொல்லக் கூடிய வாய்ப்பு ஏற்படவில்லை. அவ்வாறு யோசனைகளைக் கூறுவதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒரு பண்பாடாக வைத்துக் கொண்டால், அதனால் நிச்சயமாக நாடு முன்னேறும். நாம் இன்று எப்படி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதற்கு வழி வகுத்துக் கொடுக்கவேண்டும். நெல் விலையை ஏற்றிவிட்டால் சாப்பிடுகிறவர்களுக்கு விலை ஏறி அவர்கள் விலையேறிவிட்டதே என்று கூறும்படியான நிலை ஏற்படும். ஆகவே, உற்பத்திப் பெருக்கத்திற்கு எப்படி வழி என்பதைப்பற்றி வழி வகுத்துக் கொடுக்க வேண்டும். அந்த முறையில் 1966-லேயே தீர்மானிக்கப்பட்ட 161 ரெகமன்டேஷன்கள் இருக்கின்றன. அதில் பெரும் பகுதியை அமல்படுத்திவிட்டால், உற்பத்தி பெருகும் என்பதைச் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தனி நபர் தீர்மானங்கள் என்ற வரிசையில் பல தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது கொடுத்திருக்கக்கூடிய தீர்மானத்தைப் பொறுத்த வரை ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கின்றது. கவர்ன்மெண்ட் பிசினசுக்கெல்லாம் விவாதங்கள் நடக்கும்போது எப்படி குறிப்பிட்ட கால அளவு பேச வேண்டுமென்ற முறை இருக்கிறதோ, அதேபோன்று இதற்கும் கால வரையறை ஏற்படுத்தினால், மற்றத் தீர்மானங்களெல்லாம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இது முதல் தீர்மானம், முக்கியமான தீர்மானம். அடுத்த தீர்மானம் அடுத்த 'நான்-அபிஷியல் டே' அன்று வரும். முதல் தீர்மானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மற்றத் தீர்மானங்களும் முக்கியமான தீர்மானங்கள்தான் என்பதைத் திரு. கருத்திருமன் அவர்கள் உணரவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவரவர்கள் தீர்மானம் அவரவர்களுக்கு முக்கியமானதாகத்தான் இருக்கும். இப்போது இந்தத் தீர்மானத்தின் மீது எவ்வளவு பேர் பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிறார்களோ, அவ்வளவு பேரும் பேசி பதில் சொல்லிய பிறகு அடுத்த தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** 'நான்-அபிஷியல் டே' இருப்பதே குறைவு. போன ஆண்டு ஒரே ஒரு நாள் இருந்தது. இப்போது மற்றொரு நாள் வந்திருக்கிறது. மற்றவர்களுடைய தீர்மானங்களும் இருக்கின்றன. ஒருவருடைய தீர்மானத்தையே நான்கு நாட்கள்கூட விவாதித்துக் கொண்டிருக்கலாம். அந்தத் தீர்மானம் முதலிலே இருக்கிறது என்ற காரணத்திற்காக மற்ற அங்கத்தினர்கள் கொடுத்திருக்கின்ற தீர்மானங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காத நிலைமை இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களா என்பதை அவரையே கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராசன்) :** இங்கே பேசுவதற்குக் கொடுக்கப்பட்ட பெயர்ப் பட்டியலைப் பார்க்கும்போது எவ்வளவு குறுகிய நேரம் ஒதுக்கினாலும் அடுத்த தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுவதற்கு நேரம் இருக்காது என்று புலனாகிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்திலேயே தொடர்ந்து விவாதம் நடைபெறும்.

* **திரு. பு. செ. முத்துச்செல்வன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை வழங்க விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், உணவு உற்பத்தி பெருக்குவதற்காக நில வளம் மேலோங்க வேண்டுமென்ற அடிப்படையில் நிலப் பண்பாட்டுத் திட்டங்கள் என்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிலப் பண்பாட்டுத் திட்டங்கள் இன்றும் நம்முடைய அரசால் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு நல்லபடியாக நடந்து வருகின்றன. அந்த வகையிலேதான் கிணறுகள் தோண்டவும், நிலத்தைப் பண்படுத்தவும் கடன்கள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு கடன்கள் வழங்குகின்றபோது, முன்பு இருந்த நிலையை மாற்றி, அரசினர் கடனை வழங்கினால் மட்டும் போதாது என்ற அளவில் வங்கிகளின் மூலமாகவும் கடன் வழங்கும் நல்ல காரியத்திலே இந்த அரசு தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது. அதை எப்படி நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறந்து விட்டார்கள் என்று தெரியவில்லை. இந்த அரசு செய்த நல்ல காரியங்கள் எல்லாம் அவர்களுடைய கவனத்திற்கு வராமல், அரசியல் நோக்கத்திற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பார்களோ என்று கருத வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

அவர்கள், மண்ணரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். மண்ணரிப்புத் திட்டம் என்று சொல்லு





கிறபோது அது சமவெளிப் பிரதேசங்களுக்குப் பயன்படுத்தக் கூடியது அல்ல என்பதையும் உணர வேண்டும். மண்ணரிப்புத் திட்டம் சரிவான பிரதேசங்களுக்குப் பயன்படலாமே தவிர, சமவெளிப் பிரதேசங்களுக்கு மண்ணரிப்புத் திட்டம் தேவையில்லை. சமவெளிப் பிரதேசங்களில் மண்ணரிப்புத் திட்டத்தை மேற்கொண்டால், அதனால் பாதகந்தான் ஏற்படும். புஞ்சை நிலத்தில் மண்ணரிப்புத் திட்டத்தை மேற்கொண்டு அதனால் புஞ்சைப் பயிர்களில் தண்ணீர் தேங்கி பயிர்கள் அழியக்கூடிய நிலைமையையும், மண்ணின் தன்மை மிகவும் புல புலவென்று இருக்கவேண்டியது இருக்கக்கூடிய நிலைமையும் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, மண்ணரிப்புத் திட்டத்தை அமல் நடத்துகிறபோது எந்தெந்த இடத்திற்கு அவசியமோ, அந்தந்த இடத்தில் மட்டும் திட்டத்தைக் கைக்கொண்டு இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. ஆகவே, அந்தத் திட்டம் இப்போது நடைபெறவில்லை என்று கருதுவது சரியாகத் தெரியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன் சார். கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, மண்ணரிப்புத் திட்டத்தை எல்லா இடத்திலும் நிறைவேற்றவேண்டுமென்று நான் சொன்னதாகச் சொன்னார்கள். எந்தெந்த இடங்களில் மண் அரித்துக் கொண்டு போகிறதோ, அங்குமட்டுந்தான் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னேனே தவிர, வேறு அல்ல.

**திரு. பு. செ. முத்துச்செல்வன் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அந்தத் திட்டம் சமவெளிப் பிரதேசத்திற்குத் தேவையில்லையென்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

சிறு பாசனத்திற்குச் சிறப்பு நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டார்கள். சிறு பாசனத் திட்டம் என்பதற்கு தமிழக அரசு வந்த பிறகுதான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்களே ஒப்புக் கொண்டார்கள்.

சிறுபாசனத் திட்டங்களுக்கு முன்பெல்லாம் ஏனோ முக்கியத்துவம் அளிக்கப்படாமல் ஏரிகள் எல்லாம் தூர் எடுக்கப்படாமல் இருந்தன. இருபது ஆண்டு காலம் ஆட்சி செலுத்தியும் பல ஏரிகளில் தூர் எடுக்கப்படவில்லை. பல வாய்க்கால்களில் தூர் எடுக்கப்படவில்லை. அதனால் பல வாய்க்கால்களில் தண்ணீர் சரிவர போக முடியாத நிலையிருக்கிறது. அதற்காக இப்போது ஒரு பைலட் ப்ளான் போட்டு ஆண்டு ஒன்றுக்கு 20 கோடி ரூபாய் வீதம் செலவு செய்து அதன் வாயிலாக நூறு கோடி ரூபாய் திட்டம் என்றளவில் விவசாயத்தைப் பெருக்குவதற்காக மத்திய அரசினிடம் நிதி கோரப்பட்டிருக்கிறது. அந்த நிதியைக் கோர நாங்கள் தயார் என்று சொல்லாமல் விலைவாசியை மட்டும் ஏற்ற நான் தயார், அதற்காக இந்த அரசாங்கத்தோடு சேர்ந்து மத்திய அரசை எதிர்த்துப் போராடத் தயாராயிருக்கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள்.

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [1968 ஆகஸ்ட் 22

போன்றவர்கள் முயற்சி செய்யலாம். பேக்டரி விலையைத் திடீரென்று உயர்த்தியிருக்கிறார்கள். சர்க்கரை உற்பத்தி செய்கிறவர்கள் கூட்டான பொறுப்புடன் இருப்பதால் அவர்கள் கேட்டவுடன் அதிகவிலை கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் நெல் உற்பத்தியாளர்கள் அதேமாதிரி ஏன் எங்களுக்கும் கொடுக்கக் கூடாது என்று கேட்கலாம். உரம், முன் கொடுத்த விலையைவிடத் திடீரென்று பேக்டரி விலையைக் கூட்டுவதன் காரணமாக, உற்பத்தி செலவு கூடுகிறது. இதில் மத்திய சர்க்கார் முயற்சி செய்தால் விலையை கூட்ட வேண்டிய நிலைமை ஏற்படாது. மக்கள் அதன் மூலம் பாதிக்கப்படமாட்டார்கள் என்று நினைக்கிறேன். உற்பத்தி செய்கிறவர்களுக்கு அதிகமாகக் கிடைப்பதற்கு இரண்டு வழிகளில் முயற்சி செய்யலாம். சாதாரணமாகப் பார்க்கலாம், சர்க்கார் கொள்முதல் விலையை தவிர தரகர்களுக்குக் கொடுப்பதன் மூலமாக அதிக செலவு ஏற்படுகிறது. இதைத் தவிர ஹல்லிங் சார்ஜஸ் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தவிட்டுக்கு ஒரு விலை போட்டு கணக்குப் பார்க்க வேண்டும். அதைப் பார்த்ததாகத் தெரியவில்லை. இப்படியெல்லாம் செய்வதன் மூலமாக இரண்டு மூட்டைகளுக்கு 18 ரூபாயிலிருந்து 22 ரூபாய் வரையில் அதிகமாகிறது. இதன் காரணமாக மிடில்மென் ஃபிராபிட்தான் அதிகம் போகிறது. சர்க்கார் வேறு தன்னுடைய மேற்பார்வைக்காகவென்று 5 சதவீதத்திலிருந்து 7 சதவீதம் வரையிலும் எடுக்கிறார்கள். இவைகளெல்லாம் வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கு, கன்ஸ்யூமர்களுக்குப் போய்ச் சேருகிறது. உற்பத்தி செய்கிறவர்களுக்கும் ஊக்கம் கொடுக்கக்கூடிய முறையில் வேறு சில ஏற்பாடு செய்யலாம். ஹல்லிங் லைசென்ஸ் முறையைத் தளர்த்தலாம். இப்படி சாதாரண முறையில் ஹல்லிங் செய்வதை விட, அந்த வார்த்தை எனக்குச் சரியாகத் தெரியவில்லை. ரப்பர் முறை மூலமான ஷெல்லிங் உபயோகப்படுத்தினால் அரிசி அதிகமாகக் கிடைக்கிறது. சாதாரண முறையில் அரிசி குறைவாகத் தான் கிடைக்கிறது. தஞ்சாவூரில் வைத்திருக்கும் ஹல்லிங் புராஸஸைப் போல் மற்ற மாவட்டங்களிலும் சர்க்கார் யூனிட்டுகள் வைப்பதற்குத் தயாராக இருந்தால் கூட்டுறவு அடிப்படையில் அரிசி அதிகமாகக் கிடைக்கக் கூடிய நிலைமை இருக்கும். நெல்லூர் அரிசியைப் பெருமையாகச் சொல்வதற்குக் காரணம், ஆந்திரப் பிரதேசத்தில் 3 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் 3 ஹார்ஸ் பவர் அல்லது 5 ஹார்ஸ் பவரில் இயங்கும் ஹல்லர்களை வைத்துக் கொள்வதற்கு பெர்மிஷன் உண்டு. லைசென்ஸ் முறை கிடையாது. லைசென்ஸ் இல்லாமல் ஹல்லிங் செய்து அரிசியாகக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பு இங்கேயும் ஏற்பட்டால் ஒரு குவிண்டாலுக்கு 5 ரூபாய்க்குமேல் உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஒரு குழு அமைத்து ஆந்திரப் பிரதேசத்திற்குச் சென்று தெரிந்துகொண்டு வந்து நம்முடைய மாநிலத்திலும் அப்படிச் செய்தால் கூடுதலாக அரிசி கிடைக்கும். இதைச் செய்யவேண்டுமென்பதுதான் என்னுடைய



1968 ஆகஸ்ட் 22] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

தாழ்மையான அபிப்ராயம் ஆகும். ஒரு நாளும் நெல்லினுடைய விலையை உயர்த்தக்கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணம். கேப்பை, சோளம் போன்றவற்றையெல்லாம் ஃபிரி மார்க்கெட்டில் வைத்திருக்கிறார்கள், இது நல்லது. நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்து இருக்கிறார்கள். கேப்பை, சோளம் போன்றவற்றிற்கு விலை 10 சத வீதத்திலிருந்து 15 சதவீதம் வரை நிர்ணய விலையிலிருந்து குறைந்திருக்கிறது. இப்பொழுது புஞ்சை தானியங்களை மாவட்டத்திற்கு மாவட்டம் கொண்டு போவதற்குத் தடை இல்லை. அதை மாநிலத்திற்கு மாநிலம் போவதற்கு தடை செய்யாமல் இருந்தால் உற்பத்தி செய்கிறவர்களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். நெல் சம்பந்தப்பட்டவரையில் இப்பொழுது கொடுக்கக் கூடிய விலை சரி என்றுதான் நினைக்கிறேன். உற்பத்தி சம்பந்தப்பட்டவரையிலும் எப்படி அதிகமாக உற்பத்தி செய்யலாம் என்பதைப்பற்றி 1966-ஆம் ஆண்டிலே ரிப்போர்ட் ஆப் தி கமிட்டி ஆன் அக்ரிகல்சுரல் புரடக்ஷன் என்ற புத்தகத்திலே 161 சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குத் தலைமை வகித்தவர் புட் கமிஷனர் ஆக இருந்த மிஸ்டர் வர்கீஸ் அவர்கள். அது இன்னும் புத்தக ரூபத்தில்தான் இருந்து கொண்டிருக்கிறது. அவற்றிலே பெரும்பகுதியான சிபாரிசுகளை நடைமுறைக்குக் கொண்டுவந்தால் இந்தத் தீர்மானத்தையே கருத்திருமன் அவர்கள் கொண்டுவந்து இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே மறுபடியும் அந்த ரிப்போர்ட்டை பரிசீலனை செய்து அமலுக்குக் கொண்டுவந்தால் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். திரு. இராமச்சந்திரன் அவர்கள் சொன்னபடி மத்திய சர்க்காரிடம் கடன் கேட்டோம், மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை, ஒரு பகுதி கொடுக்கப்போவதாக, அதாவது 8 கோடி ரூபாய் வரை கொடுக்கப்போவதாக பத்திரிகையில் பார்த்தோம். அதுகூட வரவில்லை, அது கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும். உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால் எல்.ஐ.சி. போன்றவற்றிலிருந்து கடன் கேட்கலாம். சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் என்ன என்ன வைத்திருக்கிறோம், என்ன என்ன திட்டங்களுக்கு எவ்வளவு தொகைகள் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லி அதற்காக ஒரு தனிக் கடனை மாநில ரீதியில் எழுப்பினால் அந்தந்தப் பகுதியில் உள்ள மக்கள் கண்டிப்பாகக் கொடுப்பார்கள். மணிமுத்தாறு திட்டத்தை எடுத்துக் கொண்டால் வாலண்டரி லோன்தான் கொடுக்கப்பட்டது. 10 லட்ச ரூபாய்தான் எதிர்பார்த்தார்கள், உடனடியாக அந்தப் பகுதி மக்கள் 15 லட்சம் ரூபாய் வரை வாரி வாரிக் கொடுத்தார்கள். அந்த முறையில் கடன் எழுப்பினால், அந்தந்தப் பகுதி மக்கள் தாராளமாகக்கொடுக்க முன்வருவார்கள். அதையும் யோசிக்க வேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதற்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது டீசில்டிங்தான் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு இது சம்பந்தமாக அதிகமாகக் கவனிக்கிறார்கள், அதைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. அதைப்போன்று எல்லா இடங்களுக்கும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிணறு

[திரு. பு. செ. முத்துச்செல்வன்] [1968 ஆகஸ்ட் 22

விலைவாசிகளைக் குறைக்க வேண்டும் என்பதன் அவசியத்தை அவர்கள் உணர்ந்திருப்பார்களானால், விலைவாசியை ஏற்றுவதற்கு நான் தயாராயிருக்கிறேன் என்று சொல்லி ஏழை எளியவர்களின் வயிற்றெரிச்சலைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். நல்ல இருதயம் படைத்த ஏழை எளியவர்களின் வயிற்றெரிச்சலைப் பெற்றுக் கொள்ளாமல் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதற்காக இந்த 100 கோடி ரூபாய் திட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் இந்த நிதியை பெற்றுத் தந்தால் இன்னும் சிறப்பான முறையில் சிறு பாசனத் திட்டங்களை நாம் நிறைவேற்ற முடியும். இப்போது பல இடங்களில் தூர் எடுக்கப்பட்டிருக் கிறது. பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் ஆற்ற லினாலும், திறமையினாலும் எந்தவிடத்தில் வாய்க்காலில் தண்ணீர் இல்லை என்று சொன்னாலும் அந்த இடத்திற்கு நேராகச் சென்று பார்த்து உடனடியாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார். தஞ்சைத் தரணியில் தண்ணீர் வரவில்லை என்று சொன்னவுடன் விரைவில் சென்று பார்த்து தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்து கொடுத்தார்கள். காடாரம்பப் பகுதிகளில் உள்ள ஏரிகளில் தூர் எடுக்க வேண்டுமென்று சொன்னவுடன் விரைவில் அங்கு சென்று நிலைமையை ஆராய்ந்து நல்ல கருத் தரங்குகளை எல்லாம் கூட்டி வேண்டிய உத்தரவுகளை உடனடியாகப் பிறப்பித்து நல்ல தீர்வு கண்டார்கள். இப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறபோது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பது வியப்பிற்குரியதாக இருக்கிறது. 29—11—1967 அன்று கொடுத்த தீர்மானம் என்று சொல்கிறார்கள். அதற்கு முன்கூட்டியே, இந்த அரசு பொறுப் பேற்ற நாள் தொடங்கி சிறு பாசனத் திட்டங்களில் நல்ல கவனம் செலுத்தி, வேண்டிய தொகை ஒதுக்கப்பட்டு அவை நல்லமுறையில் பயன்பட்டு வருகின்றன. ஆகவே அவர்கள் இதைச் சொல்வது தேவையற்றது. சிறப்பு நிதி வேண்டுமென்று மத்திய அரசோடு போராட எதிர்க்கட்சியில் உள்ள நல்ல இருதயம் படைத்தவர்கள் இந்த அரசுக்கு உதவ முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கொள்முதல் பற்றிச் சொன்னார்கள். அதேநேரத்தில் கொள்முதல் குறித்து சரியான கொள்கை கடைப்பிடிக்கப்பட வில்லை என்று சொன்னார்கள். முன்பிருந்த அரசு கடைப்பிடித்த கொள்கையைவிட இந்த அரசு சிறப்பான முறையில் கொள்முதல் கொள்கையை நிறைவேற்றி வருகிறது. முன்பெல்லாம் ஏழை எளியவர்களிடத்தில்தான், அவர்களை வாட்டி வதைத்து, அவர் களைக் கசக்கிப் பிழிந்து, ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களிடம் சென்றுதான் அதிகாரிகள் நெல் வசூலிப்பார்கள். என் பகுதியை எடுத்துக்கொண்டால், முன்பிருந்ததைவிட இப்போது சிறப்பான முறையில் கொள்முதல் நடைபெற்று வருகிறது. ஒரு ஏக்கருக்குக் குறைந்த நிலம் உள்ளவர்களுக்கு கொள்முதலிலிருந்து விலக்கு அளிக்கப்படவேண்டுமென்ற என் எண்ணத்தைத் தெரிவித்து அதன் வாயிலாக 13 லட்சம் பட்டா உரிமையாளர்களுக்கு இந்த அரசு



1968 ஆகஸ்ட் 22] [திரு. பு. செ. முத்துச்செல்வன்]

நன்மை செய்திருக்கிறது. கொள்முதல் விலையை அதிகரிக்க வில்லையே என்று சொன்னார்கள். அதுவும் தவறான ஒரு வாத மாகும். முன்பு போனஸாக கொடுக்கப்பட்டு வந்த இரண்டு ரூபாயை இப்போது விலையோடு சேர்த்து உயர்த்திக் கொடுக்கப் படுகிறது. முன்பு போனஸ் என்று சொல்லி யார் குறிப்பிட்ட நெல்லைவிட அதிகம் கொள்முதலுக்காகக் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது கொள்முதல் செய்யப்படுவதற்கெல்லாம் இரண்டு ரூபாய் அதிகரித்துக் கொடுக்கப்படுகிறது. அதைச் சொல்லி யிருந்தாலும் நன்றாகயிருந்திருக்கும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முன்பு கொடுத்ததைவிட இரண்டு ரூபாய் அதிகமாக கொடுக்கவில்லை. முன்பு போனஸோடு ரூ. 48 விவசாயிகளுக்குக் கிடைத்துக்கொண்டிருந்தது. இப் போதும் அதுதான். இப்போது அதிகமாகக் கொடுக்கப்பட வில்லை.

திரு. பு. செ. முத்துச்செல்வன் : முன்பு போனஸாகக் கொடுக்கப் பட்டு வந்தது இப்போது விலையோடு சேர்த்துக் கொடுக்கப்படு கிறது. முன்பு போனஸ் எல்லோருக்கும் சரிவர கொடுக்கப்பட வில்லை என்பது என் கருத்து. இப்போது விலையோடுகூட இரண்டு ரூபாய் அதிகரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்த சர்க்கார் அதிகரித்துக் கொடுக்கவே இல்லை. முன்பு போனஸ் கொடுத்தார்கள். அப்போது ரூ. 48 கிடைத்தது. இப்போதும் அதே விலைதான் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

திரு. பு. செ. முத்துச்செல்வன் : விலையை உயர்த்த வேண்டு மென்று சொன்னார்கள். உணவுப் பொருள் என்பது மற்றப் பொருள்களைப் போல் அல்ல. அதை வாங்கி உண்பவர்களின் நிலையைக் கவனிக்கவேண்டும். தினந்தோறும் வேளாவேளைக்கு உணவுப் பொருள் வேண்டியிருக்கிறது. கரும்பின் விலை அதிகரித்தி ருக்கிறது என்று சொன்னால், சர்க்கரை உபயோகிப்பவர்கள் மிகவும் குறைவு. 25 சதவீதம் தான் சர்க்கரை உபயோகிப் பவர்கள், வருடத்திற்கு நான்கைந்து நாட்கள்தான் ஏழை எளியவர்கள் சர்க்கரையை உபயோகிக்கிறார்கள். ஆகவே அதன் விலையில் ஏற்படும் உயர்வு அவர்களை எந்தளவிலும் பாதித்து விடாது. சர்க்கரையைப் பயன்படுத்தாமல் எந்த ஏழையும் தன் வாழ்க்கையை நடத்த முடியும். ஆனால் உணவுப் பொருள்கள் என்று வரும்போது அந்தநிலை இல்லை. ஆகவேதான் உணவுப் பொருள்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதன் விலைவாசி குறைந்தால், மற்றப் பொருட்களின் விலைவாசி தானாகவே குறையும் என்ற கொள்கை அடிப்படையில்தான் இன்று கொள் முதலுக்கு ஒரு நியாயமான விலை கொடுக்கப்பட்டு வருகிறது. அதன் வாயிலாகத்தான் முன்பு கடலைப் பிண்ணாக்கு ரூ. 48, 50 என்று விற்றது இன்று ரூ. 34, 35 என்றளவிற்கு விற்கிற நிலை

ஏற்பட்டிருக்கிறது. அதேபோல் ஆமணக்கு பிண்ணுக்கு 32 ரூபாய் விற்றது இன்று 17, 18 ரூபாய் என்றளவில் விற்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. உரத்தின் விலை குறையவில்லையே என்று சொன்னால், அதற்கு இந்த அரசு எந்தவிதத்திலும் பொறுப்பில்லை. மாண்புமிகு எதிர்கட்சி நண்பர்கள் ஒத்துழைப்பு தருவார்களேயானால் இந்த அரசு அதன் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, உர விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி மத்திய அரசுடன் வாதாட முடியும். அதற்கான ஆதரவை நல்காமல் எதையாவது குறை சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லி காலத்தைக் கழிக்க வேண்டுமென்று நினைப்பது சாலச் சிறந்ததல்ல என்று சொல்லி இந்த அளவோடு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. டி. மார்டின் :** தலைவர அவர்களே, என்னுடைய கட்சித் தலைவர் கொடுத்திருக்கிற தீர்மானத்தையொட்டி அதை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். எதிர்க் கட்சியிலிருந்து ஒரு தலைவர் கொடுத்திருக்கிற தீர்மானம் என்ற ஒரு கருத்தை மனதில் கொண்டு ஆளும் கட்சியிலிருந்து பேசக்கூடிய உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பதைப் பார்த்து உண்மையில் வியப்பாக இருக்கிறது. உணவு உற்பத்தியை பெருக்கும் வகையில் ஒரு தீர்மானத்தை எதிர்க் கட்சியிலிருந்து கொடுக்கும்போது ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் எதிர்க் கட்சிக்காரர்கள் கொடுத்திருக்கிறார்களே என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் கொடுத்திருக்கிற தீர்மானத்தின் சாரத்தைப் பார்த்து அவர்கள் ஆதரிப்பார்களேயானால், அதைப் பற்றி பெருமைப்பட்டிருக்க முடியும். உணவு உற்பத்தி குறித்து எல்லோரும் கவலை கொள்கிறோம். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது எல்லோருடைய விருப்பமுமாகும். அதில் இந்த சபையில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது என்று கருதுகிறேன். மேலும் திராவிட முன்னேற்றக் கழகம் தன் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட ஒரு சிலவற்றை அடிப்படையாக வைத்துக் கொடுக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தை அவர்கள் எதிர்ப்பதன்மூலம் தேர்தல் அறிக்கையில் அவர்கள் கூறியவற்றை உண்மையில் இனி அவர்கள் நடைபெறச் செய்ய மாட்டார்களோ என்ற பயம், அச்சம் ஏற்படுகிறது. எனக்கு முன்பு பேசிய நண்பர் ராமச்சந்திரன் அவர்கள் மத்திய சர்க்கார் இந்த மாநில சர்க்காருக்குக் கொடுத்த கடனுக்கான வட்டியைக் கொஞ்சம் தள்ளி வைக்கக் கூடாதா என்று கேட்டார்கள். மாநில சர்க்காரிடமிருந்து வட்டி வசூல் செய்யும் காரணத்தால்தான் இந்தவிதமான முன்னேற்றமான வேலைகளை மாநில சர்க்கார் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து கடனைப் பெற்றுக்கொண்ட பணத்தை தொழில் முன்னேற்றத்திற்காகவும், இதர இனங்களுக்காகவும் கடனைக் கொடுத்து அதன் மூலம் இந்த மாநில சர்க்கார் சுமார் 19 கோடி ரூபாய் வட்டியாளர்களிடமிருந்து பெறுகிறது. ஆனால் தாங்கள் பெற்றுக்கொண்ட





கடனுக்கு மத்திய சர்க்காருக்கு 14½ கோடி ரூபாய் வட்டியாகச் செலுத்துகிறது. மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றுக்கொண்ட பணத்தை மற்றவர்களுக்குக் கடனைக் கொடுத்து வட்டி வருமானம் பெறும் மாநில சர்க்கார், 19 கோடி ரூபாய் வருமானம் பெற்றுக்கொண்டு 14½ கோடி ரூபாயை வட்டியாகத் திருப்பிக் கொடுப்பதைப் பெரிய பிரச்சினையாக வைத்து, ' மத்திய சர்க்காரைப் பாருங்கள், வட்டியைத் தள்ளிக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் ' என்று கூறுவதைப் பார்க்கும் பொழுது உண்மையிலேயே உண்மையை மறந்து பேசுகிறார்கள் என்று சொல்வதா அல்லது உண்மையைத் தெரிந்து இந்தக் குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள் என்று சொல்வதா என்று தெரியவில்லை. உண்மையிலேயே, மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கிய கடனிலிருந்து கடனைக் கொடுத்திருப்பவர்களிடமிருந்து இனிமேல் வட்டி வசூலை நாங்கள் செய்ய மாட்டோம் வட்டி வசூலைத் தள்ளிவிட்டோம் என்று சொன்னால் உண்மையிலேயே என்னுடைய கட்சித் தலைவரும் நாங்களும், மத்திய சர்க்காரைப் பார்த்து, மாநில சர்க்கார் உங்களிடமிருந்து வாங்கிய கடன் பணத்தை வேறுவிதமாகக் கொடுத்து வட்டி வசூல் பண்ணவில்லை, அவர்கள் 19 கோடி ரூபாயைத் தள்ளி விட்டார்கள், அந்த வட்டியைத் தள்ளிவிட்டு மாநிலத்தின் நன்மைக்காக கொடுத்திருக்கிறார்கள், எனவே நீங்கள் 14 கோடி ரூபாய் வட்டியைத் தள்ளிவிடுங்கள் என்று கேட்பதற்கு முயற்சி செய்யலாம். ஆனால் அவர்களிடமிருந்து வாங்கிய கடன் தொகையைக் கொண்டு 19 கோடி ரூபாய் வட்டியாக வாங்கிக்கொண்டு 14½ கோடி ரூபாயைத் திருப்பிச் செலுத்துவதில் குறை கூறுவதை நினைத்தால் உண்மையிலேயே அவர்கள் கூறும் குறையில் நேர்மையான குற்றச்சாட்டு இல்லை என்று கருதுகிறேன்.

மேலும் இந்த ஆட்சி அமைந்த பின்பு உண்மையிலே விவசாய துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று நினைக்கும்பொழுது தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சைத் தரணியிலே விதைக்கும் காலத்திலும், அறுவடை காலத்திலும் விவசாயக் கூலிகளுக்கும், மிராசுதாரர்களுக்கும் அடிக்கடி மோதல் ஏற்பட்டு சில நேரங்களில் போராட்டங்கள் ஏற்படுகின்ற காரணத்தினால், விவசாய உற்பத்தி தடைபடுகிறது, உற்பத்தி குறைவும் ஏற்படுகின்றது. உண்மையிலேயே விவசாயிகள்—விவசாயிகள் என்று கூறும்பொழுது என்னைப் பொறுத்தவரையில் சாகுபடி செய்பவர்களைத்தான் கருதுகிறேன்—சாகுபடி செய்யக்கூடியவர்களுக்கு நியாயமான முறையில் கூலி கிடைக்க வேண்டும். அதற்காக விவசாயக் கூலி நிர்ணயச் சட்டம் என்று ஒரு சட்டத்தை இந்த ஒன்றே முக்கால் வருஷத்தில் கொண்டு வந்திருக்கலாம். அவ்வாறு கூலி நிர்ணயம் செய்து விட்டால், கூலி வேலை செய்பவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கும். அவ்வாறு ஏற்பட்டிருந்தால் இப்படிப்பட்ட சர்ச்சைகள் தஞ்சைத்

தாணியில் ஏற்பட்டு இருக்காது. இனிமேலாவது சீக்கிரமாக அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து இந்த சர்ச்சைகள் எல்லாம் இல்லாத நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கூறுகின்றேன்.

சில சமயங்களில் சாகுபடியாளர்கள் தங்களுக்கு வசதியில்லாத காரணத்தால், அதிகப் பணம் முதலீடு செய்ய முடியாத காரணத்தால், உரம் போன்றவைகளை வாங்க முடியாத காரணத்தால் உற்பத்தி குறைகிறது. அந்தச் சமயத்தில் சாகுபடி செய்பவர்கள் தங்களுடைய தேவைக்கேற்ப உற்பத்தி செய்தால், போதுமானது என்ற மனநிலையோடு இருக்கின்ற காரணத்தால், உற்பத்தித் திறனை அதிக அளவில் பெற முடியாத அளவில் போய் விடுகிறது. அதை நீக்கும் நோக்கத்தில், ஒரு குடியானவர் சாகுபடி செய்பவர் அதிகமாக விளைத்துக் காட்டினால் 60 கொடுப்பதற்குப் பதிலாக இன்னும் அதிகமாக, ஊக்கம் கொடுப்பதற்கு ஊக்க போனஸ் முதலியவற்றைக் கொடுக்க வேண்டும். அப்படி ஒரு பக்கம் கொடுத்தால் இன்னொரு பக்கம் விளையக்கூடிய நிலங்களை விளையாத நிலங்களாக ஆக்கியிருப்பவர்கள் நல்ல விளைநிலமாக ஆக்குவதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே இதைப் பரிசீலனை செய்வது தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்க்கால்கள், மற்றும் குளங்கள் மராமத்து வேலைகள் நடக்கும் நேரத்தில் சில சில சமயங்களில் அதைப் பஞ்சாயத்து செய்வதா, பஞ்சாயத்து யூனியன் செய்வதா அல்லது பி.டபிள்யூ.டி. செய்வதா என்பது போன்ற சர்ச்சைகள் ஏற்பட்டு, விவசாய உற்பத்தி ஆரம்பிக்கப்படும் நேரத்தில் இந்த விதமான சர்ச்சைகள் ஏற்பட்டு விவசாயத்தைத் தொடங்க முடியாத நிலையில், காலம் தாழ்த்தி தொடங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதனாலே உற்பத்தி ஓரளவு பாதிக்கிறது. சிறுபாசனத் திட்டத்தின் மூலம் அதிகமாக மேம்பாடு அடையச் செய்ய முடியும். ஸ்மால் இர்ரிகேஷனுக்கு 'ஸ்பெஷல் ஃபண்ட்'டை அந்தந்த மாவட்ட கலெக்டரின் தலைமையில் அந்த நிதியை ஏற்படுத்தி அந்த மாவட்ட கலெக்டர் அவர்களே, விவசாயத்திற்கான பருவகாலம் ஆரம்பிக்கும் முன்னாலே செய்யவேண்டிய பணிகளைத் தானே செய்வதற்கு அந்த நிதியை ஏற்பாடு செய்வது மிகவும் நன்மையாக இருக்கும் என்று கருதுகிறேன். மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் அந்த 'ஸ்பெஷல் ஃபண்ட்' ஏற்பாடு செய்தால் உண்மையிலேயே எதற்கெடுத்தாலும் சென்னையை நோக்கி வராத நிலையில், மாவட்ட அடிப்படையில் மாவட்ட கலெக்டர்களே டெவலெப்மெண்ட் கவுன்ஸிலின் உதவியோடு ஸ்மால் இர்ரிகேஷன் வேலைகளைச் செய்யமுடியும். அதனால் உற்பத்தித் திறன் அதிகமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பாசன வசதி இல்லாத இடங்கள் இருக்கின்றன. பாசன வசதிகள் இல்லாத இடங்களில் விவசாயிகள் கிணற்று நீரை மட்டுமே நம்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களிலுள்ளவர்களுக்கு பாசனத்திற்கு வசதி, வாய்ப்பு இருக்க வேண்டும். குறிப்பாக இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு சட்டமன்ற





உறுப்பினர் திரு. சகாதேவ கண்டர் அவர்கள் சட்டமன்றத்தின் முன்னால் உண்ணாவிரதம் இருந்து அதன்மூலமாக விவசாயிகளினுடைய பிரச்சனையை அமைச்சர்களுக்கும், இந்த மாமன்றத்திற்கும் கவனப்படுத்தும் நிலை ஏற்பட்டதை மனத்தில் எண்ண வேண்டும். இந்த விதமாக பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன. அதாவது என்னுடைய மாவட்டத்திலே திருச்செந்தூர் தாலூகா சங்கரன்கோயில் தாலுகா, கோவில்பட்டி தாலுகா இருக்கின்றன. இதுபோன்ற இடங்களில் கிணற்றுப் பாசனத்தை நம்பி இருக்கும் விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு கரண்ட் கொடுத்து விவசாய உற்பத்திக்கு ஊக்குவிக்க வேண்டும். அதற்கு மாறாக சாதாரணமாக ஒரு சிக்கல் இருக்கிறது. அதாவது 63 விவசாயிகள் மனுச் செய்த பின்பு 6 சத விகிதம் மட்டும் லாபம் 'கமர்ஷியல் ஸ்கீமில்' வருகிறது. இது 10 சதவிகிதம் வர வேண்டும், அல்லது 8 சத விகிதம் வர வேண்டும், இன்னும் அதிகமான விவசாயிகளைக்கொண்டு வாருங்கள் என்று ஏற்கனவே மனுச் செய்திருக்கும், காத்திருக்கும் விவசாயிகளிடம் கூறி இன்னும் ஆள் பிடித்து வாருங்கள் என்று அனுப்பும்பொழுது அவர்கள் ஏங்குகிறார்கள், இந்த மின்சார கனெக்ஷன் கிடைக்குமா என்று. நாம் இருப்பது விஞ்ஞான காலம். இந்த நேரத்தில் தண்ணீரை கையினாலே இறைத்தும், மாடுகளைக் கொண்டு இறைத்தும் விவசாயிகள் பாடுபடுவதன் காரணமாக உற்பத்திச் செலவு அதிகமாகிறது. ஆனால் உற்பத்திச் செலவு அதிகமாகும் நேரத்தில் கொள்முதல் விலை அவர்களுக்கும் ஒரே அளவில்தான் கொடுக்கப்படுகிறது. நல்ல ஆற்றுப்பாசனம் உள்ள பகுதிகளிலுள்ளவர்களுக்கும் அதே விலை, இப்படிக் கஷ்டப்பட்டு விவசாயம் செய்பவர்களுக்கும் ஒரே விலை. இப்படிக் கொடுக்கும் நேரத்தில் ஏழை விவசாயிகள் பாசனத்திற்கு நல்ல வாய்ப்பு வசதிகளோடு கூடிய விவசாயிகளைப் பார்க்கும்பொழுது மன எக்கத்தோடுதான் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த வசதியை நமக்கும் செய்து கொடுக்கக் கூடாதா என்று ஏக்கப்பட்டு, அதே விலைக்குத்தானே நம்மிடம் வாங்குகிறார்கள் என்று வருத்தப்பட்டால் தங்களுடைய உற்பத்தியை எவ்வாறு பெருக்க முடியும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 12-30

மேலும், இந்த ஆண்டு விவசாயி கடன் பெறுகின்ற முறையில் மிகுந்த சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. 12 வருஷங்களுக்கு 'என்கம்ஃபெரன்ஸ் சர்டிஃபிகேட்' கேட்கிறார்கள். சாதாரணமாக, ஒரு ரிஜிஸ்டிரார் ஆபீசுக்கு ஒரு விவசாயி சென்று என்கம்ஃபெரன்ஸ் சர்டிஃபிகேட் வாங்குவது அவ்வளவு எளிதாக முடியக்கூடிய காரியம் அல்ல. சர்க்கார் கடனை உண்மையிலேயே எந்த நேரத்திலும் வசூல் செய்து கொள்ள முடியும். ஆகவே, விவசாயியை நீ போய் என்கம்ஃபெரன்ஸ் சர்டிஃபிகேட் வாங்கிக்கொண்டு வா, அதற்குப் பிறகுதான் கடன் கொடுக்க முடியும் என்று கூறினால் உண்மையிலே இன்னொரு பளுவை அவன் மீது தூக்கி வைத்தது போல் ஆகும். இந்த ஆண்டு உண்மையில் விவசாயக் கடன் பெற்றிருப்பவர்கள் கூடி இருக்கமாட்டார்கள்

[திரு. டி. மார்டின்] [1968 ஆகஸ்ட் 22

என்ற ஒரு கருத்து இருக்கிறது. இந்த நடப்பு ஆண்டு முடிந்த பிறகு அமைச்சரவை அதை அறிவிக்க வேண்டும். உண்மையில் போன ஆண்டைவிட இந்த ஆண்டு எண்ணிக்கையில் குறைந்திருப்பார்கள். ஏனென்றால் அதிகமான கஷ்டத்திற்கு இந்த வருஷம் அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பல விவசாயிகள் கூறியிருக்கிறார்கள்.

மேலும், திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் கிராப் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் என்று ஒன்று கூறி இருந்தார்கள். அந்த கிராப் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் இன்னும் நடைமுறைக்கு வராது இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது. அதை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும்.

அதோடு நிலப்படை என்ற ஒரு படை, தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுகின்ற முயற்சியை மேற்கொள்ள அந்த படை உதவும் என்றார்கள். அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் 12-வது பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்த காரியங்களைத் துரிதப்படுத்த ஒரு நிலப்படையை—லாண்ட் ஆர்மி என்று நினைக்கிறேன்—அமைத்திட வேண்டுமென்ற கழகத் திட்டம் மக்களின் ஆணையும் ஆதரவும் கிடைத்திடின், மேற்கொள்வது என்ற உறுதி கொண்டிருக்கிறது. இந்த விதமான ஒரு படையை நல்ல படையாக இருந்தால் அமைத்து லாண்ட் ரெக்லமேஷன் போன்ற பணிகளைச் செய்வதில் அரசு நாட்டம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் தஞ்சை தரணியில் இன்று பரவலாக மர்மத் தீ இருப்பதால், அங்குள்ள கிராம மக்கள், விவசாயிகள் மிகுந்த அதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள். இந்த அமைச்சரவை நல்ல போலீஸ் படையை அனுப்பி அந்த தஞ்சை மாவட்டத்தில் இந்தவிதமான தீ ஏற்படுகின்ற நிலைமையை புலன் விசாரணை செய்து அந்த விவசாயிகளினுடைய இதயத்திலுள்ள பயத்தை நீக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஒன்று. கட்டிடங்கள் கட்டுவதற்காக நல்ல விளை நிலங்களை நில ஆர்ஜித சட்டத்தின்கீழ் அரசு எடுப்பதை நிறுத்த வேண்டும். உற்பத்தியை பெருக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிற நாம் அதே நேரத்தில் உற்பத்திக்கு ஆதாரமாக இருக்கிற நல்ல விளை நிலங்களை கட்டிடங்கள் கட்டுவதற்கு எடுத்துக் கொள்ளுவோமானால் அதனால் உற்பத்திக் குறைந்துவிடும். இந்த விதமான தஞ்சை தரணியில் நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் நிலங்களை எடுத்துக் கட்டிடங்கள் கட்டுவதை தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் உர உற்பத்திக்காக பெரிய திட்டங்கள் எல்லாம் போட முடியாவிட்டாலும் சிறு சிறு அளவில் இந்த மாநிலத்தில் உர உற்பத்தி செய்ய வேண்டும். அதன் மூலமாக உரம் அதிகமாக விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு வகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1968 ஆகஸ்ட் 22] [திரு. டி. மார்டின்]

இன்னும் அநேக கிராமங்களில் விவசாயிகளுக்கு சரியான முறையில் பட்டா வழங்கப்படாத நிலைமையில், அவர்கள் விவசாயக் கடன்களைப் பெற முடியாத நிலைமை இருக்கிற காரணத்தால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். என்னுடைய மாவட்டத்தில், என்னுடைய தொகுதியில் கூட சில கிராமங்கள் இருக்கின்றன. பழங்குளம் போன்ற கிராமங்கள். அந்த கிராமங்களுக்கெல்லாம் பட்டாக்களை வழங்கி, அந்த விவசாயிகள் கடன் வசதியைப் பெறுவதற்கான வசதியையும் வாய்ப்பையும் கொடுக்க வேண்டும். விவசாயத்தின் முன்னேற்றம் தான் நாட்டின் முன்னேற்றம். பல ஆண்டுகளுக்கு முன்பு, உயர்தரப் பாடசாலை மாணவனாக இருந்த பொழுது ஒரு பாட்டு கேட்டது நினைவிற்கு வருகிறது.

"பார் முழுதும் ஏர் முனையில்—ஆனால் உழவன் பாட்டிலே திண்டாட்டம் போடுது" என்ற பாடல்.

அந்தப் பாடலை மறைந்த கலைஞர் ஒருவர் எடுத்த 'நல்ல தம்பி' என்ற படத்தில் வருகிறது என்று நினைக்கிறேன். முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு அண்ணாத்துரை அவர்கள் கதை, வசனம் எழுதிய படம். ஆனால், இன்று அந்த உழவனுடைய நிலைமை திண்டாட்டத்திலே இருக்கிறது. அந்த நிலைமை இருக்கக் கூடாது. அப்பொழுது தான் நாடு இன்னும் மேம்பாடடைய முடியும். உழவனுடைய வாழ்வு மேம்பாடடைவதின் மூலம் இந்த மாநிலத்தினுடைய நிலையும் மேம்பாடடைய வேண்டுமென்று கூறி, என்னுடைய தலைவர் கொடுத்த தீர்மானத்தை வலியுறுத்தி என்னுடைய பேச்சை முடித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிற தீர்மானம் இங்கே தேவையற்றது என்ற கருத்தை வலியுறுத்தி இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகிறேன். அவருடைய தீர்மானம் உணவு உற்பத்தியை பெருக்குவதற்காக கொடுக்கப்பட்ட ஒரு தீர்மானம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த அரசாங்கத்தை பொறுத்த வரையிலே ஏற்கனவே உணவு உற்பத்தியை பெருக்குவதற்காக பல திட்டங்களைப் போட்டு அவற்றை செயல்படுத்தி வருவதினுடைய பலனைத் தான் இன்றைக்கு உணவைப் பொறுத்தவரையிலே நம்முடைய ராஜ்யம் நல்லபடியாக முன்னேற்றத்திலே இருந்து கொண்டு வருகிறது. ஆனால், எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்களுக்கு இன்றையதினம் என்ன பேசுவது என்ன செய்வது என்பதிலே ஒரு தெளிவான கொள்கை இல்லாத காரணத்தினாலே எதையாவது பேச வேண்டும், எதையாவது செய்ய வேண்டும், அப்பொழுதுதான் தங்களுடைய கட்சி இயங்கும் என்கிற அடிப்படையிலே பொருளற்றமுறையில், அர்த்தமற்ற முறையில் எதையாவது சில காரியங்கள் செய்து கொண்டே இருக்கிறார்கள். அதிலே ஒன்றுதான் இந்த தீர்மானம் என்பதை நான் சுட்டிக்

காட்ட விரும்புகிறேன். உணவு உற்பத்தி என்பது நம்முடைய ராஜ்யத்தினுடைய விஷயம் மாத்திரம் அல்ல. அது தேசிய விஷயம். இந்தியா முழுமைக்கும் அது ஏற்கக் கூடிய விஷயம். பொதுவாக, இந்தியா முழுதுமே உணவு பற்றுக்குறை, உணவுப் பஞ்சம் ஆகியவைகள் எல்லாம் ஏற்பட்டிருந்தது என்றால் அதற்குக் காரணம் என்ன என்பதை எதிர்க்கட்சிக்காரர்கள் கொஞ்சம் எண்ணிப் பார்த்தால் 20 வருஷம் ஆண்ட அவர்களே கொஞ்சம் வெட்கித் தலை குனிந்து கொள்வார்கள். இன்றைய இந்தியாவினுடைய உணவுப் பஞ்சத்திற்கு மூல காரணமே 20 ஆண்டு காலம் இந்த நாட்டை ஆண்டு வந்த, இன்னும் சில இடங்களில் ஆண்டு கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சி தானே தவிர, வேறு யாருமே காரணம் கிடையாது. எந்த அடிப்படையிலே நான் சொல்லுகிறேன் என்று சொன்னால் வெள்ளைக்காரனிடமிருந்து இந்த நாட்டை விடுவித்ததற்குப் பிறகு ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு, இந்த நாட்டை எல்லா வகையிலும் முன்னேற்றச் செய்ய வேண்டுமென்ற முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. நான்கு ஐந்தாண்டு திட்டங்கள் போடப் பட்டன. மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. 4-வது ஐந்தாண்டு திட்டம் நடுத்தெருவிலே விடப்பட்டு இனிமேல் தான் ஆரம்பிக்க இருக்கிறது. இந்த 3 ஐந்தாண்டு திட்டங்கள் சரியான திட்டங்களாக இல்லாத காரணத்தாலே தான் இந்தியா முழுமைக்கும் உணவுப் பஞ்சம் என்கிற ஒரு நிலைமை. அகில உலகத்திலே இந்தியாவைப் பற்றி ஒரு தவறான எண்ணம், இந்தியாவிலே உணவு இல்லாததாலே செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிற அளவுக்கு காங்கிரஸ் காரர்களுடைய ஆட்சிக் காலத்திலே நிலைமை இருந்து வருகிறது.

**திரு. இல. பலராமன்:** மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது காங்கிரஸ் திட்டத்தினால் தான் மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறும்போது அவருடைய தனிப் பட்ட கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் போட்டு செயல்படுத்துகிறபோதே இந்த நாட்டை ஆண்டவர்கள், ஆளுகிறவர்கள் என்ன செய்திருக்க வேண்டுமென்று சொன்னால் விவசாயத்தை முன்னேற்றி விட்டு, அடுத்தபடியாக தொழிலுக்குப் போயிருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே திட்டங்கள் போட்டிருக்க வேண்டும். அப்படி செய்திருப்பார்களானால் உணவைப் பொறுத்த அளவிலே ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டிருக்காது. ஆனால், இந்தியாவிலே போட்ட ஐந்தாண்டு திட்டங்கள் அத்தனையும் விவசாயத்தை அடிப்படையாக வைத்துப் போடாதபடி தொழிலை அடிப்படையாக வைத்து போட்டதால், வெளி நாட்டிலிருந்து உணவை இறக்குமதி பண்ணி வாழக்கூடிய அளவுக்கு வைத்தார்கள். அதனுடைய பலாபலன் பல இடங்களிலே பஞ்சம், பற்றுக்குறை எல்லாம் ஏற்பட்டன. அதற்குப் பிறகு கடந்த மார்ச்சு மாதம் 6-ம் தேதி இந்த ராஜ்யத்திலே ஜனநாயக ரீதியாக திராவிட முன்னேற்றக்





கழகத்தை மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். இருபது வருஷம் ஆண்ட காங்கிரஸ் ஆட்சி இனி தேவையில்லை என்று அவர்களை ஒதுக்கி எதிர்க்கட்சியில் உட்கார வைத்தார்கள் மக்கள். இந்த 18 மாதகால ஆட்சியில் தி.மு.க. அரசில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக எந்தெந்த வகையில் ஈடுபட்டு உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்களா, இல்லையா என்பதை கொஞ்சம் எண்ணிப் பார்த்தால், 20 வருஷம் இவர்கள் நாட்டை ஆண்ட காலத்தில் செய்யாத பல காரியங்களை 18 மாத காலத்திலே தி.மு.க. அரசு சாதித்திருக்கிறது என்பதை எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் இப்பொழுது உணராவிட்டாலும்கூட தனியாக இருக்கும்போது சிந்தித்தால் கொஞ்சம் உணர்வார்கள் என்று நான் எண்ணுகிறேன். (குறுக்கீடு) பழைய அரசாங்கத்திலே அணைகளைக் கட்டவில்லையா என்று எதிர்க்கட்சி நண்பர் அவர்கள் கேட்கிறார்கள். அணைகள் கட்டியிருக்கிறார்கள் வெள்ளைக்காரன் ஆட்சியில் கூட மேட்டூர் அணை கட்டிக் கொடுத்தார்கள். அந்த அணைகள் இருந்தும்கூட உணவுப் பிரச்சனையை எந்த அளவில் தீர்த்தீர்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். கடந்த பொதுத் தேர்தல் நடந்த பொழுது இந்த நாட்டிலே நீங்கள் உணவு பிரச்சனையை எந்த அளவுக்கு வைத்திருந்தீர்கள், மக்களுக்கு எந்த அளவுக்கு நீங்கள் உணவுப் பொருள்களை வழங்கினீர்கள், மக்களுக்கு எந்த அளவுக்கு சௌகரியம் பண்ணிக்கொடுத்தீர்கள் என்பதையெல்லாம் கொஞ்சம் எண்ணிப் பார்க்கவேண்டும். இன்றைக்கு தி.மு.க. அரசில் மக்கள் கஷ்டமில்லாமல் எவ்வளவு நிம்மதியாக வாழ்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சியில் இருக்கிற காங்கிரஸ் காரர்கள் நிச்சயம் உணர்வார்கள். எங்கு பார்த்தாலும் அரிசி கிடைக்காத நிலைமை கடந்த பொதுத் தேர்தல் நடந்தபொழுது இருந்தது என்பதை எதிர்க்கட்சியில் இருக்கும் காங்கிரஸ்காரர்கள் மறைக்கவும் முடியாது. மறுக்கவும் முடியாது. ஆனால், மார்ச் 6-ம் தேதி தி.மு.க. அரசு ஏற்பட்டதற்குப் பிறகு, 10, 15 தினங்களுக்குள் எங்கு பார்த்தாலும் தாராளமாக அரிசி கிடைப்பது சாத்தியமாயிற்று என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். கடந்த காங்கிரஸ் அரசாங்கம் தவறான கொள்கையை கடைப்பிடித்ததால், தேவைக்குத் தக்கபடி விளைகின்ற இந்த நாட்டிலே இருக்கிற உணவுப் பொருள்கள் வெளி ராஜ்யங்களுக்குக் கடத்தப்பட்டு சென்று விட்டன. அதன் காரணமாக இங்கே பற்றுக்குறை ஏற்பட்டு, பதுக்கல் ஏற்பட்டு, இதுபோன்ற ஒரு சூழ்நிலை இருந்ததே தவிர, வேறு ஒரு காரணமும் இல்லை. ஏதோ மழை பெய்யாதது போலவும், அதனால் பெரிய வரட்சி ஏற்பட்டு, விளைச்சல் இல்லாதது போலவும், அதனால் தான் அரிசி கிடைக்கவில்லை, விலையும் உயர்ந்துவிட்டது என்கின்ற மாதிரியான தன்மையிலே தான் நிலைமை இருந்தது என்று காங்கிரஸ்காரரும் சொல்ல முடியாது. கடந்த கால காங்கிரஸ் ஆட்சியில் ஒரு வருஷத்தையும், தி.மு.க. ஆட்சி வந்த பிறகு ஒரு வருஷத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்

தால், காங்கிரஸ் ஆட்சி இருந்தபொழுது நான் அதிகம் மழை பெய்திருக்கிறதே தவிர, தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பிற்பாடு பெய்த மழையினுடைய அளவு குறைவு தான். இருந்தாலும்கூட உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலே இந்த ராஜ்யத்திலே தி.மு.க. அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் எவ்வளவோ அதிகம் . . .

**திரு. டி. மார்டின் :** மூன்று மாதங்களாக இன்னும் விதைக்கவில்லையே தமிழகத்தில் விவசாயிகள். அதற்கு யார் பொறுப்பு என்று நண்பர் அவர்கள் கூறுவார்களா ?

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** காங்கிரஸ்காரர்கள் செய்கின்ற அக்கிரமமான பாவங்களினால் தான் மழையே பெய்யவில்லை. (ஆளும் கட்சி தரப்பில் ஆரவாரம்.)

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் செய்த பாவ, அக்கிரமங்களை கொஞ்சம் சொன்னால் நலமாக இருக்கும். நாங்கள் செய்த பாவங்களையும், நீங்கள் செய்த புண்ணியங்களையும் சொல்லுங்கள்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** டிபேட் 'டல்லாக' இருக்கிறது. இப்படி கொஞ்சம் பாயிண்ட்ஸ் கிளப்பி விடுங்கள்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** 18 மாத கால ஆட்சியில் தி.மு.க. அரசு உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையிலே எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. பதவிக்கு வந்த உடனேயே தாராளமாக மக்களுக்கு அரிசி கிடைக்கும்படியான ஒரு நிலைமையை ஏற்பாடு செய்தது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் ஒரு லட்சம் டன் அரிசி வைத்திருந்தோம். அதை எடுத்து நீங்கள் தாராளமாக போட்டு விட்டீர்கள்.

**திரு. ஏ. வி. பி. ஆசைதம்பி :** ஒரு லட்சம் டன் அரிசி வைத்திருந்தும், கடந்த காலத்தில் உங்கள் ஆட்சியில் மக்களை பட்டினியினால் சாகடித்தீர்கள். அதைப் பொறுத்தவரையிலே ஒரு விசாரணை நடத்தி, யார் குற்றவாளி என்று கண்டுபிடித்து, அவர்களுக்கு தண்டனை கொடுக்கவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எத்தனை பேர்கள் செத்தார்கள் என்று நிருபிக்க முடியுமா? நாங்கள் லட்சம் டன் வைத்திருந்தோம். எத்தனை பேர்கள் பட்டினியால் இறந்தார்கள் என்று சொல்ல முடியுமா?

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** காங்கிரஸ் அரசாங்கம் நடந்து கொண்டிருந்தபொழுது நீலகிரி மாவட்டத்தில் அரிசி கிடைக்காமல் ஒரு கடை கொள்ளையடிக்கப்பட்டது. கோவையில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் சுட்டு கொல்லப்பட்டார். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் மக்கள் அரிசி கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். (குறுக்கீடு) மக்கள் சாகவில்லை, இழுத்துக்



கொண்டு தானே இருந்தார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்களே தவிர, அதனால் மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பதைப் பற்றி சிந்திக்கவில்லை. அரிசி இல்லாவிட்டாலும் பாதகம் இல்லை எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் சொல்லியபடி கிட்டங்கியில் ஒரு லட்சம் டன் ஸ்டாக் வைத்துக்கொண்டு மக்களை பட்டினி போட்டீர்கள் என்று சொன்னால், இதற்கு என்ன பரிகாரம் ? ஆகையால்தான் மக்கள் உங்களை 49 பேர்களாக ஆக்கி எதிர்க்கட்சியில் உங்களை உட்கார வைத்திருக்கிறார்கள். வேறு எந்த காரணமும் கிடையாது. ஆனால் தி.மு.க. பதவி ஏற்றதும் தாராளமாக அரிசி கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. விலைவாசிகள் எங்கும் இறங்குமுகமாக இருக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலைமையில் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்தார்கள் என்பதை எதிர்க்கட்சியிலிருப்பவர்கள் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஜில்லா வாரியாக விவசாயிகள் மாநாடு நடத்தினீர்கள். விவசாயக் குடிமக்களை தூண்டிவிட முயற்சி செய்தீர்கள். நெல் கொள்முதலுக்கு வந்தால் கொடுக்காதீர்கள் என்று சொல்லிப்பார்த்தீர்கள். அது மாத்திரமல்ல. திரு. பூவராகன் அவர்கள் ஏதோ மறுக்கிறேன் என்று சொன்னார், நெல் போடாதீர்கள். கரும்பு போடுங்கள் என்று சொல்லவில்லை என்று சொன்னார். காங்கிரஸ் கூட்டிய பல விவசாயிகள் மாநாட்டில் நெல் போடாதீர்கள், கரும்பு போடுங்கள் என்று பகிரங்கமாக விவசாயிகளிடம் சொல்லியிருக்கிறீர்கள். இரண்டும் இல்லாமல் போனாலும் போகட்டும், நிலங்களை விளைவிக்காமல் தரிசாகப் போடுங்கள் என்றெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். ஏதோ தி.மு.க. அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லை என்று நினைத்துக்கொண்டு பேசினால் நாட்டு மக்கள் அதை நம்பமாட்டார்கள். அதனால்தான் மக்களே பார்த்து உங்களை எதிர்க்கட்சியிலே அமர்த்தியிருக்கிறார்கள். இத்தகைய தொல்லையை நாடு பூராவும் கொடுத்துக்கொண்டு வந்தீர்கள். ஜில்லா தோறும் இந்த மாதிரி கீழ்த்தரமான வேலையில் நீங்கள் ஈடுபட்டீர்கள். அப்படியெல்லாம் செய்துவிட்டு, ஏதோ நல்ல பிள்ளை மாதிரி இங்கே வந்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்யுங்கள் என்று தீர்மானம் கொடுப்பது ஜிகினா வேலைதான். (ஆளும் கட்சித் தரப்பில் ஆரவாரம்.) இம்மாதிரி ஜிகினா வேலைகளைக் கண்டு நாடு ஏமாறாது. மக்கள் ஏமாறமாட்டார்கள்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு இன்றைக்குச் செய்திருக்கிற பெரிய காரியங்கள் பல, சாதனைகள் பல. ஏதோ சிறிய பாசன திட்டங்களுக்காக தனியாக நிதி வேண்டுமென்று தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நாட்டினுடைய விவசாயத்தை ஒன்றிரண்டு பங்கு பெருக்கி, படி அரிசி திட்டத்தை நாடு பூராவிற்கும் விஸ்தரிப்பதற்கான அடிப்படையில் ராயப்பா கமிட்டியை அமைத்து 100 கோடி ரூபாய்க்கான ஒரு திட்டத்தை மத்திய சர்க்காருக்கு இந்த அரசு அளித்திருக்கிறது. இம்மாதிரி ஒரு திட்டத்தை அளித்து பணம் கேட்டோம். உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று உள்ளபடியே உங்களுக்கு உணர்ச்சி

இருந்தால், உங்களுக்கு உள்ளபடி அந்த ஆசை இருக்கிறது என்று சொன்னால், ஆகஸ்டு 1-ம் தேதி அர்த்தமில்லாமல் ஊர்வலம் நடத்தியதுபோல் இல்லாமல், இந்த 100 கோடி ரூபாய் திட்டத்திற்கு மத்திய சர்க்காரை பணம் கேட்டு வற்புறுத்த அத்தகைய ஊர்வலம் நடத்த நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன். . .

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது 'நீங்கள், நீங்கள்' என்று பேசுகிறார்கள். அது யாரைக் குறிக்கும் ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 'நீங்கள்' என்று கூறக்கூடாது என்று பல முறை கூறியாகிவிட்டது. ஆனால், அதை எந்த உறுப்பினரும் கடைப் பிடிக்கவில்லை. ஆகவே, ஒவ்வொரு முறையும் 'நீங்கள்' என்று சொல்லக் கூடாது என்று சொல்லிக் கொண்டிருப்பதைவிட, சொல்லாமலே இருந்துவிடலாம் என்ற முறையில்தான் சொல்லவில்லை. அதைப்பற்றி உறுப்பினர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் இருந்தும் 'நீங்கள்' என்றுதான் சொல்கிறார்கள். ஆகவே 'நீங்கள்' என்று சொல்லாமல், இந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்றும், அந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் கழகத்துக்காரர்கள் என்றும் சொல்லும் முறையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** ராயப்பா கமிட்டி போட்டு, ஒரு திட்டத்தை உருவாக்கி, பொருள் உதவி கொடுங்கள் என்று மத்திய சர்க்காரை கேட்டபொழுது, எதிர்க்கட்சியிலுள்ள காங்கிரஸ் காரர்கள் என்ன செய்தார்கள்? மத்திய சர்க்காரை அணுகி 'நீங்கள் இந்தத் திட்டத்திற்கு உதவி செய்தாக வேண்டும்' என்று யாராவது கேட்டார்களா? திரு. விநாயகம் அவர்கள் ஏதோ சொன்னார்கள் அதற்கு நான் பதில் சொல்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் உட்கார்ந்துகொண்டு 'வடக்கே இருக்கிற மந்திரிகள், தென் நாட்டிற்கு வந்து தி.மு.க. அரசைப் பாராட்டுகிறார்கள், எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது, பாராட்டாதீர்கள்' என்று பேசுகிறார்கள். அப்படிப் பேசுபவர்களுக்கு 'நல்லது செய்யுங்கள்' என்று சொல்வதற்கு எப்படி மனம் வரும்?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, வடக்கே இருந்து வருகிற அமைச்சர்கள் பொருத்தமாக, நல்ல காரியத்தைப் பாராட்டுவதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. இட்லியைச் சாப்பிட்டுவிட்டு பாராட்டிவிட்டுப் போகாதீர்கள் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மத்திய சர்க்கார் அமைச்சர்களுக்கு இட்லி கொடுத்து திருப்திப் படுத்துகிறார்கள் இந்த அமைச்சர்கள் என்ற முறையில் சொல்வது சரியாகாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இட்லி சாப்பிட்டு விட்டு திருப்தி ஆகட்டும். ஆனால் மற்றவைகளைப் பற்றிப் பேசாதீர்கள் என்று





தான் சொன்னேன். என்னை எதிர்ப்பவர், இவர் ஏன் மொரார்ஜி தேசாயை எதிர்த்து கேடயத்தைப் பெற்று வந்தார்கள் என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் :** அது வேறு விஷயம். அதைப் பற்றி இப்பொழுது விவாதம் வேண்டாம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மத்திய அமைச்சர்கள் எங்களுக்கும் இட்லி கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** இந்த சர்க்கார் செய்யும் காரியங்களை மத்திய அமைச்சர்கள் பாராட்டுவதுகூட இவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், இவர்கள் எவ்வளவு நல்ல எதிர்க் கட்சியாக இருக்கிறார்கள் என்பதை . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பாராட்டுவது தவறு என்று சொல்லவில்லை நியாயமாக நடந்திருந்தால், பாராட்டட்டும். ஒன்றுமே இல்லாமல் இருக்கும்போது பாராட்டுவது என்றால், அதைப் பாராட்டாக எடுத்துக் கொள்ள முடியுமா ?

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** நல்ல காரியமாக இல்லாவிட்டால் மத்திய அமைச்சர்கள் பாராட்டமாட்டார்கள். இந்த நாட்டிலே ஒரு நல்ல சர்க்காரைப் பாராட்டுகிறார்கள் என்றால் அதைக்கூட நம்முடைய எதிர்க்கட்சிக்கு தாங்கமுடியவில்லை. அதைப் பார்க்கும்போது, பழைய முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் குறிப்பிட்டதுதான் நினைவுக்கு வருகிறது. 'அவர்கள் இந்த நாட்டில் இன்னும் நல்ல எதிர்க் கட்சி உருவாக வில்லை' என்று சொல்லுவதைத் திருப்பத் திருப்பச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

காங்கிரஸ் அரசாங்கம் இருந்த காலத்தில், தேவைக்கு வேண்டிய அளவு உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், நம் ராச்சியம் உபரி ராச்சியம் என்ற நிலைக்கு வந்திருக்கிறது. அந்த அளவிற்கு விவசாயம் பெருகியிருக்கிறது என்பதை இவர்களால் பொறுக்க முடியவில்லை. இப்படிக் காங்கிரஸ்காரர்கள் பேசுகிறார்கள் என்றால் அது வேண்டுமென்றே பேசுகிறார்கள். கொள்முதல் விலையைக் கூட்டவேண்டும், கூட்டவேண்டும் என்று சொல்லு கிறார்கள். காங்கிரஸிலேயே இரண்டு குரல்கள் கேட்கின்றன. ஒரு சாரார், கூட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மற்றொரு சாரார் அப்படிக் கூட்டத் தேவையில்லை என்று எதிர்க்கிறார்கள். அதுவும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியும். இன்றைக்கு நாம் கொடுக்கும் விலையை மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ப்ளானிங் தலைவர் திரு. காட்கில் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ராஜபாளையத்திலே காங்கிரஸ் மாநாட்டிலே, கொள்முதல் விலையைக் கூட்டவேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தார்கள். பொருளா

தாரம் தெரிந்த முன்னுல் நிதி மந்திரி திரு. டி.டி. கிருஷ்ணமாசாரி அவர்கள் கொள்முதல் விலையைக் கூட்டக் கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆனால் இங்கே பேசுகிறார்கள். காங்கிரஸுக்குள்ளேயே இரண்டு அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ஆகவே, சிலர் கொள்முதல் விலையைக் கூட்ட வேண்டும், கூட்ட வேண்டும் என்கிறார்கள் என்றால், அது அரசியல் நோக்கத்தோடு பேசுகிறார்கள். எந்த விவசாயியும் கொள்முதல் விலையைக் கூட்டிக்கொடுக்க வேண்டும் என்ற கருத்து உள்ளவனாக இருக்கவில்லை. இப்படி ஒரு பக்கம் பேசுவதும், மறுபக்கம் படியரிசித் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று பேசுவதும் முரணானதாக இருக்கிறது. மத்திய சர்க்காருடைய உதவியிருந்தால்தான் இந்தக் காரியங்களைச் செய்ய முடியும் என்றால், அதையும் ஒத்துக் கொள்ள வேண்டும், அதற்கும் காங்கிரஸ்காரர்கள் சேர்ந்து கொள்ள வேண்டும். அதை ஒத்துக் கொள்ளாமல் இப்படிப் பேசிக் கெண்டே இருந்தால், பொதுமக்கள் எண்ணிப்பார்ப்பார்கள், யார் நியாயமாக நடக்கிறார்கள், என்பதை.

அருமை நண்பர் திரு. மார்ட்டின் பேசும்போது சொன்னார்கள், நீங்கள் மத்திய சர்க்காரிடமிருந்து பணத்தை வாங்கி வெளியே விட்டு வட்டி வாங்குகிறீர்களே என்று. அது உண்மையாக இருக்கலாம், உண்மையில்லாமல் இருக்கலாம். இந்த அரசாங்கத்தை காங்கிரஸ் காரர்கள் எங்கள் கையில் கொடுத்து விட்டுப் போகும் போது, கஜானா காலியாகத்தான் இருந்தது. அதில் பணம் கிடையாது. முன்னூறு கோடி ரூபாய் கடன்தான் வைத்து இருந்தார்கள். கேட்டால் சொல்லுவார்கள், 400 கோடி ரூபாய்க்கு சாத்துக்கள் இருக்கின்றன என்று. இருக்கலாம், தனிப்பட்ட மனிதனுடைய சொந்தாக இருந்தால், ஒன்றிரண்டை விற்றுக் கடன்களை அடைத்துவிடலாம். ஆனால், சர்க்கார் சொத்து. அதை யாரிடத்தில் விற்க முடியும்? இருக்கிற சொத்திலேயிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு சரிக்கட்ட வேண்டும். சொத்துக்கள் என்ன பி அண்ட் ஸி மில், சிம்சன் கம்பெனி போன்றவைகளுடைய சொத்துக்கள் போன்றவைகளா? சொத்துக்கள் என்பதெல்லாம், கோழிப் பண்ணையும், ஆட்டுப் பண்ணையும் . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்**: சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். அவைமுன் இருக்கும் தீர்மானம் உணவு பற்றியது. சர்க்கார் வாங்கிய கடன் பற்றியெல்லாம் இப்பொழுது பேசுவானேன். அதற்கெல்லாம் பதில் சொல்லத் தெரியும். தயாராக இருக்கிறேன். ஆனல், இப்பொழுது தீர்மானத்தைப் பற்றி மட்டும் பேசினால் நலமாக இருக்கும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி**: நீங்கள் ஒன்று கொடுத்து, ஒன்பது வாங்கிக் கொள்ளுகிறீர்கள். அதற்கு நான் என்ன செய்வது. இந்த அரசாங்கம் எல்லா வகையிலும் நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருப்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். அதைத் தென்காசியில் அனுபவித்தீர்கள்.



இந்த நாட்டைப் பொருத்த வரையில், மேற்கொண்டும் எல்லா நல்ல காரியங்களையும் செய்ய இருக்கிறோம். படியரிசித் திட்டத்தை சென்னை பட்டணம், கோவை மட்டுமின்றி, குடும்பக் கார்டு இருக்கும் இடங்களிலெல்லாம் கொண்டு வருவோம். இன்றைக்கும், வெளியே எல்லா இடங்களிலும் அரிசி படி ரூ. 1.17 என்று தான் விற்கிறது. ஆகவே, படியரிசியை நோக்கி முன்னேறி வருகிறது. இவர்கள் சற்றுத் தொல்லை கொடுக்காமல் இருந்தால், மத்திய சர்க்காரோடு வாதாட காங்கிரஸ்காரர்கள் ஒத்துழைப்பார்கள் என்றால், 1972-ம் வருஷத்திற்குள்ளாக நம்முடைய உற்பத்தியை 80 லட்சம் டன்னாக உற்பத்தி செய்து, வெளி நாட்டுக்கு எவ்வளவு தேவை என்று கண்டு, ஏற்றுமதி செய்யும் அளவில் பேசமுடியும். அந்த நிலையை எதிர்க்கட்சி ஒத்துக் கொள்ளவேண்டுமேயல்லாது, இந்த ஜிகினா வேலையை விட்டு விட வேண்டும் என்று சொல்லி, இந்தத் தீர்மானம் தேவையற்றது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இப்பொழுதே மணி ஒன்று ஆகிறது. அமைச்சருக்கு அரை மணி வேண்டும், பிறகு எதிர்க்கட்சித் தலைவருக்கு அரை மணி வேண்டும். இதற்கிடையிலே, உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. ஆகவே, உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து நிமிஷத்திற்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா**: மன்றத் துணைத் தலைவர் அவர்களே, உணவு உற்பத்தியைப் பெருக்குவது குறித்து எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு முன் வருகிறேன். இதற்கு முன்னால் இருந்த காங்கிரஸ் அரசு, குறிப்பாக நாடு விடுதலை அடைந்த பிறகு, உற்பத்தியைப் பெருக்கி, உணவுப் பற்றாக் குறையைப் போக்கி நாட்டுக்கு நலன் செய்யத் திட்டக் கமிஷனை அமைத்து, அவர்களுடைய ஆலோசனைகளின் அடிப்படையில், பல மாநிலங்களிலும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். அவ்வாறு செய்யும் போது, திட்டக் கமிஷன் சொன்ன ஆலோசனைகளை பூராவும் ஏற்றுக் கொள்ளாமலும், மறுக்காமலும், அரை கிணறு தாண்டிய நிலையில் கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தார்கள். அவர்களுடைய ஆலோசனைகளை பூராவாக நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. நீர்ப்பாசன திட்டங்கள் சிலவற்றைச் செய்திருக்கிறார்கள். பெரிய அணைகளைக் கட்டி பாசன வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதையெல்லாம் யாரும் மறுக்க முடியாது. அவ்வாறு செய்திருந்தும் நம் நாட்டில் பற்றாக்குறை இருக்கிறது. பெரிய பாசன வசதிகளையெல்லாம் செய்தாகிவிட்டது என்று சொன்னால் சிறிய பாசன ஆதாரங்களை மேற்கொள்ளவேண்டும், அதற்கு மாநில அரசாங்கங்களுக்கு நிதி உதவி மத்திய சர்க்கார் செய்தாக வேண்டும். மக்கள் மாநில சர்க்காரிடம் எதிர்பார்த்து நம்பிக்கை வைத்திருக்கி

றார்கள். அதிகாரம் பூராவும் மத்திய சர்க்காரிடம்தான் இருக்கிறது. பண வரவினங்கள் பூராவும் மத்திய சர்க்காரிடம்தான் இருக்கிறது. ஆகவே, மாநிலங்களில் பாசன வசதிகளைச் செய்து கொடுக்க நிதி உதவி செய்ய வேண்டிய நிலையில் உள்ள மத்திய சர்க்கார் தொடர்ந்து நிதிவசதி செய்ய மறுத்துக் கொண்டே வருகிறார்கள். அதன் காரணமாக சிறுபாசன வசதிகளைச் செய்து கொடுக்க முடியாத சூழ்நிலை தமிழ் நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலே 14 லட்சம் ஏக்காவில் தானியம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. எங்கு பார்த்தாலும் நல்ல செழிப்பான நிலங்களையுடைய அந்த மாவட்டத்தில் இன்னும்கூட 36 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் வடவாறு பாசனத்திற்கு நீர் கொடுக்காத காரணத்தினால், திருமக்கோட்டை பகுதியில் தரிசு நிலமாக—பொட்டல்காடாக—இருந்து வருகிறது. இம்மாதிரி நிலங்கள் தரிசாக இருந்தால் எப்படி உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்? தற்போது நல்ல விதைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதன் அவசியத்தை விவசாயிகளிடம் நல்லவிதமாக எடுத்துச் சொல்லி அவர்களை ஊக்குவித்தால் உணவு உற்பத்தி பெருகும். விவசாயிகளுக்கு உர வினியோகம், பூச்சி மருந்து கொடுத்தல் போன்றவைகள் நல்ல முறையில் நடத்த வேண்டும். மேலும் மண்வளப் பரிசோதனைகளும் நடந்து வருகின்றன. கோயம்புத்தூரிலும், ஆடுதுறையிலும் ஒவ்வொன்றாக மண்வள பரிசோதனைச் சாலைகள் வைத்திருக்கிறார்கள். இது போதுமானதல்ல, மேலும் அதிகம் வேண்டும். இவைகளையும் நாம் பயன்படுத்திக்கொண்டால் உணவு உற்பத்தித் துறையில் முன்னேற்றம் காண முடியும்.

பிற்பகல் 1-00

உணவு உற்பத்தியைப் பொறுத்தமட்டில் என்னுடைய ஆலோசனை என்னவென்றால், திட்டக் கமிஷன் கூறிய யோசனைகள் அனைத்தையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இதற்கு மத்திய அரசு உடந்தையாக இருக்க வேண்டும். நாட்டில் இன்னும் நிலத்தில் உழைக்காதவர்கள் நிலச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். நெல் காய்க்கக்கூடியவை மரங்களாக இருக்கின்றனவா, செடிகளாக இருக்கின்றனவா என்றுகூடத் தெரியாத சோம்பேறிகள் நிலச் சொந்தக்காரர்கள் என்ற பெயரில் இருந்து வருகிறார்கள். இம்மாதிரி நிலத்தில் உழைக்காதவர்களிடத்தில் தான் நிலம் குவிந்திருக்கின்றது. இதனால்தான் விளைச்சல் குறைந்து நாட்டிலே பஞ்சம் ஏற்படுகிறது. ஆகவேதான், நிலச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று திட்டக் கமிஷன் கூறிய ஆலோசனையை ஏற்று, நில உறவு முறையில் மாற்றம் செய்து சட்டம் கொண்டுவர வேண்டும். நிலச் சீர்திருத்தம் என்ற பெயரால் பல மோசடியான சட்டங்களை முன்னாள் அரசு கொண்டு வந்தார்கள். நிலச் சோம்பேறிகளிடமிருந்தும், நிலப் பிரபுக்களிடமிருந்தும் நிலங்களை எடுக்காமலும், அப்படி எடுத்திருந்தாலும் நிலத்தில் நேரடியாக உழைப்பவர்களுக்குக் கொடுக்காமலும் சட்டம் இயற்றப்பட்டது. ஆகவே, பழைய சட்டங்களையெல்லாம் அகற்ற வேண்டும். யார் நிலத்தில் உழைத்துப் பாடுபடுகிறார்களோ, யார் நிலத்தை உழுது பண்படுத்துகிறார்களோ அவர்





களுக்கு நிலத்தைப் பங்கிட்டுத் தரவேண்டும். உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு வெறும் ஆலோசனைகளைச் சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. பழைய சட்டங்களையே வைத்திருந்தால் நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, புதிய முறையில் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்தாக வேண்டும். நிலத்தில் உழைத்துப் பாடுபடக்கூடியவர்களுக்கு சட்டத்தால் வாய்ப்பு வசதிகளை, நன்மைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்வதன் காரணமாக நிலத்தில் உழைக்கின்றவர்களுக்கும் உற்சாகம் ஏற்படும். உணவு உற்பத்தியும் பெருகும்.

தற்போது புஞ்சை நிலத்திற்கு வரி விலக்கு அளித்திருக்கிறார்கள். புஞ்சை நிலத்திற்கு உள்ளது மாதிரி நஞ்சை நிலத்திற்கும் உள்ள வரியை ரத்து செய்ய வேண்டும். இதனால் நஷ்டம் ஒன்றும் அதிகமாகிவிடாது. அம்மாதிரி நஞ்சை நிலத்திற்கும் வரியை ரத்து செய்வதன்மூலமாக விவசாயிகளின் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தித் தரலாம்.

அடுத்தபடியாக, தரிசு நிலங்கள் இன்று லட்சக் கணக்கில் பாலைவனங்களாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. அதில் பண்ணைகளை ஆரம்பிக்கலாம். வடக்கிலுள்ள மாநிலங்களில் சூரத்கார் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டு விவசாயம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதன் மூலமாக அரசாங்கச் செலவிலே உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி ஏற்படுகிறது. நம்முடைய அரசும் இம்மாதிரியான விரிவான ஒரு திட்டத்தைத் தயாரிப்பதன் மூலமாக உணவுப் பஞ்சத்தைப் போக்க முடியும். (மணியடிக்கப்பட்டது.)

நிலச் சம்பந்தப்பட்ட சட்டங்களையெல்லாம் மாற்றியமைப்பதன் மூலமாகவும், உண்மையான விவசாயிகளுக்கு நிலம் வழங்குவதன் மூலமாகவும், தரிசு நிலங்களை விவசாயத்திற்குத் தகுதியான நிலங்களாக மாற்றுவதன் மூலமாகவும் உணவு உற்பத்தியைப் பெருக்கி, பற்றாக்குறையைப் போக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் காரணமாக, இந்திய நாடு—அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் உணவுக்காக கையேந்தி பிச்சையெடுக்கும் நிலைமை இருக்காது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. க. ர. நல்லசிவன்** : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவசாயத் துறையிலே உற்பத்தியைப் பெருக்குவதற்காக கொள்முதல் விலையை உயர்த்தினால் மட்டும் போதாது. கொள்முதல் விலை ஓரளவுக்கு உயர்த்தப்பட வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். கடந்த இருபது ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பில் இருந்துவந்தவர்கள், இந்த நாட்டினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அவர்களுடைய பிரதிநிதிகளாக வந்திருப்பவர்கள் இன்றைக்குத் தீர்மானம் கொடுத்து, விவசாய உற்பத்தியைப்

பெருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள், அவர்களுக்காக நான் அனுதாபப்படுகிறேன். மற்ற மாநிலங்களில் கூட விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு, தொழில்துறை உற்பத்திப் பொருள்களுக்கு, அதற்காகும் செலவை அனுசரித்து விலை கொடுக்கப்படுகிறதா, என்றால், இல்லையென்ற பதில்தான் கிடைக்கிறது. உற்பத்தியான பொருளுக்குச் சரியான விலை கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு அரசாங்கம்தான் சரியான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இங்கு நம் மாநிலத்தில் ஐந்தோ, பத்தோ உயர்த்திக் கொடுத்து விடுவதால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆலைப் பொருள்களுக்கு எந்த அடிப்படையில் விலைவாசிகள் நிர்ணயிக்கப்படுகின்றனவோ அதே அடிப்படையில் விவசாயப் பொருள்களுக்கும் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். இந்தக் காரியத்தைச் செய்வதற்கு மாநில அரசாங்கத்தால் முடியாது. பாராளுமன்றம் தான் இதைச் செய்ய முடியும். நெல்லுக்கு மட்டுமல்ல, எல்லாப் பொருள்களுக்கும் நியாய விலை கொடுக்க வேண்டும். நியாய விலை கிடைக்கும்பொழுதுதான், விவசாயத்திற்குக் கட்டுபடியாகக் கூடிய விலை கிடைக்கும்பொழுதுதான் உற்பத்தி மேலும் பெருகும்.

இருபது ஆண்டுகளாக இருந்தவர்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக வேண்டி நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார்கள். இந்த நாட்டு விவசாய மக்களுடைய உற்சாகத்தைப் பெருக்கக்கூடிய அளவுக்கு அந்தச் சட்டம் அமையவில்லை. நிலச் சீர்திருத்தச் சட்டத்தை தீவிரமாக்குவதன் மூலமாக விவசாயிகளுக்கு நன்மை செய்ய முடியும். ஆகவே, இந்தப் புதிய சர்க்கார் உடனடியாக இந்த முயற்சியில் காலடி எடுத்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு குறிப்பிட்ட பகுதி நிலங்கள் தரிசாக இருந்து வருகின்றன. நம்முடைய மாநிலத்தில் நீர்ப்பாசன வசதி மிகவும் குறைவு. இதனால் பெருவாரியான நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்க முடியாதநிலை ஏற்படுகிறது. நீர்ப்பாசனத்திற்கு என்ன வழி செய்யப்பட வேண்டும் என்பதை யோசிக்க வேண்டும். மேலும் நம்முடைய மாநிலத்தில் மூன்று வகையான முறைகளில் பாசனவசதி கிடைக்கிறது. ஆறுகளின் மூலமாகவும், ஏரிகளின் மூலமாகவும், வாய்க்கால்களின் மூலமாகவும் நீர்ப்பாசனம் கிடைக்கின்றது. சில இடங்களில் ஒரு கியூசெக்குக்கு 25 ஏக்கர்தான் பாய்கிறது. சில இடங்களில் ஒரு கியூசெக்குக்கு 50 ஏக்கரும், மற்றும் சில இடங்களில் ஒரு கியூசெக்குக்கு 75 ஏக்கர்களும் பாயக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை நாம் ஓரளவுக்குச் சமப்படுத்த வேண்டும். இந்தக் கருத்தை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஆதரிப்பாரோ, என்னவோ எனக்குத் தெரியாது. இது அவர்களை நேரடியாகப் பாதிக்கக்கூடியது. ஆகவே, இன்றைக்கு இருக்கிற பல வாய்க்கால்களைச் சீரமைத்து குறைந்த பட்சம் சராசரி ஒரு கியூசெக்குக்கு 40-இல் இருந்து 50 ஏக்கரா வரை பாசனம் செய்யக்கூடிய ஒரு அடிப்படை மாறுதலைச் செய்து தர வேண்டும்.





அடுத்தாற்போல சேரணிப்படை என்று ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதுபோலவே நிலப்படை என்று ஒன்று ஏற்படுத்த வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தில் தவிக்கின்ற லட்சக் கணக்கான வாலிபர்களை நிலப்படையின் கீழ் கொண்டு வந்து விவசாயத்தில் ஈடுபடுத்தினால் வேலை கொடுத்தது போலவும் ஆகும். உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு மிகவும் உதவியதாக ஆகும்.

கடைசியாக மற்றப் பொருள்களுக்கு எப்படி விலை நிர்ணயிக்கப் படுகிறதோ அதுபோல அகில இந்திய அடிப்படையில் விவசாயப் பொருள்களுக்கும் ஒருமுகப்பட்ட விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு தேசத்தில் பிரதானமானது உணவு உற்பத்தி. உணவு உற்பத்தி சரியான முறையில் நடைபெறாத காரணத்தினால்தான் தேசத்தில் பல்வேறு பொருளாதாரச் சிக்கல்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன என்பதை சமீபத்தில் வந்துள்ள ஆட்சியினர் உணர்ந்திருக்கிறார்கள். சரியான முறையில் உற்பத்தி பெருகி இருந்தால் இந்தச் சங்கடங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்காது என்பதை இவ்வளவு ஆண்டுகள் கழிந்த பின்னர்தான் உணர்ந்து கொள்ள முடிந்திருக்கிறது. ஆகவே உணவு உற்பத்திதான் பிரதானமானது. ஒரு கோணத்தில் இருந்து மட்டும் பார்த்து உணவு உற்பத்தியைப் பெருக்கிவிடமுடியாது. பல்வேறு கோணங்களில் இருந்து பார்த்து பல்வேறு காரியங்களைச் செய்தாகவேண்டும்.

விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கு பூமி ஜீவாதாரமானது. பூமி இருந்தால்தான் பெருக்க முடியும். நிலவுடைமை இருக்கிறதே அது சரியான முறையில் இல்லை. உழுபவர்களுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை படிப்படியாக அமலுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தாக வேண்டும். உழுபவர்களுக்கே நிலம் சொந்தமாக்கப்படுவதுதான் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு அடிப்படையாக அமையும்.

நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்தார்கள். அது பயன்படவேயில்லை. ஆகையால் அந்தச் சட்டத்தை மாற்ற வேண்டும். பதினைந்து ஏக்கருக்கு மேல் ஒருவரிடம் நிலம் இருக்கக்கூடாது என்று திட்டவட்டமாகக் கொண்டு வர வேண்டும்.

அதுமட்டும் போதாது. இன்றைக்கு விவசாயிகளுடைய நிலங்கள் சிதறுண்டு கிடக்கின்றன. பல்வேறு இடங்களில் ஒருவருடைய நிலம் சிதறுண்டு கிடக்கிற காரணத்தினால் சரியான முறையில் கவனம் செலுத்த முடியவில்லை. ஐந்து ஏக்கர் ஒருவரிடம் இருந்தால் அதை ஓரிடத்தில் ஒருமுகப்படுத்த வேண்டும். அதற்கு கன்சாலிடேஷன் ஹோல்டிங் ஆக்ட் கொண்டுவர வேண்டும். ஏற்கனவே சட்டம் இருக்கிறது. அதை அமலாக்க இந்த அரசு முற்படவேண்டும்.

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1968 ஆகஸ்ட் 22

அடுத்து, தண்ணீர் பிரச்சினை. தண்ணீர் இல்லாது உற்பத்தியைப் பெருக்க முடியாது. தண்ணீர் கிடைக்காத இடம் இருக்கிறது. தண்ணீர் வீணாகக் கூடிய இடம் இருக்கிறது: அதுவும் குறிப்பாக கடைமடைப் பகுதிகளைக் குறிப்பிட்டார்கள். என்னுடைய பகுதி கடைமடைப் பகுதி. அங்கே கூட தண்ணீருக்காக உண்ணாவிரதம் இருப்பதாகச் செய்தி வந்தது. அதுபற்றித் தெரியவில்லை. எல்லாப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைக்க முறையான நீர்ப்பாசன அமைப்பை ஒழுங்கு செய்தாகவேண்டும். மேலும் மேலை நாடுகளில் தண்ணீர் தெளிப்பதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். இன்னும் நம் நாட்டில் 3 அங்குலத் தண்ணீரைத் தேக்கித்தான் பயிர்செய்ய முடியும் என்ற நிலை இருக்கிறது—நம் நாட்டிலும் குறைந்த தண்ணீரைக் கொண்டு எப்படி சாகுபடி செய்வது என்பதற்கான ஆராய்ச்சிகள் விரைவில் மேற்கொள்ளப்பட்டாக வேண்டும். அப்படியானால் நமக்கு இருக்கிற தண்ணீரைக் கொண்டே பல லட்சக்கணக்கான ஏக்கராவில் சாகுபடி செய்ய முடியும்.

அடுத்தபடியாக, ஆற்றுத் தண்ணீரையே நம்பியிருக்க முடியாது. ஆற்றுத் தண்ணீர் கிடைக்கிறது என்றாலும் கடைமடைப் பகுதியில் அதை நம்ப முடியாது. பருவ மழையினால் ஆற்றுத் தண்ணீர் பாதிக்கவும் செய்கிறது. ஆகவே ஆழ் கிணறுகள் எடுத்தாக வேண்டும். இப்போது ஓப்பன் வெல்ஸ் போடுகிறார்கள். அதிலேயே தண்ணீர் குறைந்து போகிறது. நிறைய போர் வெல்ஸ் போட்டாக வேண்டும். அதுவும் 150 அடி, 200 அடி என்று போட்டால் போதாது. சிறிது காலத்தில் அதிலும் தண்ணீர் கிடைக்காது போகக்கூடும். ஆகவே போடுகிறபோதே 400 அடிக்குக்கீழ் போகிறதுபோலப் போடவேண்டும். சிறு நிலக்காரர்களால் 15 ஆயிரம் 20 ஆயிரம் செலவு செய்து இதுபோன்ற கிணறு எடுக்க முடியாது. ஆகவே சமுதாயக் கிணறுகளாக எடுக்க வேண்டும். இதுதான் நல்ல திட்டம். இதில் இன்னும் ஒன்று கூட அமையவில்லை. ஒரே ஒரு இடத்தில் வேலை நடக்கிறது. ஆண்டுக்கு நூறு கிணறுகள் என்றாவது எடுக்க வேண்டும்.

மேலும் தஞ்சை மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் இருபோகச் சாகுபடியைக் கொண்டு வருகிறார்கள். வரலாம். ஆனால் கிராமத்திற்குக் கிராமம், வயலுக்கு வயல் லிங்கிங் ரோடுகள் இருந்தாக வேண்டும். ஆகவே ஆங்காங்கே இணைப்புச் சாலைகள் போடுகிற திட்டத்தையும் மேற்கொண்டாக வேண்டும்.

அடுத்து உற்பத்தித் துறையில் எல்லாக் கட்சியினரும், எல்லா வாலிபர்களும் ஈடுபடக்கூடிய திட்டத்தை வகுத்தாக வேண்டும். மாவட்டத்திற்கு ஐந்து லட்சம் ஏக்கரா ப்பிரிட்டாக வேண்டும். என மேல்மட்டத்தில் நடவடிக்கை எடுத்துப் பயன் இல்லை. கிராமத்திற்குக் கிராமம்—கிராம அடிப்படையிலேயே எல்லோரையும் கூட்டி வைத்து எஸ்.ஓ. இருக்கிறார், இ.ஓ. இருக்கிறார், கிராம சேவக்குகள் இருக்கிறார்கள்—கிராம அடிப்படையிலேயே எல்லோரையும் கூட்டி வைத்து ஒரு கமிட்டி போட்டு உருவான முறையில் கிராம மக்களுக்கு விவசாயத்தில் ஈடுபடுகிற



1968 ஆகஸ்ட் 22] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். இதற்கு அரசாங்கம் பணம் கூடத் தேவையில்லை. அவர்களே போட்டுக்கொள்வார்கள்.

தரிசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றைச் சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும்.

சிறு பாசனத் திட்டத்தின் கீழ் ஏரி குளங்கள் மராமத்து செய்யப்படவேண்டும். கோவில்பட்டி போன்ற பகுதிகளில் கிணறுகளில் தண்ணீர் இல்லை என்பதற்குக் காரணம் ஏரி குளங்களில் தண்ணீர் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே கிணறுகளில் தண்ணீர் இருப்பதற்கு ஆங்காங்கே புதிதாக ஏரி குளங்களை எடுத்தாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை உரங்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தப்படவில்லை. அதைக் கைவிட்டுவிட்டார்கள். ரசாயன உரங்களே அதிகமாகப் பேசப்படுகிறது. கெமிகல் உரங்களோடுகூட இயற்கை உரங்களையும் பெருக்குவதற்கு ஆங்காங்கே பிரச்சாரம் செய்யப்படவேண்டும் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தில் அவர்கள் முக்கியமாக வலியுறுத்திக் கூறியது விவசாயிகள் வாங்கும் பொருள்களின் விலை கூடியிருப்பதால் நெல் விலையையும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று வாதாடினார்கள். விலையைப் பொறுத்தவரையில் தேச ரீதியாக ஒரு கொள்கை வேண்டுமென்பதுதான் என்னுடைய கட்சியின் சார்பான கருத்தாகும். எல்லாப் பொருள்களின் விலைகளும் உயர்ந்துகொண்டே போகின்றன. தொழிற்சாலைகளிலிருந்து வெளியே வருகின்ற பொருள்களின் விலைகள் ஏறிக்கொண்டிருக்கின்றன. அதன் காரணமாகப் பெரு முதலாளிகள் கொள்ளை லாபத்தைச் சம்பாதித்துக்கொண்டிருப்பதற்கு எந்தக் கட்சி பொறுப்பு என்பதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். மக்களின் வாங்கும் சக்தியைப் பொறுத்துத்தான் அந்த நாட்டிலே உள்ள விலைகள் இருக்க வேண்டும். இந்தக் கொள்கைக்கு விரோதமாக இந்த நாட்டை இருபது ஆண்டுகளாக ஆண்ட காங்கிரஸ்காரர்கள்தான் விலை யேற்றத்திற்குக் காரணமாக இருந்தார்கள். இந்த நாட்டு மக்களைப் பல சிரமங்களுக்குள்ளாக்கினார்கள். இப்பொழுது நெல் விலையை உயர்த்துவதால் மட்டும் இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணமுடியாது. பெரு முதலாளிகள் கொள்ளை லாபம் அடிப்பதையும், பண வீக்கம் ஏற்படுவதைத் தடுக்கக்கூடிய முறையிலும் காங்கிரஸ் கட்சி நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமே தவிர விலையை உயர்த்துவதன் மூலமாக மட்டுமே இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்ற முறையில் வாதாடுவது சரியான வாதமாகாது, என்ற வகையில்தான் நாங்கள் எங்கள் கட்சியின் சார்பாக

[திரு. கொ. இர. ஞானசம்பந்தன்]  [1968 ஆகஸ்ட் 22

இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறோம். அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கக்கூடிய மத்திய அரசுதான் விலைகளையெல்லாம் குறைப்பதற்கு முயலவேண்டும்.

நெல் விலை உயர்ந்தால் யாருக்கு லாபம் கிடைக்கும்? எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் சொல்வதைப்போல் பெரும் நிலம் படைத்தவர்கள் அல்ல விவசாயிகள்; நிலத்தை உழுது பாடுபட்டு உழைக்கின்ற உழைப்பாளிகள்தான் விவசாயிகள். இந்த நாட்டிலே உழைத்துப் பாடுபடுகின்ற மக்கள்தான் பெரும்பாலும் இருக்கிறார்கள், சாதாரண மக்கள்தான் பெரும்பாலும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் அரிசியை வாங்கிச் சாப்பிடக்கூடிய நிலையிலே உள்ளவர்கள்தான். நெல் விலையை உயர்த்துவதன் காரணமாக இந்த நாட்டில் உள்ள அந்தக் கோடானு கோடி மக்களுக்குத்தான் அது பாதகமாக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லித்தான் ஆகவேண்டும். இந்த நாட்டிலுள்ள பெரும் பகுதி மக்களுக்கு அது லாபமல்ல, நன்மையல்ல; விலையை நிர்ணயிக்கும்பொழுது இந்த நாட்டிலே உள்ள பெரும் பகுதி மக்களுடைய நிலை அதனால் பாதிக்குமா என்பதைப் பொறுத்துத்தான் செய்யவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் சொல்வது சரியல்ல என்பதுதான் எங்கள் கட்சியினருடைய அழுத்தமான அபிப்பிராயமாகும்.

விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் கேட்பது விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கக் கூடியதல்ல. கடப்பாரையை முழுங்கிவிட்டு சுக்குக் கஷாயம் சாப்பிடுவதால் செரிக்காது; அதுபோல் ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பெயரில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்ட பிறகும் அமெரிக்காவிடம் உதவிக்காகச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது என்றால் அதற்கு என்ன காரணம்? இந்த நாட்டை 20 வருட காலமாக ஆண்ட அவர்களுடைய பொறுப்பல்லவா? அவர்களுடைய கொள்கை பொறுப்பல்லவா? மகாத்மா காந்தி அவர்கள் சொன்னதை நிறைவேற்றியிருக்கிறார்களா? விவசாயிகள் என்றால் திரு. கருத்திருமன் அவர்கள் சொல்கிறவர்கள் அல்ல, மகாத்மா காந்தி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் வியர்வை சிந்தி நிலத்தில் உழைப்பவன் கையிலே நிலம் வருவதற்குத் தடையாக எந்தச் சக்தி இருந்தாலும் அதை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அதை நிறைவேற்றியிருக்கிறார்களா? அந்தக் கொள்கை உங்கள் கட்சிக்கு உண்டா? அவையெல்லாம் செய்யவில்லை, நீங்கள்.

இந்த அவையில் நீங்கள் கொண்டுவரும் இந்தத் தீர்மானமா உணவு உற்பத்தியைப் பெருக்கும்? அடிப்படை வியாதிக்குக் காரணம் என்ன என்பதை யோசித்து தீவிரமான முறையிலே நிலச் சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைச் செய்யாமல் இருந்தது உங்களுடைய குற்றம்தான், இந்த அரசினுடையது அல்ல. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதல்ல அதற்குப் பரிகாரம், சிறு பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்ய



1968 ஆகஸ்ட் 22]  [திரு. கொ. இர. ஞானசம்பந்தன்]

வேண்டும். எப்படி முடியும்? பல இடங்களை அபிவிருத்தி வேலைகளைச் செய்யாமல் நீங்கள் முன்பு புறக்கணித்தீர்கள். நிறைவேற்றவே இல்லை. அது போகட்டும். இப்பொழுது 100 கோடி ரூபாய் அதற்காக வேண்டுமென்று கேட்டால் அந்தப் பணத்தைப் பெறுவதற்காகவாவது ஒத்துழைக்கத் தயாரா? பல நீர்ப்பாசனத் திட்டங்களைப் போடுவதற்குப் பணத்தைப்பெற நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் வருவதற்குத் தயாராக இருக்கிறீர்களா? தனியாக தமிழக அரசு மட்டும் அதற்கு பணம் ஒதுக்க முடியுமா? சிறிய கால்வாய்களை வெட்டுவது, பல திட்டங்களைப் போடுவது இவற்றிற்கெல்லாம் பணம் எங்கே இருக்கிறது? மத்திய அரசு தான் கொடுக்கவேண்டும். மத்திய அரசுதான் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்கு முன்வரத் தயாரா? உங்கள் தீர்மானம் வெறும் குற்றம் சாட்டுவதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர உணவுப் பிரச்சினையை உண்மையிலேயே தீர்க்கக் கூடியதாக இல்லை, பிரச்சினையைத் திர்ப்பதாக இல்லை. நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படும் கோரிக்கைகளை அடங்கிய தீர்மானமாக அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் இருந்தால் உண்மையாக காங்கிரஸ்காரர்களுக்கு 20 வருடங்களுக்குப் பிறகாவது விவசாயிகளின் மீது அக்கறை பிறந்திருக்கிறது என்று நினைத்துக்கொள்ளலாம், சிறு பாசனத்திற்காக 20 கோடி ரூபாய் வாங்கி பல இடங்களில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளலாம். இந்த அரசாவது பல இடங்களில் பல கருத்தரங்குகளைக் கூட்டி விவசாயிகளைச் சந்தித்துப் பல விஷயங்களைப்பற்றி யோசித்திருக்கிறது. கடைமடைப் பகுதியில் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் வந்து அங்கேயுள்ள சிரமங்களையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். உங்கள் காலத்தில் யாராவது வந்தார்களா? இந்தப் பிரச்சினையை உண்மையாகவே தீர்க்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினால், இதைக் கட்சிப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளாமல் விவசாயப் பிரச்சினையாக, தேசப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளுங்கள், நாங்களும் வருகிறோம், நீங்களும் வாருங்கள், தி.மு.க.வையும் கூப்பிடுவோம், எல்லோரும் சேர்ந்து இந்த நாட்டிலே நிலச் சீர்திருத்தத்திற்குப் பாடுபடுவோம், அதற்காக மத்திய அரசைக் கேட்போம். பெரு முதலாளிகள் கொள்ளை லாபம் சம்பாதிப்பதைத் தடுக்கக்கூடிய முறையிலே தேச ரீதியிலே பாடுபடுவதற்கு நாம் ஒன்றுபடுவோம். அதற்கு நீங்கள் தயாரா? அதுதான் பிரச்சினையைத் தீர்க்கும், உங்கள் தீர்மானமல்ல என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, if we want a classical example of shedding crocodile tears we have it before the House now in the shape of the resolution moved by our hon. Leader of the Opposition. I rather wonder what happened to the laudable policies and programmes when they were in power and when the Congress Party was the ruling party for the past twenty years. What did the hon. Member do during the regime

of the ex-Chief Minister, Thiru M. Bhaktavatsalam ? What did the Congress do after all the complaints that we raised as regards the farmer ? That is the question that the House has to address itself to. There is no point in coming whith this resolution and trying to shed crocodile tears. All farmers are not fools to berlieve this. It is crystal clear that even the Congress Party has absolutely no sympathy whatsoever for the farmers and that has been clearly demonstrated during their twenty years rule in the unfortunate State, when there was the Congress regime. Therefore, it is that I say ' let us face facts squarely '. What the D.M.K. is doing is practically 'okaying ' what the Congress did for the past twenty years. There may be minor differences here and there. Probably the administration is a little toned up because of change of party. But, by and large, the policies pursued at present are the same as the Congress Party did in the State in the past.

Our distinguished Food Minister at the Centre is Sri Jagjivan Ram. If it is going to be a controversy between Jagjivan Ram and Karuthiruman, hundreds of Karuthiruman can shout in the House and that is not going to be of any use. By one stroke, by one order, by a pat on the back of Mr. Karuthiruman by Mr. Jagjivan Ram—that will nullify all these things. When that is the true position, why shed these crocodile tears in the House ? I can tell, Mr. Karuthiruman " you get out of Congress Party and give out our policies clearly; or if you have any sort of sense of justification (I hope Thiru Karuthiruman will not mistake me), as the hon. Member Thiru Asaithami said " You should come out and start an ஊர்வலம் and say "down, down Central Policy " . You must thus demonstrate. Otherwise, why this double act of speaking different versions to different persons. I can cite several instances to show the attitude of our Congress friends towards this subject.

The other day my distinguished friend Thiru Krishnaswamy Gounder showed me an interesting paper-cutting. It is from "Economics Times, Bombay." Therein the Hon. ex-Minister for Food of the Government of India, Sri C. Subramanism was asked by a team of pressmen as to what he considered of the various Five-Year Plans. Let us now examine the reply he gave. I have not the paper-cutting now but I can bring it at any time. I have asked Thiru Krishnaswamy Gounder to keep the paper-cutting as a piece of evidence, regarding the behaviour of the Congress Party when they were in power. Sri C. Subramaniam, when he was asked by pressmen said as follows : "These Five-year Plans I am sorry to say, have made the farmer, the நிலச்சுவான்தார் as black marketers. It has made them as hoarders. It has made them collect a lot of money. It has made them rich." These are the words, given in reply to question of pressmen, by no less a person than the Ex-Food Minister of the Government of India. If it had been any other person, I will not waste the time of the House by quoting that person. But as he was a Congress Minister at the Centre, I am entitled to quote him. Of course I can really



bring shame to the Congress Party if I am to quote all those things that were said by those who were not in this House. I do not want to do it. When you have not got the capacity to do what you are saying, why are you saying it now? The important fact is that procurement price has to b e enhanced. A decision has been taken and a directive must come from the Centre. The Food Minister said just a few hours ago that he had almost decided on the scrapping of the procurement policy on condition that our food productivity increases in the next two or three months. I really appreciate what the Food Minister said a few hours ago. If the food productivity position in our State improves, if our State is going to be surplus, he said that there was every possibility of abolishing procurement. He even went to the extent of saying that the ultimate goal is to abolish procurement. The crux of the problem is that procurement acts as a disincentive. Instead of diagnosing this position, saying one thing here and another thing there, passes my comprehension. Let Mr. Karuthiruman come and say, as our Food Minister had said—of course he will say that they have not taken a decision—"we will abolish the procurement of foodgrains inside our State ". If procurement is abolished middlemen will be wiped out and the extraordinary profit that the middlemen are making will be shared to a certain extent by the producer and to a greater extent by the consumer, and rice will reach the poor people in the different towns. Whether we agree with the Food Minister or not, one particular thing I appreciate and that is that he has made a sincere effort to grapple with the problem. The best way to increase productivity is to remove the torture that is inflicted by the officers of the Cicil Supplies Department on these ' vivasayees '. That itself will bring in an extra production of 5 lakhs or 10 lakhs of tonnes. It is a vicious circle and we have to stop it some point. Our friend Mr. Karuthiruman says : "Let us increase the procurement price." What right has the Congress Party to ask for an increase in the procurement price when they tie a rope and project 'panais'. That is another drama that they are enacting. In areas where there is a bye-election, the number of 'panais' will be more. A boy who has studied up to Third Form will know this elementary mathematics. No marks will be given for this. If you want to extend this one rupee a measure to the entire State—and you are trying to create a feeling in everybody's mind—this is really absurd. If you say " I don't care. It is the funeral of the D.M.K. Party " it is a different thing. We are not bothered about their fall or uplift. We are interested in the uplift of the masses, the producers and the consumers. That is the thing in which we are basically interested. This point should be clearly and boldly expressed and if you have the guts, you do it. Why do you create more confusion and try to get votes? The votes of all people you want. Be plain about the whole thing.

பி.ப. 1-30

Finally I will refer to one more point. The Minister has said about double cropping in Thanjavur District. There I basically differ. I would like to draw the attention of the Minister that

last year I gave notice of an adjournment motion in this House. Even for the Thaladi crop we do not have enough water. Nearly about one lakkh of acres under Thaladi crop started withering and the Hon. Minister for Public Works accepted that to a certain extent the point I raised was correct. When we do not have enough water to let in even for the basic crops that are being raised in the Thanjavur District, it is really a wonder whether we do not have enough water for double cropping. This mistake is proved by the fact that the same Government which said that they would bring in six lakhs acres under double cropping toned down later on and said that they would bring in only three lakh acres. Let us be very, very wary of these mysterious figures and the fertility of the imagination of the Civil Supplies Department. Let us consult the farmers in the district and know what their requirements are.

I hope that the Congress Party will open their eyes and make a more realistic approach. The moving of the resolution by them is a vain bid or cain attempt at recapturing their lost prestige and their lost attachment to the farmers. This does not really represent their real feelings. With these words and with the statement that sympathy with the farmers is being advocated by a very, very wrong party, I resume my seat.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பதில் அளிக்க எவ்வளவு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தாங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் 15 நிமிடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

*** மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் இரண்டு மணிக்குள், முடிந்தால் அதற்கு முன்னதாகவே முடித்துக் கொள்ளுகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் என்னுடைய அருமை நண்பரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. கருத்திருமன் அவர்கள் கொடுத்திருக்கிற தீர்மானத்தின்மீது இவ்வளவு நேரம் உணவு விவாதம்போல் விவாதித்தது குறித்து நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நண்பர்கள் எல்லாம், 'ஏன் அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள் ? அதைக் கொண்டு வந்திருக்கத் தேவையில்லை' என்று கூறினார்கள். இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற அவசியமில்லாத நிலையில், அரசாங்கத்தின் கொள்கையைப் புனராலோசனை செய்யவும், தவறு இருந்தால் திருத்திக் கொள்வதற்கும், அவருடைய கருத்தையும் உறுப்பினர்கள் கருத்தையும் தெரிந்து கொள்வதற்கும் அந்தத் தீர்மானம் வாய்ப்பாக இருக்கிறது. ஆகவே, அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததற்காகப் பாராட்டுகிறேன். இன்னொரு பெரிய பாராட்டுதலையும் பின்னாலே மறந்து விடுவேன் என்பதால் இப்போதே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்



கிறேன். கடந்த 18 மாத காலத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இவ்வளவு உருக்கமாகவும், அற்புதமாகவும்—கருத்தை ஏற்றுக் கொள்ளுகிறோமோ, இல்லையோ, அது வேறு விஷயம்—பேசிய சொற்பொழிவுக்காக உண்மையிலேயே நான் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன். இதுபற்றிய அவர்களுடைய பேச்சை நான் இந்த மன்ற உறுப்பினராக ஆவதற்கு முன்னாலும், பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சமயத்திலும், பார்வையாளராக இருந்தும் கேட்டிருக்கிறேன். அவர்கள் தவறாகவோ, சரியாகவோ கடந்த பத்துப் பதினைந்து வருஷ காலமாக, விவசாயிகளைப்பற்றி அழுத்தமான, தவறான ஒரு கருத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய கருத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவருடைய உருக்கமான பேச்சுக்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தைக்கூட நான் ஏற்றுக்கொண்டிருந்திருப்பேன்.

This House recommends to the Government that with a view to increase food production, along with schemes for land reclamation and building a special fund for minor irrigation . . . .

என்று வருகிற தீர்மானத்தில்

This House recommends to the Government to recommend to the Union Government to create a special fund for minor irrigation . . . . . . . .

என்ற அளவில்மட்டும் சொல்லி, பின்னால் இந்த லெவி முறை இருக்கவேண்டுமா, ப்ரொக்யூர்மெண்ட் விலை சரியானதுதானா என்பதையெல்லாம் அடித்துவிட்டு இப்போதுகூடத் திருத்தம் கொடுப்பார்களானால் அதை இந்த மன்றம் ஏற்றுக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. நான் அதிக நேரம் பேசக்கூடாது என்று கருதுகிறேன். பேசக் கூடாது என்பதற்காக அல்ல. Hundreds of arguments cannot alter a fact. என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். நூறு வியாக்கியானங்கள் கூட ஒரு சிறிய புள்ளி விவரத்தை—உண்மையை—மாற்றமுடியாது புள்ளி விவரங்களைமட்டும் சொல்லிக்கொண்டு இந்த விவாதத்தில் உள்ள ஒரு சில முக்கிய அம்சங்களைப்பற்றி மட்டும் கூற விரும்புகிறேன். திரு. நல்லசிவம், திரு. மாரிமுத்து, திரு. ஞானசம்பந்தன், டாக்டர் ஹாண்டே, எதிர்க்கட்சித் தலைவர், எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் போன்றவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இருபது ஆண்டுக் காலத்திற்குப் பிறகும் இங்கு உணவு உற்பத்தி பெருகவில்லை என்ற உண்மையை ஒத்துக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழக அரசினால்தான் இந்த நல்ல காரியம் நடைபெறவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் இருப்பதற்காக அவர்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 1½ ஆண்டுக் காலமாக ஒரு பெரிய, மௌன விவசாயப் புரட்சி நடைபெற்று வருவதையும், அதன் விளைவாக விவசாயப் பெருங்குடி மக்களிடையே நல்லதொரு உற்சாகம் ஏற்பட்டிருப்பதையும் காண்கிறோம். திரு. ஆசைத்தம்பி அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது

பட்டினிச் சாவு நடந்ததா என்று அவர்களைக் கேட்டார்கள். எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. முன்னால் இருந்த முதல் அமைச்சர் அவர்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது சொன்னது என் ஞாபகத்திற்கு வருகிறது. பூந்த மல்லி பக்கத்தில் திரு. பக்தவத்சலம் அவர்கள் தொகுதியில் வெள்ளக்கோடு என்ற இடத்தில்—எனக்கு அந்தப் பெயர் ஞாபகத் தில் இல்லை—என்று நினைக்கிறேன். ஒரு அம்மையார் சாப்பிட சாப்பாடு இல்லாது, தன் நான்கு குழந்தைகளை நல்லதங்காள் மாதிரி கிணற்றில் போட்டுவிட்டு தானும் இறந்தாள் என்று கூறினேன். அதை யாரும் மறுக்கவும் இல்லை. இன்னும் ரிக்கார்டில் இருக்கிறது. அந்நிலை இப்போது நன்கு மாறியிருக்கிறது.

தமிழ்நாட்டு விவசாய மக்கள் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்திருப்பதன் காரணமாக அந்தப் பயங்கரமானதொரு நிலைமை இன்று மாறியிருக்கிறது. மத்திய அரசுகூட, உங்கள் கட்சி அரசுகூட சென்னை மாநிலம் உணவுத்துறையில் நன்கு முன்னேறியிருக்கிறது என்று சொல்லிப் பாராட்டியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களும் நம்மைப் பாராட்டுகிறார்கள். மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள்கூட தமது சுதந்திர தினச் சொற்பொழிவில் ஒரு பெரிய புகழாரத்தை இம்மாநிலத்திற்குச் சூட்டியிருக்கிறார்கள். கடந்த 1½ ஆண்டுக் காலமாக கொள்முதலில் வெற்றி கண்டதன் காரணமாகவும், உணவு உற்பத்தித் திட்டங்களைத் தீவிரமாக அமல் படுத்தியதன் காரணமாகவும் இன்று ரேஷன் கடைகளில் மட்டுமல்ல, வெளிச் சந்தையிலும்கூட ஏராளமான அளவிற்கு அரிசி கிடைக்கிறது. அதுமட்டுமல்ல, மற்ற மாநிலங்களில் இந்த அளவிற்கு எங்கும் அரிசி விலை இல்லை என்று எல்லோருக்கும் பொதுவான கவர்னர் அவர்கள் சுதந்திர தினச் செய்தியாகச் சொன்னார்கள். கோவை ஜில்லாவில் ஈரோடு பக்கத்தில் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நான் கணக்குகளை வரவழைத்துப் பார்த்தேன். கோவை ஜில்லாவில் 10,000 டன் கொள்முதல் செய்யவேண்டுமென்று சொன்னவுடன், கடைசிக் குடியானவன் கூடக் கொள்முதலுக்கு அளந்திருக்கிறான் என்பதற்கான கணக்கு இருக்கிறது. திரு. கருத்திருமன் அவர்கள் கொள்முதலுக்குக் கொடுக்கவில்லை என்று எங்கள் கட்சிக்காரர்கள் மாலை நேரங்களில் தவறாகச் சொன்னாலும் அதுவும் தவறு. நல்லசிவம் அவர்கள் என்னைக்கூட நினைத்துச் சொன்னாரோ, என்னவோ தெரியவில்லை. எங்கள் பக்கத்தில் உள்ளவர்கள்கூட இருப்பவர்கள் எல்லோரும் கொள்முதலுக்கு அளந்திருக்கிறார்கள்.

கோவையில் இந்த ஆண்டு நன்கு அளந்திருக்கிறார்கள். திரு. கருத்திருமன் அவர்களும் எவ்வளவிற்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டதோ அதைக் கொடுத்துவிட்டுத்தான் பேசுகிறார்கள். கொள்முதல் விலையைச் சிறிது அதிகரிக்கவேண்டும் என்று சொன்னார்கள். விவசாய மக்கள் சிரமப்படுகிறார்கள், ஆகவே லெவி முறையை மாற்றவேண்டும் என்றும் சொன்னார்கள். 20—8—1968 வரையில் தமிழ்நாடு முழுவதும் 4,98,594 டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. பெருமை மிகுந்த அட்டவணையாக இதைச் சொல்ல





வில்லை. ஃபுட் க்ரெய்ன் ட்ரேடை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, இடைத்தரகர்கள் இல்லாதிருக்கும் நிலைமையே நல்ல நிலைமை என்பது என் சொந்த, தனிப்பட்ட கருத்து. நான்கு லட்சத்துச் சொச்சம் டன் நெல்லைக் கொள்முதல் விலைக்கு நம் விவசாய மக்கள் கொடுத்திருக்கிறார்கள் என்றால் கொள்முதல் விலை சரியானதாக அல்லாததால் அல்ல. இந்த அரசாங்கம் போலீஸை வைத்துக் கொண்டு நிர்ப்பந்தப்படுத்தியதால் வந்தது என்பதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். அது அவர்களாகவே கொடுத்தது. நியாயமாக அவர்கள் கொடுத்ததுதான். சரியானது என்று கருதிக் கொடுத்ததுதான். அதற்காக தமிழ்நாடு விவசாய மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் இதை அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறேன் என்றால் அப்படி ஒரு நிலை இருந்திருக்குமானால் திரு. மார்டின் அவர்கள் கேட்காமல் இருந்திருக்கமாட்டார், திரு. வினயகம் அவர்கள்தான் விட்டிருப்பார்களா, திரு. ஆதிமூலம் அவர்கள் சபித்தாவது இருந்திருப்பார்கள், சும்மா இருந்திருக்கமாட்டார். ஒரே ஒரு சம்பவந்தான் நடந்தது. திருச்சி பக்கத்தில் புதுகிராமம் என்ற அக்கிரஹாரத்தில் தகராறு வந்தது என்ற நிலை இருந்தது. வேறு மாநிலங்களில் விலை இப்படியிருக்கிறது என்றால் அதை நான் ஆட்சேபனை செய்யவில்லை, ஏற்றுக்கொள்கிறேன். நான் சொல்வதெல்லாம், இன்று இங்குள்ள விலை நியாயமான விலை, கட்டுப்படியான விலை, சரியான விலை என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு வந்ததற்குப் பிறகு 13 லட்சம் டன் கொள்முதல் செய்திருக்கிறோம். இங்கு தொழில் அமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்களின் சகோதரர் டெல்லிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார், எந்தக் காலத்தில் இப்படி விலை கொடுத்தார்கள் என்று. கொள்முதலுக்கு அளந்துவிட்டேன், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் குறுவை சமயத்தில்கூட இப்படி விற்க முடிந்தது என்று எழுதியிருக்கிறார். 130 கோடி ரூபாய்க்குக் கொள்முதல் செய்திருக்கிறோம். இந்தக் கொள்முதல் இல்லாதிருக்குமானால் 100 கோடி ரூபாய் அளவிற்குத்தான் விவசாயிகளுக்குப் போய் சேர்ந்திருக்கும், மீதி கள்ளமார்க்கெட்காரர்கள் கையில் போய் சேர்ந்திருக்கும். கோவையில் 10,000 டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. தஞ்சையில் 2½ லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது, அவர்களுக்கு இதைப்பற்றிய கதை தெளிவாகத் தெரியும். அரசியலுக்காக வேண்டுமானால் அவர்கள் சொல்லிக் கொள்ளட்டும், ஆட்சேபிக்கவில்லை. அதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கிறது. வேறு எதுவும் அகப்படவில்லை என்றால் இதைத் தாராளமாகச் சொல்லிக்கொள்ளட்டும். திரு. ராமச்சந்திரன் அவர்கள் கூறியதுபோல் அக்ரிகல்ச்சரல் ப்ரைஸ் கமிஷனால் சொல்லப்பட்டு, மத்திய அரசால் சொல்லப்பட்டு, நாங்களும் கணக்குப் போட்டுப்பார்த்துச் செய்தது இது. இது கட்டுப்படியாகக் கூடிய விலை, ரீசனபிள் ப்ரைஸ், ஃபேர் ப்ரைஸ் என்று கருதித்தான் கொண்டுவந்திருக்கிறோம். விவசாயிகளின் வயிற்றில் அடிப்பவர்கள் அல்ல நாங்கள். நானும் விவசாயிதான். திரு. கருத்திருமன் அவர்கள் கூறுவதை ஒத்துக்கொண்

டால் எனக்கும் ரூ. 100, 200 லாபம் கிடைக்கலாம். அதற்காக எனக்கு இருக்கும் பொறுப்பை, 4 கோடி மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையைத் தட்டிக் கழிக்க முடியுமா? திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் சொல்லியிருக்கிறார் என்றால், நாங்கள் கேட்டால் அப்படிச் சொல்லவில்லை என்கிறார்கள். திரு. ஜெகஜீவன்ராம் சொன்னார் என்பதற்காக மட்டும் அல்ல, இந்த அரசுக்கும் உரிமை இருக்கிறது. பீகார், கேரளாவிலே கொடுத்திருக்கலாம். ஆனால் நாங்கள் கொடுக்க வேண்டியது அவசியமில்லை என்று கருதுகிறேன். அவசியமில்லை என்றால் விவசாயிகள் மீது எங்களுக்கு அக்கறை இல்லை என்று அர்த்தம் இல்லை. இந்த அரசாங்கத்தின் சகல விதமான பொறுப்புகளையும் உணர்ந்து, நியாய விலை கொடுக்கிறோம். ஆந்திராவிலே கொள்முதல் செய்யப்படுகிறது என்றால், அங்கு ரேஷன் கிடையாது. வங்காளத்திலே கொள்முதல் செய்யப்படுகிறது என்றால், அவர்கள் ஏன் செய்கிறார்கள் என்றால் பட்டினிச் சாவினால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதற்காக அங்கு கொள்முதல் செய்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே செய்வது மக்களுக்காக இதை வாங்கி அதையே மக்களுக்குக் கொடுக்கிறோம். தஞ்சாவூர் ஜில்லாவிலே 7 இலட்சம் மக்களுக்கு 1 ரூபாய் 17 பைசாவிற்குப் படியரிசி போட்டுக்கொண்டிருக்கிறோம். கொள்முதல் கொள்கை, 'கன்ஸ்யூமர்ஸ்' கொள்கை மட்டுமல்ல, எல்லா மக்களுக்கும் அடிப்படையான கொள்கை. திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் அப்படிச் சொல்லவில்லையென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அக்டோபர் மாதத்திலே எழுதிய கடிதத்தின் நகலைக் கொடுக்கிறேன். அதை எனக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றால் திருப்பிக் கொடுத்துவிடலாம், சபாநாயகர் அனுமதியோடு அதை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குக் கொடுக்கலாம் என்றிருக்கிறேன். அந்தக் கடிதாசியிலே எழுதியிருக்கிறார்கள்

'The procurement prices demanded by some States are far above these levels and such sharp and sudden increase in a year of expected record production would be unwarranted. The paramount need is to hold the price line and any sudden escalation of agricultural prices would be disastrous to the entire economy, push up the cost of living index and result in demands for increased dearness allowance which would mean a further strain on Central and State financial resources. A balance therefore has to be struck between the interests of producers and consumers. After consideration of all aspects of this question Government has decided that procurement prices for your State should be as follows'.

He has not stated 'may be as follows' but has stated 'should be as follows'.

'Paddy (Katta Sambha) Rs. 45'.

'Prices for other varieties of paddy and rice may be worked out in the usual manner and communicated. To Shri C. N. Annadurai, Chief Minister of Madras'.

என்று அவர்கள் எழுதினார்கள். அவர்களிடம் கொடுக்கிறேன். அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் கூறுகின்ற கருத்து சரியானது. திரு. ஞான





சம்பந்தன் அவர்கள் சொன்னார்கள், இந்தப் பொருளாதாரத்தில் அரிசி விலையை அதிகரித்தால் பயங்கரமான நிலை உருவாகிவிடுமென்று சொன்னார்கள். அந்த நிலை வரக்கூடாது. அதற்காகத்தான் மக்கள் எங்களை அமர்த்தியிருக்கிறார்கள். திரு. காட்கில் அவர்கள் பொருளாதார நிபுணர். அவர்கள் ஒரு கருத்தைக் கீழ்க்கண்டவாறு சொல்லியிருக்கிறார்கள்.

'The increase in procurement prices would push up the consumers' price of foodgrains correspondingly and the possible inflationary effect could not be ignorsed.

இது சாதாரண சிறிய வார்த்தை அல்ல. கொள்முதல் விலையை ஏற்றிக்கொண்டுபோனால் பொருளாதாரம் சின்னாபின்னமாக ஆகிவிடும் என்கிறார்.

'the possible inflationary effect could not be ignored'.

என்று திரு. காட்கில் அவர்கள் வாதம் செய்தார்கள். இத்தனை பேரும் சேர்ந்து, கணக்குப் பார்த்து விலைவாசியை உயர்த்தக் கூடாது என்று கூறிய கொள்கை.

It is neither consumer-oriented nor producer-oriented but it is people-oriented.

அதுதான் இன்று முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. விவசாயிகளிடத்திலே அக்கறை இல்லை, அனுதாபம் இல்லை என்று யாரும் கருதத் தேவை இல்லை. உண்மையிலேயே அக்கறை இருக்கின்றது. ஐம்பது கோடி ரூபாய் தயார் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். கடந்த ஆண்டு எங்கள் முதலமைச்சரவர்கள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடத்திலும், திரு. மொரார்ஜி தேசாய் அவர்களிடத்திலும் புள்ளி விவரம் போட்டுக் கடந்த வருஷம் 20 கோடி ரூபாய் கொடுத்திருந்தால் 14 லட்சம் டன்களை உற்பத்தி செய்திருப்போம் என்று சொன்னார்கள். அதற்கு என்ன பதில் வந்தது? நாங்கள் வட்டி வாங்கவில்லையா, நீங்கள் வட்டி வாங்கவில்லையா, நீங்கள் தள்ளிக் கொடுக்கக் கூடாதா என்று சொல்வதற்குத் தெரிந்திருக்கும்போது இதைப்பற்றி எண்ணக் கூடாதா? ஆனால் 1½ வருடக் காலத்தில் தஞ்சாவூர் ஜில்லாவிலே 2½ இலட்சம் ஏக்கரை இருபோகமாக மாற்றியிருப்பது தெரியாதா? நண்பர் எதிர்க்கட்சித் தலைவரவர்களின் நிலத்திலே 18 மூட்டை விளைவது, 25 மூட்டை விளைவது சாமர்த்தியத்தினால் இப்பொழுது 30 மூட்டை விளைகிறதாக மாறியிருக்கிறது. 'பெர்ட்டிலைஸரை' எடுத்துக்கொண்டால், போன வருடத்திற்கு முந்தின வருடம் மன்னார்குடியிலே பிளாக் மார்க்கெட்டிலே விற்றான் என்று பத்திரிகையிலே பார்த்தோம். ஆனால் இப்பொழுது 'பெர்ட்டிலைஸர்ஸ்' போட கிடங்குகள் இல்லை என்று புகார்களுடன் வருகிறார்கள். அந்த அளவுக்கு நிலைமை. வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களோடு நாங்களும் சேர்ந்து கூச்சல் போட்டதாலே இன்றைக்கு வந்தது. ஆனால் அதை அவர்கள் உண்மையிலேயே மறைத்து விட்டார்கள். அவர்களுக்கு விவசாயிகள்மீதுள்ள அக்கறையைப் பாராட்டுகிறேன். அவர்கள் காட்டுகின்ற அக்கறைக்கு நாங்கள் காட்டும் அக்கறை கொஞ்சமும் குறைந்தது அல்ல. 'பெர்ட்டிலைஸர்ஸ்'

விலை ஏறியிருக்கிறது என்றார்கள். ஒத்துக் கொள்கிறேன். இந்த அரசு பல காரியங்களைச் செய்திருக்கிறது. கண்மாய்களைத் தூர் எடுத்து, பம்பு செட்டுகளுக்குக் கடன் கொடுக்கிறது. மின் இணைப்புகளுக்கு 75 இலட்சம் ரூபாய் கொடுத்தது. திருச்சியிலே 1¼ கோடி ரூபாய் குறுகிய காலக் கடனாகக் கொடுக்கப்பட்டது. இன்னும் ஒரு மாதத்திலே தஞ்சாவூர் மாவட்டத்தில் 9 கோடி ரூபாயைக் குறுகிய காலக் கடனாகக் கொடுப்பதற்கும் கிணறு பம்பு செட்டுகள் வைத்துக் கொள்வதற்கும் மற்றும் வேறு மாதிரியான மருந்துகள், 'பெர்ட்டிலைசர்ஸ்' வாங்குவது போன்ற காரியங்களுக்குக் கொடுப்பதற்கும் இன்றைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இத்தனையும் கூறுவதன் மூலம் விவசாயிகளிடத்தில் மிகுந்த அக்கறை இருக்கிறது என்பதைக் காட்டிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் நாம் எல்லோருக்கும் சோறு போட வேண்டும். அதைத் தட்டிக் கழிக்க முடியாது. ஒரு ஏக்கருக்கு குறைந்தவர்களிடத்தில் விதிவிலக்கு அளித்திருக்கிறோம். ஒரு ஏக்கருக்குக் குறைந்தவர்களிடத்தில் வாங்குகிறார்கள் என்று புகார்கள் இருக்கலாம். அப்படியிருந்தால் தவற்றைத் திருத்திக் கொள்ளலாம். ஆனால் 13 இலட்சம் விவசாயிகளுக்குக் கொள்முதலிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கருக்குக் குறைந்தவர்களிடத்தில் கொள்முதல் செய்வது கிடையாது. அதனாலே 13 இலட்சம் விவசாயிகள் இன்றைக்கு இலாபம் பெறுகிறார்கள். ஆனால் அவருடைய தீர்மானத்தோடு இன்னும் ஒன்றையும் சேர்த்திருப்பாரானால் நான் இன்னும் நன்றாக அதனால்

பிற்பகல் 2-00 பெருமைப்படுவேன். இன்றைக்கு நாம் செய்கிற கொள்முதலைப் பார்த்துக் கேரளக்காரர்கள் எப்படி என்று கேட்கிறார்கள். ஆந்திரக்காரர்கள் வியப்படைகிறார்கள். நீங்கள் எப்படிக் கொள்முதல் செய்கிறீர்கள் என்பதை அறிவதற்கு நாங்கள் ஆவலாக உள்ளோம் என்று கூறுகிறார்கள். இதனுடைய தத்துவம் என்ன, எப்படி இவ்வளவு நல்ல முறையில் கொள்முதல் செய்கிறீர்கள் என்று அவர்கள் கேட்பது எங்களுக்கே பெருமையாக இருக்கிறது. எங்களுக்குப் பெருமை என்றால் உங்களுக்கும் பெருமை தான். டெல்லியிலே சென்ற நேரத்திலே அனுபவத்திலே அதை நான் பார்த்தேன்.

கலெக்டருக்கு விடவேண்டுமென்றார்கள். அதிலே, இன்னொன்றையும் யோசிக்க வேண்டும். அதைச் சொல்லிவிடலாம். ஆனால், அதிலே சில சங்கடங்களும் இருக்கின்றன. 1966-ம் ஆண்டிலே கொள்முதல் ஆர்டர் தந்திருக்கிறார்கள். இப்பொழுது கொள்முதல் ஆர்டர் வந்திருக்கிறது. இதிலே குடும்ப உபயோகத்திற்கெல்லாம் கணக்கிட்டு அதற்கு மேலே கொள்முதல் செய்யவேண்டியிருக்கிறது. ஒரு ஏக்கர் சாகுபடிக்கு 4 மூட்டைகள், 2 ஏக்கர் சாகுபடிக்கு 8 மூட்டைகள், 10 ஏக்கருக்கு 40 மூட்டைகள் போட வேண்டுமென்ற கணக்கு இது. என்ன கணக்கோ, எனக்குத் தெரியாது. ஆனால், 8 மூட்டையிலிருந்து, 12 மூட்டையிலிருந்து கொள்முதல் செய்யலாம் என்றுதான் இருக்கிறது. அந்தக் கணக்குப் போடுவதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. நேற்றையதினம்





குடியானவர்கள், சாகுபடிதாரர்கள் மசோதாவிலேகூட இது பற்றிப் பேசப்பட்டது. அவர்கள் கூறுகின்ற முறைப்படி வந்தால் ஒன்றும் சரியாக வராது, நாம் நினைக்கின்ற இந்தப் பெரும் காரியத்தைச் செய்யவும் முடியாது. அவர்களாகவே ஒப்புக் கொண்டு கொடுக்கிறார்களே தவிர, எந்த விதமான நிர்ப்பந்தமும் செய்யப்படுவதில்லை. அவர்களாக வாலண்டரியாகத்தான் கொடுக்கிறார்கள். டிக்லரேஷன் செய்வதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. இந்தத் தீர்மானத்தின்மூலம் நாம் நினைக்கின்ற நிலைமைகள் வராது. திரு. கருத்திருமன் அவர்கள் கருத்தை மாலை போட்டு மரியாதையாக வரவேற்பதால் இன்னும் பெருமை வரும். ஆனால் நாம் பார்த்தோம். திரு. கைலாசம் அவர்கள் ஒரு தீர்ப்பிலே சொன்னார்கள் அதைப்பற்றி. பெர்சனல் கன்சம்ஷன் ரைஸ் என்பதையெல்லாம் எப்படிக் கணக்கிடுவது? ஒரு ஏக்கருக்கு எத்தனை என்று கணக்குப் போடுவது? 10 ஏக்கருக்கு மேலே இருப்பவர்களுக்கு 80 மூட்டை கேட்போமானால் இப்பொழுது 80 சதவிகிதம் வாங்குகிறோம். அதையேகூட 100 சதவிகிதத்திற்கு வாங்க வேண்டுமென்பது வலது பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற நண்பரது கருத்து. அந்த கருத்துக்கு இன்னும் விசேஷம் இருக்கிற காரணத்தாலே அவர்கள் என்னிடத்திலே பல நேரங்களிலே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் டெல்லியிலே மெம்பராக இருந்த நேரத்திலேகூட, இந்த சென்னை காங்கிரஸ் சர்க்கார் சரியாக இல்லை, எப்படிப் போட வேண்டுமோ அப்படிப் போடவில்லையென்று சொன்னார்கள். நான், அடுத்த முறை சென்னையில் ஆட்சிக்கு வந்தீர்களானால் நீங்கள் விவசாய அமைச்சராக வந்து இதை மாற்றுங்கள் என்று சொன்னேன். ஆனால் இப்போதுள்ள நிலைமையிலே இது சரியாக வராது என்ற முறையிலேதான் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லையேதவிர, இப்பொழுதிருக்கிற இன்ஃபார்மல் லெவிதான் சரியானது.

அதைப் போல் இன்றைக்குக் கொடுக்கிற விலை நியாயமானது, கட்டுபடியாகக் கூடியது. திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் சொல்லுகிறார் என்பதற்காக அல்ல. கேரளத்திலே இவ்வளவு ரூபாய் கொடுக்கிறார்களே என்று சொல்கிறார்கள். நான் அங்கே அமைச்சராக இருந்தால் ரூ. 80 கூடக் கொடுப்பேன். ஆந்திரக்காரர்கள் இன்னும் விலையைக் கூட்டிக் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் வியாபாரிகள். ஆகவே கூட்டிக் கொடுக்கிறார்கள். வங்காளத்துக்காரர்கள் கொடுக்கிறார்கள் என்றால் அங்கே பஞ்சம், பட்டினி, வேறு இரத்தக் கிளறி என்பதான நிலைமை இருக்கிறது. அதற்காகக் கொடுக்கிறார்கள். ஆனால், இந்தத் தமிழ்நாட்டில் 40 இலட்சம் மக்கள் வரையிலே பெரிய நகரங்களிலே இருக்கிறவர்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி அளிக்கிறோம். ஆனால் அதைகூடவல் கூட விடுகிறேன். நம்முடைய உணவுத் துறையை, நம்முடைய உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதற்காக நான் 1½ ஆண்டுக் காலமாக என்னுடைய காதைக் கூர்மையாக வைத்திருக்கிறேன். நேற்றைக்கு மேல்சபையிலே ஒரு குரல் கேட்டது. விளவங்கோடுக்குப் பக்கத்தில் 10 மைல் தூரத்தில் இருக்கிற திருவனந்தபுரத்திற்குக் கள்ளக்

கடத்தல் செய்யப்படுகிறது, அதிக விலை கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ரூ. 2½-க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கேள்விப்பட்டோமே தவிர, இன்றைக்கும் விலை கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது, செம்மைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் இந்த விலை வீழ்ச்சியை நாங்கள் ஒரு நாளும் சம்பந்தப் படுத்த மாட்டோம். ஸ்டெபிலைசேஷன் ஆப் பிரைசஸ் என்ற முறையிலே ரூ. 29-க்கு ஒரு குவிண்டால் கொடுத்துவிடவேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் சொல்ல மாட்டோம். அவர்கள் மொத்தம் 20 சதவிகிதம்தான் உற்பத்திக்குக் கேட்கிறார்கள். 13 இலட்சம் விவசாயிகளுக்கு இன்றைக்கு விதிவிலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. காவிரித் தீரத்திலும் தஞ்சையிலும் விவசாயிகள் மிகவும் உற்சாகமாக இருக்கிறார்கள்.

நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று. உர விலை டன்னுக்கு ரூ. 100 ஏறி இருக்கிறது. பணத்தினுடைய மதிப்பைக் குறைப்பதற்கு முன்னாலே பிரீ டீவால்யுவேஷன் விலைக்குக் கொடுக்க வேண்டும். அந்த பிரீ டீவால்யுவேஷன் விலைக்குக் கொடுக்க வேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல முறை டில்லியிலே கேட்டார்கள். டில்லியில் நடந்த விவசாய அமைச்சர்கள் மாநாட்டில் நானும் நமது மதிப்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும்கூடக் கேட்டோம். போராட்டம் செய்யப்போகிறோம் என்று சொல்கிறார்கள். போராட்டத்தில் எனக்கும் மிகவும் விருப்பம். இப்பொழுதுகூடக் காலம் கடந்துவிடவில்லை. ரூ. 50 கோடி பெறுவதற்கு மொரார்ஜி தேசாய் அவர்களோடு போராடுவதற்குப் போராட்டக் கொடி உயர்த்தவேண்டும். அந்த உர விலையை உயர்த்த வேண்டாம் என்பதற்கான போராட்டத்தைத் துவங்கட்டும். அதற்கு இந்த மாநில அரசு ஆதரவு கொடுக்க முன்வரும்.

மாரட்டோரியம் கொடுங்கள் 15 கோடி ரூபாய்க்கு. மானிய மாவது கொடுங்கள். வட்டியைக் கொஞ்ச நாளைக்காவது ஒத்திப் போடுங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். இதை எதற்காகக் கேட்கிறார்கள். கட்சிக்காகவா கேட்கிறார்கள், அல்லது எங்களிலே யாருக்காவது கொடுப்பதற்குக் கேட்கிறார்களா ? இந்த உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாய மக்கள் எல்லோரும் உயர்வதற்காக, ஒரு பொன்னான காரியத்திற்காக எங்களது கரங்களை வலியுறுத்த வேண்டுமென்று நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குமட்டும் பதில் அளித்ததாகக் கருதாமல் மற்றைய உறுப்பினர்கள் பேசியதற்குப் பதில் சொல்லுவதற்கு நேரம் இல்லாததால் சொல்ல முடியவில்லை. உணவு உற்பத்தியிலே அவர்கள் காட்டுகிற அக்கறைக்கு இந்த அரசு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் நல்ல ஒரு விதமான சூடான விவாதமாக இல்லாமல், சுவையான விவாதமாக இருக்க வாய்ப்பளித்ததற்கு அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இந்த விவாதத்தை நல்ல முறையிலே நடத்தி வைத்ததற்காக மற்றவர்களுக்கும் நன்றிதெரி





வித்துக் கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டு இதே மன்றத்தில் அதிகாரப் பூர்வமற்ற அடுத்த நாளிலே மத்திய அரசை வற்புறுத்துவதற்கான ஒரு தீர்மானத்தை நீங்கள் கொணர்ந்து இந்த மன்றம் முழுவதும் அதன் காரணமாகப் பெருமை அடையச் செய்ய வேண்டும். எதிர்க்கட்சி தீர்மானம் கொண்டுவந்து அரசாங்கம் ஆதரிப்பது ஜனநாயகத்தில் எப்போதாவது நடைபெறுகிற காரியம். இப்போது இருக்கிற தீர்மானத்தை வற்புறுத்தாமல் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இருக்கும்படியான என்னுடைய தீர்மானத்திலே விவாதம் ஓரளவு முடிந்து உணவு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் உத்தியோகப் பற்றற்ற தீர்மானமாக இருப்பதாலே அவர்கள் கொடுத்த கருத்துக்களுக்கும் மறுப்புகளுக்கும் நான் பதில் சொல்ல வேண்டிய நிலையிலே இருக்கிறேன். முதலாவதாக ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் இதை எதிர்த்துப் பேசினார்கள். இப்பொழுது இருக்கிற கூட்டணியைச் சேர்ந்தவர்கள் வெளியிலே பலவிதமாகப் பேசிக் கொண்டிருந்தாலும்கூட, இங்கே ஆளும் கட்சிக்கு ஒத்துப் பாடி இருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் காக்காய் பிடிப்பதிலே ஒன்றும் நம்பராக இருந்து காக்காய் பிடித்தார். அதற்காக என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் இந்த உணவுப் பிரச்சினையெல்லாம் தீர்ந்துவிட்டது, அதற்கு முன்னால் 20 வருஷ காங்கிரஸ் ஆட்சியிலே ஒன்றும் நடைபெறவில்லை, அந்த உணவுப் பிரச்சினையைச் சரியாகத் தீர்க்காததனால் நீங்கள் எதிர்க்கட்சியிலே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள், எங்களிடம் அரசைக் கொடுத்துள்ளார்கள் மக்கள் என்று திரு. ஆசைத்தம்பி அவர்கள் சொன்னார்கள். நாங்கள் இந்த நாட்டு மக்கள் சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்கள். எங்கள் கட்சி அப்படிப்பட்ட கட்சி; நாட்டு மக்களுடைய நல்வாழ்வுக்காக எதையும் தியாகம் செய்வதற்காகப் பிறந்த கட்சி எங்கள் கட்சி ; அதற்காக வளர்ந்த கட்சி. ஏதோ அன்னியர் ஆட்சிக்கு உடந்தையாக, அவர்களுக்கு உதவியாக பிரச்சாரம் எல்லாம் செய்து கொண்டு வளர்ந்த கட்சி அல்ல எங்கள் கட்சி. ஆகு, அப்பேர்ப்பட்ட கட்சியைச் சேர்ந்த நாங்கள், தியாகம் செய்த நாங்கள், மக்களுக்காக எந்த தோல்வியையும் ஏற்றுக்கொள்ள, எந்த இழிவையும் ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் 20 வருஷ காங்கிரஸ் ஆட்சியைப்பற்றிச் சொன்னார்கள். நான் சவால்கூட விடத் தயாராக இருக்கிறேன். ஒரு கருத்தரங்கு வேண்டுமானால் இங்கே நடத்தலாம். காங்கிரஸ் புரிந்த சாதனைகளைப் பற்றியெல்லாம் சொல்லத் தயாராக இருக்கிறோம். நாங்கள் செய்த காரியங்கள் சரியா, இல்லையா என்று அங்கே பார்க்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 30 இலட்சம், 40 இலட்சம்

டன் கொள்முதல் செய்தேன் என்று சொல்கிறார்கள். இதெல்லாம் காங்கிரஸ்காரர்கள் போட்ட திட்டங்களினால்தானே முடிந்தது. இவர்கள் ஏதாவது அப்படி திட்டம் போட்டார்களா என்று தெரியவில்லை. இவர்கள் அப்படி போட்டார்கள் என்றால் நான் தலை குனிந்து மிகவும் சாஷ்டாங்கமாக மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கிறேன்.

ஆகவே, அணை கட்டியது காங்கிரஸ்காரர்கள், கால்வாய் வெட்டியது காங்கிரஸ்காரர்கள் அபிவிருத்தித் திட்டத்தைப் போட்டது காங்கிரஸ் சர்க்கார், மூன்று ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றியது காங்கிரஸ் சர்க்கார். புள்ளி விவரம் வேண்டுமானால் கொடுக்கிறேன். அணைகள் கட்டுவதற்கு மூன்று ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 75 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஒன்பது லட்சம் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் ஆட்சிக்கு வரும்படியான காலத்தில் 20,000 கிணறுகளுக்குத் தான் பம்புசெட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. 1967-ம் வருஷத்தில் இந்த மகான்கள், தர்மிஷ்டர்கள் 6-ம் தேதி பதவியேற்ற போது 75,000 கிணறுகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. நாங்கள் 25,000 கிணறுகளுக்கும் மின்சார இணைப்புக் கொடுத்தோம், 50,000 கிணறுகளுக்கு கொடுத்தோம் என்று சொல்லிக்கொள்கிறார்கள். நாங்கள் போட்ட திட்ட அடிப்படையிலே தான் கொடுத்தீர்கள். நாங்கள் போட்ட முதலீட்டுத் திட்டத்தின்மேலேதான் கொடுத்தீர்கள். நாங்கள் மக்களிடமிருந்து வரி வாங்கி பல திட்டங்களைப் போட்டோம். என்ன திட்டங்களைப் போட்டீர்கள் என்று கேட்கிறார்கள். எத்தனை பேர்களுடைய கஷ்டத்தை ஏற்றுக்கொண்டு நாங்கள் வரி போட்டு திட்டத்தைப் போட்டு வைத்தோம். நீங்கள் சௌகரியமாக வந்து உட்கார்ந்து கொண்டீர்கள் என்பதை உதவி சபாநாயகர் அவர்கள் மூலமாக உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திட்டங்களைப் போட்டது நாங்கள், வரி போட்டது நாங்கள். அப்பொழுது நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு வரி போடாதீர்கள் என்று சொன்னீர்கள். நாங்கள் வரி போட்டு, திட்டம் போட்டு வைத்ததினால்தான் இப்பொழுது நீங்கள் மார்தட்டிக்கொண்டு பேசக்கூடிய நிலைமை இருக்கிறது. (குறுக்கீடு) ஏதோ நல்லதங்காள் மாதிரி கஷ்டம் தாங்காமல், பசி தாங்காமல் குழந்தைகளை கிணற்றில் போட்டுவிட்டு தானும் விழுந்துவிட்டதாக சொன்னார்கள். எனக்கு வந்த தகவல் என்னவென்றால், குடும்பத் தகராறு தான் காரணம் என்பது தான். ஆசைத்தம்பி அவர்கள் வெள்ளைக்காரன் மேட்டூர் அணையைக் கட்டிவிட்டுப் போனான் என்று சொன்னார். உதவி சபாநாயகர் அவர்களே, தங்கள் மூலமாக அவர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன். முன்னாலிருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தில் 1942-ல் ரோடில் மேற்கு வங்காளத்தில் 35 லட்சம் பேர்கள் செத்திருந்தார்கள். அதைப்பற்றியும் அவர்கள் சொல்லியிருக்கலாமே? அந்தக் காலத்தில் என்னென்னவோ நடந்தது. 'நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள்' என்று சொன்னார்கள். ஆனால், இங்கே இருக்கிற பிரச்னை வேறு, தீர்மானம் வேறு. 100 கோடி ரூபாய்



திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மத்திய சர்க்காரை கடன் கேட்டோம் என்று சொல்கிறார்கள். நாங்கள் வந்ததும், மார்ச் 6-ம் தேதிக்குப்பிறகு எல்லோருக்கும் அரிசி போட்டுவிட்டோம் என்றெல்லாம் சொன்னார்கள் ஆசைத்தம்பி அவர்கள். தேர்தலுக்கு முன்பு, ஜனவரி, பிப்ரவரியில், எந்தக் கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் நாங்கள் கொள்முதல் செய்துவைத்திருந்தோம். நாங்கள் ப்ரொக்யூர் செய்துவைத்திருந்ததை நீங்கள் விநியோகம் செய்தீர்கள். இது தான் ஜிகினா வேலை. ஏதோ 500 டன் அரிசி தான் வைத்துவிட்டுப் போனார்கள், 300 கோடி ரூபாய் கடன் வைத்துவிட்டுப்போனார்கள் என்று ஒரேயடியாக முழுப் பூசணிக்காயையும் சோற்றில் மறைத்தார்கள் தி.மு.க-வினர் (திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : சென்னை நகரில் மட்டும் 500 டன் அரிசிதான் இருந்தது என்று சொன்னோம், நாடு பூராவிலும் என்று சொல்லவில்லை) அப்படிச் சொல்லவில்லை, இப்படிச் சொல்லவில்லை என்று பிறகு சமாதானம் கூறுவதில் பிரயோசனமில்லை. பொறுப்போடு பேசவேண்டும். ஏதோ மழை பெய்யாமல் இருந்து, வறட்சியாக இருந்து, அம்மாதிரி அரிசி கிடைக்காத நிலைமை இருந்தால் ஒத்துக்கொள்ளலாம் என்றெல்லாம் ஆசைத்தம்பி அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு தங்கள் மூலமாக நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

1965-ம் வருடம் பஞ்சம் வந்ததுபோல், இதுவரையிலே இந்த நாட்டிலே எந்த வருடமும் கிடையாது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். அந்த நிலைதான் அப்பொழுது இருந்தது. நாங்கள் தோற்றுவிட்டோம். எதிர்க்கட்சி வரிசைக்கு அனுப்பப்பட்டுவிட்டோம் என்பதினால் கவலை ஒன்றும் கிடையாது. மக்களுக்கு எல்லோரும் சேவை செய்யவேண்டும். மக்களுக்கு சேவை செய்யக்கூடிய மனப்பான்மை இருக்கிறதா, இல்லையா என்பதுதான் பிரச்னை. நீங்களும் மக்களுக்கு சேவை செய்யவேண்டும், நாங்களும் செய்யவேண்டும். நீங்கள் செய்யும்படியான நல்ல காரியங்களுக்கு நிச்சயம் எங்களுடைய ஒத்துழைப்பு உண்டு. பதவியில் இருக்கிறோமா, இல்லையா என்பது பற்றி அக்கறை இல்லை. எதற்கு எடுத்தாலும் எங்கள் பேரில் நீங்கள் தான் குற்றம் கண்டுபிடிக்கிறீர்கள். பத்து வருஷம் காங்கிரஸ் ஆட்சியிருக்கும்பொழுது நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் 10 குழந்தை பெற்றவளுக்கு, ஒரு பிள்ளை பெற்றவள் மருத்துவம் பார்ப்பதாகச் சொன்ன கதையாகத் தான் இருக்கிறது. 'நாங்கள் 18 மாத காலத்தில் என்னென்ன சாதனைகளை சாதித்திருக்கிறோம்' என்றெல்லாம் சொல்லிக்கொண்டார்கள். நீங்கள் என்ன சாதித்திருக்கிறீர்கள்? நான் கேட்கிறேன். எத்தனை அணை கட்டியிருக்கிறீர்கள். சும்மா வாயால் பேசி சொல்லிவிட்டுப் போய்விட்டால் பிரயோசனமில்லை. புள்ளிவிவரம் கொடுக்க முடியுமா? இது மாதிரி செய்யலாம் என்று ஏற்கனவே திட்டங்களை நாங்கள் போட்டிருக்கிறோம், போட்டிருக்கிற திட்டங்களை நீங்கள் நிறைவேற்றினாலே போதும், இன்னும் 10 வருஷங்களுக்குத் தாங்கும்.

ராயப்பா அவர்கள் கமிட்டி போட்டு 100 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். என்ன திட்டம் போட்டுவிட்டார்கள்? எதையெல்லாம் வேண்டாம் என்று சொல்லப்பட்டதோ, அதையெல்லாம் சேர்த்து, கூட்டிக்கழித்து, கணக்குப்போட்டு 100 கோடிக்குத் திட்டம் போட்டுவிட்டார்கள். அந்தத் திட்டங்களினால் லாபம் வருமா? உணவு உற்பத்தி பெருகுமா? அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதையெல்லாம் பார்க்கவேண்டாமா ? 100 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டுவிட்டோம் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதுமா ? நானும் திட்டம் போட்டுக்கொடுப்பேன் ; ரூ. 1000 கோடிக்குத் திட்டம் போடலாம். ஆனால் போடப்படுகிற திட்டங்கள் பிரயோசனம் உள்ளதான திட்டங்களாக இருக்கவேண்டும். நல்ல திட்டங்களாக இருக்கவேண்டும், நிறைவேற்றக்கூடிய திட்டங்களாக இருக்கவேண்டும் என்பதைத்தான் வற்புறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் சொன்னார்கள். நாங்கள் வந்த பிறகு 6 லட்சம் ஏக்காராவில் ஏ.டி.டி. 27 போட்டுவிட்டோம் என்று சொன்னார்கள். ஏ.டி.டி. 27 நீங்களா கண்டுபிடித்தீர்கள்? திரு. சுப்பிரமணியம் அவர்கள் உணவு அமைச்சராக இருந்தபொழுது, அவர் கஷ்டப்பட்டு கண்டுபிடித்ததே தவிர, வேறு ஒன்றும் புதியதல்ல. திட்டம்போட்டு 8 லட்சம் ஏக்காராவில் ஏ.டி.டி. 27 விஸ்தரிக்கப்படவேண்டும் என்று அப்பொழுதே குறிப்பில் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திரு. சுப்பிரமணியம் அமைச்சராக இருந்தபொழுது என்று சொல்கிறார்கள், ஒத்துக் கொள்கிறேன். அவரா கண்டு பிடித்தார் என்று கேட்க விரும்புகிறேன்.

